*நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர்கள்,*

*யூதர்களாக இருப்பவர்கள்,*

*கிறிஸ்துவர்கள்,*

*மதம் மாறியவர்கள்;*

*எவராயினும்*

*(1) கடவுள் மீது நம்பிக்கை கொண்டு, மேலும்*

*(2) மறுவுலகின் மீது நம்பிக்கை கொண்டு, மேலும்*

*(3) நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்கள்,*

*தங்களுடைய இரட்சகரிடமிருந்து*

*தங்களுடைய பிரதிபலனைப் பெற்றுக் கொள்வார்கள்;*

*அவர்கள் அஞ்சுவதற்கு எதுவுமில்லை,*

*அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

*[2:62, 5:69]*

**குர்ஆன் இறுதி வேதம்**

| | | |
|---|---|---|
| விலை | : | **ரூ. 220/-** |
| குர்ஆன் இறுதி வேதம்<br>தமிழ் மொழிபெயர்ப்பு | : | **C.S. ரஃபீயுத்தீன்** |
| மெய்ப்புத் திருத்துநர்கள் | : | **N.A. சஹாபுதீன்**<br>**A. சையத் இப்றாஹீம்** |
| நூல் வடிவமைப்பு | : | **N.K. காலித்** |
| பதிப்பாளர் | : | **சப்மிட்டர்ஸ் டு காட் அலோன் டிரஸ்ட்** |
| வெளியிட்ட வருடம் | : | **ஏப்ரல் 2009** |
| முதல் பதிப்பு | : | **3000 பிரதிகள்** |
| அச்சகம் | : | **சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**<br>**சென்னை–600 005.** |

பதிப்புரிமை மற்றும் வெளியீடு :

**சப்மிட்டர்ஸ் டு காட் அலோன் டிரஸ்ட்**
எண். 9, சீனிவாசன் தெரு,
ஏழுகிணறு, சென்னை–1.

---

இந்நூலின் முழு உரிமை பதிப்பகத்தைச் சாரும். இக்குறிப்பிட்ட நூலில் இருந்து தகவல்களை எடுத்தாள்வதோ, சில பகுதிகளை மட்டும் பயன்படுத்துவதோ, வேறு வகைகளில் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின் ஊடகங்களில் மறுபதிப்பிடுவதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். மதிப்புரைகள், விமரிசனங்களின் தேவைக்கு ஏற்ப இந்நூலின் சில பகுதிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுவது இவ்வகையில் சேராது.

# குர்ஆன்

# இறுதி வேதம்

[அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பின் தமிழாக்கம்]

ரஷாத் கலீஃபா Ph.D. அவர்களால்
மூலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது

# அனைத்து மக்களுக்கென ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மார்க்கம் பிரகடனிக்கப்படுகின்றது

உலகின் அனைத்து மதங்களும் – யூதம், கிறிஸ்துவம், இஸ்லாம், இந்துமதம், புத்த மதம் இன்னும் மற்றவை – புதுமைகள், பாரம்பரியப் பழக்க வழக்கங்கள், மேலும் நபிமார்கள் மற்றும் மகான்களை இணைவழிபாடு செய்தலின் மூலம் கடுமையாகச் சிதைக்கப்பட்டுள்ளன.

கடவுளின் திட்டமானது, பழைய ஏற்பாடு (மல்க்கியா 3:1), புதிய ஏற்பாடு (லூக்கா 17:22–36 மத்தேயு 24:27), மற்றும் இந்த இறுதி ஏற்பாடு (3:81) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளபடி, வேதங்கள் அனைத்தும் சேர்ப்பிக்கப்பட்டுவிட்ட பின்னர் கடவுளின் உடன்படிக்கைத் தூதர் அனுப்பப்படுதலை அவசியமாக்குகின்றது. உடன்படிக்கைத் தூதரின் பிரதான பணியாவது வேதங்களைத் தூய்மைப்படுத்தி அவற்றை இவ்வுலகின் படைப்பாளர் மற்றும் போஷிப்பவரிட மிருந்து இவ்வுலகிற்குரிய பொதுவான ஒரே செய்தியாக ஒன்றிணைப்பதேயாகும்.

முக்கியமான இந்த வேத முன்னறிவிப்பு இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டது. மூழ்கடிக்கின்ற கண்கூடான சான்றின் மூலம் ஆதரிக்கப்பட்டவராக உடன்படிக்கைத் தூதர் வருகை புரிந்து விட்டார் (பார்க்க பின் இணைப்பு இரண்டு). தூய்மைப்படுத்துகின்ற மேலும் ஒன்றிணைக்கின்ற செயல்பாடு துவங்கி விட்டது. கண்களுக்குத் தெரி யாத கடவுளின் படைகளால் கடவுளின் திட்டத்திற்கு ஆதரவளிக்கப்படுகின்றது, மேலும் இந்தத் தெய்வீகத் திட்டத் தின் அளப்பரிய பரிமாணங்கள் சமீப காலமாக போலி மதவாதிகள் அம்பலப்படுத்தப்படுதல், மேலும் பெர்லின் சுவர், இரும்புத்திரை மற்றும் மூங்கில் திரை போன்ற சுதந்தரத்திற்கு எதிரான தடுப்புகள் நீக்கப்படுதலில் தெளிவாகப் புலப்படுகின்றன.

இப்பொழுது முதல், கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரே மார்க்கம் – சரணடைதலே ஆகும். எவரொருவர் கடவுளுக்குச் சரணடைந்து கடவுளுக்கு மட்டும் வழிபாட்டினை அர்ப்பணிக்கின்றாரோ அவர் ஒரு "சரணடைந்தவர்" ஆவார். எனவே, ஒருவர் ஒரு யூத சரணடைந்தவர், ஒரு கிறிஸ்துவ சரணடைந்தவர், ஒரு புத்திஸ சரணடைந்தவர், ஓர் இந்து சரணடைந்தவர், அல்லது ஒரு முஸ்லிம் சரணடைந்தவராக இருக்கக் கூடும்.

*கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரே மார்க்கம் சரணடைதலேயாகும்.* *[3:19]*

*எவரொருவர் சரணடைதலை விடுத்து மற்றவற்றைத் தன்னுடைய மார்க்கமாக ஏற்றுக்கொள்கின்றாரோ, அவரிடம் இருந்து அது ஏற்றுக் கொள்ளப்படாததோடன்றி, மறுவுலகில், நஷ்டவாளிகளுடன் அவர் இருப்பார்.* *[3:85]*

*(ரஷாத் கலீஃபா, நவம்பர், 1989)*

*உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரி லிருந்து எழும்பப் பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக. (உபாகமத்தில் மோஸஸ் 18:15)*

*உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்: நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் அவர் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன். (உபாகமம் 18:18–19)*

*நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்னென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களக்கு தந்தருளுவார். (ஜானில் இயேசு 14:16–17)*

*சத்திய ஆவியாகிய அவர் வரும்பொழுது, சகல சத்தியத்திற்குள்ளும் அவர் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (ஜானில் இயேசு 16:13)*

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்*

*இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்;*

*இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார் ? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார் ?*

*அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும்...... அவர் உட்கார்ந்து சுத்திகரித்துக் கொண்டிருப்பார்....... (மலாச்சி 3:1–3)*

**கடவுள் மட்டும் மொழியப்பட்டால் மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய இதயங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்களும் மொழியப்பட்டால், அவர்கள் பெரு மகிழ்வு அடைகின்றனர். [39:45]**

*ஹி.மு. **13** (ஹிஜ்ரத்திற்கு முன்னர்) ரமளானின் **27**–வது இரவன்று (கி.பி.**610**), முஹம்மத் நபி (எனும் ஆன்மா–உண்மையான அந்நபர்–உடல் அல்ல) பூமிக் கிரகத்தில் இருந்து கோடானு கோடிக் கணக்கான ஒளிவருடத் தொலைவிலுள்ள, சாத்தியமான அளவு மிக உயர்ந்த அந்த இடத்திற்கு வரவரழைக்கப்பட்டார், மேலும் இந்தக் குர்ஆன் அவருடைய இதயத்தில் வைக்கப்பட்டது **(2:185,17:1, 44:3, 53:1–18, 97:1)**.*

*அதனைத் தொடர்ந்து, **23** வருடங்களின் போது, கேப்ரியேல் ஊடாக, இக்குர்ஆன் முஹம்மதின் நினைவாற்றலில் வெளிப்படுத்தப்பட்டது. வெளிப்படுத்தப்பட்ட அக்கணமே, முஹம்மத் அதனைத் தன் சொந்தக் கரத்தினால் கவனத்துடன் எழுதிக் கொண்டார் (பின் இணைப்பு **28**). முஹம்மத் விட்டுச் சென்றது என்னவெனில், கடவுளால் கட்டளையிடப்பட்ட வரிசையில் அந்த வெளிப்பாடுகளை அமைப்பதற்குரிய விரிவான அறிவுறுத்தல்களுடன், வெளிப்பாட்டின் காலவாரியான வரிசையில் எழுதப்பட்ட முழுமையான அக்குர்ஆனேயாகும்.*

*மறுவரிசைப்படுத்துகின்ற செயல்பாட்டின் போது, முஹம்மத் நபியை இணைவழிபாடு செய்த எழுத்தர்கள், மதினாவில் வெளிப்படுத்தப்பட்ட கடைசி சூராவான, சூரா **9**–ன் இறுதியில் இரண்டு வசனங்களைச் சேர்த்துக் கொண்டனர். இறைநிந்தனையான இச்செயல், அலி இப்னு அபீதாலிப் மற்றும் ஆதரவாளர்கள் என ஒரு புறத்திற்கும், குர்ஆனைச் சிதைத்தவர்கள் என மறுபுறத்திற்கும் இடையே, **50** வருடப் போரை விளைவித்தது. அந்தப் போரானது ஹுசைன் இப்னு அலீ மற்றும் அவருடைய குடும்பத்தார் கர்பலாவில் வீரமரணம் எய்தியதோடு முடிவடைந்தது.*

*முஹம்மதின் கரத்தால் எழுதப்பட்ட அந்த மூலக்குர்ஆனை, "புதிய சர்ச்சைகள் கிளம்பக் கூடும் என்று அஞ்சி" அழித்தவன் உமைய்யா ஆட்சியாளர்களாக இருந்த மர்வான் இப்னு அல்–ஹகம் (இறப்பு கி.பி. **684**) ஆவான்.*

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர் **9:128–129** குர்ஆனைச் சேர்ந்தது அல்ல என்பதற்கு மூழ்கடிக்கின்ற சான்றுகளை முன் வைத்துள்ளார் (பின் இணைப்பு **24**). இந்தப் போலி வசனங்களின் நீக்குதலுடன், குர்ஆனானது இறுதியாகப் பழைய நிலைக்கு மீட்கப்பட்டு விட்டது. குர்ஆனை அதன் தூய்மைப்படுத்தப்பட்ட இறுதியாக்கப்பட்ட வடிவத்தில் முதன் முதலில் பெற்றது நமது தலைமுறையேயாகும் (பார்க்க பின் இணைப்புகள் **1** மற்றும் **28**).*

# உள்ளடக்கம்


| சூரா எண் | பெயர் | | வசனங்களின் எண்ணிக்கை | பக்கம் |
|---|---|---|---|---|
| | முன்னுரை | | | |
| | அறிமுகவுரை | | | |
| 1. | திறவுகோல் | அல்–ஃபாத்திஹஹ் | 7 | 1 |
| 2. | பசுங்கன்று | அல்–பகறஹ் | 286 | 2 |
| 3. | இம்ரானியர்கள் | ஆல–இம்ரான் | 200 | 30 |
| 4. | பெண்கள் | அல்–நிஸா | 176 | 46 |
| 5. | விருந்து | ஆல்–மாஇதா | 120 | 62 |
| 6. | கால்நடைகள் | அல்–அன்ஆம் | 165 | 75 |
| 7. | ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம் | அல்–அஃராஃப் | 206 | 89 |
| 8. | போரின் வெற்றிப் பொருட்கள் | அல்–அன்ஃபால் | 75 | 104 |
| 9. | இறுதி நிபந்தனை | பராஅஹ் | 127 | 109 |
| 10. | ஜோனா | யூனுஸ் | 109 | 121 |
| 11. | ஹூத் | ஹூத் | 123 | 129 |
| 12. | ஜோஸஃப் | யூஸுஃப் | 111 | 138 |
| 13. | இடியோசை | அல்–ரஃது | 43 | 145 |
| 14. | ஆப்ரஹாம் | இப்ராஹீம் | 52 | 149 |
| 15. | அல்–ஹிஜ்ர் பள்ளத்தாக்கு | அல்–ஹிஜ்ர் | 99 | 153 |
| 16. | தேனீ | அல்–நஹ்ல் | 128 | 156 |
| 17. | இஸ்ரவேலின் சந்ததியர் | பனீ இஸ்ராயீல் | 111 | 165 |
| 18. | குகை | அல்–கஹ்ஃப் | 110 | 172 |
| 19. | மேரி | மர்யம் | 98 | 179 |
| 20. | த.ஹ. | தாஹா | 135 | 184 |
| 21. | நபிமார்கள் | அல்–அன்பியா | 112 | 191 |
| 22. | புனித யாத்திரை | அல்–ஹஜ் | 78 | 197 |
| 23. | நம்பிக்கையாளர்கள் | அல்–முஃமினூன் | 118 | 203 |
| 24. | ஒளி | அல்–நூர் | 64 | 208 |
| 25. | சட்டப்புத்தகம் | அல்–ஃபுர்கான் | 77 | 214 |
| 26. | கவிஞர்கள் | அல்–ஷுஅரா | 227 | 218 |
| 27. | எறும்பு | அல்–நம்ல் | 93 | 225 |
| 28. | வரலாறு | அல்–கஸஸ் | 88 | 230 |
| 29. | சிலந்திப் பூச்சி | அல்–அன்கபூத் | 69 | 237 |
| 30. | ரோமர்கள் | அல்–ரூம் | 60 | 241 |
| 31. | லுக்மான் | லுக்மான் | 34 | 245 |
| 32. | சிரம் பணிதல் | அல்–ஸஜ்தா | 30 | 248 |
| 33. | படையினர் | அல்–அஹ்ஸாப் | 73 | 249 |
| 34. | ஷீபா | ஸபா | 54 | 256 |
| 35. | துவக்ககர்த்தா | ஃபாத்திர் | 45 | 260 |
| 36. | ய.ச. | யாஸீன் | 83 | 263 |
| 37. | வரிசைப்படுத்துவோர் | அல்–ஸஃப்ஃபாத் | 182 | 267 |

| சூரா எண் | பெயர் | | வசனங்களின் எண்ணிக்கை | பக்கம் |
|---|---|---|---|---|
| 38. | ஸ | ஸாத் | 88 | 272 |
| 39. | மக்கள் கூட்டங்கள் | அல்–ஜுமர் | 75 | 276 |
| 40. | மன்னிப்பவர் | க்ஹாபிர் | 85 | 282 |
| 41. | விவரிக்கப்பட்டது | ஃபுஸ்ஸிலத் | 54 | 288 |
| 42. | ஆலோசனை | அல் ஷுரா | 53 | 291 |
| 43. | ஆபரணங்கள் | அல்–ஜுக்ருஃப் | 89 | 295 |
| 44. | புகை | அல்–துகான் | 59 | 300 |
| 45. | மண்டியிடுதல் | அல்–ஜாஸியா | 37 | 302 |
| 46. | மணற்குன்றுகள் | அல்–அஹ்காஃப் | 35 | 304 |
| 47. | முஹம்மது | முஹம்மத் | 38 | 307 |
| 48. | வெற்றி | அல்–ஃபத்ஹ் | 29 | 309 |
| 49. | சுவர்கள் | அல்–ஹுஜுராத் | 18 | 312 |
| 50. | க | காஃப் | 45 | 314 |
| 51. | காற்றுகளைச் செலுத்துவோர் | அல்–தாரியாத் | 60 | 316 |
| 52. | சினாய் மலை | அல்–தூர் | 49 | 317 |
| 53. | நட்சத்திரங்கள் | அல்–நஜ்ம் | 62 | 319 |
| 54. | நிலவு | அல்–கமர் | 55 | 321 |
| 55. | மிக்க அருளாளர் | அல்–ரஹ்மான் | 78 | 323 |
| 56. | தவிர்க்க இயலாதது | அல்–வாகி‘ஆ | 96 | 325 |
| 57. | இரும்பு | அல்–ஹதீத் | 29 | 327 |
| 58. | தர்க்கம் | அல்–முஜாதலா | 22 | 330 |
| 59. | வெளியேற்றம் | அல்–ஹஷ்ர் | 24 | 332 |
| 60. | பரிசோதனை | அல்–மும்தஹனஹ் | 13 | 334 |
| 61. | அணிவகுப்பு | அல்–ஸஃப் | 14 | 335 |
| 62. | வெள்ளிக்கிழமை | அல்–ஜுமுஆ | 11 | 336 |
| 63. | நயவஞ்சகர்கள் | அல்–முனாஃபிகூன் | 11 | 337 |
| 64. | பரஸ்பரம் பழித்துக் கொள்ளுதல் | அல்–தகாபுன் | 18 | 338 |
| 65. | விவாகரத்து | அல்–தலாக் | 12 | 339 |
| 66. | தடை செய்தல் | அல்–தஹ்ரீம் | 12 | 341 |
| 67. | அரசுரிமை | அல்–முல்க் | 30 | 342 |
| 68. | பேனா | அல்–கலம் | 52 | 343 |
| 69. | மறுக்க இயலாதது | அல்–ஹாக்காஹ் | 52 | 345 |
| 70. | உயரங்கள் | அல்–மஆரிஜ் | 44 | 346 |
| 71. | நோவா | நோவா | 28 | 348 |
| 72. | ஜின்கள் | அல்–ஜின் | 28 | 349 |
| 73. | அங்கி அணிந்தவர் | அல்–முஸ்ஸம்மில் | 20 | 350 |
| 74. | மறைக்கப்பட்ட இரகசியம் | அல்–முத்தஸ்ஸிர் | 56 | 351 |
| 75. | உயிர்த்தெழுப்புதல் | அல்–கியாமஹ் | 40 | 352 |
| 76. | மானிடன் | அல்–இன்ஸான் | 31 | 353 |

| சூரா எண் | பெயர் | | வசனங்களின் எண்ணிக்கை | பக்கம் |
|---|---|---|---|---|
| 77. | அனுப்பப்படுகின்றவர்கள் | அல்–முர்ஸலாத் | 50 | 355 |
| 78. | அந்த நிகழ்வு | அல்–நபஅ | 40 | 356 |
| 79. | பறிப்பவர்கள் | அல்–நாஸியாத் | 46 | 357 |
| 80. | அவர் முகம் சுளித்தார் | அபஸ | 42 | 358 |
| 81. | சுருட்டுதல் | அல்–தக்வீர் | 29 | 359 |
| 82. | வெடித்துப் பிளத்தல் | அல்–இன்ஃபிதார் | 19 | 360 |
| 83. | மோசடியாளர்கள் | அல்–முதஃப்ஃபிஃபீன் | 36 | 360 |
| 84. | தகர்க்கப்படுதல் | அல்–இன்ஷிகாக் | 25 | 361 |
| 85. | நட்சத்திர மண்டலங்கள் | அல்–புரூஜ் | 22 | 362 |
| 86. | பிரகாசமான நட்சத்திரம் | அல்–தாரிக் | 17 | 362 |
| 87. | மிகவும் மேலானவர் | அல்–அஃலா | 19 | 363 |
| 88. | மூழ்கடித்தல் | அல்–காஷியா | 26 | 363 |
| 89. | விடியல் | அல்–ஃபஜ்ர் | 30 | 364 |
| 90. | நகரம் | அல்–பலத் | 20 | 365 |
| 91. | சூரியன் | அல்–ஷம்ஸ் | 15 | 365 |
| 92. | இரவு | அல்–லைல் | 21 | 366 |
| 93. | முற்பகல் | அல்–துஹா | 11 | 366 |
| 94. | சுபாவத்தைக் குளிர்வித்தல் | அல்–ஷ்ரஹ் | 8 | 367 |
| 95. | அத்தி | அல்–தீன் | 8 | 367 |
| 96. | கருமுளை | அல்–அலக் | 19 | 367 |
| 97. | விதி | அல்–கத்ர் | 5 | 368 |
| 98. | சான்று | அல்–பய்யினஹ் | 8 | 368 |
| 99. | அதிர்வு | அல்–ஜல்ஜலஹ் | 8 | 369 |
| 100. | பாய்ந்தோடுபவை | அல்–ஆதியாத் | 11 | 369 |
| 101. | அதிர்ச்சியூட்டுவது | அல்–காரியஹ் | 11 | 369 |
| 102. | சேகரித்தல் | அல்–தகாஸுர் | 8 | 369 |
| 103. | பிற்பகல் | அல்–அஸ்ர் | 3 | 370 |
| 104. | புறங்கூறுபவன் | அல்–ஹுமஜஹ் | 9 | 370 |
| 105. | யானை | அல்–ஃபீல் | 5 | 370 |
| 106. | குறைஷிக்குலம் | குறைஷ் | 4 | 370 |
| 107. | தர்மம் | அல்–மாஊன் | 7 | 370 |
| 108. | வெகுமதி | அல்–கவ்த்ஸர் | 3 | 371 |
| 109. | நம்பமறுப்பவர்கள் | அல்–காஃபிரூன் | 6 | 371 |
| 110. | வெற்றிக்களிப்பு | அல்–நஸ்ர் | 3 | 371 |
| 111. | முட்கள் | அல்–மஸத் | 5 | 371 |
| 112. | பரிபூரணத்துவம் | அல்–இக்ஹ்லாஸ் | 4 | 372 |
| 113. | வைகறை | அல்–ஃபலக் | 5 | 372 |
| 114. | மனிதர்கள் | அல்–நாஸ் | 6 | 372 |
| | பின் இணைப்புகள் | | | 373 |
| | பொருள் குறிப்பு அகராதி | | | 489 |

# ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரை

1990, ஜனவரி 31, விடியலுக்குச் சிறிது நேரம் முன்னர், கடவுளின் உடன்படிக்கைத் தூதரான, Dr. ரஷாத் கலீஃபா, முந்திய அந்த இரவில் மஸ்ஜிதிற்குள் புகுந்து அவர் உள்ளே வருவதற்காகக் காத்திருந்த, ஒன்று அல்லது அதற்கும் அதிகமான நம்பமறுப்பவர்களால் வீரமணத்திற்கு உள்ளாக்கப் பட்டார். ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளைகளில் இந்த மொழிபெயர்ப்பில் அவருடைய பணியைத் தொடர்வதற்கு Dr. கலீஃபா வருவார் என்பது நன்கறியப்பட்ட உண்மையாக இருந்தது.

கடவுளின் அருளால், இம்மொழிபெயர்ப்பின் பெரும்பகுதியில் அவருடைய மீள்பார்வையினை, முந்திய மாலை சூரா 49–ஐ முற்றிலும் முடித்துவிட்ட நிலையில், அவர் பூர்த்தி செய்திருந்தார். மெய்ப்புத் திருத்துதலில் ஈடுபட்டிருந்த நபர்களிடம் அவர் ஏற்கெனவே செய்திருந்த மற்றும் செய்வதற்குத் திட்ட மிட்டிருந்த மாற்றங்களைப் பற்றி விரிவான அறிவுறுத்தல்களை அவர் தந்திருந்தார். அவரால் குறிப் பிடப்பட்ட இந்த மாற்றங்களையும், வெளிப்படையான இலக்கண அல்லது அச்சுப் பிழைகளையும் தவிர, இதன் உரைப்பகுதியானது தொடப்படாமலேயே விடப்பட்டுள்ளது.

இரண்டு பின் இணைப்புகள்–15 மற்றும் 17ல் புதிய விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. Dr. கலீஃபா மரணிப்பதற்கு முந்திய கடைசி சில மாதங்களில், 5 தொடர்புத் தொழுகைகளை உறுதிப்படுத்துகின்ற பிரமிப்பூட்டும் கணித அற்புதம் மஸ்ஜித் தூஸானின் சகோதரர்களால் கண்டுபிடிக்கப் பட்டது. கலீஃபா ஆசிரியராக இருந்த, United Submitters International–ன் 1990, ஜனவரி வெளியீட்டில் இந்த அற்பு தங்களை அவர் விவரித்திருந்தார். அவை பின் இணைப்பு 15–ல் தொடர்புத் தொழுகை எனும் பகுதி யின் கீழ் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அவர் மரணிப்பதற்கு முன்னரே எழுதப்பட்டு அச்சிடப்பட்ட Submitters Perspective–ன் 1990, பிப்ரவரி வெளியீட்டினில், நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை–அவர்கள் நேரடியாகச் சுவனத்திற்குச் செல்கின்றனர் எனும் நிதர்சனத்தை Dr. கலீஃபா குர்ஆனின் மூலம் உறுதிப்படுத்தி னார். அந்தக் கட்டுரை மரணம் பற்றிய பின் இணைப்பு 17–ல் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்விதமாக, இந்தப் பின் இணைப்புகள் அவர் கொடுத்த விஷயங்களைக் கொண்டே நேர் செய் யப்பட்டுள்ளன. பின் இணைப்புகள், 1,2,24 மற்றும் 29–ல் உள்ள கணித அட்டவணைகள் சிலவற்றில் சிறு திருத்தங்களும் அவசியமாக இருந்தன; மேலும் இரண்டு அட்டவணைகள் பிழையானவையாகக் காணப்பட்டதால் நீக்கப்பட்டு விட்டன.

Dr. கலீஃபாவின் வீரமரணத்திற்குப் பின்னர் வந்த மாதங்களில், குர்ஆனில் பொதிந்துள்ள எண் ணியல் ரீதியிலான விசேஷ அம்சங்களின் கண்டுபிடிப்புகளுக்காக அவர் திறந்த வாயிலானது மூடப் பட்டுவிடவில்லை என்பதற்கான மறுவுறுதி கூறல்களை நாம் பெற்றுள்ளோம். இந்தக் கண்டுபிடிப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளன, மேலும் மற்ற ஆக்கங்களில் தொடர்ந்து பதிப்பிக்கப் பட உள்ளன.

Dr. ரஷாத் கலீஃபா, கடவுளின் உடன்படிக்கைத் தூதர், அவருக்கு முந்திய மற்ற தூதர்கள் அனை வரையும் போன்ற அதே விதமாக, புறப்பட்டுச் சென்று விட்டார், ஆனால் தூய்மைப்படுத்தப்பட்ட தூதுச் செய்தியானது உயிர்ப்புடன் உள்ளது, மேலும் உலகின் கடைசி முடிவு வரை தொடர்ந்து அதற்கு ஆதாரமாக இருந்து கொண்டிருக்கும். அது குர்ஆனேயாகும்.

*நிச்சயமாக நீர் மரணிப்பீர், அவர்கள் மரணிக்கப் போகின்ற அதே போல். (39:30)*

*கடவுள்: அவரைத் தவிர தெய்வம் இல்லை; ஜீவித்திருப்பவர், நிலைத்திருப்பவர். (3:2–3)*

*Universal Unity*
*ரமளான், 1412 (மார்ச், 1992)*

# முன்னுரை

கடவுள் தன்னுடைய இறுதி வேதமாம் அல்–குர்ஆனில் கூறியுள்ளபடி (பார்க்க 5:19), தூதர்கள் இல்லாமல் கழிந்து விட்ட நீண்டதொரு காலத்திற்குப் பின்னர், 3:18–ல் முன்னுரைத்துள்ளபடி அனைத்து நபிமார்களுக்கும் பின்னால் அவர்கள் அனைவருடைய தூதுச் செய்திகளையும் மெய்ப்பிக்கின்ற அத்தூதர் வந்துவிட்டார்.

19 எனும் எண்ணின் அடிப்படையில் குர்ஆனில் கடவுள் கட்டமைத்துள்ள அற்புதத்தைத் திரைவிலக்கி, இறுதி வேதமான அல்குர்ஆன் கடவுளிடமிருந்தே அருளப்பட்டது என்றும், சிறிதளவு சிதைவும் கூட அதனுள் நுழைய இயலாதபடி அது பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் உலகிற்கு ஆதாரபூர்வமாக நிரூபித்தார்.

அனைத்து நபிமார்களும் தூதர்களும் எத்தி வைத்த ஒரே செய்தியான "**கடவுளைத் தவிர வேறு தெய்வம் இல்லை**" என்பதையே அவரும் உலகிற்கு எடுத்துரைத்தார். வேதம் வழங்கப்பட்ட சமூகங்களான யூதம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகியவற்றில் புரையோடிப் போயிருக்கும் போலித் தெய்வ வழிபாடுகளைச் சுட்டிக் காட்டி, அவற்றில் உள்ள மெய்யான நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழியைக் காட்டினார். 72:25–28 வரை உள்ள வசனங்களின்படி கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தில் இருந்து குறிப்பிட்ட சில தூதுச் செய்திகளை எத்தி வைத்தார்.

இன்றைய உலகின் பொதுமொழியான ஆங்கிலத்தில் அல்குர்ஆனை மொழிபெயர்த்தார். ஹதீஸ்களினால் களங்கப்பட்டுப் போன நம்பிக்கையைக் கொண்டவர்கள் அதற்கு முன்னர் செய்த பற்பல மொழி பெயர்ப்புகளின் மத்தியில் அது ஓர் ஆபரணமாக ஜொலித்தது. யாராலும் குர்ஆனைப் புரிந்து கொள்ள இயலாது என்ற பாமர நம்பிக்கையைத் தகர்த்தெறிந்து, நம்பிக்கையாளர்கள் அனைவராலும் குர்ஆனைப் புரிந்து கொள்ள இயலும் என நிரூபித்தது. அரபியைத் தாய்மொழியாகக் கொண்டவரால் செய்யப்பட்ட ஒரே மொழிபெயர்ப்பு என்பது அதன் கூடுதல் சிறப்பு.

எகிப்தில் பிறந்து உலகின் முக்கிய நாடான அமெரிக்காவுக்கு ஹிஜ்ரத் செய்த Dr. ரஷாத் கலீஃபா, அங்கிருந்து தன் தூதுச் செய்தியை, கடவுள் 27:82–ல் முன்னுரைத்துள்ள பிராணியான கணிணி மூலமே உலகம் முழுமைக்கும் பரப்பினார். 19 எனும் கணிதக் குறியீடும் கணிணி மூலமே வெளிப்படுத்தப்பட்டது. இவ்விதமாக 27:82–ன் முன்னறிவிப்பு பூர்த்தியாகி விட்டது என்பதை நம்பிக்கையாளர்கள் அறிந்து கொண்டனர். 1990 ஜனவரி 31 அன்று அவர் சுட்டுக் கொல்லப்படும் வரை தன் தூதுச் செய்தியை அவர் எத்தி வைத்துக் கொண்டிருந்தார். அவர் கைப்பற்றப்பட்ட பின்னர் கடவுள் அதே கணிணியின் (தாப்பத்துல் அர்ள்) வலைத்தளங்கள் மூலம் தன் தூதுச் செய்தியை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றார்.

ரஷாதின் தூதுச் செய்தியை தமிழகத்தில் முதலில் பெற்று, அதனை ஏற்று அதன் வழி நடக்க உறுதி பூண்ட **கடவுளை மட்டும் சரணடைந்தோர் சங்கத்தினர்**, அதனை நாடறியச் செய்வதற்காக **புதிய நினைவூட்டல் எனும் மாத இதழின் மூலம் ரஷாதின் தூதுச் செய்தியை ஈராண்டுகளில் (செப் 1999 முதல் அக்டோபர் 2001 வரை) முழுமையாக எத்தி வைத்தனர்.** பின்னர் தங்களுடைய அடுத்த பணியாக, இலக்காக ரஷாதின் ஆங்கில மொழி பெயர்ப்பை தமிழில் தர வேண்டும் எனக் கடவுளைப் ப்ரார்த்தித்தனர்.

இம்மொழிபெயர்ப்பினைத் தடுப்பதில் நான்கு ஆண்டுகளாக வெற்றி கொண்டிருந்த சாத்தானின் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டு இறை அருளால் இம்மொழி பெயர்ப்பின் பணிகள் 2005–ல் துவங்கின. சாத்தானின் படையினரின் குறுக்கீடுகளின் காரணமாக இடையில் சில தடங்கல்கள் ஏற்பட்டன. இறைஅருளால் அவை வெற்றி கொள்ளப்பட்டு, மொழிபெயர்ப்பின் பொருட்செலவை ஏற்றுக் கொள்ள சங்கத்தினரில் ஒரு குழுவினர் முன் வந்தனர். மொழிபெயர்ப்புக்கென ஒரு குழுவினர் அமைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் கூடி அமர்ந்து விவாதித்து, ஆலோசித்து, திருத்தங்கள் செய்து, மீள்பார்வையிட்டு இதோ இம்மொழி பெயர்ப்பு கடவுளின் கருணையால் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

நாம் எதனைப் பெற்றோமோ அதனை அப்படியே, சற்றும் கூடுதல் குறைவின்றி தமிழில் தர வேண்டும் என்று சங்கத்தினர் முடிவு செய்ததால், ஒவ்வொரு வார்த்தையும் மொழிபெயர்க்கப் பட்டாக வேண்டும் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. நூலின் அமைப்பையும் அப்படியே மாற்றமின்றி கொடுக்க முடிவு செய்யப்பட்டது. ஆங்கில மூலத்தின் வாசக அமைப்பும் கூட அப்படியே பின்பற்றப்பட்டது. நடைமெருகுக்கென எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. தவிர்த்திட இயலாத நிலைகளில் தவிர, எந்த ஒரு ஆங்கில சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல்லும் ஏதேனும் ஓர் அகராதியில் காணப்பட்டாக வேண்டும் என்று நிபந்தனை விதித்துக் கொள்ளப் பட்டது. இவ்விதி முறைகள் கண்டிப்புடன் பின்பற்றப்பட்டு, பல முறைகள் மீள்பார்வை செய்யப் பட்டு தங்களால் இயன்ற அளவு தவறுகள் இன்றி இம்மொழிபெயர்ப்பினை சங்கத்தினர் தந்திருக்கின்றனர்.

இறைஅருளால், ரஷாதின் மொழிபெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்க்க மூல மொழியிலமைந்த அரபிக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டு இருப்பதைப் போல, இந்த மொழி பெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்க்க ஆங்கில மொழிபெயர்ப்பு தாராளமாகக் கிடைக்கின்றது. புகழ்ச்சி கடவுளுக்குரியது.

எந்த ஒரு மொழிபெயர்ப்பும் மீள்பார்வைக்கு உட்பட்டதே எனும் நியதியின் அடிப்படையில், இம்மொழிபெயர்ப்பும் மீள் பார்வைக்கு உட்பட்டதே. இம்மொழி பெயர்ப்பைப் படிக்கும் வாசகர்கள் தங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எழுதி அனுப்பினால் அவை விவாதிக்கப்படும், சரியானவையாக இருந்தால் அடுத்த பதிப்பின் மீள்பார்வையில் கவனத்தில் கொள்ளப்படும்.

இறைஅருளால் இப்போது இப்பணி முடிவடைந்துவிட்டதனால், இனி சங்கத்தினர் முன் இருக்கும் பெரும்பணி இம்மொழிபெயர்ப்பினை தமிழறிந்த அனைவருடைய கைகளிலும் சேர்ப்பிப்பதே. மேலும் சாத்தானின் சாம்ராஜ்யமான இவ்வுலகில், சத்தியத் தூதினைச் சரியான முறையில் எத்தி வைப்பதே, கடவுளுக்கு ஆதரவளிப்பதாகும் என்பதை நன்குணர்ந்துள்ள சங்கத்தினர், தொடர்ந்து அப்பணியில் ஈடுபடுவதென சங்கற்பம் செய்கின்றனர். அவர்கள் இதனைச் செய்வதெல்லாம் தொடர்ந்து கடவுளின் ஆதரவில் நிலைத்திருப்பதற்கேயாகும், இவ்வுலகின் அற்பமான இலாபங்கள் எதற்காகவும் அல்ல. இறை திருப்தியைத் தேடி தொடர்ந்து அவருடைய பாதையில் நிலைத்திருக்க அவரை மட்டுமே சங்கத்தினர் வழிபடுகின்றனர், மேலும் தொடர்ந்து ப்ரார்த்திக்கின்றனர்.

# அறிமுகவுரை

**கடவுளின் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்**

இது மனித குலத்திற்குக் கடவுளின் இறுதிச் செய்தியாகும். கடவுளின் அனைத்து நபிமார்களும் இவ்வுலகிற்கு வந்து விட்டனர், மேலும் அனைத்து வேதங்களும் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டன. கடவுளின் நபிமார்கள் சேர்ப்பித்த எல்லாச் செய்திகளையும் தூய்மைப்படுத்தி, ஒன்றிணைத்து ஒரே செய்தியாக்கி, இதன்பின் கடவுளால் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒரே மார்க்கமாக, "சரணடைதல்" மட்டுமே உள்ளது என்பதைப் பிரகடனம் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது **(3:19, 85)**. "சரணடைதல்" என்னும் மார்க்கத்தில், நாம் கடவுளின் பரிபூரணமான அதிகாரத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, கடவுளிடம் மட்டுமே எல்லாச் சக்திகளும் உள்ளன என்ற அசைக்க முடியாத உறுதியான நம்பிக்கையை அடைகிறோம்; மற்ற எந்த ஒன்றுக்கும் அவரைச் சார்ந்திராமல் எந்தச் சுயமான சக்தியும் இல்லை. இத்தகையதொரு தெளிவான புரிந்து கொள்ளுதலை நாம் அடைவதன் இயற்கையான விளைவு என்னவெனில், கடவுளுக்கு மட்டுமே நமது வாழ்வையும், நமது வழிபாட்டையும் பரிபூரணமாக அர்ப்பணிப்பதேயாகும். இதுவே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, மற்றும் இந்த இறுதி ஏற்பாடு உட்பட அனைத்து வேதங்களிலும் உள்ள முதல் கட்டளையாகும்.

*கேளுங்கள் இஸ்ரவேலர்களே! இரட்சகரான நமது கடவுள் ஒரே கடவுள் ஆவார்!*
*எனவே இரட்சகரான உங்களுடைய கடவுளை*
*உங்கள் முழு இதயத்துடனும்,*
*முழு ஆத்மாவுடனும்,*
*உங்கள் முழு புத்தியுடனும்,*
*மேலும் உங்கள் முழு பலத்துடனும் நீங்கள் வழிபட வேண்டும்.* *[டெட்ரானமி **6:4–5**, லூக்கா **12:29–30**, குர்ஆன் **3:18**]*

*நாம் கடவுளை, அவருடைய மகத்தான தன்மைகளைத் துதிப்போம்,*
*அவரே இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்திற்கும், படைப்பாளர் என்ற முறையில் அவற்றின் அடிப்படை ஆனவர்;*
*எங்கும் நிலவுபவராகவும், எல்லா வல்லமையும் உடையவராகவும், எல்லாம் அறிந்தவராகவும், வழிபடுவதற்குத் தகுதியுடையவர் அவரேயாவார்.*
*சுயமாக ஜீவித்திருக்கும் விழிப்புணர்வுடையவராக*
*அவரே நம் மனங்களில் உள்ள எல்லா அறியாமைகளையும் அழுக்குகளையும் நீக்கி*
*அதனைத் தூய்மைப்படுத்தி கூர்மைப்படுத்துபவர் ஆவார்.* *[காயத்ரி மந்திரம், யஜுர் வேதம்]*

எல்லா மார்க்கங்களும் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளாலும், பாரம்பர்ய நடைமுறைகளாலும், பொய்யான இணை வைப்புக் கொள்கைகளாலும் பாழ்படுத்தப்பட்டிருக்கும் அதே சமயம், எல்லா மார்க்கங்களிலும் "சரணடைந்தோர்" இருக்கக் கூடும். கிறித்துவர்களாக, யூதர்களாக, முஸ்லிம்களாக, இந்துக்களாக, பௌத்தர்களாக, அல்லது வேறு எதனையும் சேர்ந்தவர்களாக சரணடைந்தோர் இருக்கக் கூடும். இவ்வாறு சரணடைந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்து கடவுளால் அங்கீகரிக்கப்படக் கூடிய ஒரே மார்க்கத்தை அமைக்கின்றார்கள். இந்தப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள கருப்பொருளின்படி, கடவுளுடன் போலித் தெய்வங்கள் எதனையும் அமைத்து கொள்ளாமல், கடவுளுக்கு மட்டுமே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சரணடைந்தோர் அனைவரும் கடவுளின் நிரந்தர சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப்படுகின்றனர் **(2:62)**. மெய்யான சரணடைந்தோரின் ஓர் இலக்கணம் என்னவென்றால், அவர்கள் குர்ஆனில் எந்த ஒன்றையும் ஆட்சேபத்திற்குரியதாகக் காண மாட்டார்கள்.

இந்த இறுதி வேதத்தின் வருகையுடன் இவ்வுலகிற்குரிய கடவுளின் தூதுச் செய்திகள் இப்போது முழுமை அடைந்து விட்டன. நீண்ட நாட்களாகக் காத்திருக்கும் நமது மிக அவசரமான கேள்விகளான – நாம் யார், நம் வாழ்வின் நோக்கம் என்ன, நாம் எவ்வாறு இவ்வுலகிற்கு வந்தோம், இங்கிருந்து எங்கே செல்கிறோம், எது சரியான மார்க்கம், இது பரிணாம வளர்ச்சியா அல்லது படைப்பா, போன்றவற்றுக்குரிய பதில்களை இப்போது நாம் பெற்றிருக்கின்றோம்.

சிலர் வியக்கக் கூடும்: "தன் செய்தியை முழுமைப்படுத்தவும், ஒன்றிணைக்கவும் கடவுள் ஏன் இத்தனை காலம் காத்திருந்தார் ? ஆதமின் காலத்திலிருந்து முழுமையான வேதத்தைப் பெற்றிராத மக்களுடைய நிலை என்ன ?" இக் கேள்விக்குக் குர்ஆன் **20:52**ல் பதில் கூறுவதையும் மனதில் கொண்டவாறு, உலகின் மக்கள் தொகை அதன் துவக்கம் முதல் இப்பொழுது வரை **7,000,000,000** ஐத் தாண்டவில்லை என்பது ஓர் எளிய புள்ளி விவரக் கணக்கே ஆகும். இப்போது முதல் உலக முடிவான கி.பி. **2280** வரை **(**பின் இணைப்பு **25)** இவ்வுலகின் மக்கள் தொகை **75,000,000,000** ஐத் தாண்டிவிடும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விதமாக, மக்களில் பெரும்பான்மையினர் தூய்மைப்படுத்தப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட கடவுளின் செய்தியைப் பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளனர் (வரைபடம் பார்க்க).




*[கறுப்புப் பகுதி ஆதமிலிருந்து இன்று வரை உலகின் மக்கள் தொகையைக் காட்டுகிறது]*

## மனிதப் படைப்பின் துவக்கத்திற்கு முன்

இவை அனைத்தும் கோடானு கோடி ஆண்டுகட்கு முன்பு, கடவுளிடம் உயர் அந்தஸ்தைப் பெற்றிருந்த படைப்புகளில் ஒருவனான சாத்தான், கடவுளுடன் சுதந்திரமான கடவுளாகத் தன்னாலும் ஒரு சாம்ராஜ்யத்தை நடத்த முடியும் என்றதோர் ஆணவமான எண்ணத்தைத் தன்னுள் வளர்த்துக் கொண்டபோது துவங்கியது. கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற் கெதிரான இந்த அறைகூவல் இறைநிந்தனையானது மட்டுமல்ல, தவறானதும் ஆகும். கடவுளுக்கு மட்டுமே கடவுளாக இருப்பதற்குரிய தகுதித்திறன் உள்ளது, மேலும் கடவுள் தன்மை என்பது அவன் புரிந்து கொண்டதை விட மிக மிக அதிக மானது என்ற உண்மையை சாத்தான் அறியாதவனாக இருந்தான். அவனுடைய அந்த அகந்தைதான், அறியாமையால் தூண்டப்பட்ட அந்த ஆணவம்தான், கடவுளைப் போல தன்னாலும் ஒரு சாம்ராஜ்யத்தை, நோய், துன்பம், போர், விபத்து, குழப்பம் ஆகியன இல்லாமல் நிர்வாகம் செய்ய இயலும் என சாத்தான் நம்புவதற்கு வழிகோலியது. கடவுளின் படைப்புகளில் மிகப் பெரும்பான்மையானோர், சாத்தானோடு கருத்து மாறுபாடு கொண்டனர். ஆயினும், வெவ்வேறு அளவுகளில் சாத்தானோடு ஒத்துப்போன, அகந்தை கொண்ட மிகச் சிறுபான்மையினரே கோடானு கோடிக் கணக்கில் இருந்தனர். இவ்விதம் விண்ணகத்தின் சமூகத்தார்களுக்குள் ஓர் ஆழமான தர்க்கம் வெடித்தது **(38:69)**. கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்கெதிரான கலகக்காரர்களின் அநீதமான இந்த அறைகூவல் மிகத் திறமையான முறையில் சந்திக்கப்பட்டு, தீர்த்து வைக்கப்பட்டது. தங்களுடைய குற்றங்களிலிருந்து விலகி கடவுளிடம் சரணடைவதற்குக் கலகக்காரர்களுக்குப் போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்ட பின்னர், கடுமதி கொண்ட கலகக்காரர்களை பூமியென்று அழைக்கப்படும் விண்கலத்திற்கு வெளியேற்றி, அவர்கள் தங்களை மீட்டுக் கொள்ள மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கக் கடவுள் முடிவு செய்தார்.

உங்களால் ஒரு விமானத்தை ஓட்ட முடியும் என்று நீங்கள் கோரினால், உங்கள் கோரிக்கையைப் பரீட்சிக்கச் சிறந்த வழி, உங்களிடம் ஒரு விமானத்தைக் கொடுத்து அதை ஓட்டும்படிக் கூறுவதே ஆகும். தானும் ஒரு கடவுளாக இருக்கமுடியும் என்ற சாத்தானின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் முகமாக கடவுள் எடுத்த முடிவும் மிகச் சரியாக இதுவேதான்; மிகச் சிறியதோர் இடமான பூமியில் அவனைத் தற்காலிகத் தெய்வமாகக் கடவுள் நியமித்தார். **(2:30, 36:60)** சாத்தானுடன் ஒத்துப் போனவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்குத் தங்களுடைய அகந்தைகளைக் கொன்று, கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்குச் சரணடைய ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. குற்றம் செய்த படைப்புகளில் மிகப் பெரும்பான்மையினர் இவ்வாய்ப்பைச் சாதகமாக்கிக் கொண்ட அதே சமயம் மிகச் சிறுபான்மையினரான சுமார் **150** பில்லியன் படைப்புக்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத்தவறி விட்டனர் **(33:72)**.

**வெள்ளைப் பகுதி சாத்தானுடன் இசைய மறுத்த மிகப்பெரும்பான்மையினரைக் குறிக்கின்றது.**

**மங்கலான இப்பகுதி வருந்தித் திருந்தி கடவுளைச் சரணடைந்த மிகப் பெரும்பான்மையைக் குறிக்கின்றது.**

விண்ணகத்தின் சமூகத்தார்களுக்குள் ஏற்பட்ட இத்தர்க்கம் கடவுளின் படைப்புகளை வெவ்வேறு இனங்களாக வகைப்படுத்துவதற்கு வழிகோலியது:

## (1) வானவர்கள்

கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்கெதிராக ஒருபோதும் கேள்வி கேட்காத படைப்புகள் வானவர்களாக வகைப்படுத்தப்பட்டனர்; கடவுளுக்கு மட்டுமே கடவுளாக இருப்பதற்குரிய திறனும் தகுதிகளும் இருக்கின்றது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். கடவுளின் படைப்புகளில் மிகப் பெரும்பான்மையினர் – எண்ணில் அடங்காதவர்கள் – இவ்வகையைச் சேர்ந்தவர்கள். வானவர்களின் எண்ணிக்கை மிகவும் பெரியது, தங்களில் எத்தனை பேர் இருக்கின்றோம் என்பதை வானவர்கள் கூட அறிய மாட்டார்கள்; கடவுள் மட்டுமே அவர்களுடைய எண்ணிக்கையை அறிவார் (74:31).

## (2) விலங்குகள்

கலகக்காரர்களும் அவர்களுடைய தலைவனும் கடவுளின் சாம்ராஜ்யத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று வானவர்கள் ஆலோசனை கூறிய போதிலும் (2:30), கலகக்காரர்கள் தங்கள் குற்றத்திலிருந்து விலகி, வருந்தித் திருந்தி கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்குச் சரணடைவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க மிக்க அருளாளர் விரும்பினார் (33:72). மேலே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ளபடி, கலகக்காரர்களில் மிகப் பெரும்பான்மையினர், கடவுளின் சாம்ராஜ்யத்திற்குள் மீண்டும் நுழைவதற்கு, கடவுளின் அருள்மிக்க இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் செய்த இறைநிந்தனைக்குப் பரிகாரமாக, அவர்கள் தங்கள் அகந்தைகளைக் கொன்று இவ்வுலகிற்கு வந்து சரணடைந்த நிலையில் ஒரு பங்கை ஆற்றவும் ஒப்புக்கொண்டனர். சரணடைந்த நிலையில் இவ்வுலகில் ஆற்றிய பணிக்குப் பகரமாக இப்படைப்புகள் கடவுளின் நிரந்தர சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக்கொள்ளப்படுவர் (6:38). குதிரை, நாய், மரம், சூரியன், சந்திரன், விண்மீன்கள், மேலும் உருக்குலைந்த மற்றும் வளர்ச்சிகுன்றிய குழந்தைகள் தங்கள் குற்றத்திலிருந்து விலகிக் கொண்டு, திருந்தி விட்ட அறிவுடைய படைப்புகளில் உள்ளவையாகும்.

*வானங்கள் மற்றும் பூமியில் உள்ள*
*ஒவ்வொன்றும் கடவுளுக்குச் சிரம் பணிகின்றன*
*என்பதை நீர்அடையாளம் கண்டு கொள்ளவில்லையா ?*
*சூரியன், சந்திரன், விண்மீன்கள்,*
*மலைகள், மரங்கள், பிராணிகள்*
*மற்றும் மனிதர்களில் ஏராளமானோர்;*
*ஆயினும் மக்களில் அதிகமானோர், தண்டனைக்கென்று விதிக்கப்பட்டுள்ளனர்.* *(22:18)*

*நட்சத்திரங்களும், மரங்களும் சிரம்பணிகின்றன.* *(55:6)*

ஒரு குதிரைக்கு அகந்தை எதுவும் இல்லை. அக்குதிரையின் சொந்தக்காரர் செல்வந்தராகவோ அல்லது ஏழையாக வோ, உயரமாகவோ அல்லது குள்ளமாகவோ, கனத்தவராகவோ அல்லது இளைத்தவராகவோ, இளமையானவராகவோ அல்லது முதிர்ந்தவராகவோ இருக்கலாம், அக்குதிரை அவர்கள் அனைவருக்கும் பணிவிடை செய்யும். ஒரு நாய்க்கு அகந்தை எதுவும் இல்லை. அது தன் எஜமானிடம் வாலை ஆட்டும், அதன் சொந்தக்காரர் எவ்வளவு பெரிய செல்வந்தராகவோ, அல்லது ஏழையாகவோ இருந்த போதிலும், அது ஒரு பொருட்டல்ல. ஒவ்வொரு நாளும் சூரியன், மிகச்சரியாக, கடவுளால் நிர்ணயிக் கப்பட்ட நேரத்தில் உதித்து, அஸ்தமனமாகின்றது. சந்திரன் ஒரே சீரான வேகத்தில் சற்றும் பிசகாமல் பூமியைச் சுற்றி அதன் வட்டவரையைப் பின் தொடர்கின்றது. மனித உடல் – ஒரு தற்காலிக ஆடை – பூமியைச் சேர்ந்ததாகும். இவ்விதம், அது ஒரு சரணடைந்தவராகும். இதயம், நுரையீரல், கல்லீரல், இன்னும் மற்ற உறுப்புகள் நம்முடைய கட்டுப்பாடின்றித் தங்களுடைய பணிகளை நிறைவேற்றுகின்றன.

## (3) மானிடர்கள்

கடும் கலகக்காரர்களான மானிடர்கள் மற்றும் ஜின்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்து சாத்தானின் கோரிக்கை செயல்படுத்தப்படும் விதத்திற்குச் சாட்சிகளாவதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்குச் சரணடைய ஒரு சந்தர்ப்பம் வாய்த்தும் அதனை ஏற்றுக் கொள்ளத் தவறிய இந்த அகந்தை மிக்க படைப்புகள் சரிபாதியாகப் பிரிக்கப்பட்டன. சாத்தானின் கண்ணோட்டத்தோடு குறைந்த அளவில் ஒத்துப்போன ஒரு பாதியினர் மானிடர்களாக வகைப்படுத்தப்பட்டனர். சாத்தானின் கோரிக்கை குறித்த ஐயங்களை அவர்கள் தாங்கி இருந்தாலும், கடவுளின் ஏகோபித்த அதிகாரம் குறித்து ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க அவர்கள் தவறிவிட்டனர். அகந்தைதான், கடவுளின் மாபெரும் வல்லமையைப் பற்றிச் சரியான மதிப்பீடு செய்வதிலிருந்து அந்தப் படைப்பினங்களைத் தடுத்தது. அகந்தைதான், சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோதும் சரணடைவதிலிருந்து அவர்களைத் தடுத்தது (33:72). மேலும் அகந்தைதான் நம்மில் பெரும்பாலானோர்க்கும், கடவுளின் சாம்ராஜ்யத்திற்குள் நாம் மீட்டுக் கொள்ளப்படுவதற்கும் இடையில் நிற்கிறது (25:43). இதனால்தான் "உங்கள் அகந்தையைக் கொல்லுங்கள்" என்பது குர்ஆனில் காணப்படும் முதற்கட்டளைகளில் ஒன்றாக உள்ளது (2:54).

## (4) ஜின்கள்

குற்றம் செய்த படைப்புகளில் மறுபாதி, சாத்தானின் கண்ணோட்டத்தோடு ஒட்டி நின்று மிகப்பெரும் அகந்தையை வெளிப்படுத்தியவர்கள், இவர்கள் ஜின்களாக வகைப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு மானிடனுக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு ஜின்னை நியமிக்க வேண்டும் என்பது கடவுளின் திட்டமாக இருந்தது. உடன் இருக்கும் ஜின், சாத்தானின் பிரதிநிதியாக இருந்து அவனுடைய கண்ணோட்டத்தைத் தொடர்ந்து ஆதரிக்கின்றது (50:23,27). மானிடர்கள், ஜின்கள் ஆகிய இருதரப்பினருக்கும், அவர்கள் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளவும், தங்கள் அகந்தைகள் தீயவை என்று ஒப்புக் கொண்டு விலகிக் கொள்ளவும், கடவுளின் ஏகோபித்த அதிகாரத்திற்குச் சரணடைந்து தங்களை மீட்டுக் கொள்ளவும் ஒரு விலைமதிப்பற்ற சந்தர்ப்பம் இவ்வுலகில் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு மானிடன் பிறக்கும் போதும் ஒரு ஜின்னும் பிறந்து அப்புதிய மனிதனுக்கென்று நியமிக்கப்படுகின்றது. ஜின்கள் சாத்தானின் சந்ததியினர் என்பதை நாம் குர்ஆனிலிருந்து கற்றுக் கொள்கிறோம். (7:27,18:50). ஒரு ஜின் பிறந்து ஒரு மானிடனுக்கென நியமிக்கப்படும்போது, அந்த ஜின் அம்மனிதனின் மரணம் வரை அவனுடன் தொடர்ந்து உடன் இருக்கின்றது. பின்னர் அந்த ஜின் விடுவிக்கப்பட்டு மேலும் சில நூற்றாண்டுகள் ஜீவித்திருக்கின்றது. ஜின்கள், மனிதர்கள் ஆகிய இருவகையினரும் கடவுளை மட்டுமே வழிபடுதல் அவசியமாகும் (51:56).

## கடவுளுக்கு எந்திரர்கள் தேவை இல்லை

38:69ல் குறிப்பிட்டுள்ளபடியும் மேலே விவரிக்கப்பட்டபடியும் விண்ணகத்தின் சமூகத்தாரிடையே ஏற்பட்ட இத்தர்க்கம், கடவுளின் படைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உள்ளது என்பதை நிரூபிக்கின்றது. அவர்களுக்கெனச் சுயமான மனங்கள் உள்ளன. கடவுளின் படைப்புக்கள், அவருடைய எல்லையில்லா மகத்துவத்தை போற்றி நன்றி செலுத்தும் முகமாகவே அவருக்குப் பணி செய்கின்றன என்ற வியப்பூட்டும் உண்மையை, கடவுளின் படைப்புகளில் உள்ள மிகச் சிறுபான்மையினரின் இக்கலகம், தெளிவாக எடுத்துக் காட்ட உதவிசெய்கிறது. இக்கலகம் ஏற்பட்டிராவிடில் சுதந்திரம் என்பது கடவுளின் படைப்புகளுக்கு அவருடைய பரிசு என்பதை நாம் ஒருபோதும் அறிந்திருக்க மாட்டோம்.

## அருளாளர், அன்பாளர்

நம் உலகப் பரிமாணங்களின்படி பார்த்தால் கூட, எந்த ஒரு நிறுவனமும் அதன் பணியாட்கள் அந்நிறுவனத்தின் நலனுக்கு விசுவாசமானவராகவும் அர்ப்பணிப்புக் கொண்டவராகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. ஒரு நிறுவனத்தின் பணியாளர் அந்நிறுவனத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்காதவராகவோ, பங்கிடப்பட்ட விசுவாசம் கொண்டவராகவோ இருப்பதை அறிய நேர்ந்தால் அவர் உடனடியாக நீக்கம் செய்யப்படுகிறார். ஜின்களும் மானிடர்களும் சாத்தானின் பால் சாய்ந்து, பின்னர் தங்களுடைய கலகக்காரியங்களை மறுபரிசீலனை செய்வதற்குக் கடவுளால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை நிராகரித்ததால், சாத்தானும் அவனுடைய கூட்டாளிகளும் கடவுளின் சாம்ராஜ்யத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று வானவர்கள் எதிர்பார்த்தனர் (2:30). நம் குற்றத்தை ஒப்புக் கொண்டு, நம்மை மீட்டுக் கொள்ளக் கடவுள் நமக்களித்த கூடுதலான இவ்வாய்ப்பு கடவுளிடமிருந்துள்ள மிகப்பெரும் கருணையே ஆகும்.

மீட்சிக்கான, எல்லையில்லாக் கருணை மிகுந்த இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் கடவுள் "மரணத்தைப் படைத்தார்" (67:1–2). தெய்வீகமான இத்திட்டத்தின்படி விண்ணகத்தில் நிகழ்ந்த கலகம் பற்றிய நினைவு எதுவும் இல்லாத

நிலையில் கலகக்காரர்களை மற்றொரு வாழ்வுக்குக் கொண்டு வரவேண்டியதாக இருந்தது. இவ்வாழ்வின் சூழ்நிலை களில், ஜின்களும் மனிதர்களும் கடவுளின் செய்திகளையும், சாத்தானின் செய்திகளையும் பெற்றுப் பின்னர் சுதந்தர மாக ஏதேனும் ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் சுயமான விருப்பத்தின்படி செய்த முடிவின் அடிப்படை யில் அவர்கள் கடவுளின் சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப்படுகிறார்கள், அல்லது சாத்தானுடன் சேர்த்து நிரந்தர மாக வெளியேற்றப்படுகிறார்கள்.

## சாத்தானின் தற்காலிக சாம்ராஜ்யம்

சாத்தானுக்கென வடிவமைக்கப்பட்ட சாம்ராஜ்யத்தின் அற்பத்தன்மையை வலியுறுத்திக் காட்டுவதற்காகக் கோடிக் கணக்கான நட்சத்திர மண்டலங்களையும் கோடானு கோடிக்கணக்கான நட்சத்திரங்களையும், கோடிக்கணக்கான ஒளி வருடங்களின் தொலைவில் பரந்து விரிந்திருக்கும் இப்பிரபஞ்சத்திற்குள் கடவுள் படைத்தார். ஒளிவேகத்தில் சூரியனை நோக்கி நாம் பயணித்தால் (93,000,000 மைல்கள்) அதனை எட்டு நிமிடத்தில் அடைவோம். நாம் தொடர்ந்து ஒளிவேகத் தில் சென்று கொண்டிருந்தால் 50,000 முதல் 70,000 வருடங்களில் நமது பால்வீதி மண்டலத்தின் வெளி எல்லையை அடைவோம். பால்வீதிக்கருகில் உள்ள நட்சத்திர மண்டலத்தை நாம் அடைவதற்கு, ஒளிவேகத்தில் 2,000,000 வருடங்கள் ஆகும், மேலும் "நம்முடைய பிரபஞ்சத்தில்" குறைந்தபட்சம் 2,000,000,000 நட்சத்திர மண்டலங்கள் உள்ளன. மிகச்சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் பார்த்தாலும், இப்பிரபஞ்சத்தின் எல்லையில் அல்ல, நம் பால்வீதியின் எல்லையில் இருந்து பார்த்தால் கூட நம் பூமி சுத்தமாக நம் பார்வைக்கு எட்டாது. இப்பிரபஞ்சம் ஒன்றும் பெரியதல்ல என்பது போல், இதைச் சூழ்ந்து இதைவிடப் பெரிய, மேலும் ஆறு பிரபஞ்சங்களைக் கடவுள் படைத்தார் (2:9, 67:3). பின்னர் பிரபஞ்சங்களில் மிகச் சிறியதும், உள்ளடங்கியதுமான இப்பிரபஞ்சத்தில் இருக்கும் மிகச்சிறிய துகளான பூமி என்ற கிரகம் அவனுடைய இராஜ்ய மாக இருக்கும் என்று கடவுள் சாத்தானுக்குத் தெரிவித்தார். கடவுளின் திட்டப்படி, மனிதர்களையும், ஜின்களையும் கடவு ளின் நேரடி இருப்பைத் தாங்க முடியாத ஒரு பிரபஞ்சத்தில் அமைக்க வேண்டிய அவசியம் இருந்தது (7:143). இவ்விதமாக, கடவுளின் நேரடி இருப்பிலிருந்து மிகத்தூரமாக, ஆயினும் அவருடைய முழு அறிவும், கட்டுப்பாடும் உள்ள, மிக மிகச்சிறிய சாம்ராஜ்யத்தைச் சாத்தான் ஆட்சி செய்கிறான். திருந்தி விட்ட கலகக்காரர்களின் எண்ணிக்கை, அவர்கள் அனைவரை யும் பூமியில் அமர்த்த இயலாத அளவிற்கு மிக அதிகமானதாக இருந்ததும் கவனிக்கப்பட வேண்டியதாகும். எனவேதான் பூமிக் கிரகத்தில் மனிதர்களை விட அதிகமான எண்ணிக்கையில் பிராணிகள் உள்ளன. திருந்திவிட்ட கலகக்காரர்கள் அனைவரையும் பூமியில் அமர்த்தினால் அது கொள்ளாமல் போய் விடும் என்பதால் எண்ணற்ற அளவு படைப்புகள் விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ளன.

## ஆதமும் ஏவாளும்

கடவுளின் உத்தரவிற்கேற்ப முதல் மனிதரின் உடல் பூமியில் கடவுளுடைய வானவர்களால் வடிவமைக்கப்பட்டது (7:11). பின்னர் கடவுள் முதல் மனிதர் ஆதமை அவ்வுடலுக்கென நியமித்தார். கடவுள் வானவர்களிடம், அவர்கள் மனிதர் களுடைய சோதனைக் காலம் முழுவதும் – அவர்களைப் பாதுகாத்தல், காற்றுக்களை வீசச் செய்தல், மழையையும் வாழ்வா தாரங்களையும் பங்கிடுதல், போன்ற பணிகளைச் செய்வார்கள் என்று தெரிவித்த போது சாத்தான் ஒருவன் மட்டுமே "சிரம்பணிந்து வீழ்ந்திட" மறுத்தவனாக இருந்தான் (2:34, 15:31, 38:74). ஆதமுடைய துணை, ஆதமிலிருந்தே பெண்மைத் தன்மையுடன் 'க்ளோன்' செய்யப்பட்டு, இரண்டாவது மானிடரை அவர் உடம்புக்கெனக் கடவுள் நியமித்தார். ஆதம் மற்றும் ஏவாள் ஆகியோருடைய (ஆன்மாவற்ற) வெற்று உடம்புகள் பூமியில் இருந்த அதேசமயம், அவர்களுடைய ஆன்மாக்கள், அதாவது உண்மையான ஆதம் ஏவாள், சுவர்க்கத்தில் வசித்து வந்தார்கள். கடவுளின் கட்டளைகளை சிரமேற்று நடந்த வரைக்கும் ஆதமும், ஏவாளும் சுவனத்தில் தங்கி இருந்தனர், மாறாக அவர்கள் சாத்தானுக்குச் செவி சாய்த்த மாத்திரத் தில், நம் அனைவரிடமும் உள்ள தவறான மனித இயல்பை அவர்கள் பிரதிபலித்தனர். மேலும் அவர்கள் உடனடியாக கீழே, பூமியில் உள்ள சாத்தானின் இராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாகி விட்டனர் – "அவர்களுடைய உடல்கள் அவர்களு டைய பார்வைக்குத் தெரியக் கூடியவை ஆயின" (7:20, 20:121). மீதமுள்ளவை மானிட சரித்திரம்.

## சாத்தான்: எல்லா ஜின்களுக்கும் தந்தை

மானிடர்களையும், ஜின்களையும் சோதனைக்கு ஆட்படுத்துவதால், ஒவ்வொரு மனிதன் பிறக்கும் போதும் சாத் தான் ஒரு சந்ததி எடுக்க வேண்டியது அவசியமாகிறது; மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு முறை ஒரு மனிதன் பிறக்கும் போதும், மனிதனுடன் தொடர்ந்து செயல்படும் தோழனாக ஒரு ஜின்னும் பிறக்கின்றது, பிறப்பு முதல் இறப்புவரை ஒவ்வொரு மனிதனும், தன் உடம்பிலேயே வாழும் சாத்தானின் பிரதிநிதியால் ஏற்படும் இடைவிடாது தொடர்ந்த தூண்டுதல்களுக் கும், ஆலோசனைகளுக்கும், ஆட்படுத்தப்படுகின்றான். சாத்தானின் பிரதிநிதியான ஜின் தன் மானிடக் கூட்டாளியை

கடவுள் மட்டும் போதுமானவர்அல்ல என்ற சாத்தானின் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு திருப்தி செய்ய முயற்சிக்கின்றது. தீர்ப்பு நாளில், ஜின் கூட்டாளி தன்னுடன் இருந்த மனிதனுக்கு எதிரான சாட்சியாகப் பணி செய்யும் (43:38, 50:23,27). பற்பல ஜின் கூட்டாளிகள் அவர்களுடன் இருந்த மானிட கூட்டாளிகளால் கடவுளின் கண்ணோட்டத் திற்கு மாற்றப்படுகிறார்கள்.

கடவுள் மனிதனைச் சரியான தயாரிப்புகள் இல்லாமல் விட்டு விடவில்லை. மனிதர்கள் தங்களுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தங்கள் இறைநிந்தனையை மறுபரிசீலனை செய்ய உதவியாக, ஒவ்வொரு மனிதனும் கடவுள் மட்டுமே நம் இரட்சகரும், எஜமானரும் ஆவார், அவரைத் தவிர வேறெவருமில்லை என்ற உள்ளுணர் வில் அமைக்கப்பட்ட அறிவோடு பிறக்கின்றான் (7:172–173). ஜின்களுக்கு இந்த உள்ளுணர்வின் அறிவு கொடுக்கப்பட வில்லை. ஆனால் அவர்கள் உள்ளடங்கிய இப்பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள கடவுளின் அத்தாட்சிகளைக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக மனிதனைவிட நீண்ட கால அளவு வாழ்வும், பெரும் திறன்களும் கொடுக்கப்பட்டுள்ளனர். அவர் கள் சாத்தானின் கண்ணோட்டத்திற்குப் பிரதி நிதியாக இருப்பதால், அவர்களுடைய உள்ளுணர்வின் இயல்பு பல தெய்வ கொள்கையின் பால் உறுதியாகச் சாய்ந்ததாக உள்ளது. கடவுள் மட்டுமே வழிபடப்படவேண்டுமென்று நமக்குள் கட்டமைக் கப்பட்டுள்ள உள்ளுணர்விற்கு அப்பால், நம்மை மீட்டுக்கொள்வதற்கு நமக்கு உதவியாகக் கடவுள் தன் தூதர்களை அனுப்புகின்றார். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டால், மன்னிக்கப்பட மாட்டாத ஒரே குற்றம் (மரணம் வரை செயல்படுத்தப்படும்) போலித் தெய்வ வழிபாடுதான் எனும் இந்த நிதர்சனத்தை நாம் மெச்சி கடவுளுக்கு நன்றி செலுத்த இயலும்: அதாவது கடவுளுடன் மற்றவர்களும் ஏதேனும் சக்திகள் கொண்டிருப்பதாக நம்புவது.

## நாற்பது வருட சலுகைக் காலம்

கடவுளின் ஏகோபித்த அதிகாரத்தையோ அல்லது சாத்தானின் கண்ணோட்டத்தையோ ஆதரிப்பது என்ற இந்த மிக முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன், அனைத்துக் கண்ணோட்டங்களையும் கற்றுக்கொள்வதற்கும், சுற்றிலும் கவனிக்கவும், பிரதிபலிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும் மனிதனுக்கு நாற்பது வருடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் மட்டுமே அறிந்திருக்கும் சூழ்நிலைகளின் காரணங்களினால் நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்கும் எவர் ஒரு வரும், கடவுளால் மீட்சிக்கென்று தேர்ந்தெடுக்கப்படுகின்றார். நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்கும் எவர் ஒருவரும் சுவர்க்கத்திற்குச் செல்கின்றார் (46:15, பின் இணைப்பு 32). குர்ஆனை நம்புபவர்கள் கூட கடவுளின் இத்தகைய இரக்கம் மிகுந்த இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதைக் கடினமாகக் காண்பது, கடவுளின் அளப்பெரும் கருணையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. நம்மை மீட்டுக்கொள்ளக் கடவுளால் நமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் குறித்த நற்செய்திகளைக் கடவுளின் தூதர்கள் சேர்ப்பித்து விட்டனர். மேலும் அவர்கள் வலிமையான சான்றுகளால் ஆதரவளிக்கப்படுகின்றனர். மோஸஸ் ஃபேரோவிடம் சென்ற போது, அவருடைய கைத்தடி பாம்பாக மாறியது போன்ற அற்புதங்களால் ஆதரவளிக்கப் பட்டார். ஜீஸஸ் கடவுளின் அனுமதியின்பேரில் களிமண்ணிலிருந்து உயிருள்ள பறவைகளை உருவாக்கினார், கடவுளின் அனுமதி கொண்டு குஷ்டரோகிகளுக்கும், குருடர்களுக்கும் நிவாரணம் வழங்கினார். மேலும் கடவுளின் அனுமதி கொண்டு இறந்து போனவர்களை உயிர்ப்பித்தார். இந்த இறுதி ஏற்பாட்டைச் சேர்ப்பித்த கடவுளின் தூதரான முஹம்மது நபி இத்தகைய அற்புதங்கள் எதையும் காட்டவில்லை (10:20). முஹம்மதின் இறைப்பணிக்கு ஆதரவளித்த அற்புதம் இந்த குர்ஆன்தான் (29:50–51). தெய்வீக ஞானம்தான், குர்ஆனின் அற்புதத்தை, முஹம்மதிடமிருந்து 14 நூற்றாண்டுகள் தள்ளி வைத்தது. குர்ஆனின் அற்புதக் கணிதக் கட்டமைப்பின் (பின் இணைப்பு 1), மிக முக்கியத்துவம் வாய்ந்த பரிமாணங்களை இப்போது நாம் புரிந்து கொண்டிருப்பதால், முஹம்மதின் மூலம் இந்த அற்புதம் வெளிப்படுத்தப்பட்டிருக்குமானால், கோடிக் கணக்கான மக்கள் முஹம்மதைக் கடவுளின் அவதாரம் என்று வழிபட்டிருப்பார்கள் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம்.

## நம்பகத்தன்மைக்கான சான்று:
## கண்கூடானது, உணரக்கூடியது, மறுக்கமுடியாதது.

கணிணி யுகத்தின் வருகையுடன், குர்ஆனின் கணிதக் குறியீடு, 74:30–35ல் தெரிவிக்கப்பட்டுள்ளது போல 'மாபெரும் அற்புதங்களில் ஒன்று' என்பதை நாம் கண்டு பிடித்திருக்கின்றோம். முந்திய தூதர்களுக்கு கொடுக்கப்பட்ட அற்புதங்கள், காலம் மற்றும் இடம் ஆகிய எல்லைகட்குட்பட்டிருந்த அதே சமயம், குர்ஆனின் அற்புதம் நிரந்தரமானதாக உள்ளது. மோஸஸ் மற்றும் ஜீஸஸ் ஆகியோரின் அற்புதங்களைச் சில மனிதர்கள் மட்டுமே கண்டனர், ஆனால் குர்ஆனின் அற்புதத்தை எவராலும், எந்த நேரத்திலும் காணஇயலும். இன்னும் சொன்னால், குர்ஆனின் அற்புதம் முந்திய எல்லா அற்புதங்களையும் நிரூபித்து, ஆவணப்படுத்துகின்றது, உள்ளது (5:48).

பின் இணைப்பு 1ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, குர்ஆனின் கணித அற்புதம் "19" என்ற எண்ணின் அடிப்படையில் அமைந்துள்ளது. வியப்பூட்டும் இந்த அற்புதத்தை வாசகருடன் பகிர்ந்து கொள்வதற்காக "**கடவுள்**" என்ற வார்த்தை இடம்பெறும் இடங்கள் அனைத்தும், உள்ளடக்கம் முழுவதும் பெரிய எழுத்துகளால் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் அவ் வார்த்தையின் மொத்த எண்ணிக்கைகள் கீழே இடப்பக்க மூலையில் ஒவ்வொரு பக்கத்திலும் காட்டப்பட்டுள்ளது. இந்த முக்கிய வார்த்தை இடம் பெறும் மொத்த எண்ணிக்கை, குர்ஆனின் இறுதியில் 2698 என்று காட்டப்பட்டுள்ளது. இக்கூட்டுத் தொகை 19ன் பெருக்குத் தொகையாகும். மேலதிகமாக, "கடவுள்" என்ற வார்த்தை இடம் பெறும் ஒவ்வொரு வசனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட வசன எண்களை நாம் கூட்டினால் அதன் கூட்டுத் தொகை 118123 ஆகிறது, இதுவும் 19ன் பெருக்குத் தொகை ஆகும் (19x6217). "கடவுள்" என்ற வார்த்தை இடம் பெறும் வசன எண்களின் மொத்தக் கூட்டுத்தொகை ஒவ்வொரு பக்கத்திலும் கீழே வலப்பக்க மூலையில் காட்டப்பட்டுள்ளது. கண்கூடான இந்த எளிய உண்மைகள் வாசகர் இலகுவாக சரிபார்த்துக் கொள்ளக் கூடியதாக உள்ளன, மேலும் அவை குர்ஆனுடைய கணிதக் கட்டமைப்பு மனித சக்திக்கு அப்பாற் பட்டதாகும் என நிரூபிக்கப் போதுமானவையாகவும் உள்ளன.

| | |
|---|---|
| "கடவுள்" என்ற வார்த்தையின் மொத்த எண்ணிக்கை (ஒவ்வொரு பக்கத்திலும் கீழே இடப்பக்க மூலையில் காட்டப்பட்டுள்ளது) 2698 (19x142) | வசன எண்களின் மொத்தக் கூட்டுத்தொகை (ஒவ்வொரு பக்கத்திலும் கீழே வலப்பக்க மூலையில் காட்டப்பட்டுள்ளது) 118123 (19x6217) |

## வாசகர் சரிபார்த்துக் கொள்வதற்காக நம்பகத்தன்மைக்கான சான்று


குர்ஆனின் அசாதாரணமான கணிதக் கட்டமைப்புக்கும் கூடுதலாக, ஏராளமான குர்ஆனிய உண்மைகளை நவீன விஞ்ஞானம் நிரூபித்திருப்பதையும், கோட்பாடாக்கிக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம். காலத்தால் முந்திய இத் தகைய விஞ்ஞானத் தகவல்களுக்குரிய சில உதாரணங்கள், இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பூமி முட்டை வடிவிலானது (39:5,79:30).
2. பூமி ஒரே இடத்தில் நிலையாக இல்லை, அது தொடர்ந்து நகர்ந்து கொண்டிருக்கின்றது (27:88).
3. சூரியன், ஒளியின் ஒரு மூலாதாரம், அதே சமயம் சந்திரன் அதனைப் பிரதிபலிக்கின்றது (10:5, 25:61, 71:16).
4. விண்ணை நோக்கி நாம் மேலேறும்போது பிராணவாயுவின் விகிதம் குறைந்துகொண்டு செல்கின்றது (6:125).
5. "பெருவெடிப்புக் கோட்பாடு" உறுதிப்படுத்தப்படுகிறது (21:30).
6. "விரிகின்ற பிரபஞ்சம்" என்ற கோட்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது (51:47).
7. பிரபஞ்சங்கள் புகை மண்டலத்திலிருந்து துவங்கியது (41:11).
8. பரிணாம வளர்ச்சி என்பது ஒரு நிதர்சனம்; குறிப்பிட்ட சில உயிரினங்களுக்கிடையில், தெய்வீக வழிகாட்டுதலின்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு செயல்முறையே பரிணாம வளர்ச்சியாகும் (21:30, 24:45, 32:7–9, 18:37, 15:28–29, 7:11, 71:13–14, பின் இணைப்பு 31).
9. ஆண்களின் உயிர்த்திரவமே குழந்தையின் பால்வேறுபாட்டை நிர்ணயிக்கின்றது (53:45–46).

## அறிவிற்குப் புறம்பாக ஒன்றுமில்லை

குர்ஆனில் அறிவிற்குப் புறம்பாக எதுவும் காணப்படாமலிருப்பதும் சமமான அற்புதமேயாகும். குர்ஆன் வெளிப் படுத்தப்பட்ட காலத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த அறியாமைகளையும், மூடநம்பிக்கைகளையும் கவனத்தில் கொள்ளும் போது இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும். உதாரணமாக, பாரம்பர்ய முஸ்லிம்களால் மிகவும் மதிக்கப்படும் ஒரு விரிவுரை இப்னு கஸீருடையதாகும். நபிக்குப் பின்னர், நூற்றாண்டுகள் கழித்து எழுதப்பட்ட பிரசித்தி பெற்ற இக்குறிப்பு ரையில், பூமி ஒரு பெரிய எருதின் 40,000 கொம்புகளால் சுமக்கப்படுகின்றது என்றும் அது ஒரு மிகப் பெரிய திமிங்கிலத்தின் மேல் நின்று கொண்டிருக்கின்றது என்றும் நாம் காண்கிறோம் (வசனம் 68:1க்கு இப்னு கஸீரின் விளக்கவுரையைக் காண்க).

மிகச் சமீபமாக 1975ல், குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட அதே இடமான சவூதி அரேபியாவில், மதினா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் தலைவரான ஷேக் அப்துல் அஸீஸ் பின் பாஸ் பூமி தட்டையானதென்றும், அது நிலையாக ஒரே இடத்தில் உள்ளது என்றும் பலரறிய அறிவித்தார். (கீழே காண்க)!!


من مطبوعات الجامعة الإسلامية
بالمدينة المنورة ١٣٩٥ هـ

الأدلة النقلية والحسية
على جريان الشمس وسكون الأرض

عبد العزيز بن باز

ولو كانت الأرض تدور كما
يزعمون لكانت البلدان ، والجبال ، والأشجار ، والأنهار ، والبحار
لا قرار لها ، ولشاهد الناس البلدان المغربية في المشرق ، والمشرقية في المغرب ،
ولتغيرت القبلة على الناس حتى لا يقر لها قرار

பின் பாஸின் புத்தகத்தில் பக்கம் 23ன் மொழிபெயர்ப்பாவது: "இவர்கள் கூறுவது போல் பூமி சுழன்று கொண்டிருந்தால், நாடுகள், மலைகள், மரங்கள், ஆறுகள், கடல்கள் ஆகியவற்றுக்கு அடித்தளங்கள் இருக்காது. மேலும் கிழக்கிலிருக்கும் நாடுகள் மேற்குக்கும், மேற்கிலிருக்கும் நாடுகள் கிழக்குக்கும் நகர்வதை மக்கள் காண்பார்கள்.

## பரிபூரண மகிழ்ச்சி: இப்பொழுதும், எப்பொழுதும்

"மகிழ்ச்சி" என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கைக்கு எட்டாமல் விலகி ஓடும் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். இவ்வுலகிலும், மேலும் என்றென்றும் பரிபூரண மகிழ்ச்சியை அடைவதற்கான இரகசியத்தைக் குர்ஆன் வெளிப்படுத்துகின்றது. மகிழ்ச்சி என்பது ஆன்மாவிற்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த ஒரு பண்பாகும் என்று நாம் குர்ஆனிலிருந்து கற்றுக்கொள்கிறோம். இவ்விதமாக, அது விரும்பிய பொருள் சார்ந்த வெற்றிகள் – பணம், பதவி, புகழ் போன்றவை – அனைத்தையும் அடைந்து விட்ட ஓர் உடலானது பல சமயங்களில் மகிழ்ச்சியற்ற ஒரு நபருடையதாகவே உள்ளது. மகிழ்ச்சி என்பது முழுக்க முழுக்க ஆன்மா, அந்த உண்மையான நபர் அடையும் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் பொறுத்ததாகவே உள்ளது. இவ்வுலகம் மற்றும் நிரந்தரமான மறுவுலகம் ஆகிய இரண்டிலும், உடல் மற்றும் ஆன்மா ஆகிய இரண்டுக்கும் பரிபூரண மகிழ்ச்சியை நோக்கிய ஒரு விரிவான வரைபடத்தைக் குர்ஆன் வழங்குகின்றது (பின் இணைப்பு 15).

நிரூபிக்கப்பட்ட இந்த ஏற்பாடு முழுவதும் ஏராளமான வசனங்களில், நம்பிக்கை கொண்டோருக்கு இவ்வுலகிலும் என்றென்றும் கடவுள் அவரே தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை உத்தரவாதம் அளிக்கின்றார்:

*பரிபூரணமாக, கடவுளின் நேசர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை,*
*மேலும் அவர்கள் கவலைகொள்ளவும் மாட்டார்கள்.*
*அவர்கள் தான் நம்பிக்கைகொண்டு நேரிய வாழ்வு நடத்துபவர்கள்.*
*அவர்களுக்கு இவ்வுலகிலும், மேலும் மறுவுலகிலும் மகிழ்ச்சியே.*
*இவ்விதமானது கடவுளின் மாற்ற இயலாச் சட்டம்.*
*இதுவே மெய்யான பெருவெற்றியாகும்.* *[10:62–64]*

## ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரே மார்க்கத்தை நம்பிக்கை கொண்ட அனைவரும் சேர்ந்து அமைக்கின்றார்கள்

படைப்பாளரின் இறுதிச் செய்தியில் இருந்து பெறப்படுவதாக, குர்ஆனில் நன்கு அறியப்பட்ட கருப்பொருள்களில் ஒன்றாக இருப்பது, எல்லா நம்பிக்கையாளர்களுக்கிடையிலும் ஒற்றுமைக்கான அழைப்பு, மற்றும் கடவுளின் தூதர்களுக்கிடையில் பாரபட்சம் காட்டுவதை மீண்டும் மீண்டும் தடைசெய்வது ஆகும். வழிபாட்டின் இலக்கு அதே ஒன்றாக

இருக்குமானால், எல்லா நம்பிக்கையாளர்களுக்கிடையிலும் பரிபூரணமான ஒற்றுமை நிலவும். மனிதக் காரணங்கள், அதாவது, ஜீஸஸ், முஹம்மது மற்றும் மகான்கள் போன்ற சக்தியற்ற மானிடர்களுக்குச் செய்யப்படும் அர்ப்பணிப்பும், தவறான எண்ணத்தின் அடிப்படையிலான முடிவுகளுமே, தவறாக வழிகாட்டப்பட்ட நம்பிக்கையாளர்களுக்கிடையே பிரிவு, வெறுப்பு மற்றும் கசப்பான போர்கள் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைகின்றது. சரியாக வழிகாட்டப்பட்ட ஒரு நம்பிக்கையாளர் கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணித்துக் கொண்டவராகவே இருப்பார், மேலும் கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணித்துக் கொண்ட மற்ற நம்பிக்கையாளர்களைக் காண்பதில் மகிழ்ச்சி அடைவார், அந்நம்பிக்கையாளர் தன் மதத்திற்கு எப்பெயரிட்டு அழைத்தாலும் அது பொருட்டல்ல.

*நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர்களும்,*
*யூதர்களாக இருப்பவர்களும்,*
*கிறித்துவர்களும்,*
*மதம் மாறியவர்களும்;*
*எவரெல்லாம்*
*(1) கடவுளின் மேல் நம்பிக்கை கொண்டு,*
*(2) இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டு,*
*(3) மேலும் நேரிய வாழ்க்கை நடத்துகின்றனரோ,*
*அவர்கள் தங்களுடைய வெகுமதியைத் தங்கள் இரட்சகரிடமிருந்து பெறுவர்கள்;*
*அவர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை, மேலும் அவர்கள் கவலை கொள்ளவும் மாட்டார்கள். [2:62, 5:69]*

## கடவுளுடைய உடன்படிக்கையின் தூதர்

பின் இணைப்பு 2ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இப்புத்தகத்தின் பிரசுரமானது ஒரு புதிய சகாப்தத்தின் வருகைக்கான ஓர் அடையாளமாக – அனைத்து நபிமார்களாலும் சேர்ப்பிக்கப்பட்ட கடவுளின் செய்திகளை ஒருங்கிணைத்து ஒன்றாக ஆக்கப்படும் சகாப்தமாக இது உள்ளது. கடவுளின் ஒரே ஒரு மார்க்கமான "சரணடைதல்" மற்ற அனைத்து மார்க்கங்களையும் மிகைத்து விடும் (9:33, 48:28, 61:9). பாழ்படுத்தப்பட்ட இன்றைய மார்க்கங்கள் அனைத்தும் யூதம், கிறித்துவம், ஹிந்துத்துவம், புத்திஸம், மேலும் இஸ்லாம் உட்பட, அனைத்தும் அப்படியே மடிந்து போகும், மேலும் "சரணடைதல்" மிகைத்து நிற்கும். இது ஒரு தனிமனிதனுடையவோ அல்லது ஒரு மனிதக் கூட்டத்தினருடையவோ ஆசை மிகு எண்ணம் அல்ல; இது கடவுளின் மாற்ற இயலாச் சட்டமாகும் (3:19, 9:33, 41:53, 48:28, 61:9, 110:1).

*ரஷாத் கலீஃபா*
*தூஸான்*
*ரமலான் 26, 1409**

***இம் மொழிபெயர்ப்பின் ஆங்கில மூலத்தின் முதல் அச்சின் இறுதி நகல் 1409 விதியின் இரவு அன்று நிறைவு செய்யப்பட்டது. இத்தேதியின் நாள், மாதம், மற்றும் வருடம் ஆகியவற்றை நாம் கூட்டினால் நமக்கு 1444 கிட்டும். அதாவது 19x19x4 [ரமலான் 26, 1409: 9+26+1409=1444].**

## சூரா 1: திறவு கோல் (அல்–ஃபாத்திஹஹ்)

1. **கடவுள்**–ன் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.*
2. புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, பிரபஞ்சத்தின் இரட்சகர்.
3. மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.
4. தீர்ப்பு நாளின் அதிபதி.
5. உம்மை மட்டுமே நாங்கள் வழிபடுகிறோம். உம்மிடம் மட்டுமே நாங்கள் உதவி கோருகிறோம்.
6. சரியான பாதையில் எங்களை வழி நடத்துவீராக;
7. நீர் ஆசிர்வதித்தவர்களின் பாதையில்; கோபத்திற்குள்ளானோருடையது அல்ல, வழி தவறியவர்களுடையதும் அல்ல.

---

**1:1 அல் குர்ஆனின் முதல் வசனம் 19ன் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள மனித சக்திக்கு அப்பாற்பட்ட கணித அற்புதத்தின் அஸ்திவாரமாகத் திகழ்கின்றது. இந்த முக்கியமான வாசகம் 19 அரபி எழுத்துகள் கொண்டதாக அமைந்துள்ளது, மேலும் இதில் இடம் பெறும் ஒவ்வொரு வார்த்தையும் முழுக்குர்ஆனிலும் 19ன் பெருக்குத் தொகைகளிலேயே இடம் பெற்றுள்ளது (விபரங்களுக்கு பின் இணைப்புகள் 1 மற்றும் 29ஐப் பார்க்கவும்).*

**1:1–7 சூரா 1, அன்றாடத் தொடர்புத் தொழுகைகளின் மூலம் கடவுளுடனான நமது தொடர்பை நிலைப் படுத்திக் கொள்ள கடவுள் நமக்களித்துள்ள வரமாக உள்ளது. உலகின் மாபெரும் கணித வல்லுநர்களை சவாலுக்கழைத்து அவர்களைத் திகைக்கச் செய்யும், உலகை கலங்கடிக்கக்கூடிய, எளிதில் புரியவல்ல ஆனால் ஜோடிக்க இயலாத கணிதக் கட்டமைப்பைக் கொண்டு இவ்வுண்மை உறுதி செய்யப்படுகின்றது; இது மனிதத் திறமைகளுக்கெல்லாம் மிகவும் அப்பாற்பட்டது:*

*(1) இந்த சூரா எண்ணையும், அதன் பின் வசனங்களின் எண்களையும் அருகருகே அமைத்தால் கிடைப்பது 1 1 2 3 4 5 6 7 இவ்வெண் 19ன் பெருக்குத் தொகையாகும்.*

*(2) இதில் ஒவ்வொரு வசன எண்களுக்குப் பகரமாக அவ்வசனத்தில் இடம் பெறும் எழுத்துகளின் எண்ணிக்கையை மாற்றி அமைத்தால் நமக்கு கிடைப்பது 1 19 17 12 11 19 18 43 இவ்வெண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகும்.*

*(3) இதில் ஒவ்வொரு வசனத்தில் மொத்த எண் மதிப்பையும் நாம் நுழைத்தால் நமக்குக் கிடைப்பது, 1 19 786 17 581 12 618 11 241 19 836 18 1072 43 6009 இவ்வெண் 19 பெருக்குத் தொகையாகும்.*

| வசனம் # | எழுத்துகளின் எண்ணிக்கை | எழுத்தெண் மதிப்பு |
|---|---|---|
| 1 | 19 | 786 |
| 2 | 17 | 581 |
| 3 | 12 | 618 |
| 4 | 11 | 241 |
| 5 | 19 | 836 |
| 6 | 18 | 1072 |
| 7 | 43 | 6009 |
| கூட்டுத்தொகைகள் | 139 | 10143 |

*(4) மேலே காட்டப்பட்டுள்ள எண் சூரா 1ன் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது, மேலும் 38 (19x2) இலக்கங்கள் கொண்டதாக உள்ளது.*

*(5) இலக்கங்கள் 38 கொண்ட இந்த எண்ணின் அங்கங்களை அரபியர்களின் வழக்கப்படி வலமிருந்து இடமாக எழுதினால் நமக்கு கிடைக்கும் எண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகும். இவ்விதமாக, 6009 43 1072 18 836 19 241 11 618 12 581 17 786 19 1 என்ற எண்ணும் 19ன் பெருக்குத் தொகையாக இருப்பது கவனிக்கத் தக்கது.*

*(6) மேலே விவரிக்கப்பட்ட கணித அமைப்புகள் அன்றாட ஐவேளை தொடர்பு தொழுகைகளின்அம்சங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்துகின்ற, எண்ணற்ற அசாதாரணக் கணிதக்கட்டமைப்புகளிலும் பங்கு பெறுகின்றன (பின்இணைப்பு15).*

*(7) வியப்பூட்டும் அற்புதங்களில் இன்னும் ஏராளமானவை பின் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக, குர்ஆனுக்குள் நுழையும்போதே, அதன் வாசகருக்கு, இது உலகத்திற்குரிய கடவுளின் தூதுச் செய்திதான் என்பதற்கான கண்கூடான ஆதாரங்கள் தரப்படுகின்றன.*

---

**கடவுள்** *எனும் வார்த்தையின் ஒன்று சேர்த்துக் கூட்டப்பட்ட எண்ணிக்கை =* **கடவுள்** *இடம்பெறுகின்ற வசன எண்களின் ஒன்று சேர்த்துக் கூட்டப்பட்ட மொத்த எண்ணிக்கை=*
*2* *3*

# சூரா 2: பசுங்கன்று (அல்–பகறஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ.ல.ம.*

2. இந்த வேதம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது; நன்னெறியாளர்களுக்கொரு கலங்கரை விளக்கு.

*மக்களில் மூன்று வகையினர்*
*(1) நன்னெறியாளர்கள்*

3. அவர்கள் கண்களுக்குத் தெரியாதவற்றில் நம்பிக்கை கொள்பவர்கள், *(ஸலாத்)** தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பவர்கள், மேலும் நம்முடைய** வாழ்வாதாரங்களில், அவர்களுக்குரியவற்றிலிருந்து, தர்மத்திற்கென அவர்கள் கொடுப்பார்கள்.

4. மேலும் அவர்கள், உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றிலும், உமக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றனர், மேலும் மறுவுலகைக் குறித்து, அவர்கள் பரிபூரண உறுதியுடன் இருக்கின்றனர்.*

5. இவர்கள்தான் தங்களுடைய இரட்சகரால் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர்; இவர்கள்தான் வெற்றி பெற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

*(2) நம்பமறுப்பவர்கள்*

6. நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அது சமமேயாகும்; நீர் அவர்களை எச்சரித்தாலும், அல்லது அவர்களை எச்சரிக்காவிட்டாலும், அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது.*

7. அவர்களுடைய மனங்களையும் அவர்களுடைய செவிப்புலனையும் **கடவுள்** முத்திரையிட்டு விடுகின்றார், மேலும் அவர்களுடைய கண்கள் திரையிடப்பட்டுள்ளன. அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*(3) நயவஞ்சகர்கள்*

8. அடுத்து அவர்கள் நம்பிக்கையாளர்களாக இல்லாத அதே சமயம், "நாங்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்கின்றோம்," என்று கூறுபவர்களும் உள்ளனர்.

---

**2:1* இந்தத் துவக்க எழுத்துகள் 1400 வருடங்களாக தெய்வீகமாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் இரகசியமாக இருந்து வந்துள்ளது. இப்போது நாம் அவற்றைக் குர்ஆனின் அசாதாரணக் கணிதக் குறியீட்டின் ஒரு முக்கிய அங்கம் என அடையாளம் கண்டு கொள்கின்றோம் (பார்க்க பின் இணைப்பு 1, 2, 24 மற்றும் 26). அ.ல.ம. என்பதன் அர்த்தம் வசனம் 2ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: "இந்த வேதம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது." இந்த சூராவில் இம்மூன்று துவக்க எழுத்துகளும் இடம் பெறும் எண்ணிக்கைகள் முறையே 4502, 3202, மற்றும் 2195 எனும் உண்மையின் மூலம் இது தர்க்கத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த எண்களின் கூட்டுத்தொகை 9899 அல்லது 19x521. இவ்விதமாக, அரபி மொழியில் மிகவும் அடிக்கடி இடம் பெறுகின்ற இந்த எழுத்துகள் மானுட சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விதமான கணித ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன. இதே இந்த துவக்க எழுத்துகள் 3, 29, 30, 31 மற்றும் 32 ஆகிய சூராக்களிலும் முதலில் இடம் பெறுகின்றன, மேலும் அவை இடம் பெறும் முறைகள் கூட்டப்பட்டால் இந்த ஒவ்வொரு சூராக்களிலும் அவை 19ன் பெருக்குத் தொகையாகவே வருகின்றது.*

**2:3 தொடர்புத் தொழுகைகள் ஒரு நாளுக்கு ஐந்து வேளைகள் விதிக்கப்பட்டுள்ளதனால், அவை நம் ஆத்மாக்களின் ஊட்டத்திற்கு முதன்மையான மூலாதாரமாக அமைகின்றன. சரணடைதலில் மற்ற அனைத்து அநுஷ்டானங்களுடன் கூடவே, தொடர்புத் தொழுகைகளும் முதன் முதலில் ஆப்ரஹாம் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டன (21:73, 22:78). இந்த ஐந்து அன்றாடத் தொழுகைகள் குர்ஆனின் வெளிப்பாட்டிற்கு முன்னரே அநுஷ்டானத்தில் இருந்து வந்த போதிலும், ஒவ்வொரு தொடர்புத் தொழுகையும் இக்குர்ஆனில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது (24:58, 11:114, 17:78, & 2:238). தொடர்புத் தொழுகைகளின் ஒவ்வொரு தொழுகைக்குமான தொகுதிகளின் (ரக அத்துகள்) எண்ணிக்கைகள், குனிதல், சிரம் பணிதல், மற்றும் தஷஹ்ஹுத்களின் எண்ணிக்கைகள் உட்பட <u>அனைத்து</u> அம்சங்களுக்கும் ஆதாரமளிக்கின்ற கண்கூடான சான்றுகளை பின் இணைப்புகள் 1 &15 வழங்குகின்றன.*

***2:3 கடவுள் பன்மைப் பதத்தைப் பயன்படுத்தும் பொழுது, மற்ற நபர்கள், வழமையாக வானவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. மோஸஸிடம் கடவுள் பேசிய போது, ஒருமை வடிவமே பயன்படுத்தப்பட்டது (20:12–14) பார்க்க பின் இணைப்பு 10.*

**2:4 முந்திய வேதங்களுக்கு ஏற்பட்டு விட்ட கடும் சிதைவுகளுக்குப் பின்னரும், கடவுளின் சத்தியம் அவற்றில் இன்னமும் காணப்படக்கூடியதாகவே உள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டும் இன்னமும் கடவுளுக்கு மட்டுமேயான பரிபூரண அர்ப்பணித்தலை ஆதரிக்கின்றன (உபாகமம் 6: 4–5, மாற்கு 12:29–30). எல்லாச் சிதைவுகளும் எளிதில் கண்டுபிடித்து விடக் கூடியவையாகவே உள்ளன.*

**2:6–7 கடவுளை ஏற்றுக்கொள்ள மறுப்பதெனத் தீர்மானித்து விடுபவர்கள் அத்திசையிலேயே ஒத்தாசை செய்யப்படுகின்றனர்; இத்தகையதொரு தீர்மானத்தில் அவர்கள் நிலைத்திருக்கும் காலம் வரை எந்தச் சான்றையோ அல்லது வழிகாட்டலையோ காண்பதிலிருந்து கடவுளால் அவர்கள் தடுக்கப்பட்டு விடுகின்றனர். வசனம் 7ல் பெரு நாசமுண்டாக்குகின்ற இத்தகையதொரு தீர்மானத்தின் பின்விளைவுகள் வார்த்தைகளால் எடுத்துக் கூறப்படுகின்றன.*

9. **கடவுள்**–ஐயும் நம்பிக்கை கொண்டவர்களையும் ஏமாற்றும் முயற்சியில், அவர்கள் உணர்ந்து கொள் ளாமல் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள் கின்றனர்.

10. அவர்களுடைய மனங்களில் ஒரு நோய் உள்ளது. அதன் விளைவாக, **கடவுள்**–அவர்களுடைய நோயை அதிகரிக்கின்றார். அவர்களுடைய பொய்க் கூற்றின் காரணத்தால், அவர்கள் வலி மிகுந்ததொரு தண்ட னைக்கு உள்ளாகி விட்டனர்.

11. "தீமை புரியாதீர்கள்," என அவர்களிடம் கூறப்பட் டால், அவர்கள் கூறுகின்றனர், "ஆனால் நாங்கள் நன்னெறியாளர்களாக இருக்கின்றோம்!"

12. உண்மையில், அவர்கள் தீமைபுரிபவர்களாக உள்ள னர், ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

13. "நம்பிக்கை கொண்ட மக்களைப்போல் நம்பிக்கை கொள்ளுங்கள்," என அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், "மூடர்கள் நம்பிக்கை கொண்டது போல நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமா?" மெய்யாகவே, அவர்கள்தான் மூடர் களாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் தெரிந்து கொள்வதில்லை.

14. நம்பிக்கையாளர்களை அவர்கள் சந்திக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் நம்புகின்றோம்," ஆனால் தங்களுடைய சாத்தான்களுடன் தனித்தி ருக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் உங்களுடனேயே இருக்கின்றோம்; நாங்கள் கேலி தான் செய்து கொண்டிருந்தோம்."

15. **கடவுள்** அவர்களைக் கேலி செய்கின்றார், மேலும் அவர்களுடைய வரம்புமீறல்களில் பெருந்தவறுகள் செய்தவர்களாக, அவர்களைத் தொடர்ந்து செலுத்து கின்றார்.

16. அவர்கள்தான் வழிகாட்டலை விலை கொடுத்து வழி தவறுதலைக் கொள்முதல் செய்து கொண்டவர்கள். இத்தகைய வணிகம் ஒருபோதும் விருத்தியடைவ தில்லை, அன்றியும் அவர்கள் எந்த வழிகாட்டலையும் பெற்றுக் கொள்வதில்லை.

17. அவர்களுடைய உதாரணம் ஒரு நெருப்பை மூட்டியவர் களைப் போன்றது, பின்னர், அவர்களைச் சூழ்ந்து அது ஒளி சிந்தத் துவங்குகையில், **கடவுள்** அவர்களுடைய ஒளியை எடுத்து விடுகின்றார், பார்க்க இயலாதவர் களாக, அவர்களை இருள்களில் விட்டு விடுகின்றார்.

18. செவிடர்கள், ஊமையர்கள், குருடர்கள், அவர்கள் திரும்புவதற்குத் தவறி விடுகின்றனர்.

19. மற்றொரு உதாரணம்: விண்ணிலிருந்து இருள்களும், இடியும் மின்னலும் கொண்டதொரு புயல் மழை. மரணத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக, அவர்கள் தங்களுடைய காதுகளில் தங்களுடைய விரல்களை வைத்து அடைத்துக் கொள்கின்றனர். நம்பமறுப்பவர் களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*விசுவாசத்தின் ஒளி*

20. அம்மின்னல் கிட்டத்தட்ட அவர்களுடைய கண்பார் வையைப் பறித்து விடுகின்றது. அவர்களுக்காக அது ஒளிரும்போது, அவர்கள் முன்னே நகர்கின்றார்கள், ஆனால் அது இருளாக மாறும்போது அவர்கள் அசை வற்று நின்று விடுகின்றார்கள். **கடவுள்** நாடினால், அவர்களுடைய செவிப்புலனையும் கண்பார்வையை யும் அவர்* எடுத்து விட இயலும். **கடவுள்** சர்வசக்தி யுடையவர்.

21. மனிதர்களே, உங்களுடைய இரட்சகரை மட்டும் வழி படுங்கள் – உங்களையும் உங்களுக்கு முன்னர் இருந் தவர்களையும் படைத்த அந்த ஒருவரை – நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு.

22. பூமியை உங்களுக்கு வசிக்கத்தக்கதாகவும், வானத் தை ஒரு கட்டுமானமாகவும் ஆக்கிய அந்த ஒருவர். உங்களுடைய ஊட்டத்திற்கென அனைத்துக் கனி வர்க்கங்களையும் விளைவிப்பதற்காக, விண்ணி லிருந்து தண்ணீரை அவர் இறக்கி அனுப்புகின்றார். இப்போது நீங்கள் அறிந்திருப்பதால், **கடவுள்**–க்குப் போட்டியாக போலித் தெய்வங்களை நீங்கள் அமைத் துக் கொள்ள வேண்டாம்.

*கணித ரீதியிலான அறைகூவல்*

23. நம்முடைய ஊழியருக்கு* நாம் வெளிப்படுத்தியவற் றைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருக் குமாயின், அப்போது இவற்றைப் போன்ற ஒரு சூரா வைக் கொண்டு வாருங்கள், மேலும் நீங்கள் உண் மையானவர்களாக இருந்தால் **கடவுள்**–க்கெதிராக உங்களுடைய சாட்சிகளை நீங்களே அழைத்துக் கொள்ளுங்கள்.

*நரகத்தின் உருவக வர்ணனை*

24. உங்களால் இதனைச் செய்ய இயலாவிட்டால் – மேலும் உங்களால் ஒருபோதும் இதனைச்செய்ய இயலாது – மனிதர்களையும் பாறைகளையும் எரி பொருளாகக் கொண்ட, அந்த நரக நெருப்பைக் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்; நம்பமறுப்பவர்களை அது எதிர்நோக்கி உள்ளது.

---

**2:20 அரபியில் "அவன்" மற்றும் "அவள்" இயற்கையான பால் வகையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளப்பட வேண்டிய அவசிய மில்லை (பின் இணைப்பு 4).*

**2:23–24 இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற கடவுளின் ஊழியராக, "ரஷாத் கலீஃபா" எனும் பெயரை எடுத்துக் கூறுகின்ற பற்பல சான்றுகளை, இந்தக் குர்ஆனின் அற்புதமான கணிதக் குறியீடு வழங்குகின்றது. அல்முதனப்பி மற்றும் தாஹா ஹுசைன் உட்பட, சில இலக்கிய விற்பன்னர்கள், இதன் இலக்கிய அறைகூவலுக்குப் பதிலளித்து விட்டனர், ஆனால் அவர் கள் இக்குர்ஆனின் கணிதக் கட்டமைப்புக் குறித்து எந்த அறிவும் இல்லாதிருந்தனர். கடவுளின் உடன்படிக்கைத் தூதர் ரஷாத் கலீஃபா மூலம் வெளிப்படுத்தப்பட்ட, இக்குர்ஆனின் கணிதக் குறியீடுதான், மெய்யான அறை கூவலாக உள்ளது – ஏனெனில் அதே மாதிரியான ஒன்றை ஒருபோதும் செய்ய இயலாது. விவரிக்கப்பட்ட சான்றுகளுக்கு பார்க்க பின் இணைப்பு கள் 1, 2, 24, & 26.*

*சுவனத்தின் உருவக வர்ணனை*

25. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோருக்கு, அவர்கள் ஆறுகள் பாயும் தோட்டங்களைக் கொண்டிருப்பார்கள் என்று நற் செய்தி அளிப்பீராக. அங்கிருக்கும் கனிகளைக் கொண்டு ஆகாரங்கள் வழங்கப்படுகின்ற போது, அவர்கள் கூறுவார்கள், "இதுதான் இதற்கு முன்னரும் எங்களுக்கு வழங்கப்பட்டது." இவ்விதமாக அவர்களுக்கு உருவக வர்ணனைகள் கொடுக்கப் படுகின்றன. அங்கே அவர்கள் தூய்மையான வாழ்க் கைத் துணைகளைக் கொண்டிருப்பார்கள், மேலும் அங்கே அவர்கள் என்றென்றும் வசித்திருப்பார்கள்.

26. சின்னஞ்சிறிய கொசு முதல் அதனை விடப் பெரியதான எந்த விதமான உதாரணத்தையும்* எடுத் துரைப்பதிலிருந்து **கடவுள்** வெட்கப்பட்டு விலகிவிடுவதில்லை. நம்பிக்கை கொண்டவர்களைப் பொறுத்தவரை, அது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் என்பதை அவர்கள் அறிவார்கள். நம்ப மறுப்போரைப் பொறுத்தவரை, அவர்கள் கூறுகின்றனர், "**கடவுள்** இந்த உதாரணத்தின் மூலம் என்ன கூறநாடுகின்றார்?" இதன் மூலம் அவர் பலரை வழி தவறச் செய்கின்றார், மேலும் இதன் மூலம் பலரை வழிநடத்துகின்றார். ஆனால் இதன் மூலம் தீயவர் களைத் தவிர அவர் ஒருபோதும் வழிதவறச் செய்வதில்லை,

27. அவர்கள் **கடவுள்**–ன் உடன்படிக்கையைக் கடைப் பிடிப்போமென்று உறுதிமொழி செய்த பின்னர் அதனை மீறுகின்றனர், சேர்த்து வைக்கும்படிக் **கடவுள்** கட்டளையிட்டவற்றைத் துண்டிக்கின்றனர், மேலும் தீமைகள் புரிகின்றனர். இவர்கள்தான் நஷ்டவாளி களாக இருக்கின்றனர்.

*நம்பமறுப்போருக்கு*
*இரு மரணங்களும் இரு வாழ்வுகளும்**

28. நீங்கள் மரணித்தவர்களாக இருந்தீர்கள், அப்போது அவர் உங்களுக்கு வாழ்வளித்தார், பின்னர் அவர் உங்களை மரணத்தில் ஆழ்த்துகின்றார், பின்னர் அவர் உங்களை மீண்டும் வாழ்வுக்குக் கொண்டு வருகின்றார், பின்னர் அவரிடமே நீங்கள் இறுதியாகத் திரும்ப இருக்கும் போது **கடவுள்**–ஐ நீங்கள் எவ்வாறு நம்பமறுக்க இயலும்?

29. அவர்தான் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் உங்களுக்காகப் படைத்தவர், பின்னர் வானத்தின் பால் திரும்பி அங்கே ஏழு பிரபஞ்சங்களை முழுமைப்படுத் தினார்,* மேலும் அவர் அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*சாத்தான்: நிலையற்ற ஒரு " தெய்வம்"**

30. உம்முடைய இரட்சகர் வானவர்களிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "பூமியில் ஒரு பிரதிநிதியை *(நிலையற்ற ஒரு தெய்வம்)* நான் அமர்த்துகின்றேன்" அவர்கள் கூறினர், "நாங்கள் உம் புகழாரங்களைப் பாடிக் கொண்டும், உம்மைத் துதித்துக் கொண்டும், உம்முடைய ஏகோபித்த அதிகாரத்தை ஆதரித்துக் கொண்டும் இருக்கும் போது, அங்கே தீமைகளைப் பரப்பி, இரத்தம் சிந்தக் கூடிய ஒருவனையா அங்கே நீர் அமைப்பீர்?" அவர் கூறினார், "நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்."

*சோதனை துவங்குகின்றது*

31. அவர் ஆதமுக்கு அனைத்துப் பெயர்களையும்* கற் றுக் கொடுத்தார், பின்னர் "நீங்கள் சரியானவர் களாக இருந்தால், இவற்றின் பெயர்களை எனக்குத் தாருங்கள்," என்று கூறியவராக, அவற்றை வானவர் களிடம் முன் வைத்தார்.

**2:26 சுவனம் மற்றும் நரகம் பற்றிய இன்னும் அதிகமான ஆய்வுகளுக்கு பின் இணைப்பு 5ஐப் பார்க்கவும்.*

**2:28 நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை; அவர்கள் நேரடியாகச் சுவனத்திற்குச் செல்கின்றனர். இந்தப் பூமியின் மீதான அவர்களுடைய தவணை ஒரு முடிவுக்கு வரும் பொழுது, மரணத்தின் வானவர்கள் அவர்களை முன்னர் ஆதமும் ஏவாளும் வசித்த அதே சொர்க்கத்திற்குப் புறப்படுமாறு அவர்களுக்கு அழைப்பு மட்டுமே விடுக்கின்றனர் **(2:154, 3:169, 8:24, 22:58, 16:32, 36:20–27, 44:56, 89:27–30)**. இவ்விதமாக, நம்முடைய ஆதி பாவத்தைத் தொடர்ந்த முந்திய மரணத்தை மட்டுமே நன்னெறியாளர்கள் அனுபவிக்கின்ற அதே சமயம், நன்னெறியற்றவர்கள் இரண்டு மரணங்களால் துன்புறுகின்றனர் **(40:11)**. மரணத் தருவாயில், நம்பமறுப்பவர்கள் தங்களுடைய துன்பகரமான தலைவிதியை அறிந்து கொள்கின்றனர் **(8:50, 47:27)**, பின்னர் அவர்கள் நரகம் படைக்கப்படும் வரை நிலைத்திருக்கின்ற நீடித்த துர்க்கனவுகளால் துன்புறுகின்றனர் **(40:46, 89:23**, பின் இணைப்பு 17).*

**2:29 கோடானு கோடி நட்சத்திர மண்டலங்களுடன், பல கோடானு கோடி ஒளி வருட தொலைவு விரிந்திருக்கின்ற நம்முடைய பிரபஞ்சமே, ஏழு பிரபஞ்சங்களிலேயே மிகச்சிறியதும் மிகவும் உள்ளடங்கியதுமாகவும் இருக்கின்றது (பின் இணைப்பு 6) தயவு செய்து **41:10–11** ஐயும் பார்க்கவும்.*

**2:30–37 "நாம் ஏன் இங்கே இருக்கின்றோம்?" என்பன போன்ற முக்கியமான கேள்விகளுக்கு இந்த வசனங்கள் விடையளிக்கின்றன. (பார்க்க பின் இணைப்பு 7).*

**2:31 இவை விலங்குகள், தானியங்கி வாகனம், நீர்மூழ்கிக்கப்பல், விண்வெளிச் செயற்கைக் கோள், ஒளிநாடாப் பதிவு இயந்திரம் மற்றும் பூமியின் மீது மானிட இனத்தவர்கள் எதிர்கொள்ள இருக்கின்ற மற்ற அனைத்துப் பொருட்கள் ஆகியவற்றின் பெயர்களாகும்.*

32. அவர்கள் கூறினர், "நீரே துதிப்பிற்குரியவர், நீர் எங்களுக்குக் கற்றுத் தந்தவற்றைத் தவிர, எந்த அறிவும் எங்களுக்கு இல்லை. நீரே சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்."

33. அவர் கூறினார், "ஆதமே, அவர்களுக்கு அவற்றின் பெயர்களைக் கூறுவீராக." அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அவர் கூறிய போது, அவர் கூறினார், "வானங்கள் மற்றும் பூமியின் இரகசியங்களை நான் அறிவேன் என்று நான் உங்களிடம் கூறவில்லையா? நீங்கள் அறிவிப்பவற்றையும் மறைத்துக் கொள்பவற்றையும் நான் அறிவேன்."

34. "ஆதமின் முன் சிரம் பணிந்து விழுங்கள்" என வானவர்களிடம் நாம் கூறிய பொழுது, அவர்கள் சிரம் பணிந்து விழுந்தனர், சாத்தானைத் தவிர; அவன் ஏற்கமறுத்தான், மிகவும் ஆணவம் கொண்டவனாகவும், நம்பமறுக்கின்ற ஒருவனாகவும் இருந்தான்.

35. நாம் கூறினோம், "ஆதமே, உம்முடைய மனைவியுடன் சுவனத்தில் வசிப்பீர்களாக, மேலும் தாராளமாக அதிலிருந்து, நீங்கள் விரும்பியவாறு உண்ணுவீர்களாக, ஆனால் நீங்கள் பாவம் செய்துவிடாதிருக்கும் பொருட்டு, இந்த மரத்தை நெருங்காதீர்கள்."

36. ஆனால் சாத்தான் அவர்களை ஏய்த்தான், மேலும் அதிலிருந்து அவர்கள் வெளியேறக் காரணமானான். நாம் கூறினோம், "ஒருவர் மற்றவருக்கு விரோதிகளாகக் கீழே செல்லுங்கள். பூமியின் மீது உங்கள் வசிப்பிடமும், மேலும் சிறிதொரு காலம் வாழ்வாதாரமும் இருக்கும்."

*பிரத்தியேகமான வார்த்தைகள்**

37. பின்னர், ஆதம் தன்னுடைய இரட்சகரிடமிருந்து வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டார், அதன் மூலம் அவரை அவர் மீட்டுக் கொண்டார். அவர்தான் மீட்பவர், மிக்க கருணையாளர்.

38. நாம் கூறினோம், "நீங்கள் அனைவரும், இங்கிருந்து கீழே செல்லுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு வழிகாட்டல் வரும் பொழுது, என்னுடைய வழிகாட்டலைப் பின்பற்றுவோருக்கு அச்சம் எதுவும் இருக்காது, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

39. "நம்பமறுத்து மேலும் நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்கமறுப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்."

*அனைத்து யூதர்களுக்குமான தெய்வீகக் கட்டளைகள்: "நீங்கள் இந்தக் குர்ஆனில் நம்பிக்கை கொள்ள வேண்டும்"*

40. இஸ்ரேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருளிய என் உபகாரத்தை நினைவில் கொள்ளுங்கள், மேலும் உடன்படிக்கையின் என்னுடைய பங்கை நான் நிறைவேற்றும் பொருட்டு, உடன்படிக்கையின் உங்களுடைய பங்கை நிறைவேற்றுங்கள், மேலும் என்னிடம் பக்தியோடிருங்கள்.

41. உங்களிடம் உள்ளதை உறுதிப்படுத்துகின்றதாக, இதிலே நான் வெளிப்படுத்தியவற்றின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்; இதனை ஏற்கமறுப்போரில் முதன்மையானவர்களாகி விடாதீர்கள். என்னுடைய வெளிப்பாடுகளை மலிவானதொரு விலைக்கு வணிகம் செய்து விடாதீர்கள், மேலும் என்னைக் கருத்தில் கொள்ளுங்கள்.

42. சத்தியத்துடன் அசத்தியத்தைக் கலந்து விடாதீர்கள், அன்றியும் அறிந்து கொண்டே, சத்தியத்தை நீங்கள் மறைத்து விடவும் வேண்டாம்.

43. நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை கடைப்பிடிக்கவும், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கவும், மேலும் குனிந்து வழிபடுபவர்களுடன் சேர்ந்து குனிந்து வழிபடவும் வேண்டும்.

44. நீங்கள் வேதத்தைப் படித்துக் கொண்டிருந்த போதிலும், உங்களையே மறந்து விட்ட நிலையில், மக்களை நன்னெறியாளர்களாகும்படி நீங்கள் தூண்டுகின்றீர்களா? நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?

45. உறுதிப்பாடு மற்றும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளின் மூலமாக நீங்கள் உதவி தேட வேண்டும். இது உண்மையில் கடினமானதே, ஆனால் பக்திமான்களுக்கு அவ்வாறல்ல,

46. அவர்கள் தங்களுடைய இரட்சகரைச் சந்திப்போம் என்றும்; அவரிடமே அவர்கள் இறுதியாகத் திரும்புவார்கள் என்றும் நம்புபவர்கள்.

47. இஸ்ரேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருளிய என் உபகாரத்தை, மேலும் மற்ற மக்கள் எவரையும் விட உங்களை நான் அதிகமாக ஆசீர்வதித்தேன் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

48. எந்த ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவுக்கு உதவ இயலாத, பரிந்துரை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாத, ஈடு எதுவும் செலுத்தப்பட இயலாத, அன்றி எவரொருவரும் உதவப்பட இயலாத அந்நாள் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

**2:37 இதைப் போலவே, அவருடன் தொடர்பை நிலைப்படுத்திக் கொள்ள, பிரத்தியேகமான, கணிதரீதியில் குறியீடு செய்யப்பட்ட வார்த்தைகளான, சூரா 1ன் வார்த்தைகளைக் கடவுள் நமக்குத் தந்திருக்கின்றார் (பார்க்க 1:1க்குரிய அடிக்குறிப்பு மற்றும் பின் இணைப்பு 15).*

49. உங்களுடைய மகன்களைக் கொன்று விட்டு, உங்களுடைய மகள்களை விட்டு வைத்து, உங்கள் மீது மோசமான வன்கொடுமையைக் கொண்டு துன்புறுத்திய ஃபேரோவின் சமூகத்தாரிடமிருந்து, உங்களை நாம் காப்பாற்றினோம் என்பதை நினைவு கூர்ந்திடுங்கள், அது உம்முடைய இரட்சகரிடமிருந்து ஒரு கடினமான சோதனையாக இருந்தது.

50. உங்களுக்காகக் கடலை நாம் பிளந்ததை நினைவு கூர்ந்திடுங்கள்; உங்களை நாம் காப்பாற்றியதோடு உங்கள் கண்களின் முன்னரே ஃபேரோவின் சமூகத்தாரை மூழ்கடித்தோம்.

51. இருப்பினும், நாற்பது இரவுகளை முன்னிட்டு மோஸஸை நாம் அழைத்த போது, அவர் இல்லாத சமயத்தில் கன்றுக்குட்டியை நீங்கள் வழிபட்டீர்கள், மேலும் தீயவர்களாக மாறி விட்டீர்கள்.*

52. என்றாலும், நீங்கள் நன்றியுடன் இருக்கும் பொருட்டு அதன்பின்னரும் நாம் உங்களைப் பிழை பொறுத்தோம்.

53. நீங்கள் வழி நடத்தப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு, மோஸஸுக்கு வேதத்தையும் சட்டப் புத்தகத்தையும் நாம் கொடுத்தோம் என்பதை நினைவு கூர்ந்திடுங்கள்.

*உங்கள் அகந்தையைக் கொல்லுங்கள்**

54. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "என் சமூகத்தாரே, கன்றுக்குட்டியை வழிபட்டதன் மூலம் உங்களுடைய ஆத்மாக்களுக்கு நீங்கள் தீங்கிழைத்துக் கொண்டு விட்டீர்கள். நீங்கள் உங்களுடைய படைப்பாளரிடம் பாவத்திற்கு வருந்தியே ஆக வேண்டும். உங்களுடைய அகந்தைகளை நீங்கள் கொல்ல வேண்டும். இதுவே உங்களுடைய படைப்பாளரின் பார்வையில் உங்களுக்குச் சிறந்ததாகும்." அவர் உங்களை மீட்டுக் கொள்ளவே செய்தார். அவர்தான் மீட்பவர், மிக்க கருணையாளர்.

*கண்கூடான ஆதாரம்**

55. "மோஸஸே, **கடவுள்**–ஐ நாங்கள் பகிரங்கமாக கண்டாலே அன்றி, நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம்," என்று நீங்கள் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள். அதன் விளைவாக, நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே, மின்னல் உங்களைத் தாக்கியது.

56. நீங்கள் மரணித்து விட்டதை அடுத்து, உடனே நாம் உங்களை உயிர்ப்பித்தோம், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

57. *(ஸினாயில்)* மேகங்களைக் கொண்டு உங்களுக்கு நாம் நிழலிட்டோம், மேலும் மன்னாவையும் காடைகளையும் உங்களுக்கு இறக்கி அனுப்பினோம்: "நாம் உங்களுக்கு வழங்கிய நல்ல பொருள்களில் இருந்து உண்ணுங்கள்." *(கலகம் செய்ததன் மூலம்)* அவர்கள் நமக்குத் தீங்கிழைக்கவில்லை; அவர்கள் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.

*கடவுள் மீது உறுதிப்பாட்டின் குறைவு:*
*ஜெருசலேமிற்குள் அவர்கள்*
*நுழைய மறுக்கின்றனர்*

58. நாம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "நீங்கள் எத்தனை வாழ்வாதாரங்களை விரும்புகின்றீர்களோ அத்தனையையும் அங்கே காணக் கூடிய இந்த நகருக்குள் நுழையுங்கள், அதன் வாயிலில் எளிமையுடன் நுழையுங்கள், மேலும் மக்களை நல்ல முறையில் நடத்துங்கள். அப்போது நாம் உங்களுடைய பாவங்களை மன்னிப்போம், மேலும் பக்திமான்களுக்குரிய வெகுமதியை அதிகரிப்போம்."

59. ஆனால் அவர்களிலுள்ள தீயவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளை விடுத்து மற்றக் கட்டளைகளைச் செயல்படுத்தினர். அதன் விளைவாக, அவர்களுடைய தீயதன்மையின் காரணத்தால், வரம்புமீறுபவர்களின் மீது விண்ணிலிருந்து தண்டனையை நாம் இறக்கி அனுப்பினோம்.

*அதிகமான அற்புதங்கள்*

60. மோஸஸ் தன் சமூகத்தாருக்காகத் தண்ணீரைத் தேடியதை நினைவு கூர்ந்திடுங்கள். நாம் கூறினோம், "உம்முடைய கைத்தடியால் பாறையை அடிப்பீராக." உடனே, பன்னிரண்டு ஊற்றுகள் அதிலிருந்து பொங்கி எழுந்தன. ஒவ்வொரு குலத்தின் அங்கத்தினர்களும் தங்களுக்குரிய தண்ணீரை அறிந்திருந்தனர். **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களில் இருந்து உண்ணுங்கள் மேலும் பருகுங்கள், அத்துடன் சீர்கெடுக்கும் விதமாகப் பூமியைச் சுற்றித் திரியாதீர்கள்.

**2:51* *இந்தச் சம்பவம் மானிடர்களின் போலித்தெய்வ வழிபாடு செய்கின்ற மனோபாவத்தைப் பிரதிபலிக்கின்றது. ஆழ்ந்த அற்புதங்களுக்குப் பின்னரும் மோஸஸைப் பின்பற்றியவர்கள் அவர் இல்லாத போது கன்றுக் குட்டியை வழிபட்டனர், அத்துடன் இரண்டு நம்பிக்கையாளர்கள் மட்டுமே மோஸஸோடு மிஞ்சி இருந்தனர்(5:23). அறிமுகவுரையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளபடி, தங்கள் அகந்தைகளை தங்களுடைய தெய்வங்களாக்கிக் கொண்ட கலகக்காரர்களே மானிடர்களாவர்.*

**2:54* *அகந்தைதான் சாத்தானின் வீழ்ச்சிக்கு வழிகோலியது, அகந்தைதான் இந்த உலகிற்கு நாம் வெளியேற்றப் படக் காரணமானது, மேலும் அகந்தைதான் கடவுளின் சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப்படுவதிலிருந்து நம்மில் பெரும்பாலோரைத் தடுப்பதாக உள்ளது.*

**2:55* *"கடவுள்" எனும் வார்த்தை இந்த வசனத்தில் 19வது முறையாக இடம் பெறுவதும், மேலும் மக்கள் "கண்கூடான நிரூபணம்" கோருவது இந்த வசனத்தில்தான் என்பதும் கவனிக்கத்தக்கதாக உள்ளது. 19எனும் எண்ணின் அடிப்படையிலான, குர்ஆனின் கணிதக்குறியீடு, இத்தகைய கண்கூடான நிரூபணத்தை வழங்குகின்றது. 2+55=57=19x3 என்பதையும் கவனிக்கவும்.*

*இஸ்ரவேலர்கள் கலகம் செய்கின்றனர்*

61. நீங்கள் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "மோஸஸே, இதற்கு மேலும் ஒரே வகையான உணவைச் சகித்துக் கொள்ள எங்களால் இயலாது. அவரைக் காய், வெள்ளரிக்காய், பூண்டு, தட்டைப்பயறு, மற்றும் வெங்காயம் போன்ற பூமியின் பயிர்களை எங்களுக்காக முளைப்பிக்குமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக." அவர் கூறினார், "நல்லதாக இருப்பவற்றுக்குத் தாழ்ந்ததாக இருப்பவற்றை மாற்றிக் கொள்ள நீங்கள் விரும்புகின்றீர்களா ? நீங்கள் கேட்டுக் கொண்டவற்றைக் காணக்கூடிய எகிப்திற்கு இறங்கிச் செல்லுங்கள்." அவர்கள் கண்டனம், இழிவு, மற்றும் அவமானத்திற்கு உள்ளாகி விட்டார்கள், மேலும் **கடவுள்**–யிடமிருந்து கடுங்கோபத்தைத் தங்கள் மீதே வரவழைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாவது அவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள், மேலும் நபிமார்களை அநியாயமாகக் கொலை செய்தார்கள். இதன் காரணமாவது அவர்கள் கீழ்படியாதிருந்தார்கள், மேலும் வரம்புமீறினார்கள்.

*சரணடைந்தோர் அனைவருடைய ஒற்றுமை*

62. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்களாக இருப்பவர்கள், கிறிஸ்துவர்கள், மேலும் மதம் மாறியவர்கள்; எவராயினும்

(1) **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு, மேலும்

(2) இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு, மேலும்

(3) நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்கள், தங்களுடைய இரட்சகரிடமிருந்து தங்களுடைய பிரதிபலனைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் அஞ்சுவதற்கு எதுவுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

*இஸ்ரவேலர்களுடன் உடன்படிக்கை*

63. ஸினாய் மலையை உங்களுக்கு மேலே நாம் உயர்த்தியவாறாக, உங்களுடன் நாம் ஓர் உடன் படிக்கை செய்தோம்: "உங்களுக்கு நாம் கொடுத்தவற்றை நீங்கள் பலமாக ஆதரிக்கவும், மேலும் அதில் உள்ளவற்றை நினைவில் கொள்ளவும் வேண்டும், நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு".

64. ஆனால் அதன் பின்னரும் நீங்கள் திரும்பிச் சென்று விட்டீர்கள், மேலும் உங்கள்பால் **கடவுள்**–ன் அருளும் அவருடைய கருணையும் மட்டும் இல்லாதிருந்தால், நீங்கள் தண்டிக்கப்பட்டவர்களாக இருந்திருப்பீர்கள்.

65. உங்களில் ஸப்பாத்தை அவமரியாதை செய்தவர்களைப் பற்றி நீங்கள் அறிந்தே இருக்கின்றீர்கள். நாம் அவர்களிடம் கூறினோம், "குரங்குகளைப் போல் இழிவடைந்தவர்களாக நீங்கள் ஆகி விடுங்கள்."

66. அவர்களுடைய தலைமுறைக்கும், அவ்வண்ணமே பின் தொடர்கின்ற தலைமுறைகளுக்கும், ஓர் உதாரணமாக, மேலும் நன்னெறியாளர்களுக்கு ஓர் அறிவூட்டலாக அவர்களை நாம் அமைத்தோம்.

*பசுங்கன்று**

67. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறினார், "ஒரு பசுங்கன்றைப் பலியிடுமாறு **கடவுள்** உங்களுக்குக் கட்டளையிடுகின்றார்." அவர்கள் கூறினர், "நீர் எங்களைக் கேலி செய்கின்றீரா ?" அவர் கூறினார், "அறியாமை நிறைந்தவர்களில் ஒருவனைப் போல் நான் நடந்து கொள்வதை விட்டும், **கடவுள்** காப்பாராக."

68. அவர்கள் கூறினர், " எந்த ஒன்று என்று எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக." அவர் கூறினார், "மிகவும் கிழடு அல்லாத அன்றி மிகவும் இளையதும் அல்லாததொரு பசுங்கன்று என்று அவர் கூறுகின்றார்; இடைப்பட்டதொரு வயது கொண்டது. இப்பொழுது, செய்யுமாறு உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைச் செயல்படுத்துங்கள்."

69. அவர்கள் கூறினர், "அதனுடைய நிறத்தை எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக." அவர் கூறினார், "அது ஒரு மஞ்சள் நிறமுள்ள பசுங்கன்று, பிரகாசமான நிறம் கொண்டது, பார்ப்பவர்களை மகிழ்விப்பது என்று அவர் கூறுகின்றார்."

70. அவர்கள் கூறினர், "எந்த ஒன்று என்று எங்களுக்குக் காட்டுமாறு உம்முடைய இரட்சகரை அழைப்பீராக. பசுங்கன்றுகள் ஒரே மாதிரியாகவே எங்களுக்குத் தோன்றுகின்றன, மேலும் **கடவுள்** நாடினால், நாங்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருப்போம்."

71. அவர் கூறினார், "நிலத்தை உழுததனாலோ அல்லது பயிர்களுக்கு நீரிறைத்தோ ஒருபோதும், இழிவுபடுத்தப்படாததொரு பசுங்கன்று அது; களங்கம் எதுவும் இல்லாதது, என்று அவர் கூறுகின்றார்." அவர்கள் கூறினர், "இப்போது நீர் உண்மையைக் கொண்டு வந்துள்ளீர்." இந்நீண்ட தயக்கத்திற்குப் பின்னர், இறுதியில் அவர்கள் அதனைப் பலியிட்டனர்.

**2:67 தொடர்புத் தொழுகைகள், நோன்பிருத்தல், ஹஜ் புனிதயாத்திரை, மற்றும் திருமணம், விவாகரத்து போன்றவற்றின் சட்டங்கள் உட்பட, முக்கியமான சட்டங்களையும் கட்டளைகளையும் இந்த சூரா தன்னகத்தே கொண்டிருந்த போதிலும், இந்த சூராவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் "பசுங்கன்று" என்பதேயாகும். கடவுளுக்குச் சரணடைதல் மற்றும் நம்முடைய படைப்பாளருக்கு உடனடியான, தடுமாற்றமில்லாத கீழ்ப்படிதலின் விசேஷமான முக்கியத்துவத்தை இது பிரதிபலிக்கின்றது. இத்தகைய சரணடைதல் கடவுளின் சர்வ வல்லமையிலும் பரிபூரண அதிகாரத்திலும் உள்ள நம்முடைய நம்பிக்கையை நிரூபிக்கின்றது. பைபிளின் எண்ணாகமம், அத்தியாயம் 19 ஐயும் பார்க்கவும்.*

*பசுங்கன்றின் நோக்கம்*

72. நீங்கள் ஒரு மனிதனைக் கொன்று விட்டீர்கள், பின்னர் உங்களுக்கிடையில் தர்க்கித்தீர்கள். நீங்கள் மறைக்க முயன்றதை **கடவுள்** வெளிப்படுத்த இருந்தார்.

73. நாம் கூறினோம், "*(பசுங்கன்றின்)* பகுதியைக் கொண்டு *(பலியானவரை)* அடியுங்கள்." அத்தருவாயில்தான் பலியானவரைக் **கடவுள்** மீண்டும் உயிருடன் கொண்டு வந்தார், மேலும் நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு, தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டினார்.

74. இதன் பின்னரும், உங்களுடைய இதயங்கள் பாறைகளைப் போன்று கடினமாகி விட்டன, அல்லது அதை விடவும் கடினமாயின. ஏனெனில் அதிலிருந்து ஆறுகள் பொங்கி எழுகின்ற பாறைகளும் உள்ளன. மற்றவை வெடித்து மெல்லிய ஓடைகளை வெளியிடுகின்றன, மேலும் மற்ற பாறைகள் **கடவுள்** மீதுள்ள பக்தியின் காரணத்தால் உருண்டு விழுந்து விடுகின்றன. நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் **கடவுள்** ஒருபோதும் அறியாதிருப்பவர் அல்லர்.

*கடவுளின் வார்த்தையை சிதைத்தல்*

75. அவர்களில் சிலர் **கடவுள்**–ன் வார்த்தையைச் செவியேற்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்து விட்டு, அதனைப் பற்றி முழுமையான புரிந்து கொள்ளுதலுடன், நன்கறிந்து கொண்டே அதனைச் சிதைப்பவர்களாக இருக்கும் பொழுது, உங்களைப் போல் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா ?

*கடவுளின்*
*வார்த்தையை மறைத்தல்*

76. மேலும், நம்பிக்கையாளர்களை அவர்கள் சந்திக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் நம்புகின்றோம்," ஆனால் அவர்கள் ஒருவர் மற்றவருடன் ஒன்று கூடும் போது, அவர்கள் கூறுகின்றனர், "உங்களுடைய இரட்சகரைக் குறித்த அவர்களுடைய வாதத்திற்கு நீங்கள் ஆதரவளிக்காதிருக்கும் பொருட்டு, **கடவுள்** – ஆல் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களை *(நம்பிக்கையாளர்களுக்கு)* தெரியப்படுத்தாதீர்கள். நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ?"

77. அவர்கள் மறைக்கின்ற ஒவ்வொன்றையும், மேலும் அவர்கள் வெளிப்படுத்துகின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிகின்றார் என்பது அவர்களுக்குத் தெரியாதா ?

78. வதந்திகளின் மூலமே தவிர, வேதத்தை அறியாதவர்களான, வேதம் வழங்கப்படாதவர்களும் அவர்களில் உள்ளனர், அத்துடன் அதனைத் தாங்கள் அறிந்திருப்பதாகவும் எண்ணிக் கொள்கின்றனர்.

79. எனவே, அற்பப் பொருள் சார்ந்த இலாபங்களைத் தேடி, தங்களுடைய சொந்தக் கரங்களாலேயே வேதத்தைச் சிதைத்துவிட்டுப் பின்னர், "இதுதான் **கடவுள்** வெளிப்படுத்தியது," என்று கூறுபவர்களுக்குக் கேடுதான். இவ்வாறு சிதைத்ததற்காக அவர்களுக்குக் கேடுதான், மேலும் அவர்களுடைய முறைகேடான இலாபங்களுக்காகவும் அவர்களுக்குக் கேடுதான்.

*சொர்க்கம் மற்றும் நரகத்தின்*
*நிரந்தரத்தன்மை**

80. சிலர் கூறியுள்ளனர், "வரையறைக்குட்பட்டதொரு நாட்களின் எண்ணிக்கைக்கே தவிர, நரகம் எங்களைத் தீண்டாது." கூறுவீராக, "**கடவுள்**–யிடமிருந்து அத்தகைய வாக்குறுதியை நீங்கள் பெற்றிருக்கின்றீர்களா – **கடவுள்** ஒருபோதும் தன்னுடைய வாக்குறுதியை முறிப்பதில்லை – அல்லது, நீங்கள் **கடவுள்**–ஐப்பற்றி நீங்கள் அறியாதவற்றைக் கூறுகின்றீர்களா ?"

81. உண்மையில், பாவங்களைச் சம்பாதித்து மேலும் தங்களுடைய தீய காரியத்தினால் சூழப்பட்டவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

82. நம்பிக்கை கொண்டு, அத்துடன் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் சுவனவாசிகளாக இருப்பார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

*கட்டளைகள்*

83. இஸ்ரவேலின் சந்ததியினருடன் நாம் ஓர் உடன்படிக்கை செய்தோம்: "நீங்கள் **கடவுள்**–ஐத் தவிர வழிபடக் கூடாது. நீங்கள் உங்களுடைய பெற்றோரைக் கண்ணியப்படுத்தவும், உறவினர்கள், அனாதைகள், மற்றும் ஏழைகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும். நீங்கள் மனிதர்களை இணக்கத்துடன் நடத்திட வேண்டும். நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தை கொடுக்கவும் வேண்டும்." ஆனால் உங்களில் சிலரைத் தவிர, நீங்கள் திரும்பிச் சென்று விட்டீர்கள், மேலும் நீங்கள் வெறுப்புக் கொண்டவர்களாகி விட்டீர்கள்.

**2:80–82 சீர்கெட்டுப்போன முஸ்லிம்களுக்கிடையில் நிலைபெற்றுவிட்ட ஒரு நம்பிக்கையாவது, அவர்கள் புரிந்த பாவங்களுடைய எண்ணிக்கையின் விகிதத்திற்கேற்ப மட்டுமே அவர்கள் நரகத்தில் துன்புறுவார்கள், பின்னர் அவர்கள் நரகத்திலிருந்து வெளியேறி சுவனத்திற்குச் சென்று விடுவார்கள் என்பதாகும். முஹம்மத் அவர்கள் சார்பில் பரிந்து பேசி, அவர்களை நரகத்தில் இருந்து வெளியே எடுத்து விடுவார் என்றும் கூட அவர்கள் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கைகள் குர்ஆனுக்கு எதிரானவையாகும் (பின் இணைப்பு 8).**

84. நீங்கள் உங்களுடைய இரத்தத்தைச் சிந்தக் கூடாதென்றும், அன்றி நீங்கள் ஒருவர் மற்றவரை உங்களுடைய வீடுகளில் இருந்து வெளியேற்றக் கூடாதென்றும், உங்களுடன் நாம் ஓர் உடன்படிக்கை செய்தோம். நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள் மேலும் சாட்சி பகர்ந்தீர்கள்.

85. இருப்பினும், இப்போது நீங்கள் ஒருவரையொருவர் கொலை செய்து கொண்டிருக்கின்றீர்கள், மேலும் அவர்களுக்கு எதிராகப் பாவகரமாகவும் குரோதத்துடனும், ஒன்று சேர்ந்து கொண்டு, உங்களில் சிலரை அவர்களுடைய வீடுகளில் இருந்து வெளியேற்றுகின்றீர்கள். அவர்கள் சரண்புகுந்த போதிலும், அவர்களிடமிருந்து நீங்கள் ஈடு கோரினீர்கள். முதலில் அவர்களை வெளியேற்றுவதே உங்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தது. வேதத்தின் பகுதியை, நீங்கள் நம்பிக்கை கொண்டு விட்டு பகுதியை நம்பமறுக்கின்றீர்களா ? உங்களில் இதனைச் செய்கின்றவர்களுக்கு, இவ்வாழ்வினில் இழிவையும் மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று மிகவும் மோசமான தண்டனையையும் விட, வேறென்ன தண்டனை இருக்க முடியும் ? நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் **கடவுள்** ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

86. அவர்கள்தான் மறுவுலகை விலையாகக் கொடுத்து இந்தக் கீழான வாழ்வை வாங்கிக் கொண்டவர்கள். அதன் விளைவாக, தண்டனையானது அவர்களுக்கு ஒருபோதும் குறைக்கப்பட மாட்டாது, அன்றி அவர்கள் உதவி செய்யப்பட்டவர்களாகவும் இருக்க இயலாது.

*இஸ்ரவேலின் நபிமார்கள்*

87. மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம், மேலும் அவருக்குப் பின்னர் மற்றத் தூதர்களை நாம் அனுப்பினோம், மேலும் மேரியின் மகனான, ஜீஸஸுக்கு, நாம் ஆழ்ந்த அற்புதங்களைத் தந்தோம் அத்துடன் பரிசுத்த ஆவியைக் கொண்டு அவருக்கு ஆதரவளித்தோம். நீங்கள் விரும்பாத எதையேனும் கொண்டு உங்களிடம் ஒரு தூதர் வந்த ஒவ்வொரு முறையும், உங்களுடைய அகந்தையானது நீங்கள் ஆணவம் கொண்டவர்களாக இருக்கக் காரணமானது என்பது ஒரு நிதர்சனமல்லவா ? அவர்களில் சிலரை நீங்கள் ஏற்கமறுத்தீர்கள், மேலும் அவர்களில் சிலரை நீங்கள் கொன்று விட்டீர்கள்.

*துக்ககரமான வாக்குமூலம்:*
*"என் மனம் முடிவெடுத்து விட்டது !"*

88. சிலர் கூறக்கூடும், "எங்களுடைய மனங்கள் முடிவெடுத்துவிட்டன !" மாறாக, அவர்களுடைய நம்பமறுத்தலின் ஒரு விளைவாக, அது **கடவுள்**–யிடமிருந்து ஒரு சாபமாகும், அவர்களில் ஒரு சிலரைத் தவிர, நம்பிக்கை கொள்வதிலிருந்து அவர்களை அது தடுக்கின்றது.

*குர்ஆன் அனைத்து*
*வேதங்களையும் பூர்த்தியாக்குகின்றது*

89. **கடவுள்**–யிடமிருந்து இந்த வேதம் அவர்களிடம் வந்த போது, அது அவர்களிடம் உள்ளதோடு ஒத்துப் போவதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் இருந்த போதிலும், மேலும் நம்பமறுப்பவர்களுடன் அவர்கள் உரையாடுகையில் அதன் வருகையைப் பற்றி முன்னறிவிப்பவர்களாக அவர்கள் இருந்த போதிலும், அவர்களுடைய சொந்த முன்னறிவிப்பு நிகழ்ந்தேறிய பொழுது, அதில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுத்தனர். **கடவுள்**–ன் கண்டனமானது இவ்விதமாக நம்பமறுப்பவர்களை வருத்துகின்றது.

90. தன்னுடைய ஊழியர்களில் இருந்து அவர் தேர்ந்தெடுக்கின்ற எவர் மீதும் தன் அருட்கொடையை **கடவுள்** அருள்கின்றார் என்பதால் கடும் ஆத்திரம் கொண்டு, **கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகளை ஏற்கமறுத்து– எதற்காகத் தங்களுடைய ஆத்மாக்களை அவர்கள் விற்பனை செய்தார்களோ அது உண்மையில் மிகவும் துக்ககரமானது. அதன் விளைவாக, அவர்கள் கோபத்தின் மேல் கோபத்திற்கு உள்ளானார்கள். நம்பமறுப்பவர்கள் இழிவுபடுத்துகின்றதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டார்கள்.

91. "**கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகள் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்," என அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், "எங்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றின் மீது மட்டுமே நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம்." இவ்விதமாக, அது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாக இருந்தாலும், மேலும் அவர்களிடம் உள்ளதை உறுதிப்படுத்துவதாக அது இருந்த போதிலும், தொடர்ந்த வெளிப்பாடுகளின் மீது அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனர் ! கூறுவீராக "நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்திருந்தால், பின்னர் ஏன் நீங்கள் **கடவுள்**–ன் நபிமார்களைக் கொன்றீர்கள் ?"

*இஸ்ரவேலர்களின்*
*சரித்திரத்திலிருந்து படிப்பினை பெறுதல்*

92. ஆழ்ந்த அற்புதங்களுடன் மோஸஸ் உங்களிடம் வந்தார், இருப்பினும் அவர் இல்லாத போது கன்றுக் குட்டியை நீங்கள் வழிபட்டீர்கள், மேலும் நீங்கள் தீயவர்களாக மாறி விட்டீர்கள்.

93. ஸினாய் மலையை உங்களுக்கு மேலாக நாம் உயர்த்தியவாறு, "நாம் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை நீங்கள் பலமாக ஆதரிக்கவும், கவனமாகச் செவியேற்கவும் வேண்டும்," என்று கூறியவாறாக, உங்களுடன் நாம் ஓர் உடன்படிக்கை செய்தோம். அவர்கள் கூறினர், "நாங்கள் செவியேற்கின்றோம், ஆனால் நாங்கள் கீழ்ப்படிய மறுக்கின்றோம்." அவர்களுடைய நம்பமறுத்தலின் காரணத்தால், கன்றுக் குட்டியின் மீதான பக்தியைக் கொண்டு அவர்களுடைய இதயங்கள் நிறைந்து விட்டிருந்தது. கூறுவீராக, "உங்களிடம் விசுவாசம் ஏதேனும் இருக்குமாயின், உங்களுடைய விசுவாசம் எதனை உங்களுக்குக் கட்டளையிடுகின்றதோ அது உண்மையில் துன்பகரமானதாகும்."

94. கூறுவீராக, "மற்ற மக்கள் அனைவரையும் தவிர்த்து விட்டு, மறுவுலகின் தங்குமிடமானது **கடவுள்**–யிடம் உங்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்குமாயின், பின்னர் நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், நீங்கள் மரணத்திற்காக ஏங்க வேண்டும்."

95. அவர்களுடைய கரங்கள் முற்படுத்தி அனுப்பியவற்றின் காரணத்தால், அவர்கள் ஒருபோதும் அதற்காக ஏங்குவதில்லை. தீயவர்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

96. உண்மையில், வாழ்வின் மீது மிகவும் பேராவல் கொண்டவர்களாக அவர்களை நீர் காண்பீர்; போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களை விடவும், இன்னும் மிகவும் அதிகமாக. அவர்களில் ஒவ்வொருவனும் ஓராயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கு விரும்புகின்றான். ஆனால் இது அவனை எந்தத் தண்டனையிலிருந்தும் தவிர்த்து விடாது, அவன் எவ்வளவு நீண்ட காலம் வாழ்கின்றான் என்பது பொருட்டல்ல. அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

*கேப்ரியேல் வெளிப்பாடுகளைக் கொண்டு வருகின்றார்*

97. கூறுவீராக, "கேப்ரியேலை எதிர்க்கின்ற எவரொருவரும், அவர்தான் **கடவுள்**–ன் நாட்டத்திற்கேற்ப முந்திய வேதங்களை உறுதிப்படுத்துகின்றதாகவும், மேலும் நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டலையும் நற்செய்தியையும் வழங்குகின்றதாகவும், உம்முடைய இதயத்திற்குள் இதனை *(குர்ஆனை)* கீழே கொண்டு வந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்."

98. **கடவுள்**–ஐயும், அவருடைய வானவர்களையும், அவருடைய தூதர்களையும், மற்றும் கேப்ரியேலையும் மைக்கேலையும், எதிர்க்கின்ற எவரொருவரும், நம்பமறுப்பவர்களை **கடவுள்** எதிர்க்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

99. இத்தகைய தெளிவான வெளிப்பாடுகளை உமக்கு நாம் இறக்கி அனுப்பியுள்ளோம், மேலும் தீயவர்கள் மட்டுமே இவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள்.

100. ஓர் உடன்படிக்கை செய்து அதனைப் பேணுவதாக அவர்கள் வாக்குறுதியளிக்கும் போதெல்லாம், அவர்களில் சிலர் எப்பொழுதும் அதனை அலட்சியம் செய்கின்றனர் என்பது ஓர் உண்மை நடப்பல்லவா ? உண்மையில், அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்ளவில்லை.

*கடவுளின் வேதத்தை அலட்சியம் செய்தல்*

101. இப்போது **கடவுள்**–யிடமிருந்து ஒரு தூதர் அவர்களிடம் வந்திருப்பதால்,* மேலும் அவர்களுடைய சொந்த வேதத்தை அவர் நிரூபித்து உறுதிப்படுத்திய போதிலும், வேதத்தைப் பின்பற்றுபவர்களில் சிலர் *(யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள்)* எந்த வேதத்தையும் அவர்கள் ஒருபோதும் பெற்றிருந்திராதவர்களைப் போல, **கடவுள்**–ன் வேதத்தை அவர்களுடைய முதுகுகளுக்குப் பின்னால் அலட்சியம் செய்கின்றனர்.

*சூனியக்கலை கண்டனம் செய்யப்படுகின்றது*

102. சாலமனின் சாம்ராஜ்யம் தொடர்பாக சாத்தான்கள் கற்றுக்கொடுத்தவற்றை அவர்கள் பின்தொடர்ந்தனர். ஆயினும், சாலமன் ஒரு நம்பமறுப்பவராக இருந்ததில்லை, ஆனால் சாத்தான்கள்தான் நம்பமறுப்பவர்களாக இருந்தனர். அவர்கள் மக்களுக்கு மாந்திரீகத்தையும், மேலும் பாபிலைச் சேர்ந்த இரு வானவர்களான ஹாரூத் மற்றும் மாரூத் மூலமாக இறக்கி அனுப்பப்பட்டவற்றையும் கற்றுக் கொடுத்தனர். இவர்கள் இருவரும் இத்தகைய அறிவை இவ்வாறு சுட்டிக் காட்டாமல் வெளிப்படுத்தவில்லை: "இது ஒரு சோதனையாக உள்ளது. இத்தகைய அறிவை நீங்கள் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது" ஆனால் திருமணங்களை முறித்து விடுதல் போன்ற தீய சூழ்ச்சிகளில் மக்கள் அதனைப் பயன்படுத்தினர். **கடவுள்**–ன் நாட்டத்திற்கு எதிராக எவரொருவருக்கும் அவர்கள் ஒருபோதும் தீங்கிழைத்து விட இயலாது. இவ்விதமாக அவர்கள் தங்களுக்கு ஊறு விளைவிப்பதையே கற்றுக் கொள்கின்றனர், அவர்களுக்குப் பயனளிப்பதை அல்ல, மேலும் சூனியக்கலையைப் பயில்கின்ற எவருக்கும் மறுவுலகில் எந்தப் பங்கும் இருக்காது என்பதை அவர்கள் முற்றிலும் நன்கறிவர். எதற்காக அவர்கள் தங்களுடைய ஆத்மாக்களை விற்றுக் கொண்டனரோ அது உண்மையில் துக்ககரமானது, அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

103. அவர்கள் நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொருவாழ்வு நடத்தினால், **கடவுள்**–யிடமிருந்துள்ள வெகுமதி மிகவும் மேலானதாகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

**2:101 பழைய ஏற்பாடு (மல்க்கியா 3:1–3), புதிய ஏற்பாடு (லூக்கா 17:22–37), மற்றும் இந்த இறுதி ஏற்பாடு (3:81) ல் கடவுளின் உடன்படிக்கைத் தூதர் முன்னறிவிக்கப்படுகின்றார்.*

*வேண்டுதலின் வார்த்தைகளைத்*
*திரித்துக் கூறுதல்*

104. நம்பிக்கையாளர்களே உங்களைத்தான், *"ராஇனா"* * *(எங்களுடைய மேய்ப்பராக இருப்பீராக)* என்று கூறாதீர்கள். மாறாக, நீங்கள் *"உன்ஜுர்னா"* (எங்களைக் கண்காணிப்பீராக) என்று கூற வேண்டும், மேலும் கவனத்துடன் செவியேற்றுக் கொள்ளுங்கள். நம்பமறுப்பவர்கள் வலிநிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*பொறாமை கண்டனம் செய்யப்படுகின்றது*

105. வேதத்தைப் பின்பற்றுபவர்களில் உள்ள நம்பமறுப்பவர்களோ, அல்லது போலித்தெய்வ வழிபாடு செய்பவர்களோ, உங்கள் இரட்சகரிடமிருந்து உங்களுக்கு எந்த ஆசீர்வாதங்களும் இறங்கி வருவதைக் காண விரும்புவதில்லை. ஆயினும், தான்தேர்ந்தெடுக்கின்ற எவர் மீதும் **கடவுள்** தன்னுடைய ஆசீர்வாதங்களைப் பொழிகின்றார். **கடவுள்** எல்லையற்ற அருட்கொடையைக் கொண்டுள்ளார்.

*உச்சபட்ச அற்புதம் :*
*குர்ஆனின் கணிதக் குறியீடு**

106. ஏதேனும் அற்புதத்தை நாம் ரத்துச் செய்தாலோ, அல்லது அதனை மறந்துவிடும்படிச் செய்தாலோ, அதைவிட மேலானதொரு அற்புதத்தை, அல்லது குறைந்தபட்சம் அதற்குச் சமமான ஒன்றை நாம் கொண்டு வருவோம். **கடவுள்** சர்வசக்தியுடையவராக இருக்கின்றார் என்ற நிதர்சனத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா ?

107. வானங்கள் மற்றும் பூமியின் அரசுரிமையைக் **கடவுள்** கொண்டிருக்கின்றார் என்பதை; **கடவுள்**– ஐத் தவிர உங்களுடைய இரட்சகராகவும் அதிபதியாகவும் எவரையும் நீங்கள் கொண்டிருக்கவில்லை என்ற நிதர்சனத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வில்லையா ?

108. கடந்த காலத்தில் மோஸஸிடம் கோரப்பட்டவற்றை உங்களுடைய தூதரிடமும் நீங்கள் கோர விரும்புகின்றீர்களா ? நம்பிக்கைக்குப் பதிலாக, நம்பமறுத்தலைத் தேர்ந்தெடுக்கின்றவர் எவராயினும், சரியான பாதையிலிருந்து மெய்யாகவே வழி தவறிச் சென்று விட்டார்.

109. இப்போது நீங்கள் நம்பிக்கை கொண்டு விட்டதால், வேதத்தைப் பின்பற்றுபவர்களில் பலர் நீங்கள் நம்பமறுத்தலுக்குத் திரும்பி விடுவதைக் காணவே விரும்புகின்றனர். இது, சத்தியம் அவர்களுக்குத் தெளிவாகி விட்டதன் பின்னர், அவர்கள் பக்கமுள்ள பொறாமையின் காரணத்தினாலேயாகும். **கடவுள்** தன்னுடைய தீர்ப்பை வெளியிடும் வரை, நீங்கள் அவர்களைப் பிழைபொறுத்திட வேண்டும், அத்துடன் அவர்களை அப்படியே விட்டு விட வேண்டும். **கடவுள்** சர்வ சக்தியுடையவராக இருக்கின்றார்.

110. நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கவும் வேண்டும். உங்கள் ஆத்மாக்களின் சார்பாக நீங்கள் முற்படுத்தி அனுப்புகின்ற நன்மை எதுவாயினும், **கடவுள்**–யிடம் நீங்கள் அதனைக் காண்பீர்கள். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக் கின்றார்.

*அவர்களுடைய மார்க்கத்தின் பெயரைப்*
*பொருட்படுத்தாது, நம்பிக்கையாளர்கள்*
*அனைவரும் மீட்டுக் கொள்ளப்படுகின்றனர்*

111. சிலர் கூறியுள்ளனர், "யூதர்கள் அல்லது கிறிஸ்துவர்கள் தவிர எவர் ஒருவரும் சுவனம் நுழைய மாட்டார்கள்!" அவர்களுடைய அபிலாஷைமிக்க எண்ணங்கள் இவ்விதமானதே. கூறுவீராக, "நீங்கள் சரியானவர்களாக இருந்தால், உங்களுடைய சான்றை எங்களுக்குக் காட்டுங்கள்."

*சரணடைதல்: ஒரே மார்க்கம்*

112. உண்மையில், நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற நிலையில், **கடவுள்**–க்கு மட்டும் தங்களையே பரிபூரணமாகச் சரணடையச் செய்பவர்கள், அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்களுடைய பிரதிபலனைப் பெற்றுக் கொள்வார்கள்; அவர்கள் அச்சம் கொள்ள எதுவுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

113. யூதர்கள் கூறினர், "கிறிஸ்துவர்களுக்கு எந்த அடிப்படையுமில்லை," அதே சமயம் கிறிஸ்துவர்கள் கூறினர், "யூதர்களுக்கு எந்த அடிப்படையுமில்லை," ஆயினும், அவர்கள் இருசாராருமே வேதத்தைப் படிக்கின்றனர். இவ்விதமானவை எந்த அறிவையும் கொண்டிராதவர்களின் கூற்றுக்களேயாகும். அவர்களுடைய சர்ச்சைகள் குறித்து, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் **கடவுள்** அவர்களுக்குத் தீர்ப்பளிப்பார்.

**2:104 "ரா 'இனா" எனும் வார்த்தை சில ஹீப்ரு மொழி பேசுகின்ற மக்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது, மேலும் ஒரு கெட்ட வார்த்தை போல் தோன்றுமாறு திரித்துக்கூறப்பட்டது (4:46ஐயும் பார்க்கவும்).*

**2:106 இக்குர்ஆனின் கணித அற்புதம் நிலைத்திருக்கூடியதாகவும் முந்திய அற்புதங்களை விட மிகப்பெரிதாகவும் உள்ளது (34:45, 74:35). குர்ஆனைப் போலவே, முந்திய அனைத்து அற்புதங்களையும் அது உறுதிப்படுத்துகின்றது, பூர்த்தி செய்கின்றது, மேலும் அவற்றின் இடத்தை எடுத்துக் கொள்வதாகவும் அமைகின்றது.*

**2:111–112 பார்க்க 2:62 மற்றும் 5:69.*

*நீங்கள் பள்ளிவாசலுக்கு அடிக்கடி செல்ல வேண்டும்*

114. அவருடைய பெயர் நினைவு கூரப்படுகின்ற **கடவுள்**–ன் பள்ளிவாசல்களைப் புறக்கணித்து, அவற்றைப் பாழ்படுத்தப் பங்களிப்பவர்களை விட, மிகவும் அக்கிரமக்காரர்களாக இருப்பவர்கள் யார்? இவர்கள் அச்சம் நிறைந்தவர்களாகவே தவிர அதனுள் நுழைவதற்கில்லை. அவர்கள் இந்த வாழ்வில் இழிவை அனுபவிப்பார்கள், மேலும் மறுவுலகிலோ பயங்கரமானதொரு தண்டனையால் துன்புறுவார்கள்.

115. கிழக்கும்மேற்கும் **கடவுள்**–க்கே உரியவை; எங்கெல்லாம் நீங்கள் செல்கின்றீர்களோ அங்கே **கடவுள்**–ன் இருப்பு உள்ளது. **கடவுள்** எங்குமிருப்பவர், எல்லாம் அறிந்தவர்.

*மாபெரும் இறைநிந்தனை*

116. அவர்கள் கூறினர், "**கடவுள்** ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளார்!" அவர் துதிப்பிற்குரியவராக இருக்கின்றார்; ஒருபோதுமில்லை! வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை; அனைத்தும் அவருக்குக் கீழ்ப்படிந்தவையாகவே உள்ளன.

117. வானங்கள் மற்றும் பூமியின் துவக்ககர்த்தா: எந்த ஒன்றும் செய்யப்பட வேண்டுமென்றால், அவர் அதன்பால் "ஆகு" என்று மட்டுமே கூறுகின்றார், உடனே அது ஆகி விடுகின்றது.

118. எந்த அறிவையும் கொண்டிராதவர்கள் கூறுகின்றனர், "**கடவுள்** நம்முடன் பேச மட்டும் இயன்றால், அல்லது ஏதேனும் ஓர் அற்புதம் நம்மிடம் வந்தால்!" இவர்களுக்கு முன்னர் மற்றவர்களும் ஒப்பான கூற்றுகளையே கூறியிருந்தனர்; அவர்களுடைய மனங்கள் ஒத்தவையாகவே இருக்கின்றன. உறுதிப்பாட்டை அடைந்து விட்டவர்களுக்கு அற்புதங்களை நாம் தெளிவாகக் காட்டவே செய்கின்றோம்.

119. நற்செய்தியைச் சுமக்கின்ற ஒருவராகவும், அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராகவும் சத்தியத்துடன் உம்மை* நாம் அனுப்பியுள்ளோம். நரகத்திற்கு உள்ளாவோருக்காக நீர் பதிலளிக்க வேண்டியவராக இல்லை.

120. யூதர்களோ, அன்றிக் கிறிஸ்துவர்களோ, அவர்களுடைய மார்க்கத்தை நீர் பின்பற்றினாலேயன்றி, உம்மை அங்கீகரிக்க மாட்டார்கள். கூறுவீராக, "**கடவுள்**–ன் வழிகாட்டல்தான் மெய்யான வழி காட்டலாகும்." நீர் பெற்றிருக்கின்ற அறிவிற்குப் பின்னரும், அவர்களுடைய விருப்பங்களுக்கு நீர் இணங்கினால், **கடவுள்**–க்கெதிராக உமக்கு உதவ எந்தக் கூட்டாளியையோ அல்லது ஆதரவாளரையோ நீர் காணமாட்டீர்.

121. வேதத்தைப் பெற்று மேலும் அதனை அறிய வேண்டியவாறு அதனை அறிந்திருப்பவர்கள், இதனில் நம்பிக்கை கொள்வார்கள். நம்பமறுப்போரைப் பொறுத்தவரை, அவர்கள்தான் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர்.

122. இஸ்ரவேலின் சந்ததியினரே, உங்கள் மீது நான் அருட் செய்த என் உபகாரத்தையும், மேலும் மற்றெந்த மக்களையும் விட அதிகமாக நான் உங்களை ஆசீர்வ தித்தேன் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

123. எந்த ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவிற்கு உதவி செய்திடாத, எந்த ஈடும் ஏற்றுக் கொள்ளப்படாத, எந்தப் பரிந்துரையும் பயன்தராத, மேலும் எவர் ஒருவரும் உதவி செய்யப்படாத, அந்நாள் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

*ஆப்ரஹாம்*

124. குறிப்பிட்ட கட்டளைகளின் மூலம் ஆப்ரஹாம் அவருடைய இரட்சகரால் சோதனையில் ஆழ்த்தப் பட்டதையும், மேலும் அவற்றை அவர் நிறைவேற்றியதையும் நினைவு கூர்ந்திடுங்கள், *(கடவுள்)* கூறினார், "மனிதர்களுக்கு ஓர் இமாமாக உம்மை நான் நியமிக்கின்றேன்." அவர் கூறினார், "அத்துடன் என் சந்ததியினரையுமா?" அவர் கூறினார், "என்னுடைய உடன்படிக்கை வரம்புமீறுபவர்களை உட்படுத்தியதாக இல்லை."

125. நாம் மக்களுக்கு அந்த ஆலயத்தை *(கஅபா)* ஒரு குவி மையமாகவும், பாதுகாப்பானதொரு புகலிடமாகவும் ஆக்கியுள்ளோம். ஆப்ரஹாமின் ஆலயத்தை நீங்கள் ஒரு பிரார்த்தனை மையமாக பயன்படுத்திக் கொள்ளலாம். ஆப்ரஹாம் மற்றும் இஸ்மாயிலுக்கு நாம் பொறுப்பை அளித்தோம்: "தரிசிக்க வருபவர்களுக்கும், அங்கே வசிப்பவர்களுக்கும், அத்துடன் குனிந்து மேலும் சிரம் பணிபவர்களுக்காகவும் என் வீட்டை நீங்கள் தூய்மை செய்திட வேண்டும்."

126. ஆப்ரஹாம் பிரார்த்தித்தார்: "என் இரட்சகரே இதனை ஓர் அமைதி நிறைந்த தலமாக ஆக்குவீராக, மேலும் இதன் மக்களுக்குக் கனிகளை வழங்குவீராக. **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்வோருக்கு வழங்குவீராக." *(கடவுள்)* கூறினார், "நம்பமறுக்கின்றவர்களுக்கும் கூட நான் வழங்குவேன். அவர்களை நான் தற்காலிகமாகச் சுகமனுபவிக்க அனுமதிப்பேன், பின்னர் நரகத்தின் தண்டனைக்கும், துக்ககரமானதொரு விதிக்கும் அவர்களை உட்படுத்துவேன்."

**2:119 இந்த தூதர் கடவுளின் உடன்படிக்கைத் தூதரான "ரஷாத் கலீஃபா" தான் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிகாட்ட வேண்டியது என்னுடைய கடமையாக உள்ளது. "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன், (505) "கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725) இவ்வசன எண்ணையும் (119) கூட்டினால் நமக்குக் கிடைப்பது 1349, 19ன் ஒரு பெருக்குத் தொகை. 3:81 மற்றும் பின் இணைப்பு 2 ஐப் பார்க்கவும்.*

*சரணடைதலின் (இஸ்லாம்) வழிபாட்டு முறைகள் அனைத்தையும் ஆப்ரஹாம் சேர்ப்பித்தார்*

127. ஆலயத்தின் அஸ்திவாரங்களை ஆப்ரஹாம் உயர்த்திய போது, இஸ்மாயீலுடன் சேர்ந்து *(அவர்கள் பிரார்த்தித்தனர்):* "எங்கள் இரட்சகரே, இதனை எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்வீராக. நீரே செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

128. "எங்கள் இரட்சகரே, உமக்குச் சரணடைந்தவர்களாக எங்களை ஆக்குவீராக, மேலும் எங்களுடைய சந்ததியினரிலிருந்து உமக்குச் சரணடைந்தவர்களாக ஒரு சமூகத்தை இருக்கச் செய்வீராக. எங்களுடைய மார்க்கத்தின் சடங்குகளை எங்களுக்குக் கற்றுத்தருவீராக, மேலும் எங்களை மீட்பீராக. நீரே மீட்பவர், மிக்க கருணையாளர்.

129. "எங்கள் இரட்சகரே, மேலும் அவர்களுக்கு உம் வெளிப்பாடுகளை ஓதிக்காட்டவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுத்தரவும், மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்தவும், அவர்களில் இருந்தே ஒரு தூதரை எழுப்புவீராக. நீரே எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்."

130. தன்னுடைய சொந்த ஆத்மாவையே ஏய்த்துக் கொள்கின்ற ஒருவனைத் தவிர, ஆப்ரஹாமின் மார்க்கத்தை யார் புறக்கணிப்பார்? இந்த வாழ்வில் அவரை நாம் தேர்ந்தெடுத்தோம், மேலும் மறுவுலகிலோ அவர் நன்னெறியாளர்களுடன் இருப்பார்.

131. அவருடைய இரட்சகர் அவரிடம் "சரணடைவீராக," எனக் கூறிய பொழுது, அவர் கூறினார், "பிரபஞ்சத்தின் இரட்சகருக்கு நான் சரணடைகின்றேன்."

132. அத்துடன், அதனையே செய்யுமாறு தன்னுடைய பிள்ளைகளையும் ஆப்ரஹாம் தூண்டினார், மேலும் ஜேகபும் அவ்வாறே செய்தார்: "என்னுடைய பிள்ளைகளே, உங்களுக்குரிய மார்க்கத்தைக் **கடவுள்** சுட்டிக் காட்டியுள்ளார்; சரணடைந்தோராகவே அன்றி மரணித்து விடாதீர்கள்."

133. அவருடைய மரணப்படுக்கையின் மீது, ஜேகபை நீர் பார்த்திருந்தால்; அவர் தன் பிள்ளைகளிடம் கூறினார், "நான் மரணித்த பின்னர் நீங்கள் எதனை வழிபடுவீர்கள்?" அவர்கள் கூறினர்," உம்முடைய இறைவனையே நாங்கள் வழிபடுவோம்; உம்முடைய தந்தையரான ஆப்ரஹாம், இஸ்மாயில் மற்றும் ஐசக்கின் இறைவன்; அந்த ஒரே இறைவன், அவருக்கே நாங்கள் சரணடைந்தோராக இருக்கின்றோம்".

134. இவ்விதமானது கடந்த காலத்தில் இருந்து ஒரு சமுதாயம். அவர்கள் சம்பாதித்தவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் சம்பாதித்தவற்றுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர்கள். அவர்கள் செய்த எந்த ஒன்றுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டியவர்களாக இல்லை.

*சரணடைதல் (இஸ்லாம்): ஆப்ரஹாமின் மார்க்கம்**

135. அவர்கள் கூறினர், "வழிநடத்தப்பட்டவர்களாக இருப்பதற்கு, நீங்கள் யூதராகவோ அல்லது கிறிஸ்துவராக இருத்தல் வேண்டும்." கூறுவீராக, "நாங்கள் ஆப்ரஹாமின் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றோம் – ஏகத்துவம் –அவர் ஒருபோதும் போலித்தெய்வ வழிபாடு செய்யும் ஒருவராக இருந்ததில்லை."

*கடவுளின் தூதர்களுக்கிடையில் பாகுபாடு இல்லை*

136. கூறுங்கள், "நாங்கள் **கடவுள்** மீதும், மேலும் எங்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டுள்ளவற்றிலும், மேலும் ஆப்ரஹாம், இஸ்மாயில், ஐசக், ஜேகப், மற்றும் அந்த வம்சத்தின் தலைவர்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டுள்ளவற்றிலும்; மேலும் மோஸஸுக்கும் ஜீஸஸுக்கும் மற்றும் நபிமார்கள் அனைவருக்கும் அவர்களுடைய இரட்சகரிடமிருந்து கொ டுக்கப்பட்டவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றோம். அவர்களில் எந்த ஒருவருக்கிடையிலும் நாங்கள் பாகுபாடு செய்யமாட்டோம். அவருக்கு மட்டுமே நாங்கள் சரணடைந்தோராக இருக்கின்றோம்."

137. உங்களைப் போல் அவர்கள் நம்பிக்கை கொள்வார்களாயின், அப்போது அவர்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது அவர்கள் எதிரணியில் தான் இருக்கின்றனர். அவர்களுடைய எதிர்ப்பை **கடவுள்** உங்களை விட்டும் தவிர்த்து விடுவார்; அவரே செவியேற்பவர், அனைத்தையும் அறிந்தவர்.

138. **கடவுள்**–ன் வழிமுறை, இத்தகையதாகவே உள்ளது, மேலும் **கடவுள்**–வுடையதை விடவும் மேலான வழிமுறை எவருடையது? "அவரை மட்டுமே நாங்கள் வழிபடுகின்றோம்."

**2:135 சரணடைதல் எனும் மார்க்கம் ஆப்ரஹாமுடையதாகும் என்பதைக் குர்ஆன் நமக்கு மீண்டும் மீண்டும் கூறுகின்றது (3:95, 4:125, 6:161, 22:78). சரணடைதலின் அனைத்துக் கடமைகள் மற்றும் அநுஷ்டானங்கள் (தொடர்புத் தொழுகைகள் (ஸலாத்) கடமையான தர்மம் (ஜகாத்) ரமளானின் நோன்பு மற்றும் ஹஜ் புனித யாத்திரை) ஆகியவற்றுடன் கூடிய ஒரு நடைமுறை "வேதத்தை" ஆப்ரஹாம் பெற்றார். 16:123ல் நாம் காண்கின்றபடி, ஆப்ரஹாமின் மார்க்கத்தைப் பின்பற்றிய ஒருவராகவே முஹம்மத் இருந்தார்; குர்ஆன் எனும் இந்த இறுதி ஏற்பாட்டை அவர் சேர்ப்பித்தார். இந்த மார்க்கத்தின் நம்பகத் தன்மைக்கான சான்றை சரணடைதலின் மூன்றாம் தூதர் சேர்ப்பித்தார் (பார்க்க 3:81 மற்றும் பின் இணைப்புக்கள் 1, 2, 24, 26).*

139. கூறுவீராக, "அவரே எங்களுடைய இரட்சகராகவும் உங்களுடைய இரட்சகராகவும் இருக்கும் பொழுது, **கடவுள்**–ஐப் பற்றி எங்களிடம் நீங்கள் தர்க்கிக்கின் றீர்களா ? எங்களுடைய செயல்களுக்கு நாங்கள் பொறுப்பாக இருக்கின்றோம், மேலும் உங்களுடைய செயல்களுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர் கள். நாங்கள் அவருக்கு மட்டுமே அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருக்கின்றோம்."

140. ஆப்ரஹாம், இஸ்மாயில், ஐசக், ஜேகப் மற்றும் அந்த வம்சாவளித் தலைவர்கள், யூதர்களாகவோ அல்லது கிறிஸ்துவர்களாகவோ இருந்தனர் என்று நீங்கள் கூறுகின்றீர்களா ? கூறுவீராக, "**கடவுள்**–ஐ விடவும் நன்கறிந்தவர்களா நீங்கள் ? **கடவுள்**–யிடமிருந்து தான் கற்றுக்கொண்ட ஒரு சாட்சிப் பிரமாணத்தை மறைக்கின்ற ஒருவனை விட மிகத் தீயவன் வேறு யார் ? நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் குறித்துக் **கடவுள்** ஒருபோதும் அறியாதவர் அல்லர்."

141. அது கடந்த காலத்தில் இருந்த ஒரு சமுதாயம். அவர் கள் சம்பாதித்தவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் சம்பாதித்தவற்றுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர்கள். அவர்கள் செய்த எந்த ஒன்றுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண் டியவர்களாக இல்லை.

*கொள்கை வெறி மற்றும் தப்பபிப்பிராயம் ஆகியவை முடிவு கட்டப்படுதல்**

142. மனிதர்களுக்கிடையில் உள்ள மூடர்கள் கூறக் கூடும், "அவர்களுடைய *கிப்லா*வின்* திசையை ஏன் அவர்கள் மாற்றினார்கள் ?" கூறுவீராக, "கிழக்கும் மேற்கும் **கடவுள்**–க்கே உரியவை; நேரான பாதையை நாடுகின்ற எவரையும் அவர் வழி நடத்துகின்றார்."

143. இவ்விதமாக மக்களுக்கிடையில் நீங்கள் சாட்சி களாகத் திகழ்வதற்காக, உங்களை ஒரு நடுநிலை தவறாத ஒரு சமுதாயமாக நாம் ஆக்கினோம், மே லும் தூதரானவர் உங்களுக்கிடையில் ஒரு சாட்சி யாகத் திகழ்கின்றார். உங்களுக்கிடையில் தங்களு டைய குதிங்கால்களின் மேல் பின்னால் திரும்பி விடக் கூடியவர்களிலிருந்து முழுமனத்துடன் தூத ரைப் பின்பற்றுபவர்களைப் பிரித்தறிவிப்பதற்காக மட்டுமே உங்களுடைய முதல் *கிப்லா*வின் திசையை நாம் மாற்றினோம். இது கடினமானதொரு சோதனை யாகவே இருந்தது, ஆனால் **கடவுள்**–ஆல் வழி நடத் தப்பட்டவர்களுக்கு அல்ல. உங்களுடைய வழிபாட் டைக் **கடவுள்** ஒருபோதும் வீணாக ஆக்கி விடமாட் டார். மனிதர்கள்பால் **கடவுள்** இரக்கமுள்ளவராக இருக்கின்றார், மிக்க கருணையாளர்.

*கிப்லா மீண்டும் மக்காவிற்குத் திருப்பப்படுகின்றது*

144. *(சரியான திசையைத் தேடியவாறு)* உம்முடைய முகத் தை வானத்தின் பால் திருப்பிக்கொண்டிருப்பவராக உம்மை நாம் கண்டோம். இப்போது நாம் உம்மைத் திருப்தி செய்கின்ற ஒரு *கிப்லா*வை நிர்ணயிக்கின் றோம். இனிமேல், புனிதப்பள்ளியை நோக்கி நீர் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும். நீங்கள் எங் கிருந்த போதிலும், நீங்கள் அனைவரும் உங்களு டைய முகங்களை அதன் பால் திருப்பிக் கொள்ள வேண்டும். முந்திய வேதத்தைப் பெற்றவர்கள் இது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் என்பதை அறிகின்றனர். அவர்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் **கடவுள்** ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

145. வேதத்தைப் பின்பற்றுபவர்களிடம் ஒவ்வொரு வகை யான அற்புதத்தையும் நீர் காட்டினால் கூட, அவர்கள் உம்முடைய *கிப்லா*வைப் பின்பற்ற மாட்டார்கள். அன்றி நீரும் அவர்களுடைய *கிப்லா*வைப் பின்பற்ற வேண்டாம். அவர்கள்கூட ஒருவர் மற்றவரின் *கிப்லா* வைப் பின்பற்றுவதில்லை. உம்மிடம் வந்திருக்கின்ற அறிவிற்குப் பின்னரும், அவர்களுடைய விருப்பங் களுக்கு நீர் இணங்கினால், நீர் வரம்புமீறுகின்றவர் களுடன் சேர்ந்து விடுவீர்.

*வேதத்தைத் துஷ்பிரயோகம் செய்தல்: தேர்ந்தெடுத்த முக்கியத்துவமும் மறைத்தலும்*

146. வேதத்தைப் பெற்றவர்கள் தங்கள் சொந்தக் குழந் தைகளை அவர்கள் அடையாளம் காண்பதைப் போல, இதிலுள்ள சத்தியத்தை அடையாளம் காண்கின்ற னர். ஆயினும், அவர்களில் சிலர் அறிந்து கொண்டே, சத்தியத்தை மறைக்கின்றனர்.

147. இதுவே உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்திய மாகும்; எவ்விதச் சந்தேகத்தையும் மனதில் தாங்கிக் கொண்டிருக்காதீர்.

148. நீங்கள் ஒவ்வொருவரும் பின்பற்றுவதற்குரிய திசை யைத் தேர்ந்தெடுக்கின்றீர்கள்; நீங்கள் நன்னெறியின் பால் விரைந்திட வேண்டும். நீங்கள் எங்கிருந்த போ திலும், உங்கள் அனைவரையும் **கடவுள்** ஒன்று திரட் டுவார். **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

**2:142–145 (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளின் போது ஒருவர் முன்னோக்குகின்ற திசையே "கிப்லா" ஆகும். மக்காவிற்குப் பதிலாக ஜெருசலேம் நோக்கி முன்னோக்குவதற்கான கட்டளையை முஹம்மதிடம் கேப்ரியேல் தெரிவித்தபோது, நயவஞ்ச கர்களாக இருந்தவர்கள் வெளிப்படுத்தப்பட்டனர். அந்த அரேபியர்கள் தங்களுடைய "கிப்லா" வாக கஅபாவிற்குச் சாதக மான தப்பபிப்பிராயத்தைத் திடமாகக் கொண்டிருந்தனர். மெய்யான நம்பிக்கையாளர்கள் மட்டுமே தங்களுடைய தப்பபிப் பிராயங்களை வெல்லும் திறனுடையவர்களாக இருந்தனர்; அவர்கள் உடனடியாகத் தூதருக்குக் கீழ்ப்படிந்தனர்.*

*கிப்லா மீண்டும் மக்காவிற்குத் திருப்பப்படுகின்றது*

149. நீர் எங்கு சென்றாலும், *(ஸலாத்தின் போது)* நீர் உம்முடைய முகத்தைப் புனிதப்பள்ளியை* நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும். இதுவே உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாகும். நீங்கள் அனைவரும் செய்கின்ற எந்த ஒன்றைக் குறித்தும் **கடவுள்** ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

150. நீர் எங்கு சென்றாலும், *(ஸலாத்தின் போது)* உம்முடைய முகத்தை புனிதப்பள்ளியை நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும்; நீங்கள் எங்கிருக்கின்ற போதிலும், *(ஸலாத்தின் போது)* உங்களுடைய முகங்களை நீங்கள் அதனை நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக, உங்களுக்கெதிராக மக்களுக்கு எந்தத் தர்க்கமும் இருக்காது, அவர்களில் உள்ள வரம்புமீறியவர்களைத் தவிர. அவர்களுக்கு அஞ்சாதீர்கள், பதிலாக எனக்கே அஞ்சுங்கள். அப்போது நான் உங்கள் மீது என்னுடைய ஆசீர்வாதங்களை முழுமைப்படுத்துவேன், நீங்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு.

151. நம்முடைய வெளிப்பாடுகளை உங்களிடம் ஓதிக் காட்டி, உங்களைத் தூய்மைப்படுத்தி, வேதத்தையும் ஞானத்தையும் உங்களுக்குக் கற்றுக் கொடுத்து, மேலும் நீங்கள் ஒருபோதும் அறிந்திராதவற்றை உங்களுக்குக் கற்றுக் கொடுக்க உங்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பியதைப் போன்ற *(ஆசீர்வாதங்கள்).*

152. நான் உங்களை நினைவில் கொள்ளும் பொருட்டு, நீங்கள் என்னை நினைவில் கொள்ள வேண்டும், மேலும் என்னிடம் நன்றியோடு இருங்கள்; நன்றி கெட்டவர்களாக இருக்காதீர்கள்.

153. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உறுதிப்பாட்டுடனும், *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளின் மூலமும் உதவி தேடுங்கள். உறுதிப்பாட்டுடன் தொடர்ந்திருப்பவர்களுடன் **கடவுள்** இருக்கின்றார்.

*இங்கிருந்து நாம் எங்கே செல்கின்றோம் ?*

154. **கடவுள்**–ன் நிமித்தம் கொல்லப்பட்டவர்களைக் குறித்து, "அவர்கள் இறந்துவிட்டனர்," என்று கூறாதீர்கள். அவர்கள் தங்களுடைய இரட்சகரிடம் உயிருடன் இருக்கின்றார்கள், ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.*

155. நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு பயம், பசி, மேலும் பணம், வாழ்வு மற்றும் விளைச்சல், ஆகியவற்றின் நஷ்டத்தின் மூலம் சோதிப்போம். உறுதிப்பாடுடையவர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக.*

156. அவர்களுக்கு ஒரு துன்பம் நேரிடும் போது, அவர்கள் கூறுகின்றனர், "நாம் **கடவுள்**–க்குரியவர்கள், மேலும் அவரிடமே நாம் திரும்பிச் சென்று கொண்டிருக்கின்றோம்."

157. இவர்கள் தங்களுடைய இரட்சகரிடமிருந்து ஆசிகளுக்கும் கருணைக்கும் தகுதி பெற்று விட்டனர், இவர்கள்தான் வழிகாட்டப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

*ஹஜ்*
*புனித யாத்திரை*

158. ஸஃபா மற்றும் மர்வாவின் குன்றுகள் **கடவுள்**–ஆல் விதிக்கப்பெற்ற சடங்குகளில் உள்ளவையாகும். *ஹஜ்* அல்லது *உம்ரா*வைக் கடைப்பிடிக்கின்ற எவரொருவரும் அவற்றிற்கிடையில் உள்ள தூரத்தைக் கடப்பதன் மூலம் எந்தத் தவறும் செய்து விடுவதில்லை. ஒருவர் தானே முன்வந்து கூடுதலாக நன்னெறியான காரியங்களைச் செய்தால், பின்னர் **கடவுள்** பாராட்டுபவர், எல்லாம் அறிந்தவர்.

*மிகப்பெரும் குற்றம்*

159. வேதத்தில் மக்களுக்கு வெளிப்பாடுகளையும் வழிகாட்டலையும், பிரகடனப்படுத்திய பின்னரும், அவற்றை மறைக்கின்றவர்கள், **கடவுள்**–ஆல் கண்டனம் செய்யப்படுகின்றார்கள்; கண்டனம் செய்பவர்கள் அனைவராலும் அவர்கள் கண்டனம் செய்யப்படுகின்றார்கள்.

160. பாவத்திற்காக வருத்தப்பட்டு, சீர்திருந்தி, மேலும் பிரகடனப்படுத்திவிடுபவர்களைப் பொறுத்தவரை, நான் அவர்களை மீட்டுக்கொள்கின்றேன். நானே மீட்பவன், மிக்க கருணையாளன்.

161. நம்பமறுத்து மேலும் நம்பமறுப்பவர்களாகவே மரணித்து விடுபவர்கள், **கடவுள்,** வானவர்கள், மற்றும் மக்கள் அனைவரின் கண்டனத்திற்கு *(தீர்ப்பு நாளில்)* உள்ளாகி விட்டனர்.

**2:149 முஹம்மதின் சமாதியை ஒரு "புனிதப் பள்ளி" என்று நியமித்திருத்தல் இன்றைய "முஸ்லிம்" களால் செய்யப்படுகின்ற போலித் தெய்வ வழிபாட்டிற்கு ஒரு பளிச்சிடும் சான்றாக உள்ளது. இக்குர்ஆன் ஒரே ஒரு "புனிதப்பள்ளி"யை மட்டுமே குறிப்பிடுகின்றது.*

**2:154 நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை; அவர்கள் இங்கு தங்களுடைய உடம்புகளை விட்டு விலகி ஆதமும் ஏவாளும் முன்னர் வசித்த அதே சொர்க்கத்திற்குச் செல்கின்றனர் அவ்வளவுதான். சான்று மற்றும் விபரங்களுக்கு பின் இணைப்பு 17 ஐப் பார்க்கவும்.*

**2:155 அனைத்துச் சூழ்நிலைகளின் கீழும் நாம் கடவுளை மட்டும் வழிபடுகின்றோம் என்பதை நிரூபிப்பதற்காகவே சோதனையானது வடிவமைக்கப்பட்டுள்ளது (29:2).*

162. நிரந்தரமாக அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். தண்டனையானது அவர்களுக்கு ஒருபோதும் குறைக் கப்படமாட்டாது, அன்றி அவர்கள் அவகாசம் அளிக் கப்படவும் மாட்டார்கள்.

163. உங்கள் தெய்வம் ஒரே தெய்வம்; அவரைத் தவிர தெய்வம் இல்லை, மிக்க அருளாளர், மிக்க கருணை யாளர்.

*கடவுளின் மூழ்கடிக்கின்ற அத்தாட்சிகள்*

164. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பு, இரவு மற்றும் பகலின் மாற்றம், மக்களுக்குப் பயனளிப்பதற்காக சமுத்திரத்தைச் சுற்றுகின்ற கப்பல்கள், இறந்துவிட்ட நிலத்தை உயிர்ப்பிப்பதற்காகவும் அனைத்து வகைப் பிராணிகளையும் அதனில் பரப்புவதற்காகவும் விண் ணிலிருந்து **கடவுள்** இறக்கி அனுப்புகின்ற தண்ணீர், காற்றுக்களை இஷ்டப்படிக் கையாளுதல், மேலும் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் வைக்கப்பட் டுள்ள மேகங்கள் ஆகியவற்றில் புரிந்து கொள்கின்ற மக்களுக்குப் போதுமான சான்றுகள் உள்ளன.

*போலித் தெய்வங்கள் தங்களை இணைவழிபாடு செய்தவர்களைக் கைவிட்டு விடுகின்றன**

165. இருப்பினும், மக்களில் சிலர் **கடவுள்**–க்குப் போட்டி யாக போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின் றனர், மேலும் அவர்கள்தான் **கடவுள்**–ஆக இருக் கின்றனர் என்பதைப் போல அவர்களை நேசிக்கின் றனர். நம்பிக்கை கொண்டவர்களோ **கடவுள்**–ஐ அதி கமாக நேசிக்கின்றனர். வரம்புமீறுபவர்கள் தண்ட னையைக் காணும் பொழுது அவர்களால் மட்டும் தங்களையே காண முடிந்தால்! அப்போது அவர்கள் அனைத்துச் சக்தியும் **கடவுள்**–க்கு மட்டுமே உரியது என்பதையும், மேலும் **கடவுள்**–ன் தண்டனை அச் சுறுத்துவதாகும் என்பதையும் உணர்ந்து கொள் வார்கள்.

166. பின்பற்றப்பட்டவர்கள் தங்களைப் பின்பற்றியவர் களைக் கைவிட்டு விடுவார்கள்.* அவர்கள் தண்ட னையைக் காண்பார்கள், மேலும் அவர்களுக்கிடை யில் இருந்த எல்லாத் தொடர்புகளும் துண்டிக்கப் பட்டு விடும்.

167. பின்பற்றியவர்கள் கூறுவார்கள், "மற்றொரு சந்தர்ப் பம், நமக்குக் கிடைக்கக்கூடுமானால், இப்போது அவர்கள் நம்மைக் கைவிட்டு விட்டதைப் போலவே, நாம் அவர்களைக் கைவிட்டு விடுவோம்." இவ்வித மாக அவர்களுடைய காரியங்களின் விளைவுகள் குற்றவுணர்வைத் தவிர எதுவு மில்லை என்று **கடவுள்** காட்டுகின்றார்; நரகத்தை விட்டு அவர்கள் ஒருபோ தும் வெளியேற மாட்டார்கள்.

*அனுமதிக்கப்பட்ட விஷயங்களைச் சாத்தான் தடை செய்கின்றான்*

168. மனிதர்களே, அனுமதிக்கப்பட்டதும் நல்லதுமான பூமியின் விளைச்சல்கள் அனைத்திலிருந்தும் உண் ணுங்கள், மேலும் சாத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்; அவன் உங்களுடைய மிகத் தீவிர மான விரோதியாக இருக்கின்றான்.

169. அவன் கெட்டவற்றை மேலும் ஒழுக்கக்கேட்டைப் புரி யும்படியும், **கடவுள்**–ஐப் பற்றி நீங்கள் அறியாதவற் றைக் கூறும்படியுமே உங்களுக்குக் கட்டளையிடு கின்றான்.

*இருக்கின்ற நிலையைப் பராமரித்தல்: ஒரு மானிட சோகம்*

170. "**கடவுள்** இதிலே வெளிப்படுத்தியுள்ளவற்றைப் பின் பற்றுங்கள்," என அவர்களிடம் கூறப்பட்டால், அவர் கள் கூறுகின்றனர், "எங்களுடைய பெற்றோர்கள் செய்கின்றதாக நாங்கள் கண்டவற்றை மட்டுமே நாங்கள் பின்பற்றுகின்றோம்." அவர்களுடைய பெற் றோர்கள் புரிந்து கொள்ளாதவர்களாகவும், மேலும் வழிகாட்டப்படாதவர்களாக இருந்தாலுமா ?

171. இத்தகைய நம்பமறுப்பவர்களின் உதாரணமாவது, தாம் செவியேற்கின்ற சப்தங்களையும் அழைப்புக் களையும், புரிந்து கொள்ளாமலே, திருப்பிக் கூறு கின்ற கிளிகளைப் போன்றதாகும். செவிடர்கள், ஊமையர்கள் மற்றும் குருடர்கள்; அவர்களால் புரிந்து கொள்ள இயலாது.

*நான்கு மாமிச உணவுகள் மட்டுமே தடுக்கப்பட்டுள்ளன**

172. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நாம் உங்களுக்காக வழங்கிய நல்ல பொருள்களிலிருந்து உண்ணுங்கள், மேலும் நீங்கள் அவரை மட்டுமே வழி படுபவர்களாக இருந்தால், **கடவுள்**–க்கு நன்றியுடை யவர்களாக இருங்கள்.

173. *(மனிதக் குறுக்கீடின்றி)* தாமாகச் செத்த பிராணிகள், இரத்தம், பன்றிகளின் இறைச்சி, மேலும் **கடவுள்**– அல்லாத மற்றவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராணி களை மட்டுமே நீங்கள் உண்ணுவதற்கு அவர் தடை செய்கின்றார். வன்மத்துடனோ அல்லது வேண்டு மென்றோ இல்லாமல், *(இவற்றை உண்ணுவதற்கு)* ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டால், அவர் எந்தப் பாவத்திற் கும் உள்ளாவதில்லை. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

**2:165–166 ஜீஸஸ், மேரி, முஹம்மத், அலீ மற்றும் மகான்கள் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் தங்களை இணை வழிபாடு செய்தவர்களைக் கைவிட்டு விடுவார்கள். மேலும் பார்க்க 16:86, 35:14, 46:6 மற்றும் மத்தேயுவின் சுவிசேஷம் 7:21–23.*

**2:172–173 இக்குர்ஆன் முழுவதிலும், நான்கு மாமிச உணவுகள் மட்டுமே தடுக்கப்பட்டுள்ளன (6:145, 16:115, பின் இணைப்பு 16). இவை நான்கிற்கு அப்பாற்பட்ட உணவு தொடர்பான தடைகள் போலித் தெய்வ வழிபாட்டிற்கு நிகரானவையாகும். (6:121,148,150,7:32).*

*சீர்கெட்ட மார்க்கத் தலைவர்கள்*
*குர்ஆனின் அற்புதத்தை மறைக்கின்றனர்**

174. மலிவான பொருளாதார இலாபங்களுக்குப் பகரமாக, வேதத்தில் உள்ள **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை மறைக்கின்றவர்கள், தங்களுடைய வயிறுகளுக்குள் நெருப்பைத் தவிர எதையும் உண்ணுவதில்லை. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் **கடவுள்** அவர்களிடம் பேச மாட்டார், அன்றி அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டார். அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

175. இவர்கள்தான் வழிகாட்டலுக்குப் பதிலாக வழி தவறுதலையும், மன்னிப்பிற்குப் பதிலாகத் தண்டனையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள். அதன் விளைவாக, அவர்கள் நரகத்தைச் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

176. இது ஏனெனில் **கடவுள்** இந்த வேதத்தை, சத்தியத்தைத் தாங்கியதாக, வெளிப்படுத்தியுள்ளார், மேலும் இவ்வேதத்தைத் தர்க்கிப்பவர்கள்தான் மிகத் தீவிரமான எதிரிகள்.

*நன்னெறி வரையறுக்கப்படுகின்றது*

177. நன்னெறி என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கையோ அல்லது மேற்கையோ நோக்கித் திருப்பிக் கொள்வது அல்ல. நன்னெறியாளர்கள் எவரென்றால் **கடவுள்**, இறுதிநாள், வானவர்கள், வேதம், மற்றும் நபிமார்கள் மீது நம்பிக்கை கொள்பவர்களேயாவர்; மேலும் அவர்கள் உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், தேவையுடையவர்களுக்கும், பயணத்திலிருக்கின்ற அந்நியர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், மேலும் அடிமைகளை விடுவிப்பதற்கும் பணத்தை, உவப்புடன் அளிப்பார்கள்; மேலும் அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பார்கள் அத்துடன் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுப்பார்கள்; மேலும் அவர்கள் வாக்குறுதி ஒன்றைச் செய்கின்ற போதெல்லாம் அவர்கள் தங்களுடைய வார்த்தையைக் காப்பாற்றுவார்கள்; மேலும் அவர்கள் வன்கொடுமை, கஷ்டம் மற்றும் போரை எதிர்கொள்ளும் போது உறுதிப்பாட்டுடன் தளராதிருப்பார்கள். இவர்கள்தான் உண்மையாளர்கள்; இவர்கள்தான் நன்னெறியாளர்கள்.

*மரண தண்டனை ஊக்கம் குறைக்கப்படுதல்**

178. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், கொலைக்கு எதிரான நடவடிக்கையின் போது சம நீதி என்பதே சட்டமாக உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது– சுதந்திரமானவருக்குச் சுதந்திரமானவர், அடிமைக்கு அடிமை, பெண்ணுக்குப் பெண். பலியானவரின் உறவினரால் ஒருவர் பிழை பொறுத்துக் கொள்ளப்பட்டால், நன்றியறிதலான ஒரு நடத்தை வழக்கத்தில் உள்ளது, எனவே நியாயமானதொரு நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டும். இது உங்களுடைய இரட்சகரிடமிருந்தொரு துயர் துடைப்பாகவும், கருணையாகவும் உள்ளது. இதற்கப்பாலும் வரம்புமீறுகின்றவர் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகின்றார்.

179. சமநீதி என்பது உங்களுக்கு ஓர் உயிர் காக்கின்ற சட்டமாக உள்ளது, அறிவுத்திறன் உடையவர்களே உங்களைத்தான், நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்கும் பொருட்டு.

*உயில் ஒன்றை எழுதுங்கள்*

180. மரணம் நெருங்கி வரும் போது, பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடைய நலனுக்காக நீதமாக நீங்கள் உயில் ஒன்றை எழுத வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. நன்னெறியாளர்கள் மீது இது ஒரு கடமையாக உள்ளது.

181. எவரேனும் தான் செவியேற்ற ஓர் உயிலை மாற்றியமைப்பாராயின், இத்தகைய மாறுதலுக்குப் பொறுப்பானவர்கள் மீதே மாற்றியதற்கான பாவம் நேரிடுகின்றது. **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

182. உயில் எழுதியவரின் பக்கம் பெரும் அநீதியையோ அல்லது பாரபட்சத்தையோ ஒருவர் கண்டு, உயிலின் பால் நீதியை மீட்டுக் கொண்டு வர சீர் செய்கின்ற நடவடிக்கை எடுத்தால், அவர் பாவம் எதுவும் செய்து விடவில்லை. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

---

**2:174–176 சீர்கெட்டுப் போய்விட்ட இந்த மார்க்கத் தலைவர்கள், இந்தக் குர்ஆனில் கடவுளின் கணித அற்புதத்தை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டதற்குப் பின்னரும், பிரமிப்பூட்டும் இந்த அற்புதத்தை பல ஆண்டுகளாக மறைக்க முயன்றனர். ரஷாத் கலீஃபாதான் இந்த அற்புதத்தைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார், அவர்கள் அல்லர், என்பதால்தான் இந்த நிதர்சனத்தின் மீது அவர்கள் சீற்றமடைந்தனர் என்பதை அவர்களில் பலர் ஒப்புக் கொண்டனர்.*

**2:178 மரண தண்டனையை இந்தக் குர்ஆன் தெளிவான முறையில் ஊக்கமிழக்கச் செய்கின்றது. கொலையாளியின் உயிர் உட்பட, உயிர்களுக்கு ஊறு விளைவிக்காதிருப்பதற்காக அனைத்து வகை சமாதானங்களும் வழங்கப்படுகின்றன. சில சூழ்நிலைகளின் கீழ், நியாயமானதொரு நஷ்டஈட்டிற்குப் பகரமாக கொலையாளியின் உயிருக்கு ஊறு விளைவிக்காதிருப்பதைப் பலியானவரின் உறவினர்கள் மேலானதாகக் காணக் கூடும். அத்துடன், உதாரணத்திற்கு, ஒரு பெண் ஒரு ஆணைக் கொன்றாலோ, அல்லது நேர்மாறான சூழ்நிலையிலோ மரண தண்டனை பொருந்தாது.*

*நோன்பிருத்தல் வலியுறுத்தப்படுகின்றது மேலும் தளர்த்தப்படுகின்றது**

183. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உங்களுக்கு முன்னிருந்தோர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தவாறே, உங்களுக்கும் நோன்பிருந்தல் விதிக்கப்படுகின்றது, நீங்கள் மீட்சியை அடையும் பொருட்டு.

184. குறிப்பிடப்பட்ட நாட்கள் *(நோன்பிருத்தலுக்கென நியமிக்கப்பட்டுள்ளன);* ஒருவர் நோயிலோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், ஒரு சமமான எண்ணிக்கையுள்ள மற்ற நாட்களைக் கொண்டு பகரமாக்கிக் கொள்ளலாம். மிகுந்த சிரமத்துடனேயே அன்றி, நோன்பிருக்க இயன்றவர்கள், நோன்பை முறிக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஒரு ஏழை மனிதருக்கு உணவளித்து ஈடு செய்து கொள்ளலாம். *(அதிகமான நன்னெறியான காரியங்களை)* ஒருவர் தாமாகவே முன்வந்து செய்தால், அது மேலானதேயாகும். ஆனால் நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், நோன்பிருத்தலே உங்களுக்குச் சிறந்ததாகும்.

185. ரமளான் எனும் மாதத்தின் போதுதான், மனிதர்களுக்கு வழிகாட்டல், தெளிவான போதனைகள், மற்றும் சட்டப் புத்தகத்தை வழங்குவதான இந்தக் குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது. உங்களில் இந்த மாதத்தைக் காண்பவர்கள் அதில் நோன்பிருத்தல் வேண்டும். நோயிலோ அல்லது பிரயாணத்திலோ இருக்கின்றவர்கள் அதே எண்ணிக்கையிலான மற்ற நாட்களைக் கொண்டு ஈடு செய்து கொள்ளலாம். **கடவுள்** உங்களுக்குச் சௌகரியத்தையே விரும்புகின்றார், கஷ்டத்தை அல்ல, உங்களுடைய கடமைகளை நீங்கள் பூர்த்தி செய்யவும், உங்களுக்கு வழிகாட்டியதற்காக **கடவுள்**–ஐத் துதிக்கவும், உங்களுடைய நன்றியறிதலை வெளிப்படுத்தவும் கூடும் என்பதற்காக.

*"தன்னுடைய ஊழியர்களின்" பிரார்த்தனைகளுக்குக் கடவுள் பதிலளிக்கின்றார்*

186. என்னுடைய ஊழியர்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்கும் போது, நான் எப்போதும் அருகிலேயே உள்ளேன். அவர்கள் என்னிடம் பிரார்த்திக்கும் பொழுது அவர்களுடைய பிரார்த்தனைக்கு நான் பதிலளிக்கின்றேன். வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு, மக்கள் எனக்குப் பதிலளிக்கவும் என் மீது நம்பிக்கை கொள்ளவும் வேண்டும்.

187. நோன்புக் கால இரவுகளின் போது உங்கள் மனைவியருடன் உங்களுக்குத் தாம்பத்ய உறவு அனுமதிக்கப்படுகின்றது. அவர்கள் உங்களுடைய இரகசியங்களைப் பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் அவர்களுடைய இரகசியங்களைப் பாதுகாப்பவர்களாக இருக்கின்றீர்கள். எநீங்கள் உங்களுடைய ஆத்மாக்களுக்குத் துரோகமிழைத்துக் கொண்டிருந்தீர்கள் என்பதைக் **கடவுள்** அறிந்திருந்தார், மேலும் அவர் உங்களை மீட்டுக் கொண்டார், அத்துடன் உங்களைப் பிழை பொறுத்துக் கொண்டார். இனிமேல், **கடவுள்** உங்களுக்கு அனுமதித்ததைத் தேடியவர்களாக, நீங்கள் அவர்களுடன் தாம்பத்ய உறவு கொள்ளலாம். விடியலின் போது இரவின் கருப்பு நூலில் இருந்து வெளிச்சத்தின் வெள்ளை நூலானது தெளிவாகத் தெரிகின்ற வரை நீங்கள் உண்ணவும் பருகவும் செய்யலாம். பின்னர், சூரிய அஸ்தமனம் வரை நீங்கள் நோன்பிருத்தல் வேண்டும். *(ரமளானின் கடைசிப் பத்து நாட்களின் போது)* பள்ளிவாசலில் அடைக்கலமாகிக் கொள்ள நீங்கள் தீர்மானித்தால் தாம்பத்ய உறவு தடை செய்யப்படுகின்றது. இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும்; நீங்கள் அவற்றை வரம்புமீற வேண்டாம். **கடவுள்** இவ்விதமாகத் தன்னுடைய வெளிப்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார், அவர்கள் ஆன்ம மீட்சியடையும் பொருட்டு.

*இலஞ்சம், ஊழல் கண்டனம் செய்யப்படுகின்றது*

188. நீங்கள் ஒருவர் மற்றவரின் பணத்தைச் சட்ட விரோதமாக அபகரித்துக் கொள்ள வேண்டாம், அன்றியும் நீங்கள் அறிந்திருக்கும் நிலையில், மற்றவர்களின் உரிமைகளில் சிலவற்றைச் சட்ட விரோதமாகப் பறித்துக் கொள்வதற்காக, அதிகாரிகளுக்கு நீங்கள் இலஞ்சமளிக்கவும் வேண்டாம்.

*சுற்றிவளைத்துப் பேசாதீர்கள்*

189. நிலவின் தோற்றங்களைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்! கூறுவீராக, "அவை மக்களுக்குக் காலங்கணிக்கின்ற ஓர் உபாயத்தை வழங்குகின்றன, மேலும் ஹஜ்ஜின் காலத்தை நிச்சயிக்கின்றன" சுற்றி வளைத்துப் பேசுவது நன்னெறியாகாது;* நன்னெறியானது கட்டளைகளை ஆதரிப்பது மற்றும் வெளிப்படையாக இருப்பதன் மூலமே அடையப்படுகின்றது. நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு.

**2:183–187* *சரணடைதலின் அனைத்துக் கடமைகளையும் போல, நோன்பிருத்தலும் ஆப்ராஹாமின் வாயிலாகவே விதிக்கப்பட்டது(22:78, பின் இணைப்புகள் 9 &15) இக்குர்ஆனின் வெளிப்பாட்டிற்கு முன்னதாக, நோன்புக் காலம் முழுவதிலும் தாம்பத்ய உறவு தடை செய்யப்பட்டிருந்தது. ரமளானுடைய இரவுகளின் போது தாம்பத்ய உறவை அனுமதிப்பதற்காக 2:187ல் இந்தச் சட்டம் தளர்த்தப்படுகின்றது.*

**2:189* *குர்ஆனுடைய வழக்குச் சொல்லின் வாசகம் கூறுவதாவது: "பின் வாசல் வழியாக வீடுகளுக்குள் நுழையாதீர்கள்." நிலவின் தோற்றங்கள் குறித்த இக்கேள்வி சுற்றி வளைத்துப் பேசுவதின் ஓர் உதாரணமாகும்; இந்தக் கேள்விக்குப் பின்னால் கெட்ட உள் நோக்கங்கள் இருந்தன.*

*போரின் விதிமுறைகள்**

190. உங்களைத் தாக்குபவர்களுக்கு எதிராகக் **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் சண்டையிடலாம், ஆனால் வலுச் சண்டையிடாதீர்கள். வலுச்சண்டையிடுபவர்களைக் **கடவுள்** நேசிப்பதில்லை.

191. உங்களுக்கெதிராகப் போர் தொடுப்பவர்களை நீங்கள் கொல்லலாம், மேலும் அவர்கள் உங்களை வெளியேற்றிய இடத்திலிருந்து அவர்களை நீங்கள் வெளியேற்றலாம். அடக்குமுறை கொலையை விட வும் மோசமானதாகும். புனிதப்பள்ளியில், உங்களை அங்கே அவர்கள் தாக்கினாலேயன்றி, அவர்களுடன் சண்டையிடாதீர்கள். அவர்கள் உங்களைத் தாக்கி னால், நீங்கள் அவர்களைக் கொல்லலாம். அந்த நம்ப மறுப்பவர்களுக்குரிய நியாயமாவன தண்டனை இது வேயாகும்.

192. அவர்கள் விலகிக் கொண்டால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

193. அடக்குமுறையினைக் களைவதற்கும், சுதந்திர மாகக் **கடவுள்**–ஐ வழிபடுவதற்கும் கூட நீங்கள் அவர்களுடன் சண்டையிலாம். அவர்கள் விலகிக் கொண்டால், நீங்கள் வலுச்சண்டை செய்ய வேண் டாம், வலுச்சண்டையிடுபவர்களுக்கு எதிராக மட்டு மே ஒடுக்குமுறை அனுமதிக்கப்பட்டுள்ளது.

194. புனித மாதங்களின் போது, வலுச்சண்டைதனை சமமானதொரு நடவடிக்கையின் மூலம் எதிர் கொள் ளலாம். அவர்கள் உங்களைத்தாக்கினால், நியாய மானதொரு தண்டனைக்கு உட்படுத்துவதன் மூல மாகப் பழிதீர்த்துக் கொள்ளலாம். நீங்கள் **கடவுள்**– ஐக் கருத்தில் கொள்ள வேண்டும் மேலும் நன்னெ றியாளர்களுடன் **கடவுள்** இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

195. **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் செலவிட வேண்டும்; உங்களுடைய சொந்தக் கரங்களால் உங்களையே நீங்கள் நாசத்திற்குள் தள்ளிக் கொள்ளாதீர்கள், நீங் கள் பெருந்தன்மையுடன் இருக்க வேண்டும்; பெருந் தன்மையுடையவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

*ஹஜ் மற்றும் உம்ரா புனித யாத்திரை**

196. *ஹஜ்* மற்றும் *உம்ரா*வின் அனைத்துச் சடங்குகளை யும் நீங்கள் **கடவுள்**–க்காகக் கடைப்பிடிக்க வேண் டும். நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டால், நீங்கள் ஓர் அர்ப்பணத்தை அனுப்பி வைக்க வேண்டும், மேலும் உங்களுடைய அர்ப்பணம் அதன் சேருமிடத்தை அடைந்திடும் வரை உங்கள் முடியை மீண்டும் வெட் டிக்கொள்ளத் துவங்காதீர்கள். நீங்கள் நோயாளியாக இருந்தால், அல்லது தலையில் ஒரு காயத்தால் அவ தியுற்று *(மேலும் உங்கள் முடியை நீங்கள் வெட்டிக் கொள்ள வேண்டியிருந்தால்)*, நோன்பிருத்தல் அல் லது தர்மம் கொடுத்தல், அல்லது வேறு ஏதேனும் ஒரு வழிபாட்டு முறையினால் நீங்கள் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். சகஜமான நிலையில் *ஹஜ்ஜி*ன் காலத்தில், *ஹஜ்* மற்றும் *உம்ரா*வுக்கிடையில் நீங்கள் *இஹ்ராம்* எனும் (புனித) நிலையை முறித்து விட்டால், ஒரு பிராணிப் பலியை அர்ப்பணிப்பதன் மூலம் நீங்கள் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். உங்களால் அதற்குச் செலவிட இயலாவிட்டால், *ஹஜ்ஜின்* காலத் தில் மூன்று நாட்கள் நோன்பிருத்தல் வேண்டும், மே லும் நீங்கள் வீடு திரும்பும் போது ஏழு – இது பத்தைப் பூர்த்தி செய்கின்றது – புனிதப் பள்ளிக்கு அருகில் நீங்கள் வசிக்காத பட்சத்தில். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் தண்டனை யை நிறைவேற்றுவதில் **கடவுள்** மிகவும் கண்டிப் பானவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

*ஹஜ்ஜின் நான்கு மாதங்கள்*
*(ஜுல்–ஹிஜ்ஜஹ், முஹர்ரம், ஸஃபர், &*
*ரபியுல் அவ்வல்)*

197. குறிப்பிடப்பட்ட மாதங்களில் *ஹஜ்* கடைப்பிடிக்கப் பட வேண்டும்.* *ஹஜ்*ஜைக் கடைப்பிடிக்கப் பயணத் தைத் துவங்குகின்ற எவரும் தாம்பத்ய உறவு, துர் நடத்தை, மற்றும் வாக்குவாதங்களை விட்டு *ஹஜ் ஜி*ன் காலம் முழுவதும் விலகியிருக்க வேண்டும். நீங் கள் செய்கின்ற நன்மைகள் எதுவாயினும், **கடவுள்** அது குறித்து முற்றிலும் அறிந்திருக்கின்றார். பிரயா ணத்திற்கான முன்னேற்பாடுகளை நீங்கள் தயார் செய்கின்ற பொழுது, நன்னெறியே மிகச் சிறந்த முன் னேற்பாடாக உள்ளது. அறிவுத்திறன் உடையவர் களே உங்களைத்தான், நீங்கள் என்னைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

**2:190* சண்டையிடுதல் அனைத்தும் 60:8–9ல் உள்ள அடிப்படை விதியின்படி நெறிமுறைப்படுத்தப்படுகின்றன. சண்டை யிடுதல் கண்டிப்பாகத் தற்காப்பிற்காகவே அனுமதிக்கப்படுகின்றது, அதே சமயம் வலுச்சண்டையும் அடக்குமுறையும் குர் ஆன் முழுவதிலும் கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகின்றன.*

**2:196* ஹஜ் மற்றும் உம்ராவின் விபரங்களை பின் இணைப்பு 15ல் காண்க.*

**2:197* புனித மாதங்களான ஜுல்–ஹிஜ்ஜஹ், முஹர்ரம், ஸஃபர், ரபியுல் அவ்வல் ஆகியவற்றின் போது எந்த கால கட்டத்தி லும் ஹஜ்ஜைக் கடைப்பிடிக்கலாம். உள்ளூர் அரசாங்கங்கள் தங்களுடைய சொந்த வசதிக்காக ஹஜ்ஜை ஒரு சில நாட் களுக்கு வரையறுக்கின்றன. பார்க்க 9:37.*

198. *(வணிகத்தின் வாயிலாக)* உங்கள் இரட்சகரிடமிருந்து வாழ்வாதாரங்களைத் தேடுவதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. அரஃபாத்திலிருந்து நீங்கள் வரிசையில் நகரும் போது, *(முஜ்தலிஃபா எனும்)* புனிதத்தலத்தில் நீங்கள் **கடவுள்**–ஐ நினைவு கூர்ந்திட வேண்டும். உங்களை வழி நடத்தியதற்காக அவரை நீங்கள் நினைவு கூர்ந்திட வேண்டும்; இதற்கு முன்னர், நீங்கள் வழி தவறிச் சென்றிருந்தீர்கள்.

199. வரிசையில் நகர்கின்ற மற்ற மக்களுடன் சேர்ந்து, நீங்கள் வரிசையில் நகர வேண்டும், மேலும் **கடவுள்**–யிடம் பாவமன்னிப்பிற்காக வேண்டிக் கொள்ளுங்கள். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

200. உங்களுடைய சடங்குகளை நீங்கள் பூர்த்தி செய்தவுடன், உங்கள் பெற்றோர்களை நினைவு கூர்வதைப் போல, அல்லது அதைவிடவும் சிறப்பாகக் **கடவுள்**–ஐ நினைவு கூர்வதை நீங்கள் தொடர்ந்திட வேண்டும். மறுவுலகில் எந்தப் பங்கும் இல்லாத அதே சமயம், மக்களில் சிலர் கூறக்கூடும், "எங்கள் இரட்சகரே, இவ்வுலகத்தில் உள்ளவற்றை எங்களுக்குத் தருவீராக."

201. மற்றவர்கள் கூறக்கூடும், "எங்கள் இரட்சகரே, இந்த உலகில் எங்களுக்கு நன்மையையும், அத்துடன் மறுவுலகிலும் நன்மையையும் வழங்குவீராக, மேலும் நரகத்தின் தண்டனையிலிருந்து எங்களைத் தவிர்த்து விடுவீராக."

202. இவர்களில் ஒவ்வொருவரும் அவர்கள் சம்பாதித்த தவற்றின் பங்கைப் பெற்றுக்கொள்வார்கள், கணக்கிடுவதில் **கடவுள்** மிகத்திறன் வாய்ந்தவராக இருக்கின்றார்.

*மினா: ஹஜ்ஜின் இறுதிச் சடங்குகள்*

203. *(மினாவில்)* ஒரு சில நாட்கள் நீங்கள் **கடவுள்**–ஐ நினைவு கூர்ந்திட வேண்டும்; இரண்டு நாட்களில் இதனைச் செய்ய விரைகின்ற எவரும் எந்தப் பாவமும் செய்து விடவில்லை, மேலும் நன்னெறியைப் பராமரித்துக் கொண்டிருக்கும் காலம் வரை, எவரேனும் நீடித்துத் தங்கினாலும், பாவம் எதுவும் செய்து விடவில்லை. நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும், மேலும் அவர் முன்னர் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதை அறிந்து கொள்ளவும் வேண்டும்.

*தோற்றங்கள் ஏமாற்றுவதாக இருக்கக் கூடும்*

204. மனிதர்களுக்கிடையில், இந்த வாழ்வைக் குறித்த தன்னுடைய வார்த்தைகளால் ஒருவன் உம்மைக் கவரக்கூடும், மேலும் அவன் மிகத் தீவிரமான எதிரியாக இருக்கின்ற அதே சமயம், தன்னுடைய உள்ளார்ந்த எண்ணங்களுக்குக் **கடவுள்**–ஐயே சாட்சியாக அழைக்கவும் கூடும்.

205. அவன் அப்பால் சென்றவுடன், சொத்துகளையும் உயிர்களையும் அழித்தவாறு, சீர்கெடுக்கும் விதமாக அவன் பூமியைச் சுற்றித் திரிகின்றான். **கடவுள்** சீர்கேட்டை விரும்புவதில்லை.

206. "**கடவுள்**–ஐக் கருத்தில் கொள்," என்று அவனுக்குக் கூறப்பட்டால், அவன் ஆணவத்துடன் கோபம் கொண்டவனாகி விடுகின்றான். அதன் விளைவாக, அவனுடைய ஒரே விதி நரகமேயாகும்; என்ன ஒரு துன்பகரமான தங்குமிடம்.

207. மேலும் **கடவுள்**–க்கு ஊழியம் செய்வதற்காக தங்களுடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்களும் இருக்கின்றனர்; இத்தகைய வழிபடுபவர்களின் பால் **கடவுள்** இரக்கம் மிக்கவராக இருக்கின்றார்.

208. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் முழுமையான சரணடைதலைத் தழுவிட வேண்டும்; சாத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள், ஏனெனில் அவன் உங்களுடைய மிகத் தீவிரமான விரோதியாக இருக்கின்றான்.

209. தெளிவான சான்றுகள் உங்களிடம் வந்து விட்ட தன் பின்னர், உங்கள் மார்க்கத்தை விட்டு நீங்கள் திரும்பி விடுவீர்களாயின், பின்னர் **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவராக இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

210. அடர்த்தியான மேகங்களில் வானவர்களுடன் சேர்ந்து **கடவுள்**–யே அவர்களிடம் வரும் வரை அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனரா ? இது நிகழும் போது, மொத்த விஷயமும் முடிக்கப்பட்டு விடும், மேலும் ஒவ்வொன்றும் **கடவுள்**–யிடமே திருப்பப்பட்டு விடும்.*

*அற்புதங்கள் மிகப்பெரும்*
*பொறுப்பினைக் கொண்டு வருகின்றன**

211. எத்தனை ஆழ்ந்த அற்புதங்களை அவர்களுக்கு நாம் காட்டினோம் என்று இஸ்ரவேலரின் சந்ததியினரைக் கேட்பீராக! **கடவுள்**–ஆல் தங்கள் மீது அருளப்பட்ட ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்பவர்களுக்கு, தண்டனையில் **கடவுள்**–மிகவும் கண்டிப்பானவர்.

**2:210* இந்த உலகம் ஒரு சோதனையாகும்; போலித் தெய்வ வழிபாட்டைக் கண்டனம் செய்வதன் மூலம் கடவுளின் சாம்ராஜ்யத்திற்குள் நம்மையே மீட்டுக் கொள்வதற்கு இது நம்முடைய கடைசி வாய்ப்பாக உள்ளது. (பார்க்க **அறிமுகவுரை**). கடவுளும் அவருடைய வானவர்களும் காட்சி அளித்துவிடுவார்களேயானால், ஒவ்வொருவரும் நம்பிக்கை கொண்டு விடுவார்கள், மேலும் அதன் பின்னரும் சோதனையானது செல்லத்தக்கதாக இருக்காது.*

**2:211* குர்ஆனின் கணிதக் குறியீடானது ஒரு மாபெரும் ஆசீர்வாதமாகும், மேலும் ஒரு மகத்தான பொறுப்பைத் தன்னுடன் கொண்டு வருகின்றது (தயவு செய்து 5:115ஐப் பார்க்கவும்).*

*குறுகிய பார்வை*

212. இந்த உலக வாழ்க்கை நம்பமறுப்பவர்களின் கண்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது, மேலும் அவர்கள் நம்பிக்கையாளர்களைப் பரிகசிக்கின்றனர், ஆயினும், உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் நன்னெறியாளர்கள் அவர்களை விட மிகவும் மேன்மையாக இருப்பார்கள். தான் நாடுகின்ற எவரையும் **கடவுள்** எல்லைகளின்றி ஆசீர்வதிக்கின்றார்.

*பெரு நாசமுண்டாக்கும் பொறாமை*

213. நற்செய்திகளைத் தாங்கியவர்களாகவும், அவ்வண்ணமே எச்சரிப்பவர்களாகவும் நபிமார்களைக் **கடவுள்** அனுப்பியபோது மக்கள் ஒரே சமுதாயத்தினராகவே இருந்து வந்தனர். மக்களுக்கிடையில் அவர்களுடைய சர்ச்சைகளில் தீர்ப்பளிப்பதற்காக, சத்தியத்தைத் தாங்கியதாக, வேதத்தை அவர்களுடன் அவர் இறக்கி அனுப்பினார். முரண் நகையாக, வேதத்தைப் பெற்றுக் கொண்டவர்கள்தான் தெளிவான சான்றுகள் அவர்களுக்குத் தரப்பட்ட பின்னரும், புதியதான எந்த வேதத்தையும் ஏற்கமறுப்பவர்களாக இருந்தனர். இது அவர்கள் பக்கமிருந்த பொறாமையின் காரணத்தினாலேயாகும். **கடவுள்** தன்னுடைய நாட்டத்திற்கேற்ப, மற்ற அனைவராலும் தர்க்கித்துக் கொள்ளப்பட்ட சத்தியத்தின்பால் நம்பிக்கை கொண்டவர்களை வழிநடத்துகின்றார். நேர்வழியை நாடுகின்ற எவரையும் **கடவுள்** வழி நடத்துகின்றார்.*

214. உங்களுக்கு முன்னிருந்தவர்கள் சோதிக்கப்பட்டதைப் போல அல்லாமல் சுவனத்தினுள் நுழைந்து விடலாம் என நீங்கள் எண்ணுகின்றீர்களா ? தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும், "**கடவுள்**–ன் வெற்றி எங்கே ?" என்று கூறுகின்ற வரை, அவர்கள் கஷ்டங்கள் மற்றும் துன்பங்களைக் கொண்டு சோதிக்கப்பட்டனர், மேலும் அலைக்கழிக்கப்பட்டனர். **கடவுள்**–ன் வெற்றி அருகிலேயே உள்ளது.

*தர்மத்தைப் பெறுபவர்கள்*

215. கொடுப்பதைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "நீங்கள் கொடுக்கின்ற தர்மம் பெற்றோர்கள், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், மற்றும் பிரயாணத்திலிருக்கின்ற அந்நியர்களைச் சென்றடைய வேண்டும்." நீங்கள் செய்கின்ற எந்த நன்மையாயினும், **கடவுள்** அது குறித்து முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*நம்பிக்கையாளர்கள்:*
*இறுதி வெற்றியாளர்கள்*

216. நீங்கள் அதனை வெறுத்த போதிலும், சண்டையிடுதல் உங்கள் மீது சுமத்தப்படலாம். ஆனால் உங்களுக்கு நல்லதாக இருக்கின்ற எதையேனும் நீங்கள் வெறுக்கக்கூடும், மேலும் உங்களுக்குக் கெட்டதாக இருக்கின்ற எதையேனும் நீங்கள் விரும்பவும் கூடும். **கடவுள்** அறிவார் அதே சமயம் நீங்கள் அறிய மாட்டீர்கள்.

*அடக்குமுறை கண்டனம் செய்யப்படுகின்றது*

217. புனித மாதங்களையும் அக்காலத்தில் சண்டையிடுவதையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "அக்காலத்தில் சண்டையிடுவது ஒரு புனித மீறலேயாகும். ஆயினும், **கடவுள்**–ன் பாதையிலிருந்து விரட்டுவது, மேலும் அவர் மீதும் புனிதப் பள்ளியின் புனிதத் தன்மையின் மீதும் நம்பிக்கை கொள்ள மறுப்பது, அதன் மக்களை வெளியேற்றுவது, ஆகியவை **கடவுள்**–ன் பார்வையில் மிகப் பெரும் புனித மீறல்களாகும். அடக்கு முறை கொலையையும் விட மோசமானது." அவர்களால் இயலுமாயின், உங்களுடைய மார்க்கத்திலிருந்து உங்களைத் திருப்பி விடுவதற்கு அவர்கள் எப்போதும் உங்களுடன் சண்டையிடுவார்கள். உங்களில் எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை விட்டுத் திரும்பி, மேலும் நம்பமறுப்பவர்களாகவே மரணித்து விடுகின்றார்களோ, அவர்கள் இவ்வாழ்விலும் மறுவுலகிலும் தங்களுடைய காரியங்களைப் பயனற்ற தாக்கிக் கொண்டு விட்டார்கள். இவர்கள்தான் நரகவாசிகளாவர், அதிலே அவர்கள் என்றென்றும் தங்கி இருப்பார்கள்.

218. நம்பிக்கை கொண்டவர்களும், ஊரைத் துறந்து **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுகின்றவர்களும், **கடவுள்**–ன் கருணைக்குத் தகுதியாகி விட்டனர். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

**2:213 அனைத்து மதங்களையும் சேர்ந்த, கடவுளை மட்டும் வழிபடுகின்றவர்கள் அனைவரும், உண்மையில் ஒற்றுமையாகவே உள்ளனர்.*

*போதையூட்டுபவையும் சூதாட்டமும் தடைசெய்யப்படுகின்றது**

219. போதையூட்டுபவை மற்றும் சூதாட்டம் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "அவற்றில் ஒரு பெரும்பாவமும், மக்களுக்குச் சில பயன்களும் உள்ளன. ஆனால் அவற்றின் பாவத்தன்மை அவற்றின் பயனின் எடையை அதிகமாக மிகைத்து விடுகின்றது." தர்மமாக எதனைக் கொடுப்பது என்றும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "எஞ்சியிருப்பவற்றை." **கடவுள்** இவ்விதமாக இவ்வெளிப்பாடுகளை உங்களுக்காக விவரிக்கின்றார், நீங்கள் சிந்திக்கும் பொருட்டு,

220. இந்த வாழ்க்கை மற்றும் மறுவுலகம் குறித்து. மேலும் அனாதைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "நன்னெறியாளர்களாக அவர்களை வளர்த்து வருவதே, அவர்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்ததாகும். அவர்களுடைய சொத்துகளை நீங்கள் உங்களுடையதுடன் கலந்து விட்டால், அவர்களை குடும்பத்தின் அங்கத்தினர்களாக நீங்கள் நடத்திட வேண்டும்." **கடவுள்** நன்னெறியாளர்களையும் தீயவர்களையும் அறிவார். **கடவுள்** நாடியிருந்தால், மிகவும் கடுமையான சட்டங்களை உங்கள் மீது அவர் சுமத்தியிருக்க இயலும். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*போலித்தெய்வ வழிபாடு செய்கின்றவர்களைத் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்*

221. போலித்தெய்வ வழிபாடு செய்கின்ற பெண்களை, அவர்கள் நம்பிக்கை கொண்டாலேயன்றித் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்; நம்பிக்கை கொண்ட ஒரு பெண் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருத்தியை விடவும் சிறந்தவளாவாள், நீங்கள் அவளை விரும்பினாலும் சரியே. அன்றி உங்கள் மகள்களை போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஆண்களுக்கு, அவர்கள் நம்பிக்கை கொண்டாலேயன்றித் திருமணம் செய்து கொடுக்க வேண்டாம். நம்பிக்கை கொண்ட ஒரு ஆண் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருவனை விடவும் சிறந்தவராவார், நீங்கள் அவனை விரும்பினாலும் சரியே. இவர்கள் நரகத்திற்கு அழைக்கின்றனர், அதே சமயம் **கடவுள்** தன் நாட்டப்படி சொர்க்கம் மற்றும் மன்னிப்பின் பால் அழைக்கின்றார். தன்னுடைய வெளிப்பாடுகளை மக்களுக்காக அவர் தெளிவுபடுத்துகின்றார், அவர்கள் கவனத்தில் எடுக்கும் பொருட்டு.

*மாதவிடாய்*

222. மாதவிடாயைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்: கூறுவீராக, "அது தீங்காகும்; மாத விடாய்க் காலத்தின் போது பெண்களுடன் நீங்கள் தாம்பத்ய உறவிலிருந்து விலகி கொள்ள வேண்டும்; அதனை விட்டு அவர்கள் விடுபடும் வரை அவர்களை நெருங்காதீர்கள். அவர்கள் அதிலிருந்து விடுபட்டவுடன், **கடவுள்**–ஆல் வடிவமைக்கப்பட்ட முறையில் அவர்களுடன் நீங்கள் தாம்பத்ய உறவு வைத்துக் கொள்ளலாம். பாவங்களுக்காக வருந்துபவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார், மேலும் அவர் தூய்மையாக இருப்பவர்களை நேசிக்கின்றார்."

223. உங்களுடைய பெண்கள் உங்களுடைய வித்தைச் சுமப்பவர்களாவார்கள். எனவே, நீங்கள் நன்னெறியைப் பராமரித்துக் கொண்டிருக்கின்ற காலம் வரை, நீங்கள் விரும்புகின்றவாறு, இந்தச் சிறப்புரிமையை நீங்கள் அனுபவிக்கலாம். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் அவரை நீங்கள் சந்திப்பீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி அளிப்பீராக.

*கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதீர்கள்*

224. நீங்கள் நன்னெறியாளராக, பக்திமானாகத் தோற்றமளிப்பதற்கோ, அல்லது மக்களிடையே நம்பகத் தன்மையை அடைவதற்கோ, உங்களுடைய சாதாரண சத்தியங்களில் **கடவுள்**–ன் பெயரை உட்படுத்தாதீர்கள். **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

225. சத்தியப் பிரமாணங்களின் வெறும் வார்த்தைகளுக்குக் **கடவுள்** உங்களைப் பொறுப்பாக ஆக்குவதில்லை; உங்களுடைய உள்ளார்ந்த நோக்கங்களுக்கு உங்களை அவர் பொறுப்பாக்குகின்றார். **கடவுள்** மன்னிப்பவர், கனிவானவர்.

*விவாகரத்தின் சட்டங்கள்*

226. தங்களுடைய மனைவியரை விவாகரத்துச் செய்யக் கருதுபவர்கள் *(சாந்தமடைவதற்காக)* நான்கு மாதங்கள் காத்திருக்க வேண்டும்; அவர்கள் தங்கள் மனங்களை மாற்றிக் கொண்டு சமரசம் செய்து கொண்டால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், கருணையாளர்.

227. அவர்கள் விவாகரத்துச் செய்து கொண்டு விட்டால், அப்போது **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

**2:219 மதுபானங்கள் மற்றும் சட்டவிரோதமான போதைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதால் கிடைக்கின்ற பொருளாதாரப் பயன்களானவை, சாலை விபத்தினால் ஏற்படும் மரணங்கள், மதுப்பழக்கமுள்ள தாய்மார்களுடைய குழந்தைகளின் மூளைப் பாதிப்புகள், குடும்பப் பிரச்சனைகள், மற்றும் பெரு நாசமுண்டாக்கும் மற்றப் பின் விளைவுகளைக் காட்டிலும் மேலானவை அல்ல என்பதை இவ்வுலகம் இப்போது அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றது. அதிக விபரங்களுக்கு மது மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து மீண்டவர்களின் அமைப்பு (AA) மற்றும் சூதாட்டத்திலிருந்து மீண்டவர்களின் அமைப்பு (GA) ஆகியவற்றில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். அத்துடன் **5:90–91** ஐயும் பார்க்கவும்.*

228. விவாகரத்துச் செய்யப்பட்டுவிட்ட பெண்கள் *(மற்றொரு ஆணை மணம் புரிவதற்கு முன்)* மூன்று மாத விடாய்கள் காத்திருக்க வேண்டும். அவர்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், அவர்களுடைய கருப்பைகளில் **கடவுள்** படைக்கின்றவற்றை மறைப்பது அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல. *(கர்ப்பம் தரித்திருக்குமாயின்)*, அவன் அவளை மீண்டும் மணம் செய்து கொள்ள விரும்பினால், கணவனின் விருப்பங்களின்படி மனைவியின் விருப்பங்கள் மாற்றியமைத்துக் கொள்ளப்பட வேண்டும். பெண்களுக்கு உரிமைகளும், அவ்வண்ணமே கடமைகளும், நீதமாக உண்டு. எனவே, *(கர்ப்பம் தரித்திருக்குமாயின்)* ஆணின் விருப்பங்களே மிகைத்து நிற்கும். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

229. விவாகரத்து இரண்டு முறைகள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படலாம். விவாகரத்துச் செய்யப்பட்ட பெண் இணக்கமாக அதே வீட்டில் வசிக்கவோ, அல்லது இணக்கமாக அதிலிருந்து பிரிந்து செல்லவோ அனுமதிக்கப்பட வேண்டும். அவன் அவளுக்குக் கொடுத்து விட்ட எந்த ஒன்றையும் திருப்பி எடுத்துக் கொள்வது கணவனுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல. ஆயினும், தம்பதியர் **கடவுள்**–ன் சட்டத்தை தாங்கள் வரம்புமீறிவிடக் கூடுமோ என்று அஞ்சக்கூடும். **கடவுள்**–ன் சட்டத்தை அவர்கள் வரம்புமீறி விடக் கூடும் என்ற அச்சமிருப்பின், மனைவியானவள் அவள் தேர்ந்தெடுக்கின்ற எதனையும் விருப்பத்துடன் திருப்பிக் கொடுத்து விட்டால் அவர்கள் எந்தத் தவறும் செய்துவிடவில்லை. இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும்; அவற்றில் வரம்புமீறாதீர்கள். **கடவுள்**–ன் சட்டங்களில் வரம்புமீறுகின்றவர்கள் அநியாயக்காரர்களாகவே இருக்கின்றனர்.

230. அவன் *(மூன்றாவது முறை)* அவளை விவாகரத்துச் செய்து விட்டால், அவள் மற்றொரு ஆணைத் திருமணம் செய்து, பின்னர் அவன் அவளை விவாகரத்துச் செய்தாலேயன்றி, அவளை மீண்டும் திருமணம் செய்து கொள்வது அவனுக்கு அனுமதிக்கப் பட்டதல்ல. **கடவுள்**–ன் சட்டங்களை அவர்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் காலம் வரை, முதல் கணவன் அதன் பின்னர் அவளை மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம். இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும்; அறிந்திருக்கின்ற மக்களுக்கு அவற்றை அவர் விவரிக்கின்றார்.

*விவாகரத்தான பெண்களை வீதிகளில் தள்ளப்பட்ட நிலைக்கு உள்ளாக்காதீர்கள்*

231. நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்தால், அவர்கள் தங்களுடைய தவணைக் காலத்தை *(மூன்று மாத விடாய்கள்)* பூர்த்தி செய்தவுடன், நீங்கள் அவர்களை அதே வீட்டில் இணக்கமாக வசிக்கவோ, அல்லது அவர்களை இணக்கமாகப் பிரிந்து செல்லவோ அனுமதிக்க வேண்டும். ஒரு பழிதீர்த்தலாக, அவர்களுடைய நாட்டத்திற்கு எதிராக அவர்களைத் தங்கியிருக்கும்படி நிர்ப்பந்திக்காதீர்கள். இதனைச் செய்கின்ற எவரொருவரும் தன் சொந்த ஆத்மாவிற்கே தீங்கிழைத்துக் கொள்கின்றார். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை மதிப்பற்றதென எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களையும், உங்களுக்கு உபதேசிப்பதற்காக வேதத்தையும் ஞானத்தையும் அவர் உங்களுக்கு இறக்கி அனுப்பினார் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் அனைத்து விஷயங்களையும் **கடவுள்** அறிந்திருக்கின்றார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

232. நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்து விட்டால், அவர்கள் தங்களுடைய தவணைக் காலத்தைப் பூர்த்தி செய்தபின், அவர்கள் இணக்கத்துடன் சமரசம் செய்து கொண்டால், அவர்களுடைய கணவர்களை மீண்டும் திருமணம் செய்வதை விட்டும் அவர்களைத் தடுக்காதீர்கள். உங்களில் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்களால் இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இதுவே உங்களுக்குத் தூய்மையானதாகவும் நன்னெறிமிக்கதாகவும் உள்ளது. **கடவுள்** அறிகின்றார், அதே சமயம் நீங்கள் அறியமாட்டீர்கள்.

233. விவாகரத்துச் செய்யப்பட்ட தாய்மார்கள் தங்களுடைய சிசுக்களுக்கு, அந்தத் தந்தை அவ்வாறு விரும்பினால் இரண்டு முழு வருடங்கள் பாலூட்ட வேண்டும். அந்தத் தந்தை அத்தாய்க்கு உணவு மற்றும் உடுப்புகளை நீதமாக வழங்க வேண்டும். எவரொருவரும் அவருடைய சக்திக்கு அப்பால் சுமை சுமத்தப்படாதிருக்க வேண்டும். எந்தத் தாயும் அவளுடைய சிசுவின் காரணமாகத் தீங்கிழைக்கப் படாதிருக்க வேண்டும், அன்றி அந்தத் தந்தையும் அவருடைய சிசுவின் காரணமாகத் தீங்கிழைக்கப் படாதிருக்க வேண்டும். *(அத்தந்தை இறந்து விட்டால்)*, அவருடைய வாரிசுதாரர் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். உரிய கலந்தாலோசனைக்குப் பின்னர், அச்சிசுவின் பெற்றோர் பரஸ்பரம் பிரிந்து விட ஒப்புக்கொண்டால், அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. நியாயமானதை நீங்கள் அவர்களுக்குச் செலுத்தி விடும் வரை, செவிலித் தாய்களை பணிக்கமர்த்திக் கொள்வதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

*திருமணத்திற்கு முந்திய தவணைக் காலங்களை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும்*

234. எவர்கள் தங்கள் மனைவியரை விட்டு விட்டு இறந்து விடுகின்றனரோ, அவர்களுடைய விதவையர் *(மறுமணம் புரிவதற்கு முன்னர்)* நான்கு மாதங்களும் பத்து நாட்களும் காத்திருக்க வேண்டும். அவர்களுடைய தவணைக் காலத்தை அவர்கள் பூர்த்தி செய்தவுடன், அவர்கள் செய்யவிரும்புகின்ற நன்னெறியான விஷயங்கள் எதுவாயினும் அவர்களைச் செய்ய அனுமதிப்பதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

235. அப்பெண்களிடம் உங்களுடைய திருமண ஒப்பந்தத்தை அறிவிப்பதன் மூலமாகவோ, அல்லது அதனை இரகசியமாக வைத்துக் கொள்வதனாலோ நீங்கள் எந்தப் பாவமும் செய்து விடவில்லை. அவர்களைப் பற்றி நீங்கள் நினைப்பீர்கள் என்பதைக் **கடவுள்** அறிவார். விவாதிப்பதற்கு நன்னெறியான ஏதேனும் இருந்தாலன்றி, இரகசியமாக அவர்களைச் சந்திக்காதீர்கள். அவர்களுடைய தவணைக் காலம் பூர்த்தியாகின்ற வரை திருமணத்தை நிறைவேற்றாதீர்கள். உங்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களைக் **கடவுள்** அறிவார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும், மேலும் அவரைக் கருத்தில் கொள்ளுங்கள். **கடவுள்** மன்னிப்பவர், கனிவானவர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

*திருமண ஒப்பந்தத்தை முறித்தல்*

236. பெண்களாகிய அவர்களைத் தீண்டுவதற்கு முன்னரோ, அல்லது அவர்களுக்குரிய சீதனத்தை நிர்ணயிப்பதற்கு முன்னரோ விவாகரத்துச் செய்து விடுவதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. இந்த நிலையில், அவர்களுக்கு நீங்கள் நஷ்ட ஈடு செய்ய வேண்டும்–செல்வந்தன் அவனால் செலவு செய்ய இயன்ற அளவும் ஏழை அவனால் செலவு செய்ய இயன்ற அளவும் – ஒரு நியாயமான நஷ்டஈடு, நன்னெறியாளர்கள் மீது இது ஒரு கடமையாகும்.

237. அவர்களைத் தீண்டுவதற்கு முன்னர், ஆனால் அவர்களுக்குரிய சீதனத்தை நீங்கள் நிர்ணயித்து விட்ட பின்னர் அவர்களை நீங்கள் விவாகரத்துச் செய்வீர்களாயின், அவர்கள் தாமாகவே முன்வந்து அவர்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்தாலோ, அல்லது விவாகரத்தின் காரணத்திற்குப் பொறுப்பானவர்கள் சீதனத்தை விட்டுக்கொடுக்கத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலோ அன்றி, நஷ்ட ஈடானது சீதனத்தில் பாதியாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுப்பதே நன்னெறிக்கு மிகவும் நெருக்கமானதாகும். உங்களுக்கிடையில் இணக்கமான உறவு முறைகளை நீங்கள் பராமரித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

*நீங்கள் தொடர்புத் தொழுகைகளை கடைப்பிடிக்க வேண்டும்**

238. நீங்கள் தொடர்புத் தொழுகைகளை நியமமாகக் கடைப்பிடிக்க வேண்டும், குறிப்பாக நடுத்தொழுகையை, மேலும் உங்களையே முற்றிலுமாகக் **கடவுள்**–க்கு அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

239. அசாதாரண சூழ்நிலைகளில், நடந்து கொண்டோ அல்லது சவாரி செய்கின்ற நிலையிலோ நீங்கள் தொழுது கொள்ளலாம். நீங்கள் பாதுகாப்பாகி விட்டவுடன், நீங்கள் ஒருபோதும் அறிந்திராதவற்றை அவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தவாறு நீங்கள் **கடவுள்**–ஐ நினைவு கூர்ந்திட வேண்டும்.

*விதவைகளுக்கும் விவாகரத்தான பெண்களுக்கும் உரிய ஜீவனாம்சம்*

240. தங்களுடைய மனைவியரை விட்டு விட்டு இறந்து விடுகின்றவர்கள், அவர்களுடைய மனைவியருக்கு அவர்கள் அதே இல்லங்களுக்குள் தங்கியிருக்கும் பட்சத்தில், ஒரு வருடத்திற்குரிய வாழ்வாதாரங்களுக்கு உயில் ஒன்றை வழங்க வேண்டும். அவர்கள் விலகிச் சென்று விட்டால், நன்னெறியானது காப்பாற்றப்படுகின்றவரை, அவர்கள் விரும்புகின்ற எதனையும் செய்ய அவர்களை அனுமதிப்பதன் மூலம் நீங்கள் எந்தப் பாவமும் செய்து விடவில்லை. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

241. விவாகரத்தான பெண்களுக்கும் கூட, நியாயமாக, தேவையானது வழங்கப்படவேண்டும். இது நன்னெறியாளர்கள் மீதான ஒரு கடமையாகும்.

242. **கடவுள்** இவ்விதமாகத் தன் வெளிப்பாடுகளை உங்களுக்கு விவரிக்கின்றார், நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு.

*கடவுளின் நிமித்தம் பாடுபடுதல்*

243. மரணத்திற்கு அஞ்சி – அவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்த போதிலும் – தங்களுடைய வீடுகளை விட்டு விரண்டோடியவர்களை நீர் கவனித்தீரா ? **கடவுள்** அவர்களிடம் கூறினார், "இறந்து விடுங்கள்" பின்னர் அவர்களை மீண்டும் உயிர்ப்பித்தார். **கடவுள்** மனிதர்கள் மீது தன்னுடைய அருளைப் பொழிகின்றார், ஆனால் பெரும்பான்மையான மனிதர்கள் நன்றியற்றவர்களாக இருக்கின்றனர்.

**2:238 ஐந்து தொழுகைகள் அனைத்தும் 2:238,11:114,17:78,24:58ல் காணப்படுகின்றன. குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட பொழுது, (ஸலாத்) தொடர்புத் தொழுகைகள் ஏற்கெனவே வழக்கத்தில் இருந்து வந்துள்ளன (பின் இணைப்பு9). ஐந்து தொழுகைகள் அனைத்திற்குமான அம்சங்கள் – என்ன ஓதுவது மற்றும் ஒவ்வொரு தொழுகைக்குமான தொகுதிகளின் (ரக்அத்துகள்) எண்ணிக்கைகள், போன்றவை – கணித ரீதியில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. உதாரணத்திற்கு, ஐந்து தொழுகைகள் ஒவ்வொன்றிற்குமான தொகுதிகளின் எண்ணிக்கையை, ஒன்றை அடுத்து மற்றொன்றாக, எழுதிப் பார்க்கையில் நமக்குக் கிடைப்பது 24434, 19x1286. அத்துடன் (அல்–ஃபாத்திஹஹ்), சூரா 1ஐக் குறிக்க [*] எனும் இக்குறியீட்டை நாம் பயன்படுத்தினால், இங்கே [*] = சூராவின் எண் (1), தொடர்ந்து வசனங்களின் எண்ணிக்கை (7), அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வசனத்தின் எண், ஒவ்வொரு வசனத்தில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை, மேலும் ஒவ்வொரு எழுத்தினுடைய எழுத்தெண் மதிப்பு ஆகியவையாகும். இப்போது நாம் 2 [*] [*] 4 [*] [*] [*] [*] 4 [*] [*] [*] [*] 3 [*] [*] [*] 4 [*] [*] [*] [*] என எழுதிப் பார்க்கையில் அது 19ன் பெருக்குத் தொகையைக் கொடுக்கின்றது (பார்க்க 1:1).*

244. நீங்கள் **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிட வேண்டும், மேலும் **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

245. பன்மடங்காகப் பெருக்கப்பட்டு அதனை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக, நன்னெறியெனும் ஒரு கடனைக் **கடவுள்**–க்குக் கடனளிக்க விரும்புகின்றவர் யார் ? **கடவுள்**தான் வழங்குகின்றவராகவும் நிறுத்திக் கொள்பவராகவும் இருக்கின்றார், மேலும் நீங்கள் அவரிடமே திருப்பப்படுவீர்கள்.

*சவுல்**

246. மோஸஸுக்குப் பின்னர் இஸ்ரவேலர்களின் தலைவர்களை நீர் கவனித்தீரா ? அவர்கள் தங்களுடைய நபியிடம் கூறினர், "எங்களை வழிநடத்த ஓர் அரசரை நீர் நியமித்தால், நாங்கள் **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிடுவோம்." அவர் கூறினார், "சண்டையிடுதல் உங்களுக்கு விதிக்கப்பட்டால், நீங்கள் சண்டையிடக் கூடாது என்பது உங்களுடைய நோக்கமா ?" அவர்கள் கூறினர், "எங்களுடைய வீடுகளையும் எங்களுடைய குழந்தைகளையும் இழந்து விட்டவர்களாக நாங்கள் ஆன பொழுதும், நாங்கள் ஏன் **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிடாதிருக்க வேண்டும் ?" இருப்பினும், சண்டையிடுதல் அவர்களுக்கு விதிக்கப்பெற்ற பொழுது, ஒரு சிலரைத் தவிர, அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர். வரம்புமீறுகின்றவர்களைக் **கடவுள்** அறிந்தவராக இருக்கின்றார்.

*கடவுளின் ஞானத்தைச் சந்தேகித்தல்*

247. அவர்களுடைய நபி, அவர்களிடம் கூறினார், "உங்களுடைய அரசராக இருப்பதற்காகக் **கடவுள்** தாலூத்தை (சவுல்) நியமித்துள்ளார்." அவர்கள் கூறினர்," அவரை விடவும் அரசுரிமைக்கு அதிகத் தகுதியுடையவர்களாக நாங்கள் இருக்கும்போது, எங்கள் மீது அரசுரிமையுடையவராக எவ்வாறு அவர் இருக்க இயலும்; அவர் செல்வந்தராகக் கூட இல்லையே ?" அவர் கூறினார், "உங்களுக்கும் மேலாகக் **கடவுள்** அவரைத் தேர்ந்தெடுத்துள்ளார், மேலும் அறிவிலும் உடலுறுதியிலும் ஓர் அபரிமிதமானதைக் கொண்டு அவரை ஆசீர்வதித்துள்ளார்." தான் நாடுகின்ற எவருக்கும் தன்னுடைய அரசுரிமையைக் **கடவுள்** அளிக்கின்றார். **கடவுள்** கொடையளிப்பவர், சர்வமும் அறிந்தவர்.

*உடன்படிக்கைப் பேழை*

248. அவர்களுடைய நபி அவர்களிடம் கூறினார், "அவருடைய அரசுரிமைக்கு அத்தாட்சியாவது, உங்கள் இரட்சகரிடமிருந்து நம்பிக்கையூட்டலையும், மேலும் மோஸஸின் சமூகத்தார் மற்றும் ஆரோனின் சமூகத்தாரால் விட்டுச் செல்லப்பட்ட பொருட்களையும் கொண்டு வருகின்ற, உடன்படிக்கைப் பேழை உங்களிடம் மீட்டுக் கொண்டு வரப்படும். அது வானவர்களால் சுமந்துவரப்படும். நீங்கள் உண்மையிலேயே நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், உங்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றதோர் அத்தாட்சியாக இது இருக்க வேண்டும்."

*டேவிட்டும் கோலியாத்தும்*

249. படைகளின் கட்டுப்பாட்டை சவுல் எடுத்துக் கொண்ட போது, அவர் கூறினார், "ஓர் ஆற்றின் மூலமாகக் **கடவுள்** உங்களைச் சோதனையில் ஆழ்த்தி உள்ளார். அதிலிருந்து அருந்துகின்றவர் எவரும் என்னைச் சேர்ந்தவர் அல்லர் – அதனைச் சுவைக்காதவர்கள் மட்டுமே என்னைச் சேர்ந்தவர்களாவர் – அது ஒரே ஒரு மிடறாக இருந்தாலே தவிர." அவர்களில் ஒரு சிலரைத் தவிர, அவர்கள் அதிலிருந்து அருந்தினர். நம்பிக்கை கொண்டவர்களுடன் அவர் அதனைக் கடந்த போது, அவர்கள் கூறினர், "கோலியாத்தையும் அவனுடைய படையினரையும் எதிர்கொள்வதற்குரிய வலிமையை இப்போது நாங்கள் இழந்து விட்டோம்." **கடவுள்**–ஐச் சந்திப்போம் எனும் உணர்வுடன் இருந்தவர்கள் கூறினர், "எத்தனையோ ஒரு சிறிய சேனை **கடவுள்**–ன் அனுமதியுடன் பெரியதொரு சேனையைத் தோற்கடித்துள்ளன. உறுதிப்பாட்டோடு தளராதிருப்பவர்களுடன் **கடவுள்** இருக்கின்றார்."

250. கோலியாத்தையும் அவனுடைய படையினரையும் அவர்கள் எதிர்கொண்ட போது, அவர்கள் பிரார்த்தித்தனர், "எங்கள் இரட்சகரே, எங்களுக்கு உறுதிப்பாட்டை அளிப்பீராக, எங்களுடைய பாதங்களைப் பலப்படுத்துவீராக, மேலும் நம்பமறுக்கின்ற மக்களுக்கு எதிராக எங்களுக்கு ஆதரவளிப்பீராக."

251. அவர்கள் **கடவுள்**–ன் அனுமதியுடன் அவர்களைத் தோற்கடித்தனர், மேலும் டேவிட் கோலியாத்தைக் கொன்றார். **கடவுள்** அவருக்கு அரசுரிமையையும் ஞானத்தையும் கொடுத்தார், மேலும் தான் நாடியவாறு அவருக்குக் கற்றுக் கொடுத்தார். மற்றவர்களுக்கு எதிராக சில மக்களுக்கு **கடவுள்**–ன் ஆதரவானது இல்லாது இருந்திருந்தால், பூமியில் கலவரமே நிலவி இருந்திருக்கும். ஆனால் மக்கள் மீது **கடவுள்** தன் அருளைப் பொழிகின்றார்.

**2:246 இதே இந்த வரலாறு பைபிளின் சாமுவேலுடைய புத்தகம் 1, அத்தியாயம் 9 மற்றும் 10ல் விவரிக்கப்படுகின்றது.*

252. இவை **கடவுள்**–ன் வெளிப்பாடுகளாகும். அவற்றை நாம் சத்தியத்துடன், உம் மூலமாக* எடுத்துரைக்கின்றோம், ஏனெனில் நீர் தூதர்களில் ஒருவராக இருக்கின்றீர்.

*தூதர்கள் பலர் / தூதுச் செய்தி ஒன்று*

253. இந்தத்தூதர்கள்; அவர்களில் சிலரை மற்றவர்களை விட அதிகமாக ஆசீர்வதித்தோம். உதாரணத்திற்கு, ஒருவரிடம் **கடவுள்** பேசினார், மேலும் அவர்களில் சிலரை மிக உயர்ந்த அந்தஸ்துகளுக்கு நாம் உயர்த்தினோம். மேலும் மேரியின் மகனான, ஜீஸஸுக்கு ஆழ்ந்த அற்புதங்களை நாம் கொடுத்தோம், மேலும் பரிசுத்த ஆவியைக் கொண்டு அவருக்கு ஆதரவளித்தோம். **கடவுள்** நாடியிருந்தால், தெளிவான சான்றுகள் அவர்களிடம் வந்ததன் பின்னர், அவர்களைப் பின்பற்றியவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு இருந்திருக்க மாட்டார்கள். மாறாக, அவர்கள் தங்களுக்கிடையில் தர்க்கித்துக் கொண்டனர்; அவர்களில் சிலர் நம்பிக்கை கொண்டனர், மேலும் சிலர் நம்பமறுத்தனர். **கடவுள்** நாடியிருந்தால், அவர்கள் சண்டையிட்டு இருந்திருக்க மாட்டார்கள். ஒவ்வொன்றும் **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பவே உள்ளது.

*சிபாரிசு கிடையாது**

254. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், எந்த வியாபாரமும், எந்த உறவு முறைச் சலுகைகளும், எந்தச் சிபாரிசும் இல்லாத ஒரு நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்குக் கொடுத்திருக்கின்ற வாழ்வாதாரங்களில் இருந்து நீங்கள் தர்மம் கொடுக்க வேண்டும். நம்பமறுப்பவர்கள் அநியாயக்காரர்களாகவே இருக்கின்றனர்.

255. **கடவுள்:** அவருடன் வேறு எந்தத் தெய்வமும் இல்லை, ஜீவித்திருப்பவர், நிரந்தரமானவர். ஒருக்கணமும் அறியாமையோ அல்லது தூக்கமோ அவரை ஒருபோதும் ஆட்கொள்ளாது. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை. அவருடைய நாட்டத்திற்கொப்பவே தவிர, அவரிடம் பரிந்துரைக்க எவரால் இயலும்? அவர்களின் கடந்த காலத்தையும் அவர்களின் எதிர்காலத்தையும் அவர் அறிந்திருக்கின்றார். அவருடைய நாட்டத்தின்படியே தவிர, எவர் ஒருவரும் எந்த அறிவையும் அடைவதில்லை. அவருடைய சாம்ராஜ்யம் வானங்களையும் பூமியையும் சூழ்ந்திருக்கின்றது, மேலும் அவற்றை ஆள்வது அவருக்கு ஒருபோதும் சுமையானதல்ல. அவர் மிகவும் உயர்ந்தவர், மகத்தானவர்.

*மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை*

256. மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாதிருக்க வேண்டும்: தவறான வழியிலிருந்து சரியான வழியானது இப்பொழுது தெளிவாகப் பிரிந்துள்ளது. சாத்தானைப் பழித்துரைத்து மேலும் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்ற எவரும் மிகவும் உறுதியான பிடிமானத்தைப் பற்றிக் கொண்டு விட்டார்; ஒருபோதும் உடைந்திடாத ஒன்று. **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

257. நம்பிக்கை கொண்டவர்களின் இரட்சகராகக் **கடவுள்** உள்ளார்; அவர்களை இருள்களில் இருந்து வெளியேற்றி ஒளியினுள் அவர் வழி நடத்துகின்றார். நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய போலித் தெய்வங்களே அவர்களுடைய இரட்சகர்களாக உள்ளனர்; அவர்களை ஒளியிலிருந்து வெளியேற்றி இருள்களுக்குள் அவர்கள் வழி நடத்துகின்றனர் – இவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள்; அவர்கள் அதனுள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

*ஆப்ரஹாமின் துணிச்சலான விவாதம்*

258. **கடவுள்** அவனுக்கு அரசுரிமையைத் தந்திருந்த போதும், ஆப்ரஹாமிடம் அவருடைய இரட்சகரைப் பற்றி வாதித்த அந்த ஒருவனை நீர் கவனித்தீரா? ஆப்ரஹாம் கூறினார், "என் இரட்சகர் வாழ்வையும், மரணத்தையும் அளிக்கின்றார்." அவன் கூறினான், "நான் வாழ்வையும் மரணத்தையும் வழங்குகின்றேன்." ஆப்ரஹாம் கூறினார், "**கடவுள்** சூரியனைக் கிழக்கிலிருந்து கொண்டு வருகின்றார், அதனை மேற்கிலிருந்து கொண்டு வர உன்னால் இயலுமா?" அந்த நம்பமறுப்பவன் திகைத்துப் போனான். **கடவுள்** தீயவர்களை வழிநடத்துவதில்லை.

---

**2:252* குர்ஆனுடைய கணிதக் கட்டமைப்புக்கு ஏற்றவாறு இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற தூதரின் பெயர் கணித ரீதியிலேயே எழுதிக் காட்டப்பட வேண்டுமென்று கடவுள் நாடியுள்ளார். குர்ஆனின் அற்புதமயமான 19ன் அடிப்படை யிலான குறியீட்டின் கண்டுபிடிப்பு கடவுளின் உடன்படிக்கைத் தூதருக்கென்று தெய்வீகமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த வசன எண்ணுடன் (252) "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்பையும் (505), "கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பையும் (725) கூட்டுவதன் மூலம் நமக்குக் கிடைப்பது 252+505+725=1482, அல்லது 19x78. கடவுளின் உடன்படிக்கைத் தூதர் யார், இந்த வசனம் எவரைத் தெளிவாகக் குறிக்கின்றது என்பது தொடர்பான முழுமையான விபரங்களுக்கு பின் இணைப்புகள் 2 மற்றும் 26ஐ தயவு செய்து பார்க்கவும்.*

**2:254* ஜீஸஸ் மற்றும் முஹம்மத் போன்ற சக்தியெதுவுமற்ற மானிட போலித் தெய்வங்களுக்கு பரிந்துரைக்கும் சக்தி உண்டென்று இட்டுக்கட்டுவது சாத்தானின் சாதுர்யமான யுக்திகளில் ஒன்றாகும்.(பின் இணைப்பு 8).*

*மரணம் குறித்த படிப்பினை**

259. பாழடைந்த ஒரு நகரத்தைக் கடந்தவாறு வியந்த அந்த ஒருவரை எண்ணிப்பார்ப்பீராக, "இது இறந்து விட்ட பின்னர் எவ்வாறு **கடவுள்** இதனை உயிர்ப் பிக்க இயலும் ?" **கடவுள்** பின்னர் அவரை ஒரு நூறு வருடங்கள் மரணத்தில் ஆழ்த்தினார், பின்னர் அவரை உயிர்ப்பித்தெழுப்பினார். அவர் கூறினார்," எத்தனை காலம் நீர் இங்கே தங்கியிருந்தீர் ?" அவர் கூறினார், "நான் ஒரு நாளோ, அல்லது நாளின் ஒரு பகுதியோ இங்கே இருந்தேன்." அவர் கூறினார், "அல்ல ! நீர் இங்கே ஒரு நூறு வருடங்கள் இருந்தீர். ஆயினும், உம்முடைய உணவையும் பானத்தையும் நோக்குவீராக; அவை கெட்டுப் போய் விடவில்லை. உம்முடைய கழுதையை நோக்குவீராக – இவ்வித மாக நாம் உம்மை மக்களுக்கு ஒரு படிப்பினையாக ஆக்குகின்றோம். இப்போது, அதன் எலும்புகளை எவ்வாறு நாம் கட்டமைக்கின்றோம், பின்னர் தசை களால் அவற்றை மூடுகின்றோம் எனக் கவனிப்பீ ராக" நிகழ்ந்தது என்ன என்பதை அவர் உணர்ந்து கொண்ட போது, அவர் கூறினார், "**கடவுள்** சர்வ சக்தியுடையவர் என்பதை இப்போது நான் அறிந்து கொண்டேன்."

*ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும்*
*உறுதிப்படுத்துதல் தேவைப்படுகின்றது*

260. ஆப்ரஹாம் கூறினார், "என் இரட்சகரே, இறந்தவற் றை எவ்வாறு நீர் உயிர்ப்பிக்கின்றீர் என்பதை எனக் குக் காட்டுவீராக." அவர் கூறினார், "நீர் நம்பிக்கை கொள்ளவில்லையா ?" அவர் கூறினார், "ஆம், எனி னும் என் இதயத்தை நான் மறு உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்." அவர் கூறினார், "நான்கு பறவைகளை எடுத்துக் கொண்டு, அவற்றின் அடை யாளங்களை நன்கு கவனித்துக் கொண்டு, ஒவ் வொரு பறவையின் ஒரு துண்டை ஒரு குன்றின் மீது வைத்து விட்டு, பின்னர் அவற்றை உம்மிடம் அழைப் பீராக. அவை ஒரே பாய்ச்சலில் உம்மிடம் வந்து விடும். **கடவுள்** எல்லாம் வல்ல வர், ஞானம் மிகுந்தவர் என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டும்."

*மிகச்சிறந்த முதலீடு*

261. **கடவுள்**–ன் நிமித்தம் தங்களுடைய பணங்களைச் செலவிடுபவர்களுக்குரிய உதாரணமாவது ஒவ் வொரு கதிரிலும் ஒரு நூறு தானியங்களைக் கொண்ட, ஏழு கதிர்களை முளைப்பிக்கின்ற ஒரு விதையைப் போன்றதாகும். தான் நாடுகின்ற எவருக் கும் **கடவுள்** இதனைப் பன்மடங்காகப் பெருக்கு கின்றார். **கடவுள்** கொடையளிப்பவர், அறிந்தவர்.

262. **கடவுள்**–ன் நிமித்தம் தங்களுடைய பணத்தை செ லவு செய்து, பின்னர் அவமதிப்போ அல்லது தீங்கோ கொண்டு தங்களுடைய தர்மத்தை தொடராதிருப்ப வர்கள், அவர்களுடைய பிரதி பலனைத் தங்களு டைய இரட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள்; அவர்கள் அச்சம் கொள்ள எதுவுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

263. அவமதிப்பைக் கொண்டு தொடரப்படுகின்ற ஒரு தர் மத்தைவிடவும் கனிவான சொற்களும் அனுதாபமும் மேலானதாகும். **கடவுள்** செல்வந்தர், கனிவானவர்.

264. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பமறுக்கின்ற அதே சம யம், காட்டிக்கொள்வதற்காக, தன்னுடைய பணத்தைச் செலவிடுகின்ற ஒருவனைப் போல், நிந்தித்தல் மற் றும் அவமதித்தலால் துன்புறுத்துவதன் மூலம் உங்க ளுடைய தர்மங்களைப் பயனற்ற தாக்கிக் கொள்ளா தீர்கள். அவனுடைய உதாரணமாவது மெல்லிய தொரு மண்படலத்தால் மூடப்பட்டிருக்கின்ற ஒரு பாறை போன்றதாகும்; கனத்த மழை விழுந்தவுடன், அது அம் மண்ணைக் கழுவித் தள்ளி, அதனைப் பயனற்றதொரு பாறையாக விட்டு விடுகின்றது. அவர் கள் தங்களுடைய கடின முயற்சியிலிருந்து எந்த ஒரு பலனையும் அடைவதில்லை. நம்பமறுக்கின்ற மக்க ளைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

*தர்மம்*

265. உளமார்ந்த உறுதியான நம்பிக்கையின் வெளிப்பா டாக, **கடவுள்**–ன் திருப்தியைத் தேடியவாறு தங்களு டைய பணத்தைக் கொடுப்பவர்களுக்கு உதாரணம், மலைப்பாங்கான வளமிக்க மண்ணின் மீதுள்ள ஒரு தோட்டமாகும்; கனத்த மழை பெய்யும் பொழுது, அது இரு மடங்கிற்கும் அதிகமான விளைச்சலைத் தரு கின்றது. கனமழை கிட்டா விட்டாலும், ஒரு தூறலே போதுமானதாகும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன் றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

266. உங்களில் எவரேனும் பாயும் ஆறுகளும் தாராள மான விளைச்சலும் கொண்ட, பேரீத்த மரங்கள் மற் றும் திராட்சைகளால் ஆன ஒரு தோட்டத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்து, பின்னர், அவர் கிழவ ராகிக் கொண்டிருக்கையில், அத்துடன் அவருடைய பிள்ளைகள் இன்னமும் அவரைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற அதே சமயம், நெருப்பினாலானதொரு பேரழிவு தாக்கி அவருடைய தோட்டம் எரிந்து போய் விடுவதை விரும்புவீர்களா ? **கடவுள்** இவ்விதமாக இந்த வெளிப்பாடுகளை உங்களுக்குத் தெளிவுபடுத் துகின்றார், நீங்கள் சிந்திக்கும் பொருட்டு.

**2:259 இங்கே நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினை என்னவென்றால் மரணத்தின் கால அளவானது ஒரு நாளைப் போல கடந்து சென்று விடும் என்பதேயாகும். நன்னெறியற்றவர்கள் மட்டுமே மரணிக்கின்றனர்; நன்னெறியாளர்கள் நேராகச் சுவனத்திற்குச் செல்கின்றனர் (பார்க்க 18:19–25 மற்றும் பின் இணைப்பு 17).*

*எதனைக் கொடுப்பது*

**267.** நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங் கள் சம்பாதிக்கின்ற நல்ல பொருள்களிலிருந்தும், மே லும் பூமியிலிருந்து உங்களுக்காக நாம் விளைவித் தவற்றில் இருந்தும் நீங்கள் தர்மத்திற்கெனக் கொ டுக்க வேண்டும். உங்களுடைய கண்களை மூடிக் கொண்டேயன்றி நீங்களே கூட அதனை ஏற்றுக் கொள்ளாத பொழுது, கொடுத்து விடுவதற்காக அவற்றிலிருந்து கெட்டவற்றை பொறுக்கி எடுக்காதீர் கள். **கடவுள்** செல்வந்தர், புகழுக்குத் தகுதியானவர் என்பதை நீங்கள்அறிந்து கொள்ள வேண்டும்.

**268.** வறுமையை உங்களுக்கு வாக்களித்து தீமை புரியு மாறு சாத்தான் உங்களுக்குக் கட்டளையிடுகின் றான், அதே சமயம் **கடவுள்** தன்னிடமிருந்து மன்னிப் பையும் அருளையும் வாக்களிக்கின்றார். **கடவுள்** கொடைஅளிப்பவர், சர்வமும் அறிந்தவர்.

*ஞானம்: ஒரு மாபெரும் பொக்கிஷம்*

**269.** தான் தேர்ந்தெடுக்கின்ற எவர் மீதும் அவர் ஞானத் தை அருள்கின்றார், மேலும் ஞானத்தை அடைகின்ற எவரும், ஒரு மாபெரும் அருட்கொடையை அடைந்து விட்டார். அறிவுத்திறன் உடையவர்கள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

*அனாமதேயமான தர்மமே சிறந்தது*

**270.** நீங்கள் கொடுக்கின்ற எந்தத் தர்மமோ, அல்லது நிறைவேற்றுகின்ற தானத்திற்கான ஒரு நேர்ச்சை யோ, **கடவுள்** அதனைப்பற்றி முற்றிலும் அறிந்திருக் கின்றார், தீயவர்களைப் பொறுத்த வரை, அவர் களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார் கள்.

**271.** உங்களுடைய தர்மங்களை நீங்கள் அறிவித்தால், அப்பொழுதும் அவை நல்லவையாகவே இருக்கின் றன. ஆனால் நீங்கள் அவற்றை அனாமதேயமாக வைத்து, ஏழைகளுக்குக் அவற்றைக் கொடுத்தால், அது உங்களுக்குச் சிறந்ததாக உள்ளது, மேலும் உங் களுடைய பாவங்களில் அதிகமானவற்றை நீக்குகின் றது. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

*வழிநடத்துபவராக இருக்கின்ற*
*ஒரே ஒருவர் கடவுள்தான்*

**272.** எவரொருவரையும் வழிநடத்துவதற்கு நீர் பொறுப் பாக மாட்டீர். *(வழிநடத்தப்பட்டவராக இருப்பதைத்)* தேர்ந்தெடுக்கின்ற எவரையும் வழிநடத்துகின்ற ஒரே ஒருவராக **கடவுள்**தான் இருக்கின்றார். நீங்கள் கொ டுக்கின்ற எந்தத் தர்மமும் உங்களுடைய சொந்த நலனுக்காகவே ஆகும். நீங்கள் கொடுக்கின்ற எந்தத் தர்மமும் **கடவுள்**–க்காகவே இருத்தல் வேண்டும். நீங்கள் கொடுக்கின்ற எந்தத் தர்மமும் சிறிதளவும் அநீதியின்றி, உங்களுக்குத் திருப்பித் தரப்படும்.

**273.** **கடவுள்**–ன் நிமித்தம் கஷ்டப்பட்டுக் கொண்டு, மேலும் புலம் பெயர இயலாத ஏழைகளுக்கு தர்மம் சென்று சேர வேண்டும். அவர்களுடைய கண்ணியத் தின் காரணமாக, அறியாதவர்கள் அவர்களைச் செல் வந்தர்கள் என்று நினைக்கக் கூடும். ஆனால் சில அறிகுறிகளைக் கொண்டு அவர்களை நீங்கள் அடை யாளம் காண இயலும்; அவர்கள் ஒருபோதும் மக்களி டம் வலிந்து யாசிக்க மாட்டார்கள். நீங்கள் கொடுக் கின்ற தர்மம் எதுவாயினும், **கடவுள்** அது குறித்து முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

**274.** இரவும் பகலும், இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தர்மத்திற்கெனக் கொடுப்பவர்கள், தங்களுடைய பிரதிபலனை தங்கள் இரட்சகரிடமிருந்து பெறுகின் றனர்; அவர்கள் அச்சம் கொள்ள எதுவும் இருக்காது, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

*அநியாய வட்டி தடுக்கப்படுகின்றது**

**275.** அநியாய வட்டி வசூலிக்கின்றவர்கள் சாத்தானின் வசீகரத்தால் கட்டுப்படுத்தப்பட்டவர்களைப் போன்ற அதே நிலையில் இருக்கின்றனர். இதன் காரணமா வது அநியாய வட்டியும் வணிகத்தைப் போன்றதேயா கும் என்று அவர்கள் கோருவதேயாகும். ஆயினும், **கடவுள்** வணிகத்தை அனுமதிக்கின்றார், ஆனால் அநியாய வட்டியைத் தடை செய்கின்றார். எனவே, எவரெல்லாம் தன் இரட்சகரிடமிருந்துள்ள இந்தக் கட்டளையைக் கவனத்தில் கொண்டு, அநியாய வட்டி யிலிருந்து விலகிக் கொள்கின்றாரோ, அவர் தன்னு டைய கடந்த கால சம்பாத்தியங்களை வைத்துக் கொள்ளலாம், மேலும் அவருக்குரிய தீர்ப்பு **கடவுள்** வசமே உள்ளது. அநியாய வட்டியில் பிடிவாதமாய் இருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் நரகத் திற்கு உள்ளாகின்றனர், அங்கே அவர்கள் என்றென் றும் தங்கியிருப்பார்கள்.

**276.** **கடவுள்** அநியாய வட்டியைக் கண்டனம் செய்கின் றார், மேலும் தர்மங்களை ஆசீர்வதிக்கின்றார். நம்ப மறுப்பவன், குற்றவாளி ஒவ்வொருவனையும் **கடவுள்** வெறுக்கின்றார்.

**2:275–278 கடன்களின் மீதான அதீத வட்டி ஒரு மொத்த நாட்டையே அழித்து விடக்கூடும் என்பது நிலை நாட்டப்பட்டு விட்ட ஒரு பொருளாதார விதியாகும். கடந்த சில வருடங்களில் அதீத வட்டி வசூலிக்கப்பட்ட பல தேசங்களுடைய பொருளா தாரங்களின் பெரு நாசத்தை நாம் கண்டிருக்கின்றோம். சாதாரண வட்டி–20% விடக்குறைவானது–எங்கே எவரொருவரும் வஞ்சிக்கப்படுவதில்லையோ, மேலும் ஒவ்வொருவரும் திருப்தியடைகின்றனரோ, அது அநியாய வட்டியாகாது.*

*தெய்வீக உத்தரவாதம்*

277. எவர்கள் நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்தி, மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடித்து, மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கின்றனரோ, அவர்கள் தங்களுடைய பிரதி பலனைத் தங்களுடைய இரட்சகரிடமிருந்து பெறுகின்றனர்; அவர்கள் அச்சம் கொள்ள எதுவும் இருக்காது, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

278. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும், மேலும் அநியாய வட்டியின் அனைத்து வகைகளில் இருந்து விலகிக் கொள்ளவும் வேண்டும்.

279. நீங்கள் செய்யவில்லையெனில், பின்னர் **கடவுள்** மற்றும் அவருடைய தூதரிடமிருந்து ஒரு போரை எதிர்பார்த்திருங்கள். ஆனால் நீங்கள் பாவத்திற்காக வருந்தினால், அநீதி இழைக்காமலோ அல்லது அநீதத்திற்கு உள்ளாகாமலோ உங்களுடைய மூலதனங்களை நீங்கள் வைத்துக் கொள்ளலாம்.

280. கடன்பட்டவர் செலுத்த இயலாமல் இருந்தால், சிறந்ததொரு தருணத்திற்காகக் காத்திருங்கள். நீங்கள் மட்டும் அறிந்திருப்பீர்களாயின், அந்தக் கடனை தர்மமாக விட்டுக் கொடுத்து விட்டால், அதுவே உங்களுக்குச் சிறந்ததாக இருக்கும்.

281. நீங்கள் **கடவுள்**–யிடம் திருப்பப்பட்டு, மேலும் ஒவ்வொரு ஆத்மாவும், சிறிதளவும் அநீதமின்றி, அது செய்த ஒவ்வொன்றுக்காகவும் கூலி கொடுக்கப்படுகின்ற அந்நாளைக் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

*பொருளாதாரப் பரிவார்த்தனைகளை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்*

282. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், எந்தத் தவணையில் ஒரு கடனை நீங்கள் பரிவர்த்தனை செய்யும் பொழுதும், நீங்கள் அதனை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். பாரபட்சமற்ற ஓர் எழுத்தர் எழுதுவதைச் செய்ய வேண்டும். **கடவுள்**–ன் போதனைகளுக்கேற்ப, எந்த எழுத்தரும் இந்தச் சேவையைப் புரிய மறுக்கக் கூடாது. கடனாளி நிபந்தனைகளை எடுத்துக் கூறுகின்ற அதே சமயம், அவர் எழுத வேண்டும். அவர் தன்னுடைய இரட்சகரான **கடவுள்**–ஐ கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் ஒரு போதும் ஏமாற்றக் கூடாது. கடனாளி மனோரீதியாக இயலாதவராகவோ, அல்லது சக்தியற்றவராகவோ, அல்லது மொழிய இயலாதவராகவோ இருந்தால், அவருடைய பொறுப்பாளர் நீதமாக எடுத்துக் கூற வேண்டும். இரண்டு ஆண்கள் சாட்சிகளாகப் பணி புரிய வேண்டும்; இரண்டு ஆண்கள் அப்போது இல்லாவிட்டால், எவர்களுடைய சாட்சியம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக உள்ளதோ அத்தகைய ஓர்ஆணும் இரு பெண்களும்.* இவ்விதமாக, ஒரு பெண் பாரபட்சமாகி விட்டாலும், மற்றவள் அவளுக்கு நினைவூட்டுவாள். சாட்சியம் கூறுவதற்கு அழைக்கப்படுகின்ற பொழுது அவ்வாறு செய்ய வேண்டியது சாட்சியாளர்கள் மீது கடமையாக உள்ளது. எவ்வளவு நீளமாக இருந்த போதிலும் பொருட்டின்றி, திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நேரம் உட்பட, விபரங்களை எழுதுவதற்குச் சடைவடைந்து விடாதீர்கள். இது **கடவுள்**–ன் பார்வையில் நீதமானதாக, சிறந்த சாட்சியத்திற்கு உறுதியளிப்பதாக, மேலும் நீங்கள் கொள்ளக் கூடிய எந்தச் சந்தேகத்தையும் நீக்குவதாக உள்ளது. ஆங்காங்கே நீங்கள் மேற்கொள்கின்ற வியாபாரப் பரிவர்த்தனைகளை பதிவு செய்யத் தேவையில்லை, ஆனால் அவற்றுக்குச் சாட்சிகள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த எழுத்தரோ அல்லது சாட்சியோ அவருடைய சேவையின் காரணமாகத் தீங்கிழைக்கப்படாதிருக்க வேண்டும். நீங்கள் அவர்களைத் துன்புறுத்தினால், அது உங்கள் பக்கமுள்ள பாவத்தன்மையாகவே இருக்கும். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் **கடவுள்** உங்களுக்குக் கற்றுக் கொடுப்பார். **கடவுள்** சர்வமும் அறித்தவர்.

283. நீங்கள் பிரயாணத்தில் இருந்து, எழுத்தர் எவரும் கிடைக்காவிட்டால், திருப்பிச் செலுத்துதலை உத்தரவாதமளிக்க ஓர் அடமானப் பொருளை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த முறையில் ஒருவர் நம்பப்பட்டால், உரிய நேரத்தில் அவர் அந்த அடமானப் பொருளை திருப்பித் தந்து விட வேண்டும், மேலும் அவர் தன் இரட்சகரான **கடவுள்**–ஐ கருத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் சாட்சியாக இருந்தவற்றை மறைப்பதன் மூலம் சாட்சிப் பிரமாணம் எதனையும் தடுத்து நிறுத்திக் கொள்ளாதீர்கள். ஒரு சாட்சிப் பிரமாணத்தை தடுத்து நிறுத்திக் கொள்கின்ற எவரொருவரும் மனதளவில் பாவகரமானவராக இருக்கின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக் கின்றார்.

284. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியவை. உங்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களை நீங்கள் அறிவித்தாலும், அல்லது அவற்றை மறைத்து வைத்துக் கொண்டாலும், **கடவுள்** அவற்றுக்கு உங்களைப் பொறுப்பாக ஆக்குவார். தான் நாடுகின்ற எவரையும் அவர் மன்னிக்கின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் தண்டிக்கின்றார். **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

**2:282 ஓர் ஆணுக்குப் பதிலாக இரண்டு பெண்கள் சாட்சியாக இருக்கலாம் எனும் ஒரே சூழ்நிலையாகப் பொருளாதாரப் பரிவர்த்தனைகளே உள்ளன. இது, ஒரு சாட்சி மற்றொரு சாட்சியை மணந்து கொள்ளக் கூடும், மேலும் இவ்விதமாக அவளைப் பாரபட்சமுடையவளாகச் செய்து விடக்கூடும் எனும் மெய்யான சாத்தியக் கூறுக்கு எதிராகப் பாதுகாப்பதற்கேயாகும். ஆண்களை விடவும் பெண்கள் உணர்வுரீதியாக அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதர்சனமாக உள்ளது.*

*கடவுளின் தூதர்களுக்கிடையில் நீங்கள் எந்தப் பாரபட்சமும் செய்யக்கூடாது*

285. தன்னுடைய இரட்சகரிடமிருந்து அவருக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றின் மீது இத்தூதர் நம்பிக்கை கொண்டு விட்டார், மேலும் நம்பிக்கையாளர்களும் அவ்வாறே செய்தனர். **கடவுள்,** அவருடைய வானவர்கள், அவருடைய வேதம், மற்றும் அவருடைய தூதர்கள் மீது அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்: "அவருடைய தூதர்களில் எவருக்கிடையிலும் நாங்கள் பாகுபாடு எதுவும் செய்யமாட்டோம்." அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் செவியேற்கின்றோம், மேலும் நாங்கள் கீழ்ப்படிகின்றோம்.* எங்களை மன்னிப்பீராக, எங்கள் இரட்சகரே. இறுதி விதியானது உம்மிடமே உள்ளது."

286. **கடவுள்** எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்கு அப்பால் ஒருபோதும் சுமத்துவதில்லை: அது சம்பாதிப்பது அதற்குரிய வரவாகும், அத்துடன் அது செய்வது அதற்கு எதிரானதாகும். "எங்கள் இரட்சகரே, நாங்கள் மறந்து விட்டாலோ அல்லது தவறுகள் செய்து விட்டாலோ எங்களைக் கண்டனம் செய்து விடாதீர். எங்கள் இரட்சகரே, மேலும் எங்களுக்கு முன்னிருந்தோர் செய்ததைப் போல், உமக்கெதிராக நிந்தனை செய்வதில் இருந்தும் எங்களைப் பாதுகாப்பீராக. எங்கள் இரட்சகரே, பாவங்களுக்காக வருந்துவதற்கு எங்களுக்கு மிகவும் தாமதமாகி விடும் வரை பாவங்கள் செய்து கொண்டிருப்பதிலிருந்தும் எங்களைப் பாதுகாப்பீராக. எங்களைப் பிழை பொறுப்பீராக மேலும் எங்களை மன்னிப்பீராக. நீரே எங்கள் இரட்சகரும் அதிபதியுமாக இருக்கின்றீர். நம்பமறுக்கின்ற மக்களின் மீது எங்களுக்கு வெற்றியைத் தந்தருள்வீராக."

****

## சூரா 3: இம்ரானியர்கள் (ஆலி–இம்ரான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ.ல.ம.*

2. **கடவுள்:** அவரைத் தவிர தெய்வம் இல்லை; ஜீவித்திருப்பவர், நிலைத்திருப்பவர்.

3. முந்தைய அனைத்து வேதங்களையும் உறுதிப்படுத்துகின்றதாக, சத்தியம் நிறைந்ததாக, இந்த வேதத்தை உமக்கு அவர் இறக்கி அனுப்பினார், மேலும் அவர் தோராவையும் சுவிசேஷத்தையும் இறக்கி அனுப்பினார்

4. இதற்கு முன்னர், மக்களை வழி நடத்துவதற்காக, மேலும் அவர் சட்டப் புத்தகத்தையும் இறக்கி அனுப்பினார். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளாகின்றனர். **கடவுள்** எல்லாம் வல்லவர், பழி தீர்ப்பவர்.

5. பூமியின் மீதோ, அல்லது வானத்திலோ, எந்த ஒன்றும் **கடவுள்**–யிடமிருந்து மறைக்கப்பட்டதாக இல்லை.

6. அவர்தான், கருப்பைகளில் தான் நாடியவாறு உங்களை வடிவமைக்கின்ற ஒருவர். அவருடன் வேறு தெய்வம் எதுவும் இல்லை; எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

7. நேரடிப் பொருள் தருகின்ற வசனங்களையும் – அவையே இந்த வேதத்தின் சாராம்சமாக அமைகின்றன – அவ்வண்ணமே பல பொருள் தருகின்ற அல்லது உவமானங்களுடன் கூடிய வசனங்களையும் கொண்டதாக இவ்வேதத்தை அவர் உமக்கு இறக்கி அனுப்பினார். தங்களுடைய இதயங்களில் சந்தேகங்களைத் தாங்கியிருப்பவர்கள், குழப்பத்தை உருவாக்குவதற்காகவும், குறிப்பிட்ட ஒரு பொருளை வெளிக்கொண்டு வருவதற்காகவும் பல பொருள் தருகின்ற வசனங்களைப் பின் தொடர்வார்கள். **கடவுள்**–ஐயும் அறிவில் நன்கு உறுதிப்பாடு கொண்டவர்களையும் தவிர எவரும் அவற்றின் மெய்ப்பொருளை அறிய மாட்டார்கள். அவர்கள் கூறுவர், "நாங்கள் இதனில் நம்பிக்கை கொள்கின்றோம் – இதில் உள்ள அனைத்தும் எங்கள் இரட்சகரிடமிருந்தே வருகின்றன." அறிவுத் திறன் கொண்டவர்கள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

8. "எங்கள் இரட்சகரே, இப்போது நீர் எங்களை வழி நடத்தி விட்டதால், எங்களுடைய இதயங்களைத் தடுமாற விட்டு விடாதீர். உம்முடைய கருணையை எங்கள் மீது பொழிவீராக; நீர்தான் வள்ளலாக இருக்கின்றீர்.

**2:285 மிகவும் முக்கியமான கட்டளைகளில் ஒன்றாக உள்ளதாவது: "கடவுளின் தூதர்களுக்கிடையில் நீங்கள் எந்தப் பாகுபாடும் செய்யாதிருக்க வேண்டும்" (2:136,3:84,4:150). நம்பிக்கையாளர்கள் "நாங்கள் செவியேற்கின்றோம், மேலும் நாங்கள் கீழ்ப்படிகின்றோம்" எனக் கூறியவாறாக இதற்கு மறுமொழி அளிக்கின்ற அதே சமயம், போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் மற்ற அனைத்துத் தூதர்களையும் தவிர்த்து விடும் வண்ணம், முஹம்மதின் பெயரை கடவுளுடையதற்கு அடுத்தாற்போல் குறிப்பிடுவதன் மீதான தங்களுடைய வற்புறுத்தலை நியாயப்படுத்துவற்காக எதிர்வாதம் செய்கின்றனர். சீர்கெட்டுப் போன முஸ்லிம்கள் தங்களுடைய விசுவாசப் பிரகடனத்திலும் (ஷஹாதஹ்) மேலும் தங்களுடைய தொடர்புத் தொழுகைகளின் போதும் முஹம்மதைக் குறிப்பிடுகின்றனர் (பார்க்க 72:18).*

**3:1 பார்க்க 2:1 க்குரிய அடிக்குறிப்பு மற்றும் பின் இணைப்பு ஒன்று.*

9. "எங்கள் இரட்சகரே, தவிர்த்து விட முடியாதவாறு உள்ள அந்த ஒரு நாளில் மக்களை நீர் நிச்சயமாக ஒன்று சேர்ப்பீர். **கடவுள்** ஒருபோதும் வாக்குறுதி ஒன்றை முறிப்பதில்லை."

10. **கடவுள்**–க்கெதிராக, அவர்களுடைய பணத்தாலோ, அன்றி அவர்களுடைய பிள்ளைகளாலோ, நம்பமறுப் பவர்கள் ஒருபோதும் உதவி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் நரகத்திற்குரிய எரிபொருளாக இருப் பார்கள்.

11. ஃபேரோவின் சமூகத்தாரையும் அவர்களுக்கு முன் னிருந்தவர்களையும் போலவே, அவர்கள் நம் வெளிப் பாடுகளை ஏற்கமறுத்தனர், எனவே, அதன் விளை வாக, அவர்களுடைய பாவங்களுக்காகக் **கடவுள்** அவர்களைத் தண்டித்தார். தண்டனையை நிறை வேற்றுவதில் **கடவுள்** கண்டிப்பானவராக இருக் கின்றார்.

12. நம்பமறுப்பவர்களிடம் கூறுவீராக, "நீங்கள் தோற் கடிக்கப்படுவீர்கள், பின்னர் நரகத்தில் ஒன்று சேர்க்கப்படுவீர்கள்; என்ன ஒரு துன்பகரமான தங்குமிடம் !"

*நம்பிக்கையாளர்கள்:*
*இறுதியான வெற்றியாளர்கள்*

13. மோதிக் கொண்ட இரு படையினர் மூலம் ஒரு முன் னுதாரணம் உங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது – ஒரு படை **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிட்டது, அதே சமயம் மற்றது நம்பமறுக்கின்றதாக இருந்தது. இருமடங்கிற்கும் அதிகமாக அவர்கள் இருந்தனர் என்பதை அவர்கள் தங்களுடைய சொந்தக் கண் களால் கண்டனர். தான் நாடுகின்ற எவருக்கும் தன் னுடைய வெற்றியைக் கொண்டு **கடவுள்** ஆதரவளிக் கின்றார். அகப்பார்வை உடையவர்களுக்கு இது ஒரு தைரியத்தை வழங்கிட வேண்டும்.

*வேறுபட்ட முன்னுரிமைகள்*

14. பெண்கள், பிள்ளைகளைக் கொண்டிருத்தல், குவி யல் குவியலான தங்கம் மற்றும் வெள்ளி, பழக்கப் படுத்தப்பட்ட குதிரைகள், கால்நடைகள், மற்றும் பயிர் கள் போன்ற உலக இன்பங்கள் மக்களுக்கு அலங் கரிக்கப்பட்டவையாக உள்ளன. இவை இந்த உலகின் பொருட்களாகவே உள்ளன. மிகவும் மேலானதொரு தங்குமிடம் **கடவுள்**–யிடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள் ளது.

15. கூறுவீராக, "இதனை விட மிகவும் சிறந்ததொரு பேரத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கட்டுமா: நன் னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களுக்கு, ஆறுகள் பாய்கின்ற தோட்டங்கள், மற்றும் தூய்மை யான வாழ்க்கைத் துணைகள், மற்றும் **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களில் ஆனந்தமும், அவர்களுடைய இரட்சகரிடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன." **கடவுள்** தன்னுடைய பக்தர்களைப் பார்ப்பவராக இருக்கின் றார்.

16. அவர்கள் கூறுவர், "எங்கள் இரட்சகரே, நாங்கள் நம் பிக்கை கொண்டுள்ளோம், எனவே எங்களுடைய பாவங்களை எங்களுக்கு மன்னிப்பீராக, மேலும் நரக நெருப்பின் வேதனையை விட்டும் எங்களை தவிர்த்து விடுவீராக."

17. அவர்கள் உறுதிப்பாடுடையவர்கள், உண்மையாளர் கள், சரணடைகின்றவர்கள், தர்ம சிந்தனையுடைய வர்கள், மேலும் விடியலின் போது தியானிப்பவர் களாக இருக்கின்றனர்.

*மிக முக்கியமான*
*கட்டளை**

18. அவரைத் தவிர தெய்வம் இல்லை என்று **கடவுள்** சாட் சியம் பகர்கின்றார், மேலும் வானவர்களும் அறிவு டையவர்களும் அவ்வாறே செய்கின்றனர். சத்திய மாகவும் நீதமாகவும், அவர்தான் பரிபூரணமான தெய் வமாக இருக்கின்றார்; அவரை அன்றி தெய்வம் இல்லை, எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*சரணடைதல்:*
*ஒரே மார்க்கம்*

19. **கடவுள்**–ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கம் "சர ணடைதல்" ஆகும். முரண் நகையாக, வேதத்தைப் பெற்றவர்கள்தான் அவர்கள் பெற்றிருக்கின்ற அறி விற்குப் பின்னரும், பொறாமையின் காரணமாக, இந்த உண்மையைத் தர்க்கிப்பவர்களாக இருக்கின்றனர். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்கமறுக்கின்ற இத் தகையவர்களுக்கு, கணக்கெடுப்பதில் **கடவுள்** மிக வும் கண்டிப்பானவராக இருக்கின்றார்.

**3:18 கடவுளால் விதிக்கப்பட்ட விசுவாசப் பிரகடனமாவது (ஷஹாதஹ்): "கடவுளைத் தவிர வேறு தெய்வம் இல்லை," அரபி மொழியில் "லா இலாஹ இல்லல்லாஹ்" (37:35, 47:19 ஐயும் பார்க்கவும்) சீர்கெட்டுப் போன முஸ்லிம்கள், முஹம்மத் கடவுளின் தூதராக இருக்கின்றார் எனப் பிரகடனிக்கின்ற ஓர் இரண்டாம் "ஷஹாதஹ்" வைச் சேர்த்துக் கொள்வதை வலியுறுத்து கின்றனர். வரையறையின்படி இது "ஷிர்க்" (போலித் தெய்வ வழிபாடு) ஆகும், மேலும் கடவுள் மற்றும் அவருடைய தூதருக்கு வெளிப்படையானதொரு கீழ்ப்படியாமையும் ஆகும். கூடுதலாக, இது 2:136, 2:285, 3:84, 4:150–152ல் உள்ள, கடவுளின் தூதர்களுக்கிடையில் பாகுபாடு எதுவும் செய்வதைத் தடுக்கின்ற முக்கியக் கட்டளைகளையும் மீறுகின்றது. "முஹம்மத் கடவுளின் ஒரு தூதராக இருக்கின்றார்," எனப் பிரகடனிப்பதன் மூலம், மேலும் ஆப்ரஹாம், மோஸஸ், ஜீஸஸ், ஸாலிஹ், ஜோனஹ் போன்ற மற்றத் தூதர்களுக்கு அதே பிரகடனத்தைச் செய்யத் தவறுவதால் ஒரு பாகுபாடு செய்யப்படுகின்றது, அத்துடன் ஒரு முக்கிய கட்டளை மீறப்படுகின்றது.*

20. அவர்கள் உம்முடன் வாதித்தால், அப்போது கூறுவீராக, "நான் பரிபூரணமாக என்னையே **கடவுள்**–க்குச் சரணடையச் செய்து விட்டேன்; நானும் என்னைப் பின்பற்றுகின்றவர்களும்." வேதத்தைப் பெற்றவர்களிடமும்,அவ்வண்ணமே பெறாதவர்களிடமும் நீர் பிரகடனம் செய்திட வேண்டும், "நீங்கள் சரணடைவீர்களா ?" அவர்கள் சரணடைந்தால், அப்போது அவர்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், உம்முடைய ஒரே இறைப்பணி இத்தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதேயாகும். மக்கள் அனைவரையும் பார்ப்பவராகக் **கடவுள்** இருக்கின்றார்.

21. எவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்க மறுத்து, மேலும் நியாயமற்ற முறையில் நபிமார்களை கொன்றதுடன், மக்களுக்கிடையில் நீதியை ஆதரித்தவர்களையும் கொன்றனரோ, அவர்களுக்கு வலி நிறைந்ததொரு தண்டனையை வாக்களிப்பீராக.

22. இந்த வாழ்வில் மற்றும் மறுவுலகத்தில் இரண்டிலும், அவர்களுடைய காரியங்கள் பயனற்றதாக்கப்பட்டு விட்டன, மேலும் அவர்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

23. வேதத்தின் பகுதி வழங்கப் பெற்றவர்களை, **கடவுள்**–ன் இந்த வேதத்தை ஆதரிக்குமாறும், மேலும் அதனைத் தங்களுடைய சொந்த வாழ்வில்பிரயோகிக்குமாறும், அவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர், பின்னர் அவர்களில் சிலர் வெறுப்பில் திரும்பிச் சென்று விடுகின்றனர் என்பதை நீர் கவனித்தீரா ?

24. இது ஏனெனில் அவர்கள் கூறினர், "ஒரு சில நாட்களுக்கே தவிர நரகநெருப்பு எங்களைத் தீண்டாது." இவ்விதமாக அவர்கள் தங்களுடைய மார்க்கத்தில் தங்களுடைய சொந்த புனைந்துரைகளால் ஏமாற்றப்பட்டு விட்டனர்.

25. தவிர்த்து விட முடியாத அந்த நாளில் அவர்களை நாம் ஒன்று திரட்டும் போது, அவர்களுக்கு அது எப்படி இருக்கும் ? ஒவ்வொரு ஆத்மாவுக்கும் சிறிதளவும் அநீதமின்றி, அது சம்பாதித்தது எதுவாயினும் அதற்குரியது கொடுக்கப்படும்.

*கடவுளின் தன்மைகள்*

26. கூறுவீராக, "எங்கள் இறைவா: ஆட்சியதிகாரம் அனைத்திற்கும் உடமையாளரே. நீர் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் ஆட்சியதிகாரத்தை நீர் வழங்குகின்றீர், நீர் தேர்ந்தெடுக்கின்ற எவரிடமிருந்தும் ஆட்சியதிகாரத்தை நீர் நீக்கி விடுகின்றீர். நீர் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் கண்ணியத்தை நீர் வழங்குகின்றீர், மேலும் நீர் தேர்ந்தெடுக்கின்ற எவரையும் இழிவுக்குள்ளாக்குகின்றீர். வாழ்வாதாரங்கள் அனைத்தும் உம்முடைய கரத்திலேயே உள்ளன. நீர் சர்வ சக்தியுடையவராக இருக்கின்றீர்.

27. "நீர் இரவைப் பகலுக்குள் ஆழ்த்துகின்றீர், மேலும் பகலை இரவுக்குள் ஆழ்த்துகின்றீர். இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றை நீர் வெளிப்படுத்துகின்றீர், மேலும் உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றை வெளிப்படுத்துகின்றீர், மேலும் நீர் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும், எல்லைகளின்றி நீர் வழங்குகின்றீர்."

*உங்களுடைய நண்பர்களைக்*
*கவனமாகத் தேர்ந்தெடுங்கள்*

28. நம்பிக்கையாளர்கள் ஒருபோதும் நம்பிக்கையாளர்களுக்குப் பதிலாக, நம்பமறுப்பவர்களுடன் தங்களையே கூட்டாளிகளாக்கிக் கொள்ள மாட்டார்கள். இதனைச் செய்கின்ற எவரும் **கடவுள்**–யிடமிருந்து வெளியேற்றப்படுகின்றார். வன்கொடுமையைத் தவிர்த்துக் கொள்ள இதனைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றவர்கள் விலக்களிக்கப்பட்டவர்கள் ஆவர். அவரிடம் மட்டுமே நீங்கள் பக்தியோடிருக்க வேண்டுமென்று **கடவுள்** உங்களை எச்சரிக்கின்றார். இறுதி விதியானது **கடவுள்** வசமே உள்ளது.

29. கூறுவீராக, "உங்களுடைய உள்ளார்ந்த எண்ணத்தை நீங்கள் மறைத்தாலும், அல்லது அதனை வெளிப்படுத்தினாலும், **கடவுள்** அதனைப் பற்றி முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்." வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றைப் பற்றியும் அவர் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார். **கடவுள்** சர்வ சக்தியுடையவராக இருக்கின்றார்.

30. ஒவ்வொரு ஆத்மாவும் அது செய்த நல்ல காரியங்கள் அனைத்தும் முன் கொண்டு வரப்படுவதைக் காண்கின்ற அந்நாள் வரும். தீய காரியங்களைப் பொறுத்தவரை, தொலைவில், மிகத் தொலைவில் அவை அகற்றப்பட்டு விட அது விரும்பும். அவரிடம் மட்டுமே நீங்கள் பக்தியோடிருக்க வேண்டுமென்று **கடவுள்** உங்களை எச்சரிக்கின்றார். **கடவுள்** மனிதர்கள் பால் இரக்கமுள்ளவராக இருக்கின்றார்.

31. பிரகடனிப்பீராக: "நீங்கள் **கடவுள்**–ஐ நேசிப்பீர்களாயின், நீங்கள் என்னைப் பின்பற்ற வேண்டும்." **கடவுள்** அப்போது உங்களை நேசிப்பார், மேலும் உங்களுடைய பாவங்களை மன்னிப்பார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

32. பிரகடனிப்பீராக: "நீங்கள் **கடவுள்** மற்றும் தூதருக்குக் கீழ்ப்படிய வேண்டும்." அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், **கடவுள்** நம்பமறுப்பவர்களை நேசிப்பதில்லை.

*மேரியின் தோற்றம்*

33. ஆதம், நோவா, ஆப்ரஹாமின் சந்ததியினர், மற்றும் இம்ரானின் சந்ததியினரை மக்களின் பால் *(தூதர்களாகக்)* **கடவுள்** தேர்ந்தெடுத்துள்ளார்.

34. அவர்கள் ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்கள். **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

35. இம்ரானின் மனைவி கூறினாள், "என் இரட்சகரே, என் வயிற்றில் உள்ளதை *(அக்குழந்தையை)* நான் உமக்கு, முற்றிலும், அர்ப்பணித்து விட்டேன், எனவே என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வீராக. நீர் செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்."

36. அவள் அவளைப் பெற்றெடுத்த போது, அவள் கூறினாள், "என் இரட்சகரே, நான் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளேன்" – அவள் சுமந்திருந்தது என்னவென்பதைக் குறித்துக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராகவே இருந்தார் – "ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். நான் அவளுக்கு மேரி எனப் பெயரிட்டுள்ளேன், மேலும் நான் அவளுக்கும் அவளுடைய சந்ததியினருக்கும் விரட்டப்பட்ட சாத்தானிடமிருந்து உம்முடைய பாதுகாவலை வேண்டுகின்றேன்."

37. அவளுடைய இரட்சகர் அழகியதொரு ஏற்றுக் கொள்ளலாக அவளை ஏற்றுக் கொண்டார், மேலும் ஜக்கரியாவின் பொறுப்பின் கீழ், அழகியதொரு வளர்ப்பாக அவரை வளர்த்தெடுத்தார். அவளுடைய தொழுமிடத்தில் ஜக்கரிய்யா நுழைந்த பொழுதெல்லாம் அவரிடம் வாழ்வாதாரங்களை அவர் கண்டார். அவர் கேட்பார், "மேரி, இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது ?" அவர் கூறுவார், "இது **கடவுள்**–யிடம் இருந்து வந்தது. தான் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் **கடவுள்**, எல்லைகளின்றி வழங்குகின்றார்."

*ஜானின் தோற்றம்*

38. அப்பொழுதே ஜக்கரிய்யா தன் இரட்சகரிடம் இறைஞ்சினார்: "என் இரட்சகரே, இத்தகைய வொரு நல்ல குழந்தையை எனக்கு அளிப்பீராக; நீரே பிரார்த்தனைகளைச் செவியேற்பவராக இருக்கின்றீர்."

39. ஆலயத்தில் அவர் தொழுது கொண்டிருந்தபோது வானவர்கள் அவரை அழைத்தனர்: "ஜானை பற்றிய நற்செய்தியைக் **கடவுள்** உமக்குத் தருகின்றார்; **கடவுள்**–ன் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட ஒருவர், கண்ணியத்திற்குரியவர், நற்குணமுடையவர், மேலும் நன்னெறியுடைய ஒரு நபியும் ஆவார்."

40. அவர் கூறினார், "நான் இவ்வளவு முதியவனாகவும், என்னுடைய மனைவி மலடாகவும் இருக்கின்ற போது, எவ்வாறு நான் ஒரு பையனைப் பெற முடியும் ?" அவர் கூறினார், "தான் நாடுகின்ற எதனையும் **கடவுள்** செய்கின்றார்."

41. அவர் கூறினார், "என் இரட்சகரே, எனக்கு ஓர் அறிகுறியைத் தருவீராக." அவர் கூறினார், "உமக்குரிய அறிகுறியாவது, சைகைகளின் மூலமாகவே தவிர, மக்களிடம் நீர் மூன்று நாட்களுக்குப் பேச மாட்டீர். உம்முடைய இரட்சகரை அடிக்கடித் துதிப்பீராக; மேலும் இரவும் பகலும் தியானிப்பீராக."

*மேரி மற்றும் ஜீஸஸ்*

42. வானவர்கள் கூறினர், "மேரியே, **கடவுள்** உம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார் மேலும் உம்மைத் தூய்மைப் படுத்தியுள்ளார். பெண்கள் அனைவரிலிருந்தும் உம்மை அவர் தேர்ந்தெடுத்துள்ளார்.

43. "மேரியே, நீர் உம்முடைய இரட்சகருக்குச் சரணடையவும், சிரம் பணியவும் குனிந்து வழிபடுபவர்களுடன் சேர்ந்து குனிந்திடவும் வேண்டும்."

44. இது கடந்த காலத்திலிருந்து நாம் உமக்கு வெளிப்படுத்துகின்ற செய்தியாகும். மேரியின் பாதுகாவலரைத் தேர்ந்தெடுக்க அவர்களுடைய குலுக்கல் சீட்டை அவர்கள் உருவிய போது நீர் அங்கே இல்லை. அவர்கள் ஒருவர் மற்றவருடன் சர்ச்சித்துக் கொண்ட போது அந்நேரம் நீர் அங்கே இருக்கவில்லை.

45. வானவர்கள் கூறினர், "மேரியே, **கடவுள்** உமக்கு நற்செய்தி தருகின்றார்: 'மெஸையா, மேரியின் மகனான ஜீஸஸ் எனும் பெயர் கொண்டவராக அவரிடமிருந்து ஒரு வார்த்தை. அவர் இந்த வாழ்விலும் மறுவுலகத்திலும் பிரபலமானவராகவும், எனக்கு மிகவும் நெருக்கமானவர்களில் ஒருவராகவும் இருப்பார்.'

46. "தொட்டிலில் இருந்தும், அவ்வண்ணமே பருவமடைந்த ஒருவராக இருக்கும் போதும் அவர் மக்களிடம் பேசுவார்; நன்னெறியாளர்களில் ஒருவராக அவர் இருப்பார்."

47. அவள் கூறினாள், "என் இரட்சகரே, எந்த ஓர் ஆணும் என்னைத் தீண்டியிராத போது, எவ்வாறு நான் ஒரு மகனைப் பெற இயலும் ?" அவர் கூறினார், "தான் நாடுகின்ற எதனையும் **கடவுள்** இவ்விதமாகப் படைக்கின்றார். எந்த ஒன்றும் செய்து முடிக்கப்பட, அவர் அதன் பால், 'ஆகு,' என்று மட்டும் கூறுகின்றார், உடனே அது ஆகி விடுகின்றது.

48. "அவருக்கு வேதம், ஞானம், தோரா மற்றும் சுவிசேஷத்தை அவர் கற்றுக் கொடுப்பார்."

49. இஸ்ரவேலின் சந்ததியினரின் பால் ஒரு தூதராக: "நான் உங்களுடைய இரட்சகரிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் உங்களிடம் வருகின்றேன் – களி மண்ணில் இருந்து ஒரு பறவையின் வடிவத்தை உங்களுக்காக நான் உருவாக்குகின்றேன், பின்னர் நான் அதனுள் ஊதுகின்றேன், உடனே **கடவுள்**–ன் அனுமதிப்படி அது ஓர் உயிருள்ள பறவையாக ஆகி விடுகின்றது. பார்வையற்றோருக்குப் பார்வையை நான் மீட்டுத் தருகின்றேன், குஷ்டரோகிகளைக் குணப்படுத்துகின்றேன், மேலும் **கடவுள்**–வுடைய அனுமதியின் பேரில் இறந்தவர்களை நான் உயிர்ப்பிக்கின்றேன். நீங்கள் உண்ணுவது என்ன, மேலும் உங்களுடைய வீடுகளில் நீங்கள் சேகரித்திருப்பது என்ன என உங்களிடம் கூற என்னால் இயலும். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், இது உங்களுக்கு ஒரு சான்றாக இருக்க வேண்டும்.

50. "முந்திய வேதத்தை நான் உறுதிப்படுத்துகின்றேன் –தோரா–மேலும் உங்கள் மீது சுமத்தப்பட்ட குறிப்பிட்ட சில தடைகளை நான் ரத்து செய்கின்றேன். உங்கள் இரட்சகரிடம் இருந்து போதுமான சான்றுடன் நான் உங்களிடம் வருகின்றேன். எனவே, நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

51. "**கடவுள்** தான் என்னுடைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகரும் ஆவார்;* அவரை மட்டும் நீங்கள் வழிபட வேண்டும். இதுவே சரியான பாதையாகும்."

52. அவர்களுடைய நம்பமறுத்தலை ஜீஸஸ் உணர்ந்த பொழுது, அவர் கூறினார், "**கடவுள்**–ன் பால் என்னுடைய ஆதரவாளர்களாக இருப்பவர்கள் யார்?" அவருடைய சீடர்கள் கூறினர், "நாங்கள் **கடவுள்**–ன் ஆதரவாளர்களாக இருக்கின்றோம்; நாங்கள் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்றோம், மேலும் நாங்கள் சரணடைந்தவர்களாக இருக்கின்றோம் என்று சாட்சியம் பகர்வீராக.

53. "எங்கள் இரட்சகரே, நீர் இறக்கி அனுப்பியவற்றின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம், மேலும் நாங்கள் தூதரைப் பின்பற்றிக் கொண்டுள்ளோம்; சாட்சியாளர்களில் எங்களையும் கணக்கிடுவீராக."

*ஜீஸஸின் மரணம்**

54. அவர்கள் சதி செய்தனர், மேலும் திட்டமிட்டனர், ஆனால் **கடவுள்**–ம் அவ்வாறே செய்தார், மேலும் **கடவுள்**தான் திட்டமிடுபவர்களில் மிகச் சிறந்தவராக இருக்கின்றார்.

55. ஆகவே, **கடவுள்** கூறினார், "ஜீஸஸே, நான் உம்மை என்னிடம் உயர்த்தி, மேலும் நம்பமறுப்பவர்களை விட்டும் உம்மை விடுவித்து, உம்முடைய வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகின்றேன். உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள்வரை, உம்மை பின்பற்றுபவர்களை நம்பமறுப்பவர்களுக்கு மேலாக நான் உயர்த்துவேன். பின்னர் உங்கள் அனைவருடைய இறுதி விதியும் என் வசமே உள்ளது, பின்னர் உங்க ளுடைய சர்ச்சைகள் குறித்து உங்களுக்கிடையில் நான் தீர்ப்பளிப்பேன்.

56. "நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, இந்த உலகத்திலும் மறுவுலகத்திலும் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு அவர்களை நான் உட்படுத்துவேன். அவர்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்."

57. நம்பிக்கை கொண்டு அத்துடன் நன்னெறியான தொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அவர் முழுமையான பிரதி பலனளிப்பார். அநியாயக்காரர்களை **கடவுள்** நேசிப்பதில்லை.

58. இவை ஞானம் நிறைந்ததொரு தூதுச் செய்தியை வழங்குகின்ற, நாம் உமக்கு எடுத்துரைக்கின்ற வெளிப்பாடுகளாகும்.

*கணித ரீதியான உறுதிப்படுத்துதல்**

59. ஜீஸஸின் உதாரணமாவது, **கடவுள்**–ஐப் பொறுத்தவரை, ஆதமைப் போன்றதேயாகும்; அவர் மண்ணிலிருந்து அவரைப் படைத்தார், பின்னர் அவரை நோக்கி, "ஆகுவீராக," என்று கூறினார், உடனே அவர் ஆகிவிட்டார்.

60. இது உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாகும்; சந்தேகங்கள் எதனையும் தாங்கியிருக்காதீர்.

**3:51 மிகத் துல்லியமாக இதுவே ஜீஸஸினால் கூறப்படுவதாக புதிய ஏற்பாடு முழுவதும் எடுத்துக் கூறப்படுகின்றது. உதாரணத்திற்காக ஜானின் சுவிசேஷம் 20:17, மற்றும் "ஜீஸஸ்: கட்டுக்கதைகளும் தூதுச் செய்தியும்" என்ற லிஸா ஸ்ப்ரேயால் எழுதப்பட்ட புத்தகத்தின் அத்தியாயம் 4 ஐயும் பார்க்கவும் (யுனிவர்சல் யூனிட்டி, ஃப்ரெமொன்ட், கலிஃபோர்னியா, 1992).*

**3:54–55 ஜீஸஸின் ஆன்மா, உண்மையான அந்த நபர், உயர்த்தப்பட்டார் என நாம் அறிந்து கொள்கின்றோம், அதாவது அவருடைய வெறுமையான, ஆன்மா இல்லாத, ஆனால் உடற்கூறு ரீதியாக உயிருடனிருந்த உடம்பின் கைது, வதை, மற்றும் சிலுவையிலறைதலுக்கு முன்னரே பூமியில் ஜீஸஸின் வாழ்வு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது (விபரங்களைப் பின் இணைப்பு 22ல் பார்க்கவும்).*

**3:59 ஜீஸஸ் மற்றும் ஆதம் ஆகியோருடைய படைப்பின் "சமத்தன்மை" கணித ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ஜீஸஸ் மற்றும் ஆதம் ஆகியோர் இந்தக் குர்ஆனில் ஒரே எண்ணிக்கையிலான முறைகள் குறிப்பிடப்படுகின்றனர், ஒவ்வொருவரும் 25 முறைகள்.*

*நம்பமறுப்பவர்களுக்கு அறைகூவல் விடுதல்*

61. நீர் பெற்றிருக்கின்ற அறிவிற்குப் பின்னரும், எவரேனும் உம்முடன் வாதிட்டால், அப்போது கூறுவீராக, "எங்களுடைய குழந்தைகளையும் உங்களுடைய குழந்தைகளையும், எங்களுடைய பெண்களையும் உங்களுடைய பெண்களையும், எங்களையும் உங்களையும் அழைத்துக் கொள்வோம், பின்னர் பொய்யர்கள் மீது **கடவுள்**–ன் சாபத்தை நாம் வேண்டிக் கொள்வோம்."

62. நிச்சயமாக, இதுவே சத்தியமான விவரிப்பாகும். நிச்சயமாக, **கடவுள்**–ஐத் தவிர தெய்வம் எதுவுமில்லை. நிச்சயமாக, **கடவுள்**தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

63. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது **கடவுள்** தீமை செய்பவர்களைப் பற்றி முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*நம்பிக்கையாளர்கள்*
*அனைவருக்கும் அழைப்பு*

64. கூறுவீராக, "வேதத்தைப் பின்பற்றுபவர்களே, எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் அறிவுக்கு உகந்த ஓர் உடன்படிக்கைக்கு நாம் வருவோம்: அதாவது நாம் **கடவுள்**–ஐத் தவிர எதனையும் வழிபடாதிருக்க வேண்டும்; அதாவது அவருடன் எந்த போலித் தெய்வங்களையும் நாம் ஒருபோதும் அமைத்துக் கொள்ளக் கூடாது, அன்றி **கடவுள்**–வுடன் மானிட இனத்தவர் எவரையும் இரட்சகர்களாக அமைத்துக் கொள்ளக் கூடாது." அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், கூறுவீராக, "நாங்கள் சரணடைந்தவர்களாக இருக்கின்றோம் என்பதற்குச் சாட்சி பகர்வீர்களாக."

65. வேதத்தைப் பின்பற்றுபவர்களே, தோராவும் சுவிசேஷமும் அவருக்குப் பின்னரேயன்றி, வெளிப்படுத்தப்படவில்லை எனும் போது, ஆப்ரஹாமைப் பற்றி நீங்கள் ஏன் வாதிடுகின்றீர்கள்? நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?

66. நீங்கள் அறிந்திருந்த விஷயங்களைப் பற்றி நீங்கள் வாதிட்டுக் கொண்டிருந்தீர்கள்; நீங்கள் அறிந்திராத விஷயங்களைப் பற்றி ஏன் வாதிடுகின்றீர்கள்? **கடவுள்** அறிந்திருக்கின்றார், அதே சமயம் நீங்கள் அறிய மாட்டீர்கள்.

67. ஆப்ரஹாம் யூதர்களைச் சார்ந்தவராகவோ, அன்றிக் கிறிஸ்துவராகவோ இருக்கவில்லை; அவர் ஏகத்துவவாதியான ஒரு சரணடைந்தவராகவே இருந்தார். அவர் ஒரு போதும் போலித் தெய்வ வழிபாடு செய்பவராக இருந்ததில்லை.

68. ஆப்ரஹாமிடத்தில் மிகவும் மதிப்பிற்குரிய மக்கள் எவர்களென்றால், அவரைப் பின்பற்றியவர்கள், மேலும் இந்த நபி, மேலும் நம்பிக்கை கொண்டவர்களுமே ஆவர். **கடவுள்**தான் நம்பிக்கையாளர்களின் இரட்சகரும் அதிபதியுமாக இருக்கின்றார்.

69. வேதத்தைப் பின்பற்றுபவர்களில் சிலர் உங்களை வழிகேட்டில் இட்டுச் செல்லவே விரும்புகின்றனர், ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்ளாதவாறு, தங்களையேதான் வழிகேட்டில் இட்டுச் செல்கின்றனர்.

70. வேதத்தைப் பின்பற்றுபவர்களே, *(இது சத்தியம் தான் என்று)* நீங்கள் சாட்சி பகர்கின்ற போதும் ஏன் நீங்கள் **கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகளை ஏற்கமறுக்கின்றீர்கள்?

71. வேதத்தைப் பின்பற்றுபவர்களே, ஏன் நீங்கள் சத்தியத்தை அசத்தியத்துடன் கலக்கின்றீர்கள், மேலும் அறிந்துகொண்டே, சத்தியத்தை மறைக்கின்றீர்கள்?

72. வேதத்தைப் பின்பற்றுபவர்களில் சிலர் கூறுகின்றனர், "நம்பிக்கையாளர்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றின் மீது காலையில் நம்பிக்கை கொண்டு, அத்துடன் மாலையில் அதனை நிராகரித்து விடுங்கள்; ஒருவேளை என்றேனும் அவர்கள் பழைய நிலைக்குத் திரும்பி விடக் கூடும்.

73. "மேலும், உங்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களைப் போலவே அன்றி நம்பிக்கை கொள்ளாதீர்கள்." கூறுவீராக, **"கடவுள்**–ன் வழிகாட்டலே மெய்யான வழிகாட்டலாகும்." அதே வழி காட்டலை அவர்களும் கொண்டிருப்பதாக அவர்கள் கோரினாலோ, அல்லது உங்களுடைய இரட்சகரைப் பற்றி உங்களிடம் தர்க்கித்தாலோ, கூறுவீராக, "அருட் கொடைகள் அனைத்தும் **கடவுள்**–ன் கரத்திலேயே உள்ளது; தான் நாடுகின்ற எவர் மீதும் அதனை அவர் அருள்கின்றார்." **கடவுள்** கொடையளிப்பவர், சர்வமும் அறிந்தவர்.

74. தான்நாடுகின்ற எவருக்கும் உரியதெனத் தன்னுடைய கருணையை அவர் குறிப்பிட்டு வைக்கின்றார்; எல்லையற்ற அருட்கொடையைக் **கடவுள்** தன் வசம் வைத்திருக்கின்றார்.

*மக்கள் அனைவருடனும் நேர்மையாக இருங்கள்*

75. வேதத்தைப் பின்பற்றுபவர்கள் சிலரிடம் முழுமையானதொரு வளத்தையும் நம்பி ஒப்படைக்கலாம், அவர்கள் அதனை உங்களிடம் திருப்பித் தந்து விடவும் செய்வார்கள். அவர்களில் உள்ள மற்றவர்களிடம் ஒரே ஒரு தினாரைக் கூட நம்பி ஒப்படைக்க இயலாது; அவர்களைத் தொடர்ந்து நீங்கள் சென்று கொண்டிருந்தாலன்றி உங்களிடம் அவர்கள் திருப்பிச் செலுத்த மாட்டார்கள். இது ஏனெனில், "வேதம் வழங்கப்பெறாதவர்களுடன்* பரிவர்த்தனை செய்யும் போது நாம் நேர்மையாக இருக்கத் தேவையில்லை!" என்று அவர்கள் கூறுவதனாலேயாகும். இவ்விதமாக, அவர்கள் அறிந்துகொண்டே, **கடவுள்** மீது பொய்களைச் சாட்டுகின்றனர்.

76. மெய்யாகவே, எவர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதுடன் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றனரோ, **கடவுள்** நன்னெறியாளர்களை நேசிக்கின்றார்.

77. **கடவுள்**–ன் உடன்படிக்கையையும், தங்களுடைய கடமைகளையும், ஓர் அற்ப விலைக்கு வணிகம் செய்து விடுகின்றவர்களைப் பொறுத்த வரை, மறுவுலகில் அவர்கள் எந்தப் பங்கையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில், **கடவுள்** அவர்களிடம் பேச மாட்டார், அன்றி அவர்கள் பால் நோக்கவும் மாட்டார், அன்றியும் அவர்களை அவர் தூய்மைப்படுத்தவும் மாட்டார். அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

78. வேதத்தில் இருந்து உள்ளதாக அது இல்லாத பொழுதும், அது வேதத்தில் இருந்து உள்ளதுதான் என நீங்கள் நினைத்துக் கொள்ளும் பொருட்டு, வேதத்தைப் போல் பாவனை செய்வதற்காகத் தங்கள் நாவுகளைச் சுழற்றுபவர்களும் அவர்களில் உள்ளனர், மேலும் **கடவுள்**–யிடமிருந்து வந்ததாக அது இல்லாத போதும், அது **கடவுள்**–யிடமிருந்து வந்ததுதான் என்று அவர்கள் கோருகின்றனர். இவ்விதமாக, அவர்கள் பொய்களை உதிர்ப்பதுடன் அறிந்துகொண்டே, அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுகின்றனர்.

79. வேதத்தையும் நபித்துவத்தையும் கொண்டு **கடவுள்**–ஆல் ஆசிர்வதிக்கப்பெற்ற ஒரு மானிட இனத்தவர் மக்களிடம், "**கடவுள்**–வுடன் என்னை இணைத்து வழிபாடு செய்யுங்கள்" என்று ஒருபோதும் கூறமாட்டார். மாறாக, நீங்கள் பிரச்சாரம் செய்கின்ற வேதம் மற்றும் நீங்கள் கற்றுக் கொள்கின்ற படிப்பினைகளுக்கு ஏற்ப, "உங்கள் இரட்சருக்கு மட்டும் பரிபூரணமாக உங்களையே அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்," *(என்றே அவர் கூறுவார்).*

80. அன்றி வானவர்களையும் நபிமார்களையும் இரட்சகர்களாக இணைத்து வழிபாடு செய்யுமாறும் உங்களுக்கு அவர் கட்டளையிட மாட்டார். சரணடைந்தவர்களாகி விட்ட பின்னர் நம்பமறுத்து விடுமாறு உங்களை அவர் தூண்டுவாரா?

*முக்கியமான முன்னறிவிப்பு நிறைவேற்றப்பட்டது: கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

81. **கடவுள்** நபிமார்களிடம், "நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுப்பேன். அதன் பின்னர், இருக்கின்ற வேதங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்துவதற்காக ஒரு தூதர் வருவார். நீங்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ளவும் அவருக்கு ஆதரவளிக்கவும் வேண்டும்," என்று கூறியவாறு ஓர் உடன்படிக்கை எடுத்தார். அவர் கூறினார், "நீங்கள் இதனை ஒத்துக் கொண்டு, இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவோம் என்று உறுதிமொழி அளிக்கின்றீர்களா?" அவர்கள் கூறினர், "நாங்கள் ஒத்துக் கொள்கின்றோம்." அவர் கூறினார், "இவ் விதமாக நீங்கள் சாட்சி பகர்ந்திருக்கின்றீர்கள், அத்துடன் நானும் உங்களுடன் சேர்ந்து சாட்சி பகர்கின்றேன்."

**3:75 குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் கண்டுபிடிப்புக்கு முன்னர், சில அறிஞர்கள் முஹம்மத் இத்தகையதொரு மகத்தான புத்தகத்தை எழுத இயலாத கல்வியறிவற்ற ஒரு மனிதராக இருந்தார் என்று பொய்யாகக் கூறினர். அவர்கள் **"உம்மி"** எனும் வார்த்தை "கல்வியறிவற்றவர்" எனும் அர்த்தம் கொண்டது என்று உறுதியுடன் கூறி அந்த வார்த்தையின் அர்த்தத்தைச் சிதைத்தனர். **"உம்மிய்யீன்"** என்பதன் அர்த்தம் "வேதம் வழங்கப்படாதவர்கள்" என இவ்வசனம் நிரூபிக்கின்றது (62:2 & பின் இணைப்பு 28ஐயும் பார்க்கவும்).*

**3:81 முக்கியமான இந்த முன்னறிவிப்பு இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்த வசனம் மற்றும் பைபிளின் மல்க்கியா 3:1–21, லூக்கா 17:22–36 & மத்தேயு 24:27ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளபடி, கடவுளின் உடன்படிக்கைத் தூதர், கடவுளின் நபிமார்களால் சேர்ப்பிக்கப்பட்ட கடவுளின் தூதுச் செய்திகளைத் தூய்மைப்படுத்தி ஒன்றிணைக்க வேண்டியவராக இருக்கின்றார். யூதம், கிறிஸ்துவம், இஸ்லாம், இந்துமதம், புத்தமதம் போன்றவை கடுமையாகச் சிதைக்கப்பட்டு விட்டன. அவரை மட்டும் வழிபடுதல் என்ற கொடியின் கீழ் அவற்றைத் தூய்மைப்படுத்தி மேலும் அவற்றை ஒன்றிணைப்பதென்பது எல்லாம் வல்ல கடவுளின் நாட்டமாக உள்ளது. தன்னுடைய உடன்படிக்கைத் தூதருக்கு ஆதரவாக மூழ்கடிக்கின்ற ஆதாரங்கள் கடவுளால் வழங்கப்பட்டுள்ளன, அவருடைய பெயர் "ரஷாத் கலீஃபா" என்று குர்ஆனின் கணிதக் குறியீட்டில் தர்க்கத்திற்கு இடமில்லாதவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணத்திற்காக, "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலீஃபா" என்பதன் மதிப்பையும் (725), இந்த வசன எண்ணையும் (81) கூட்டினால், அது 1311 அல்லது 19X69 என்ற எண்ணைத் தருகின்றது. (விவரிக்கப்பட்ட ஆதாரங்களுக்கு பின் இணைப்பு 2ஐப் பார்க்கவும்).*

*கடவுளின் உடன்படிக்கைத்*
*தூதரை ஏற்கமறுப்பவர்கள்*
*நம்பமறுப்பவர்களாகவே இருக்கின்றனர்*

82. *(குர்ஆனுடைய முன்னறிவிப்பான)* இதனை ஏற்க மறுப்பவர்கள் தீயவர்களாகவே இருக்கின்றனர்.

83. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும், விருப்பத்துடனோ விருப்பமின்றியோ, அவருக்குச் சரணடைந்திருக்கின்ற போது, மேலும் அவரிடமே அவர்கள் திருப்பப்படுபவர்களாக உள்ள நிலையில், **கடவுள்**–ன் மார்க்கத்தை விடுத்து மற்றொன்றை அவர்கள் தேடுகின்றனரா ?

*கடவுளின் தூதர்களுக்கிடையில்*
*எந்தப் பாகுபாடும் செய்யாதீர்கள்*

84. கூறுவீராக, "நாங்கள் **கடவுள்** மீதும், மேலும் எங்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றிலும், மேலும் ஆப்ரஹாம், இஸ்மாயீல், ஐசக், ஜேக்கப் மற்றும் அவ்வம்சாவளித் தலைவர்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டுள்ளவற்றிலும், மேலும் மோஸஸ், ஜீஸஸ், மற்றும் நபிமார்களுக்கு அவர்களுடைய இரட்சகரிடமிருந்து கொடுக்கப்பட்டவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றோம். அவர்களில் எந்த ஒருவருக்கிடையிலும் பாகுபாடு செய்ய மாட்டோம். அவருக்கு மட்டுமே நாங்கள் சரணடைந்தோராக இருக்கின்றோம்."

*கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட*
*ஒரே ஒரு மார்க்கம்*

85. எவரொருவர் சரணடைதலை விடுத்து மற்றவற்றைத் தன்னுடைய மார்க்கமாக ஏற்றுக் கொள்கின்றாரோ, அது அவரிடம் இருந்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, மேலும் மறுவுலகிலோ, அவர் நஷ்டவாளிகளுடன் இருப்பார்.

86. தூதரானவர் சத்தியம்தான் என்று கண்டு கொண்ட பின்னர், மேலும் திடமான சான்றுகள்* அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதன் பின்னரும், நம்பிக்கை கொண்டு பின்னர் நம்பமறுத்துவிட்ட மக்களைக் **கடவுள்** ஏன் வழி நடத்த வேண்டும் ? தீயவர்களைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

87. **கடவுள்**, மேலும் வானவர்கள், மற்றும் மனிதர்கள் அனைவரின் கண்டனத்திற்கும் இத்தகையவர்கள் உள்ளாகி விட்டனர்.

88. அங்கே அவர்கள் நிலையாகத் தங்கியிருப்பார்கள்; தண்டனையானது அவர்களுக்கு ஒருபோதும் குறைக்கப்படமாட்டாது, அன்றி அவர்கள் அவகாசம் அளிக்கப்படவும் மாட்டார்கள்.

89. அதன் பின்னர் வருந்தி, மேலும் சீர்திருந்திக் கொண்டவர்கள் விலக்களிக்கப்படுகின்றனர். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*வருந்துதல் எப்பொழுது ஏற்றுக்*
*கொள்ளப்பட முடியாததாகின்றது*

90. எவர்கள் நம்பிக்கை கொண்ட பின்னர் நம்பமறுத்து, பின்னர் நம்பமறுத்தலில் மிகவும் ஆழ்ந்து மூழ்கி விடுகின்றனரோ, அவர்களுடைய வருந்துதல் அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது; அவர்கள்தான் மெய்யாகவே வழிதவறியவர்களாக இருக்கின்றனர்.

91. எவர்கள் நம்பமறுத்து மேலும் நம்பமறுத்தவர்களாகவே மரணித்து விடுகின்றனரோ, ஒரு பூமி முழுக்கத் தங்கமும் அவர்கள் எவரிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது, அத்தகையதொரு ஈடானது சாத்தியமானாலும் கூட. அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்; அவர்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

92. நீங்கள் நேசிக்கின்ற உடமைகளில் இருந்து தர்மத்திற்கென நீங்கள் கொடுக்கின்ற வரை நீங்கள் நன்னெறியை அடைந்து விட இயலாது. தர்மத்திற்கென நீங்கள் கொடுப்பது எதுவாயினும், **கடவுள்** அதனைப் பற்றி முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

*அனுமதிக்கப்பட்டவற்றைத்*
*தடை செய்யாதீர்கள்*

93. தோராவானது இறக்கி அனுப்பப்படுவதற்கு முன்னர் இஸ்ரவேல் தங்கள் மீதே குறிப்பிட்ட சில தடைகளைச் சுமத்திக் கொள்கின்ற வரை, இஸ்ரவேலின் சந்ததியினருக்கு அனைத்து உணவுகளும் அனுமதிக்கப்பட்டவையாகவே இருந்து வந்தன. கூறுவீராக, "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், தோராவைக் கொண்டு வந்து அதனைப் படியுங்கள்."

94. இதற்குப் பின்னர் போலித் தடைகளைப் புனைந்து, அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுகின்றவர்கள், உண்மையில் தீயவர்களேயாவர்.

**3:86 கடவுளின் உடன்படிக்கைத் தூதரை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் இனிமேலும் சரணடைந்தவர்கள் (முஸ்லிம்கள்) அல்லர் என்பதை வசனங்கள் 3:82–90 நமக்குத் தெரியப்படுத்துகின்றது. ஏனெனில் இனிமேலும் அவர்கள் குர்ஆனின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை. 3:86ல் குறிப்பிடப்படுகின்ற சான்றுகள் கடவுளின் உடன்படிக்கைத் தூதர் மூலம் வெளிப்படுத்தப்பட்ட குர்ஆனின் கணிதக் குறியீட்டையே குறிக்கின்றது. 3:86 மற்றும் 3:90 ஆகிய இரண்டும் "நம்பிக்கை கொண்ட பின்னர் நம்பமறுப்பதை" பற்றிப் பேசுகின்றன.*

95. கூறுவீராக, "**கடவுள்** சத்தியத்தைப் பிரகடனம் செய்து விட்டார்: நீங்கள் ஆப்ரஹாமின் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்–ஏகத்துவம். அவர் ஒரு போதும் போலித்தெய்வ வழிபாடு செய்பவராக இருந்ததில்லை."

96. மக்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட மிகவும் முக்கியமான ஆலயம் பெக்காவில்* உள்ளதுதான்; அனைத்து மக்களுக்குமான ஆசிர்வதிக்கப்பட்டதொரு கலங்கரை விளக்கு.

97. அதனில் தெளிவான அடையாளங்கள் உள்ளன: ஆப்ரஹாம் நின்ற இடம். அதில் நுழைகின்ற எவரும் பாதுகாப்புடன் கடந்து செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களால் அதற்குச் செலவு செய்ய இயலும் போது, இந்த ஆலயத்திற்கு ஹஜ்ஜைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது மக்கள் **கடவுள்**–க்குச் செலுத்த வேண்டிய கடமையாகும். நம்பமறுப்பவர்களைப் பொறுத்த வரை, **கடவுள்**–க்கு எவரும் தேவையில்லை.

98. கூறுவீராக, "வேதத்தைப் பின்பற்றுபவர்களே, நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஏன் நீங்கள் **கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகளை ஏற்கமறுக்கின்றீர்கள்."

99. கூறுவீராக, "வேதத்தைப் பின்பற்றுபவர்களே, ஏன் நீங்கள் நம்பிக்கை கொள்ள விரும்புபவர்களைக் **கடவுள்**–ன் பாதையில் இருந்து விரட்டுகின்றீர்கள், மேலும் நீங்களே சாட்சிகளாக இருக்கின்ற போதிலும் கூட, அதனைச் சிதைத்து விட முனைகின்றீர்கள்?" நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் பற்றி **கடவுள்** ஒருபோதும் அறியாதவராக இல்லை.

100. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், வேதத்தைப் பெற்றவர்களில் சிலருக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களாயின், நம்பிக்கை கொண்டு விட்ட பின்னர், நம்பமறுப்பவர்களாக அவர்கள் உங்களை மீண்டும் திருப்பி விடுவார்கள்.

101. **கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகள் உங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், மேலும் அவருடைய தூதர் உங்களிடம் வந்திருக்கும் பொழுது, எவ்வாறு நீங்கள் நம்பமறுக்க இயலும்? **கடவுள்**–ஐப் பற்றிப் பிடித்துக் கொள்கின்ற எவரும் சரியான பாதையில் வழிநடத்தப்பட்டவராக இருப்பார்.

102. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டிய விதமாக, நீங்கள் அவரைக் கருத்தில் கொள்ள வேண்டும், மேலும் சரணடைந்தவர்களாகவே அன்றி மரணித்து விடாதீர்கள்.

### *நம்பிக்கையாளர்கள் ஒற்றுமையாக இருக்கின்றனர்*

103. **கடவுள்**–வுடைய கயிற்றை நீங்கள் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டும், நீங்கள் அனைவரும், மேலும் பிரிந்து விட்டவர்களாக இருக்காதீர்கள். உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசிகளை நினைவு கூர்ந்திடுங்கள் – நீங்கள் விரோதிகளாக இருந்து வந்தீர்கள், ஆனால் அவர் உங்களுடைய இதயங்களை இணக்கப்படுத்தினார். அவருடைய அருளால், நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். ஒரு நெருப்புக் குழியின் விளிம்பின் அருகில் நீங்கள் இருந்தீர்கள், ஆனால் உங்களை அதிலிருந்து அவர் காப்பாற்றினார். நீங்கள் வழிகாட்டப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு, **கடவுள்** இவ்விதமாகத் தன்னுடைய வெளிப்பாடுகளை உங்களுக்கு விவரிக்கின்றார்.

104. நல்லதை நோக்கி அழைத்து, நன்னெறியை ஆதரித்து, மேலும் தீமையைத் தடுப்பவர்களாக உங்களில் ஒரு சமுதாயம் இருக்கட்டும். இவர்கள் தான் வெற்றியாளர்களாக இருக்கின்றனர்.

105. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தெளிவான சான்றுகளுக்குப் பின்னரும், பிளவுபட்டவர்களாகவும் தர்க்கித்துக் கொண்டவர்களாகவும் ஆகி விட்டவர்களைப் போல் இருக்காதீர்கள். ஏனெனில் இவர்கள் பயங்கரமானதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

106. சில முகங்கள் *(உல்லாசத்தால்)* பிரகாசமாக இருக்கின்ற அதே சமயம் மற்ற முகங்கள் *(துன்பத்தால்)* இருளடைந்து விடுகின்ற அந்நாள் வரும். எவர்களுடைய முகங்கள் இருளடைந்து உள்ளனவோ அவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் வினவப்படுவார்கள், "நம்பிக்கை கொண்ட பின்னர் நீங்கள் நம்பமறுத்து விட்டீர்கள் அல்லவா? எனவே, உங்களுடைய நம்பமறுத்தலுக்கான தண்டனையை அனுபவியுங்கள்."

107. எவர்களுடைய முகங்கள் பிரகாசமாக உள்ளனவோ அவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் **கடவுள்**–ன் கருணையில் களிப்படைவார்கள்; அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

108. இவை **கடவுள்**–ன் வெளிப்பாடுகளாகும்; சத்தியம் நிறைந்ததாக, அவற்றை நாம் உமக்கு எடுத்துரைக்கின்றோம். மக்களுக்கு எவ்விதக் கஷ்டத்தையும் **கடவுள்** விரும்புவதில்லை.

---

**3:96* இது "ம" எனும் துவக்க எழுத்தை கொண்டதொரு சூராவாகும், மேலும் "மக்கா" என்பதை "பெக்கா" என எழுதுகின்ற விசித்திரமான இந்த எழுத்துக் கோர்வை, குர்ஆனின் கணிதக் குறியீட்டுடன் ஒத்துப் போகின்ற விதமாக "ம" எனும் எழுத்து இடம்பெறக் காரணமாகின்றது. "மக்கா" என்பதன் இயல்பான எழுத்துக் கோர்வை "ம" எனும் எழுத்து இடம் பெறுவதன் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கும் (பின் இணைப்பு ஒன்று).*

109. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியின் மீதுள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியவை, மேலும் அனைத்து விஷயங்களும் **கடவுள்**–ஆல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

*மிகச் சிறந்த சமுதாயம்*

110. எல்லாக் காலத்திலும் மனிதர்களுக்கிடையில் எழுப்பப்பட்டவர்களில் நீங்கள் தான் மிகச் சிறந்த சமுதாயமாக இருக்கின்றீர்கள்: நீங்கள் நன்னெறியை ஆதரிக்கின்றீர்கள், மேலும் தீமையைத் தடுக்கின்றீர்கள், மேலும் நீங்கள் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள். வேதத்தைப் பின்பற்றுபவர்கள் நம்பிக்கை கொண்டார்களாயின், அது அவர்களுக்கு மேலானதாக இருந்திருக்கும். அவர்களில் சிலர் நம்பிக்கை கொள்ளவே செய்கின்றனர், ஆனால் அவர்களில் பெரும்பாலோர் தீயவர்களாகவே உள்ளனர்.

111. உங்களை அவமதிப்பதைத் தாண்டி, அவர்கள் உங்களுக்கு ஒருபோதும் தீங்கிழைக்க இயலாது. அவர்கள் உங்களுடன் சண்டையிட்டால், அவர்கள் புறங்காட்டித் திரும்பி விரண்டோடிடுவார்கள். அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற இயலாது.

112. **கடவுள்**–ன் உடன்படிக்கையையும், அவ்வண்ணமே உங்களுடனான அமைதி உடன்படிக்கைகளையும் அவர்கள் ஆதரித்தாலேயன்றி, அவர்களை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுதெல்லாம் அவர்கள் இழிவுபடுத்தப்படுவார்கள். **கடவுள்**–யிடமிருந்து கடுங்கோபத்திற்கு அவர்கள் உள்ளாகி விட்டனர், மேலும், அதன் விளைவாக, அவர்கள் அவமானத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இது ஏனெனில் அவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்கமறுத்தனர், மேலும் நபிமார்களை அநியாயமாகக் கொலை செய்தனர். இது ஏனெனில் அவர்கள் கீழ்ப்படியாதிருந்தனர், மேலும் வரம்புமீறினர்.

*நன்னெறிமிக்க யூதர்கள் & கிறிஸ்துவர்கள்*

113. அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர்; வேதத்தைப் பின்பற்றுபவர்களில், நன்னெறியாளர்களாக இருப்பவர்களும் உள்ளனர். இரவு முழுவதும் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை அவர்கள் மனனம் செய்கின்றனர், மேலும் அவர்கள் சிரம் பணிந்து வீழ்கின்றனர்.

114. அவர்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்கின்றனர், அவர்கள் நன்னெறியை ஆதரித்துத் தீமையைத் தடுக்கின்றனர், மேலும் அவர்கள் நன்னெறியான காரியங்கள் புரிய விரைகின்றனர். இவர்களே நன்னெறியாளர்களாவர்.

115. அவர்கள் செய்கின்ற எந்த நல்லதும் வெகுமதியளிக்கப்படாமல் போகாது. நன்னெறியாளர்களைப் பற்றிக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

116. நம்பமறுத்தவர்கள் **கடவுள்**–க்கெதிராக அவர்களுடைய பணத்தாலோ அல்லது அவர்களுடைய பிள்ளைகளாலோ ஒருபோதும் உதவி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் நரகத்திற்கு உள்ளாகி விட்டனர், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

117. இந்த வாழ்வில் அவர்கள் நிறைவேற்றியவற்றிற்கு உரிய உவமானமாவது, தங்களுடைய ஆத்மாக்களுக்கு அநீதமிழைத்துக் கொண்ட மக்களின் அறுவடையைத் தாக்கி அதனைத் துடைத்தெடுத்து விட்ட உக்கிரமானதொரு காற்றைப் போன்றதாகும். **கடவுள்** ஒருபோதும் அவர்களுக்கு அநீதமிழைக்கவில்லை; அவர்கள்தான் தங்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

*நயவஞ்சகர்களுடன் தோழமை கொள்ளாதீர்கள்*

118. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுக்குத் தீங்கிழைக்க நினைப்பதை நிறுத்தாத வெளியாட்களுடன் நட்புக் கொள்ளாதீர்கள்; நீங்கள் துன்பப்படுவதைக் காண்பதையும் அவர்கள் விரும்புகின்றனர். அவர்களுடைய வாய்களில் இருந்து வெறுப்பு பொங்கி வழிகின்றது மேலும் அவர்கள் தங்களுடைய நெஞ்சங்களில் மறைத்து வைத்திருப்பவையோ மிகவும் மோசமானதாகும். நீங்கள் புரிந்து கொள்வீர்களாயின், இவ்விதமாக நாம் இந்த வெளிப்பாடுகளை உங்களுக்குத் தெளிவாக்குகின்றோம்.

119. இப்போது நீங்கள் அவர்களை நேசிக்கின்றீர்கள், அதே சமயம் அவர்கள் உங்களை நேசிக்கவில்லை, மேலும் நீங்கள் இந்த வேதம் முழுவதையும் நம்புகின்றீர்கள். அவர்கள் உங்களைச் சந்தித்தால் அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் நம்புகின்றோம்," ஆனால் அவர்கள் அப்பால் சென்றவுடன், உங்கள் பால் கொண்ட கோபத்தின் வெளிப்பாடாகத் தங்களுடைய விரல்களை அவர்கள் கடித்துக் கொள்கின்றனர். கூறுவீராக, "உங்களுடைய கோபத்திலேயே சாகுங்கள்." உள்ளார்ந்த எண்ணங்களைப் பற்றிக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

120. நல்லது எதுவேனும் உங்களுக்கு நேரிட்டால், அவர்கள் வருந்துகின்றனர், ஆனால் உங்களுக்கு ஏதேனும் கெட்டது நிகழ்ந்தால் அவர்கள் குதூகலமடைகின்றனர். நீங்கள் உறுதிப்பாட்டுடன் விடா முயற்சி செய்து, மேலும் நன்னெறியைப் பராமரித்து வந்தால், அவர்களுடைய சூழ்ச்சிகள் உங்களை ஒருபோதும் பாதிக்காது. அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*பத்ர் யுத்தம்*

121. யுத்தத்தில் நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய நிலைகளை நிர்ணயிப்பதற்காக நீர் புறப்பட்ட பொழுது நீர் *(முஹம்மத்)* உம்முடைய மக்கள் மத்தியில் இருந்ததை நினைவு கூர்ந்திடுங்கள். **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

122. உங்களுக்கிடையில் இரண்டு குழுக்கள் கிட்டத் தட்டச் செயலிழந்துவிட்டன, ஆனால் **கடவுள்**தான் அவர்களுடைய இரட்சகராக இருந்தார். நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

123. உங்களுடைய பலஹீனமான நிலைக்குப் பின்னரும், **கடவுள்** உங்களுக்கு பத்ரில் வெற்றியை அளித்தார். எனவே, உங்களுடைய நன்றியறிதலைக் காட்டுவதற்காகக், **கடவுள்**–ஐ நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

*கடவுளின் வானவர்கள்*
*நம்பிக்கையாளர்களுக்கு உதவுகின்றனர்*

124. நீர் நம்பிக்கையாளர்களிடம் கூறினீர், "மூன்றாயிரம் வானவர்களை இறக்கி அனுப்புவதைக் கொண்டு, உங்களுடைய இரட்சகர் உங்களுக்கு ஆதரவளிக்கின்றார் என்பது போதுமானதல்லவா?"

125. உண்மையில், நீங்கள் உறுதிப்பாட்டுடன் விடாமுயற்சியோடிருந்து மேலும் நன்னெறியைப் பராமரித்து வருவீர்களாயின், பின்னர் அவர்கள் உங்களைத் திடீரெனத் தாக்கினால், நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, ஐந்தாயிரம்* வானவர்களைக் கொண்டு உங்களுடைய இரட்சகர் உங்களுக்கு ஆதரவளிப்பார்.

126. உங்களுக்கு நற்செய்தி அளிக்கும் பொருட்டும், மேலும் உங்களுடைய இதயங்களை உறுதிப்படுத்துவதற்காகவும், **கடவுள்** இவ்விதமாக உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றார். வெற்றியானது **கடவுள்**–யிடமிருந்தே வருகின்றது, எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

127. இவ்விதமாக அவர் சில நம்பமறுப்பவர்களை அழித்தொழிக்கின்றார், அல்லது அவர்களை மட்டுப்படுத்துகின்றார்; அவர்கள் எப்போதும் தோல்வியுற்றவர்களாகவே முடிந்து போவார்கள்.

128. அது உம்மைப் பொறுத்ததல்ல; அவர்களை அவர் மீட்டுக் கொள்ளலாம், அல்லது அவர்களுடைய வரம்பு மீறல்களுக்காக அவர்களை அவர் தண்டிக்கலாம்.

129. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது. தான் நாடுகின்ற எவரையும் அவர் மன்னிக்கின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் தண்டிக்கின்றார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*அநியாய வட்டி தடுக்கப்படுகின்றது**

130. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், மேலும் மேலும் பெருகுகின்ற அநியாய வட்டியை நீங்கள் வசூலிக்க வேண்டாம். நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளுங்கள்.

131. நம்பமறுப்பவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்த நரகநெருப்பைக் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

132. நீங்கள் கருணையை அடையும் பொருட்டு, **கடவுள்** மற்றும் தூதருக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

*நன்னெறியாளர்களின் பண்புகள்*

133. உங்களுடைய இரட்சகரிடமிருந்து மன்னிப்பு மேலும் வானங்கள் மற்றும் பூமியைச் சூழ்ந்திருக்கின்ற அகலத்தையுடைய ஒரு சொர்க்கத்தின் பால் நீங்கள் விரைந்திட வேண்டும்; நன்னெறியாளர்களை அது எதிர்பார்த்துக் கொண்டுள்ளது.

134. அவர்கள் நல்ல காலங்களிலும் அவ்வண்ணமே கஷ்ட காலங்களிலும் தர்மத்திற்கெனக் கொடுப்பார்கள். அவர்கள் கோபத்தை அடக்கிக் கொள்பவர்களாகவும், மக்களைப் பிழைபொறுக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். **கடவுள்** பெருந்தன்மையுடையவர்களை நேசிக்கின்றார்.

135. அவர்கள் பாவத்தில் விழுந்து விட்டாலோ அல்லது தங்களுடைய ஆத்மாக்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டாலோ, அவர்கள் **கடவுள்**–ஐ நினைவு கூர்ந்து அவர்களுடைய பாவங்களுக்காகப் பாவ மன்னிப்புக் கேட்பார்கள்–அன்றியும் **கடவுள்**–ஐத் தவிர பாவங்களை மன்னிப்பவர் யார்–மேலும் அவர்கள் அறிந்து கொண்டே, பிடிவாதமாய் பாவங்களில் இருக்க மாட்டார்கள்.

136. அவர்களுடைய பிரதிபலனாவது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து மன்னிப்பு, மற்றும் பாய்கின்ற ஆறுகள் கொண்ட தோட்டங்களுமாகும்; அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள். பணிபுரிவோருக்கு எத்தகையதொரு ஆசிர்வதிக்கப்பட்ட வெகுமதி!

*நன்னெறியாளர்களுக்கு வெற்றி*

137. கடந்த காலத்தில் உங்களுக்காக முன்னுதாரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன; பூமியைச் சுற்றித் திரிந்து நம்பிக்கையற்றவர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளைக் கவனித்துப் பாருங்கள்.

---

**3:124–125 குர்ஆனில் முப்பது வெவ்வேறு எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றின் கூட்டுத்தொகை 162146, 19x8534 என வருகின்றது. இது குர்ஆனின் கணித அற்புதத்துடன் ஒத்துப் போகின்ற விதமாக அமைகின்றது (பார்க்க பின் இணைப்பு 1).*

**3:130 வங்கியின் வைப்பு நிதிகளுக்கான வட்டி மற்றும் கடன்களின் மீது வசூலிக்கப்படுகின்ற வட்டி ஆகியவை மிதமிஞ்சியதாக (5–15%) இல்லாத பட்சத்தில் சட்டபூர்வமானவையே ஆகும். வங்கிகள் முதலீடு செய்கின்றன, மேலும் அவற்றின் இலாபங்கள் வைப்பு நிதியின் உரிமையாளர்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியடைவதாலும் எவரொருவரும் பாதிக்கப்படாதிருப்பதாலும் வங்கிகளிலிருந்து வட்டியைப் பெற்றுக் கொள்ளுதல் பரிபூரணமாகச் சட்டபூர்வமானதேயாகும் (பார்க்க 2:275).*

138. இது மக்களுக்கு ஒரு பிரகடனமாகும், மேலும் நன் னெறியாளர்களுக்கு ஒரு வழிகாட்டலும் நல்லுப தேசமும் ஆகும்.

139. நீங்கள் தடுமாற வேண்டாம், அன்றி துக்கப்படவும் வேண்டாம், ஏனெனில் நீங்கள் நம்பிக்கையாளர்க ளாக இருந்தால், நீங்களே இறுதி வெற்றியாளர் களாக இருக்கின்றீர்கள்.

140. நீங்கள் கஷ்டத்தில் துன்புற்றால், உங்கள் விரோதி யும் அதே கஷ்டத்தில் துன்புறுகின்றான். மக்களுக் கிடையில் வெற்றி மற்றும் தோல்வியின் நாட்களை நாம் மாறி மாறி வரச் செய்கின்றோம். **கடவுள்** இவ் விதமாக உண்மையான நம்பிக்கையாளர்களைப் பிரித்துக் காட்டுகின்றார், மேலும் உங்களில் சிலரை வீரமரணம் கொண்டு ஆசீர்வதிக்கின்றார். **கடவுள்** அநீதியை வெறுக்கின்றார்.

141. **கடவுள்** இவ்விதமாக நம்பிக்கை கொண்டவர்களை உறுதிப்படுத்துகின்றார், மேலும் நம்பமறுப் பவர்களை இழிவுபடுத்துகின்றார்.

*நம்முடைய கோரிக்கைகள் பரிசீலனைக்கு உட்பட்டேயாக வேண்டும்*

142. உங்களில் பாடுபடுபவர்கள் எவர் என்று **கடவுள்** பிரித் துக் காட்டாமலும், மேலும் உறுதிப்பாடுடையவர்கள் எவர் என்று பிரித்துக் காட்டாமலும் சொர்க்கத்தில் நுழைந்து விட நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா ?

143. அதனை எதிர்கொள்ள வேண்டியதற்கு முன்னர், நீங் கள் மரணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தீர்கள். இப்போது உங்களுடைய கண்களுக்கு நேரெதிரில், அதனை நீங்கள் எதிர்கொண்டு விட்டீர்கள்.

144. முஹம்மத் அவருக்கு முன்னர் இருந்த தூதர்களைப் போன்ற ஒரு தூதர் என்பதை விட அதிகம் எதுவுமாக இருந்ததில்லை. அவர் இறந்து விட்டாலோ அல்லது கொல்லப்பட்டு விட்டாலோ, உங்களுடைய குதிங் கால்களின் மீது நீங்கள் புறங்காட்டித் திரும்பி விடு வீர்களா ? தன் குதிங்கால்களின் மீது புறங்காட்டித் திரும்பி விடுகின்ற எவரும், சிறிதளவும், **கடவுள்**–க் குத் தீங்கிழைத்து விடுவதில்லை. நன்றியுடையவர் களாக இருப்பவர்களுக்கு **கடவுள்** வெகுமதியளிக் கின்றார்.

*மரணத்தின் நேரம் முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்டது*

145. முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு தருவா யில், **கடவுள்**–ன் அனுமதிப்படியே தவிர எவர் ஒருவரும் மரணிப்பதில்லை. எவரொருவர் இந்த உலகத்தின் ஆடம்பரங்களைத் தேடுகின்றாரோ, அதிலிருந்து அவருக்கு நாம் கொடுத்து விடுவோம், மேலும் எவ ரொருவர் மறுவுலகின் வெகுமதிகளைத் தேடுகின் றாரோ, அங்கே நாம் அவரை ஆசிர்வதிப்போம். நன்றி யுடையவர்களாக இருப்பவர்களுக்கு நாம் வெகுமதி யளிக்கின்றோம்.

146. எத்தனையோவொரு நபி அவருடன் சேர்ந்து சண் டையிடுவதற்கு, **கடவுள்**–ன் நிமித்தம் நெருக்கடியின் கீழ் எப்பொழுதும் தடுமாறாத பக்தியுடைய மக்களைக் கொண்டிருந்தனர், அன்றியும் அவர்கள் தயக்கம் கொண்டவர்களாகவோ அல்லது ஊக்கமிழந்தவர் களாகவோ ஆகிவிடவில்லை. உறுதியோடிருப்பவர் களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

147. அவர்களுடைய கூற்றெல்லாம், "எங்கள் இரட்சகரே, எங்களுடைய பாவங்களுக்காகவும், எங்களுடைய வரம்புமீறல்களுக்காகவும் எங்களை மன்னிப்பீராக, எங்களுடைய பாதங்களைப் பலப்படுத்துவீராக, மேலும் நம்பமறுப்பவர்களின் மீது எங்களுக்கு வெற்றி யை வழங்குவீராக," என்பதாகவே இருந்தது.

148. அதன் விளைவாக, இந்த உலகத்தின் வெகுமதி களையும், மறுவுலகத்தின் மேலான வெகுமதிகளை யும் **கடவுள்** அவர்களுக்கு வழங்கினார். நன்மை புரிவோரைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

149. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நம்ப மறுப்பவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களுடைய குதிங்கால்களின் மீது பின்புறமாக உங்களைத் திருப்பி விடுவார்கள், பின்னர் நீங்கள் நஷ்டவாளிகளாக ஆகி விடுவீர்கள்.

150. **கடவுள்** மட்டுமே உங்களுடைய இரட்சகரும் அதிபதி யும் ஆவார், மேலும் அவரே மிகச் சிறந்த ஆதரவாள ருமாவார்.

*உங்களுடைய விரோதிகளைக் கடவுள் கட்டுப்படுத்துகின்றார்*

151. நம்பமறுப்பவர்களின் இதயங்களுக்குள் நாம் திகி லை எறிவோம், ஏனெனில் அவர்கள் **கடவுள்**–வுடன் சக்தியற்ற போலித்தெய்வங்களை அமைத்துக் கொள் கின்றனர். அவர்களுடைய விதி நரகமேயாகும்; வரம்புமீறுபவர்களுக்கு எத்தகையதொரு துன்பகர மான தங்குமிடம்!

*உஹத் யுத்தம்*

152. **கடவுள்** உங்களுக்குத் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார், மேலும் அவருடைய அனுமதி யின் பேரில் நீங்கள் அவர்களைத் தோற்கடித்தீர்கள். ஆனால் பின்னர் நீங்கள் தடுமாறினீர்கள், உங்களுக் கிடையிலேயே தர்க்கித்துக் கொண்டீர்கள், மேலும் நீங்கள் ஏக்கம் கொண்டிருந்ததை *(வெற்றியை)* உங்க ளுக்கு அவர் காட்டிய பின்னரும் கீழ்ப்படியாதிருந்தீர் கள். ஆனால் பின்னர், உங்க ளில் சிலர் இந்த உலகத் தின் வெற்றியினால் கிட்டும் பொருட்களால் கவனம் சிதறியவர்களாகி விட்டீர்கள், அதே சமயம் மற்றவர் கள் சரியான முறையில் மறுவுலகத்தின் மீது அக் கறையுடன் இருந்தீர்கள். அவர் பின்னர் உங்களைச் சோதிப்பதற்காக அவர்களிடமிருந்து உங்களைத் திசை திருப்பினார். அவர் உங்களைப் பிழை பொ றுத்து விட்டார். **கடவுள்** தன்னுடைய அருட்கொடை யை நம்பிக்கையாளர்கள் மீது பொழிகின்றார்.

153. உங்களுக்குப் பின்னால் இருந்து தூதர் உங்களை அழைத்துக் கொண்டிருந்த போதிலும், எவர் மீதும் எந்தக் கவனமும் செலுத்தாது, *(வெற்றியினால் கிட்டும் பொருட்களின் பின்னே)* நீங்கள் விரைந்து சென்றதை நினைவு கூர்ந்திடுங்கள். அதன் விளைவாக, நீங்கள் தவற விட்ட எந்த ஒன்றுக்காகவும் நீங்கள் துக்கப்படவோ, அல்லது நீங்கள் அனுபவித்த எந்த கஷ்டத்திற்காகவும் நீங்கள் வேதனைப் படவோ கூடாது என்பதற்காக, ஒரு துன்பத்திற்கு பதிலாக மற்றொன்றை அவர் மாற்றியமைத்தார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் பற்றிக் **கடவுள்** நன்கறிந்தவராக இருக்கின்றார்.

*மரணத் தருவாய் முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்டது*

154. அந்த பின்னடைவிற்குப் பின், உங்களில் சிலரை சாந்தப்படுத்திய அமைதிகரமான நித்திரையை உங்கள் மீது அவர் இறக்கி அனுப்பினார். உங்களில் உள்ள மற்றவர்கள் சுயநலமாகத் தங்களைப் பற்றியே அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் **கடவுள்**–ஐப் பற்றி தகாததாக இருந்த எண்ணங்களைத் தாங்கியிருந்தனர்–அறியாமை நாட்களின் போது அவர்கள் தாங்கியிருந்த அதே எண்ணங்கள். எனவே, அவர்கள் கூறினர், "எங்கள் வசம் எதுவும் உள்ளதா?" கூறுவீராக, "ஒவ்வொன்றும் **கடவுள்** வசமே உள்ளது." அவர்கள் உம்மிடம் வெளிப்படுத்தாதிருந்ததைத் தங்களுக்குள் அவர்கள் மறைத்துக் கொண்டனர். அவர்கள் கூறினர், "எங்கள் வசம் ஏதேனும் இருந்திருந்தால், இந்த யுத்தத்தில் நம்மில் எவரும் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்." கூறுவீராக, "நீங்கள் உங்களுடைய வீடுகளில் தங்கியிருந்தாலும், கொல்லப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தவர்கள் தங்களுடைய மரணப் படுக்கைகளுக்குத் தவழ்ந்தேனும் வந்திருப்பார்கள்." **கடவுள்** இவ்விதமாக உங்களுடைய மெய்யான நம்பிக்கைகளின் திடத்தை வெளிக் கொண்டு வருவதற்காகவும், மேலும் உங்களுடைய இதயங்களில் இருப்பவற்றைச் சோதிப்பதற்காகவும் உங்களைச் சோதனையில் ஆழ்த்துகின்றார். உள்ளார்ந்த எண்ணங்களைப் பற்றிக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

155. நிச்சயமாக, இரண்டு சேனைகளும் மோதிக் கொண்ட அந்நாளில் உங்களில் புறமுதுகு காட்டித் திரும்பியவர்கள் சாத்தானால் ஏமாற்றப்பட்டவர்களாகி விட்டனர். இது அவர்கள் புரிந்த *(தீய)* காரியங்களில் சிலவற்றைப் பிரதிபலிக்கின்றது. **கடவுள்** அவர்களைப் பிழை பொறுத்து விட்டார். **கடவுள்** மன்னிப்பவர், கனிவானவர்.

156. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நம்ப மறுத்து விட்டதுடன் போருக்காகப் பிரயாணித்த அல்லது அணி திரண்ட தங்களுடைய உறவினர்களைப் பற்றி, "அவர்கள் எங்களுடன் தங்கியிருந்திருந்தால் அவர்கள் மரணித்திருக்கவோ அல்லது கொல்லப்பட்டிருக்கவோ மாட்டார்கள்," என்று கூறியவர்களைப் போல் இருக்காதீர்கள். **கடவுள்** இதனை அவர்களுடைய இதயங்களில் துக்கத்திற்கான மூலாதாரமாக ஆக்குகின்றார். வாழ்வையும் மரணத்தையும் **கடவுள்** கட்டுப்படுத்துகின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

157. **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் கொல்லப்பட்டாலும் அல்லது மரணித்து விட்டாலும், **கடவுள்**–யிடமி ருந்து மன்னிப்பும், கருணையும் அவர்கள் திரட்டுகின்ற எந்த ஒன்றையும் விட மிகவும் மேலானதாகும்.

158. நீங்கள் மரணித்தாலும் அல்லது கொல்லப்பட்டாலும், நீங்கள் **கடவுள்** முன்னரே ஒன்று திரட்டப்படுவீர்கள்.

*தூதரின் இரக்க குணம்*

159. **கடவுள்**–யிடமிருந்துள்ள கருணையினால்தான் அவர்கள் பால் இரக்கமுள்ளவராக நீர் ஆகினீர். நீர் முரட்டுத் தனமானவராகவும் அற்பத்தனமான உள்ளத்துடனும் இருந்திருந்தால், அவர்கள் உம்மைக் கை விட்டு விட்டிருப்பார்கள். ஆதலால், நீர் அவர்களைப் பிழை பொறுத்திட வேண்டும், மேலும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்பீராக, மேலும் அவர்களைக் கலந்தாலோசிப்பீராக. நீர் ஒரு முடிவு செய்து விட்டவுடன், உம்முடைய திட்டத்தைச் செயல்படுத்துவீராக, மேலும் **கடவுள்** மீது பொறுப்பேற்படுத்துவீராக. அவர் மீது பொறுப்பேற்படுத்துபவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.*

160. **கடவுள்** உங்களுக்கு ஆதரவளித்தால், எவரும் உங்களைத் தோற்கடிக்க இயலாது. மேலும் அவர் உங்களைக் கைவிட்டு விட்டால், வேறு யார் உங்களுக்கு ஆதரவளிக்க இயலும்? நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

*எவர் ஒருவரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர்*

161. நபியானவரும் கூட போரின் வெற்றிப் பொருட்களில் அவருக்கு உரியவற்றை விட அதிகமாக எடுத்துக் கொள்ள இயலாது. தனக்குரிய நியாயமான பங்கை விட அதிகமாக எடுத்துக் கொள்கின்ற எவரும் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் அதற்குரிய கணக்கைக் கொடுத்தாக வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அது சம்பாதித்தது எதுவாயினும், சிறிதளவும் அநீதமின்றி உரியது கொடுக்கப்படும்.

**3:159 ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (யு.எஸ்.ஏ) செலாவணிதான் பின் வருகின்ற சொற்றொடரைக் கொண்ட ஒரே செலாவணியாக உள்ளது: "கடவுளிடமே நாங்கள் பொறுப்பேற்படுத்துகின்றோம்." அமெரிக்க டாலர்தான் உலகில் மிகவும் உறுதி வாய்ந்த செலாவணியாகவும் மேலும் மற்ற அனைத்துச் செலாவணிகளும் அளவிடப்படுகின்ற ஒரு நியம அளவுகோலாகவும் இருந்து வந்துள்ளது என்பது ஒரு நிதர்சனமாகும்.*

162. **கடவுள்**–ன் திருப்தியைத் தேடிச் செல்கின்ற ஒருவனும், **கடவுள்**–யிடமிருந்து கடுங்கோபத்திற்கு உள்ளாகி, மிகவும் மோசமான தங்குமிடமாகிய, நரகத்தைத் தன்னுடைய விதியாகக் கொள்கின்ற ஒருவனும் சமமானவர்களா ?

163. அவர்கள் நிச்சயமாகக் **கடவுள்**–யிடம் வெவ்வேறு அந்தஸ்துகளை அடைகின்றனர். அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

164. தன்னுடைய வெளிப்பாடுகளை அவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக, மேலும் அவர்களைத் தூய்மைப் படுத்துவதற்காக, மேலும் இவ்வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக, அவர்களில் இருந்தே ஒரு தூதரை அவர்கள் மத்தியில் எழுப்பியதன் மூலமாக நம்பிக்கையாளகளைக் **கடவுள்** ஆசீர்வதித்து விட்டார். இதற்கு முன்னர், அவர்கள் முற்றிலும் வழி தவறிச் சென்று விட்டிருந்தனர்.

165. இப்போது நீங்கள் ஒரு பின்னடைவை அனுபவித்து விட்டதால், *(உங்கள் விரோதியின் மீது)* இரு மடங்கிற்கும் அதிகமான துன்பத்தைக் கொண்டு நீங்கள் வருத்திய போதிலும், நீங்கள் கூறினீர்கள், "ஏன் இது நமக்கு நிகழ்ந்தது ?" கூறுவீராக, "இது உங்களுடைய சொந்தச் செயல்களின் விளைவேயாகும்" **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

166. இரண்டு சேனைகளும் மோதிக் கொண்ட அந்நாளில் உங்களை வருத்தியது, **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பவும், மேலும் நம்பிக்கையாளர்களைப் பிரித்துக் காட்டுவதற்குமாகவே இருந்தது.

167. மேலும், "வாருங்கள் **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிடுங்கள், அல்லது உதவி செய்யுங்கள்" என்று கூறப்பட்டிருந்த நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதற்கு மாகும். அவர்கள் கூறினர், "சண்டையிடுவது எப்படி என்பதை நாங்கள் அறிந்திருந்தால், நாங்கள் உங்களுடன் சேர்ந்து கொண்டிருப்போம்." நம்பிக்கையின் பால் அவர்கள் இருந்ததை விடவும் நம்பமறுத்தலின் பால்தான் அவர்கள் மிகவும் நெருக்கமாக இருந்தனர். தங்களுடைய இதயங்களில் இல்லாதிருந்தவற்றைத் தங்களுடைய வாய்களால் அவர்கள் உதிர்த்தனர். அவர்கள் மறைப்பவற்றைக் **கடவுள்** அறிந்திருக்கின்றார்.

168. அவர்கள் பின்தங்கி கொண்டவாறு, தங்களுடைய உறவினர்களைப்பற்றி அவர்கள் கூறினர், "அவர்கள் எங்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்களாயின், அவர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்." கூறுவீராக, "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், பின்னர் உங்களுடைய சொந்த மரணத்தைத் தடுத்துக் கொள்ளுங்கள்."

*நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை**

169. **கடவுள்**–ன் நிமித்தம் கொல்லப்பட்டு விட்டவர்களை இறந்து விட்டார்கள் என்று நீங்கள் நினைக்காதீர்கள்; அவருடைய வாழ்வாதாரங்களை அனுபவித்தவாறு, அவர்கள் தங்களுடைய இரட்சகரிடம் உயிருடன் இருக்கின்றனர்.

170. **கடவுள்**–ன் அருட்கொடையில் அவர்கள் களிப்புற்றவாறு இருக்கின்றனர், மேலும் தங்களுடன் மரணிக்காத தங்களுடைய தோழர்களுக்கு, அவர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் எனும் நற்செய்தியை அவர்கள் வைத்திருக்கின்றனர்.

171. **கடவுள்**–ன் ஆசிகள் மற்றும் அருட்கொடை, மேலும் நம்பிக்கையாளர்களுக்கு வெகுமதியளிக்கக் **கடவுள்** ஒருபோதும் தவறுவதில்லை எனும் நற்செய்தியை அவர்கள் வைத்திருக்கின்றனர்.

172. தாங்கள் அனுபவிக்கின்ற வன்கொடுமைக்குப் பின்னரும் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்கு மறுமொழியளிப்பவர்கள், மேலும் தங்களுடைய நற்காரியங்களைப் பராமரிப்பவர்கள், மேலும் நன்னெறியானதொரு வாழ்வை நடத்துபவர்களுக்கு, மகத்தானதொரு வெகுமதி.

173. "மக்கள் உங்களுக்கெதிராக அணி திரண்டு விட்டார்கள்; நீங்கள் அவர்களை அஞ்சிக் கொள்ள வேண்டும்," என மனிதர்கள் அவர்களிடம் கூறுகின்ற போது, இது அவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்த மட்டுமே செய்கின்றது, மேலும் அவர்கள் கூறுகின்றனர், "**கடவுள்** எங்களுக்குப் போதுமானவர்; அவர்தான் மிகச் சிறந்த பாதுகாவலர்."

174. அவர்கள் **கடவுள்**–ன் ஆசிகளுக்கும் அருட்கொடைக்கும் தகுதிபெற்று விட்டனர். எந்தத் தீங்கும் எப்பொழுதும் அவர்களைத் தீண்டுவதில்லை, ஏனெனில் அவர்கள் **கடவுள்**–ன் திருப்தியை அடைந்து விட்டார்கள். எல்லையற்ற அருட்கொடையைக் **கடவுள்** தன் வசம் வைத்திருக்கின்றார்.

*அச்சம்: சாத்தானின் ஆயுதம்*

175. தன்னுடைய ஆதிக்கத்தில் உள்ளவர்களுக்குள் அச்சத்தைப் புகுத்துவதே சாத்தானின் வழிமுறையாக உள்ளது. நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், அவர்களுக்கு அஞ்சாதீர்கள். அதற்குப் பதிலாக என்னையே அஞ்சுங்கள்.

176. நம்பமறுப்பதற்கு விரைந்து செல்பவர்களால் கவலைக்குள்ளாகாதீர். அவர்கள் ஒருபோதும் **கடவுள்**–க்குச் சிறிதளவும் தீங்கிழைப்பதில்லை. மாறாக, மறுவுலகத்தில் அவர்களுக்கு எந்தப்பங்கும் இருக்கப் போவதில்லை என்று **கடவுள்** நாடிவிட்டார். அவர்கள் பயங்கரமான தொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

**3:169 நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை என்பதை குர்ஆனிலிருந்து நாம் அறிந்து கொள்கின்றோம்; அவர்கள் தங்களுடைய உலக உடம்புகளை விட்டு வெளியேறி ஆதமும் ஏவாளும் முன்னர் வசித்த அதே சொர்க்கத்திற்கு நேரடியாகச் செல்ல மட்டுமே செய்கின்றனர். (2:154, 8:24, 16:32, 22:58, 44:56, & 36:26–27, பின் இணைப்பு 17ஐயும் பார்க்கவும்).*

177. நம்பிக்கைக்குப் பதிலாக நம்பமறுத்தலைத் தேர்ந்தெடுப்பவர்கள், சிறிதளவும் **கடவுள்**–க்குத் தீங்கிழைத்து விடுவதில்லை; அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

178. நம்பமறுப்பவர்கள் அவர்களுடைய சொந்த நலனுக்காகவே அவர்களை நாம் தொடர்ந்து வழி நடத்திச் செல்கின்றோம் என்றெண்ணிக் கொள்ள வேண்டாம். அவர்களுடைய பாவகரமான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே அவர்களை நாம் தொடர்ந்து வழிநடத்திச் செல்கின்றோம். இழிவுபடுத்துகின்றதொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

179. நல்லவர்களிலிருந்து கெட்டவர்களைப் பிரித்துக் காட்டாமல், நம்பிக்கையாளர்களை நீங்கள் இருக்கின்ற நிலையிலேயே **கடவுள்** விட்டு விடுவதற்கில்லை. அன்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் **கடவுள்** உங்களுக்குத் தெரிவிப்பதில்லை, ஆனால் தன்னுடைய தூதர்களிலிருந்து* அவர் தேர்ந்தெடுக்கின்ற எவர் மீதும் அத்தகைய அறிவைக் **கடவுள்** அருள்கின்றார். எனவே, **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்களின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். நீங்கள் நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்தினால், மகத்தானதொரு பிரதிபலனை நீங்கள் பெறுகின்றீர்கள்.

180. **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களைக் கொடுக்காமல் நிறுத்தி மேலும் அவற்றைச் சேகரித்து வைத்துக் கொள்கின்றவர்கள், அது தங்களுக்கு நல்லது என்றெண்ணிக் கொள்ள வேண்டாம்; அது அவர்களுக்குக் கெட்டதேயாகும். ஏனெனில் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் அவர்களுடைய சேமிப்புகளைத் தங்களுடைய கழுத்துகளைச் சுற்றி அவர்கள் சுமப்பார்கள். **கடவுள்**தான் வானங்கள் மற்றும் பூமியின் இறுதியான வாரிசுதாரராக இருக்கின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

*மானிடர்கள் கடவுளுக்கு பகிரங்கமான அறைகூவல் விடுவதைத் தொடர்கின்றனர்*

181. "**கடவுள்** ஏழையாக இருக்கின்றார், அதே சமயம் நாங்கள் செல்வந்தர்களாக இருக்கின்றோம்," என்று கூறியவர்களுடைய கூற்றுகளைக் **கடவுள்** செவியேற்றுக் கொண்டார். நபிமார்களை அநீதமாக அவர்கள் கொன்றதை நாம் பதிவு செய்ததைப் போலவே, அவர்கள் கூறிய ஒவ்வொன்றையும் நாம் பதிவு செய்வோம், மேலும் நாம் கூறுவோம், "நரகத்தின் தண்டனையை அனுபவியுங்கள்.

182. "இது உங்களுடைய சொந்தக் காரியங்களின் விளைவேயாகும்." மனிதர்கள் பால் **கடவுள்** ஒருபோதும் அநீதமானவராக இல்லை.

183. "நெருப்பால் உட்கொள்ளப்படுகின்ற ஒரு பலியை அவர் கொண்டு வந்தாலேயன்றி, எந்தத் தூதர் மீதும் நாங்கள் நம்பிக்கை கொள்ளாதிருக்க வேண்டும் என்று **கடவுள்** எங்களிடம் ஓர் உடன்படிக்கை செய்துள்ளார்," என்று கூறியவர்கள் அவர்கள் தான். கூறுவீராக, "இப்போது நீங்கள் கேட்டது உட்பட, தெளிவான சான்றுகளுடன் எனக்கு முன்னர் தூதர்கள் உங்களிடம் வந்திருக்கின்றனர். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், பின்னர் ஏன் அவர்களை நீங்கள் கொலை செய்தீர்கள் ?"

184. அவர்கள் உம்மை ஏற்றுக்கொள்ள மறுப்பார்களாயின், உமக்கு முன்னிருந்த தூதர்கள் சான்றுகள், சங்கீதம், மற்றும் அறிவொளியூட்டுகின்ற வேதத்தைக் கொண்டு வந்த போதிலும், ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்டிருக்கின்றனர்.

*ஒரு மாபெரும் வெற்றி*

185. ஒவ்வொரு நபரும் மரணத்தைச் சுவைக்கின்றார், பின்னர் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் உங்களுடைய பிரதிபலனை நீங்கள் பெறுகின்றீர்கள். நூலிழையிலேனும், நரகத்தை விட்டுத் தப்பித்து, சொர்க்கத்தை அடைகின்ற எவரும், ஒரு மாபெரும் வெற்றியை அடைந்து விட்டார். இந்த உலகத்தின் வாழ்வானது ஒரு மாயை என்பதை விட அதிகமாக எதுவுமில்லை.

*தவிர்த்து விட முடியாத சோதனை**

186. உங்களுடைய பணம் மற்றும் உங்களுடைய வாழ்வுகளின் மூலம் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள், மேலும் வேதத்தைப் பெற்றவர்களிடமிருந்தும், போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களிடமிருந்தும், ஏராளமானதொரு நிந்தனைகளை நீங்கள் செவியுறுவீர்கள். நீங்கள் உறுதிப்பாட்டுடன் விடாமுயற்சியோடிருந்து நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவீர்களாயின், இது உங்களுடைய விசுவாசத்தின் பலத்தை நிரூபிக்கும்.

**3:179 கடவுளின் உடன்படிக்கைத் தூதருக்கு வெளிப்படுத்தப்பட்ட எதிர்கால நிகழ்வுகளுக்கு இவ்வுலகத்தின் முடிவு ஓர் உதாரணமாகும். பார்க்க 72:27 க்குரிய அடிக்குறிப்பு.*

**3:186 நுழைவுத் தேர்வுகளில் தேறிய பின்னர், கடவுளை மட்டும் வழிபடுபவர்கள் என நிரூபிக்கப்பட்டவர்கள், இப்பொழுதும் எப்பொழுதும் பரிபூரணமானதொரு வாழ்வை அனுபவிக்கின்றனர். பார்க்க 29:2–3, 10:62, மற்றும் 24:55.*

**187.** வேதத்தைப் பெற்றவர்களிடமிருந்து **கடவுள்** ஓர் உடன்படிக்கை எடுத்தார்: "இதனை நீங்கள் மக்களுக்குப் பிரகடனம் செய்ய வேண்டும், மேலும் ஒரு போதும் அதனை மறைக்காதீர்கள்." ஆனால் அவர்கள் அதனைத் தங்களுடைய முதுகுகளுக்குப் பின்னால் அலட்சியம் செய்து விட்டனர். மேலும் ஓர் அற்பவிலைக்கு அதனை விற்பனை செய்து விட்டனர். எத்தகையதொரு துன்பகரமான வணிகம்.

**188.** எவர்கள் தங்களுடைய காரியங்களைப் பற்றிக் கர்வமடைகின்றனரோ, மேலும் உண்மையிலேயே அவர்கள் செய்திராத ஏதேனும் ஒன்றுக்காகப் புகழப்பட விரும்புகின்றனரோ, அவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம். அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

**189.** வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் **கடவுள்**–க்கே உரியது. **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

*அறிவுத்திறன் உடையவர்கள்*

**190.** வானங்கள் மற்றும் பூமியின் படைப்பிலும், இரவு மற்றும் பகலின் மாறுபாட்டிலும், அறிவுத்திறன் உடையவர்களுக்குப் படிப்பினைகள் இருக்கின்றன.

**191.** நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும், மற்றும் தங்களுடைய விலாப்புறங்களில் இருக்கும் போதும் அவர்கள் **கடவுள்**–ஐ நினைவில்* கொள்கின்றனர், மேலும் வானங்கள் மற்றும் பூமியின் படைப்புகள் குறித்து அவர்கள் சிந்தனை செய்கின்றனர்: "எங்கள் இரட்சகரே, இவை அனைத்தையும் நீர் வீணுக்காகப் படைக்கவில்லை. நீர் துதிப்பிற்குரியவர். நரகத்தின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்றி விடுவீராக.

**192.** "எங்கள் இரட்சகரே, எவரையெல்லாம் நீர் நரகத்திற்கு உட்படுத்தி விடுகின்றீரோ அவர்கள்தான் உம்மால் கைவிடப்பட்டவர்களாக இருக்கின்றனர். இத்தகைய வரம்புமீறுபவர்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

**193.** "எங்கள் இரட்சகரே, அழைப்பாளர் ஒருவர் விசுவாசத்தின்பால் அழைத்ததையும் பிரகடனித்ததையும் நாங்கள் செவியேற்றோம்: 'நீங்கள் உங்களுடைய இரட்சகர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்,' மேலும் நாங்கள் நம்பிக்கை கொண்டு விட்டோம். எங்கள் இரட்சகரே, எங்களுடைய வரம்புமீறல்களை எங்களுக்கு மன்னிப்பீராக, எங்களுடைய பாவங்களை நீக்கிடுவீராக, மேலும் நன்னெறி மிக்க நம்பிக்கையாளர்களாக எங்களை மரணிக்கச் செய்வீராக.

**194.** "எங்கள் இரட்சகரே, உம்முடைய தூதர்களின் மூலம் நீர் வாக்களித்த ஆசிகளை எங்கள் மேல் பொழிவீராக, மேலும் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் எங்களைக் கைவிட்டு விடாதீர். நீர் வாக்குறுதி ஒன்றை ஒருபோதும் முறிப்பதில்லை."

*கடவுள் மறுமொழியளிக்கின்றார்*

**195.** அவர்களுடைய இரட்சகர் அவர்களுக்கு மறுமொழியளித்தார்: "உங்களில் பணிபுரிவோர் எவருக்கும் நீங்கள் செய்கின்ற எந்தக் காரியத்திற்கும் நான் ஒரு போதும் வெகுமதியளிக்கத் தவறுவதில்லை, நீங்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்த போதிலும் – நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் சமமானவர்களே. எனவே, புலம் பெயர்ந்தவர்கள், மேலும் தங்களுடைய வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள், மேலும் என் நிமித்தமாக வன்கொடுமை செய்யப்பட்டவர்கள், அத்துடன் சண்டையிட்டவர்கள் மேலும் கொல்லப்பட்டவர்கள், அவர்களுடைய பாவங்களை நான் நிச்சயமாக பிழைபொறுத்து, பாய்கின்ற ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்குள் அவர்களை அனுமதிப்பேன்." **கடவுள்**–யிடம் இருந்துள்ள வெகுமதி இத்தகையதேயாகும். மேலான வெகுமதியைக் **கடவுள்** வைத்துள்ளார்.

**196.** நம்பமறுப்பவர்களின் போலியான வெற்றிகளால் கவரப்பட்டு விடாதீர்.

**197.** அவர்கள் நிலையற்றதை மட்டுமே அனுபவிக்கின்றனர், பின்னர் நரகத்தைச் சென்றடைவார்கள்; எத்தகையதொரு துன்பகரமான விதி!

**198.** தங்களுடைய இரட்சகரைக் கருத்தில் கொள்பவர்களைப் பொறுத்தவரை, பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்கு அவர்கள் தகுதி பெற்று விட்டனர்; அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். **கடவுள்**–ஆல் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தங்குமிடம் இத்தகையதேயாகும். நன்னெறியாளர்களுக்குக் **கடவுள்** வசம் இருப்பவை மிகவும் மேலானதாகும்.

**3:191 மிகவும் அதிகமான நேரம் உங்களுடைய மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற எவரேனும் அல்லது எதுவேனுமோதான் உங்களுடைய தெய்வமாகும். மிகவும் அதிகமான நேரம் கடவுளை நினைவில் கொண்டிருப்பவர்கள் எவர்களோ அவர்கள் தான் மெய்யான நம்பிக்கையாளர்களாவர். பார்க்க 23:84–89 மற்றும் பின் இணைப்பு 27.*

*நன்னெறிமிக்க யூதர்களும் கிறிஸ்துவர்களும்*

199. நிச்சயமாக, முந்திய வேதங்களைப் பின்பற்றுபவர்களில் சிலர் **கடவுள்** மீதும், மற்றும் உமக்கு வெளிப் படுத்தப்பட்டவற்றின் மீதும், மற்றும் அவர்களுக்கு வெளிப் படுத்தப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்ளவே செய்கின்றனர். அவர்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கின்றனர், மேலும் அவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஒருபோதும் அற்பமானதொரு விலைக்கு விற்று விடுவதில்லை. இவர்கள் தங்களுடைய பிரதி பலனைத் தங்கள் இரட்சகரிடமிருந்து பெறுவார்கள். கணக்கெடுப்பதில் **கடவுள்** மிகவும் திறன் வாய்ந்தவராக இருக்கின்றார்.

200. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் உறுதிப்பாட்டுடன் இருக்க வேண்டும், நீங்கள் விடா முயற்சியோடிருக்க வேண்டும், நீங்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும், நீங்கள் வெற்றிடையும் பொருட்டு நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும்.

****

# சூரா 4: பெண்கள் (அல்–நிஸா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மக்களே,உங்கள் இரட்சகரை கருத்தில் கொள்ளுங்கள், ஒரு நபரிலிருந்து உங்களைப் படைத்து, மேலும் அதிலிருந்தே அதனுடைய ஜோடியைப் படைத்து, பின்னர் அவ்விரண்டில் இருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்த அந்த ஒருவர். எவர் மீது நீங்கள் சத்தியம் செய்கின்றீர்களோ, அந்தக் **கடவுள்**–ஐ நீங்கள் மதித்திட வேண்டும், மேலும் உங்களுடைய பெற்றோர்களையும் மதியுங்கள். **கடவுள்** உங்கள் மீது கண்காணிப்பவராக இருக்கின்றார்.*

*அனாதைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள்*

2. அனாதைகளிடம் அவர்களுக்கு உரிமையுள்ள சொத்துகளை நீங்கள் ஒப்படைத்து விட வேண்டும். நல்லதற்குப் பதிலாக கெட்டதை மாற்றி விடாதீர்கள், மேலும் அவர்களுடைய சொத்துகளை உங்களுடையதுடன் கலந்து விடுவதன் மூலம் விழுங்கி விடாதீர்கள். இது மிகப் பெரியதோர் அநீதியாக இருக்கும்.

*பலதார மணத்திற்குரிய சூழ்நிலைகள்**

3. அனாதைகளுக்கு அது நலம் பயக்கும் என நீங்கள் கருதினால், அவர்களுடைய தாய்மார்களை நீங்கள் மணந்து கொள்ளலாம் – நீங்கள் இரண்டு, மூன்று அல்லது நான்கு திருமணம் புரிந்து கொள்ளலாம். நீங்கள் நியாயமற்றவராகி விடக் கூடும் என்று நீங்கள் அஞ்சினால், பின்னர் நீங்கள் ஒன்றே ஒன்றுடன், அல்லது நீங்கள் ஏற்கெனவே கொண்டிருப்பவற்றுடன் திருப்தியுடன் இருக்க வேண்டும். அத்துடன், இவ்விதமாக நீங்கள் பொருளாதாரக் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்ள அதிகம் சாத்தியமாகும்.

4. பெண்களுக்கு அவர்களுக்குரிய சீதனத்தை, நீதமாக, நீங்கள் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் எதையேனும் தானே முன்வந்து விட்டுக் கொடுத்து விட்டால், அப்போது அதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்; அது நியாயமாக உங்களுக்குரியது ஆகும்.

5. உங்களைப் பொறுப்பாளர்களாக்கிக் **கடவுள்** உங்களிடம் ஒப்படைத்திருக்கின்ற சொத்துகளை பக்குவமடையாத அனாதைகளிடம் கொடுக்காதீர்கள். அதிலிருந்து நீங்கள் அவர்களுக்கு வழங்கிட வேண்டும், மேலும் அவர்களுக்கு ஆடை அணிவியுங்கள், மேலும் அவர்களை கனிவுடன் நடத்திடுங்கள்.

6. அனாதைகளை, அவர்கள் பருவமடைந்து விட்டால் நீங்கள் பரிசோதித்துப்பார்க்க வேண்டும். போதுமான பக்குவமடைந்தவர்களாக அவர்களை நீங்கள் கண்டு கொண்டவுடனேயே அவர்களுடைய சொத்துகளை அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். அவர்கள் வளர்ச்சியடைவதற்கு முன்னர் ஓர் அவசரத்துடன் ஊதாரித்தனமாக அதனை விழுங்கி விடாதீர்கள். செல்வந்தரான பொறுப்பாளர் ஊதியம் எதுவும் வசூலிக்காதிருக்க வேண்டும், ஆனால் ஏழையான பொறுப்பாளர் நியாயமாக வசூலித்துக் கொள்ளலாம். அவர்களுடைய சொத்துகளை அவர்களிடம் நீங்கள் கொடுக்கின்ற போது, நீங்கள் சாட்சிகள் வைத்துக் கொள்ள வேண்டும். கணக்கெடுப்பவராகக் **கடவுள்** போதுமானவர்.

*பெண்களுக்கான வாரிசுச் சொத்து உரிமைகள்*

7. பெற்றோர்களும், உறவினர்களும் விட்டுச் செல்கின்றவற்றில் ஒரு பங்கினை ஆண்கள் பெறுகின்றனர். பெண்களும் கூட பெற்றோர்களும், உறவினர்களும் பின் விட்டுச் செல்கின்றவற்றில் ஒரு பங்கினைப் பெற வேண்டும். அது ஒரு சிறிய அல்லது ஒரு பெரிய வாரிசுரிமையாக இருந்த போதிலும் வரையறுக்கப்பட்டதொரு பங்கு *(பெண்களைச் சென்றடைய வேண்டும்)*.

8. வாரிசுரிமைகளைப் பங்கிடும் பொழுது, உறவினர்கள், அனாதைகள் மற்றும் தேவையுடைய நபர்கள் இருந்தால், நீங்கள் அதிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கவும், அவர்களைக் கனிவுடன் நடத்திடவும் வேண்டும்.

**4:1 இதுவே இரண்டாவது நீண்ட சூராவாகும், மேலும் இத்தலைப்பானது பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை இது இலக்காகக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. எந்த விளக்கமும் பெண்களின் உரிமைகளுக்குச் சாதகமாக இருக்க வேண்டும், எதிர்மாறாக அல்ல.*

**4:3 பலதார மணம் குறித்த விரிவான ஆய்வுரைக்கு பின் இணைப்பு 30ஐப் பார்க்கவும்.*

9. தங்களுடைய சொந்தப் பிள்ளைகளைப் பற்றிக் கவலை கொண்டிருப்பவர்கள், தங்களுக்குப் பின்னால் அவர்களை விட்டுச் செல்லும் பட்சத்தில், **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும் நீதமாக நடந்து கொள்ளவும் வேண்டும்.

10. அனாதைகளின் சொத்துகளை அநியாயமாக விழுங்குபவர்கள், தங்களுடைய வயிறுகளுக்குள் நெருப்பையே உண்ணுகின்றனர், மேலும் அவர்கள் நரகத்தில் துன்புறுவார்கள்.

*உயில் எதுவும் விட்டுச்*
*செல்லப்படாவிட்டால்**

11. உங்களுடைய பிள்ளைகளின் நலனுக்காகக் **கடவுள்** ஓர் உயிலைக் கட்டளையிடுகின்றார்; பெண்களுடைய பங்கின்* இருமடங்கை ஆண்கள் பெறுகின்றனர். வாரிசுதாரர்கள் பெண்களாக மட்டும் இருந்து, இருவருக்கும் அதிகமாக இருப்பார்களாயின், உயிலில் விட்டுச் செல்லப்பட்டவற்றில் மூன்றில் இரண்டை அவர்கள் பெறுகின்றனர். ஒரு மகள் மட்டும் விட்டுச் செல்லப்பட்டிருந்தால், அவள் ஒரு பாதியைப் பெறுகின்றாள். மரணித்தவர் பிள்ளைகள் எவரையேனும் விட்டுச் சென்றிருந்தால், மரணித்தவரின் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் மரணித்தவரின் சொத்தில் ஆறில் ஒரு பங்கைப் பெறுகின்றனர். அவர் பிள்ளைகள் எவரையும் விட்டுச் செல்லவில்லையெனில், மேலும் அவருடைய பெற்றோர்கள் மட்டுமே ஒரே வாரிசுதாரர்களாக இருந்தால், அவருடைய தாயார் மூன்றில் ஒன்றைப் பெறுகின்றார். அவர் உடன் பிறந்தவர்களைக் கொண்டிருந்தால், அப்போது அந்தத் தாயார் ஆறில் ஒன்றைப் பெறுகின்றார். இவை அனைத்தும், மரணித்தவர் விட்டுச் சென்ற எந்த உயிலும்* நிறைவேற்றப்பட்ட பின்னர், மேலும் கடன்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுவிட்ட பின்னருமேயாகும். உங்களுடைய பெற்றோர்கள் மற்றும் உங்களுடைய பிள்ளைகள் என்று வரும் போது, அவர்களில் உங்களுக்கு மிகச் சிறந்தவர் மற்றும் அதிக நலம் பயப்பவர் எவர் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். இது **கடவுள்**–ன் சட்டமாகும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*வாழ்க்கைத் துணைகளுக்குரிய*
*வாரிசுரிமை*

12. அவர்களுக்குப் பிள்ளைகள் எவரும் இல்லாதிருந்தால், உங்கள் மனைவியர் பின் விட்டுச் செல்பவற்றில் பாதியை நீங்கள் பெறுகின்றீர்கள். அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், அவர்கள் விட்டுச் சென்றவற்றில் நான்கில் ஒன்றை நீங்கள் பெறுகின்றீர்கள். இவை அனைத்தும், அவர்கள் விட்டுச் சென்ற எந்த உயிலும் நிறைவேற்றப்பட்ட பின்னர், மேலும் கடன்கள் அனைத்தும் செலுத்தப்பட்டு விட்ட பின்னருமேயாகும். உங்களுக்குப் பிள்ளைகள் எவரும் இல்லாதிருந்தால், நீங்கள் பின் விட்டுச் செல்பவற்றில் நான்கில் ஒன்றை அவர்கள் பெறுகின்றனர். உங்களுக்குப்பிள்ளைகள் இருந்தால், நீங்கள் விட்டுச் செல்பவற்றில் எட்டில் ஒன்றை அவர்கள் பெறுகின்றனர். இவை அனைத்தும், நீங்கள் விட்டுச் செல்கின்ற எந்த உயிலும் நிறைவேற்றப் பட்ட பின்னர், மேலும் கடன்கள் அனைத்தும் செலுத்தப் பட்டு விட்ட பின்னருமேயாகும். மரணித்த ஆணோ அல்லது பெண்ணோ ஒதுங்கி வாழ்கின்ற ஒருவராக இருந்து, ஆணோ அல்லது பெண்ணோ, இரண்டு உடன் பிறந்தவர்களை விட்டுச்சென்றிருந்தால் அவர்களில் ஒவ்வொருவரும் வாரிசுரிமையில் ஆறில் ஒன்றைப் பெறுகின்றனர். அதிகமான உடன் பிறந்தவர்கள் இருப்பார்களாயின், அப்போது அவர்கள் வாரிசுரிமையில் மூன்றில் ஒன்றைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றனர். இவை அனைத்தும் உயில் எதுவும் நிறை வேற்றப்பட்ட பின்னர், மேலும் கடன்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுவிட்ட பின்னருமேயாகும், இதன் விளைவாக எவரொருவரும் பாதிக்கப்படாதிருப்பார்கள். இது **கடவுள்**–ஆல் கட்டளையிடப்பட்ட ஓர் உயிலாகும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், கனிவானவர்.

*தன்னுடைய தூதர் மூலமாகக்*
*கடவுள் நம்முடன் தகவல்*
*தொடர்பு கொள்கின்றார்*

13. இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும். எவர்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படிகின்றனரோ, அவர்களை அவர் பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்குள் அனுமதிப்பார், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். இதுவே மகத்தான பெரு வெற்றியாகும்.

14. **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படிய மறுத்து, அத்துடன் அவருடைய சட்டங்களில் வரம்பு மீறுகின்ற ஒருவனைப் பொறுத்த வரை, அவனை அவர் நரகத்திற்குள் சேர்த்திடுவார், அங்கே அவன், என்றென்றும் தங்கியிருப்பான். இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு அவன் உள்ளாகி விட்டான்.

**4:11 பொதுவாக, மகன்தான் ஒரு குடும்பத்திற்குப் பொறுப்பானவராக இருக்கின்றார், அதே சமயம் மகளானவர் ஒரு கணவரால் கவனித்துக் கொள்ளப்படுகின்றார். ஆயினும், 2:180ல் மரணித்தவரின் குறிப்பிட்ட சூழ்நிலைகளுடன் ஒத்துப்போகின்ற விதமாக, ஓர் உயில் விட்டுச்செல்லப்பட வேண்டும் எனக் குர்ஆன் பரிந்துரைக்கின்றது. உதாரணத்திற்கு, மகன் செல்வந்தராக இருந்து மேலும் மகளானவர் ஏழையாக இருந்தால், அனைத்தையுமோ அல்லது மகனை விட இருமடங்கோ மகளுக்குக் கொடுத்து விடுகின்றவாறு ஓர் உயிலை ஒருவர் விட்டுச் செல்லலாம்.*

*சுகாதாரச்சிறை*

15. உங்களுடைய பெண்களில் எவர்கள் விபசாரம் புரி கின்றனரோ, அவர்களுக்கெதிராக உங்களிலிருந்தே நான்கு சாட்சிகளை நீங்கள் கொண்டிருக்க வேண் டும். அவர்கள் சாட்சி பகர்ந்து விட்டால், பின்னர் அவர் கள் மரணிக்கின்ற வரை, அல்லது வெளியேறுகின்ற தொரு வழியைக்* **கடவுள்** அவர்களுக்கு உருவாக்கு கின்ற வரை இத்தகைய பெண்களை நீங்கள் அவர் களுடைய வீடுகளில் தடுத்து வைக்க வேண்டும்.

16. விபசாரம் புரிகின்ற அந்த ஜோடியினர் தண்டிக்கப் பட வேண்டும்.* அவர்கள் வருந்தி மேலும் சீர்திருந்திக் கொண்டால்,நீங்கள் அவர்களைத் அப்படியே விட்டு விட வேண்டும். **கடவுள்** மீட்பவர், மிக்க கருணையாளர்.

*பாவத்திற்கு வருந்துதல்*

17. அறியாமையினால் பாவத்தில் வீழ்ந்துவிட்டு, பிறகு உடனடியாக அதற்குப்பின்னர் வருந்துகின்றவர்களி டமிருந்து பாவத்திற்கான வருந்துதல் **கடவுள்**–ஆல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. **கடவுள்** அவர்களை மீட்டுக் கொள்கின்றார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

18. தங்களுக்கு மரணம் வருகின்ற வரை பாவங்கள் புரிந் துவிட்டு, பின்னர், "இப்போது நான் பாவத்திற்காக வருந்துகின்றேன்" என்று கூறுபவர்களிடமிருந்து பாவத்திற்கான வருந்துதல் ஏற்றுக் கொள்ளப்பட மாட் டாது. அன்றியும் நம்பமறுப்பவர்களாகவே மரணித்து விடுகின்றவர்களிடமிருந்தும் அது ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. இத்தகையவர்களுக்கு வலி நிறைந்த தொரு தண்டனையை நாம் தயார் செய்துள்ளோம்.

19. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், பெண் கள் பின் விட்டுச் சென்றவற்றிற்கு அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக, வாரிசாகிவிடுவது உங்க ளுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல. நிரூபிக்கப்பட்டு விட்ட விபசாரத்தினை அவர்கள் புரிந்தாலேயன்றி, அவர்களுக்கு நீங்கள் கொடுத்து விட்ட எந்தப் பொரு ளையும் திருப்பித் தருமாறு அவர்களை நீங்கள் நிர்பந் திக்காதிருக்க வேண்டும். அவர்களை நீங்கள் நல்ல முறையில் நடத்திட வேண்டும். அவர்களை நீங்கள் வெறுப்பீர்களாயின், ஏராளமானதொரு நன்மையைக் **கடவுள்** வைத்துள்ள ஏதேனும் ஒன்றை நீங்கள் வெறுக்கக் கூடும்.

*பெண்களுக்கு உரிய பாதுகாப்பு*

20. உங்களுடைய தற்போதைய மனைவியின் இடத்தில், வேறொரு மனைவியை நீங்கள் மணந்து கொள்ள விரும்பினால், அத்துடன்அவர்களில் எவருக்கேனும் நீங்கள் ஒரு மாபெரும் பங்கை கொடுத்திருந்தாலும், அவளுக்கு நீங்கள் கொடுத்து விட்ட எந்த ஒன்றையும் நீங்கள் திருப்பி எடுத்துக் கொள்ளாதிருக்க வேண் டும். மோசடியாகவும், தீய எண்ணத்தோடும், பாவகர மாகவும் அதனை நீங்கள் எடுத்துக் கொள்வீர்களா ?

21. நீங்கள் ஒருவர் மற்றவருடன் அந்தரங்கமாக இருந்து விட்டு, மேலும் அவர்கள் உங்களிடம் பவித்திரமான தொரு வாக்குறுதியையும் பெற்றுவிட்ட பின்னர், எவ் வாறு நீங்கள் அதனை எடுத்துக் கொள்ள இயலும் ?

*தந்தைக்கு உரிய மரியாதை*

22. உங்களுடைய தந்தையருக்கு ஏற்கெனவே திரு மணம் செய்து கொடுக்கப்பட்டிருந்த பெண்களை நீங் கள் மணந்து கொள்ளாதீர்கள் – நிகழ்ந்து விட்ட திரு மணங்கள் விலக்களிக்கப்படுகின்றன, எனவே அவை முறிக்கப்படாதிருக்க வேண்டும் – ஏனெனில் அது மிகப் பெரியதொரு குற்றமும், மேலும் வெறுப்புக்குரிய தொரு செய்கையுமாகும்.

*உறவுமுறை தவறிய பாலுறவு*
*தடை செய்யப்படுகின்றது*

23. *(திருமணத்திற்கு)* உங்களுக்குத் தடை செய்யப்பட்ட வர்கள், உங்கள் தாய்மார்கள், உங்கள் மகள்கள், உங் கள் சகோதரிகள், உங்கள் தந்தையரின் சகோதரி கள், உங்கள் தாயார்களின் சகோதரிகள், உங்கள் சகோதரரின் மகள்கள், உங்கள் சகோதரியின் மகள் கள், உங்களுக்குப் பாலூட்டிய தாய்மார்கள், உங்க ளைப் போலவே ஒரே பெண்மணியிடமிருந்து பாலூட் டப்பட்ட பெண்கள், உங்கள் மனைவியரின் தாய்மார் கள், எவர்களுடன் நீங்கள் திருமணத்தை பூர்த்தி யாக்கி விட்டீர்களோ அந்த உங்கள் மனைவியரின் மகள்கள் – அத்திருமணம் பூர்த்தியாக்கப் படாதிருந் தால், அவர் மகளை நீங்கள் மணமுடித்துக் கொள்ள லாம். அத்துடன் உங்களுடைய வம்சாவழி மகன் களுக்கு மணமுடிக்கப் பட்டிருந்த பெண்களும் உங்க ளுக்குத் தடை செய்யப்பட்டவர்களேயாவர். அத்துடன் ஒரு சமயத்தில் இரண்டு சகோதரிகளுக்கு மண முடித்துக் கொடுக்கப்பட்டவர்களாகவும் நீங்கள் இருந்திட வேண்டாம் –ஆனால் நிகழ்ந்து விட்ட திரு மணங்களை நீங்கள் முறித்து விடாதீர்கள். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

---

***4:15** *நான்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில், நான்கு வெவ்வேறு நபர்களுடன் விபசாரம் புரிகின்ற செயலில் ஒரு பெண் ஈடுபடு வது நான்கு மனிதர்களால் காணப்பட்டுவிட்டால், பொது சுகாதாரத்திற்கு ஓர் ஆபத்தான அடையாளமாக இருக்கின்றாள். இத்தகையவொரு பெண் கிருமிகளின் ஒரு கிடங்காக இருக்கின்றாள், மேலும் ஒரு சுகாதாரச் சிறை அவளிடமிருந்து சமூ கத்தைப் பாதுகாக்கின்றது. சுகாதாரச் சிறை வைக்கப்பட்ட ஒரு பெண்ணைக் காப்பாற்றுகின்ற ஒரு வழி என்பதற்கு நல்ல தொரு உதாரணம் திருமணம் ஆகும் – வேறெவரேனும் ஒருவர் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி, இவ்விதமாக அவளையும் சமூகத்தையும் பாதுகாக்கக் கூடும்.*

***4:16** *நாம் 5:38 மற்றும் 24:2ல் காண்கின்றபடி, பாவிகளைப் பகிரங்கமாக அம்பலப்படுத்துதல் ஒரு முக்கியமான தடுப்பு நட வடிக்கையாக உள்ளது.*

*பரஸ்பர ஈர்ப்பும் சீதனமும் அவசியமாகின்றன*

24. அத்துடன் உங்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கின்ற தங்களுடைய நம்பமறுக்கின்ற கணவர்களை விட்டு அவர்கள் தப்பியோடி வந்தாலேயன்றி, ஏற்கெனவே திருமணம் முடிக்கப்பட்டிருக்கின்ற பெண்களும் உங்களுக்குத் தடை செய்யப்பட்டவர்களேயாவர்.* இவை உங்களுக்குக் **கடவுள்**–ன் கட்டளைகளாகும். மற்ற அனைத்து வகையினரும், அவர்களுக்குரிய அவர்களுடைய சீதனத்தை நீங்கள் செலுத்தி விடும் பட்சத்தில், திருமணத்திற்கு உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களாவர். விபசாரம் புரியாமலிருப்பதன் மூலம், உங்களுடைய ஒழுக்கத்தை நீங்கள் பேணிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக அவர்களில் உங்களுக்குப் பிடித்த எவருக்கும், அவர்களுக்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற சீதனத்தை நீங்கள் அவர்களுக்குச் செலுத்தி விட வேண்டும். சீதனத்தில் ஏதேனும் சில மாற்றங்களுக்கு பரஸ்பரம் ஒப்புக் கொள்வதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடுவதில்லை. **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

25. நம்பிக்கை கொண்டிருக்கின்ற சுதந்திரமான பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்குச் செலவு செய்ய இயலாதவர்கள், நம்பிக்கை கொண்டிருக்கின்ற அடிமைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம். உங்களுடைய நம்பிக்கையைப்பற்றி **கடவுள்** நன்கு அறிந்திருக்கின்றார், மேலும் நம்பிக்கையைப் பொறுத்த வரை, நீங்கள் ஒருவர் மற்றவர்களுக்கு சமமானவர்களேயாவீர்கள். அவர்களை நீங்கள் மணந்து கொள்வதற்கு முன்னர் அவர்களுடைய பொறுப்பாளர்களிடம் நீங்கள் அனுமதி பெற்றுக் கொள்ளவும், நீதமாக அவர்களுக்குரிய சீதனத்தை செலுத்தி விடவும் வேண்டும். திருமணத்திற்குப் பின்கள்ள உறவு, அல்லது இரகசியக் காதலர்களை கொண்டிருப்பது, ஆகியவற்றைச் செய்யாமலிருப்பதன் மூலம், தங்களுடைய ஒழுக்க நடத்தையை அவர்கள் பராமரித்துக் கொள்ள வேண்டும். திருமணத்தின் வாயிலாக அவர்கள் விடுதலையான பிறகு, அவர்கள் விபசாரம் புரிந்தால், அவர்களுடைய தண்டனை சுதந்திரமான பெண்களுக்குரியதில் பாதியாக இருக்க வேண்டும்.* ஓர் அடிமையை மணந்து கொள்வதென்பது, காத்திருக்க இயலாதவர்களுக்கு ஒரு கடைசிப் புகலிடமாக இருக்க வேண்டும். பொறுமையாக இருப் பதே உங்களுக்குச் சிறந்ததாக இருக்கின்றது. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

26. விஷயங்களை உங்களுக்கு விவரிக்கவும், அத்துடன் கடந்தகால முன்னுதாரணங்களின் வாயிலாக உங்களை வழி நடத்தவும், மேலும் உங்களை மீட்டுக் கொள்ளவுமே **கடவுள்** விரும்புகின்றார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*கடவுளின் கருணை*

27. **கடவுள்** உங்களை மீட்க விரும்புகின்றார், அதே சமயம் தங்களுடைய மோகங்களைப் பின் தொடர்பவர்கள், நீங்கள் ஒரு மாபெரும் விலகுதலாக, விலகி விட வேண்டுமென விரும்புகின்றனர்.

28. **கடவுள்** உங்களுடைய சுமையை இலேசாக்கவே விரும்புகின்றார், ஏனெனில் மானிடப் படைப்பு பலஹீனமாகவே படைக்கப்பட்டுள்ளது.

*கொலை, தற்கொலை, மற்றும் சட்ட விரோதமான சம்பாத்தியங்கள் தடை செய்யப்படுகின்றன*

29. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், ஒருவர் மற்றவருடைய உடமைகளை சட்ட விரோதமாக விழுங்கிடாதீர்கள்–பரஸ்பரம் ஏற்கத்தக்க பரிவர்த்தனைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. உங்களை நீங்களே கொலை செய்ய வேண்டாம். **கடவுள்** உங்கள் பால் கருணையாளராக இருக்கின்றார்.

30. எவனொருவன் தீய எண்ணத்துடனும், நன்கறிந்து கொண்டும் இந்த வரம்புமீறல்களைப் புரிகின்றானோ, அவனை நாம் நரகத்திற்கெனக் கண்டனம் செய்வோம். இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

31. உங்களுக்குத் தடுக்கப்பட்டுள்ள பெரும்பாவங்களைப் புரிவதிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், உங்களுடைய பாவங்களை நாம் நீக்கி விடுவோம், அத்துடன் கண்ணியமானதொரு நுழைதலில் உங்களை நுழையச் செய்வோம்.

*ஆண்களும் பெண்களும் தனித்தன்மை வாய்ந்த இயல்புகளுடன் கொடையளிக்கப்பட்டிருக்கின்றனர்*

32. ஒருவர் மற்றவர் மீது **கடவுள்**–ஆல் கொடையளிக்கப்பட்ட இயல்புகளில் நீங்கள் பேராசைப்பட வேண்டாம்; ஆண்கள் குறிப்பிட்ட சில இயல்புகளால் பயனடைகின்றனர், மேலும் பெண்கள் குறிப்பிட்ட சில இயல்புகளால் பயனடைகின்றனர். அவருடைய அருளை உங்கள் மீது பொழியுமாறு **கடவுள்**–ஐ நீங்கள் இறைஞ்சலாம். எல்லா விஷயங்களைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*கடவுளால் முன் மொழியப்பட்ட வாரிசுரிமைச் சட்டங்களில் ஆட்சேபனை செய்யாதீர்கள்*

33. உங்களில் ஒவ்வொருவருக்கும், பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் விட்டுச் செல்லப்பட்ட சொத்துகளில் இருந்து பங்குகளை நாம் நிர்ணயித்திருக்கின்றோம். அத்துடன் திருமணம் மூலமாக உங்களுக்கு உறவாகி விட்டவர்களுக்கும், அவர்களுக்குரிய பங்கை நீங்கள் கொடுத்திட வேண்டும். **கடவுள்** அனைத்து விஷயங்களுக்கும் சாட்சியாகின்றார்.

**4:24 நம்பிக்கையாளர்களுடன் போரிட்டுக்கொண்டு இருக்கின்ற தங்களுடைய நம்பமறுக்கின்ற கணவர்களை விட்டு நம்பிக்கை கொண்ட பெண்கள் தப்பி ஓடி வந்து விட்டால், மறுமணத்திற்கு முன் அவர்கள் விவாகரத்துப் பெற வேண்டியதில்லை (பார்க்க 60:10).*

**4:25 சீர்கெட்டுப் போன முஸ்லிம்களின் சட்டங்களில் கூறப்பட்டுள்ளபடி, திருமணத்திற்குப் பின்னர் விபசாரம் செய்வதற்குரிய தண்டனை கல்லால் அடித்துக் கொல்லப்படுவதாக இருக்கச் சாத்தியமில்லை என்பதை இந்தச் சட்டம் நிரூபிக்கின்றது (பார்க்க 24:2).*

*உங்களுடைய மனைவியரை அடிக்காதீர்கள்**

34 ஆண்கள் பெண்களுக்குப்** பொறுப்பாளிகளாக ஆக்கப்பட்டுள்ளனர், மேலும் **கடவுள்** அவர்களுக்குக் குறிப்பிட்ட சில இயல்புகளைக் கொண்டு கொடையளித்திருக்கின்றார், மேலும் உணவு ஈட்டுபவர்களாக அவர்களை ஆக்கினார். இது **கடவுள்**–ன் கட்டளையாக இருப்பதால், நன்னெறியுடைய பெண்கள் இந்த ஏற்பாட்டினை உவப்புடன் ஏற்றுக் கொள்வார்கள், மேலும் தங்களுடைய கணவன்மார்களை அவர்கள் அங்கு இல்லாத பொழுது கண்ணியப்படுத்துவார்கள். பெண்களிடமிருந்து கலகத்தை நீங்கள் உணர்ந்தால், முதலில் நீங்கள் அவர்களிடம் பேசிப்பார்க்க வேண்டும், பின்னர் படுக்கையிலிருந்து அவர்களைத் தள்ளி வைத்தல் *(போன்ற எதிர் நடவடிக்கைகளை நீங்கள் பயன் படுத்தலாம்), பின்னர் (கடைசியானதொரு மாற்று வழியாக)* நீங்கள் அவர்களை அடிக்கலாம். அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு எதிராக வரம்புமீறுவதற்கு உங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. **கடவுள்** மிகவும் உயர்ந்தவர், மேலதிகாரம் மிக்கவர்.

*திருமணபந்தத்தில் மத்தியஸ்தம்*

35. ஒரு தம்பதியினர் பிரிவினையை அஞ்சுவார்களாயின், அவனுடைய குடும்பத்திலிருந்து ஒரு மத்தியஸ்தரையும் அவளுடைய குடும்பத்திலிருந்து ஒரு மத்தியஸ்தரையும் நீங்கள் நியமிக்க வேண்டும்; அவர்கள் இணக்கமாகிக் கொள்ள முடிவெடுத்தால், அவர்கள் ஒன்றிணைவதற்குக் **கடவுள்** அவர்களுக்கு உதவி செய்வார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், நன்கறிந்தவர்.

*முக்கியமான கட்டளைகள்*

36. நீங்கள் **கடவுள்**–ஐ மட்டும் வழிபட வேண்டும் – அவருடன் எந்த ஒன்றையும் இணைக்காதீர்கள். பெற்றோர்கள், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், உறவினரான அண்டைவீட்டார், உறவினரல்லாத அண்டை வீட்டார், நெருங்கிய கூட்டாளி, பயணத்திலுள்ள அந்நியர்கள், மற்றும் உங்களுடைய ஊழியர்களை கவனித்துக் கொள்ள வேண்டும். காட்டிக் கொள்கின்ற ஆணவக்காரர்களைக் **கடவுள்** விரும்புவதில்லை.

37. அவர்கள் கஞ்சத்தனம் கொண்டவர்கள், கஞ்சத்தனம் கொண்டவர்களாக இருக்கும்படி மக்களைத் தூண்டுபவர்கள், மேலும் அவர்கள் மீது **கடவுள்** தன்னுடைய கொடைகளில் இருந்து அருளியவற்றை மறைப்பவர்கள். நம்பமறுப்பவர்களுக்கு இழிவு நிறைந்ததொரு தண்டனையை நாம் தயாரித்து வைத்துள்ளோம்.

38. **கடவுள்** மற்றும் இறுதி நாள் மீது நம்பிக்கை கொள்ள மறுக்கின்ற அதே சமயம், அவர்கள் காட்டிக் கொள்வதற்காக மட்டுமே தர்மத்திற்கெனப் பணத்தைக் கொடுக்கின்றனர். ஒருவனுடைய தோழனாகச் சாத்தான் இருப்பானாயின், அவன் தான் மிக மோசமான தோழனாவான்.

39. ஏன் அவர்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாள் மீது நம்பிக்கை கொண்டு, **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களில் தங்களுக்குரியதில் இருந்து கொடுக்கக் கூடாது? **கடவுள்** அவர்களைப் பற்றி முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*தெய்வீக நீதி*

40. **கடவுள்** ஓர் அணுவின் எடையளவும் அநீதி இழைப்பதில்லை. மாறாக, நன்னெறியான காரியங்களுக்குரிய வெகுமதியை அவர் பன்மடங்காகப் பெருக்குகின்றார், மேலும் மகத்தானதொரு பிரதி பலனை தன்னிடமிருந்து வழங்குகின்றார்.

41. எனவே, அந்த *(தீர்ப்பு)* நாள் வரும் பொழுது, ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு சாட்சியை நாம் அழைப்போம், மேலும் *(தூதராகிய)* நீர் இந்த மக்களுக்கிடையில் ஒரு சாட்சியாகத் திகழ்வீர்.

**4:34 மிகச் சிறந்த மனோதத்துவ வழிமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் கடவுள் மனைவியை அடித்தலைத் தடை செய்கின்றார். உதாரணத்திற்கு, X அங்காடியில் நீங்கள் பொருட்களை வாங்குவதை நான் விரும்பவில்லையென்றால், Y அங்காடியில் பொருட்களை வாங்கும் படியும், பின்னர் Z அங்காடியில் பொருட்களை வாங்கும் படியும், பின்னர் கடைசியானதொரு புகலிடமாக X அங்காடியில் வாங்கும்படியும் நான் உங்களைக் கேட்டுக் கொள்வேன். இது உங்களை அவமதிக்காமல் X அங்காடியில் நீங்கள் பொருட்களை வாங்குவதிலிருந்து உங்களைத் திறன்வாய்ந்த முறையில் தடுத்துவிடும். அது போலவே, தர்க்கரீதியில் முதலில் அவருடன் பேசிப்பார்த்தல், பின்னர் ஊக்கம் குறைக்கின்ற குறிப்பிட்ட சில எதிர் நடவடிக்கைகளை பிரயோகித்தல் போன்ற மனைவியை அடித்தலுக்கான மாற்று வழிகளைக் கடவுள் வழங்குகின்றார்; பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மற்றும் எங்கும் வியாபித்திருக்கின்ற வழக்கமான, பெண்களை அடக்குமுறை செய்தலை எதிர்த்தல், ஆகியவையே இந்த சூராவின் மூலக்கரு என்பதை நினைவில் கொள்ளவும். இந்த சூராவின் வசனங்களுக்குரிய எந்த விளக்கமும் பெண்களுக்குச் சாதகமானதாகவே இருக்க வேண்டும். இந்த சூராவின் மூலக்கரு "பெண்களின் பாதுகாப்பு" ஆகும்.*

***4:34 இந்தச் சொற்றொடர் "கப்பலின் தலைமை மாலுமி" யாகக் கடவுள் கணவனை நியமிக்கின்றார் என்பதை மட்டுமே குறிக்கின்றது. திருமணம் ஒரு கப்பலைப் போன்றதாகும், மேலும் தலைமை மாலுமியானவர் தன்னுடைய அலுவலர்களை உரியமுறையில் கலந்தாலோசித்து விட்ட பின்னர் அதனை செலுத்துகின்றார். நம்பிக்கை கொண்ட ஒரு மனைவி கடவுளின் இந்த நியமனத்தை, எந்தக் கலகமும் செய்யாது ஏற்றுக் கொள்கிறார்.*

42. அந்நாளில், நம்பமறுத்து மேலும் தூதருக்குக் கீழ்ப் படியாதவர்கள், தாங்கள் தரைமட்டமாகி இருந்திருக் கவேண்டும் என்று விரும்புவார்கள்; ஒரே ஒரு சொல் லைக்கூட **கடவுள்**–யிடமிருந்து மறைக்கின்ற திறன் கொண்டவர்களாக அவர்கள் இருக்கமாட்டார்கள்.

*அங்க சுத்தியை செல்லாமல் ஆக்குவது எது*

43. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் கூறிக்கொண்டிருப்பது என்ன என்பதை நீங்கள் அறிந்திருக்கும் பொருட்டு, போதையில் இருக்கும் போது *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்காதீர்கள். அன்றியும், நீங்கள் வீதியில் பயணித் துக் கொண்டிருந்தாலே அன்றி, பால் ரீதியான உச் சக்கட்ட இன்பத்தை அனுபவித்த பின்னர் குளிக்கா மலும்; நீங்கள் நோயிலோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது நீங்கள் சிறுநீரக அல்லது மலம் தொடர்பான கழிவுகளை வெளியேற்றி இருந்தால் *(வாயு போன்றவை)*, அல்லது *(பாலுறவு ரீதியில்)* பெண் களைத் தீண்டியிருந்தால், அத்துடன் உங்களால் தண்ணீரைக் காண இயலவில்லையென்றால், நீங் கள் தூய்மையான உலர்ந்த மண்ணைத் தொட்டு பின்னர் அதன் மூலம் உங்களுடைய முகங்களையும் கைகளையும் துடைத்துக் கொண்டு நீங்கள் *தயம்மம் (உலர் அங்க சுத்தி)* செய்ய வேண் டும். **கடவுள்** பிழை பொறுப்பவர், மன்னிப்பவர்.

44. வேதத்தின் ஒரு பாகம் வழங்கப்பெற்றவர்களை, எவ் வாறு அவர்கள் வழிதவறுதலைத் தேர்ந்தெடுக்கின் றனர், மேலும் பாதையிலிருந்து நீங்கள் வழிதவற வேண்டும் என்று விரும்புகின்றனர், என்பதை நீர் கவனித்தீரா ?

45. உங்களுடைய விரோதிகளாக இருப்பவர்கள் யார் என்பதைக் **கடவுள்** மிகவும் நன்கு அறிந்திருக்கின் றார். **கடவுள்** தான் ஒரே இரட்சகரும் எஜமானரும் ஆவார். **கடவுள்** தான் ஒரே ஆதரவாளருமாவார்.

46. யூதர்களாக இருப்பவர்களுக்கிடையில், சிலர் உண் மைக்குப் புறம்பாக வார்த்தைகளைத் திரிக்கின்றனர், மேலும் அவர்கள், "நாங்கள் செவியேற்கின்றோம், ஆனால் நாங்கள் மாறு செய்கின்றோம்," மேலும், "உம்முடைய வார்த்தைகள் செவிட்டுக் காதுகளில் விழுந்து கொண்டிருக்கின்றன," மேலும் இந்த மார்க் கத்தைப் பரிகசிப்பதற்காகத் தங்களுடைய நாவு களைச் சுழற்றியவாறு, "ராஇனா* *(எங்களுடைய மேய்ப்பராக இருப்பீராக),"* என்றும் கூறுகின்றனர். "நாங்கள் செவியேற்கின்றோம், அத்துடன் நாங்கள் கீழ்ப்படிகின்றோம், மேலும்"நாங்கள் உம்மைச் செவி யேற்கின்றோம்," மேலும் "*உன்ளுர்னா (எங்கள் மீது கண்காணிப்புடனிருப்பீராக)*," என்றும் அவர்கள் கூறியிருந்தால், அது அவர்களுக்குச் சிறந்ததாகவும் மிகவும் நன்னெறியுடையதாகவும் இருந்திருக்கும். அதற்குப் பதிலாக, தங்களுடைய நம்பமறுத்தலின் காரணத்தால் **கடவுள்**–யிடமிருந்து அவர்கள் கண்ட னத்திற்கு உள்ளாகி விட்டனர். அதன் விளைவாக, அவர்களில் பெரும்பாலோரால் நம்பிக்கை கொள்ள இயலாது.

47. வேதத்தைப் பெற்றவர்களே உங்களைத்தான், குறிப் பிட்ட சில முகங்களை வெளியேறுமாறு நாம் துரத்தி விடுவதற்கு, அல்லது ஸப்பாத்தை அவமரியாதை செய்தவர்களை நாம் கண்டனம் செய்ததைப் போல் அவர்களைக் கண்டனம் செய்து விடுவதற்கு முன் னர், உங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்துகின்ற தாக, இதிலே நாம் வெளிப்படுத்துகின்றவற்றின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். **கடவுள்**–ன் கட்டளையானது செய்து முடிக்கப்படுகின்றது.

*மன்னிக்கப்பட மாட்டாத பாவம்*

48. போலித் தெய்வ வழிபாட்டைக்* **கடவுள்** மன்னிப்ப தில்லை. ஆனால் தான் நாடுகின்ற எவருக்கும் அதை விடச் சிறிய பாவங்களை அவர் மன்னிக்கின்றார். **கடவுள்**–வுடன் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்பவர் எவராயினும், படு பயங்கரமானதொரு பாவத்தை ஜோடித்துவிட்டார்.

49. தங்களையே உயர்த்திக் கொள்கின்றவர்களை நீர் கவனித்தீரா ? சரியாகக் கூறுவதானால், **கடவுள்** தான் சிறிதளவும் அநீதமின்றி, தான் நாடுகின்ற எவரையும் உயர்த்துகின்றார்.

50. **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களை அவர்கள் எவ்வாறு இட்டுக் கட்டுகின்றனர் என்பதைக் கவனிப்பீராக; எத் தனை பெரியதொரு குற்றமாக இது இருக்கின்றது!

51. வேதத்தின் ஒரு பாகம் வழங்கப்பெற்றவர்களை, எவ் வாறு அவர்கள் போலித் தெய்வ வழிபாட்டிலும் பொய்க் கொள்கையிலும் நம்பிக்கை கொண்டு விட்டு, பின்னர், "நம்பமறுப்பவர்கள் நம்பிக்கையாளர் களை விடவும் மேலாக வழி நடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர், !" என்று கூறுகின்றார்கள் என்பதை நீர் கவனித்தீரா ?

52. இவர்கள்தான் **கடவுள்**–ன் கண்டனத்திற்கு உள் ளாகி விட்டவர்கள், மேலும் **கடவுள்** எவரைக் கண் டனம் செய்து விடுகின்றாரோ, அவருக்கு எந்த உதவியாளரையும் நீர் காணமாட்டீர்.

53. ஆட்சியதிகாரத்தில் ஒரு பங்கை அவர்கள் சொந்தம் கொண்டிருக்கின்றனரா ? அவர்கள் கொண்டிருந் தால், மக்களுக்கு ஒரு தானியத்தின் அளவு கூட அவர்கள் கொடுக்க மாட்டார்கள்.

**4:46 "ராஇனா" எனும் இவ்வார்த்தை ஹீப்ரு மொழி பேசுகின்ற மக்கள் சிலரால் ஓர் அசிங்கமான வார்த்தை போல் தோன்று மாறு திரித்துக் கூறப்பட்டது. பார்க்க 2:104.*

**4:48 மரணம் வரை தொடர்ந்து செய்யப்பட்டால், போலித் தெய்வ வழிபாடு மன்னிக்கப்பட மாட்டாததாக உள்ளது. மரணம் வருவதற்கு முன்னர், போலித் தெய்வ வழிபாடு உட்பட, எந்தக் குற்றத்திலிருந்தும் ஒருவர் எப்பொழுதும் மீண்டு கொள்ளலாம் (பார்க்க 4:18 & 40:66).*

54. **கடவுள்** தன்னுடைய ஆசீர்வாதங்களை அவர்கள் மீது பொழிந்து விட்டார் என்பதால் மக்கள் மீது அவர்கள் பொறாமையுணர்வு கொண்டிருக்கின்றனரா? ஆப்ர ஹாமின் குடும்பத்தாருக்கு வேதத்தையும், ஞானத் தையும் நாம் கொடுத்துள்ளோம்; ஒரு மாபெரும் அரசாங்கத்தை அவர்களுக்கு நாம் அளித்தோம்.

55. அவர்களில் சிலர் அதில் நம்பிக்கை கொண்டனர், மேலும் அவர்களில் சிலர் அதிலிருந்து திரும்பிக் கொண்டனர்; இத்தகையவர்களுக்கு நரகம்தான் நியாயமான ஒரே தண்டனையாகும்.

*நரகத்தின் உருவக வர்ணனை*

56. நிச்சயமாக, எவர்கள் நம்முடைய வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனரோ, அவர்களை நாம் நரகநெருப்பிற்கெனக் கண்டனம் செய்வோம். அவர்களுடைய தோல்கள் கருகுகின்ற போதெல்லாம், அவர்களுக்கு நாம் புதிய தோல்களைக் கொடுப் போம். இவ்விதமாக, அவர்கள் தொடர்ந்து துன்புறுவார் கள். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

57. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்த வரை, பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்குள் அவர்களை நாம் அனுமதிப்போம்; அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பர். அங்கே அவர்கள் தூய்மையான துணை களைக் கொண்டிருப்பர். பேரானந்தமானதொரு நிழலின் உள்ளே அவர்களை நாம் நுழையச் செய் வோம்.

*நேர்மை & நீதி பரிந்துரைக்கப்படுகின்றது*

58. மக்கள் உங்களிடம் ஒப்படைத்த எந்த ஒன்றையும் திருப்பிக் கொடுத்து விடுமாறு **கடவுள்** உங்களுக் குக் கட்டளையிடுகின்றார். மக்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்பளித்தால், நீங்கள் நீதமாகத் தீர்ப்பளிக்க வேண்டும். உண்மையில் மிகச்சிறந்த அறிவூட்டல் **கடவுள்** உங்களுக்குப் பரிந்துரைப்பதே ஆகும். **கடவுள்** செவியேற்பவர், பார்ப்பவர்.

59. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–க்குக் கீழ்ப்படிய வேண்டும், மேலும் நீங்கள் தூதருக்கும், உங்களில் பொறுப்பு வகிப்போருக்கும் கீழ்ப்படிய வேண்டும். ஏதேனும் விஷயத்தில் நீங்கள் சச்சரவிட்டுக் கொண்டால், நீங்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்களா யிருப்பின், அதனை நீங்கள் **கடவுள்** மற்றும் தூதரி டம் கொண்டு செல்ல வேண்டும். இதுவே உங்களுக் குச் சிறந்ததாக உள்ளது, மேலும் மிகச் சிறந்த தீர்வை உங்களுக்கு வழங்குகின்றது.

*நம்பிக்கையாளர்களா அல்லது நயவஞ்சகர்களா?*

60. உமக்கு வெளிப்படுத்தபட்டவற்றின் மீதும், மேலும் உமக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும், அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக கோரிக் கொண்டு, பின்னர் தங்களுடைய போலித் தெய்வங் களின் அநீதமான சட்டங்களை ஆதரிப்பவர்களை நீர் கவனித்தீரா? இத்தகைய சட்டங்களை நிராகரிக்க வேண்டும் என அவர்கள் கட்டளையிடப்பட்டிருந்த னர். உண்மையில், அவர்களை மிக நெடிய வழிதவறு தலில் இட்டுச் செல்ல வேண்டும் என்பதே சாத்தா னின் விருப்பமாகும்.

61. "**கடவுள்** வெளிப்படுத்தியவற்றை நோக்கியும், தூதரை நோக்கியும் வாருங்கள்," என அவர்களிடம் கூறப்பட்டால், நயவஞ்சகர்கள் உம்மை முற்றிலும் தவிர்த்து விடுவதை நீர் காண்பீர்.

62. அவர்களுடைய சொந்தச் செயல்களின் ஒரு விளை வாக, ஒரு பேரழிவு அவர்களைத் தாக்கும் பொழுது அவர்களுக்கு அது எப்படி இருக்கும்? அப்போது அவர்கள் உம்மிடம் வந்து **கடவுள்** மீது ஆணையிடு வார்கள்: "எங்களுடைய நோக்கங்கள் நல்லவை யாகவும் நன்னெறியானதாகவும் இருந்தன!"

63. **கடவுள்** அவர்களுடைய உள்ளார்ந்த நோக்கங்களை முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார். நீர் அவர் களை அசட்டை செய்யவும், அவர்களுக்கு போதிக் கவும், அத்துடன் அவர்களுடைய ஆத்மாக்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய நல்ல அறிவுரையை அவர்களுக்குக் கொடுக்கவும் வேண்டும்.

*கேள்வி கேட்காது சரணடைதல்:*
*மெய்யான நம்பிக்கையாளர்களின் தன்மை*

64. **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பக் கீழ்ப்படியப்படு வதற்காகவே அன்றி எந்தத் தூதரையும் நாம் அனுப் பிடவில்லை. அவர்கள் தங்களுடைய ஆத்மாக்க ளுக்கு அநீதியிழைத்துக் கொண்ட பொழுது, உம்மி டம் அவர்கள் வந்து, **கடவுள்**–யிடம் பாவ மன்னிப்பிற் காகப் பிரார்த்தித்து, அத்துடன் தூதரும் அவர்களு டைய பாவமன்னிப்பிற்காகப் பிரார்த்தித்திருந்தால், **கடவுள்**–ஐ மீட்பவராக, மிக்க கருணையாளராக அவர்கள் கண்டிருப்பார்கள்.

65. உம்முடைய இரட்சகர் மீது ஆணையாக, நிச்சயமாக ஒரு போதும் கிடையாது; தங்களுடைய சச்சரவுகளில் தீர்ப்பளிக்கப்படுவதற்காக உம்மிடம் அவர்கள் வந்து, பின்னர் உம்முடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதில் தங்களுடைய இதயங்களில் எந்த விதமான தயக்கம் எதுவும் காணாதிருந்தாலேயன்றி அவர்கள் நம்பிக் கையாளர்கள் அல்லர். அவர்கள் முழுமையானதொரு சரணடைதலாகச் சரணடைந்தாக வேண்டும்.

*கடவுளின் சோதனைகள் ஒருபோதும் காரணமற்றவையல்ல*

66. அவர்களுக்கு நாம் இவ்வாறு ஆணையிட்டிருந்தால்: "உங்களுடைய உயிர்களை நீங்கள் அர்ப்பணிக்க வேண்டும்," அல்லது "உங்களுடைய வீடுகளைத் துறந்து விட வேண்டும்," அவர்களில் ஒரு சிலரைத் தவிர, அவர்கள் அதனைச் செய்திருக்க மாட்டார்கள். *(இத்தகையதொரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும்)* செய்யும்படி அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டவற்றை அவர்கள் செய்திருப்பார்களாயின், அது அவர்களுக்கு நன்மையானதாக இருந்திருக்கும், மேலும் அவர்களுடைய விசுவாசத்தின் பலத்தை நிரூபித்திருக்கும்.

67. அத்துடன் மகத்தானதொரு பிரதிபலனை அவர்களுக்கு நாம் வழங்கியிருப்போம்.

68. அத்துடன் சரியான பாதையில் அவர்களை நாம் வழிநடத்தியிருப்போம்.

*நம்பிக்கையாளர்களின் சமத்துவம்*

69. **கடவுள்** மற்றும் தூதருக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் **கடவுள்**–ஆல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களான – நபிமார்கள், புனிதர்கள், உயிர்த்தியாகிகள், மற்றும் நன்னெறியாளர்களுடன் சேர்ந்தவர்களாவர். இவர்கள் தான் மிகச் சிறந்த குழுமமாக இருக்கின்றனர்.

70. **கடவுள்**–யிடமிருந்துள்ள ஆசீர்வாதம் இத்தகையதேயாகும்; **கடவுள்** தான் மிகவும் நன்கு அறிந்தவர்.

71. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், மேலும் தனித்தனியாகப் புறப்பட வேண்டும், அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்து புறப்பட வேண்டும்.

72. நிச்சயமாக, உங்களில் தங்களுடைய பாதங்களை இழுத்துக் கொள்பவர்களும் உள்ளனர், பின்னர் ஒரு பின்னடைவு உங்களை வருத்தினால், அவர்கள் கூறுவார்கள், "அவர்களுடன் நானும் கொல்லப்பட்டு விடவில்லை என்பதால் **கடவுள்** என்னை ஆசீர்வதித்து விட்டார்."

73. ஆனால் **கடவுள்**–யிடமிருந்து ஓர் ஆசீர்வாதத்தை நீங்கள் அடைந்தால், உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் எந்த நட்பும் எப்பொழுதும் இருந்திராததைப் போல், அவர்கள் கூறுவார்கள், "இத்தகையதொரு மகத்தான வெற்றியில் நானும் பங்கு பெற்றிருக்கக்கூடும் என்பதால், அவர்களுடன் நான் இருந்திருக்க வேண்டுமே என நான் விரும்புகின்றேன்."

74. எவர்கள் **கடவுள்**–ன் நிமித்தம் விருப்பத்துடன் சண்டையிடுகின்றனரோ, அவர்கள்தான் மறுவுலகை விரும்பி இந்த உலகத்தைத் தியாகம் செய்தவர்களாக இருக்கின்றனர். **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிடுகின்ற எவராயினும், பின்னர் கொல்லப்பட்டு விட்டாலோ, அல்லது வெற்றி அடைந்தாலோ, அவருக்கு மகத்தானதொரு பிரதிபலனை நிச்சயமாக நாம் வழங்குவோம்.

*நம்பிக்கையாளர்கள் வீரமுள்ளவர்களாக இருக்கின்றனர்*

75. **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் ஏன் சண்டையிடாதிருக்க வேண்டும், பலவீனமான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இவ்வாறு இறைஞ்சிக் கொண்டிருக்கையில்: "எங்கள் இரட்சகரே, அடக்குமுறை செய்யும் மக்களாக இருக்கின்ற இந்தச் சமூகத்திடமிருந்து எங்களுக்கு விடுதலையளிப்பீராக, அத்துடன் நீரே எங்களுடைய இரட்சகராகவும் அதிபதியாகவும் இருப்பீராக."

76. நம்பிக்கை கொண்டவர்கள் **கடவுள்**–ன் நிமித்தமாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர், அதே சமயம் நம்பமறுப்பவர்கள் கொடுங்கோன்மையின் நிமித்தமாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, சாத்தானின் கூட்டாளிகளுடன் நீங்கள் சண்டையிட வேண்டும்; சாத்தானின் சக்தி ஒன்றுமற்றதேயாகும்.

77. "நீங்கள் சண்டை செய்யத் தேவையில்லை; நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பது மற்றும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுப்பதேயாகும்," என்று கூறப்பட்டு, பின்னர் சண்டையிடுதல் அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட பொழுது, அவர்கள் **கடவுள்**–க்கு அஞ்சிய அளவு, அல்லது அதைவிடவும் அதிகமாக மக்களை அஞ்சிய அவர்களை நீர் கவனித்தீரா ? அவர்கள் கூறினர், "எங்கள் இரட்சகரே, ஏன் எங்கள் மீது நீர் இந்தச் சண்டையைத் திணித்தீர் ? நீர் மட்டும் சிறிதொரு காலம் எங்களுக்கு அவகாசமளித்திருந்தால்!" கூறுவீராக, "இந்த உலகத்தின் பொருட்கள் ஒன்றுமற்றவையாகவே இருக்கின்றன, அதே சமயம் மறுவுலகமானது நன்னெறியாளர்களுக்கு மிகவும் மேலானதாக இருக்கின்றது, மேலும் நீங்கள் ஒருபோதும் மிகச் சிறிதளவும் அநீதியை அனுபவிப்பதில்லை."

*கடவுள்தான் ஒவ்வொன்றையும் செய்பவராக இருக்கின்றார்**

78. நீங்கள் எங்கிருந்த போதிலும், மரணம் உங்களைப் பிடித்தே தீரும், நீங்கள் கடினமான தடைகள் கொண்ட கோட்டைகளில் வசித்தாலும் சரியே. அவர்களுக்கு ஏதேனும் நல்லது நிகழ்ந்தால், அவர்கள் கூறுகின்றனர், "இது **கடவுள்**–யிடமிருந்து வந்தது," ஆனால் ஏதேனும் கெட்டது அவர்களை வருத்தினால், அவர்கள் உம்மைப் பழிக்கின்றனர். கூறுவீராக, "ஒவ்வொன்றும் **கடவுள்**–யிடமிருந்தே வருகின்றது." ஏன் இந்த மக்கள் கிட்டத்தட்ட ஒவ்வொன்றையும் தவறாகவே புரிந்து கொள்கின்றனர்?

*கெட்டது எதுவும் கடவுளிடமிருந்து வருவதில்லை*

79. உங்களுக்கு நேரிடுகின்ற எந்த ஒரு நல்லதும் **கடவுள்**–யிடமிருந்தே வருகின்றது, மேலும் உங்களுக்கு நேரிடுகின்ற எந்த ஒரு கெட்டதும் உங்களிடமிருந்தே வருகின்றது. மக்களுக்கு ஒரு தூதராக உம்மை நாம் அனுப்பியுள்ளோம்,* மேலும் சாட்சியாகக் **கடவுள்** போதுமானவர்.

80. தூதருக்குக் கீழ்ப்படிகின்ற எவரும் **கடவுள்**–க்கே கீழ்ப்படிகின்றார். திரும்பிச் சென்று விடுகின்றவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய பொறுப்பாளராக உம்மை நாம் அனுப்பவில்லை.

81. கீழ்ப்படிதலை அவர்கள் வாக்களிக்கின்றனர், ஆனால் அவர்கள் உம்மை விட்டு விலகிச் சென்றவுடன், அவர்களில் சிலர் தங்களுடைய கூற்றுக்கு மாற்றமான நோக்கங்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய உள்ளார்ந்த நோக்கங்களைக் **கடவுள்** பதிவு செய்து கொண்டிருக்கின்றார். நீர் அவர்களை அசட்டை செய்யவும், உம்முடைய பொறுப்பைக் **கடவுள்** மீது வைக்கவும் வேண்டும். ஒரு பொறுப்பாளராகக் **கடவுள்** போதுமானவர்.

*தெய்வீக இயற்றுதலுக்கான ஆதாரம்*

82. ஏன் அவர்கள் இந்தக் குர்ஆனைக் கவனத்துடன் ஆராயக்கூடாது? இது **கடவுள்** அல்லாத மற்றவரிடமிருந்து வந்திருந்தால், அதனில் எண்ணற்ற முரண்பாடுகளை* அவர்கள் கண்டிருப்பார்கள்.

*சாத்தானுடைய வதந்திகளைக் குறித்து விழிப்புடனிருங்கள்*

83. பாதுகாப்பைப் பாதிக்கின்ற ஏதேனும் ஒரு வதந்தி அவர்களுடைய வழியில் வரும் பொழுது, அவர்கள் அதனைப் பரப்பி விடுகின்றனர். அவர்கள் அதனைத் தூதரிடமும், அவர்களுக்கிடையில் பொறுப்பு வகிப்பவர்களிடமும் எடுத்துரைத்திருந்தால், இத்தகைய விஷயங்களைப் புரிந்து கொள்கின்றவர்கள் அவர்களுக்குத் தகவல் தந்திருப்பார்கள். உங்கள் பால் **கடவுள்**–ன் அருளும் அவருடைய கருணையும் இல்லாதிருந்தால், ஒரு சிலரைத் தவிர, நீங்கள் சாத்தானைப் பின்பற்றி இருப்பீர்கள்.

84. **கடவுள்**–ன் நிமித்தமாக நீர் சண்டையிட வேண்டும்; உம்முடைய சொந்த ஆத்மாவிற்கு மட்டுமே நீர் பொறுப்பாக இருக்கின்றீர், ஆயினும் அதனையே செய்யுமாறு நம்பிக்கையாளர்களைத் தூண்டுவீராக, நம்ப மறுப்பவர்களின் சக்தியைக் **கடவுள்** மட்டுப்படுத்தி விடுவார். **கடவுள்** மிகவும் அதிகமான சக்தியுடையவர், மேலும் மிகவும் அதிகத் திறன் வாய்ந்தவர்.

*பொறுப்பு*

85. ஒரு நல்ல காரியத்திற்குச் சிபாரிசு செய்கின்ற எவராயினும் அதன் நற்பலனிலிருந்து ஒரு பங்கைப் பெறுகின்றார், மேலும் ஒரு தீய காரியத்திற்குச் சிபாரிசு செய்கின்ற எவராயினும் அதிலிருந்து ஒரு பங்கை அடைகின்றார். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் கட்டுப்படுத்துகின்றார்.

*நீங்கள் மரியாதையளிப்பவராக இருக்க வேண்டும்*

86. ஒரு வாழ்த்துதல் கொண்டு வாழ்த்தப்பட்டால், சிறப்பான ஒரு வாழ்த்தையோ அல்லது குறைந்தபட்சம் நிகரான ஒன்றையோ கொண்டு நீங்கள் மறுமொழியளிக்க வேண்டும். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் கணக்கெடுக்கின்றார்.

87. **கடவுள்:** அவரைத் தவிர தெய்வம் இல்லை. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் உங்களை அவர் நிச்சயமாக ஒன்று திரட்டுவார் – தவிர்த்து விட இயலாத அந்நாள். **கடவுள்**–வுடையதை விடவும் எவருடைய விவரிப்பு அதிகம் உண்மை நிறைந்தது?

**4:78 கடவுள் தான் ஒவ்வொன்றையும் செய்பவராக இருக்கின்றார் என்ற போதிலும் (8:17), கெட்ட விஷயங்கள் நம்முடைய சொந்தச் செயல்களின் விளைவுகளேயாகும் (42:30, 64:11). நமக்குப் பயன்படுவதற்காகக் கடவுள் நெருப்பைப் படைத்தார், ஆனால் அதனுள் உங்களுடைய விரலை வைக்க நீங்கள் முடிவு செய்யக் கூடும். இவ்விதமாக நாம் நமக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றோம். உங்களுடைய விரலை நீங்கள் நெருப்புக்குள் வைத்தால், அது புண்படுத்தும் என்பது கடவுளின் விதியாகும்.*

**4:79 நபித்துவத்திற்கான எந்தச் சான்றும் முஹம்மதுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகையால் தான் "ஒரு சாட்சியாகக் கடவுள் போதுமானவர்" எனும் இந்த வாசகம் இடம் பெறுகின்றது (29:51–52). "முஹம்மத்" என்பதன் எழுத்தெண் மதிப்பு 92, மேலும் 92+79=171 = 19x9.*

**4:82 இருண்ட காலங்களின் போது வெளிப்படுத்தப்பட்டதாக இந்தக் குர்ஆன் இருந்த போதிலும், அறிவுக்குப் புறம்பான எதனையும் அதனில் உங்களால் காண இயலாது; தெய்வீக இயற்றுதலுக்கான மற்றொரு ஆதாரமாக இது உள்ளது (பார்க்க அறிமுகவுரை மற்றும் பின் இணைப்பு ஒன்று).*

*நயவஞ்சகர்களை எவ்வாறு நடத்துவது*

**88.** *(உங்களில் உள்ள)* நயவஞ்சகர்களைக் குறித்து ஏன் நீங்கள் உங்களையே இரண்டு குழுக்களாகப் பிரித்திட வேண்டும்? **கடவுள்**தான் அவர்களுடைய சொந்த நடத்தையின் காரணமாக அவர்களைக் கண்டனம் செய்தவர். **கடவுள்**–ஆல் வழி தவறுதலில் அனுப்பப்பட்டு விட்டவர்களை நீங்கள் வழி நடத்த விரும்புகின்றீர்களா? எவரையெல்லாம் **கடவுள்** வழிதவறுதலில் அனுப்பி விடுகின்றாரோ, அவர்களை வழிநடத்துவதற்குரிய ஒரு வழியை நீர் ஒருபோதும் காணமாட்டீர்.

**89.** அவர்கள் நம்பமறுத்து விட்டதைப் போல நீங்களும் நம்பமறுத்து விட வேண்டும், பின்னர் நீங்கள் சமமானவர்களாகி விடுவீர்கள் என்று அவர்கள் விரும்புகின்றனர். **கடவுள்**–ன் நிமித்தம் உங்களுடன் அவர்கள் புறப்பட்டாலேயன்றி, அவர்களை நண்பர்களாகக் கருதாதீர்கள். அவர்கள் உங்களுக்கு எதிராகத் திரும்பினால், நீங்கள் அவர்களுடன் சண்டையிட வேண்டும், மேலும் போரில் நீங்கள் அவர்களை எதிர் கொண்டால், நீங்கள் அவர்களைக் கொல்லலாம். அவர்களை நண்பர்களாகவோ, அல்லது கூட்டாளிகளாகவோ நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம்.*

**90.** எவர்களுடன் நீங்கள் அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளீர்களோ அம்மக்களுடன் சேர்ந்து கொண்டவர்கள், மேலும் உங்களுடனோ, அன்றித் தங்களுடைய உறவினர்களுடனோ சண்டையிட விரும்பாது உங்களிடம் வருபவர்கள், விதிவிலக்களிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். **கடவுள்** நாடியிருந்தால், உங்களுக்கெதிராகச் சண்டையிடுவதற்கு அவர்களை அவர் அனுமதித்திருக்க இயலும். ஆகவே, அவர்கள் உங்களை அப்படியே விட்டு விட்டு, உங்களுடன் சண்டையிடுவதிலிருந்து விலகிக் கொண்டு, மேலும் உங்களிடம் சமாதானத்தை முன் வைத்தால், பின்னர் அவர்களுடன் சண்டையிடுவதற்குக் **கடவுள்** உங்களுக்கு எந்த அனுமதியும் தந்திடவில்லை.

**91.** உங்களுடனும், அத்துடன் தங்களுடைய சமூகத்தாருடனும் சமாதானம் செய்து கொள்ள விரும்புகின்ற மற்றவர்களை நீங்கள் காண்பீர்கள். ஆயினும், போர் வெடித்தவுடன், அவர்கள் உங்களுக்கு எதிராகச் சண்டையிடுகின்றனர். இந்த மக்கள் உங்களை அப்படியே விட்டு விட்டு, உங்களிடம் சமாதானத்தை முன் வைத்து, உங்களுடன் சண்டையிடு வதை நிறுத்திக் கொண்டாலேயன்றி, அவர்களை எதிர்கொள்ளும் போது அவர்களுடன் நீங்கள் சண்டையிடலாம். இத்தகையவர்களுக்கு எதிராக, தெளிவான ஓர் அனுமதியை உங்களுக்கு நாம் தருகின்றோம்.

*நீங்கள் கொலை செய்யாதிருக்க வேண்டும்*

**92.** அது ஒரு விபத்தாக இருந்தாலேயன்றி, எந்த நம்பிக்கையாளரும் மற்றொரு நம்பிக்கையாளரைக் கொலை செய்யாதிருக்க வேண்டும். ஒருவர் ஒரு நம்பிக்கையாளரை விபத்தின் மூலம் கொன்று விட்டால், நம்பிக்கை கொண்ட ஓர் அடிமையை விடுதலை செய்தல், அத்துடன் பலியானவரின் குடும்பத்தாருக்கு ஒரு நஷ்ட ஈட்டைச் செலுத்துதல் மூலம், அவர் பரிகாரம் செய்ய வேண்டும், அவர்கள் அத்தகையதொரு நஷ்ட ஈட்டை ஒரு தர்மமாக விட்டுக் கொடுத்தாலே தவிர. பலியானவர் ஒரு நம்பிக்கையாளராக இருந்த போதிலும், உங்களுடன் போர் புரிந்து கொண்டிருக்கின்ற சமூகத்தைச் சேர்ந்தவராக அவர் இருந்திருந்தால், நம்பிக்கை கொண்ட ஒரு அடிமையை விடுதலை செய்வதன் மூலம் நீங்கள் பரிகாரம் செய்ய வேண்டும். எவர்களுடன் ஒரு சமாதான உடன்படிக்கையில் நீங்கள் கையொப்பமிட்டுள்ளீர்களோ அம்மக்களைச் சேர்ந்தவராக அவர் இருந்திருந்தால், நம்பிக்கை கொண்ட ஓர் அடிமையை விடுதலை செய்வதுடன் கூடுதலாக நஷ்ட ஈட்டையும் நீங்கள் செலுத்த வேண்டும். விடுதலை செய்வதற்கு ஓர் அடிமையை உங்களால் காண இயலாவிட்டால், ***கடவுள்**–ஆல் மீட்டுக் கொள்ளப்படுவதற்காக, தொடர்ந்த இரண்டு மாதங்கள் நோன்பிருப்பதன் மூலம் நீங்கள் பரிகாரம் செய்ய வேண்டும். **கடவுள்** அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*மன்னிக்கப்பட மாட்டாத ஒரு குற்றம்*

**93.** எவனொருவன் வேண்டுமென்றே ஒரு நம்பிக்கையாளரைக் கொல்கின்றானோ, அவனுடைய தண்டனை நரகமேயாகும், அங்கே அவன் என்றென்றும் தங்கியிருப்பான், **கடவுள்** அவனோடு கோபமாக உள்ளார், மேலும் அவனைக் கண்டனம் செய்கின்றார், மேலும் பயங்கரமானதொரு தண்டனையை அவனுக்காக சித்தப்படுத்தியுள்ளார்.

**94.** நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் தாக்கினால், நீங்கள் நன்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சமாதானத்தை உங்கள் முன் வைக்கின்ற ஒருவரிடம், இந்த உலகின் வெற்றிப் பொருட்களைத் தேடியவாறு, "நீ ஒரு நம்பிக்கையாளன் அல்ல," என்று கூறாதீர்கள். ஏனெனில் **கடவுள்**–யிடம் முடிவுறாத வெற்றிப் பொருட்கள் உள்ளன. நீங்களும் அவர்களைப் போன்றவர்களாகவே இருந்தீர்கள் என்பதையும் **கடவுள்** உங்களை ஆசீர்வதித்ததையும் நினைவில் கொள்ளுங்கள். எனவே, *(நீங்கள் தாக்குவதற்கு முன்னர்)* நீங்கள் நன்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

---

***4:89** *சண்டையிடுதல் அனைத்தையும் முறைப்படுத்துகின்ற அடிப்படை விதி 60:8–9ல் கூறப்பட்டுள்ளது.*

***4:92** *அடிமைத்தனம் வழக்கொழிந்து விட்டதனால், குற்றவாளியானவர் தொடர்ந்து இரண்டு மாதங்கள் நோன்பிருத்தலின் மூலமே பரிகாரம் செய்ய வேண்டும்.*

*பாடுபடுபவர்களுக்கு உயர் அந்தஸ்துகள்*

95. நம்பிக்கையாளர்களில் உடல் ஊனமில்லாது உட்கார்ந்து கொண்டவர்களும், **கடவுள்**–ன் நிமித்தம் தங்களுடைய பணம் மற்றும் தங்களுடைய வாழ்வுகளைக் கொண்டு பாடுபடுகின்றவர்களும் சமமானவர்கள் அல்லர். தங்களுடைய பணம் மற்றும் தங்களுடைய வாழ்வுகளைக் கொண்டு பாடுபடுபவர்களை உட்கார்ந்து கொண்டவர்களுக்கும் மேலாகக் **கடவுள்** உயர்த்துகின்றார். இரு தரப்பினருக்கும், **கடவுள்** மீட்சியை வாக்களிக்கின்றார், ஆனால் மகத்தானதொரு பிரதிபலனைக் கொண்டு, உட்கார்ந்து கொண்டவர்களை விடவும், பாடுபடுபவர்களை மேலானதொரு நிலைக்குக் **கடவுள்** உயர்த்துகின்றார்.

96. உயர் அந்தஸ்துகளும், அவ்வண்ணமே மன்னிப்பு மற்றும் கருணையும் அவரிடமிருந்தே வருகின்றன. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*அக்கறையின்மை கண்டனம் செய்யப்படுகின்றது*

97. தங்களுடைய ஆத்மாக்களுக்கு அநீதமிழைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நிலையின் போது, எவர்களுடைய உயிர்கள் வானவர்களால் முடிக்கப்படுகின்றதோ, அவர்களிடம் அந்த வானவர்கள் கேட்பார்கள், "உங்களுடைய பிரச்சினை என்னவாக இருந்தது ?" அவர்கள் கூறுவார்கள், "பூமியின் மீது நாங்கள் அடக்குமுறை செய்யப்பட்டவர்களாக இருந்தோம்." அவர்கள் கூறுவார்கள், "அதிலே நீங்கள் புலம் பெயர்ந்து செல்லப் போதுமான அளவுக்குக் **கடவுள்**–ன் பூமி விசாலமானதாக இருக்கவில்லையா ?" இத்தகையவர்களுக்கு, இறுதித் தங்குமிடம் நரகம், மேலும் துன்பகரமானதொரு விதியுமேயாகும்.

98. வலிமையைப் பெற்றிராத, அன்றி வெளியேறுவதற்குரிய ஒரு வழிவகையைக் காணாத பலவீனமான ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விலக்களிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

99. இத்தகையவர்கள் **கடவுள்**–ஆல் பிழை பொறுக்கப்படக்கூடும். **கடவுள்** பிழைபொறுப்பவர், மன்னிப் பவர்.

100. **கடவுள்**–ன் நிமித்தம் புலம் பெயர்ந்து செல்கின்ற எவரொருவரும் பூமியின் மீது மகத்தான கொடைகளையும் செல்வச் செழிப்பையும் காண்பார். **கடவுள்** மற்றும் அவருடைய தூதரின் பால் புலம் பெயர்ந்தவராக, எவரொருவர் தன்னுடைய வீட்டைத் துறந்து சென்று, பின்னர் மரணம் அவரை வந்தடைந்து விடுகின்றதோ, அவருடைய பிரதிபலன் **கடவுள்**–யிடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

101. போர்க் காலத்தில், நீங்கள் பிரயாணித்துக் கொண்டிருக்கும் பொழுது, நம்பமறுப்பவர்கள் உங்களைத் தாக்கக் கூடும் என்று நீங்கள் அஞ்சினால், உங்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைச் சுருக்கிக் கொள்வதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடுவதில்லை. நிச்சயமாக, நம்பமறுப்பவர்கள் உங்களுடைய தீவிரமான விரோதிகளாகவே இருக்கின்றனர்.

*யுத்த முன்னெச்சரிக்கைகள்*

102. நீர் அவர்களுடன் இருந்து, மேலும் அவர்களுக்கு *(ஸலாத்)* தொடர்புத் தொழுகையை நடத்தும் பொழுது, உங்களில் சிலர் காவலுக்கு நிற்கட்டும்; அவர்கள் தங்களுடைய ஆயுதங்களைத் தாங்கிக் கொள்ளட்டும், மேலும் நீங்கள் சிரம் பணிகின்ற போது உங்களுக்குப் பின்னால் அவர்கள் நிற்கட்டும். பின்னர், தொழாதிருந்த வேறு குழுவினர் உம்முடன் தொழுகின்றவர்களாகத் தங்கள் முறையை எடுத்துக் கொள்கின்ற அதே சமயம், மற்றவர்கள் காவலுக்கு நின்று தங்களுடைய ஆயுதங்களைத் தாங்கியிருக் கட்டும். உங்களை ஒரேயடியாக மொத்தமாகத் தாக்கி விடும் பொருட்டு, நம்பமறுத்து விட்டவர்கள் உங்களுடைய ஆயுதங்களிலும் சாதனங்களிலும் நீங்கள் அலட்சியமாக இருப்பதைக் காணவே விரும்புகின்றனர். நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்கின்ற வரை, மழையினாலோ அல்லது காயத்தினாலோ உங்களுக்குத் தடங்கல் நேரிட்டால், உங்களுடைய ஆயுதங்களைக் கீழே வைத்து விடுவதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடுவதில்லை. இழிவு நிறைந்ததொரு தண்டனையைக் **கடவுள்** நம்பமறுப்பவர்களுக்காகத் தயார் செய்து வைத்துள்ளார்.

*தொடர்புத் தொழுகைகள்*

103. உங்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழுகையை நீங்கள் நிறைவேற்றியவுடன், நின்று கொண்டோ, அமர்ந்து கொண்டோ, அல்லது கீழே படுத்தவாறோ,* நீங்கள் **கடவுள்**–ஐ நினைவில் கொள்ள வேண்டும். போர் முடிந்து விட்டவுடன், நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்; *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகள் நம்பிக்கையாளர்களுக்குக் குறிப்பிடப்பட்ட நேரங்களில் கடமையாக்கப்பட்டுள்ளன.

**4:103 ஒரு நாளின் பெரும்பகுதி உங்களுடைய புத்தியை ஆக்கிரமித்திருப்பவர் எவராயினும், அல்லது எதுவாயினும், அதுவே உங்களுடைய தெய்வமாகும். கடவுளின் சாம்ராஜ்யத்தில் சேர்ந்து கொள்வதற்கும் அவருடைய அருள் மற்றும் பாதுகாப்பில் மகிழ்வடைவதற்கும் "எப்பொழுதும்" கடவுளை நினைவில் கொள்ளுமாறு குர்ஆன் நம்மைத் தூண்டுகின்றது (2:152, 200; 3:191; 33:41–42) கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களில் "மிகுதமானோர்" நரகத்திற்குச் செல்கின்றனர் என்று உறுதியாகக் கூறுகின்ற ஏராளமான வசனங்களை ஆழ்ந்த இந்த உண்மை விளக்குகின்றது (12:106, 23:84–89, 29:61–63, 31:25, 39:38,43:87). பார்க்க 3:191 க்குரிய அடிக்குறிப்பு மற்றும் பின் இணைப்பு 27.*

104. விரோதியைத் துரத்திச் செல்வதில் தடுமாறாதீர்கள். நீங்கள் துன்பப்படுவீர்களாயின், அவர்களும் துன்பமேயடைகின்றனர். ஆயினும், **கடவுள்**–யிடமிருந்து அவர்கள் ஒருபோதும் எதிர்பார்க்காதவற்றை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

105. **கடவுள்** உமக்குக் காட்டியிருப்பதற்கேற்ப மக்களுக்கிடையில் தீர்ப்பளிக்கும் பொருட்டு, சத்தியம் நிறைந்ததாக, இவ்வேதத்தை நாம் உமக்கு இறக்கி அனுப்பியுள்ளோம். நம்பிக்கைத் துரோகிகளுடன் நீர் அணி சேர்ந்திட வேண்டாம்.

106. மன்னிப்பிற்காக நீர் **கடவுள்**–ஐ இறைஞ்சிட வேண்டும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*வரம்புமீறுகின்றவர்களுக்காக வாதிடாதீர்*

107. தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டவர்களின் சார்பாக வாதிடாதீர்; நம்பிக்கைத் துரோகி, குற்றவாளி எவரையும் **கடவுள்** நேசிப்பதில்லை.

108. அவர்கள் மக்களிடமிருந்து மறைத்துக் கொள்கின்றனர், ஆனால் அவர் வெறுக்கின்ற யோசனைகளை அவர்கள் தாங்கியிருக்கும் போது அவர்களுடன் அவர் இருக்கின்ற போதிலும், **கடவுள்**–யிடமிருந்து மறைத்துக் கொள்ள அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

*"விரும்பத்தக்கவராக" இருப்பதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு உதவி செய்து விடுவதில்லை*

109. இங்கே அவர்கள் சார்பாக இந்த உலகத்தில் நீங்கள் வாதிடுகின்றீர்கள்; உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் அவர்கள் சார்பாகக் **கடவுள்**–யிடம் வாதிடப் போவது யார்? அவர்களுடைய பரிந்துரையாளராக இருக்கப் போவது யார்?

110. தீமை புரிந்துவிட்டு, அல்லது தன் ஆத்மாவுக்கு அநீதியிழைத்து விட்டு, பின்னர் பாவமன்னிப்பிற்காகக் **கடவுள்**–ஐ இறைஞ்சுகின்ற எவரும், மன்னிக்கின்றவராகவும் மிக்க கருணையாளராகவும் **கடவுள்**–ஐக் காண்பார்.

111. ஒரு தீமையைச் சம்பாதிக்கின்ற எவரும், தன் சொந்த ஆத்மாவுக்குக் கேடாகவே அதனைச் சம்பாதிக்கின்றார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

112. ஒரு பாவத்தைச் சம்பாதித்து விட்டு, பின்னர் அதற்காகக் குற்றமற்ற ஒரு நபரைக் குற்றஞ்சாட்டுகின்ற எவரும், ஓர் அவதூறையும் ஒரு மாபெரும் குற்றத்தையும் புரிந்துவிட்டார்.

113. உம் மீது **கடவுள்**–ன் அருளும், அவருடைய கருணையும் மட்டும் இல்லாதிருந்தால், அவர்களில் சிலர் உம்மை வழிதவறச் செய்திருப்பார்கள். அவர்கள் தங்களையே தான் வழிதவறச் செய்து கொள்கின்றனர், மேலும் அவர்களால் ஒருபோதும் உமக்குச் சிறிதளவும் தீங்கிழைக்க இயலாது. **கடவுள்** இவ்வேதத்தையும் ஞானத்தையும் உமக்கு இறக்கி அனுப்பியுள்ளார், அத்துடன் நீர் ஒருபோதும் அறிந்திராதவற்றை அவர் உமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். உண்மையில், உம் மீதான **கடவுள்**–ன் ஆசீர்வாதங்கள் மகத்தானவையாக இருந்துள்ளன.

114. தர்மம் அல்லது நன்னெறியான காரியங்கள் அல்லது மக்களுக்கிடையில் சமாதானம் செய்தலை ஆதரிப்போரைத் தவிர, அவர்களுடைய அந்தரங்க ஆலோசனைக் கூட்டங்களில் எந்த நன்மையும் இல்லை. **கடவுள்**–ன் போதனைகளுக்கு மறுமொழியளிக்கின்ற விதமாக, எவரொருவர் இதனைச் செய்கின்றாரோ, அவருக்கு நாம் மகத்தானதொரு பிரதி பலனையளிப்போம்.

115. வழிகாட்டல் அவனுக்குச் சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும், தூதரை எதிர்த்து நம்பிக்கையாளர்களின் வழி அல்லாத மற்றவற்றைப் பின்பற்றுகின்றவனைப் பொறுத்தவரை, அவன் தேர்ந்தெடுத்த திசையிலேயே அவனை நாம் தொடர்ந்து செலுத்துவோம், மேலும் அவனை நரகத்திற்கு ஆட்படுத்துவோம்; என்ன ஒரு துன்பகரமான விதி!

*மன்னிக்கப்பட மாட்டாத பாவம்*

116. போலித்தெய்வ வழிபாட்டினை *(மரணம் வரை தொடர்ந்து செய்து கொண்டிருந்தால்)* **கடவுள்** மன்னிப்பதில்லை,* ஆயினும் தான் நாடுகின்ற எவருக்கும் அதனை விடச் சிறிய குற்றங்களை அவர் மன்னிக்கின்றார். **கடவுள்**–வுடன் எந்த போலித் தெய்வத்தையும் இணைத்து வழிபாடு செய்கின்ற எவரும் மிக நெடிய வழிதவறுதலில் தவறிச் சென்று விட்டார்.

117. அவருடன் பெண் தெய்வங்களைக் கூட அவர்கள் வழிபடுகின்றனர்; உண்மையான விஷயம் என்னவென்றால், அவர்கள் ஒரு கலகக்கார சாத்தானைத் தான் வழிபடுகின்றனர்.

118. **கடவுள்** அவனைக் கண்டனம் செய்து விட்டார், அத்துடன் அவன் கூறினான், "உம்மை வழிபடுபவர்களில் வரையறுக்கப்பட்டதொரு பங்கினரை நிச்சயமாக நான் சேர்த்துக் கொள்வேன்.*

**4:116 போலித்தெய்வ வழிபாட்டிற்கு எளிமையானதொரு வரையறை: கடவுளுடன் வேறு எதுவும் உங்களுக்கு உதவி செய்ய இயலும் என்று நம்புதல்.*

**4:118 கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களில் பெரும்பாலானோர் போலித்தெய்வ வழிபாட்டிற்குள் வீழ்ந்து விடுகின்றனர் (12:106).*

119. "நான் அவர்களைத் தவறாக வழி நடத்துவேன், நான் அவர்களை வசீகரிப்பேன், கால் நடைகளின் காது களில் அடையாளமிடுமாறு *(அதன் மூலம் குறிப்பிட்ட சில இறைச்சிகளை உண்ணுவதைத் தடுக்குமாறு)* அவர்களுக்கு நான் கட்டளையிடுவேன், மேலும் **கடவுள்**–ன் படைப்புகளைச் சிதைக்குமாறும் நான் அவர்களுக்குக் கட்டளையிடுவேன்." **கடவுள்**–க்குப் பதிலாக, சாத்தானைத் தன் எஜமானனாக ஏற்றுக் கொள்கின்ற எவரும், ஆழ்ந்ததொரு நஷ்டத்திற்கு உள்ளாகி விட்டார்.

120. அவன் அவர்களுக்கு வாக்களிக்கின்றான் மேலும் அவர்களை வசீகரிக்கின்றான்; சாத்தான் வாக்களிப்ப வையெல்லாம் ஒரு மாயை என்பதை விட அதிகம் எதுவுமில்லை.

121. இத்தகையவர்கள் தங்களுடைய இறுதித் தங்குமிட மாக நரகத்திற்கு உள்ளாகி விட்டனர், மேலும் அத னை ஒருபோதும் தவிர்த்து விட இயலாது.

122. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்த வரை, ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களுக்குள் அவர்களை நாம் அனுமதிப்போம், அதில் அவர்கள் என்றென்றும் வசித்திருப்பார்கள். **கடவுள்**–ன் சத்தியமான வாக் குறுதி இத்தகையதேயாகும். எவருடைய கூற்றுகள் **கடவுள்**–வுடையதை விடவும் அதிகம் உண்மை நிறைந்தது ?

*சட்டம்*

123. அது உங்களுடைய விருப்பத்திற்கோ அல்லது வேதத் தையுடைய மக்களின் விருப்பத்திற்கு ஒப்பவோ, இல் லை: தீமையைப் புரிகின்ற எவனொருவனும் அதற்கு ரிய விலையைக் கொடுப்பான், மேலும் **கடவுள்**–க்கு எதிராக எந்த உதவியாளரையோ அல்லது ஆதரவா ளரையோ கொண்டிருக்க மாட்டான்.

124. நம்பிக்கை கொண்ட நிலையில், நன்னெறியான தொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்த வரை, ஆணோ அல்லது பெண்ணோ, அவர்கள் சுவ னத்திற் குள் நுழைவார்கள்; சிறிதளவும் அநீதமின்றி.

*ஆப்ரஹாம்: இஸ்லாமின் மூலத் தூதர்**

125. ஏகத்துவம்: எனும் ஆப்ரஹாமின் சமயக் கோட்பாட் டிற்கு ஏற்றவாறு, **கடவுள்**–க்கு முற்றிலும் சரண டைந்து, நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற ஒருவரை விட, தன்னுடைய மார்க்கத்தில் மிகச் சிறப் பாக வழிநடத்தப்பட்டிருப்பவர் யார்? **கடவுள்** ஆப்ர ஹாமை நேசத்திற்குரிய ஒரு நண்பராகத் தேர்ந் தெடுத்துக் கொண்டார்.

126. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது. **கடவுள்** அனைத்துப் பொருட் கள் மீதும் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளார்.

127. பெண்களைப் பற்றி அவர்கள் உம்மிடம் ஆலோசிக் கின்றனர்: கூறுவீராக, " இவ்வேதத்தில் உங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டபடி, **கடவுள்** அவர்களைக் குறித்து உங்களுக்கு உபதேசிக்கின்றார். அனாதை களாகி விட்ட இளம் பெண்களை நீங்கள் திருமணம் புரிந்துகொள்ள விரும்புகின்ற போது, எவர்களிட மிருந்து அவர்களுக்குரிய சீதனத்தை நீங்கள் ஏமாற்றி எடுத்துக் கொள்கின்றீர்களோ அவர்களுடைய அந்த உரிமைகளை நீங்கள் திருப்பிக் கொடுத்திட வேண் டும்: நீங்கள் அவர்களுடைய நிலையைச் சாதகமாக் கிக் கொள்ளாதிருக்க வேண்டும். அனாதைகளாகி விட்ட சிறுவர்களின் உரிமைகளும் அவ்வண்ணமே பாதுகாக்கப்பட வேண்டும். அனாதைகளை நீங்கள் நீதத்துடன் நடத்திட வேண்டும். எந்த ஒரு நன்மை யை நீங்கள் செய்தாலும், **கடவுள்** அதனைப் பற்றி முற்றிலும் அறிந்திருக்கின்றார்."

*விவாகரத்து ஊக்கம் குறைக்கப்படுகின்றது*

128. ஒரு பெண்மணி தன்னுடைய கணவனிடமிருந்து அடக்கு முறையையோ அல்லது புறக்கணித்தலையோ உணர்ந்தால், அத்தம்பதியினர் தங்களுடைய வேறு பாடுகளைத் தீர்த்துக் கொள்ள முயல வேண்டும், ஏனெனில் இணக்கமாகிக் கொள்ளுதலே அவர் களுக்குச் சிறந்ததாகும். சுய நலத்தன்மை ஒரு மானிட இயல்பாக உள்ளது, ஆயினும் நீங்கள் நன்மை செய்து மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத் தினால், நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

*பலதாரமணம் ஊக்கம் குறைக்கப்படுகின்றது**

129. ஒரு மனைவிக்கும் அதிகமானவர்களை நிர்வகிக் கின்ற போது, உங்களால் ஒருபோதும் நீதமாக இருக்க இயலாது. நீங்கள் எவ்வளவு கடினமாக முயல்கின்றீர் கள் என்பது பொருட்டல்ல. எனவே, அவர்களில் ஒரு வரை *(திருமணத்தால் பயனடையாதவாறும், அன்றி வேறு எவரேனும் ஒருவரை மணந்து கொள்ளும்படி விட்டு விடாதவாறும்)* தொங்கலில் விட்டுவிடும் வண்ணம் மிகவும் ஒருதலைப்பட்சமானவர்களாக இருக்காதீர்கள். இந்த நிலையை நீங்கள் சரி செய்து மேலும் நன்னெறியைப் பராமரித்து வந்தால், **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

130. தம்பதியர் பிரிந்து விட வேண்டுமென்று முடிவெ டுத்து விட்டால், **கடவுள்** தன்னுடைய கொடைகளில் இருந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குவார். **கடவுள்** கொடையளிப்பவர், ஞானம் மிகுந்தவர்.

**4:125 ஆதமிலிருந்து அனைத்துத் தூதர்களும் வேறுபாடற்ற அந்த ஒரே மார்க்கத்தையே பிரச்சாரம் செய்தனர். "இஸ்லாம்" எனும் பெயரிடப்பட்ட மதக் கோட்பாட்டின் முதல் தூதர் ஆப்ரஹாமாகவே இருந்தார் (22:78 பின் இணைப்பு 26). "இஸ்லாம்" என்பது ஒரு பெயர் அல்ல, சரியாகக் கூறுவதானால் அது "சரணடைதல்" எனும் அர்த்தம் தருகின்ற ஒரு விவரிப்பேயாகும்.*

**4:129 "பல தார மணம்" எனும் தலைப்பிடப்பட்டுள்ள, பின் இணைப்பு 30ஐப் பார்க்கவும்.*

131. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது, மேலும் நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க வேண்டுமென்று உங்களுக்கு முன்னர் வேதத்தைப் பெற்றவர்களுக்கு நாம் கட்டளையிட்டுள்ளோம், அத்துடன் உங்களுக்கும் நாம் கட்டளையிட்டுள்ளோம். நீங்கள் நம்பமறுத்து விட்டால், பின்னர் வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது. **கடவுள்** எந்தத் தேவையுமற்றவர், புகழுக்குத் தகுதியானவர்.

132. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது, மேலும் **கடவுள்** தான் ஒரே பாதுகாவலராக இருக்கின்றார்.

133. மனிதர்களே, அவர் நாடினால், உங்களை அவர் அழித்து விட்டு, அத்துடன் உங்களுடைய இடத்தில் மற்றவர்களை மாற்றியமைத்து விட இயலும். **கடவுள்** நிச்சயமாக இதனைச் செய்யும் திறனுடையவராக இருக்கின்றார்.

134. இந்த உலகத்தின் பொருட்களைத் தேடுகின்ற எவரொருவரும் இந்த உலகம் மற்றும் மறுவுலகம் ஆகிய இரண்டின் பொருட்களையும் **கடவுள்** தன் வசம் வைத்திருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். **கடவுள்** செவியேற்பவர், பார்ப்பவர்.

*நீங்கள் பொய்சாட்சியம் பகராதிருக்க வேண்டும்*

135. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோர்களுக்கோ, அல்லது உங்கள் உறவினர்களுக்கோ எதிராக இருந்த போதிலும், நீங்கள் சாட்சிகளாகச் செயல்படுகின்ற போது, நீங்கள் முற்றிலும் நீதத்துடன் இருக்கவும், அத்துடன் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் செல்வந்தராகவோ அல்லது, ஏழையாகவோ இருந்த போதிலும், **கடவுள்** அவர்கள் இருவரையும் கவனித்துக் கொள்கின்றார். எனவே, உங்களுடைய தனிப்பட்ட விருப்பங்களால் ஒருதலைப்பட்சமாகி விட்ட வர்களாக இருக்காதீர்கள். *(இந்தக் கட்டளையில்)* நீங்கள் விலகிச் சென்றாலோ அல்லது புறக்கணித்தாலோ, பின்னர் நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

136. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** மற்றும் அவருடைய தூதர், மேலும் தன்னுடைய தூதர் மூலம் வெளிப்படுத்தியுள்ள இவ்வேதம் மற்றும் அதற்கு முன்னர் அவர் வெளிப்படுத்தியுள்ள வேதத்தின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். **கடவுள்** மற்றும் அவருடைய வானவர்கள், மேலும் அவருடைய வேதங்கள், மற்றும் அவருடைய தூதர்கள், மேலும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்ள மறுக்கின்ற எவரொருவரும், உண்மையில் மிக நெடிய வழிதவறுதலில் வழிதவறிச் சென்று விட்டார்.

137. நிச்சயமாக, எவர்கள் நம்பிக்கை கொண்டு, பின்னர் நம்பமறுத்து, பின்னர் நம்பிக்கை கொண்டு, பின்னர் நம்பமறுத்து, பின்னர் நம்பமறுத்தலுக்குள் ஆழ்ந்து மூழ்கி விடுகின்றனரோ, **கடவுள்** அவர்களை மன்னிக்க மாட்டார், அன்றி எந்த வகையிலும் அவர்களை அவர் வழிநடத்தவும் மாட்டார்.

138. வலி நிறைந்ததொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர் என்பதை நயவஞ்சகர்களுக்குத் தெரியப்படுத்துவீராக.

139. அவர்கள்தான், நம்பிக்கையாளர்களுக்குப் பதிலாக நம்பமறுப்பவர்களுடன் தங்களைக் கூட்டாளிகளாக்கிக் கொண்டவர்கள். அவர்களிடம் கண்ணியத்தை அவர்கள் தேடுகின்றனரா ? கண்ணியம் அனைத்தும் **கடவுள்**–யிடம் மட்டுமே உள்ளது.

140. இவ்வேதத்தில் உங்களுக்கு அவர் போதித்திருப்பதாவது: **கடவுள்**–ன் வெளிப்பாடுகள் கேலி செய்யவும், பரிகசிக்கவும் படுவதை நீங்கள் செவியேற்றால், அவர்கள் மற்றொரு விஷயத்தில் மூழ்கினாலேயன்றி, அவர்களுடன் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டாம். இல்லையேல், அவர்கள் எவ்வாறு குற்றவாளிகளாக இருக்கின்றனரோ அவ்வாறே நீங்களும் ஆகி விடுவீர்கள். நயவஞ்சகர்களையும் நம்பமறுப்பவர்களையும் மொத்தமாகக் **கடவுள்** நரகத்தில் ஒன்று சேர்ப்பார்.

*நயவஞ்சகர்கள்.*

141. அவர்கள் உங்களைக் கண்காணித்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருக்கின்றனர்; **கடவுள்**– யிடமிருந்து நீங்கள் வெற்றியை அடைந்தால், அவர்கள் *(உங்களிடம்)* கூறுகின்றனர், "நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா ?" ஆனால் நம்பமறுப்பவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால், *(அவர்களிடம்)* அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் உங்களுடன் அணி சேர்ந்து கொண்டு, நம்பிக்கையாளர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கவில்லையா ?" உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில் **கடவுள்** உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பார். நம்பிக்கையாளர்கள் மீது வெற்றி கொள்ள நம்பமறுப்பவர்களைக் **கடவுள்** ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

142. தாங்கள் **கடவுள்**–ஐ ஏமாற்றிக் கொண்டிருப்பதாக இந்நயவஞ்சகர்கள் நினைக்கின்றனர், ஆனால் அவர்தான் அவர்களை அவ்வாறு தொடர்ந்து செலுத்திக் கொண்டிருக்கின்றார். அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைக்கு எழுந்து நிற்கின்ற போது, அவர்கள் சோம்பலுடன் எழுந்து நிற்கின்றனர். அது ஏனெனில் அவர்கள் மக்களுக்கு முன்னால் காட்டிக் கொள்ள மட்டுமே செய்கின்றனர், மேலும் அவர்கள் அரிதாகவே **கடவுள்**–ஐப் பற்றி நினைக்கின்றனர்.

143. இந்தக் கூட்டத்துடனோ அன்றி அந்தக் கூட்டத்து டனோ சேர்ந்திடாமல், இடையில் அவர்கள் தடுமாறு கின்றனர். **கடவுள்** எவரை வழிதவறுதலில் அனுப்பி விடுகின்றாரோ, அவரை வழிநடத்துவதற்கு ஒரு வழியை நீர் ஒருபோதும் காணமாட்டீர்.

144. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், நம்பிக்கையாளர்களுக்குப் பதிலாக, நம்பமறுப்பவர் களுடன் நீங்கள் உங்களையே கூட்டாளிகளாக்கிக் கொள்ளாதீர்கள். உங்களுக்கெதிரான ஒரு தெளி வான சான்றினைக் **கடவுள்**–யிடம் நீங்கள் வழங்க விரும்புகின்றீர்களா ?

*தாங்கள் நம்பிக்கையாளர்களாக இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர்*

145. இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகக் கீழான குழியி னுள் உட்படுத்தப்படுவார்கள், மேலும் அவர்களுக்கு உதவுவதற்கு எவரொருவரையும் நீர் காணமாட்டீர்.

146. பாவத்திற்காக வருந்தி, சீர்திருந்தி, **கடவுள்**–ஐப் பற்றிப் பிடித்துக் கொண்டு, மேலும் தங்களுடைய மார்க்கத்தைக் **கடவுள்**–க்கு மட்டும் அர்ப்பணித் துக் கொண்டவர்கள் மட்டுமே நம்பிக்கையாளர் களுடன் கணக்கிடப்படுவார்கள். மகத்தானதொரு பிரதிபலன் கொண்டு நம்பிக்கையாளர்களைக் **கடவுள்** ஆசீர்வதிப்பார்.

147. நீங்கள் நன்றியுடையவர்களாகி மேலும் நம்பிக்கை கொண்டு விட்டால், உங்களைத் தண்டிப்பதன் மூலம் **கடவுள்** என்ன இலாபம் அடையப்போகின் றார் ? **கடவுள்** பாராட்டுபவர், சர்வமும் அறிந்தவர்.

*கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள்*

148. ஒருவர் மாபெரும் அநீதியுடன் நடத்தப்பட்டாலே யன்றி, கெட்ட வார்த்தைகள் உதிர்க்கப்படுதலைக் **கடவுள்** விரும்புவதில்லை. **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

149. நீங்கள் நன்னெறியான காரியங்களை செய்தால் – வெளிப்படையாகவோ அல்லது மறைவாகவோ – அல்லது ஒரு வரம்புமீறலைப் பிழை பொறுத்தால், **கடவுள்** பிழை பொறுப்பவர், சர்வ சக்தியுடையவர்.

*நீங்கள் கடவுளின் தூதர்களுக்கிடையில் எந்தப் பாகுபாடும் செய்யாதிருக்க வேண்டும்*

150. **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்களை நம்ப மறுத்து, அத்துடன் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் களுக்கிடையில் பாகுபாடு செய்ய நாடி, "நாங்கள் சிலர் மீது நம்பிக்கை கொள்கின்றோம். மேலும் சில ரை ஏற்கமறுக்கின்றோம்," என்று கூறி, அத்துடன் இடையில் ஒரு பாதையைப் பின்பற்ற விரும்புகின்ற வர்கள்;

151. இவர்கள்தான் மெய்யான நம்பமறுப்பவர்களாக இருக் கின்றனர். இழிவு நிறைந்ததொரு தண்டனையை நம்ப மறுப்பவர்களுக்காக நாம் தயாரித்து வைத்துள் ளோம்.

152. எவர்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்கள் மீது நம்பிக்கை கொண்டு, மேலும் அவர்களுக்கிடையில் எந்தப் பாகுபாடும் செய்யாதிருக்கின்றனரோ, அவர் களைப் பொறுத்த வரை அவர்களுடைய பிரதிபலனை அவர்களுக்கு அவர் வழங்குவார். **கடவுள்** மன்னிப் பவர், மிக்க கருணையாளர்.

*இஸ்ரவேலர்களிடமிருந்து படிப்பினைகள்*

153. வேதத்தையுடைய மக்கள் தங்களுக்கு விண்ணி லிருந்து ஒரு புத்தகத்தைக் கீழே கொண்டு வருமாறு உம்மிடம் அறை கூவல் விடுகின்றனர் ! அதனை விட வும் அதிகமாக, "பகிரங்கமாக **கடவுள்**–ஐ எங்களுக் குக் காட்டுவீராக," என்று கூறியவர்களாக, மோஸஸி டம் அவர்கள் கேட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, அவர்களுடைய திமிரின் விளைவாக மின்னல் அவர் களைத் தாக்கியது, இன்னும் கூடுதலாக, அவர்கள் கண்ட அத்தனை அற்புதங்களுக்குப் பின்னரும், அவர்கள் கன்றுக்குட்டியை வழிபட்டனர். இருப்பினும், இவை அனைத்தையும் நாம் பிழை பொறுத்தோம். ஆழ்ந்த அற்புதங்களைக் கொண்டு மோஸஸுக்கு நாம் ஆதரவளித்தோம்.

154. மேலும் அவர்களுடைய உடன்படிக்கையை நாம் எடுத்தவாறு, சினாய் மலையை அவர்களுக்கு மே லாக நாம் உயர்த்தினோம். மேலும் அவர்களிடம் நாம் கூறினோம், "பணிவுடன் அந்த வாசலுக்குள் நுழை யுங்கள்." மேலும் அவர்களிடம் நாம் கூறினோம், "ஸப் பாத்தைப் அவமரியாதை செய்யாதீர்கள்." உண்மை யில் அவர்களிடமிருந்து பவித்திரமானதொரு உடன் படிக்கையை நாம் எடுத்தோம்.

155. தங்களுடைய உடன்படிக்கையை மீறி, **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்கமறுத்து, நபிமார்களை அநீத மாகக் கொலை செய்ததாலும், மேலும் "எங்களுடைய மனங்கள் முடிவெடுத்து விட்டன !" என்று கூறியதா லும் *(அவர்கள் கண்டனத்திற்கு உள்ளானார்கள்)*, உண்மையில், **கடவுள்**தான் அவர்களுடைய நம்ப மறுத்தலின் காரணத்தால், அவர்களுடைய மனங் களை முத்திரையிட்டவர், மேலும் இதனால்தான், அரிதாகவே தவிர, அவர்கள் நம்பிக்கை கொள்ளத் தவறி விடுகின்றனர்.

156. நம்பமறுத்துக் கொண்டிருப்பதுடன் மேரியைப் பற்றி ஒரு மாபெரும் பொய்யை உதிர்த்துக் கொண்டிருப்ப தால் *(அவர்கள் கண்டனம் செய்யப்பட்டவர்களாக இருக்கின்றனர்).*

*ஜீஸஸின் "உடலினை" சிலுவையிலறைதல்**

157. அத்துடன் **கடவுள்**–ன் தூதரான மேரியின் மகன், ஜீஸஸ் எனும் மெஸையாவை அவர்கள் கொன்று விட்டதாகக் கோரிக்கொண்டிருப்பதாலும். உண்மையில், அவர்கள் ஒருபோதும் அவரைக் கொன்று விடவில்லை, அவர்கள் ஒருபோதும் அவரைச் சிலுவையிலறைந்து விடவுமில்லை–அவர்கள் செய்தனர் என்று எண்ணிக் கொள்ளும்படி அவர்கள் செய்யப்பட்டனர். இந்த விஷயத்தில் சர்ச்சித்துக் கொண்டிருக்கின்ற அனைத்துக் கோஷ்டியினரும் இந்தப் பிரச்சனை குறித்து முற்றிலும் சந்தேகத்துடனேயே இருக்கின்றனர். அவர்கள் எந்த அறிவையும் பெற்றிருக்கவில்லை; அவர்கள் அனுமானிக்க மட்டும் செய்கின்றனர். உறுதியாக, அவர்கள் ஒருபோதும் அவரைக் கொன்று விட வில்லை.*

158. மாறாக, **கடவுள்** அவரைத் தன்பால் உயர்த்திக் கொண்டார்; **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

159. வேதத்தையுடைய மக்களுக்கிடையில் ஒவ்வொருவரும் தனது மரணத்திற்கு முன்னர் அவர் மீது நம்பிக்கை கொள்வது அவசியமானதாக இருந்தது. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில், அவர்களுக்கு எதிரான ஒரு சாட்சியாக அவர் இருப்பார்.

160. அவர்களுடைய வரம்புமீறல்களின் காரணத்தால், யூதர்களான அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாக இருந்து வந்த நல்ல உணவுகளை நாம் தடை செய்தோம்; அத்துடன் தொடர்ந்து **கடவுள்**–ன் பாதையிலிருந்து விரட்டிக் கொண்டிருந்ததாலும்.

161. மேலும் தடுக்கப்பட்டதாக இருந்து வந்த அநியாய வட்டியைச் செயல்படுத்திக் கொண்டிருந்ததனாலும், அத்துடன் மக்களின் பணத்தைச் சட்டவிரோதமாக உண்டு கொண்டிருந்ததனாலும். அவர்களில் உள்ள நம்பமறுப்பவர்களுக்கு வலி நிறைந்ததொரு தண்டனையை நாம் தயாரித்து வைத்துள்ளோம்.

162. அவர்களில் உள்ள அறிவில் நன்கு உறுதிப்பாடு கொண்டவர்களையும், நம்பிக்கை கொண்டவர்களையும் பொறுத்த வரை, அவர்கள் உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும், மேலும் உமக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர். அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும், *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுப்பவர்களாகவும் இருக்கின்றனர்; அவர்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு மகத்தானதொரு பிரதிபலனை நாம் வழங்குகின்றோம்.

*கடவுளின் தூதர்கள்*

163. நோவா மற்றும் அவருக்குப் பின்னர் நபிமார்களுக்கு நாம் உள்ளுணர்வளித்தவாறே, உமக்கும் நாம் உள்ளுணர்வளித்துள்ளோம். மேலும் ஆப்ரஹாம், இஸ்மாயீல், ஐசக், ஜேக்கப், அந்த வம்சத்தலைவர்கள், ஜீஸஸ், ஜோப், ஜோனாஹ், ஆரோன், மற்றும் ஸாலமனுக்கும் நாம் உள்ளுணர்வளித்தோம். மேலும் டேவிட்டுக்கு சங்கீதத்தை நாம் தந்தோம்.

164. தூதர்களைப் பற்றி நாம் உமக்கு விவரித்தும் உள்ளோம், மேலும் தூதர்களைப் பற்றி நாம் ஒரு போதும் உமக்கு விவரிக்காதும் உள்ளோம். மேலும் **கடவுள்** மோஸஸிடம் நேரடியாகவும் பேசினார்.

165. நற்செய்திகளையும், அவ்வண்ணமே எச்சரிக்கைகளையும் சேர்ப்பிப்பதற்கான தூதர்கள். இவ்விதமாக, இந்தத் தூதர்கள் அனைவரும் அவர்களிடம் வந்து விட்ட பின்னர், **கடவுள்**–ஐச் சந்திக்கும் போது மக்களுக்குக் காரணம் எதுவும் இருக்காது. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

166. அன்றியும் உமக்கு அவர் வெளிப்படுத்தியவற்றைக் குறித்துக் **கடவுள்** சாட்சி பகர்கின்றார்; தன்னுடைய அறிவைக் கொண்டு அவர் அதனை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் வானவர்களும் கூட சாட்சி பகர்கின்றனர், ஆயினும் சாட்சியாகக் **கடவுள்** போதுமானவர்.

167. நிச்சயமாக, நம்பமறுப்பதோடன்றி **கடவுள்**–ன் வழியிலிருந்து விரட்டுகின்றவர்கள் நெடிய வழிதவறுதலில் வழிதவறிச்சென்று விட்டனர்.

168. எவர்கள் நம்பமறுத்து மேலும் வரம்புமீறுகின்றார்களோ, அவர்களைக் **கடவுள்** மன்னிக்க மாட்டார், அன்றி எந்த வழியிலும் அவர்களை அவர் வழிநடத்தவும் மாட்டார்;

169. நரகத்தின் வழியை நோக்கியே தவிர, அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

---

**4:157–158 ஜீஸஸ், உண்மையான அந்த நபர், அந்த ஆன்மா, எந்த ஒரு நன்னெறியான மனிதருடைய மரணத்தையும் போல அதே விதமாகவே உயர்த்திக் கொள்ளப்பட்டார். அதனைத் தொடர்ந்து, அவருடைய எதிரிகள் அவருடைய உயிருள்ள, ஆனால் காலியான சடலத்தைக் கைது செய்து, சித்திரவதைப்படுத்திச், சிலுவையிலறைந்தனர். பார்க்க பின் இணைப்பு 17 & 22, மற்றும் "ஜீஸஸ்: கட்டுக்கதைகளும் தூதுச் செய்தியும்," எனும் லிஸா ஸ்ப்ரே எழுதிய புத்தகம் (யுனிவர்சல் யூனிட்டி, ஃப்ரெமொன்ட், கலிஃபோர்னியா, 1992).*

170. மனிதர்களே, உங்களுடைய இரட்சகரிடமிருந்து இத்தூதர் சத்தியத்துடன் உங்களிடம் வந்துள்ளார். ஆகவே, உங்களுடைய சொந்த நலனுக்காக நீங் கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். நீங்கள் நம்பமறுப்பீர் களாயின், பின்னர் வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியதாகும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*திரித்துவம்:*
*போலியானதொரு மதக்கோட்பாடு*

171. வேதத்தையுடைய மக்களே, உங்களுடைய மார்க் கத்தின் எல்லைகளை மீறாதீர்கள், மேலும் **கடவுள்**–ஐப் பற்றி உண்மையைத் தவிர எதனையும் கூறாதீர் கள். மேரியின் மகனான ஜீஸஸ் எனும் மெஸையா **கடவுள்**–ன் ஒரு தூதராகவும், மேரியின் பால் அவர் அனுப்பி வைத்த அவருடைய வார்த்தையாகவும், அவரிடமிருந்துள்ள ஒரு வெளிப்பாடாகவும் இருந் தார். எனவே, நீங்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். "திரித்துவம்," என்று நீங்கள் கூற வேண்டாம். உங்களுடைய சொந்த நலனுக்காக இதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ள வேண்டும். **கடவுள்**தான் ஒரே ஓர் இறைவனாக இருக்கின்றார். அவர் துதிப் பிற்குரியவர்; ஒரு மகனைக் கொண்டிருப்பதற்கும் மேலாக அவர் மிகவும் மகிமைமிக்கவராக இருக் கின்றார். வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியின் மீதுள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியது. இரட்சகராகவும் அதிபதியாகவும் **கடவுள்** போது மானவர்.

172. மெஸையாவோ அன்றி மிகவும் நெருக்கமான வான வர்களோ **கடவுள்**–ன் ஓர் ஊழியராக இருப்பதை ஒரு போதும் இழிவெனக் கருதமாட்டார்கள். எவர்கள் அவரை வழிபடுவதை இழிவெனக் கருதி, அத்துடன் சரணடைவதற்கு மிகவும் ஆணவம் கொள்கின்றன ரோ, அவர்கள் அனைவரையும் அவர் தன்முன்னால் ஒன்று திரட்டுவார்.

173. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோரைப் பொறுத்த வரை, அவர்களுக்கு அவர் முழுமையான பிரதிபலனளிப்பார், மேலும் தன்னு டைய அருளை அவர்கள் மீது பொழிவார். இழிவெனக் கருதி மேலும் ஆணவம் கொண்டவர்களாக மாறு கின்றவர்களைப் பொறுத்தவரை, அவர்களை வலி நிறைந்ததொரு தண்டனைக்கு அவர் உட்படுத்து வார். **கடவுள்**–ஐ அன்றி எந்த எஜமானரையோ, அன்றி ஒரு மீட்பரையோ அவர்கள் காணமாட்டார்கள்.

*குர்ஆனின் கணிதக்குறியீடு :*
*கண்கூடான, உணரக்கூடிய சான்று*

174. மனிதர்களே, உங்கள் இரட்கரிடமிருந்து ஒரு சான்று உங்களுக்கு வந்துள்ளது; ஆழ்ந்ததொரு கலங்கரை விளக்கை உங்களுக்கு நாம் இறக்கி அனுப்பியுள் ளோம்.

175. எவர்கள் **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு, மேலும் அவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனரோ அவர்களை, தன்னிடமிருந்துள்ள கருணை, மற்றும் கிருபைக்குள் நுழைய அவர் அனுமதிப்பார், மேலும் நேரானதொரு பாதையில் தன்பால் அவர்களை வழி நடத்துவார்.

176. அவர்கள் உம்மிடம் ஆலோசிக்கின்றனர்; கூறுவீராக, "தனி நபர் குறித்துக் **கடவுள்** உங்களுக்கு அறிவுறுத் துகின்றார். ஒருவர் பிள்ளைகள் எவரையும் விட்டுச் செல்லாது மரணித்து, மேலும் அவருக்கு ஒரு சகோ தரி இருந்தால், வாரிசுரிமையில் பாதியை அவள் பெறு கின்றாள். அவள் முதலில் மரணித்தால், அவள் பிள் ளைகள் எதுவும் விட்டுச் செல்லாத பட்சத்தில், அவ ளுடைய வாரிசுரிமையை அவர் அடைகின்றார். இரு சகோதரிகள் இருந்தால், வாரிசுரிமையில் மூன்றில் இரண்டை அவர்கள் பெறுகின்றனர். உடன்பிறந்தவர் கள் ஆண்களாகவும் பெண்களாகவும் இருந்தால், பெண்களுடைய பங்கின் இருமடங்கை ஆண்கள் பெறுகின்றனர்." நீங்கள் வழிதவறிச் சென்று விடா திருக்கும் பொருட்டு, **கடவுள்** இவ்விதமாக உங்களுக் குத் தெளிவுபடுத்துகின்றார். **கடவுள்** எல்லா விஷயங் களைப் பற்றியும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

****

## சூரா 5: விருந்து (அல்–மாஇதா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங் களுடைய உடன்படிக்கைகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். குறிப்பிடப்பட்டு இதனில் உங்களுக்குத் தடுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர, கால்நடைகள் உங்களுக்கு உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்ட வையாகவே உள்ளன. ஹஜ் புனித யாத்திரைக் காலம் முழுவதும் வேட்டையாடுதலை நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தான்நாடுகின்ற எதனையும் **கடவுள்** கட்டளையிடுகின்றார்.

2. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** –ஆல் நிர்ணயிக்கப்பட்ட சடங்குகளையோ, அன்றிப் புனித மாதங்களையோ, அன்றி அர்ப்பணிக்கப்பட இருக்கின்ற பிராணிகளையோ, அன்றி அவற்றை அடையாளங்காட்டுகின்ற மாலைகளையோ, அன்றித் தங்களுடைய இரட்சகரிடமிருந்து ஆசிகளையும் உவப்பையும் தேடியவர்களாக *(கஅபா)* புனித ஆலயத்தை நோக்கிச் செல்கின்ற மக்களையோ பங்கப்படுத்தாதீர்கள். நீங்கள் புனித யாத்திரையை நிறைவு செய்து விட்டவுடன், நீங்கள் வேட்டையாடலாம்.* புனிதப் பள்ளிக்குச் செல்வதிலிருந்து முன்னர் உங்களைத் தடுத்த மக்களிடம் நீங்கள் கொண்டிருக்கின்ற வெறுப்பினால் தூண்டப்பட்டவர்களாகி வலுச்சண்டையில் ஈடுபடாதீர்கள். நன்னெறி மற்றும் பக்தியான விஷயங்களில் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்; பாவகரமாக மற்றும் தீமையாக இருக்கின்ற விஷயங்களில் ஒத்துழைக்காதீர்கள். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும். தண்டனையை நிறைவேற்றுவதில் **கடவுள்** கண்டிப்பானவராக இருக்கின்றார்.

*நான்கு மாமிச உணவுகள் மட்டுமே தடுக்கப்படுகின்றன "தாமாகச் செத்த பிராணிகள்" விவரிக்கப்படுகின்றன*

3. தாமாகச் செத்த பிராணிகள், இரத்தம் , பன்றிகளின் மாமிசம்,* மற்றும் **கடவுள்** அல்லாத மற்றவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராணிகள் உங்களுக்குத் தடுக்கப்பட்டவையாக உள்ளன. கழுத்து நெறிபட்டவை, ஏதேனும் ஒரு பொருளால் அடிபட்டவை, ஓர் உயரத்திலிருந்து வீழ்ந்தவை, கொம்பால் கிழிக்கப்பட்டவை, ஏதேனும் ஒரு வனவிலங்கால் தாக்கப்பட்டவை – அது சாவதற்கு முன்னர் உங்களுடைய பிராணியை நீங்கள் காப்பாற்றினாலேயன்றி – மற்றும் பீடங்களின் மீது பலியிடப்பட்ட பிராணிகள் *(ஆகியவை தாமாகச் செத்த பிராணிகளில் உட்பட்டவையாகும்)*. ஓர் அதிர்ஷ்ட விளையாட்டின் மூலம் இறைச்சிகளைப் பங்கிடுதலும் கூடத் தடுக்கப்படுகின்றது; இது வெறுப்புக்குரிய ஒன்றாகும். இன்றைய தினம், நம்பமறுப்பவர்கள் உங்களுடைய மார்க்கத்தை *(நிர்மூலமாக்கி விடுவதைப்)* பற்றி நம்பிக்கையிழந்து விட்டனர்; அவர்களுக்கு அஞ்சாதீர்கள் அதற்குப் பதிலாக என்னையே அஞ்சுங்கள். இன்றைய தினம், உங்களுடைய மார்க்கத்தை நான் முழுமைப்படுத்தி, மேலும் உங்கள் மீதான என்னுடைய ஆசீர்வாதத்தைப் பூரணப்படுத்தி விட்டேன், மேலும் உங்களுக்கான மார்க்கமாக சரணடைதலை நான் விதித்துள்ளேன். வேண்டுமென்றே பாவகரமாக இல்லாமல், *(தடை செய்யப்பட்ட உணவை உண்ணுவதற்குப்)* பஞ்சத்தினால் ஒருவர் நிர்ப்பந்திக்கப்படுவாரானால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

4. அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டவற்றைக் குறித்து அவர்கள் உம்மிடம் ஆலோசிக்கின்றனர்; கூறுவீராக, "பயிற்சியளிக்கப்பட்ட வேட்டை நாய்கள் மற்றும் வேட்டைப் பறவைகள் உங்களுக்காகப் பிடித்து வருபவை உட்பட, எல்லா நல்ல பொருட்களும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாகவே உள்ளன." **கடவுள்** கற்றுத் தந்தவற்றுக்கு ஏற்ப அவற்றுக்கு நீங்கள் பயிற்சியளிக்கின்றீர்கள். அவை உங்களுக்காகப் பிடித்து வருபவற்றை நீங்கள் உண்ணலாம், மேலும் அவற்றின் மீது **கடவுள்**–ன் பெயரைக் கூறுங்கள். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும். கணக்கிடுவதில் **கடவுள்** மிகவும் திறன் மிக்கவராக இருக்கின்றார்.

5. இன்றைய தினம், நல்ல ஆகாரம் அனைத்தும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக ஆக்கப்பட்டுள்ளது. வேதத்தையுடைய மக்களின் உணவும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாகவே உள்ளது. அத்துடன், அவர்களுக்குரிய சீதனத்தை நீங்கள் செலுத்தி விடும் பட்சத்தில், நம்பிக்கையாளர்களில் உள்ள கற்புடைய பெண்களையும், அவ்வண்ணமே முந்திய வேதத்தினைப் பின்பற்றுபவர்களில் உள்ள கற்புடைய பெண்களையும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். விபசாரம் செய்யாமலும், அன்றி இரகசியக் காதல்களை வைத்துக் கொள்ளாமலும், நீங்கள் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். விசு வாசத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றவர் எவராயினும், அவருடைய காரியம் அனைத்தும் வீணானதாகவே இருக்கும், மேலும் மறுவுலகத்திலோ அவர் நஷ்டவாளிகளுடன் இருப்பார்.

**5:2 இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காக புனித யாத்திரையின் போது வேட்டையாடுதலும் தாவரங்களை வெட்டுதலும் தடுக்கப்பட்டவையாக உள்ளன. ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் மக்காவில் குவிகின்ற நிலையில், வேட்டையாடுதல் அனுமதிக்கப்பட்டதாக இருந்தால், அந்நாடு வெகு விரைவில் அதனுடைய இயற்கை வளங்கள் பறிக்கப்பட்டதாகிவிடும். குவிகின்ற யாத்திரீகர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் உணவளிப்பதற்காகவும், தீர்ந்து போனவற்றை மீண்டும் நிறைவு செய்வதற்காகவும் பிராணிப்பலிகள் புனித யாத்திரையின் அங்கமாக ஆக்கப்பட்டுள்ளன. பார்க்க **2:196**.*

**5:3 பன்றியின் "இறைச்சி" தான் தடுக்கப்பட்டுள்ளது, "கொழுப்பு" அல்ல. குறிப்பிடப்பட்டுக் குர்ஆனில் தடுக்கப்படாத எந்த ஒன்றும் அனுமதிக்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும். பார்க்க **6:145–146**.*

*அங்க சுத்தி*

6. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக் கையில், நீங்கள்: *(1)* உங்களுடைய முகங்களைக் கழு விக் கொள்ளுங்கள், *(2)* முழங்கைகள் வரை உங்க ளுடைய கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள், *(3)* உங்களுடைய தலைகளைத் தடவிக்கொள்ளுங்கள், மேலும் *(4)* கணுக்கால்கள் வரை உங்களுடைய பாதங்களைக் கழுவிக் கொள்ளுங்கள். பால்ரீதியி லான உச்சக்கட்ட இன்பத்தால் நீங்கள் தூய்மையற்ற வர்களாக இருந்தால், நீங்கள் குளித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் நோயிலோ அல்லது பிரயாணத் திலோ இருந்தால், அல்லது ஏதேனும் செரிமானக் கழிவுகளை *(சிறுநீர், மலம், அல்லது வாயு)* வெளிப் படுத்தியிருந்தால், அல்லது பெண்களுடன் *(பாலுற வுத்)* தொடர்பு கொண்டிருந்தால், மேலும் நீங்கள் தண்ணீரைக் காண இயலாவிட்டால், நீங்கள் தூய் மையான உலர்ந்த மண்ணைத் தொட்டு, பின்னர் உங்களுடைய முகங்களையும் கைகளையும் தடவிக் கொள்வதன் மூலம் உலர் அங்க சுத்தியை *(தயம்மம்)* கடைப்பிடிக்க வேண்டும். மார்க்கத்தை உங்களுக் குக் கடினமானதாக ஆக்கி விடக் **கடவுள்** விரும்ப வில்லை; நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு, உங்களைத் தூய்மைப்படுத்தவும், உங் கள் மீதான தன்னுடைய ஆசிகளைப் பூரணப்படுத்த வுமே அவர் விரும்புகின்றார்.

7. உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசியையும் மேலும் உங்களுடன் அவர் உடன்படிக்கை செய்து கொண்ட அவருடைய உடன்படிக்கையையும் நினைவில் கொள்ளுங்கள்: நீங்கள் கூறினீர்கள்,"நாங்கள் செவியேற்கின்றோம், மேலும் நாங்கள் கீழ்ப்படி கின்றோம்." நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும்; உள்ளார்ந்த எண்ணங்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

*நீங்கள் பொய் சாட்சியம் பகர வேண்டாம்*

8. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் சாட்சிகளாகப் பணிபுரியும் போது, நீங்கள் முற்றிலும் நீதத்துடன் இருக்கவும், மேலும் **கடவுள்**–ஐக் கருத் தில் கொள்ளவும் வேண்டும். சில மக்களுடனான உங்களுடைய விரோதங்களினால் அநீதம் புரிவதற் குத் தூண்டப்பட்டவர்களாக இருக்காதீர்கள். நீங் கள் முற்றிலும் நீதத்துடன் இருக்க வேண்டும், ஏனெ னில் அதுவே மிகவும் நன்னெறியாகும். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றி லும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

9. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோருக்கு மன்னிப்பையும் மகத்தானதொரு பிரதிபலனையும் **கடவுள்** வாக்களிக்கின்றார்.

10. நம்பமறுத்து மேலும் நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்.

*நம்பிக்கையாளர்களைக் கடவுள் காப்பாற்றுகின்றார்*

11. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களை நினைவில் கொள்ளுங்கள்; உங்களுக்கெதிராகச் சில மக்கள் வலுச்சண்டை செய்வதற்காகத் தங்களுடைய கரங் களை நீட்டியபோது, அவர் உங்களைக் காப்பாற்றி னார், மேலும் அவர்களுடைய கரங்களைத் தடுத்து நிறுத்தினார். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வேண்டும்; நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீது தான் பொறுப்பேற்படுத்த வேண்டும்.

*கடவுளின் பாதுகாப்பிற்குள் நிலைத்திருப்பதற்குரிய நிபந்தனைகள்**

12. இஸ்ரவேலின் சந்ததியினரிடமிருந்து ஓர் உடன்படிக் கையைக் **கடவுள்** எடுத்திருந்தார், மேலும் அவர் களுக்கிடையில் பன்னிரண்டு வம்சத் தலைவர்களை நாம் எழுப்பினோம். மேலும் **கடவுள்** கூறினார், "நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடித்து, *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுத்து, மேலும் என்னுடைய தூதர்கள் மீது நம்பிக்கை கொண்டு மேலும் அவர்களைக் கண்ணி யப்படுத்தி, மேலும் நன்னெறியெனும் ஒரு கடனைக் **கடவுள்**–க்கு இரவலாகத் தொடர்ந்து கொடுத்து வருகின்ற பட்சத்தில், நான் உங்களுடன் இருக்கின் றேன். பின்னர் நான் உங்களுடைய பாவங்களை நீக்கு வேன், மேலும் பாய்கின்ற ஆறுகள் கொண்ட தோட் டங்களுக்குள் உங்களை அனுமதிப்பேன். இதன் பின் னரும் நம்பமறுக்கின்றவர் எவராயினும், உண்மையில் சரியான பாதையிலிருந்து விலகிச் சென்று விட்டார்."

*கடவுளின் உடன்படிக்கையை மீறுவதன் பின்விளைவுகள்*

13. அவர்களுடைய உடன்படிக்கையை மீறியதன் ஒரு பின் விளைவாகத்தான் அவர்களை நாம் கண்டனம் செய்தோம், மேலும் அவர்களுடைய இருதயங்கள் கடினமாகி விடும்படி நாம் செய்தோம். அதன் விளை வாக, வார்த்தைகளை அவற்றின் தொடர்பிலிருந்து அவர்கள் துண்டித்தனர். மேலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகளில் சிலவற்றை அலட்சியம் செய்தனர். அவர்களில் ஒரு சிலரைத் தவிர்த்து, அவர்களிடமிருந்து நம்பிக்கைத் துரோகத் தை நீர் தொடர்ந்து காண்பீர். நீர் அவர்களைப் பிழை பொறுக்கவும் அவர்களை அலட்சியம் செய்திடவும் வேண்டும். பெருந்தன்மையுடையவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

**5:12 இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அத்தியாவசியங்களை நீங்கள் பூர்த்தி செய்தால், கடவுள் உங்களுடன் இருக்கின் றார் என்பதை அவர் உங்களுக்குத் தெரியப்படுத்துவார், அது குறித்து எந்தச் சந்தேகமும் உங்களுக்கு இருக்காது. குர் ஆனின் அற்புதத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கு கணித அத்தாட்சிகளே கடவுளின் அத்தாட்சிகளில் மிக முக்கியம் வாய்ந்தவையாக உள்ளன (பின் இணைப்பு ஒன்று).*

*கிறிஸ்துவர்கள் கூட, கடவுளின் தூதருக்குக் கீழ்ப்படிய வேண்டும்*

14. அத்துடன், "நாங்கள் கிறிஸ்துவர்களாக இருக்கின்றோம்," என்று கூறியவர்களிடமிருந்தும் அவர்களுடைய உடன்படிக்கையை நாம் எடுத்தோம். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகளில் சிலவற்றை அவர்கள் அலட்சியம் செய்தனர். அதன் விளைவாக, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் வரை, அவர்களுக்கிடையிலேயே பகைமைக்கும் வெறுப்புக்கும் அவர்களை நாம் கண்டனம் செய்தோம். பின்னர் அவர்கள் செய்த ஒவ்வொன்றையும் பற்றிக் **கடவுள்** அவர்களுக்குத் தெரிவிப்பார்.

*இந்தக் குர்ஆன்: யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்களுக்கான கடவுளின் தூதுச் செய்தி*

15. வேதத்தையுடைய மக்களே, வேதத்தில் நீங்கள் மறைத்து விட்ட பல விஷயங்களை உங்களுக்கு பிரகடனப்படுத்துவதற்காகவும், மேலும் நீங்கள் செய்த பல்வேறு வரம்புமீறல்களைப் பொறுத்தருள்வதற்காகவும் நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். **கடவுள்**–யிடமிருந்து உங்களுக்கொரு கலங்கரை விளக்கும், மேலும் ஆழ்ந்ததொரு வேதமும் வந்து விட்டது.

16. அதனைக் கொண்டு, அவருடைய உவப்பைத் தேடுபவர்களைக் **கடவுள்** வழி நடத்துகின்றார். சாந்தியின் பாதைகளின் பால் அவர்களை அவர் வழி நடத்துகின்றார், தன்னுடைய அனுமதியின் பேரில் இருள்களிலிருந்து அவர்களை வெளியேற்றி ஒளியினுள் அழைத்துச் செல்கின்றார், மேலும் நேரானதொரு பாதையில் அவர்களை வழிநடத்துகின்றார்.

*மகத்தானதொரு இறை நிந்தனை*

17. மேரியின் மகன், மெசையாதான் **கடவுள்** என்று கூறுபவர்கள் உண்மையில் நாத்திகர்களாகவே இருக்கின்றனர். கூறுவீராக, "மேரியின் மகன், மெசையாவையும் மற்றும் அவருடைய தாயாரையும் இன்னும் பூமியின் மீதுள்ள ஒவ்வொருவரையும் அழித்தொழித்து விட அவர் நாடிவிட்டால், **கடவுள்**–ஐ எதிர்க்க எவரால் இயலும்?" வானங்கள் மற்றும் பூமி, இன்னும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றின் ஆட்சியதிகாரமும் **கடவுள்**–க்கே உரியது. தான் நாடுகின்ற எதனையும் அவர் படைக்கின்றார். **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

*யூதர்கள், கிறிஸ்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்குரிய கடவுளின் தூதர்*

18. யூதர்களும் கிறிஸ்துவர்களும் கூறினார்கள், "நாங்கள் **கடவுள்**–ன் பிள்ளைகள், மேலும் அவருடைய நேசத்திற்குரியவர்கள்." கூறுவீராக, "பின்னர் ஏன் அவர் உங்களுடைய பாவங்களுக்காக உங்களைத் தண்டிக்கின்றார்? அவர் படைத்த மற்ற மானிடர்களைப் போன்ற மானிடர்களாக மட்டுமே நீங்கள் இருக்கின்றீர்கள்." தான் நாடுகின்ற எவரையும் மன்னிக்கின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் அவர் தண்டிக்கின்றார். வானங்கள் மற்றும் பூமி, இன்னும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றின் ஆட்சியதிகாரமும் **கடவுள்**–க்கே உரியது, மேலும் இறுதி விதி அவரிடமே உள்ளது.

*கடவுளின் உடன்படிக்கைத்தூதர்*

19. வேதத்தையுடைய மக்களே, "போதகர் அல்லது எச்சரிப்பவர் எவரையும் நாங்கள் பெற்றுக் கொள்ளவில்லை," என நீங்கள் கூறாதிருக்கும் பொருட்டு, தூதர்கள் இல்லாத ஒரு கால கட்டத்திற்குப் பின்னர், விஷயங்களை உங்களுக்கு விளக்குவதற்காக, நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். ஒரு போதகர் மற்றும் எச்சரிப்பவர் இப்போது உங்களிடம் வந்து விட்டார். **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.*

20. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "என் சமூகத்தாரே, உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசிகளை நினைவில் கொள்ளுங்கள்: உங்களில் இருந்து நபிமார்களை அவர் நியமித்தார், உங்களை அரசர்களாக்கினார், மேலும் வேறெந்த மக்களுக்கும் ஒருபோதும் அவர் அளித்திராதவற்றை உங்களுக்கு அளித்தார்.

*புண்ணிய தேசத்தை இஸ்ரவேலர்களுக்குக் கடவுள் கொடுக்கின்றார்*

21. "என் சமூகத்தாரே, **கடவுள்** உங்களுக்கென விதித்துள்ள புண்ணிய தேசத்திற்குள் நுழையுங்கள், மேலும் நஷ்டவாளிகளாகி விடாதிருக்கும் பொருட்டு, கலகம் செய்யாதீர்கள்."

**5:19 கடவுளின் உடன்படிக்கைத் தூதரின் வருகை குறித்து பைபிள் மற்றும் குர்ஆனின் முன்னறிவிப்பு பூர்த்தியாவதை இந்த வசனம் அறிவிக்கின்றது. (மல்க்கியா 3:1, குர்ஆன் 3:81) இந்தத் தூதரின் பெயர் "ரஷாத் கலீஃபா" என்று குர்ஆனுக்குள் கணித அடிப்படையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வசனம் குறிப்பான நிரூபணம் முன்வைக்கப்படுதலை அத்தியாவசியமாக ஆக்குகின்றது. "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (505) "கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725), சூரா எண்ணையும் (5), வசன எண்ணையும் (19), கூட்டுவதன் மூலம், நமக்குக் கிட்டும் கூட்டுத்தொகையானது 505+725+5+19=1254 அல்லது 19x66 ஆக உள்ளது. குர்ஆனுடைய பொது வகு எண்ணாவது ரஷாத் கலீஃபா மூலம் வெளிப்படுத்தப்பட்ட பத்தொன்பதேயாகும். அதிகமான ஆதாரமும் குறிப்பிட்ட விவரங்களும் பின் இணைப்பு 2ல் உள்ளன.*

22. அவர்கள் கூறினார்கள், "மோஸஸே, வலிமை மிக்க மக்கள் அதனுள் இருக்கின்றனர், எனவே அவர்கள் அதிலிருந்து வெளியேறினாலேயன்றி, நாங்கள் அதனுள் நுழைய மாட்டோம். அவர்கள் வெளியேறி னால், நாங்கள் நுழைகின்றோம்."

23. பக்தியுடையவர்களாகவும் **கடவுள்**–ஆல் ஆசீர்வதிக் கப்பட்டவர்களாகவும் இருந்த இரண்டு மனிதர்கள் கூறினர், "வாயிலில் மட்டும் நுழைந்திடுங்கள். நீங் கள் மட்டும் நுழைந்துவிட்டால், நிச்சயமாக நீங்கள் வெற்றியடைவீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் **கடவுள்** மீது பொறுப்பேற்படுத்தி யாக வேண்டும்.

*அவர்கள் கண்ட அத்தனை அற்புதங்களுக்குப் பின்னரும்*

24. அவர்கள் கூறினார்கள், "மோஸஸே, அவர்கள் அத னுள் இருக்கின்ற காலம் வரை, நாங்கள் ஒரு போதும் அதனுள் நுழைய மாட்டோம். அதனால், சென்று – நீரும் உம்முடைய இரட்சகரும் – சண்டையிடுங்கள், நாங்கள் இங்கேயே அமர்ந்து கொண்டிருக்கின் றோம்."

25. அவர் கூறினார், "என் இரட்சகரே, என்னையும் என் னுடைய சகோதரரையும் மட்டுமே நான் கட்டுப் படுத்த இயலும். எனவே, இந்தத் தீய சமூகத்தாரின் சகவாசத்திலிருந்து பிரிந்து செல்ல எங்களை அனுமதிப்பீராக."

26. அவர் கூறினார், "இப்பொழுது முதல், நாற்பது ஆண்டு களுக்கு அது அவர்களுக்குத் தடுக்கப்பட்டுள்ளது, அப்போது அவர்கள் பூமியை இலக்கின்றிச் சுற்றித் திரிவார்கள். இத்தகைய தீய மக்களுக்காகக் கவலைப்படாதீர்.

*முதன் முதல் கொலை**

27. ஆதமுடைய இரு மகன்களின் உண்மைச் சரித்தி ரத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக. அவர்கள் ஓர் அர்ப்பணம் செய்தனர், மேலும் அது அவர்களில் ஒருவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆனால் மற்றவரிடமிருந்து அல்ல. அவன் கூறினான், "நிச்சய மாக நான் உன்னைக் கொன்று விடுவேன்." அவர் கூறினார், "நன்னெறியாளர்களிடமிருந்து மட்டுமே **கடவுள்** ஏற்றுக்கொள்கின்றார்.

28. "என்னைக் கொல்வதற்காக நீ உன்னுடைய கையை நீட்டினாலும், உன்னைக் கொல்வதற்காக நான் என் னுடைய கையை நீட்டமாட்டேன். ஏனெனில் நான் பிரபஞ்சத்தின் இரட்சகரான, **கடவுள்**–ஐ அஞ்சு கின்றேன்.

29. "என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத் தையும் நான் அல்ல, நீயே சுமக்க வேண்டுமென்றும், பின்னர் நரகவாசிகளை நீ சென்றடைந்திட வேண்டு மென்றும், நான் விரும்புகிறேன். வரம்பு மீறுபவர்களுக் குரிய கைம்மாறு இத்தகையதேயாகும்."

30. தன்னுடைய சகோதரரைக் கொன்று விடுவதற்கு அவனுடைய அகந்தை அவனைத் தூண்டியது. அவன் அவரைக் கொன்றான், மேலும் நஷ்டவாளிகளைச் சென்றடைந்தான்.

31. **கடவுள்** பின்னர் அவனுடைய சகோதரரின் சடலத் தைப் புதைப்பது எவ்வாறு என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக, மண்ணைச் சுரண்டு வதற்கு ஒரு காகத்தை அனுப்பினார். அவன் கூறி னான், "எனக்குக் கேடுதான்; இந்தக் காகத்தைப் போன்ற அளவுக்குக் கூட அறிவுடையவனாக நான் இருந்து, என்னுடைய சகோதரரின் சடலத்தைப் புதைப்பதற்குத் தவறி விட்டேன்." குற்றவுணர்வால் அழுத்தப்பட்டவனாக அவன் ஆனான்.

*கொலையின் பெருங்கேடு*

32. இதன் காரணமாக, எவரொருவர் கொலையோ அல்லது பயங்கரமான குற்றங்களையோ செய்யாத எந்த நபரையும் கொலை செய்கின்றாரோ அது எல்லா மக்களையும் அவர் கொலை செய்தவரைப் போலா வார் என்று இஸ்ரேலின் சந்ததியினருக்கு நாம் கட்ட ளையிட்டோம். மேலும் எவரொருவர் ஓர் உயிரை வாழவைக்கின்றாரோ, அது எல்லா மக்களையும் அவர் உயிர் வாழவைத்தவரைப் போலாவார். நம்மு டைய தூதர்கள் தெளிவான சான்றுகள் மற்றும் வெளிப்பாடுகளுடன் அவர்களிடம் சென்றனர், ஆனால் அவர்களில் பெரும்பாலோர், இவை அனைத் திற்கும் பின்னரும், இன்னமும் வரம்பு மீறிக் கொண்டி ருக்கின்றனர்.

*மரண தண்டனை: எப்பொழுது அது நியாயமாகின்றது ?*

33. **கடவுள்** மற்றும் அவருடைய தூதருடன் சண்டை யிட்டு, மேலும் பயங்கரமான குற்றங்கள் புரிபவர்களுக் குரிய நியாயமான தண்டனையாவது, கொல்லப்படு தல், அல்லது சிலுவையிலறையப்படுதல், அல்லது மாறுகால் மாறுகை வாங்கப்படுதல் அல்லது நாட்டி லிருந்து வெளியேற்றப்படுதலேயாகும். இது அவர் களை இந்த வாழ்வில் இழிவு படுத்துவதற்காக, பின்னர் மறுவுலகில் அவர்கள் மிகவும் மோசமான தொரு தண்டனையை அனுபவிப்பார்கள்.

**5:27–31 இந்த முதல் கொலையில் சம்பந்தப்பட்டுள்ள அந்த இரு மகன்களின் பெயர்களும் இவ்விஷயத்திற்கு அவசிய மானவை அல்ல. எனினும் அவை பைபிளில் ஆபேல் மற்றும் கெய்ன் என்று கொடுக்கப்பட்டுள்ளன (ஆதியாகமம் 4:2–9).*

34. அவர்களை நீங்கள் கைப்பற்றுவதற்கு முன்னர் வருந்தித் திருந்தி விடுபவர்கள் விதிவிலக்களிக்கப் பட்டவர்களாக இருக்கின்றனர். **கடவுள்** மன்னிப் பவர், மிக்க கருணையாளர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

35. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கவும் மேலும் அவரை நோக்கிய வழிகள் மற்றும் உபாயங்களைத் தேடிக் கொள்ளவும், மேலும் அவர் நிமித்தம் பாடுபடவும் வேண்டும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு.

*நம்பமறுத்தலுக்கான விலை*

36. நிச்சயமாக, நம்பமறுத்து விட்டவர்கள், பூமியின் மீதுள்ள ஒவ்வொன்றையும், இன்னும் அதுபோல் இரண்டு மடங்கையும் சொந்தமாகக் கொண்டி ருந்து, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளின் தண்ட னையிலிருந்து அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள அதனை ஈடாக அர்ப்பணித்தாலும், அவர்களிட மிருந்து அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது; அவர் கள் வலிநிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

37. அவர்கள் நரகத்திலிருந்து வெளியேற விரும்புவார் கள், ஆனால் அந்தோ, அவர்கள் ஒருபோதும் அதிலி ருந்து வெளியேற இயலாது; அவர்களுடைய தண் டனை நிரந்தரமானதாகும்.

*குர்ஆனிய நீதிக்குக் கணிதச்*
*சான்று ஆதரவளிக்கின்றது*

38. திருடுபவர், ஆணோ அல்லது பெண்ணோ, அவர் களுடைய குற்றத்திற்குரியதொரு தண்டனையாக வும், மேலும் **கடவுள்**–யிடமிருந்து ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்வதற்காகவும், நீங்கள் அவர்களு டைய கரங்களை* அடையாளமிடுதல் வேண்டும். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

39. இந்தக் குற்றத்தைப் புரிந்து விட்ட பின்னர் ஒருவர் பாவத்திற்காக வருந்தி, மேலும் சீர்திருந்திக் கொள் வாராயின், **கடவுள்** அவரை மீட்டுக் கொள்கின்றார் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

40. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரத்தைக் **கடவுள்** சொந்தமாகக் கொண்டிருக்கின்றார் என் பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? தான் நாடுகின்ற எவரையும் அவர் தண்டிக்கின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் அவர் மன்னிக்கின்றார். **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

41. தூதரே உம்மைத்தான், தங்களுடைய இதயங்கள் நம்பிக்கை கொள்ளாத அதே சமயம், அவர்களுடைய வாய்களினால், "நாங்கள் நம்பிக்கை கொள்கின் றோம்," என்று கூறுபவர்களில் நம்பமறுத்தலின் பால் விரைந்து செல்பவர்களால் நீர் கவலைக்குள்ளா காதீர். யூதர்களில், சிலர் பொய்களைச் செவியேற்ற னர். அவர்கள் உம்மை ஒருபோதும் சந்தித்திராத மக் களிடமும், மேலும் வார்த்தைகளை அவற்றின் தொடர் பிலிருந்து சிதைத்தவர்களிடமும் செவியேற்றனர், பின்னர் கூறினர், "நீங்கள் இதனைக் கொடுக்கப் பட்டால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள், ஆனால் இது வல்லாத ஏதேனும் ஒன்று உங்களுக்குக் கொடுக்கப் பட்டால், எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்," எவரையெல்லாம் திசை திருப்பி விடக் **கடவுள்** நாடு கின்றாரோ, அவருக்கு உதவுவதற்காக **கடவுள்**–க்கு எதிராக உம்மால் எந்த ஒன்றும் செய்ய இயலாது. **கடவுள்** அவர்களுடைய இதயங்களைத் தூய்மைப் படுத்த விரும்பவில்லை. இந்த உலகில் அவர்கள் இழிவுக்குள்ளாகி விட்டனர், மேலும் மறுவுலகத்தி லோ, பயங்கரமானதொரு தண்டனையை அனுபவிப் பார்கள்.

42. அவர்கள் பொய்களை ஆதரிப்பவர்களாகவும், சட்ட விரோதமான சம்பாத்தியங்களை உண்பவர்களாக வும் இருக்கின்றனர். தங்களுக்கிடையில் தீர்ப்பளிக் கும்படி உம்மிடம் அவர்கள் வந்தால், நீர் அவர்களுக் கிடையில் தீர்ப்பளிக்கலாம், அல்லது நீர் அவர்களைப் புறக்கணித்து விடலாம். அவர்களைப் புறக்கணிப் பதை நீர் தேர்ந்தெடுத்தால், அவர்கள் உமக்குச் சிறி தளவும் தீங்கிழைக்க இயலாது. ஆனால் அவர்களுக் கிடையில் நீர் தீர்ப்பளித்தால், நீர் நீதமாகத் தீர்ப் பளிக்க வேண்டும். நீதிமான்களாக இருப்பவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

---

****5:38** போலி முஸ்லிம்களால் கட்டளையிடப்பட்டுள்ளபடி, திருடுபவரின் கைகளைத் துண்டித்து எடுக்கும் வழக்கம், குர்ஆனுடைய அடிப்படையில் அல்லாத ஒரு சாத்தானிய நடைமுறையாகும். இந்த உதாரணத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த முக்கியத்துவத்தின் காரணத்தால், திருடுபவரின் கரத்தைத் துண்டிப்பதற்குப் பதிலாக, அதில் அடையாளமிடுவதற்கு ஆதரவாகக் கடவுள் கணித ரீதியிலான சான்றினை வழங்கியுள்ளார். வசனம் **12:31** தங்களுடைய கைகளை "வெட்டிக் கொள்ளும்" அளவுக்கு ஜோசஃபை வியந்த பெண்களைப் பற்றிப் பேசுகின்றது. கண்கூடாக, அவர்கள் தங்களுடைய கைகளைத் "துண்டித்து எடுத்து" விடவில்லை; அது எவராலும் இயலாது. **5:38** மற்றும் **12:31** ஆகிய வசனங்களில் சூரா எண் மற்றும் வசன எண்களின் கூட்டுத் தொகை ஒன்றாகவே உள்ளது, அதாவது **43**. இந்தக் கணிதத் தொடர்பு குர்ஆனுடைய **19**ன் அடிப்படையிலான குறியீட்டுடன் ஒத்துப்போக வேண்டும் என்பது கடவுளின் நாட்டமாகவும் கருணையாகவும் உள்ளது. **12:31**க்குப் பத்தொன்பது வசனங்களுக்குப் பின் இதே வார்த்தையை நாம் காண்கின்றோம் **(12:50)**.*

43. **கடவுள்**–ன் சட்டங்களை உள்ளடக்கிய தோராவை அவர்கள் வைத்திருந்தும், அதனை அலட்சியம் செய்வதை அவர்கள் தேர்ந்தெடுத்து விட்ட பொழுது, அவர்களுக்கிடையில் தீர்ப்பளிக்குமாறு உம்மை ஏன் அவர்கள் கேட்கின்றனர்? அவர்கள் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

*முந்திய வேதங்களுக்கு மதிப்பளித்தல்*

44. வழிகாட்டலையும் ஒளியையும், உள்ளடக்கிய தோராவை* நாம் இறக்கி அனுப்பியுள்ளோம். யூத நபிமார்களும், அவ்வண்ணமே மத குருமார்களும் பாதிரிமார்களும், **கடவுள்**–ன் வேதத்தில் அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டபடியும், அவர்கள் கண்ணுற்ற படியும் அதற்கேற்பத் தீர்ப்பளித்து வந்தனர். எனவே, மானிட இனத்தவர் மீது பக்தி கொள்ளாதீர்கள்; பதிலாக என் மீதே நீங்கள் பக்தி கொள்ள வேண்டும். மேலும் என்னுடைய வெளிப்பாடுகளை ஓர் அற்ப விலைக்கு வாணிபம் செய்து விடாதீர்கள். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பத் தீர்ப்பளிக்காதவர்களே நம்பமறுப்பவர்கள் ஆவர்.

*சமநீதியுடைய சட்டம்*

45. மேலும் அதனில் நாம் அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டிருந்தோம்: உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், மூக்கிற்கு மூக்கு, காதுக்குக் காது, பல்லுக்குப் பல், மேலும் எந்தக் காயத்திற்கும் அதற்குச் சமமானதொரு காயம். தனக்கு உரியதை ஒருவர் தர்மமாக விட்டுக் கொடுத்து விடுவாராயின், அது அவருடைய பாவங்களுக்குப் பரிகாரமாக ஆகி விடும். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பத் தீர்ப்பளிக்காதவர்களே அநீதியாளர்கள் ஆவர்.

*ஜீஸஸின் சுவிசேஷம்:*
*வழிகாட்டலும் ஒளியும்*

46. அவர்களைத் தொடர்ந்து, முந்திய வேதமான தோராவை உறுதிப்படுத்துவதாக, மேரியின் மகன், ஜீஸஸை நாம் அனுப்பினோம். வழிகாட்டலையும் ஒளியையும் உள்ளடக்கியதாகவும், முந்திய வேதங்கள், தோராவை உறுதிப்படுத்துவதாகவும், அவற்றின் வழிகாட்டலையும் ஒளியையும் அதிகரிப்பதாகவும், நன்னெறியாளர்களுக்கு ஓர் அறிவூட்டலாகவும் அவருக்கு நாம் சுவிசேஷத்தைத் தந்தோம்.

47. சுவிசேஷத்தையுடைய மக்கள் அதிலுள்ள **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பத் தீர்ப்பளிக்க வேண்டும். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பத் தீர்ப்பளிக்காதவர்களே தீயவர்கள் ஆவர்.

*குர்ஆன்: இறுதியான ஆலோசனைக் குறிப்பேடு*

48. பின்னர் சத்தியம் நிறைந்தாகவும், முந்திய வேதங்களை உறுதிப்படுத்துவதாகவும், அவற்றின் இடத்தில் இந்த வேதத்தை நாம் உமக்கு வெளிப்படுத்தினோம். நீர் அவர்களுக்கிடையில் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பத் தீர்ப்பளிக்க வேண்டும், மேலும் உமக்கு வந்திருக்கின்ற சத்தியத்திலிருந்து அவர்கள் வேறுபட்டால் அவர்களுடைய விருப்பங்களைப் பின்பற்றாதீர். உங்களில் ஒவ்வொருவருக்கும் சட்டங்களையும் வேறு பட்ட சடங்குகளையும் நாம் விதித்துள்ளோம். **கடவுள்** நாடியிருந்தால், உங்களை ஒரே கூட்டமாக ஆக்கியிருக்க அவரால் இயலும், ஆனால் அவர் இவ்விதமாக உங்களில் ஒவ்வொருவருக்கும் அவர் தந்திருக்கின்ற வெளிப்பாடுகளின் மூலமாக உங்களைச் சோதனையில் ஆழ்த்துகின்றார். நீங்கள் நன்னெறிகளில் போட்டியிட வேண்டும். உங்களுடைய இறுதி விதி **கடவுள்** வசமே உள்ளது – உங்கள் அனைவருடையதும் – பின்னர் நீங்கள் சர்ச்சை செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர் உங்களுக்கு தெரியப்படுத்துவார்.

49. உமக்கு அளிக்கப்பட்ட **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு ஏற்பவே அவர்களுக்கிடையில் நீர் தீர்ப்பளிக்க வேண்டும். அவர்களுடைய விருப்பங்களைப் பின்பற்றாதீர், மேலும் உமக்கு அளிக்கப்பட்ட **கடவுள்**–ன் வெளிப்பாடுகளில் சிலவற்றில் இருந்து அவர்கள் உம்மைத் திசை திருப்பி விடாதவாறு எச்சரிக்கையுடன் இருப்பீராக. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் அவர்களுடைய பாவங்களில் சிலவற்றுக்காகக் **கடவுள்** அவர்களைத் தண்டிக்க நாடுகின்றார் என்பதை அறிந்து கொள்வீராக. உண்மையில், அதிகமான மக்கள் தீயவர்களாகவே இருக்கின்றனர்.

50. அறியாமைக் காலத்தின் சட்டத்தையா அவர்கள் ஆதரிக்க நாடுகின்றனர்? உறுதிப்பாட்டினை அடைந்து விட்டவர்களுக்குக் **கடவுள்**–வுடையதை விடவும் எவருடைய சட்டம் மேலானது?

**5:44 ஜீஸஸ் க்றைஸ்ட்டுக்கு முன் இஸ்ரேலின் நபிமார்கள் அனைவரின் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து வேதங்களின் ஒரு தொகுப்பே தோராவாகும். தோரா மோஸஸுக்குக் கொடுக்கப்பட்டதாகக் குர்ஆனில் எங்கும் நாம் காண்பதில்லை.*

*குறிப்பிட்ட சில யூதர்களும் கிறிஸ்துவர்களும் நண்பர்களாக இருக்க இயலாது**

51. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், குறிப்பிட்ட சில யூதர்களையும் கிறிஸ்துவர்களையும் கூட்டாளிகளாக எடுத்துக்கொள்ளாதீர்கள்; இவர்கள் ஒருவர் மற்றவருக்குக் கூட்டாளிகளாக இருக்கின்றனர். உங்களில் இவர்களுடன் தங்களைப் பிணைத்துக் கொள்கின்றவர்கள் அவர்களைச் சேர்ந்தவர்களே, வரம்புமீறுகின்றவர்களைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

52. தங்களுடைய இதயங்களில் சந்தேகத்தைத் தாங்கியிருப்பவர்கள், "நாம் தோற்கடிக்கப்பட்டு விடக் கூடுமோ என்று நாங்கள் அஞ்சுகின்றோம்," என்று கூறியவாறு அவர்களுடன் சேர்ந்து கொள்ள விரைந்திடுவதை நீர் காண்பீர். தங்களுடைய இரகசிய எண்ணங்களுக்காக அவர்களை வருந்தச் செய்கின்ற வெற்றியையோ, அல்லது அவரிடமிருந்துள்ள ஒரு கட்டளையையோ **கடவுள்** கொண்டு வருவாராக.

53. நம்பிக்கையாளர்கள் அப்போது கூறுவார்கள், "உங்களுடனே அவர்கள் இருப்பதாகக் **கடவுள்** மீது பவித்திரமாகச் சத்தியம் செய்த அதே மக்களா இவர்கள்?" அவர்களுடைய காரியங்கள் செல்லாதவையாக ஆக்கப்பட்டு விட்டன; அவர்கள் தான் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர்.

54. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுடைய மார்க்கத்திலிருந்து நீங்கள் பின்வாங்கிச் சென்று விட்டால் பின்னர், தான் நேசிக்கின்ற மேலும் தன்னை நேசிக்கின்ற மக்களைக் **கடவுள்** உங்களுடைய இடத்தில் மாற்றியமைத்து விடுவார். அவர்கள் நம்பிக்கையாளர்களிடம் கனிவுடனும், நம்பமறுப்பவர்களிடம் கண்டிப்புடனும் இருப்பார்கள், மேலும் எந்த நிந்தனைக்கும் அஞ்சாது **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுவார்கள். **கடவுள்**–ன் ஆசீர்வாதம் இத்தகையதேயாகும்; தான்நாடுகின்ற எவர் மீதும் அதனை அவர் அருள்கின்றார். **கடவுள்** கொடையளிப்பவர், சர்வமும் அறிந்தவர்.

55. உங்களுடைய உண்மையான கூட்டாளிகள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றவர்கள், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கின்றவர்களே ஆவர்,மேலும் அவர்கள் குனிந்து வழிபடுகின்றனர்.

56. **கடவுள்** மற்றும் அவருடைய தூதருடன் தங்களைப் பிணைத்துக் கொள்கின்றவர்களும், நம்பிக்கை கொண்டவர்களும் **கடவுள்**–ன் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்; நிச்சயமாக, அவர்கள்தான் வெற்றியாளர்கள்.

*எத்தகைய யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்கள்*

57. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், முந்திய வேதத்தைப் பெற்றுக் கொண்டவர்களில் உங்களுடைய மார்க்கத்தைக் கேலியும் பரிகாசமும் செய்கின்றவர்களுடன் நட்புக் கொள்ளாதீர்கள், அன்றி நம்பமறுப்பவர்களுடனும் நீங்கள் நட்புக் கொள்ள வேண்டாம். நீங்கள் மெய்யாகவே நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் **கடவுள்** மீது பக்தி கொள்ள வேண்டும்.

*வேதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் வரம்பு மீறுகின்றனர்*

58. *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளுக்காக நீங்கள் அழைக்கின்ற பொழுது, அவர்கள் அதனைக் கேலியும் பரிகாசமும் செய்கின்றனர். இது ஏனெனில் அவர்கள் புரிந்து கொள்ளாத மக்களாக இருக்கின்றனர்.

59. கூறுவீராக, "வேதத்தையுடைய மக்களே, நாங்கள் **கடவுள்** மீதும், எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும், எங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்கின்ற காரணத்தாலும், மேலும் உங்களில் அதிகமானோர் நன்னெறியாளர்கள் அல்லர் என்ற காரணத்தாலுமே நீங்கள் எங்களை வெறுக்கின்றீர்கள் அல்லவா?"

60. கூறுவீராக, "**கடவுள்**–ன் பார்வையில் மிகவும் மோசமானவர்கள் யார் என்று நான் உங்களுக்குக் கூறுகின்றேன்: அவருடைய கடுங்கோபத்திற்கு உள்ளான பின்னர் குரங்குகளையும் பன்றிகளையும் *(போல இழிவானவர்களாக),* மேலும் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களாக அவர்களை அவர் ஆக்கி விடும்வரை **கடவுள்**–ஆல் கண்டனம் செய்யப்பட்டவர்கள்தான். இவர்கள் மிகவும் மோசமானவர்கள், மேலும் சரியான பாதையிலிருந்து வெகு தொலைவிலுள்ளவர்கள்."

61. அவர்கள் உள்ளே நுழைந்த பொழுது முற்றிலும் நம்பமறுத்தலுடனும், மேலும் அவர்கள் வெளியேறும் பொழுதும் முற்றிலும் நம்பமறுத்தலுடனும் அவர்கள் இருந்த போதிலும், உம்மிடம் வரும் போது, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம்." அவர்கள் மறைக்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

---

**5:51 மற்ற மக்களுடனான உறவுகள் 5:57 & 60:8–9ல் உள்ள அடிப்படை விதியின் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றது. நண்பர்களாக இருக்க இயலாத யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் எவர் என 5:57ல் குறிப்பிட்டுக் கூறப்படுகின்றனர்; அவர்கள் நம்பிக்கையாளர்களைக் கேலியும் பரிகாசமும் செய்பவர்கள், அல்லது அவர்களைத் தாக்குபவர்களேயாவர்.*

62. தீமையையும் வரம்புமீறலையும் தயங்காமல் செய்கின்றவர்களாகவும், மேலும் சட்டவிரோதமான சம்பாத்தியங்களில் இருந்து உண்பவர்களாகவும் அவர்களில் பலரை நீர் காண்கின்றீர். அவர்கள் செய்கின்றவை உண்மையில் துக்ககரமானவையேயாகும்.

63. யூத மதகுருமார்களும், பாதிரிமார்களும் மட்டும் அவர்களுடைய பாவகரமான கூற்றுகள் மற்றும் சட்டவிரோதமான சம்பாத்தியங்களில் இருந்து அவர்களைத் தடுத்திருந்தால்! அவர்கள் புரிகின்றவை உண்மையில் துக்ககரமானவையேயாகும்.

*கடவுளுக்கெதிராக நிந்தனை செய்தல்*

64. "**கடவுள்**–ன் கரம் கட்டப்பட்டுள்ளது!" என்றும் கூட யூதர்கள் கூறினார்கள். கட்டப்பட்டுள்ளவை அவர்களுடைய கரங்கள்தாம். அவர்கள் இத்தகையதொரு இறை நிந்தனையைக் கூறியதற்காகக் கண்டனம் செய்யப்பட்டவர்களாக உள்ளனர். மாறாக, அவருடைய கரங்களோ அவர் நாடியவாறு செலவிட்டுக் கொண்டு, விசாலமாகத் திறந்துள்ளன. மிகத் திண்ணமாக, உமக்கு அளிக்கப்பட்ட உம்முடைய இரட்சகரின் வெளிப்பாடுகள் அவர்களில் பலரை வரம்புமீறல் மற்றும் நம்பமறுத்தலுக்குள் மிகவும் ஆழமாக மூழ்கிடச் செய்யும். அதன் விளைவாக, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் வரை அவர்களுக்கிடையிலேயே பகைமைக்கும் வெறுப்புக்கும் அவர்களை நாம் உட்படுத்தி விட்டோம். போர் ஜுவாலைகளை அவர்கள் மூட்டுகின்ற பொழுதெல்லாம், **கடவுள்** அவற்றை அணைத்து விடுகின்றார். தீய இயல்புடன் அவர்கள் பூமியைச் சுற்றித் திரிகின்றனர், ஆனால் தீமை செய்வோரைக் **கடவுள்** வெறுக்கின்றார்.

*யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்களுக்குரிய மீட்சி*

65. வேதத்தையுடைய மக்கள் நம்பிக்கை கொண்டு அத்துடன் நன்னெறியானதொரு வாழ்வு மட்டும் நடத்தினால், அப்போது நாம் அவர்களுடைய பாவங்களை நீக்குவோம்; மேலும் ஆனந்தமயமான தோட்டங்களுக்குள் அவர்களை அனுமதிப்போம்.

*அவர்கள் இந்தக் குர்ஆன் மீது*
*நம்பிக்கை கொண்டாக வேண்டும்*

66. தோரா மற்றும் சுவிசேஷத்தையும், மேலும் அவர்களுடைய இரட்சகரிடமிருந்து இதனில் அவர்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றையும் அவர்கள் மட்டும் ஆதரிப்பார்களாயின், அவர்களுக்கு மேலிருந்தும் அவர்களுடைய பாதங்களுக்குக் கீழிருந்தும் ஆசீர்வாதங்களால் அவர்கள் பொழியப்படுவார்கள். அவர்களில் சிலர் நன்னெறியாளர்களாக இருக்கின்றனர், ஆனால் அவர் களில் பலர் தீமை செய்பவர்களாகவே இருக்கின்றனர்.

*தூதர் சேர்ப்பித்தாக வேண்டும்*

67. தூதரே உம்மைத்தான், உம்முடைய இரட்சகரிடமிருந்து உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றைச் சேர்ப்பித்து விடுவீராக – நீர் செய்கின்ற வரை, அவருடைய தூதுச் செய்தியை நீர் சேர்ப்பித்தவராகி விடவில்லை – மேலும் மக்களிடமிருந்து **கடவுள்** உம்மைப் பாதுகாப்பார். நம்பமறுக்கின்ற மக்களைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

68. கூறுவீராக, "வேதத்தையுடைய மக்களே, தோரா, மற்றும் சுவிசேஷத்தையும், மேலும் உங்களுடைய இரட்சகரிடமிருந்து இதனில் இறக்கி அனுப்பப்பட்டுள்ளவற்றையும் நீங்கள் ஆதரிக்கின்ற வரையிலும் உங்களுக்கு எந்த அடிப்படையும் இல்லை." மிகவும் நிச்சயமாக, உம்முடைய இரட்சகரிடமிருந்துள்ள இந்த வெளிப்பாடுகள் அவர்களில் பலரை வரம்புமீறல் மற்றும் நம்பமறுத்தலுக்குள் மிகவும் ஆழமாக மூழ்கிடச் செய்யும். ஆகையால் நம்பமறுக்கின்ற மக்களுக்காக வருத்தம் கொள்ளாதீர்.

*மீட்சிக்கு உரிய குறைந்தபட்சத் தேவைகள்*

69. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்களாக இருப்பவர்கள், மதம் மாறியவர்கள், மற்றும் கிறிஸ்துவர்கள்: அவர்களில் எவராயினும் *(1)* **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு மேலும் *(2)* இறுதி நாள் மீது நம்பிக்கை கொண்டு, மேலும் *(3)* நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களுக்கு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை, அன்றி அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

70. இஸ்ரேலின் சந்ததியினரிடமிருந்து ஓர் உடன்படிக்கையை நாம் எடுத்துள்ளோம், மேலும் அவர்களுக்கு நாம் தூதர்களை அனுப்பினோம். அவர்கள் விரும்பாத எந்த ஒன்றுடனும் தூதர் ஒருவர் அவர்களிடம் சென்ற பொழுதெல்லாம், அவர்களில் சிலரை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர், மேலும் சிலரை அவர்கள் கொன்றனர்.

71. தாங்கள் சோதிக்கப்பட மாட்டோம், என்று அவர்கள் எண்ணிக் கொண்டனர், எனவே அவர்கள் குருடர்களாகவும் செவிடர்களாகவும் மாறினார்கள், பின்னர் **கடவுள்** அவர்களை மீட்டுக் கொண்டார், ஆனாலும் பின்னர் அவர்களில் பலர் மீண்டும் குருடர்களாகவும் செவிடர்களாகவும் மாறிவிட்டனர். அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

*இன்றைய கிறிஸ்துவம்*
*ஜீஸஸின் மார்க்கம் அல்ல**

72. மேரியின் மகனான, மெஸையாதான் **கடவுள்** என்று கூறுகின்றவர்கள் எவரும் உண்மையில் நாத்திகர்களேயாவர். மெஸையாவான அவரே கூறினார், "இஸ்ரேலின் சந்ததியினரே, நீங்கள் **கடவுள்**–ஐ வழிபடவேண்டும்; என்னுடைய இரட்சகர்* மற்றும் உங்களுடைய இரட்சகர்." எவனொருவன் **கடவுள்**–வுடன் போலித் தெய்வம் எதனையும் அமைத்துக் கொள்கின்றானோ, **கடவுள்** அவனுக்குச் சுவனத்தைத் தடை செய்து விட்டார், மேலும் அவனுடைய விதி நரகமேயாகும். தீயவர்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

73. திரித்துவம் ஒன்றில் மூன்றாவதான ஒருவர்தான் **கடவுள்** என்று கூறுகின்றவர்கள் உண்மையில் நாத்திகர்களேயாவர். அந்த ஓர் இறைவனைத் தவிர எந்த இறைவனும் இல்லை. இவ்வாறு கூறுவதிலிருந்து அவர்கள் விலகிக் கொண்டாலேயன்றி, அவர்களுக்கிடையில் உள்ள நம்பமறுக்கின்றவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாவார்கள்.

74. **கடவுள்**–யிடம் பாவத்திற்காக வருந்தி, அவருடைய மன்னிப்பை அவர்கள் கேட்க மாட்டார்களா? **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

75. மெஸையாவான, மேரியின் மகன், அவருக்கு முன்னிருந்த தூதர்களைப் போன்ற ஒரு தூதர் என்பதை விட அதிகம் எதுவுமில்லை, மேலும் அவருடைய தாயார் ஒரு புனிதராக இருந்தார். அவர்கள் இருவரும் உணவு உண்பவர்களாகவே இருந்தனர். வெளிப்பாடுகளை அவர்களுக்கு நாம் எவ்வாறு விவரிக்கின்றோம் என்பதைக் கவனிப்பீராக, இருப்பினும் அவர்கள் எவ்வாறு விலகிச் செல்கின்றனர் என்பதையும் கவனிப்பீராக!

76. கூறுவீராக, "உங்களுக்குத் தீங்கிழைக்கவோ, அன்றி உங்களுக்குப் பயனளிக்கவோ இயலாத சக்தியற்ற போலித் தெய்வங்களைக் **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடுவீர்களா? **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்."

*உங்களுடைய நண்பர்களைக்*
*கவனத்துடன் தேர்ந்தெடுங்கள்*

77. கூறுவீராக, " வேதத்தையுடைய மக்களே, உங்களுடைய மார்க்கத்தின் எல்லைகளை சத்தியத்திற்கு அப்பாற்பட்டு வரம்புமீறாதீர்கள், மேலும் வழிதவறிச் சென்று விட்டதுடன், பெருந்திரளான மக்களையும் தவறான வழியில் நடத்திய மனிதர்களுடைய அபிப்பிராயங்களைப் பின்பற்றாதீர்கள்; அவர்கள் சரியான பாதையிலிருந்து நெடுந்தொலைவு வழி தவறியவர்களாக உள்ளனர்."

78. இஸ்ரேலின் சந்ததியினரில் நம்பமறுத்து விட்டவர்கள், டேவிட் மற்றும் ஜீஸஸ், எனும் மேரியின் மகன் நாவினால் கண்டனம் செய்யப்பட்டவர்களாக உள்ளனர். இது ஏனெனில் அவர்கள் கீழ்ப்படியாதிருந்ததனாலும் வரம்புமீறியதனாலுமேயாகும்.

*அக்கறையின்மை கண்டனம் செய்யப்படுகின்றது*

79. தீமை புரிவதிலிருந்து ஒருவரை ஒருவரையொருவர் அவர்கள் தடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் செய்தவை உண்மையில் துக்ககரமானதேயாகும்.

80. அவர்களில் பலர் நம்பமறுப்பவர்களுடன் தங்களைக் கூட்டாளிகளாக்கிக் கொள்வதை நீர் காண்பீர். தங்களுடைய ஆத்மாக்களின் சார்பாக அவர்களுடைய கரங்கள் முற்படுத்தி அனுப்பி வைத்தது உண்மையில் துக்ககரமானதேயாகும். **கடவுள்** அவர்களுடன் கோபமாக உள்ளார், இன்னும் அதன் விளைவாக, அவர்கள் தண்டனையில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

81. **கடவுள்** மற்றும் இந்த நபியின் மீதும், இதனில் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்கள் அவர்களுடன் நட்புக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள். ஆனால் அவர்களில் பலர் பாவிகளாகவே இருக்கின்றனர்.

*சத்தியமானதொரு வாக்கு*

82. நம்பிக்கையாளர்களுடைய மோசமான விரோதிகளாக யூதர்களும் போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்களும் இருப்பதை நீர் கண்டு கொள்வீர். அத்துடன், " நாங்கள் கிறிஸ்துவர்களாக இருக்கின்றோம்," என்று கூறுபவர்களே நம்பிக்கையாளர்களுக்கு நட்பில் மிகவும் நெருக்கமான மக்களாக இருப்பதையும் நீர் கண்டு கொள்வீர். இது ஏனெனில் அவர்களுக்கிடையில் பாதிரிமார்களும் துறவிகளும் இருப்பதனாலேயாகும், மேலும் அவர்கள் ஆணவம் கொண்டவர்களாக இருப்பதுமில்லை.

---

**5:72–76* *ஜான் 20:17ல் ஜீஸஸ், தான் கடவுளாகவோ அன்றிக் கடவுளின் மகனாகவோ இருக்கவில்லை என்று போதித்ததை நாம் காண்கின்றோம். ஏராளமான மத ஆராய்ச்சியாளர்கள், கவனமான ஆய்வுக்குப் பின்னர், இன்றைய கிறிஸ்துவம் ஜீஸஸினால் போதிக்கப்பட்ட அதே கிறிஸ்துவம் அல்ல என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இந்த விஷயத்தில் இரு பிரபலமான புத்தகங்களாவன "The Myth of God Incarnate" "கடவுளின் அவதாரம் எனும் கட்டுக்கதை" (வெஸ்ட் மினிஸ்டர் அச்சகம், ஃபிலடெல்ஃபியா 1977) மற்றும் "The Mythmaker" "கட்டுக்கதை புனைவோர்" (ஹார்ப்பர் & ரோ, நியூயார்க், 1986) ஆகியவையாகும். "கட்டுக்கதை புனைவோர்" எனும் புத்தகத்தின் முகப்பு அட்டையில் கீழ்கண்ட வாசகத்தை நாம் படிக்கின்றோம்:* **"...கிறிஸ்துவத்தின் ஸ்தாபகர், பவுல் என்பவர் தான், ஜீஸஸ் அல்லர் எனும் கண்ணோட்டத்திற்கு ஆதரவான புதிய வாதங்களை ஹயாம் மக்கோபி முன்வைக்கின்றார்.... ஜீஸஸை மானிட இனத்தைக் காப்பாற்றுவதற்காக மரித்த ஒரு தெய்வீக மீட்பர் என்ற தன்னுடைய கற்பனைத் தரிசனத்தின் மூலம் ஒரு புதிய மார்க்கத்தை உருவாக்கியவர் பால் மட்டுமே."**

83. தூதருக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை அவர்கள் செவியேற்கும் பொழுது, அதிலுள்ள சத்தியத்தை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டதனால் அவர்களுடைய கண்கள் கண்ணீரால் ததும்புவதை நீர் காண்கின்றீர், மேலும் அவர்கள் கூறுகின்றனர், "எங்கள் இரட்சகரே, நாங்கள் நம்பிக்கை கொண்டோம், ஆகையால் சாட்சியாளர்களில் எங்களையும் கணக்கிடுவீராக.

84. "ஏன் நாங்கள் **கடவுள்** மீது, மேலும் எங்களிடம் வந்துள்ள சத்தியத்தின் மீது நம்பிக்கை கொள்ளாமலும், எங்களுடைய இரட்சகர் நன்னெறியுடைய மக்களுடன் எங்களையும் அனுமதிப்பார் என்று எதிர்பார்க்காமலும் இருக்க வேண்டும்?"

85. இதனைக் கூறியதற்காகக் **கடவுள்** அவர்களுக்கு வெகுமதியளித்து விட்டார்; ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களுக்குள் அவர்களை அவர் அனுமதிப்பார். அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். நன்னெறியாளர்களுக்குரிய வெகுமதி இத்தகையதேயாகும்.

86. நம்பமறுத்து அத்துடன் நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுப்போரைப் பொறுத்தவரை, அவர்கள்தான் நரகவாசிகள் ஆவார்கள்.

*அனுமதிக்கப்பட்ட*
*பொருட்களைத் தடுக்காதீர்கள்*

87. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்**–ஆல் அனுமதிக்கப்பட்டுள்ள நல்ல பொருட்களைத் தடை செய்யாதீர்கள், மேலும் வலுச்சண்டை செய்யாதீர்கள்; வலுச்சண்டை செய்பவர்களைக் **கடவுள்** வெறுக்கின்றார்.

88. மேலும் **கடவுள்** உங்களுக்கு வழங்கியுள்ள நல்ல மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருட்களில் இருந்து உண்ணுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்ற **கடவுள்** மீது நீங்கள் பக்தியோடிருக்க வேண்டும்.

*கடவுளின் பெயரை வீணாகப்*
*பயன்படுத்தாதீர்கள்*

89. சத்தியப்பிரமாணங்களின் வெறும் வார்த்தைக்காக **கடவுள்** உங்களைப் பொறுப்பாக ஆக்குவதில்லை; உங்களுடைய உண்மையான நோக்கங்களுக்கே அவர் உங்களைப் பொறுப்பாக ஆக்குகின்றார். நீங்கள் ஒரு சத்தியப்பிரமாணத்தை மீறி விட்டால், உங்களுடைய சொந்தக் குடும்பத்தாருக்கு நீங்கள் வழங்குகின்ற அதே உணவிலிருந்து பத்து ஏழை மக்களுக்கு உணவளிப்பது, அல்லது அவர்களுக்கு ஆடையணிவிப்பது, அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்வதன் மூலமாக நீங்கள் பரிகாரம் செய்திட வேண்டும். இதற்குச் செலவிட உங்களால் இயலாவிட்டால், பின்னர் நீங்கள் மூன்று நாட்கள் நோன்பிருத்தல் வேண்டும். நீங்கள் நிறைவேற்றுவீர்களென உறுதிமொழி செய்த சத்தியப் பிரமாணங்களை மீறுவதற்குரிய பரிகாரம் இதுவேயாகும். நீங்கள் உங்களுடைய சத்தியப் பிரமாணங்களை நிறைவேற்ற வேண்டும். **கடவுள்** தன்னுடைய வெளிப்பாடுகளை உங்களுக்கு இவ்விதமாக விவரிக்கின்றார், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு

*போதையூட்டுபவையும் சூதாட்டமும்*
*தடை செய்யப்படுகின்றது*

90. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், போதையூட்டுபவை, மற்றும் சூதாட்டம், மற்றும் சிலைகளின் பீடங்கள், மற்றும் அதிர்ஷ்டப் பந்தயங்கள் சாத்தானுடைய அருவருக்கத்தக்கவையாகும்; நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அவற்றிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

91. போதையூட்டுபவை மற்றும் சூதாட்டத்தின் மூலம் உங்களுக்கிடையில் பகைமையையும் வெறுப்பையும் தூண்டுவதற்கும், **கடவுள்**–ஐ நினைப்பதிலிருந்து, மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பதிலிருந்து, உங்களுடைய கவனத்தைத் திருப்புவதற்குமே சாத்தான் விரும்புகின்றான். அப்பொழுதாவது நீங்கள் விலகிக் கொள்வீர்களா?

92. நீங்கள் **கடவுள்**–க்குக் கீழ்ப்படிய வேண்டும், மேலும் நீங்கள் தூதருக்கும் கீழ்ப்படிய வேண்டும், மேலும் எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள். நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் நம்முடைய தூதரின் ஒரே கடமை தூதுச் செய்தியைத் திறம்படச் சேர்ப்பிப்பதேயாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

93. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்கள் கட்டளைகளைக் கடைப்பிடித்துக் கொண்டு, நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்தி, பின்னர் தங்களுடைய பக்தியையும் விசுவாசத்தையும் பராமரித்துக் கொண்டு, அத்துடன் பக்தியையும் நன்னெறியையும் கடைப்பிடிப்பதில் தொடர்ந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த உணவையும் உண்பதன் மூலம் குற்றம் எதனையும் சுமப்பதில்லை. நன்னெறியாளர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

*வேட்டைப் பிராணிகளின் பாதுகாப்பு*

94. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், *(புனித யாத்திரைக் காலத்தின் போது)* உங்களுடைய கைகளுக்கும் அம்புகளுக்கும் எட்டுகின்ற தொலைவிற்குள் சில வேட்டைப்பிராணிகளைக் கொண்டு **கடவுள்** உங்களைச் சோதிப்பார். **கடவுள்** இவ்விதமாக உங்களில் தங்களுடைய தனிமையிலும் அவரைக் கருத்தில் கொள்பவர்கள் யார் என்பதைப் பிரித்துக் காட்டுகின்றார். இதன் பின்னரும் வரம்புமீறுகின்றவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

95. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், புனித யாத்திரைக் காலத்தின் போது எந்த வேட்டைப் பிராணியையும் கொல்லாதீர்கள். எவரொருவர் வேண்டுமென்றே எந்த வேட்டைப் பிராணியையும் கொல்கின்றாரோ, அவருடைய அபராதமாவது அவர் கொன்ற வேட்டைப்பிராணிகளுக்குச் சமமான ஓர் எண்ணிக்கையிலான பண்ணைக் கால்நடைகளாக இருக்க வேண்டும். அத்தீர்ப்பானது உங்களுக்கி டையில் உள்ள நீதமான இரண்டு மனிதர்களால் விதிக்கப்பட வேண்டும். அந்த அர்ப்பணங்கள் *கஅபா*வை அடைவதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லாத பட்சத்தில் அவர் ஏழை மக்களுக்கு உணவளிப்பதன் மூலம், அல்லது அவருடைய குற்றத்திற்குரிய பரிகாரத்திற்குச் சமமானதொரு நோன்பிருத்தலின் மூலம் அவர் ஈடு செய்து கொள்ளலாம். கடந்த காலக் குற்றங்களைக் **கடவுள்** பிழைபொறுத்து விட்டார். ஆனால் எவரே னும் இத்தகையதொரு குற்றத்தை மீண்டும் செய் வாராயின், **கடவுள்** அதற்குப் பழிவாங்குவார். **கடவுள்** எல்லாம் வல்லவர், பழிவாங்குபவர்.

*நீர்வாழ் உயிரினங்கள் அனைத்தும் உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டவையே*

96. நீர்வாழ் உயிரினங்கள் அனைத்தும் உங்களுக்கு உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டவையாகவே உள்ளன. புனித யாத்திரைக் காலத்தில், உங்களு டைய பயணத்தின் போது இது உங்களுக்கு உண வளிக்கக் கூடும். புனித யாத்திரை முழுவதும் நீங்கள் வேட்டையாட வேண்டாம். எவர் முன்னர் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்களோ, அந்தக் **கடவுள்**–யிடம் நீங்கள் பக்தி கொள்ள வேண்டும்.

97. *கஅபா* எனும் புனிதப்பள்ளியை,* மக்களுக்கு ஓர் அபயமாகக் **கடவுள்** நிர்ணயித்துள்ளார், அத்துடன் புனித மாதங்களையும், *(புனிதப் பள்ளிக்குரிய)* பலிப் பிராணிகளையும், அவற்றை அடையாளங் காட்டு கின்ற மாலைகளையும்கூட. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிந்தி ருக்கின்றார் என்பதையும் மேலும் **கடவுள்** சர்வமும் அறிந்தவர் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

98. தண்டனையை நிறைவேற்றுவதில் **கடவுள்** கண் டிப்பானவர் என்பதையும், மேலும் **கடவுள்** மன்னிப் பவர், மிக்க கருணையாளர் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

99. தூதருடைய ஒரே கடமையாவது தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதேயாகும், மேலும் நீங்கள் அறிவிக்கின்ற ஒவ்வொன்றையும் நீங்கள் மறைக்கின்ற ஒவ்வொன் றையும் **கடவுள்** அறிந்திருக்கின்றார்.

100. பிரகடனப்படுத்துவீராக: "கெட்டவற்றின் மிகை உம்மைக் கவர்ந்த போதிலும், கெட்டவையும் நல்லவையும் சம மாக மாட்டாது. *(நீங்கள் சிறுபான்மையினரில் இருந்த போதிலும்)* அறிவுத் திறனுடையவர்களே, நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி கொள்ள வேண்டும்."

101. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், காலங் கனிவதற்கு முன் உங்களுக்கு வெளிப்படுத்தப்பட் டால், உங்களுக்குத் தீங்கிழைக்கக் கூடிய விஷயங் களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். குர் ஆனுடைய ஒளியில் அவற்றை குறித்து நீங்கள் விடை தேடினால், அவை உங்களுக்குத் தெளிவாகத் தெரிய வரும். **கடவுள்** தெரிந்தே அவற்றை அலட்சியம் செய்து விட்டார். **கடவுள்** மன்னிப்பவர், கனிவானவர்.

102. உங்களுக்கு முன்னிருந்த மற்றவர்கள் இதே கேள்வி களைக் கேட்டனர், பின்னர் அதனில் நம்பமறுப்பவர் களாக ஆகிவிட்டனர்.

103. குறிப்பிட்ட வகைகளில் கிடாய் மற்றும் பெட்டை களைக் கலந்து ஈன்றெடுக்கின்ற கால்நடைகளை யோ, அன்றி ஒரு சத்தியத்தின் மூலம் விடுவிக்கப் பட்ட கால்நடைகளையோ, அன்றி இரண்டு கிடாய் களை ஒரு வரிசையில் ஈன்றெடுக்கின்ற ஒன்றை யோ, அன்றிப் பத்துக்குத் தந்தையாகின்ற காளையை யோ **கடவுள்** தடை செய்து விடவில்லை. நம்பமறுப்ப வர்கள்தான் **கடவுள்**–ஐப் பற்றி இத்தகைய பொய் களைக் கற்பனை செய்து கொண்டனர். அவர்களில் அதிகமானோர் புரிந்து கொள்வதில்லை.

*உங்களுடைய பெற்றோர்களின் மார்க்கத்தைக் கண்மூடிப் பின்பற்றாதீர்கள்*

104. "**கடவுள்** வெளிப்படுத்தியவற்றின்பாலும், தூதரின் பாலும் வாருங்கள்," என்று அவர்களிடம் கூறப் பட்டால், அவர்கள் கூறுகின்றனர், "எங்களுடைய பெற்றோர்கள் எதனைச் செய்ய நாங்கள் கண்டோ மோ அதுவே எங்களுக்குப் போதுமானதாகும்." அவர் களுடைய பெற்றோர்கள் எந்த ஒன்றையும் அறிந்தி ராதவர்களாக, வழிநடத்தப்படாதவர்களாக இருந் தாலுமா ?

**5:97* நபியின் கல்லறையைப் புனிதப்படுத்துவதன் மூலம் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற முஸ்லிம்கள் இரண்டு "புனிதப்பள்ளிகளை" ஸ்தாபித்துள்ளனர். குர்ஆன் ஒரே ஒரு புனிதப் பள்ளியைப் பற்றி மட்டுமே பேசுகின்றது.*

105. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் உங்களுடைய சொந்தக் கழுத்துகளைப் பற்றி மட்டுமே கவலைப்பட வேண்டும். நீங்கள் வழி நடத்தப்பட்டவர்களாக இருக்கின்ற வரை, மற்றவர்கள் வழி தவறுதலில் சென்றாலும், அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைக்க இயலாது. **கடவுள்** வசமே உங்களுடைய இறுதி விதி உள்ளது, உங்கள் அனைவருடையவும், பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் பற்றி அவர் உங்களுக்குத் தெரிவிப்பார்.

*ஓர் உயிலுக்குச் சாட்சியம் அளித்தல்*

106. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களில் ஒருவர் மரணித்துக் கொண்டிருக்கின்ற பொழுது, ஓர் உயிலுக்குச் சாட்சியம் அளித்தல் உங்களுக்கிடையில் உள்ள இரண்டு நீதமான மனிதர்களால் செய்யப்படுதல் வேண்டும். நீங்கள் பயணித்துக் கொண்டிருந்தால், பின்னர் வேறு இருவர் சாட்சியமளித்தலைச் செய்யலாம். *(ஸலாத்)* தொடர்புத் தொழுகையைக் கடைப்பிடித்த பின்னர், உங்களுடைய சந்தேகங்களைப் போக்குவதற்காக, சாட்சிகள் **கடவுள்** மீது சத்தியம் செய்யட்டும்: "உயிலளித்தவர் எங்களுக்கு உறவாக இருந்த போதிலும், சொந்த இலாபங்களை அடைவதற்காக இதனை நாங்கள் பயன்படுத்த மாட்டோம். அன்றி நாங்கள் **கடவுள்**–ன் சாட்சியத்தை மறைக்கவும் மாட்டோம். அவ்வாறெனில், நாங்கள் பாவிகளாக ஆகிவிடுவோம்."

107. சாட்சிகள் ஒரு தலைப்பட்சமெனும் குற்றமுடையவர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், பின்னர் வேறு இருவர் அவர்களுடைய இடங்களை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். முந்திய சாட்சிகளால் பாதிக்கப்பட்டவர்களான இரு நபர்களைத் தேர்ந்தெடுங்கள், மேலும் அவர்கள் **கடவுள்** மீது சத்தியம் செய்யட்டும்: "எங்களுடைய சாட்சியம் அவர்களுடையதை விடவும் அதிகம் உண்மை நிறைந்தது; நாங்கள் ஒருதலைப்பட்சமானவர்களாக இருக்க மாட்டோம். அவ்வாறெனில், நாங்கள் வரம்புமீறியவர்களாக ஆகி விடுவோம்."

108. முந்திய சாட்சியாளர்களைப் போல அவர்களுடைய பிரமாணமும் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடும் என்ற அச்சத்தினால், அவர்களுடைய தரப்பில் நாணயமானதொரு சாட்சியத்தை ஊக்குவிக்க இதுவே மிகவும் ஏற்றதாகும். நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளவும் செவியேற்கவும் வேண்டும். **கடவுள்** தீயவர்களை வழிநடத்துவதில்லை.

*இறந்து விட்ட தூதர்கள்*
*முற்றிலும் அறியாதவர்களே*

109. **கடவுள்** தூதர்களை ஒன்று கூட்டி மேலும் அவர்களிடம் கேட்கின்ற அந்நாள் வரும், "உங்களுக்குரிய மறுமொழி எவ்வாறு இருந்தது ?" அவர்கள் கூறு வார்கள், "எங்களுக்கு எந்த அறிவும் இல்லை. நீரே எல்லா இரகசியங்களையும் அறிந்தவராக இருக்கின்றீர்."

110. **கடவுள்** கூறுவார், "மேரியின் மகனான, ஜீஸஸே, உம் மீதும் உம்முடைய தாயார் மீதுமான என்னுடைய ஆசீர்வாதங்களை நினைவில் கொள்வீராக. தொட்டிலில் இருந்தும் அவ்வண்ணமே ஒரு வாலிபராகவும் மக்களிடம் நீர் பேசுவதைச் சாத்தியமாக்குவதற்காக, பரிசுத்த ஆவியைக் கொண்டு நான் உமக்கு ஆதரவளித்தேன். வேதம், ஞானம், தோரா மற்றும் சுவிஷேசத்தை நான் உமக்குக் கற்றுக் கொடுத்தேன். என்னுடைய அனுமதியின் பேரில் களிமண்ணிலிருந்து ஒரு பறவையின் வடிவத்தை நீர் உருவாக்கி, பின்னர் அதனுள் ஊதி, உடனே அது என்னுடைய அனுமதியின் பேரில் உயிருள்ள ஒரு பறவையாக ஆனதை நினைவு கூர்ந்திடுவீராக. என்னுடைய அனுமதியின் பேரில் குருடர்களுக்கும் குஷ்டரோகிகளுக்கும் நீர் நிவாரணமளித்தீர், மேலும் என்னுடைய அனுமதியின் பேரில் இறந்தவர்களை உயிர்ப்பித்தீர். அவர்களுக்கு நீர் காட்டிய ஆழ்ந்த அற்புதங்களுக்குப் பின்னரும் உம்மைத் துன்புறுத்த விரும்பிய இஸ்ரேலின் சந்ததியினரிடமிருந்து நான் உம்மைக் காப்பாற்றியதை நினைவு கூர்ந்திடுவீராக அவர்களில் உள்ள நம்பமறுப்பவர்கள் கூறினர், 'இது வெளிப்படையானதொரு மாயஜாலமேயாகும்.'

111. "சீடர்களுக்கு நான் உள்ளுணர்வளித்ததை நினைவு கூர்ந்திடுவீராக: 'நீங்கள் என் மீதும் என்னுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.' அவர்கள் கூறினர், 'நாங்கள் நம்பிக்கை கொண்டோம், மேலும் நாங்கள் சரணடைந்தவர்களாக இருக்கின்றோம் என்று சாட்சி பகர்வீராக.'"

*விருந்து*

112. சீடர்கள் கூறியதை நினைவு கூர்ந்திடுவீராக, "மேரியின் மகனான, ஜீஸஸே, விண்ணிலிருந்து ஒரு விருந்தை எங்களுக்கு இறக்கி அனுப்ப உம்முடைய இரட்சகரால் இயலுமா ?" அவர் கூறினார், "நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் **கடவுள்**–ஐ அஞ்சிக் கொள்ள வேண்டும்."

113. அவர்கள் கூறினர், "நாங்கள் அதிலிருந்து உண்ணவும், எங்களுடைய இதயங்களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவும், மேலும் நீர் எங்களிடம் சத்தியத்தைத்தான் கூறினீர் என்று நிச்சயத்துடன் அறிந்து கொள்ளவும் விரும்புகின்றோம். நாங்கள் அதற்குச் சாட்சிகளாகவும் திகழ்வோம்."

*மாபெரும் அற்புதங்கள் மாபெரும் பொறுப்பினைக் கொண்டு வருகின்றன**

114. மேரியின் மகனான, ஜீஸஸ் கூறினார், "எங்கள் இறைவனாகிய எங்கள் இரட்சகரே, விண்ணிலிருந்து ஒரு விருந்தை எங்களுக்கு இறக்கி அனுப்புவீராக. அது எங்களில் ஒவ்வொருவருக்கும் தாராளமாகக் கொண்டு வரட்டும், மேலும் உம்மிடமிருந்துள்ள ஓர் அத்தாட்சியாகவும் இருக்கட்டும். எங்களுக்கு வழங்குவீராக; வழங்குபவர்களில் நீரே மிகச் சிறந்தவராக இருக்கின்றீர்."

115. **கடவுள்** கூறினார், "நான் அதனை இறக்கி அனுப்புகின்றேன். இதன் பின்னரும் உங்களில் நம்பமறுக்கின்ற எவராயினும், அவரை வேறு எவரொருவரையும் நான் ஒரு போதும் தண்டித்திராதவாறு நான் தண்டிப்பேன்."*

*உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் அன்று*

116. **கடவுள்** கூறுவார் "மேரியின் மகனான, ஜீஸஸே,* 'என்னையும் என்னுடைய தாயாரையும் **கடவுள்**–வுடன் வழிபாட்டுக்கு உரியவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள்,' என்று மக்களிடம் நீர் கூறினீரா ?" அவர் கூறுவார், "நீரே துதிப்பிற்குரியவர். சரியானதாக இல்லாததை நான் சொல்வதற்கில்லை. நான் அதனைக் கூறியிருந்தால், நீர் ஏற்கெனவே அதனை அறிந்திருப்பீர். என்னுடைய எண்ணங்களை நீர் அறிவீர், மேலும் உம்முடைய எண்ணங்களை நான் அறியமாட்டேன். நீர் எல்லா இரகசியங்களையும் அறிந்தவர்.

117. "என்ன கூற வேண்டுமென்று எனக்கு நீர் கட்டளையிட்டீரோ அதனை மட்டுமே நான் அவர்களிடம் கூறினேன், அதாவது: 'நீங்கள் என்னுடைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகருமான, **கடவுள்**–ஐ வழிபட வேண்டும்.' நான் அவர்களுடன் வாழ்ந்திருந்த காலம் வரை, அவர்களுக்கிடையில் ஒரு சாட்சியாக நான் இருந்தேன். பூமியின் மீது நீர் என்னுடைய வாழ்வை முடித்துவிட்ட போதே, நீர் அவர்கள் மீது கண்காணிப்பவர் ஆகிவிட்டீர். நீர் எல்லா விஷயங்களுக்கும் சாட்சியாகின்றீர்.

118. "நீர் அவர்களைத் தண்டித்தால், அவர்கள் உம்முடைய பிரஜைகளாவர். நீர் அவர்களை மன்னித்தால், நீரே எல்லாம் வல்லவரும், ஞானம் மிகுந்தவருமாக இருக்கின்றீர்."

119. **கடவுள்** பிரகடனம் செய்வார், "சத்தியவான்கள் அவர்களுடைய சத்தியத்தன்மையால் காப்பாற்றப் படஇருக்கின்ற ஒரு நாள் இதுவாகும்." ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களுக்கு அவர்கள் தகுதியாகி விட்டனர். அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். **கடவுள்** அவர்கள் பால் திருப்தியடைந்தார், மேலும் அவர்களும் அவர் பால் திருப்தியடைந்தனர். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

120. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றில் உள்ள ஒவ்வொன்றின் ஆட்சியதிகாரமும் **கடவுள்**–க்கே உரியவை, மேலும் அவர் சர்வசக்தியுடையவர்.

****

## சூரா 6: கால்நடைகள் (அல்–அன்ஆம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்கள் மற்றும் பூமியைப் படைத்தவரும், மேலும் காரிருளையும் ஒளியையும் உண்டாக்கியவருமான **கடவுள்**–க்கே புகழ்ச்சி உரியது. இருப்பினும், தங்கள் இரட்சகரின் மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள் விலகிச் செல்வதைத் தொடர்கின்றனர்.

2. அவர்தான் உங்களை களிமண்ணிலிருந்து படைத்தவர், பின்னர் உங்களுடைய வாழ்க்கைத் தவணையை முன்னரே நிர்ணயித்தவர், அவர் மட்டுமே அறிந்திருக்கின்றதான ஒரு வாழ்க்கைத் தவணை. இருப்பினும், நீங்கள் தொடர்ந்து சந்தேகிக்கின்றீர்கள்.

3. அவர்தான் வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒரு **கடவுள்**. அவர் உங்களுடைய இரகசியங்களையும் அறிவிப்புகளையும் அறிகின்றார், மேலும் நீங்கள் சம்பாதிக்கின்ற ஒவ்வொன்றையும் அவர் அறிகின்றார்.

4. அவர்களுடைய இரட்சகரிடமிருந்து எந்த விதமான சான்று வருகின்றது என்பது பொருட்டல்ல, வெறுப்பினால், அவர்கள் அதிலிருந்து திரும்பிச் சென்று விடுகின்றனர்.

5. சத்தியம் அவர்களிடம் வந்த பொழுது அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததால், அவர்களுடைய கவனமின்மையின் விளைவுகளுக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

****5:114–115** குர்ஆனுடைய மூழ்கடிக்கின்ற அற்புதமானது (பின் இணைப்பு ஒன்று) 74:35ல் "மகத்தான அற்புதங்களில் ஒன்று" என வர்ணிக்கப்படுகின்றது, மேலும் அது தன்னுடன் அசாதாரணமான மாபெரும் பொறுப்பைக் கொண்டு வருகின்றது.*

****5:116** குர்ஆன் ஜீஸஸை ஒரே சீராக "மேரியின் மகன்" என்றே அழைக்கின்றது, மேலும் பைபிள் அவரை "மனிதரின் மகன்" என்று அழைக்கின்றது, என்பது கவனிக்கத்தக்கது. சிலர் இறை நிந்தனை செய்து அவரைக் "கடவுளின் மகன்"! என்று அழைப்பார்கள் என்பதைக் கடவுள் அறிந்தே இருந்தார்.*

6. அவர்களுக்கு முன்னால் எத்தனை தலைமுறைகளை நாம் அழித்தொழித்திருக்கின்றோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? உங்களுக்குச் செய்ததை விடவும் அதிகமாக பூமியின் மீது அவர்களை நாம் நிலைநிறுத்தினோம், மேலும் தாராளமாக, ஆசீர்வாதங்களை அவர்கள் மீது பொழிந்தோம், அத்துடன் பாய்கின்ற ஆறுகளைக் கொண்டு அவர்களுக்கு நாம் வழங்கினோம். பின்னர் நாம் அவர்களுடைய பாவங்களின் காரணத்தால் அவர்களை அழித்தொழித்தோம், மேலும் அவர்களுடைய இடத்தில் மற்றொரு தலைமுறையை நாம் மாற்றியமைத்தோம்.

7. காகிதத்தில் எழுதப்பட்ட, திடமான ஒரு புத்தகத்தை, அவர்களுக்கு நாம் இறக்கி அனுப்பி, மேலும் அவர்கள் தங்களுடைய கைகளால் அதனைத் தொட்டிருந்தால் கூட, நம்பமறுத்தவர்கள் கூறியிருப்பார்கள், "இது திறமையான மாயாஜாலம் என்பதை விட அதிகம் எதுவுமில்லை."

8. அத்துடன் அவர்கள் கூறினர், "ஒரு வானவர் மட்டும் அவருடன் இறங்கி வரக்கூடுமானால்!" ஒரு வானவரை நாம் அனுப்பியிருப்போமாயின், மொத்த விஷயமும் முடிக்கப்பட்டு விட்டிருக்கும், அத்துடன் அதற்கு அப்பாலும் அவர்கள் அவகாசம் அளிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

*சோதனையின் அத்தியாவசியங்கள்*

9. ஒரு வானவரை நாம் அனுப்பியிருந்தாலும், ஒரு மனித உருவிலேயே அவரை நாம் அனுப்பியிருப்போம், ஆகவே இப்போது அவர்கள் குழப்பத்தில் இருப்பதைப் போல அதே விதமான குழப்பத்திலேயே அவர்களை நாம் வைத்திருந்து இருப்போம்.

10. உமக்கு முன்னிருந்த தூதர்களும் பரிகசிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களைக் கேலி செய்தவர்கள்தான் அவர்களுடைய பரிகாசத்தின் விளைவுகளால் துன்பமடைந்தனர்.

11. கூறுவீராக, "பூமியைச் சுற்றித் திரிந்து ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கான விளைவுகளைக் கவனிப்பீர்களாக."

12. கூறுவீராக, "வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் எவருக்குரியவை?" கூறுவீராக, "**கடவுள்** –க்குரியவை." கருணையை அவர் தன்னுடைய தனிப் பண்பாக விதித்துக் கொண்டார். தவிர்த்து விட இயலாததான, உயிர்த்தெழுப்பப்படுகின்ற அந்நாளில் நிச்சயமாக உங்கள் அனைவரையும் அவர் ஒன்று திரட்டுவார். நம்பமறுப்பவர்கள் தான் தங்களுடைய ஆத்மாக்களைத் தொலைத்து விட்டவர்களாக உள்ளனர்.

13. இரவிலும் பகலிலும் வசித்திருக்கின்ற ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை. அவர்தான் செவியேற்பவர், அறிந்தவர்.

14. கூறுவீராக, "வானங்கள் மற்றும் பூமியைத் துவக்கியவராகவும், மேலும் அவரே உணவளிப்பவராகவும் ஆனால் உணவளிக்கப்படாதவராகவும் இருக்கின்ற போது, **கடவுள்**–ஐ அன்றி மற்றவரை ஓர் இரட்சகராகவும் அதிபதியாகவும் நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?" கூறுவீராக, "மிகவும் அர்ப்பணித்துக் கொண்ட சரணடைந்தவனாக இருக்க வேண்டுமெனவும், மேலும் 'போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருவனாக இருக்காதீர்,' எனவும் நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்."

15. கூறுவீராக, "என் இரட்சகருக்கு நான் கீழ்ப்படியவில்லையென்றால், அச்சுறுத்துகின்றதொரு நாளின் தண்டனைக்கு, நான் அஞ்சுகின்றேன்.

16. "அந்நாளில் *(தண்டனையிலிருந்து)* தவிர்த்துவிடப் படுகின்ற எவரும், அவருடைய கருணையை அடைந்து விட்டார். மேலும் இதுவே மிகவும் மகத்தான பெரு வெற்றியாகும்."

*மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றவர் கடவுள் மட்டுமே*

17. துன்பத்தைக் கொண்டு **கடவுள்** உங்களைத் தீண்டினால், அவரைத் தவிர எவரும் அதனை நிவர்த்திக்க இயலாது. மேலும் ஓர் ஆசிர்வாதத்தை உங்களை அவர் அடையச் செய்தால், அவர் சர்வ சக்தியுள்ளவர்.

18. அவர் தன்னுடைய படைப்புகளின் மீது மேலதிகாரம் உடையவராக இருக்கின்றார். அவர்தான் ஞானம் மிகுந்தவர், நன்கறிந்தவர்.

*குர்ஆன், முழுமையான குர்ஆன், மேலும் குர்ஆனைத் தவிர எதுவுமில்லை*

19. கூறுவீராக, "எவருடைய சாட்சியம் மிகப் பெரியது?" கூறுவீராக, "**கடவுள்**–வுடையது. உங்களுக்கும், மேலும் இது சென்று அடைகின்ற எவருக்கும் பிரச்சாரம் செய்வதற்காக, இந்தக் குர்ஆன்* எனக்கு உள்ளுணர்வளிக்கப்பட்டுள்ளது என்பதற்கு எனக்கும் உங்களுக்குமிடையில் அவரே சாட்சியாக இருக்கின்றார். உண்மையில், **கடவுள்**–வுடன் வேறு தெய்வங்கள்* இருப்பதாக நீங்கள் சாட்சியம் பகர்கின்றீர்கள்." கூறுவீராக, "நீங்கள் செய்வதைப் போல நான் சாட்சியளிப்பதில்லை; ஒரே ஒரு தெய்வம்தான் உள்ளது, மேலும் உங்களுடைய போலித் தெய்வ வழிபாட்டினை நான் கைவிட்டு விட்டேன்."

20. எவர்களுக்கு நாம் வேதத்தை கொடுத்திருக்கின்றோமோ அவர்கள் தங்களுடைய சொந்தப் பிள்ளைகளை அடையாளம் காண்பதைப் போல் இதனை அடையாளம் காண்கின்றனர். நம்பிக்கை கொள்ளாதவர்கள்தான் தங்களுடைய ஆத்மாக்களைத் தொலைத்து விட்டவர்களாக இருக்கின்றனர்.

**6:19 இந்த வசனம் மார்க்க வழிகாட்டலுக்கான ஒரே மூலாதாரமாக குர்ஆனைப் பிரகடனிக்கின்றது. ஹதீஸ் & சுன்னா (நபியின் மீது சுமத்தப்பட்ட பொய்கள்) போன்ற கூடுதல் மூலாதாரங்களை ஆதரிப்பவர்கள் போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்களென வரையறுக்கப்படுகின்றனர்.*

21. **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களைக் கூறுகின்ற, அல்லது அவருடைய வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற ஒருவனை விடவும் மிகத் தீயவன் யார்? வரம்புமீறுகின்றவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள்.

*போலித்தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் தங்களுடைய போலித்தெய்வ வழிபாட்டினை மறுக்கின்றனர்*

22. அவர்கள் அனைவரையும் நாம் ஒன்று திரட்டுகின்ற அந்நாளில், போலித்தெய்வ வழிபாடு செய்பவர்களை நாம் வினவுவோம், "நீங்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்கள் எங்கே இருக்கின்றன?"

23. நாசம் விளைவிக்கின்ற அவர்களுடைய மறுமொழி யாவது, "எங்கள் இரட்சகரான **கடவுள்** மீது ஆணையாக, நாங்கள் ஒருபோதும் போலித்தெய்வ வழிபாடு செய்பவர்களாக இருந்ததில்லை."*

24. அவர்கள் எவ்வாறு தங்களிடமே பொய் கூறிக் கொண்டனர், மேலும் அவர்கள் கண்டுபிடித்துக் கொண்ட போலித்தெய்வங்கள் எவ்வாறு அவர்களைக்கை கழுவி விட்டன என்பதைக் கவனிப்பீராக.

25. அவர்களில் சிலர் உம்மைக் கவனத்துடன் செவியேற்கின்றனர், ஆனால் புரிந்து கொள்வதிலிருந்து அவர்களைத் தடுத்து விடுவதற்காக அவர்களுடைய இதயங்களில் திரைகளையும், அத்துடன் அவர்களுடைய காதுகளில் செவிட்டுத்தனத்தையும் நாம் அமைத்து விடுகின்றோம். அதன் விளைவாக, எந்த விதமான சான்றை அவர்கள் கண்டாலும் பொருட்டல்ல, அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது. எனவே, உம்முடன் வாதிட அவர்கள் வரும்பொழுது, நம்பமறுப்பவர்கள் கூறுகின்றனர், "இவை கடந்த காலக் கட்டுக் கதைகளேயாகும்."

26. அவர்கள் தாங்களும் இதிலிருந்து *(குர்ஆனிலிருந்து)* விலகி இருந்து கொண்டவாறு, மற்றவர்களையும் இதிலிருந்து அவர்கள் விரட்டுகின்றனர், மேலும் இவ்விதமாக, உணர்ந்து கொள்ளாது அவர்கள் தங்களைத்தான் நாசப்படுத்திக் கொள்கின்றனர்.

27. நரகநெருப்பை அவர்கள் எதிர்கொள்ளும் போது அவர்களை உம்மால் காண மட்டும் இயன்றால்! அப்போது அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்குக் கேடு தான். அந்தோ, நாங்கள் திரும்பிச் சென்றிட இயல வேண்டுமென்றும், ஒருபோதும் எங்களுடைய இரட்கருடைய வெளிப்பாடுகளை ஏற்கமறுக்காதிருந்து, மேலும் நம்பிக்கையாளர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் நாங்கள் விரும்புகின்றோம்."

28. உண்மை என்னவென்றால், அவர்களுடைய இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டுவிட்டன *(என்பதால் மட்டுமே அவர்கள் இதனைக் கூறுகின்றனர்).* அவர்கள் திரும்பிச் சென்றால், மாற்றமேதுமின்றி அதே குற்றங்களைத்தான் புரிவார்கள்.* அவர்கள் பொய்யர்களாக இருக்கின்றனர்.

29. *(ஆழ் மனதிற்குள்)* அவர்கள் கூறுகின்றனர், "நாம் இந்த வாழ்க்கையை மட்டுமே வாழ்கின்றோம்; நாம் உயிர்த்தெழுப்பப்பட மாட்டோம்".

30. அவர்கள் தங்களுடைய இரட்சகரின் முன் நிற்கும் போது அவர்களை உம்மால் பார்க்க மட்டும் இயன்றால்! அவர் கூறுவார், "இது சத்தியம்தான் அல்லவா?" அவர்கள் கூறுவார்கள், "ஆம், எங்கள் இரட்சகர் மீது ஆணையாக." அவர் கூறுவார்," உங்களுடைய நம்ப மறுத்தலால் நீங்கள் தண்டனைக்கு உள்ளாகி விட்டீர்கள்."

31. வேளையானது அவர்களிடம் திடீரென வரும் வரை, **கடவுள்**–ஐச் சந்திப்பதில் நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களாக இருந்து விட்டுப் பின்னர், "இந்த உலகில் எங்களுடைய வாழ்வுகளை வீணாக்கியதற்காக நாங்கள் ஆழ்ந்த வருத்தம் கொள்கின்றோம்," என்று கூறுபவர்கள் உண்மையில் நஷ்டவாளிகளே. அவர்களுடைய பாவங்களின் சுமைகளைத் தங்களுடைய முதுகுகளில் அவர்கள் சுமப்பார்கள்; என்ன ஒரு துன்பகரமான சுமை!

*நமது முன்னுரிமைகளை திருத்தியமைத்துக் கொள்ளுதல்*

32. இந்த உலக வாழ்வானது மாயை மற்றும் வீண் பகட்டு என்பதை விட அதிகம் எதுவுமில்லை, அதே சமயம் மறுவுலகின் தங்குமிடமோ நன்னெறியாளர்களுக்கு மிகவும் மேலானதாகும். நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?!

33. அவர்கள் கூறுபவற்றால் நீர் விசனப்படக் கூடும் என்பதை நாம் அறிவோம். அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பது உம்மை அல்ல என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டும்; **கடவுள்**–ன் வெளிப்பாடுகளைத்தான் இத்தீயவர்கள் அலட்சியப்படுத்துகின்றனர்.

34. உமக்கு முன்னர் இருந்த தூதர்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றனர், ஆனால் நிராகரிப்பை எதிர் கொள்கையில் அவர்கள் உறுதிப்பாட்டுடன் விடா முயற்சி செய்தனர். நம்முடைய வெற்றி அவர்களிடம் வரும் வரை அவர்கள் வன்கொடுமை செய்யப்பட்டனர். ஒருபோதும் மாறாத **கடவுள்**–ன் வழி முறை இத்தகைய தேயாகும். என்னுடைய தூதர்களின் வரலாறு இவ்விதமாக உமக்கு முன்மாதிரிகளை அமைக்கின்றது.

**6:23* இப்பொழுதும் எப்பொழுதும், போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் அவர்கள் போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்களாக இருக்கின்றனர் என்பதை ஆவேசத்துடன் மறுக்கின்றனர்.*

**6:28* இது ஏனெனில் நம்முடைய உலகப் பரிமாணத்தில் நாம் நுழைந்து விட்டவுடன், கடவுள் மற்றும் அவருடைய வானவர்கள், மேலும் சுவனம் மற்றும் நரகம் ஆகியவற்றைக் காணக்கூடிய ஆன்மலோகப் பரிமாணங்களின் நிகழ்வுகளைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக நாம் ஆகிவிடுகின்றோம். எனவே, நிலையான பரிமாணத்தைக் கண்ட பின்னரும் கூட, குற்றவாளிகள் தங்களுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டார்கள்.*

35. அவர்களுடைய நிராகரிப்பு உமக்கு மிகவும் பெரிதாகப்படுமாயின், நீர் அறிந்து கொள்ள வேண்டும், பூமியின் ஊடே ஒரு சுரங்கப் பாதையை நீர் தோண்டி, அல்லது வானத்திற்குள் ஓர் ஏணியில் ஏறி, ஓர் அற்புதத்தை அவர்களுக்குக் கொண்டு வந்த போதிலும் *(அப்பொழுதும் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்).* **கடவுள்** நாடியிருந்தால், ஒட்டுமொத்தமாக, அவர்களை வழிநடத்தியிருக்க அவரால் இயலும். எனவே, அறியாதவர்களில் ஒருவரைப் போல் நடந்து கொள்ளாதீர்.

36. எவர்கள் செவியேற்கின்றார்களோ அவர்கள் மட்டுமே மறுமொழியளிப்பார்கள். **கடவுள்** இறந்தவர்களை உயிர்த்தெழுப்புகின்றார்; இறுதியாக அவர்கள் அவரிடமே திரும்புகின்றனர்.

37. அவர்கள் கூறினார்கள், "அவருடைய இரட்சகரிடமிருந்து ஏதேனும் ஓர் அத்தாட்சி மட்டும் அவருக்கு இறங்கி வரக்கூடுமானால்!" கூறுவீராக, "**கடவுள்** ஓர் அத்தாட்சியை இறக்கி அனுப்பத் திறனுடையவர் தான், ஆனால் அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்."

*விலங்குகளும் பறவைகளும்:*
*சரணடைகின்ற படைப்பினங்கள்**

38. பூமியின் மீதுள்ள அனைத்துப் படைப்பினங்களும், மேலும் சிறகுகளுடன் பறக்கின்ற அனைத்துப் பறவைகளும் உங்களைப் போன்ற சமுதாயங்களாகவே இருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் எந்த ஒன்றையும் நாம் விட்டு விடவில்லை.** அவற்றின் இரட்சகரிடம், இந்த அனைத்துப் படைப்பினங்களும் ஒன்று திரட்டப்படும்.

*குர்ஆனுடைய மிகப்பெரும் அற்புதம்*

39. நம்முடைய சான்றுகளை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் முற்றிலும் காரிருளில் செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் இருக்கின்றனர். **கடவுள்** நாடுகின்ற எவரையும், அவர் வழி தவறுதலில் அனுப்பி விடுகின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும், நேரானதொரு பாதையில் அவர் செலுத்துகின்றார்.

40. கூறுவீராக, "**கடவுள்**–வுடைய தண்டனை உங்களிடம் வந்துவிட்டால், அல்லது வேளையானது உங்களிடம் வந்துவிட்டால்: நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், **கடவுள்**–ஐ விடுத்து மற்றவரை நீங்கள் இறைஞ்சுவீர்களா?"

41. நிதர்சனமாவது: அவரை மட்டுமே நீங்கள் இறைஞ்சுவீர்கள், மேலும் அவர் அவ்வாறு நாடினால், அவர் உங்களுடைய பிரார்த்தனைக்கு பதிலளிக்கின்றார், அப்போது உங்களுடைய போலித்தெய்வங்களை நீங்கள் மறந்து விடுகின்றீர்கள்.

42. உமக்கு முன்னர் இருந்த சமுதாயங்களுக்கும் *(தூதர்களை)* நாம் அனுப்பியுள்ளோம், மேலும் துன்பங்கள் மற்றும் கஷ்டங்கள் மூலம் அவர்களை நாம் சோதனையில் ஆழ்த்தினோம், அவர்கள் இறைஞ்சக் கூடும் என்பதற்காக.

43. நம்முடைய சோதனை அவர்களை வருத்திய பொழுது அவர்கள் மட்டும் இறைஞ்சியிருந்தால்! மாறாக, அவர்களுடைய இதயங்கள் கடினமானவையாகி விட்டன, மேலும் சாத்தான் அவர்களுடைய காரியங்களை அவர்களுடைய கண்களுக்கு அழகானவையாக ஆக்கி விட்டான்.

*வழிமுறை**

44. இவ்விதமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தூதுச் செய்தியை அவர்கள் அலட்சியம் செய்கின்ற போது, ஒவ்வொன்றினுடைய வாசல்களையும் அவர்களுக்கு நாம் திறந்துவிடுகின்றோம். பின்னர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவற்றில் அவர்கள் களிப்புடனிருந்து கொண்டிருக்கும் போது, திடீரென அவர்களை நாம் தண்டிக்கின்றோம்; அவர்கள் முற்றிலும் திடுக்குற்றவர்களாக ஆகிவிடுகின்றனர்.

45. தீயவர்கள் இவ்விதமாக அழித்தொழிக்கப்பட்டனர். பிரபஞ்சத்தின் இரட்சகரான, **கடவுள்**–க்கே புகழ்ச்சி உரியது.

*கடவுள் மட்டுமே*
*வழிபாட்டிற்குத் தகுதியுடைவர்*

46. கூறுவீராக, "**கடவுள்** உங்களுடைய செவிப்புலனையும் உங்களுடைய கண்பார்வையையும் எடுத்து விட்டு, மேலும் உங்களுடைய மனங்களில் முத்திரையிட்டு விட்டால்; **கடவுள்**–ஐ அன்றி, வேறு எந்தத் தெய்வம் இவற்றை உங்களுக்குத் திருப்பித் தர இயலும்?" இந்த வெளிப்பாடுகளை நாம் எவ்வாறு விவரிக்கின்றோம் என்பதைக் கவனிப்பீராக, இருப்பினும் அவர்கள் எவ்வாறு விலகிச் செல்கின்றனர் என்பதையும் கவனிப்பீராக!

**6:38 ஆதிபாவத்தைப் புரிந்த பின்னர் பாவத்திற்கு வருந்தித் திருந்திக்கொள்ள கடவுளால் முன்மொழியப்பட்ட வாய்ப்பைச் சாதமாக்கி எடுத்துக் கொண்ட படைப்பினங்களில் பிராணிகளும் இருந்தன (அறிமுகவுரையைப் பார்க்கவும்).*

***6:38 மறுவுலகத்தில் நம்முடைய நிலையான வாழ்வுக்குத் தொடர்புடைய அனைத்துத் தகவல்களையும் குர்ஆன் தன்னுள் கொண்டுள்ளது. "இந்தப் புத்தகத்தில் நாம் எதனையும் விட்டு விடவில்லை," எனும் கடவுளின் உறுதியான கூற்றை உண்மையான நம்பிக்கையாளர்கள், தயக்கமின்றி ஏற்றுக் கொள்கின்றனர். இந்த வாசகம் மற்றும் இதுபோன்ற வாசகங்களின் முக்கியத்துவமானது, அவை ஒவ்வொன்றும், 19 அரபி எழுத்துகளைக் கொண்டதாக உள்ளது என்ற நிதர்சனத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது (பின் இணைப்பு 19).*

**6:44 ஜன்னலுக்கு வெளியே வீசப்படுவதற்கு முன்னர், குற்றவாளிகள் மேல்தளத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.*

47. கூறுவீராக, "**கடவுள்**–ன் தண்டனை திடீரெனவோ, அல்லது ஓர் அறிவிப்பிற்குப் பின்னரோ வந்து விட்டால், தீயவர்கள்தான் அழித்தொழித்தலுக்கு உள்ளாகின்றனர் அல்லவா ?"

*தூதர்களின் பங்கு*

48. நற்செய்தியைச் சேர்ப்பிப்பவர்களாகவும் அவ்வண்ணமே எச்சரிப்பவர்களாகவுமே தவிர தூதர்களை நாம் அனுப்புவதில்லை. நம்பிக்கை கொண்டு சீர் திருந்திக் கொள்பவர்கள் அச்சம் கொள்ள ஒன்றுமில்லை, அன்றி அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

49. நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய தீய தன்மைக்காக அவர்கள் தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

50. கூறுவீராக, "**கடவுள்**–ன் பொக்கிஷங்களை நான் வைத்துள்ளேன் என்று நான் உங்களிடம் கூறவில்லை. அன்றி எதிர்காலத்தை நான் அறிந்தவனும் அல்லன். அன்றி நான் ஒரு வானவன் என்றும் நான் உங்களிடம் கூறவில்லை. எனக்கு வெளிப்படுத்தப் பட்டவற்றை மட்டுமே நான் பின்பற்றுகின்றேன்." கூறுவீராக, "குருடரும் பார்ப்பவரும் சமமானவர்களா ? நீங்கள் சிந்திக்கவில்லையா ?"

51. மேலும் தங்களுடைய இரட்சகரின் முன்னர் ஒன்று திரட்டப்படுதலை அஞ்சுகின்றவர்களுக்கு இதனை *(குர்ஆனைக்)* கொண்டு பிரச்சாரம் செய்வீராக – அவர்களுக்கு அவரை அன்றி ஓர் இரட்சகராவும் அதிபதியாகவும், அன்றி ஒரு பரிந்துரைப்பவராகவும் எவரும் இல்லை – அவர்கள் மீட்சி அடையும் பொருட்டு.

52. மேலும் அவருக்கு மட்டுமே தங்களை அர்ப்பணித்தவர்களாக, தங்களுடைய இரட்சகரை பகலும் இரவும் இறைஞ்சுகின்றவர்களை விரட்டி விடாதீர். அவர்களுடைய கணக்கெடுப்புக்கு நீர் பொறுப்பானவர் அல்லர், அன்றி உம்முடைய கணக்கெடுப்புக்கு அவர்களும் பொறுப்பாளர்கள் அல்லர். அவர்களை நீர் விரட்டி விட்டால், நீர் வரம்புமீறிய ஒருவராகி விடுவீர்.

53. "நமக்கிடையில் **கடவுள்**–ஆல் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள் இவர்கள் தானா ?" என்று அவர்கள் *(கேலியாகச்)* சொல்வதற்காக, நாம் மக்களில் ஒருவரைக் கொண்டு மற்றவரை இவ்விதமாகச் சோதிக்கின்றோம். நன்றியுடைவர்களைக் **கடவுள்** அறிந்தவராக இருக்கின்றார் அல்லவா ?

54. நம்முடைய வெளிப்பாடுகளை நம்புகின்றவர்கள் உம்மிடம் வருகின்றபொழுது, *"ஸலாமுன் அலைக்கும்* (உங்கள் மீது சாந்தி நிலவுவதாக). உங்களுடைய இரட்சகர் கருணையைத் தன்னுடைய தனிப் பண்பாக விதித்துக் கொண்டார். எனவே, அறியாமையின் காரணத்தால் உங்களில் எவரேனும் ஒரு வரம்பு மீறலைப் புரிந்துவிட்டு, அத்துடன் அதற்குப் பின்னர் பாவத்திற்காக வருந்தி மேலும் சீர்திருந்திக் கொண்டால், அப்போது அவர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்" என்று நீர் கூற வேண்டும்.

55. இவ்விதமாக நாம் இவ்வெளிப்பாடுகளை விவரிக்கின்றோம், மேலும் தீயவர்களின் வழிகளைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

56. கூறுவீராக, "**கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடுபவற்றை வழிபடுவதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன்." கூறுவீராக, "உங்களுடைய அபிப்பிராயங்களை நான் பின்பற்றமாட்டேன். அவ்வாறெனில், நான் வழிதவறுதலில் சென்று விடுவேன், மேலும் வழி நடத்தப்பட்டவனாக இருக்க மாட்டேன்."

57. கூறுவீராக, "என் இரட்சகரிடமிருந்து திடமான சான்றினை நான் கொண்டுள்ளேன், ஆனால் நீங்கள் அதனை ஏற்கமறுத்து விட்டீர்கள். கொண்டு வருமாறு என்னிடம் நீங்கள் சவால் விடுகின்ற அந்தத் தண்டனையை நான் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. தீர்ப்பு **கடவுள்**–க்கு மட்டுமே உரித்தானது. அவர் சத்தியத்தைத்தான் எடுத்துரைக்கின்றார், அவரே மிகச் சிறந்த நீதிபதி."

58. கூறுவீராக, "கொண்டு வருமாறு என்னிடம் நீங்கள் சவால் விடுகின்ற அந்தத் தண்டனையை நான் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், மொத்த விஷயங்களும் நெடுங்காலத்திற்கு முன்னரே முடிந்து போயிருக்கும். தீயவர்களாக இருப்பவர்கள் யார் என்பதைக் **கடவுள்** மிகவும் நன்கு அறிவார்."

*எல்லாம் வல்லவரான கடவுள்*

59, அனைத்து இரகசியங்களுக்குமான சாவிகள் அவர் வசமே உள்ளன; அவரைத் தவிர எவரும் அவற்றை அறிய மாட்டார். நிலத்தின் மீதும் கடலுக்குள்ளும் உள்ள ஒவ்வொன்றையும் அவர் அறிவார். ஓர் இலையும் அவர் அறியாமல் உதிர்வதில்லை. அன்றி மண்ணின் ஆழங்களில் ஒரு வித்தும் இல்லை. அன்றி ஈரமான அல்லது உலர்ந்த எந்த ஒன்றும், ஆழ்ந்ததோர் ஏட்டில் பதியப்படாமல் இல்லை.

*மரணமும் உயிர்த்தெழுப்பப்படுதலும்: ஒவ்வொரு நாளும்**

60. அவர்தான் இரவுப் பொழுதுகளில் உங்களை மரணத்தில் ஆழ்த்துகின்றவர், மேலும் பகற்பொழுதுகளில் உங்களுடைய சின்னஞ்சிறிய செய்கைகளைக் கூட அறிகின்றவர். உங்களுடைய வாழ்க்கைத் தவணை பூர்த்தியடைகின்றவரை, ஒவ்வொரு காலையிலும் உங்களை அவர் உயிர்த்தெழுப்புகின்றார், பின்னர் உங்களுடைய இறுதித் திரும்புதல் அவரிடமே உள்ளது. நீங்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் பின்னர் அவர் உங்களுக்குத் தெரிவிப்பார்.

61. தன்னுடைய படைப்புகளின் மீது மேலதிகாரமுடையவராக அவர் இருக்கின்றார், மேலும் உங்களைப் பாதுகாப்பதற்காகக் காப்பாளர்களை அவர் நியமிக்கின்றார். உங்களில் எவருக்கேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மரணத்தின் நேரம் வந்துவிட்டால், நம்முடைய தூதர்கள் தாமதமின்றி அவரை மரணத்தில் ஆழ்த்தி விடுகின்றனர்.

62. பின்னர் ஒவ்வொருவரும் அவர்கள் மீது உரிமையுள்ள இரட்சகரும் அதிபதியுமான, **கடவுள்**–யிடம் திருப்பப்படுகின்றனர். மிக நிச்சயமாக, அவர்தான் இறுதியான நீதிபதி; அவர்தான் மிகத் துல்லியமாகக் கணக்கெடுப்பவர்.

63. கூறுவீராக, "நிலத்திலோ அல்லது கடலிலோ உள்ள காரிருளில் இருந்து உங்களைக் காக்க எவரால் இயலும்?" உரத்த சப்தத்துடனும் இரகசியமாகவும் அவரை நீங்கள் இறைஞ்சுகின்றீர்கள்: "இந்த முறை அவர் நம்மைக் காப்பாற்றி விட்டால், நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்."

64. கூறுவீராக, "இந்த முறையும் அதேபோல மற்ற சமயங்களிலும் **கடவுள்** உங்களைக் காப்பற்றவே செய்கின்றார். இருப்பினும் பின்னர் நீங்கள் அவருடன் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றீர்கள்."

65. கூறுவீராக, "உங்களுக்கு மேலிருந்தோ அல்லது உங்களுடைய பாதங்களுக்குக் கீழிருந்தோ உங்கள் மீது வேதனையைப் பொழிய நிச்சயமாக அவர் திறன் வாய்ந்தவராகவே இருக்கின்றார். அல்லது உங்களைக் குழுக்களாகப் பிரித்து ஒருவர் மற்றவருடைய கொடுங்கோன்மையைச் சுவைக்கும்படிச் செய்து விடவும் அவரால் இயலும். அவர்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு, இவ்வெளிப்பாடுகளை எவ்வாறு நாம் விவரிக்கின்றோம் என்பதைக் கவனிப்பீராக."

66. இது சத்தியமாக இருந்த போதிலும், உம்முடைய மக்கள் இதனை நிராகரித்து விட்டனர். கூறுவீராக, "நான் உங்கள் மீது ஒரு பொறுப்பாளன் அல்லன்."

67. இதிலுள்ள ஒவ்வொரு முன்னறிவிப்பும் நிகழ்ந்தேறியே தீரும், மேலும் நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

*கடவுளின் வார்த்தைக்கு உரிய மரியாதை*

68. நம்முடைய வெளிப்பாடுகளைக் கேலி செய்பவர்களை நீர் கண்டால், அவர்கள் வேறொரு விஷயத்திற்குள் ஆழ்ந்திடும் வரை நீர் அவர்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சாத்தான் உம்மை மறக்கும்படிச் செய்து விட்டால், பின்னர் உமக்கு ஞாபகம் வந்தவுடன், அத்தகைய தீய மக்களுடன் அமர்ந்திருக்காதீர்.

69. அந்த மக்களின் கூற்றுகளுக்காக நன்னெறியாளர்கள் பொறுப்பாக மாட்டார்கள், ஆனால் அது அவர்களுக்கு நினைவூட்ட உதவக்கூடும்; ஒரு வேளை அவர்கள் காப்பாற்றப்பட்டு விடலாம்.

70. தங்களுடைய மார்க்கத்தை ஒரு சமூக விழாவினைப் போல், வீணானதாக எடுத்துக் கொள்பவர்களையும், இந்த உலக வாழ்வில் முற்றிலுமாக ஈர்க்கப்பட்டு விட்டவர்களையும் நீர் புறக்கணித்து விட வேண்டும். அதன் தீய சம்பாத்தியங்களின் பின்விளைவுகளால் ஓர் ஆத்மா துன்புறாதிருக்கும் பொருட்டு, *(குர்ஆனாகிய)* இதனைக் கொண்டு நினைவூட்டுவீராக. **கடவுள்**–வுடன் அதற்கு ஓர் இரட்சகராகவும் அதிபதியாகவும், அன்றி ஒரு பரிந்துரைப்பவராகவும் எவரும் இல்லை. எந்த விதமான ஒரு பதிலீட்டை அது முன்வைக்க இயலுமாயின், அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அவர்கள் சம்பாதித்த தீய செயல்களின் பின்விளைவுகளை அவர்கள் அனுபவிக்கின்றனர்; அவர்களுடைய நம்பமறுத்தலின் காரணத்தால் நரக பானங்களுக்கும், வலி நிறைந்ததொரு தண்டனைக்கும் அவர்கள் உள்ளாகி விட்டனர்.

71. கூறுவீராக, "**கடவுள்** எங்களை வழிநடத்தி விட்ட பின்னர், எங்களுக்குப் பயனளிக்கவோ அல்லது எங்களுக்குத் தீங்கிழைக்கவோ எந்த சக்தியும் இல்லாதவற்றைக் **கடவுள்**–வுடன் நாங்கள் இறைஞ்சி, அத்துடன் எங்கள் குதிங்கால்களின் மீது திரும்பிச் சென்று விட வேண்டுமா? அப்படியாயின், 'சரியான பாதையில் எங்களுடன் இருந்து விடுங்கள்,' என்று அவர்களுடைய நண்பர்கள் அவர்களைக் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கையில், சாத்தான்களால் கைப்பற்றப்பட்டு, முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டு விட்டவர்களுடன் சேர்ந்தவர்களாக நாங்கள் ஆகிவிடுவோம்." கூறுவீராக, "**கடவுள்**–ன் வழிகாட்டுதல் தான் சரியான வழி காட்டல் ஆகும். பிரபஞ்சத்தின் இரட்சகருக்குச் சரணடைந்து விடுமாறு நாங்கள் கட்டளையிடப்பட்டுள்ளோம்.

**6:60 நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை; ஆதமும் ஏவாளும் முன்னர் வசித்த அதே சுவனத்திற்கு அவர்கள் நேரடியாகச் செல்கின்றனர். நன்னெறியற்றவர்கள் மரணிப்பதுடன் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் வரை நிலைத்திருக்கும் ஒரு துர்க்கனவை அனுபவிக்கின்றனர் (பார்க்க 2:154, 3:169, 8:24, 16:32, 22:58, 36:26–27, 40:46, 44:56 மற்றும் பின்இணைப்பு17).*

72. "மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை நிறைவேற்றுமாறும், அவருக்குப் பக்தி செலுத்துமாறும் – *(கணக்கெடுப்பிற்காக)* அவர் முன்னர் தான் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்."

73. அவர்தான் வானங்கள் மற்றும் பூமியை, சத்தியத்துடன் படைத்தவர். "ஆகு" என்று அவர் கூறுகின்ற போதெல்லாம் அது ஆகிவிடுகின்றது. அவருடைய வார்த்தைதான் பரிபூரணமான சத்தியமாகும். கொம்பு ஊதப்படுகின்ற அந்நாளில் ஆட்சியதிகாரம் அனைத்தும் அவருக்குரியதாகும். அனைத்து இரகசியங்களையும் அறிக்கைகளையும் அறிந்தவர், அவர்தான் ஞானம் மிகுந்தவர், நன்கறிந்தவர்.

*விக்கிரக ஆராதனை செய்பவர்களுடன்*
*ஆப்ரஹாம் வாதம் புரிகின்றார்*

74. ஆப்ரஹாம் தன் தந்தை ஆஜரிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுவீராக, "சிலைகளைத் தெய்வங்களாக நீங்கள் எப்படி வழிபட இயலும் ? நீரும் உம்முடைய மக்களும் நெடிய வழிதவறுதலில் சென்று விட்டதாக நான் காண்கின்றேன்."

75. வானங்கள் மற்றும் பூமியின் அதிசயங்களை நாம் ஆப்ரஹாமுக்குக் காட்டினோம், அத்துடன் உறுதிப்பாட்டைக் கொண்டு அவரை ஆசீர்வதித்தோம்:

76. இரவு கவிழ்ந்த போது, பளிச்சிடுகின்ற ஒரு கிரகத்தை அவர் கண்டார். "இது என் இரட்சகராக இருக்கக் கூடும்," என அவர் கூறினார். அது மறைந்து விட்ட போது, அவர் கூறினார், "மறைந்து விடுகின்ற *(தெய்வங்களான)* வற்றை நான் விரும்புவதில்லை."

77. சந்திரன் உதிப்பதை அவர் கண்டபோது, அவர் கூறினார், "இது என் இரட்சகராக இருக்கக் கூடும்!" அது மறைந்துவிட்ட போது, அவர் கூறினார், "என் இரட்சகர் என்னை வழிநடத்தினாலேயன்றி, நான் வழிதவறியவர்களுடன் தான் இருந்திடுவேன்."

78. சூரியன் உதிப்பதை அவர் கண்டபோது, அவர் கூறினார், "இதுதான் என் இரட்சகராக இருக்க வேண்டும். இதுதான் மிகவும் பெரியதாக இருக்கின்றது." ஆனால் அது அஸ்தமித்த போது, அவர் கூறினார், "என் சமூகத்தாரே, உங்களுடைய போலித் தெய்வ வழிபாட்டினை நான் கண்டனம் செய்கின்றேன்.

79. "வானங்கள் மற்றும் பூமியைத் துவக்கியவருக்கு என்னையே நான் முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டு விட்டேன்; போலித்தெய்வ வழிபாடு செய்கின்றவர்களில் ஒருவனாக நான் ஒருபோதும் இருக்கமாட்டேன்."

80. அவருடைய சமூகத்தார் அவருடன் வாதிட்டனர். அவர் கூறினார், "அவர் என்னை வழிநடத்தி விட்ட பின்னர், **கடவுள்**–ஐப் பற்றி என்னுடன் நீங்கள் வாதிடுகின்றீர்களா ? நீங்கள் அமைத்துக் கொண்டிருக்கின்ற போலித் தெய்வங்களைக் குறித்து எனக்கு எந்த அச்சமும் இல்லை. என் இரட்சகர் நாடினாலேயன்றி, எந்த ஒன்றும் எனக்கு நேரிட முடியாது. என்னுடைய இரட்சகரின் அறிவு எல்லா விஷயங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள மாட்டீர்களா ?

81. "உங்களுடைய போலித் தெய்வங்களுக்கு நான் ஏன் அஞ்சவேண்டும் ? உங்களுக்கு உதவுவதற்கு முற்றிலும் சக்தியற்ற போலித் தெய்வங்களை **கடவுள்**–க்குப் பதிலாக வழிபடுவதனால் நீங்கள்தான் அஞ்சவேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். பாதுகாப்பிற்கு மிகவும் தகுதியுடைய பக்கம்எது, நீங்கள் அறிந்திருந்தால் ?"

*நம்பிக்கையாளர்களுக்கு பரிபூரண பாதுகாப்பு*

82. நம்பிக்கை கொண்டு அத்துடன் தங்களுடைய நம்பிக்கையை போலித் தெய்வ வழிபாட்டினைக் கொண்டு களங்கப்படுத்தாதவர்கள், பூரணப் பாதுகாப்பிற்குத் தகுதியடைந்து விட்டனர், மேலும் அவர்கள்தான் மெய்யாகவே வழிநடத்தப்பட்டவர்களாக உள்ளனர்.

83. ஆப்ரஹாமுக்கு எதனைக் கொண்டு அவருடைய சமூகத்தாருக்கெதிராக நாம் ஆதரவளித்தோமோ, அந்த நம்முடைய வாதம் இவ்விதமானதாகவே இருந்தது. நாம் நாடுகின்ற எவரையும் உயர் அந்தஸ்துகளுக்கு நாம் உயர்த்துகின்றோம். உம்முடைய இரட்சகர் ஞானம் மிகுந்தவர், சர்வமும் அறிந்தவர்.

84. மேலும் நாம் அவருக்கு ஐசக்கையும் ஜேகபையும் அளித்தோம், மேலும் அவர்கள் இருவரையும் நாம் வழிநடத்தினோம். அதுபோலவே, நோவாவை அதற்கு முன்னர் நாம் வழிநடத்தினோம், மேலும் அவருடைய சந்ததியினரிலிருந்து டேவிட், ஸாலமன், ஜோப், ஜோஸப், மோஸஸ் மற்றும் ஆரோனையும் *(நாம் வழி நடத்தினோம்.)* இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதி வழங்குகின்றோம்.

85. அத்துடன் ஜக்கரிய்யா, ஜான், ஜீஸஸ், மற்றும் இல்யாஸ்; அனைவரும் நன்னெறியாளர்களாகவே இருந்தனர்.

86. மற்றும் இஸ்மாயீல், எலிஷா, ஜோனா, இன்னும் லோத்; இவர்களில் ஒவ்வொருவரையும் மற்ற அனைத்து மக்களுக்கும் மேலாக நாம் சிறப்பித்தோம்.

87. அவர்களுடைய முன்னோர்கள், அவர்களுடைய சந்ததியினர், மற்றும் அவர்களுடைய உடன்பிறப்புக்களிலிருந்து, பலரை நாம் தேர்ந்தெடுத்தோம், அத்துடன் நேரானதொரு பாதையில் அவர்களை நாம் வழிநடத்தினோம்.

88. இவ்விதமானது **கடவுள்**–ன் வழிகாட்டல், தன்னுடைய ஊழியர்களுக்கிடையில் அவர் தேர்ந்தெடுக்கின்ற எவரையும் இதனைக் கொண்டு அவர் வழி நடத்துகின்றார். அவர்களில் எவரேனும் போலித் தெய்வ வழிபாட்டிற்குள் வீழ்ந்திருப்பார்களேயானால், அவர்களுடைய காரியங்கள் பயனற்றவையாக ஆக்கப்பட்டிருக்கும்.

89. அவர்களுக்குத்தான் நாம் வேதத்தையும், ஞானத்தையும், நபித்துவத்தையும் கொடுத்தோம். இந்த மக்கள் நம்பமறுத்து விடுவார்களாயின், அவர்களுடைய இடத்தில் மற்றவர்களை நாம் மாற்றியமைத்து விடுவோம், மேலும் அந்தப் புதிய மக்கள் நம்பமறுப்பவர்களாக இருக்க மாட்டார்கள்.

90. இவர்கள்தான் **கடவுள்**–ஆல் வழிநடத்தப்பட்டவர்களாவர்; நீங்கள் அவர்களுடைய காலடிச் சுவடுகளில் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். கூறுவீராக, "நான் உங்களிடம் எந்தக் கூலியும் கேட்கவில்லை. இது அனைத்து மக்களுக்குமான தொரு தூதுச் செய்தியேயாகும்."

*உலகத்தாருக்கான கடவுளின் தூதுச் செய்திகள்*

91. **கடவுள்**–ஐ மதிக்க வேண்டியவாறு அவர்கள் அவரை ஒருபோதும் மதிக்கவில்லை. எனவே, அவர்கள் கூறினார்கள், "மானிட இனத்தவர் எவருக்கும் எதனையும் **கடவுள்** வெளிப்படுத்துவதில்லை." கூறுவீராக, "அப்படியென்றால் மக்களுக்கு ஒளியையும் வழிகாட்டலையும் கொண்டதாக மோஸஸ் கொண்டு வந்த வேதத்தை வெளிப்படுத்தியவர் யார்? " அதில் உள்ள ஒரு பெருமளவினை மறைத்திடும் அதே சமயம், அதனைப் பிரகடனப்படுத்துவதற்காகக் காகிதத்தில் அதனை நீங்கள் எழுதுகின்றீர்கள். நீங்கள் ஒருபோதும் அறிந்திராதவற்றை நீங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டீர்கள் – நீங்களும் உங்களுடைய பெற்றோர்களும். கூறுவீராக, "**கடவுள்** *(தான் அதனை வெளிப்படுத்தியவர்),*" பின்னர் அவர்களுடைய அலட்சியத்தில், விளையாடிக் கொண்டிருப்பவர்களாக அவர்களை விட்டு விடுவீராக.

92. மிகவும் முக்கியமான சமுதாயத்தையும்* அதனைச் சூழ்ந்து உள்ள அனைவரையும், நீர் எச்சரிப்பதற்காக, முந்திய வேதங்களை மெய்ப்பிக்கின்றதாக, நாம் வெளிப்படுத்தியுள்ள இந்த வேதமும் கூட ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றேயாகும். மறுவுலகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் *(வேதமான)* இதனில் நம்பிக்கை கொள்வார்கள், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளையும் கடைப்பிடிப்பார்கள்.

*போலித் தூதர்கள் கண்டனம் செய்யப்படுகின்றனர்*

93. பொய்களைப் புனைந்து அத்துடன் அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுகின்ற, அல்லது அத்தகைய உள்ளுணர்வு எதுவும் கொடுக்கப்படாத போதே, " நான் தெய்வீக உள்ளுணர்வு அளிக்கப்பட்டுள்ளேன்." என்று கூறுகின்ற, அல்லது "**கடவுள்**–ன் வெளிப்பாடுகளைப் போல அதே விதமாக நானும் எழுதிட இயலும்," என்று கூறுகின்ற ஒருவனை விடவும் மிகத் தீயவன் யார்? மரணத் தருவாயின் போது வரம்புமீறுகின்றவர்களைக் காண உம்மால் மட்டும் இயன்றால்! "உங்களுடைய ஆத்மாக்களை வெளித்தள்ளுங்கள், என்று கூறியவாறு வானவர்கள் அவர்களை நோக்கித் தங்களுடைய கரங்களை நீட்டுவார்கள். இன்றைய தினம், **கடவுள்**–ஐப் பற்றி சத்தியம் அல்லாதவற்றைக் கூறியதற்காகவும், அத்துடன் அவருடைய வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மிகவும் ஆணவம் கொண்டவர்களாக இருந்ததற்காகவும் இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு நீங்கள் உள்ளாகி விட்டீர்கள்.

94. நாம் உங்களுக்கு வழங்கியவற்றை உங்களுக்குப் பின்னால் விட்டு விட்டு, "முதல் முறை உங்களை நாம் படைத்த அதே விதமாக, தனிநபர்களாக நம்மிடம் நீங்கள் திரும்பி வந்து விட்டீர்கள், நீங்கள் இணை வழிபாடு செய்த பரிந்துரையாளர்களையும், உங்களுக்கு அவர்கள் உதவுவார்கள் என்று கோரிக் கொண்டிருந்தவர்களையும் உங்களுடன் நாம் காணவில்லை. உங்களுக்கிடையில் எல்லாப் பிணைப்புகளும் துண்டிக்கப் பட்டு விட்டன; நீங்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்கள் உங்களைக் கை விட்டு விட்டன."

*கடவுளின் மகத்துவம்*

95. **கடவுள்** தான் வித்துகளையும் கொட்டைகளையும் வெடிக்கச் செய்து முளைப்பிக்கின்றவர். அவர் இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துகின்றார். இவ்விதமானவர் **கடவுள்**; எவ்வாறு நீங்கள் விலகிச் செல்ல இயலும்!

96. விடியல் பிளக்கையில், அவர் காலைப் பொழுதினை புலரும்படிச் செய்கின்றார். இரவை அமைதியானதாக அவர் ஆக்கினார், மேலும் அவர் சூரியனையும் சந்திரனையும் கணக்கிடுதலுக்கான கருவிகளாகப் பயன் படச் செய்தார். எல்லாம் வல்லவர், சர்வமும் அறிந்தவருடைய வடிவமைப்பு இத்தகையதேயாகும்.

**6:92 கடவுளின் தூதுச்செய்தி பழைய நிலைக்கு மீட்டெடுக்கப்பட்ட அமெரிக்காவே இன்றைய நிலையில் "மிக முக்கியமான சமுதாயமாக," இருக்கின்றது. குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட போது, மக்காவே மிக முக்கியமான சமுதாயமாக இருந்தது.*

97. மேலும் அவர்தான் நிலத்தின் மீதும் கடலின் மீதும், காரிருளின் போது உங்களுக்கு வழிகாட்டுவதற்காக நட்சத்திரங்களை உருவாக்கியவர். அறிந்திருக்கின்ற மக்களுக்கு இவ்வெளிப்பாடுகளை, இவ்விதமாக நாம் விவரிக்கின்றோம்.

98. ஒரு நபரிலிருந்து உங்களை அவர் துவக்கினார், மேலும் உங்களுடைய பாதையையும், அவ்வண்ணமே இறுதி விதியையும் தீர்மானித்தார். புரிந்து கொள்கின்ற மக்களுக்கு இவ்வெளிப்பாடுகளை இவ்விதமாக நாம் விவரிக்கின்றோம்.

99. அவர்தான் விண்ணிலிருந்து தண்ணீரை இறக்கி அனுப்புகின்றவர், அதன் மூலம் அனைத்து வகைகளிலுமான தாவரங்களை நாம் முளைப்பிக்கின்றோம். பசுமையான பொருளிலிருந்து ஏராளமான அரிய வகைத் தானியங்களையும், தொங்குகின்ற குலைகளைக் கொண்ட கிளைகளற்ற மரங்களையும், திராட்சை, ஒலிவம் மற்றும் மாதுளைத் தோட்டங்களையும் நாம் முளைப்பிக்கின்றோம்; ஒரே மாதிரியாக இருக்கின்ற பழங்கள், ஆயினும் மாறுபட்டவை. அவை வளர்கையிலும் பழுக்கும் போதும் அவற்றின் பழங்களைக் கவனிப்பீராக, நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இவை அத்தாட்சிகளாக இருக்கின்றன.

100. இருப்பினும், அவர்கள் ஜின்களில் இருந்து போலித் தெய்வங்களை **கடவுள்**–வுடன் அமைத்துக் கொள்கின்றனர், அவர்களைப் படைத்தவர் அவராகவே இருந்த போதிலும். அவர்கள் எவ்வித அறிவுமின்றி, மகன்கள் மற்றும் மகள்களைக் கூட அவர் மீது சுமத்துகின்றனர். அவர் துதிப்பிற்குரியவர். அவர்களுடைய கூற்றுகளுக்கும் மிகவும் அப்பாற்பட்டு, அவர் மிகவும் உயர்ந்தவராக இருக்கின்றார்.

101. வானங்கள் மற்றும் பூமியின் துவக்க கர்த்தா. ஒரு போதும் அவர் ஒரு ஜோடியைக் கொண்டிருக்காத போது, எவ்வாறு அவர் ஒரு மகனைக் கொண்டிருக்க முடியும் ? அவர் அனைத்துப் பொருட்களையும் படைத்தார், மேலும் அவர் அனைத்துப் பொருட்களையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*கடவுள்*

102. உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர், அவரைத் தவிர இறைவன் இல்லை, அனைத்துப் பொருட்களுடைய படைப்பாளர். அவரை மட்டுமே நீங்கள் வழிபட வேண்டும். அவர் அனைத்துப் பொருட்களையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

103. பார்வைகள் எதுவும் அவரைச் சூழ்ந்து கொள்ள இயலாது, ஆனால் அவர் பார்வைகள் அனைத்தையும் சூழ்ந்து கொள்கின்றார். அவர் இரக்கமுடையவர், நன்கறிந்தவர்.

104. உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்கு அறிவூட்டல்கள் வந்துள்ளன. பார்க்க இயன்றவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காகவே அவ்வாறு செய்கின்றனர், ஆனால் குருடர்களாக ஆகி விட்டவர்கள், தங்களுடைய சொந்தக் கேட்டிற்காகவே அவ்வாறு செய்கின்றனர். நான் உங்களுடைய பாதுகாவலன் அல்லன்.

105. நீர் அறிவைப் பெற்றிருக்கின்றீர் என்பதை நிரூபிப்பதற்காகவும், அத்துடன் அறிந்திருக்கின்ற மக்களுக்கு அவற்றைத் தெளிவுபடுத்துவதற்காகவும், இவ்விதமாக நாம் இவ்வெளிப்பாடுகளை விவரிக்கின்றோம்.

106. உம்முடைய இரட்சகரிடமிருந்து உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றைப் பின்பற்றுவீராக, அவரைத் தவிர தெய்வம் இல்லை, அத்துடன் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களை அலட்சியம் செய்திடுவீராக.

107. **கடவுள்** நாடியிருந்தால், அவர்கள் போலித் தெய்வங்களை வழிபட்டிருக்க மாட்டார்கள். அவர்களுடைய பாதுகாவலராக நாம் உம்மை நியமிக்கவில்லை, அன்றியும் நீர் அவர்களுடைய பொறுப்பாளரும் அல்லர்.

108. அறியாமையின் காரணத்தால், **கடவுள்**–ஐ அவர்கள் சபிக்காமலும் நிந்திக்காமலும் இருக்கும் பொருட்டு, **கடவுள்**–வுடன் அவர்கள் அமைத்துக் கொள்கின்ற போலித் தெய்வங்களைச் சபிக்காதீர்கள். ஒவ்வொரு கூட்டத்தாருடைய காரியங்களையும் அவர்களுடைய கண்களுக்கு நாம் அலங்கரித்துள்ளோம். இறுதியாக, அவர்கள் தங்களுடைய இரட்சகரிடமே திரும்புகின்றனர், பின்னர் அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அவர் தெரிவிக்கின்றார்.

109. ஓர் அற்புதம் அவர்களிடம் வந்தால், அவர்கள் நிச்சயமாக நம்பிக்கை கொள்வார்கள் என, பவித்திரமாக, அவர்கள் **கடவுள்** மீது சத்தியமிடுகின்றனர். கூறுவீராக, "அற்புதங்கள் **கடவுள்**–யிடமிருந்து மட்டுமே வருகின்றன." நீங்கள் அறிந்துள்ளபடி, ஓர் அற்புதம் அவர்களிடம் வந்தாலும், நம்பமறுப்பதில் அவர்கள் தொடர்ந்திருப்பார்கள்.

110. அவர்களுடைய புத்திகளையும் இதயங்களையும் நாம் கட்டுப்படுத்துகின்றோம். எனவே, நம்பமறுப்பதென்பது அவர்களுடைய தீர்மானமாக இருப்பதால், அவர்களுடைய வரம்புமீறல்களில் மூடத்தனமான தவறுகள் செய்து கொண்டிருக்க அவர்களை நாம் விட்டு விடுகின்றோம்.

*அவர்களுடைய சொந்தத் தீர்மானத்தின் ஒரு பின்விளைவு*

111. வானவர்களை நாம் அவர்களிடம் இறக்கி அனுப்பினாலும்; மரணித்தவர்கள் அவர்களிடம் பேசினாலும்; ஒவ்வொரு அற்புதத்தையும் அவர்கள் முன் நாம் கொண்டு வந்தாலும்; **கடவுள்** அதனை நாடினாலேயன்றி அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது. உண்மையில், அவர்களில் அதிகமானோர் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

*ஹதீஸ் & சுன்னா: நபியுடைய விரோதிகளின் புனைந்துரைகள்*

112. ஒவ்வொரு நபியுடைய விரோதிகளும் – மானிடர்கள் மற்றும் ஜின்களிலுள்ள சாத்தான்கள் – ஏமாற்றிக் கொள்ளும் பொருட்டு, ஒருவரில் இருந்து மற்றவர் அலங்காரமான வார்த்தைகளைப் உருவாக்கிக் கொள்ள நாம் அனுமதித்துள்ளோம். உம்முடைய இரட்சகர் நாடியிருந்தால், அவர்கள் அதனைச் செய்திருக்க மாட்டார்கள். நீர் அவர்களையும் அவர்களுடைய புனைந்துரைகளையும் அலட்சியம் செய்திட வேண்டும்.

*முக்கியமான அளவுகோல்*

113. இது, மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய மனங்கள் இத்தகைய புனைந்துரைகளை செவியேற்று, அவற்றை ஏற்றுக் கொண்டு, அதன் மூலம் அவர்களுடைய உண்மையான திட நம்பிக்கைகளை வெளிப்படுத்தச் செய்வதற்கேயாகும்.*

*குர்ஆன்: முற்றிலும் விவரிக்கப்பட்டது**

114. அவர் இந்தப் புத்தகத்தை முற்றிலும் விவரிக்கப்பட்டதாக உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றபோது, **கடவுள்**–ஐ விடுத்து மற்றவற்றை சட்ட மூலாதாரமாக நான் தேட வேண்டுமா ?* வேதத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் இது உம்முடைய இரட்சகரிடமிருந்து சத்தியத்துடன், வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அடையாளம் கண்டு கொள்கின்றனர். எந்தச் சந்தேகத்திற்கும் நீர் இடமளிக்க வேண்டாம்.

115. உம்முடைய இரட்சகரின் வார்த்தையானது சத்தியம் மற்றும் நீதத்தால் முழுமையடைந்ததாக உள்ளது.* அவருடைய வார்த்தைகளை எந்த ஒன்றும் மாற்றி விடாதிருக்க வேண்டும். அவர்தான் செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

116. பூமியில் உள்ள மக்களில் பெரும்பான்மையினருக்கு நீர் கீழ்ப்படிவீராயின், அவர்கள் உம்மைக் **கடவுள்**–ன் பாதையிலிருந்து திசை திருப்பி விடுவார்கள். அவர்கள் யூகத்தை மட்டுமே பின்பற்றுகின்றனர்; அவர்கள் அனுமானிக்க மட்டுமே செய்கின்றனர்.

117. உம்முடைய இரட்சகர் அவருடைய பாதையை விட்டு வழிதவறியவர்கள் எவர் என்பதை முற்றிலும் அறிந்திருக்கின்றார், மேலும் வழிநடத்தப்பட்டவர்களாக இருப்பவர்களையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

118. நீங்கள் மெய்யாகவே அவருடைய வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தால், எவற்றின் மீது **கடவுள்**–ன் பெயர் உச்சரிக்கப்பட்டுள்ளனவோ அவற்றிலிருந்து நீங்கள் உண்ண வேண்டும்.

*கடவுளை நினைவு கூர்வதற்குரிய சந்தர்ப்பம்: நீங்கள் உண்ணுவதற்கு முன் கடவுளின் பெயரை மொழியுங்கள்*

119. எவற்றின் மீது **கடவுள்**–ன் பெயர் மொழியப்பட்டுள்ளனவோ, அவற்றிலிருந்து நீங்கள் ஏன் உண்ணாதிருக்க வேண்டும் ? நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாக இருந்தாலே தவிர, உங்களுக்குத் தடுக்கப்பட்டுள்ளவற்றை அவர் உங்களுக்கு விவரித்துள்ளார். உண்மையில், மக்களில் பலர் அறிவின்றி, தங்களுடைய சுய அபிப்பிராயங்களைக் கொண்டு மற்றவர்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். உம்முடைய இரட்சகர் வரம்புமீறுபவர்களை முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

120. வெளிப்படையான பாவங்களையும், அவ்வண்ணமே மறைமுகமானவற்றையும் நீங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாவங்களைச் சம்பாதிப்பவர்கள் நிச்சயமாகத் தங்களுடைய வரம்புமீறல்களுக்குரிய விலையைக் கொடுத்தே தீருவார்கள்.

121. எவற்றின் மீது **கடவுள்**–ன் பெயர் மொழியப்படவில்லையோ அவற்றிலிருந்து உண்ணாதீர்கள், ஏனெனில் அது அருவருக்கத்தக்க ஒன்றாகும். உங்களுடன் வாதிடுமாறு சாத்தான்கள் தங்களுடைய கூட்டாளிகளைத் தூண்டுகின்றனர்; அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களாயின், நீங்கள் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களாகி விடுவீர்கள்.*

122. எவன் மரணித்தவனாக இருந்து, மேலும் அவனுக்கு நாம் உயிர்கொடுத்து, மேலும் மக்களுக்கிடையில் அவன் நடமாடுவதற்கு ஏதுவாக அவனுக்கு ஒளியைக் கொடுத்தோமோ அந்த ஒருவன், தன்னால் ஒருபோதும் வெளியேற இயலாத முழுமையான காரிருளுக்குள் உள்ள ஒருவனுக்குச் சமமாவானா ? நம்பமறுப்பவர்களுடைய காரியங்கள் இவ்விதமாக அவர்களுடைய கண்களுக்கு அலங்கரிக்கப்பட்டு விடுகின்றன.

---

****6:113*** *நாம் உண்மையில் மறுவுலகின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றோமா அல்லது வெறுமனே உதட்டளவில் கூறுகின்றோமா என்பதை நமக்கு எடுத்துக் கூறக்கூடிய அளவுகோல்களைக் குர்ஆன் வழங்குகின்றது. முக்கியமான இந்த அளவுகோல்கள் இங்கும், மேலும்* ***17:45–46*** *மற்றும்* ***39:45*** *லும் கூறப்படுகின்றன.*

****6:113–115*** *குர்ஆனுடன் எந்த மூலாதாரத்தையும் ஆதரிப்பது குர்ஆனின் மீதுள்ள நம்பமறுத்தலைப் பிரதிபலிக்கின்றது (பின் இணைப்பு* ***18****).*

****6:121*** *கடவுளை அன்றி மற்றவர்களால் நிர்மாணிக்கப்பட்ட உணவுத்தடைகள் போலித் தெய்வ வழிபாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன.*

123. ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்த முன்னணியிலுள்ள குற்றவாளிகளை சூழ்ச்சியும் சதியும் செய்வதற்கு நாம் அனுமதிக்கின்றோம். ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்ளாது, தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கெதிராகவே சூழ்ச்சியும் சதியும் செய்கின்றனர்.

*கடவுளின் ஞானத்தைக் கேள்வி கேட்பது**

124. வலிமைமிக்கதொரு சான்று அவர்களிடம் வருகின்றபோது, "**கடவுள்**–ன் தூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது எங்களுக்குக் கொடுக்கப்பட்டாலேயன்றி, நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம்!" என்று அவர்கள் கூறுகின்றனர். அவருடைய தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் யார் என்பதைக் **கடவுள்** மிகச் சரியாக அறிவார்.* இத்தகைய குற்றவாளிகள் **கடவுள்**–யிடத்தில் இழிவினையும், அவர்களுடைய தீய சூழ்ச்சிகளின் ஒரு பின்விளைவாக பயங்கரமானதொரு தண்டனையையும் அனுபவிப்பார்கள்.

*குர்ஆனிய அறிவு மானிடர்களின்*
*முன்னேற்றத்தை* விட மிகவும் முந்தியதாகும்.*

125. **கடவுள்** எவரை வழிநடத்த நாடுகின்றாரோ, அவருடைய நெஞ்சத்தைச் சரணடைதலின் பால் விரிவாகத் திறக்கப்பட்டதாக அவர் ஆக்கி விடுகின்றார். மேலும் அவர் எவனை வழிதவறுதலில் அனுப்பி விட நாடுகின்றாரோ, அவனுடைய நெஞ்சத்தை வானத்தை நோக்கி ஏறுகின்ற* ஒருவனுடையதைப் போல், பொறுத்துக் கொள்ள இயலாததாகவும், கடினமானதாகவும் அவர் ஆக்கி விடுகின்றார். **கடவுள்** இவ்விதமாக நம்பிக்கை கொள்ள மறுப்பவர்களின் மீது ஒரு சாபத்தை அமைத்து விடுகின்றார்.

126. இதுவே உம்முடைய இரட்சகரை நோக்கிய நேரான பாதையாகும். கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடிய மக்களுக்கு இவ்வெளிப்பாடுகளை நாம் விவரித்து விட்டோம்.

127. தங்களுடைய இரட்சகரிடத்தில் சாந்தியான தங்குமிடத்திற்கு அவர்கள் தகுதி பெற்று விட்டனர்; அவர்களுடைய காரியங்களுக்குரிய ஒரு வெகுமதியாக, அவரே அவர்களுடைய இரட்சகராகவும் அதிபதியாகவும் இருக்கின்றார்.

128. அவர்கள் அனைவரையும் அவர் ஒன்று கூட்டி *(கூறுகின்ற)* அந்நாள் வரும்: "ஜின்களே உங்களைத்தான், ஏராளமான மனிதர்களை நீங்கள் கைப்பற்றிக் கொண்டீர்கள்." அவர்களுடைய மானிடத் தோழர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, நீர் எங்களுக்கு அமைத்திருந்த வாழ்க்கைத் தவணையை நாங்கள் வீணாக்கிக் கொள்கின்ற வரை, நாங்கள் ஒருவர் மற்றவரின் தோழமையில் மகிழ்ந்திருந்தோம்." அவர் கூறுவார், "நரகமே உங்களுடைய விதியாகும்," **கடவுள்**–ன் நாட்டத்திற்கேற்ப, அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். உம்முடைய இரட்சகர் ஞானமுடையவர், சர்வமும் அறிந்தவர்.

129. இவ்விதமாக நாம் தீயவர்களை அவர்களுடைய வரம்புமீறல்களுக்கு உரியதொரு தண்டனையாக, ஒருவருக்கொருவர் தோழர்களாக இருக்குமாறு பொருத்தி விடுகின்றோம்.

130. ஜின்கள் மற்றும் மானிடர்களே உங்களைத்தான், என்னுடைய வெளிப்பாடுகளை உங்களுக்கு விவரித்து, மேலும் இந்த நாளின் சந்திப்பைப் பற்றி உங்களை எச்சரித்த தூதர்களை உங்களிலிருந்தே நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையா ? அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்கெதிராகவே நாங்கள் சாட்சி பகர்கின்றோம்." அவர்கள் இந்த உலகாதாய வாழ்வில் முற்றிலும் மூழ்கியவர்களாக இருந்தனர், மேலும் தாங்கள் நம்பமறுப்பவர்களாக இருந்தோம் என்று அவர்கள் தங்களுக்கெதிராகவே சாட்சியம் பகர்வார்கள்.

131. இது, உம்முடைய இரட்சகர் எந்தச் சமுதாயத்தையும் அநீதமாக, அதன் மக்கள் அறியாதவர்களாக இருக்கின்ற நிலையில் ஒருபோதும் அழித்தொழித்து விடுவதில்லை என்று காட்டுவதற்கேயாகும்.

132. ஒவ்வொருவரும் அவர்களுடைய செயல்களுக்குத் தக்க ஓர் அந்தஸ்தை அடைவார்கள். உம்முடைய இரட்சகர் ஒரு போதும் அவர்கள் செய்கின்ற எந்த ஒன்றைப் பற்றியும் அறியாதவர் அல்லர்.

133. உம்முடைய இரட்சகர் தான் செல்வந்தர்; அனைத்துக் கருணைக்கும் உடமையாளர், அவர் நாடினால், மற்ற மக்களின் சந்ததியிலிருந்து உங்களை அவர் உருவாக்கிய அதே விதமாக, உங்களுடைய இடத்தில் அவர் நாடுகின்ற எவரையும் மாற்றியமைத்து, உங்களை நீக்கி விட அவரால் இயலும்.

134. உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது நிகழ்ந்தேறியே தீரும், மேலும் நீங்கள் ஒருபோதும் அதிலிருந்து தப்பித்து விட இயலாது.

**6:124 கடவுளின் தூதர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவருடைய ஞானத்தைச் சந்தேகிக்குமாறு சில மக்களைத் தூண்டுகின்ற மானிடப்பண்புகளாக பொறாமை மற்றும் அகந்தை ஆகியவை உள்ளன. கடவுளின் உடன்படிக்கைத் தூதர் மூலமாகக் குர்ஆனின் கணித குறியீடு வெளிப்படுத்தப்பட்டது குறித்து, சீர்கெட்டுப் போன முஸ்லிம் அறிஞர்கள் இதே இந்தக் கூற்றைக் கூறியுள்ளனர்.*

**6:125 குர்ஆனுடைய வெளிப்பாட்டின் பல நூற்றாண்டுகளுக்கும் பின்னரே விண்ணை நோக்கி நாம் ஏறுகையில் பிராண வாயுவின் விகிதாச்சாரம் சுருங்குகின்றது, மேலும் நாம் மூச்சுக்காற்றுக்காகத் திணறுகின்றோம் என்பதை நாம் தெரிந்து கொண்டோம்.*

135. கூறுவீராக, "என் சமூகத்தாரே, உங்களால் இயன்றதை செய்யுங்கள், நானும் அவ்வாறே செய்வேன். இறுதி வெற்றியாளர்கள் யார் என்பதை நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள்." உறுதியாக, தீயவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள்.

*கடவுளின் வாழ்வாதாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல்*

136. "இந்தப் பங்கு **கடவுள்**–க்குரியது," அவர்களுடைய கூற்றுக்களின்படி, "மேலும் இந்தப் பங்கு நம்முடைய தெய்வங்களுக்குரியது," என்றும் கூறியவாறு, **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களான பயிர்கள் மற்றும் கால்நடைகளில் ஒரு பங்கை அவர்கள் ஒதுக்கியும் வைக்கின்றனர். எனினும், அவர்களுடைய போலித் தெய்வங்களுக்கெனத் ஒதுக்கி வைக்கப்பட்டது ஒருபோதும் **கடவுள்**–ஐச் சென்றடைவதில்லை, அதே சமயம் **கடவுள்**–க்கென அவர்கள் ஒதுக்கி வைத்த பங்கு எப்போதும் அவர்களுடைய போலித் தெய்வங்களுக்கே சென்றது. அவர்களுடைய தீர்ப்பு உண்மையில் மிகவும் கீழ்த்தரமானது.

137. போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் தங்களுடைய சொந்தப் பிள்ளைகளையே கொன்று விடுகின்ற அளவுக்கு, இவ்விதமாக அவர்களுடைய போலித் தெய்வங்களால் ஏமாற்றப்படுகின்றனர்.* நிதர்சனத்தில், அவர்களுடைய போலித் தெய்வங்கள் அவர்கள் மீது மிகப்பெரும் வேதனையைச் சுமத்துகின்றன, அவர்களுடைய மார்க்கத்தை அவர்களுக்குக் குழப்பியும் விடுகின்றன. **கடவுள்** நாடியிருந்தால், அவர்கள் அதனைச் செய்திருக்க மாட்டார்கள். அவர்களையும் அவர்களுடைய புனைந்துரைகளையும் நீர் அலட்சியம் செய்திட வேண்டும்.

*மார்க்கத்தில் புதுமைகளைப் புகுத்துதல் கண்டனம் செய்யப்படுகின்றது*

138. அவர்கள் கூறினர், "இவை தடுக்கப்பட்டுள்ள கால்நடைகள் மற்றும் பயிர்களாகும்; நாங்கள் அனுமதிப்பவர்களைத் தவிர எவரொருவரும் அவற்றை உண்ணலாகாது," இவ்வாறு அவர்கள் கூறுகின்றனர். குறிப்பிட்ட கால்நடைகளில் சவாரி செய்வதையும் அவர்கள் தடை செய்தனர். அவர்கள் சாப்பிட்ட கால் நடைகளையும் கூட, அவற்றைப் பலியிடும் போது அவர்கள் ஒருபோதும் **கடவுள்**–ன் பெயரை உச்சரிக்கவில்லை. இவ்விதமானவை அவர் மீது சுமத்தப்பட்ட புதுமைகளாகும். அவர்களுடைய புதுமைகளுக்காக அவர் நிச்சயமாக அவர்களைப் பழிவாங்குவார்.

139. அத்துடன் அவர்கள் கூறினர், "இந்தக் கால்நடைகளின் வயிற்றில் உள்ளவை எங்களுக்கிடையில் உள்ள ஆண்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டவையாகும், அத்துடன் எங்களுடைய மனைவியருக்குத் தடுக்கப்பட்டவையாகும்." ஆனால் அது செத்துப் பிறந்ததாக இருந்தால், அதனில் பாகம் பெற அவர்களுடைய மனைவியரை அவர்கள் அனுமதித்தனர். அவர்களுடைய புதுமைகளுக்காக அவர் உறுதியாக அவர்களைப் பழிவாங்குவார். அவர் ஞானம் மிகுந்தவர், சர்வமும் அறிந்தவர்.

140. தங்களுடைய அறிவுக் குறைபாட்டின் காரணத்தால், மூடத்தனமாகத் தங்களுடைய பிள்ளைகளைக் கொன்ற, மேலும் **கடவுள்** அவர்களுக்கு வழங்கியவற்றைத் தடை செய்த, மேலும் **கடவுள்** மீது சுமத்தப்பட்ட புதுமைகளைப் பின்பற்றிய அவர்கள் உண்மையில் நஷ்டவாளிகளேயாவர். அவர்கள் வழிதவறுதலில் சென்று விட்டனர்; அவர்கள் வழி நடத்தப்பட்டவர்கள் அல்லர்.

*"அறுவடை நாள் அன்றே"* ஜகாத் கொடுக்கப்பட்டாக வேண்டும்*

141. அவர்தான் பந்தலிடப்பட்ட மற்றும் பந்தலிடப்படாத தோட்டங்களையும், கிளைகளற்ற மரங்களையும், வெவ்வேறு ருசிகளுடைய பயிர்களையும், ஒலிவம், மற்றும் மாதுளைத் தோட்டங்களையும் நிர்மாணித்தவர் – ஒரே மாதிரியாக இருக்கின்ற பழங்கள், ஆயினும் மாறுபட்டவை. அவற்றின் பழங்களிலிருந்து உண்ணுங்கள், அத்துடன் அதற்குரிய தர்மத்தை அறுவடை நாள் அன்றே* கொடுத்து விடுங்கள், மேலும் எந்த ஒன்றையும் வீணடிக்காதீர்கள். வீணடிப்பவர்களை அவர் நேசிப்பதில்லை.

142. சில கால்நடைகள் உங்களுக்கு போக்குவரத்தையும் அவ்வண்ணமே படுக்கைச் சாதனங்கயையும் வழங்குகின்றன. **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களில் உங்களுக்குரியவற்றில் இருந்து உண்ணுங்கள், மேலும் சாத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்; அவன் உங்களுடைய மிகத் தீவிரமான விரோதியாக இருக்கின்றான்.

**6:137 திருமணத்திற்குப் பின்னர் விபசாரக் குற்றம் புரிந்ததாகக் கூறப்பட்டு சவூதி அரேபிய இளவரசி ஒருவர் 1978ல் சிரச்சேதம் செய்யப்பட்ட, சர்வதேச அளவில் துர்பிரசித்தி பெற்ற சம்பவமானது மிகச் சரியானதோர் உதாரணமாகும். திருமணத்திற்குப் பின்னான விபசாரக் குற்றத்திற்குக் கடவுளின் சட்டம் சவுக்கடியையே நிர்ணயித்துள்ளது, சிரச்சேதத்தை அல்ல (24:1–2), அதே சமயம் போலித் தெய்வ வழிபாட்டைக் கொண்டுள்ள சட்டங்களே சிரச்சேதத்தை நிபந்தனையாக்குகின்றன. 42:21ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளபடி, பாரம்பர்யவாதிகள் கடவுளால் அங்கீகரிக்கப்படாத ஒரு மார்க்கத்தையே பின்பற்றுகின்றனர்.*

**6:141 ஜகாத் தர்மம் எந்த அளவுக்கு முக்கியமானதெனில், மிக்க கருணையாளர் அதனைக் கொடுப்பவர்களுக்கே தன்னுடைய கருணை எனவரையறுத்துள்ளார் (7:156). இருப்பினும், சீர்கெட்டுப் போய்விட்ட முஸ்லிம்கள் மிக முக்கியமான இந்தக் கட்டளையைத் தவற விட்டு விட்டனர்; அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே ஜகாத்தைக் கொடுக்கின்றனர். "நாம் வருமானத்தைப் பெறுகின்ற நாள் அன்றே" ஜகாத் கொடுக்கப்பட்டு விட வேண்டும் என்பதை இங்கே நாம் காண்கின்றோம். ஆப்ரஹாமின் மூலமாக நம்மிடம் வந்துள்ள விகிதாச்சாரமானது நம்முடைய நிகர வருமானத்தில் 2.5 % ஆகும்.*

*புதுமையான உணவுத்தடைகள் கண்டனம் செய்யப்படுகின்றன*

143. எட்டு வகைகளிலான கால்நடைகள்: இரண்டு வகைச் செம்மறியாடுகள், மற்றும் இரண்டு வகை வெள்ளாடுகளைப் பற்றி, கூறுவீராக, "இரண்டு ஆண் குட்டிகளை அவர் தடுத்துள்ளாரா, அல்லது இரண்டு பெட்டைகளையா, அல்லது இரண்டு பெட்டைகளின் கர்ப்பங்களில் உள்ளவற்றையா? உங்களுக்குத் தெரிந்தவற்றை எனக்குச் சொல்லுங்கள், நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்."

144. இரண்டு வகைகளிலான ஒட்டகங்கள் மற்றும் இரண்டு வகைகளிலான ஆடு மாடுகளைப் பற்றி, கூறுவீராக, "இரண்டு ஆண் குட்டிகளை அவர் உங்களுக்குத் தடுத்துள்ளாரா, அல்லது இரண்டு பெட்டைகளையா, அல்லது இரண்டு பெட்டைகளின் கர்ப்பங்களில் உள்ளவற்றையா? இத்தகைய தடைகளைக் **கடவுள்** உங்களுக்குக் கட்டளையிட்ட போது நீங்கள் சாட்சிகளாக இருந்தீர்களா? பொய்களைக் கண்டுபிடித்து, மேலும் அவற்றைக் **கடவுள்**–ன் மீது சுமத்துகின்றவர்களை விடவும் மிகத் தீயவர்கள் யார்? இவ்விதமாக அவர்கள் அறிவின்றி மக்களைத் தவறான வழியில் நடத்துகின்றனர். இத்தகைய தீய சமூகத்தாரைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை."

*உணவுத் தடைகள் இவை மட்டுமே**

145. கூறுவீராக, "எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்பாடுகளில், உண்ணுபவர் எவருக்கும் எந்த உணவும் தடை செய்யப்பட்டுள்ளதாக நான் காணவில்லை, இவற்றைத் தவிர: *(1)* செத்தவற்றின் இறைச்சி, *(2)* ஓடுகின்ற இரத்தம், *(3)* பன்றிகளின் இறைச்சி,* ஏனெனில் அது கெட்டுப்போனதாக உள்ளது, மற்றும் *(4)* இறைநிந்தனையாகக் **கடவுள்**–ஐ அன்றி மற்றவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராணிகளின் இறைச்சி." எவரேனும் ஒருவர் வேண்டுமென்றோ அல்லது கெட்ட எண்ணத்துடனோ அல்லாமல் *(இவற்றை உண்ணுவதற்கு)* நிர்ப்பந்திக்கப்பட்டால், அப்போது உம்முடைய இரட்சகர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

146. யூதர்களாக இருப்பவர்களுக்கு பிளவுபடாத குளம்புகளை உடைய பிராணிகளை நாம் தடை செய்தோம்; மேலும் மாடுகள் மற்றும் செம்மறியாடுகளின் கொழுப்பை நாம் தடை செய்தோம், அவற்றின் முதுகுகளிலோ அல்லது உள்ளுறுப்புகளிலோ ஒட்டிக் கொண் டிருப்பவை, அல்லது எலும்புகளுடன் கலந்து விட்டவை தவிர, அது அவர்களுடைய வரம்புமீறல்களுக்கொரு தண்டனையாக இருந்தது, மேலும் நாம் உண்மையாளர்களாகவே உள்ளோம்.

147. அவர்கள் உம்மை நம்பமறுத்தால், பின்னர் கூறுவீராக, "உங்களுடைய இரட்சகர் எல்லையற்ற கருணையை உடையவர், ஆனால் குற்றவாளிகளான மக்களுக்கு அவருடைய தண்டனை தவிர்த்து விட இயலாததாக இருக்கின்றது."

148. போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் கூறுகின்றனர், "**கடவுள்** நாடியிருந்தால், நாங்கள் போலித் தெய்வ வழிபாட்டைச் செயல்படுத்திக் கொண்டிருக்க மாட்டோம், அன்றி எங்கள் பெற்றோர்களும் செய்திருக்க மாட்டார்கள், அன்றி எந்த ஒன்றையும் நாங்கள் தடை செய்திருக்கவும் மாட்டோம்." இவர்களுக்கு முன்னர் நம்பமறுத்தவர்களும் இவ்விதமாகவே செய்தனர், நம்முடைய தண்டனைக்கு அவர்கள் உள்ளாகிடும் வரை. கூறுவீராக, "நீங்கள் எங்களுக்குக் காட்டமுடிந்த நிரூபிக்கப்பட்ட அறிவு எதையேனும் நீங்கள் வைத்திருக்கின்றீர்களா? நீங்கள் யூகத்தைத் தவிர எந்த ஒன்றையும் பின்பற்றவில்லை; நீங்கள் அனுமானம் மட்டுமே செய்கின்றீர்கள்."

*மிகவும் வலிமை வாய்ந்த வாதம்*

149. கூறுவீராக, "மிகவும் வலிமை வாய்ந்த வாதத்தைக் **கடவுள்** வைத்திருக்கின்றார்; அவர் நாடினால், உங்கள் அனைவரையும் வழி நடத்திட அவரால் இயலும்."

150. கூறுவீராக, "இதனை அல்லது அதனைக் **கடவுள்** தடுத்துள்ளார் என்று சான்றளிக்கக்கூடியவர்களான உங்களுடைய சாட்சிகளைக் கொண்டு வாருங்கள்." அவர்கள் சாட்சியமளித்தால், அவர்களுடன் சேர்ந்து சாட்சியமளிக்காதீர். அன்றி நம்முடைய வெளிப்பாடுகளை நிராகரிக்கின்றவர்களுடைய, அத்துடன் மறுவுலகத்தின் மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்களுடைய, அத்துடன் தங்களுடைய இரட்சகரிடமிருந்து வழிதவறிச் செல்கின்றவர்களுடைய அபிப்பிராயங்களையும் நீர் பின்பற்ற வேண்டாம்.

---

**6:145–146 நான்கு வகைகளிலான பிராணிகளின் பலன்கள் மட்டுமே தடுக்கப்பட்டுள்ளன: தானாகவே செத்து விட்ட பிராணிகள், வடிகின்ற இரத்தம் (இறைச்சிக்குள்ளேயே சிக்கிக் கொண்டிருப்பதல்ல) பன்றிகளின் இறைச்சி, மற்றும் அவற்றின் படைப்பாளருக்கு அன்றி மற்றவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராணிகள். இத்தகைய தடைகள் மிகவும் குறிப்பான வையாக உள்ளன என்பதை வசனம் 146 நமக்குத் தெரிவிக்கின்றது; கடவுள் "இறைச்சியையோ" அல்லது "கொழுப் பையோ" அல்லது, அவ்வாறு அவர் நாடினால், இரண்டையுமோ தடை செய்கின்றார்.*

**6:149 குர்ஆனுடைய கணிதக் குறியீடானது, இது இவ்வுலகத்திற்குரிய கடவுளின் தூதுச் செய்திதான் என்பதற்கு, உணரக் கூடிய மேலும் சற்றும் மறுக்க இயலாத ஒரு சான்றாக உள்ளது. இந்த அசாதாரணமான அற்புத நிகழ்வை மெச்சி, பின்னர் சிரம் பணிந்து வீழ்ந்து, மகத்தான இந்த அற்புதத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து வாசகர் எவரையும் தடுக்க தெய்வீகத் தடை தேவைப்படுகின்றது (பார்க்க 17:45–46, 18:57, 56:79 மற்றும் பின் இணைப்பு1).*

*முக்கியக் கட்டளைகள்*

151. கூறுவீராக, "வாருங்கள், உங்களுடைய இரட்சகர் மெய்யாகவே உங்களுக்குத் தடுத்திருப்பவற்றை நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன்: அவருடன் போலித் தெய்வங்களை நீங்கள் அமைத்துக் கொள்ளலாகாது. உங்களுடைய பெற்றோர்களை நீங்கள் கண்ணியப்படுத்த வேண்டும். வறுமையைக் குறித்த அச்சத்தினால் உங்களுடைய பிள்ளைகளை நீங்கள் கொலை செய்யலாகாது–உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம். பெரும்பாவங்களை, பகிரங்கமானவையோ அல்லது மறைக்கப்பட்டவையோ, நீங்கள் புரியலாகாது. நீதியின் போக்கிலேயே தவிர, நீங்கள் கொலை செய்யலாகாது – **கடவுள்** உயிரினைப் புனிதமானதாக ஆக்கியுள்ளார். இவை உங்களுக்கு அவருடைய கட்டளைகளாகும், நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு."

*கூடுதல் கட்டளைகள்*

152. அனாதைகளின் பணத்தை அவர்கள் தக்க பிராய மடைகின்றவரை, மிகவும் நன்னெறியான முறையிலேயே அன்றி நீங்கள் தொடலாகாது. நீங்கள் வணிகம் செய்யும் போது, முழு எடையையும் முழு அளவையையும், நீதத்துடன் நீங்கள் கொடுத்திட வேண்டும். எந்த ஆத்மாவிற்கும் அதன் வழிவகைகளுக்கு அப்பால் நாம் சுமத்துவதில்லை. நீங்கள் சாட்சி பகரும் போது, உங்களுடைய உறவினர்களுக்கு எதிராக இருந்த போதிலும், நீங்கள் முற்றிலும் நீதத்துடன் இருக்க வேண்டும். **கடவுள்**–வுடனான உங்களுடைய உடன்படிக்கையை நீங்கள் பூர்த்தியாக்க வேண்டும். இவை உங்களுக்கு அவருடைய கட்டளைகளாகும், நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

153. இதுவே என்னுடைய பாதையாகும் – நேரான ஒன்று. நீங்கள் அதனைப் பின்பற்ற வேண்டும், மேலும் அவருடைய பாதையிலிருந்து அவர்கள் உங்களைத் திசை திருப்பி விடாதிருக்கும் பொருட்டு, வேறு எந்தப் பாதைகளையும் பின்பற்றாதீர்கள். இவை உங்களுக்கு அவருடைய கட்டளைகளாகும், நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு.

154. மிகச்சிறந்த கட்டளைகளுடன் முழுமையாக்கப்பட்டதாகவும், ஒவ்வொன்றையும் விவரிப்பதாகவும், ஒரு வழிகாட்டியாகவும் கருணையாகவும், மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம். தங்களுடைய இரட்சகரின் சந்திப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ளக் கூடும் என்பதற்காக.

155. இதுவும் கூட நாம் வெளிப்படுத்தியுள்ள பாக்கிய மிக்கதொரு வேதமேயாகும்; நீங்கள் இதனைப் பின்பற்றி நன்னெறியானதொரு வாழ்வு நடத்திட வேண்டும், நீங்கள் கருணையை அடையும் பொருட்டு.

156. இப்போது, "வேதமானது எங்களுக்கு முன்னர் இருந்த இரண்டு கூட்டங்களுக்கே இறக்கி அனுப்பப்பட்டது, மேலும் அவற்றின் போதனைகளைப் பற்றி நாங்கள் அறியாதவர்களாகவே இருந்தோம்," என்று இனிமேலும் நீங்கள் கூற இயலாது.

*கணித இயல்: மேம்பட்ட சான்று**

157. அன்றி, "ஒரு வேதம் மட்டும் எங்களிடம் இறங்கி வரக் கூடுமானால், அவர்களை விடவும் சிறப்பாக வழி நடத்தப்பட்டவர்களாக நாங்கள் இருந்திருப்போம்," என்றும் நீங்கள் கூற இயலாது. உங்களுடைய இரட்சகரிடமிருந்து நிரூபிக்கப்பட்டதொரு வேதமும், ஒரு வழிகாட்டியும், ஒரு கருணையும் இப்போது உங்களிடம் வந்துள்ளது. இப்பொழுது, **கடவுள்**–யிடமிருந்துள்ள இந்தச் சான்றுகளை நிராகரிக்கின்ற மேலும் அவற்றை அலட்சியப்படுத்துகின்ற ஒருவனை விடவும், மிகத் தீயவன் யார் ? நம்முடைய சான்றுகளை அலட்சியப்படுத்துகின்றவர்களை அவர்களுடைய கவனமின்மைக்காக மோசமான தண்டனைக்கு நாம் உட்படுத்துவோம்.

*சோதனையின் அத்தியாவசியங்கள்*

158. வானவர்களோ, அல்லது உம்முடைய இரட்சகரோ, அல்லது உம்முடைய இரட்சகருடைய சில நேரடியான தோற்றங்களோ அவர்களிடம் வருவதற்காக அவர்கள் காத்திருக்கின்றனரா ? இது நிகழ்ந்து விடுகின்ற அந்நாளில், எந்த ஆத்மாவும் அதற்கு முன்னரே நம்பிக்கை கொள்ளாமல், மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்தியதன் மூலம், நம்பிக்கையின் பலன்களை அறுவடை செய்யாமல் இருந்தால், நம்பிக்கை கொள்வதன் மூலம் அது பலனடையாது.* கூறுவீராக, "தொடர்ந்து காத்துக் கொண்டிருங்கள்; நாங்களும் காத்துக் கொண்டுதான் இருக்கின்றோம்."

*மார்க்கப் பிரிவுகள் கண்டனம் செய்யப்படுகின்றன*

159. தங்களையே பிரிவுகளாகப் பிரித்துக் கொள்கின்றவர்கள் உம்மைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களுடைய தீர்ப்பு **கடவுள்** வசம் உள்ளது, பின்னர் அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அவர் தெரிவிப்பார்.

**6:157 எவர் மூலமாக இக்குறியீடு வெளிப்படுத்தப்பட்டதோ அந்த "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்புடன் (1230), இந்த வசன எண்ணையும் (157), கூட்டினால் அதன் கூட்டுத்தொகையானது 1387, அல்லது 19 x 73 எனப் பெறப்படுகின்றது எனும் நிதர்சனத்திலிருந்து, குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் பங்கானது, மிகவும் தெளிவாகின்றது.*

**6:158 நம்பிக்கை கொண்ட பின்னர், கடவுளால் விதிக்கப்பட்டுள்ள வழிபாட்டு அநுஷ்டானங்களின் மூலம் அவ்வாத்மா வளர்ச்சியடைந்து ஊட்டப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

160. நன்னெறியான காரியம் ஒன்றைச் செய்கின்ற எவ ரும் பத்துக்கு உரிய வெகுமதியைப் பெறுகின்றார், ஆனால் பாவம் ஒன்றைப் புரிகின்ற ஒருவன் ஒன்றே ஒன்றிற்கான கூலியையே கொடுக்கப்படு வான். எவர் ஒருவரும் சிறிதளவு அநீதத்தையும் அனுபவிக்க மாட்டார்.

161. கூறுவீராக, "என்னுடைய இரட்சகர் நேரானதொரு பாதையில் என்னை வழிநடத்தியுள்ளார் – ஆப்ரஹா மின் பரிபூரண மார்க்கமான, ஏகத்துவம். அவர் ஒரு போதும் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருவ ராக இருந்ததில்லை."

162. கூறுவீராக, "என்னுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொ ழுகைகள், என்னுடைய வழிபாட்டு அநுஷ்டானங்கள், என் வாழ்வு மற்றும் என்னுடைய மரணம் அனைத்தும் பிரபஞ்சத்தின் இரட்சகரான, **கடவுள்**–க்கு மட்டுமே பரிபூரணமாக அர்ப்பணிக்கப்பட்டவையாக இருக் கின்றன.

163. "அவருக்குப் பங்குதாரர் எவரும் இல்லை. இதனைத் தான் நம்ப வேண்டுமென்று நான் கட்டளையிடப் பட்டுள்ளேன், மேலும் சரணடைவதில் முதன்மை யானவனாக நான் இருக்கின்றேன்."

164. கூறுவீராக, "அனைத்துப் பொருட்களின் இரட்ச கரும் அவராகவே இருக்கின்ற போது, **கடவுள்**–ஐ விடுத்து மற்றவற்றை ஓர் இரட்சகராக நான் நாட வேண்டுமா ? எந்த ஆத்மாவும் அதன் சொந்தக் காரி யங்களிலிருந்தே தவிர பலனை அடைவதில்லை, மேலும் எவரும் மற்றொருவருடைய சுமையைச் சுமப்பதில்லை. இறுதிக் கட்டத்தில், நீங்கள் உங்களு டைய இரட்சகரிடமே திரும்புகின்றீர்கள், பின்னர் உங்களுடைய அனைத்துத் தர்க்கங்கள் குறித்தும் அவர் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றார்."

165. அவர்தான் பூமியின் வாரிசுகளாக உங்களை ஆக்கி யவர், மேலும் அவர் உங்களுக்குக் கொடுத்திருப்ப வற்றிற்கேற்ப உங்களைச் சோதிப்பதற்காக, உங்க ளில் சிலரை மற்றவர்களுக்கு மேலாக அந்தஸ்தில் அவர் உயர்த்தினார். நிச்சயமாக, உம்முடைய இரட் சகர் தண்டனையை நிறைவேற்றுவதில் மிகவும் திறன் வாய்ந்தவர், மேலும் அவர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

****

# சூரா 7: ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம் (அல்–அஃராஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம. ஸ*

2. இந்த வேதம் உமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது – நீர் உம்முடைய இதயத்தில் அதனைக் குறித்து சந்தேகத்திற்கு இடமளிக்க வேண்டாம் – அதனைக் கொண்டு நீர் எச்சரிப்பதற்காகவும், நம்பிக்கையாளர் களுக்கு ஒரு நினைவூட்டலை வழங்குதற்காகவும்.

3. உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றையே நீங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும்; அவருடன் எந்த போலித் தெய் வங்களையும் பின்பற்றாதீர்கள். அரிதாகவே நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றீர்கள்.

4. எத்தனையோ ஒரு சமூகத்தை நாம் அழித்தொழித் துள்ளோம்; அவர்கள் உறங்கிக் கொண்டோ, அல்லது நன்கு விழித்துக் கொண்டோ இருந்த போது நம்மு டைய தண்டனைக்கு அவர்கள் உள்ளானார்கள்.

5. நம்முடைய தண்டனையானது அவர்களை வந்த டைந்த போது அவர்களுடைய கூற்றாக இருந்தது: "உண்மையில், நாங்கள் வரம்புமீறுகின்றவர்களா கவே இருந்தோம்."

6. தூதுச் செய்தியைப் பெற்றவர்களை நிச்சயமாக நாம் விசாரிப்போம், அத்துடன் தூதர்களையும் நாம் விசாரிப்போம்.

7. அதிகாரப்பூர்வமாக அவர்களுக்கு நாம் அறிவிப் போம், ஏனெனில் நாம் ஒருபோதும் கவனமற்றவர் களாக இருந்ததில்லை.

8. தராசுகள் அந்நாளில், நீதமாக நிறுவப்படும். எடை கள் கனத்தவர்களாக இருக்கின்றவர்களே வெற்றி யாளர்களாக இருப்பார்கள்.

9. அநீதமாக, நம்முடைய வெளிப்பாடுகளை அலட்சியம் செய்ததன் ஒரு பின்விளைவாக, எவர்களுடைய எடைகள் இலேசானவையாக இருக்கின்றனவோ அவர்களைப் பொறுத்த வரை, அவர்கள்தான் தங்களு டைய ஆத்மாக்களைத்* தவறவிட்டவர்களாக இருப் பார்கள்.

---

**7:1 குர்ஆனுடைய கணித அற்புதத்தில் இந்தத் துவக்க எழுத்துகளின் பங்கிற்கு, பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

**7:9 நம்முடைய படைப்பாளரைக் கவனத்தில் கொள்ளத் தவறுதல் ஆன்மீகப்பட்டினிக்கும் இறுதியில் ஆத்மாவின் "இழப்புக்கும்" வழி கோலுகின்றது.*

10. பூமியின் மீது உங்களை நாம் நிலைப்படுத்தினோம், மேலும் அதில் உங்களுக்கு ஆதரவளிக்கின்ற உபா யங்களையும் நாம் வழங்கியுள்ளோம். அரிதாகவே நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றீர்கள்.

11. நாம் உங்களைப் படைத்தோம், பின்னர் நாம் உங் களுக்கு உருக்கொடுத்தோம், பின்னர் நாம் வான வர்களை நோக்கிக் கூறினோம், "ஆதமின் முன் சிரம் பணிந்து விழுங்கள்." அவர்கள் சிரம் பணிந்து வீழ்ந்தனர், இப்லீஸைத் *(சாத்தான்)* தவிர; சிரம் பணிந்தவர்களுடன் அவன் இருந்திடவில்லை.

*சோதனை துவங்குகின்றது*

12. அவர் கூறினார், "நான் உனக்குக் கட்டளையிட்ட போது சிரம் பணிவதிலிருந்து உன்னைத் தடுத்தது எது ?" அவன் கூறினான், "நான் அவனை விட மேலான வனாக இருக்கின்றேன்; என்னை நீர் நெருப்பி லிருந்து படைத்தீர், ஆனால் அவனைக் களிமண்ணில் இருந்துதான் படைத்தீர்."

13. அவர் கூறினார், "அப்படியென்றால், நீ கீழே சென்றிட வேண்டும், ஏனெனில் இங்கே நீ ஆணவம் கொண்ட வனாக இருப்பதற்கில்லை. வெளியேறி விடு; நீ தரம் தாழ்ந்தவனாக இருக்கின்றாய்."

14. அவன் கூறினான்," உயிர்த்தெழுப்பப்படுகின்ற அந்த நாள் வரை, எனக்கு ஓர் அவகாசமளிப்பீராக."

15. அவர் கூறினார், "ஓர் அவகாசம் உனக்கு வழங்கப் பட்டுள்ளது."

16. அவன் கூறினான், "நான் வழிதவறுதலில்* செல்ல வேண்டுமென நீர் நாடி விட்டதால், உம்முடைய நேரான பாதையின் மீது அவர்களுக்காக நான் மறைந்து அமர்ந்திருப்பேன்.

17. "அவர்களுக்கு முன்னிருந்தும் அவர்களுக்குப் பின்னிருந்தும், அவர்களுடைய வலமிருந்தும் அவர் களுடைய இடமிருந்தும் அவர்களிடம் நான் வரு வேன், மேலும் அவர்களில் அதிகமானோர் நன்றி யற்றவர்களாக இருப்பதை நீர் காண்பீர்."

18. அவர் கூறினார், "இழிவுபடுத்தப்பட்டவனாகவும் தோற்கடிக்கப்பட்டவனாகவும், இங்கிருந்து வெளி யேறி விடு. அவர்களில் எவர் உன்னைப் பின்பற்று கின்றனரோ, உங்கள் அனைவரையும் கொண்டு நரகத்தை நான் நிரப்புவேன்.

19. "ஆதமே, உம்மைப் பொறுத்தவரை, உம்முடைய மனைவியுடன் சுவனத்தில் வசித்திருப்பீராக, மேலும் அதிலிருந்து நீங்கள் விரும்பியவாறு உண்ணுங்கள், ஆனால் நீங்கள் பாவத்தில் வீழ்ந்து விடாதிருக்கும் பொருட்டு, இந்த ஒரு மரத்தை நெருங்காதீர்கள்."

20. அவர்களுக்குத் தென்படாதிருந்த அவர்களுடைய உடல்களை வெளிப்படுத்தி விடும் பொருட்டு, சாத் தான் அவர்களிடம் கிசுகிசுத்தான். அவன் கூறி னான், "வானவர்களாகி விடுவதிலிருந்தும், நித்திய வாழ்வை அடைந்திடுவதிலிருந்தும், உங்களைத் தடுத்து விடுவதற்காகவே தவிர, உங்களுடைய இரட்சகர் இந்த மரத்தில் இருந்து உங்களைத் தடுக்க வில்லை."

21. அவன் அவர்களிடம் சத்தியம் செய்தான், "நான் உங்களுக்கு நல்லுபதேசமே தருகின்றேன்."

22. இவ்விதமாக அவன் பொய்களைக் கொண்டு அவர் களை ஏமாற்றினான். அவர்கள் அம்மரத்தைச் சுவைத்த வுடன், அவர்களுடைய உடல்கள் அவர்களுக்குத் தென்படலாயின, உடனே அவர்கள் சுவனத்தின் இலைகளால் தங்களை மறைத்துக் கொள்ள முயன்ற னர். அவர்களுடைய இரட்சகர் அவர்களை வர வழைத்தார்: "அந்த மரத்தில் இருந்து உங்களை நான் தடுக்கவும், மேலும் சாத்தான் உங்களுடைய மிகத் தீவிரமான விரோதியாக இருக்கின்றான் என்று எச்சரிக்கவும் செய்யவில்லையா ?"

23. அவர்கள் கூறினர், "எங்கள் இரட்சகரே, எங்கள் ஆத்மாக்களுக்கு நாங்கள் அநீதமிழைத்துக் கொண் டோம், நீர் எங்களை மன்னித்து எங்கள் மீது கருணை கொண்டாலேயன்றி, நாங்கள் நஷ்டவாளிகளாகவே இருப்போம்."

24. அவர் கூறினார், "ஒருவர் மற்றொருவருடைய விரோதிகளாக, இறங்கிச் சென்றுவிடுங்கள். பூமி யின் மீது உங்கள் வசிப்பிடமும், சிறிதொரு காலத்திற் குரிய வாழ்வாதாரமும் இருக்கும்."

25. அவர் கூறினார், "அதன் மீது நீங்கள் வாழ்வீர்கள், அதன் மீதே நீங்கள் மரணிப்பீர்கள், மேலும் அதிலி ருந்தே நீங்கள் வெளிக்கொண்டு வரப்படுவீர்கள்."

26. ஆதமுடைய சந்ததியினரே, உங்களுடைய உடல் களை மறைத்துக் கொள்வதற்காகவும், அவ்வண்ண மே வசதிக்காகவும், ஆடைகளை உங்களுக்கு நாம் வழங்கியிருக்கின்றோம். ஆனால் மிகச்சிறந்த ஆடை யாவது நன்னெறியெனும் ஆடையேயாகும். இவை **கடவுள்**–ன் அத்தாட்சிகளில் சில ஆகும், அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

**7:16 சாத்தான் நிரூபிக்கப்பட்ட ஒரு பொய்யன் ஆவான், அத்துடன் அவனது அங்கத்தினர்களும் அவ்வாறே இருக் கின்றனர் (பார்க்க 2:36, 6:22–23, & 7:20–22).*

27. ஆதமுடைய சந்ததியினரே, சுவனத்திலிருந்து உங்களுடைய பெற்றோர்கள் வெளியேற்றப்படவும், மேலும் அவர்களுடைய உடல்கள் வெளிப்படுத்தப் படுவதற்காக அவர்களுடைய ஆடைகள் நீக்கப் படவும் காரணமாகிய போது, அவன் செய்ததைப் போல், உங்களையும் சாத்தான் ஏய்த்து விட நீங்கள் அனுமதிக்காதீர்கள். அவனும் அவனுடைய வம்சத்த வரும் உங்களைப் பார்க்கின்றனர், அதே சமயம் நீங்களோ அவர்களைப் பார்ப்பதில்லை. நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய தோழர்களாக சாத்தான் களை நாம் நியமித்து விடுகின்றோம்.

*பாரம்பர்யத் தகவல்கள்*
*அனைத்தையும் பரிசீலியுங்கள்*

28. அவர்கள் ஒரு பெரும்பாவத்தைப் புரிகின்றனர், பின்னர் கூறுகின்றனர், "எங்களுடைய பெற்றோர் கள் இதனைச் செய்ய நாங்கள் கண்டோம், மேலும் இதனைச் செய்யுமாறு **கடவுள்** தான் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்." கூறுவீராக, "**கடவுள்** ஒரு போதும் பாவத்தை ஏவுவதில்லை. **கடவுள்**–ஐப் பற்றி நீங்கள் அறியாதவற்றை நீங்கள் கூறுகின்றீர்களா ?"

29. கூறுவீராக, " என் இரட்சகர் நீதியையும், ஒவ்வொரு வழிபாட்டுத்தலத்திலும் அவருக்கு மட்டுமே அர்ப் பணித்தவர்களாக நிற்பதையுமே ஏவுகின்றார். நீங்கள் உங்களுடைய வழிபாட்டினை அவருக்கு மட்டுமென அர்ப்பணிக்க வேண்டும். அவர் உங்களைத் துவக்கிய அதே விதமாக, நீங்கள் இறுதியாக அவரிடமே திரும் பிச் செல்வீர்கள்."

*கவனம்: தாங்கள் வழிநடத்தப்பட்டவர்கள் என*
*அவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்*

30. சிலரை அவர் வழிநடத்தினார், அதே சமயம் மற்றவர் கள் வழிதவறுதலுக்கு ஆட்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்கள் **கடவுள்**–க்குப் பதிலாக, சாத்தான்களைத் தங்களுடைய எஜமானர்களாக எடுத்துக் கொண்டு விட்டனர், ஆயினும் அவர்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருப்பதாக அவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

*மஸ்ஜித்களுக்கு நேர்த்தியாக*
*உடையணிந்து செல்லுங்கள்*

31. ஆதமுடைய சந்ததியினரே, நீங்கள் மஸ்ஜிதுக்குச் செல்கின்ற போது நீங்கள் தூய்மையாக இருக்கவும், நேர்த்தியாக உடையணியவும் வேண்டும். மேலும் நடுத் தரமாக உண்ணுங்கள், பருகுங்கள்; நிச்சயமாக, பெருந் தீனிக்காரர்களை அவர் நேசிப்பதில்லை.

*புதுமையாகப் புகுத்தப்படுகின்ற தடைகள்*
*கண்டனம் செய்யப்படுகின்றன*

32. கூறுவீராக, "தன்னுடைய படைப்பினங்களுக்காக **கடவுள்** படைத்துள்ள விரும்பத்தக்க பொருட்களை யும் நல்ல வாழ்வாதாரங்களையும் தடை செய்தவர் யார் ?" கூறுவீராக, "இத்தகைய பொருட்கள் நம்பிக் கை கொண்டோரால் இந்த வாழ்வில் அனுபவிக்கப் படுவதற்காக உள்ளன. அத்துடனன்றி, இந்நல்ல வாழ்வாதாரங்கள் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் அன்று பிரத்தியேகமாக அவர்களுக்கே உரியதாக இருக்கும்." அறிந்திருக்கின்ற மக்களுக்கு இவ் விதமாக இந்த வெளிப்பாடுகளை நாம் விவரிக்கின் றோம்.

33. கூறுவீராக, "பகிரங்கமானவையாகவோ அல்லது மறைக்கப்பட்டவையாகவோ அவை இருப்பினும், தீய செயல்களையும், அன்றி பாவங்களையும், நியாயப்படுத்த இயலாத வலுச்சண்டையையும், **கடவுள்**–வுடன் சக்தியற்ற போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்வதையும், **கடவுள்**–ஐப் பற்றி நீங்கள் அறியாதவற்றைக் கூறுவதையும் மட்டுமே என்னுடைய இரட்சகர் தடை செய்கின்றார்."

34. ஒவ்வொரு சமுதாயத்திற்கும், முன்னரே தீர்மானிக் கப்பட்டதொரு வாழ்க்கைத் தவணை உள்ளது. அவர்களுடைய அவகாசம் ஒரு முடிவிற்கு வந்து விட்டால், ஒரு மணி நேரமும் அதனைத் தாமதப் படுத்தவோ, அல்லது அதனை முற்படுத்தவோ அவர் களால் இயலாது.

*உங்களில் இருந்தே தூதர்கள்*

35. ஆதமுடைய சந்ததியினரே, உங்களில் இருந்தே தூதர்கள் உங்களிடம் வந்து, மேலும் என்னுடைய வெளிப்பாடுகளை உங்களிடம் எடுத்துக் கூறும் போது, கவனத்தில் எடுத்துக் கொள்வதுடன் நன் னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்கள், அச்சம் கொள்ள எதுவும் இருக்காது, அன்றி அவர் கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

36. நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்கமறுப்பதுடன், அவற்றை ஆதரிக்க மிகவும் ஆணவம் கொண்ட வர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நரகத்திற்கு உள்ளாகிவிட்டனர், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

37. **கடவுள்**–ஐப் பற்றி பொய்களை உருவாக்குபவர்கள், அல்லது அவருடைய வெளிப்பாடுகளை நிராகரிப் பவர்களை விடவும் மிகத்தீயவர்கள் யார் ? வேதத் திற்கு ஏற்ப, இவர்கள் தங்களுடைய பங்கினைப் பெறுவார்கள், பின்னர், அவர்களுடைய வாழ்வு களை முடிப்பதற்காக நம்முடைய தூதர்கள் வரும் பொழுது, அவர்கள் கூறுவார்கள், " **கடவுள்**–வுடன் நீங்கள் இறைஞ்சிக் கொண்டிருந்த அந்த போலித் தெய்வங்கள் எங்கே ?" அவர்கள் கூறுவார்கள், "அவை எங்களைக் கைவிட்டு விட்டன." அவர்கள் நம்பமறுப்பவர்களாகவே இருந்தனர் என்று அவர் கள் தங்களுக்கெதிராகவே சாட்சி பகர்வார்கள்.

*பரஸ்பரம் பழித்துக் கொள்ளுதல்*

38. அவர் கூறுவார், "ஜின்கள் மற்றும் மானிடர்களின் முந்திய இச்சமுதாயங்களுடன் நரகத்திற்குள் நுழையுங்கள்." ஒவ்வொரு முறையும் ஒரு கூட்டம் நுழையும் போதும், தங்களுடைய முன்னோர்களின் கூட்டத்தை அவர்கள் சபிப்பார்கள். அவர்கள் அனைவரும் அதில் இருக்கும் போது, முந்தியவர்களைப் பற்றி பிந்தியவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, இவர்கள்தான் எங்களைத் தவறாக வழிநடத்தியவர்கள். நரகத்தின் தண்டனையை இருமடங்காக அவர்களுக்குக் கொடுப்பீராக." அவர் கூறுவார், "ஒவ்வொருவரும் இரு மடங்கினையே பெறுகின்றீர்கள், ஆனால் நீங்கள் அறிய மாட்டீர்கள்."

39. முன்னோர்களின் கூட்டமானது பிந்திய கூட்டத்தை நோக்கிக் கூறும், "எங்களை விடவும் சாதகமான சூழ்நிலையை நீங்கள் பெற்றிருந்ததால், உங்களுடைய சொந்தப் பாவங்களுக்குரிய தண்டனையைச் சுவையுங்கள்"

*கடவுளின் வெளிப்பாடுகளை ஏற்க மறுத்தல்: மன்னிக்கப்பட மாட்டாத ஒரு குற்றம்*

40. நிச்சயமாக, நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்க மறுப்பதுடன், அவற்றை ஆதரிக்க மிகவும் ஆணவம் கொண்டவர்களாக இருப்போருக்கு, ஆகாயத்தின் வாசல்கள் ஒருபோதும் அவர்களுக்காகத் திறக்காது, அன்றி ஊசியின் காதிற்குள் ஒட்டகம் கடந்து செல்கின்ற வரை அவர்கள் சுவனத்திற்குள் நுழைய மாட்டார்கள். குற்றவாளிகளுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுப்போம்.

41. நரகத்தை ஒரு தங்குமிடமாக அவர்கள் அடைந்து விட்டார்கள்; அவர்களுக்கு மேல் தடுப்புகளை அவர்கள் கொண்டிருப்பார்கள். வரம்புமீறுகின்றவர்களுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுப்போம்.

42. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்த வரை – எந்த ஆத்மாவுக்கும் அதன் சக்திக்கு அப்பால் நாம் ஒருபோதும் சுமத்துவதில்லை – இவர்கள் சுவனவாசிகளாக இருப்பார்கள். அவர்கள் அதனில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

*கடவுளின் அருளால்*

43. அவர்களுடைய இதயங்களில் இருந்து அனைத் துப் பொறாமையையும் நாம் நீக்கி விடுவோம். அவர்களுக்குக் கீழே நதிகள் ஓடிக் கொண்டிருக்கும், மேலும் அவர்கள் கூறுவார்கள், "எங்களை வழி நடத்தியதற்காகக் **கடவுள்** புகழப்பட்டவராக இருப்பாராக. **கடவுள்** எங்களை வழிநடத்தியிருக்காவிட்டால், நாங்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருந்திருக்கச் சாத்தியமில்லை. எங்கள் இரட்சகருடைய தூதர்கள் சத்தியத்தையே கொண்டு வந்தனர்." அவர்கள் அழைக்கப்படுவார்கள்: "இதுவே உங்களுடைய சுவனமாகும். உங்களுடைய காரியங்களின் பலனாக, இதற்கு நீங்கள் வாரிசுகளாகி விட்டீர்கள்."

44. சுவனவாசிகள் நரகவாசிகளை அழைப்பார்கள்: "எங்களுடைய இரட்சகரின் வாக்குறுதி சத்திய மானதாக இருப்பதை நாங்கள் கண்டு கொண் டோம், உங்களுடைய இரட்சகரின் வாக்குறுதி சத்தியமானதாக இருப்பதை நீங்கள் கண்டு கொண்டீர்களா ?" அவர்கள் கூறுவார்கள், "ஆம்." அவர்களுக்கிடையில் அறிவிப்பாளர் ஒருவர் அறிவிப்பார்: "வரம்புமீறுகின்றவர்களின் மீது **கடவுள்**–ன் கண்டனம் நேரிட்டு விட்டது;

45. "அவர்கள் **கடவுள்**–ன் பாதையிலிருந்து விரட்டியடித்து, மேலும் அதனைக் கோணலாக்கப் பாடுபடுபவர்கள், மேலும் மறுவுலகத்தைக் குறித்து அவர்கள் நம்பமறுப்பவர்களாக இருக்கின்றனர்."

46. அவர்களை ஒரு தடுப்பு பிரிக்கின்றது, அதே சமயம் ஒவ்வொரு தரப்பினரையும் அவர்களுடைய தோற்றங்களைக் கொண்டு அடையாளம் கண்டு கொள்கின்ற மக்களால் ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலமானது* நிறைந்திருக்கும். அவர்கள் சுவனவாசிகளை அழைப்பார்கள்: "உங்கள் மீது சாந்தி நிலவுவதாக." ஆசை மிகு எண்ணங்கள் மூலமேயன்றி *(சுவனத்தில்)* அவர்கள் நுழைந்திடவில்லை.

47. நரகவாசிகளின் பால் தங்களுடைய கண்களை அவர்கள் திருப்பும்பொழுது, அவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, இந்தத் தீய மக்களுடன் எங்களைப் போட்டு விடாதீர்."

*பெரும்பான்மையானோர் கடுமையான விதிக்குள்ளாகின்றனர்*

48. அவர்களுடைய தோற்றங்களைக் கொண்டு அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளும் மக்களை, ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலவாசிகள் அழைத்து, "உங்களுடைய மாபெரும் எண்ணிக்கைகளோ, அன்றி உங்களுடைய ஆணவமோ எவ்வகையிலும் உங்களுக்குப் பலனளிக்கவில்லை," என்று கூறுவார்கள்.

49. "**கடவுள்** அவர்களையெல்லாம் கருணையைக் கொண்டு ஒருபோதும் தொட மாட்டார் என்று நீங்கள் சத்தியமிட்ட மக்கள் அவர்கள்தானே ?" *(ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலத்தில் உள்ள அம் மக்கள் பின்னர் கூறப்படுவார்கள்,)* "சுவனத்தில் நுழையுங்கள்; நீங்கள் அச்சம் கொள்ள ஒன்றுமில்லை, அன்றி நீங்கள் கவலைப்படவும் மாட்டீர்கள்."

**7:46–49* துவக்கத்தில், அங்கே 4 இடங்கள் இருக்கும்: (1) உயர்ந்த சொர்க்கம், (2) தாழ்ந்த சொர்க்கம், (3) ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம், மேலும் (4) நரகம். ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலமானது தாழ்ந்த சொர்க்கத்தினுள் இணைக்கப்பட்டு விடும்.*

50. நரகவாசிகளானவர்கள் சுவனத்தில் வசிப்பவர்களை அழைப்பார்கள்: "உங்களுடைய தண்ணீரில் கொஞ்சமோ, அல்லது உங்களுக்குரிய **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களில் கொஞ்சமோ எங்களை நோக்கிப் பாய்கின்றவாறு செய்வீர்களாக." அவர்கள் கூறுவார்கள், "நம்பமறுப்பவர்களுக்குக் **கடவுள்** அவற்றைத் தடுத்து விட்டார்."

51. எவர்கள் தங்களுடைய மார்க்கத்தைக் கவனமாக எடுத்துக் கொள்ளாததுடன், இந்த உலகாதாய வாழ்வில் முற்றிலும் மூழ்கியவர்களாக இருக்கின்றனரோ, அவர்கள் அந்த நாளை மறந்து விட்ட காரணத்தாலும் நம்முடைய வெளிப்பாடுகளை அவர்கள் வெறுத்தொதுக்கிய காரணத்தாலும் அந்நாள் அன்று அவர்களை நாம் மறந்து விடுகின்றோம்.

*குர்ஆன்:*
*முற்றிலும் விவரிக்கப்பட்டது*

52. அறிவு, வழிகாட்டல் கொண்டு அவர்களுக்கு முற்றிலும் விவரிக்கப்பட்டுள்ள ஒரு வேதத்தையும், நம்பிக்கை கொண்ட மக்களுக்குக் கருணையையும் நாம் தந்திருக்கின்றோம்.

53. *(முன்னறிவிப்புக்கள்)* அனைத்தும் பூர்த்தியாவதற்காக அவர்கள் காத்திருக்கின்றனரா? அத்தகைய பூர்த்தியாதல் நிகழ்ந்தேறும் நாளில், கடந்த காலத்தில் அதனை அலட்சியம் செய்தவர்கள் கூறுவார்கள், "நம்முடைய இரட்சகரின் தூதர்கள் சத்தியத்தையே கொண்டு வந்திருந்தனர். நம் சார்பாகப் பரிந்துரைக்க பரிந்துரையாளர்கள் எவரேனும் இருக்கின்றனரா? எங்களுடைய நடவடிக்கைகளை நாங்கள் மாற்றிக் கொண்டு, மேலும் நாங்கள் செய்து கொண்டிருந்தவற்றை விட மேலான காரியங்களைச் செய்வதற்காக, எங்களை நீர் திருப்பி அனுப்புவீரா?" அவர்கள் தங்களுடைய ஆத்மாக்களைத் தவற விட்டு விட்டனர், மேலும் அவர்களுடைய சொந்தக் கண்டுபிடிப்புகளே அவர்களுடைய அழிவுக்குக் காரணமாகி விட்டன.

54. உங்களுடைய இரட்சகர்தான் ஒரே **கடவுள்**; வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில்* படைத்து, பின்னர் அனைத்து அதிகாரங்களையும் ஏற்றுக் கொண்டவர். விடாது அதனைத் தொடர்ந்தவாறு, இரவானது பகலினை முந்துகின்றது. மேலும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் அவருடைய கட்டளையின்படி பணிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பரிபூரணமாக, படைத்தல் அனைத்தையும் கட்டளைகள் அனைத்தையும் அவர் கட்டுப்படுத்துகின்றார். பிரபஞ்சத்தின் இரட்சகரான, **கடவுள்** மிகவும் உயர்ந்தவராக இருக்கின்றார்.

55. உங்களுடைய இரட்சகரை பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் நீங்கள் வழிபட வேண்டும்; வரம்புமீறுகின்றவர்களை அவர் நேசிப்பதில்லை.

56. பூமியை, அது சீரானதாக ஆக்கப்பட்டு விட்ட பின்னர் சீர்கெடுக்காதீர்கள், மேலும் பக்தியுடனும், எதிர்பார்ப்புடனும், அவரை வழிபடுங்கள். நிச்சயமாக, **கடவுள்**–ன் கருணை நன்னெறியாளர்களால் அடையப்படக் கூடியதாகவே உள்ளது.

57. அவருடைய கரங்களிலிருந்து ஒரு கருணையாக, நல்ல சகுனத்துடன், காற்றை அனுப்புகின்றவர் அவர்தான். கனத்த மேகங்களை அவை ஒன்று திரட்டியவுடன், இறந்துவிட்ட நிலங்களின் பால் அவற்றை நாம் ஒட்டுகின்றோம், மேலும் அதிலிருந்து தண்ணீரை இறக்கி அனுப்புகின்றோம், அதனைக் கொண்டு அனைத்துக் கனி வர்க்கங்களையும் விளைவிப்பதற்காக. இவ்விதமாகவே மரணித்தவர்களை நாம் உயிர்ப்பித்தெழுப்புகின்றோம், நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

58. நல்ல நிலமானது, அதன் இரட்சகருடைய அனுமதியின்படி அதனுடைய தாவரங்களை உடனடியாக முளைப்பிக்கின்றது, அதே சமயம் கெட்ட நிலமானது, பயனுள்ள எந்த ஒன்றையும் சொற்பமாகவே முளைப்பிக்கின்றது. நன்றியுடைய மக்களாக இருப்பவர்களுக்கு இவ்வெளிப்பாடுகளை நாம் இவ்விதமாக விவரிக்கின்றோம்.

*நோவா*

59. நோவாவை அவருடைய சமூகத்தாரிடம், "என் சமூகத்தாரே, **கடவுள்** – ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு எந்தத் தெய்வமும் உங்களுக்கு இல்லை. அச்சுறுத்துகின்றதொரு நாளின் தண்டனையை உங்களுக்கு நான் அஞ்சுகின்றேன்," என்று கூறியவராக நாம் அனுப்பினோம்.

60. அவருடைய சமூகத்தாரில் இருந்த தலைவர்கள் கூறினர், "மிக நெடிய வழிதவறுதலில் நீர் இருப்பதை நாங்கள் காண்கின்றோம்."

61. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, நான் வழி தவறியவனாக இல்லை; நான் பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து வந்த ஒரு தூதனாகவே இருக்கின்றேன்.

62. "என் இரட்சகருடைய தூதுச் செய்தியை நான் உங்களிடம் சேர்ப்பிக்கின்றேன், மேலும் நான் உங்களுக்கு அறிவுறுத்துகின்றேன், மேலும் நீங்கள் அறியாதவற்றைக் **கடவுள்**–யிடமிருந்து நான் அறிவேன்.

**7:54 படைப்பின் ஆறுநாட்கள் உவமானம் சார்ந்தவையாகும்; அவை அளவிடற்கரிய மிகச்சிறிய கிரகமான நம்முடைய பூமியின், ஒன்றுக்கொன்று தொடர்புடைய சிக்கலான தன்மையை நமக்குத் தெரியப்படுத்துகின்ற ஓர் அளவுகோலாகத் திகழ்கின்றது – அது "4 நாட்களில்" படைக்கப்பட்டது (பார்க்க 41:10).*

63. "நீங்கள் கருணையை அடையும் பொருட்டு, உங்களை எச்சரிப்பதற்காகவும், நன்னெறியின் பால் உங்களை வழிநடத்துவதற்காகவும், உங்களைப் போன்ற ஒரு மனிதன் மூலம், உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்கு ஒரு நினைவூட்டல் வருவதென்பது மிகவும் ஆச்சர்யமான ஒன்றாக இருக்கின்றதா ?"

64. அவர்கள் அவரை ஏற்க மறுத்தனர், அதன்விளைவாக, அவரையும் மரக்கலத்தில் அவருடன் இருந்தவர்களையும் நாம் காப்பாற்றினோம், அத்துடன் நம்முடைய வெளிப்பாடுகளை நிராகரித்தவர்களை மூழ்கடித்தோம்; அவர்கள் குருடர்களாக இருந்தனர்.

*ஹூத்*

65. ஆதுகளிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை நாம் அனுப்பினோம். அவர் கூறினார், "என் சமூகத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு தெய்வம் எதுவும் உங்களுக்கு இல்லை. இப்போதாவது நீங்கள் நன்னெறியைக் கடைப்பிடிக்க மாட்டீர்களா ?"

66. அவருடைய சமூத்தாரில் இருந்த நம்பமறுத்தவர்களான தலைவர்கள் கூறினர், "நீர் முட்டாள்தனமாக நடந்து கொண்டிருப்பதை நாங்கள் காண்கின்றோம், மேலும் நீர் ஒரு பொய்யர் என்றே நாங்கள் நினைக்கின்றோம்."

67. அவர் கூறினார்," என் சமூகத்தாரே, என்னிடம் எந்த முட்டாள்தனமும் இல்லை; நான் பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து வந்த ஒரு தூதனாகவே இருக்கின்றேன்.

68. "என்னுடைய இரட்சகரின் தூதுச் செய்திகளை நான் உங்களிடம் சேர்ப்பிக்கின்றேன், மேலும் நான் நேர்மையாக உங்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

69. "உங்களை எச்சரிப்பதற்காக, உங்களைப் போன்ற ஒரு மனிதர் மூலம், உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்கு ஒரு தூதுச் செய்தி வருவதென்பது மிகவும் ஆச்சர்யமான ஒன்றாக இருக்கின்றதா ? நோவாவின் சமூகத்தாருக்குப் பின்னர் உங்களை அவர் வாரிசுகளாக ஆக்கியதையும், உங்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியதையும் நினைவு கூர்ந்திடுங்கள். நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களை நினைவில் கொள்ளுங்கள்."

*பெற்றோர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுதல்: ஒரு மானுட சோகம்*

70. அவர்கள் கூறினர், "நாங்கள் **கடவுள்**–ஐ மட்டும் வழிபடவும், எங்களுடைய பெற்றோர்கள் வழிபட்டு வந்தவற்றைக் கைவிட்டு விடவும் செய்வதற்காகத்தான் நீர் வந்திருக்கின்றீரா ? நீர் உண்மையாளராக இருந்தால், எங்களை நீர் பயமுறுத்துகின்ற அந்த அழிவை கொண்டு வருமாறு உம்மிடம் நாங்கள் சவால் விடுகின்றோம்."

71. அவர் கூறினார், "நீங்கள் உங்களுடைய இரட்சகரிடமிருந்து கண்டனத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளாகி விட்டீர்கள். **கடவுள்**–ஆல் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாத, நீங்கள் புனைந்து கொண்ட – நீங்களும் உங்களுடைய பெற்றோர்களும் – புதுமைகளைக் காப்பாற்றுவதற்காக என்னுடன் நீங்கள் வாதிடுகின்றீர்களா ? அப்படியென்றால், காத்திருங்கள், நானும் உங்களுடன் சேர்ந்து காத்துக் கொண்டிருப்பேன்."

72. பின்னர் அவரையும் அவருடன் இருந்தவர்களையும், நம்மிடமிருந்துள்ள கருணையால் காப்பாற்றினோம், அத்துடன் நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்க மறுத்தவர்களையும் நம்பிக்கையாளர்களாக இருக்க மறுத்தவர்களையும் நாம் அழித்தொழித்தோம்.

*ஸாலிஹ்*

73. தமூதுகளிடம் அவர்களுடைய சகோதரர் ஸாலி ஹை நாம் அனுப்பினோம். அவர் கூறினார்,"என் சமூத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு தெய்வம் எதுவும் உங்களுக்கு இல்லை. உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்குச் சான்று வழங்கப்பட்டுள்ளது: உங்களுக்கு ஓர் அத்தாட்சியாகத் திகழ, இதோ **கடவுள்**–ன் ஒட்டகம் உள்ளது. **கடவுள்**–ன் நிலத்திலிருந்து அதனை உண்ண அனுமதியுங்கள், அத்துடன் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு நீங்கள் உள்ளாகி விடாதிருக்கும் பொருட்டு, எந்தத் தீங்கையும் கொண்டு அதனைத் தீண்டாதீர்கள்.

74. "ஆதுகளுக்குப் பின்னர் அவர் உங்களை வாரிசுகளாக ஆக்கியதையும், மேலும் பூமியின் மீது, அதன் பள்ளத்தாக்குகளில் மாளிகைகளைக் கட்டிக் கொள்ளுமாறு, அதன் மலைகளில் இருந்து வீடுகளைக் குடைந்து கொள்ளுமாறு, உங்களை நிலைப்படுத்தியதையும் நினைவு கூர்ந்திடுங்கள். நீங்கள் **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களை நினைவில் கொள்ள வேண்டும், அத்துடன் சீர்கெடுக்கும் விதமாக பூமியைச் சுற்றித் திரியாதீர்கள்."

*தூதுச் செய்தி: தூதுத்துவத்திற்கான சான்று*

75. அவருடைய சமூகத்தாரில் இருந்த ஆணவம் கொண்ட தலைவர்கள் நம்பிக்கை கொண்டவர்களான பொதுமக்களிடம் கூறினர், "ஸாலிஹ் அவருடைய இரட்சகரால் அனுப்பப்பட்டிருப்பவர் என்பது எப்படி உங்களுக்குத் தெரியும் ?" அவர்கள் கூறினர், "அவர் கொண்டு வந்த தூதுச் செய்திதான் எங்களை நம்பிக்கையாளர்களாக ஆக்கியது."

76. ஆணவம் கொண்டவர்கள் கூறினர், "நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதன் மீது நாங்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றோம்."

77. அதன் பின்னர், அவர்கள் அவ்வொட்டகத்தைக் கொன்று விட்டனர், அவர்களுடைய இரட்சகரின் கட்டளைக்கெதிராகக் கலகம் செய்தனர், மேலும் கூறினர், "ஸாலிஹே, மெய்யாகவே நீர் ஒரு தூதராக இருந்தால், நீர் எங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற அந்த அழிவைக் கொண்டு வாரும்."

78. அதன் விளைவாக, இறந்தவர்களாக அவர்களை அவர்களுடைய வீடுகளில் விட்டுவிட்டு, அதிர்வானது அவர்களை அழித்தொழித்தது.

79. அவர், "என் சமூகத்தாரே, என் இரட்சரின் தூதுச் செய்தியை உங்களிடம் நான் சேர்ப்பித்து விட்டேன், மேலும் உங்களுக்கு அறிவுறுத்தினேன், ஆனால் அறிவுரை கூறுபவர்கள் எவரையும் நீங்கள் விரும்புவதில்லை," என்று கூறியவராக அவர்களிடமிருந்து திரும்பிக் கொண்டார்.

*லோத்:*
*ஓரினப்புணர்ச்சி கண்டனம் செய்யப்படுகின்றது*

80. லோத் தன் சமூகத்தாரிடம் கூறினார், "எத்தகையதொரு அருவருக்கத்தக்கதை நீங்கள் புரிகின்றீர்கள்; இவ்வுலகில் எவரொருவரும் முன்னர் இதனைச் செய்ததில்லை!

81. "பெண்களை விடுத்து ஆண்களுடன் நீங்கள் பாலுறவு கொள்கின்றீர்கள். உண்மையில், நீங்கள் வரம்பு மீறுகின்ற ஒரு கூட்டத்தாராகவே இருக்கின்றீர்கள்."

82. அவருடைய சமூகத்தார், "உங்களுடைய நகரத்தில் இருந்து அவர்களை வெளியேற்றி விடுங்கள், அவர்கள் தூய்மையாக இருக்க விரும்புகின்ற மக்களாக உள்ளனர்," என்று கூறியவாறு மறுமொழியளித்தனர்.

83. அதன் விளைவாக, அவரையும் அவருடைய குடும்பத்தையும் நாம் காப்பாற்றினோம், ஆனால் அவருடைய மனைவியை அல்ல; அவள் அழிக்கப்பட்டவர்களுடன் இருந்தாள்.

84. ஒருவகையான பொழிவைக் கொண்டு அவர்கள் மீது நாம் பொழிந்தோம்; குற்றவாளிகளுக்கான பின்விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக.

*ஷுஐப்: ஏமாற்றுதல்,நேர்மையற்றதனம்*
*கண்டனம் செய்யப்படுகின்றது*

85. மித்யனுக்கு அவர்களுடைய சகோதரர் ஷுஐபை நாம் அனுப்பினோம், அவர் கூறினார், "என் சமூகத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு தெய்வம் எதுவும் உங்களுக்கு இல்லை. உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்குச் சான்று வந்துள்ளது. நீங்கள் வணிகம் செய்யும் போது முழு எடையையும், முழு அளவையையும் நீங்கள் கொடுத்திட வேண்டும். மக்களிடமிருந்து அவர்களுடைய உரிமைகளை ஏய்த்து விடாதீர்கள். பூமியை, அது சீரானதாக ஆக்கப்பட்டு விட்ட பின்னர் சீர் கெடுக்காதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மேலானதாகும்.

86. "**கடவுள்**–ன் பாதையிலிருந்து நம்பிக்கை கொண்டவர்களைத் துரத்த நாடியவர்களாக, ஒவ்வொரு பாதையையும் அடைத்துக் கொள்வதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள், மேலும் அதனைக் கோணலானதாக ஆக்காதீர்கள். நீங்கள் சிலராக இருந்தீர்கள், பின்பு அவர் உங்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கினார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தீயவர்களுக்கான பின் விளைவுகளை நினைவு கூர்ந்திடுங்கள்.

87. "இப்போது, எதனைக் கொண்டு நான் அனுப்பப்பட்டேனோ அதில் உங்களில் சிலர் நம்பிக்கை கொண்டு, மேலும் சிலர் நம்பமறுத்து விட்டதால், நமக்கிடையில் **கடவுள்** தன் தீர்ப்பை வெளியிடும் வரை காத்திருங்கள்; அவர்தான் மிகச் சிறந்த நீதிபதியாக இருக்கின்றார்."

88. அவருடைய சமூகத்தாரில் ஆணவம் கொண்ட தலைவர்கள் கூறினர், "ஷுஐபே, நீர் எங்களுடைய மார்க்கத்திற்குத் திரும்பி வந்து விட்டாலேயன்றி, எங்களுடைய நகரத்தில் இருந்து உம்மையும், உம்முடன் நம்பிக்கை கொண்டவர்களையும் சேர்த்து நாங்கள் வெளியேற்றி விடுவோம்." அவர் கூறினார், "நீங்கள் எங்களை கட்டாயப்படுத்தப் போகின்றீர்களா?

89. "அதிலிருந்து **கடவுள்** எங்களைக் காப்பாற்றிவிட்ட பின்னர் உங்களுடைய மார்க்கத்திற்கு நாங்கள் மீண்டும் திரும்பி வந்து விட்டால் நாங்கள் **கடவுள்**–க்கெதிராக நிந்தனை செய்தவர்களாகி விடுவோம். எங்கள் இரட்சகரான **கடவுள்**–ன் நாட்டத்திற்கு எதிராக எவ்வாறு நாங்கள் அதன் பால் மீண்டும் திரும்பி வர இயலும்? எங்களுடைய இரட்சகரின் அறிவு எல்லாப் பொருட்களையும் சூழ்ந்துள்ளது. எங்களுடைய பொறுப்பை நாங்கள் **கடவுள்** மீது வைத்து விட்டோம். எங்கள் இரட்சகரே, எங்களுடைய சமூகத்தாரின் மீது தீர்மானமானதொரு வெற்றியை எங்களுக்கு அளிப்பீராக. நீரே மிகச் சிறந்த ஆதரவாளராக இருக்கின்றீர்."

90. அவருடைய சமூகத்தாரில் நம்பமறுத்துக் கொண்டிருந்த தலைவர்கள் கூறினர், " நீங்கள் ஷுஐபைப் பின்பற்றினால், நீங்கள் நஷ்டவாளிகளாக ஆகி விடுவீர்கள்."

91. இறந்தவர்களாக அவர்களை அவர்களுடைய வீடுகளில் விட்டுவிட்டு, அதிர்வானது அவர்களை அழித்தொழித்தது.

92. ஷுஐபை ஏற்கமறுத்தவர்கள், அவர்கள் ஒரு போதும் இருந்திராதவர்களைப் போல மறைந்து போயினர். ஷுஐபை ஏற்கமறுத்தவர்கள்தான் நஷ்டவாளிகளாக இருந்தனர்.

93. அவர், "என் சமூகத்தாரே, என் இரட்சகரின் தூதுச் செய்திகளை உங்களிடம் நான் சேர்ப்பித்து விட்டேன், மேலும் உங்களுக்கு நான் அறிவுரையளித்து விட்டேன். நம்பமறுக்கின்ற மக்களுக்காக நான் எப்படிக் கவலைப்பட இயலும்,"என்று கூறியவராக அவர்களிடமிருந்து திரும்பிக் கொண்டார்.

*மாற்றுரூபத்தில் ஆசீர்வாதங்கள்*

94. எந்த சமூகத்திற்கும் ஒரு நபியை நாம் அனுப்பும் பொழுதெல்லாம், துன்பம் மற்றும் கஷ்டத்தைக் கொண்டு அதன் மக்களை வருத்தினோம். அவர்கள் இறைஞ்சக் கூடும் என்பதற்காக.

95. பின்னர் நாம் அந்த கஷ்டத்திற்குப் பதிலாக சாந்தியையும் வளத்தையும் மாற்றியமைத்தோம். ஆனால் அந்தோ, அவர்கள் கவனமற்றவர்களாக மாறியதுடன் கூறினர், "வளத்திற்கு முந்திய அந்தக் கஷ்டத்தை அனுபவித்தவர்கள் எங்கள் பெற்றோர்கள்தான்." அதன் விளைவாக, அவர்கள் சற்றும் எதிர்பாராத போது திடீரென அவர்களை நாம் தண்டித்தோம்.

*அதிகமான மக்கள் தவறான தேர்வைச் செய்கின்றனர்.*

96. அந்தச் சமூகங்களின் மக்கள் நம்பிக்கை கொண்டு நன்னெறியுடையவர்களாக மாறியிருந்தால், வானம் மற்றும் பூமியிலிருந்து ஆசீர்வாதங்களை அவர்கள் மீது நாம் பொழிந்திருப்போம். நம்பமறுப்பதென அவர்கள் முடிவெடுத்து விட்டதனால், அவர்கள் சம்பாதித் தவற்றிற்காக அவர்களை நாம் தண்டித்தோம்.

97. இன்றைய சமூகங்களின் மக்கள் இரவில் அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கையில் நம்முடைய தண்டனை அவர்களிடம் வராதென்று உத்தரவாதம் கொண்டிருக்கின்றனரா ?

98. இன்றைய சமூகங்களின் மக்கள் பகற்பொழுதில் அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது நம்முடைய தண்டனை அவர்களிடம் வராது என்று உத்தரவாதம் கொண்டிருக்கின்றனரா ?

99. **கடவுள்**–ன் திட்டங்களை அவர்கள் சாதாரணமாக எடுத்துக் கொண்டனரா ? நஷ்டவாளிகளைத் தவிர எவரும் **கடவுள்**–ன் திட்டங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

100. முந்திய தலைமுறைகளுக்குப் பின்னர் பூமிக்கு வாரிசானவர்களுக்கு, நாம் நாடினால், அவர்களுடைய பாவங்களுக்காக அவர்களைத் தண்டித்து விடவும், மேலும் அவர்கள் செவிடர்களாக மாறி விடும் வண்ணம், அவர்களுடைய இதயங்களில் முத்திரையிட்டு விடவும் இயலும் என்று எப்பொழுதாவது தோன்றுகின்றதா ?

101. அந்தச் சமுதாயங்களின் சரித்திரத்தை நாம் உமக்கு விவரித்துரைக்கின்றோம்: அவர்களுடைய தூதர்கள் தெளிவான சான்றுகளுடன் அவர்களிடம் சென்றனர், ஆனால் அவர்கள் ஏற்கெனவே நிராகரித்து விட்ட வற்றின் மீது நம்பிக்கை கொள்பவர்களாக அவர்கள் இல்லை. **கடவுள்** இவ்விதமாக நம்பமறுப்பவர்களின் இதயங்களை முத்திரையிட்டு விடுகின்றார்.

102. அவர்களில் அதிகமானோர் தங்களுடைய உடன்படிக்கைகளை அலட்சியம் செய்வதை நாம் கண்டோம்; அவர்களில் அதிகமானோரை தீயவர்களாக நாம் கண்டோம்.*

*மோஸஸ்*

103. *(அந்தத் தூதர்களுக்கு)* பின்னர், ஃபேரோ மற்றும் அவனுடைய சமூகத்தாரிடம் நம்முடைய அத்தாட்சிகளுடன், மோஸஸை நாம் அனுப்பினோம், ஆனால் அவர்கள் வரம்புமீறினர். தீயவர்களுக்கான பின் விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக.

104. மோஸஸ் கூறினார், "ஃபேரோவே, பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து வந்துள்ள ஒரு தூதனாக நான் இருக்கின்றேன்.

105. "**கடவுள்**–ஐப்பற்றி சத்தியத்தைத் தவிர எதனையும் நான் கூறக் கூடாது என்பது என் மீது கடமையாக உள்ளது. உங்களுடைய இரட்சகரிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நான் உங்களிடம் வந்துள்ளேன்; இஸ்ரேலின் சந்ததியினரைச் செல்ல விட்டு விடு."

106. அவன் கூறினான், "நீர் ஓர் அத்தாட்சியை வைத்திருப்பீராயின், நீர் உண்மையாளராக இருந்தால், அப்போது அதனைக் கொண்டு வாரும்."

107. அவர் தன்னுடைய கைத்தடியைக் கீழே எறிந்தார், உடன் அது பிரம்மாண்டமானதொரு நாகமாக மாறியது.

108. அவர் தன்னுடைய கரத்தினை வெளியே எடுத்தார், உடன் அது பார்ப்பவர்களுக்கு வெண்மையாக இருந்தது.

109. ஃபேரோவின் சமூகத்தாரில் இருந்த தலைவர்கள் கூறினர், "இவர் ஒரு திறமையான மந்திரவாதி என்பதை விட அதிகம் எதுவுமில்லை.

110. "உங்களுடைய நாட்டிலிருந்து உங்களை வெளியேற்றிடவே அவர் விரும்புகின்றார்; நீங்கள் பரிந்துரைப்பது என்ன ?"

111. அவர்கள் கூறினர், "அவருக்கும் அவருடைய சகோதரருக்கும் அவகாசமளித்து விட்டு, பின் ஒவ்வொரு நகரத்திற்கும் அழைப்பாளர்களை அனுப்புவீராக.

**7:102 இந்த வாழ்வு நம்மை நாம் மீட்டுக் கொள்வதற்குக் கடைசி வாய்ப்பாகும், ஆயினும் அதிகமான மக்கள் பிடிவாதமான கலகக்காரர்களாகவும் பாவிகளாகவும் இருக்கின்றனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது (பார்க்க அறிமுகவுரை).*

112. "அனுபவமிக்க மந்திரவாதிகள் ஒவ்வொருவரையும் அவர்கள் அழைத்து வரட்டும்."

113. மந்திரவாதிகள் ஃபேரோவிடம் வந்து கூறினர், "நாங்கள் வெற்றியாளர்களானால், எங்களுக்குக் கூலி கொடுக்கப்படும் அல்லவா ?"

114. அவன் கூறினான், "ஆம் மெய்யாக; நீங்கள் எனக்கு நெருக்கமானவர்களாகவும் கூட ஆகி விடுவீர்கள்."

115. அவர்கள் கூறினர், "மோஸஸே, ஒன்று நீர் எறியும், அல்லது நாங்கள் எறிகின்றோம்."

116. அவர் கூறினார், " நீங்கள் எறியுங்கள். "அவர்கள் எறிந்த போது, மக்களுடைய கண்களை அவர்கள் திறமையுடன் ஏமாற்றினர், அவர்களைப் பயமுறுத்தினர், மேலும் மகத்தானதொரு மாயாஜாலத்தைத் தோற்றுவித்தனர்.

117. பின்னர் நாம் மோஸஸுக்கு உள்ளுணர்வளித்தோம்: "உம்முடைய கைத்தடியைக் கீழே எறிவீராக, "உடனே அது அவர்கள் உருவாக்கிய அனைத்தையும் விழுங்கி விட்டது.

*சத்தியமானது விற்பன்னர்களால் அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றது*

118. இவ்விதமாக, சத்தியமானது மிகைத்தது, அத்துடன் அவர்கள் செய்தவை பயனற்றவையாக்கப்பட்டு விட்டன.

119. அங்கேயே அக்கணமே அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்; அவர்கள் இழிவுபடுத்தப்பட்டனர்.

120. மந்திரவாதிகள் சிரம்பணிந்து வீழ்ந்தனர்.

121. அவர்கள் கூறினர், "பிரபஞ்சத்தின் இரட்சகரின் மீது நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம்.

122. "மோஸஸ் மற்றும் ஆரோனின் இரட்சகர்."

123. ஃபேரோ கூறினான், "என்னுடைய உத்தரவின்றி நீங்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டு விட்டீர்களா ? அதன் மக்களை வெளியேற்றி அழைத்துச் செல்வதற்காக, மாநகரத்தில் நீங்கள் தீட்டிய ஒரு சதித்திட்டமாகத்தான் இது இருக்க வேண்டும். நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

124. "நான் உங்களை மாறுகால் மாறுகை வாங்கி, பின்னர் உங்கள் அனைவரையும் நான் சிலுவையிலறைந்து விடுவேன்."

125. அவர்கள் கூறினர், "அப்படியென்றால் எங்கள் இரட்சரிடமே நாங்கள் திரும்பிச் செல்வோம்."

126. எங்களுடைய இரட்சகரின் சான்றுகளான அவை எங்களிடம் வந்தபோது அதில் நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என்பதற்காக மட்டுமே நீ எங்களை வன்கொடுமை செய்கின்றாய். "எங்கள் இரட்சகரே, எங்களுக்கு உறுதிப்பாட்டினை அளிப்பீராக, மேலும் எங்களைச் சரணடைந்தவர்களாக மரணிக்க வைப்பீராக."

127. ஃபேரோவின் சமூகத்தாரில் இருந்த தலைவர்கள் கூறினர், "மோஸஸ் மற்றும் அவருடைய சமூகத்தார் பூமியைச் சீர்கெடுக்கவும், உம்மையும் உம்முடைய தெய்வங்களையும் கைவிட்டு விடவும், நீர் அனுமதிப்பீரா ?" அவன் கூறினான், "நாம் அவர்களுடைய மகன்களைக் கொன்று விட்டு, அவர்களுடைய மகள்களை விட்டு விடுவோம். அவர்களை விட மிகவும் அதிகமான வலிமை மிக்கவர்களாக நாம் இருக்கின்றோம்."

128. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறினார், "**கடவுள்**—ன் உதவியைக் கோருங்கள், அத்துடன் உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து இருங்கள். பூமியானது **கடவுள்**—க்கு உரியது, எனவே தன்னுடைய ஊழியர்களில் இருந்து தான் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் அவர் அதனை அளிக்கின்றார். இறுதி வெற்றியானது நன்னெறியாளர்களுக்கே உரியதாகும்."

129. அவர்கள் கூறினர், "நீர் எங்களிடம் வருவதற்கு முன்னரும் நாங்கள் கொடுமைப்படுத்தப்பட்டவர்களாகவே இருந்தோம், நீர் எங்களிடம் வந்த பின்னரும் கூட." அவர் கூறினார், "உங்களுடைய இரட்சகர் உங்களுடைய விரோதியை அழித்தொழித்து விட்டு பூமியின் மீது உங்களை ஸ்திரப்படுத்துவார், பின்னர் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்று அவர் பார்ப்பார்."

*பீடைகள்*

130. பின்னர் நாம் ஃபேரோவின் சமூகத்தாரை வறட்சி, மற்றும் பற்றாக்குறை விளைச்சல் கொண்டு வருத்தினோம், அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடும் என்பதற்காக.

131. நல்ல சகுனங்கள் அவர்களுடைய வழியில் வந்த பொழுதெல்லாம், அவர்கள் கூறினர், "நாங்கள் இதற்குத் தகுதி பெற்றவர்களாகவே இருக்கின்றோம்," ஆனால் ஒரு கஷ்டம் அவர்களை வருத்திய பொழுதெல்லாம் அவர்கள் மோஸஸையும் அவருடன் இருந்தவர்களையும் பழித்தனர். உண்மையில், அவர்களுடைய சகுனங்கள் **கடவுள்**—ஆல் மட்டுமே தீர்மானிக்கப்படுகின்றன, ஆனால் அவர்களில் அதிகமானோர் அறியமாட்டார்கள்.

132. அவர்கள் கூறினர், "உம்முடைய மாயாஜாலத்தைக் கொண்டு எங்களை ஏமாற்றுவதற்காக, எந்த வகையான அத்தாட்சியை நீர் எங்களுக்குக் காட்டுகின்றீர் என்பது பொருட்டல்ல, நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம்."

*எச்சரிக்கைகள் கவனிக்கப் படாமலேயே போகின்றன*

133. அதன் விளைவாக, வெள்ளம், வெட்டுக்கிளிகள், பேன், தவளைகள், மற்றும் இரத்தம் ஆகிய—ஆழ்ந்த அத்தாட்சிகளை நாம் அவர்கள் மீது அனுப்பினோம். ஆனால் அவர்களுடைய ஆணவத்தில் அவர்கள் நிலைத்திருந்தனர். அவர்கள் பாவிகளான மக்களாக இருந்தனர்.

134. அவர்களை ஒரு பீடை வருத்திய போதெல்லாம், அவர்கள் கூறினர், "மோஸஸே, உம்முடைய இரட்சகரை இறைஞ்சுவீராக – நீர் அவருக்கு நெருக்கமானவராக இருக்கின்றீர். இந்தப் பீடையை நீர் விடுவித்து விட்டால், நாங்கள் உம்முடன் நம்பிக்கை கொள்வதுடன் இஸ்ரேலின் சந்ததியினரையும் உம்முடன் அனுப்பி விடுவோம்.

135. இருப்பினும், எந்த ஒரு கால அளவுக்கு அந்தப் பீடையை நாம் விடுவித்தாலும், அவர்கள் தங்களுடைய வாக்குறுதியை மீறினர்.

*தவிர்த்து விட முடியாத தண்டனை*

136. அதன் விளைவாக, அவர்களுடைய செயல்களுக்கு நாம் பழிதீர்த்தோம், மேலும் அவர்களை கடலினுள் மூழ்கடித்தோம். அது ஏனெனில் அவர்கள் நம்முடைய அத்தாட்சிகளை ஏற்கமறுத்தனர், மேலும் அதனைப்பற்றி முற்றிலும் கவனமற்றவர்களாக இருந்தனர்.

137. அடக்குமுறை செய்யப்பட்ட மக்களை கிழக்கிலும் மேற்கிலும், பூமிக்கு வாரிசாகிக் கொள்ள நாம் அனுமதித்தோம், மேலும் அதனை நாம் ஆசீர்வதித்தோம். அவர்களுடைய உறுதிப்பாட்டிற்கு அவர்களுக்கு வெகுமதியளிப்பதற்காக, இஸ்ரேலின் சந்ததியினருக்குரிய உம்முடைய இரட்சகரின் ஆசீர்வதிக்கப்பட்ட கட்டளைகள் இவ்விதமாகப் பூர்த்தியாக்கப்பட்டன, அத்துடன் ஃபேரோ மற்றும் அவனுடைய சமூகத்தாரின் காரியங்களையும், அவர்கள் அறுவடை செய்த ஒவ்வொன்றையும் நாம் அழித்தொழித்தோம்.

*அத்தனை அற்புதங்களுக்குப் பின்னரும்*

138. இஸ்ரேலின் சந்ததியினரை கடலின் குறுக்கே நாம் கரைசேர்த்தோம். சிலைகளை வழிபட்டுக் கொண்டிருந்த மக்களை அவர்கள் கடந்து சென்ற போது, அவர்கள் கூறினர், "மோஸஸே, அவர்கள் வைத்திருக்கின்ற தெய்வங்களைப் போல, எங்களுக்கும் ஒரு தெய்வத்தை ஆக்குவீராக." அவர் கூறினார், "மெய்யாகவே, நீங்கள் அறியாத மக்களாகவே இருக்கின்றீர்கள்."

139. "இந்த மக்கள் ஓர் இறைநிந்தனையைப் புரிந்து கொண்டிருக்கின்றனர், ஆதலால் அவர்கள் செய்து கொண்டிருப்பது அவர்களுக்குப் பெரு நாசமுண்டாக்குவதாகும்.

140. "இந்த உலகில் வேறு எவரொருவரை விடவும் உங்களை அதிகமாக அவர் ஆசிர்வதித்திருக்கும் போது, உங்களுடைய தெய்வமாக இருப்பதற்காக **கடவுள்**–ஐ விடுத்து மற்றொன்றை நான் தேடிட வேண்டுமா ?"

*இஸ்ரேலின் சந்ததியினருக்கு*
*ஒரு நினைவூட்டல்*

141. உங்களுடைய மகன்களைக் கொன்று விட்டு, உங்களுடைய மகள்களை விட்டு விட்டவாறு, உங்கள் மீது மோசமான வன்கொடுமையைச் சுமத்தியவர்களான ஃபேரோவின் சமூத்தாரிடமிருந்து, உங்களை நாம் விடுதலை செய்ததை நினைவு கூர்ந்திடுங்கள். அது உங்களுடைய இரட்சகரிடமிருந்து உங்களுக்கு ஒரு கடும் சோதனையாக இருந்தது.

*கடவுளின் நேரடி இருப்பை*
*நம்முடைய உலகம் தாங்க இயலாது*

142. மோஸஸை முப்பது* இரவுகளுக்காக நாம் வரவழைத்தோம், அத்துடன் பத்தைக்* கூட்டி அவற்றை முழுமைப்படுத்தினோம். இவ்விதமாக, அவருடைய இரட்சகருடனான அச்சந்திப்பு நாற்பது* இரவுகள் நீடித்தது. மோஸஸ் தன் சகோதரர் ஆரோனிடம் கூறினார், "என் சமூகத்தாருடன் இங்கேயே தங்கியிருப்பீராக, நன்னெறியைப் பராமரிப்பீராக. மேலும் சீர் கெடுப்போரின் வழிகளைப் பின்பற்றாதீர்."

143. நம்மால் நியமிக்கப்பட்ட நேரத்தில் மோஸஸ் வந்த போது, அவருடைய இரட்சகர் அவருடன் பேசினார். அவர் கூறினார், "என் இரட்சகரே உம்மை நோக்கவும் பார்க்கவும் என்னை அனுமதிப்பீராக." அவர் கூறினார், "நீர் என்னைப் பார்க்க இயலாது. அந்த மலையை நோக்குவீராக; அதனுடைய இடத்தில் அது நிலைத்திருந்தால், அப்போது நீர் என்னைப் பார்க்க இயலும்." பின்னர், அவருடைய இரட்சகர் அம்மலைக்குத் தன்னை வெளிப்படுத்தினார், அது உடனே அதனை நொறுங்கி விடச் செய்தது. மோஸஸ் நினைவிழந்து வீழ்ந்தார். அவர் நினைவுக்கு வந்தபோது, அவர் கூறினார்," நீர் துதிப்பிற்குரியவர். நான் உம்மிடம் பாவத்திற்காக வருந்துகின்றேன், அத்துடன் மிகவும் உறுதியடைந்த நம்பிக்கையாளனாக நான் இருக்கின்றேன்."

144. அவர் கூறினார், "மோஸஸே, என்னுடைய தூதுச் செய்தியைக் கொண்டும், மேலும் உம்முடன் பேசியதன் மூலமும் அனைத்து மக்களில் இருந்தும், உம்மை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். எனவே, நான் உமக்குக் கொடுத்தவற்றை எடுத்துக் கொள்வதோடு நன்றியுடையவராகவும் இருப்பீராக."

145. அவருக்காகப் பலகைகளின் மீது அனைத்து வகைகளிலுமான அறிவூட்டல்களையும் ஒவ்வொன்றின் விபரங்களையும் நாம் எழுதினோம்: "இந்தப் போதனைகளை நீர் பலமாக உயர்த்திப் பிடிக்க வேண்டும், மேலும் அவற்றை உயர்த்திப் பிடிக்கும்படி உம்முடைய சமூகத்தாரையும் தூண்டுவீராக – இவையே மிகச் சிறந்த போதனைகளாகும். தீயவர்களின் தலைவிதியை உமக்கு நான் சுட்டிக் காட்டுவேன்."

**7:142 இந்த எண்கள் கூறப்படுகின்ற விதமானது மிகவும் பொருள் பொதிந்ததாகும். பின் இணைப்பு 1ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா எண்களும் கூட்டப்பட்டால் வருவது 162146, 19 x 8534.*

*தெய்வீகக் குறுக்கீடு நம்பமறுப்பவர்களை இருட்டில் வைத்திருக்கின்றது*

146. நியாயம் இல்லாமல், பூமியின் மீது ஆணவம் கொண்டவர்களாக இருப்பவர்களை, என்னுடைய வெளிப்பாடுகளில் இருந்து நான் திசை திருப்பி விடுவேன். அதன் விளைவாக, ஒவ்வொரு வகையான சான்றினை அவர்கள் காணும் போதிலும் அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். மேலும் வழி காட்டலுடைய பாதையை அவர்கள் காணும் பொழுது அதனைத் தங்களுடைய பாதையாக அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஆனால் அவர்கள் வழிதவறுதலுடைய பாதையைக் காணும் பொழுது அதனைத் தங்களுடைய பாதையாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். நம்முடைய சான்றுகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தது, மற்றும் அது குறித்து முற்றிலும் அலட்சியமாக இருந்ததன் பின் விளைவு இதுவேயாகும்.

147. நம்முடைய வெளிப்பாடுகளையும் மறுவுலகின் சந்திப்பையும் எவர்கள் நிராகரிக்கின்றனரோ, அவர்களுடைய காரியங்கள் பயனற்றவையாக்கப்பட்டு விட்டன. அவர்கள் செய்தவற்றுக்காக மட்டும்தானே அவர்கள் கைம்மாறு செய்யப்படுகின்றனர்?

*தங்கத்தாலான கன்றுக் குட்டி*

148. அவர் இல்லாத போது, மோஸஸின் சமூகத்தார் தங்களுடைய ஆபரணங்களில் இருந்து, ஒரு கன்றுக் குட்டியின் சப்தத்தோடு* பூர்த்தியான, ஒரு கன்றுக் குட்டியின் சிலையை வடித்தனர். அது அவர்களுடன் பேசவோ அல்லது எந்தப்பாதையிலும் அவர்களை வழிநடத்தவோ இயலாதென்பதை அவர்கள் காணவில்லையா? அவர்கள் அதனை வழிபட்டனர், மேலும் இவ்விதமாகத் தீயவர்களாக மாறி விட்டனர்.

149. இறுதியில், அவர்களுடைய செயலுக்காக அவர்கள் வருந்தியதுடன், அவர்கள் வழிதவறிச் சென்று விட்டதை உணர்ந்து கொண்ட போது, அவர்கள் கூறினர், "நம்முடைய இரட்சகர் அவருடைய கருணையைக் கொண்டு நம்மை மீட்டு எடுத்து, நம்மை மன்னித்தாலேயன்றி, நாம் நஷ்டவாளிகள் ஆகி விடுவோம்."

150. கோபத்துடனும் அதிருப்தியுடனும், தன் சமூகத்தாரிடம் மோஸஸ் திரும்பி வந்த பொழுது, அவர் கூறினார், "நான் இல்லாத நிலையில் எத்தகையதொரு பயங்கரமான விஷயத்தை நீங்கள் செய்து வீட்டீர்கள்! உங்களுடைய இரட்சகரின் கட்டளைகளுக்காக உங்களால் காத்திருக்க இயலவில்லையா?" அவர் பலகைகளைக் கீழே எறிந்தார், மேலும் அவருடைய சகோதரரின் தலையைப் பிடித்துக் கொண்டு, அவரைத் தன் பால் இழுத்தார். *(ஆரோன்)* கூறினார், "என் தாயின் மகனே, இம்மக்கள் என்னுடைய பலஹீனத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டனர், மேலும் கிட்டத்தட்ட என்னைக் கொன்று விட்டனர். என்னுடைய விரோதிகளைக் களிப்படையவிட்டு விடாதீர், மேலும் வரம்புமீறிக் கொண்டிருக்கின்ற மக்களுடன் என்னை எண்ணிடாதீர்."

151. *(மோஸஸ்)* கூறினார், "என் இரட்சகரே, என்னையும் என்னுடைய சகோதரரையும் மன்னித்திடுவீராக, மேலும் உம்முடைய கருணைக்குள் எங்களை அனுமதிப்பீராக. கருணையாளர்கள் அனைவரிலும் நீரே மிக்க கருணையாளராவீர்."

152. நிச்சயமாக, கன்றுக் குட்டியை வழிபட்டவர்கள் அவர்களுடைய இரட்சகரிடமிருந்து கடுங்கோபத்திற்கும், இந்த வாழ்வில் இழிவுக்கும் உள்ளாகி விட்டனர். புதுமைகளைப் புகுத்துவோருக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுக்கின்றோம்.

153. பாவங்களைப் புரிந்து விட்டவுடன், அதன்பின்னர் பாவத்திற்காக வருந்தி, அத்துடன் நம்பிக்கை கெண்டு விட்டவர்களைப் பொறுத்த வரை, உம்முடைய இரட்சகர் – இதன் பின்னர் – மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

154. மோஸஸின் கோபம் தணிந்த போது, தங்களுடைய இரட்சகரிடம் பக்தியுடையவர்களுக்கு வழிகாட்டலையும் கருணையையும் கொண்டிருந்த அந்தப் பலகைகளை அவர் பொறுக்கி எடுத்துக் கொண்டார்.

155. மோஸஸ் பின்னர் தன்னுடைய சமூகத்தாரில் இருந்து எழுபது ஆண்களை, நியமிக்கப்பட்ட நம்முடைய சந்திப்பிற்கு வருவதற்காகத் தேர்ந்தெடுத்தார். அதிர்வானது அவர்களைக் குலுக்கிய போது, அவர் கூறினார், "என் இரட்சகரே, நீர் இவ்வாறு நாடியிருந்தால், கடந்த காலத்திலேயே அவர்களை, என்னுடன் சேர்த்து, அழித்தொழித்திருக்க உம்மால் இயலும். எங்களுக்கிடையில் மூடர்களாக இருப்பவர்களின் செய்கைகளுக்காக எங்களை நீர் அழித்தொழித்திடுவீரா? இது எங்களுக்காக நீர் நிர்ணயித்துள்ள சோதனையாகவே இருக்க வேண்டும். இதனைக் கொண்டு, நீர் நாடுகின்ற எவரையும் நீர் கண்டனம் செய்து விடுகின்றீர், மேலும் நீர் நாடுகின்ற எவரையும் வழி நடத்துகின்றீர். நீரே எங்களுடைய இரட்சகரும் அதிபதியும் ஆவீர், எனவே எங்களை மன்னித்திடுவீராக, உம்முடைய கருணையை எங்கள் மேல் பொழிவீராக; மன்னிப்போரில் நீரே மிகச் சிறந்தவர்.

**7:148 தங்கத்தாலான அக்கன்று ஒரு கன்றின் சப்தத்தை அடைந்தது எவ்வாறு என்பது 20:96க்குரிய அடிக்குறிப்பில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.*

*கடவுளின் கருணையை அடைவதற்குரிய அத்தியாவசியங்கள்: ஜகாத்தின் முக்கியத்துவம்*

156. "மேலும் இந்த உலகிலும் அத்துடன் மறுவுலகத்திலும் எங்களுக்கு நன்மையை விதித்திடுவீராக. நாங்கள் உம்மிடம் வருந்துகின்றோம்." அவர் கூறினார், "நான் நாடுகின்ற எவர் மீதும் என்னுடைய தண்டனை ஏற்படும். ஆனால் என்னுடைய கருணை அனைத்துப் பொருட்களையும் சூழ்ந்து கொண்டுள்ளது. இருப்பினும், அதனை நான் இவர்களுக்கெனக் குறிப்பிட்டு வைப்பேன், *(1)* நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்கள், *(2)* கடமையான *(ஜகாத்)** தர்மத்தைக் கொடுப்பவர்கள், *(3)* நம்முடைய வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொள்பவர்கள், மேலும்

157. *(4)* தங்களுடைய தோராவிலும் சுவிசேஷத்திலும்* எழுதப்பட்டிருப்பதை அவர்கள் காண்கின்றவரான, வேதம் வழங்கப்படாத சமுதாயத்தின் இந்த நபி *(முஹம்மத் எனும்)* இத் தூதரைப் பின்பற்றுகின்றவர்கள். அவர்களை நன்னெறியாளர்களாக இருக்கும்படி அவர் தூண்டுகின்றார், தீமைகளில் இருந்து அவர்களைத் தடுக்கின்றார், எல்லா நல்ல உணவுகளையும் அவர்களுக்கு அனுமதிக்கின்றார், அத்துடன் கெட்டதாக இருப்பதைத் தடை செய்கின்றார், மேலும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளையும் தளைகளையும் இறக்கி வைக்கின்றார். அவர் மீது நம்பிக்கை கொண்டு, அவரை மதித்து, அவருக்கு ஆதரவளித்து மேலும் அவருடன் வந்த ஒளியினைப் பின்பற்றுகின்றவர்களே வெற்றி பெற்றவர்களாக இருக்கின்றனர்."

158. கூறுவீராக, "மக்களே, நான் உங்கள் அனைவருக்குமான **கடவுள்**–ன் தூதனாக இருக்கின்றேன். வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் அவருக்கே உரியது. அவரைத் தவிர தெய்வம் இல்லை. அவர் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகின்றார்." எனவே, நீங்கள் **கடவுள்** மற்றும் வேதம் வழங்கப்படாத சமுதாயத்தைச் சேர்ந்த இந்த நபியாகிய அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும், அவர் **கடவுள்** மற்றும் அவருடைய வார்த்தைகள் மீது நம்பிக்கை கொள்கின்றார். நீங்கள் வழிநடத்தப்படும் பொருட்டு, அவரைப் பின்பற்றுங்கள்.

*வழிநடத்தப்பட்ட யூதர்கள்*

159. மோஸஸைப் பின்பற்றுபவர்களில் சத்தியத்திற்கு ஏற்ப வழிநடத்தக் கூடியவர்களும் உள்ளனர், மேலும் அந்தச் சத்தியம் அவர்களை நன்னெறியாளர்களாக ஆக்குகின்றது.

*ஸினாயில் அற்புதங்கள்*

160. நாம் அவர்களைப் பன்னிரண்டு குலச் சமுதாயங்களாகப் பிரித்தோம், மேலும் அவருடைய சமூகத்தார் அவரிடம் தண்ணீர் கேட்ட போது, மோஸஸுக்கு நாம் உள்ளுணர்வளித்தோம்: "உம்முடைய கைத்தடியால் பாறையை அடிப்பீராக," உடன் அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுகள் பொங்கியெழுந்தன. இவ்விதமாக, ஒவ்வொரு சமுதாயமும் அதனுடைய தண்ணீரை அறிந்து கொண்டது, மேலும் மேகங்களைக் கொண்டு அவர்களுக்கு நாம் நிழல் தந்தோம், மேலும் மன்னா மற்றும் காடைகளை அவர்களுக்கு இறக்கி அனுப்பினோம்: "உங்களுக்கு நாம் வழங்கிய நல்ல பொருட்களில் இருந்து உண்ணுங்கள்." அவர்கள் தீங்கிழைத்தது நமக்கு அல்ல; அவர்கள் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்குத் தான் தீங்கிழைத்துக் கொண்டனர்.

*அற்புதங்களுக்குப் பின்னரும் கலகம்*

161. "வசிப்பதற்காக இந்நகரத்தினுள் செல்லுங்கள், மேலும் நீங்கள் விரும்பியவாறு அதிலிருந்து உண்ணுங்கள், மக்களை இணக்கத்துடன் நடத்திடுங்கள், அத்துடன் எளிமையாக அதன் வாசலுக்குள் நுழையுங்கள். அப்போது நாம் உங்களுடைய வரம்புமீறல்களை மன்னிப்போம். நன்னெறியாளர்களுக்குரிய வெகுமதியை நாம் பெருக்குவோம்," என்று அவர்களிடம் கூறப்பட்டதை நினைவு கூர்ந்திடுங்கள்.

162. ஆனால் அவர்களில் பாவிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகளின் இடத்தில் வேறு கட்டளைகளை மாற்றியமைத்துக் கொண்டனர். அதன் விளைவாக, அவர்களுடைய தீய தன்மையின் காரணத்தால், விண்ணிலிருந்து கண்டனத்தை அவர்கள் மீது நாம் இறக்கினோம்.

*கட்டளைகளைக் கடைப்பிடித்தல் வளத்தைக் கொண்டு வருகின்றது*

163. ஸப்பாத்தை அவமரியாதை செய்தவர்களான, கடலின் அருகிலிருந்த அந்தச் சமுதாயத்தைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டுவீராக, அவர்கள் ஸப்பாத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த போது, மீன்கள் அவர்களுக்கு அபரிமிதமாக வந்தன. ஆனால் அவர்கள் ஸப்பாத்தை மீறியபோது, மீன்கள் வரவில்லை. அவர்களுடைய வரம்புமீறலின் ஒரு பின் விளைவாக, இவ்விதமாக அவர்களை நாம் வருத்தினோம்.

**7:156 (ஜகாத்) கடமையான தர்மத்தின் முக்கியத்துவம் அளவுக்கு அதிகமாக வலியுறுத்தப்படுவதாகக் கொள்ள இயலாது. 6:141ல் நிறுவப்பட்டுள்ளபடி, எந்த வருமானத்தையும் பெற்றவுடன் ஜகாத் கொடுக்கப்பட்டாக வேண்டும் – ஒருவரது நிகர வருமானத்தில் 2.5% பெற்றோர்கள், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், பயணத்திலிருக்கின்ற அந்நியர்களுக்கு, இந்த வரிசையிலேயே கொடுக்கப்பட்டாக வேண்டும் (பார்க்க 2:215).*

**7:157 ஆதியாகமம் 18:15–19 மற்றும் ஜான் 14:16–17 & 16:13ல் முஹம்மத் முன்னறிவிக்கப்படுகின்றார்.*

*கடவுளின் தூதுச் செய்தியைக் கேலி செய்தலும் பரிகசித்தலும்*

164. அவர்களில் ஒரு கூட்டத்தார் கூறியதை நினைவு கூர்ந்திடுவீராக, "**கடவுள்** நிச்சயமாக அழித்தொழித்து விடவோ அல்லது கடுமையாகத் தண்டிக்கவோ இருக்கின்ற மக்களுக்கு நீங்கள் ஏன் உபதேசிக்க வேண்டும்?" அவர்கள் பதிலளித்தனர், "உங்களுடைய இரட்சகரிடம் பிழைபொறுக்கக் கேளுங்கள்," அவர்கள் காப்பாற்றப்படக்கூடும் என்பதற்காக.

165. அவர்களுக்கு நினைவூட்டப்பட்டவற்றை அவர்கள் அலட்சியம் செய்தபோது, தீமையைத் தடுத்தவர்களை நாம் காப்பாற்றினோம், அத்துடன் தவறிழைத்தவர்களை அவர்களுடைய தீய தன்மைக்காக பயங்கரமானதொரு தண்டனையைக் கொண்டு வருத்தினோம்.

166. கட்டளைகளை அவர்கள் தொடர்ந்து எதிர்த்த போது, நாம் அவர்களிடம் கூறினோம், "இழிவுக்குட்பட்ட குரங்குகளாக நீங்கள் ஆகி விடுங்கள்."

167. கூடுதலாக, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் வரை, அவர்கள் மீது கடும் வன்கொடுமையைச் சுமத்தக் கூடிய மக்களை அவர்களுக்கெதிராக அவர் எழுப்புவார் என்று உம்முடைய இரட்சகர் விதித்துள்ளார். உம்முடைய இரட்சகர் தண்டனையை நிறைவேற்றுவதில் மிகவும் திறன் வாய்ந்தவராக இருக்கின்றார், மேலும் உறுதியாக அவர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

168. பூமி எங்கிலும் பல சமுதாயங்களுக்கிடையில் அவர்களை நாம் சிதறடித்தோம். அவர்களில் சிலர் நன்னெறியாளர்களாக இருந்தனர், மேலும் சிலர் நன்னெறியில் குறைந்தவர்களாக இருந்தனர். வளம் மற்றும் கஷ்டத்தைக் கொண்டு அவர்களை நாம் சோதித்தோம், அவர்கள் திரும்பக் கூடும் என்பதற்காக.

169. அவர்களுக்குப் பின்னர், வேதத்தை வாரிசாகப் பெற்றவர்களான புதிய தலைமுறைகளை அவர் மாற்றியமைத்தார். ஆனால் அதற்கு மாறாக, அவர்கள், "நாங்கள் மன்னிக்கப்பட்டு விடுவோம்," என்று கூறியவர்களாக இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஆனால் பின்னரும் அவர்கள் இவ்வுலகத்தின் பொருட்களையே தொடர்ந்து தேர்ந்தெடுத்தனர், வேதத்தை உயர்த்திப் பிடிப்பதென்றும், **கடவுள்**–ஐப் பற்றி சத்தியத்தைத் தவிர எதனையும் கூறுவதில்லையென்றும் ஓர் உடன்படிக்கையை அவர்கள் செய்யவில்லையா? வேதத்தை அவர்கள் கற்றுக் கொள்ளவில்லையா? உறுதியாக, மறுவுலகத்தின் தங்குமிடமானது நன்னெறியில் நிலைத்திருப்பவர்களுக்கு மிகவும் மேலானதாக உள்ளது. நீங்கள் புரிந்து கொள்ள வில்லையா?

170. எவர்கள் வேதத்தை உயர்த்திப் பிடித்து, மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றனரோ, பக்திமான்களுக்குப் பிரதிபலனளிக்க நாம் ஒருபோதும் தவறுவதில்லை.

171. ஒரு குடையைப் போல் அந்த மலையை அவர்களுக்கு மேல் நாம் உயர்த்தினோம், மேலும் அது தங்கள் மீது விழுந்து விடப்போகின்றது என்று அவர்கள் நினைத்தனர்: "நாம் உங்களுக்குக் கொடுத்தவற்றை, நீங்கள் பலமாக உயர்த்திப் பிடிக்க வேண்டும், மேலும் நீங்கள் காப்பாற்றப்படும் பொருட்டு, அதில் உள்ளவற்றை நினைவில் கொள்ளுங்கள்."

*கடவுளைப்பற்றி இயல்பான அறிவுடன் நாம் பிறந்துள்ளோம்**

172. ஆதமுடைய வழிவந்தவர்கள் அனைவரையும் உம் இரட்சகர் ஒன்று திரட்டி, அவர்களுக்கு அவர்களையே சாட்சியாக வைத்ததை நினைவு கூர்ந்திடுவீராக: "நான்தான் உங்களுடைய இரட்சகன் அல்லவா?" அவர்கள் அனைவரும் கூறினர், "ஆம். நாங்கள் சாட்சி பகர்கின்றோம்." ஆகவே, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் அன்று, "இது குறித்து நாங்கள் அறியாதவர்களாக இருந்தோம்," என்று நீங்கள் கூற இயலாது.

173. அன்றி, "எங்கள் பெற்றோர்கள்தான் போலித் தெய்வ வழிபாட்டை கடைப்பிடித்தனர், எனவே நாங்கள் அவர்களுடைய காலடிச் சுவடுகளை மட்டுமே பின்பற்றினோம். மற்றவர்கள் புகுத்திய புதுமைகளுக்காக எங்களை நீர் தண்டிப்பீரா, ?" என்றும் நீங்கள் கூற இயலாது.

174. மக்கள் தங்களையே மீட்டுக் கொள்வதைச்* சாத்தியமாக்குவதற்காக, இவ்வெளிப்பாடுகளை இவ்விதமாக நாம் விவரிக்கின்றோம்.

175. நம்முடைய சான்றுகள் கொடுக்கப்பட்டு, ஆனால் அவற்றை அலட்சியம் செய்வதைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒருவனைப் பற்றிய செய்தியை அவர்களுக்கு எடுத்துக் கூறுவீராக. அதன் பின்விளைவாக, அவனொரு வழிதவறியவனகி விடும் வரை, சாத்தான் அவனைப் பின்தொடர்ந்தான்.

**7:172 எனவே, மானிட இனத்தவர் ஒவ்வொருவரும் கடவுளைப்பற்றி இயல்பான ஒரு அறிவுடனேயே பிறக்கின்றனர்.*

**7:174 கடவுளின் சாம்ராஜ்யத்திற்குத் திரும்புவதற்கு இந்த வாழ்வானது நமது கடைசி வாய்ப்பாகும் (பார்க்க அறிமுக வுரை).*

176. நாம் நாடியிருந்தால், அதனைக் கொண்டு அவனை நாம் உயர்த்தியிருப்போம், ஆனால் அவன் பூமியில் ஒட்டிக் கொள்வதில் பிடிவாதமாக இருந்தான், அத்துடன் தன்னுடைய சுய அபிப்பிராயங்களைப் பின் தொடர்ந்தான். எனவே, அவன் நாயைப் போன்றவன்; நீர் அதனைக் கொஞ்சினாலும் அல்லது அதனைத் திட்டினாலும் அது ஏங்கத்தான் செய்யும். நம்முடைய சான்றுகளை நிராகரிக்கின்ற மக்களுடைய உதாரணம் இத்தகையதேயாகும். அவர்கள் சிந்திக்கும் பொருட்டு, இந்த விவரங்களை விவரிப்பீராக.

177. நம்முடைய சான்றுகளை நிராகரிக்கின்றவர்களான மக்களுடைய உதாரணம் உண்மையில் கெட்டதாகும்; அவர்கள் அநீதமிழைப்பது தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கு மட்டுமேயாகும்.

178. எவரைக் **கடவுள்** வழிநடத்துகின்றாரோ அவரே உண்மையில் வழிநடத்தப்பட்டவராவார், மேலும் எவரையெல்லாம் அவர் வழிகேட்டிற்கு ஆட்படுத்தி விடுகின்றாரோ, இவர்கள்தான் நஷ்டவாளிகள் ஆவர்.

*சாத்தான் தன் அங்கத்தினர்களை*
*மனோவசியம் செய்கின்றான்*

179. ஜின்கள் மற்றும் மனிதர்களில் ஏராளமானோரை நாம் நரகத்திற்கு ஆட்படுத்தி விட்டோம். அவர்களுக்கு மனங்கள் உண்டு, அதனைக் கொண்டு அவர்கள் புரிந்து கொள்வதில்லை, கண்கள் உண்டு, அதனைக் கொண்டு அவர்கள் பார்ப்பதில்லை, மேலும் காதுகள் உண்டு, அதனைக் கொண்டு அவர்கள் செவியேற்பதில்லை. அவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள்; அல்ல, அவர்கள் இன்னும் மோசமானவர்கள் – அவர்கள் முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனர்.

180. மிகவும் அழகிய பெயர்கள் **கடவுள்**–க்கே உரியன; அதனைக் கொண்டு அவரை அழையுங்கள், அவருடைய பெயர்களைத் திரிப்பவர்களை அலட்சியம் செய்திடுங்கள். அவர்களுடைய பாவங்களுக்காக அவர்கள் கூலி கொடுக்கப்படுவார்கள்.

181. நம்முடைய படைப்பினங்களில், சத்தியத்தைக் கொண்டு வழிநடத்துகின்றவர்கள் உள்ளனர், மேலும் அந்தச் சத்தியம் அவர்களை நன்னெறியாளர்களாக ஆக்குகின்றது.

182. நம்முடைய வெளிப்பாடுகளை நிராகரிப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அதனை எப்போதும் உணர்ந்து கொள்ளாதவாறு, அவர்களை நாம் இழுத்துச் செல்கின்றோம்.

183. அவர்களுக்கு நான் ஊக்கமும் கூடக் கொடுப்பேன்; என்னுடைய திட்டம் வலியதாக உள்ளது.

184. *(தூதராகிய)* அவர்களுடைய தோழரைப் பற்றி அவர்கள் ஏன் சிந்திக்கக் கூடாது ? அவர் கிறுக்கர் அல்லர். அவர் ஆழ்ந்ததோர் எச்சரிப்பவர் மட்டுமேயாவார்.

185. வானங்கள் மற்றும் பூமியின் சாம்ராஜ்யத்தையும், மேலும் **கடவுள்** படைத்துள்ள எல்லாப் பொருட்களையும் அவர்கள் நோட்டமிடவில்லையா ? அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு அருகிலேயே இருக்கக் கூடும் என்று எப்பொழுதாவது அவர்களுக்குத் தோன்றுகின்றதா ? இதனைத் தவிர, எந்த *ஹதீஸின்* மீது அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர் ?

186. **கடவுள்** எவரை வழிதவறுதலுக்கு உட்படுத்தி விட்டாரோ, அவரை வழிநடத்துவதற்கு எவரொருவருக்கும் எந்த வழிவகையும் இல்லை. மூடத்தனமான தவறுகள் புரிகின்றவர்களாக, அவர்களுடைய பாவங்களில் அவர்களை அவர் விட்டு விடுகின்றார்.

187. *(வேளை எனும்)** உலகத்தின் முடிவைப்பற்றியும், எப்பொழுது அது நிகழ்ந்தேறும் என்றும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். கூறுவீராக, "அதனைப் பற்றிய அறிவு என் இரட்சகரிடம் உள்ளது. அவர் மட்டுமே அதன் நேரத்தை* வெளிப்படுத்துகின்றார். வானங்கள் மற்றும் பூமியில், பளுவானதாக அது உள்ளது. திடீரெனவே தவிர உங்களிடம் அது வந்து விடாது."** அதன் கட்டுப்பாடு உம்மிடத்தில் இருப்பதைப் போல் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். கூறுவீராக, "அதனைப் பற்றிய அறிவு **கடவுள்**–யிடத்தில் உள்ளது," ஆனால் அதிகமான மக்கள் அறிய மாட்டார்கள்.

*தூதர்கள் சக்தியற்றவர்கள் ஆவர்;*
*அவர்கள் எதிர்காலத்தை அறிய மாட்டார்கள்*

188. கூறுவீராக, "எனக்கே நன்மையோ அல்லது எனக்கே தீமையோ செய்து கொள்வதற்கு என்னிடம் எந்தச் சக்தியும் இல்லை. **கடவுள்** நாடுவது மட்டுமே எனக்கு நேரிடுகின்றது. நான் எதிர்காலத்தை அறிந்திருப்பேனாயின், என்னுடைய செல்வ வளத்தை நான் அதிகரித்துக் கொண்டு இருந்திருப்பேன், அத்துடன் எந்தத் தீங்கும் என்னை வருத்தியிருக்காது. நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஓர் எச்சரிப்பவன் அத்துடன் நற்செய்தி தாங்கிய ஒருவன் என்பதை விட நான் அதிகம் எதுவுமில்லை."

**7:187 கடவுளின் உடன்படிக்கைத் தூதர் மூலமாக, இத்தகவலை வெளிப்படுத்துவதற்கு உகந்த நேரம் கி.பி.1980 ஆக இருக்க வேண்டும் என்பது முன்னரே விதிக்கப்பட்டு விட்டதாக இருந்தது (பார்க்க 15:87, 72:27 மற்றும் பின் இணைப்புக்கள் 2 & 11).*

***7:187 அந்த "வேளை" நம்பமறுப்பவர்களுக்கு மட்டுமே "திடீரென" வரும் (பார்க்க பின் இணைப்பு 11).*

*நம்முடைய பிள்ளைகள் நம் போலித் தெய்வங்களாக இருக்கக் கூடும்*

189. ஒரு நபரில் *(ஆதம்)* இருந்து உங்களை அவர் படைத்தார். அதனைத் தொடர்ந்து, ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு ஜோடியை, அவளுடன் அமைதி காண்பதற்காக அவர் தருகின்றார். அவள் பின்னர் அவளால் உணரக் கூட இயலாத ஓர் இலேசான சுமையைக் சுமக்கின்றாள். அச்சுமையானது கனமாகிக் கொண்டே போகும் போது, அவர்கள் தங்களுடைய இரட்சகராகிய **கடவுள்**—யிடம் இறைஞ்சுகின்றனர்: "ஒரு நல்ல குழந்தையை எங்களுக்கு நீர் தந்தால், நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம்."

190. ஆனால் ஒரு நல்ல குழந்தையை அவர்களுக்கு அவர் கொடுக்கின்ற போது, அவர்கள் அவருடைய பரிசையே அவருக்குப் போட்டியாகி விடுகின்ற அளவுக்கு ஒரு போலித் தெய்வமாக மாற்றி விடுகின்றனர். எந்தப் பங்குதாரர்களுக்கும் மிகவும் அப்பாற்பட்டு, **கடவுள்** உயர்ந்தவராவார்.

191. எந்த ஒன்றையும் படைக்காத, மேலும் அவர்களே படைக்கப்பட்டவர்களாக இருக்கின்ற போலித் தெய்வங்களை அவர்கள் இணைவழிபாடு செய்கின்றனர் என்பது ஒரு நிதர்சனமல்லவா?

192. அவர்களுக்கு உதவி செய்யவோ அன்றி தங்களுக்கே கூட உதவி செய்து கொள்ளவோ இயலாத போலித் தெய்வங்கள்?

193. வழிகாட்டுதலின் பால் நீங்கள் அவர்களை அழைக்கும் போது, அவர்கள் உங்களைப் பின்பற்றுவதில்லை. எனவே, அவர்களை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அல்லது மௌனமாக இருந்து விடுகின்றீர்களோ, அவர்களுக்கு அது சமமேயாகும்.

194. **கடவுள்**—வுடன் நீங்கள் பிரார்த்திக்கின்ற போலித் தெய்வங்கள் உங்களைப் போன்ற படைப்பினங்களேயாவர். சென்று அவர்களை அழைத்துப் பாருங்கள்; நீங்கள் சரியானவர்களாக இருந்தால், அவர்கள் உங்களுக்குப் பதிலளிக்கட்டும்.

195. அவர்கள் நடக்கக்கூடிய கால்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா? தங்களையே அவர்கள் தற்காத்துக் கொள்ளக்கூடிய கரங்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா? அவர்கள் காணக்கூடிய கண்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா? அவர்கள் செவியேற்கக் கூடிய காதுகள் அவர்களுக்கு இருக்கின்றனவா? கூறுவீராக, "உங்களுடைய போலித் தெய்வங்களை அழையுங்கள், மேலும் தாமதமின்றி என்னைக் கடுமையாகத் தாக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

196. "**கடவுள்** தான் என்னுடைய ஒரே இரட்சகரும் அதிபதியும் ஆவார்; இந்த வேதத்தை வெளிப்படுத்திய அந்த ஒருவர். அவர் நன்னெறியாளர்களைப் பாதுகாக்கின்றார்.

197. "அவருடன் நீங்கள் அமைத்துக் கொள்கின்ற போலித் தெய்வங்களைப் பொறுத்தவரை, அவர்கள் உங்களுக்கு உதவி செய்ய இயலாது, அன்றி அவர்கள் தங்களுக்கே உதவி செய்து கொள்ள இயலாது."

198. வழிகாட்டுதலின் பால் அவர்களை நீங்கள் அழைக்கும் போது, அவர்கள் செவியேற்பதில்லை, அத்துடன் அவர்கள் உம்மை நோக்குவதை நீர் காண்கின்றீர், ஆனால் அவர்கள் காண்பதில்லை.

199. நீர் பிழைபொறுத்தலைக் கைக்கொள்ளவும், சகிப்புத் தன்மையைப் பரிந்துரைக்கவும், அறிவற்றவர்களை அலட்சியம் செய்திடவும் வேண்டும்.

200. சாத்தான் ஏதேனும் கிசுகிசுப்பை உம்மிடம் கிசுகிசுத்தால், **கடவுள்**—யிடம் அடைக்கலம் தேடுவீராக; அவர் செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

201. நன்னெறியாளர்களாக இருப்பவர்கள், சாத்தான் ஒரு திட்டத்துடன் அவர்களை நெருங்குகின்ற போதெல்லாம், அவர்கள் நினைவுபடுத்திக் கொள்வார்கள், உடனே அவர்கள் காணக்கூடியவர்களாக ஆகி விடுகின்றனர்.

202. வழிதவறுதலில் சென்று விடுமாறு அவர்களுடைய சகோதரர்கள் அவர்களை இடையறாது மயக்குகின்றனர்.

203. அவர்கள் கோருகின்ற ஓர் அற்புதத்தை நீர் கொண்டு வராவிட்டால், அவர்கள் கூறுகின்றனர், "ஏன் அதற்காகக் கேட்கக் கூடாது?" கூறுவீராக, "என்னுடைய இரட்சகரிடமிருந்து எனக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை மட்டுமே நான் பின்பற்றுகின்றேன்." இவை உங்களுடைய இரட்சகரிடமிருந்துள்ள அறிவூட்டல்களாகவும், வழிகாட்டுதலாகவும், நம்பிக்கை கொண்ட மக்களுக்கு கருணையுமாக இருக்கின்றன.

204. குர்ஆன் எடுத்துக் கூறப்படும்போது, அதனை நீங்கள் கருத்தூன்றிச் செவியேற்கவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும் வேண்டும், நீங்கள் கருணையை அடையும் பொருட்டு.

205. உமக்குள்ளேயும், பகிரங்கமாகவும், தனிமையிலும், சாந்தமாகவும், பகலும் இரவும் உம்முடைய இரட்சகரை நீர் நினைவில் கொள்ள வேண்டும்; அறியாதவராக இருந்திடாதீர்.*

206. உம்முடைய இரட்சகரிடம் இருப்பவர்கள் ஒரு போதும் அவரை வழிபடுவதற்கு மிகவும் கர்வம் கொண்டவர்களாக இருப்பதில்லை; அவர்கள் அவரைத் துதிக்கின்றனர், மேலும் அவர் முன்னர் சிரம் பணிந்து விழுகின்றனர்.

****

**7:205 ஒரு நாளின் பெரும்பகுதி உங்கள் மனதை ஆக்கிரமித்திருக்கின்ற எவராயினும் அல்லது எதுவாயினும் அதுதான் உங்களுடைய தெய்வமாக இருக்கின்றது. கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களில் பலர் நரகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளனர் என்ற நிதர்சனத்தை இது விளக்குகின்றது (பார்க்க 12:106, 23:84—90 மற்றும் பின் இணைப்பு 27).*

## சூரா 8:போரின் வெற்றிப் பொருட்கள் (அல்–அன்ஃபால்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. போரின் வெற்றிப் பொருட்களைப் பற்றி அவர்கள் உம்மிடம் ஆலோசிக்கின்றனர். கூறுவீராக, "போரின் வெற்றிப் பொருட்கள் **கடவுள்** மற்றும் தூதருக்கு உரியவையாகும்." நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ள வும், நன்னெறியுடன் இருக்கும்படி ஒருவர் மற்ற வரைத் தூண்டிக் கொள்ளவும், **கடவுள்** மற்றும் அவரு டைய தூதருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

*உண்மையான நம்பிக்கையாளர்கள்*

2. உண்மையான நம்பிக்கையாளர்கள் எவர்களெனில், எவர்களுடைய இதயங்கள் **கடவுள்**–ஐக் குறிப்பிடும் போது நடுநடுங்கி விடுகின்றதோ, மேலும் அவரு டைய வெளிப்பாடுகள் அவர்களுக்கு எடுத்துரைக் கப்படுகின்ற போது, அவர்களுடைய நம்பிக்கை வலுப்படுகின்றதோ, மேலும் தங்களுடைய இரட்ச கரின் மீது பொறுப்பேற்படுத்துகின்றனரோ அவர் களேயாவர்.

3. அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றனர், மேலும் அவர்களுக்குரிய நம்முடைய வாழ்வாதாரங்களில் இருந்து, அவர்கள் தர்மத்திற்கெனக் கொடுக்கின்றனர்.

4. இத்தகையவர்கள்தான் உண்மையான நம்பிக்கை யாளர்களாக உள்ளனர். அவர்கள் தங்களுடைய இரட்சகரிடம் உயர் அந்தஸ்துகளையும், அவ்வண்ண மே மன்னிப்பு மற்றும் தாராளமானதொரு வாழ் வாதாரத்தையும் அடைகின்றனர்.

*பலவீனமான நம்பிக்கையாளர்கள்*

5. குறிப்பிட்டதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உம்முடைய வீட்டை விட்டு நீர் வெளியேற உம்மு டைய இரட்சகர் நாடிய பொழுது, சில நம்பிக்கையா ளர்கள் தயக்கமுள்ள நம்பிக்கையாளர்களென வெளிப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிட்டனர்.

6. ஒவ்வொன்றும் அவர்களுக்கு விவரிக்கப்பட்டு விட்ட பின்னரும் கூட, சத்தியத்திற்கெதிராக அவர்கள் உம்மிடம் வாதித்தனர். நிச்சயமாகி விட்ட மரணத் தின் பால் அவர்கள் செலுத்தப்படுபவர்களைப் போல் அவர்கள் நடந்து கொண்டனர்.

7. குறிப்பிட்டதொரு கூட்டத்தின் மீது **கடவுள்** உங்க ளுக்கு வெற்றியை வாக்களித்தார் என்பதை நினைவு கூர்ந்திடுங்கள், ஆனால் அவ்வாறிருந்தும் நீங்கள் பலவீனமான கூட்டத்தையே எதிர் கொள்ள விரும் பினீர்கள். தன் வார்த்தைகளைக் கொண்டு சத்தி யத்தை நிலைநாட்டுவதும், நம்பமறுப்பவர்களைத் தோற்கடிப்பதும் **கடவுள்**–ன் திட்டமாக இருந்தது.

8. ஏனெனில் தீமை செய்பவர்கள் வெறுத்த போதிலும், சத்தியமானது மிகைத்திட வேண்டும், அத்துடன் பொய்மையானது ஒழிந்திட வேண்டும் என்று அவர் தீர்ப்பளித்துள்ளார்.

*கண்களுக்குத் தெரியாத,*
*கடவுளின் படைவீரர்கள்*

9. எனவே, காப்பாற்ற வருமாறு உங்களுடைய இரட்ச கரை நீங்கள் இறைஞ்சிய போது, அவர் உங்களுக்கு பதிலளித்தார்: "ஒருவர் பின் ஒருவராக ஓராயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு நான் ஆதர வளிக்கின்றேன்"

*நம்பிக்கையாளர்களுக்கு வெற்றி*
*உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது*

10. உங்களுடைய இதயங்களை வலுப்படுத்துவதற்காக இந்த நற்செய்தியைக் **கடவுள்** உங்களுக்கு அளித் தார். வெற்றி **கடவுள்**–யிடமிருந்து மட்டுமே வருகின் றது. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

11. அமைதி நிறைந்த தூக்கம் உங்களை ஆட்கொண்டு உங்களை சாந்தப்படுத்தும்படி அவர் செய்தார், மேலும் விண்ணில் இருந்து தண்ணீரை அவர் இறக்கி அனுப் பினார், அதன் மூலம் உங்களைத் தூய்மைப்படுத்து வதற்காக. சாத்தானின் சாபத்தில் இருந்து உங்களை அவர் பாதுகாத்தார், உங்களுடைய இதயங்களை மறு உறுதி செய்து உங்களுடைய நிலைகளைப் பலப் படுத்தினார்.

*சரித்திரத்தில் இருந்து படிப்பினைகள்**

12. உம்முடைய இரட்சகர் வானவர்களுக்கு உள்ளுணர் வளித்ததை நினைவு கூர்ந்திடுங்கள்: "நான் உங்களு டன் இருக்கின்றேன்; எனவே நம்பிக்கை கொண்ட வர்களுக்கு ஆதரவளியுங்கள். நம்பமறுத்து விட்டவர் களின் இதயங்களுக்குள் நான் திகிலை எறிவேன். கழுத்துகளின் மேலே அவர்களை நீங்கள் தாக்க லாம், மேலும் ஒவ்வொரு விரலையும் கூட நீங்கள் தாக்கலாம்."

13. **கடவுள்** மற்றும் அவருடைய தூதருடன் சண்டையி டுவதன் மூலம் அவர்கள் நியாயமாக ஆட்பட்டது இதற்குத்தான். **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக் கெதிராகச் சண்டையிடுபவர்களுக்குக் **கடவுள்**–ன் தண்டனை கடுமையானதாகும்.

**8:12–16 போர்கள் அனைத்தும் 60:8–9ல் உள்ள அடிப்படைச் சட்டத்தின்படி நெறிமுறைப்படுத்தப்படுகின்றன.*

14. இது, நம்பமறுப்பவர்களைத் தண்டிப்பதற்கேயாகும்; அவர்கள் நரகத்தின் தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

15. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உங்களுக்கெதிராக ஒன்று திரண்டு விட்ட நம்பமறுப்பவர்களை நீங்கள் எதிர்கொள்வீர்களாயின், புறங்காட்டித் திரும்பி விரண்டோடி விடாதீர்கள்.

16. ஒரு யுத்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காகவோ அல்லது தன்னுடைய குழுமத்தாருடன் சேர்ந்து கொள்வதற்காகவோ தவிர, எவரேனும் அந்நாளில் புறங்காட்டித் திரும்பி விட்டால், **கடவுள்**–யிடமிருந்து கடுங்கோபத்திற்கு உள்ளாகி விட்டார், மேலும் அவருடைய தங்குமிடம் நரகமேயாகும்; என்ன ஒரு துன்பகரமான விதி!

*ஒவ்வொன்றையும் செய்பவர் கடவுளேயாவார்**

17. அவர்களைக் கொன்றவர்கள் நீங்கள் அல்லர்; **கடவுள்** தான் அவர்களைக் கொன்றவர். நீர் எறிந்த போது எறிந்தவர் நீர் அல்லர்; எறிந்தவர் **கடவுள்**–யே ஆவார். ஆனால் அவர் இவ்விதமாக ஏராளமானதொரு வரவுதனைச் சம்பாதிப்பதற்கு நம்பிக்கையாளர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கின்றார். **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

18. கூடுதலாக, **கடவுள்** இவ்விதமாக நம்பமறுப்பவர்களின் சூழ்ச்சிகளைப் பயனற்றதாக்கி விடுகின்றார்.

19. *(நம்பமறுப்பவர்களே)*, நீங்கள் வெற்றியைத் தேடினீர்கள், மேலும் வெற்றியும் வரவே செய்தது; அது நம்பிக்கையாளர்களுக்கு உரியதாக இருந்தது. *(வலுச்சண்டையில் இருந்து)* நீங்கள் விலகிக் கொள்வீர்களாயின் அது உங்களுக்கு மேலானதாக இருக்கும், ஆனால் நீங்கள் திரும்புவீர்களாயின், நாமும் அவ்வாறே செய்வோம். உங்களுடைய இராணுவங்கள் ஒருபோதும் உங்களுக்கு உதவிடாது, எவ்வளவு பெரியதென்பது பொருட்டல்ல. ஏனெனில் நம்பிக்கையாளர்களின் பக்கம் **கடவுள்** இருக்கின்றார்.

20. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படியுங்கள், மேலும் நீங்கள் செவியேற்றுக் கொண்டிருக்கின்ற அதே சமயம் அவரை அலட்சியம் செய்திடாதீர்கள்.

*நம்பமறுப்பவர்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றனர்*

21. அவர்கள் செவியேற்காதபோதே, "நாங்கள் செவியேற்கின்றோம்," என்று கூறுபவர்களைப் போல் இருக்காதீர்கள்.

22. **கடவுள்**–ன் பார்வையில் மோசமான படைப்பினங்கள், புரிந்து கொள்ளாத செவிடர்களும் ஊமையர்களுமே யாவார்.

23. அவர்களிடம் எந்த நன்மையையேனும் **கடவுள்** அறிந்திருப்பாராயின், செவியேற்கக்கூடியவர்களாக அவர்களை அவர் ஆக்கியிருப்பார். செவியேற்கக் கூடியவர்களாக அவர்களை அவர் ஆக்கியிருந்தாலும், அப்போதும் அவர்கள் வெறுப்பில் திரும்பிச் சென்றிருப்பார்கள்.

*நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை**

24. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுக்கு வாழ்வளிக்கக்* கூடியவற்றின் பால் அவர் உங்களை அழைக்கின்ற பொழுது நீங்கள் **கடவுள்**–க்கும் தூதருக்கும், மறுமொழியளிக்க வேண்டும். உங்களுடைய இதயத்தை விடவும் உங்களுக்கு மிகவும் நெருக்கமானவராகக் **கடவுள்** இருக்கின்றார் என்பதையும், அவர் முன்னர் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

25. உங்களில் உள்ள தீமைபுரிவோருக்கென வரையறுக்கப்படாமல் இருக்கக் கூடியதொரு தண்டனை குறித்து எச்சரிக்கையுடனிருங்கள்.* **கடவுள்**–ன் தண்டனை கடுமையானதாகும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

*நம்பிக்கையாளர்களுக்குக் கடவுள் ஆதரவளிக்கின்றார்*

26. மக்கள் உங்களை வாரிச் சென்று விடக்கூடும் என்று அஞ்சியவர்களாக, மிகச்சிலராகவும் அடக்குமுறைக்குள்ளானவர்களாகவும் நீங்கள் இருந்து வந்தீர்கள், மேலும் அவர் பாதுகாப்பானதொரு புகலிடத்தை உங்களுக்கு அளித்தார், தன்னுடைய வெற்றியைக் கொண்டு உங்களுக்கு ஆதரவளித்தார், மேலும் நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு, நல்ல வாழ்வாதாரங்களை உங்களுக்கு வழங்கினார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

27. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், இப்பொழுது நீங்கள் அறிந்தவர்களாக இருப்பதால், **கடவுள்** மற்றும் தூதருக்குத் துரோகமிழைக்காதீர்கள், மேலும் உங்களிடம் பொறுப்பை ஒப்படைப்பவர்களுக்கும் துரோகமிழைக்காதீர்கள்.

**8:17 கடவுள் மீது நம்பிக்கை கொள்ளுதல் அவருடைய தன்மைகளை நம்புதலை அவசியமாக்குகின்றது, அவற்றில் ஒன்று எல்லாவற்றையும் அவர் செய்கின்றார் என்பதாகும். கடவுளை அறிந்து கொள்ளாமல், அங்கு நம்பிக்கை இல்லை (23:84–90). கெட்ட விஷயங்களானவை கடவுளின் விதிகளுக்கேற்ப, நம்மாலேயே அடைந்து கொள்ளப்படுகின்றன, மேலும் சாத்தானால் நிறைவேற்றப்படுகின்றன (4:78–79, 42:30).*

**8:24 பார்க்க பின் இணைப்பு 17. நன்னெறியாளர்கள் தங்களுடைய உடல்களிலிருந்து வெளியேறுகையில், அவர்கள் நேரடியாகச் சுவனத்திற்குச் செல்கின்றார்கள்.*

**8:25 உதாரணத்திற்கு, ஓரினச் சேர்க்கையை சகித்துக் கொள்கின்ற ஒரு சமுதாயம், நில அதிர்வு ஒன்றால் தாக்கப்படக் கூடும்.*

*பணம் & பிள்ளைகள் சோதனைகளாக உள்ளன*

28. உங்களுடைய பணமும் உங்களுடைய பிள்ளைகளும் ஒரு சோதனையாகவே இருக்கின்றன என்பதையும், **கடவுள்** மகத்தானதொரு பிரதி பலனை வைத்திருக்கின்றார் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

29. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்** மீது பக்தியோடிருந்தால், அவர் உங்களுக்கு அறிவொளியூட்டுவார், உங்களுடைய பாவங்களை நீக்குவார், மேலும் உங்களை மன்னிப்பார். **கடவுள்** எல்லையற்ற அருளைக் கொண்டிருக்கின்றார்.

*கடவுள் தன்னுடைய தூதரைப் பாதுகாக்கின்றார்**

30. உம்மை மட்டுப்படுத்துவதற்கோ, அல்லது உம்மைக் கொல்வதற்கோ, அல்லது நாடு கடத்துவதற்கோ நம்பமறுப்பவர்கள் திட்டமும் சூழ்ச்சியும் செய்கின்றனர். எவ்விதமாக அவர்கள் திட்டமும் சூழ்ச்சியும் செய்த போதிலும், **கடவுள்**–ம் அவ்வாறே செய்கின்றார். திட்டமிடுபவர்களில் சிறந்தவராகக் **கடவுள்** இருக்கின்றார்.

31. நம்முடைய வெளிப்பாடுகள் அவர்களிடம் எடுத்துரைக்கப்படுகின்ற போது, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் செவியேற்றுக் கொண்டோம். நாங்கள் விரும்பினால், இதே விஷயங்களை எங்களாலும் கூறியிருக்க இயலும். இவை கடந்த காலத்தில் இருந்துள்ள கட்டுக் கதைகள் என்பதை விட அதிகம் எதுவுமில்லை !"

32. இவ்வாறு கூட அவர்கள் கூறினர், "எங்கள் இறைவா, இது மெய்யாகவே உம்மிடமிருந்துள்ள சத்தியமாக இருக்குமாயின், அப்போது விண்ணில் இருந்து பாறை களை எங்கள் மேல் பொழிவீராக, அல்லது வலி நிறைந்ததொரு தண்டனையை எங்கள் மீது கொட்டுவீராக."

33. ஆயினும், நீர் அவர்கள் மத்தியில் இருக்கின்ற சமயம் **கடவுள்** அவர்களைத் தண்டிப்பதாக இல்லை; அவர்கள் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருக்கையிலும் **கடவுள்** அவர்களைத் தண்டிப்பதாக இல்லை.

34. அவர்கள் புனிதப்பள்ளியின் காப்பாளர்களாக இல்லாத போதிலும், அதிலிருந்து மற்றவர்களை விரட்டுவதன் மூலமாக அவர்கள் **கடவுள்**–ன் தண்டனைக்குத் தகுதியாகி விட்டனர் அல்லவா ? நன்னெறியாளர்களே அதனுடைய உண்மையான காப்பாளர்கள் ஆவர், ஆனால் அவர்களில் அதிகமானோர் அறிவதில்லை.

*(ஸலாத்) தொடர்புத் தொழுகைகள் குர்ஆனுக்கு முன்னரே வழக்கிலிருந்தது**

35. அந்த ஆலயத்தில் *(கஅபா)* அவர்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளானது கேலித்தனமான ஒன்றாகவும், அத்துடன் மக்களை, *(அவர்களை நெருக்கியடித்துத் தள்ளுவதன் மூலம் வெளியே)* விரட்டுகின்ற ஓர் உபாயமாகவும் இருந்தது என்பதை விட அதிகம் எதுவுமில்லை. எனவே, உங்களுடைய நம்பமறுத்தலுக்குரிய தண்டனையால் துன்புறுங்கள்.

*கடவுளுடன் சண்டையிடுவதற்காகத் தங்களுடைய பணத்தைச் செலவு செய்தல்**

36. நம்பமறுப்பவர்கள் **கடவுள்**–ன் பாதையிலிருந்து மற்றவர்களை விரட்டுவதற்காகத் தங்களுடைய பணத்தைச் செலவிடுகின்றனர். அவர்கள் அதனைச் செலவிடுவார்கள், பின்னர் அது அவர்களுக்குத் துக்கமாகவும் குற்றவுணர்வாகவும் மாறிவிடும். இறுதியாக, அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள், அத்துடன் நம்பமறுப்பவர்கள் அனைவரும் நரகத்திற்கு ஒன்று திரட்டப்படுவார்கள்.

37. **கடவுள்** நல்லவர்களில் இருந்து கெட்டவர்களைச் சலித்தெடுப்பார், பின்னர் கெட்டவர்களை ஒருவர் மேல் மற்றவராக அடுக்குவார், அனைவரும் ஒரே அடுக்கு, பின்னர் அதனை நரகத்தில் வீசி விடுவார். இத்தகையவர்களே நஷ்டவாளிகள் ஆவர்.

**8:30 கடவுள் தன்னுடைய இறுதி நபியான, முஹம்மதை அரேபியாவின் மிகவும் வலிமை வாய்ந்த குலத்திலிருந்து தேர்ந்தெடுத்தார். முஹம்மதைக் கொன்று விடுவதிலிருந்து–கடவுளின் அனுமதிப்படி–நம்பமறுப்பவர்களைத் தடுத்தவை குலச்சட்டங்களும் பாரம்பர்யப் பழக்க வழக்கங்களுமாகவே இருந்தன. அது போலவே, தன்னுடைய உடன்படிக்கைத் தூதரை அங்கே அவர் கொல்லப்பட்டிருக்கக் கூடிய, மத்தியக் கிழக்கில் இருந்து, கடவுளின் தூதுச் செய்தி செழித்து வளர்ந்து பூகோளத்தின் ஒவ்வொரு மூலையையும் அடையக்கூடிய, அமெரிக்காவிற்கு இடம்பெயரச் செய்வது கடவுளின் நாட்டமாக இருந்தது. இது கணிதரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது: இந்த சூரா & வசன எண்கள்= **8+30=38=19x2.***

**8:35 இஸ்லாமில் உள்ள மார்க்க அனுஷ்டானங்கள் அனைத்தும் ஆப்ரஹாம் மூலமாகவே நம்மிடம் வந்தன; குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட போது, "சரணடைதலில்" உள்ள அனைத்துச் சடங்குகளும் ஏற்கெனவே வழக்கத்தில் இருந்து வந்தன (21:73, 22:78).*

**8:36 சவூதி அரேபியாவின், போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற சீர்கெட்டுப்போன இஸ்லாமின் தலைவர்கள், கடவுள் மற்றும் அவருடைய அற்புதத்தை எதிர்க்க வருடாவருடம் பெருந்தொகையிலான பணத்தை ஒதுக்கி வைத்துள்ளனர். உதாரணத்திற்கு பிரசித்தி பெற்ற லெபனீய பதிப்பகம் தார் அல் – இல்ம் லில் – மலாயீன் (இலட்சக்கணக்கானவர்களுக்குரிய அறிவு) "குர்ஆனுடைய அற்புதம்" என்பதன் அரபி வடிவத்தை **1983**, மார்ச்சில் பிரசுரித்தனர், சவூதியினர் அனைத்துப் பிரதிகளையும் வாங்கி அவற்றை அழித்து விட்டனர்.*

38. நம்பமறுத்துவிட்டவர்களிடம் சொல்வீராக: அவர்கள் நிறுத்திக்கொள்வார்களாயின், அவர்களுடைய கடந்த காலம் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும். ஆனால் அவர்கள் திரும்புவார்களாயின், அவர்களுக்கு முன்னர் அவர்களுக்கு ஒப்பானவர்களைப் போல் அதே தலைவிதிக்கு அவர்கள் உள்ளாவார்கள்.

39. அடக்குமுறையைக் களைவதற்கும், **கடவுள்**–க்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்ட உங்களுடைய மார்க்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நீங்கள் அவர்களுடன் சண்டையிட வேண்டும். வலுச்சண்டையில் இருந்து அவர்கள் விலகிக் கொள்வார்களாயின், பின்னர் **கடவுள்** அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் முற்றிலும் பார்ப்பவராக இருக்கின்றார்.

40. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது **கடவுள்** தான் உங்களுடைய இரட்சகராகவும் அதிபதியாகவும் இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்; மிகச்சிறந்த இரட்சகர் மற்றும் அதிபதி, மிகச் சிறந்த ஆதரவாளர்.

41. போரில் ஏதேனும் வெற்றிப் பொருட்களை நீங்கள் அடைந்தால், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், மற்றும் பயணத்தில் இருக்கின்ற அந்நியர்களுக்குக் கொடுக்கப்படுவதற்காக, ஐந்தில் ஒரு பாகம் **கடவுள்** மற்றும் தூதரைச் சென்றடைய வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். **கடவுள்** மீதும் இரு படைகளும் மோதிக்கொண்ட நாளான, தீர்மானத்தின் நாள் அன்று நம் ஊழியருக்கு நாம் வெளிப்படுத்தியவற்றின் மீதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் நீங்கள் இதனைச் செய்வீர்கள். **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

*கடவுள் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்தி நம்பிக்கையாளர்களுக்காகத் திட்டமிடுகின்றார்*

42. பள்ளத்தாக்கின் இந்தப்பக்கத்தில் நீங்கள் இருந்த அதே சமயம், அந்தப் பக்கத்தில் அவர்கள் இருந்ததை நினைவு கூர்ந்திடுங்கள். அப்போது அவர்களுடைய கூடார வாகனம் தாழ்வான நிலத்திற்கு நகர்ந்து வர வேண்டியிருந்தது. நீங்கள் இந்த விதமாக அதனைத் திட்டமிட்டிருந்தால், உங்களால் அதனைச் செய்திருக்க இயலாது. ஆனால் **கடவுள்** முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒரு விஷயத்தைச் செய்து முடிக்க இருந்தார், அதன் மூலம் அழித்தொழிக்கப்பட விதிக்கப்பட்டிருந்தவர்கள் தெளிவானதொரு காரணத்திற்காக அழித்தொழிக்கப்பட்டனர், மேலும் காப்பாற்றப்பட விதிக்கப்பட்டிருந்தவர்கள் தெளிவானதொரு காரணத்திற்காகக் காப்பாற்றப்பட்டனர். **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

43. *(முஹம்மதே)* **கடவுள்** உம்முடைய கனவில் அவர்களை எண்ணிக்கையில் மிகச் சிலராகத் தோன்றும்படிச் செய்தார். மிகவும் ஏராளமானவர்களாக அவர்கள் தோன்றும்படி அவர் செய்திருந்தால், நீங்கள் தோற்றிருப்பீர்கள், அத்துடன் உங்களுக்கிடையிலேயே நீங்கள் தர்க்கித்துக் கொண்டு இருந்திருப்பீர்கள். ஆனால் **கடவுள்** அந்நிலையிலிருந்து காத்தார். உள்ளார்ந்த எண்ணங்களைப் பற்றி அறிந்தவராக அவர் இருக்கின்றார்.

44. அத்துடன் அந்த நேரம் வந்தவுடன் நீங்கள் அவர்களை எதிர்கொண்ட பொழுது, உங்களுடைய கண்களில் அவர்களை மிகச்சிலராகத் தோன்றுமாறு அவர் செய்தார், மேலும் அவ்வாறே அவர்களுடைய கண்களில் உங்களை மிகச்சிலராகத் தோன்றுமாறும் செய்தார். ஏனெனில் குறிப்பிட்டதொரு திட்டத்தைச் செய்து முடிக்கக் **கடவுள்** நாடினார். அனைத்துத் தீர்மானங்களும் **கடவுள்**–ஆல் செய்யப்படுகின்றன.

45. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், ஓர் இராணுவத்தினை நீங்கள் எதிர்கொள்ளும் போது, நீங்கள் உறுதியுடன் நிற்கவும் அத்துடன் **கடவுள்**–ஐ அடிக்கடி நினைவு கூர்ந்திடவும் வேண்டும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு.

46. நீங்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படிய வேண்டும், மேலும் நீங்கள் தோல்வியுற்று உங்களுடைய சக்தியைச் சிதறடித்து விடாதிருக்கும் பொருட்டு, உங்களுக்கிடையில் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் உறுதிப்பாட்டுடன் விடாமுயற்சி செய்ய வேண்டும். உறுதிப்பாட்டுடன் விடாமுயற்சி செய்வோருடன் **கடவுள்** இருக்கின்றார்.

47. அரைமனத்துடன், காட்டிக்கொள்வதற்காக மட்டும், தங்களுடைய வீடுகளை விட்டுக் கிளம்பி, உண்மையில் **கடவுள்**–ன் பாதையைப் பின்பற்றுவதிலிருந்து மற்றவர்களை ஊக்கமிழக்கச் செய்தவர்களைப் போன்று இருக்காதீர்கள். அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

*கண்ணுக்குத் தெரியாத, கடவுளின் படைவீரர்களை சாத்தான் பார்க்கின்றான்*

48. அவர்களுடைய காரியங்களை சாத்தான் அவர்களுடைய கண்களுக்கு அழகுபடுத்தி விட்டான், மேலும் கூறினான், "இன்றைய தினம் எந்த மக்களாலும் உங்களைத் தோற்கடித்து விட இயலாது" அத்துடன் "உங்களுடன் சேர்ந்து நானும் சண்டையிடுவேன்." ஆனால் இரண்டு படைகளும் ஒன்றையொன்று எதிர்கொண்ட உடன், "நான் உங்களைக் கைவிடுகின்றேன். நீங்கள் பார்க்காதவற்றை நான் பார்க்கின்றேன். நான் **கடவுள்**–ஐக் குறித்து பயப்படுகின்றேன். **கடவுள்**–ன் தண்டனை அச்சுறுத்தக்கூடியதாகும்," எனக்கூறியவனாக, தன் குதிங்கால்கள் மீது புறங்காட்டித் திரும்பி விரண்டோடிவிட்டான்.

49. நயவஞ்சகர்களும் தங்களுடைய இதயங்களில் சந்தேகத்தைத் தாங்கியிருந்தவர்களும் கூறினார்கள், "இந்த மக்கள் அவர்களுடைய மார்க்கத்தால் ஏமாற்றப்பட்டு விட்டவர்களாக இருக்கின்றனர்." ஆயினும், ஒருவர் **கடவுள்**–யிடம் தன்னுடைய பொறுப்பை ஒப்படைத்து வைப்பாராயின், பின்னர் **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

50. நம்பமறுத்துவிட்டவர்களை வானவர்கள் மரணத்தில் ஆழ்த்தும் போது உம்மால் அவர்களைப் பார்க்க மட்டும் இயன்றால்! அவர்கள் அவர்களுடைய முகங்களிலும் அவர்களுடைய விலாப்புறங்களிலும் அவர்களை அடிப்பார்கள்: "நரகத்தின் தண்டனையைச் சுவையுங்கள்.

51. "இது உங்களுடைய கரங்கள் முற்படுத்தி அனுப்பி வைத்தவற்றின் ஒரு விளைவேயாகும். படைப்பினங்களின் பால் **கடவுள்** ஒருபோதும் அநீதமானவர் அல்லர்."

52. இது ஃபேரோவின் சமூகத்தார் மற்றும் அவர்களுக்கு முன்னர் நம்பமறுத்துவிட்டவர்களுடைய அதே தலைவிதியாகும். **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை அவர்கள் ஏற்கமறுத்தனர், எனவே அவர்களுடைய பாவங்களுக்காகக் **கடவுள்** அவர்களைத் தண்டித்தார். **கடவுள்** சக்தி நிறைந்தவர், மேலும் அவருடைய தண்டனை கடுமையானதாகும்.

*தண்டனை:*
*பாவத்தின் ஒரு பின்விளைவு*

53. எந்த மக்கள் மீதும் அவர் அருளிய ஓர் ஆசீர்வாதத்தைத் தாங்களாகவே மாற்றிக் கொள்ள அவர்கள் முடிவெடுத்தாலேயன்றிக் **கடவுள்** மாற்றுவதில்லை. **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

54. ஃபேரோவின் சமூகத்தார் மற்றும் அவர்களுக்கு முன்னிருந்த மற்றவர்களுடைய நிலையும் இத்தகையதாகவே இருந்தது. முதலில் அவர்கள் தங்களுடைய இரட்சகரின் அத்தாட்சிகளை ஏற்கமறுத்தனர். அதன் விளைவாக, அவர்களுடைய பாவங்களுக்காக அவர்களை நாம் அழித்தொழித்தோம். ஃபேரோவின் சமூகத்தாரை நாம் மூழ்கடித்தோம்; தீயவர்கள் எப்பொழுதும் தண்டிக்கப்பட்டவர்களாகவே இருந்தனர்.

55. நம்பமறுத்துவிட்டவர்கள்தான் **கடவுள்**–ன் பார்வையில் மோசமான படைப்பினங்களாக இருக்கின்றனர்; அவர்கள் நம்பிக்கை கொள்ள இயலாது.

56. அவர்களுடன் நீங்கள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றீர்கள், ஆனால் ஒவ்வொரு முறையும் அவர்களுடைய ஒப்பந்தங்களை அவர்கள் மீறுகின்றனர்; அவர்கள் நன்னெறியாளர்கள் அல்லர்.

57. ஆகவே, போரில் அவர்களை நீங்கள் எதிர் கொள்வீர்களாயின், அவர்களுக்குப் பின்னால் வருபவர்களையும் அச்சுறுத்தித் தடுக்கின்றதொரு முன்னுதாரணமாக அவர்களை நீங்கள் அமைத்திட வேண்டும், அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

58. மக்களின் ஒரு கூட்டத்தாரால் நீங்கள் துரோகமிழைக்கப்படுகின்ற பொழுது, அவர்களுக்கெதிராக அதே விதமாக நீங்கள் ஒன்று திரள வேண்டும். துரோகமிழைப்பவர்களைக் **கடவுள்** விரும்புவதில்லை.

59. நம்பமறுப்பவர்களாகிய அவர்கள் அப்படியே தப்பிச் சென்று விடலாம் என்று நினைத்துக் கொள்ளாதிருக்கட்டும்; அவர்கள் ஒருபோதும் தப்பித்துக் கொள்ள இயலாது.

*நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்:*
*ஒரு தெய்வீகக் கட்டளை*

60. உங்களால் சேர்க்க இயன்ற அனைத்துச் சக்திகளையும், உங்களால் ஒன்று திரட்ட இயன்ற அனைத்துச் சாதனங்களையும், அவர்களுக்கெதிராக நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும், அதனால் **கடவுள்**–ன் விரோதிகள், உங்களுடைய விரோதிகள், அவ்வண்ணமே நீங்கள் அறிந்திராத மற்றவர்களையும் நீங்கள் அச்சுறுத்தலாம் என்பதற்காக; **கடவுள்** அவர்களை அறிவார். **கடவுள்**–ன் நிமித்தம் நீங்கள் செலவிடுகின்ற எதுவாயினும், சிறிதளவும் அநீதமின்றி, தாராளமாக உங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

61. அவர்கள் சமாதானத்தின்பால் தஞ்சமடைந்தால், நீங்களும் அவ்வாறே செய்ய வேண்டும், மேலும் **கடவுள்** மீது உங்களுடைய பொறுப்பை வையுங்கள். அவர்தான் செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

*நம்பிக்கையாளர்களுக்குக்*
*கடவுள் போதுமானவர்*

62. அவர்கள் உம்மை வஞ்சிக்க விரும்பினால், அப்போது **கடவுள்** உமக்குப் போதுமானவர், தன்னுடைய ஆதரவைக் கொண்டும், நம்பிக்கையாளர்களைக் கொண்டும் அவர் உமக்கு உதவியளிப்பார்.

63. *(நம்பிக்கையாளர்களுடைய)* இதயங்களை அவர் இணைக்கப்படுத்தி விட்டார், பூமியின் மீதுள்ள அத்தனை பணத்தையும் நீர் செலவிட்டிருந்தாலும், அவர்களுடைய இதயங்களை இணைக்கப்படுத்தியிருக்க உம்மால் இயலாது. ஆனால் **கடவுள்** அவர்களை இணைக்கப்படுத்தவே செய்தார். அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

64. நபியே உம்மைத்தான், **கடவுள்** உமக்குப் போதுமானவர், மேலும் உம்மைப் பின்பற்றிய நம்பிக்கையாளர்கள்.

65. நபியே உம்மைத்தான், சண்டையிடுவதற்கு நம்பிக்கையாளர்களை நீர் ஆர்வமூட்ட வேண்டும். உங்களில் உறுதிப்பாடுடைய இருபது நபர்கள் இருப்பார்களாயின், இருநூறு நபர்களை அவர்கள் தோற்கடிக்க இயலும், மேலும் உங்களில் ஒரு நூறு நபர்கள், நம்பமறுத்து விட்டவர்களில் ஓராயிரம் நபர்களைத் தோற்கடிக்க இயலும். அது ஏனெனில் அவர்கள் புரிந்து கொள்ளாத மக்களாக இருக்கின்றனர் என்பதேயாகும்.

66. இப்போது *(புதிய ஆட்கள் பலர் உங்களுடன்சேர்ந்து விட்டதனால்)* **கடவுள்** இதனை உங்களுக்கு மிகவும் எளிதாக ஆக்கிவிட்டார், ஏனெனில் நீங்கள் முன்னிருந்தது போல் அவ்வளவு வலிமையானவர்களாக இல்லை என்பதை அவர் அறிந்திருக்கின்றார். இது முதற்கொண்டு, உறுதிப்பாடுடைய ஒரு நூறு நம்பிக்கையாளர்கள் இருநூறு நபர்களைத் தோற்கடிக்க இயலும், மேலும் உங்களில் ஓராயிரம் நபர்கள், **கடவுள்**–ன் அனுமதி கொண்டு இரண்டாயிரம் நபர்களைத் தோற்கடிக்க இயலும். உறுதிப்பாட்டோடு தொடர்ந்திருப்பவர்களுடன் **கடவுள்** இருக்கின்றார்.

67. எந்த நபியும், சண்டையில் அவர் கலந்து கொண்டாலேயன்றி, கைதிகளைக் கையகப்படுத்திக் கொள்ளாதிருக்க வேண்டும். மக்களாகிய நீங்கள் இந்த உலகத்தின் பொருட்களைத் தேடுகின்றீர்கள், அதே சமயம் **கடவுள்** மறுவுலகத்தைப் பரிந்துரைக்கின்றார். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

68. **கடவுள்**–யிடமிருந்து முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு கட்டளை இல்லாதிருந்தால், நீங்கள் கையகப்படுத்திக் கொண்டதன் பொருட்டு பயங்கரமானதொரு தண்டனையில் நீங்கள் துன்புற்றிருப்பீர்கள்.

69. ஆகவே, நீங்கள் சம்பாதித்த போரின் வெற்றிப் பொருட்களில் அனுமதிக்கப்பட்டதும் நல்லதும் ஆனவற்றில் இருந்து உண்ணுங்கள், அத்துடன் **கடவுள்**–ஐக் கருத்தில் கொள்ளுங்கள். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

70. நபியே உம்மைத்தான், உங்கள் வசம் உள்ள போர்க் கைதிகளிடம் கூறுவீராக, "உங்கள் இதயங்களில் ஏதேனும் நல்லதைக் **கடவுள்** அறிந்திருப்பாராயின், நீங்கள் இழந்து விட்ட எந்த ஒன்றையும் விட மேலானதை அவர் உங்களுக்குத் தந்திருப்பார், அத்துடன் உங்களை மன்னித்தும் இருப்பார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

71. அன்றி அவர்கள் உமக்குத் துரோகமிழைக்க நாடினால், அவர்கள் ஏற்கெனவே **கடவுள்**–க்குத் துரோகமிழைத்து விட்டனர். இதனால்தான் அவர்களை நஷ்டவாளிகளாக அவர் ஆக்கினார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர். ஞானம் மிகுந்தவர்.

72. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டு, மேலும் புலம் பெயர்ந்து, அத்துடன் **கடவுள்**–ன் நிமித்தம் தங்களுடைய பணம் மற்றும் தங்களுடைய வாழ்வுகளால் பாடுபடுகின்றவர்களும், அவ்வண்ணமே அவர்களை உபசரித்து அடைக்கலம் தந்தவர்களும், அத்துடன் அவர்களுக்கு ஆதரவளித்தவர்களுமாகிய, அவர்கள் ஒருவர் மற்றொருவருக்குக் கூட்டாளிகள் ஆவர். நம்பிக்கை கொண்டு, ஆனால் உங்களுடன் புலம் பெயராதவர்களைப் பொறுத்தவரை, அவர்களும் புலம் பெயர்கின்றவரை, அவர்களுக்கு எந்த ஆதரவும் தர நீங்கள் கடமைப்பட்டவர்கள் அல்லர். ஆயினும், உங்களுடைய உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டால், உங்கள் மார்க்க சகோதரர்கள் என்ற முறையில், நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும், நீங்கள் ஒரு சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளவர்களுக்கு எதிராகவே தவிர. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் பார்ப்பவராகக் **கடவுள்** இருக்கின்றார்.

73. நம்பமறுத்தவர்கள் ஒருவர் மற்றொருவருக்குக் கூட்டாளிகளாக உள்ளனர். இந்தக் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடித்தாலேயன்றி, அங்கே பூமியில் கலவரமும் பயங்கரமான சீர்கேடுமே இருக்கும்.

74. நம்பிக்கை கொண்டு மேலும் புலம்பெயர்ந்தவர்கள், அத்துடன் **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபட்டவர்கள், மேலும் அவர்களை உபசரித்ததுடன் அவர்களுக்கு அடைக்கலமும் தந்தவர்கள், அன்றியும் அவர்களுக்கு ஆதரவளித்தவர்கள், இவர்கள்தான் உண்மையான நம்பிக்கையாளர்களாக உள்ளனர். அவர்கள் மன்னிப்பிற்கும் தாராளமானதொரு பிரதிபலனுக்கும் தகுதி பெற்றுவிட்டனர்.

75. அதன் பின்னர் நம்பிக்கை கொண்டு, மேலும் புலம் பெயர்ந்து அத்துடன் உங்களோடு பாடுபட்ட அவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களே. **கடவுள்**–ன் கட்டளைகளின் பிரகாரம் ஒருவருக்கொருவர் உறவினராக இருப்பவர்கள்தான் ஒருவர் மற்றவருக்கு ஆதரவளிப்பதில் முதன்மையாக இருத்தல் வேண்டும். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

****

## சூரா 9: இறுதி நிபந்தனை (பரா அஹ்)

*பிஸ்மில்லா இல்லை**

1. உங்களுடன் ஓர் உடன்படிக்கையில் பங்கெடுத்துக் கொள்கின்ற போலித் தெய்வ வழிபாடு செய்வோருக்கு **கடவுள்** மற்றும் அவருடைய தூதரிடமிருந்து ஓர் இறுதி நிபந்தனை இதில் வெளியிடப்படுகின்றது.

2. எனவே, சுதந்திரமாக நான்கு மாதங்கள் பூமியைச் சுற்றித்திரியுங்கள், அன்றி **கடவுள்**–யிடமிருந்து நீங்கள் தப்பித்து விட இயலாது என்பதையும், நம்பமறுப்பவர்களைக் **கடவுள்** இழிவுபடுத்துகின்றார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

**9:1 இந்த சூராவில் **பிஸ்மில்லாஹ்**வின் இடம் பெறாமை இந்த சூரா சிதைக்கப்பட்டுள்ளது என்பதற்குக் குர்ஆனை இயற்றியவரான எல்லாம் வல்லவரிடமிருந்து வந்துள்ள ஆழ்ந்ததோர் அடையாளமாக மட்டுமல்ல, அதற்கும் அப்பால் அது தன்னளவிலேயே பிரமிப்பூட்டுகின்ற ஓர் அற்புதமாகவும் திகழ்கின்றது. விபரங்களை பின் இணைப்பு 24 மற்றும் 29ல் காண்க.*

3. போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்களைக் **கடவுள்** கைவிட்டு விட்டார், அத்துடன் அவருடைய தூதரும் அவ்வாறே செய்து விட்டார் என்று புனித யாத்திரையின் மகத்தான நாள் அன்று மக்கள் அனைவருக்கும் **கடவுள்** மற்றும் அவருடைய தூதரிட மிருந்து ஒரு பிரகடனம் இதிலே வெளியிடப்படு கின்றது. எனவே, நீங்கள் பாவத்திற்கு வருந்தினால், அது உங்களுக்கு மேலானதாக இருக்கும். ஆனால் நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் **கடவுள்**–யிடமிருந்து நீங்கள் ஒருபோதும் தப்பித்து விட இய லாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம்பமறுப் பவர்களுக்கு வலிநிறைந்ததொரு தண்டனையை வாக்களிப்பீராக.

4. போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் உங்களுடன் ஓர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு அதனை மீறா மலும், அன்றி உங்களுக்கெதிராக மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து கொள்ளாமலும் இருந்தால், அவர் களுடனான உங்கள் உடன்படிக்கையைக் காலாவதி யாகும் தேதி வரை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். **கடவுள்** நன்னெறியாளர்களை நேசிக்கின்றார்.

5. புனித மாதங்கள் கடந்தவுடன் *(மேலும் அவர்கள் சமாதானம் செய்து கொள்ள மறுத்தால்)* போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களை நீங்கள் சண்டையில் எதிர்கொள்ளும் போது நீங்கள் அவர்களைக் கொல்ல லாம், அவர்களைத் தண்டிக்கலாம், அவர்கள் மேற் கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் எதிர்க் கலாம். அவர்கள் பாவத்திற்கு வருந்தி மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடித்து மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தையும் கொடுத்தால், நீங்கள் அவர்களைப் போக விட்டு விட வேண்டும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

6. போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களில் ஒருவர் பாதுகாப்புடன் கடந்து செல்லும் பாதையை உங்க ளிடம் வேண்டினால், அவருக்கு நீங்கள் பாதுகாப்பு டன் கடந்து செல்லும் பாதையை வழங்க வேண்டும், இவ்விதமாக, அவர் **கடவுள்**–ன் வார்த்தையைச் செவியேற்க முடியும், பின்னர் அவருடைய பாதுகாப் பான இடத்திற்கு திருப்பி அவரை அனுப்பி விடுங்கள். இது ஏனெனில் அவர்கள் அறியாத சமூகத்தினராய் இருக்கின்றனர்.

7. **கடவுள்**–யிடமும் அவருடைய தூதரிடமும் எந்த வாக்குறுதியையும் போலித் தெய்வ வழிபாடு செய்ப வர்கள் எப்படிக் கேட்க முடியும்? புனிதப் பள்ளியில் உங்களோடு ஒரு சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்கள் விதிவிலக்காவார்கள். இத்தகையதொரு உடன்படிக்கையை அவர்கள் மதித்து, மேலும் அதனை காப்பாற்றினால், நீங்களும் அதனை அவ்வாறே காப்பாற்ற வேண்டும். **கடவுள்** நல்லோரை நேசிக்கின்றார்.

8. வெற்றி கொள்ளும் ஒரு சந்தர்ப்பம் எப்பொழுதாவது அவர்களுக்குக் கிடைக்கும் பட்சத்தில், உங்களுக் கும் அவர்களுக்கும் இடையில் உள்ள சொந்தபந்தத் தின் எந்த உரிமைகளையோ, அல்லது எந்த உடன் படிக்கையையோ அவர்கள் ஒருபோதும் கடைப்பிடிக் காதபோது, எப்படி அவர்களால் *(ஒரு வாக்குறுதியைக் கேட்க)* முடியும். அவர்கள் உதட்டளவில் உங்களைச் சமாதானப்படுத்தினார்கள், அதே சமயம் அவர்களு டைய இதயங்களோ எதிர்ப்பில் இருந்தன. மேலும் அவர்களில் அதிகமானோர் தீயவர்கள் ஆவர்.

9. அவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஓர் அற்ப விலைக்கு வணிகம் செய்து விட்டனர். அதன் பின் விளைவாக, மக்களை அவருடைய பாதையில் இருந்து துரத்தினர். அவர்கள் செய்தது உண்மையில் துக்ககரமானது!

10. அவர்கள் எந்த நம்பிக்கையாளரிடத்தும் சொந்த பந்தத்தின் எந்த உரிமைகளையும், ஒருபோதும் கடைப் பிடிப்பதில்லை, அன்றி அவர்களுடைய எந்த உடன்படிக்கைகளையும் அவர்கள் காப்பாற்றுவது மில்லை; இவர்கள்தான் மெய்யாகவே வரம்புமீறியவர் கள் ஆவார்கள்.

*பாவத்திற்கு வருந்துதல்: பலகையைத் துடைத்தல்*

11. அவர்கள் பாவத்திற்கு வருந்தி மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடித்து, மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுத்து வந்தால், அப்போது அவர்கள் உங்களுடைய மார்க்க சகோதரர் கள் ஆவார்கள். அறிந்து கொண்ட மக்களுக்கு இவ் வாறு நாம் இந்த வெளிப்பாடுகளை விவரிக்கின் றோம்.

12. தங்களுடைய உடன்படிக்கைகளைக் காப்பதாக வாக் குறுதி செய்து விட்டுப் பின்னர், தங்களுடைய சத்தி யப்பிரமாணங்களை மீறியவர்களாக, உங்களுடைய மார்க்கத்தை அவர்கள் தாக்கினால், நம்பிக்கையற்ற வர்களின் தலைவர்களுடன் நீங்கள் போரிடலாம் – அவர்களுடனான உங்களுடைய உடன் படிக்கைக்கு அதற்கு மேலும் நீங்கள் கட்டுப்பட்டவர்கள் இல்லை – அவர்கள் விலகிக் கொள்ளும் பொருட்டு.

13. தங்கள் உடன்படிக்கைகளை மீறி, தூதரை ஊரை விட்டு வெளியேற்ற முயன்றதோடன்றி அவர்கள் தான் போரை முதலில் துவக்கியவர்கள், என்ற போ தும் இம்மக்களுடன் நீங்கள் சண்டையிட மாட்டீர் களா? அவர் களுக்கு நீங்கள் பயப்படுகின்றீர்களா? நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நீங்கள் அஞ்ச வேண்டிய ஒருவர் **கடவுள்** தான்.

14. நீங்கள் அவர்களுடன் சண்டையிட வேண்டும், ஏனெ னில் **கடவுள்** உங்கள் கரங்களால் அவர்களைத் தண்டிப்பார், அவர்களை இழிவுபடுத்துவார், அவர்கள் மேல் உங்களுக்கு வெற்றி வழங்குவார், மேலும் நம்பிக்கையாளர்களின் நெஞ்சங்களைக் குளிரச் செய்வார்.

15. இன்னும் நம்பிக்கையாளர்களின் இதயங்களில் உள்ள கோபத்தையும் அவர் நீக்கி விடுவார். தான் நாடியோ ரைக் **கடவுள்** மீட்டுக் கொள்கின்றார். **கடவுள்** எல் லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*தவிர்த்து விட இயலாத சோதனை*

16. உங்களில் பாடுபடுகின்றவர்களையும், **கடவுள்**–ன் விரோதிகளுடனோ, அல்லது அவருடைய தூதரின் விரோதிகளுடனோ, அல்லது நம்பிக்கையாளர்களின் விரோதிகளுடனோ தங்களை ஒருபோதும் கூட்டாக் கிக் கொள்ளாதவர்களையும், **கடவுள்** பிரித்தடையா ளம் காட்டாமல் நீங்கள் தனித்து விட்டு விடப்படுவீர் கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்களா ? நீங் கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

17. போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் தங்களு டைய நம்பமறுத்தலை ஒப்புக்கொள்கின்ற நிலையில், **கடவுள்**–ன் பள்ளிவாசல்களுக்கு அடிக்கடி வருவதற் கில்லை. இத்தகையவர்கள் தங்களுடைய காரியங் களைப் பயனற்றதாக்கி விட்டார்கள், மேலும் அவர் கள் என்றென்றும் நரகத்தில் தங்கியிருப்பார்கள்.

18. **கடவுள்**–ன் பள்ளிவாசல்களுக்கு அடிக்கடி வரக் கூடிய ஒரே மக்கள், **கடவுள்** மற்றும் இறுதி நாள் மீது நம்பிக்கை கொண்டு, மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடித்து, அத்துடன் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுத்து, அன்றி **கடவுள்** –ஐத் தவிர எதற்கும் அஞ்சாதவர்களேயாவர். இவர்கள் நிச்சயமாக வழிநடத்தப்பட்டவர்களில் இருப்பார்கள்.

*அரேபியர்களுக்கு கேள்விக்கணை*

19. புனித யாத்திரீகர்களுக்குத் தண்ணீர் புகட்டுவதை யும் புனிதப்பள்ளியின் மீது அக்கறை கொள்வதையும், **கடவுள்** மற்றும் இறுதிநாளின் மீது நம்பிக்கை கொண்டு **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுவதற்குப் பகர மாகக் கருதிக்கொண்டு விட்டீர்களா ? **கடவுள்**–ன் பார்வையில் அவை சமமானவையல்ல. தீயமக்க ளைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

*நற்செய்தி*

20. நம்பிக்கை கொண்டு, மேலும் புலம் பெயர்ந்து, அத்து டன் **கடவுள்**–ன் நிமித்தம் தங்களுடைய பணத்தை யும் வாழ்வையும் கொண்டு பாடுபடுகின்றவர்கள் **கடவுள்**–ன் பார்வையில் மிகவும் மகத்தான அந்தஸ் தில் உள்ளனர். இவர்கள்தான் வெற்றியாளர்கள்.

21. அவர்களுடைய இரட்சகர் அவர்களுக்கு நற்செய்தி தருகின்றார்: அவரிடமிருந்து கருணையும் அங்கீகார மும், அத்துடன் என்றென்றும் நிலைத்திருக்கும் பேரா னந்தத்தில் அவர்கள் களிப்புற்றிருக்கின்ற தோட்டங் களும்.

22. நிரந்தரமாக அங்கே அவர்கள் தங்கியிருப்பார்கள். மகத்தான பிரதிபலனைக் **கடவுள்** தன் வசம் கொண் டுள்ளார்.

*நீங்கள் ஒரு தேர்வைச்*
*செய்தாக வேண்டுமென்றால்*

23. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உங் களுடைய பெற்றோர்கள் மற்றும் உடன்பிறந்தோருட னும் கூட, நம்பிக்கை கொள்ளுதலை விடவும் நம்ப மறுத்தலை அவர்கள் விரும்புவார்களாயின், நீங்களா கவே கூட்டு வைத்துக் கொள்ளாதீர்கள். அவர்களு டன் தாங்களாகவே கூட்டு வைத்துக் கொள்கின்ற வர்கள் வரம்புமீறிக்கொண்டு இருக்கின்றனர்.

*முக்கியத்துவம் வாய்ந்த அளவுகோல்**

24. பிரகடனிப்பீராக: "உங்களுடைய பெற்றோர்கள், உங் கள் குழந்தைகள், உங்கள் உடன்பிறந்தோர், உங்களு டைய வாழ்க்கைத் துணைகள், உங்களுடைய குடும்பம், நீங்கள் சம்பாதித்துள்ள பணம், நீங்கள் கவலைப்படு கின்ற ஒரு வியாபாரம், மற்றும் நீங்கள் மிகவும் வாஞ் சையுடனிருக்கின்ற இல்லங்கள் ஆகியவை **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்,** மேலும் அவர் நிமித்தம் பாடுபடுதலை விடவும் உங்கள் நேசத்திற்குரியவை யாக இருக்குமாயின், அப்போது **கடவுள்** தன் தீர்ப்பை கொண்டு வருகின்ற வரை சற்றே காத்திருங்கள்." தீய சமூகத்தாரைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

**9:24 மெய்யாகவே நம்பிக்கை கொண்டு மேலும் வழிபாட்டினைக் கடவுளுக்கு மட்டும் அர்ப்பணித்தலுக்குப் பாதகமான வையே எந்த மனிதனையும் சூழ்ந்து கொண்டுள்ளதனால், (12:103, 106) ஒரு குடும்பம் மொத்தமும் நம்பிக்கை கொண்டி ருப்பதைக் காண்பது உண்மையில் சாத்தியமற்றதாகவே உள்ளது. எனவே அதிகமான நம்பிக்கையாளர்கள் இத்தேர்வினைச் சந்தித்துள்ளனர்: "ஒன்று நான் அல்லது கடவுளும் அவருடைய தூதரும்." நம்பிக்கையாளர்களின் வாழ்க்கைத் துணை களாலோ, அல்லது அவர்களுடைய பெற்றோர்கள், அவர்களுடைய பிள்ளைகள் போன்றவர்களால் இந்தத் தேர்வானது தவறாமல் கூறப்படுகின்றது. தவறாமல், நம்பிக்கையாளர்கள் சரியான தேர்வையே செய்தனர். இது நம்பிக்கையாளர்கள் அனைவருக்குமுரிய கட்டாயமான சோதனையாக உள்ளது (29:2).*

***9:24 இக்குர்ஆனுடைய, கணித ரீதியிலான நிரூபணம் கடவுளின் உடன்படிக்கைத் தூதரைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டு கின்றது. "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலீபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725), வசன எண்ணான (24) ஐயும் நாம் கூட்டினால், நமக்குக் கிடைப்பது, 505+725+24=1254=19x66.*

25. பற்பல சூழ்நிலைகளில் **கடவுள்** உங்களுக்கு வெற்றியை அளித்துள்ளார். ஆனால் ஹீனைனுடைய தினத்தன்று, உங்களுடைய மாபெரும் எண்ணிக்கை குறித்து நீங்கள் மிகவும் பெருமை கொண்டவர்களானீர்கள். எனவே, அது உங்களுக்கு எவ்வகையிலும் உதவிடவில்லை, அத்துடன் விசாலமான இந்தப் பூமி, நீங்கள் புறங்காட்டித் திரும்பித் தப்பியோடும் அளவுக்கு, உங்களைச் சுற்றிலும் மிகவும் குறுகியதாக ஆகிவிட்டது.

26. பின்னர் **கடவுள்** தன் தூதர் மீதும் நம்பிக்கையாளர்கள் மீதும் திருப்தியை இறக்கி அனுப்பினார். அத்துடன் காணமுடியாப் படைவீரர்களையும் அவர் இறக்கி அனுப்பினார்; இவ்விதமாக நம்பமறுத்தவர்களை அவர் தண்டித்தார். நம்பமறுப்பவர்களுக்குரிய கூலி இதுவேயாகும்.

27. இறுதியாக, தான் நாடுகின்ற எவரையும் **கடவுள்** மீட்டுக்கொள்கின்றார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

28. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் களங்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்; இந்த வருடத்திற்குப் பின் புனிதப்பள்ளியை நெருங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படாதிருக்க வேண்டும். வருவாய் இழப்பை நீங்கள் அஞ்சுவீர்களாயின், **கடவுள்** தன்னுடைய நாட்டத்திற்கேற்ப, தன் வாழ்வாதாரங்களை உங்கள் மீது பொழிவார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

29. **கடவுள்** மீதோ, அன்றி இறுதி நாளின் மீதோ நம்பிக்கை கொள்ளாதவர்கள், அன்றியும் **கடவுள்**–ம் அவருடைய தூதரும் தடுத்து விட்டவற்றைத் தடுத்துக் கொள்ளாதவர்கள், அன்றியும் சத்திய மார்க்கத்தின் படி வாழாதவர்கள் – வேதத்தைப் பெற்றுக் கொண்டவர்களில் – ஆகியோருக்கெதிராக நீங்கள் திருப்பிச் சண்டையிடுதல் வேண்டும், விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ, அவர்கள் உரிய வரியைச் செலுத்தும் வரை.

*இறை நிந்தனைகள்*

30. யூதர்கள் கூறினர், "எஸ்ரா **கடவுள்**–ன் மகனாவார்," அதே சமயம் கிறிஸ்துவர்கள் கூறினர் "ஜீஸஸ் **கடவுள்**–ன் மகனாவார்!" இவை அவர்களுடைய வாய்களால் உதிர்க்கப்பட்ட இறைநிந்தனைகளே யாகும். இவ்விதமாக அவர்கள் கடந்த காலத்தில் நம்பமறுத்தவர்களுடைய இறை நிந்தனைகளுக்கு ஈடு செய்கின்றனர். **கடவுள்** அவர்களைக் கண்டனம் செய்கின்றார். அவர்கள் நிச்சயமாக விலகிச் சென்று விட்டனர்.

*கடவுளின் போதனைகளுக்குப்*
*பதிலாக மார்க்கத் தலைவர்களின்*
*போதனைகளை ஆதரித்தல்*

31. **கடவுள்**–க்குப் பதிலாக, தங்களுடைய மார்க்கத் தலைவர்களையும் அறிஞர்களையும் எஜமானர்களாக* அவர்கள் அமைத்துக் கொண்டனர். மற்றவர்கள் மேரியின் மகனான, ஜீஸஸுக்கு தெய்வீகத் தன்மையைச் சுமத்தினர். அவர்கள் அனைவரும் ஓர் இறைவனை மட்டுமே வழிபடக் கட்டளையிடப்பட்டிருந்தனர். அவரைத் தவிர இறைவன் இல்லை. எந்த பங்குதாரர்களைக் கொண்டிருப்பதற்கும் மிகவும் மேலாக, அவர் துதிப்பிற்குரியவர்.

32. அவர்கள் **கடவுள்**–ன் ஒளியினைத் தங்களுடைய வாய்களால் அணைத்துவிட விரும்புகின்றனர், ஆனால் நம்பமறுப்பவர்கள் வெறுத்த போதிலும், **கடவுள்** தன்னுடைய ஒளியினைப் பூரணப்படுத்துவதில் உறுதியுடனிருக்கின்றார்.

**9:31 நிரூபிக்கப்பட்டுவிட்ட இந்த வேதத்தில் போதிக்கப்பட்டுள்ளபடி, கடவுளை மட்டும் வழிபடுதல், அத்துடன் கடவுளுடைய வார்த்தைகளை மட்டும் ஆதரித்தலைப் பற்றி "முஸ்லிம் அறிஞர்" களிடம் நீங்கள் ஆலோசிப்பீர்களாயின், அதற்கு எதிராகவே அவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறுவார்கள். ஜீஸஸின் அசலான தன்மையைப் பற்றி நீங்கள் போப்பிடம் ஆலோசிப்பீர்களாயின், திரித்துவம் ஒன்றை ஆதரிக்கும்படி அவர் உங்களுக்கு அறிவுரை கூறுவார். கடவுளின் போதனைகளுக்கு மாற்றமான "முஸ்லிம் அறிஞர்" களின் அறிவுரைக்கு நீங்கள் கீழ்ப்படிந்தாலோ, அல்லது கடவுளுடையதற்குப் பதிலாக போப்பின் அறிவுரையை ஏற்றுக் கொண்டாலோ, நீங்கள் கடவுளுக்குப் பதிலாக இத்தகைய சமயத் தலைவர்களை தெய்வங்களாக அமைத்துக் கொண்டு விட்டீர்கள்.*

*"சரணடைதல்" மிகைக்குமென விதிக்கப்பட்டுள்ளது.**

33. அவர்தான் வழிகாட்டல் மற்றும் சத்திய மார்க்கத்தைக் கொண்டு தன் தூதரை* அனுப்பியவர், மேலும் போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் வெறுத்த போதிலும், அனைத்து மார்க்கங்களுக்கும் மேலான ஆதிக்கமுள்ளதாக அதனை அவர் ஆக்குவார்.

*தொழில்முறை மார்க்கவாதிகளிடம் விழிப்புடனிருங்கள்*

34. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், மார்க்கத் தலைவர்கள் மற்றும் போதகர்கள் பலர் மனிதர்களுடைய பணத்தைத் தவறான முறையில் உட்கொள்கின்றனர், மேலும் **கடவுள்**–ன் பாதையிலிருந்து விரட்டுகின்றனர். எவர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் பதுக்கிவைத்துக் கொண்டு, **கடவுள்**–ன் நிமித்தம் அதனைச் செலவிடாதிருக்கின்றனரோ, அவர்களுக்கு வலி நிறைந்ததொரு தண்டனையை வாக்களிப்பீராக.

35. அவர்களுடைய தங்கமும் வெள்ளியும் நரக நெருப்பில் சூடாக்கப்பட்டு, பின்னர் அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாப்புறங்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடு போடப் பயன்படுத்தப்படுகின்ற அந்நாள் வரும்: "இது தான் உங்களுக்காக நீங்கள் பதுக்கி வைத்தது, எனவே நீங்கள் பதுக்கி வைத்தவற்றைச் சுவையுங்கள்."

*கடவுளின் வழிமுறை: வருடமொன்றுக்குப் பன்னிரண்டு மாதங்கள்**

36. **கடவுள்**–ஐப் பொறுத்த அளவில், மாதங்களின் எண்ணிக்கையானது, பன்னிரண்டு* ஆகும். வானங்களையும் பூமியையும் அவர் படைத்த நாள் முதல், இதுவே **கடவுள்**–ன் விதிமுறையாக இருந்து வந்துள்ளது. அவற்றில் நான்கு புனிதமானவையாகும். இதுவே பூரணமான மார்க்கமாகும்; புனித மாதங்களின் போது *(சண்டையிடுவதன் மூலம்)* உங்களுடைய ஆத்மாக்களுக்கு நீங்கள் அநீதமிழைத்துக் கொள்ள வேண்டாம். ஆயினும், உங்களுக்கெதிராக அவர்கள் முழுமையான போரைப் பிரகடனப்படுத்தினால், *(புனித மாதங்களின் போது கூட)*, போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களுக்கு எதிராக முழுமையான போரை நீங்கள் பிரகடனப்படுத்தலாம், மேலும் **கடவுள்** நன்னெறியாளர்களின் பக்கம் இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

*புனித மாதங்களை மாற்றியமைத்தல்**

37. புனித மாதங்களை மாற்றியமைத்துக் கொள்ளுதல் மிதமிஞ்சிய நம்பமறுப்பின் ஓர் அடையாளமேயாகும்; நம்பமறுத்தவர்களின் வழிதவறுதலை அது அதிகரிக்கின்றது. **கடவுள்**–ஆல் புனிதப் படுத்தப்பட்டுள்ள மாதங்களின் எண்ணிக்கையைத் தக்கவைத்துக் கொள்கின்ற அதே சமயம், புனித மாதங்களையும் வாடிக்கையான மாதங்களையும் அவர்கள் மாற்றியமைத்துக் கொள்கின்றனர். இவ்விதமாக அவர்கள் **கடவுள்** புனிதப் படுத்தியவற்றை அவமரியாதை செய்கின்றனர். அவர்களுடைய தீய காரியங்கள் அவர்களுடைய கண்களுக்கு அலங்காரமாக்கப்பட்டுள்ளன. நம்பமறுக்கின்ற சமூகத்தாரைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

38. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், "**கடவுள்**–ன் நிமித்தம் தயாராகுங்கள்," என்று உங்களிடம் கூறப் படுகையில், ஏன் நீங்கள் பூமியுடன் அழுத்தமாக ஒட்டிக் கொள்கின்றீர்கள்? மறுவுலகத்தின் இடத்தில் இந்த உலகாதாய வாழ்வை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டீர்களா? இந்த உலகத்தின் பொருட்களானவை, மறுவுலகத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது ஒன்றுமற்றவையாகவே உள்ளன.

---

**9:33* இந்த அறிக்கை, எழுத்துக்கு எழுத்து, இங்கும் *61:9* லும் இடம் பெறுகின்றது "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்பை *(505)* தொடர்ந்து "கலீபா" வின் எழுத்தெண் மதிப்பையும் *(725)*, தொடர்ந்து இந்த அறிக்கை இடம் பெறுகின்ற சூரா மற்றும் வசன எண்களை *(9:33 & 61:9)* எழுதினால் நாம் பெறுவது *505725933619*, *19*ன் ஒரு பெருக்குத் தொகை. இங்கே தூதர் எனப்படுவது ரஷாத் கலீஃபாதான் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது. கூடுதலாக, *9:33* முதல் *61:9* வரையுள்ள வசனங்கள் *(3902)* *+9+33+61+9* ரஷாத் கலீஃபாவின் எழுத்தெண் மதிப்பும் *(1230)* கூட்டப்பட்டால் அது தருவது *5244*, இதுவும் *19*ன் பெருக்குத் தொகையேயாகும். *9:33* மற்றும் *61:9*ன் எழுத்தெண் மதிப்பு, ஒவ்வொரு எழுத்தின் மதிப்புகளையும் கூட்டுதலின் மூலம் கணக்கிடப்பட்டது, *7858* ஆகும். இந்த எண்ணுடன் இவ்விரு வசனங்களிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கையைக் *(120)* கூட்டி, அத்துடன் *9:33* முதல் *61:9* வரையிலான வசனங்களின் எண்ணிக்கையைக் *(3902)* கூட்டி, அத்துடன் "ரஷாத் கலீஃபாவின்" எழுத்தெண் மதிப்பையும் *(1230)*, நாம் கூட்டுவதன் மூலம் நமக்குக் கிட்டுவது *7858+120+3902+1230= 13110=19x690*. பார்க்க பின் இணைப்புகள் *1,2*, மற்றும் *26*.*

**9:36* "மாதம்" எனும் வார்த்தை இக்குர்ஆனில் *12* முறையும் மேலும் "நாள்" *365* முறையும் குறிப்பிடப்படுகின்றது.*

**9:37* சீர் கெட்டுப் போய்விட்ட முஸ்லிம் உலகத்தின் கூற்றுப்படி, புனித மாதங்களானவை ரஜப், ஜுல்–காயிதா, ஜுல் ஹிஜ்ஜஹ் மற்றும் முஹர்ரம் ஆகியவையாகும். (இஸ்லாமிய வருடத்தின் *7*வது *11*வது *12*வது *1*வது மாதங்கள்). ஆயினும், கவனம் நிறைந்ததொரு குர்ஆன் ஆய்வு, அவை ஜுல்–ஹிஜ்ஜஹ், முஹர்ரம், ஸஃபர், மற்றும் ரபிI (*12*வது, *1*வது , *2*வது மற்றும் *3*வது மாதங்கள்) ஆகத்தான் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது. பார்க்க பின் இணைப்பு *15*.*

39. நீங்கள் போருக்குத் தயாரானாலேயன்றி, வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உங்களை அவர் உட்படுத்துவார், அத்துடன் உங்களுடைய இடத்தில் வேறு மக்களை அவர் மாற்றியமைத்து விடுவார்; நீங்கள் ஒருபோதும் அவருக்குச் சிறிதளவும் தீங்கிழைத்திட இயலாது. **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

*கண்களுக்குத் தென்படாத,*
*கடவுளின் படைவீரர்கள்*

40. *(தூதராகிய)* அவருக்கு நீங்கள் ஆதரவளிக்கத் தவறினால், **கடவுள்** ஏற்கெனவே அவருக்கு ஆதரவளித்து விட்டார். எவ்வாறெனில், நம்பமறுப்பவர்கள் அவரைத் துரத்திய போது, குகையினுள் இருவரில் ஒருவராக அவர் இருந்தபொழுது, அவர் தன் தோழரிடம் கூறினார், "கவலை கொள்ளாதீர்; **கடவுள்** நம்முடன் இருக்கின்றார்." பின்னர் **கடவுள்** திருப்தியையும் பாதுகாப்பையும் அவர் மீது இறக்கி அனுப்பினார், அத்துடன் கண்களுக்குத் தென்படாத படைவீரர்களைக் கொண்டு அவருக்கு ஆதரவளித்தார். நம்பமறுப்பவர்களின் வார்த்தையை அவர் மிகவும் கீழானதாக்கினார். **கடவுள்**–ன் வார்த்தைகள் மேலதிகாரத்துடன் அரசாள்கின்றது. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*சிறந்த நம்பிக்கையாளர்கள்*
*கடவுளின் நிமித்தம் பாடுபடுகின்றனர்*

41. இலேசானதோ அல்லது கனமானதோ நீங்கள் உவப்புடன் போருக்குத் தயாராக வேண்டும், மேலும் உங்களுடைய பணம் மற்றும் உங்களுடைய வாழ்வைக் கொண்டு **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுங்கள். நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், இதுவே உங்களுக்கு மேலானதாகும்.

*உட்கார்ந்து கொண்டவர்கள்*

42. விரைவானதொரு பொருள் சார்ந்த இலாபமும், குறுகியதொரு பயணமுமாக அது இருந்திருந்தால், அவர்கள் உம்மைப் பின்பற்றியிருப்பார்கள். ஆனால் பாடுபடுதலானது அவர்களுக்கு சற்றே மிகவும் அதிகமானதாக இருக்கின்றது. அவர்கள் **கடவுள்** மீது சத்தியமிடுவார்கள்: "எங்களால் இயன்றிருந்தால், நாங்கள் உங்களுடன் போருக்குப் புறப்பட்டிருப்போம்." இவ்விதமாக அவர்கள் தங்களுக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றனர், மேலும் அவர்கள் பொய்யர்களாக உள்ளனர் என்பதைக் **கடவுள்** அறிகின்றார்.

43. **கடவுள்** உம்மை பிழைபொறுத்து விட்டார்: பொய்யர்களில் இருந்து உண்மையாளர்களை நீர் பிரித்தடையாளம் காண இயலும் முன்னர் *(பின்னால் தங்கிக் கொள்ள)* அவர்களுக்கு ஏன் நீர் அனுமதி கொடுத்தீர்?

44. மெய்யாகவே **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் தங்களுடைய பணம் மற்றும் வாழ்வுகளைக் கொண்டு பாடுபடுவதற்குரிய வாய்ப்பைத் தவிர்த்துக் கொள்ள உம்மிடம் அனுமதி கேட்க மாட்டார்கள். நன்னெறியாளர்களைப் பற்றிக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

45. விலக்களிக்கப்பட விரும்புகின்ற ஒரே மக்கள் எவரென்றால் **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது உண்மையாக நம்பிக்கை கொள்ளாதவர்களேயாவர். அவர்களுடைய இதயங்கள் சந்தேகம் நிரம்பியவையாக இருக்கின்றன, மேலும் அவர்களுடைய சந்தேகங்களே அவர்கள் தடுமாறக் காரணமாகின்றன.

46. மெய்யாகவே போருக்குப் புறப்பட அவர்கள் விரும்பியிருந்தால், அதற்காக அவர்கள் முழுமையாகத் தயார் செய்து கொண்டு இருந்திருப்பார்கள். ஆனால் **கடவுள்** அவர்களுடைய பங்களிப்பை விரும்ப வில்லை, எனவே அவர்களை அவர் ஊக்கம் குன்றச் செய்தார்; அவர்கள் கூறப்பட்டார்கள், "பின்னால் தங்கியிருப்பவர்களுடன் பின்னால் தங்கியிருங்கள்."

47. அவர்கள் உங்களுடன் போருக்குப் புறப்பட்டிருந்தால், அவர்கள் குழப்பத்தை உண்டாக்கி விட்டிருப்பார்கள், மேலும் உங்களுக்கிடையில் சச்சரவுகளுக்கும் பிளவுகளுக்கும் காரணமாகி இருப்பார்கள். உங்களில் சிலர் அவர்களுக்குச் செவிசாய்க்கக் கூடியவர்களாகவே இருந்தனர். வரம்புமீறுகின்றவர்களைப் பற்றிக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

48. கடந்த காலத்தில் உங்களுக்கிடையில் குழப்பத்தை அவர்கள் உண்டாக்க முயன்றார்கள், மேலும் உங்களுடைய விவகாரங்களைப் புரட்டியும் விட்டார்கள். எப்படியிருப்பினும், இறுதியில் சத்தியம் மிகைக்கின்றது, மேலும் அவர்கள் வெறுத்தாலும் **கடவுள்**–ன் திட்டம் நிறைவேற்றப்படுகின்றது.

49. அவர்களில் சிலர் கூறக்கூடும், "*(பின்னால் தங்கிக் கொள்ள)* எனக்கு அனுமதி தாருங்கள்; இத்தகையதொரு கஷ்டத்தை என் மீது சுமத்தாதீர்கள்." உண்மையில், இவ்விதமாக அவர்கள் பயங்கரமானதொரு கஷ்டத்திற்கு உள்ளாகிக் கொண்டார்கள்; நம்பமறுப்பவர்களை நரகம் சூழ்ந்து கொண்டுள்ளது.

50. உமக்கு ஏதேனும் நல்லது நிகழ்ந்தால், அவர்கள் புண்படுகின்றார்கள், ஆனால் உமக்கு ஒரு துன்பம் நேரிட்டால், களிப்புற்றவாறு திரும்பிச் சென்றவர்களாக, அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள்தான் அவ்வாறு சொன்னோமே."

51. கூறுவீராக, "**கடவுள்** எங்களுக்கென்று விதித்துள்ளவற்றைத் தவிர, எந்த ஒன்றும் எங்களுக்கு நேரிடாது. அவரே எங்களுடைய இரட்சகரும் அதிபதியுமாக இருக்கின்றார். நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீது பொறுப்பேற்படுத்த வேண்டும்."

52. கூறுவீராக, "*(வெற்றி அல்லது வீரமரணமாகிய)* இரண்டு நல்ல விஷயங்களில் ஒன்றை மட்டுமே எங்களுக்கு எதிர்பார்க்க உங்களால் இயலும், அதே சமயம் நாங்கள் உங்களுக்குக் **கடவுள்**–யிடமிருந்து கண்டனத்தையும் அத்துடன் அவரிடமிருந்தோ அல்லது எங்களுடைய கரங்களினாலோ தண்டனையையுமே எதிர்பார்க்கின்றோம். எனவே, காத்திருங்கள், நாங்களும் உங்களுடன் சேர்ந்து காத்துக் கொண்டிருப்போம்."

53. கூறுவீராக,"விருப்பத்துடனோ அல்லது விருப்ப மின்றி யோ, செலவிடுங்கள். எதுவும் உங்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது, ஏனெனில் நீங்கள் பாவிகளான சமுதாயமாக இருக்கின்றீர்கள்."

*முஹம்மதுக்கு முன்னரே*
*தொடர்புத் தொழுகை இருந்தது**

54. அவர்களுடைய செலவிடுதல் ஏற்றுக்கொள்ளப் படுவதைத் தடுத்தது என்னவென்றால் அவர்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொள்ள மறுத்து விட்டனர் என்பதேயாகும், மேலும் *(ஸலாத்)** தொடர்புத் தொழுகைகளை அவர்கள் கடைப்பிடித்த போது, அவர்கள் சோம்பலுடனே அவற்றைக் கடைப்பிடித்தார்கள், மேலும் தர்மத்திற்கென அவர்கள் கொடுத்த போது, மனமின்றியே அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

*போலியான உலகியல் வெற்றி*

55. அவர்களுடைய பணத்தாலோ அல்லது அவர்களுடைய பிள்ளைகளாலோ மனங்கவரப்பட்டு விடாதீர்கள். இந்த வாழ்வில் அவர்களுடைய தண்டனையின் மூலாதாரங்களாகவும், அத்துடன் *(அவர்கள் மரணிக்கின்ற போது)* நம்பமறுப்பவர்களாக அவர்கள் இருக்கின்ற சமயம் அவர்களுடைய ஆத்மாக்கள் பிரிந்து செல்வதற்காகவும் **கடவுள்** அவற்றைக் காரணமாக்குகின்றார்.

56. உங்களுடன் சேராதவர்களாக அவர்கள் உள்ள அதேசமயம், அவர்கள் உங்களுடன் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் **கடவுள்** மீது ஆணையிடுகின்றனர்; அவர்கள் பிளவுண்டாக்கும் கூட்டத்தினராக உள்ளனர்.

57. ஒரு புகலிடத்தையோ, அல்லது குகைகளையோ, அல்லது பதுங்கிக் கொள்கின்றதோர் இடத்தையோ அவர்கள் காண இயலுமாயின், விரைந்து அவர்கள் அதன் பால் சென்று விடுவார்கள்.

58. அவர்களில் சிலர் உம்முடைய தர்மப்பங்கீட்டினை விமர்சிக்கின்றனர்; அதிலிருந்து கொடுக்கப்பட்டால், அவர்கள் திருப்தியடைந்தவர்களாகி விடுகின்றனர், ஆனால் அதிலிருந்து அவர்களுக்கு கொடுக்கப்படவில்லையென்றால், அவர்கள் ஆட்சேபிப்பவர்களாகி விடுகின்றனர்.

59. **கடவுள்**–ம் அவருடைய தூதரும் அவர்களுக்குக் கொடுத்தவற்றைக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்திருக்க வேண்டும். அவர்கள் கூறியிருக்க வேண்டும், "**கடவுள்** எங்களுக்குப் போதுமானவர். **கடவுள்** அவருடைய கொடைகளில் இருந்து எங்களுக்கு வழங்கிடுவார், அத்துடன் அவருடைய தூதரும் அவ்வாறே செய்வார். நாங்கள் **கடவுள்**–ஐ மட்டுமே தேடியவர்களாக உள்ளோம்."

*தர்மங்களுக்குரிய பங்கீட்டு வழிமுறை*

60. தர்மங்களானவை, ஏழைகள், தேவையுடையவர்கள், அவற்றைத் திரட்டுகின்ற பணியாளர்கள், புதிதாக மதம் மாறியவர்கள், அடிமைகளை விடுதலை செய்வதற்கு, திடீர் செலவினங்களால் சுமத்தப்பட்டவர்களுக்கு, **கடவுள்**–ன் நிமித்தமாக, மற்றும் பயணத்திலுள்ள அந்நியர்களுக்குச் சென்றிட வேண்டும். **கடவுள்**–ன் கட்டளை இதுவேயாகும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

61. "அவர் எல்லாவற்றையும் செவியேற்றுக் கொள்கின்றார்!" எனக் கூறுவதன் மூலம் அவர்களில் சிலர் நபியைப் புண்படுத்துகின்றனர். கூறுவீராக, "அவர் உங்களிடம் கவனத்துடன் செவியேற்கின்றார் என்பது உங்களுக்கு மேலானதாகவே உள்ளது. அவர் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்றார், மேலும் நம்பிக்கையாளர்களை நம்புகின்றார். உங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஒரு கருணையாகவே அவர் உள்ளார். "**கடவுள்**–ன் தூதரைப் புண்படுத்துகின்றவர்கள் வலிநிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

62. அவர்கள் மெய்யாகவே நம்பிக்கையாளர்களாக இருப்பார்களானால், திருப்திப்படுத்துவதற்கு அதிகம் தகுதியுடையவர்களாக **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் இருக்கின்ற போது, உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர்கள் உங்களிடம் **கடவுள்** மீது சத்தியமிடுகின்றனர்.

*கடவுள் மற்றும் அவருடைய தூதரை*
*எதிர்ப்பதற்குரிய தண்டனை*

63. **கடவுள்** மற்றும் அவருடைய தூதரை எதிர்க்கின்ற எவரும் என்றென்றும் நரகத்தின் நெருப்புக்கு உள்ளாகி விட்டார் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா ? இதுவே மிக மோசமான இழிவாகும்.

*நயவஞ்சகர்கள்*

64. அவர்களுடைய இதயங்களின் உட்புறம் உள்ளவற்றை அம்பலப்படுத்துகின்ற ஒரு சூரா வெளிப்படுத்தப்பட்டு விடக்கூடும் என்று நயவஞ்சகர்கள் கவலைப்படுகின்றனர். கூறுவீராக, "சென்று கேலி செய்து கொண்டிருங்கள். "நீங்கள் எதைப் பற்றி அஞ்சிக் கொண்டிருக்கின்றீர்களோ மிகச்சரியாக அதனையே **கடவுள்** அம்பலப்படுத்தி விடுவார்."

---

**9:54 (ஸலாத்) தொடர்புத் தொழுகைகள் இக்குர்ஆனிற்கு முன்னரே இருந்தன, மேலும் ஆப்ரஹாமிடமிருந்து கை மாற்றப்பட்டன (பார்க்க 21:73) என்பதற்கு இது மற்றுமொரு சான்றாகும். அத்துடன், "குர்ஆனில் தொடர்புத் தொழுகைகளின் விபரங்களை நாம் எங்கே காண இயலும் ?" என அவர்கள் கேட்கும் போது, குர்ஆன் முழுமையானதாகவும் முற்றிலும் விவரிக்கப்பட்டதாகவும் உள்ளது என்ற கடவுளின் உறுதியான கூற்றை மறுக்கத் துணிகின்றவர்களை அது திகைக்கச் செய்கின்றது (6:19,38,114).*

65. நீர் அவர்களைக் கேட்டால், "நாங்கள் சும்மாவேனும் கேலி செய்து கொண்டும் தமாஷ் செய்து கொண்டும் தான் இருந்தோம்," என்று அவர்கள் கூறுவார்கள். கூறுவீராக, "நீங்கள் **கடவுள்**–ஐயும், அவருடைய வெளிப்பாடுகளையும், அவருடைய தூதரையும் கேலி செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?"

66. மன்னிப்புக் கோராதீர்கள். நம்பிக்கை கொண்டு விட்ட பின்னர் நீங்கள் நம்பமறுத்து விட்டீர்கள். உங்களில் சிலரை நாம் பிழை பொறுத்தாலும், உங்களிலுள்ள மற்றவர்களை அவர்களுடைய ஒழுக்கக் கேட்டின் ஒரு விளைவாக, நாம் தண்டிப்போம்.

67. நயவஞ்சக ஆண்களும் நயவஞ்சகப் பெண்களும் ஒருவர் மற்றவருடன் சேர்ந்தவர்களே–அவர்கள் தீமையை ஆதரிக்கின்றனர், அத்துடன் நன்மையைத் தடுக்கின்றனர், மேலும் அவர்கள் கஞ்சத்தனம் உடையவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் **கடவுள்**–ஐ மறந்தனர், எனவே அவர்களை அவர் மறந்து விட்டார். நயவஞ்சகர்கள் உண்மையில் தீயவர்களாகவே இருக்கின்றனர்.

68. நயவஞ்சக ஆண்களுக்கும் நயவஞ்சகப் பெண்களுக்கும், அவ்வண்ணமே நம்பமறுப்பவர்களுக்கும், நரக நெருப்பினைக் **கடவுள்** வாக்களிக்கின்றார், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்களுக்கு அது போதுமானதாக இருக்கும். **கடவுள்** அவர்களைக் கண்டனம் செய்து விட்டார்; நிலைத்திருக்கின்ற ஒரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

*கடவுளின் வழிமுறை மாறுவதில்லை*

69. உங்களுக்கு முன்னர் இருந்தவர்களில் சிலர் உங்களை விட வலிமையானவர்களாகவும், அதிகமான பணத்தையும் பிள்ளைகளையும் கொண்டவர்களாகவும் இருந்தனர். தங்களுடைய பொருள் சார்ந்த உடமைகளில் மூழ்கியவர்களாக அவர்கள் ஆனார்கள். அதே போல், நீங்களும் உங்களுடைய பொருள் சார்ந்த உடமைகளில் மூழ்கியவர்களாகி விட்டீர்கள், உங்களுக்கு முன்னர் இருந்தவர்கள் மூழ்கிய அதே விதமாக. நீங்கள் முற்றிலும் கவனமற்றவர்களாக ஆகிவிட்டீர்கள், அவர்கள் கவனமற்றவர்களாக இருந்த அதே விதமாக. இத்தகைய மக்கள்தான் தங்களுடைய காரியங்களைப் பயனற்றதாக்கியவர்களாக இருக்கின்றனர், இந்த உலகம் மற்றும் மறுவுலகம் ஆகிய இரண்டிலும்; அவர்கள்தான் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர்.

*நஷ்டவாளிகள்*

70. முந்திய தலைமுறைகளில் இருந்து அவர்கள் எந்த ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லையா; நோவாவின் சமூகத்தார், ஆது, தமூது, ஆப்ரஹாமின் சமூகத்தார், மித்யன் வாசிகள், மேலும் *(ஸாடம் மற்றும் கொமாராவைச் சேர்ந்த)* பாவம் செய்பவர்களிடமிருந்து? அவர்களுடைய தூதர்கள் தெளிவான சான்றுகளுடன் அவர்களிடம் சென்றனர். **கடவுள்** ஒருபோதும் அவர்களுக்கு அநீதியிழைத் திடவில்லை; அவர்கள் தான் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதியிழைத்துக் கொண்டவர்களாக உள்ளனர்.

*வெற்றியாளர்கள்*

71. நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றொருவருக்குக் கூட்டாளிகளாக இருக்கின்றனர். அவர்கள் நன்மையை ஆதரிக்கின்றனர், அத்துடன் தீமையைத் தடுக்கின்றனர், அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றனர், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கின்றனர், அத்துடன் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்கு அவர்கள் கீழ்ப்படிகின்றனர். இவர்கள் **கடவுள்**–ன் கருணை கொண்டு பொழியப்படுவார்கள். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

72. நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருக்கக் கூடிய ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களையும், ஏதேன் தோட்டங்களில் மகத்தான மாளிகைகளையும் **கடவுள்** வாக்களிக்கின்றார். அன்றி **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களும் அங்கீகாரமும் இன்னமும் மிகப் பெரியதாகும். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

*நம்பமறுப்பவர்களுடன் நீங்கள் கண்டிப்போடு இருக்க வேண்டும்*

73. நபியே உம்மைத்தான், நம்பமறுப்பவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் எதிராகப் போராடுவீராக, மேலும் அவர்களுடனான நடவடிக்கைகளில் கண்டிப்புடன் இருப்பீராக. அவர்களுடைய விதி நரகமாகும்; என்ன ஒரு துன்பகரமான தங்குமிடம்!

74. நம்பமறுத்தலைக் கொண்ட அவ்வார்த்தையை அவர்கள் உதிர்த்து விட்ட போதிலும், அவர்கள் ஒருபோதும் அதனைக் கூறவில்லை என்று **கடவுள்** மீது அவர்கள் ஆணையிடுகின்றனர்; சரணடைந்தவர்களாகி விட்ட பின்னர் அவர்கள் நம்பமறுத்து விட்டனர். உண்மையில், அவர்களிடம் ஒருபோதும் இல்லா திருந்ததை அவர்கள் விட்டுக் கொடுத்து விட்டனர். **கடவுள்**–ம் அவருடைய தூதரும் அவர்கள் மீது அவருடைய அருளையும் வாழ்வாதாரங்களையும் பொழிந்திருந்த போதிலும் அவர்கள் கலகம் செய்து விட்டனர். அவர்கள் பாவத்திற்காக வருந்தினால், அது அவர்களுக்கு மிகச் சிறந்ததாக இருக்கும், ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், இந்த வாழ்விலும் மறுவுலகத்திலும் வலி நிறைந்ததொரு தண்டனைக்குக் **கடவுள்** அவர்களை உட்படுத்துவார். அவர்களுடைய எஜமானராகவும் அதிபதியாகவும் இருக்க பூமியின் மீது எவர் ஒருவரையும் அவர்கள் காணமாட்டார்கள்.

75. அவர்களில் சிலர் வாக்குறுதியும் அளித்தனர்: "**கடவுள்** அவரது அருள் கொண்டு எங்கள் மீது பொழிந்தால், நாங்கள் தர்மவான்களாகத் திகழ் வோம், அத்துடன் நன்னெறியானதொரு வாழ்வும் நடத்துவோம்."

76. ஆனால் அவரது வாழ்வாதாரங்களை அவர்கள் மீது அவர் பொழிந்த போது, அவர்கள் கஞ்சத்தனம் கொண்டவர்கள் ஆயினர், அத்துடன் வெறுப்பில் திரும்பிச் சென்று விட்டனர்.

77. அதன் விளைவாக, அவர்கள் அவரைச் சந்திக்கின்ற அந்நாள்வரை, அவர்களுடைய இதயங்களில் நய வஞ்சகத்தைக் கொண்டு அவர்களை அவர் பீடித் தார். இதன் காரணமாவது **கடவுள்**–யிடம் அவர்களு டைய வாக்குறுதிகளை அவர்கள் முறித்ததனாலும், அவர்களுடைய பொய்யுரைத்தலின் காரணத்தினா லுமே ஆகும்.

78. அவர்களுடைய இரகசியங்களையும், அவர்களு டைய சதித்திட்டங்களையும், **கடவுள்** அறிகின்றார் என்பதையும் **கடவுள்** எல்லா இரகசியங்களையும் அறிந்தவராக இருக்கின்றார் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா ?

79. மிக அதிகமாகக் கொடுக்கின்றனர் என்பதற்காக தாராள மனமுடைய நம்பிக்கையாளர்களை விமர் சிப்பவர்கள், மிகக் குறைவாகக் கொடுக்கின்றனர் என்பதற்காக ஏழை நம்பிக்கையாளர்களைப் பரி கசிப்பவர்களான, அவர்களைக் **கடவுள்** இகழ்கின் றார். அவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*சாத்தானின் மிகத்திறன் வாய்ந்த தூண்டில் இரை: பரிந்துரை எனும் மாயை**

80. அவர்களுக்காக நீர் பாவமன்னிப்புக் கோரினாலும், அல்லது அவர்களுக்காக நீர் பாவமன்னிப்புக் கோரா விட்டாலும் – அவர்களுக்காக நீர் எழுபது முறைகள் பாவமன்னிப்புக் கோரினாலும் கூட– **கடவுள்** அவர் களை மன்னிக்கமாட்டார். இது ஏனெனில் அவர்கள் **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் நம்பமறுத்த தனாலேயாகும். பாவிகளான மக்களைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

81. உட்கார்ந்து கொண்டவர்கள், **கடவுள்**–ன் தூதருக் குப் பின்னால் தாங்கள் தங்கிக் கொண்டதில் மகிழ் வடைந்தனர், அத்துடன் தங்கள் பணத்தையும் தங் கள் வாழ்வுகளையும் கொண்டு **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுவதை வெறுத்தனர். அவர்கள் கூறினர், "இந்த வெயிலில் நாம் கிளம்ப வேண்டாம்!" கூறுவீ ராக, "நரகத்தின் நெருப்பு இதனை விட அதிகம் சூடானதாகும்," அவர்கள் மட்டும் கிரகித்துக் கொள்ள இயன்றால்.

82. அவர்கள் ஒரு சிறிதே சிரிக்கட்டும், மேலும் அதிக மானதோர் அளவு அழட்டும். இதுவே அவர்கள் சம்பா தித்த பாவங்களுக்குரிய கைம்மாறாகும்.

83. உம்மோடு ஒன்று திரண்டு புறப்பட அவர்கள் உம்மி டம் அனுமதி கோரும் ஒரு சூழ்நிலைக்குக் **கடவுள்** உம்மை திரும்பக் கொண்டு வந்தால், நீர் கூறவேண் டும், "என்னோடு நீங்கள் மீண்டும் ஒருபோதும் போருக்குப் புறப்பட மாட்டீர்கள், அன்றி எந்த எதிரிக் கும் விரோதமாக என்னோடு சேர்ந்து எப்பொழுதும் போரிட மாட்டீர்கள். ஏனெனில் உட்கார்ந்திருப்பவர் களுடன் இருந்து கொள்ள வேண்டும் என்பதை நீங் கள் முதலிலேயே தேர்ந்தெடுத்து விட்டீர்கள். என வே, நீங்கள் உட்கார்ந்திருப்போருடன் தங்கி விடத் தான் வேண்டும்."

84. அவர்களில் உள்ள எவருக்காகவும் அவர் மரணித்து விடும் போது, நீர் ஈமப் பிரார்த்தனையைக் கடைப் பிடிக்கவும் வேண்டாம், அன்றி அவருடைய அடக்கத் தலத்தில் நீர் நிற்கவும் வேண்டாம். அவர்கள் **கடவுள்** –ஐயும் அவருடைய தூதரையும் நம்பமறுத்து விட்ட னர், மேலும் பாவகரமானதொரு நிலையிலேயே மரணித்து விட்டனர்.

*இவ்வுலகப் பொருட்கள் ஒன்றுமேயில்லை*

85. அவர்களுடைய செல்வத்தாலோ அல்லது அவர்களு டைய குழந்தைகளாலோ மனங்கவரப்பட்டு விடாதீர்; இவ்வுலகில் அவர்களுடைய துன்பத்திற்கான மூலா தாரங்களாகவும் மேலும் நம்பமறுப்பவர்களாக அவர் களுடைய ஆத்மாக்கள் பிரிந்து செல்வதற்கும் **கடவுள்** இவற்றைக் காரணமாக ஆக்கியுள்ளார்.

86. "**கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு அத்துடன் அவரு டைய தூதரோடு சேர்ந்து போராடுங்கள்" என்று அறிவிக்கும் ஒரு சூரா வெளிப்படுத்தப்படும் போது, அவர்களில் உள்ள பலசாலிகள் கூட, "பின் தங்கிக் கொள்ள எங்களை விட்டு விடுங்கள்!" என்று கூறு கின்றனர்.

87. அவர்கள் உட்கார்ந்து கொண்டவர்களுடன் இருந்து விடுவதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதன் விளைவாக, அவர்களுடைய இதயங்கள் முத்திரை யிடப்பட்டு விட்டன, மேலும் அதனால், அவர்கள் கிர கித்துக் கொள்ள இயலாது.

*உண்மையான நம்பிக்கையாளர்கள் பாடுபடுவதற்கு ஆர்வத்துடன் உள்ளனர்*

88. தூதரையும் அவருடன் நம்பிக்கை கொண்டு விட்ட வர்களையும் பொறுத்தவரை, அவர்கள் தங்களு டைய பணத்தையும் தங்களுடைய வாழ்வுகளையும் கொண்டு ஆர்வத்துடன் பாடுபடுகின்றனர். இவர்கள் நல்ல விஷயங்கள் அனைத்திற்கும் தகுதியானவர் களாகி விட்டனர்; அவர்களே வெற்றியாளர்களாக இருக்கின்றனர்.

**9:80 முஹம்மத் தன் சொந்தப் பெற்றோரின் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் பெற்றோரின் உடன்பிறந்தவர்களுடைய பிள்ளைகள் சார்பாகக் கூட பரிந்துரைக்க இயலவில்லை எனும் போது, அவர் தங்கள் சார்பாகப் பரிந்துரைப்பார் என்று அவரை ஒருபோதும் சந்தித்திராத அந்நியர்களை எண்ணச் செய்வது எது ? ஆப்ரஹாம் தன் தந்தையின் சார்பாகப் பரிந் துரைக்க இயலவில்லை, அன்றி நோவாவும் தன் மகன் சார்பாகப் பரிந்துரைக்க இயலவில்லை* ***(11:46**, மற்றும் **60:4).***

89. அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருக்கக் கூடிய, ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களை அவர் களுக்காகக் **கடவுள்** தயார் செய்து வைத்துள்ளார். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

90. அரேபியர்கள் சாக்குப்போக்குகளை உருவாக்கிக் கொண்டவர்களாக, பின்தங்கிக் கொள்ள அனுமதி தேடியவாறு உம்மிடம் வந்தனர். இது, **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது அவர்களுடைய நிராகரிப் பைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது – அவர்கள் பின் தங்கிக் கொள்கின்றனர். உண்மையில், அவர்களில் உள்ள நம்பமறுக்கின்றவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

91. பலஹீனர்கள், அல்லது நோயாளிகள், அல்லது சமர்ப் பிப்பதற்கு எந்த ஒன்றையும் காணாதவர்களாக உள்ளவர்கள், **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்கு அர்ப்பணித்தவர்களாக அவர்கள் நிலைத்திருக் கின்ற வரை, பழிப்புக்குரியவர்கள் ஆகக் கூடாது. அவர்களில் உள்ள நன்னெறியாளர்கள் பழிக்கப்படா திருக்க வேண்டும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

92. உங்களோடு சேர்ந்து கொள்ள விரும்பியவர்களாக உம்மிடம் வந்து, ஆனால் நீர் அவர்களிடம் "உங் களை ஏற்றிச் செல்ல என்னிடம் எதுவும் இல்லை" என்று கூறினீரே, அவர்களும் மன்னிக்கப்பட்டு விட் டனர். பங்களிப்புக் கொடுப்பதற்குத் தங்களால் இயல வில்லையே என்று மெய்யாகவே துக்கமடைந்தவர் களாக, தங்களுடைய கண்களில் கண்ணீரோடு பின்னர் அவர்கள் திரும்பிச் செல்கின்றனர்.

93. அவர்களுக்கு ஒரு காரணமும் இல்லாமல் இருந்த போதிலும், பின்தங்கிக் கொள்ள உம்மிடம் அனுமதி கோரியவர்கள் மீதுதான், குற்றச்சாட்டு உள்ளது. அவர்கள் உட்கார்ந்திருப்பவர்களோடு இருந்து கொள்வதை தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதன் விளைவாக, **கடவுள்** அவர்களுடைய இதயங்களில் முத்திரையிட்டு விட்டார், மேலும் இவ்வாறாக, அவர் கள் எந்த அறிவையும் அடையவில்லை.

*கஷ்ட காலங்கள் நயவஞ்சகர்களை வெளிப்படுத்த துணை செய்கின்றன*

94. *(போரில் இருந்து)* அவர்களிடம் நீர் திரும்பி வரும் போது, அவர்கள் உம்மிடம் வருத்தம் தெரிவிக்கின்ற னர். கூறும், "வருத்தம் தெரிவிக்க வேண்டாம்; இதற்கு மேலும் நாங்கள் உங்களை நம்பமாட்டோம். **கடவுள்** உங்களைப் பற்றி எங்களுக்குத் தெரிவித்து விட்டார்." **கடவுள்** உங்களுடைய செயல்களைப் பார்ப்பார், மேலும் தூதரும் அவ்வாறே செய்வார், பின் னர் எல்லா இரகசியங்களையும், அறிக்கைகளையும் அறிந்தவரிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படு வீர்கள், பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் குறித்து அவர் உங்களுக்குத் தெரிவிப்பார்.

95. அவர்களிடம் நீர் திரும்பி வரும் போது, அவர்களை நீர் கண்டு கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவர்கள் உம்மிடம் **கடவுள்**–மீது சத்தியமிடுவார்கள். அவர் களைக் கண்டு கொள்ளாமலே இருந்திடுவீராக. அவர்கள் களங்கப்பட்டவர்களாக உள்ளனர், அன்றி அவர்கள் சம்பாதித்த பாவங்களுக்குக் கைம்மாறாக, நரகம்தான் அவர்களுடைய இறுதி விதியாகும்.

96. அவர்களை நீர் பிழை பொறுத்து விடும் பொருட்டு, உம்மிடம் அவர்கள் சத்தியமிடுகின்றனர். நீர் அவர் களைப் பிழை பொறுத்தாலும் கூட, இத்தகைய தீய மக்களைக் **கடவுள்** பிழை பொறுப்பதில்லை.

*அரேபியர்கள்*

97. நம்பமறுத்தல் மற்றும் நயவஞ்சகத்தனத்தில் மோச மானவர்களாகவும், **கடவுள்** தன் தூதருக்கு வெளிப் படுத்தியுள்ள சட்டங்களை மிகவும் அலட்சியப் படுத் தக் கூடியவர்களாகவும் உள்ளவர்கள் அரேபியர் களேயாவர். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

98. சில அரேபியர்கள் *(கடவுளின் நிமித்தம்)* தங்களு டைய செலவிடுதலை ஒரு நஷ்டமாகக் கருதுகின்ற னர், அத்துடன் உங்களை ஒரு பேரழிவு தாக்கக் கூடும் என்று கூட அவர்கள் ஆவலுடன் காத்திருக் கின்றனர். அவர்கள்தான் மிகமோசமான பேரழி விற்கு உள்ளாவார்கள். **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

99. மற்ற அரேபியர்கள் **கடவுள்** மற்றும் இறுதி நாள் மீது நம்பிக்கை கொள்ளவே செய்கின்றனர், மேலும் தங்களுடைய செலவிடுதலைக் **கடவுள்**–ஐ நோக்கி ஒரு சாதனமாகவும், தூதருக்கு ஆதரவளிக்கின்ற ஓர் உபாயமாகவும் கருதுகின்றனர். மெய்யாக, அது அவர்களை மிக அருகில் கொண்டு வரவே செய்யும்; தன்னுடைய கருணைக்குள் நுழையக் **கடவுள்** அவர் களை அனுமதிப்பார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

100. புலம் பெயர்ந்த ஆரம்பக்கால முன்னோடிகளையும் *(முஹாஜிரீன்),* அவர்களுக்குப் புகலிடம் தந்த ஆதர வாளர்களையும் *(அன்ஸார்),* மேலும் நன்னெறியில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொறுத்த வரை, **கடவுள்** அவர்களுடன் திருப்தியடைந்தார், அவ்வாறே அவர்களும் அவருடன் திருப்தியடைந்தனர். அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருக்கக் கூடிய, ஆறு கள் பாய்கின்ற தோட்டங்களை அவர்களுக்காக அவர் தயாரித்துள்ளார். இதுவே மகத்தான பெரு வெற்றியாகும்.

*நயவஞ்சகர்களுக்கு தண்டனை இருமடங்காக்கப்படுகின்றது**

101. உங்களைச் சுற்றிலுமுள்ள அரேபியர்களில், நயவஞ்சகர்கள் உள்ளனர். அத்துடன், மாநகரவாசிகளிலும், நயவஞ்சகத்திற்குப் பழகிப்போனவர்கள் உள்ளனர். நீர் அவர்களை அறியமாட்டீர், ஆனால் நாம் அவர்களை அறிவோம். அவர்களுக்குரிய தண்டனையை நாம் இரட்டிப்பாக்குவோம், பின்னர் அவர்கள் பயங்கரமானதொரு தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்களாகச் சென்று முடிவார்கள்.

102. தங்களுடைய பாவங்களை ஒப்புக் கொள்கின்ற மற்றவர்கள் இருக்கின்றனர்; அவர்கள் நல்ல செயல்களுடன் கெட்ட செயல்களைக் கலந்து விட்டனர். **கடவுள்** அவர்களை மீட்டுக் கொள்வார், ஏனெனில் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

103. அவர்களைத் தூய்மைப்படுத்துவதற்காகவும், அவர்களைப் பாவங்களில் இருந்து விடுவிப்பதற்காகவும் அவர்களுடைய பணத்தில் இருந்து ஒரு தர்மத்தை ஏற்றுக் கொள்வீராக. அத்துடன் அவர்களை ஊக்கப்படுத்துவீராக, ஏனெனில் உம்முடைய ஊக்கப்படுத்தல் அவர்களுக்கு மறுவுறுதியளிக்கின்றது. **கடவுள்** செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

104. தன்னுடைய அடியார்களின் பாவத்திற்கான வருந்துதலை **கடவுள்** ஏற்றுக் கொள்கின்றார், தர்மங்களை அங்கீகரிக்கின்றார் என்பதையும் **கடவுள்** மீட்பவர், மிக்க கருணையாளர் என்பதையும் அவர் கள் புரிந்து கொள்ளவில்லையா ?

105. கூறுவீராக, "நன்னெறிகள் புரியுங்கள்; **கடவுள்** உங்களுடைய காரியங்களைப் பார்ப்பார், அன்றி அவருடைய தூதரும் நம்பிக்கையாளர்களும் அவ்வாறே செய்வார்கள். இறுதியாக, அனைத்து இரகசியங்களையும் அறிவிப்புகளையும் அறிந்தவரிடம் நீங்கள் திருப்பப்படுவீர்கள், அப்போது நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் குறித்து அவர் உங்களுக்குத் தெரிவிப்பார்."

106. மற்றவர்கள் **கடவுள்**–ன் தீர்மானத்திற்காகக் காத்திருக்கின்றனர்; அவர்களை அவர் தண்டிக்கக் கூடும், அல்லது அவர்களை அவர் மீட்டுக் கொள்ளக் கூடும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*கடவுளையும் அவருடைய தூதரையும் எதிர்க்கின்ற பள்ளிவாசல்கள்**

107. போலித் தெய்வ வழிபாட்டினைச் செயல்படுத்துதல், நம்பிக்கையாளர்களைப் பிளவுபடுத்துதல், மேலும் **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் எதிர்க்கின்றவர்களுக்கு வசதி செய்து தருதல் மூலம் பள்ளிவாசலை துஷ்பிரயோகம் செய்பவர்கள் இருக்கின்றனர். அவர்கள் பவித்திரமாகச் சத்தியமிடுகின்றனர்: "எங்களுடைய நோக்கங்கள் கண்ணியமானவை!" அவர்கள் பொய்யர்கள் என்று **கடவுள்** சாட்சியம் பகர்கின்றார்.

*அத்தகைய பள்ளிவாசல்களில் தொழாதீர்கள்*

108. அத்தகையதொரு பள்ளிவாசலில் நீர் ஒருபோதும் தொழ வேண்டாம், ஆரம்ப நாள் முதலே நன்னெறியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு பள்ளிவாசல்தான், நீர் தொழுவதற்கு மிகவும் தகுதியானது. அதனுள், தூய்மைப்படுத்தப்படுவதை நேசிக்கின்ற மக்கள் இருக்கின்றனர். தங்களையே தூய்மைப்படுத்திக் கொள்கின்றவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

109. **கடவுள்** மீது கொண்ட பக்தியின் அடிப்படையிலும் அவருடைய திருப்தியை அடைவதற்காகவும் தனது கட்டடத்தை நிர்மாணிக்கின்ற ஒருவன் மேலானவனா, அல்லது அவனுடன் சேர்ந்து நரக நெருப்பினில் விழுந்து விடக்கூடிய, நொறுங்கிக் கொண்டிருக்கின்ற செங்குத்தானதொரு மலை முகட்டின் விளிம்பில் தனது கட்டடத்தை நிர்மாணிக்கின்ற ஒருவனா ? வரம்புமீறுகின்ற மக்களைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

110. அவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தகைய தொரு கட்டடம் அவர்களுடைய இதயங்கள் செயலற்றதாகி விடுகின்ற வரை, அவர்களுடைய இதயங்களில் சந்தேகத்திற்கானதொரு மூலமாக அமைந்து விடுகின்றது. **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

**9:101 நயவஞ்சகர்கள் நம்பிக்கையாளர்கள் மத்தியில் அமர்ந்து கொண்டு, தூதுச் செய்தியையும் சான்றுகளையும் கவனத்துடன் செவியேற்கின்றனர், பின்னர் தங்களுடைய விஷமத்தனமான சந்தேகங்களைப் பரப்பி விடுகின்றனர். இப்பொழுதும் என்றென்றும் அவர்கள் இரட்டிப்புத் தண்டனையைப் பெறுவார்கள் என்பது குர்ஆனின் ஒரு விதியாகும்.*

**9:107 அனுஷ்டானங்கள் கடவுளுக்கு மட்டுமே பரிபூரணமாக அர்ப்பணிக்கப்படாத எந்தப் பள்ளிவாசலும் சாத்தானுக்குரியது, கடவுளுக்கு அல்ல. உதாரணத்திற்கு, ஆப்ரஹாம், முஹம்மத் மற்றும் / அல்லது அலீயின் பெயர்களை அதான் மற்றும் / அல்லது ஸலாத் தொழுகைகளில் உச்சரித்தல் 2:136, 2:285, 3:84 மற்றும் 72:18ல் உள்ள கடவுளின் கட்டளைகளை மீறுகின்றது. துரதிர்ஷ்டவசமாக, சீர்கெட்டுப் போய்விட்ட முஸ்லிம் உலகம் முழுவதுமுள்ள பொதுவான போலித் தெய்வ வழிபாட்டு அனுஷ்டானமாக இது உள்ளது.*

*மிகவும் இலாபகரமான முதலீடு*

111. நம்பிக்கையாளர்களிடமிருந்து **கடவுள்** அவர்களுடைய வாழ்வுகளையும் அவர்களுடைய பொருள்களையும் சுவர்க்கத்திற்கான பரிவர்த்தனையாக வாங்கிக் கொண்டார். எனவே, அவர்கள் கொல்வதற்கும் கொல்லப்படுவதற்கும் விரும்பியவாறு, **கடவுள்**–ன் நிமித்தம் சண்டையிடுகின்றனர். தோரா, சுவிசேஷம் மற்றும் இந்தக் குர்ஆனில் அவருடைய சத்திய வாக்குறுதியானது இத்தகையதேயாகும் – அன்றியும் **கடவுள்**–ஐ விடவும் தனது வாக்குறுதியை சிறப்பாகத் நிறைவேற்றுபவர் யார் ? இத்தகையதொரு பரிவர்த்தனையைச் செய்து கொண்டதில் நீங்கள் களிப்படைந்திட வேண்டும். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

*நம்பிக்கையாளர்கள்*

112. அவர்கள் பாவத்திற்கு வருந்துபவர்கள், வழிபடுபவர்கள், புகழ்பவர்கள், தியானிப்பவர்கள், குனிந்து வழிபடுபவர்கள் அத்துடன் சிரம் பணிபவர்கள், நன்னெறியினை ஆதரிப்பவர்கள் அத்துடன் தீமையைத் தடுப்பவர்கள், மேலும் **கடவுள்**–ன் சட்டங்களைப் பேணுபவர்களாக இருக்கின்றனர். இத்தகைய நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி கொடுப்பீராக.

*கடவுளின் விரோதிகளை நீங்கள் கை விட்டு விட வேண்டும்: ஆப்ரஹாம் தன் தந்தையைக் கைவிட்டு விட்டார்*

113. சொந்தபந்தத்தில் அவர்கள் தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தபோதிலும் கூட, அவர்கள் நரகத்திற்கென விதிக்கப்பட்டவர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு விட்டால், நபியோ அன்றி நம்பிக்கையாளர்களோ போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோர வேண்டாம்.

114. ஆப்ரஹாம் தன் தந்தைக்காகப் பாவமன்னிப்புக் கோரியதன் ஒரே காரணம் அவ்வாறு செய்வதாக அவரிடம் அவர் வாக்குறுதியளித்திருந்தார் என்பது தான். ஆனால் அவர் **கடவுள்**–ன் ஒரு விரோதியாக இருந்தார் என்பதை அவர் புரிந்து கொண்டவுடன், அவரை அவர் கைவிட்டு விட்டார், ஆப்ரஹாம் மிகவும் இரக்கமுடையவராகவும் கனிவானவராகவும், இருந்தார்.

115. அவர்களை அவர் வழி நடத்திய பின்னர், எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதை முதலில் அவர்களுக்கு சுட்டிக்காட்டாமல், **கடவுள்** எந்த சமுதாயத்தையும் வழிதவறுதலில் அனுப்பி விடுவதில்லை. எல்லா விஷயங்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

116. **கடவுள்**–க்கே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் உரியது. அவர் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகின்றார். ஓர் இரட்சகராகவும் அதிபதியாகவும் **கடவுள்**–வுடன் எவரும் உங்களுக்கு இல்லை.

117. நபியையும், புலம் பெயர்ந்தோரையும் *(முஹாஜிரீன்)* கஷ்ட காலங்களில் அவரைப் பின்பற்றி, அவர்களை உபசரித்து அவர்களுக்குப் புகலிடம் தந்த ஆதரவாளர்களையும் *(அன்ஸார்)* **கடவுள்** மீட்டுக் கொண்டார். அப்போதுதான் அவர்களில் சிலருடைய இதயங்கள் கிட்டத்தட்டத் தடுமாறின. ஆனால் அவர்களை அவர் மீட்டுக் கொண்டார், ஏனெனில் அவர்கள் பால் இரக்கமுடையவராக அவர் இருக்கின்றார், மிக்க கருணையாளர்.

*தூதரைக் கைவிட்டு விடக் கூடாது*

118. பின்னால் தங்கிவிட்டவர்களான அம்மூவரும் கூட *(மீட்டுக்கொள்ளப்பட்டனர்).* அவர்கள் தங்களுடைய எல்லா நம்பிக்கையையும் கிட்டத்தட்ட இழந்துவிடும் வண்ணம் விசாலமான இந்தப் பூமி அவர்களுக்கு மிகவும் குறுகியதாகி விட்டது. இறுதியில், **கடவுள்**–யிடமிருந்து தப்பித்தல் அவர்பால் அன்றி, எதுவுமில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். அவர்கள் பாவத்திற்காக வருந்தும் பொருட்டு, பின்னர் அவர்களை அவர் மீட்டெடுத்தார். **கடவுள்** தான் மீட்பவர், மிக்க கருணையாளர்.

119. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்** பக்தி கொள்ள வேண்டும், மேலும் உண்மையாளர்களுடன் இருக்க வேண்டும்.

120. மாநகரவாசிகளோ, அன்றி அவர்களைச் சூழ்ந்து இருக்கும் அரேபியர்களோ **கடவுள்**–ன் தூதரிடமிருந்து, *(அவர் போருக்காக ஒன்று திரண்டு புறப்படும் போது)* பின் தங்கிக் கொள்ள முனைய வேண்டாம். அன்றியும் அவருக்கு ஆதரவளிப்பதை விடத் தங்களுடைய சொந்த விவகாரங்களுக்கு முன்னுரிமை தர வேண்டாம். இது ஏனெனில், **கடவுள்**–க்காக அவர்கள் எந்தத் தாகத்தையோ அல்லது எந்தப் பிரயத்தனத்தையோ, அல்லது பசியையோ அனுபவிப்பதில்லை, அல்லது நம்பமறுப்பவர்களைக் கோபப்படுத்துகின்ற எந்த ஓர் அடியையும் எடுத்து வைப்பதில்லை, அல்லது எதிரியின் மீது எந்தக் கஷ்டத்தையும் ஏற்படுத்துவதில்லை, அவர்களுக்குரியதொரு நன்மையாக அது பதியப்பட்டிடாமல். நன்மைகள் செய்வோருக்குப் பிரதிபலன் அளிக்க, **கடவுள்** ஒருபோதும் தவறுவதில்லை.

121. அவர்களுக்கான நன்மைகள் பதியப்படாமல், சிறியதோ அல்லது பெரியதோ, எந்தச் செலவினங்களுக்கும் அவர்கள் உள்ளாவதில்லை, அல்லது எந்தப் பள்ளத்தாக்கையும் அவர்கள் கடப்பதில்லை. **கடவுள்** நிச்சயமாக, அவர்களுடைய காரியங்களுக்காகத் தாராளமாக அவர்களுக்கு வெகுமதியளிப்பார்.

*மார்க்கக் கல்வியின் முக்கியத்துவம்*

122. நம்பிக்கையாளர்கள் ஒன்று திரண்டு புறப்பட்டால், அவர்களில் எல்லாரும் அவ்வாறு செய்து விடவேண்டாம். ஒவ்வொரு குழுமத்திலிருந்தும் ஒரு சிலர், தங்கள் நேரத்தை அர்ப்பணித்துக் கொண்டு மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்காகப் புறப்பட வேண்டும். இவ்விதமாக, அவர்கள் திரும்பி வரும் போது, தங்கள் சமூகத்தாரிடம் அறிவைப் பரப்பி விட முடியும், மார்க்கரீதியில் அறிந்து கொண்டவர்களாக அவர்கள் இருந்து கொள்ளும் பொருட்டு.

*நம்பமறுப்போர்*

123. நம்பிக்கை கொண்டோரே, உங்களைத் தாக்கும் நம்பமறுப்போருடன் நீங்கள் சண்டையிட வேண்டும்– அவர்கள் உங்களிடம் கடுமையைக் காணட்டும்– மேலும் **கடவுள்** நன்னெறியாளர்களுடன் இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

*நயவஞ்சகர்கள்*

124. ஒரு சூரா வெளிப்படுத்தப்பட்டபோது, அவர்களில் சிலர் சொல்லக்கூடும், "இந்த சூரா உங்களில் எவருடைய விசுவாசத்தையேனும் பலப்படுத்தியதா ?" நிச்சயமாக, அது நம்பிக்கை கொண்டோரின் விசுவாசத்தைப் பலப்படுத்தவே செய்தது, மேலும் அவர்கள் எந்த ஒரு வெளிப்பாட்டிலும் களிப்பே அடைகின்றனர்.

125. தங்கள் இதயங்களில் சந்தேகங்களைத் தாங்கி இருப்போருக்கோ, அது உண்மையில் அவர்களுடைய அசுத்தத்துடன் மேலும் அசுத்தத்தையே கூட்டியது, மேலும் அவர்கள் நம்பமறுப்பவர்களாகவே மரணித்தார்கள்.

126. ஒவ்வொரு வருடமும் ஒரு முறையோ அல்லது இரு முறைகளோ அவர்கள் கடினமான சோதனைகளில் கஷ்டப்படுகின்றனர் என்பதை அவர்கள் காணவில்லையா ? ஆயினும், அவர்கள் பாவத்திற்கு வருந்துவதற்கு எப்பொழுதும் தவறி விடுகின்றனர், மேலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும் தவறிவிடுகின்றனர். ?

*ஒரு சரித்திரக் குற்றத்தின் திரை விலக்கப்படுகின்றது: கடவுளின் வார்த்தைகளைச் சிதைத்தல்* மறுக்க முடியாத சான்றுகளைக் கடவுள் வழங்குகின்றார்*

127. ஒரு சூரா வெளிப்படுத்தப்படும் போதெல்லாம், அவர்களில் சிலர் இவ்வாறு கூறுவதைப்போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்: "உங்களை எவரேனும் பார்த்தார்களா ?" பின்னர் அவர்கள் சென்று விட்டனர். இவ்வாறாக, **கடவுள்** அவர்களுடைய இதயங்களைத் திசை திருப்பி விட்டார், ஏனெனில் அவர்கள் புரிந்து கொள்ளாத மக்களாக இருக்கின்றனர்.

****

## சூரா 10: ஜோனா (யூனுஸ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ர.* *(எழுத்துகளாகிய)* இவை ஞானம் கொண்ட இந்த புத்தகத்தின் சான்றுகளாகும்.

2. அவர்களைப் போன்ற ஒரு மனிதருக்கு நாம் உள்ளுணர்வளித்தது, மனிதர்களுக்கு மிகவும் ஆச்சரியமான ஒன்றா ? அவர் *(இவ்வாறு கூறும்படி உள்ளுணர்வளிக்கப்பட்டார்),* "நீர் மக்களை எச்சரிக்க வேண்டும், மேலும் நம்பிக்கை கொண்டோருக்கு, அவர்கள் தங்கள் இரட்சகரிடம் உயர்மதிப்பு மிக்கதோர் அந்தஸ்தை அடைந்து விட்டனர் என்ற நற்செய்தியை வழங்குவீராக." நம்பமறுப்போர் கூறினர், "இவர் ஒரு சாமர்த்தியமான மந்திரவாதி!"

**9:1 & *9:127* **பஸ்மலஹ்** *முன்னால் இடம்பெறாத ஒரே சூரா இதுவேயாகும். இந்த விசித்திரம் 14 நூற்றாண்டுகளாகக் குர்ஆனுடைய மாணவர்களைப் புதிரில் ஆழ்த்தி வந்துள்ளது, மேலும் அதனை விளக்குவதற்காக ஏராளமான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. கவனத்தை ஈர்க்கும் வண்ணம்* **பஸ்மலஹ்** *இல்லாமலிருப்பது மூன்று நோக்கங்களைப் பூர்த்தியாக்குகின்றது என்பதை இப்போது நாம் புரிந்து கொண்டுள்ளோம்: (1) இரண்டு போலி வசனங்களை (9:128–129) சேர்ப்பதன் மூலம் போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் குர்ஆனைச் சிதைப்பார்கள் என்று விதிக்கப்பட்டிருந்தனர், என்பதை முன்னரே கூறுகின்ற ஒரு தெய்வீகப் பிரகடனமாக இது திகழ்கின்றது. (2) குர்ஆனில் கடவுளின் கணிதக் குறியீட்டின் பணிகளில் ஒன்றை, அதாவது, எந்த மாற்றத்திற்கும் எதிராகக் குர்ஆனைப் பாதுகாப்பதை கண்முன்னால் செய்து காட்டுகின்றது. (3) குர்ஆனுடைய குறியீட்டின் கூடுதலான அற்புத அம்சங்களை இது வழங்குகின்றது. அவற்றின் அசாதாரணமான முக்கியத்துவத்தின் காரணத்தால் பின் இணைப்பு 24 மற்றும் 29ல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடனடியாகக் கவனிக்கக் கூடிய ஒரு விஷயமாவது, சூரா 9ன் இறுதியில் இடம் பெறுகின்ற "கடவுள்" எனும் வார்த்தையின் எண்ணிக்கையாவது 1273 (19x67) ஆகும். போலியான இவ்விரண்டு வசனங்கள் 128 மற்றும் 129 உட்படுத்தப்பட்டால், இந்த அற்புத நிகழ்வு – இன்னும் ஏராளமான பலவும் – மறைந்து போய்விடும்.*

**10:1 இவ்வெழுத்துகள் குர்ஆனுடைய ஆச்சரியமூட்டும் கணிதக் குறியீட்டின் முக்கிய அம்சமாகவும் தெய்வீக இயற்றுதலுக்குரிய சான்றாகவும் திகழ்கிறது. விபரங்களுக்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

3. உங்களுடைய ஒரே இரட்சகர் **கடவுள்**தான்; வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தவர், பின்னர் அனைத்து அதிகாரங்களையும் ஏற்றுக் கொண்டவர். அவர் எல்லா விஷயங்களையும் கட்டுப் படுத்துகின்றார். அவருடைய நாட்டத்திற்கு ஒப்பவே அன்றி, பரிந்துரைப்பவர் எவரும் இல்லை. உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர். அவரையே நீங்கள் வழிபட வேண்டும். நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டீர்களா ?

4. அவரிடமே உங்களுடைய, உங்கள் அனைவருடைய இறுதித் திரும்புதல் இருக்கின்றது. இது **கடவுள்**–ன் சத்தியமான வாக்குறுதியாகும். நம்பிக்கை கொண்டு நேர்மையான வாழ்வு நடத்து வோருக்கு, நீதமாக வெகுமதியளிப்பதற்காக, அவர் படைப்பைத் துவங்குகின்றார், பின்னர் அதனை மீண்டும் செய்கின்றார். நம்பமறுப்போரைப் பொறுத்த வரை, அவர்கள் நரகின் பானங்களுக்கும், அவர்களுடைய நம்பமறுப்பின் காரணமாக வலிமிகுந்ததொரு தண்டனைக்கும் உள்ளாகின்றனர்.

5. அவர்தான் சூரியனை ஒளிரக்கூடியதாகவும், சந்திரனை ஒரு விளக்காகவும் ஆக்கியவர், மேலும் வருடங்களை எண்ணும் முறையை நீங்கள் அறிந்து கொள்ளவும், கணக்கிடவும் ஏதுவாக அதன் நிலைகளை அவர் வடிவமைத்தார். **கடவுள்** இவை அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே அன்றிப் படைக்கவில்லை. அறிந்திருக்கின்ற மக்களுக்கு இந்த வெளிப்பாடுகளை அவர் விவரிக்கின்றார்.

6. நிச்சயமாக, இரவு மற்றும் பகலின் மாற்றங்களிலும், மேலும் வானங்கள் மற்றும் பூமியில் **கடவுள்** படைத்தவற்றிலும் நல்லோர்களான மக்களுக்கு, சான்றுகள் இருக்கின்றன.

*இவ்வுலகுடன் மூழ்கி விடுதல்*

7. நம்மைச் சந்திப்பதை எதிர்ப்பார்க்காதிருப்பவர்கள், மேலும் இவ்வுலக வாழ்வில் மூழ்கி அத்துடன் திருப்தியடைந்தவர்கள், மேலும் நமது சான்றுகளைக் கவனிக்க மறுத்தவர்கள்;

8. இவர்கள், தங்களுடைய சொந்தச் செயல்களின் விளைவாக, தங்களுடைய இறுதியான தங்குமிடமாக நரகத்தை அடைந்து கொண்டார்கள்.

*நம்பிக்கையாளர்களைக் கடவுள் வழிநடத்துகின்றார்*

9. நம்பிக்கை கொண்டு நேர்மையான வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, அவர்களுடைய இரட்சகர், அவர்களுடைய நம்பிக்கையின் புண்ணியத்தினால், அவர்களை வழிநடத்துகின்றார். பேரானந்தமான தோட்டங்களில் அவர்களுக்குக் கீழே ஆறு கள் ஓடிக் கொண்டிருக்கும்.

10. அங்கே அவர்களுடைய பிரார்த்தனையாவது: "எங்கள் இறைவனே, நீரே துதிப்பிற்குரியவர்," அங்கே அவர்களுடைய வாழ்த்தாவது, "சாந்தி" என்பதாகும், மேலும் அவர்களுடைய முடிவான பிரார்த்தனையாவது: புகழ்ச்சி **கடவுள்**–க்கே உரியது, பிரபஞ்சத்தின் இரட்சகர்.

11. மனிதர்கள் அடைந்திருக்கும் தண்டனையை, வாழ்வாதாரங்களை அவர்கள் கேட்கும் விதத்தைப் போல, **கடவுள்** துரிதப்படுத்தியிருப்பாராயின் நெடுங்காலத்திற்கு முன்னரே அவர்கள் அழிக்கப் பட்டிருப்பார்கள். ஆயினும், நம்முடைய சந்திப்பை நம்பாதவர்களை, அவர்களுடைய வரம்புமீறல்களில், குருட்டுத்தனமாகத் தவறுகள் செய்யும்படி நாம் விட்டு விடுகின்றோம்.

12. துன்பம் மனிதனைத் தீண்டும் போது, அவன் படுத்த வண்ணமோ, அமர்ந்த வண்ணமோ, நின்ற வண்ணமோ நம்மை இறைஞ்சுகின்றான். ஆனால் நாம் அவனுடைய துன்பத்தை நிவர்த்தி செய்தவுடன், எந்தக் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யும்படி நம்மை ஒருபோதும் இறைஞ்சாதவன் போல அவன் சென்று விடுகின்றான் ! வரம்புமீறியவர்களின் காரியங்கள், இவ்விதமாக அவர்களுடைய கண்களுக்கு அழகாக்கப்பட்டு விட்டன.

*கடந்த காலத்திலிருந்து படிப்பினைகள்*

13. உங்களுக்கு முன்னிருந்த எத்தனையோ ஒரு தலைமுறையினை அவர்கள் வரம்புமீறிய போது நாம் அழித்திருக்கின்றோம். அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளுடன் சென்றனர், ஆனால் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுத்து விட்டனர். குற்றவாளிகளான மக்களுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுக்கின்றோம்.

*இப்போது உங்களுடைய முறை*

14. பின்னர், நீங்கள் எப்படிச் செய்யப் போகின்றீர்கள் என்பதைக் காண்பதற்காக, அவர்களுக்குப் பின்னால், உங்களை நாம் இந்த பூமிக்கு வாரிசுகளாக்கினோம்.

*ஒவ்வொரு எழுத்தும் கணக்கிடப்பட்டு, மேலும் தெய்வீகமாக வடிவமைக்கப்பட்டது*

15. நம்முடைய வெளிப்பாடுகள், அவர்களிடம் ஓதிக் காட்டப்பட்டால், நம்முடைய சந்திப்பை எதிர்பார்க்கா திருப்பவர்கள் கூறுகின்றனர், "இது அல்லாத ஒரு குர்ஆனை* கொண்டு வாரும், அல்லது இதனை மாற்றி விடும்!" கூறும், "நானே சுயமாக இதனை மாற்றிவிட எனக்குச் சாத்தியமில்லை. எனக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை நான் பின்பற்றுகின்றேன் அவ்வளவுதான். என் இரட்சகருக்கு நான் கீழ்ப்படியா விட்டால், அச்சமூட்டும் ஒரு நாளின் தண்டனைக்கு நான் அஞ்சுகின்றேன்."

16. கூறும், "**கடவுள்** நாடியிருந்தால், இதனை நான் உங்களிடம் ஓதிக்காட்டியிருக்க மாட்டேன், அன்றியும், இது குறித்து எதனையும் நீங்கள் அறிந்திருக்கவும் மாட்டீர்கள். இதற்கு முன்னர், ஒரு முழுமையான வாழ்வை உங்கள் மத்தியில் நான் வாழ்ந்திருக்கின்றேன். *(மேலும் நீங்கள் என்னை பக்தியுள்ள, உண்மையான ஒரு மனிதனாக அறிந்திருக்கின்றீர்கள்)* நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?"

17. **கடவுள்**–ஐப்பற்றிப் பொய்களை இட்டுக்கட்டும் ஒருவனை விட, அல்லது அவருடைய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவனை விடப் பெரிய பாவி யார்? மிக உறுதியாக, வரம்புமீறுபவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள்.

18. **கடவுள்**–வுடன் தங்களுக்குத் தீங்கிழைக்கவோ அல்லது பயனளிக்கவோ சக்தியற்ற போலித் தெய்வங்களையும் அவர்கள் வழிபடுகின்றனர், மேலும் அவர்கள் கூறுகின்றனர், "இவர்கள் **கடவுள்**–யிடம் எங்களுக்கு பரிந்துரை செய்பவர்கள்!" கூறும், "வானங்களிலோ அல்லது பூமியிலோ, அவர் அறியாத சிலவற்றைக் **கடவுள்**–க்கு நீங்கள் அறிவிக்கின்றீர்களா?" அவர் துதிப்பிற்குரியவர். அவர் மிகவும் உயர்வானவர்; பங்குதாரர்கள் தேவைப்படுவதற்கும் அப்பால்.

19. மனிதர்கள் ஒரே சமூகத்தவராகவே இருந்து வந்தனர், பின்னர் அவர்கள் தர்க்கித்துக் கொண்டனர். உம்முடைய இரட்சகரிடமிருந்து முன்னரே தீர்மானிக்கப்பட்ட வார்த்தை இல்லாதிருந்தால், அவர்களுடைய தர்க்கங்கள் குறித்து உடனடியாக அவர்கள் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார்கள்.

*குர்ஆனின் அற்புதம் முஹம்மதுக்குப் பின்னரே திரை விலக்கப்பட இருந்தது**

20. அவர்கள் கூறுகின்றனர், "அவருடைய இரட்சகரிடமிருந்து அவருக்கு அற்புதம் எதுவும் இறங்கி வராதிருப்பது ஏன்?" கூறும், "எதிர்காலம் **கடவுள்**–க்குரியது; எனவே காத்திருங்கள், நானும் உங்களுடன் காத்திருக்கின்றேன்."

*கலகக்கார மனிதர்கள்*

21. துன்பம் அவர்களைத் தாக்கியதற்குப் பின்னர், மனிதர்களுக்கு நாம் கருணையை அருள் செய்தால், அவர்கள் உடனடியாக நமது வெளிப்பாடுகளுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கின்றனர்! கூறும், "**கடவுள்**–ன் திட்டம் மிக அதிகத் திறன் வாய்ந்தது. ஏனெனில் நம்முடைய தூதர்கள் நீங்கள் செய்கின்ற சூழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர்."

22. அவர்தான் கடல் மற்றும் கரையின் குறுக்கே உங்களை நகர்த்தும் ஒருவர். நீங்கள் கப்பலில் ஏறிக் கொள்கின்றீர்கள், மேலும் அவை மிதமான நல்ல காற்றில் இதமாக மிதந்து செல்கின்றன. பின்னர் அதிலே மகிழ்ந்திருக்கும் சமயம், உக்கிரமான காற்று வீசுகின்றது, மேலும் அலைகள் அவர்களை ஒவ்வொரு புறத்திலிருந்தும் சூழ்ந்து கொள்கின்றன. இந்த வேளையில் தான் அவர்கள், உண்மையோடு தங்கள் பிரார்த்தனைகளை அவருக்கு மட்டுமே அர்ப்பணித்தவர்களாக, **கடவுள்**–ஐ இறைஞ்சுகின்றனர்: "இந்த முறை மட்டும் எங்களை நீர் காப்பாற்றுவீரானால், என்றென்றும் நாங்கள் நன்றியுடன் இருப்போம்."

23. ஆனால் அவர்களை அவர் காப்பாற்றியவுடன், அவர்கள் பூமியில் வரம்புமீறுகின்றனர், மேலும் சத்தியத்தை எதிர்க்கின்றனர். மனிதர்களே, உங்களுடைய வரம்புமீறல்கள் உங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கு மட்டுமே கேடாகும். நீங்கள் இவ்வுலக வாழ்வில் முற்றிலும் மூழ்கியவர்களாகவே இருக்கின்றீர்கள், பின்னர் நம்மிடமே உங்கள் இறுதித் திரும்புதல் உள்ளது, அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்த ஒவ்வொன்றையும் பற்றி நாம் உங்களுக்குத் தெரிவிப்போம்.

---

****10:15*** *"குர்ஆன்" என்ற வார்த்தை குர்ஆனில் 58 முறை கூறப்பட்டுள்ளது, ஆனால் இவ்வசனம் "மற்றுமொரு குர்ஆன்" ஐக் குறிப்பிடுவதால், இது தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; ஆக குர்ஆனில், "இந்தக் குர்ஆன்" 57 முறைகள் குறிப்பிடப் பட்டுள்ளது, 19x3.*

****10:20*** *நிகழ்ந்தவற்றோடு பொருத்திப் பார்க்கும் போது, உண்மையில் "மகத்தான அற்புதங்களில் ஒன்று" **(74:30–35)**, ஆன குர்ஆனின் அற்புதம் முஹம்மதுக்குப் பின் 14 நூற்றாண்டுகள் கழித்து வெளிப்படுத்தப்பட வேண்டுமென தெய்வீகமாக விதிக்கப் பெற்றிருந்தது என்பதை நாம் காண்கின்றோம். பாரம்பரிய முஸ்லிம்களின் தற்போதைய நிலையைக் காணும் போது, முஹம்மதுக்கு இந்த அற்புதம் கொடுக்கப்பட்டிருந்தால், ஏற்கனவே கடவுளுடன் முஹம்மதை போலித் தெய்வமாக்கிக் கொண்டிருக்கும் இந்த முஸ்லிம்கள், கடவுளின் அவதாரமாகவே அவரை வழிபட்டிருப்பார்கள். கூடுதலாக, இந்த அற்புதமானது கண்கூடாக கணிணி யுகத்திற்கென வடிவமைக்கப்பட்டதாகவும், கணித அறிவில் முன்னேறிய தலைமுறையினரால் மெச்சப்படக் கூடியதாகவும் உள்ளது.*

24. இவ்வுலக வாழ்விற்குரிய உதாரணம் இது போன்ற தேயாகும்: பூமியில் இருந்து எல்லா வகைத் தாவரங் களை முளைப்பிக்கவும், மனிதர்களுக்கும் விலங்கு களுக்கும் உணவு வழங்கவும் விண்ணிலிருந்து நாம் நீரை இறக்கி அனுப்புகின்றோம். பின்னர், பூமி பூரணமாக அலங்கரிக்கப்பட்டு, மேலும் அதன் மக்கள் அதன் மீது முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதாக அவர் கள் எண்ணிக் கொள்ளும் போது, நம்முடைய தீர்ப்பு இரவிலோ அல்லது பகலிலோ* வருகின்றது, முந்திய நாளில் எதுவுமே இல்லாமலிருந்ததைப் போல, அதனை முற்றிலும் தரிசாக்கி விட்டு விடுகின்றது. சிந்திக்கும் கூட்டத்தாருக்கு இந்த வெளிப்பாடு களை நாம் இவ்விதமாக விவரிக்கின்றோம்.

25. **கடவுள்** உங்களைச் சாந்தியான இல்லத்தின் பால் அழைக்கின்றார், மேலும் தான் நாடியோரை நேரான தொரு பாதையில் வழிநடத்துகின்றார்.

*சுவனமும் நரகமும் நிலைத்திருப்பவை*

26. நல்லோர்களுக்குரிய வெகுமதி, பன்மடங்காகப் பெருக்கப்படும். அவர்களுடைய முகங்கள் எவ்வித இழப்பினையோ அல்லது கேவலத்தையோ ஒருபோ தும் அனுபவிக்காது. இவர்கள்தான் சுவனவாசிகள் ஆவார்கள்; அங்கே அவர்கள் என்றென்றும் வசிப் பார்கள்.

27. பாவங்களைச் சம்பாதித்தவர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய பிரதிபலன் அவர்களுடைய பாவங்களுக்குச் சரி சமமானதேயாகும். இழிவு தான் அவர்களுடைய பங்கு, மேலும் **கடவுள்**–ஐ அன்றி எவர் ஒருவராலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. இருண்ட இரவின் பாளங்களினால் அழுத்தப்பட்ட வையாக அவர்களுடைய முகங்கள் காணப்படும். அவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள்; அங்கே அவர்கள் என்றென்றும் வசிப்பார்கள்.

*போலித் தெய்வங்கள் தம்மை*
*வழிபட்டவர்களைக் கைவிட்டு விடும்*

28. அவர்கள் அனைவரையும் நாம் வரவழைக்கும் அந் நாளில், போலித் தெய்வங்களை வழிபட்டவர்களிடம் நாம் கூறுவோம், "உங்கள் போலித் தெய்வங்களு டன் சேர்த்து, உங்களை நாம் வரவழைத்துள்ளோம்." அவர்கள் ஒருவருக்கொருவரை எதிரெதிராக நாம் நிறுத்துவோம், மேலும் அவர்களுடைய போலித் தெய் வங்கள் அவர்களிடம் கூறுவர், "நீங்கள் எங்களை இணை வழிபாடு செய்து கொண்டிருந்தது பற்றி எங் களுக்கு எதுவும் தெரியாது.

29. "எங்களை நீங்கள் வழிபட்டுக் கொண்டிருந்ததைப் பற்றி நாங்கள் முற்றிலும் அறியாதவர்களாக இருந் தோம் என்பதற்கு, உங்களுக்கும் எங்களுக்கும் இடை யில் சாட்சியாக இருக்கக் **கடவுள்** போதுமானவர்."

30. அப்போதுதான் ஒவ்வொரு ஆத்மாவும் அது செய்த ஒவ்வொன்றையும் குறித்துப் பரிசீலித்துப் பார்க்கும். அவர்களுடைய உரிமையுள்ள அதிபதியும் எஜமான ருமான **கடவுள்**–யிடம் அவர்கள் திரும்பக் கொண்டு வரப்படுவார்கள், மேலும் அவர்கள் பொய்யாக உருவாக்கிய போலித் தெய்வங்கள் அவர்களைக் கை விட்டு விடும்.

31. கூறும், "வானம் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வழங்குபவர் யார்? செவிப்புலன் மற்றும் பார்வை அனைத்தையும் கட்டுப்படுத்துபவர் யார்? இறந்தவற் றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலி ருந்து இறந்தவற்றையும் வெளிக்கொண்டு வருபவர் யார்? அனைத்து விஷயங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் யார்?" அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்.**" கூறும், "பின்னர் நீங்கள் ஏன் கட்டளை களைக் கடைப் பிடிப்பதில்லை?"

32. இவ்விதமானவர் **கடவுள்**, உங்களுடைய உரிமை யுள்ள இரட்சகர். சத்தியத்திற்கு அப்பால், பொய்மை யைத் தவிர வேறென்ன இருக்கின்றது? இவை அனைத்தையும் நீங்கள் எப்படி அலட்சியப்படுத்த முடியும்?

33. தீயவர்களாக இருப்பதைத் தேர்ந்தெடுத்து விட்டவர் களுக்கு உம்முடைய இரட்சகரின் முடிவால் ஏற்படு வது இதுதான்: அவர்களால் நம்பிக்கை கொள்ள முடியாது.

*உங்களுடைய போலித் தெய்வங்களைப்*
*பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்*

34. கூறும், "உங்களுடைய போலித் தெய்வங்களில் எவை யேனும் படைப்பைத் துவக்கி, பின்னர் அதனை மீண் டும் செய்ய முடியுமா?" கூறும், "**கடவுள்** படைப்பைத் துவங்குகின்றார், பின்னர் அதனை மீண்டும் செய் கின்றார்.

35. கூறும், "உங்களுடைய போலித் தெய்வங்கள் எவை யேனும் சத்தியத்தின் பால் வழிநடத்துகின்றனவா?" கூறும், "**கடவுள்** தான் சத்தியத்தின் பால் வழி நடத்து கின்றார். சத்தியத்தின்பால் வழி நடத்தும் ஒருவர் பின் பற்றத்தக்கவரா, அல்லது வழி காட்டாத, மேலும் தனக்கே வழிகாட்டல் தேவைப்படக் கூடிய ஒருவ னா? உங்களுடைய தீர்ப்பில் என்ன கோளாறு?"

**10:24 கடவுளுக்கு, அவருடைய தீர்ப்பு பகலில் வருமா அல்லது இரவில் வருமா என்பது தெரியும் தான். ஆனால் உலக முடிவு வரும் போது உலகில் பாதி பகலாகவும் பாதி இரவாகவும் தான் இருக்கப் போகின்றது. குர்ஆனின் " விஞ்ஞான அற்புதங் களில்" இது மற்றொன்று ஆகும்.*

36. அவர்களில் பெரும்பாலோர் யூகத்தைத் தவிர வேறெதையும் பின்பற்றவில்லை, மேலும் யூகமானது சத்தியத்திற்கு எவ்வகையிலும் மாற்று அல்ல. அவர்கள் செய்யும் ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*கடவுள் மட்டுமே குர்ஆனை இயற்றியிருக்க முடியும்*

37. **கடவுள்** தவிர மற்றவரால் இந்தக் குர்ஆன் இயற்றப்பட்டிருக்கச் சாத்தியமில்லை. இது முந்திய எல்லாத் தூதுச் செய்திகளையும் உறுதிப்படுத்துகின்றது, மேலும் முழுமையாக விவரிக்கப்பட்ட ஒரு வேதமாகத் திகழ்கின்றது. இது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது; ஏனெனில் இது பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து வந்துள்ளது.

38. "அவர் இதனைப் புனைந்து கொண்டார்," என்று அவர்கள் கூறினால்,கூறும், "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், பின் இவற்றைப் போன்ற ஒரு சூராவைக் கொண்டு வாருங்கள், மேலும் **கடவுள்**–ஐத் தவிர, நீங்கள் நாடியவர்களை அழைத்துக் கொள்ளுங்கள்."

39. உண்மையில், அவர்கள் இதனை ஆய்வு செய்தும், பரீசீலித்தும் பார்க்காமல், மேலும் இதனைப் புரிந்து கொள்வற்கும் முன்னர், இதனை ஏற்கமறுத்து விட்டனர். அவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் இவ்விதமாக நம்பமறுத்தனர். எனவே, வரம்புமீறியவர்களுக்கான விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக.

40. அவர்களில் சிலர், *(இந்த வேதத்தில்)* நம்பிக்கை கொள்கின்றனர், அதே சமயம் மற்றவர்கள் இதில் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனர். உம்முடைய இரட்சகர் பாவம் செய்பவர்களை முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

41. அவர்கள் உம்மை ஏற்க மறுத்தால், பின்னர் கூறும், "என் செயல்கள் எனக்குரியவை, உங்கள் செயல்கள் உங்களுக்குரியவை, நான் செய்யும் எந்த ஒன்றுக்கும் நீங்கள் பழிப்பற்றவர்களாவீர்கள், மேலும் நீங்கள் செய்யும் எந்த ஒன்றுக்கும் நான் பழிப்பற்றவன் ஆவேன்."

42. அவர்களில் சிலர் உம்மைக் கவனித்துக் கேட்கின்றனர், ஆனால் அவர்களால் புரிந்து கொள்ளவே முடியாத போதிலும், செவிடர்களைக் கேட்கும்படிச் செய்ய உம்மால் இயலுமா ?

*மானிடர்கள் தங்கள் பாதைகளைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கின்றனர்*

43. அவர்களில் சிலர் உம்மைக் கவனித்துப் பார்க்கின்றனர், ஆனால் அவர்களால் பார்க்கவே முடியாத போதிலும், குருடர்களை வழிநடத்த உம்மால் இயலுமா ?

44. **கடவுள்** ஒருபோதும் மனிதர்களுக்கு அநீதம் இழைப்பதில்லை; மனிதர்கள்தான் தங்களுடைய சொந்த ஆன்மாக்களுக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.

45. அவர்கள் அனைவரையும் அவர் வரவழைக்கும் அந்நாளில், இவ்வுலகில் அவர்கள் அறிமுகமாகியிருந்த பொழுது, நாளின் ஒரு மணி நேரமே அவர்கள் நிலைத்திருந்ததாக எண்ணிக் கொள்வார்கள். **கடவுள்**–ன் சந்திப்பில் நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களும், வழிதவறுவதைத் தேர்ந்து எடுத்து கொண்டவர்களும், உண்மையில் நஷ்டப்பட்டவர்களே.

46. அவர்களுக்கு நாம் வாக்களிக்கும் *(தண்டனையில்)* சிலவற்றை நாம் உமக்குக் காட்டினாலும், அல்லது அதற்கு முன்பே உமது வாழ்வை முடித்து விட்டாலும், அவர்களுடைய இறுதித் திரும்புதல் நம் வசமே உள்ளது. அவர்கள் செய்யும் ஒவ்வொன்றுக்கும் **கடவுள்** சாட்சியாக உள்ளார்.

47. ஒவ்வொரு சமூகத்திற்கும், ஒரு தூதர். அவர்களுடைய தூதர் வந்துவிட்ட பின்னர், சிறிதளவும் அநீதமின்றி, அவர்கள் நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படுகின்றனர்.

48. அவர்கள் அறைகூவல் விடுகின்றனர்: "நீர் உண்மை கூறுவதாக இருந்தால், இந்த முன்னறிவிப்பு எப்போது நிறைவேறும் ?"

*தூதர் எந்தச் சக்தியும் கொண்டவரல்லர்*

49. கூறும், "எனக்கே தீங்கிழைத்துக் கொள்ளவோ, அல்லது எனக்கே நன்மை செய்து கொள்ளவோ நான் எந்தச் சக்தியும் கொண்டவனல்லன்; **கடவுள்** நாடியது மட்டுமே நிகழ்கின்றது." ஒவ்வொரு சமூகத்திற்கும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு வாழ்க்கைக் கால அளவு உள்ளது. அவர்களுடைய தவணை ஒரு முடிவுக்கு வந்து விட்டால், அவர்களால் அதனை ஒரு மணி நேரம் கூடத் தாமதப்படுத்தவோ, அல்லது முற்படுத்தவோ முடியாது.

50. கூறும், "அவருடைய தண்டனை இரவிலோ அல்லது பகலிலோ, எதில் உங்களிடம் வந்த போதிலும், வரம்பு மீறுபவர்கள் ஏன் இப்படி அவசரப்படுகின்றனர் ?"

51. "அது நிகழ்ந்து விட்டால், அப்போது நீங்கள் நம்பிக்கை கொள்வீர்களா ? அப்போது ஏன் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் ? அது வரட்டும் என்று நீங்கள் சவால் விட்டுக் கொண்டிருந்தீர்களே ?"

52. வரம்புமீறியவர்களிடம் கூறப்படும், "முடிவேயில்லாத தண்டனையைச் சுவையுங்கள். நீங்கள் எதனைச் சம்பாதித்தீர்களோ அதற்கான பிரதி பலனை மிகச் சரியாக கொடுக்கப்படுகின்றீர்கள் அல்லவா ?"

53. முன்னறிவிக்கும்படி உம்மிடம் அவர்கள் அறை கூவல் விடுகின்றனர்: "உண்மையில் இதுதான் நிகழப்போகின்றதா ?" கூறும், "ஆம், நிச்சயமாக என் இரட்சகர் மீது ஆணையாக, இதுவே சத்தியமாகும், மேலும் நீங்கள் ஒருக்காலும் தப்பித்து விட முடியாது."

*விசுவாசத்தின் விலை என்ன ?*

54. ஏதேனும் தீய ஆத்மா பூமியில் உள்ள அனைத்தையும் சொந்தமாக வைத்திருந்தாலும், உடனடியாக அதனை மீட்புத் தொகையாகக் கொடுத்து விடும். தண்டனையை அவர்கள் காணும் பொழுது குற்ற உணர்வுக்கு ஆட்பட்டவர்களாக அவர்கள் ஆகி விடுவார்கள். சிறிதளவும் அநீதமின்றி, அவர்கள் நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படுவார்கள்.

55. பரிபூரணமாக, வானங்கள் மற்றும் பூமியில் உள்ள அனைத்தும் **கடவுள்**–க்குரியவை. பரிபூரணமாக, **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதாகும், ஆனால் அவர்களில் பெரும்பாலோர் அறியமாட்டார்கள்.

56. அவர் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகின்றார், மேலும் அவரிடமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்.

57. மனிதர்களே, உங்கள் இரட்சகரிடமிருந்து உங்களுக்கு இதிலே உபதேசமும், உங்கள் இதயங்களைத் தொந்தரவு செய்யக்கூடிய எந்த ஒன்றுக்கும் நிவாரணமும், வழிகாட்டலும், மேலும் நம்பிக்கையாளர்களுக்குக் கருணையும் வந்துள்ளது.

*நம்பிக்கையாளர்களுக்கு ஆனந்தம்*

58. கூறும், "**கடவுள்**–ன் அருளைக் கொண்டும் அவருடைய கருணையைக் கொண்டும் அவர்கள் பெரு மகிழ்வு அடைய வேண்டும்." அவர்களால் சேகரிக்க முடிந்த எந்தச் செல்வத்தையும் விட இது மிகவும் மேலானது.

*மனிதர்களால் செய்யப்பட்ட உணவுத் தடைகள்*

59. கூறும், "**கடவுள்** எவ்வாறு எல்லாவிதமான வாழ்வாதாரங்களையும் உங்களுக்கு இறக்கி அனுப்புகின்றார் என்பதையும், பின்னர் அவற்றில் சிலவற்றை நீங்கள் அனுமதிக்கபட்டதாகவும், மேலும் சிலவற்றை தடை செய்யப்பட்டதாகவும் ஆக்கிக் கொள்கின்றீர்கள் என்பதையும் நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களா ?" கூறும், "இதனைச் செய்வதற்குக் **கடவுள்** உங்களுக்கு அனுமதி தந்து விட்டாரா ? அல்லது நீங்கள் பொய்களை இட்டுக்கட்டி அவற்றைக் **கடவுள்** மேல் சாட்டுகின்றீர்களா ?"

60. **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களை இட்டுக்கட்டுபவர்களுக்கு உயிர்த்தெழுப்பப்படும் நாளில் அவரைச் சந்திக்க வேண்டுமே என்று எப்பொழுதாவது தோன்றுகின்றதா ? மிக நிச்சயமாக, **கடவுள்** தன் அருளை மனிதர்கள் மீது பொழிகின்றார், ஆனால் அவர்களில் அதிகமானோர் நன்றிகெட்டவர்களாக இருக்கின்றனர்.

*கடவுளை அறிந்து கொள்ளுதல்*

61. நீங்கள் எந்த சூழலுக்குள்ளும் நுழைவதில்லை, குர்ஆனில் எதையும் நீங்கள் ஓதுவதில்லை, அன்றியும் எந்த விஷயத்தையும் நீங்கள் செய்வதில்லை, நீங்கள் அவற்றைச் செய்யும் பொழுதே நாம் அதற்குச் சாட்சிகளாக இல்லாமல். ஓர் அணுவின் எடைகூட உம்முடைய இரட்சகரின் கட்டுப்பாடுக்கு அப்பாற்பட்டதில்லை, அது வானங்களிலோ அல்லது பூமியிலோ இருந்த போதிலும் சரியே. மேலும் அணுவை விடச் சிறிய எந்த ஒன்றுமோ அல்லது பெரியதோ, ஆழ்ந்த தோர் ஏட்டில் பதியப்படாமல் இல்லை.

*மகிழ்ச்சி: இப்பொழுதும் எப்பொழுதும்**

62. பரிபூரணமாக, **கடவுள்**–ன் கூட்டணியினர் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை, அன்றியும் அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

63. அவர்கள் நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்துபவர்களாக இருக்கின்றனர்.

64. அவர்களுக்கு, இவ்வுலகிலும், அவ்வண்ணமே மறு உலகிலும் ஆனந்தமும் மகிழ்ச்சியும் உள்ளது. இது **கடவுள்**–ன் மாற்ற முடியாத சட்டமாகும். இதுவே மகத்தான பெரு வெற்றியாகும்.

65. அவர்களுடைய பேச்சுகளால் கவலையடையாதீர். சக்தி அனைத்தும் **கடவுள்**–க்குரியது. அவர் செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

66. பரிபூரணமாக, வானங்களில் உள்ள ஒவ்வொருவரும், மேலும் பூமியில் உள்ள ஒவ்வொருவரும் **கடவுள்**–க்குரியவர்கள். **கடவுள்**–வுடன் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்பவர்கள் உண்மையில் பின்பற்றுவது ஒன்றையுமில்லை. ஏதோ ஒன்றைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் எண்ணிக் கொள்ள மட்டுமே செய்கின்றனர். அவர்கள் யூகிக்க மட்டுமே செய்கின்றனர்.

67. அவர்தான் இரவை உங்கள் ஓய்வுக்கென ஆக்கியவர், மேலும் பகலை ஒளியூட்டப்பட்டதாக ஆக்கினார். கேட்கக்கூடிய மக்களுக்கு இவற்றில் சான்றுகள் உள்ளன.

***10:62–64** *நன்மைகளுக்குரிய வெகுமதியையோ அல்லது பாவங்களுக்கான தண்டனையையோ பெறுவதற்காக உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை காத்திருக்க வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நம்பிக்கையாளர்களுக்கு இங்கே இவ்வுலகிலும், இப்பொழுதும் எப்பொழுதும் பரிபூரண மகிழ்ச்சிக்கு உத்திரவாதத்தைக் குர்ஆன் மீண்டும் மீண்டும் நிச்சயப்படுத்துகின்றது. அவர்களுடைய தவணைக்காலம் இங்கே முடிவுற்றவுடன், அவர்கள் நேரடியாகச் சுவனம் செல்கின்றனர் (பின் இணைப்பு 17ஐப் பார்க்கவும்).*

*மாபெரும் இறைநிந்தனை*

68. அவர்கள் கூறினர், "**கடவுள்** ஒரு மகனைப் பெற்றெடுத்திருக்கின்றார்!" அவர் துதிப்பிற்குரியவர். அவரே மிக்க செல்வந்தர். வானங்களில் உள்ள ஒவ்வொன்றும், இன்னும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியது. இத்தகையதொரு இறைநிந்தனைக்கு ஆதரவளிக்கும் சான்று எதுவும் உங்களிடம் இல்லை. **கடவுள்**–ஐப் பற்றி நீங்கள் அறியாதவற்றை நீங்கள் கூறுகின்றீர்களா?

69. பிரகடனப்படுத்துவீராக: "**கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களைப் புனைபவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள்."

70. இவ்வுலகில் அவர்களுடைய தற்காலிகப் பங்கை அவர்கள் பெறுவார்கள், அதன் பின்னர் நம்மிடமே அவர்களுடைய இறுதித் திரும்புதல் இருக்கின்றது, பின்னர் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுத்ததற்காக அவர்களை நாம் கடும் தண்டனையில் கொண்டு சேர்த்து விடுவோம்.

*நோவா*

71. நோவாவின் வரலாற்றை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக. அவர் தன் சமூகத்தாரிடம் கூறினார், "என் சமூகத்தாரே, எனது நிலையும் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளைப் பற்றிய எனது நினைவூட்டுதல்களும் உங்களுக்கு மிகவும் அதிகமானதாகத் தென்படுமானால், அப்போது நான் எனது பொறுப்பைக் **கடவுள்**–யிடம் ஒப்படைத்து விடுகின்றேன். நீங்கள் உங்கள் தலைவர்களுடன் ஒன்று கூடிக் கலந்து, உங்களுக்கிடையில் ஓர் இறுதித் தீர்மானத்திற்கு ஒத்துவாருங்கள், பின்னர் தாமதமின்றி அதனை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

72. "நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் நான் உங்களிடம் எந்தக் கூலியும் கேட்கவில்லை. எனது கூலி **கடவுள்**–யிடமிருந்து வருகின்றது. சரணடைந்த ஒருவனாக இருக்க வேண்டுமென்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்."

73. அவர்கள் அவரை ஏற்கமறுத்தனர், அதன் விளைவாக, நாம் அவரையும் மரக்கலத்தில் அவரோடு சேர்ந்து கொண்டவர்களையும் காப்பாற்றினோம்; நாம் அவர்களை வாரிசுகளாக்கினோம். மேலும் நமது வெளிப்பாடுகளை ஏற்கமறுத்தவர்களை நாம் மூழ்கடித்தோம். விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக; அவர்கள் எச்சரிக்கப்பட்டு இருந்தனர்.

*மானிடர்கள் தங்கள் ஆதி பாவத்தில் வலிந்திருக்கின்றனர்*

74. அவருக்குப் பின்னர் தூதர்களை அவர்களுடைய சமூகத்தாரிடம் நாம் அனுப்பினோம், மேலும் அவர்கள் தெளிவான சான்றுகளை அவர்களிடம் காட்டினார்கள். ஆனால் முன்னரே அவர்கள் ஏற்கமறுத்து விட்ட ஒன்றில் அவர்கள் நம்பிக்கை கொள்வதாக இல்லை. இவ்விதமாக நாம் வரம்புமீறுபவர்களின் இதயங்களில் முத்திரையிட்டு விடுகின்றோம்.

*மோஸஸ் மற்றும் ஆரோன்*

75. அவர்களுக்குப் பின்னர் மோஸஸையும் ஆரோனையும் நமது சான்றுகளுடன், ஃபேரோவிடமும் அவனுடைய கூட்டத்தாரிடமும் அனுப்பினோம். ஆனால் அவர்கள் ஆணவம் கொண்டார்கள்; மேலும் வரம்பு மீறும் மக்களாக இருந்தார்கள்.

76. நம்மிடமிருந்து சத்தியம் அவர்களுக்கு வந்த போது அவர்கள் கூறினர், "இது தெளிவான மாயாஜாலமாகும்!"

77. மோஸஸ் கூறினார், "சத்தியம் உங்களிடம் வரும் போது அதனை பற்றி இப்படித்தான் நீங்கள் வர்ணிப்பீர்களா? இதுவா மாயாஜாலம்? மந்திரவாதிகள் எவரும் எப்படி வெற்றி பெற முடியும்?"

78. அவர்கள் கூறினர், "எங்கள் பெற்றோர்கள் செய்ய நாங்கள் கண்டவற்றை விட்டு எங்களை வழி திருப்பவும், உங்களுக்கென முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை அடைந்து கொள்ளவும் நீங்கள் வந்திருக்கின்றீர்களா? நாங்கள் ஒருபோதும் உங்களுடன் நம்பிக்கையாளர்களாகச் சேர்ந்து கொள்ள மாட்டோம்."

*சத்தியம் மிகைத்து வெற்றி கொள்கின்றது*

79. ஃபேரோ கூறினான் "அனுபவமிக்க மந்திரவாதிகள் ஒவ்வொருவரையும் என்னிடம் கொண்டு வாருங்கள்."

80. மந்திரவாதிகள் வந்தபோது, மோஸஸ் அவர்களிடம் கூறினார், "நீங்கள் எறியப்போவது எதுவானாலும் எறியுங்கள்."

81. அவர்கள் எறிந்தபோது, மோஸஸ் கூறினார், "நீங்கள் வெளிப்படுத்தியிருப்பது மாயாஜாலமே, மேலும் **கடவுள்** அதனைத் தோல்வியடையச் செய்வார். வரம்பு மீறுபவர்களின் காரியங்களுக்குக் **கடவுள்** ஆதரவளிப்பதில்லை."

82. குற்றவாளிகள் வெறுத்த போதிலும், **கடவுள்** தன் வார்த்தைகளைக் கொண்டு சத்தியத்தை ஸ்தாபிப்பார்.

83. ஃபேரோ மற்றும் அவனுடைய பிரதானிகளின் கொடுங்கோன்மைக்கு அஞ்சிக் கொண்டிருந்த சமயத்தில், மோஸஸுடன் நம்பிக்கை கொண்டவர்களாக, அவருடைய சமூகத்தாரில் சிலரைத் தவிர, எவரும் இல்லை. நிச்சயமாக, ஃபேரோ பூமியின் மீது மிகப்பெரும் ஆணவம் கொண்டவனாக, மேலும் மெய்யாகவே ஒரு கொடுங்கோலனாக இருந்தான்.

84. மோஸஸ் கூறினார், "என் சமூகத்தாரே, நீங்கள் மெய்யாகவே **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டிருந்தால், பின்னர் உங்களுடைய பொறுப்பை அவரிடம் ஒப்படையுங்கள், மெய்யாகவே நீங்கள் சரணடைந்தவர்களாக இருந்தால்."

85. அவர்கள் கூறினர், "நாங்கள் **கடவுள்** மீது பொறுப் பேற்படுத்துகின்றோம். எங்கள் இரட்சகரே, அடக்கு முறை செய்யும் இம்மக்களின் வன்கொடுமைகளி லிருந்து எங்களைக் காப்பீராக.

86. "நம்பமறுக்கும் மக்களிடமிருந்து, உம்முடைய கரு ணையால், எங்களை விடுதலை செய்வீராக."

87. நாம் மோஸஸுக்கும் அவருடைய சகோதரருக்கும் உள்ளுணர்வளித்தோம். "தற்போதைக்கு எகிப்தில் உள்ள உங்களது வீடுகளைப் பராமரித்துக் கொண்டு, உங்கள் வீடுகளையே ஆலயங்களாக ஆக்கிக் கொள்ளுங்கள், மேலும் தொடர்புத் தொழுகைகளை *(ஸலாத்)* பேணி வாருங்கள். நம்பிக்கை கொண்டவர் களுக்கு நற்செய்தி வழங்குங்கள்."

88. மோஸஸ் கூறினார், "எங்கள் இரட்சகரே, ஃபேரோ வுக்கும் அவனுடைய பிரதானிகளுக்கும் இவ்வுலகில் சௌகரியத்தையும், வளங்களையும் நீர் வழங்கியிருக் கின்றீர். எங்கள் இரட்சகரே, அவர்கள் உமது பாதை யிலிருந்து மற்றவர்களைத் துரத்துவதற்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்துகின்றனர். எங்கள் இரட்ச கரே, அவர்களுடைய வளங்களைத் துடைத்தெடுத்து விடுவீராக, மேலும் வலிமிகுந்த அந்தத் தண்டனை யை அவர்கள் காணும் வரை, நம்பிக்கை கொள்வதி லிருந்து அவர்களைத் தடுக்கும் வண்ணம் அவர் களுடைய இதயங்களைக் கடினமாக்கி விடுவீராக."

89. அவர் கூறினார், *"(மோஸஸ் மற்றும் ஆரோனே),* உங்க ளுடைய பிரார்த்தனை பதிலளிக்கப்பட்டு விட்டது, எனவே உறுதியோடிருப்பீர்களாக, மேலும் அறியாத வர்களின் வழிகளைப் பின்பற்றாதீர்கள்."

90. நாம் இஸ்ரவேலர்களின் சந்ததியினரை கடலைக் கடக்கச் செய்து காப்பாற்றினோம். வீம்பாகவும், பாவ கரமாகவும், ஃபேரோவும் அவனுடைய படையினரும் அவர்களைப் பின் தொடர்ந்தனர். மூழ்கிவிடுதல் அவனுக்கு ஒரு நிதர்சனமாக ஆனபோது, அவன் கூறினான், "இஸ்ரவேலர்களின் சந்ததியினர் நம்பிக் கை கொண்டிருக்கும் அந்த ஒருவரைத் தவிர, தெய் வம் இல்லை என நான் நம்பிக்கை கொள்கின்றேன்; நான் சரணடைந்த ஒருவனாக இருக்கின்றேன்."

91. "மிகவும் தாமதம்!* ஏனெனில், ஏற்கெனவே நீ கலகம் செய்தாய், வரம்புமீறிய ஒருவனாக இருப்பதைத் தேர்ந் தெடுத்துக் கொண்டாய்.

*ஃபேரோவின் சடலம் பத்திரப்படுத்தப்படுகின்றது**

92. "இன்று, எதிர்காலத் தலைமுறையினருக்கு உன்னை ஒரு படிப்பினை ஆக்குவதற்காக, உனது சடலத்தை நாம் பத்திரப்படுத்துவோம்."* துரதிஷ்டவசமாக, மனிதர் களில் அதிகமானோர் நமது அத்தாட்சிகளைப் பற்றி முற்றிலும் கவனமின்றி இருக்கின்றனர்.

93. இஸ்ரவேலர்களின் சந்ததியினருக்கு கண்ணியமான தொரு அந்தஸ்தை நாம் கொடையளித்தோம், மேலும் நல்ல வாழ்வாதாரங்களைக் கொண்டு அவர்களை ஆசிர்வதித்தோம். இருப்பினும், இந்த அறிவு அவர் களிடம் வந்த போது அவர்கள் தர்க்கம் செய்தனர். அவர்கள் தர்க்கித்துக் கொண்ட ஒவ்வொன்றைக் குறித்தும் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று உம்மு டைய இரட்சகர் அவர்களுக்குத் தீர்ப்பு அளிப்பார்.

*தூதரின் ஐயம்*

94. உம்முடைய இரட்சகரிடமிருந்து உமக்கு வெளிப்படுத் தப்பட்டவற்றைக் குறித்து உமக்கு ஏதேனும் ஐயமிருக்கு மாயின், முந்திய வேதத்தைப் படிப்பவர்களிடம் அப் போது கேட்பீராக. உண்மையில், உம்முடைய இரட்ச கரிடமிருந்து சத்தியம் உமக்கு வந்துள்ளது. ஐயம் கொள்வோருடன் இருந்திடாதீர்.

95. அன்றியும், நஷ்டவாளிகளுடன் நீர் இல்லாதிருக்கும் பொருட்டு, **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்கமறுப் போருடன் நீர் சேர்ந்து விட வேண்டாம்.

96. நிச்சயமாக, உம்முடைய இரட்சகரிடமிருந்து ஓர் ஆணையின் மூலம் கண்டனம் செய்யப்பட்டவர் களால் நம்பிக்கை கொள்ள இயலாது.

97. வலிமிகுந்த அந்தத் தண்டனையை அவர்கள் காணும் வரை, எவ்விதமான சான்றை நீர் அவர்களிடம் காட்டி னாலும் ஒரு பொருட்டல்ல, *(அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது).*

*நம்பிக்கை கொள்ளும் தேசங்கள் வளமடையும்*

98. நம்பிக்கை கொள்ளும் எந்தச் சமுதாயத்திற்கும் நம் பிக்கை கொண்டதற்கான வெகுமதி நிச்சயமாகக் கொடுக்கப்படும். உதாரணமாக, ஜோனாவின் சமூ கத்தார்: அவர்கள் நம்பிக்கை கொண்ட போது, இவ் வுலகில் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த இழி வான தண்டனையை நாம் அகற்றினோம், மேலும் அவர்களை நாம் வளமானவர்களாக ஆக்கினோம்.

**10:91 கடவுளின் மேல் நம்பிக்கை கொள்வதென்பது, முதல் படியே ஆகும். அதன் பின்னர், வழிபாட்டு அனுஷ்டானங்களின் மூலம் ஒருவர் தன் ஆத்மாவை ஊட்டப்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. (பார்க்க பின் இணைப்பு 15).*

**10:92 கடவுள் எகிப்தியர்களுக்கு சடலங்களைப் பதப்படுத்தும் (மம்மி) பிரத்தியேகமான அறிவை வழங்கினார். இன்று, ஃபேரோவின் பதப்படுத்தப்பட்ட சடலம் கெய்ரோவில் உள்ள அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.*

99. உம்முடைய இரட்சகர் நாடியிருந்தால், பூமியில் உள்ள எல்லா மக்களும் நம்பிக்கை கொண்டு விட்டிருப்பார்கள்.* நம்பிக்கையாளர்களாகுமாறு மக்களை நிர்ப்பந்திக்க நீர் விரும்புகின்றீரா ?

*நம்பமறுப்பவர்கள் கட்டங்கட்டப்படுகின்றனர் **

100. **கடவுள்** நாட்டத்திற்கு ஒப்பவே தவிர எந்த ஆத்மாவும் நம்பிக்கை கொள்ள இயலாது. ஏனெனில், புரிந்து கொள்ள மறுப்பவர்கள் மீது அவர் ஒரு சாபத்தை வைத்து விடுகின்றார்.

101. கூறும், "வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்து அத்தாட்சிகளையும் கவனித்துப் பாருங்கள்." எல்லாச் சான்றுகளும், மேலும் எல்லா எச்சரிக்கைகளும் நம்பமறுப்பதென்று முடிவெடுத்து விட்ட மக்களுக்கு ஒருபோதும் உதவி செய்ய முடியாது.

102. கடந்த காலங்களில் அவர்களைப் போன்றவர்களுக்கு நேர்ந்த விதியையன்றி மற்றொன்றை இவர்கள் எதிர்பார்க்க முடியுமா ? கூறும், "சற்று காத்திருங்கள், அன்றியும், உங்களோடு நானும் காத்திருக்கின்றேன்."

*உத்தரவாதமான வெற்றி*

103. நாம் இறுதியாக, நமது தூதர்களையும் நம்பிக்கை கொண்டவர்களையும் காப்பாற்றி விடுகின்றோம். நம்பிக்கையாளர்களை நாம் காப்போம் என்பது நம்முடைய மாற்ற முடியாத சட்டமாகும்.

104. கூறும், "மனிதர்களே, எனது மார்க்கத்தில் நீங்கள் ஏதேனும் ஐயம் கொண்டிருப்பீர்களாயின், **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடுபவற்றை நான் வழிபடுவதில்லை. நான் **கடவுள்**–ஐ மட்டுமே வழிபடுகின்றேன், உங்கள் வாழ்வுகளை முடிவுக்கு கொண்டு வரும் அந்த ஒருவர். நம்பிக்கை கொண்ட ஒருவனாக இருக்க வேண்டுமென நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்."

105. நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்: "ஏகத்துவ மார்க்கத்திற்கு உம்மை அர்ப்பணித்துக் கொள்வீராக; போலித் தெய்வ வழிபாட்டை நீர் அனுஷ்டிக்க வேண்டாம்.

106. "உமக்குப் பயனளிக்கவோ அல்லது உமக்குத் தீங்கிழைக்கவோ சக்தியற்றவற்றைக் **கடவுள்**–வுடன் நீர் வழிபட வேண்டாம். நீர் செய்தால், நீர் ஒரு வரம்பு மீறியவராவீர்."

*சக்தி அனைத்தும் கடவுளுக்குரியது*

107. **கடவுள்** ஒரு கஷ்டத்தைக் கொண்டு உம்மைத் தீண்டுவாராயின், அவரைத் தவிர வேறெவரும் அதனை நிவர்த்திக்க இயலாது. மேலும் அவர் உம்மை ஆசிர்வதிக்கும் பட்சத்தில், எந்தச் சக்தியும் அவருடைய அருளைத் தடுத்து விட முடியாது. தன் சேவகர்களில் இருந்து அவர் தேர்ந்தெடுத்தோர் மீது அதனை அவர் பொழிகின்றார். அவர்தான் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

108. பிரகடனப்படுத்துவீராக: "மனிதர்களே, உங்கள் இரட்சகரிடமிருந்து சத்தியம் இதிலே உங்களுக்கு வந்துள்ளது. வழிகாட்டப்பட்டவர் எவராயினும் தன் சொந்த நலனுக்காகவே வழிகாட்டப்படுகின்றார். மேலும் வழிதவறிச் செல்பவர் எவராயினும் தனக்குக் கேடாகவே வழிதவறிச் செல்கின்றார். நான் உங்களுடைய பொறுப்பாளன் அல்லன்."

109. உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றைப் பின்பற்றுவீராக, **கடவுள்** தனது தீர்ப்பை வெளியிடும் வரை பொறுத்திருப்பீராக; அவரே மிகச் சிறந்த நீதிபதி.

****

# சூரா 11: ஹூத் (ஹூத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ர. இது ஒரு வேதமாகும், இதன் வசனங்கள் பூரணப்படுத்தப்பட்டு, பின்னர் விவரிக்கப்பட்டது.* மிகுந்த ஞானமுடையவர், மிகவும் நன்கறிந்தவரிடமிருந்து இது வந்துள்ளது.

*குர்ஆன்: கடவுளின் தூதர்*

2. பிரகடனிப்பதாவது: "**கடவுள்**–ஐ அன்றி நீங்கள் வழிபட வேண்டாம். ஓர் எச்சரிப்பவராகவும், அவ்வண்ணமே நற்செய்தி தாங்கியவராகவும் அவரிடமிருந்து நான் உங்களிடம் வந்துள்ளேன்.

**10:99–101 நம்முடைய ஆரம்பத் தீர்மானத்தின் மீது இறைக்குறுக்கீடு இல்லாத நிலையில், நாம் நம்முடைய போலித் தெய்வ வழிபாட்டை நாமாகவே மறுதலிக்க இச்சோதனை வலியுறுத்துகிறது. நம்பமறுக்க வேண்டும் என்று தீர்மானித்தவர்களைக் கடவுள் வெளியில் தடுத்து நிறுத்தி விடுகின்றார்.*

**11:1 குர்ஆனில் உள்ள ஆச்சரியமூட்டும் இரு அற்புத நிகழ்வுகளுக்குச் சாட்சியாகும் பாக்கியம் பெற்றதாக நம் தலைமுறை உள்ளது: (1) ஓர் அசாதாரணமான கணித குறியீடு (பின் இணைப்பு 1) மேலும் (2) அசாத்தியமான பரிமாணங்கள் கொண்ட ஓர் இலக்கிய அற்புதம். கணித அடிப்படையில் கட்டப்பட்ட ஒரு நூலை மனிதர்கள் எழுத முயற்சிக்கும் போது, எண்களைக் குறிப்பிட்ட முறையில் அமைப்பதால் இலக்கியத்தரம் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. குர்ஆன் இலக்கியச் சிறப்பிற்கான மாதிரியை அமைக்கின்றது.*

3. "நீங்கள் உங்கள் இரட்சகரிடம் பாவமன்னிப்புத் தேட வேண்டும், பின்னர் அவரிடம் வருந்த வேண்டும். அப்போது அவர் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு, தாராளமாக உங்களை ஆசீர்வதிப்பார், மேலும் தன் கிருபையை, அதற்குத் தகுதியானவர்கள் மீது அருள்வார். நீங்கள் திரும்பி விட்டால், பின்னர் பயங்கரமான ஒரு நாளின் தண்டனை குறித்து உங்களுக்காக நான் அஞ்சுகிறேன்."

4. உங்களுடைய இறுதித் திரும்புதல் **கடவுள்** வசமே உள்ளது, இன்னும் அவர் சர்வசக்தியுடையவர்.

5. உண்மையில், தங்கள் உள்ளார்ந்த எண்ணங்களை அவர்கள் மறைத்துக் கொள்கின்றனர், அவற்றை அவர் அறிந்து கொள்வதிலிருந்தும் தடுத்து விடுவதைப் போல. நடப்பதென்னவெனில், அவர்கள் தங்களுடைய ஆடைகளால் தங்களை மூடிக் கொள்ளும் போதே, அவர்களுடைய எல்லா இரகசியங்களையும் அறிவிப்புகளையும் அவர் அறிகின்றார். அவர் உள்ளார்ந்த எண்ணங்களை அறிகின்றார்.

*வாழ்வாதாரங்கள்*
*உத்தரவாதமளிக்கப்படுகின்றன*

6. **கடவுள்**–ஆல் வாழ்வாதாரம் உத்திரவாதம் அளிக்கப்படாத எந்த ஒரு சிருஷ்டியும் பூமியில் இல்லை. இன்னும் அதன் பாதையையும் அதன் இறுதி விதியையும் அவர் அறிந்திருக்கின்றார். அனைத்தும், ஆழ்ந்த தோர் ஏட்டில் பதிவாகி உள்ளது.

7. அவர்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தவர்.* – மேலும் அவருடைய *(பூலோக)* சாம்ராஜ்யம் முற்றிலும் தண்ணீரால் மூடப்பட்டுள்ளது.** – உங்களைச் சோதிப்பதற்காக, உங்களில் நன்மைகள் புரிவோரைச் சிறப்பிப்பதற்காக. ஆயினும், "இறப்பிற்குப் பின்னர் நீங்கள் உயிர்த்தெழுப்பப்படுவீர்கள்" என்று நீர் கூறினால், நம்பமறுப்பவர்கள் கூறுவார்கள், "இது தெளிவான சூன்யமாகும்."

8. மேலும், அவர்கள் அடைந்திருக்கும் தண்டனையை நாம் தாமதித்தால் – ஏனெனில் அதனை ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கென நாம் நிறுத்தி வைத்துள்ளோம் –அவர்கள் கூறுகின்றனர், "அவரைத் தடுத்துக் கொண்டிருப்பது எது ?" நிதர்சனத்தில், அது அவர்களிடம் வந்து விட்டால் எதுவும் அதனைத் தடுத்து விடமுடியாது, மேலும் அவர்களுடைய கேலி மீண்டும், மீண்டும் அவர்களிடமே திரும்பி வந்து தொந்தரவு செய்யும்.

9. நம்மிடமிருந்து, கருணையைக் கொண்டு மனிதனை நாம் ஆசீர்வதித்து, பின்னர் அதனை அகற்றி விடும் போதெல்லாம், அவன் விரக்தியடைந்தவனாகவும், நன்றியற்றவனாகவும் மாறி விடுகின்றான்.

10. துன்பம் அவனைத் தீண்டிவிட்ட பின்னர், அவனை நாம் ஆசீர்வதிக்கும் போதெல்லாம், "எல்லாத் துன்பங் களும் என்னை விட்டு அகன்று விட்டன" என அவன் கூறுகின்றான்; அவன் உணர்வு வயப்பட்டவன், கர்வம் கொண்டவன் ஆகிவிடுகின்றான்.

11. உறுதியுடன் விடாமுயற்சி செய்து, நேர்மையான தொரு வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, அவர்கள் மன்னிப்பிற்கும் தாராளமான ஒரு பிரதிபலனுக்கும் தகுதியாகின்றனர்.

*கடவுளின் வெளிப்பாடு கனமானது*

12. உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றில் சிலவற்றை கண்டு கொள்ளாதிருக்க நீர் விரும்பக் கூடும், மேலும் அதனால் நீர் தொல்லையடையவும் கூடும். இன்னும் "இவரிடம் எந்தப் பொக்கிஷமோ, அல்லது ஒரு வானவரோ இறங்கி வராமலிருப்பது எப்படி ?" என்றும் அவர்கள் கேட்கக் கூடும். நீர் ஓர் எச்சரிப்பவர் மட்டுமே; **கடவுள்** அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றார்.

*குர்ஆன்: அதே மாதிரி செய்ய இயலாது.*

13. "இவர் *(குர்ஆனை)* இட்டுக்கட்டினார்" என அவர்கள் கூறினால், அவர்களிடம் கூறும், "அப்படியென்றால், இவற்றைப் போன்று பத்து சூராக்களை இட்டுக் கட்டிக்கொண்டு வாருங்கள். மேலும் **கடவுள்**–ஐ அன்றி, உங்களால் முடிந்தவர்களை அழைத்துக் கொள்ளுங்கள்,"* நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்.

14. அவர்கள் உமது சவாலைச் சந்திக்கத் தவறினால், பின்னர் இது **கடவுள்**–ன் அறிவைக் கொண்டு வெளிப்படுத்தப்பட்டதென்றும், மேலும் அவரைத் தவிர இறைவன் இல்லையென்றும் அறிந்து கொள்ளுங்கள். அப்போது நீங்கள் சரணடைவீர்களா ?

**11:7 ஆறு நாட்கள் என்பது, ஏராளமான தகவல்களை நமக்கு வழங்கும் ஒரு அளவுகோல் மட்டுமே. இவ்வாறாக, பரந்து விரிந்த, உயிரற்ற இந்த பௌதிகப் பிரபஞ்சம் இரு நாட்களில் படைக்கப்பட்ட அதே சமயம் மிகச் சிறிய துகளான "பூமி" நான்கு நாட்களில் படைக்கப்பட்டது என்று நாம் கற்றுக்கொள்கின்றோம் **(41:10–12)**. பூலோகவாசிகளுக்குரிய வாழ்வாதாரமான உணவு, தண்ணீர் மற்றும் பிராணவாயு ஆகியவை மிகச்சரியாக கணக்கிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டியதாக இருந்தது.*

***11:7 பூமி துவக்கத்தில் தண்ணீரால் மூடப்பட்டதாக இருந்தது. அதன் பின்னர், நிலப்பரப்புகள் தோன்றின, மேலும் கண்டங்கள் மெதுவாக தனியே பிரிந்து ஒதுங்கின.*

**11:13 குர்ஆனின் கணித அற்புதம், அதே மாதிரி செய்ய இயலாதது (பார்க்கபின் இணைப்பு 1).*

15. இவ்வுலக வாழ்வையும், அதன் ஆடம்பரப் பொருள்களையும் தேடுகின்றவர்களுக்கு, அவர்களுடைய செயல்களுக்குரிய கூலியை நாம் இவ்வாழ்வில் சிறிதளவும் குறைவின்றி அவர்களுக்குக் கொடுப்போம்.

16. அவர்கள்தான் தங்களுடைய மறுவுலகின் பங்கை விட்டு விட்டவர்கள், மேலும், அதன் விளைவாக, நரகமே அவர்களுடைய பங்காகும். அவர்களுடைய செயல்கள்யாவும் வீணேயாகும்; அவர்கள் செய்தவை அனைத்தும் பயனற்றதாகி விட்டது.

*குர்ஆனின் கணிதக் குறியீடு*

17. தங்கள் இரட்சகரிடமிருந்து உறுதியான சான்று* கொடுக்கப்பட்டு, அவரிடமிருந்து ஒரு சாட்சி மூலம் எடுத்துரைக்கப்பட்டு, மேலும் அதற்கு முன்னர் மோஸஸின் புத்தகம் ஒரு முன் மாதிரியாகவும், ஒரு கருணையாகவும் அமைந்ததே,** அவர்களைப் பொறுத்தவரை நிச்சயமாக நம்பிக்கை கொள்வார்கள். பல்வேறு பிரிவினரிலுள்ள நம்பமறுத்தவர்களைப் பொறுத்தவரை, நரகம் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டுள்ளது. எந்த ஐயத்திற்கும் இடம் கொடுக்க வேண்டாம்; இது உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் ஆகும், ஆனால் மக்களில் பெரும்பாலோர் நம்பமறுக்கின்றனர்.

18. **கடவுள்**–ஐப் பற்றி பொய்களை இட்டுக் கட்டுபவர்களை விட மிகத் தீயவர்கள் யார்? அவர்கள் தங்களுடைய இரட்சகரின் முன் கொண்டு வரப்படுவார்கள், மேலும் சாட்சிகள் கூறுவார்கள், "இவர்கள்தான் தங்கள் இரட்சகர் பற்றிப் பொய்யுரைத்தவர்கள். வரம்புமீறியவர்கள் மீது **கடவுள்**–ன் கண்டனம் நேர்ந்து விட்டது."

19. அவர்கள் **கடவுள்**–ன் பாதையை விட்டும் தடுப்பதோடு அதனைக் கோணலாக்கவும் முனைகின்றனர், மேலும் அவர்கள் மறுவுலக வாழ்வினை நம்ப மறுப்பவர்களாக உள்ளனர்.

*நம்பமறுப்போர்*

20. அவர்கள் ஒருபோதும் தப்பித்து விடமுடியாது, அன்றியும் **கடவுள்**–க்கு எதிராக அவர்களுக்கு உதவி செய்யும் எந்த எஜமானர்களையோ, அதிபதிகளையோ காணவும் முடியாது. அவர்களுக்குரிய தண்டனை இருமடங்காக்கப்படும். அவர்கள் செவியேற்கத் தவறி விட்டனர், மேலும் அவர்கள் பார்க்கவும் தவறிவிட்டனர்.

21. இவர்கள்தான் தங்கள் ஆத்மாக்களை தொலைத்தவர்கள், மேலும் அவர்கள் உருவாக்கிக் கொண்ட போலித் தெய்வங்கள் அவர்களைக் கைவிட்டு விடும்.

22. மறுவுலக வாழ்வில் மிக மோசமாக நஷ்டப்பட்டவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

*நம்பிக்கையாளர்கள்*

23. நம்பிக்கை கொண்டு நேர்மையானதொரு வாழ்வு நடத்தி, தங்கள் இரட்சகருக்குத் தங்களையே அர்ப்பணித்தோரைப் பொறுத்தவரை, அவர்கள் சுவர்க்கவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அங்கே என்றென்றும் தங்கி இருப்பார்கள்.

24. இவ்விரு கூட்டத்தாருக்குரிய உதாரணமாவது, குருடர்கள் மற்றும் செவிடர்களுடன் ஒப்பிடப்படுகின்ற பார்வையுடையவர்களையும் செவிப்புலனுடையவர்களையும் போன்றதாகும். அவர்கள் சமமானவர்களா? நீங்கள் கவனத்தில் கொள்ள மாட்டீர்களா?

*நோவா*

25. நாம் நோவாவை அவருடைய சமூகத்தாரிடம், "நான் தெளிவானதொரு எச்சரிப்பவனாக உங்களிடம் வந்துள்ளேன்" என்று கூறியவராக அனுப்பினோம்.

26. "நீங்கள் **கடவுள்**–ஐ அன்றி வழிபட வேண்டாம், வலிமிகுந்த ஒரு நாளின் தண்டனையை உங்களுக்காக நான் அஞ்சுகிறேன்."

27. அவருடைய சமூகத்தாரில் இருந்த நம்பமறுத்த தலைவர்கள் கூறினர், "நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதர் என்பதை விட அதிகமாக எதுவுமில்லை என்றே நாங்கள் காண்கிறோம்,மேலும் உம்மை முதலில் பின்பற்றும் மக்கள் எங்களில் மிக மோசமானவர்களாக இருப்பதையே நாங்கள் காண்கின்றோம். எங்களுக்கு மேலாக எந்த மேன்மையும் நீர் பெற்றிருக்கவில்லை என்பதையே நாங்கள் காண்கின்றோம். உண்மையில், நீங்கள் பொய்யர்கள் என்றே நாங்கள் கருதுகின்றோம்."

28. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, என் இரட்சகரிடமிருந்து ஓர் உறுதியான சான்றை நான் பெற்றிருந்தால்? நீங்கள் அதனைக் காண முடியாத போதிலும், தனது கருணையிலிருந்து என்னை அவர் ஆசீர்வதித்திருந்தால்? இதன் மீது நம்பிக்கை கொள்ளுமாறு நாங்கள் உங்களை நிர்ப்பந்திக்கவா போகின்றோம்?

**11:17 குர்ஆனுடைய 19ன் அடிப்படையிலான கணிதக் குறியீடு, அது இறைவனால் இயற்றப்பட்டது என்பதற்கான உள்ளமைந்த சான்றாக இருக்கின்றது. "பய்யினஹ்" (சான்று) என்ற வார்த்தை குர்ஆனில் 19 முறைகள் குறிப்பிடப்படுகின்றன என்பது கவனிக்கத் தக்கதாகும்.*

***11:17 இப்போது வெளிப்பட்டுள்ளபடி, மோஸஸின் புத்தகமும் 19ஐப் பொது வகு எண்ணாகக் கொண்டு கணிதக் கட்டமைப்பு செய்யப்பட்டிருந்தது. பார்க்க 46:10ன் அடிக்குறிப்பு மற்றும் பின் இணைப்பு 1.*

29. "என் சமூகத்தாரே, உங்களிடம் நான் பணம் எதுவும் கேட்கவில்லை; எனக்குரிய கூலி **கடவுள்** வசமிருந்தே வருகின்றது. நம்பிக்கை கொண்டோரை நான் வெளியேற்றி விடமாட்டேன்; அவர்கள் தங்களுடைய இரட்சகரைச் சந்திப்பார்கள் *(மேலும் அவர் மட்டுமே அவர்களுக்குத் தீர்ப்பு வழங்குவார்).* அறியாத மக்களாகவே உங்களை நான் காண்கின்றேன்.

30. "என் சமூகத்தாரே, அவர்களை நான் வெளியேற்றி விட்டால், **கடவுள்**–க்கு எதிராக எனக்கு ஆதரவளிக்க யாரால் முடியும்? நீங்கள் கவனத்தில் கொள்ள மாட்டீர்களா?

*சக்திகள் அனைத்தும் கடவுளுக்குரியது*

31. "**கடவுள்**–ன் பொக்கிஷங்களை நான் சொந்தமாகக் கொண்டுள்ளேன் என்று நான் உரிமை கோரவில்லை, அன்றி எதிர்காலத்தையும் நான் அறிய மாட்டேன், அன்றி நான் ஒரு வானவர் என்றும் கூறவில்லை, மேலும் உங்களுடைய கண்களுக்கு இழிவானவர்கள் மீது, பாக்கியங்கள் எதையும் **கடவுள்** அருளமாட்டார் என்றும் நான் கூறவில்லை. அவர்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களில் இருப்பது என்ன என்ப தைக் **கடவுள்** நன்கறிவார். *(இதனை நான் செய்தால்)* நான் வரம்புமீறியவன் ஆகிவிடுவேன்.

32. அவர்கள் கூறினர், "நோவாவே, நீர் எங்களுடன் வாதித்தீர், மேலும் தொடர்ந்து வாதித்துக் கொண்டே இருந்தீர். நீர் உண்மையாளராக இருந்தால், எங்களிடம் நீர் பயமுறுத்துகின்ற அந்த அழிவைக் கொண்டு வருமாறு உம்மிடம் நாங்கள் சவால் விடுகின்றோம்."

33. அவர் கூறினார், "**கடவுள்** ஒருவர்தான் அதனை உங்களிடம் கொண்டு வருபவர், அவர் அவ்விதம் நாடினால், அப்போது நீங்கள் தப்பித்து விட முடியாது.

34. "நான் உங்களுக்கு உபதேசம் செய்தாலும், உங்களை வழிகேட்டில் அனுப்ப வேண்டும் என்பது **கடவுள்** நாட்டமாகயிருப்பின், என்னுடைய உபதேசம் உங்களுக்குப் பயனளிக்காது. அவரே உங்கள் இரட்சகர், மேலும் அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்."

35. அவர்கள் "இந்தக் கதையை இவர் உருவாக்கிக் கொண்டார்" என்று கூறுவார்களாயின், அப்போது கூறும், "இதனை நான் உருவாக்கியிருப்பேனாயின், பின்னர் என் குற்றத்திற்கு நானே பொறுப்பாவேன், மேலும் நீங்கள் செய்யும் எந்தக் குற்றத்திற்கும், நான் குற்றமற்றவன் ஆவேன்."

36. நோவாவுக்கு உள்ளுணர்வு அளிக்கப்பட்டது: "ஏற்கனவே நம்பிக்கை கொண்டோரைத் தவிர உமது சமூகத்தாரில் எவரும் இதற்கு அப்பால் நம்பிக்கை கொள்ளப் போவதில்லை. அவர்களுடைய செயல்களால் துக்கமடையாதீர்.

37. "நமது கவனமிக்க பார்வையின் கீழ், நமது உள்ளுணர்வின்படி, படகைக் கட்டும், மேலும் வரம்பு மீறியோரின் சார்பாக என்னிடம் இறைஞ்சாதீர், அவர்கள் மூழ்கடிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளனர்."

*இறுதியாகச் சிரிப்பவனின் சிரிப்பே சிறந்தது*

38. அவர் படகைக் கட்டிக் கொண்டிருக்கும் போது, அவருடைய சமூகத்தார் அவரைக் கடந்து சென்ற போதெல்லாம் அவரைப் பார்த்து நகைத்தனர். அவர் கூறினார், "எங்களைப் பார்த்து நீங்கள் நகைக்கலாம், ஆனால் நீங்கள் நகைப்பதைப் போலவே, நாங்களும் உங்களைப் பார்த்து நகைக்கின்றோம்.

39. "இழிவு மிக்கதோர் வேதனையை அனுபவிக்கவும், நிலைத்திருக்கும் ஒரு தண்டனைக்கு உள்ளாகவும் போவது யார் என்பதை நீங்கள் நிச்சயம் கண்டு கொள்வீர்கள்."

40. நமது தீர்ப்பு வந்து, வளிமண்டலம் கொதித்த போது, நாம் கூறினோம், "கண்டனத்திற்குள்ளானோரைத் தவிர, ஒவ்வொரு வகையிலும் ஒரு ஜோடியை* சுமந்து கொண்டு, உம்முடைய குடும்பத்தாருடன் செல்லும். நம்பிக்கை கொண்டோரை உம்முடன் சுமந்து செல்லும்." மேலும் அவருடன் நம்பிக்கை கொண்டோர் மிகச் சிலர் மட்டுமே.

41. அவர் கூறினார், "வந்து படகில் ஏறிக் கொள்ளுங்கள். இது மிதந்து செல்வதும் நங்கூரமிடப்படுவதும் **கடவுள்** பெயராலேயே ஆகும். என் இரட்சகர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

42. மலைகளைப் போன்ற அலைகளின் மீது அவர்களுடன் அது மிதந்து சென்ற போது, பிரிந்திருந்த அவருடைய மகனை நோவா அழைத்தார்: "என் மகனே, வந்து எங்களுடன் ஏறிக்கொள்; நம்பமறுப்போருடன் இருக்காதே."

---

**11:40 & 44 இது நிரூபிக்கப்பட்ட கடவுளின் சத்தியமாகும்: நோவாவின் படகு சாதாரணமான கயிறுகளால் ஒன்றினைத்துக் கட்டப்பட்ட மரக்கட்டைகளால் ஆனது (54:13) பொதுவான கருத்துக்கு மாற்றமாக, அவ்வெள்ளம் இன்றைய சாக்கடலைச் சுற்றியுள்ள பகுதிகள் வரை மட்டுமே இருந்தது, மேலும் அந்தப் பிராணிகள் நோவாவின் கால் நடைகள் மட்டுமே, பூமியில் வாழ்ந்த எல்லாப் பிராணிகளும் அல்ல.*

43. அவன் கூறினான், "தண்ணீரில் இருந்து என்னைக் காத்துக் கொள்ள, ஒரு மலையின் மீது நான் புகலிடம் எடுத்துக் கொள்வேன்." அவர் கூறினார், "இன்றைய தினம் **கடவுள்**–ன் தீர்ப்பிலிருந்து எவரையும் எதுவும் காப்பாற்றி விடாது; அவருடைய கருணைக்குத் தகுதியானவர்கள் மட்டுமே *(காப்பாற்றப்படுவர்).*" அலைகள் அவர்களைப் பிரித்தன, மேலும் மூழ்கியவர்களோடு அவன் இருந்தான்.

*படகு எங்கு கரை சேர்ந்தது*

44. பிரகடனம் செய்யப்பட்டது: "பூமியே, உனது தண்ணீரை விழுங்கி விடு," மேலும் "வானமே, நிறுத்து." பின்னர் தண்ணீர் வற்றியது; தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. இறுதியில் படகு *ஜூதி குன்றுகளில் தங்கியது.* அப்போது இது பிரகடனம் செய்யப்பட்டது: "வரம்புமீறியவர்கள் அழிந்து போனார்கள்."

45. நோவா தன் இரட்சகரை இறைஞ்சினார்: "என் இரட்சகரே, என் மகன் என் குடும்பத்தின் ஓர் அங்கத்தினன் ஆவான், மேலும் உமது வாக்குறுதி சத்தியமானது. ஞானம் உடையோரில் நீரே மிகுந்த ஞானம் உடையவர்."

*சிபாரிசு எனும் கட்டுக் கதை**

46. அவர் கூறினார், "நோவாவே, அவன் உமது குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன். நீர் அறியாத எதையேனும் என்னிடம் கேட்பது நன்னெறியல்ல* நீர் அறியாதவர்களைப் போல் ஆகிவிடாதிருக்கும் பொருட்டு, நான் உமக்கு அறிவுறுத்துகிறேன்."

47. அவர் கூறினார், "என் இரட்சகரே, நான் அறியாத எந்த ஒன்றையும் மீண்டும் நான் உம்மிடம் இறைஞ்சாமலிருக்கும் பொருட்டு, உம்மிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன். நீர் என்னை மன்னித்து, மேலும் என் மேல் கருணை கொண்டாலே அன்றி, நான் நஷ்டமடைந்தோருடனே இருப்பேன்."

48. பிரகடனம் செய்யப்பட்டது: "நோவாவே, உம்மீதும் உம்முடனிருக்கும் தோழர்களின் சந்ததியிலிருந்து தோன்றும் தேசங்களின் மீதும் சாந்தியுடனும் ஆசிகளுடனும் நீர் கரையிறங்குவீராக. உங்கள் சந்ததியில் தோன்றும் மற்ற தேசங்களைப் பொறுத்த வரை, நாம் அவர்களைச் சிறிது காலம் ஆசீர்வதிப்போம், பின்னர் அவர்களை வலி மிகுந்த தண்டனைக்கு உள்ளாக்குவோம்."

49. இது, கடந்த காலத்தில் இருந்து நாம் உமக்கு வெளிப்படுத்தும் செய்தி ஆகும். அவற்றைப் பற்றி நீர் எவ்வித அறிவும் பெற்றிருக்கவில்லை. – நீரோ அல்லது உம் சமூகத்தாரோ – இதற்கு முன்னர். எனவே, பொறுமையுடன் இருப்பீராக. இறுதி வெற்றி நல்லோருக்கே உரியது.

*ஹூத்:*
*அதே ஒரே தூதுச் செய்தி*

50. ஆதுகளிடம் அவர்களுடைய சகோதரர் ஹூதை நாம் அனுப்பினோம். அவர் கூறினார், "என் சமூகத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு இறைவன் உங்களுக்கு இல்லை. நீங்கள் கற்பனையே செய்கின்றீர்கள்.

51. "என் சமூகத்தாரே, நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை. எனது கூலி என்னைத் துவக்கியவரிடமிருந்து மட்டுமே வருகின்றது. நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ?

52. "என் சமூகத்தாரே, உங்கள் இரட்சகரிடம் பாவ மன்னிப்புத் தேடுங்கள், பின்னர் அவரிடம் வருந்துங்கள். அப் போது அவர் விண்ணிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரங்களைப் பொழிவார், மேலும் உங்களுடைய பலத்தை அதிகரிப்பார். வரம்புமீறியவர்களாகப் பின் திரும்பி விடாதீர்கள்.

53. அவர்கள் கூறினர், "ஹூதே, நீர் எந்தச் சான்றையும் எங்களுக்குக் காட்டவில்லை, மேலும் நீர் கூறுகின்றீர் என்பதற்காக எங்களுடைய தெய்வங்களை நாங்கள் விட்டு விடப் போவதில்லை. நாங்கள் ஒருபோதும் உம்மோடு நம்பிக்கையாளர்களாக இருக்கப் போவதில்லை.

54. "எங்களுடைய தெய்வங்களில் சில, ஒரு சாபத்தைக் கொண்டு உம்மைச் சபித்து விட்டது என்றே நாங்கள் கருதுகின்றோம்." அவர் கூறினார், "நான் **கடவுள்** முன் சாட்சி அளிக்கின்றேன்,மேலும் நீங்களும் சாட்சியளியுங்கள், நீங்கள் அமைத்துக் கொண்ட தெய்வங்களை நான் கைவிட்டு விட்டேன்–

55. "அவரை அன்றி. எனவே, தாமதமின்றி, உங்களுடைய ஒருமித்த முடிவை எனக்குக் கூறுங்கள்.

---

*11:44 பார்க்க 11:40ன் அடிக்குறிப்பு.

**11:46 சிபாரிசு என்பது மனிதர்களை போலித்தெய்வ வழிபாட்டின் பால் மயக்கி இழுத்துச்செல்வதற்கு சாத்தானின் திறன் மிக்கதொரு தூண்டில் இரையாகும். இருப்பினும், ஆப்ரஹாம் தன் தந்தைக்கு உதவி செய்ய முடியவில்லை, அன்றியும் நோவா தன்னுடைய மகனுக்கும் முஹம்மத் தன் சொந்த உறவினர்களுக்கும் உதவி செய்ய முடியவில்லை (2:254,9:80 & 114).*

56. "நான் என் பொறுப்பை என் இரட்சகரும் உங்கள் இரட்சகருமாகிய **கடவுள்**–வசம் வைத்து விட்டேன். அவர் கட்டுப்படுத்தாத எந்த ஒரு சிருஷ்டியும் இல்லை. என் இரட்சகர் நேரான பாதையின் மீது இருக்கின்றார்.

57. "நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், என்னிடம் கொடுத்தனுப்பப்பட்டதை நான் உங்களிடம் சேர்ப்பித்து விட்டேன். என் இரட்சகர் உங்களுடைய இடத்தில் வேறு சமூகத்தாரை மாற்றியமைத்து விடுவார்; நீங்கள் அவருக்குச் சிறிதளவும் தீங்கிழைத்து விட முடியாது. என் இரட்சகர் அனைத்து விஷயங்களையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்."

58. நமது தீர்ப்பு வந்தபோது, நாம் ஹூதையும் அவருடன் நம்பிக்கை கொண்டோரையும் நம்மிடமிருந்துள்ள கருணையால் காத்துக் கொண்டோம். ஒரு பயங்கரமான தண்டனையிலிருந்து நாம் அவர்களைக் காத்தருளினோம்.

59. ஆதுகள் இப்படிப்பட்டவர்கள்–அவர்கள் தங்களுடைய இரட்சகரின் வெளிப்பாடுகளை அலட்சியம் செய்தனர், அவருடைய தூதர்களுக்குக் கீழ்ப்படிய மறுத்தனர், மேலும் ஒவ்வொரு பிடிவாதமிக்கக் கொடுங்கோலனின் வழிகளையும் பின்பற்றினர்.

60. அதன் விளைவாக, அவர்கள் இவ்வுலகிலும், உயிர்ப்பித்தெழுப்பப்படும் நாளிலும் கண்டனத்திற்குள்ளானார்கள். உண்மையில், ஆதுகள் தங்கள் இரட்சகரை ஏற்கமறுத்தனர். உண்மையில், ஹூதின் சமூகத்தினரான, ஆதுகள் அழிந்தனர்.

*ஸாலிஹ்: அதே ஒரே தூதுச் செய்தி*

61. தமூதுகளிடம் அவர்களுடைய சகோதரர் ஸாலிஹை நாம் அனுப்பினோம். அவர் கூறினார், "என் சமூகத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள், அவருடன் வேறு தெய்வம் உங்களுக்கு இல்லை. அவர் உங்களை பூமியிலிருந்து துவக்கினார், பின்னர் அதிலேயே உங்களைக் குடியமர்த்தினார். அவருடைய மன்னிப்பை நீங்கள் தேட வேண்டும், பின்னர் அவரிடம் வருந்த வேண்டும். என் இரட்சகர் எப்பொழுதும் அருகிலிருப்பவர், பதிலளிப்பவர்."

62. அவர்கள் கூறினர், "ஸாலிஹே, இதற்கு முன்னர் நீர் எங்கள் மத்தியில் பிரபலமானவராக இருந்தீர். எங்களுடைய பெற்றோர்கள் வழிபடுபவற்றை வழிபடுவதை விட்டும் எங்களை நீர் தடுக்கின்றீரா ? நீர் எங்களிடம் கூறிய ஒவ்வொன்றைக் குறித்தும் ஏராளமான ஐயங்களை நாங்கள் கொண்டிருக்கின்றோம்."

*நம்பமறுப்போர் எப்பொழுதும் நஷ்டவாளிகளே*

63. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, என் இரட்சகரிமிருந்து உறுதியான சான்றையும், அவரிடமிருந்து கருணையையும் நான் பெற்றிருந்தாலுமா ? அவருக்கு நான் கீழ்ப்படிய மறுத்தால், **கடவுள்**–க்கு எதிராக எனக்கு ஆதரவளிப்பவர் யார் ? நீங்கள் என்னுடைய நஷ்டத்தையே அதிகரிக்க முடியும்.

64. "என் சமூகத்தாரே, உங்களுக்குரிய சான்றாகத் திகழ்கின்ற **கடவுள்**–ன் ஒட்டகம் இது. **கடவுள்**–ன் பூமியில் இருந்து உண்ணும்மாறு அதனை நீங்கள் விட வேண்டும், மேலும் நீங்கள் ஒரு உடனடி தண்டனைக்கு உள்ளாகமல் இருக்கும் பொருட்டு, எவ்விதத் தீங்கும் கொண்டு அதனைத் தீண்டாதீர்கள்."

65. அவர்கள் அதனை அறுத்தனர். அப்போது அவர் கூறினார், " நீங்கள் வாழ்வதற்கு இன்னும் மூன்று நாட்களே உள்ளன. இது தவிர்த்து விட முடியாததொரு முன்னறிவிப்பாகும்."

66. நம்முடைய தீர்ப்பு வந்த போது, அந்நாளின் இழிவிலிருந்து, ஸாலிஹையும் அவருடன் நம்பிக்கை கொண்டோரையும் நம்மிடமிருந்துள்ள கருணையால் நாம் காத்துக் கொண்டோம். உம்முடைய இரட்சகர் சக்தி மிக்கவர், எல்லாம் வல்லவர்.

67. வரம்புமீறியவர்கள் ஒரு பேரழிவின் மூலம் நாசமாக்கப்பட்டனர், அது அவர்களை அவர்களுடைய வீடுகளில் இறந்தவர்களாக விட்டுவிட்டது.

68. அவர்கள் ஒருபோதும் அங்கே வாழ்ந்திராததைப் போல். உண்மையில், தமூதுகள் தங்கள் இரட்சகரை ஏற்கமறுத்தனர். பரிபூரணமாக, தமூதுகள் தங்களுடைய அழிவுக்கு உள்ளானார்கள்.

*ஆபிரஹாமும் லோத்தும்*

69. ஆபிரஹாமிடம் நமது தூதர்கள் நற்செய்தியுடன் சென்றபோது, அவர்கள் கூறினர், "சாந்தி."அவர் கூறினார், "சாந்தி," மேலும் விரைவில் அவர் ஒரு பொறித்த கன்றைக் கொண்டு வந்தார்.

70. அவர்களுடைய கரங்கள் அதனைத் தொடவில்லை என்பதை அவர் கண்டபோது, அவர்களைப் பற்றி அவர் சந்தேகமும் அச்சமும் கொண்டார். அவர்கள் கூறினர், "பயப்படவேண்டாம், நாங்கள் லோத்தின் சமூகத்தாரிடம் அனுப்பப்பட்டுள்ளோம்."

71. அவருடைய மனைவி நின்று கொண்டிருந்தார், மேலும் நாம் ஐசக், மற்றும் ஐசக்கிற்கு பின்னர் ஜேகப் குறித்த நற்செய்தியைக் கொடுத்த போது, அவர் சிரித்தார்.

72. அவர் கூறினார், "எனக்குத் கேடுதான், என்னுடைய வயதில் எப்படி நான் ஒரு குழந்தையைச் சுமக்க முடியும், மேலும் இதோ என் கணவர், ஒரு வயதான மனிதர் ? இது உண்மையில் ஆச்சர்யமே!"

73. அவர்கள் கூறினர், "**கடவுள்**–க்கு இது ஆச்சர்ய மானது என்று எண்ணுகின்றீரா? புனித ஆலயத்தில் வசிப்போரே, **கடவுள்** தன்னுடைய கருணையையும் ஆசிகளையும் உங்கள் மீது அருளியுள்ளார். அவர் புகழுக்குத் தகுதியானவர், மகிமை மிக்கவர் ."

74. ஆபிரஹாமின் பயம் தனிந்து, மேலும் நற்செய்தி அவரிடம் சேர்ப்பிக்கப்பட்டு விட்டபோது, அவர் லோத்துடைய சமூகத்தாரின் சார்பாக நம்முடன் வாதம் செய்ய முன்வந்தார்.

75. உண்மையில், ஆபிரஹாம் இரக்கமுடையவர், மிகுந்த கனிவுடையவர், மேலும் கீழ்படிந்தவராக இருந்தார்.

76. "ஆபிரஹாமே, இதிலிருந்து விலகிக் கொள்ளும். உம்முடைய இரட்சகரின் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட் டது; அவர்கள் தவிர்த்து விட முடியாத தண்டனைக் குள்ளாகி விட்டனர்."

*ஓரினச் சேர்க்கை கண்டனம் செய்யப்படுகின்றது*

77. நம்முடைய தூதர்கள் லோத்திடம் சென்ற போது, அவர்கள் தவறாக நடத்தப்பட்டனர், மேலும் அவர்களு டைய வருகையால் அவர் சங்கடத்திற்குள்ளானார். அவர் கூறினார், "இது ஒரு கஷ்டமான நாளாகும்."

78. அவருடைய சமூகத்தார் விரைந்து வந்தனர்; அவர் கள் தங்களுடைய பாவச் செயல்களுக்குப் பழகியே வளர்ந்திருந்தனர். அவர் கூறினார், "என் சமூகத்தா ரே, இதற்கு பதில் என் மகள்களை நீங்கள் எடுத்துக் கொண்டால், அது உங்களுக்கு மிகத் தூய்மையான தாக இருக்கும். நீங்கள் **கடவுள்**–யிடம் பயபக்தி கொள்ள வேண்டும்; என் விருந்தினர்களுக்கெதிரில் என்னைச் சங்கடப்படுத்தாதீர்கள். உங்களுக்கிடை யில் நியாயமான மனிதர் ஒருவர் கூட இல்லையா?"

79. அவர்கள் கூறினர், "உம்முடைய மகள்களின் எந்தத் தேவையும் எங்களுக்கு இல்லை என்பதை நீர் நன்கறி வீர்; எங்களுக்கு வேண்டியது என்ன என்பதை நீர் மிகச்சரியாக அறிவீர்."

80. அவர் கூறினார், "நான் போதுமான பலம் உடையவ னாகவோ, அல்லது ஒரு சக்தி மிக்க கூட்டாளியைக் கொண்டவனாகவோ இருந்திருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்!"

81. *(வானவர்கள்)* கூறினர், "லோத்தே, நாங்கள் உம்மு டைய இரட்சகரின் தூதர்கள் ஆவோம், மேலும் இம் மக்களால் உம்மைத் தொட முடியாது. நீர் உமது குடும்பத்தினருடன் இரவுப் பொழுதில் புறப்பட்டு விடும், மேலும் உங்களில் எவர் ஒருவரும் திரும்பிப் பார்க்க வேண்டாம், உம்முடைய மனைவியைத் தவிர; கண்டனத்திற்கு உள்ளானோருடன் சேர்ந்து அவளும் கண்டனத்திற்குள்ளாகி விட்டாள். அதி காலைதான் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேர மாகும். அதிகாலை மிகவும் சீக்கிரமானதல்லவா?

*ஸாடமும் கோமர்ராவும் நிலைகுலைகின்றது*

82. நமது தீர்ப்பு வந்த போது, நாம் அதனைத் தலை கீழாகப் புரட்டிவிட்டோம், மேலும் அதில் கடினமான, நாசம் தரும் பாறைகளைப் பொழிந்தோம்.

83. இத்தகைய பாறைகள் வரம்புமீறியவர்களைத் தாக்கு வதற்கென்றே உம்முடைய இரட்சகரால் நியமிக்கப் பட்டிருந்தன.

*ஷுஐப்:*
*அதே ஒரே தூதுச்செய்தி*

84. மித்யனுக்கு அவர்களுடைய சகோதரர் ஷுஐபை நாம் அனுப்பினோம். அவர் கூறினார், "என் சமூகத் தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள்; அவருடன் வேறு தெய்வம் உங்களுக்கு இல்லை. நீங்கள் அளந்திடும் போதோ, எடை போடும்போதோ மோசடி செய்யாதீர் கள். நீங்கள் வளம் பெற்றவர்களாக இருப்பதை நான் காண்கின்றேன், சூழ்ந்து கொள்ளும் ஒரு நாளின் தண்டனையை குறித்துக் உங்களுக்காக நான் அஞ்சு கின்றேன்.

85. "என் சமூகத்தாரே, அளவையையும், எடையையும் நீங்கள் நீதத்துடன், நிறைவாகக் கொடுக்க வேண் டும். மக்களை, அவர்களுடைய உரிமைகளில் மோசடி செய்யாதீர்கள், மேலும் சீர்கெடுத்தவாறு பூமியில் சுற்றித் திரியாதீர்கள்.

86. "நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், **கடவுள்** எதனை உங்களுக்கு வழங்குகின்றாரோ, அது எவ் வளவு சிறிதாக இருந்தாலும் சரி, அதுவே உங்க ளுக்கு மிகவும் சிறந்ததாகும். நான் உங்களுடைய பொறுப்பாளன் அல்லன்."

87. அவர்கள் கூறினர், "ஷுஐபே, எங்கள் பெற்றோர் களின் மார்க்கத்தை நாங்கள் கைவிட்டு விட வேண்டுமென்றோ, அல்லது எங்களுடைய வியா பாரத்தை நாங்கள் விரும்பியபடி நடத்திக் கொள்ளக் கூடாதென்றோ, உமது மார்க்கம் உமக்குக் கட்டளை யிடுகின்றதா? நிச்சயமாக, நீர் இரக்கமுடையவர், ஞானமுடையவர் என்று அறியப்பட்டவராக இருக் கின்றீர்."

88. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, என் இரட்சகரிட மிருந்து உறுதியான சான்றை நான் பெற்றிருந்தா லுமா; அவர் ஒரு மகத்தான பாக்கியத்தை எனக்கு வழங்கியிருந்தாலுமா? எதனை விட்டும் உங்களை நான் தடுக்கின்றேனோ அதனை செய்ய வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல. என்னால் இயன்ற அளவு தவறுகளைச் சரி செய்யவே நான் விரும்புகின்றேன். எனது வழிகாட்டல் முற்றிலும் **கடவுள்**–ஐச் சார்ந்த தாகவே உள்ளது; எனது பொறுப்பை நான் அவரிடம் ஒப்படைத்து விட்டேன். அவரிடமே நான் முற்றிலும் சரணடைந்து விட்டேன்.

89. "மேலும், என் சமூகத்தாரே, என் மீது நீங்கள் கொண்ட எதிர்ப்பால், நோவாவின் சமூகத்தாருக்கோ, அல்லது ஹூதின் சமூகத்தாருக்கோ, அல்லது ஸாலிஹின் சமூகத்தாருக்கோ ஏற்பட்ட அதே நாசங்களுக்கு உள்ளாகும்படி தூண்டப்பட்டு விடாதீர்கள், மேலும் லோத்தின் சமூகத்தார் உங்களுக்கு மிகவும் முந்திய வர்கள் அல்லர்.

90. "நீங்கள் உங்கள் இரட்சகரிடம் பாவமன்னிப்பிற்காக இறைஞ்ச வேண்டும், பின்னர் அவரிடம் வருந்த வேண்டும். என் இரட்சகர் மிக்க கருணையாளர், கனிவானவர்."

91. அவர்கள் கூறினர், "ஷுஐபே, நீர் எங்களிடம் கூறும் விஷயங்களில் பலவற்றை நாங்கள் புரிந்து கொள்ள வில்லை, மேலும் எங்களுக்கிடையில் செல்வாக்கற்ற வராகவே உம்மை நாங்கள் காண்கின்றோம். உம் முடைய குலத்தார் மட்டும் இல்லையென்றால், உம்மை நாங்கள் கல்லாலடித்துக் கொன்றிருப்போம். உமக்கு எங்களிடம் எந்த மதிப்பும் இல்லை."

92. அவர் கூறினர்,"என் சமூகத்தாரே, என்னுடைய குலத்தார் **கடவுள்**–ஐ விட அதிக மதிப்புக்குத் தகுதி அடைந்து விட்டனரா? இதனால்தான் அவரைக் குறித்து நீங்கள் அலட்சியமாக இருக்கின்றீர்களா? என் இரட்சகர் நீங்கள் செய்யும் அனைத்தையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

93. "என் சமூகத்தாரே, நீங்கள் விரும்புவதைத் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள், அவ்வாறே நானும் செய்வேன். நம்மில் இழிவு நிறைந்த தண்டனைக் குள்ளாகப் போவது யார் என்பதை நீங்கள் நிச்சயம் கண்டு கொள்வீர்கள்; பொய்யுரைப்பவர் யார் என்பதையும் நீங்கள் கண்டு கொள்வீர்கள். எதிர்பார்ப்புடன் சற்று காத்துக் கொண்டு இருங்கள்; நானும் உங்களுடன் சேர்ந்து எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருப்பேன்."

94. நம்முடைய தீர்ப்பு வந்தபோது, நாம் ஷுஐபையும் அவருடன் நம்பிக்கை கொண்டோரையும் நம்மிட மிருந்துள்ள கருணையால் காத்துக் கொண்டோம். தீயவர்களைப் பொறுத்த வரை, அவர்களை இறந்து விட்டவர்களாக அவர்களுடைய வீடுகளில் விட்டு விட்ட, ஒரு பேரழிவால் அவர்கள் தாக்கப்பட்டனர்.

95. அவர்கள் ஒரு போதும் இருந்திராததைப் போல். இவ் விதமாக, அதற்கு முன்னர் தமூது நசிந்து போன அதே விதமாக, மித்யனும் நசிந்து போனது.

*மோஸஸ்*

96. நமது அத்தாட்சிகளுடனும், ஆழ்ந்ததோர் அங்கீகா ரத்துடனும் மோஸஸை நாம் அனுப்பினோம்.

97. ஃபேரோவிடமும் அவனுடைய பிரதானிகளிடமும். ஆனால் அவர்கள் ஃபேரோவின் கட்டளையைப் பின் பற்றினர், மேலும் ஃபேரோவின் கட்டளை ஞானமுடையதாக இருக்கவில்லை.

98. உயிர்ப்பித்தெழுப்பப்படும் நாளில் அவன் தன் சமூகத் தாரை நரகத்தை அடையும் வரை வழி நடத்திக் கொண்டு சேர்ப்பான், வாழ்வதற்கு எத்தகையதொரு துக்ககரமான தங்குமிடம்!

99. அவர்கள் இவ்வுலகிலும் அது போலவே உயிர்ப்பித் தெழுப்பப்படும் நாளிலும் கண்டனத்திற்குள்ளாகி விட்டனர். பின்பற்றுவதற்கு எத்தகையதொரு துக்க கரமான பாதை!

*கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்*

100. இது நாம் உமக்கு எடுத்துரைக்கும் கடந்து போன சமுதாயங்களின் செய்தியாகும். சில இன்னும் உள்ளன, மேலும் சில மறைந்து போயின.

101. நாம் அவர்களுக்கு ஒரு போதும் அநீதமிழைக்க வில்லை, அவர்கள் தங்கள் சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர். உம்முடைய இரட்சகரின் தீர்ப்பு வந்த போது, **கடவுள்**–வுடன் அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டிருந்த அவர்களுடைய தெய் வங்கள் அவர்களுக்குச் சிறிதளவும் உதவி செய்ய முடியவில்லை. உண்மையில், அவை அவர்களுடைய அழிவையே நிச்சயப்படுத்தின.

102. அந்தச் சமுதாயங்கள் வரம்புமீறியபோது உம்முடைய இரட்சகரால் அமலாக்கப்பட்ட தண்டனை இத்தகையதாகவே இருந்தது. உண்மையில், அவருடைய தண்டனை வலிமிகுந்தது, பெரு நாசம் விளைவிப்பது.

103. மறுவுலகின் தண்டனையை அஞ்சுவோருக்கு இது ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். அது மனிதர்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படும் ஒரு நாளாகும் –காணப்பட வேண்டிய ஒரு நாளாகும்.

104. அது நிகழ்வதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நாம் நிர்ணயித்துள்ளோம்.

105. அந்நாள் நிகழும் போது, எந்த ஓர் ஆத்மாவும் அவருடைய நாட்டத்திற்கு ஒப்பவே அன்றி, ஒரே வார்த்தை கூடப்பேசாது. துர்ப்பாக்கியவன்களாகச் சிலர் இருப்பார்கள், இன்னும் சிலர் மகிழ்ச்சிகரமாக இருப்பார்கள்.

106. துர்ப்பாக்கியவான்களைப் பொறுத்த வரை அவர்கள் நரகத்தில் இருப்பார்கள், அதிலே அவர்கள் துக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டும் ஓலமிட்டுக் கொண்டும் இருப்பார்கள்.

107. உம்முடைய இரட்சகரின் நாட்டத்திற்கொப்ப, வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் வரை, என்றென்றும் அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். உம்முடைய இரட்சகர் அவர் நாடுகின்ற எதனையும் செய்பவர்.

108. பாக்கியசாலிகளைப் பொறுத்தவரை, அவர்கள் சொர்க்கத்தில் இருப்பார்கள். உம்முடைய இரட்சகரின் நாட்டத்திற்கொப்ப, வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் வரை என்றென்றும் அவர்கள் அங்கே தங்கி இருப்பார்கள்–நிலைத்திருக்கும் ஒரு வெகுமதியாகும்.

*நம் பெற்றோர்களைக் கண்மூடிப் பின்பற்றுதல் ஒரு மாபெரும் மானிட சோகம்*

109. இந்த மக்கள் வழிபடுபவற்றைக் குறித்து எந்த ஐயமும் கொள்ளாதீர்; அவர்களுடைய பெற்றோர்கள் வழிபடுவதை அவர்கள் கண்ட அதே விதமாகவே அவர்கள் வழிபடுகின்றனர். அவர்களுக்குரிய பங்கை முழுமையாக, குறைவின்றி அவர்களுக்கு நாம் திருப் பித் தருவோம்.

110. நாம் மோஸஸுக்கு வேதத்தைக் கொடுத்தோம், ஆனால் அது தர்க்கிக்கப்பட்டது, மேலும் உம்முடைய இரட்சகரால் விதிக்கப்பட்ட முன்னரே தீர்மானிக்கப்பட்ட வார்த்தை இல்லாதிருந்தால், அவர்கள் உடனடியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் இது குறித்து முற்றிலும் ஐயத்துடனும், சந்தேகத்துடனும் இருக்கின்றார்கள்.

111. நிச்சயமாக உம்முடைய இரட்சகர் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய செயல்களுக்குரிய பிரதிபலனை அளிப்பார். அவர்கள் செய்யும் ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

112. எனவே, நீர் பின்பற்று மாறு உமக்கு கட்டளையிடப்பட்ட பாதையில் உம்மோடு திருந்தியவர்களுடன் ஒன்று சேர்ந்து தொடர்ந்து செல்வீராக, மேலும் வரம்புமீறாதீர். அவர் நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் பார்ப்பவராக இருக்கின்றார்.

113. நீங்கள் நரகத்திற்குள்ளாகி, மேலும் **கடவுள்**–க்கு எதிராக உங்களுக்கு உதவி செய்யத் தோழர்கள் எவரையும் காணாமலும், பின்னர் நஷ்டமடைந்தவர்களாகவும் முடிந்து விடாதிருக்கும் பொருட்டு, வரம்புமீறியவர்களின் பால் சாய்ந்து விடாதீர்கள்.

*ஐந்து தொழுகைகளில் மூன்று*

114. பகலின் இரு முனைகளிலும், இரவின் போதும் நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நற்செயல்கள் தீய செயல்களைத் துடைத்தெடுத்து விடும். கவனத்தில் கொள்ளக் கூடியவர்களுக்கு இது ஒரு நினைவூட்டல் ஆகும்.

115. நீங்கள் தளராமல் சகித்திருக்க வேண்டும், ஏனெனில் **கடவுள்** நல்லோர்களுக்குப் பிரதிபலனளிக்க ஒரு போதும் தவறுவதில்லை.

116. தீமைகளைத் தடுப்பதற்குப் போதுமான புத்திசாலித்தனத்தை மட்டும் முந்திய தலைமுறையினரில் இருந்த சிலர் பெற்றிருந்தால்! அவர்களில் சிலர் மட்டுமே நம்மால் காக்கப்படுவதற்குத் தகுதி பெற்றிருந்தார்கள். வரம்புமீறியவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்கள் பொருள் சார்ந்த ஆடம்பரங்களில் மூழ்கி இருந்தனர்; அவர்கள் குற்றவாளிகளாக இருந்தனர்.

117. அதன் மக்கள் நல்லோர்களாக இருக்கும் பொழுது, உம்முடைய இரட்சகர் ஒருபோதும் எந்த ஒரு சமூதாயத்தையும் அநீதிமாக அழித்து விடுவதில்லை.

*நாம் ஏன் படைக்கப்பட்டோம்.*

118. உம்முடைய இரட்சகர் நாடியிருந்தால், எல்லா மக்களும் *(நம்பிக்கையாளர்களைக் கொண்ட)* ஒரே கூட்டமைப்பாக இருந்திருப்பார்கள். மாறாக, அவர்கள் எப்போதும் *(சத்தியத்தை)* தர்க்கித்துக் கொண்டிருப்பார்கள்.

119. உம்முடைய இரட்சகரிடமிருந்து கருணையைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே *(சத்தியத்தை தர்க்கம் செய்ய மாட்டார்கள்)*. இதனால் தான் அவர்களைப் அவர் படைத்தார்.* உம்முடைய இரட்சகரின் தீர்ப்பு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது: "ஜின்கள் மற்றும் மனிதர்களை மொத்தமாக ஒன்று சேர்த்து நரகத்தை நான் நிரப்புவேன்."**

120. நாம் உமது இதயத்தைப் பலப்படுத்துவதற்காக தூதர்களின் வரலாறுகளில் போதுமானதை உமக்கு எடுத்துரைக்கின்றோம். இதில் உமக்கு சத்தியமும், அதே போல் நம்பிக்கையாளர்களுக்கு உபதேசங்களும், நினைவூட்டல்களும் வந்துள்ளன.

**11:119 நம் ஆதி குற்றத்தைக் கைவிடுவதற்கும், மீட்டுக்கொள்ளப்படுவதற்கும் மற்றுமொரு சந்தர்ப்பத்தைத் நமக்குத் தருவதற்கு இந்தப் பூமியில் மிக்க கருணையாளர் நம்மைப் படைத்திருக்கின்றார் (பார்க்க அறிமுகவுரை மற்றும் பின் இணைப்பு 7).*

***11:119 கடவுள் ஒரு மனிதரையும் நரகில் போடுவதில்லை, அவர்களே தேர்ந்தெடுத்து நரகிற்குச் செல்லவேண்டுமென வலியுறுத்துகின்றனர்.*

121. நம்பமறுப்பவர்களிடம் கூறும், "உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள், அவ்வாறே நாங்களும் செய்வோம்.

122. "பின்னர் காத்திருங்கள்; நாங்களும் காத்திருப்போம்."

123. வானங்கள் மற்றும் பூமியின் எதிர்காலம் **கடவுள்**–க் குரியது, மேலும் எல்லா விஷயங்களும் அவரால் கட்டுப்படுத்தப்படுகின்றன. நீங்கள் அவரை வழிபடவும், பொறுப்பை அவர் மீது வைக்கவும் வேண்டும். உம்முடைய இரட்சகர் நீங்கள் செய்யும் எந்த ஒன்றையும், ஒரு போதும் அறியாமல் இல்லை.

****

# சூரா 12: ஜோஸஃப் (யூஸுஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ர. *(எழுத்துக்களான)* இவை இந்த ஆழ்ந்த வேதத்தின் சான்றுகளாகும்.*

2. நீங்கள் புரிந்து கொள்வதற்காக,* இதனை ஓர் அரபிக் குர்ஆனாக நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

3. இந்தக் குர்ஆனுடைய வெளிப்பாட்டின் மூலம் மிகத் துல்லியமான வரலாற்றை நாம் உமக்கு எடுத்துரைக்கின்றோம். இதற்கு முன்னர், நீர் முற்றிலும் அறியாதவராக இருந்தீர்.

4. ஜோஸஃப் தன் தந்தையிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "என் தந்தையே, பதினொரு கிரகங்களையும், சூரியனையும், சந்திரனையும் நான் கண்டேன்; என் முன்னர் அவை சிரம் பணிய நான் கண்டேன்."

5. அவர் கூறினார், "என் மகனே, அவர்கள் உனக்கெதிராகச் சதியும் சூழ்ச்சியும் செய்யாமலிருக்கும் பொருட்டு, உனது கனவைப் பற்றி உன் சகோதரர்களிடம் கூறாதே. நிச்சயமாக, சாத்தான் மனிதனுடைய மிக மோசமான விரோதியாக இருக்கின்றான்.

6. "உன் இரட்சகர் இவ்விதமாக உன்னை ஆசீர்வதிக்கின்றார், மேலும் உனது கனவின் மூலம் உனக்கு நற்செய்தியைத் தந்திருக்கின்றார். அவர் இதற்கு முன்னர் உன்னுடைய முன்னோர்களான ஆப்ரஹாமுக்கும் ஐசக்கிற்கும் அவர் செய்ததைப் போல், உன் மீதும் ஜேகபின் குடும்பத்தார் மீதும் தன் ஆசிகளைப் பூரணமாக்கி இருக்கின்றார். உன்னுடைய இரட்சகர் எல்லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்."

7. ஜோஸஃபிடமும் அவருடைய சகோதரர்களிடமும் தேடுதல் உள்ளவர்களுக்கு படிப்பினைகள் உள்ளன.

8. அவர்கள் கூறினர், "ஜோஸஃபும், அவருடைய சகோதரரும் நம் தந்தைக்குச் செல்லமானவர்களாக உள்ளனர், மேலும் நாமோ பெரும்பான்மையினராக இருக்கின்றோம். உண்மையில், நம் தந்தை மிகவும் வழி தவறியவராக இருக்கின்றார்.

*ஜோஸஃபின் விதி கடவுளால் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டது**

9. "உங்கள் தந்தையின் கவனத்தை நீங்கள் ஓரளவு அடைவதற்காக நாம் ஜோஸஃபைக் கொன்று விடுவோம், அல்லது ஊரை விட்டு அவரைத் துரத்தி விடுவோம், அதற்குப் பிறகு நீங்கள் நல்ல மனிதர்களாகி விடலாம்."*

10. அவர்களில் ஒருவர் கூறினார், "ஜோஸஃபைக் கொன்று விடாதீர்கள்; நாம் அவரை ஒரு கிணற்றின் ஆழத்தில் எறிந்து விடுவோம். இவ்வாறு செய்ய நீங்கள் முடிவெடுத்தால், ஒருவேளை ஏதேனும் பிரயாணிகளின் கூட்டம் அவரை எடுத்துக் கொண்டு போய் விடக் கூடும்."

11. அவர்கள் கூறினர், "எங்கள் தந்தையே, ஜோஸஃப் விஷயத்தில் எங்களை ஏன் நீங்கள் நம்புவதில்லை? நாங்கள் அவரை நன்கு கவனித்துக் கொள்வோம்.

12. "நாளை அவரை எங்களுடன் ஓடி விளையாட அனுப்பி வையுங்கள். நாங்கள் அவரைப் பாதுகாத்துக் கொள்வோம்."

13. அவர் கூறினார், "அவருடன் நீங்கள் வெளியில் சென்றால், நீங்கள் அவரை கவனிக்காதிருக்கும் சமயம், அவரை ஓநாய் விழுங்கி விடக் கூடும் என்று நான் கவலைப்படுகிறேன்."

14. அவர்கள் கூறினர், "உண்மையில், நாங்கள் இத்தனை பேர் அருகில் இருக்கும் போதும், ஓநாய் அவரை விழுங்கி விடுமானால், அப்போது மெய்யாகவே நாங்கள் நஷ்டப்பட்டவர்களாகத்தான் இருப்போம்."

**12:1 குர்ஆனின் இந்த துவக்க எழுத்துகள் மகத்தானதொரு அற்புதத்தின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது (பின் இணைப்பு1).*

**12:2 குர்ஆன் ஏன் அரபியில் வெளிப்படுத்தப்பட்டது ? பார்க்க 41:44 மற்றும் பின் இணைப்பு 4.*

**12:9 ஜோஸஃபின் கனவிலிருந்து பிரகாசமானதொரு எதிர்காலம் அவருக்கு விதிக்கப்பட்டிருந்தது என நாம் கற்றுக் கொள்கின்றோம். இவ்விதமாக, அவருடைய விதியை முடிவு செய்ய அவருடைய சகோதரர்கள் சந்தித்துக் கொண்ட அதே வேளையில், அவருடைய விதி ஏற்கெனவே கடவுளால் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் கடவுளால் செய்யப்படுகின்றது (8:17) மேலும் முன்னரே பதிவு செய்யப்பட்டும் உள்ளது (57:22).*

*நம்பிக்கையாளர்கள் கடவுளின் உறுதிமொழிகள் கொண்டு ஆசீர்வதிக்கப்படுகின்றனர்*

15. அவர்கள் அவருடன் வெளியில் சென்று, மேலும் அவரைக் கிணற்றின் ஆழத்தில் எறிந்து விடுவதென்று ஏகமனதாக முடிவு செய்தபோது, நாம் அவருக்கு உள்ளுணர்வளித்தோம்: "என்றாவது ஒரு நாள், அவர்கள் அறியாமல் இருக்கும் போது, இது அனைத்தையும் பற்றி நீர் அவர்களிடம் கூறுவீர்."

16. அவர்கள் மாலையில், தேம்பி அழுதவர்களாக, தங்கள் தந்தையிடம் திரும்பி வந்தனர்.

17. அவர்கள் கூறினர், "எங்கள் தந்தையே, ஜோஸஃபிடம் எங்கள் சாமான்களை விட்டுவிட்டு, நாங்கள் ஒருவரோடொருவர் ஓட்டப்பந்தயம் சென்றோம், அப்போது ஓநாய் அவரை விழுங்கி விட்டது. நாங்கள் உண்மையைக் கூறினாலும், நீர் ஒருபோதும் எங்களை நம்பமாட்டீர்."

18. போலி இரத்தத்துடன் அவருடைய சட்டையை அவர்கள் காட்டினார்கள். அவர் கூறினார், "உண்மையில், குறிப்பிட்ட ஒரு சூழ்ச்சியை செய்ய நீங்கள் ஒருவரோடொருவர் இரகசியத் திட்டம் தீட்டி இருக்கின்றீர்கள். நான் செய்யக்கூடியதெல்லாம், அமைதியானதொரு பொறுமையைக் கைக்கொள்வதுதான். உங்கள் இரகசியத் திட்டத்திற்கெதிராகக் **கடவுள்** எனக்கு உதவி செய்வாராக."

*ஜோஸஃப் எகிப்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றார்*

19. ஒரு பிரயாணிகளின் கூட்டம் கடந்து சென்றது, விரைவில் அவர்களுடைய நீர்ப்பிடிப்பாளரை அனுப்பியது. அவர் தன் வாளியைக் கீழே விட்டார், பின்னர் கூறினார், "எப்படிப்பட்ட அதிர்ஷ்டம்! இங்கே ஒரு சிறுவன் இருக்கின்றான்!" அவர்கள் அவரையும் ஒரு வியாபாரப் பொருளாகத் தங்களுடன் சேர்த்து எடுத்துச் சென்றனர். **கடவுள்** அவர்கள் செய்ததை முற்றிலும் அறிந்தவராக இருந்தார்.

20. அவர்கள் ஓர் அற்ப விலைக்கு–ஒரு சில திர்ஹங்கள்–அவரை விற்பனை செய்து விட்டனர். ஏனெனில் அவரிடம் அவர்களுக்கு தேவை எதுவும் இருக்கவில்லை.

21. எகிப்தில் அவரை வாங்கியவர் தன் மனைவியிடம் கூறினார், "இவரை நன்கு கவனித்துக்கொள், இவர் நமக்கு உதவி செய்யலாம், அல்லது இவரை நாம் தத்தெடுத்துக் கொள்ளலாம்." இவ்வாறாக ஜோஸஃபை நாம் பூமியில் ஸ்திரப்படுத்தினோம், மேலும் கனவுகளின் விளக்கத்தை நாம் அவருக்குக் கற்றுக் கொடுத்தோம். **கடவுள்**–ன் கட்டளைகள் எப்பொழுதும் நிறைவேற்றப்படும், ஆனால் பெரும்பாலான மக்கள் அறியமாட்டார்கள்.

22. அவர் பக்குவம் அடைந்ததும், நாம் அவருக்கு ஞானத்தையும் அறிவையும் வழங்கினோம். இவ்வாறே நல்லோர்களுக்கு நாம் பிரதிபலன் வழங்குகின்றோம்.

*பாவங்களிலிருந்து நம்பிக்கையாளர்களை கடவுள் பாதுகாக்கின்றார்*

23. அவர் வசித்து வந்த அவ்வீட்டின் பெண்மணி அவரை வசீகரிக்க முயன்றாள். கதவுகளை மூடிக் கொண்டு அவள் கூறினாள், "நான் முழுமையாக உமக்குரியவள்." அவர் கூறினார், "**கடவுள்** என்னைக் காப்பாராக. அவர்தான் என் இரட்சகர், எனக்கொரு நல்ல இல்லத்தைத் தந்தவர்.* வரம்புமீறுபவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள்."

24. அவள் ஏறத்தாழ அவரிடம் இணங்கி விட்டாள், மேலும் அவரும் அவளிடம் ஏறத்தாழ இணங்கி விட்டார், தன் இரட்சகரிடமிருந்து ஒரு சான்றினைக் கண்டிராவிட்டால். இவ்விதமாக நாம் தீமையையும் பாவத்தையும் அவரை விட்டுத் திருப்பி விட்டோம், ஏனெனில் அவர் அர்ப்பணித்துக் கொண்ட நம்முடைய ஊழியர்களில் ஒருவராக இருந்தார்.

25. அவர்கள் இருவரும் வாசலை நோக்கி விரைந்தனர், இந்நிகழ்வின் போது, அவள் அவருடைய ஆடையைப் பின்னாலிருந்து கிழித்து விட்டாள். வாசலில் அவளுடைய கணவரை அவர்கள் கண்டனர். அவள் கூறினாள், "உம்முடைய மனைவியை மானபங்கப்படுத்த விரும்பிய ஒருவனுக்குரிய தண்டனை சிறைப்படுத்தப்படுவது, அல்லது வலிமிகுந்ததொரு வேதனை செய்யப்படுவது தவிர வேறென்னவாக இருக்க முடியும்?"

26. அவர் கூறினார், "அவள்தான் என்னை வசீகரிக்க முயன்றவள்." அவளுடைய குடும்பத்திலிருந்த ஒரு சாட்சி யோசனை கூறினார்: "அவருடைய ஆடை முன்புறமாகக் கிழிந்திருந்தால், அப்போது அவள் உண்மையைக் கூறுகின்றாள், மேலும் அவர் ஒரு பொய்யராக இருக்கின்றார்.

27. "மேலும் அவருடைய ஆடை பின்புறமாகக் கிழிந்திருந்தால், அப்போது அவள் பொய் கூறியிருக்கின்றாள், மேலும் அவர் உண்மையைக் கூறுகின்றார்."

28. அவருடைய ஆடை பின்புறமாகக் கிழிந்திருப்பதை அவளுடைய கணவர் கண்டபோது, அவர் கூறினார், "இது ஒரு பெண்ணின் சூழ்ச்சியாகும். உண்மையில், உங்களுடைய சூழ்ச்சி அச்சுறுத்துவதாகும்."

**12:23* *உண்மையில் அப்போது ஜோஸஃப் கடவுளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போதும், தன்னுடைய கணவரைப் பற்றித்தான் அவர் பேசிக் கொண்டிருக்கின்றார் என்று ஆளுநரின் மனைவி எண்ணிக்கொள்ளும் விதமாக அவர் இவ் வாசகத்தை மொழிந்தார்.*

29. "ஜோஸஃபே, இந்த சம்பவத்தை அலட்சியப்படுத்தி விடும். *(என் மனைவியே)* உன்னைப் பொறுத்த வரை, நீ உன் பாவத்திற்காக மன்னிப்புத் தேட வேண்டும். நீ ஒரு தவறு செய்துவிட்டாய்."

30. அந்நகரில் இருந்த சில பெண்கள் கிசுகிசுத்தனர்: "ஆளுநரின் மனைவி தன் ஊழியரை வசீகரிக்க முயற்சி செய்கின்றாள். அவள் அவர் மீது ஆழமான காதல் கொண்டுவிட்டாள். அவள் வழிதவறிச் சென்று விட்டாள் என்பதை நாம் காண்கின்றோம்."

31. அவர்களுடைய கிசுகிசு பற்றி அவள் கேள்விப்பட்ட போது, அவள் அவர்களை வரவழைத்தாள், வசதி யான ஓர் இடத்தை அவர்களுக்காகத் தயார் செய் தாள், மேலும் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு கத்தியைக் கொடுத்தாள். பின்னர் அவள் அவரிடம் கூறினாள், "அவர்களுடைய அறைக்குள் நுழை வீராக." அவர்கள் அவரைக் கண்டபோது, அவர்கள் தங்கள் கரங்களை வெட்டிக் கொள்ளும்* அளவுக்கு அவரைக் கண்டு மிகவும் வியப்புக்குள்ளாயினர். அவர்கள் கூறினர், "**கடவுள்** துதிப்பிற்குரியவர், இவர் ஒரு மனிதரே இல்லை; இவர் கண்ணியமிக்க ஒரு வானவராவார்."

32. அவள் கூறினாள், "காதல் வசப்பட்டு விட்டதாக என் மீது பழி கூறினீர்களே, அந்த ஒருவர் இவர்தான். நான் உண்மையில் அவரை வசீகரிக்கவே முயன் றேன், ஆனால் அவர் மறுத்து விட்டார். செய்யுமாறு அவருக்கு நான் கட்டளையிடுவதை அவர் செய்ய வில்லையென்றால், நிச்சயமாக அவர் சிறைக்குச் செல்வார், மேலும் தரம் தாழ்ந்தவராகி விடுவார்."

33. அவர் கூறினார், "என் இரட்சகரே, அவர்களுக்கு இணங்குவதை விட அந்தச் சிறையே மேலானதா கும். அவர்களுடைய சூழ்ச்சியை என்னை விட்டு நீர் திருப்பிவிட்டாலன்றி, அவர்கள் மேல் நான் ஆசை கொள்ளவும், அறிவில்லாத ஒருவனைப் போல் நடந்து கொள்ளவும் கூடும்."

34. அவருடைய இரட்சகர் அவருடைய பிரார்த்தனைக் குப் பதிலளித்தார், அவர்களுடைய சூழ்ச்சியை அவரை விட்டுத் திருப்பி விட்டார். அவர்தான் செவி யேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

35. பின்னாளில், தெளிவான சான்றுகள் இருந்த போதி லும், சிறிது காலம் அவர்கள் அவரைச் சிறையிலிட வேண்டும் என்றே அவர்கள் கண்டனர்.

36. இரு இளைஞர்கள் அவருடன் சிறையில் இருந்தனர். அவர்களில் ஒருவன் கூறினான், "நான் மது ரசம் தயாரிப்பதாக *(என் கனவில்)* நான் கண்டேன்" மேலும் மற்றொருவன் கூறினான், "என் தலையில் நானே ரொட்டியைச் சுமந்து செல்வதாகவும், அதி லிருந்து பறவைகள் உண்டு கொண்டிருக்கவும் நான் கண்டேன். இந்தக் கனவுகளின் விளக்கத்தைப் பற்றி எங்களுக்குத் தெரிவிப்பீராக. நீர் நன்னெறியாளராக இருப்பதை நாங்கள் காண்கின்றோம்."

37. அவர் கூறினார், "உங்களுக்கு ஏதேனும் உணவு வழங்கப்படுமாயின், அதனை நீங்கள் பெற்றுக் கொள் வதற்கு முன்னர் அதனைப் பற்றி உங்களுக்கு அறி விக்க என்னால் முடியும். இது என் இரட்சகர் என் மீது அருள் செய்த அறிவில் சில ஆகும். **கடவுள்** மீது நம்பிக்கை கொள்ளாத மக்களின் மார்க்கத்தை நான் கைவிட்டு விட்டேன், மேலும் மறுமை வாழ்வைக் குறித்து, உண்மையில் அவர்கள் நம்பமறுப்பவர்களாக இருக்கின்றனர்.

38. "எனவே நான் அதற்கு மாறாக, என்னுடைய முன் னோர்களான ஆப்ரஹாம், ஐசக் மற்றும் ஜேகப் ஆகி யோரின் மார்க்கத்தைப் பின்பற்றினேன். **கடவுள்**–வு டன் எந்த போலித் தெய்வங்களையும் நாங்கள் ஒரு போதும் அமைத்துக் கொள்வதில்லை. எங்கள் மீதும், மனிதர்கள் மீதும் **கடவுள்** வசமிருந்துள்ள ஆசி இத் தகையதேயாகும், ஆனால் மனிதர்களில் அதிகமா னோர் நன்றியற்றவர்களாக இருக்கின்றனர்.

39. "என் சிறைத் தோழர்களே, பல தெய்வங்கள் மேலா, அல்லது ஒருவரும் மேலதிகாரம் கொண்டவருமான **கடவுள்** மட்டுமா ?

40. "அவருடன் நீங்கள் வழிபடுபவை, நீங்களும் உங்கள் பெற்றோர்களும் உருவாக்கிக் கொண்ட புதுமைகளே யன்றி வேறில்லை. இத்தகைய போலித் தெய்வங்க ளுக்கு **கடவுள்** ஒரு போதும் அங்கீகாரம் அளித்திட வில்லை. தீர்ப்புக்கள் அனைத்தும் **கடவுள்**–க்குரிய வை, மேலும் அவரை அன்றி நீங்கள் வழிபடக் கூடா தென அவர் தீர்ப்பளித்துள்ளார். இதுவே பூரணமான மார்க்கம், ஆனால் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

41. "என் சிறைத் தோழர்களே, உங்களில் ஒருவன் தன் எஜமானுக்கு மது பரிமாறுவான், ஆயினும் மற்றொரு வன் சிலுவையில் அறைந்து கொல்லப்படுவான் – அவன் தலையிலிருந்து பறவைகள் உண்ணும். இத்துடன் நீங்கள் விசாரித்த விஷயம் முடிவடை கின்றது."

---

***12:31** *திருடபவரின் கரம் குறித்து 5:38–ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைதான் இது, அத்துடன் சூரா மற்றும் வசன எண்களின் கூட்டுத்தொகையும் (12+31 மற்றும் 5+38) ஒன்றாகவே உள்ளன. எனவே, திருடபவரின் கரம் அடையாளமிடப்பட வேண்டும், சீர்கெட்டுப் போன இஸ்லாத்தில் செய்யப்படுவதைப் போல துண்டிக்கப்படக்கூடாது (பார்க்க அடிக் குறிப்பு 5:38ன்).*

42. காப்பற்றப்பட இருந்தவரிடம் அவர் பின்னர் கூறினார், "உம்முடைய எஜமானரிடம் என்னை நினைவு கூர்வீராக"* இவ்விதம் சாத்தான் அவரை அவருடைய இரட்சகரை மறக்கும்படிச் செய்தான், மேலும், அதன் விளைவாக, இன்னும் சில வருடங்கள் அவர் சிறையில் தங்கி இருந்தார்.

*மன்னரின் கனவு*

43. மன்னர் கூறினார், "கொழுத்த ஏழு பசுக்கள், மெலிந்த ஏழு பசுக்களால் பசியோடு விழுங்கப்படுவதை, மேலும் பசுமையான ஏழு *(கோதுமைக்)* கதிர்களையும், மற்றவை காய்ந்திருப்பதாகவும் நான் கண்டேன். என் பிரதானிகளே, கனவுகளுக்கு விளக்கம் சொல்வது எப்படி என்பதை நீங்கள் அறிந்திருந்தால், என் கனவைப் பற்றி எனக்கு ஆலோசனையளியுங்கள்."

44. அவர்கள் கூறினர், "அர்த்தமற்ற கனவுகள். கனவுகளுக்கு விளக்கம் என வரும் போது, நாங்கள் அறிவு பெற்றவர்கள் அல்லர்."

45. *(சிறையிலிருந்து)* காப்பாற்றப்பட்ட ஒருவன் இப்போது இறுதியில் ஞாபகம் கொண்டவனாக அவன் கூறினான், "அதன் விளக்கத்தை உங்களுக்குக் கூற என்னால் முடியும், ஆகவே என்னை *(ஜோஸஃபிடம்)* அனுப்புங்கள்."

*ஜோஸஃப் மன்னரின் கனவுக்கு விளக்கமளிக்கிறார்*

46. "என் நண்பர் ஜோஸஃபே, கொழுத்த ஏழு பசுக்கள், மெலிந்த ஏழு பசுக்களால் பசியோடு விழுங்கப் படுவதைப் பற்றியும், ஏழு பசுமையான கதிர்களையும் மற்றவை காய்ந்து போயிருப்பதைப் பற்றியும் எங்களுக்குத் தெரிவிப்பீராக. மக்களுக்குச் சில தகவல்களுடன் திரும்பிச் செல்ல நான் விரும்புகின்றேன்."

47. அவர் கூறினார், "அடுத்த ஏழு வருட காலம் நீங்கள் பயிரிடுபவற்றை, அறுவடைக் காலம் வரும்போது, நீங்கள் உண்ணுவதற்குரியவற்றைத் தவிர, தானியங்களை அதன் கதிர்களிலேயே இருக்கும் படி விட்டு விடுங்கள்."

48. "அதன் பின்னர், வறட்சியான ஏழு வருடங்கள் வரும், அவற்றுக்காக நீங்கள் சேகரித்தவற்றில் அதிகமானதை அவை உண்டு விடும்.

49. அதன் பின்னர், மக்களுக்கு நிவாரணத்தைக் கொண்டு வருகின்ற ஒரு வருடம் வரும், மேலும் அவர்கள், மீண்டும் ஒருமுறை, பழரசம் பிழிவார்கள்.

50. மன்னர் கூறினார், "அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்." அவரிடம் தூதன் வந்தபோது, அவர் கூறினார், "உன் எஜமானரிடம் திரும்பிச் சென்று தங்கள் கரங்களை வெட்டிக் கொண்ட பெண்களை விசாரிக்கும்படி அவரிடம் கேட்டுக் கொள். அவர்களுடைய சூழ்ச்சிகளைப் பற்றி என் இரட்சகர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்."

51. *(மன்னர் அப்பெண்களிடம்)* கூறினார், "ஜோஸஃபை நீங்கள் வசீகரிக்க முயன்ற போது நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தது என்ன ?" அவர்கள் கூறினர், "**கடவுள்** காப்பாராக, அவர் தீமையான எந்த விஷயத்தையும் செய்ததாக நாங்கள் அறியவில்லை." ஆளுநரின் மனைவி கூறினாள், "இப்போது சத்தியம் மிகைத்து விட்டது. நான் தான் அவரை வசீகரிக்க முயன்றேன், மேலும் அவர் உண்மையான ஒருவராகவே இருந்தார்.

52. "அவர் இல்லாத நேரத்தில் அவருக்கு நான் ஒரு போதும் துரோகமிழைக்கவில்லை என்பதை அவர் புரிந்து கொள்வார் என நான் நம்புகின்றேன், ஏனெனில் துரோகிகளின் சூழ்ச்சிகளைக் **கடவுள்** ஆசீர்வதிப்பதில்லை.

53. "என் சுயம் குற்றமற்றது என்று நான் கோரிக் கொள்ளவில்லை. சுயம் ஆனது தீமையைத் தூண்டக் கூடிய ஒன்றாகவே உள்ளது, என் இரட்சகரிடமிருந்து கருணையை அடைந்தவர்களுக்கே தவிர. என் இரட்சகர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

*ஜோஸஃப் முக்கியத்துவம் அடைகின்றார்*

54. மன்னர் கூறினார், "எனக்குப் பணி செய்வதற்காக, அவரை நான் அமர்த்திக் கொள்ளும் பொருட்டு, அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்." அவருடன் அவர் உரையாடிய போது, அவர் கூறினார், "இன்றைய தினம், நம்மிடம் உமக்கு முக்கியத்துவ மிக்கதொரு அந்தஸ்து உள்ளது."

55. அவர் கூறினார், "என்னைக் கருவூல அதிகாரியாக ஆக்குவீராக, ஏனெனில் இத்துறையில் நான் அனுபவ மிக்கவனாகவும் அறிவைப் பெற்றவனாகவும் இருக்கின்றேன்."

---

**12:42 ஜோஸஃப் தனக்காக மன்னரிடம் சிபாரிசு செய்யும்படி தன் தோழரிடம் யாசித்த போது, சிறையிலிருந்து காப்பாற்றப் படுவதற்காகக் கடவுளை அன்றி மற்றவர்களைச் சார்ந்திருப்பதை அவர் வெளிப்படுத்தினார். இது உண்மையானதொரு நம்பிக்கையாளருக்குத் தகுமானதல்ல, எனவே இத்தகையதொரு அபாயகரமான சறுக்கலுக்கு விலையாக ஜோஸஃப் சிறையில் சில வருடங்கள் இருக்க நேர்ந்தது. நமக்கு ஏற்படும் எந்தக் கஷ்டத்தையும் கடவுள் மட்டுமே நிவர்த்திக்க முடியும் என்பதை நாம் குர்ஆனிலிருந்து கற்றுக் கொள்கின்றோம். உண்மையான ஒரு நம்பிக்கையாளர் கடவுளிடம் பொறுப்பை ஒப்படைக்கின்றார், மேலும் முற்றிலும் அவரை மட்டுமே சார்ந்திருக்கின்றார் (1:5, 6:17, 8:17, 10:107).*

56. இவ்விதமாக அவர் நாடியபடி ஆளும் வண்ணம், பூமியில் நாம் ஜோஸஃபை ஸ்திரப்படுத்தினோம். நாம் நாடியோர் மீது நம் கருணையை நாம் பொழி கின்றோம், மேலும் நல்லோர்களுக்குப் பிரதிபலன் தர ஒருபோதும் நாம் தவறுவதில்லை.

57. கூடுதலாக, நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்துவோருக்குரிய மறுவுலகவாழ்வின் வெகுமதி யோ, இன்னும் மிக மேலானதாகும்.

58. ஜோசஸஃபின் சகோதரர்கள் வந்தனர்; அவர்கள் நுழைந்தபோது, அவர் அவர்களை அடையாளம் கண்டு கொண்டார், அதே சமயம் அவர்கள் அவரை அடையாளம் காணவில்லை.

59. அவர்களுக்குரிய பலசரக்குகளை அவர் விநியோ கித்த பின்னர், அவர் கூறினார், "அடுத்த முறை உங்கள் தந்தை வழிச் சகோதரனை உங்களுடன் அழைத்து வாருங்கள். நான் அளவையை முழுதாக உங்களுக்குத் தருவதையும், உங்களைத் தாராள மாக நடத்துவதையும் நீங்கள் காணவில்லையா?

60. "அவரை என்னிடம் நீங்கள் அழைத்து வரத் தவறி னால், என்னிடமிருந்து பங்கு எதையும் நீங்கள் பெற மாட்டீர்கள்; அருகில் கூட நீங்கள் வரமாட்டீர்கள்."

61. அவர்கள் கூறினர், "அவரைப் பற்றி அவருடைய தந்தையிடம் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவோம். நிச்சயமாக நாங்கள் இதனைச் செய்வோம்."

62. அவர் பின்னர் தன் உதவியாளர்களுக்கு உத்தர விட்டார்: "அவர்களுடைய சரக்குகளை அவர்களு டைய பைகளில் மீண்டும் வைத்து விடுங்கள். அவர் கள் தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் சென்ற பின் னர் அவற்றைக் காணும்போது, அவர்கள் விரைவில் திரும்பி வரக்கூடும்."

63. அவர்களுடைய தந்தையிடம் அவர்கள் திரும்பிச் சென்றபோது, அவர்கள் கூறினர், "எங்கள் தந்தை யே, எங்கள் சகோதரனை எங்களுடன் நீர் அனுப்பி னாலன்றி, இதற்குப் பிறகு எந்த பலசரக்குகளையும் நம்மால் பெற முடியாது. நாங்கள் அவரை நன்கு கவனித்துக் கொள்வோம்."

64. அவர் கூறினார், "இதற்கு முன்னர் இவருடைய சகோதரரை உங்களை நம்பி நான் ஒப்படைத்ததைப் போல், இவரையும் உங்களை நம்பி நான் ஒப்படைக்க வேண்டுமா? **கடவுள்**தான் மிகச் சிறந்த பாதுகாவ லர், மேலும், கருணை கொண்ட அனைவரிலும் அவர்தான் மிக்க கருணையாளர்."

65. அவர்கள் தங்களுடைய பைகளைத் திறந்தபோது, அவர்களுடைய சரக்குகள் அவர்களிடம் திரும்பத் தரப்பட்டுள்ளதை அவர்கள் கண்டார்கள். அவர்கள் கூறினர், "எங்கள் தந்தையே, இதற்கு மேல் நாம் என்ன கேட்க முடியும்? இதோ நமது சரக்குகள் நம் மிடம் திரும்பத் தரப்பட்டுள்ளன. இதன் மூலம் நாம் நமது குடும்பத்திற்கு வழங்கவும், எங்கள் சகோதர ரைப் பாதுகாத்துக் கொள்ளவும், இன்னும் ஒரு ஒட்ட கத்தின் சுமையளவு பெற்றுக் கொள்ளவும் இயலும். நிச்சயமாக இது இலாபகரமானதொரு வியாபாரமே ஆகும்."

66. அவர் கூறினார், "நீங்கள் முற்றிலும் தோற்கடிக்கப் பட்டாலன்றி, அவரை நீங்கள் திரும்பக் கொண்டு வருவீர்கள் என்று, **கடவுள்** முன் பவித்திரமானதொரு சத்தியத்தை நீங்கள் எனக்குத் தந்தாலே தவிர, நான் அவரை உங்களுடன் அனுப்பமாட்டேன். அவர்களு டைய பவித்திரமான சத்தியத்தை அவர்கள் தந்த போது, அவர் கூறினார், "நாம் கூறுகின்ற ஒவ்வொன் றுக்கும் சாட்சியாகக் **கடவுள்** உள்ளார்."

67. மேலும் அவர் கூறினார், "என் மகன்களே, ஒரு வாசல் வழியாக நுழையாதீர்கள்; வெவ்வேறு வாசல்களின் ஊடே நுழையுங்கள். எப்படியிருப்பினும், **கடவுள்**–ஆல் முன்னரே தீர்மானிக்கப்பட்ட எந்த விஷயத்திலிருந் தும் நான் உங்களைக் காப்பாற்றி விட முடியாது. தீர்ப்புக்கள் அனைத்தும் **கடவுள்**–க்கு உரியவை. அவரிடம் நான் பொறுப்பை ஒப்படைக்கின்றேன், மேலும் பொறுப்பை ஒப்படைப்பவர்கள் அனைவரும் அவர் மீதே தங்கள் பொறுப்பை ஒப்படைக்க வேண் டும்.

*ஜோஸஃபை ஜேகப் புலன்களால் உய்த்தறிகிறார்*

68. அவர்கள் *(ஜோஸஃபிடம்)* சென்ற போது, தங்கள் தந்தையின் அறிவுரைகளுக்கு ஒப்பவே அவர்கள் நுழைந்தனர். **கடவுள்**–ஆல் விதிக்கப்பெற்ற எந்த விஷயத்தையும் இது மாற்றிவிட முடியவில்லை என்ற போதிலும், இப்படிச் செய்யும்படி அவர்களிடம் கூறிய தற்கு, ஜேகபுக்கு ஒரு பிரத்தியேகக் காரணம் இருந் தது. ஏனெனில் நாம் அவருக்குக் கற்பித்த குறிப்பிட்ட தோர் அறிவை அவர் பெற்றிருந்தார், ஆனால் மனிதர் களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

*மீண்டும் எகிப்தில்*

69. ஜோஸஃபின் இடத்திற்குள் அவர்கள் நுழைந்த போது, அவர் தன் சகோதரரை தன் அருகில் கொண்டு வந்து கூறினார், "நான் உம்முடைய சகோ தரன்; அவர்களுடைய செயல்களால் கவலைக் குள்ளாகாதீர்."

*ஜோஸஃப் தன் சகோதரனை தக்க வைத்துக்கொள்கின்றார்*

70. அவர்களுடைய பலசரக்குகளை அவர்களுக்கு அவர் விநியோகித்த போது, அருந்தும் குவளையை தன் சகோதரரின் பையில் அவர் வைத்து விட்டார், பின்னர் அறிவிப்பாளர் ஒருவர் அறிவித்தார்: "இந்த வணிக வண்டியின் சொந்தக்காரர்கள் திருடர்கள்."

71. அவர்களை நோக்கி வந்தவர்களாக, அவர்கள் கூறி னர், "நீங்கள் இழந்தது என்ன?"

72. அவர்கள் கூறினர், "மன்னரின் குவளையை நாங்கள் இழந்துவிட்டோம். எவரொருவர் அதனைத் திருப்பித் தருகின்றாரோ அவர் ஒர் ஒட்டகச் சுமையளவு அதிகமாகப் பெற்றுக்கொள்வார்; நான் தனிப்பட்ட முறையில் இதற்கு உத்தரவாதமளிக்கின்றேன்."

73. அவர்கள் கூறினர், "**கடவுள்** மீது ஆணையாக, கெட்டது செய்வதற்காக நாங்கள் இங்கு வரவில்லை என்பதை நீங்கள் நன்கறிவீர்கள், அன்றி நாங்கள் திருடர்களுமல்லர்."

74. அவர்கள் கூறினர், "நீங்கள் பொய்யர்களாக இருந்தால், திருடனுக்கு உரிய தண்டனை என்ன ?"

75. அவர்கள் கூறினர், "தண்டனையானது, அவனது பையில் அது காணப்பட்டால், அத்திருடன் உங்களுக் குரியவன் என்பதாகும். இவ்விதமாகவே நாங்கள் குற்றவாளிகளைத் தண்டிப்போம்."

76. பின்னர் அவருடைய சகோதரரின் பெட்டிக்கு அவர் செல்லும் முன்னர், அவர்களுடைய பெட்டியிலிருந்து சோதனையைத் துவங்கினார், மேலும் அதனை அவருடைய சகோதரரின் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தார். இவ்விதமாக ஜோஸஃபுக்கு அத்திட்டத்தை நாம் முடித்துக் கொடுத்தோம்; மன்னரின் சட்டத்தை அவர் பிரயோகப்படுத்தியிருந்தால் அவருடைய சகோதரரை அவரால் தக்க வைத்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அது தான் **கடவுள்**–ன் நாட்டமாக இருந்தது. நாம் தேர்ந்தெடுப்போரை உயர்ந்த அந்தஸ்துகளுக்கு நாம் உயர்த்துகின்றோம். அறிவைப் பெற்றவர் ஒவ்வொருவருக்கும் மேலாக, இன்னும் அதிக அறிவைப் பெற்ற ஒருவர் இருக்கின்றார்.

77. அவர்கள் கூறினர், "இவன் திருடினான் என்றால், கடந்த காலத்தில் இவனுடைய சகோதரனும் அவ்வாறே செய்தான்." ஜோஸஃப் தன் உணர்வுகளைத் தனக்குள் மறைத்துக் கொண்டார், மேலும் அவர்களிடம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. அவர் *(தனக்குள்)* கூறினார், "நீங்கள் மெய்யாகவே பொல்லாதவர்கள். உங்களுடைய குற்றச்சாட்டுக்களைப் பற்றி **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்."

78. அவர்கள் கூறினர், "பெருந்தகையே, இவனுக்கு வயது முதிர்ந்ததொரு தந்தை இருக்கிறார்; இவனுடைய இடத்தில் எங்களில் ஒருவரை நீர் பிடித்துக் கொள்வீரா ? கனிவானவொரு மனிதனாக உம்மை நாங்கள் காண்கின்றோம்."

79. அவர் கூறினார், " எங்கள் சாமான்களை எவர் வசம் நாங்கள் கண்டோமோ, அவரையன்றி மற்றொருவரை நாங்கள் பிடித்துவைத்துக் கொள்வதை விட்டுக் **கடவுள்** காப்பாராக. இல்லையென்றால், நாங்கள் நீதமற்றவர்களாகி விடுவோம்."

80. அவருடைய மனதை மாற்றி விடும் நம்பிக்கையை அவர்கள் இழந்தபோது, அவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்தனர். அவர்களுடைய மூத்தவன் கூறினான், "**கடவுள்** முன்னர் பவித்திரமானதொரு சத்தியத்தை உங்கள் தந்தை உங்களிடமிருந்து பெற்றிருக்கின்றார் என்பது உங்கள் கவனத்தில் உள்ளதா ? கடந்த காலத்தில் நீங்கள் ஜோஸஃபைத் தொலைத்தீர்கள். என் தந்தை எனக்கு அனுமதி தரும்வரை, அல்லது **கடவுள்** எனக்குத் தீர்ப்பளிக்கும் வரை இவ்விடத்தை விட்டு நான் அகலமாட்டேன்; அவரே மிகச் சிறந்த நீதிபதி.

81. "உங்கள் தந்தையிடம் திரும்பிச் சென்று அவரிடம் கூறுங்கள்..."

*மீண்டும் பாலஸ்தீனத்தில்*

'எங்கள் தந்தையே, உம்முடைய மகன் ஒரு திருட்டைச் செய்துவிட்டான். நாங்கள் மிக உறுதியாக அறிவோம், ஏனெனில் இதனைத்தான் நாங்கள் கண்டோம். இது எதிர்பார்க்கப்படாத ஒரு நிகழ்வாக இருந்தது.

82. 'நாங்கள் எங்கு இருந்தோமோ அந்தச் சமூகத்தாரையும், எங்களுடன் திரும்பி வந்த பிரயாணிகளின் கூட்டத்தையும் நீங்கள் விசாரிக்கலாம். நாங்கள் உண்மையையே கூறுகின்றோம்.'"

83. அவர் கூறினார், "உண்மையில் நீங்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்ச்சியைச் செய்ய இரகசியத் திட்டம் தீட்டி இருக்கின்றீர்கள். அமைதியான பொறுமையே என்னுடைய ஒரே தஞ்சமாகும். அவர்கள் அனைவரையும் **கடவுள்** என்னிடம் திரும்பக் கொண்டு வருவாராக. அவர் எல்லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்."

84. "நான் ஜோஸஃபை நினைத்துக் கவலையுறுகின்றேன்," என்று கூறியவராக, அவர்களிடமிருந்து அவர் திரும்பிக் கொண்டார். அதிகமான கவலையால் அவருடைய கண்கள் வெளுத்துப் போய்விட்டன; அவர் மெய்யாகவே துக்கத்தில் இருந்தார்.

85. அவர்கள் கூறினர், "**கடவுள்** மீது ஆணையாக, நீர் நோயாளியாகி விடும் வரை, அல்லது நீர் இறந்து போகும் வரை ஜோஸஃபுக்காக நீர் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பீர்."

86. அவர் கூறினார், "எனது சங்கடத்தையும் கவலையையும் நான் **கடவுள்**–யிடம் முறையிடுகின்றேன் அவ்வளவுதான், ஏனெனில் நீங்கள் அறியாதவற்றைக் **கடவுள்**–யிடமிருந்து நான் அறிவேன்.

87. "என் மகன்களே, சென்று ஜோஸஃபையும் அவருடைய சகோதரரையும் கூட்டிக்கொண்டு வாருங்கள், மேலும் **கடவுள்**–ன் அருளில் ஒருபோதும் நம்பிக்கை யிழந்து விடாதீர்கள். நம்பமறுக்கும் கூட்டத்தாரைத் தவிர எவரும் **கடவுள்**–ன் அருளில் நம்பிக்கையிழக்க மாட்டார்கள்."

*இஸ்ரவேல் எகிப்திற்குச் செல்கின்றார்*

88. *(ஜோஸஃபின்)* குடியிருப்பிற்குள் அவர்கள் நுழைந்த போது, அவர்கள் கூறினர், "பெருந்தகையே, நாங்களும், எங்கள் குடும்பத்தாரும் ஏராளமான கஷ்டங்களை அனுபவித்து விட்டோம், மேலும் தரங்குறைந்த பொருள்களையே நாங்கள் கொண்டு வந்துள்ளோம். ஆயினும் நீர் எங்களுக்கு அளவை முழுவதையும் தருவீரென்றும், எங்களிடம் பெருந்தன்மையுடன் இருப்பீரென்றும் நாங்கள் நம்புகின்றோம். பெருந்தன்மையுடையோருக்குக் **கடவுள்** வெகுமதியளிப்பார்."

89. அவர் கூறினார், "நீங்கள் அறியாதவர்களாக இருந்த போது, ஜோஸஃபிற்கும் அவரது சகோதரருக்கும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கின்றதா ?"

90. அவர்கள் கூறினர், "நீர்தான் ஜோஸஃப்பாக இருக்க வேண்டும்" அவர் கூறினார், "நான்தான் ஜோஸஃப், மேலும் இதோ என்னுடைய சகோதரன். **கடவுள்** எங்களை ஆசீர்வதித்திருக்கின்றார். அது ஏனெனில், ஒருவர் நேரியவாழ்வு நடத்தி, உறுதியுடன் சகித்திருப்பாராயின், நல்லோருக்கு வெகுமதியளிக்க **கடவுள்** ஒரு போதும் தவறுவதில்லை."

91. அவர்கள் கூறினர், "**கடவுள்** மீது ஆணையாக, **கடவுள்** எங்களுக்கு மேலாக உண்மையாகவே உம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார். நிச்சயமாக நாங்கள் தவறானவர்களாகவே இருந்தோம்."

92. அவர் கூறினார், "இன்றைய தினம் உங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. **கடவுள்** உங்களை மன்னிப்பாராக. கருணையுடையவர்கள் அனைவரிலும், அவரே மிக்க கருணையாளர்.

93. "என்னுடைய இந்தச் சட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்; என் தந்தையின் முகத்தில் நீங்கள் இதனை எறியும்போது, அவருடைய பார்வை திரும்பவும் மீளும். உங்கள் குடும்பம் முழுவதையும் அழைத்துக் கொண்டு என்னிடம் திரும்பி வாருங்கள்."*

94. பிரயாணிகளின் கூட்டம் வந்து சேர்வதற்கும் முன்பாகவே, அவர்களுடைய தந்தை கூறினார், "ஜோஸஃபின் வாடையை என்னால் உணர முடிகின்றது. எவரேனும் எனக்குத் தெளிவு செய்வீர்களா ?"

95. அவர்கள் கூறினர், "**கடவுள்** மீது ஆணையாக, நீர் இன்னும் உம்முடைய பழைய குழப்பத்திலேயே இருக்கின்றீர்."

96. நற்செய்தியைக் கொண்டு வருபவர் வந்து சேர்ந்த போது, அவர் *(சட்டையை)* அவர் முகத்தின் மீது எறிந்தார், அப்போது அவருடைய பார்வை திரும்பவும் மீண்டது. அவர் கூறினார், "நீங்கள் அறியாதவற்றைக் **கடவுள்**–யிடமிருந்து நான் அறிவேன் என நான் உங்களிடம் கூறவில்லையா ?"

97. அவர்கள் கூறினர், "எங்கள் தந்தையே, எங்களுடைய பாவமன்னிப்புக்காகப் பிரார்த்தியுங்கள்; உண்மையில் நாங்கள் தவறானவர்களாகவே இருந்தோம்."

98. அவர் கூறினார், "உங்களை மன்னிக்கும்படி என் இரட்சகரிடம் நான் இறைஞ்சுவேன்; அவர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

*எகிப்தில்*

99. ஜோஸஃபின் குடியிருப்பிற்குள் அவர்கள் நுழைந்த போது, "எகிப்திற்கு வரவேற்கின்றேன். **கடவுள்** நாடினால், நீங்கள் இங்கே பாதுகாப்புடன் இருப்பீர்கள்," என்று கூறியவராக அவர் தன் பெற்றோரைத் தழுவிக் கொண்டார்.

100. அவர் தன் பெற்றோரை அரியாசனத்தின் மீது உயர்த்தினார். அவர்கள் அவர் முன் சிரம் பணிந்து விழுந்தனர். அவர் கூறினார், "என் தந்தையே, இது என் பழைய கனவின் பூர்த்தியாகும். என் இரட்சகர் அதனை நனவாக்கி விட்டார். அவர் என்னை ஆசீர்வதித்தார், சிறையிலிருந்து என்னை விடுதலை செய்தார், மேலும் எனக்கும் என் சகோதரர்களுக்கும் இடையில் சாத்தான் பிளவை ஏற்படுத்தி விட்ட தன் பின்னர், பாலைவனத்தில் இருந்து உங்களைத் தருவித்துக் கொண்டு வந்தார். தான் நாடுகின்ற மீது என் இரட்சகர் மிகுந்த கனிவுடையவராக இருக்கின்றார். அவர் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்."

101. "என் இரட்சகரே, எனக்கு நீர் அரசாட்சியைத் தந்திருக்கின்றீர், மேலும் கனவுகளின் விளக்கத்தை எனக்குக் கற்றுத் தந்திருக்கின்றீர். வானங்களையும் பூமியையும் துவக்கியவரே; இந்த வாழ்விலும் மறுவுலகிலும் நீரே என் அதிபதியும் எஜமானருமாவீர். சரணடைந்த ஒருவனாக என்னை மரணிக்கச் செய்வீராக, மேலும் நல்லோர்களுடன் என்னைக் கணக்கிடுவீராக."

102. இது கடந்த காலத்திலிருந்து நாம் உமக்கு வெளிப்படுத்தும் செய்தியாகும். அவர்கள் ஒன்று கூடி இரகசியத் திட்டம் தீட்டியவர்களாக *(ஜோஸஃப்பைக் கிணற்றில் எறிந்து விடுவதென்ற)* அவர்களுடைய ஒருமித்த முடிவை அவர்கள் செய்த போது நீர் அவர்களுடன் இருக்கவில்லை.

**12:93 இது எகிப்தில் இஸ்ரவேலின் சந்ததியினருடைய துவக்கத்தைக் குறிக்கின்றது. சில நூற்றாண்டுகள் கழித்து, மோஸஸ் அவர்களை எகிப்திற்கு வெளியே அழைத்து வந்தார்.*

*மனிதர்களில் பெரும்பாலோர்*
*நம்பிக்கை கொள்வதில்லை*

103. மனிதர்களில் பெரும்பாலோர், நீர் என்ன செய்த போதிலும் சரியே, நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

104. அவர்களிடம் நீர் பணம் எதுவும் கேட்கவில்லை; மக்கள் அனைவருக்கும் இந்த நினைவூட்டலை நீர் சேர்ப்பிக்கின்றீர் அவ்வளவுதான்.

105. வானங்களிலும் பூமியிலும் எத்தனையோ சான்றுகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன, ஆனால் கவனமின்றி, அவர்கள் அவற்றைக் கடந்து செல்கின்றனர்!

*நம்பிக்கை கொண்டவர்களில் பெரும்பாலோர்*
*நரகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளனர்*

106. **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டவர்களில் பெரும்பாலோர், போலித்தெய்வ வழிபாட்டைச் செயல்படுத்திய வண்ணமே அன்றி அவ்வாறு செய்வதில்லை.

107. மூழ்கடிக்கின்ற ஒரு தண்டனை **கடவுள்**–யிடமிருந்து அவர்களைத் தாக்கிவிடாதென்றோ, அல்லது அவர்கள் அதனைச் சற்றும் எதிர்பாராத போது, வேளை அவர்களிடம் திடீரென வந்து விடாதென்றோ அவர்கள் உத்திரவாதம் கொண்டிருக்கின்றனரா?

108. கூறும், "இதுவே எனது பாதையாகும்: தெளிவானதொரு சான்றின் அடிப்படையில், நான் உங்களைக் **கடவுள்**–ன் பால் அழைக்கின்றேன், மேலும் என்னை பின்பற்றுபவர்களும் அவ்வண்ணமே செய்கின்றனர். **கடவுள்** துதிப்பிற்குரியவர். நான் போலித் தெய்வ வழிபாடு செய்யும் ஒருவனல்லன்."

109. பல்வேறு சமூகங்களில் உள்ள மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, நாம் உள்ளுணர்வூட்டிய ஆண்களை அன்றி எவரையும் உமக்கு முன்னர் நாம் அனுப்பவில்லை. பூமியில் சுற்றித் திரிந்து, அவர்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு உண்டான விளைவுகளை அவர்கள் பார்க்கவில்லையா? நேரியதொரு வாழ்வு நடத்துவோருக்கு மறுவுலகின் வீடானது மிகவும் மேலானதாகும். எனவே நீங்கள் புரிந்து கொள்வீர்களா?

*வெற்றியானது, இறுதியில்,*
*நம்பிக்கையாளர்களுக்கு உரியதாகின்றது*

110. தூதர்கள் நம்பிக்கையிழந்து, மேலும் தாங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டுவிட்டதாக எண்ணிக் கொள்ளும்போது, மிகச்சரியாக அச்சமயம், நம்முடைய வெற்றி அவர்களிடம் வருகின்றது. பின்னர் நாம் தேர்ந்தெடுத்தோரை நாம் காப்பாற்றிக் கொள்வோம், அதே சமயம் குற்றவாளிகளான மக்களுக்கு நம்முடைய தண்டனை தவிர்த்து விட முடியாதது.

*நமக்கு வேண்டியதெல்லாம் குர்ஆன்தான்*

111. அவர்களுடைய சரித்திரத்தில், அறிவுத்திறன் கொண்டோருக்கொரு படிப்பினை உள்ளது. இது புனையப்பட்ட *ஹதீஸ்* அல்ல; *(குர்ஆனாகிய)* இது முந்திய அனைத்து வேதங்களையும் உறுதிப்படுத்துகின்றது, ஒவ்வொன்றிற்கும் உரிய விபரங்களை வழங்குகின்றது, மேலும் நம்பிக்கை கொண்டோருக்கொரு கலங்கரை விளக்காகவும் அருளாகவும் திகழ்கின்றது.

****

# சூரா 13: இடியோசை (அல்–ரஃத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம. ர.* *(எழுத்துகளான)* இவை இந்த வேதத்தின் சான்றுகளாகும். உம்முடைய இரட்சகரிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதுதான் சத்தியமாகும், ஆனால் மனிதர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்வதில்லை.

2. **கடவுள்**தான் நீங்கள் காணக்கூடிய தூண்கள் எதுவுமின்றி வானங்களை உயர்த்திய ஒருவர், பின்னர் அனைத்து அதிகாரங்களையும் ஏற்றுக் கொண்டார். சூரியன் மற்றும் சந்திரன் ஒவ்வொன்றையும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு *(அவற்றின் வட்டவரைக்குள்)* ஓடும்படி அவர் ஆக்கினார். அவர் எல்லா விஷயங்களையும் கட்டுப்படுத்துகிறார், மேலும் இவ்வெளிப்பாடுகளை விவரிக்கின்றார், உங்கள் இரட்சகரைச் சந்திப்பது குறித்து நீங்கள் உறுதிப்பாட்டினை அடையும் பொருட்டு.

3. அவர்தான் பூமியை நிர்மாணித்து, மேலும் அதன் மேல் மலைகளையும் ஆறுகளையும் அமைத்தவர். மேலும் வெவ்வேறுபட்ட கனிவர்க்கங்களிலிருந்து, அவர் அவற்றை ஜோடிகளாக – ஆண்கள் மற்றும் பெண்ணினங்களாக்கினார். இரவு பகலை முந்துகின்றது. சிந்திக்கும் மக்களுக்கு இவை திடமான சான்றுகளாகும்.

**13:1 இந்த துவக்க எழுத்துகள், குர்ஆனின் உள்ளே கட்டமைக்கப்பட்டுள்ள இறை இயற்றுதலுக்குரிய சான்றான அற்புதக் கணிதக் குறியீட்டின் ஒரு முக்கிய அங்கமாக அமைகின்றன. பார்க்க பின் இணைப்பு 1.*

4. பூமியின் மீது, திராட்சைப் பழத்தோட்டங்களையும் பயிர்களையும் பேரீத்த மரங்களையும் – கொட்டைகள் கொண்டவை, கொட்டைகள் இல்லாதவை– விளைவிக்கும் நிலங்கள் அருகருகே உள்ளன. அவை ஒரே நீரைக் கொண்டு பாசனம் செய்யப் பட்ட போதிலும், உண்ணுவதற்கு சிலவற்றை விட மேலாக நாம் மற்றவற்றைத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம். புரிந்து கொள்ளும் மக்களுக்கு இவை திடமான சான்றுகளாகும்.

*மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்வது மீட்சிக்கு அவசியமாகின்றது*

5. எதற்காகவாவது நீர் வியப்படைவீராயின், உண்மையான வியப்பு அவர்களுடைய இக்கூற்றுத்தான்: "நாம் தூசியாக மாறிய பின்னர், நாம் புதிதாக மீண்டும் படைக்கப்படுவோமா?" இவர்கள் தான் தங்கள் இரட்சகரை நம்பமறுத்தவர்கள். இவர்கள் தான் தங்கள் கழுத்துகளைச் சுற்றி தளைகளுக்கு உள்ளானவர்கள். இவர்கள்தான் நரகிற்கு உள்ளானவர்கள், அங்கே அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள்.

6. நல்லவர்களாக மாறிவிடுவதற்குப் பதிலாக, தங்கள் மீது அழிவைக் கொண்டு வருமாறு அவர்கள் உம்மிடம் சவால் விடுகின்றனர். கடந்த காலங்களில் போதுமான முன்னுதாரணங்கள் அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக, உம்முடைய இரட்சகர், அவர்களுடைய வரம்புமீறல்கள் இருந்த போதிலும், மனிதர்கள்பால் முற்றிலும் மன்னிப்பு கொண்டவராக உள்ளார், மேலும் உம்முடைய இரட்சகர் தண்டனையை அமல்படுத்துவதிலும் கண்டிப்பானவர்.

7. நம்பமறுப்போர் கூறுகின்றனர், "அவருடைய இரட்சகரிடமிருந்து அவருக்கு ஓர் அற்புதம் மட்டும் இறங்கி வரக்கூடுமானால் *(அப்போது நாங்கள் நம்பிக்கை கொள்வோம்).*" நீர் ஒரு எச்சரிப்பவர் மட்டுமே – ஒவ்வொரு சமூகமும் வழிகாட்டும் ஓர் ஆசிரியரைப் பெற்றுக் கொள்கின்றது.

8. ஒவ்வொரு பெண்ணினமும் சுமப்பதையும், மேலும் ஒவ்வொரு கருப்பையும் வெளியேற்றுவதையும், அடைந்து கொள்வதையும் **கடவுள்** அறிகின்றார். அவர் செய்யும் ஒவ்வொன்றும் மிகச் சரியாக அளவிடப்பட்டுள்ளது.

9. அனைத்து இரகசியங்களையும், அறிவிப்புகளையும் அறிந்தவர்; மேலதிகாரம் கொண்டவர், மிகவும் உயர்வானவர்.

10. உங்களுடைய எண்ணங்களை நீங்கள் மறைத்துக் கொண்டாலும், அல்லது அவற்றை வெளிப்படுத்தினாலும், அல்லது இரவின் இருளில் மறைந்திருந்தாலும் அல்லது பகலின் வெளிச்சத்தில் செயல்பட்டாலும் அது ஒன்றே ஆகும்.

11. உங்கள் ஒவ்வொருவருடனும் இருக்கும் *(வானவர்களின்)* அணிகள் மாறி மாறி முறைகள் எடுத்துக் கொள்கின்றன–அவர்கள் உங்களுக்கு முன்புற மும் உங்களுக்குப் பின்புறமும் உள்ளனர். அவர்கள் உங்களுடன் இருக்கின்றனர், மேலும் **கடவுள்**–ன் கட்டளைகளுக்கு ஏற்ப உங்களைப் பாதுகாக்கின்றனர். இவ்விதமாக, எந்த மக்களின் நிலையையும், மாற்றிக்கொள்ளும் முடிவை அவர்களே செய்தால் அன்றி, **கடவுள்** மாற்றுவதில்லை. எந்தச் சமூகத்திற்கும் ஏதேனும் கஷ்டத்தைக் **கடவுள்** நாடிவிட்டால், எந்தச் சக்தியும் அதனைத் தடுத்து விட முடியாது. ஏனெனில் அவரை அன்றி அவர்களுக்கு அதிபதியாகவோ எஜமானவராகவோ எவரும் இல்லை.

12. அவர்தான் அச்சத்திற்கும் அதே சமயம் எதிர்பார்ப்பிற்கும் மூலாதாரமாக மின்னலை உங்களுக்குக் காட்டுபவர், மேலும் கனத்த மேகங்களையும் அவர் துவக்குகின்றார்.

13. இடியோசை அவருடைய மகிமையைப் புகழ்கின்றது, மேலும் அவர் மீதுள்ள பக்தியால் வானவர்களும் அவ்வாறே செய்கின்றனர். அவருடைய நாட்டத்திற்கேற்பத்தாக்குகின்ற, மின்னல் அம்புகளை அவர் அனுப்புகின்றார். இருப்பினும், அவர்கள் **கடவுள்** –ஐப் பற்றித் தர்க்கிக்கின்றனர், அவருடைய சக்தி அச்சமூட்டக் கூடியதாக இருந்த போதிலும்.

14. அவரை இறைஞ்சுவது மட்டுமே முறையான வேண்டுதலாகும், அதே சமயம் அவரை அன்றி அவர்கள் இறைஞ்சும் போலித்தெய்வங்கள், எவ்விதத்திலும் பதிலளிக்க இயலாது. எனவே, அவர்கள் தண்ணீரை நோக்கித் தங்கள் கைகளை நீட்டிக் கொள்பவர்களைப் போன்றவர்கள், ஆனால் அவர்களுடைய வாய்களைஎதுவும் அடைவதில்லை. நம்பமறுத்தவர்களின் வேண்டுதல்கள் வீணாகிப் போனவையே ஆகும்.

*எல்லாப் படைப்பும் கடவுளுக்குச் சரணடைந்து விட்டது*

15. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும், விரும்பியோ விரும்பாமலோ **கடவுள்**–க்குச் சிரம் பணிகின்றனர், மேலும் அவர்களுடைய நிழல்களும், காலைகளிலும் மாலைகளிலும் அவ்வாறே செய்கின்றன.*

16. கூறும், "வானங்களுக்கும் பூமிக்கும் இரட்சகராக இருப்பவர் யார்?" கூறும், "**கடவுள்**." கூறும், "பின்னர் ஏன் நீங்கள் தங்களுக்கே கூட நன்மையோ தீமையோ செய்து கொள்ளச் சக்தியற்றவர்களை அவருடன் எஜமானர்களாக அமைத்துக் கொள்கின்றீர்கள்?" கூறும், "குருடனும் பார்வையுடையவனும் ஒன்றாவார்களா? இருளும் ஒளியும் ஒன்றாகுமா?" **கடவுள்**–ஐ அன்றி அவருடைய படைப்புகளுக்கு ஒப்பான படைப்புக்களை, இரு படைப்புகளுக்கும் வேறுபாடு காண முடியாத அளவுக்குப் படைத்திருக்கும் போலித் தெய்வங்களை அவர்கள் கண்டு விட்டனரா? கூறும், "**கடவுள்**தான் அனைத்துப் பொருட்களின் படைப்பாளர், மேலும் அவர்தான் ஒருவர், மேலதிகாரம் கொண்டவர்."

*சத்தியமும் அசத்தியமும்*

17. விண்ணிலிருந்து தண்ணீரை அவர் இறக்கி அனுப்புகின்றார், அதன்மூலம் பள்ளத்தாக்குகள் நிரம்பி வழிகின்றன, பின்னர் அந்த நீர்ப்பிரவாகம் அபரிமிதமான நுரையை உருவாக்குகின்றது. அதுபோலவே, அவர்களுடைய ஆபரணங்களுக்காகவோ சாதனங்களுக்காகவோ உலோகங்களைச் சுத்தி செய்ய அவர்கள் நெருப்பைப் பயன்படுத்தும் போதும் நுரை உருவாகின்றது. **கடவுள்** இவ்விதமாக சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் உவமானங்கள் எடுத்துரைக்கின்றார். அந்த நுரையைப் பொறுத்தவரை அது வீணாகிப் போகின்றது, அதே சமயம் மனிதர்களுக்குப் பயன் தருவதோ மண்ணுக்கு நெருக்கமாகத் தங்கி விடுகின்றது. **கடவுள்** இவ்விதமாக உவமானங்களை எடுத்துரைக்கின்றார்.

18. தங்கள் இரட்சகருக்கு மறுமொழி தருபவர்கள் நல்ல வெகுமதிகளுக்குத் தகுந்தவர்களாகின்றனர். அவருக்கு மறுமொழி தரத் தவறிவிட்டவர்களைப் பொறுத்தவரை, பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் அவர்கள் சொந்தமாகக் கொண்டிருந்தாலும் – அதுபோல் இரு மடங்கானாலும் – அவர்கள் உடனடியாக அதனை ஈட்டுத் தொகையாகத் தந்து விடுவார்கள். அவர்கள் மோசமான கேள்விக் கணக்கிற்கு உள்ளாகி விட்டனர், மேலும் அவர்களுடைய இறுதித் தங்குமிடம் நரகமாகும்; எத்தகையதொரு துக்ககரமான விதி.

*நம்பிக்கையாளர்களும் நம்பமறுப்பவர்களும்*
*(1) நம்பிக்கையாளர்கள்*

19. உமக்குக் கொடுக்கப்பட்ட உம்முடைய இரட்சகரின் வெளிப்பாடுகளைச் சத்தியம் என அடையாளம் கண்டு கொண்ட ஒருவன், குருடனாக இருக்கும் ஒருவனுக்குச் சமமாவானா? அறிவுடையோர் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

20. அவர்கள்தான் **கடவுள்**–யிடம் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்கள், மேலும் உடன்படிக்கைகளை மீறாதவர்கள்.

21. சேர்த்து வைக்குமாறு **கடவுள்** கட்டளையிட்டவற்றை அவர்கள் சேர்த்து வைப்பார்கள், தங்கள் இரட்சகரிடம் பயபக்தியோடிருப்பார்கள், மேலும் அச்சுறுத்தும் கேள்விக்கணக்கை அஞ்சுவார்கள்.

22. தங்கள் இரட்சகரைத் தேடுவதில் உறுதியோடு சகித்திருப்பார்கள், தொடர்புத் தொழுகைகளைக் *(ஸலாத்)* கடைப்பிடிப்பார்கள், நம் வாழ்வாதாரங்களில் அவர்களுக்குரியதில் இருந்து இரகசியமாகவும் பகிரங்கமாகவும் செலவு செய்வார்கள், மேலும் நல்லதைக் கொண்டு கெட்டதை எதிர் கொள்வார்கள். இவர்கள் மிகச்சிறந்த தங்குமிடத்திற்குத் தகுதி பெற்று விட்டார்கள்.

23. தங்கள் பெற்றோர்களிலும், தங்கள் துணைகளிலும், தங்கள் பிள்ளைகளிலும் உள்ள நல்லோர்களுடன் சேர்ந்து, அவர்கள் ஏதேன் தோட்டங்களில் நுழைவார்கள். ஒவ்வொரு வாயிலின் வழியாகவும் வானவர்கள் அவர்களிடம் வருவார்கள்.

24. "நீங்கள் உறுதியோடு சகித்துக்கொண்டு இருந்ததனால் உங்கள் மீது சாந்தி நிலவுவதாக. எத்தகையதொரு ஆனந்தமான விதி."

*(2) நம்பமறுப்பவர்கள்*

25. **கடவுள்**–ன் உடன்படிக்கையைக் காப்பதாக வாக்குறுதி செய்து விட்டுப் பின்னர் அதனை மீறுபவர்கள், மேலும் சேர்த்து வைக்குமாறு **கடவுள்** கட்டளையிட்டவற்றைத் துண்டிப்பவர்கள், மேலும் தீமையைச் செய்பவர்ளைப் பொறுத்தவரை, அவர்கள் கண்டனத்திற்கு உள்ளாகி விட்டார்கள்; அவர்கள் மோசமான விதிக்கு உள்ளாகி விட்டார்கள்.

**13:15 நம்பமறுப்பவர்கள் கூட சிரம் பணிகின்றனர்; உதாரணத்திற்கு, அவர்களால் தங்களுடைய இதயத்துடிப்பையோ, நுரையீரலையோ, அல்லது குடல்களின் இயக்கத்தையோ கட்டுப்படுத்த இயலாது. சூரியன் மற்றும் சந்திரனின் சுற்றுப்பாதை, மேலும் நான்கு பருவகாலங்களுக்குக் காரணமாக அமையும் பூமிக்கிரகத்தின் விசேஷ வடிவம் ஆகியவற்றைக் கடவுள் வடிவமைத்த விதத்தால் நிழல்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளன. சூரியக் கடிகாரங்களும், அவற்றின் நிழல்களும் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் சூரிய / பூமி உறவின் நேர்த்திமிகு நுட்பம் நிரூபிக்கப்பட்டுள்ளது.*

*வாழ்வாதாரங்கள் அனைத்தையும் கடவுள் கட்டுப்படுத்துகின்றார்*

26. **கடவுள்**தான் அவர் நாடியோருக்கு வாழ்வாதாரத்தை அதிகரிக்கவோ அல்லது அதனை நிறுத்தி வைத்துக் கொள்ளவோ செய்கின்ற ஒருவர். இந்த வாழ்வில் மூழ்கியவர்களாக அவர்கள் ஆகி விட்டனர், மேலும் இந்த வாழ்வு, மறுவுலகுடன் ஒப்பிடப்படும் போது, ஒன்றுமேயில்லை.

27. நம்பமறுப்போர் கூறுவார்கள், "அவருடைய இரட்சகரிடமிருந்து அவருக்கு ஓர் அற்புதம் மட்டும் இறங்கி வரக்கூடுமானால் *(நாங்கள் நம்பிக்கை கொள்வோம்).*" கூறும், "தான்நாடுகின்ற எவரையும் **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார், மேலும் கீழ்ப்படிவோருக்கு மட்டுமே அவர் தன்பால் வழி காட்டுகின்றார்."

28. **கடவுள்**–ஐ நினைப்பதில் களிப்படைகின்ற இதயங்கள் கொண்டவர்கள் அவர்கள்தான். ஆம், நிச்சயமாகக் **கடவுள்**–ஐ நினைப்பதன் மூலமே, இதயங்கள் களிப்படைகின்றன.

29. நம்பிக்கை கொண்டு மேலும் நேரியதொரு வாழ்வு நடத்துவோர் மகிழ்ச்சிக்கும் ஆனந்தமானதோர் விதிக்கும் தகுதியாகி விட்டனர்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

30. *(ரஷாதே)** கடந்தகாலத்தில் மற்றச் சமுதாயங்களுக்கு நாம் செய்ததைப் போலவே இந்தச் சமுதாயத்திற்கு உம்மை நாம் அனுப்பி உள்ளோம். நாம் உமக்கு வெளிப்படுத்துபவற்றை நீர் அவர்களிடம் எடுத்துரைக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் மிக்க அருளாளரை நம்பமறுத்து விட்டனர். கூறும், "அவரே என் இரட்சகர். அவரைத் தவிர இறைவன் இல்லை. நான் அவரிடம் மட்டுமே என் பொறுப்பை ஒப்படைக்கின்றேன்; என் இறுதி விதி அவரிடமே உள்ளது."

*குர்ஆனின் கணித அற்புதம்*

31. ஒரு குர்ஆன் கொண்டு மலைகளை நகரச் செய்த போதிலும், அல்லது பூமியைத் துண்டுகளாகப் பிளந்தாலும், அல்லது இறந்தவர்களைப் பேசச் செய்தாலும் *(அவர்கள் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்).* **கடவுள்** அனைத்து விஷயங்களையும் கட்டுப்படுத்துகின்றார். **கடவுள்** நாடியிருந்தால், எல்லா மக்களையும் அவர் நேர்வழியில் நடத்தியிருக்க முடியும் என்பதை உணர்ந்து நம்பிக்கையாளர்கள் விலகிக் கொண்டு விட வேண்டிய நேரம் இதுவல்லவா ? நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள், அவர்களுடைய சொந்தச் செயல்களின் விளைவாகக் **கடவுள்**–ன் வாக்குறுதி நிறைவேறும்வரை, தொடர்ந்து பேரழிவுகளை அனுபவிப்பார்கள், அல்லது அவர்களுக்கு அருகில் பேரழிவுகள் தாக்கக் காண்பார்கள். முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதியைக் **கடவுள்** ஒருபோதும் மாற்றுவதில்லை.

*தூதர்கள் அனைவரும் கேலி செய்யப்படுவார்கள்*

32. உமக்கு முன்னிருந்த தூதர்களும் கேலி செய்யப்பட்டனர்; நம்பமறுப்பவர்களை நான் தொடர அனுமதித்தேன், பின்னர் அவர்களை நான் தண்டித்தேன். என் தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது !

33. ஒவ்வொரு தனி ஆத்மாவையும் கட்டுப்படுத்தும் அந்த ஒருவருக்கு நிகராக எவரேனும் உள்ளாரா ? ஆயினும், அவர்கள் **கடவுள்**–க்குப் போட்டியாக போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றனர். கூறும், "அவற்றின் பெயர்களைக் கூறுங்கள். பூமியின் மீது அவர் அறியாத சிலவற்றை அவருக்கு நீங்கள் தெரியப்படுத்துகின்றீர்களா ? அல்லது வெற்று வாசகங்களைப் புனைகின்றீர்களா ?" உண்மையில், நம்பமறுப்பவர்களின் சூழ்ச்சிகள் அவர்களுடைய கண்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக அவர்கள் நேரான பாதையிலிருந்து திருப்பப்பட்டு விடுகின்றனர். **கடவுள்**–ஆல் வழிகேட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள் வழிகாட்டும் ஓர் ஆசிரியரை ஒருபோதும் காணமுடியாது."

34. இந்த வாழ்வில் அவர்கள் தண்டனைக்கு உள்ளாகி விட்டனர், மேலும் மறுவுலகின் தண்டனையோ மிகவும் மோசமானதாக உள்ளது. **கடவுள்**–க்கெதிராக எந்த ஒன்றும் அவர்களைக் காப்பாற்றி விட முடியாது.

*சுவனம் உருவகமாக வர்ணிக்கப்படுகிறது*

35. நல்லோர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் சுவனத்தின் உருவகமாவது, பாயும் ஆறுகள், தீர்ந்து போகாத வாழ்வாதாரங்கள், மற்றும் குளிர்ந்த நிழல். நன்னெறியைக் கடைப்பிடிப்போருக்கு உரிய விதி இத்தகையதேயாகும், அதே சமயம் நம்பமறுப்போருக்குரிய விதியோ நரகமாகும்.

36. வேதத்தைப் பெற்றவர்கள் உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றில் ஆனந்தம் அடைகின்றனர்; மற்ற சிலர் இதன் பகுதிகளை ஏற்றுக்கொள்ள மறுக்கக் கூடும். கூறும், "**கடவுள்**–ஐ வழிபட வேண்டும் என்றும், மேலும் அவருடன் போலித் தெய்வங்கள் எதனையும் கூடச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன், அவ்வளவு தான். நான் அவர் பால் அழைக்கின்றேன், மேலும் என் இறுதி விதி அவரிடமே உள்ளது.

**13:30 "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்பையும் (505), "கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பையும் (725), அத்தியாய எண்ணையும் (13), வசன எண்ணையும் (30), நாம் கூட்டினால் நமக்குக் கிடைப்பது 505+725+13+30=1273=19X67. கடவுள் இவ்விதமாகத் தனது தூதரின் பெயரைக் குறிப்பிடுகின்றார். (விபரங்களுக்குப் பார்க்க பின் இணைப்பு 2).*

*குர்ஆனின் கணிதக் குறியீட்டுக்கு தெய்வீக அங்கீகாரம்**

37. இந்தச் சட்டங்களை நாம் அரபியில் வெளிப்படுத்தி னோம், மேலும் இந்த அறிவு உமக்கு வந்து விட்ட பின்னர், அவர்களுடைய விருப்பங்களுக்கு நீர் எப் போதாவது இடம் கொடுப்பீராயின், **கடவுள்**–க்கெதி ராக உமக்கு தோழரோ, அல்லது பாதுகாவலரோ இருக்க மாட்டார்.

38. *(ரஷாதே)*, உமக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பி இருக்கின்றோம், மேலும் மனைவியரும் பிள்ளைகளும் கொண்ட கணவர்களாக அவர்களை நாம் ஆக்கினோம். **கடவுள்**–ன் அங்கீகாரமின்றி, மேலும் குறிப்பிடப்பட்ட, முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு நேரத்திற்கு ஒப்பவேயன்றி எந்தத் தூதரும் ஓர் அற்புதத்தைக் கொண்டு வர இயலாது.

39. தான் நாடிய எதையும் **கடவுள்** துடைத்து எடுத்து விடுகின்றார், மேலும் நிலைப்படுத்துகின்றார். அசல் மூலப்பிரதி அவரிடமே உள்ளது.

40. அவர்களுக்கு நாம் வாக்களித்ததை உமக்கு நாம் காட்டினாலும் சரி, அல்லது அதற்கு முன்னர் உம் வாழ்வை முடித்து விட்டாலும் சரி, உமது ஒரே பணி *(தூதுச் செய்தியைச்)* சேர்ப்பிப்பதே. அவர்களைக் கணக்குக் கேட்க அழைக்கப் போவது நாம்தான்.

41. பூமியின் மீது ஒவ்வொரு நாளும், அவர்களை முடி வினை நோக்கி நெருக்கிக் கொண்டு வருவதையும், மாற்றிவிட முடியாதபடி அவர்களுடைய வாழ்க்கைத் தவணையைக் **கடவுள்** தீர்மானிக்கின்றார் என்பதை யும் அவர்கள் காணவில்லையா**?** அவர்தான் மிகத் திறன் வாய்ந்த கணக்காளர்.

42. அவர்களுக்கு முன்னர் இருந்த மற்றவர்களும் சூழ்ச்சி செய்தனர், ஆனால் இறுதியான திட்டம் **கடவுள்**–க்குரியது. ஒவ்வொருவரும் செய்வதை அவர் அறிகின்றார். இறுதி வெற்றியாளர்கள் யார் என்பதை நம்பமறுப்பவர்கள் கண்டு கொள்வார்கள்.

43. நம்பமறுத்தவர்கள் கூறுவார்கள், "நீர் ஒரு தூதரல் லர்!" கூறும், "உங்களுக்கும் எனக்கும் இடையில் சாட்சியாகக் **கடவுள்**–ம், வேதத்தின் அறிவைப் பெற்றிருப்பவர்களும் போதுமானவர்கள்."

****

# சூரா 14: ஆப்ரஹாம் (இப்ராஹீம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ர.* உமக்கு நாம் வெளிப்படுத்திய ஒரு வேதம் –மனிதர்களுடைய இரட்சகரின் நாட்டத்திற்கேற்ப– அவர்களை இருளில் இருந்து வெளியேற்றி ஒளியின் உள்ளே வழிநடத்துவதற்காக, எல்லாம் வல்லவர், புகழுக்குத் தகுதியானவருடைய பாதையின் பால்.

2. **கடவுள்***(வுடைய பாதை);* வானங்களில் உள்ள ஒவ் வொன்றையும், பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் சொந்தமாகக் கொண்டிருக்கும் ஒருவர். நம்பமறுப் பவர்களுக்குக் கேடுதான்; அவர்கள் பயங்கரமான தொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*உங்களுடைய முன்னுரிமை எது ?*

3. அவர்கள்தான் மறுவுலகை விட இந்த வாழ்விற்கு முன்னுரிமை கொடுப்பவர்கள், **கடவுள்**–ன் பாதையி லிருந்து விரட்டுபவர்கள், மேலும் அதனைக் கோண லாக்க முனைபவர்கள்; அவர்கள் வெகு தூரம் வழி தவறிச் சென்று விட்டனர்.

*தூதரின் மொழி*

4. விஷயங்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தும் பொ ருட்டு, *(பிரசாரம் செய்வதற்காக)* அவருடைய சமூகத் தாரின் மொழியிலேயே அன்றி, எந்த தூதரையும் நாம் அனுப்பவில்லை, பின்னர் தான்நாடியோரைக் **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார், மேலும்தான் நாடி யோரை வழிநடத்துகின்றார். அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*மோஸஸ்*

5. இவ்வாறே, "உம்முடைய சமூகத்தாரை இருளில் இருந்து வெளியேற்றி ஒளியினுள்ளே வழிநடத்து வீராக, மேலும் **கடவுள்**–ன் நாட்களைப் பற்றி அவர் களுக்கு நினைவூட்டுவீராக" எனக்கூறி, மோஸஸை நம்முடைய அற்புதங்களுடன் நாம் அனுப்பினோம். உறுதியுடையவர்களாக, நன்றி செலுத்தக் கூடியவர் களாக இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இவை படிப்பினைகள் ஆகும்.

**13:37–38 இவ்வசனத்தின் எண்(38)=19x2. 13:37–38க்குப் பக்கத்தில் "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்பையும் (505) "கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பையும் (725) வைக்கும்போது 505725133738 என்ற எண் கிடைக்கப் பெறுகின்றது. 505725133738= 19x26617112302 (பின் இணைப்பு 2).*

**14:1 கி.பி. 1974ல் குர்ஆனின் கணிதக்குறியீடு கண்டுபிடிக்கப்படும் வரை இந்த துவக்க எழுத்துகள் தெய்வீகமாகப் பாது காக்கப்பட்ட ஓர் இரகசியமாக இருந்து வந்தது. இந்த துவக்க எழுத்துகளின் அர்த்தத்திற்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

*நன்றியுடையவர்களாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம்*

6. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுவீராக, "உங்கள் மீதுள்ள **கடவுள்**–ன் ஆசீர் வாதங்களை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மகன்களைக் கொன்று விட்டு உங்கள் மகள்களை உயிரோடு விட்டு வைத்து, உங்கள் மீது மோசமான அடக்குமுறையைச் சுமத்திய ஃபேரோவின் சமூகத் தாரிடமிருந்து அவர் உங்களைக் காப்பாற்றினார். அது உங்கள் இரட்சகரிடமிருந்து ஒரு கடினமான சோதனையாக இருந்தது."

*நன்றியுடையவர்களும் நன்றியற்றவர்களும்*

7. உம்முடைய இரட்சகர் விதித்துள்ளார்: "நீங்கள் எனக்கு எவ்வளவுக்கெவ்வளவு நன்றி செலுத்துகின் றீர்களோ, நான் உங்களுக்கு அவ்வளவுக்கவ்வளவு தருவேன். ஆனால் நீங்கள் நன்றியற்றவர்களாக மாறிவிட்டால், பின்னர் எனது தண்டனை கடுமை யானதாகும்."

8. மோஸஸ் கூறினார், "பூமியில் உள்ள அனைத்து மக்களுடனும் சேர்ந்து, நீங்கள் நம்பமறுத்து விட் டாலும், **கடவுள்** தேவையற்றவர், புகழுக்குரியவர்."

*அகம்பாவம் காரணமாக எதிர்ப்பது: ஒரு மனிதப்பண்பு*

9. உங்களுக்கு முன்னிருந்தவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா–நோவாவின் சமூகத்தார், ஆத், தமூது மேலும் அவர்களுக்குப் பின்னர் வந்தவர் களான, **கடவுள்**–க்கு மட்டுமே தெரிந்த மற்றவர் கள் ? அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளி வான சான்றுகளுடன் சென்றனர், ஆனால் அவர் களை அவமரியாதையாக அவர்கள் நடத்தினர், மேலும் கூறினர், "எதனைக் கொண்டு நீங்கள் அனுப் பப்பட்டுள்ளீர்களோ அதில் நாங்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றோம். உமது தூதுச் செய்தி குறித்து நாங்கள் சந்தேகத்தில் உள்ளோம்; முற்றி லும் ஐயப்பாடுடையவர்களாக உள்ளோம்."

*நமது பெற்றோர்களைக் கண்மூடிப் பின்பற்றுதல்: ஒரு மாபெரும் மானிட சோகம்*

10. அவர்களுடைய தூதர்கள் கூறினர், "வானங்கள் மற் றும் பூமியைத் துவக்கியவரான **கடவுள்**–ஐப் பற்றியா உங்களுக்குச் சந்தேகங்கள் ? உங்கள் பாவங்களை மன்னிப்பதற்காகவும், மேலும் உங்களையே மீட்டுக் கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிப்பதற் காகவும் மட்டுமே அவர் உங்களை அழைக்கின்றார்." அவர்கள் கூறினர், "எங்கள் பெற்றோர்கள் வழிபட்டு வந்த முறையை விட்டும் எங்களைத் தடுக்க விரும் பும் நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்கள் என்பதை விட அதிகமாக எதுவுமில்லை. ஆழ்ந்த அங்கீகாரம் எதையேனும் எங்களுக்குக் காட்டும்."

11. அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் கூறினர், "நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்கள் என்பதை விட அதிகமாக எதுவுமில்லை, ஆனால் தன் ஊழி யர்களில் தான் தேர்ந்தெடுத்தோரை **கடவுள்** ஆசீர் வதிக்கின்றார். **கடவுள்**–ன் நாட்டத்திற்கு ஒப்பவே அன்றி எந்த விதமான அங்கீகாரத்தையும் உங்களுக் குக் எங்களால் காட்ட இயலாது. நம்பிக்கையாளர் கள் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

12. "எங்களுடைய பாதைகளில் அவர் எங்களை வழி நடத்தியிருக்கையில், **கடவுள்** மீது நாங்கள் ஏன் பொறுப்பேற்படுத்தாமல் இருக்க வேண்டும் ? உங்கள் அடக்குமுறைகளுக்கெதிராக நாங்கள் உறுதியோடு சகித்துக் கொண்டிருப்போம். பொறுப்பேற்படுத்துபவர் கள் அனைவரும் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்."

13. நம்பமறுத்தவர்கள் தங்கள் தூதர்களிடம் கூறினார் கள், "எங்கள் மார்க்கத்திற்கு நீங்கள் திரும்பிவரா விட்டால், எங்கள் நாட்டை விட்டு உங்களை நாங்கள் விரட்டி விடுவோம்." அவர்களுடைய இரட்சகர் அவர் களுக்கு உள்ளுணர்வளித்தார்:" தவிர்த்து விட முடியா தவாறு, நாம் வரம்புமீறுவோரை அழித்து விடுவோம்.

14. "மேலும், அவர்களுக்குப் பின்னர் அவர்களுடைய நாட்டில் உம்மை நாம் வசிக்கச் செய்வோம். எனது மாட்சிமைக்கு மரியாதை செய்வோருக்கும், எனது வாக்குறுதியைப் பெரிதெனக் கருதுவோருக்கும் இதுவே *(வெகுமதி)* ஆகும்."

15. அவர்கள் ஒரு சூளுரை விடுத்தனர், மேலும் அதன் விளைவாக, பிடிவாதமிக்க கொடுங்கோலன் ஒவ் வொருவனும் அழிக்கப்பட்டு முடிந்து போனான்.

16. நரகம் அவனை எதிர்பார்த்துக் கொண்டுள்ளது, அங் கே அவன் கெட்ட நாற்றமடிக்கும் நீரையே குடிப்பான்.

17. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாவிட்டா லும், அவன் அதனை உள்ளே விழுங்குவான், ஒவ் வொரு திசையிலிருந்தும் மரணம் அவனை நோக்கி வந்து கொண்டிருக்கும், ஆனால் அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான். அவனுக்காக் காத்துக் கொண் டிருப்பது கடுமையானதொரு தண்டனையாகும்.*

**14:17* கடவுளுக்கெதிராக நாம் கலகம் செய்து சாத்தானுடன் இசைந்திருந்த மாபெரும் தர்க்கத்தின் போது, *(38:69)* நாம் நரகத்திற்கு வெளியேற்றப்பட வேண்டும் என வானவர்கள் யோசனை கூறினர் (பின்இணைப்பு 7). ஆனால் மிக்க கருணை யாளர் நம்மை மீட்டுக் கொள்வதற்காக நமக்கு மற்றுமொரு வாய்ப்புத் தர முடிவு செய்தார். அவர் வானவர்களிடம் கூறினார், "உங்களுக்குத் தெரியாதது எனக்குத் தெரியும்" (2:30). மனிதர்களில் பலர் நரகம் எவ்வளவு கெட்டதாக உள்ளது என்பதை சற்றும் அறியாதிருந்ததால், அதற்கு ஆட்சேபம் தெரிவிப்பார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருந்தார். 14:17 மற்றும் 22:19–22 ஆகியவற்றில் நரகம் குறித்த அச்சுறுத்தும் வர்ணனைகள் இத்தகையதொரு ஆட்சேபத்தைச் செல்லாததாக ஆக்குகின்றது. இப்போது, நரகம் எவ்வளவு பயங்கரமானது என்பதைப் பற்றி நாம் ஓரளவுக்கு நன்றாக அறிந்திருக்கின்றோம்.*

18. தங்கள் இரட்சகர் மீது நம்பிக்கை கொள்ளமறுப்பவர்களுக்கு உவமானமாவது: அவர்களுடைய செயல்கள் புயலடிக்கும் ஒரு நாளின் உக்கிரமான காற்றில், சாம்பல்களைப் போன்றதாகும். அவர்கள் சம்பாதித்தது எதுவானாலும் அதிலிருந்து அவர்கள் எந்த லாபமும் அடைய மாட்டார்கள்; தூரமான வழிகேடு என்பது இத்தகையதேயாகும்.

*சர்வ சக்தியும் உள்ள ஒருவரை மட்டுமே வழிபடுங்கள்*

19. வானங்கள் மற்றும் பூமியை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத்தான் **கடவுள்** படைத்திருக்கின்றார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ? அவர் நாடினால், உங்களை அகற்றி விட்டு புதியதொரு படைப்பை உங்கள் இடத்தில் மாற்றிவிட அவரால் முடியும்.

20. **கடவுள்**–க்கு, இது மிகவும் கடினமானதல்ல.

*உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று*

21. அவர்கள் அனைவரும் **கடவுள்** முன் நிற்கும் போது,* பின்பற்றியவர்கள் தலைவர்களிடம் கூறுவார்கள், "நாங்கள் உங்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தோம். **கடவுள்**–ன் தண்டனையிலிருந்து எங்களை ஒரு சிறிதேனும் உங்களால் காக்க முடியுமா ?" அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்** எங்களுக்கு வழியைக் காட்டியிருந்தால், நாங்கள் உங்களுக்கு வழி காட்டியிருப்போம். இப்போது மிகவும் தாமதமாகி விட்டது, நாம் கவலைப்பட்டாலும் அல்லது பொறுமையாக இருந்தாலும் சரியே, வெளியேறுவதற்கு நமக்கு வழியெதுவும் இல்லை."

*தன்னைப் பின்பற்றியவர்களைச் சாத்தான் கைவிட்டு விடுகின்றான்*

22. மேலும், தீர்ப்பு வழங்கப்பட்டு விட்ட பின்னர் சாத்தான் கூறுவான், "**கடவுள்** உங்களுக்கு உண்மையான வாக்குறுதியையே வாக்களித்திருந்தார், மேலும் நானும் உங்களுக்கு வாக்களித்திருந்தேன், ஆனால் நான் என் வாக்குறுதியை முறித்து விட்டேன். உங்கள் மீது நான் எந்த அதிகாரமும் கொண்டிருக்கவில்லை; நான் உங்களை அழைத்தேன், அவ்வளவுதான், நீங்கள்தான் எனது அழைப்பை ஏற்றுக் கொண்டீர்கள். எனவே, என்னைப் பழிக்காதீர்கள், உங்களை மட்டுமே பழித்துக் கொள்ளுங்கள். என்னுடைய முறையீடுகள் உங்களுக்கு உதவி செய்ய இயலாது, அன்றியும் உங்களுடைய முறையீடுகள் எனக்கு உதவி செய்ய இயலாது. நீங்கள் என்னை இணைத்து வழிபாடு செய்ததை நான் நிராகரித்து விட்டேன். வரம்புமீறுபவர்கள் வலிமிகுந்த தொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்."

23. நம்பிக்கை கொண்டு மேலும் நேரியதொரு வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்குள் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அவர்களுடைய இரட்சகரின் நாட்டத்திற்கொப்ப அங்கே அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள், அங்கே அவர்களுடைய வாழ்த்துகளாவது: "சாந்தி."

*சத்தியமும் அசத்தியமும்*

24. நல்ல வார்த்தைக்கு உதாரணமாக, உறுதியாகப் பதிந்திருக்கும் வேர்கள் கொண்ட, மேலும் அதன் கிளைகள் வானளாவ உயர்ந்து நிற்கும் நல்லதொரு மரத்தை **கடவுள்** எடுத்துக் கூறியுள்ளார் என்பதை நீங்கள் காணவில்லையா ?

25. அதன் இரட்சகரால் திட்டமிடப்பட்டபடி ஒவ்வொரு பருவத்திலும் அது அதன் விளைச்சலைத் தருகின்றது. **கடவுள்** இவ்விதமாக அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் பொருட்டு, உதாரணங்களை மனிதர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

26. மேலும் கெட்ட வார்த்தைக்கு உதாரணம் பூமி மட்டத்திலேயே துண்டிக்கப்பட்டிருக்கும் கெட்டதொரு மரம் ஆகும்; அதனை நிற்க வைப்பதற்கு வேர்கள் எதுவும் அதற்கு இல்லை.

27. நிரூபிக்கப்பட்ட வார்த்தையைக் கொண்டு நம்பிக்கை கொண்டோரைக் **கடவுள்** இந்த வாழ்விலும், மறுவுலகிலும் பலப்படுத்துகின்றார்; மேலும் வரம்புமீறுவோரைக் **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார். ஒவ்வொரு விஷயமும் **கடவுள்**–ன் நாட்டத்திற்கேற்பவே உள்ளது.

*கடவுளின் பாதுகாப்பிலிருந்து தங்கள் குடும்பத்தினரை அவர்கள் அகற்றி விடுகின்றனர்*

28. **கடவுள்**–ன் ஆசிகளுக்கு, நம்பமறுத்தலைக் கொண்டு மறுமொழி அளித்தவர்களை, மேலும் இவ்விதமாகத் தங்கள் சொந்தக் குடும்பங்கள் மீதே பேரழிவை வரவழைத்துக் கொண்டவர்களை நீர் கவனித்துப் பார்த்தீரா ?

29. நரகம்தான் அவர்களுடைய விதியாகும், அங்கே அவர்கள் எரிவார்கள்; எத்தகையதொரு துக்ககரமான முடிவு !

*போலித்தெய்வ வழிபாடு: எல்லாப் பாவங்களுக்கும் தாய்*

30. **கடவுள்**–ஐப் போல் கருதப்படுவதற்காகவும், மேலும் மற்றவர்களை அவருடைய பாதையை விட்டுத் திருப்புவதற்காகவும் அவர்கள் போட்டியாளர்களை அமைத்துக் கொள்கின்றனர். கூறும், "சிறிது காலம் சுகமனுபவியுங்கள்; உங்கள் இறுதி விதி நரகமேயாகும்."

*முக்கியக் கட்டளைகள்*

31. வர்த்தகமோ, உறவுமுறைச் சலுகைகளோ, இல்லாத ஒரு நாள் வருவதற்கு முன்னர், இரகசியமாகவும் பகிரங்கமாகவும் அவர்களுக்குரிய நம் வாழ்வாதாரங்களில் இருந்து *(தர்மம்)* கொடுத்து வருமாறும், தொடர்புத் தொழுகைகளை *(ஸலாத்)* கடைப் பிடித்து வருமாறும் நம்பிக்கை கொண்ட என் ஊழியர்களைத் தூண்டுவீராக.

**14:21 மறுவுலகைப் பற்றிக் குர்ஆன் பல இடங்களில் கடந்த காலச் சொற்கள் கொண்டு பேசுகின்றது. இது ஏனெனில் அவை கடவுளால் முன்னரே காணப்பட்டு விட்ட எதிர்கால நிகழ்வுகள் ஆகும், மேலும் அவை நிச்சயமாக நிகழ்ந்தே தீரும்.*

32. வானங்களையும் பூமியையும் படைத்தவர் **கடவுள்** ஒருவர்தான், மேலும் உங்களுடைய ஊட்டத்திற்காக அனைத்து கனிவர்க்கங்களையும் விளைவிப்பதற்காக விண்ணிலிருந்து அவர் தண்ணீரை இறக்கி அனுப்புகின்றார். தன் கட்டளைக்கேற்பக் கடல் மீது, உங்களுடைய ஊழியத்திற்காக கப்பல்களை அவர் ஆக்கினார். ஆறுகளையும் உங்களுடைய ஊழியத்திற்காக அவர் ஆக்கினார்.

33. சூரியனையும் சந்திரனையும், தொடர்ந்து உங்களுக்குப் பணிசெய்யும்படி அவர் ஆக்கினார். இரவையும் பகலையும் உங்களுக்கு பணி செய்வதற்காக அவர் ஆக்கினார்.

34. இன்னும் நீங்கள் அவரிடம் இறைஞ்சுகின்ற எல்லா வகையான விஷயங்களையும் அவர் உங்களுக்குத் தருகின்றார். **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களை நீங்கள் எண்ணினால், உங்களால் ஒரு போதும் அவற்றை முழுமையாக உள்ளடக்கிவிட முடியாது. நிச்சயமாக, மனிதன் வரம்புமீறுபவனாகவும், நன்றி கெட்டவனாகவும் இருக்கின்றான்.

*ஆப்ரஹாம்*

35. ஆப்ரஹாம் கூறியதை நினைவு கூர்ந்திடுவீராக, "என் இரட்சகரே, இதனை அமைதியானதொரு நிலப்பரப்பாக ஆக்குவீராக, மேலும் என்னையும் என் பிள்ளைகளையும் சிலைகளை வழிபடுவதிலிருந்தும் காப்பீராக.

36. "என் இரட்சகரே, அவை ஏராளமான மனிதர்களை வழிதவறச் செய்து விட்டன. என்னைப் பின்பற்றுவோரைப் பொறுத்தவரை, அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள். எனக்குக் கீழ்ப்படியமறுப்பவர்களைப் பொறுத்தவரை, நீர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

37. "எங்கள் இரட்சகரே, எனது குடும்பத்தின் ஒரு பகுதியை உம்முடைய புனித வீட்டின் அருகில், தாவரங்களற்ற இப்பள்ளத்தாக்கில் நான் குடியேற்றியிருக்கின்றேன். எங்கள் இரட்சகரே, அவர்கள் தொடர்புத் தொழுகைகளை *(ஸலாத்)* நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர், எனவே மனிதர்களைக் கூட்டமாக அவர்களோடு குழுமச் செய்வீராக, மேலும் அவர்கள் நன்றி செலுத்துபவர்களாக இருக்கும் பொருட்டு, அனைத்துக் கனிவர்க்கங்களையும் அவர்களுக்கு வழங்குவீராக.

38. "எங்கள் இரட்சகரே, நாங்கள் மறைத்து வைப்பவற்றையும் நாங்கள் அறிவிப்பவற்றையும் நீர் அறிவீர்– பூமியின் மீதோ, அன்றி வானங்களில் உள்ளவையோ, எந்த ஒன்றும் **கடவுள்**–க்கு மறைவானதல்ல.

39. "என்னுடைய முதிர்ந்த வயதிலும், எனக்கு இஸ்மாயீலையும், ஐசக்கையும் வழங்கியதற்கான புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது. என் இரட்சகர் பிரார்த்தனைகளுக்குப் பதிலளிக்கின்றார்.

*தொடர்புத் தொழுகைகள்: கடவுளிடமிருந்து வரம்*

40. "என் இரட்சகரே, தொடர்புத் தொழுகைகளை *(ஸலாத்)* தொடர்ந்து கடைபிடிக்கும் ஒருவனாக என்னையும் அத்துடன் என் பிள்ளைகளையும் ஆக்குவீராக, எங்கள் இரட்சகரே, தயவு கூர்ந்து என் பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பீராக.

41. "என் இரட்சகரே, கேள்விக் கணக்கு நடைபெறும் நாளின்போது, என்னையும் என் பெற்றோரையும், மேலும் நம்பிக்கையாளர்களையும் மன்னிப்பீராக."

42. வரம்புமீறுபவர்கள் செய்பவற்றைக் **கடவுள்** அறியாமல் இருக்கின்றார் என்று ஒருபொழுதும் எண்ணிவிடக் கூடாது. கண்கள் திகிலில் நிலை குத்தி நின்று விடும் அந்நாள் வரை அவர்களுக்கு அவகாசம் மட்டுமே அவர் அளிக்கின்றார்.

43. *(சமாதிகளில் இருந்து வெளியே)* அவர்கள் விரைந்து வரும்போது, அவர்களுடைய முகங்கள் மேல் நோக்கியவாறு இருக்கும், அவர்களுடைய விழிகள் இமைக்கவும் செய்யாது, மேலும் அவர்களுடைய மனங்கள் திடுக்குற்றுவிடும்.

*கடவுள் தன் கட்டளைகளைத்*
*தன் தூதர்கள் மூலம் அனுப்புகின்றார்*

44. அவர்களுக்கு தண்டனை வரும் அந்நாளைக் குறித்து மனிதர்களை நீர் எச்சரிக்க வேண்டும். வரம்புமீறியவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, மற்றுமொரு அவகாசத்தை எங்களுக்குத் தருவீராக, அப்போது நாங்கள் உம்முடைய அழைப்புக்கு பதில் தருவோம், மேலும் தூதர்களைப் பின்பற்று வோம்." என்றென்றும் நிலைத்திருப்போம் என்று கடந்த காலத்தில் நீங்கள் சத்தியமிடவில்லையா ?

45. உங்களுக்கு முன்னிருந்த, தங்களுடைய ஆத்மாக்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டவர்களுடைய வீடுகளில் நீங்கள் வசித்தீர்கள், மேலும் அவர்களை நாம் என்ன செய்தோம் என்பதை நீங்கள் தெளிவாகப் பார்த்துவிட்டீர்கள். ஏராளமான முன்னுதாரணங்களை உங்களுக்காக நாம் அமைத்துள்ளோம்.

46. அவர்கள் தங்களுடைய சூழ்ச்சிகளை திட்டமிட்டனர், மேலும் **கடவுள்** அவர்களுடைய சூழ்ச்சிகளை முற்றிலும் அறிந்திருக்கின்றார். நிச்சயமாக அவர்களுடைய சூழ்ச்சிகள் மலைகளைத் துடைத்து எடுத்து விடும் அளவுக்கு இருந்தன.

*கடவுளின் தூதர்களுக்கு உத்தரவாதமான வெற்றி*

47. **கடவுள்** தன் தூதர்களுக்குத் தந்த தனது வாக்குறுதியை எப்பொழுதேனும் முறித்து விடுவார் என்று நீர் எண்ணாதீர். **கடவுள்** எல்லாம் வல்லவர், பழி தீர்ப்பவர்.

*புதிய வானங்களும் புதிய பூமியும்**

48. புதியதொரு பூமியால் இந்தப் பூமியும், அத்துடன் வானங்களும் மாற்றியமைக்கப்படும் அந்நாள் வரும், மேலும் ஒருவரும், மேலதிகாரம் கொண்டவருமான **கடவுள்** முன்னர் ஒவ்வொருவரும் கொண்டு வரப்படுவார்கள்.

49. மேலும் அந்நாளில் குற்றவாளிகளை தளைகளால் பிணைக்கப்பட்டவர்களாக நீர் காண்பீர்.

50. அவர்களுடைய ஆடைகள் தார் கொண்டு செய்யப்பட்டிருக்கும், மேலும் நெருப்பு அவர்களுடைய முகங்களை அழுத்திக் கொண்டிருக்கும்.

51. ஏனெனில் **கடவுள்** ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அது சம்பாதித்ததற்கான கூலியைக் கொடுப்பார்; கணக்கெடுப்பதில் **கடவுள்** மிகத்திறன் வாய்ந்தவராக இருக்கின்றார்.

52. இதனைக் கொண்டு எச்சரிக்கப்படுவதற்காகவும், மேலும் அவர் ஒரே ஒரு இறைவன்தான் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும், மேலும் அறிவுடையவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதற்காகவும், இது மனிதர்களுக்கு ஒரு பிரகடனமாகும்.

****

# சூரா 15: அல்–ஹிஜ்ர் பள்ளத்தாக்கு (அல்–ஹிஜ்ர்)

கடவுளின் பெயரால்
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ.ல.ர.* *(எழுத்துகளான)* இவை இந்த வேதத்தின் சான்றுகளாகும்; ஆழ்ந்ததொரு குர்ஆன்.

2. மிக நிச்சயமாக, நம்பமறுத்தவர்கள், தாங்கள் சரணடைந்தோராக இருந்திருக்க வேண்டுமே என்று ஆசைப்படுவார்கள்.

3. அவர்கள் உண்ணட்டும், சுகமனுபவிக்கட்டும், மேலும் ஆசைமிகு எண்ணங்களால் குருட்டுத்தனமாக இருக்கட்டும்; அவர்கள் கண்டு கொள்வார்கள்.

4. ஒரு குறிப்பிட்ட, முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு ஏற்ப அன்றி, நாம் எந்தச் சமூகத்தையும் ஒரு போதும் அழித்ததில்லை.

5. எந்தச் சமூகத்தின் முடிவும், ஒருபோதும் முற்படுத்தப்படவோ, அல்லது தாமதப்படுத்தப்படவோ இயலாது.

6. அவர்கள் கூறினர், "இந்த நினைவூட்டலைப் பெற்றவரே உம்மைத்தான், நீர் பித்துப்பிடித்தவர்.

7. "நீர் உண்மையாளராக இருந்தால், நீர் ஏன் வானவர்களைக் கீழே கொண்டு வரவில்லை ?"

8. குறிப்பிட்ட காரியங்களுக்காகவே அன்றி வானவர்களை நாம் கீழே அனுப்புவதில்லை. அவ்வாறெனில், ஒருவரும் அவகாசம் அளிக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

9. நிச்சயமாக, நாம் இந்நினைவூட்டலை வெளிப்படுத்தினோம், மேலும் நிச்சயமாக, நாம் இதனைப் பாதுகாப்போம்.*

10. கடந்துபோன சமூகங்களுக்கு உமக்கு முன்னர் நாம் *(தூதர்களை)* அனுப்பியிருக்கின்றோம்.

11. ஒவ்வொரு முறை ஒரு தூதர் அவர்களிடம் சென்ற போதும், அவர்கள் அவரை ஏளனம் செய்தனர்.

12. இவ்விதமாக நாம் குற்றவாளிகளின் மனங்களைக் கட்டுப்படுத்துகின்றோம்.

13. அதன் விளைவாக, அவர் மீது அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது. கடந்து போன தலைமுறையினரிலிருந்தே இதுதான் வழிமுறையாக இருந்து வந்துள்ளது.

---

**14:48 இந்த முன்னறிவிப்பு பழைய ஏற்பாடு (ஏசையா 65:17 & 66:22) மற்றும் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றது: "அவருடைய வாக்குதத்தத்தின்படியே நீதிவாசமாயிருக்கும் புதிய வானங்களுக்கும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கின்றோம்" (2 பீட்டர் 3:13).*

**15:1 & *15:9 குர்ஆனுடைய தெய்வீக மூலமும் அதன் பரிபூரணமான பாதுகாப்பும் குர்ஆனின் கணிதக் குறியீட்டின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. (பின் இணைப்பு 1). இந்த மாபெரும் அற்புதத்தின் திரையை விலக்குவதற்கெனக் கடவுளின் உடன் படிக்கைத் தூதர் விதிக்கப்பட்டிருந்தார். "திக்ர்" என்ற வார்த்தை பல வசனங்களில் குர்ஆனின் குறியீட்டைக் குறிக்கின்றது (15:6, 21:2, 26:5, 38:1, 38:8, 74:31). "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண்மதிப்பு (1230)+15+9=1254, 19x66.*

14. அவர்கள் ஏறுவதற்காக, விண்ணிற்குள் ஒரு வாயிலை அவர்களுக்காக நாம் திறந்தாலும்;

15. அவர்கள் கூறுவர், "எங்களுடைய கண்கள் ஏமாற்றப் பட்டு விட்டன. நாங்கள் சூனியம் செய்யபட்டவர் களாகி விட்டோம்."

16. விண்ணில் நட்சத்திர மண்டலங்களை நாம் அமைத் தோம், மேலும் காண்பவர்களுக்கு அழகாக அதனை ஆக்கினோம்.

17. மேலும் விரட்டப்பட்ட ஒவ்வொரு சாத்தானுக்கெதிரா கவும் அதனை நாம் பாதுகாத்தோம்.

18. அவர்களில் எவரேனும் கவனித்துக் கேட்பதற்காக அதனருகில் இரகசியமாக நெருங்கினால், சக்தி மிக்கதொரு ஏவுகணை அவனைப் பின்னால் துரத் தும்.

19. பூமியைப் பொறுத்தவரை, நாம் அதனை நிர்மாணித் தோம், மேலும் நிலைப்படுத்திகளை *(மலைகளை)* அதன்மீது அமைத்தோம், மேலும் அதன் மீது முற்றி லும் சமச்சீராக ஒவ்வொன்றையும் நாம் வளர்த்தோம்.

20. உங்களுக்கும், நீங்கள் வாழ்வாதாரம் அளித்திடாத படைப்புகளுக்கும், வசிக்கத்தக்கதாக* நாம் அதனை ஆக்கினோம்.

21. அதில் உள்ள எந்த ஒன்றும், எல்லையற்ற அளவில், நமக்குச் சொந்தமாக இல்லாமல் இல்லை. ஆனால் நாம் அவற்றை மிகச் சரியான அளவில் கீழே இறக்கு கின்றோம்.

22. மேலும் கருக்கொள்ளச் செய்பவையாகக் காற்று களை நாம் அனுப்புகின்றோம், மேலும் நீங்கள் அருந்துவதற்காக விண்ணிலிருந்து தண்ணீரைக் கீழிறங்கி வரச் செய்கின்றோம். இல்லையெனில், சுவைக்கத் தக்கதாக அதனை வைத்திருக்க உங் களால் இயலாது.

23. நாம் தாம் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப் படுத்துகின்றோம், மேலும் நாமே இறுதியான வாரிசு களாவோம்.

24. மேலும், உங்களில் முன்னேறிச் செல்பவர்களை முற்றிலும் நாம் அறிவோம், பின்வாங்கிச் செல்பவர் களையும் முற்றிலும் நாம் அறிவோம்.

25. நிச்சயமாக உம்முடைய இரட்சகர் அவர்களை ஒன்று திரட்டுவார். அவர் ஞானம் மிகுந்தவர், எல்லாம் அறிந்தவர்.

*மனித இனம்*

26. குயவனின் களிமண்ணைப் போன்ற, பழமையான சேற்றில் இருந்து, மனிதனை நாம் படைத்தோம்.

27. ஜின்களை பொறுத்தவரை, அதற்கு முன்னர், கொழுந்து விட்டெரியும் நெருப்பிலிருந்து, அவர்களை நாம் படைத்தோம்.

28. உம்முடைய இரட்சகர் வானவர்களிடம் கூறினார், "குயவனின் களிமண்ணைப் போன்ற பழமையான சேற்றில் இருந்து ஒரு மனிதனை நான் படைக் கின்றேன்.

29. "அவரை நான் பூரணப்படுத்தி, மேலும் என் ஆவியில் இருந்து அவருள் நான் ஊதியவுடன், அவர் முன்னர் நீங்கள் சிரம்பணிந்து விழுந்திட வேண்டும்."

30. வானவர்கள் சிரம்பணிந்து விழுந்தனர்; அவர்கள் அனைவரும்,

31. *(சாத்தான்)* இப்லீஸைத் தவிர. சிரம் பணிந்தவர்களு டன் இருந்திட அவன் மறுத்து விட்டான்.

32. அவர் கூறினார், *"(சாத்தான்)* இப்லீஸே, சிரம் பணிந்த வர்களுடன் நீ ஏன் இருக்கவில்லை ?"

33. அவன் கூறினான், "குயவனின் களிமண்ணைப் போன்ற, பழமையான சேற்றில் இருந்து நீர் படைத்த ஒரு மனிதர் முன், நான் சிரம் பணிவதற்கில்லை."

34. அவர் கூறினார், "அப்படியானால், கண்டிப்பாக நீ வெளியேறி விடத்தான் வேண்டும்; நீ விரட்டப்பட்ட வனாகி விட்டாய்.

35. "தீர்ப்பளிக்கப்படும் நாள் வரை எனது கண்டனத் திற்கு நீ உள்ளாகி விட்டாய்."

36. அவன் கூறினான், "என் இரட்சகரே, அவர்கள் உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை எனக்கு அவகாசம் அளிப்பீராக."

37. அவர் கூறினார், "உனக்கு அவகாசம் அளிக்கப் பட்டுள்ளது.

38. "குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரம் வரை."

39. அவன் கூறினான், "என் இரட்சகரே, நான் வழி தவறிச் செல்வதை நீர் நாடிவிட்டதால், பூமியின் மீது நிச்சய மாக நான் அவர்களை வசீகரிப்பேன்; அவர்கள் அனை வரையும் நான் வழிகேட்டில் செலுத்தி விடுவேன்.

**15:20 விண்வெளி வீரர்களை நாம் அண்டவெளிக்குள் அனுப்பும் போது, உணவு, நீர் மற்றும் பிராணவாயு ஆகியவற்றை மிகச் சரியாக அளவிட்டு நாம் அவர்களுக்கு வழங்குகின்றோம். பணிபுரிந்து இனப்பெருக்கம் செய்யும் கோடிக்கணக்கான விண் வெளி வீரர்களுடன் இந்தப் பூமி எனும் விண்கலத்தைக் கடவுள் படைத்தார். பிராணவாயு, புத்தம் புதிய நீர், மேலும் ஏராளமான வகைகளில் சுவையான உணவு மற்றும் பானங்களைத் தானாகவே உற்பத்தி செய்து கொள்ளும் திறன் கொண்ட சுயசார்பு கொண்ட ஓர் ஒழுங்கமைப்பை அவர்களுக்கு அவர் வழங்கினார்.*

40. "உம்மை வழிபடுபவர்களில் உமக்கு மட்டுமே முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டவர்களைத் தவிர."

41. அவர் கூறினார், "இது மீற முடியாததொரு சட்டம் ஆகும்.

42. "என்னுடைய ஊழியர்கள் மீது உனக்கு எந்த ஆதிக்கமுமில்லை. உன்னைப் பின்பற்றும் வழி தவறியவர்கள் மீது மட்டுமே உனக்கு ஆதிக்கம் உள்ளது.

43. "மேலும் அவர்கள் அனைவரையும் நரகம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

44. "அதற்கு ஏழு வாயில்கள் உள்ளன. ஒவ்வொரு வாயிலும் அவர்களில் ஒரு குறிப்பிட்ட பங்கைப் பெற்றுக் கொள்ளும்."

45. நல்லோர்களைப் பொறுத்தவரை, தோட்டங்களையும், நீரூற்றுகளையும் அவர்கள் அனுபவிப்பார்கள்.

46. சாந்தி நிறைந்தவர்களாகவும், பாதுகாப்புப் பெற்றவர்களாகவும் அதில் நுழையுங்கள்.

47. அவர்களுடைய இதயங்களிலிருந்து பொறாமை அனைத்தையும் நாம் அகற்றி விடுகின்றோம். ஒரு குடும்பத்தினரைப் போல், அவர்கள் அருகருகில் உள்ள ஆசனங்கள் மீது இருப்பார்கள்.

48. அங்கே அவர்கள் ஒருபோதும் எந்தக் களைப்பிற்கும் உள்ளாக மாட்டார்கள்; அங்கிருந்து அவர்கள் ஒரு போதும் வெளியேற்றப்படவும் மாட்டார்கள்.

49. நானே மன்னிப்பவன், மிக்க கருணையாளன் என்பதை என் ஊழியர்களுக்குத் தெரியப்படுத்துவீராக.

50. மேலும் எனது தண்டனையோ மிகவும் வலி நிறைந்த தண்டனை ஆகும்.

*வானவர்கள் ஆப்ரஹாமைப் பார்க்கச் செல்கின்றனர்*

51. ஆப்ரஹாமின் விருந்தினர்களைப் பற்றி அவர்களுக்கு அறிவிப்பீராக.

52. அவருடைய குடியிருப்பிற்குள் அவர்கள் நுழைந்த போது, அவர்கள் கூறினர், "சாந்தி." அவர் கூறினார், "நாங்கள் உங்களைப் பற்றி மிகவும் அஞ்சியவர்களாக இருக்கின்றோம்."

53. அவர்கள் கூறினர், "அஞ்சாதீர். நாங்கள் உமக்கு ஒரு நற்செய்தியை வைத்திருக்கின்றோம்: அறிவூட்டப் பெற்ற ஒரு மகன்."

54. அவர் கூறினார், "நான் இத்தனை வயதானவனாக இருக்கும்போது, இத்தகைய நற்செய்தியை எப்படி நீங்கள் எனக்குத் தர முடியும்? இப்பொழுதுமா இந்த நற்செய்தியை நீங்கள் எனக்குத் தருகின்றீர்கள்?"

55. அவர்கள் கூறினர், "நாங்கள் உமக்குத் தரும் நற்செய்தி உண்மையானதே; விரக்தியடைந்து விடாதீர்."

56. அவர் கூறினார், "வழிதவறியவர்களைத் தவிர, எவரும் தன் இரட்சகரின் கருணையில் விரக்தியடைய மாட்டார்கள்."

57. அவர் கூறினார், "தூதர்களே, உங்களுடைய பணி என்ன?"

58. அவர்கள் கூறினர், "குற்றம் புரிந்த மக்களிடம் நாங்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றோம்.

59. "லோத்தின் குடும்பத்தாரைப் பொறுத்தவரை, அவர்கள் அனைவரையும் நாங்கள் காப்பாற்றி விடுவோம்.

60. "ஆனால் அவருடைய மனைவியை அல்ல; அழிந்தவர்களுடன் இருந்திட அவள் விதிக்கப்பட்டுள்ளாள்."

*லோத்*

61. அத்தூதர்கள் லோத்தின் நகரத்திற்குச் சென்றனர்.

62. அவர் கூறினார், "நீங்கள் அறிமுகமில்லாத மக்களாக இருக்கின்றீர்கள்."

63. அவர்கள் கூறினர், "அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்ததை நாங்கள் உம்மிடம் கொண்டு வந்துள்ளோம்.

64. "நாங்கள் சத்தியத்தையே உம்மிடம் கொண்டு வந்துள்ளோம்; நாங்கள் உண்மையாளர்களாக இருக்கின்றோம்.

65. "இரவுப் பொழுதில் உம்முடைய குடும்பத்தினரை அழைத்துச் சென்று விடும். அவர்களுக்குப் பின்னால் இருந்து கொள்ளும், மேலும் உங்களில் எவரும் திரும்பிப் பார்க்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளும். கட்டளையிடப்பட்டபடி நேராகச் சென்று விடும்."

66. இக்கட்டளையை நாம் அவரிடம் சேர்ப்பித்தோம்: காலையில் அம்மக்கள் அழிக்கப்பட இருக்கின்றனர்.

67. அந்த நகரத்து மக்கள் மகிழ்ச்சியுடன் வந்தார்கள்.

68. அவர் கூறினார், "இவர்கள் என்னுடைய விருந்தாளிகள்; என்னைச் சங்கடத்துக்கு உள்ளாக்காதீர்கள்.

69. "**கடவுள்**–ஐ அஞ்சுங்கள் மேலும், என்னைச் சங்கடப் படுத்தாதீர்கள்."

70. அவர்கள் கூறினர், "எவருடனும் தொடர்பு கொள்ளக் கூடாது என நாங்கள் உம்மைத் தடுத்திருந்தோம் அல்லவா?"

71. அவர் கூறினார், "உங்களுக்கு வேண்டுமென்றால், இதோ என் மகள்கள் இருக்கின்றனர்."

72. ஆனால், அந்தோ, அவர்களுடைய காமத்தால் அவர்கள் முற்றிலும் குருடர்களாக இருந்தனர்.

73. அதன் விளைவாக, காலையில் அவர்களைப் பேரழிவு தாக்கியது.

74. நாம் அதனைத் தலைகீழாகப் புரட்டினோம், மேலும் நாசம் விளைவிக்கும் பாறைகளை அவர்கள் மீது பொழிந்தோம்.

75. அறிவுத்திறன் கொண்டோருக்கு இது ஒரு படிப்பினை யாகும்.

76. இதுவே எப்பொழுதும் வழிமுறையாக இருக்கும்.

77. நம்பிக்கையாளர்களுக்கு இது ஓர் அத்தாட்சியாகும்.

78. வனங்களில் வசித்த மக்களும் வரம்புமீறியவர்களாக இருந்தனர்.

79. அதன் விளைவாக, அவர்களை நாம் பழிவாங்கி னோம், மேலும் இவ்விரு சமூகங்களும் முற்றிலும் பதியப்பட்டவையாக உள்ளன.

80. அல்–ஹிஜ்ர் சமூகத்தவரும் தூதர்களை நம்பமறுத்த னர்.

81. நம்முடைய வெளிப்பாடுகளை நாம் அவர்களுக்கு கொடுத்தோம், ஆனால் அவர்கள் அவற்றை அலட்சி யம் செய்தனர்.

82. மலைகளைக் குடைந்து அதிலிருந்து பாதுகாப்பான இல்லங்களை அவர்கள் அமைத்துக் கொண்டனர்.

83. காலையில் அவர்களைப் பேரழிவு தாக்கியது.

84. அவர்கள் சேர்த்து வைத்தவை அவர்களுக்கு உதவி செய்யவில்லை.

*உலகமுடிவு திரை விலக்கப்படுகின்றது**

85. வானங்களையும் பூமியையும், அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும், ஒரு குறிப்பிட்ட காரணத் துக்காகவே அன்றி நாம் படைக்கவில்லை. உலக முடிவு வந்தே தீரும், எனவே கனிவுடன் அவர்களை அலட்சியம் செய்வீராக.

86. உம்முடைய இரட்சகர்தான் படைத்தவர், எல்லாம் அறிந்தவர்.

87. நாம் உமக்கு ஏழு ஜோடிகளையும், மகத்தான குர் ஆனையும் தந்துள்ளோம்.

88. மற்ற *(தூதர்களுக்கு)* நாம் வழங்கியவற்றின் மீது பொறாமை கொள்ளாதீர், மேலும் *(நம்பமறுப்பவர் களால்)* துக்கமடையாதீர், மேலும் நம்பிக்கையாளர் களிடத்தில் உமது இறக்கையைத் தாழ்த்திக் கொள் வீராக.

89. மேலும் பிரகடனம் செய்வீராக: "நான் தெளிவான எச்சரிப்பவனே ஆவேன்."

90. பிரிவினையாளர்கள் மீது நாம் நடவடிக்கை எடுப் போம்.

91. அவர்கள் குர்ஆனை பகுதி மட்டுமே ஏற்றுக்கொள் கின்றனர்.

92. உம் இரட்சகர் மீது ஆணையாக, அவர்கள் அனை வரையும் நாம் விசாரிப்போம்,

93. அவர்கள் செய்த ஒவ்வொன்றைக் குறித்தும்.

94. ஆகவே, உமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளைச் செயல்படுத்துவீராக, மேலும் போலித் தெய்வ வழி பாடு செய்பவர்களைப் பொருட்படுத்தாது இருப்பீராக.

95. கேலி செய்பவர்களிடமிருந்து உம்மை நாம் காப்பாற்றி விடுவோம்,

96. அவர்கள் **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வத்தை அமைத்துக் கொள்கின்றனர். அவர்கள் நிச்சயமாகக் கண்டு கொள்வார்கள்.

97. அவர்களுடைய கூற்றுகளால் நீர் தொல்லைப்படக் கூடும் என்பதை நாம் முற்றிலும் நன்கறிவோம்.

98. நீர் உம்முடைய இரட்சகரின் புகழ் பாடவேண்டும், மேலும் சிரம் பணிந்தோருடன் இருந்திட வேண்டும்.

99. மேலும், உறுதிப்பாட்டினை* அடைந்திடும் பொருட்டு, உம்முடைய இரட்சகரை வழிபட வேண்டும்.

****

## சூரா 16: தேனி (அல்–நஹ்ல்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. **கடவுள்**–ன் கட்டளை முன்னரே வெளியிடப்பட்டு விட்டது *(மேலும் ஒவ்வொன்றும் முன்னரே எழுதப் பட்டு விட்டது)*, எனவே அதனை விரைவுபடுத்தாதீர் கள்.* அவர் துதிப்பிற்குரியவர்; மிகவும் உயர்வானவர், அவர்கள் அமைத்துக் கொள்கின்ற போலித் தெய்வங் களை விட மிகவும் மேலானவர்.

**15:85–88 கடவுளின் உடன்படிக்கைத் தூதரின் பணிகளில் ஒன்று, கிபி 2280ல் இந்த உலகம் முடிந்து போகும் என்ற குர்ஆனின் உறுதியான அறிவிப்பைச் சேர்ப்பிப்பதாகும். (20:15, 72:27 மற்றும் பின் இணைப்பு 25).*

**15:99 உறுதிப்பாட்டினை அடைவதற்கு வழிபாட்டு அனுஷ்டானங்களே நம்முடைய உபாயங்கள் ஆகும் (பின் இணைப்பு 15).*

**16:1 ஒவ்வொன்றும் ஏற்கெனவே பதியப்பட்டதாக உள்ளது (57:22). பின் இணைப்பு 14 ஐயும் பார்க்கவும்.*

2. அவர் தன் ஊழியர்களில் தான் தேர்ந்தெடுத்தோரிடம், தனது கட்டளைகளைச் கொண்ட வெளிப்பாடுகளுடன் வானவர்களைக் கீழே அனுப்புகின்றார்: "என்னுடன் வேறு தெய்வம் எதுவுமில்லை என நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும், நீங்கள் என்னிடம் பக்தியோடிருக்க வேண்டும்."

3. வானங்களையும் பூமியையும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக அவர் படைத்தார். அவர்கள் அமைத்துக் கொள்கின்ற எந்த போலித் தெய்வங்களையும் விட மிகவும் மேலாக, அவர் மிகவும் உயர் வானவர்.

4. அவர் மனிதனை மிகச்சிறிய ஒரு துளியிலிருந்து படைத்தார், எனினும் அவன் தீவிரமான ஒரு எதிரியாக மாறிவிடுகின்றான்.

5. மேலும் உங்களுக்குக் கதகதப்பை வழங்குவதற்காகவும், மற்ற பல பயன்களுக்காகவும், அவ்வாறே உணவுக்காகவும், கால்நடைகளை உங்களுக்காக அவர் படைத்தார்.

6. உங்கள் ஓய்வின்போதும், மேலும் நீங்கள் பயணிக்கும் போதும், அவை உங்களுக்கு சொகுசையும் வழங்குகின்றன.

*கடவுளின் ஆசீர்வாதங்கள்*

7. மிகுந்ததொரு சிரமத்துடனன்றி உங்களால் சென்று சேரமுடியாத இடங்களுக்கும் அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உம்முடைய இரட்சகர் இரக்கம் மிக்கவர், மிக்க கருணையாளர்.

8. மேலும் குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும், கழுதைகளையும் சவாரிக்காகவும் சொகுசுக்காகவும் உங்களுக்காக *(அவர் படைத்தார்).* கூடுதலாக, நீங்கள் அறியாதவற்றையும் அவர் படைக்கின்றார்.

9. **கடவுள்** வழிகளைச் சுட்டிக் காட்டுகின்றார், தவறானவை உட்பட. அவர் நாடியிருந்தால், உங்கள் அனைவரையும் அவர் வழி நடத்தியிருக்க முடியும்.

10. உங்கள் பானத்திற்காகவும், உங்களுடைய பயன்பாட்டிற்கென மரங்களை வளர்ப்பதற்காகவும் அவர் விண்ணிலிருந்து தண்ணீரைக் கீழே இறக்கி அனுப்புகின்றார்.

11. அதனைக் கொண்டு, அவர் உங்களுக்காகப் பயிர்கள், ஒலிவம், பேரீச்சை, திராட்சை மற்றும் அனைத்துக் கனிவர்க்கங்களையும் விளைவிக்கின்றார். சிந்திக்கும் மக்களுக்கு இது *(போதிய)* சான்றாகும்.

12. அத்துடன் இரவையும் பகலையும், அவ்வாறே சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பணி செய்வதற்காக அவர் ஆக்கினார். மேலும், நட்சத்திரங்களும் அவருடைய கட்டளையால் பணிக்கப்பட்டுள்ளன. புரிந்து கொள்ளும் மக்களுக்கு இவை *(போதிய)* சான்றுகளாகும்.

13. மேலும் உங்களுக்காகப் பூமியின் மீது பல்வேறு நிறங்கள் கொண்ட பொருள்களையும் *(அவர் படைத்தார்).* கவனத்தில் கொள்ளும் மக்களுக்கு இது ஒரு *(போதிய)* சான்றாகும்.

14. மேலும் சமுத்திரத்தை உங்களுக்குப் பணி செய்வதற்காக அவர் ஆக்கினார்; அதிலிருந்து மிருதுவான இறைச்சியை நீங்கள் உண்ணுகின்றீர்கள், மேலும் நீங்கள் அணிந்து கொள்ளும் ஆபரணங்களை அதிலிருந்து எடுத்துக் கொள்கின்றீர்கள். மேலும் அவருடைய அருட்கொடைகளை நீங்கள் தேடுவதால், உங்களுடைய வணிகப் பலன்களுக்காகக் கப்பல்கள் அதனைச் சுற்றி வருவதை நீங்கள் காண்கின்றீர்கள், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

15. மேலும் உங்களுடன் சேர்ந்து அது தவறி விழுந்து விடாதிருக்கும் பொருட்டு, நிலைப்படுத்திகளை *(மலைகளை)* யும் அவ்வாறே நீங்கள் வழிகாட்டப்படும் பொருட்டு, ஆறுகளையும் பெருஞ்சாலைகளையும் அவர் பூமியின் மீது அமைத்தார்.

16. மேலும் அடையாளங்களையும், அவ்வாறே நட்சத்திரங்களையும்; போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்காக.

17. படைக்கின்ற ஒருவர் படைக்காத ஒருவனைப் போலாவாரா ? இப்போதாவது நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வீர்களா ?

18. **கடவுள்**–ன் ஆசிகளை நீங்கள் எண்ணினால், அவற்றை நீங்கள் முழுமையாக உள்ளடக்கி விடும் சாத்தியம் கிடையாது. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

19. மேலும் நீங்கள் மறைத்து வைப்பவற்றையும், நீங்கள் அறிவிப்பவற்றையும் **கடவுள்** அறிகின்றார்.

*மரணித்துவிட்ட*
*நபிமார்களும் மகான்களும்*

20. **கடவுள்**–வுடன் அவர்கள் அமைத்துக் கொள்ளும் போலித் தெய்வங்களைப் பொறுத்தவரை, அவர்கள் எந்த ஒன்றையும் படைப்பதில்லை; அவர்களே படைக்கப்பட்டவர்கள்தான்.

21. அவர்கள் மரணித்து விட்டவர்கள், உயிருடன் இல்லை, மேலும் அவர்கள் எப்படி அல்லது எப்பொழுது உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்பதைப்பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது.

22. உங்கள் இறைவன் ஒரே இறைவன். மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய இதயங்கள் மறுத்துக் கொண்டிருக்கின்றன, மேலும் அவர்கள் ஆணவம் கொண்டிருக்கின்றனர்.

23. மிக நிச்சயமாக, அவர்கள் மறைக்கும் ஒவ்வொன்றை யும் அவர்கள் வெளிப்படுத்தும் ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிகின்றார். ஆணவம் கொண்டவர்களை அவர் நேசிப்பதில்லை.

24. "உங்கள் இரட்சகரிடமிருந்து வந்துள்ள இந்த வெளிப்பாடுகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கின்றீர்கள்," என்று அவர்களிடம் கேட்கப்படும் பொழுது, "கடந்த காலத்தின் கட்டுக்கதைகள்" என்று அவர்கள் கூறுகின்றனர்.

25. உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர்களு டைய பாவங்களுக்கும், அத்துடன் கூடுதலாக, அவர்களு டைய அறியாமையினால் அவர்கள் வழி தவறச் செய்த அனைவரின் பாவங்களுக்கும் சேர்த்து, அவர்கள் அனைவரும், பொறுப்பாக்கப் படுவார்கள். எத்தகையதொரு துக்ககரமான சுமை!

26. அவர்களைப் போன்ற மற்றவர்களும், கடந்த காலத்தில் சூழ்ச்சிகள் செய்தனர், மேலும் அதன் விளைவாக, **கடவுள்** அவர்களுடைய கட்டடத்தை அஸ்திவாரத்தோடு அழித்துவிட்டார், அதன் முகடு களை அவர்கள் மீது விழச் செய்தார். அவர்கள் சற்றும் எதிர்பாராத போது தண்டனை அவர்களைத் தாக்கியது.

27. பின்னர், உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று, அவர் களை அவர் அவமானப்படுத்துவார், மேலும் கேட்பார், "அவர்களுக்காக என்னை எதிர்த்தீர்களே, என்னு டன் நீங்கள் அமைத்துக் கொண்ட அந்த என்னுடைய பங்குதாரர்கள் எங்கே?" அறிவைக் கொண்டு ஆசீர் வதிக்கப்பட்டவர்கள் கூறுவார்கள், "இன்றைய தினம், நம்பமறுப்பவர்கள் மீது இழிவும் துன்பமும் ஏற்பட்டுவிட்டது."

*நம்பமறுப்பவர்களுக்குரிய மரணம்*

28. தங்களுடைய ஆத்மாக்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் வானவர்கள் அவர் களை மரணத்தில் ஆழ்த்துவார்கள். இறுதியில் அப்போதுதான் அவர்கள் சரணடைவார்கள், மேலும் கூறுவார்கள், "நாங்கள் தவறான எந்த விஷயத்தை யும் செய்யவில்லை!" ஆம், மெய்யாகவே. **கடவுள்** நீங்கள் செய்து கொண்டிருந்த ஒவ்வொன்றையும் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

29. எனவே, நரகத்தின் வாசல்களுக்குள் நுழையுங்கள், அங்கே நீங்கள் நிரந்தரமாகத் தங்கி இருப்பீர்கள். ஆணவம் கொண்டவர்களுக்கு என்ன ஒரு துன்பகர மான விதி.

*நம்பிக்கையாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை**

30. நல்லோர்களைப் பொறுத்தவரை, "உங்கள் இரட்சக ரிடமிருந்து வந்துள்ள இந்த வெளிப்பாடுகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்" என்று அவர்களி டம் கேட்கப்படும் பொழுது அவர்கள், "நல்லது" என்று கூறுகின்றனர். நேரிய வாழ்வு நடத்துவோருக்கு, மகிழ்ச்சி, மேலும் மறுவுலகின் வீடானது இன்னும் மிக மேலானது. நல்லோர்களுக்கு என்ன ஒரு ஆனந்த மயமான வீடு.

31. ஏதேன் தோட்டங்கள் அவர்களுக்காக ஒதுக்கி வைக் கப்பட்டுள்ளன, அங்கே ஆறுகள் பாய்ந்தோடும். அங்கே அவர்கள் விரும்புகின்ற எந்த ஒன்றும் அவர் களுக்கு உண்டு. **கடவுள்** இவ்வாறே நல்லோர்களுக்கு வெகுமதியளிக்கின்றார்.

*அவர்கள் நேரடியாகச் சுவனம் செல்கின்றனர்*

32. "உங்கள் மீது சாந்தி நிலவுவதாக. உங்களுடைய காரி யங்களுக்கொரு வெகுமதியாக* *(இப்போது)* சுவன பதியில் நுழையுங்கள்" என்று கூறியவாறு நன்னெறி யோடிருக்கும் ஒரு நிலையில் அவர்களுடைய வாழ்வு களை வானவர்கள் முடிவுக்குக் கொண்டு வருவார்கள்.

*நம்பமறுப்பவர்கள்*

33. வானவர்கள் அவர்களிடம் வருவதற்காகவோ, அல்லது உம்முடைய இரட்சகரின் தீர்ப்பு நிகழ்ந்தேறும் வரை யிலோ அவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனரா? அவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் இதையே தான் செய்தார்கள். **கடவுள்** அவர்களுக்கு அநீத மிழைக்கவில்லை, அவர்கள்தான் தங்கள் சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

34. அவர்களுடைய பாவமான காரியங்களின் பின் விளைவுகளுக்கு அவர்கள் உள்ளானார்கள், மேலும் அவர்கள் பரிகசித்த அதே விஷயங்கள் திரும்பி வந்து அவர்களை மீண்டும் மீண்டும் அவதிக்குள்ளாக் கியது.

*பிரசித்தி பெற்ற சாக்குப்போக்கு*

35. போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் கூறுகின்ற னர், "**கடவுள்** நாடியிருந்தால், நாங்களோ அல்லது எங்கள் பெற்றோர்களோ அவருடன் எந்த போலித் தெய்வங்களையும் வழிபட்டிருக்க மாட்டோம். அன்றி யும் அவர் தடுத்தவற்றுடன் வேறெதையும் நாங்கள் தடுத்திருக்கமாட்டோம்." அவர்களுக்கு முன்னிருந் தவர்களும் இதனையே செய்தனர். முழுமையான தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதைத் தவிர தூதர்கள் வேறெதையும் செய்ய முடியுமா?

**16:30–32 நம் அனைவராலும் ஏற்கெனவே அனுபவிக்கப்பட்டுவிட்ட முதல் மரணத்தை மட்டுமே நல்லவர்கள் சுவைக் கின்றனர் (பார்க்க 44:56). இவ்வுலகில் அவர்களுடைய தவணை முடிவுக்கு வந்தவுடன், முன்னொரு காலத்தில் ஆதமும், ஏவாளும் வசித்த அந்தச் சுவனத்தை நோக்கி வருமாறு மரணத்தின் வானவர்கள், அவர்களிடம் அழைப்பு விடுக்கின்றனர், அவ்வளவுதான் (2:154, 3:169, 8:24, 22:58, 36:27).*

36. "நீங்கள் **கடவுள்**–ஐ வழிபட வேண்டும், மேலும் போலித்தெய்வ வழிபாட்டைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்" எனக் கூறியவராக, ஒரு தூதரை ஒவ்வொரு சமூகத்துக்கும் நாம் அனுப்பினோம். அதனைத் தொடர்ந்து, சிலர் **கடவுள்**–ஆல் வழிநடத்தப்பட்டனர், அதேசமயம் மற்றவர்கள் வழிதவறும்படிச் செய்யப்பட்டனர். பூமியை சுற்றிப் பாருங்கள், மேலும் ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளைக் கவனித்துப் பாருங்கள்.

37. அவர்களை வழிநடத்துவதற்காக நீர் எவ்வளவு கஷ்டப்பட்டு முயற்சிக்கின்றீர் என்பது ஒரு பொருட்டல்ல, அவரால் வழிதவறும்படிச் செய்யப்பட்டவர்களை **கடவுள்** வழிநடத்த மாட்டார். எனவே, எவரும் அவர்களுக்கு உதவி செய்ய இயலாது.

*அவர்களுடைய மனங்களின் அடி ஆழத்தில்*

38. அவர்கள் **கடவுள்** மீது பவித்திரமாகச் சத்தியம் செய்கின்றனர்: "மரணித்தவர்களைக் **கடவுள்** உயிர்ப்பித்தெழுப்பமாட்டார்." நிச்சயமாக, மீற முடியாத அவருடைய வாக்குறுதி அத்தகையதேயாகும், ஆனால் பெரும்பாலான மனிதர்கள் அறியமாட்டார்கள்.

39. பின்னர் அவர்கள் தர்க்கித்துக் கொண்ட எல்லா விஷயங்களையும் ஒவ்வொருவருக்கும் அவர் சுட்டிக் காட்டுவார், மேலும் அவர்கள் பொய்யர்களாக இருந்தனர் என்று நம்பமறுத்தவர்களை அறிந்து கொள்ளச் செய்வார்.

*மரணித்தவர்களை உயிர்ப்பித்தெழுப்ப*

40. எந்த விஷயத்தையும் செய்து முடிக்க, அதனை நோக்கி நாம் "ஆகு" என்று கூறுகின்றோம், அவ்வளவுதான், அது ஆகிவிடுகின்றது.

41. **கடவுள்**–க்காக ஊரைத் துறந்து வெளியேறியவர்களுக்கு, அவர்கள் அடக்குமுறைக்கு உள்ளான காரணத்தால், நிச்சயமாக நாம் இந்த வாழ்வினில் தாராளமாக நஷ்டஈடு செய்வோம், மேலும் மறுவுலகின் பிரதிபலன் இன்னும் மிகப் பெரியதாகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

42. இது ஏனெனில் அவர்கள் உறுதிப்பாட்டுடன் தொடர்ந்திருந்தனர், மேலும் அவர்களுடைய இரட்சகர் மீது அவர்கள் பொறுப்பேற்படுத்துகின்றனர்.

43. உமக்கு முன்னர் நம்மால் உள்ளுணர்வூட்டப்பட்டவர்களாக ஆண்களை அன்றி நாம் அனுப்பவில்லை. உங்களுக்குத் தெரியவில்லை என்றால், வேதத்தை அறிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

44. சான்றுகளையும் வேதங்களையும் அவர்களுக்கு நாம் வழங்கினோம். மேலும் அவர்களுக்கு இறக்கியனுப்பப்பட்ட ஒவ்வொன்றையும் மக்களுக்கு நீர் பிரகடனம் செய்வதற்காக, இத்தூதுச் செய்தியை உமக்கு நாம் இறக்கினோம், ஒரு வேளை அவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கூடும்.

45. தீய சூழ்ச்சிகளைத் திட்டமிடுபவர்கள், அவர்களை பூமி விழுங்கும்படிக் **கடவுள்** செய்யமாட்டார் என்றோ அல்லது அவர்கள் சற்றும் எதிர்பாராதிருக்கும் போது தண்டனை அவர்களிடம் வந்து விடாதென்றோ உத்தரவாதம் கொண்டிருக்கின்றனரா ?

46. அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது அது அவர்களைத் தாக்கக் கூடும்; அவர்கள் ஒருபோதும் தப்பிக்க இயலாது.

47. அல்லது அவர்கள் அச்சத்துடன் அதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது அது அவர்களைத் தாக்கக் கூடும். உம்முடைய இரட்சகர் இரக்கம் மிக்கவர், மிக்க கருணையாளர்.

48. **கடவுள்**–ஆல் படைக்கப்பட்ட எல்லாவற்றையும் அவர்கள் பார்க்கவில்லையா **?** **கடவுள்**–க்குரிய முழுமையான சரணடைதலிலும், விருப்பத்துடனும், அவற்றின் நிழல்கள் அவற்றை வலமும் இடமும் சூழ்ந்து கொள்கின்றன.

49. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்குச் சிரம்பணிகின்றன – ஒவ்வொரு உயிரினமும் – மேலும் வானவர்களும்; சிறிதளவும் ஆணவமின்றி அவ்வாறே செய்கின்றனர்.*

50. அவர்களுக்கு மேலே உயர்வாக உள்ள, தங்கள் இரட்சகரிடம் அவர்கள் பக்தி செலுத்துகின்றனர், மேலும் அவர்களுக்கு என்ன செய்யுமாறு கட்டளையிடப்பட்டதோ அதனை அவர்கள் செய்வார்கள்.

51. **கடவுள்** பிரகடனம் செய்துள்ளார்: "இரண்டு தெய்வங்களை வழிபடாதீர்கள்; இருப்பது ஒரே ஒரு இறைவன் மட்டுமே. நீங்கள் எனக்கு மட்டுமே பக்தி செலுத்த வேண்டும்."

52. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை, எனவே, மார்க்கம் முற்றிலும் அவருக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். **கடவுள்**–ஐத் தவிர மற்றொன்றை வழிபடுவீர்களா ?

53. நீங்கள் அனுபவிக்கும் எந்த நல்லாசியும் **கடவுள்** வசமிருந்து வந்ததே. இருப்பினும், ஏதேனும் கஷ்டத்திற்கு நீங்கள் உள்ளாகும் போதெல்லாம் நீங்கள் உடனடியாக அவரிடம் புகார் கூறுகின்றீர்கள்.

54. ஆயினும், உங்கள் துன்பத்தை அவர் நிவர்த்தி செய்த உடனே, உங்களில் சிலர் போலித் தெய்வ வழிபாட்டிற்குத் திரும்பி விடுகின்றீர்கள்.

**16:49 மனித உடல், அது ஒரு நம்பிக்கையாளருக்கோ அல்லது நம்பமறுப்பவருக்கோ உரியதாக இருந்த போதிலும், கடவுளுக்குச் சரணடைகின்றது. இதயத் துடிப்புகள், நுரையீரல்களின் இயக்கம், மற்றும் வயிறுகளின் இயக்கம், இந்த சரணடைதலைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.*

55. அவர்களுக்கு நாம் கொடுத்தவற்றில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கட்டும். சென்று தற்காலிகமாகச் சுகம் அனுபவித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் நிச்சயமாகக் கண்டு கொள்வீர்கள்.

56. அவர்கள் மீது நாம் அருளிய வாழ்வாதாரங்களின் ஒரு பங்கை, அறியாமையினால் அவர்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்களுக்கென நிர்ணயம் செய்து விடுகின்றனர். **கடவுள்** மீது ஆணையாக, உங்களுடைய புதுமைகளுக்கு விளக்கம் தருமாறு நீங்கள் பிடிக்கப்படுவீர்கள்.

*பெண் சிசுக்களுக்கெதிரான வெறித்தனமான பாரபட்சம்*

57. அவர்கள் **கடவுள்**–க்கு மகள்களையும் நியமிக்கின்றார்கள், அவர் துதிப்பிற்குரியவர், ஆயினும் அவர்களுக்குப் பிரியமானவற்றையே அவர்கள் தங்களுக்கென விரும்பி எடுத்துக் கொள்கின்றனர்.

58. அவர்களில் ஒருவன் ஒரு பெண் குழந்தையைப் பெற்றால், அவன் முகம் துக்கத்தில் மூழ்கிக் கறுத்து விடுகின்றது.

59. அவனுக்குக் கொடுக்கப்பட்ட கெட்ட செய்தியால், வெட்கப்பட்டவனாக, மக்களிடமிருந்து அவன் ஒளிந்து கொள்கின்றான். அக்குழந்தையை அவன் மனமில்லாமல் வைத்துக் கொள்வதா, அல்லது புழுதியில் அவளைப் புதைத்து விடுவதா, என்று கூட அவன் யோசிக்கின்றான். அவர்கள் எடுத்த முடிவு மிகவும் துக்கரமானது.

60. மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள் மிக மோசமான முன்னுதாரணங்களை அமைக்கின்றனர், அதே சமயம் மிக மேலான உதாரணங்கள் **கடவுள்**–க்கு உரியவை. அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிக்கவர்.

*ஆதி பாவம்*

61. மனிதர்களை அவர்களுடைய வரம்புமீறல்களுக்காகக் **கடவுள்** தண்டித்து விட்டால், பூமியின் மேல் உள்ள ஒவ்வோர் உயிரினத்தையும் அவர் அழித்திருப்பார். ஆனால் ஒரு குறிப்பிட்ட, முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கென அவர்களுக்கு அவர் அவகாசம் அளிக்கின்றார். அவர்களுடைய தவணை முடிந்து விட்டால், அதனை ஒரு மணிநேரம் கூட தாமதப்படுத்தவோ, அல்லது முற்படுத்தவோ அவர்களால் இயலாது.

62. தங்களுக்கே பிடிக்காதவற்றை அவர்கள் **கடவுள்** மீது சாட்டுகின்றனர், பின்னர் தாங்கள் நல்லவர்களாக இருப்பதாகத் தங்கள் சொந்த நாவுகளாலேயே பொய் கூறுகின்றனர்! எவ்வித ஐயமுமின்றி, அவர்கள் நரகிற்கு உள்ளாகிவிட்டனர், ஏனெனில் அவர்கள் கலகம் செய்தனர்.

63. **கடவுள்** மீது ஆணையாக, உமக்கு முன்னிருந்த சமூகங்களுக்கு நாம் *(தூதர்களை)* அனுப்பியிருக்கின்றோம், ஆனால் சாத்தான் அவர்களுடைய கண்களுக்கு அவர்களுடைய காரியங்களை அழகாக்கி விட்டான். அதன் விளைவாக, அவன்தான் இப்போது அவர்களுடைய எஜமானன், மேலும் அவர்கள் வலி மிகுந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

64. அவர்கள் தர்க்கித்துக் கொள்பவற்றை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்காகவும், மேலும் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் கருணையை வழங்குவதற்காகவும் இவ்வேதத்தை நாம் உமக்கு வெளிப்படுத்தி உள்ளோம்.

*கடவுளிடமிருந்து கூடுதல் சான்றுகள்*

65. நிலத்தை, அது இறந்து விட்ட பின்னர் உயிர்ப்பிப்பதற்காக விண்ணிலிருந்து **கடவுள்** தண்ணீரை இறக்கி அனுப்புகின்றார். செவியேற்கும் மக்களுக்கு இது *(போதிய)* சான்றாகத் திகழ வேண்டும்.

66. மேலும் கால்நடைகளிலும் உங்களுக்கு ஒரு படிப்பினை உள்ளது: அவற்றின் வயிறுகளிலிருந்து ஒரு பானத்தை உங்களுக்கு நாம் வழங்குகின்றோம். செரிக்கப்பட்ட உணவிற்கும் இரத்தத்திற்கும் நடுவிலிருந்து, அருந்துவோருக்குச் சுவை மிகுந்த, தூய்மையான பால் உங்களுக்குக் கிடைக்கின்றது.

67. மேலும் பேரீத்த மரங்களின் பழங்கள் மற்றும் திராட்சைகளிலிருந்து மது வகைகளையும், அதே போல் நல்ல ஆகாரங்களையும் நீங்கள் தயாரிக்கின்றீர்கள். புரிந்து கொள்ளும் மக்களுக்கு இது *(போதிய)* சான்றாகத் திகழ வேண்டும்.

*தேனீ*

68. இன்னும், உம்முடைய இரட்சகர் தேனீக்கு உள்ளுணர்வூட்டினார்: மலைகளிலும் மரங்களிலும், மேலும் அவர்கள் உனக்காகக் கட்டுகின்ற *(கூடுகள் போன்ற)* வற்றிலும் வீடுகளைக் கட்டிக்கொள்.

69. பின்னர், மிகத் துல்லியமாக, உன் இரட்சகரின் திட்டத்தைப் பின்பற்றி, அனைத்துக் கனிகளில் இருந்தும் உண்டு கொள். அவற்றின் வயிறுகளில் இருந்து பல்வேறு நிறங்களை உடைய ஒரு பானம் வெளிவருகின்றது, அதில் மனிதர்களுக்கு நிவாரணம் உள்ளது. சிந்திக்கின்ற மக்களுக்கு இது *(போதிய)* சான்றாகத் திகழ வேண்டும்.*

**16:69 தேன், அதனுடைய அங்கீரிக்கப்பட்ட ஊட்டச்சத்து மதிப்புகளுடன் கூடுதலாக, குறிப்பிட்ட ஒவ்வாமைகளுக்கும் மற்ற வியாதிகளுக்கும் நிவாரணமளிக்கும் ஒரு மருந்தாக விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது.*

70. **கடவுள்** உங்களைப் படைத்தார், பின்னர் உங்கள் வாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருகின்றார். தங்களால் அடையக்கூடிய அறிவிற்கும் ஓர் எல்லை உண்டு என்பதைக் காண்பதற்காகவே, உங்களில் சிலரை மிக முதிர்ந்த வயது வரை உயிர்வாழ அவர் அனுமதிக்கின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், சர்வ சக்தியுடையவர்.

*கடவுளுடன் பங்குதாரர்கள் இல்லை*

71. உங்களில் சிலருக்கு மற்றவர்களை விடக் **கடவுள்** அதிகமாக வழங்கியிருக்கின்றார். மிகுதமாகக் கொடுக்கப்பட்டவர்கள் தங்களுக்குக் கீழே உள்ளவர்களுக்கு, அவர்களைப் பங்குதாரர்களாக்கிக் கொள்ளும் அளவுக்குத் தங்கள் உடைமைகளை ஒரு போதும் கொடுத்து விடமாட்டார்கள். **கடவுள்**–ன் நல்லாசிகளை அவர்கள் விட்டுக் கொடுத்து விடுவார்களா ?*

72. மேலும் உங்களிலிருந்தே உங்களுடைய வாழ்க்கைத் துணைகளை **கடவுள்** ஆக்கினார், மேலும் உங்களுடைய வாழ்க்கைத் துணைகளிலிருந்து உங்களுக்குக் குழந்தைகளையும் பேரக்குழந்தைகளையும் உண்டாக்கினார், மேலும் நல்ல வாழ்வாதாரங்களையும் உங்களுக்கு வழங்கினார். பொய்மையில் நம்பிக்கை கொண்டு, **கடவுள்**–ன் நல்லாசிகளுக்கு நன்றி கெட்டவர்களாக அவர்கள் மாறலாமா ?

*போலித்தெய்வ வழிபாடு:*
*மிகவும் புத்தசாலித்தனம் அன்று*

73. இருப்பினும், வானங்களிலோ, அன்றியும் பூமியிலோ அவர்களுக்காக எந்த வாழ்வாதாரத்தையும் பெற்றிராத, அன்றியும் அவர்களுக்கு எந்த ஒன்றையும் வழங்க முடியாதவற்றைக் **கடவுள்**–வுடன் அவர்கள் வழிபடுகின்றனர்.

74. ஆகவே, **கடவுள்**–க்கு உதாரணங்களை எடுத்துரைக்காதீர்கள்; **கடவுள்** அறிவார், அதே சமயம் நீங்கள் அறிய மாட்டீர்கள்.

*செல்வந்தரான நம்பிக்கையாளர்*
*ஏழையான நம்பிக்கையாளரை விட சிறந்தவர்*

75. உடமை கொள்ளப்பட்ட, மேலும் முற்றிலும் ஆற்றலற்ற ஒரு அடிமையுடன் ஒப்பிட்டு, நல்ல வாழ்வாதாரங்களைக் கொண்டு நாம் ஆசீர்வதித்து, அதிலிருந்து இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தர்மம் செய்கின்ற ஒருவனைக் **கடவுள்** உதாரணமாக எடுத்துரைக்கின் றார். அவர்கள் சமமானவர்களா ? புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது. அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

76. மேலும் **கடவுள்** இரு மனிதர்களின் உதாரணத்தை எடுத்துரைக்கின்றார்: ஒருவன் ஊமை, எந்த விஷயத்தையும் செய்யும் திறனற்றவன், தன்னுடைய எஜமானரை முற்றிலும் சார்ந்திருப்பவன்–எவ்விதமான வழியில் அவர் அவனைச் செலுத்தினாலும், நன்மையான எந்த ஒன்றையும் அவனால் கொண்டு வரமுடியாது. நீதத்துடன் ஆட்சி செய்பவனும் நேரான பாதையில் வழிநடத்தப்பட்டவனுமாகிய ஒருவனுக்கு அவன் சமமானவனா ?

*இந்த வாழ்வு மிகவும் குறுகியது*

77. வானங்கள் மற்றும் பூமியின் எதிர்காலம் **கடவுள்**–க்குரியது. அவரைப் பொறுத்த வரை, உலகின் முடிவு *(வேளை)* ஒரு கண்சிமிட்டலுக்கு அப்பால், அல்லது அதனை விடவும் மிக அருகில் உள்ளது. **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

78. எதையும் அறியாதவர்களாக உங்கள் தாயார்களின் வயிறுகளில் இருந்து **கடவுள்** உங்களை வெளியில் கொண்டு வந்தார், மேலும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைப்புலனையும், மூளைகளையும் அவர் வழங்கினார், நீங்கள் நன்றியுடையோராக இருக்கக் கூடும் என்பதற்காக.

79. வானத்தின் காற்றுமண்டலத்தில் பறக்கும்படிச் செய்யப்பட்ட பறவைகளை அவர்கள் பார்க்கவில்லையா ? மேலே காற்றில் அவற்றைத் தாங்கிக் கொண்டிருப்பவர் **கடவுள்** அன்றி எவருமில்லை. நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இது *(போதிய)* சான்றாகத் திகழ வேண்டும்.

80. மேலும் நீங்கள் வசிக்கக் கூடிய அசையா வீடுகளை உங்களுக்காகக் **கடவுள்** வழங்கினார். மேலும் பயணத்தின்போதும், இருப்பிடத்தில் தங்கியிருக்கும் போதும், அவற்றை நீங்கள் பயன்படுத்தும் வண்ணம் கால்நடைகளின் தோல்களினால் செய்யப்பட்ட எளிதில் தூக்கிச் செல்லத்தக்க வீடுகளை உங்களுக்கு அவர் வழங்கினார், மேலும் அவற்றின் கம்பளிகள், மென்மயிர்த்தோல்கள், மற்றும் உரோமத்திலிருந்து நீங்கள் சாமான்களையும் சொகுசுச் சாதனங்களையும் சிறிது காலத்திற்குச் செய்து கொள்கின்றீர்கள்.

81. அவர் படைத்திருப்பவற்றின் மூலமாக, **கடவுள்** உங்களுக்காக நிழலை வழங்கினார், மேலும் மலைகளில் உங்களுக்காக புகலிடங்களையும் வழங்கினார், மேலும் வெப்பத்தில் இருந்து உங்களைக் காக்கும் ஆடைகளையும், போர்களில் நீங்கள் சண்டையிடும்போது உங்களைக் காக்கும் உடுப்புகளையும் உங்களுக்காக வழங்கினார். உங்கள் மீதான அவருடைய நல்லாசிகளை இவ்விதமாக அவர் பூர்த்தி செய்கின்றார், நீங்கள் சரணடையக்கூடும் என்பதற்காக.

**16:71 மனிதர்கள் தங்களுடைய அதிகாரத்தை அந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து விட மாட்டார்கள் எனும்போது, கடவுள் இதனைச் செய்ய வேண்டுமென்றும், மேலும் தனக்கே பங்குதாரர்களைப் படைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஏன் எதிர்பார்க்கின்றனர் ?*

82. அப்படியிருந்தும் அவர்கள் திரும்பிச் சென்று விடுவார்களாயின், பின்னர் உமது ஒரே பணி *(தூதுச் செய்தியைத்)* தெளிவாகச் சேர்ப்பிப்பதே.

*நம்பமறுப்பவர்கள் நன்றிகெட்டவர்கள்*

83. அவர்கள் **கடவுள்**–ன் அருட்கொடைகளை முழுவதும் அடையாளம் கண்டு கொண்ட பின்னர் அவற்றை மறுத்து விடுகின்றனர்; அவர்களில் பெரும்பாலோர் நம்பமறுப்பவர்களாக உள்ளனர்.

*உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று*

84. ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியை நாம் எழுப்பும் அந்நாள் வரும், அப்போது நம்பமறுப்பவர்கள் *(பேசுவதற்கு)* அனுமதிக்கப்பட மாட்டார்கள், அன்றியும் பிழைபொறுக்கப்படவும் மாட்டார்கள்.

85. வரம்புமீறியவர்கள் தண்டனையைக் காணும் தருவாயில், அது மிகவும் தாமதம் ஆகி இருக்கும்; அது அவர்களுக்குக் குறைக்கப்படவும் மாட்டாது, அன்றியும் அவர்கள் அவகாசம் அளிக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

*போலித் தெய்வங்கள் தங்களை வழிபட்டவர்களைக் கைவிட்டு விடுகின்றன*

86. போலித் தெய்வ வழிபாடு செய்தவர்கள் அவர்களுடைய போலித் தெய்வங்களைக் காணும் போது, அவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, உம்முடன் நாங்கள் வழிபட்ட போலித் தெய்வங்கள் இவர்கள்தான்" அப்போது அவர்களை எதிர் கொண்டு அந்த போலித் தெய்வங்கள் கூறும், "நீங்கள் பொய்யர்களாக இருக்கின்றீர்கள்."

87. அந்நாளில் அவர்கள் **கடவுள்**–க்கு முற்றிலும் சரணடைவார்கள், மேலும் அவர்கள் கண்டு பிடித்த போலித் தெய்வங்கள் அவர்களைக் கை விட்டு விடும்.

88. நம்பிக்கை கொள்ள மறுத்து, **கடவுள்**–ன் பாதையை விட்டும் விரட்டுபவர்களுக்கு, அவர்களுடைய வரம்பு மீறல்களின் காரணத்தால், அதிகமாக தண்டனையைக் கூட்டுவதன் மூலம் அவர்களுடைய தண்டனையை நாம் மேலும் அதிகரிப்போம்.

89. ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியை அவர்களில் இருந்தே நாம் எழுப்பும் அந்நாள் வரும், மேலும் இந்த மக்களுக்குச் சாட்சியாக உம்மைக் கொண்டு வருவோம். ஒவ்வொரு விஷயத்திற்கும் விளக்கங்களை வழங்கவும், மேலும் வழிகாட்டலாகவும், கருணையாகவும், சரணடைந்தோருக்கு நற்செய்தியாகவும் இந்தப் புத்தகத்தை உமக்கு நாம் வெளிப்படுத்தி உள்ளோம்.

90. நீதியையும், தர்மத்தையும், உறவினர்களை மதிப்பதையும் **கடவுள்** பரிந்துரைக்கின்றார். மேலும் அவர் தீமையையும், ஒழுக்கக் கேட்டையும், வரம்புமீறுதலையும் தடுக்கின்றார். நீங்கள் கவனத்தில் எடுக்கக் கூடும் என்பதற்காக, அவர் உங்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

*உங்கள் வார்த்தைகளை நீங்கள் காக்க வேண்டும்*

91. **கடவுள்**–வுடனான உங்களுடைய உடன்படிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும், அப்படியொரு உடன்படிக்கையை நீங்கள் செய்து கொள்ளும் சமயம். அவற்றை நிறைவேற்றுவதாக *(கடவுள் மீது)* சத்தியம் செய்த பின்னர் உங்களுடைய உறுதிமொழிகளை நீங்கள் மீற வேண்டாம், ஏனெனில் உங்களுக்கு உத்திரவாதமளிப்பவராகக் **கடவுள்**–ஐ நீங்கள் ஆக்கி இருக்கின்றீர்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றும் **கடவுள்**–க்குத் தெரியும்.

92. உறுதிபட அவள் நெய்ததை, பலமற்ற நூல் குவியலாக, அவிழ்த்து விட்ட நெசவாளி ஒருத்தியைப் போல இருக்காதீர்கள். ஒருவரை விட ஒருவர் மேன்மையைப் பெறுவதற்காக உறுதிமொழிகளை நீங்கள் துஷ்பிரயோகம் செய்வீர்களாயின் இதுவே உங்களுக்குரிய உதாரணமாகும். ஒரு குழுமம் மற்றொன்றைவிடப் பெரியதாக இருந்த போதிலும், **கடவுள்** இவ்விதமாக உங்களைச் சோதனைக்குள்ளாக்குகின்றார். நீங்கள் தர்க்கித்துக் கொண்ட ஒவ்வொன்றையும் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர் நிச்சயமாக உங்களுக்குக் காட்டுவார்.

93. **கடவுள்** நாடியிருந்தால், உங்களை ஒரே சமுதாயமாக அவர் ஆக்கியிருக்க முடியும். ஆனால் வழி தவறிச் செல்லத் தேர்ந்தெடுத்துக் கொண்டோரைத் தவறான வழியில் அவர் அனுப்பி விடுகின்றார், மேலும் வழி நடத்தப்பட வேண்டும் என விரும்புவோரை அவர் வழி நடத்துகின்றார்.* நீங்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

*உங்கள் உறுதிமொழிகளை மீறுதல்: ஓர் ஆபத்தான குற்றம்*

94. உறுதியானதொரு பிடிமானத்தைப் பாதங்கள் அடைந்து விட்ட பின்னர் நீங்கள் மீண்டும் சருகி விடாதிருக்கும் பொருட்டு, உங்களுக்கிடையில் உறுதிமொழிகளைத் துஷ்பிரயோகம் செய்யாதீர்கள். பின்னர் நீங்கள் துன்பத்திற்கு உள்ளாகி விடுவீர்கள். *(மோசமானதொரு முன்னுதாரணத்தை அமைப்பதன் மூலம்)* **கடவுள்**–ன் பாதையை விட்டும் விரட்டுவதன் விளைவு இத்தகையதே; பயங்கரமானதொரு தண்டனைக்கு நீங்கள் உள்ளாகின்றீர்கள்.

95. **கடவுள்** முன்னரான உங்களுடைய உறுதிமொழிகளை அற்பவிலைக்கு விற்று விடாதீர்கள். **கடவுள்** வசம் உள்ளவை உங்களுக்கு மிகவும் மேலானதாகும், நீங்கள் மட்டும் அறிந்திருந்தால்.

**16:93 நம்மிடையே உள்ள மீட்கப்படத் தகுதியான மெய்யான நம்பிக்கையாளர்களைக் கடவுள் அறிந்திருக்கின்றார். அதற்கேற்ப, அவர்களை அவர் வழிநடத்துகின்றார், அதே சமயம் நம்பமறுப்பதைத் தேர்ந்தெடுத்தோரை அவர் தடுத்து விடுகின்றார்.*

96. உங்கள் வசம் உள்ள எதுவும் தீர்ந்து போகும், ஆனால் **கடவுள்** வசம் உள்ளவை என்றென்றும் நிலைத் திருக்கும். உறுதியோடு சகித்துக் கொண்டிருப்பவர் களுக்கு நிச்சயமாக நாம் வெகுமதியளிப்போம்; அவர் களுடைய நன்மையான செயல்களுக்குரிய பிரதி பலனை நாம் அவர்களுக்கு வழங்குவோம்.

*உத்தரவாதமுள்ள மகிழ்ச்சி: இப்பொழுதும் எப்பொழுதும்*

97. ஆணோ அல்லது பெண்ணோ நம்பிக்கை கொண்ட நிலையில், எவரொருவர் நன்மையைச் செய்கின்றாரோ, அவர்களுக்கு இவ்வுலகில் மகிழ்ச்சியானதொரு வாழ் வை நிச்சயமாக நாம் வழங்குவோம், மேலும் *(தீர்ப்பு நாள் அன்று)* அவர்களுடைய நன்மையான காரியங் களுக்காக அவர்களுக்குரிய முழுமையான பிரதி பலனை நாம் கொடுப்போம்.

*ஒரு முக்கிய கட்டளை**

98. குர்ஆனை நீர் படிக்கும் பொழுது, விரட்டப்பட்ட சாத்தானிடமிருந்து நீர் **கடவுள்**–யிடம் அடைக்கலம் தேடிக் கொள்ள வேண்டும்.

99. நம்பிக்கை கொண்டு மேலும் தங்கள் இரட்சகரிடம் பொறுப்பை ஒப்படைப்பவர்கள் மீது அவனுக்கு எந்த ஆதிக்கமும் இல்லை.

100. தங்களுடைய எஜமானனாக அவனைத் தேர்ந்தெடுத் தோர்; தங்களுடைய தெய்வமாக அவனைத் தேர்ந் தெடுத்தோர் வரை மட்டிலுமே அவனது ஆதிக்கம் உள்ளது.

101. ஒரு வெளிப்பாட்டின் இடத்தில் மற்றொன்றை நாம் மாற்றியமைத்தால், அன்றியும் **கடவுள்** அவர் வெளிப் படுத்துபவற்றை முற்றிலும் அறிந்தே இருக்கின்றார், அவர்கள் கூறுகின்றனர், "நீரே இதனை உருவாக்கிக் கொண்டீர்!" உண்மையில், அவர்களில் அதிகமா னோர் அறியமாட்டார்கள்.

102. கூறும், "நம்பிக்கை கொண்டோரை மறுவுறுதிப் படுத்துவதற்காக, மேலும் சரணடைந்தோருக்கு ஒரு வழிகாட்டியையும், நற்செய்தியையும் வழங்குவதற் காக, உம்முடைய இரட்சகரிடமிருந்து, சத்தியத்துடன், பரிசுத்த ஆவி இதனைக் கீழே கொண்டு வந்தார்."

*குர்ஆன் பைபிளிலிருந்து நகல் எடுக்கப்பட்டதல்ல*

103. "ஒரு மனிதர்தான் அவருக்குக் கற்றுக் கொடுக் கின்றார்!" என்று அவர்கள் கூறுகின்றனர் என்பதை நாம் முற்றிலும் அறிவோம். அவர்கள் மறைமுகமாகச் குறிப்பிடும் மூலாதாரத்தின் மொழி அரபி அல்ல, மேலும் இதுவோ மாசற்ற ஓர் அரபி மொழியாகும்.

104. நிச்சயமாக, **கடவுள்**–ன் வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொள்ளாதவர்களான அவர்களைக் **கடவுள்** வழி நடத்த மாட்டார். வலிமிகுந்ததொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகிவிட்டனர்.

105. **கடவுள்**–ன் வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொள்ளா தவர்கள் மட்டுமே பொய்யான கோட்பாடுகளைப் புனைகின்றனர்; அவர்கள்தான் அசலான பொய்யர் கள்.

*உதட்டளவுப்பேச்சு கணக்கில் கொள்ளப்படாது*

106. விசுவாசத்தை அடைந்து விட்ட பின்னர், **கடவுள்** மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள், மேலும் நம்பமறுத் தலில் முற்றிலும் திருப்தி அடைந்து விட்டவர்கள், **கடவுள்**–யின் கடுங்கோபத்துக்கு உள்ளாகி விட்டனர். அவர்களுடைய இதயங்கள் விசுவாசத்தால் நிரம்பி இருக்கும் சமயம், நம்பமறுத்தலை மொழிவதற்கு நிர்ப் பந்திக்கப்பட்டவர்கள் மட்டுமே பிழை பொறுக்கப்படு வார்கள்.*

*இந்த வாழ்க்கையில் மூழ்கிவிடுவது கடவுளிடமிருந்து துரத்தப்படக் காரணமாகின்றது*

107. இது ஏனெனில், அவர்கள் மறுவுலகத்தை விட மேலாக இந்த வாழ்வுக்கு முன்னுரிமை கொடுத்தனர், மேலும் இத்தகைய நம்பமறுக்கும் மக்களை **கடவுள்** வழிநடத்துவதில்லை.

108. அவர்களுடைய இதயங்களிலும், செவிப்புலனிலும் பார்வைகளிலும் **கடவுள்**–ஆல் முத்திரையிடப்பட்ட வர்கள் அவர்கள்தான். அதன் விளைவாக, அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

109. எந்த ஐயமுமின்றி, மறுவுலகில் நஷ்டமடைந்தவர் களாக அவர்கள் இருப்பார்கள்.

110. அடக்குமுறை செய்யப்பட்ட காரணத்தால் ஊரைத் துறந்து வெளியேறி, பின்னர் தொடர்ந்து பாடுபட்டு, மேலும் உறுதியோடு சகித்துக் கொண்டிருப்பவர் களைப் பொறுத்தவரை, உம்முடைய இரட்சகர், இவை அனைத்தின் காரணமாக, மன்னிப்பவர், மிக்க கருணையாளராக இருக்கின்றார்.

**16:98* *நம்முடைய மீட்சியானது நமக்குரிய கடவுளின் தூதுச் செய்தியான குர்ஆனை அறிந்து கொள்வதன் மூலமே அடை யக் கூடியதாக உள்ளது, மேலும் நாம் மீட்சியடைவதைத் தடுக்க தன்னால் இயன்ற அனைத்தையும் சாத்தான் செய்வான், எனவேதான் இக்கட்டளை.*

**16:106* *ஒரு துப்பாக்கியை உங்கள் தலையில் வைத்து கடவுள் மீது நீங்கள் நம்பிக்கையற்றவர் என மொழிய வேண்டுமென யாரேனும் உத்தரவிட்டால், அவருடைய விருப்பத்தை நீங்கள் செயல்படுத்தலாம் என்பதைக் கடவுளின் ஞானம் விதிக் கின்றது. இதயத்தில் உள்ளது என்னவோ அது மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகின்றது.*

111. ஒவ்வொரு ஆத்மாவும் தனக்கே வாதாடுபவராகப் பணிபுரியும் அந்நாள் வரும். மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் அது செய்தவற்றுக்கெல்லாம் சிறிதளவும் அநீதமின்றி, முழுமையாகக் கொடுக்கப்படும்.

*அனுமதிக்கப்பட்ட உணவுகளைத் தடைசெய்து கொள்வது அவை பறிக்கப்படக் காரணமாகின்றது*

112. ஒவ்வொரு புறத்திலிருந்தும் அதற்கு வாழ்வாதாரங்கள் வந்த வண்ணம், பாதுகாப்புடனும் வளத்துடனும் இருந்து வந்த ஒரு சமூகத்தின் உதாரணத்தைக் **கடவுள்** எடுத்துரைக்கின்றார். ஆனால் பின்னர், **கடவுள்**–ன் நல்லாசிகளுக்கு நன்றி கெட்டதாக அது மாறியது. அதன் விளைவாக, பட்டினி மற்றும் பாதுகாப்பின்மையின் கஷ்டங்களை அவர்கள் சுவைக்கும் படிக் **கடவுள்** செய்தார். அவர்கள் செய்தவற்றுக்குப் பிரதிபலன் இத்தகையதேயாகும்.

113. அவர்களில் இருந்தே ஒரு தூதர் அவர்களிடம் சென்றிருந்தார், ஆனால் அவர்கள் அவரை ஏற்கமறுத்தனர். அதன் விளைவு, அவர்களுடைய வரம்புமீறலின் காரணமாக தண்டனை அவர்களைத் தாக்கியது.

114. எனவே, நீங்கள் அவரை மட்டும் வழிபடுபவர்களாக இருந்தால், அனுமதிக்கப்பட்டதும் நல்லதுமான **கடவுள்**–ன் வாழ்வாதாரங்கள் ஒவ்வொன்றில் இருந்து நீங்கள் உண்ணவும், **கடவுள்**–ன் நல்லாசிகளுக்கு நன்றியோடிருக்கவும் வேண்டும்.

*நான்கு உணவுகள் மட்டுமே தடைசெய்யப்பட்டவை*

115. செத்த பிராணிகள், இரத்தம், பன்றியின் இறைச்சி* மற்றும் **கடவுள்**–ஐ விடுத்து மற்றவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட உணவு ஆகியவற்றை மட்டுமே அவர் உங்களுக்குத் தடை செய்கின்றார். வேண்டுமென்றோ வன்மத்துடனோ இல்லாதிருந்து, *(இவற்றை உண்ணும்படி)* ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டால், அப்போது **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

116. பொய்களைப் புனைந்து மேலும் அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுவதற்காக, "இது அனுமதிக்கப்பட்டது, மேலும் இது அனுமதிக்கப்படாதது," எனக் கூறி உங்களுடைய சொந்த நாவுகளால் நீங்கள் பொய்களை உதிர்க்க வேண்டாம். நிச்சயமாக, பொய்களைப் புனைந்து அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுபவர்கள் ஒரு போதும் வெற்றியடைய மாட்டார்கள்.

117. குறுகிய காலம் அவர்கள் சுகமனுபவிக்கின்றனர், பின்னர் வலி மிகுந்த ஒரு தண்டனையை அனுபவிப்பார்கள்.

118. முன்னர் உமக்கு நாம் விவரித்தவற்றை, யூதர்களுக்கு நாம் தடை செய்திருந்தோம்.* அவர்களுக்கு அநீதமிழைத்தவர்கள் நாம் அல்லர், அவர்கள்தான் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

119. இருப்பினும், அறியாமையினால் பாவத்தில் வீழ்ந்து விட்டு, அதன்பின்னர் அதற்காக வருந்தி, மேலும் சீர்திருந்தியோரைக் குறித்து, உம்முடைய இரட்சகர், இவ்வாறு செய்யப்பட்டுவிட்ட பின்னர், மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*ஆப்ரஹாம்*

120. ஆப்ரஹாம் உண்மையில் **கடவுள்**–க்கான தனது சரணடைதலில் மிகச்சிறப்பானதொரு முன்னோடியாக, ஒருபோதும் போலித் தெய்வங்களை வழிபடாத ஓர் ஏகத்துவவாதியாக இருந்தார்.

121. அவருடைய இரட்சகரின் நல்லாசிகளுக்கு அவர் நன்றியுடையவராக இருந்த காரணத்தால், அவரை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டார், மேலும் நேரானதொரு பாதையில் அவரை வழிநடத்தினார்.

122. இந்த வாழ்வில் நாம் அவருக்கு மகிழ்ச்சியை வழங்கினோம், மேலும் மறுவுலகில் அவர் நல்லோர்களுடன் இருப்பார்.

*முஹம்மத்:*
*ஆப்ரஹாமைப் பின்பற்றிய ஒருவர்**

123. பின்னர் நாம் உமக்கு *(முஹம்மத்)* ஏகத்துவவாதியான ஆப்ரஹாமின் மார்க்கத்தைப்* பின்பற்றும்மாறு உள்ளுணர்வூட்டினோம்; அவர் ஒருபோதும் போலித் தெய்வங்களை வழிபட்டவராக இருந்ததில்லை.

---

****16:115*** *மிகப்பெரும் நாசத்தை விளைவிக்கும் ட்ரிக்கிநெல்லா ஸ்பைரலிஸ் என்ற ட்ரிக்கினாஸிஸ் ஒட்டுண்ணி (அத்துடன் பன்றியின் நாடாப்புழு டேனியா ஸோலியம் ) பன்றியின் இறைச்சியில்தான் உயிர் வாழுமே அன்றிக் கொழுப்பில் அல்ல. ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் 1,50,000க்கும் அதிகமான மக்கள் இக்கிருமிகளின் தொற்றுக்களினால் இம்சைப் படுகின்றனர் பார்க்க* ***6:145, 146*** *மற்றும் பின் இணைப்பு* ***16.***

****16:123*** *ஆப்ரஹாம் மூலம் நம்மை வந்தடைந்த எல்லா வழிபாட்டு நடைமுறைகளும், முஹம்மதின் காலத்தில் முழுமையாக இருந்தன என்பதை இது நமக்கு அறிவிக்கின்றது (பார்க்க 22:78 மற்றும் பின் இணைப்பு 9).*

*ஸப்பாத் ரத்து செய்யப்படுகின்றது*

124. ஸப்பாத்தைக் குறித்து இறுதியில் தர்க்கித்துக் கொண்டவர்களுக்கு *(யூத, கிறித்துவர்கள்)* மட்டுமே அது விதிக்கப்பட்டது. அவர்களுடைய தர்க்கங்கள் குறித்து உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று தீர்ப் பளிக்கப் போகின்றவர் உம்முடைய இரட்சகர் தான்.

*கடவுளின் தூதுச் செய்தியை பரப்புவது எவ்வாறு ?*

125. ஞானத்துடனும் கனிவான உபதேசத்துடனும் உம் முடைய இரட்சகரின் பாதையை நோக்கி நீங்கள் அழைக்க வேண்டும், மேலும் இயன்ற வரை மிகச் சிறந்த முறையில் அவர்களுடன் விவாதம் செய் யுங்கள். அவருடைய வழியிலிருந்து தவறியவர் யார் என்பதை உம்முடைய இரட்சகர் நன்கறிவார், மேலும் வழிநடத்தப்பட்டவர்கள் யார் என்பதையும் அவர் நன்கறிவார்.

126. மேலும் நீங்கள் தண்டித்தால், ஒரு சமமான அளவு தண்டனையைக் கொண்டே தண்டிக்க வேண்டும். ஆனால் நீங்கள் *(பழி தீர்ப்பதற்குப் பதிலாக)* பொறு மையைக் கடைப்பிடித்தால், பொறுமையோடிருப் பவர்களுக்கு அதுவே மேலானதாக இருக்கும்.

127. நீங்கள் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்– மேலும் உங்களுடைய பொறுமை **கடவுள்**–ன் உதவி யைக் கொண்டு மட்டுமே அடையக் கூடியதாக உள்ளது. அவர்களுக்காகக் கவலைப்படாதீர், மேலும் அவர்களுடைய சூழ்ச்சிகளால் வருத்தமும் கொள்ளாதீர்.

128. நேரியதொரு வாழ்வு நடத்துவோருடனும், மேலும் தர்மவான்களுடனும் **கடவுள்** இருக்கின்றார்.

****

## சூரா 17: இஸ்ரவேலின் சந்ததியினர் (பனீ இஸ்ராயீல்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நம்முடைய அத்தாட்சிகளில் சிலவற்றை அவருக் குக் காட்டுவதற்காக, *(மக்காவின்)* புனிதப்பள்ளியில் இருந்து, அதன் சுற்றுப்புறங்களை நாம் ஆசீர்வதித் திருக்கின்ற அந்தத் தொலைவிலுள்ள சிரம்பணியும் இடத்திற்கு,* இரவுப் பொழுதில் தன் ஊழியரை *(முஹம்மத்)* வரவழைத்த அவர் மிகவும் துதிப்பிற்குரி யவர். அவர் செவியேற்பவர், பார்ப்பவர்.

2. அது போலவே, மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம், மேலும் அதனை இஸ்ரேலின் சந்ததி யினருக்கு, ஒரு கலங்கரை விளக்காகவும் ஆக்கி னோம்: "என்னுடன் எந்த போலித் தெய்வத்தையும் நீங்கள் எஜமானனாகவோ அதிபதியாகவோ அமைத் துக் கொள்ள வேண்டாம்."

3. அவர்கள் நோவாவோடு நாம் சுமந்து சென்றோரின் சந்ததியினர்; அவர் நன்றியுள்ள ஒரு ஊழியராக இருந்தார்.

4. இஸ்ரவேலின் சந்ததியினரிடம் வேதத்தில் நாம் உரைத்தோம்: "நீங்கள் பூமியில், இருமுறை மிகப் பெரும் அக்கிரமம் செய்வீர்கள். ஆணவத்தின் உயர் உச்சங்களில் வீழ்ந்திடவேண்டும் என்று நீங்கள் விதிக்கப்பட்டுள்ளீர்கள்.

5. "முதல் முறை நிகழும் பொழுது, மிகவும் பலம் வாய்ந்த நம்முடைய ஊழியர்களை உங்களுக்கெதிராக நாம் அனுப்புவோம், அவர்கள் உங்களுடைய வீடுகள் மீது படையெடுப்பார்கள். இது நிகழ்ந்தே தீர வேண்டிய ஒரு முன்னறிவிப்பாகும்.

6. "அதன்பின்னர், அவர்கள் மீது உங்களுக்கொரு வாய்ப்புத்தருவோம், மேலும் திரளான வளங்களை யும், பிள்ளைகளையும் நாம் வழங்குவோம்; நாம் உங்களுக்கு மேன்மையைத் தருவோம்.

7. "நீங்கள் நன்மைகள் செய்தால், உங்கள் சொந்த நலனுக்கே நீங்கள் நன்மைகள் செய்து கொள்கின் றீர்கள், ஆனால் நீங்கள் தீமைகள் செய்தால் உங் களுக்கே கேடாகத்தான் அவ்வாறு நீங்கள் செய் கின்றீர்கள். இவ்விதமாக, இரண்டாவது முறை நிகழ்ந் தேறும் பொழுது, அவர்கள் உங்களைத் தோற்கடிப் பார்கள், மேலும் முதல் முறை அவர்கள் செய்ததைப் போலவே, பள்ளிக்குள் நுழைவார்கள். நீங்கள் சேக ரித்த இலாபங்கள் அனைத்தையும் அவர்கள் துடைத் தெடுத்து விடுவார்கள்."

8. உங்கள் இரட்சகர் உங்கள் மீது தன் கருணையைப் பொழிகின்றார். ஆனால் நீங்கள் வரம்புமீறலுக்குத் திரும்பி விட்டால், தண்டனையைக் கொண்டு நாம் எதிர்கொள்வோம். நம்பமறுப்பவர்களுக்கான இறுதித் தங்குமிடமாக எரிகிடங்கினை நாம் நியமித்திருக் கின்றோம்.

**17:1 "மஸ்ஜிதுல் அக்ஸா" என்பதன் பொருள், "சிரம் பணிதல் நடைபெறும் தொலைவிலுள்ள இடம்" என்பதாகும், அது பல கோடானு கோடி ஒளி வருடங்கள் தள்ளி உள்ளது. குர்ஆன் வழங்கப்படுவதற்காக முஹம்மத், அவருடைய ஆன்மா, மேலான சுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்பதை இவ்வசனம் நமக்கு தெரிவிக்கின்றது (2:185, 44:3, 53:1–18, 97:1).*

*குர்ஆன்: மீட்சிக்குரிய நமது உபாயம்*

9. இந்தக் குர்ஆன் மிகச் சிறந்த பாதையை நோக்கி வழிநடத்துகின்றது, மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற நம்பிக்கையாளர்களுக்கு, மகத்தானதொரு பிரதிபலனுக்கு அவர்கள் தகுமான வர்களாகி விட்டார்கள் என்ற நற்செய்தியைக் கொண்டு வருகின்றது.

10. மறுவுலகினை நம்பமறுப்பவர்களைப் பொறுத்த வரை, வலிமிகுந்ததொரு தண்டனையை அவர்களுக்காக நாம் தயாரித்துள்ளோம்.

11. ஏதோ ஒரு நன்மைக்காக அவன் பிரார்த்திப்பதாக எண்ணிக் கொண்டு, தனக்குத் தீங்கிழைக்கக் கூடிய ஏதேனும் ஒன்றுக்காக மனிதன் அடிக்கடி பிரார்த் திக்கின்றான். மனிதன் பொறுமையற்றவனாக இருக் கின்றான்.

12. இரவையும் பகலையும் நாம் இரண்டு அத்தாட்சி களாக்கினோம். இரவை இருண்டதாகவும், உங்க ளுடைய இரட்சகரிடமிருந்து வாழ்வாதாரங்களை நீங்கள் அதில் தேடிக் கொள்ளும் பொருட்டு, பகலைப் பிரகாசமானதாகவும் நாம் ஆக்கினோம். இன்னும் உங்களுக்கு இது காலம்கணிக்கும் ஒரு வழிமுறையையும், கணக்கிடுவதற்கு ஓர் உபாயத் தையும் நிர்மாணிக்கின்றது. இவ்விதமாக நாம் ஒவ்வொன்றையும் விரிவாக விவரிக்கின்றோம்.

*ஒளிநாடா**

13. ஒவ்வொரு மனிதனின் விதியையும் நாம் பதிவு செய்திருக்கின்றோம்; அது அவன் கழுத்தில் கட்டப் பட்டுள்ளது. உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவன் காணக்கூடிய ஒரு பதிவேட்டை நாம் அவனி டம் கொடுப்போம்.

14. நீயே உன் சொந்தப் பதிவேட்டைப் படி. இன்றைய தினம், உனக்குரிய கணக்காளனாக, நீயே போது மானவன்.

15. வழிநடத்தப்பெற்றவரெல்லாம், தன் சொந்த நலனுக் காகவே வழிநடத்தப்படுகின்றார், மேலும் வழிதவறிச் செல்பவரெல்லாம் தனக்கே கேடாகத்தான் அவ்வாறு செய்கின்றார். எந்தப் பாவியும் மற்றெவருடைய பாவத் தையும் சுமக்கமாட்டான். முதலில் ஒரு தூதரை அனுப்பி வைக்காமல் ஒருபோதும் நாம் தண்டிப்ப தில்லை.

16. எந்தச் சமூகத்தையேனும் நாம் அழிப்பதாக இருந் தால், அதன் தலைவர்களை அங்கு ஏராளமான சீர் கேடுகளைச் செய்வதற்கு நாம் அனுமதிப்போம். தண்டனைக்கு அவர்கள் தகுதியானவுடன், அதனை முற்றிலும் நாம் அழித்துவிடுவோம்.

17. நோவாவுக்குப் பின்னர் எத்தனையோ தலைமுறை யினரை நாம் அழித்திருக்கின்றோம். தன் ஊழியர் களின் பாவங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் உம்மு டைய இரட்சகர் மிகத்திறன் வாய்ந்தவர்; அவர் முற்றிலும் நன்கறிந்தவர், பார்ப்பவர்.

*இவ்வுலகில் உங்கள் முன்னுரிமைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுங்கள்*

18. எவனொருவன் விரைந்தோடும் இவ்வுலகைத் தனது முன்னுரிமையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின் றானோ, அவனுக்கு நாம் கொடுக்கத் தீர்மானித்த வற்றை அவனிடம் விரைந்திடச் செய்வோம், பின்னர் அவனை எரிகிடங்கிற்கு உட்படுத்தி விடுவோம், அங்கே அவன் இழிவடைந்தவனும் தோற்கடிக்கப் பட்டவனுமாகி, நிரந்தரமாகத் துன்பப்படுவான்.

*மறுவுலகம்*

19. மறுவுலகைத் தனது முன்னுரிமையாகத் தேர்ந்தெ டுத்துக் கொண்டு, நம்பிக்கை கொண்ட நிலையில், நன்னெறிகள் புரிவோரைப் பொறுத்தவரை, அவர் களுடைய முயற்சிகள் பாராட்டப்படும்.

20. அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாம் வழங்குகின் றோம்; அவர்களுக்கும் இவர்களுக்கும் உம்முடைய இரட்சகரின் கொடைகளில் இருந்து நாம் வழங்கு கின்றோம். உம்முடைய இரட்சகரின் கொடைகள் தீர்ந்து போகாதவை.

21. சில மக்களை மற்றவர்களைவிட மேலாக *(இவ்வுல கில்)* நாம் எவ்வாறு தேர்ந்தெடுத்திருக்கின்றோம் என்பதைக் கவனித்துப் பார்ப்பீராக. மறுவுலகின் வேறுபாடுகள் மிகப்பெரிதானதும் மிகவும் விசேஷ மானதும் ஆகும்.

*முக்கியக் கட்டளைகள்*

22. இகழப்பட்டவராகவும் அவமானமடைந்தவராகவும் நீர் ஆகிவிடாதிருக்கும் பொருட்டு, **கடவுள்**–வுடன் வேறு எந்தத் தெய்வத்தையும் நீர் அமைத்துக் கொள்ள வேண்டாம்.

23. அவரை அன்றி நீர் வழிபடக்கூடாதெனவும், உம்மு டைய பெற்றோர்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டு மெனவும் உம்முடைய இரட்சகர் விதித்துள்ளார். அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ உயிரோ டிருக்கும் வரை, அவர்களை நோக்கி நீர் "சே" *(வெறுப் பைக் காட்டும் மிகச்சிறிய செய்கை)* என்று ஒரு போதும் கூறி விட வேண்டாம், அன்றி அவர்களிடத் தில் நீர் கூச்சலிடவும் வேண்டாம், நீர் அவர்களை இணக்கத்துடன் நடத்திட வேண்டும்.

**17:13 பிறப்பிலிருந்து இறப்புவரை, ஓர் ஒளிநாடாவில் உள்ளதைப்போல், உங்கள் வாழ்க்கை ஏற்கெனவே பதிவு செய்யப் பட்டுள்ளது. உயிர்த்தெழுப்பப்படும்போது, அதே பதிவு நமக்குக் கிடைக்கக்கூடியதாக ஆக்கப்படும். பார்க்க 57:22 மற்றும் பின் இணைப்பு 14.*

24. மேலும் பணிவு மற்றும் கனிவின் இறக்கைகளை அவர்களுக்காகத் தாழ்த்திக் கொள்ளும், மேலும் கூறும், "என் இரட்சகரே, அவர்கள் மீது கருணை கொள்வீராக, ஏனெனில் அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து என்னை வளர்த்து வந்தனர்."

25. உங்கள் இரட்சகர் உங்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களைப்பற்றி முற்றிலும் அறிந்திருக்கின்றார். நீங்கள் நன்னெறிகளைப் பராமரித்து வந்தால், வருந்துகின்றவர்களை அவர் மன்னிப்பவராக இருக்கின்றார்.

26. உறவினர்களுக்கும், தேவையுடையவர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், உரிய தர்மத்தை நீங்கள் கொடுக்க வேண்டும், ஆனால் மிதமிஞ்சியும், ஊதாரித்தனமாகவும் இருக்கக் கூடாது.

27. ஊதாரிகள் சாத்தானிகளின் சகோதரர்கள் ஆவர், மேலும் சாத்தானோ தன் இரட்சகருக்கு நன்றியற்றவன் ஆவான்.

28. உம்முடைய இரட்கரின் கருணையை நீர் தேடியவராக இருக்கும்போது, அவர்களிடமிருந்து நீர் திரும்பிக் கொள்ள நேர்ந்தாலும், மிக நல்ல முறையில் நீங்கள் அவர்களை நடத்திட வேண்டும்.

*கஞ்சத்தனம் கண்டனம் செய்யப்படுகின்றது*

29. கஞ்சத்தனமாக உமது கரங்களை உமது கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டாம், மூடத்தனமாக அதனைத் திறந்து விட்டு விடவும் வேண்டாம், பழிக்கப்பட்டவராகவும், வருத்தப்பட்டவராகவும் நீர் ஆகிவிடாதிருக்கும் பொருட்டு.

30. ஏனெனில் தான் தேர்ந்தெடுக்கின்ற எவரொருவருக்கும் உம்முடைய இரட்சகர் வாழ்வாதாரத்தை அதிகரிக்கின்றார், மேலும் அதனைக் குறைக்கவும் செய்கின்றார். தன் படைப்புக்களை அவர் முற்றிலும் நன்கறிந்தவர், பார்ப்பவர்.

*கருக்கலைப்பு கொலையே ஆகும்*

31. வறுமையின் அச்சத்தினால் உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்ய வேண்டாம். அவர்களுக்கும், அவ்வண்ணமே உங்களுக்கும் நாமே வழங்குகின்றோம். அவர்களைக் கொல்வது மிகப்பெரும் குற்றமாகும்.

32. நீங்கள் விபசாரம் செய்ய வேண்டாம்; அது மிகப் பெரியதொரு பாவம், மேலும் கெட்டதொரு நடத்தையும் ஆகும்.

33. எந்த ஒரு நபரையும் நீங்கள் கொலை செய்ய வேண்டாம் – ஏனெனில் **கடவுள்** உயிர்களைப் புனிதமானதாக்கியிருக்கின்றார் – நீதியின் பாதையிலேயே தவிர. அநீதமாக ஒருவர் கொலை செய்யப்பட்டு விட்டால், அப்போது நாம் அவருடைய வாரிசுக்கு நீதியை நிறைவேற்றும் அதிகாரத்தைத் தருகின்றோம். இதனால், கொலைக்குப் பழி தீர்ப்பதில் வரம்புகளை அவர் மீறவேண்டாம், அவர் உதவி செய்யப்பட்டவராக இருப்பார்.

34. அனாதைகளின் பணத்தை அவர்கள் முதிர்ச்சியை அடையும் வரை, அவர்களுடைய சொந்த நலனுக்காகவே தவிர, நீங்கள் தொட வேண்டாம். உங்களுடைய உடன்படிக்கைகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும், ஏனெனில் ஓர் உடன்படிக்கை என்பது மிகப் பெரியதொரு பொறுப்பு ஆகும்.

35. நீங்கள் வணிகம் செய்யும் போது அளவையை நிறைவாகக் கொடுக்கவும், நியாயமாக எடைபோடவும் வேண்டும். இதுவே மேலானதும் நன்னெறி மிகுந்ததும் ஆகும்.

*முக்கியமான உபதேசம்*

36. உங்களுக்காக நீங்களே சரிபார்த்துக் கொண்டாலே அன்றி, எந்தத் தகவலையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நான் உங்களுக்குக் கேட்கும் திறனையும், கண்பார்வையையும், மூளையையும் வழங்கியுள்ளேன், மேலும் அதனைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் பொறுப்பாகின்றீர்கள்.

37. பூமியின் மீது நீங்கள் கர்வத்துடன் நடைபோட வேண்டாம் – பூமியின் ஊடே நீங்கள் துளைபோட்டுவிட முடியாது, அன்றியும் நீங்கள் மலையைப் போல் உயர்ந்து விடவும் முடியாது.

38. கெட்ட நடத்தை அனைத்தும் உம்முடைய இரட்சகரால் கண்டனம் செய்யப்படுகின்றது.

*குர்ஆன்தான் ஞானம்*

39. இது உம்முடைய இரட்சகர் உமக்கு உள்ளுணர்வூட்டிய ஞானத்தில் சில ஆகும். பழிக்கப்பட்டவராகவும் தோற்கடிக்கப்பட்டவராகவும் எரிகிடங்கினை நீர் அடைந்துவிடாதிருக்கும் பொருட்டு, **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வத்தை நீர் அமைத்துக் கொள்ள வேண்டாம்.

40. உங்கள் இரட்சகர் வானவர்களைத் தனக்கு மகள்களாகத் தந்து கொண்டு, அதே சமயம் உங்களுக்கு மகன்களைத் தந்து விட்டாரா ?! இத்தகையதொரு இறைநிந்தனையை எப்படி நீங்கள் உதிர்க்கலாம் ?

41. அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு, இந்தக் குர்ஆனில் *(எல்லாவிதமான உதாரணங்களையும்)* நாம் எடுத்துரைத்திருக்கின்றோம், ஆனால் அது அவர்களுடைய வெறுப்பைத்தான் அதிகரிக்கின்றது.

42. கூறுவீராக, "அவர்கள் கூறுவதைப்போல், மற்றெந்தத் தெய்வங்களும் அவருடன் இருந்திருந்தால், அவர்கள் அரியாசனத்தின் உடமையாளரை வெற்றி கொள்ள முயன்றிருப்பார்கள்."

43. அவர் துதிப்பிற்குரியவர், அவர்களுடைய கூற்றுக்களுக்கு அப்பாற்பட்டு, அவர் மிக மிக உயர்வானவர்.

*ஒவ்வொன்றும் கடவுளைத் துதிக்கின்றது*

44. ஏழு பிரபஞ்சங்களும், பூமியும், இன்னும் அவற்றி லுள்ள ஒவ்வொருவரும் அவரைத் துதி செய்கின்ற னர். அவரைத் துதிக்காத எதுவும் அங்கில்லை, ஆனால் அவர்களுடைய துதியை நீங்கள் புரிந்து கொள்வதில்லை. அவர் கனிவானவர், மன்னிப்பவர்.

*நம்பமறுப்பவர்கள் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாது*

45. நீர் குர்ஆனைப் படிக்கும் போது, உமக்கும் மறு வுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதோருக்கும் இடையில் காணமுடியாததொரு தடுப்பினை நாம் அமைத்து விடுகின்றோம்.

*குர்ஆன்: ஒரே மார்க்க ஆதாரம்*

46. அவர்கள் அதனைப் புரிந்து கொள்வதை விட்டுத் தடுப்பதற்காக, அவர்களுடைய மனங்களைச் சுற்றிக் கவசங்களையும், அவர்களுடைய காதுகளில் செவிட்டுத்தனத்தையும் நாம் அமைத்து விடுகின் றோம். மேலும் குர்ஆனை மட்டும்* பயன்படுத்தி, உம் முடைய இரட்சகரைப்பற்றி நீர் உபதேசித்தால், அவர் கள் வெறுப்பினால் விரண்டோடி விடுகின்றனர்.

47. உம்மைச் செவியேற்கும்போது அவர்கள் விளங்கு வது என்ன என்பதை நாம் நன்கறிகின்றோம், மேலும் அவர்கள் இரகசியமாகச் சதிசெய்யும் போது – நம்ப மறுப்பவர்கள் கூறுகின்றனர், "நீங்கள் சித்த சுவா தீனமற்ற ஒரு மனிதனையே பின்பற்றுகின்றீர்கள்."

48. அவர்கள் உம்மை எவ்வாறு வர்ணிக்கின்றனர் என்ப தையும், எவ்வாறு இது அவர்களைப் பாதையிலிருந்து வழிதவறச் செய்கின்றது என்பதையும் கவனித்துப் பார்ப்பீராக.

49. அவர்கள் கூறினர், "எலும்புகளாகவும் துண்டுகளா கவும் நாம் மாறிவிட்ட பின்னர், புதிதாக நாம் உயிர்த் தெழுப்பப்படுவோமா ?!"

50. கூறும், "நீங்கள் பாறைகளாகவோ அல்லது இரும்பா கவோ மாறி விட்ட போதிலும்.

51. "நிகழவே சாத்தியமற்றது என்று நீங்கள் கருதும் எந்த வகைப்படைப்பாக நீங்கள் மாறிவிட்ட போதி லும்." அப்போது அவர்கள் கூறுவார்கள், "யார் நம் மைத் திரும்பக் கொண்டு வருவார் ?" கூறும், "முதல் தடவை உங்களைப் படைத்தாரே அந்த ஒரு வர்" பின்னர் அவர்கள் தங்கள் மண்டைகளை ஆட் டியவாறு கூறுவார்கள், "அது எப்போது நிகழும் ?" கூறும், "அது நீங்கள் நினைப்பதை விடவும் அருகில் இருக்கக்கூடும்."

52. அவர் உங்களை அழைக்கும் அந்நாளில், அவரைப் புகழ்வதன் மூலம் நீங்கள் மறுமொழியளிப்பீர்கள், மேலும் ஒரு குறுகிய காலம்தான் இந்த வாழ்வில் நீங்கள் நிலைத்திருந்தீர்கள் என்பதை அப்போது நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

*ஒருவரை ஒருவர் இணக்கத்துடன் நடத்திக் கொள்ளுங்கள்*

53. இயன்றவரை மிகச்சிறப்பாக ஒருவரை ஒருவர் நடத்திக்கொள்ளும்படி என் ஊழியர்களிடம் கூறு வீராக, ஏனெனில் சாத்தான் எப்போதும் அவர்களுக் கிடையில் ஒரு பிளவை உண்டாக்க முயற்சிப்பான். நிச்சயமாக, சாத்தான் மனிதர்களுடைய மிகத் தீவிர மான விரோதியாவான்.

54. உங்கள் இரட்சகர் உங்களை நன்கறிவார். அவரு டைய அறிவுக்கேற்ப, கருணையை உங்கள் மீது அவர் பொழியலாம், அல்லது அவர் உங்களைப் பழி தீர்க் கவும் செய்யலாம். அவர்களுடைய வழக்குரைஞராக இருப்பதற்காக உம்மை நாம் அனுப்பவில்லை.

55. உம்முடைய இரட்சகர் வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரையும் நன்கறிந்தவர். இந்த அறிவிற்கேற்ப சில நபிமார்களை மற்றவர்களை விட மேலாக நாம் தேர்ந்தெடுத்தோம். உதாரணத்திற்கு, டேவிட்டுக்கு நாம் சங்கீதத்தைக் கொடுத்தோம்.

56. கூறும், "அவருடன் நீங்கள் அமைத்துக் கொண்ட போலித்தெய்வங்கள் எதை வேண்டுமானாலும் இறைஞ்சிக் கொள்ளுங்கள்." உங்கள் துன்பங்களை நிவர்த்திக்கும் சக்தி எதுவும் அவர்களுக்கு இல்லை, அன்றியும் அவர்களால் அவற்றைத் தடுத்து விடவும் முடியாது.

*போலித் தெய்வங்களாக்கப்பட்ட நல்லோர்கள் கடவுளை மட்டுமே வழிபடுகின்றனர்*

57. அவர்கள் இறைஞ்சுகின்ற போலித் தெய்வங்கள் கூட தங்களுடைய இரட்சகரின் பால் வழிகளையும் உபா யங்களையும் தேடிக் கொண்டிருக்கின்றனர். அவரு டைய கருணைக்காக அவர்கள் பிரார்த்திக்கின்றனர், மேலும் அவருடைய தண்டனையை அஞ்சுகின்றனர். நிச்சயமாக, உம்முடைய இரட்சகரின் தண்டனை, அச்சமூட்டுவதாகவே உள்ளது.

58. உயிர்த்தெழுப்பப்படும் நாளுக்கு முன்னர் நம்மால் அழிக்கப்பட இல்லாத, அல்லது கடும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படாத எந்த ஒரு சமுதாயமும் இல் லை. இது முன்னரே புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

**17:46 அரபி வார்த்தை (வஹ்தஹு) "மட்டும்" என்பது 7:70, 39:45, 40:12 & 84 மற்றும் 60:4, ஆகிய வசனங்களில் கடவுளைக் குறிக்கின்றது. இந்த எண்களை நீங்கள் கூட்டினால் உங்களுக்கு கிடைப்பது 361, 19x19 ஆனால் குர்ஆனைக் குறிக்கின்ற, 17:46ஐ நீங்கள் உட்படுத்தினால், கூட்டுத்தொகை 19ன் பெருக்குத் தொகையாகாது. எனவே 17:46ல் உள்ள "மட்டும்" என்பது குர்ஆனையே குறிக்கின்றது (பின்இணைப்பு 18).*

*பழைய வகையான அற்புதங்கள் வழக்கொழிந்ததாக ஆக்கப்பட்டுவிட்டன*

59. அற்புதங்களை அனுப்புவதிலிருந்து நம்மைத் தடுத்தது என்னவெனில், முந்திய தலைமுறையினர் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர் என்பது தான். உதாரணமாக, தமூதுக்கு ஓர் ஒட்டகத்தை நாம் காட்டினோம். ஆழ்ந்த ஓர் *(அற்புதம்)*, ஆனால் அவர்கள் அதற்கெதிராக வரம்புமீறினர். பக்தியை ஊட்டுவதற்காக மட்டுமே நாம் அற்புதங்களை அனுப்பினோம்.

60. உம்முடைய இரட்சகர் மனிதர்களை முற்றிலும் கட்டுப்படுத்துகின்றார் என்பதை உமக்கு நாம் தெரியப் படுத்தினோம், மேலும் நாம் உமக்குக் காட்டிய காட்சியையும், குர்ஆனில்* சபிக்கப்பட்டுள்ள அந்த மரத்தையும் மனிதர்களுக்கு ஒரு சோதனையாக நாம் ஆக்கினோம். அவர்களுக்கு பக்தியை ஊட்டுவதற்காக உறுதியான சான்றுகளை அவர்களுக்கு நாம் காட்டினோம், ஆனால் இது அவர்களுடைய எதிர்ப்பைத்தான் அதிகரித்தது.

*சாத்தான் மனிதர்களை ஏய்க்கின்றான்*

61. வானவர்களிடம் நாம் "ஆதமின் முன் சிரம்பணியுங்கள்," என்று கூறிய போது, அவர்கள் சிரம் பணிந்தனர், சாத்தானைத் தவிர. அவன் கூறினான், நீர் சேற்றால் படைத்த ஒருவருக்கு நான் சிரம்பணிய வேண்டுமா ?"

62. அவன் கூறினான், "எனக்கும் மேலாக அவரை நீர் கௌரவப்படுத்தியதால், உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை எனக்கு நீர் அவகாசம் அளிப்பீராயின், அவருடைய சந்ததியினர் அனைவரையும் நான் கைப்பற்றி விடுவேன், ஒரு சிலரைத் தவிர."

63. அவர் கூறினார், "அப்படியென்றால் சென்றுவிடு; நீயும் உன்னைப் பின்பற்றியவர்களும் உங்களுக்குரிய கூலியாக நரகத்தைச் சென்றடைவீர்கள்; ஒரு நியாயமான கூலி.

64. "உனது குரலைக் கொண்டு நீ அவர்களை வசீகரிக்கலாம், மேலும் அவர்களுக்கெதிராக உனது படைபலம் அனைத்தையும் உனது ஆட்கள் அனைவரையும் ஒன்று திரட்டிக்கொள், மேலும் அவர்களுடைய பணத்திலும் பிள்ளைகளிலும் பங்கு பெற்றுக் கொள், மேலும் அவர்களுக்கு வாக்குறுதி கொடு. சாத்தான் வாக்களிக்கும் எந்த ஒன்றும் ஒரு மாயையைக் காட்டிலும் அதிகம் எதுவுமில்லை.

65. "எனது ஊழியர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மீது உனக்கு ஆதிக்கம் எதுவுமில்லை." பொறுப்பேற்றுக் கொள்ள உம்முடைய இரட்சகர் போதுமானவர்.

66. உம்முடைய இரட்சகர்தான் அவருடைய அருட்கொடைகளை நீங்கள் தேடிக்கொள்ளும் பொருட்டு, பெருங்கடலில்* கப்பல்களை மிதக்கும்மாறு செய்தவர். அவர் உங்கள்பால் மிக்க கருணை கொண்டவராக இருக்கின்றார்.

*கஷ்ட காலத்தில் நண்பர்கள்*

67. நடுக்கடலில் நீங்கள் கஷ்டத்தில் சிக்கிக் கொண்டால், நீங்கள் உங்களுடைய போலித் தெய்வங்களை மறந்து விடுகின்றீர்கள், மேலும் கலப்பற்றவாறு அவரை மட்டுமே இறைஞ்சுகின்றீர்கள். ஆனால் அவர் உங்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்ட உடன், நீங்கள் மீண்டும் உங்கள் பழைய நிலைக்குத் திரும்பி விடுகின்றீர்கள். உண்மையில், மனிதன் நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.

68. கரையின் மேல், பூமி உங்களை விழுங்கி விடும்மாறு அவர் செய்து விடமாட்டார் என்று நீங்கள் உத்தரவாதம் கொண்டிருக்கின்றீர்களா ? அல்லது, உங்கள் மீது ஒரு சூறைக்காற்றை அனுப்பி, பாதுகாப்பவர் எவரையும் நீங்கள் காணாதபடி அவர் ஆக்கி விடமாட்டார் என்று ?

69. இன்னொரு முறை அவர் உங்களைக் கடலுக்குத் திருப்பி, பின்னர் உங்களுடைய நம்பமறுத்தலின் காரணமாக உங்களை மூழ்கடித்து விடக் கூடிய ஒரு புயல் காற்றை அனுப்பி விட மாட்டார் என்று நீங்கள் உத்தரவாதம் கொண்டிருக்கின்றீர்களா ? இது நிகழ்ந்து விட்டால், மற்றுமொரு வாய்ப்பை உங்களுக்கு நாம் தர மாட்டோம்.

70. ஆதமின் சந்ததியினரை நாம் கௌரவப்படுத்தினோம், மேலும் கரையிலும் கடலிலும் அவர்களுக்கு சவாரிகளை வழங்கினோம். நல்ல வாழ்வாதாரங்களை அவர்களுக்கு நாம் வழங்கினோம், மேலும் நமது படைப்பினங்கள் பலவற்றை விட அவர்களுக்கு மிகப்பெரும் மேன்மைகளை நாம் தந்தோம்.

71. ஒவ்வொரு சமூகத்தினரையும் அவர்களுடைய பதிவேடுகளுடன் நாம் வரவழைக்கும் அந்நாள் வரும். நன்னெறியின் பதிவேடு கொடுக்கப்பட்டோரைப் பொறுத்த வரை, அவர்கள் தங்கள் பதிவேடுகளைப் படிப்பார்கள், மேலும் சிறிதளவு அநீதியையும் அனுபவிக்கமாட்டார்கள்.

---

**17:60* வசனங்கள் 17:1 மற்றும், 53:1–18ல் கூறப்பட்டுள்ளபடி, குர்ஆனைப்பெற்றுக் கொள்வதற்காக மிக உயர்வான வானத்திற்கு முஹம்மத் சென்ற பயணம் ஒரு சோதனையே, ஏனெனில் மக்கள் விசுவாசத்தின் அடிப்படையில் முஹம்மதை நம்ப வேண்டியிருந்தது.*

**17:66* பௌதீகயியல் மற்றும் பௌதீக வேதியியல் மூலமாக, தண்ணீரானது நமது பல்வேறு தேவைகளை நிறைவு செய்ய முற்றிலும் ஏற்றதாக ஆகுமளவு தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளது என்று நாம் இப்போது அறிந்துள்ளோம்.*

72. இந்த வாழ்வில் குருடர்களாக இருந்தவர்களைப் பொறுத்தவரை, மறுவுலகிலும் அவர்கள் குருடர்களாக இருப்பார்கள்; அதை விடவும் மிக மோசமாக.

*கடவுள் தூதரை பலப்படுத்துகின்றார்*

73. நாம் உமக்குக் கொடுத்த வெளிப்பாடுகளை விட்டு அவர்கள் உம்மைக் கிட்டத்தட்டத் திருப்பிவிட்டனர். உம்மை ஒரு நண்பராகத் கருதிக் கொள்வதற்காக, வேறு எதையாவது நீர் புனைந்து கூற வேண்டுமென்று அவர்கள் விரும்பினர்.

74. உம்மை நாம் பலப்படுத்தி இருக்காவிட்டால், நீர் கிட்டத்தட்ட சற்றேனும் அவர்கள் பக்கம் சாய்ந்திருக்கக் கூடும்.

75. அதனை நீர் செய்திருந்தால், இந்த வாழ்விலும், மரணத்திற்குப் பின்னரும், உமது தண்டனையை நாம் இருமடங்காக ஆக்கியிருப்போம், மேலும் நமக்கெதிராக உமக்கு உதவி செய்ய எவர் ஒருவரையும் நீர் கண்டிருக்க மாட்டீர்.

76. உம்மைவிட்டு நீங்கிக் கொள்வதற்காக, நாட்டைவிட்டு கிட்டத்தட்ட அவர்கள் உம்மை வெளியேற்றி விட்டனர், நீர் விலகிச் சென்றவுடன் அவர்கள் தங்களுடைய பழைய நிலைக்குத் திரும்பிவிடலாம் என்பதற்காக.

77. உமக்கு முன்னர் நாம் அனுப்பிய அனைத்துத் தூதர்களுக்கும், இந்த நிலைதான் தவறாது இருந்து வந்தது, மேலும் நமது வழிமுறை ஒருபோதும் மாறுவதில்லை என்பதை நீர் கண்டு கொள்வீர்.

*நண்பகல் தொழுகை*

78. நண்பகலில் சூரியன் அதன் உச்சியிலிருந்து சாய்ந்து அஸ்தமனத்தை நோக்கி அது நகரும் பொழுது நீர் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிகாலையில் நீர் குர்ஆன் *(ஓதுதலை)* கடைப்பிடிக்கவும் வேண்டும். அதிகாலையில் குர்ஆன் *(ஓதுதல்)* சாட்சி பகரப்படுகின்றது.

*தியானம்*

79. மேலதிகமான நன்மைக்காக, உம்முடைய இரட் சகர் ஒரு கௌரவமான அந்தஸ்திற்கு உம்மை உயர்த்தக் கூடும் என்பதற்காக, இரவுப் பொழுதில், நீர் தியானம் செய்ய வேண்டும்.

80. மேலும் கூறும், "என் இரட்சகரே, கௌரவமானதொரு நுழைவுடன் நுழைய என்னை அனுமதிப்பீராக, மேலும் கௌரவமானதொரு புறப்பாட்டுடன் என்னை புறப்பட அனுமதிப்பீராக, மேலும் உம்மிடமிருந்து சக்திமிக்கதொரு ஆதரவை எனக்கு வழங்குவீராக.

81. பிரகடனப்படுத்துவீராக, "சத்தியம் மிகைத்து விட்டது, மேலும் அசத்தியம் மறைந்துவிட்டது; தவிர்த்து விட முடியாதவாறு அசத்தியம் மறைந்தே போகும்."

*நிவாரணமும் கருணையும்*

82. நம்பிக்கை கொண்டோருக்கு நிவாரணத்தையும் கருணையையும் இந்தக் குர்ஆனில் நாம் இறக்கி அனுப்புகின்றோம். அதே சமயம், வரம்புமீறுபவர்களின் அக்கிரமத்தைத்தான் இது அதிகரிக்கின்றது.

83. மனிதனை நாம் ஆசீர்வதிக்கும்போது, அவன் மூழ்கிப் போனவனாகவும், கவனமற்றவனாகவும் ஆகி விடுகின்றான். ஆனால் கஷ்டங்கள் அவனைத் தாக்கும் போது, அவன் மனச் சோர்வடைந்தவனாக மாறி விடுகின்றான்.

84. கூறும், "ஒவ்வொருவரும் தனது நம்பிக்கைக்கு ஏற்பவே செயல்படுகின்றார், மேலும் சரியான பாதையில் வழிநடத்தப்பட்டவர் எவர் என்பதை உங்கள் இரட்சகர் நன்கறிவார்."

*இறைவெளிப்பாடு:*
*அனைத்து அறிவின் மூலாதாரம்*

85. வெளிப்பாடுகளைப் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். கூறும், "வெளிப்பாடானது என் இரட்சகரிடமிருந்து வருகின்றது. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவு சொற்பமேயாகும்."

86. நாம் நாடினால், உமக்கு நாம் வெளிப்படுத்தியவற்றை நம்மால் திருப்பி எடுத்துக் கொள்ள முடியும், பின்னர் நமக்கெதிராகப் பாதுகாவலர் எவரையும் நீர் காண மாட்டீர்.

87. இது உம் இரட்சகரிடமிருந்து கருணையே அன்றி வேறில்லை. உம்மீது அவருடைய நல்லாசிகள் மிகப் பெரிதாக உள்ளன.

*குர் ஆனுடைய கணிதக் கட்டமைப்பு*

88. கூறும், "எல்லா மனிதர்களும், எல்லா ஜின்களும் இது போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டு வருவதற்காக ஒன்று சேர்ந்தாலும், இதைப்போன்ற எதையும் அவர்களால் ஒருபோதும் கொண்டு வர முடியாது, அவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு எவ்வளவு துணை செய்து கொண்டனர் என்பது பொருட்டல்ல."

89. இந்தக் குர்ஆனில் மனிதர்களுக்காக நாம் எல்லா விதமான உதாரணங்களையும் எடுத்துரைத்திருக்கின்றோம், ஆனால் அதிகமான மனிதர்கள் நம்ப மறுத்தலையே வலியுறுத்துகின்றனர்.

*கடவுளின் தூதர்கள் சவால் விடப்படுகின்றனர்*

90. அவர்கள் கூறினர், "பூமியிலிருந்து ஒரு நீரூற்றைப் பொங்கி வரும்படி நீர் செய்தாலன்றி உம்மை நாங்கள் நம்பமாட்டோம்.

91. "அல்லது ஆறுகள் அதன் ஊடே ஓடக்கூடிய, பேரீச்சை மற்றும் திராட்சைகள் கொண்ட ஒரு தோட்டத்தை நீர் சொந்தமாகக் கொண்டிருந்தால் அன்றி.

92. "அல்லது நீர் கூறிய வண்ணம், விண்ணிலிருந்து பாளங்களை எங்கள் மீது நீர் விழச் செய்தாலன்றி. அல்லது **கடவுள்**–ஐயும் வானவர்களையும் எங்கள் கண்களின் முன்னால் கொண்டு வந்தாலன்றி.

93. "அல்லது ஆடம்பரமானதோர் மாளிகையை நீர் சொந்தமாகக் கொண்டிருந்தாலன்றி, அல்லது வானத்தினுள் நீர் ஏறிச் சென்றாலன்றி. அவ்வாறு நீர் ஏறிய போதிலும், நாங்கள் படிக்கக் கூடிய ஒரு புத்தகத்தை நீர் கொண்டு வந்தாலன்றி நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம்."* கூறும், "என் இரட்சகர் துதிப்பிற்குரியவர். நான் ஒரு மனிதத் தூதன் என்பதை விட அதிகமாக எதுவும் ஆவேனா ?"

*தூதுத்துவம்: ஓர் அடிப்படையான சோதனை*

94. வழிகாட்டல் அவர்களிடம் வந்தபோது நம்பிக்கை கொள்வதிலிருந்து மனிதர்களைத் தடுத்தது என்னவென்றால், "ஒரு மனிதரைத்தான் **கடவுள்** தூதராக அனுப்பினாரா ?" என்று அவர்கள் கூறியது தான்.

95. கூறும், "பூமியானது வானவர்கள் வசிக்கக் கூடியதாக இருந்திருந்தால், வானவரான ஒரு தூதரை விண்ணிலிருந்து நாம் அவர்களுக்கு இறக்கி அனுப்பியிருப்போம்."

*கடவுள்தான் எனது சாட்சி*

96. கூறும், "எனக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு சாட்சியாக இருக்கக் **கடவுள்** போதுமானவர். அவரை வழிபடுபவர்களை அவர் முற்றிலும் நன் கறிந்தவர், பார்ப்பவர்.

97. எவரொருவரைக் **கடவுள்** வழிநடத்துகின்றாரோ, அவர்தான் உண்மையில் வழிகாட்டப்பட்டவர். மேலும் எவரையெல்லாம் அவர் வழிகேட்டில் அனுப்பி விடுகின்றாரோ, அவர்களுக்கு அவரையன்றி எஜமானர்களையும் அதிபதிகளையும் நீர் ஒருபோதும் காணமாட்டீர். உயிர்த்தெழுப்பப்படும் நாளில் வலுக்கட்டாயமாக அவர்களை நாம் ஒன்று திரட்டுவோம்; குருடர்கள், ஊமைகள், மேலும் செவிடர்கள். அவர்களுடைய சேருமிடம் நரகமேயாகும்; அதன் சூடு தணியும்போதெல்லாம், அவர்களுடைய நெருப்பை நாம் அதிகரிப்போம்.

*அவர்களுடைய உள்ளார்ந்த எண்ணங்கள்*

98. நமது வெளிப்பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததால், அவர்களுக்குரிய நியாயமான தண்டனை இத்தகையதேயாகும். அவர்கள் கூறினர், "எலும்புகளாகவும், துண்டுகளாகவும் நாம் மாறிய பின்னர், புதியதொரு படைப்பாக நாம் உயிர்த்தெழுப்பப்படுவோமா ?"

99. வானங்களையும், பூமியையும் படைத்த அந்தக் **கடவுள்** அதே போன்ற படைப்புகளைப் படைக்கும் திறனுடையவர் என்பதை அவர்களால் காண முடியவில்லையா ? மாற்றமுடியாததொரு வாழ்க்கைத் தவணையை அவர்களுக்காக அவர் முன்னரே தீர்மானித்திருக்கின்றார் ? இருப்பினும், நம்பமறுப்பவர்கள் நம்பமறுத்தலையே வலியுறுத்துகின்றனர்.

100. பிரகடனப்படுத்துவீராக, "என்னுடைய இரட்சகரின் கருணைப் பொக்கிஷங்களையே நீங்கள் சொந்தமாகக் கொண்டிருந்தாலும், அவற்றை நீங்கள் தீர்த்து விடக்கூடும் என்று அஞ்சி, நீங்கள் அவற்றைக் தடுத்து நிறுத்திக் கொள்வீர்கள். மனிதப்படைப்பு கஞ்சத்தனம் கொண்டதாக இருக்கின்றது."

*மோஸஸுூம் ஃபேரோவும்*

101. ஒன்பது ஆழ்ந்த அற்புதங்கள் கொண்டு மோஸஸுக்கு நாம் ஆதரவளித்தோம் – இஸ்ரேலின் சந்ததியினரைக் கேட்டுக்கொள்ளுங்கள். அவர்களிடம் அவர் சென்ற போது, ஃபேரோ அவரிடம் கூறினான், "நான் நினைக்கின்றேன், மோஸஸே, நீர் சூனிய வசப்பட்டவர் என்று."

102. அவர் கூறினார், "கண்கூடாக, வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகரைத் தவிர, எவராலும் இவற்றை தெளிவாகக்காட்ட இயலாது என்பதை நீ நன்கறிவாய். நான் நினைக்கின்றேன், ஃபேரோவே, நீ அழிந்தாய் என்று."

103. அவன் அவர்களை நாட்டை விட்டு வெளியே துரத்தியவாறு, அவர்களை பின்தொடர்ந்த போது, அவன் பக்கம் இருந்தவர்களுடன் சேர்த்து, அவனையும், அவர்கள் அனைவரையும் நாம் மூழ்கடித்தோம்.

**17:93 கடவுளின் உடன்படிக்கைத் தூதர், ரஷாத் கலீஃபா இவ்விதமான சவால்கள் விடப்பட்டார். ஒரு புதிய புத்தகத்தைக் கொண்டு வர வேண்டும், அல்லது விண்ணிலிருந்து பாளங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற சவால்கள் உட்பட வசனம் 3:81 கடவுளின் உடன்படிக்கைத் தூதருடைய பணிகளை வரையறுக்கின்றது. பின்இணைப்பு 2 & 26ல் மூழ்கடிக்கின்ற ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

104. மேலும் அதன் பின்னர் இஸ்ரவேலின் சந்ததியினரிடம் நாம் கூறினோம், "சென்று இந்த நாட்டில் வாழுங்கள். இறுதி முன்னறிவிப்பு நிகழ்ந்தேறும் போது, உங்கள் அனைவரையும் ஒரே கூட்டமாக நாம் ஒன்று திரட்டுவோம்."

*மனனம் செய்வதை எளிதாக்குவதற்காக குர்ஆன் மெதுவாக வெளிப்படுத்தப்பட்டது*

105. சத்தியம் நிறைந்ததாக, இதனை நாம் இறக்கி அனுப்பினோம், மேலும் சத்தியத்துடனே இது இறங்கி வந்தது. நற்செய்தியைக் கொண்டு செல்லும் ஒருவராகவும், அத்துடன் ஓர் எச்சரிப்பவராகவுமே அன்றி உம்மை நாம் அனுப்பவில்லை.

106. ஒரே தடவையில் இது அனைத்தையும் நாம் கீழே இறக்கிய போதிலும், மனிதர்களுக்கு ஒரு நீண்ட காலம் நீர் அதனைப் படித்துக் காட்டுவதற்கு ஏதுவாக, மெதுவாக நாம் வெளிப்படுத்திய ஒரு குர்ஆன்.

107. பிரகடனப்படுத்துவீராக, "இதில் நம்பிக்கை கொள்ளுங்கள், அல்லது இதில் நம்பிக்கை கொள்ளாதிருங்கள்." முந்திய வேதங்களிலிருந்து அறிவைப் பெற்றவர்கள், அவர்களுக்கு இது ஓதிக்காட்டப்படும் போது, சிரம் பணிந்தவர்களாக, முகவாய்க் கட்டைகளில் அவர்கள் கீழே விழுகின்றனர்.

108. அவர்கள் கூறுகின்றனர், "எங்கள் இரட்சகர் துதிப்பிற்குரியவர். இது எங்கள் இரட்சகரின் முன்னறிவிப்பைப் பூர்த்தி செய்கின்றது.

109. அவர்கள் சிரம் பணிந்தவர்களாகவும் தேம்பியழுதவர்களாகவும், தங்கள் முகவாய்க்கட்டைகள் மீது கீழே விழுகின்றனர். ஏனெனில் அது அவர்களுடைய பக்தியை அதிகரிக்கிறது.

110. கூறும், "**கடவுள்** என அவரை அழையுங்கள், அல்லது மிக்க அருளாளர் என அவரை அழையுங்கள்; எந்த ஒரு பெயரை நீங்கள் பயன்படுத்தினாலும், அழகிய பெயர்கள்தான் அவருக்குரியவை."

*தொடர்புத் தொழுகை (ஸலாத்) களின் தொனி*

உமது *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை நீர் மிகவும் சப்தமாகவோ, அன்றி இரகசியமாகவோ கூற வேண்டாம், நடுத்தரமானதொரு தொனியைப் பயன்படுத்துவீராக.

111. மேலும் பிரகடனப்படுத்துவீராக: "புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, அவர் ஒருபோதும் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுக்கவில்லை, அன்றி அவருடைய அரசுரிமையில் அவருக்குப் பங்குதாரர்களும் இல்லை, அன்றியும் பலஹீனம் காரணமாகக் கூட்டணி எதுவும் அவருக்குத் தேவையுமில்லை," மேலும் இடைவிடாது அவரைப் பெருமைப்படுத்துவீராக.

****

## சூரா 18: குகை (அல்–கஹ்ஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. இவ்வேதத்தைத் தன் ஊழியருக்கு வெளிப்படுத்தியதோடு, குறைகளற்றதாக அதனை ஆக்கிய **கடவுள்**–ஐப் புகழுங்கள்.

2. அவரிடமிருந்து கடுமையான தண்டனை குறித்து எச்சரிப்பதற்காகவும், நேரியதொரு வாழ்வு நடத்தும் நம்பிக்கையாளர்களுக்கு, அவர்கள் தாராளமான தொரு வெகுமதியைச் சம்பாதித்து விட்டனர் என்ற நற்செய்தியைச் சேர்ப்பிப்பதற்காகவும், ஆன ஒரு பூரணமாக்கப்பட்ட *(வேதம்)* ஆகும்.

3. அங்கே அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள்.

4. மேலும் "**கடவுள்** ஒரு மகனைப் பெற்றெடுத்திருக்கின்றார்!" என்று கூறுவோரை எச்சரிப்பதற்காக.

5. இதைப் பற்றிய எந்த அறிவையும் அவர்களோ, அன்றி அவர்களுடைய பெற்றோர்களோ கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய வாய்களிலிருந்து எப்படிப்பட்ட ஓர் இறைநிந்தனை வெளிவருகின்றது! அவர்கள் கூறுவது மிகப்பெரியதொரு பொய்யாகும்.

6. இந்த செய்திகளுக்கான அவர்களுடைய மறுமொழிக்காகவும், இதில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுப்பதற்காகவும், உம்மையே நீர் பழித்துக் கொள்ளக் கூடும்; நீர் துக்கமடையவும் கூடும்.

*உலக முடிவு*

7. அவர்களைச் சோதிப்பதற்காகவும், இவ்விதமாக அவர்களில் நன்மையான காரியங்கள் செய்பவர்களைச் சிறப்பிப்பதற்காகவும், பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் நாம் அலங்காரமாக ஆக்கியுள்ளோம்.

8. தவிர்த்துவிட முடியாதவாறு, அதன் மீதுள்ள ஒவ்வொன்றையும் நாம் துடைத்தெடுத்துவிட்டு, முற்றிலும் பொட்டலாக* அதனை விட்டு விடுவோம்.

*குகை வாசிகள்*

9. குகையில் வசித்தவர்கள் மற்றும் அவர்களோடு தொடர்பு கொண்ட எண்கள் பற்றி, வேறு எதற்கு நாம் உமக்குக் கூறுகின்றோம் என்று நீர் நினைக்கின்றீர் ? அவை நமது வியப்புக்குரிய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்.

10. அந்த இளைஞர்கள் குகையினில் புகலிடம் எடுத்துக் கொண்டபோது, அவர்கள் கூறினர், "எங்கள் இரட்சகரே, உமது கருணையை எங்கள் மேல் பொழிவீராக, மேலும் எங்களுடைய காரியங்களை உம்முடைய வழிகாட்டலைக் கொண்டு ஆசீர்வதிப்பீராக."

11. பின்னர், முன்பே தீர்மானிக்கப்பட்ட ஓர் எண்ணிக்கையிலான வருடங்களுக்கு குகையில் அவர்களுடைய காதுகளில் நாம் முத்திரையிட்டோம்.

12. பின்னர் இரு தரப்பினரில், அங்கே அவர்கள் தங்கியிருந்த கால அளவைக் கணக்கிட முடிந்தவர்கள் யார் என்பதைக் காண்பதற்காக அவர்களை நாம் உயிர்ப்பித்தெழுப்பினோம்.

13. சத்தியம் நிறைந்ததாக, அவர்களுடைய சரித்திரத்தை உமக்கு நாம் எடுத்துரைக்கின்றோம். அவர்கள் தங்களுடைய இரட்சகர் மீது நம்பிக்கை கொண்ட இளைஞர்களாக இருந்தனர், இன்னும் அவர்களுடைய வழிகாட்டலை நாம் அதிகரித்தோம்.

14. "வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகர்தான் எங்களுடைய ஒரே இரட்சகர். அவருடன் வேறு தெய்வம் எதனையும் நாங்கள் ஒருபோதும் வழிபட மாட்டோம். இல்லையென்றால், நாங்கள் நீண்ட தூரம் வழி தவறியவர்களாவோம்:" என்று அவர்கள் எழுந்து நின்று பிரகடனம் செய்தபோது அவர்களுடைய இதயங்களை நாம் பலப்படுத்தினோம்.

15. "இதோ, நமது சமூகத்தார் அவருடன் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய நிலைக்கு ஆதாரமாகச் சான்று எதையேனும் அவர்களால் வழங்க இயன்றால்தானே! பொய்களைப் புனைந்து கொண்டதோடன்றி அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுகின்ற ஒருவனைவிட மிகத் தீயவன் வேறு யார் ?

*எஃபிஸஸில்*
*உறங்கிய எழுவர்**

16. "அவர்களையும், **கடவுள்**–ஐ விடுத்து மற்றவர்களை அவர்கள் வழிபடுவதையும் நீங்கள் தவிர்த்துக் கொள்ள விரும்புவதால்,* இக்குகையில் நாம் புகலிடம் எடுத்துக் கொள்வோம். உங்களுடைய இரட்சகர் தன்னுடைய கருணையை உங்கள் மீது பொழியவும், சரியான முடிவை நோக்கி உங்களைச் செலுத்தவும் செய்வாராக."

*வழிகாட்டும் ஓர் ஆசிரியர்*
*அத்தியாவசியம் ஆகிறார்*

17. அதிலுள்ள குழிவில் அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கையில், சூரியன் அதன் உதயத்தின் போது அவர்களுடைய குகையின் வலப்புறமிருந்து வருவதையும், அதன் அஸ்தமனத்தின் போது அவர்களுடைய இடப்புறமிருந்து பிரகாசித்ததையும் நீர் கண்டிருப்பீர். இது **கடவுள்**–ன் அத்தாட்சிகளில் ஒன்றாகும்.* எவரொருவரைக் **கடவுள்** வழிநடத்துகின்றாரோ, அவரே உண்மையில் வழிநடத்தப்பட்டவர், மேலும் எவரொருவரை அவர் வழிகேட்டில் அனுப்பி விடுகின்றாரோ, அவருக்கு வழிகாட்டும் ஓர் ஆசிரியரை நீர் காணமாட்டீர்.

18. உண்மையில் அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போதும், அவர்கள் விழித்துக் கொண்டிருப்பதாகவே நீர் எண்ணுவீர். அவர்கள் நடுவே அவர்களுடைய நாய் அதன் முன்னங்கால்களை விரித்திருந்த அதே சமயம், அவர்களை நாம் வலப்புறமும் இடப்புறமும் புரட்டிக் கொண்டிருந்தோம். அவர்களை நீர் பார்த்திருந்தால், திகிலினால் அறையப்பட்டவராக, அவர்களை விட்டு நீர் விரண்டோடி இருப்பீர்.

---

**18:8–9* இப்போது வெளிப்பட்டுள்ளபடி, எஃபிஃஸஸில் உறங்கிய எழுவரான, இந்தக் கிறித்துவ நம்பிக்கையாளர்களின் வரலாறு, 18:9&21ல் கூறப்பட்டுள்ளபடி உலக முடிவுடன் நேரடித் தொடர்பு கொண்டதாக உள்ளது. உலக முடிவை வெளிப்படுத்துவதில் இந்த நம்பிக்கையாளர்களின் பங்கு பின் இணைப்பு 25ல் விவரிக்கப்பட்டுள்ளது.*

**18:16–20* பண்டைய நைசீனிற்கு 200 மைல்கள் தெற்கிலும், துருக்கியின் இன்றைய இஜ்மீருக்கு 30 மைல்கள் தெற்கிலும் எஃபிஸஸ் உள்ளது. குகைவாசிகள், ஜீஸஸின் போதனைகளைப் பின்பற்றவும் கடவுளை மட்டும் வழிபடவும் விரும்பிய இளம் கிறித்துவர்கள்ஆவர். இவர்கள் ஜீஸஸிற்குப் பின்னர் மூன்று நூற்றாண்டுகள் கழித்து, திரித்துவக் கொள்கை அறிவிக்கப்பட்ட நைசீன் மாநாடுகளைத் தொடர்ந்து, சீர் குலைந்த கிறித்துவத்தைப் பிரகடனம் செய்த நவீன கிறித்துவர்களின் அடக்குமுறையிலிருந்து தப்பி ஓடியவர்கள் ஆவர். 1928ல் ஃப்ரான்ஜ் மில்ட்னர் என்ற ஆஸ்திரியத் தொல்பொருள் ஆய்வாளர் ஒருவர் எஃபிஸஸில் உறங்கிய எழுவரின் கல்லறைகளைக் கண்டு பிடித்தார். அவர்களுடைய வரலாறு ஏராளமான கலைக் களஞ்சியங்களில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**18:17* இந்த அடையாளம், அல்லது குறிப்பு அந்தக்குகை வடக்கு நோக்கி இருந்தது என்பதை நமக்குக் கூறுகின்றது.*

19. அவர்களை நாம் உயிர்ப்பித்தெழுப்பிய போது, அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர், "எத்தனை காலம் நீங்கள் இங்கே இருந்தீர்கள்?" "ஒரு நாளோ அல்லது நாளின் பகுதியோ நாம் இங் கிருந்தோம்," அவர்கள் பதிலளித்தனர். "எவ்வளவு காலம் நாம் இங்கு தங்கினோம் என்பதை உங்களு டைய இரட்சகர்தான் நன்கு அறிவார், எனவே இந்தப் பணத்துடன் நம்மில் ஒருவரை நாம் நகரத்திற்கு அனுப்புவோம். அவர் தூய்மைமிக்க உணவை எடுத் துக் கொண்டு, மேலும் நமக்காகவும் சிலவற்றை வாங்கி வரட்டும். அவர் தன் முகத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ளாமலும், எவர் கவனத்தையும் ஈர்க்காமலும் இருக்கட்டும்.

20. "அவர்கள் உங்களைக் கண்டுபிடித்து விட்டால், அவர்கள் உங்களைக் கல்லாலடித்துக் கொன்று விடுவார்கள், அல்லது அவர்களுடைய மார்க்கத் திற்குத் திரும்பி விடுமாறு உங்களை நிர்ப்பந்திப் பார்கள், பின்னர் நீங்கள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது."

*உலக முடிவுடனான தொடர்பு**

21. **கடவுள்**–ன் வாக்குறுதி உண்மைதான் என்று ஒவ் வொருவரும் அறிந்து கொள்வதற்காகவும், உலக முடிவினைக்* குறித்த சந்தேகம் அனைத்தையும் நீக்குவதற்காகவும், அவர்கள் கண்டுபிடிக்கப்படும் படி நாம் செய்தோம். பின்னர் அவர்களைப் பற்றி மக்கள் தங்களுக்கிடையில் தர்க்கம் செய்து கொண் டனர். சிலர் கூறினர், "அவர்களைச் சுற்றி ஒரு கட்டடத்தை நாம் கட்டி விடுவோம்." அவர்களுடைய இரட்சகர்தான் அவர்களைப் பற்றி நன்கறிந்தவர். மிகைத்தவர்கள் கூறினர், "அவர்களைச் சுற்றி ஒரு வழிபாட்டுத் தலத்தை நாம் கட்டுவோம்."

22. சிலர் கூறுவர், "அவர்கள் மூவராக இருந்தனர்; அவர் களுடைய நாய் நான்காவதாக இருந்தது," அதே சமயம் யூகம் செய்தவர்களாகவே, மற்றவர்கள் கூறுவர், "ஐந்து, அவர்களுடைய நாய் ஆறாவதாக இருந்தது." மற்றவர்கள் கூறினர், "ஏழு," மேலும் எட்டாவதாக இருந்தது அவர்களுடைய நாய். கூறும், "என் இரட்சகர்தான் அவர்களுடைய எண்ணிக்கை யை நன்கறிந்தவர்." மிகச் சிலர் மட்டுமே சரியான அந்த எண்ணிக்கையை அறிந்திருக்கின்றனர். எனவே, அவர்களுடன் வாதித்து கொண்டிருக்காதீர்; அவர் களுடைய போக்கிலேயே சென்று விடும். எவர் ஒரு வருடனும் நீர் இது குறித்து ஆலோசிக்க வேண்டாம்.

*நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடவுளை நினைவு கூர்தல்*

23. எதிர் காலத்தில் எந்த ஒன்றையும் நீர் செய்வீர் என்று நீர் கூற வேண்டாம்,

24. "**கடவுள்** நாடினால்."* என்று கூறாமல். இதனைச் செய்ய நீர் மறந்து விட்டால், உடனடியாக உம்முடைய இரட்சகரை நீர் நினைவு கூர்வதோடு, மேலும் கூறும், "அடுத்த முறை இதைவிடச் சிறப்பாகச் செய்வதற்கு என் இரட்சகர் என்னை வழிநடத்துவாராக."

*[300 + 9]**

25. அவர்கள் தங்கள் குகையில், ஒன்பது* அதிகமாக, முந்நூறு வருடங்கள் தங்கியிருந்தனர்.

26. கூறும், "எவ்வளவு காலம் அவர்கள் அங்கே தங்கி யிருந்தனர் என்பதை **கடவுள்**தான் நன்கறிந்தவர்." வானங்களிலும் பூமியிலும் உள்ள எல்லா இரகசியங் களையும் அவர் அறிந்திருக்கின்றார். அவருடைய அருளால்தான் உங்களால் பார்க்க முடிகின்றது; அவருடைய அருளால்தான் உங்களால் செவியேற்க முடிகின்றது. அவருடன் இரட்சகராகவும் அதிபதியா கவும் எவரும் இல்லை, மேலும் தன்னுடைய ஆட்சி யதிகாரத்தில் பங்கு கொள்வதற்குப் பங்குதாரர்கள் எவரையும் அவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

27. உம்முடைய இரட்சகரின் வேதத்தில் உமக்கு வெளிப் படுத்தப்பட்டவற்றை நீர் ஓதி வர வேண்டும். எதுவும் அவருடைய வார்த்தைகளை மாற்றிவிட முடியாது, மேலும் அதனை அன்றி மற்ற மூலாதாரங்கள் எதை யும் நீர் கண்டுபிடிக்க வேண்டாம்.

*குர்ஆனைப் பயிலும் குழுக்கள்*

28. அவரை மட்டும் தேடியவர்களாக, பகலும் இரவும் தங்கள் இரட்சகரை வழிபடுவோருடன் இருப்பதற்கு உம்மை நீர் நிர்ப்பந்தித்துக் கொள்ள வேண்டும். இவ்வுலகின் வீண்பகட்டுக்களைத் தேடியவர்களாக அவர்களிடமிருந்து உம்முடைய கண்களைத் திருப் பிக் கொள்ள வேண்டாம். அன்றியும் எவனுடைய இதயத்தை நம்முடைய தூதுச் செய்தியில் கவனமற்ற தாக நாம் ஆக்கி விட்டோமோ அவனுக்கும், தன் சுய விருப்பங்களைப் பின்பற்றுபவனுக்கும், மேலும் தங் களுடைய முன்னுரிமைகள் குழம்பிப் போனவர்களுக் கும் நீர் கீழ்ப்படிய வேண்டாம்.

---

**18:21* பின் இணைப்பு 25ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த விபரங்கள் உலக முடிவைக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்ட உதவியது.*

**18:24* இந்த முக்கிய கட்டளை அன்றாடம் கடவுளை நினைவு கூர்வதற்கு நமக்கு வாய்ப்புகளைத் தருகின்றது.*

**18:25* சூரிய வருடங்கள் 300க்கும் சந்திர வருடங்கள் 300க்கும் உள்ள வித்தியாசம் ஒன்பது வருடங்களாகும். இவ்விதமாக, கி.பி.1980 (ஹிஜ்ரி 1400)ல் உலக முடிவிற்கு 300 வருடங்கள் (309 சந்திர வருடங்கள்) முன்னர் உலக முடிவின் கண்டுபிடிப்பு நிகழ வேண்டுமென சர்வ வல்லமை கொண்டவரால் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தது. (பார்க்க72:27&பின் இணைப்பு 25).*

*பரிபூரணமான மார்க்கச் சுதந்திரம்*

29. பிரகடனிப்பீராக: "இது உங்கள் இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் ஆகும்," ஆகவே எவரொருவர் நாடுகின்றாரோ அவர் நம்பிக்கை கொள்ளட்டும், எவரொருவர் நாடுகின்றாரோ அவர் நம்பமறுக்கட்டும். வரம்புமீறுபவர்களுக்கு அவர்களை முற்றிலும் சூழ்ந்து கொள்ளக்கூடிய ஒரு நெருப்பை நாம் தயார் செய்துள்ளோம். அவர்கள் உதவிக்காக அலறினால், முகங்களை வெந்து போகச் செய்யும் அடர்ந்த அமிலம் போன்ற ஒரு திரவமே அவர்களுக்குக் கொடுக்கப்படும். என்ன ஒரு துன்பகரமான பானம்! என்ன ஒரு துன்பகரமான விதி!

30. நம்பிக்கை கொண்டு நேரியதொரு வாழ்க்கை நடத்துபவர்களைப் பொறுத்தவரை, நன்மையான காரியங்களைச் செய்வோருக்குப் பிரதிபலன் வழங்க நாம் ஒருபோதும் தவறுவதில்லை.

31. ஆறுகள் பாயும் ஏதேன் தோட்டங்களுக்கு அவர்கள் தகுதியாகி விட்டார்கள். அங்கே அவர்கள் தங்கத்தினாலான காப்புகள் கொண்டு அலங்கரிக்கப்படுவார்கள், பச்சைப் பட்டிலும் வெல்வெட்டிலுமான ஆடைகளை அணிவார்கள், வசதியான ஆசனங்களில் சாய்ந்திருப்பார்கள். என்ன ஓர் அற்புதமான வெகுமதி; என்ன ஓர் அற்புதமான தங்குமிடம்!

*சொத்து ஒரு போலித் தெய்வமாக**

32. இரு மனிதர்களின் உதாரணத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக: அவர்களில் ஒருவனுக்கு பேரீத்த மரங்களால் சூழப்பட்ட இரு திராட்சைத் தோட்டங்களை நாம் கொடுத்தோம், மேலும் அவற்றுக்கிடையில் மற்ற பயிர்களை அமைத்தோம்.

33. இருதோட்டங்களும் பருவத்தில் அவற்றின் விளைச்சல்களைத் தாராளமாக உற்பத்தி செய்தன, ஏனெனில் அவற்றினூடே ஒரு நதியை நாம் ஓடச் செய்தோம்.

34. ஒருமுறை, அறுவடைக்குப் பின்னர், அவன் தற்பெருமையோடு தன் நண்பரிடம் கூறினான்: "உன்னை விடவும் மிகவும் வளம் படைத்தவனாக நான் இருக்கின்றேன், மேலும் நான் மக்களிடம் அதிக மரியாதையைப் பெற்றவனாகவும் இருக்கின்றேன்."

35. தனது தோட்டத்திற்குள் அவன் நுழைந்தபோது, "இது எப்பொழுதேனும் அழிந்து விடும் என்று நான் எண்ணவில்லை," என்று கூறியவனாகத் தன் ஆத்மாவுக்குத் தீங்கிழைத்துக் கொண்டான்.

36. "மேலும் இது நிலையானதென்றே நான் எண்ணுகின்றேன்; வேளை *(மறுவுலகம்)* எப்பொழுதேனும் நிகழ்ந்து விடும் என்றும் நான் எண்ணவில்லை. என் இரட்சகரிடம் நான் திரும்பக் கொண்டு செல்லப்பட்டாலும், இதனைவிட மேலான ஒன்றை *(அடையும் அளவு சாமர்த்தியத்தை)* அங்கே நான் பெற்றிருப்பேன்."

37. அவனுடன் விவாதித்தவராக, அவனுடைய நண்பர் அவனிடம் கூறினார், "மண்ணிலிருந்தும், பின்னர் மிகச்சிறிய துளியிலிருந்தும், உன்னைப் படைத்து பின்னர் உன்னைப் பூரணமான ஒரு மனிதனாக்கிய அந்த ஒருவரை நீ நம்பமறுத்து விட்டாயா?

38. "என்னைப் பொறுத்தவரை, **கடவுள்** தான் என்னுடைய இரட்சகர், மேலும் என் இரட்சகருடன் வேறெந்த தெய்வத்தையும் நான் ஒருபோதும் அமைத்துக் கொள்ள மாட்டேன்.

*முக்கியமான கட்டளை*

39. "உனது தோட்டத்திற்குள் நீ நுழைந்த போது, ‘இது **கடவுள்** எனக்குத் தந்தது *(மாஷா அல்லாஹ்).* **கடவுள்**–ஐத் தவிர எவர் ஒருவரும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை *(லா குவ்வத்த இல்லா பில்லாஹ்)*’ என்று நீ கூறியிருக்க வேண்டும். உன்னை விடக் குறைவான செல்வத்தையும் குறைவான பிள்ளைகளையும் நான் கொண்டிருப்பதை நீ காணக் கூடும்.

40. "என் இரட்சகர் உன்னுடைய தோட்டத்தை விடவும் மேலானதை எனக்கு வழங்கக் கூடும். உன்னுடைய தோட்டத்தைத் துடைத்தெடுத்து விட்டு முற்றிலும் அதனை தரிசாக்கி விட்டு விடக்கூடிய ஒரு கடும் புயல்காற்றை அவர் விண்ணிலிருந்து அனுப்பி வைக்கக் கூடும்.

41. "அல்லது உன் கைகளுக்கெட்டாத ஆழத்திற்கு அதன் தண்ணீர் கீழிறங்கி விடக் கூடும்."

42. உண்மையில், அவனது விளைச்சல்கள் துடைத்தெடுக்கப்பட்டன, அவனுடைய நிலம் தரிசாகக் கிடந்த போது, வீணில் அதன் மீது அவன் செலவழித்தவற்றுக்குப் புலம்பியவனாக அவன் துக்கமாகிப் போனான். இறுதியில் அவன் கூறினான் "என் இரட்சகருடன் எனது சொத்தினை ஒரு தெய்வமாக நான் அமைத்துக் கொள்ளாது இருந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்."

---

**18:32–42 மனிதர்கள் கடவுளுடன் வழிபடும் வெவ்வேறு தெய்வங்களுக்கு ஏராளமான உதாரணங்களைக் குர்ஆன் எடுத்துரைக்கின்றது; அவற்றில் குழந்தைகள் (7:190), மார்க்கத் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் (9:31), சொத்துகள் (18:42), மரணித்துவிட்ட மகான்கள் மற்றும் நபிமார்கள் (16:20–21, 35:14 & 46:5–6), மற்றும் அகந்தை (25:43, 45:23) ஆகியவை அடங்கும்.*

43. பூமியின் மீதுள்ள எந்தப் படையும் **கடவுள்**–க்கெதிராக அவனுக்கு உதவி செய்திருக்க முடியாது, அன்றி எந்த உதவியைப் பெற்றுக் கொள்ளவும் அவனுக்குச் சாத்தியமிருந்திருக்காது.

44. இது ஏனெனில் **கடவுள்** தான் உண்மையான ஒரே இரட்சகரும் அதிபதியும் ஆவார்; அவர் மிகச் சிறந்த பிரதிபலனை வழங்குகின்றார், மேலும் மிகச் சிறந்த விதி அவரிடமே உள்ளது.

45. பூமியின் தாவரங்களை முளைப்பிப்பதற்காக விண்ணிலிருந்து நாம் இறக்கி அனுப்புகின்ற தண்ணீரை, இந்த வாழ்க்கைக்கு உதாரணமாக அவர்களுக்கு எடுத்துரைப்பீராக பின்னர் அவை காற்றில் அடித்துச் செல்லப்படும் கூளங்களாக மாறிவிடுகின்றன. **கடவுள்** அனைத்தையும் செய்யும் திறனுடையவராக இருக்கின்றார்.

*நமது முன்னுரிமைகளைச் சரிவர மாற்றி அமைத்தல்*

46. செல்வமும் பிள்ளைகளும் இந்த வாழ்வின் இன்பங்களாகும், ஆனால் நன்மையான காரியங்கள் உம்முடைய இரட்சகரிடமிருந்து ஒரு நிரந்தரமான பிரதிபலனையும், மிகவும் மேலான ஓர் எதிர்பார்ப்பையும் வழங்குகின்றன.

47. மலைகளை நாம் துடைத்தெடுத்து விடும் அந்நாள் வரும், மேலும் பூமியை நீர் பொட்டல் வெளியாகக் காண்பீர். அவர்களில் ஒருவரைக் கூட விட்டு விடாமல், அவர்கள் அனைவரையும் நாம் ஒன்று திரட்டுவோம்.

48. உம்முடைய இரட்சகர் முன் அவர்கள் ஒரு வரிசையில் கொண்டு வந்து நிறுத்தப்படுவார்கள். நாம் உங்களை முதன் முதலில் படைத்தவாறே, தனி நபர்களாக நீங்கள் நம்மிடம் வந்துள்ளீர்கள். உண்மையில், ஒரு போதும் நிகழாது என்று நீங்கள் கூறிக் கொண்டிருந்தது இதுதான்.

49. பதிவேடுகள் காட்டப்படும், மேலும் அதன் உள்ளடக்கம் பற்றி அஞ்சியவர்களாகக் குற்றவாளிகளை நீர் காண்பீர். அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்குக் கேடுதான். சிறியதோ அல்லது பெரியதோ, எது ஒன்றையும் கணக்கிடாமல் விட்டு விடாது இப்புத்தகம் கொண்டுள்ளது எப்படி ?" அவர்கள் செய்த ஒவ்வொன்றும் முன்கொண்டு வரப்படுவதை அவர்கள் காண்பார்கள். உம்முடைய இரட்சகர் எவர் ஒருவருக்கும் ஒருபோதும் அநீதமிழைப்பதில்லை.

*கடவுளின் படைப்பினங்கள் வகைப்படுத்தப்படுதல்*

50. நாம் வானவர்களிடம் கூறினோம், "ஆதமின் முன் சிரம் பணியுங்கள்." அவர்கள் சிரம் பணிந்தனர், சாத்தானைத் தவிர. அவன் ஒரு ஜின்னாக ஆனான், ஏனெனில் அவனுடைய இரட்சகரின் கட்டளைக்கு அவன் கீழ்ப்படிய மறுத்தான்.* அவர்கள் உங்கள் விரோதிகளாக இருந்த போதிலும், எனக்குப் பதிலாக அவனையும் அவனுடைய சந்ததியினரையும் நீங்கள் எஜமானர்களாக எடுத்துக் கொள்வீர்களா ? என்ன ஒரு பரிதாபகரமான மாற்று!

51. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பிற்கோ, அன்றி அவர்களுடைய படைப்பிற்கோ கூட அவர்களைச் சாட்சிகளாக நாம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அன்றியும் தீயவர்களை எனது சாம்ராஜ்யத்தில்* பணிபுரிய நான் அனுமதிப்பதுமில்லை.

52. "என்னுடன் தெய்வங்களென நீங்கள் கூறிக் கொண்டிருந்த என் பங்குதாரர்களை அழையுங்கள்," என்று அவர் கூறும் அந்த நாள் வரும்; அவர்களை அவர்கள் அழைப்பார்கள், ஆனால் அவர்கள் அவர்களுக்கு மறுமொழி அளிக்க மாட்டார்கள். தாண்டிவிட முடியாத தொரு தடுப்பு அவர்கள் ஒருவரிலிருந்து மற்றவரைப் பிரித்து வைக்கும்.

53. குற்றவாளிகள் நரகத்தைக் காண்பார்கள், மேலும் அவர்கள் அதனுள் விழுந்து விடுவார்கள் என்பதை உணர்ந்து கொள்வார்கள். அதிலிருந்து தப்பித்தல் என்பதே அவர்களுக்கு இருக்காது.

*நம்பமறுப்பவர்கள் குர்ஆனின் பூரணத் தன்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்*

54. ஒவ்வொரு விதமான உதாரணத்தையும் இந்தக் குர்ஆனில் நாம் எடுத்துரைக்கின்றோம், ஆனால் மானிடனானவன் மிகவும் தர்க்கம் செய்கின்ற படைப்பாக இருக்கின்றான்.

55. மனிதர்கள் முந்திய தலைமுறையினருக்கான அதே *(விதமான அற்புதங்களைக்)* காண வேண்டுமென்று கோரியது, அல்லது தண்டனையை முன் கூட்டியே காணவேண்டுமென்று அவர்கள் சவால் விட்டதைத் தவிர வேறு எதுவும், நேர்வழி அவர்களிடம் வந்த போது, நம்பிக்கை கொள்வதிலிருந்தும் அவர்களுடைய இரட்சகரிடம் பாவ மன்னிப்புத் தேடுவதிலிருந்தும் அவர்களைத் தடுக்கவில்லை.

**18:50 விண்ணக சமூகத்தோரில் மகத்தான கலகம் நடைபெற்ற போது **(38:69)**, படைப்புகள் அனைவரும் வானவர்கள், ஜின்கள், மற்றும் மனிதர்களாக வகைப்படுத்தப்பட்டனர் (பார்க்க பின் இணைப்பு 7).*

**18:51 சாத்தானும் அவனுடைய ஆதரவாளர்களும் (ஜின்கள் மற்றும் மனிதர்கள்) தவறான முடிவை மேற்கொள்ளப் போகின்றனர் என்பதைக் கடவுள் அறிந்திருந்தார். இதனால்தான் படைப்பின் செய்முறைக்குச் சாட்சிகளாவதிலிருந்து அவர்கள் விலக்கி வைக்கப்பட்டனர்.*

56. நற்செய்தியைச் சேர்ப்பிப்பவர்களாகவும், அவ் வண்ணமே எச்சரிப்பவர்களாகவும் மட்டுமே நாம் தூதர்களை அனுப்புகின்றோம். நம்பமறுப்பவர்கள் சத்தியத்தைத் தோற்கடிப்பதற்காக, அசத்தியத்தைக் கொண்டு வாதிடுகின்றனர், மேலும் அவர்கள் என்னு டைய சான்றுகளையும் எச்சரிக்கைகளையும் வீணான தென எடுத்துக் கொள்கின்றனர்.

*தெய்வீகத் தலையீடு*

57. தங்கள் இரட்சகரின் சான்றுகள் குறித்து நினைவூட் டப்பட்டும் பின்னர் தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளாது, அவற்றைப் புறக் கணிப்பவர்களை விட மிகத் தீயவர்கள் யார். அதன் விளைவாக, இதனை *(இந்தக் குர்ஆனை)* புரிந்து கொள்வதை விட்டும் அவர்களைத் தடுப்பதற்காக அவர்களுடைய இதயங்களின் மீது கவசங்களையும், அவர்களுடைய காதுகளில் செவிட்டுத்தனத்தையும் நாம் அமைத்து விடுகின்றோம். எனவே, அவர்களை வழிநடத்துவதற்காக நீர் என்ன செய்கின்றீர் என்பது பொருட்டல்ல, அவர்கள் ஒருபோதும் எக்காலத்தி லும் வழிநடத்தப் படமாட்டார்கள்.

58. ஆயினும், உம்முடைய இரட்சகர் மன்னிப்பவர், கருணை நிரம்பியவர். அவர்களுடைய செய்கை களுக்கு விளக்கம் கூறுமாறு அவர்களை அவர் அழைத்திருந்தால், அவர்களை அங்கேயே அப் பொழுதே அவர் அழித்திருப்பார். மாறாக, அவர் களுக்கு ஒரு குறிப்பிடப்பட்ட, முன்னரே தீர்மானிக் கப்பட்ட நேரம் வரை அவர் அவகாசம் அளிக்கின்றார்; அப்போது அவர்கள் ஒரு போதும் தப்பித்து விட முடியாது.

59. எத்தனையோ ஒரு சமூகத்தை அவர்களுடைய வரம்புமீறல்களுக்காக நாம் அழித்திருக்கின்றோம், அவர்களுடைய அழிவுக்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நாம் நிர்ணயித்திருந்தோம்.

*மோஸஸ் மற்றும் அவருடைய குருவிடமிருந்து மதிப்பு வாய்ந்த படிப்பினைகள்*

60. மோஸஸ் தன் சேவகரிடம் கூறினார், "இரு நதிகளும் சந்திக்கும் இடத்தை நான் அடையும் வரை நான் ஓயமாட்டேன், அதற்கு எவ்வளவு நேரமானாலும் பொருட்டல்ல."

61. அவை சந்தித்துக் கொள்ளும் இடத்தை அவர்கள் அடைந்தபோது, அவர்கள் தங்களுடைய மீனை மறந்துவிட்டனர், அது நதிக்குள் மீண்டு செல்லும் தனது வழியைக் கண்டு கொண்டு, இரகசியமாக நழுவிவிட்டது.

62. அவ்விடத்தை அவர்கள் கடந்து விட்ட பின்னர், அவர் தன்சேவகரிடம் கூறினார், "நாம் மதிய உணவை எடுத்துக் கொள்வோம். இந்தப் பயணம் அனைத்தும் நம்மை முற்றிலும் களைப்படையச் செய்து விட்டது."

63. அவர் கூறினார், "வழியில் அந்தப் பாறையின் அருகே நாம் அமர்ந்தது நினைவிருக்கின்றதா ? நான் மீனின் மீது எந்தக் கவனமும் செலுத்தவில்லை. சாத்தான் அதனை நான் மறக்கும்படி செய்து விட்டான், அதிசய மாக, நதிக்குள் மீண்டு செல்லும் தனது வழியை அது கண்டு கொண்டது."

64. *(மோஸஸ்)* கூறினார், "அதுதான் நாம் தேடிக் கொண் டிருந்த இடமாகும்." அவர்கள் தங்கள் காலடிச் சுவடு களைத் தேடியவாறு திரும்பிச் சென்றனர்.

65. கருணை கொண்டு நாம் ஆசீர்வதித்த, மேலும் அவர் மீது நமக்கே உரியதான அறிவு வழங்கப் பட்டிருந்த நம்முடைய ஊழியர்களில் ஒருவரை அவர்கள் கண்ட னர்.

66. மோஸஸ் அவரிடம் கூறினார், "உங்கள் மீது அருளப் பட்டுள்ள அறிவிலிருந்தும் வழிகாட்டலிலிருந்தும் சிலவற்றை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கும் பொருட்டு, நான் உம்மைப் பின் தொடரலாமா ?"

67. அவர் கூறினார், "என்னோடு பொறுமையாக இருக்க உம்மால் முடியாது.

68. "நீர் புரிந்து கொள்ளாதவற்றின் மீது எப்படி உம்மால் பொறுமையாக இருக்க முடியும் ?"

69. அவர் கூறினார், "**கடவுள்** நாடினால், பொறுமையுடை யவனாக, என்னை நீர் காண்பீர். நீர் எனக்கிடும் எந்தக் கட்டளைக்கும் நான் கீழ்ப்படியாதிருக்க மாட்டேன்."

70. அவர் கூறினார், "நீர் என்னைப் பின்தொடர்ந்தால், பின்னர் அதனைப் பற்றி உமக்குக் கூற நான் முடிவு செய்தாலன்றி, எந்த ஒன்றைப் பற்றியும் என்னிடம் நீர் கேட்காதிருக்க வேண்டும்."

71. எனவே அவர்கள் சென்றனர். அவர்கள் ஒரு கப்பலில் ஏறியபோது, அவர் அதில் துளை ஒன்றை போட்டார். அவர் கூறினார், "அதிலுள்ள மக்களை மூழ்கடிக் கவா அதில் நீர் ஒரு துளையைப் போட்டீர் ? நீர் பயங் கரமான ஒன்றைச் செய்து விட்டீர்."

72. அவர் கூறினார், "என்னுடன் பொறுமையாயிருக்க உம்மால் இயலாது என நான் கூறவில்லையா ?"

73. அவர் கூறினார், "நான் வருந்துகின்றேன். என்னு டைய மறதிக்காக என்னைத் தண்டித்து விடாதீர்; என்னுடன் மிகக் கடுமையாக இருக்காதீர்."

74. எனவே அவர்கள் சென்றனர். அவர்கள் ஒரு சிறுவ னைச் சந்தித்தபோது, அவர் அவனைக் கொன்று விட்டார். அவர் கூறினார், "மற்றொரு ஆத்மாவைக் கொலை செய்யாத, இத்தகையதொரு குற்றமற்ற ஆத்மாவை நீர் ஏன் கொலை செய்தீர் ? கொடூர மான ஒன்றை நீர் செய்து விட்டீர்."

75. அவர் கூறினார், "என்னுடன் பொறுமையாயிருக்க உம்மால் இயலாது என நான் உம்மிடம் கூற வில்லையா ?"

76. அவர் கூறினார், "வேறு எதையேனும் பற்றி நான் உம்மிடம் கேட்டால், பின்னர் என்னை உம்மோடு வைத்திருக்க வேண்டாம். என்னிடமிருந்து போது மான அளவு மன்னிப்புக் கோருதலை நீர் கண்டு விட்டீர்."

77. எனவே அவர்கள் சென்றனர். ஒரு குறிப்பிட்ட சமூ கத்தை அவர்கள் அடைந்தபோது, அவர்கள் அம்மக் களிடம் உணவு கேட்டனர், ஆனால் அவர்களை உபசரிக்க அவர்கள் மறுத்து விட்டனர். விரைவில், விழுந்து விட இருக்கும் ஒரு மதிற்சுவரைக் அவர்கள் கண்டனர், அவர் அதனைச் சரி செய்தார். அவர் கூறி னார், "அதற்கு ஒரு கூலியை நீர் கேட்டிருக்கலாம்!"

*ஒவ்வொன்றுக்கும்*
*ஒரு தக்க காரணம் உள்ளது*

78. அவர் கூறினார், "இப்போது நாம் பிரிந்துவிட வேண் டியதுதான். ஆனால் உம்மால் சகித்துக் கொண்டி ருக்க முடியாத ஒவ்வொன்றைப் பற்றியும் நான் உமக்கு விளக்குவேன்.

79. "அந்தக் கப்பலைப் பொறுத்தவரை, அது ஏழை மீனவர் களுக்கு உரியதாக இருந்தது, எனினும், அதனைப் பழுதாக்க நான் விரும்பினேன். அவர்களுக்குப் பின் னால் நிர்ப்பந்தமாக ஒவ்வொரு கப்பலையும் பறி முதல் செய்கின்ற ஓர் அரசன் வந்து கொண்டிருந் தான்.

80. "அந்தச் சிறுவனைப் பொறுத்தவரை, அவனுடைய பெற்றோர்கள் நல்ல நம்பிக்கையாளர்களாக இருந்த னர், மேலும் அவன் தனது வரம்புமீறுதல் மற்றும் நம்ப மறுத்தலால், அவர்களுக்குச் சுமையாக ஆவான் என்பதை நாம் கண்டோம்.*

81. "உம்முடைய இரட்சகர் அவனுடைய இடத்தில் மற் றொரு மகனை; நன்னெறியிலும் கனிவிலும் அவனை விட மிக மேலான ஒருவனை பகரமாக்க வேண்டும் என நாம் நாடினோம்.

82. "அந்த மதிற்சுவரைப் பொறுத்தவரை, அது அந்நகரில் உள்ள இரு அனாதைச் சிறுவர்களுக்குச் சொந்த மாக இருந்தது. அதன்கீழ், அவர்களுக்குரிய ஒரு புதையல் இருந்தது. அவர்களுடைய தந்தை ஒரு நல்ல மனிதராக இருந்ததால், அவர்கள் வளர்ந்து முழு வலிமை அடைந்த பின்னர் அவர்களுடைய அப் புதையலை வெளியில் எடுத்துக் கொள்ள வேண்டும் என உம் இரட்சகர் நாடினார். உம் இரட்சகரிடமிருந் துள்ள கருணை இத்தகையதேயாகும். அதில் எந்த ஒன்றையும் நான் என் சுய விருப்பத்திற்காகச் செய்ய வில்லை. உம்மால் பொறுமையாக இருக்க முடியாத விஷயங்களின் விளக்கம் இதுவேயாகும்."

*ஜுல்–கர்னைன்: இரு கொம்புகள்*
*அல்லது இரு தலைமுறைகளை உடையவர்*

83. ஜுல்–கர்னைன் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின் றனர். கூறும், "அவருடைய வரலாற்றில் சிலவற்றை உங்களுக்கு நான் விவரிக்கின்றேன்."

84. நாம் அவருக்கு பூமியின் மேல் அதிகாரத்தை அளித் தோம், மேலும் எல்லாவிதமான சாதனங்களையும் அவருக்கு வழங்கினோம்.

85. பின்னர், அவர் ஒரு வழியில் தொடர்ந்து சென்றார்.

86. தொலைவிலுள்ள மேற்கை அவர் அடைந்தபோது, பரந்து விரிந்ததொரு சமுத்திரத்தில் சூரியன் மறை வதை அவர் கண்டார், அங்கே மக்களையும் கண் டார். நாம் கூறினோம், "ஜுல்–கர்னைனே, நீர் விரும் பிய வண்ணம் ஆட்சி செய்யலாம்; தண்டிக்கவும் செய் யலாம், அல்லது அவர்களிடம் கனிவுடனும் இருக் கலாம்."

87. அவர் கூறினார், "வரம்புமீறுவோரைப் பொறுத்த வரை, நாம் அவர்களைத் தண்டிப்போம், பின்னர், அவர்கள் தங்கள் இரட்சகரிடம் திரும்பும்போது, அவர் இன்னும் அதிகமான தண்டனைக்கு அவர்களை உட்படுத்து வார்.

88. "நம்பிக்கை கொண்டு நேரியதொரு வாழ்வு நடத்து வோரைப் பொறுத்தவரை, அவர்கள் நல்லதொரு வெகுமதியைப் பெறுகின்றனர்; அவர்களை நாம் கனிவுடன் நடத்துவோம்."

89. பின்னர், அவர் மற்றொரு வழியில் தொடர்ந்து சென் றார்.

90. தொலைவிலுள்ள கிழக்கை அவர் அடைந்த போது, சூரியனிலிருந்து தங்களை மறைத்துக் கொள்ள எந்த ஒன்றையும் கொண்டிருக்காத மக்கள் மீது அது உதிப்பதை அவர் கண்டார்.

91. இயற்கையாகவே, அவர் கண்டுபிடித்த ஒவ்வொன் றையும் நாம் முற்றிலும் அறிந்திருந்தோம்.

92. அவர் பின்னர் மற்றொரு வழியில் தொடர்ந்து சென் றார்.

93. கூர்மையான இரு குன்றுகளுக்கிடையில் அமைந்த ஒரு பள்ளத்தாக்கை அவர் அடைந்த போது, மிகக் குறைவாகவே புரியக்கூடிய மொழி பேசிய மக்களை அவர் கண்டார்.

**18:80 அடால்ஃப் ஹிட்லர் அழகான அப்பாவியாகத் தோற்றமளித்த ஒரு குழந்தையாக இருந்தான். ஒரு குழந்தையாக அவன் மரணித்திருந்தால், ஏராளமானோர் துக்கப்பட்டிருப்பார்கள், மேலும் பலர் கடவுளின் ஞானத்தைக் கூடச் சந்தேகித் திருப்பார்கள். ஆழமான இப்படிப்பினைகள் மூலம் ஒவ்வொன்றிற்கும் பின்னால் தக்கதொரு காரணம் உள்ளது என நாம் கற்றுக் கொள்கின்றோம்.*

*காக் மற்றும் மேகாக்**

94. அவர்கள் கூறினர், "ஜுல்கர்னைனே, காக் மற்றும் மேகாக் ஆகியோர் பூமியைச் சீர்குலைப்பவர்களாக இருக்கின்றனர். எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு தடுப்பினை நீர் உருவாக்குவதற்காக உங்களுக்கு நாங்கள் ஊதியம் தரலாமா ?"

95. அவர் கூறினார், "என் இரட்சகர் எனக்கு மகத்தான கொடைகளைத் தந்துள்ளார். என்னுடன் நீங்கள் ஒத்துழைத்தால், உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஓர் அணையை நான் கட்டி விடுவேன்."

96. "இரும்புப் பாளங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்," இரு குன்றுகளுக்கு இடையில் இருந்த இடைவெளியை அவர் அடைத்தவுடன், அவர் கூறினார், "ஊதுங்கள்." அது கொதித்துச் சிவந்தவுடன், அவர் கூறினார், "அதன் மேல் தாரினை ஊற்றுவதற்கு எனக்கு உதவி செய்யுங்கள்."

97. எனவே, அதில் அவர்களால் ஏற முடியாது, அன்றியும் அதில் துளையிடவும் அவர்களால் முடியாது.

98. அவர் கூறினார், "இது என் இரட்சகரிடமிருந்துள்ள கருணை ஆகும். என் இரட்சகரின் முன்னறிவிப்பு நிகழ்ந்தேறும்போது, இந்த அணை நொறுங்கிப் போகும்படி அவர் செய்வார். என் இரட்சகரின் முன்னறிவிப்பு சத்தியமே ஆகும்."

99. அந்நேரத்தில், அவர்கள் ஒருவர் மற்றவர் மீது படையெடுக்கும்படி நாம் விட்டு விடுவோம், பின்னர் கொம்பு ஊதப்படும், பின்னர் அவர்கள் அனைவரையும் நாம் ஒன்றுதிரட்டுவோம்.

100. அந்நாளில், நம்பமறுப்பவர்களுக்கு நரகத்தை நாம் காட்டுவோம்.

101. என்னுடைய செய்தியைக் காண்பதை விட்டும் தங்களுடைய கண்களில் அதிகம் திரையிடப்பட்டிருந்தவர்கள் அவர்கள்தான். அன்றி அவர்கள் செவியேற்க முடியவுமில்லை.

102. நம்பமறுப்பவர்கள் என்னுடைய சேவகர்களை என்னுடன் தெய்வங்களாக அமைத்துக் கொண்டு விட்டு அவர்கள் தப்பித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரா ? நம்பமறுப்பவர்களுக்கான நிரந்தரமான தங்குமிடமாக நரகத்தை நாம் தயார் செய்துள்ளோம்.

*உங்களையே பரிசோதித்துக் கொள்ளுங்கள்*

103. கூறும், "மோசமான நஷ்டவாளிகள் யார் என்பதை நான் உங்களுக்குக் கூறட்டுமா ?

104. "எவர்களுடைய காரியங்கள் இந்த வாழ்வில் முற்றிலும் வழிதவறியதாக இருந்தபோதிலும், தாங்கள் நல்ல காரியங்கள் செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள்தான்."

105. இத்தகையவர்கள்தான் தங்கள் இரட்சகருடைய வெளிப்பாடுகளையும் அவரைச் சந்திப்பதையும் நம்ப மறுத்தவர்கள். எனவே, அவர்களுடைய காரியங்கள் வீணாகப் போயின; உயிர்த்தெழுப்பப்படும் நாளில், அவற்றுக்கு மதிப்பு எதுவும் இருக்காது.

106. அவர்களுடைய நம்பமறுத்தலின் விளைவாகவும், நமது வெளிப்பாடுகளையும் என்னுடைய தூதர்களையும் கேலி செய்து கொண்டிருந்ததற்காகவும் அவர்களுக்குரிய நியாயமான கூலி நரகமேயாகும்.

107. நம்பிக்கை கொண்டு நேரியதொரு வாழ்வு நடத்துபவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்களுடைய தங்குமிடமாக, ஆனந்தமயமானதொரு சுவனத்திற்குத் தகுதியாகி விட்டார்கள்.

108. நிரந்தரமாக அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள்; அதற்குப் பதிலாக வேறு எதையும் அவர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள்.

*குர்ஆன்: நமக்குத் தேவையான அனைத்தும்*

109. கூறும், "பெருங்கடலே என் இரட்சகரின் வார்த்தைகளுக்கு மையாக ஆனபோதிலும், என் இரட்சகரின் வார்த்தைகள் தீர்ந்து போகுமுன்னர் பெருங்கடல் தீர்ந்து போகும், இரு மடங்கு மையை நாம் வழங்கினாலும் சரியே."

110. கூறும், "உங்கள் தெய்வம் ஒரே தெய்வம் என்று உள்ளுணர்வளிக்கப்பட்டிருக்கும் நான், உங்களைப் போன்ற ஒரு மனிதன் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. தங்கள் இரட்சகரைச் சந்திப்பதை எதிர்பார்த்திருப்பவர்கள் நன்மையான காரியங்களைச் செய்யவும், மேலும் தன்னுடைய இரட்சகருடன் வேறு தெய்வம் எதனையும் ஒருபோதும் வழிபடாதிருக்கவும் வேண்டும்."

****

## சூரா 19: மேரி
## (மர்யம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

**18:94–98 கடவுளின் உடன்படிக்கைத் தூதராக, எனது பணிகளில் ஒன்று, உலக முடிவிற்கு முன்னால் இறுதி அடையாளமான காக் மற்றும் மேகாக், உலக முடிவிற்குச் சரியாக 10 வருடங்கள் முன்னதாக, கி.பி.2270 (ஹிஜ்ரி 1700) ல் மீண்டும் தோன்றுவார்கள் என்பதை எடுத்துக் கூறுவதுமாகும். சூரா 18 மற்றும் 21–ல் ஒவ்வொரு சூராவிலும் சூராவின் முடிவுக்கு 17 வசனங்கள் முன்னதாக, 17 சந்திர நூற்றாண்டுகளை எடுத்துக் காட்டும் விதமாக, காக் மற்றும் மேகாக் காணப்படுகின்றனர் என்பதைக் கவனிக்கவும் (72:27). (பார்க்க 72:27 மற்றும் பின் இணைப்பு25).*

1. க. ஹ. ய. ஐ. ஸ* *(காஃப் ஹா யா ஐன் ஸாத்)*

*ஜகரிய்யா*

2. தன் சேவகர் ஜகரிய்யாவின் பால் உம்முடைய இரட்சகரின் கருணையைப் பற்றிய ஒரு விவரிப்பு.

3. அவர் தன் இரட்சகரை அழைத்தார், இரகசியமானதோர் அழைப்பு.

4. அவர் கூறினார், "என் இரட்சகரே, எனது உடலில் எலும்புகள் மக்கிப்போய் விட்டன, மேலும் எனது தலைமுடியோ நரையினால் ஜொலிக்கின்றது. உம்மை இறைஞ்சுவதால், என் இரட்சகரே, நான் ஒருபோதும் விரக்தி அடைவதில்லை.

5. "எனக்குப் பிறகு என்னைச் சார்ந்திருப்பவர்களைக் குறித்து நான் கவலையடைகின்றேன், மேலும் என் மனைவியோ மலடியாக இருக்கின்றாள். உம்மிடமிருந்து ஒரு வாரிசை எனக்கு வழங்குவீராக.

6. "என்னுடைய வாரிசாகவும் ஜேகபின் வம்சத்திற்கு வாரிசாகவும் அவர் இருக்கட்டும், மேலும் என் இரட்சகரே, ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவராகவும் அவரை ஆக்குவீராக."

*ஜான்*

7. "ஜகரிய்யாவே, நாம் உமக்கு நற்செய்தி தருகின்றோம்; ஜான் *(யஹ்யா)* என்ற பெயரைக் கொண்ட ஒரு பையன். அதற்கு முன்னர் அவரைப் போன்று எவர் ஒருவரையும் நாம் ஒருபோதும் படைக்கவில்லை."

8. அவர் கூறினார், "என் இரட்சகரே, என் மனைவியின் மலட்டுத்தனத்திற்குப் பின்னரும், என் முதிர்ந்த வயதிற்குப் பின்னரும் நான் ஒரு மகனைப் பெறுவேனா ?"

9. அவர் கூறினார், "இவ்விதமே உம்முடைய இரட்சகர் கூறினார்: ‘அதனைச் செய்வது எனக்கு எளிதானதே. அதற்கு முன்னர் நீர் எதுவுமாக இல்லாதிருந்த போதே உம்மை நான் படைத்தேன்.’"

10. அவர் கூறினார், "என் இரட்சகரே, ஓர் அறிகுறியை எனக்குத் தருவீராக" அவர் கூறினார், "உமக்குரிய அறிகுறியாவது, தொடர்ந்த மூன்று இரவுகளுக்கு மக்களிடம் நீர் பேசமாட்டீர் என்பதாகும்."

11. ஆலயத்திலிருந்து, அவர் தன் குடும்பத்தாரிடம் வெளியில் வந்தார், மேலும் அவர்களிடம் சைகை செய்தார்: "பகலும் இரவும் *(கடவுளைத்)* தியானம் செய்யுங்கள்."

12. "ஜானே, உறுதியோடு, நீர் வேதத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும்." அவருடைய இளமையிலேயே, அவருக்கு நாம் ஞானத்தைக் கொடையளித்தோம்.

13. மேலும் நம்மிடமிருந்து கனிவையும் தூய்மையையும் *(அவருக்கு நாம் கொடையளித்தோம்),* ஏனெனில் அவர் நன்னெறியுடையவராக இருந்தார்.

14. அவர் தன் பெற்றோரைக் கண்ணியம் செய்தார், மேலும் அவர் ஒருபோதும் கீழ்ப்படியாதவொரு கொடுங்கோலனாக இருந்ததில்லை.

15. அவர் பிறந்த அந்நாளிலும், அவர் இறக்கும் அந்நாளிலும், மேலும் அவர் மீண்டும் வாழ்வுக்குக் கொண்டு வரப்படுகின்ற உயிர்த்தெழுப்பப்படும் அந்நாளிலும் அவர் மீது சாந்தி நிலவுவதாக.

*மேரி*

16. மேரியை இந்த வேதத்தில் குறிப்பிட்டுக் கூறுவீராக. தன் குடும்பத்தாரிடமிருந்து தன்னை அவர் தனிமைப் படுத்திக் கொண்டார், கிழக்கில் ஓர் இடத்திற்குள்.

17. அவர்களிடமிருந்து அவரை ஒரு தடுப்பு பிரித்து வைத்த சமயம் நம்முடைய ஆவியை நாம் அவரிடம் அனுப்பினோம். அவர் ஒரு மனித உருவத்தில் அவரிடம் சென்றார்.

18. அவர் கூறினார், "நீர் நன்னெறியுடையவராக இருக்க வேண்டும், என மிக்க அருளாளரிடம் நான் புகலிடம் தேடுகின்றேன்."

19. அவர் கூறினார், "நான் உம் இரட்சகரின் தூதன் ஆவேன், தூய்மையான ஒரு மகனை உமக்கு அளிப்பதற்காக."

20. அவர் கூறினார், "எந்த ஒரு மனிதனும் என்னைத் தொட்டிருக்காத போது, எப்படி நான் ஒரு மகனைப் பெற முடியும்; நான் ஒருபோதும் ஒழுக்கம் தவறியவளாகவும் இருந்ததில்லை."

21. அவர் கூறினார், "உம் இரட்சகர் இவ்விதம் சொன்னார், ‘அதனைச் செய்வது எனக்கு எளிதானதே. மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும் நம்மிடமிருந்துள்ள கருணையாகவும் நாம் அவரை ஆக்குவோம். இது முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு விஷயமாகும்.’"

**19:1 இதுவே அதிகபட்ச எண்ணிக்கையிலான குர்ஆனின் துவக்க எழுத்துகள் ஆகும், ஏனெனில் இந்த சூரா ஜானின் அற்புதப் பிறப்பு மற்றும் ஜீஸஸின் கன்னிப் பிறப்பு போன்ற முக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசுகின்றது, மேலும் ஜீஸஸைக் கடவுளின் மகனாகக் கருதும் மாபெரும் இறைநிந்தனையை கடுமையாகக் கண்டனம் செய்கின்றது. இந்த ஐந்து துவக்க எழுத்துகளும் இவ்விஷயங்களுக்கு ஆதரவான வலிமைவாய்ந்த கண்கூடான ஆதாரங்களை வழங்குகின்றன. (பார்க்க பின் இணைப்புகள் 1 & 22).*

*ஜீஸஸின் தோற்றம்*

22. அவர் அவரைச் சுமந்த போது, மிகத் தொலைவி லுள்ளதோர் இடத்தில் தன்னை அவர் தனிமைப் படுத்திக் கொண்டார்.

23. ஒரு பேரீத்த மரத்தின் கீழ் அவருக்கு பிரசவ வலி வந்தது. அவர் கூறினார், "*(நான் மிகவும் வெட்கப் படுகின்றேன்;* ) இது நிகழ்வதற்கு முன்னரே நான் மரணித்திருக்கவும், முற்றிலும் மறக்கப்பட்டிருக்கவும் வேண்டுமே என நான் விரும்புகின்றேன்."

24. அவருக்குக் கீழிருந்து *(அச்சிசு)* அவரை அழைத்துக் கூறியது, "துக்கப்படாதீர். உம் இரட்சகர் ஓர் ஓடையை உமக்கு வழங்கியுள்ளார்.

25. "இந்தப் பேரீத்த மரத்தின் அடித்தண்டை நீர் உலுக் கினால், பழுத்த பேரீத்தைகளை உமக்காக அது உதிர்க்கும்.*

26. "உண்ணுவீராக பருகுவீராக, மேலும் மகிழ்வுடன் இருப்பீராக. எவரையேனும் நீர் காணும் போது, கூறு வீராக, 'நான் மௌன விரதம் பூண்டுள்ளேன்; இன் றைய தினம் நான் எவருடனும் பேச மாட்டேன்.'"

27. அவரைச் சுமந்தவாறு, அவர் தன் குடும்பத்தாரிடம் வந்தார். அவர்கள் கூறினர், "மேரியே, முற்றிலும் எதிர் பாராத ஒன்றை நீர் செய்து விட்டீர்.

28. "ஆரோனின் வம்சத்தவரே, உம் தந்தை ஒரு கெட்ட மனிதராக இருந்ததில்லை. அன்றி, உம்முடைய தாயாரும் ஒழுக்கம் தவறியவராக இருந்ததில்லை."

*அந்தச் சிசு ஒரு வாக்குமூலம் அளிக்கின்றது*

29. அவரைச் சுட்டிக் காட்டினார் அவர். அவர்கள் கூறி னர், "தொட்டிலில் இருக்கும் ஒரு சிசுவுடன் எப்படி நாங்கள் பேச முடியும் ?"

30. *(அந்தச் சிசு பேசியது, மேலும்)* கூறியது, "நான் **கடவுள்**–ன் ஒரு சேவகன் ஆவேன். அவர் எனக்கு வேதத்தைத் தந்து, என்னை ஒரு நபியாகவும் நியமித் துள்ளார்.

31. "நான் செல்லுமிடமெல்லாம் என்னை அவர் ஆசீர் வதித்துள்ளார், மேலும் நான் வாழும் காலமெல்லாம் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளையும் (ஜகாத்) கடமையான தர்மத்தையும் நிறைவேற்ற எனக்குக் கட்டளையிட்டுள்ளார்.

32. "நான் என் தாயைக் கண்ணியப்படுத்த வேண்டிய வன்; கீழ்ப்படியாத ஒரு கலகக்காரனாக என்னை அவர் ஆக்கவில்லை.

33. "மேலும் நான் பிறந்த அந்நாளிலும், நான் இறக்கும் அந்நாளிலும், மேலும் நான் உயிர்த்தெழுப்பப்படும் அந்நாளிலும் என் மீது சாந்தி நிலவுவதாக."

*நிரூபிக்கப்பட்ட சத்தியம்*

34. அவர்தான் ஜீஸஸ், மேரியின் மகனாவார், மேலும் அவர்கள் தொடர்ந்து சந்தேகித்துக் கொண்டிருக் கும், இவ்விஷயத்தைப் பற்றிய உண்மை இதுவே யாகும்.

35. ஒரு மகனை அவர் பெற்றெடுப்பதென்பது **கடவுள்**–க் குத் தகுதிக்கேற்றதல்ல, அவர் துதிப்பிற்குரியவர். எந்த ஒன்றையும் செய்து முடிக்க, அவர் அதனை, "ஆகு" என்று மட்டும் கூறுகின்றார், உடன் அது ஆகிவிடுகின்றது.

36. அவரும் பிரகடனம் செய்தார், "**கடவுள்**தான் என் இரட்சகரும் உங்கள் இரட்சகரும் ஆவார்; அவரை மட்டுமே நீங்கள் வழிபட வேண்டும். இதுவே நேரான பாதையாகும்."*

37. *(ஜீஸஸின் தன்மை குறித்து)* வெவ்வேறு தரப்பினர் தங்களுக்கிடையில் தர்க்கித்துக் கொண்டனர். எனவே, பயங்கரமான ஒரு நாளின் பார்வையி லிருந்து நம்பமறுப்பவர்களுக்குக் கேடுதான்.

38. அவர்கள் நம்மை சந்திக்க வரும்போது நீர் அவர் களைச் செவியேற்கின்ற, மேலும் அவர்களை பார்க் கின்ற வரை காத்திருப்பீராக. வரம்புமீறியவர்கள் அந் நாளில் முற்றிலும் தோல்வியுற்றவர்களாக இருப்பார் கள்.

39. தீர்ப்பு வழங்கப்படுகின்ற கை சேதத்தின் நாள் குறித்து அவர்களை எச்சரிக்கை செய்வீராக. அவர் கள் முற்றிலும் கவனமற்றவர்களாக உள்ளனர்; அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

40. பூமியையும் அதில் உள்ள ஒவ்வொருவரையும் நாமே அனந்தரம் கொள்வோம்; ஒவ்வொருவரும் நம்மிடமே திரும்பக் கொண்டு வரப்படுவார்கள்.

*ஆப்ரஹாம்*

41. ஆப்ரஹாமை இந்த வேதத்தில் குறிப்பிட்டுக் கூறு வீராக; அவர் ஒரு புனிதராக, ஒரு நபியாக இருந் தார்.

**19:25 எனவே, ஜீஸஸ் செப்டம்பர் இறுதியில் அல்லது அக்டோபர் துவக்கத்தில்தான் பிறந்தார். அப்போது தான் மத்தியக் கிழக்கு நாடுகளில் மரங்களில் இருந்து உதிரும் அளவுக்குப் பேரீத்தம் பழங்கள் பழுக்கின்றன.*

**19:36 இது ஜானின் சுவிசேஷம் 20:17ல் ஜீஸஸ் கூறுவதாக வரும் வாசகத்திற்கு ஒப்பான ஒன்றாகும்.*

42. அவர் தன் தந்தையிடம் கூறினார், "என் தந்தையே, செவியேற்கவோ, அல்லது பார்க்கவோ, அன்றியும் உமக்கு எவ்விதத்திலும் உதவி செய்யவோ இயலாத வற்றை நீங்கள் வழிபடுவது ஏன் ?

43. "என் தந்தையே, நீங்கள் பெற்றிருக்காத குறிப்பிட்ட அறிவை நான் பெற்றிருக்கின்றேன். என்னைப் பின் பற்றுவீராக, நான் உங்களை நேரான பாதையில் வழி நடத்துவேன்.

44. "என் தந்தையே, சாத்தானை வழிபடாதீர். அந்தச் சாத்தான் மிக்க அருளாளருக்கெதிராக கலகம் செய்தவன் ஆவான்.

45. "என் தந்தையே, மிக்க அருளாளரிடமிருந்து தண்ட னைக்கு நீர் உள்ளாகிப் பின்னர் சாத்தானின் ஒரு கூட்டாளியாகி விடுவீரோ என்று நான் அஞ்சுகின் றேன்."

46. அவர் கூறினார், "என்னுடைய தெய்வங்களை நீர் கைவிட்டு விட்டீரா, ஆப்ரஹாமே ? நீர் நிறுத்திக் கொள்ளவில்லையென்றால், நான் உம்மைக் கல்லா லடித்துக் கொன்று விடுவேன். என்னைத் தனியே விட்டுச் சென்று விடும்."

47. அவர் கூறினார், "உங்கள் மீது சாந்தி நிலவட்டும். உம்மை மன்னிக்கும்படி என் இரட்சகரிடம் நான் இறைஞ்சுவேன்; அவர் என்னிடம் மிக்க கனிவுடன் இருந்து வந்துள்ளார்.

48. "உங்களையும் **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடும் தெய்வங்களையும் விட்டு நான் விலகிக் கொள் வேன். என் இரட்சகரை மட்டுமே நான் வழிபடுவேன். என் இரட்சகரை மட்டும் இறைஞ்சுவதனால், நான் தவறிப் போகச் சாத்தியமேயில்லை."

49. அவர்களையும் **கடவுள்**–வுடன் அவர்கள் வழிபட்ட தெய்வங்களையும் விட்டு அவர் விலகிக் கொண்ட தால், நாம் அவருக்கு ஐசக்கையும் ஜேகபையும் அளித் தோம், மேலும் அவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு நபியாகவும் நாம் ஆக்கினோம்.

50. நமது கருணையை நாம் அவர்கள் பால் பொழிந் தோம், மேலும் சரித்திரத்தில் ஒரு கௌரவமான இடத்தையும் அவர்களுக்கு நாம் அளித்தோம்.

*மோஸஸ்*

51. மோஸஸை இந்த வேதத்தில் குறிப்பிட்டுக் கூறுவீ ராக. அவர் அர்ப்பணித்தவராக இருந்தார், மேலும் அவர் ஒரு தூதர் நபியாக இருந்தார்.

52. சினாய் மலையின் வலப்புறத்திலிருந்து அவரை நாம் அழைத்தோம். அவருடன் உரையாடுவதற்காக, அவரை நாம் அருகில் கொண்டு வந்தோம்.

53. மேலும் நமது கருணையிலிருந்து அவருடைய சகோ தரர் ஆரோனை ஒரு நபியாக, நாம் அவருக்கு அளித் தோம்.

54. மேலும் இஸ்மாயிலை இந்த வேதத்தில் குறிப்பிட் டுக் கூறுவீராக. வாக்குறுதி ஒன்றினை அவர் செய்த போதெல்லாம் அவர் உண்மையுடையவராக இருந் தார், மேலும் அவர் ஒரு தூதர் நபியாக இருந்தார்.

55. தொடர்புத் தொழுகைகளையும் *(ஸலாத்)* கடமை யான தர்மத்தையும் *(ஜகாத்)* நிறைவேற்றும்படித் தன் குடும்பத்தாரை ஏவுபவராக அவர் இருந்தார்; அவரு டைய இரட்சகரிடம், ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய வராக அவர் இருந்தார்.

56. மேலும் இத்ரீஸை இந்த வேதத்தில் குறிப்பிட்டுக் கூறுவீராக. அவர் ஒரு புனிதராக, ஒரு நபியாக இருந் தார்.

57. கௌரவமானதொரு அந்தஸ்திற்கு அவரை நாம் உயர்த்தினோம்.

58. **கடவுள்**–ஆல் ஆசீர்வதிக்கப்பட்ட நபிமார்களில் இவர்கள் சிலர் ஆவர். அவர்கள் ஆதமின் சந்ததியி னர், மற்றும் நோவாவுடன் நாம் சுமந்து கொண்டவர் களின் சந்ததியினர், மற்றும் ஆப்ரஹாம் மற்றும் இஸ்ர வேலின் சந்ததியினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள், மேலும் நம்மால் வழிகாட்டப்பட்டுத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களில் உள்ளவர்கள் ஆவர். மிக்க அருளாளரின் வெளிப்பாடுகள் அவர்களுக்கு ஓதிக் காட்டப்பட்டால், அவர்கள் அழுதவர்களாக, சிரம் பணிந்து விழுவார்கள்.

*(ஸலாத்) தொடர்புத் தொழுகைகளைத் தொலைத்து விடுதல்*

59. அவர்களுக்குப் பின்னர், *(ஸலாத்)* தொடர்புத் தொழு கைகளைத் தொலைத்து விட்ட, மேலும் தங்களு டைய மோகங்களைப் பின்பற்றிய தலைமுறையினரை அவர் மாற்றியமைத்தார். அதன் விளைவுகளை அவர் கள் அனுபவிப்பார்கள்.

60. வருத்தப்பட்டு, நம்பிக்கை கொண்டு, மேலும் நேரிய தொரு வாழ்க்கை நடத்துபவர்கள் மட்டுமே, சிறிதள வும் அநீதமின்றி, சுவர்க்கத்தில் நுழைவார்கள்.

61. தனிமையிலிருக்கும் போதும், அவரை வழிபடுவோ ருக்கு மிக்க அருளாளர் வாக்களித்துள்ளபடி, ஏதேன் தோட்டங்கள் அவர்களுக்காக காத்திருக்கின்றன. நிச்சயமாக, அவருடைய வாக்குறுதி நிறைவேறியே தீரும்.

62. அபத்தமான எதையும் அவர்கள் அங்கே செவியேற்க மாட்டார்கள்; சாந்தி மட்டுமே. பகலிலும் இரவிலும் அங்கே அவர்களுடைய வாழ்வாதாரங்களை, அவர்கள் பெறுவார்கள்.

63. இவ்விதமானது சுவர்க்கம்; நம்முடைய சேவகர்களில் நன்னெறியுடையோருக்கு நாம் அதனை அளிப்போம்.

64. உம்முடைய இரட்சகரின் கட்டளைப்படியே அன்றி நாங்கள் கீழே வருவதில்லை. எங்களுடைய கடந்த காலமும், எங்களுடைய எதிர்காலமும், மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்கே உரியவை. உம்முடைய இரட்சகர் ஒருபோதும் மறதியுடையவரல்லர்.

65. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றுக்கும் இரட்சகர்; நீங்கள் அவரை வழிபடவும் அவரை வழிபடுவதில் உறுதியோடு தொடர்ந்து இருக்கவும் வேண்டும். அவருக்கு நிகரான எவரையேனும் நீர் அறிவீரா ?

66. மனிதன் கேட்கின்றான், "நான் இறந்து விட்ட பின்னர், மீண்டும் நான் உயிர் பெறுவேனா ?"

67. முன்னரே நாம் அவனை படைத்ததையும், அவன் எதுவுமாக இல்லாதிருந்தான் என்பதையும், மனிதன் மறந்து விட்டானா ?

*தலைவர்களுக்கு விசேஷ எச்சரிக்கை*

68. உம் இரட்சகர் மீது ஆணையாக,அந்த சாத்தான்களுடன் சேர்த்து, அவர்களை நிச்சயம் நாம் வரவழைப்போம், மேலும் இழிவடைந்தவர்களாக, அவர்களை நாம் நரகத்தில் ஒன்று சேர்ப்போம்.

69. பின்னர் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் மிக்க அருளாளரின் மிகத் தீவிரமான விரோதிகளை நாம் பொறுக்கி எடுப்போம்.

70. அதில் கருகுவதற்கு மிகவும் தகுதியானவர்கள் யார் என்பதை நாம் முற்றிலும் நன்கறிவோம்.

*ஒவ்வொருவரும் நரகத்தைக் காண்பார்கள்**

71. உங்களில் தனித்த ஒவ்வொருவரும் அதனைப் பார்த்தே தீர வேண்டும்; இது உம் இரட்சகரின் திரும்பப் பெற முடியாத ஒரு தீர்மானமாகும்.

72. பின்னர் நன்னெறியுடையோரை நாம் மீட்டு விடுவோம், மேலும் வரம்புமீறியவர்களை, இழிவடைந்தவர்களாக அதில் விட்டு விடுவோம்.

*பெரும்பான்மையினர்*

73. நம்முடைய வெளிப்பாடுகள் அவர்களிடம் தெளிவாக ஓதிக்காட்டப்படும்போது, நம்பிக்கை கொண்டோரிடம் நம்பமறுப்போர் கூறுகின்றனர், "நம்மில் மிகவும் வளமானவர்கள் யார் ? நம்மில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் யார் ?"

74. இவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம்; அவர்கள் அதிக வலிமையுள்ளவர்களாகவும், மிகவும் வளமானவர்களாகவும் இருந்தனர்.

75. கூறும், "எவர்கள் வழிதவறிச் செல்வதைத் தேர்ந்தெடுக்கின்றனரோ, மிக்க அருளாளர் அவர்களை அதில் தொடர்ந்து செலுத்துவார், அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை அவர்கள் காணும் வரை– ஒன்று தண்டனை அல்லது அவ்வேளை. அப்போது தான் உண்மையில் மிக மோசமானவர்கள், வலிமையில் குறைந்தவர்கள் யார் என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள்."

76. வழிகாட்டப்பட்டவர்களாவதைத் தேர்ந்தெடுத்தோருடைய வழிகாட்டலைக் **கடவுள்** அதிகரிக்கின்றார். ஏனெனில் நல்ல செயல்கள் உம் இரட்சகரால் நிரந்தர வெகுமதியளிக்கப்படுகின்றன, மேலும் மிக மேலான லாபங்களைக் கொண்டு வருகின்றன.

77. நமது வெளிப்பாடுகளை ஏற்கமறுத்துவிட்டுப் பின்னர், "நான் வளமும் பிள்ளைகளும் கொடுக்கப்படுவேன்" என்று கூறியவனை நீர் கவனித்தீரா ?!

78. அவன் எதிர்காலத்தைக் கண்டுவிட்டானா ? மிக்க அருளாளரிடமிருந்து அத்தகையதொரு உறுதிமொழியை அவன் பெற்றிருக்கின்றானா ?

79. உண்மையில், அவன் கூறுபவற்றை நாம் பதிவு செய்வோம், பின்னர் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் தண்டனைக்கு அவனை நாம் உட்படுத்துவோம்.

80. பின்னர் அவன் சொந்தமாகக் கொண்டிருந்த ஒவ்வொன்றையும் நாம் அனந்தரம் கொள்வோம், மேலும் அவன் முற்றிலும் தனியாக நம்மிடம் திரும்பி வருவான்.

---

**19:71 பின் இணைப்பு 11ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, நமது பிரபஞ்சத்திற்குக் கடவுளின் நேரடி வருகைக்கு முன்னர் நாம் உயிர்த்தெழுப்பப்படுவோம். அது நரகின் ஒரு தற்காலிக ருசிப்பாக இருக்கும், ஏனெனில் கடவுளின் இருப்பு இல்லாத நிலையே நரகமாகும். கடவுள் வரும்போது (89:22), நன்னெறியுடையோர் மீட்கப்பட்டு விடுவார்கள். பார்க்க 19:72*

81. அவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடும் என்பதற்காகக் **கடவுள்**–வுடன் மற்றத் தெய்வங்களை அவர்கள் வழிபடுகின்றனர்.

*போலித்தெய்வங்கள் தங்களை வழிபட்டவர்களைக் கைவிட்டு விடுகின்றன*

82. அதற்கு நேர்மாறாக; அவர்களுடைய போலித் தெய்வ வழிபாட்டை அவர்கள் ஏற்கமறுத்துவிடுவர், மேலும் அவர்களுடைய விரோதிகளாகவும் ஆகிவிடுவர்.

83. நம்பமறுப்பவர்களைத் தூண்டி விடுவதற்காக அவர்கள் மீது நாம் சாத்தான்களை எவ்வாறு அவிழ்த்து விடுகின்றோம் என்பதை அவர்கள் காணவில்லையா ?

84. அவசரப்படாதீர்; அவர்களுக்காகச் சில தயாரிப்புகளை நாம் தயார் செய்து கொண்டிருக்கின்றோம்.

85. மிக்க அருளாளரின் முன்னால் நன்னெறியுடையோரை ஒரு கூட்டமாக நாம் வரவழைக்கும் அந்நாள் வரும்.

86. மேலும் குற்றவாளிகளை நரகத்திற்கு நாம் ஓட்டுவோம், அவர்களுடைய நிரந்தரமான தங்குமிடமாக இருப்பதற்காக.

87. மிக்க அருளாளரின் சட்டங்களுக்கு அநுசரனையானவர்களைத் தவிர எவரும் பரிந்துரைக்கும் சக்தி பெறமாட்டார்கள்.

*மிகப்பெரும் இறைநிந்தனை*

88. அவர்கள் கூறினர், "மிக்க அருளாளர் ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளார் !"

89. நீங்கள் மிகப்பெரும் ஓர் இறைநிந்தனையைக் கூறி விட்டீர்கள்.

90. வானங்கள் பிளந்து விடக் கூடும், பூமி துண்டுகளாக வெடித்து விடக்கூடும், மேலும் மலைகள் நொறுங்கிப் போய் விடக்கூடும்.

91. மிக்க அருளாளர் ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளார் என அவர்கள் கோருவதால்.

92. மிக்க அருளாளர் ஒரு மகனைப் பெற்றெடுப்பதென்பது அவருக்குச் சற்றும் தகுமானதல்ல.

93. வானங்களிலும் பூமியிலும் உள்ள தனித்த ஒவ்வொருவரும் மிக்க அருளாளரின் ஒரு சேவகரே ஆவார்.

94. அவர்களை அவர் சூழ்ந்திருக்கின்றார், மேலும் அவர்களை ஒருவர் பின் ஒருவராக எண்ணி வைத்துள்ளார்.

95. உயிர்த்தெழுப்பப்படும் அந்நாளில் அவர்கள் அனைவரும் தன்னந்தனியாக அவர் முன் வருவார்கள்.

96. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்துவோர், மிக்க அருளாளர் அவர்களை அன்பால் பொழிவார்.

97. இவ்விதமாக *(குர்ஆனாகிய)* இதனை நாம் உமது மொழியில் தெளிவானதாக ஆக்கியுள்ளோம், நன்னெறியுடையோருக்கு நற்செய்தியைச் சேர்ப்பிப்பதற்காகவும், இதனைக் கொண்டு எதிர்ப்பாளர்களை எச்சரிப்பதற்காகவும்.

98. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்துள்ளோம்; அவர்களில் எவரையேனும் உம்மால் காணவோ அல்லது அவர்களிடமிருந்து சப்தம் எதையேனும் கேட்கவோ முடிகின்றதா ?

****

## சூரா 20: த. ஹ.
## (தா ஹா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. த. ஹ.*

2. எந்தக் கஷ்டத்தையும் உமக்கு உண்டாக்குவதற்காக, இந்தக் குர்ஆனை உமக்கு நாம் வெளிப்படுத்தவில்லை.

3. பக்திமான்களுக்கு நினைவூட்டுவதற்காக மட்டுமே.

4. பூமியையும் உயர்ந்த வானங்களையும் படைத்தவரிடமிருந்து ஒரு வெளிப்பாடு.

5. மிக்க அருளாளர்; அவர் அனைத்து அதிகாரங்களையும் ஏற்றுக் கொண்டார்.

6. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும், மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றும், மேலும் மண்ணிற்கு அடியில் உள்ள ஒவ்வொன்றும், அவருக்குரியவை.

7. உங்களுடைய நம்பிக்கை உறுதியை நீங்கள் பகிரங்கப்படுத்துகின்றீர்களோ *(இல்லையோ)* அவர் இரகசியங்களையும் அதனையும் விட மிகவும் மறைக்கப்பட்டவற்றையும் அறிகின்றார்.

**20:1 குர்ஆனின் ஆச்சர்யமூட்டும் கணித அற்புதத்தின் அங்கங்களாக இந்தத் துவக்க எழுத்துக்களின் பங்கு பின் இணைப்பு 1ல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.*

8. **கடவுள்:** அவருடன் வேறு தெய்வம் இல்லை. மிகவும் அழகிய பெயர்கள் அவருக்குரியன.

9. மோஸஸின் சரித்திரத்தை நீர் கவனித்தீரா ?

10. அவர் ஒரு நெருப்பைக் கண்ட போது, அவர் தன் குடும்பத்தாரிடம் கூறினார், "இங்கேயே இருங்கள். நான் ஒரு நெருப்பைக் கண்டேன். அதிலிருந்து சிறிதை நான் உங்களிடம் கொண்டு வரவோ அல்லது நெருப்பின் அருகில் ஏதேனும் வழியைக் கண்டு கொள்ளவோ கூடும்."

11. அவர் அதன் பால் வந்த போது, அவர் அழைக்கப் பட்டார், "மோஸஸே.

12. "நான் தான் உம்முடைய இரட்சகர்; உமது காலணி களைக் கழற்றுவீராக. நீர் துவா, புனிதப் பள்ளத்தாக் கில் இருக்கின்றீர்.

13. "நான் உம்மைத் தேர்ந்தெடுத்துள்ளேன், எனவே வெளிப்படுத்தப்படுபவற்றை கவனமாகக் கேட்டுக் கொள்ளும்.

14. "நான்தான் **கடவுள்**; என்னுடன் வேறு தெய்வம் இல்லை. என்னை மட்டுமே நீர் வழிபட வேண்டும், மேலும் என்னை நினைவு கூர்வதற்காகவே *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பீராக.

*உலக முடிவு*
*மறைக்கப்பட்டதாக இல்லை**

15. "*(உலக முடிவின்)* வேளை நிச்சயமாக வருகின்றது; நான் அதனைக் கிட்டத்தட்ட மறைத்து வைப்பேன். ஏனெனில் ஒவ்வொரு ஆத்மாவும் அதன் காரியங் களுக்குரிய கூலியைக் கொடுக்கப்பட்டாக வேண் டும்.

16. அதன் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களால் – தங் களுடைய சுய அபிப்பிராயங்களைப் பின் தொடர்ப வர்களால் – அதிலிருந்து திருப்பப்பட்டு விடக் கூடாது, நீர் வீழ்ந்து விடாதிருக்கும் பொருட்டு.

17. "மோஸஸே, உம்முடைய வலக்கரத்தில் இருக்கும் இது என்ன ?"

18. அவர் கூறினார், "இது என்னுடைய ஊன்றுகோல். இதன் மீது நான் சாய்ந்து கொள்வேன், இதனைக் கொண்டு எனது ஆடுகளை மேய்ப்பேன், மேலும் இன்னபிற காரணங்களுக்காகவும் இதனை நான் பயன்படுத்துவேன்."

19. அவர் கூறினார், "மோஸஸே, அதனைக் கீழே வீசு வீராக."

20. அவர் அதனைக் கீழே வீசினார், உடனே அது ஊர்ந்து செல்லும் ஒரு பாம்பாக மாறியது.

21. அவர் கூறினார், "அதனை எடுத்துக் கொள்ளும்; பயப் படாதீர். அதன் அசல் நிலைக்கு அதனை நாம் திருப்பி விடுவோம்.

22. "மேலும் உமது கரங்களை உமது கட்கங்களுக்குள் வையும்; ஒரு மாசும் இன்றி வெண்மையாக அது வெளிவரும்; மற்றுமொரு சான்று.

23. "இவ்விதமாக நம்முடைய மாபெரும் அற்புதங்களில் சிலவற்றை நாம் உமக்குக் காட்டுகின்றோம்.

24. "ஃபேரோவிடம் செல்லும், ஏனெனில் அவன் வரம்பு மீறி விட்டான்."

25. அவர் கூறினார், "என் இரட்சகரே, என் சுபாவத்தைக் குளிர்விப்பீராக.

26. "மேலும் இந்த விஷயத்தை எனக்கு எளிதாக்கு வீராக.

27. "மேலும் எனது நாவிலிருந்து ஒரு முடிச்சை அவிழ்த்து விடுவீராக.

28. "அவர்கள் எனது பேச்சைப் புரிந்து கொள்ளும் வண்ணம்.

29. "மேலும் எனது குடும்பத்திலிருந்து எனக்கோர் உதவியாளரை நியமிப்பீராக.

30. "என் சகோதரர் ஆரோனை.

31. "அவருடன் என்னைப் பலப்படுத்துவீராக.

32. "இவ்விஷயத்தில் என்னுடைய பங்காளியாக அவரை இருக்கச் செய்வீராக.

33. "நாங்கள் உம்மை அடிக்கடித் துதிப்பதற்காக.

34. "மேலும் உம்மை அடிக்கடி நினைவு கூர்வதற்காக.

35. "நீர் எங்களைப் பார்ப்பவராக இருக்கின்றீர்."

36. அவர் கூறினார், "மோஸஸே, நீர் கேட்டது கொடுக் கப்பட்டது.

37. "மற்றொரு முறை உம்மை நாம் ஆசீர்வதித்துள்ளோம்.

38. "நாம் வெளிப்படுத்தியதை உம்முடைய தாயாருக்கு நாம் வெளிப்படுத்தியபோது.

39. "கூறியவாறு: ‘பெட்டிக்குள் அவரை இட்டு, பின்னர் அவரை ஆற்றினுள் வீசி விடுவீராக. ஆறு அவரை கரை மீது வீசிவிடும், என்னுடைய விரோதியாலும் அவருடைய விரோதியாலும் எடுத்துக் கொள்ளப்படு வதற்காக.’ என்னிடமிருந்து அன்பைக் கொண்டு உம்மீது நான் பொழிந்தேன், மேலும் எனது விழிப்பான கண்ணின் முன்னர் உம்மை நான் ஆக்கிக் கொண் டேன்.

**20:15 கடவுளின் இறுதித் தூதுச் செய்தியான குர்ஆனில், உலகின் முடிவு கொடுக்கப்பட்டுள்ளது. (15:87).*

40. "உம் சகோதரி அவர்கள் பால் நடந்து சென்று கூறினாள். 'இவர் மீது நன்கு கவனம் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு செவிலித்தாய் பற்றி என்னால் உங்களுக்குக் கூற முடியும்.' இவ்விதமாக உம் தாயாரிடம் நாம் உம்மைத் திரும்பச் சேர்த்தோம், அவர் மகிழ்வடைவதற்காகவும் கவலைப்படுவதை நிறுத்துவதற்காகவும். மேலும் ஒரு நபரை நீர் கொன்று விட்டபொழுது, வருத்தம் தரும் அதன் பின்விளைவுகளிலிருந்து உம்மை நாம் காத்தோம்; உண்மையில் நாம் உம்மை முற்றிலும் சோதித்து விட்டோம். மித்யன் சமூகத்தாருடன் வருடக் கணக்கில் நீர் தங்கியிருந்தீர், மேலும் துல்லியமானதொரு திட்டத்திற்கேற்ப இப்போது நீர் திரும்பி வந்திருக்கின்றீர்.

41. "எனக்காகவே நான் உம்மை ஆக்கியிருக்கின்றேன்.

42. "எனது அத்தாட்சிகளால் ஆதரவளிக்கப்பட்டவர்களாக, உம்முடைய சகோதரருடன் செல்லும், மேலும் என்னை நினைவு கூர்வதில் தடுமாற்றமடையாதீர்கள்.

43. "ஃபேரோவிடம் செல்லுங்கள், ஏனெனில் அவன் வரம்புமீறிவிட்டான்.

44. "நல்ல முறையில் அவனுடன் பேசுங்கள்; அவன் கவனத்தில் எடுக்கவோ அல்லது பக்திமானாகி விடவோ கூடும்."

45. அவர்கள் கூறினர், "எங்கள் இரட்சகரே, அவன் எங்களைத் தாக்கவோ அல்லது வரம்புமீறவோ கூடும் என நாங்கள் அஞ்சுகின்றோம்."

46. அவர் கூறினார், "அஞ்சாதீர்கள், ஏனெனில் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் நான் உங்களுடன் இருப்பேன்.

47. "அவனிடம் சென்று கூறுங்கள், 'நாங்கள் உன் இரட்சகரிடமிருந்துள்ள இரு தூதர்களாவோம். இஸ்ரேலின் சந்ததியினரை அனுப்பி விடு. அவர்களை வன்கொடுமை செய்வதிலிருந்து நீ விலகிக் கொள்ள வேண்டும். உன் இரட்சகரிடமிருந்து ஒரு அத்தாட்சியை நாங்கள் கொண்டு வந்துள்ளோம், மேலும் வழிகாட்டலைக் கவனத்தில் கொள்வோருக்குத்தான் சாந்தி உரித்தாகும்.

48. "'நம்பிக்கை கொள்ள மறுத்துத் திரும்பிச் சென்று விடுவோரை, தவிர்த்து விட முடியாதவாறு, தண்டனையானது வேதனைக்கு உள்ளாக்கும் என்று நாங்கள் உள்ளுணர்வளிக்கப்பட்டவர்களாக உள்ளோம்.'"

49. அவன் கூறினான், "மோஸஸே, உங்களுடைய இரட்சகர் யார்."

50. அவர் கூறினார், "ஒவ்வொன்றுக்கும் அதன் இருப்பையும், அதன் வழிகாட்டலையும் தந்த அந்த ஒருவர் தான் எங்கள் இரட்சகர்."

51. அவன் கூறினான், "முந்திய தலைமுறையினரைப் பற்றியது என்ன ?"

52. அவர் கூறினார், "அதனைப் பற்றிய அறிவு என் இரட்சகரிடம் ஒரு பதிவேட்டில் உள்ளது. என் இரட்சகர் ஒருபோதும் தவறிழைப்பதில்லை, அன்றியும் அவர் மறந்து விடுவதுமில்லை."

53. அவர்தான் உங்களுக்காகப் பூமியை வசிக்கத்தக்கதாக ஆக்கி, மேலும் அதில் உங்களுக்காகச் சாலைகளை மேவியவர். மேலும் அவர் விண்ணிலிருந்து நீரை இறக்கி அனுப்புகின்றார், அதன் மூலம் நாம் பல்வேறு வகையான தாவரங்களை விளைவிக்கின்றோம்.

54. உண்ணுங்கள், மேலும் உங்கள் கால்நடைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அறிவுத்திறனுடையோருக்கு இவை போதுமான சான்றுகளாகும்.*

55. அதிலிருந்தே உங்களை நாம் படைத்தோம், அதனுள்ளேயே உங்களை நாம் திருப்புவோம், மேலும் அதிலிருந்தே உங்களை மீண்டும் ஒரு முறை நாம் வெளிக் கொணர்வோம்.

56. நமது சான்றுகள் அனைத்தையும் அவனுக்கு நாம் காட்டினோம், ஆனால் அவன் நம்பமறுத்து விட்டான், மேலும் நிராகரித்து விட்டான்.

57. அவன் கூறினான், "உமது மாயாஜாலத்தைக் கொண்டு எங்களை எமது நாட்டை விட்டு வெளியேற்ற நீர் வந்திருக்கின்றீரா, மோஸஸே ?

58. "இதற்கொப்பான மாயாஜாலத்தை நிச்சயமாக நாம் உமக்குக் காட்டுவோம். எனவே, பொதுவானதோர் இடத்தில் நாங்களோ அன்றி நீரோ மீறக்கூடாத ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யும்."

59. அவர் கூறினார், "பண்டிகை நாள் உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரமாகும். முற்பகலில் நாம் அனைவரும் சந்திப்போம்."

**20:54 விண்வெளியில் மிதக்க விடப்பட்டிருக்கும் பூமி என்ற விண்வெளிக்கப்பலில் உள்ள விண்வெளிப் பயணிகளாக நாம் இருக்கின்றோம் எனும் நிதர்சனத்தை அறிவுத்திறன் உடையோர் வியந்து போற்றுவார்கள். இந்தத் தற்காலிக நெடும் விண்வெளிப்பயணத்தில் நாம் ஏறும்பொழுதே கடவுள் நமக்கு புதுப்பித்துக் கொள்ளக்கூடிய உணவு, நீர், செல்லப் பிராணிகள், வனவிலங்குகள் மற்றும் கால்நடைகள் முதலானவற்றை கடவுள் நமக்கு வழங்கியுள்ளார். நம்முடைய விண்வெளி வீரர்களுக்கு நாம் வழங்கும் வாழ்வாதாரங்களுடன் பூமியெனும் விண்வெளிக் கப்பலுக்குக் கடவுள் வழங்கியுள்ள வாழ்வாதாரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள் (பின் இணைப்பு 7).*

60. ஃபேரோ தன் படையினரை ஒன்று திரட்டிக் கொண்டு, பின்னர் வந்தான்.

61. மோஸஸ் அவர்களிடம் கூறினார், "உங்களுக்குக் கேடுதான், **கடவுள்**–வுடன் சண்டையிடுவதற்காகப் பொய்களைப் புனைந்து கொண்டு, நீங்கள் அதன் மூலமாக அவருடைய தண்டனைக்கு உள்ளாகின்றீர் களா? இத்தகைய புனைபவர்கள் நிச்சயமாகத் தோற்றுப் போவார்கள்."

62. அவர்கள் அந்தரங்கமாக ஆலோசித்தவாறு, தங்க ளுக்கிடையில் அவர்கள் தர்க்கித்துக் கொண்டனர்.

63. அவர்கள் கூறினர், "இவர்கள் இருவரும் தங்களு டைய மாயாஜாலத்தால் உங்கள் நாட்டை விட்டு உங்களை வெளியேற்றவும், உங்களுடைய இலட்சிய வாழ்க்கை முறையை நாசமாக்கவும் விரும்புகின்ற மந்திரவாதிகள் என்பதைத் தவிர பெரிதாக ஒன்று மில்லை.

64. "ஒரே திட்டத்தில் நாம் உடன்பட்டவாறு, ஓர் ஐக்கிய முன்னணியாக அவர்களை எதிர்கொள்வோம். இன் றைய தினம் வெற்றியடைபவன்தான் மேன்மையை அடைவான்."

65. அவர்கள் கூறினர், "மோஸஸே, நீர் வீசுகின்றீரா, அல்லது முதலில் வீசக்கூடியவர்களாக நாங்கள் இருக்கலாமா."

66. அவர் கூறினார், "நீங்கள் வீசுங்கள்." உடனே அவர் களுடைய மாயாஜாலத்தினால், அவர்களுடைய கயிறுகளும் கோல்களும் நகருபவை போன்று அவருக்குத் தோன்றின.

67. மோஸஸ் சற்று அச்சம் கொண்டார்.

68. நாம் கூறினோம், "அச்சம் கொள்ளாதீர். நீரே வெற்றி யடைவீர்.

69. "உமது வலக்கரத்தில் பிடித்திருப்பதை நீர் வீசும், உடனே அவர்கள் உருவாக்கியவற்றை அது விழுங்கி விடும். அவர்கள் உருவாக்கியவை ஒரு மந்திரவாதி யின் சூழ்ச்சி என்பதை விட பெரிதாக ஒன்றுமில்லை. மந்திரவாதியின் வேலை வெற்றி பெறாது."

*வல்லுநர்கள் சத்தியத்தை*
*அடையாளம் காண்கின்றனர்*

70. "ஆரோன் மற்றும் மோஸஸின் இரட்சகர் மீது நாங் கள் நம்பிக்கை கொள்கின்றோம்," என்று கூறியவர் களாக, மந்திரவாதிகள் சிரம் பணிந்து விழுந்தனர்.

71. அவன் கூறினான், "எனது உத்தரவின்றி அவர் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டு விட்டீர்களா? அவர் உங்களுடைய தலைவராகத்தான் இருக்க வேண் டும்; உங்களுக்கு மாயாஜாலத்தைக் கற்றுத் தந்தவர். நிச்சயமாக நான் உங்கள் மாறுகை மாறுகால் களைத் துண்டித்திடுவேன். பேரீத்தையின் அடிமரங் களின் மீது உங்களைச் சிலுவையிலறைந்து விடு வேன். நம்மில் மோசமான தண்டனைக்கு உட்படுத் தக்கூடியவர் யார் என்பதையும், யார் யாரைவிட தாக்குப்பிடிக்கப் போகின்றார் என்பதையும் நீங்கள் கண்டு கொள்வீர்கள்."

72. அவர்கள் கூறினர், "எங்களுக்கு வந்திருக்கும் தெளிவான சான்றுகளை விடவும், எங்களைப் படைத்தவரை விடவும் மேலாக உன்னை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள மாட்டோம். எனவே, நீ அளிக்க விரும்புகின்ற எந்த ஒரு தீர்ப்பையும் அளித் துக் கொள். கீழான இந்த வாழ்வில்தான் உன்னால் தீர்ப்பளிக்க முடியும்.

73. "எங்கள் பாவங்களையும் நீ எங்களைச் செய்ய நிர் பந்தித்த மாயாஜாலத்தையும் அவர் மன்னிக்கக் கூடும் என்பதற்காக, நாங்கள் எங்கள் இரட்சகர் மீது நம்பிக்கை கொண்டோம். **கடவுள்** மிகவும் மேலானவ ராகவும் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடியவராக வும் இருக்கின்றார்."

74. குற்றவாளியாகத் தன் இரட்சகரிடம் வரும் எவனொ ருவனும் நரகத்திற்கு உள்ளாவான், அங்கே அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான், அன்றி உயிருடனும் இருக்க மாட்டான்.

75. நேரியதொரு வாழ்க்கை நடத்திய நம்பிக்கையாளர் களாக அவரிடம் வருவோரைப் பொறுத்தவரை, அவர் கள் உயர்ந்த அந்தஸ்துகளை அடைவார்கள்.

76. அவற்றின் கீழ் ஆறுகள் பாயும் ஏதேன் தோட்டங்கள், நிரந்தரமாக அவர்களுடைய வசிப்பிடமாக இருக்கும். தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்பவர்களுக் குரிய வெகுமதி இத்தகையதேயாகும்.

77. மோஸஸுக்கு நாம் உள்ளுணர்வளித்தோம்: "என் சேவகர்களை வழிநடத்திக் கொண்டு வெளியேறு வீராக, மேலும் கடலின் குறுக்கில் அவர்களுக்காக உலர்ந்ததொரு பாதையை அடித்து உண்டாக்கு வீராக. நீங்கள் பிடிபட்டு விடக் கூடும் என்று நீர் அஞ்ச வேண்டாம், அன்றியும் நீர் கவலை கொள்ளவும் வேண்டாம்."

78. ஃபேரோ தன் படையினருடன் அவர்களைப் பின் தொடர்ந்தான், ஆனால் அவர்கள் மூழ்கடிக்கப்பட வேண்டும் என விதிக்கப்பட்டவாறே, அந்தக் கடல் அவர்களை மூழ்கடித்து விட்டது.

79. இவ்விதமாக, ஃபேரோ தன் சமூகத்தாரை வழிதவறச் செய்தான்; அவர்களை அவன் நேர்வழி நடத்தவில்லை.

80. இஸ்ரவேலின் சந்ததியினரே, உங்களுடைய விரோதி களிடமிருந்து உங்களை நாம் காப்பாற்றினோம், ஸினாய் மலையின் வலப்புறம் உங்களை வரவழைத் தோம், மேலும் உங்களுக்கு மன்னாவையும் காடை களையும் நாம் இறக்கி அனுப்பினோம்.

81. நாம் உங்களுக்கு வழங்கிய நல்ல பொருள்களில் இருந்து உண்ணுங்கள், மேலும் என் கோபத்திற்கு நீங்கள் உள்ளாகாது இருக்கும் பொருட்டு, வரம்பு மீறாதிருங்கள். என் கோபத்திற்கு உள்ளாகி விட்ட எவரும் வீழ்ந்து விட்டார்.

82. வருத்தப்பட்டு, நம்பிக்கை கொண்டு, நேரியதொரு வாழ்வு நடத்தி, உறுதியுடன் வழிகாட்டலில் நிலைத் திருப்பவர்களை நான் நிச்சயமாக மன்னிக்கின்றேன்.

*இஸ்ரவேலின் சந்ததியினர்*
*கலகம் செய்கின்றனர்*

83. "உம் சமூகத்தாரை விட்டு நீர் ஏன் விரைந்து வந்தீர், மோஸஸே ?"

84. அவர் கூறினார், "அவர்கள் எனக்குப் பின்னால் நெருக்கமாகவே வந்து கொண்டிருக்கின்றனர். நான் உம்மிடம் விரைந்து வந்தேன் என் இரட்சகரே, நீர் திருப்தியடையும் பொருட்டு."

85. அவர் கூறினார், "நீர் புறப்பட்ட பின்னர் உம் சமூகத்தி னரை நாம் சோதனையில் ஆழ்த்தினோம், ஆனால் சமாரியன் அவர்களை வழிதவறச் செய்து விட்டான்."

86. கோபம் கொண்டவராகவும் அதிருப்தி அடைந்தவ ராகவும் மோஸஸ் தன் சமூகத்தாரிடம் திரும்பி வந்து, கூறினார், "என் சமூகத்தாரே, உங்கள் இரட்சகர் ஒரு நல்ல வாக்குறுதியை உங்களுக்கு வாக்களிக்கவில் லையா ? உங்களால் காத்திருக்க முடியவில்லையா ? உங்கள் இரட்சகரிடமிருந்து கோபத்திற்கு நீங்கள் உள்ளாக விரும்புகின்றீர்களா ? இதனால்தான் என் னுடன் கொண்ட ஒப்பந்தத்தை நீங்கள் முறித்து விட்டீர்களா ?"

87. அவர்கள் கூறினர், "நாங்கள் வேண்டுமென்றே உம் மோடு கொண்ட எங்களுடைய ஒப்பந்தத்தை முறிக்க வில்லை. ஆனால் நாங்கள் ஆபரணங்களைக் கொண்டு சுமை சுமத்தப்பட்டோம், மேலும் எங்களு டைய சுமைகளை இறக்கி வைக்க முடிவு செய்தோம். இதனைத்தான் சமாரியன் யோசனையாக முன் வைத்தான்."

88. ஒரு கன்றின் சப்தத்துடன்* பூர்த்தியாக்கப்பட்டு, வடிக்கப்பட்ட ஒரு கன்றை அவர்களுக்காக அவன் உருவாக்கினான். அவர்கள் கூறினர், "இது தான் உங்கள் தெய்வமும், மோஸஸின் தெய்வமும் ஆகும்." இவ்விதமாக, அவன் மறந்து விட்டான்.

89. அது அவர்களுக்குப் பதிலளிக்கவில்லை என்பதையும் அன்றி அவர்களுக்குத் தீங்கிழைக்கவோ பயனளிக் கவோ சக்தி எதுவும் பெற்றிருக்கவில்லை என்பதை யும் அவர்கள் காண முடியவில்லையா ?

90. மேலும் ஆரோன் அவர்களிடம் கூறி இருந்தார், "என் சமூகத்தாரே, இது உங்களுக்கு ஒரு சோதனையாகும். மிக்க அருளாளர்தான் உங்களுடைய ஒரே இரட்சகர் ஆவார், எனவே என்னைப் பின்பற்றுங்கள், மேலும் என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்."

91. அவர்கள் கூறினர், "மோஸஸ் திரும்பி வரும் வரை, நாங்கள் தொடர்ந்து அதனை வழிபட்டுக் கொண்டிருப் போம்."

92. *(மோஸஸ்)* கூறினார், "ஆரோனே, அவர்கள் வழி தவ றிச் செல்வதை நீர் கண்டபோது, உம்மைத் தடுத்தது எது,

93. எனது கட்டளைகளைப் பின்பற்றுவதிலிருந்து ? எனக் கெதிராக நீர் கலகம் புரிந்து விட்டீரா ?"

94. அவர் கூறினார், "என் தாயின் மகனே; என் தாடியை யும் என் தலைமுடியையும் பிடித்து என்னை இழுக் காதீர். 'இஸ்ரவேலின் சந்ததியினரை நீ பிரித்து விட் டாய், மேலும் எனது உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாம லிருந்து விட்டாய்,' என்று நீர் கூறக் கூடும் என நான் அஞ்சினேன்."

95. அவர் கூறினார், "உனக்கென்ன பிரச்சனை, சமாரி யனே ?"

96. அவன் கூறினான், "அவர்கள் காணமுடியாதவற்றை நான் கண்டேன். தூதர் நின்ற இடத்திலிருந்து ஒரு கைப்பிடி மண்ணை நான் அள்ளினேன், மேலும் *(தங் கக் கன்றினுள் கலவையாக)* அதனைப் பயன்படுத்தி னேன். இவ்வாறு செய்யும்படிதான் என் மனம் என் னைத் தூண்டியது."*

97. அவர் கூறினார், "அப்படியென்றால் நீ சென்று விடு, மேலும் உனது வாழ்நாள் முழுவதும், அருகில் கூட வராதே. *(உனது இறுதித் தீர்ப்புக்காக)* உன்னால் ஒருபோதும் தப்பிக்க முடியாத நிர்ணயிக்கப்பட்ட ஒரு நேரம் உனக்கு இருக்கின்றது. நீ வழிபட்டு வந்த உன் தெய்வத்தைப் பார். நாம் அதனை எரித்து அதனைக் கடலில் வீசி விடுவோம், அதிலேயே நிரந்தரமாகத் தங்கி இருப்பதற்காக."

*ஒரு கடவுள் அன்றி உங்களுக்கு இல்லை*

98. **கடவுள்**தான் உங்களுடைய ஒரே தெய்வம்; அவரு டன் வேறு தெய்வம் எதுவுமில்லாத அந்த ஒருவர். அவருடைய அறிவு எல்லா விஷயங்களையும் சூழ்ந் துள்ளது.

**20:88 & 96 கடவுள் மோஸஸுடன் பேசிய இடத்திற்கு சமாரியன் சென்று, கடவுளின் வார்த்தைகள் எதிரொலித்த மண்ணில் இருந்து ஒரு கைப்பிடியளவு அள்ளிக் கொண்டான். இந்த மண், உருக்கப்பட்ட தங்கத்துடன் கலக்கப்பட்ட போது அத்தங்கச் சிலை ஒரு கன்றின் சப்தத்தை அடைந்திடக் காரணமானது.*

99. இவ்விதமாக, கடந்து சென்ற தலைமுறையினரிலிருந்து சில செய்திகளை உமக்கு நாம் எடுத்துரைக்கின்றோம். நம்மிடமிருந்து ஒரு தூதுச் செய்தியை நாம் உமக்கு வெளிப்படுத்தி உள்ளோம்.

100. அதனை அலட்சியம் செய்பவர்கள், உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று *(பாவங்களின்)* பாரம் ஒன்றைச் சுமப்பார்கள்.

101. நிலையாக அவர்கள் அங்கே வசிப்பார்கள்; உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று எத்தகையதொரு இன்னல் மிகுந்த பாரம்!

102. கொம்பு ஊதப்படும் நாள் அதுதான், மேலும் அந்நாளில் நாம் குற்றவாளிகளை நீலம் பூத்தவர்களாக வரவழைப்போம்.

103. தங்களுக்கிடையில் கிசுகிசுத்தவர்களாக, அவர்கள் கூறுவர், "*(முந்திய வாழ்வில்)* நீங்கள் தங்கியிருந்தது பத்து நாட்களை விட அதிகமில்லை!"

104. அவர்களுடைய பேச்சுக்களை நாம் முற்றிலும் அறிந்திருக்கின்றோம். அவர்களில் மிகச் சரியானவர் கூறுவார், "நீங்கள் தங்கியிருந்தது ஒரு நாளைக் காட்டிலும் அதிகமில்லை."

*உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று*

105. மலைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். கூறும், "என் இரட்சகர் அவற்றைத் துடைத்தெடுத்து விடுவார்.

106. "அவற்றைப் பொட்டலான, ஒரு தட்டை நிலமாக அவர் விட்டு விடுவார்.

107. "மிகச் சிறியதொரு குன்றோ அல்லது குழியோ கூட நீர் அதில் காணமாட்டீர்."

108. அந்நாளில், சிறிதுகூட இலக்கு மாறாமல், ஒவ்வொருவரும் அழைப்பவரைப் பின்தொடர்வார்கள். மிக்க அருளாளரின் முன் அனைத்துச் சப்தங்களும் ஒடுங்கி விடும்; முனுமுனுப்புக்களைத் தவிர வேறெதையும் நீர் கேட்கமாட்டீர்.

109. அந்நாளில், மிக்க அருளாளரால் அனுமதிக்கப்பட்டவர்களுக்கும் மேலும் எவர்களுடைய கூற்றுக்கள் அவருடைய நாட்டத்திற்கு ஒத்திருக்கின்றதோ அவர்களுக்கும் தவிர, பரிந்துரை பயனற்றதாகவே இருக்கும்.

110. அவர்களுடைய கடந்த காலத்தையும் அவர்களுடைய எதிர் காலத்தையும் அவர் அறிந்திருக்கின்றார், அதே சமயம் அவரது அறிவை எவரும் சூழ்ந்து கொள்ள இயலாது.

111. ஜீவித்திருப்பவரும் நிலைத்திருப்பவரும் ஆனவருக்கு எல்லா முகங்களும் சரணடைந்து விடும், மேலும் தங்களுடைய வரம்புமீறல்களால் பாரம் சுமத்தப்பட்டவர்கள் தோல்வியடைந்து விடுவார்கள்.

112. நம்பிக்கை கொண்ட நிலையில், நன்மையான காரியம் செய்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அநீதியையோ துரதிர்ஷ்டத்தையோ குறித்து அச்சம் எதுவும் கொள்ள மாட்டார்கள்.

113. இவ்விதமாக இதனை நாம் ஓர் அரபியிலான குர்ஆனாக வெளிப்படுத்தியுள்ளோம், மேலும் அவர்கள் காப்பாற்றப்படுவதற்காக, அல்லது அது அவர்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளச் செய்யலாம் என்பதற்காக, அதில் எல்லா விதமான முன்னறிவிப்புகளையும் நாம் எடுத்துரைத்துள்ளோம்.

114. **கடவுள்** மிகவும் உயர்வானவர், உண்மையான ஒரே அரசர். அதனை உமக்கு வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர் குர்ஆனைக் கூறுவதற்கு அவசரப்படாதீர், மேலும் கூறும், "என் இரட்சகரே, எனது அறிவை அதிகரிப்பீராக."

*மனிதர்கள் ஓர் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கத் தவறி விடுகின்றனர்**

115. கடந்த காலத்தில் ஆதமை நாம் சோதித்தோம், ஆனால் அவர் மறந்து விட்டார், மேலும் அவரை நாம் உறுதியற்றவராகக் கண்டோம்.

116. வானவர்களிடம் நாம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், "ஆதமின் முன் சிரம் பணிந்து விழுங்கள்." அவர்கள் சிரம் பணிந்து விழுந்தனர், சாத்தானைத் தவிர; அவன் மறுத்து விட்டான்.

117. அப்போது நாம் கூறினோம், "ஆதமே, இவன் உமக்கும் உம் மனைவிக்கும் ஒரு விரோதியாவான். நீர் இன்னலுக்கு உள்ளாகாதிருக்க வேண்டுமெனில், அவன் உங்களைச் சுவனத்திலிருந்து வெளியேற்ற விட்டு விடாதீர்.

118. "நீர் அங்கே ஒருபோதும் பசியுடனோ, அல்லது மறைப்பு இன்றியோ இருக்கமாட்டீர் என்று உத்தரவாதம் அளிக்கப்படுகின்றீர்.

119. "அன்றி அங்கே நீர் தாகித்திருக்கமாட்டீர், அன்றியும் எந்த வெப்பத்தையும் அனுபவிக்கமாட்டீர்."

120. ஆனால் சாத்தான் அவரிடம் கிசுகிசுத்தவனாகக் கூறினான், "ஆதமே, நித்திய வாழ்வு மற்றும் முடிவுறாத இராஜாங்கத்தின் மரத்தை, நான் உமக்குக் காட்டட்டுமா."

**20:115 கடவுளின் பரிபூரண அதிகாரத்திற்கெதிராகச் சாத்தான் அறைகூவல் விடுத்த போது (38:69), நீங்களும் நானும் சாத்தானுக்கெதிராக ஓர் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கவில்லை. சாத்தானுக்குக் கண்டனம் தெரிவிப்பதுடன், மேலும் கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரித்து நம்மையே மீட்டுக் கொள்வதற்கு, இந்தப் பூமியின் மீது கடவுள் நமக்கு ஒரு வாய்ப்புத் தருகின்றார். (பின் இணைப்பு 7).*

121. அவர்கள் அதிலிருந்து உண்டனர், உடனே அவர்களுடைய உடம்புகள் அவர்களுடைய கண்களுக்குத் தென்படலாயின, மேலும் அவர்கள் சுவனத்தின் இலைகளால் தங்களை மறைத்துக் கொள்ள முயன்றனர். ஆதம் இவ்விதமாகத் தன் இரட்சகருக்கு கீழ்ப்படியாதிருந்தார், மேலும் வீழ்ந்து விட்டார்.

122. அதன் பின்னரும், அவருடைய இரட்சகர் அவரைத் தேர்ந்தெடுத்தார், அவரை மீட்டார், மேலும் அவருக்கு வழிகாட்டினார்.

123. அவர் கூறினார், "நீங்கள் அனைவரும், இதிலிருந்து கீழே செல்லுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் விரோதிகள் ஆவீர்கள். என்னிடமிருந்து உங்களுக்கு வழிகாட்டல் வரும்போது, என் வழி காட்டலைப் பின்பற்றுகின்ற எவரொருவரும் வழி தவறமாட்டார், அன்றி எந்த இன்னலையும் அனுபவிக்கமாட்டார்.

*நம்பமறுப்பவர்களுக்கு: துன்பகரமான வாழ்வு தவிர்த்து விட முடியாதது*

124. "என் தூதுச் செய்தியை அலட்சியப்படுத்துகின்றவனைப் பொறுத்தவரை, அவனுக்குத் துன்பகரமானதொரு வாழ்வே இருக்கும், மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று, அவனை நாம் குருடனாக உயிர்த்தெழுப்புவோம்."

125. அவன் கூறுவான், "என் இரட்சகரே, நான் பார்வையுடைய ஒருவனாக இருந்து வந்த போதும், ஏன் என்னை நீர் குருடனாக வரவழைத்தீர்?"

126. அவர் கூறுவார், "நமது வெளிப்பாடுகள் உன்னிடம் வந்த போது அவற்றை நீ மறந்து விட்டதால், இப்போது நீ மறக்கப்பட்டு விட்டாய்."

127. வரம்புமீறியவர்களாக தங்களுடைய இரட்சகரின் வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுப்போம். மறுவுலகின் அந்தத் தண்டனையானது மிக மோசமானது, நிலைத்திருப்பது.

128. முந்திய எத்தனை தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம் என்பது எப்பொழுதாவது அவர்களுக்குத் தோன்றுகிறதா? தங்களுக்கு முன்னிருந்தவர்களின் வீடுகளில் இப்போது அவர்கள் நடந்து கொண்டிருக்கின்றனர். அறிவுத்திறனுடையோருக்கு இவை அத்தாட்சிகளாகும்.

129. உம் இரட்சகரின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட திட்டம் இல்லாமலிருந்தால், அவர்கள் உடனடியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார்கள்.

130. எனவே, அவர்களுடைய கூற்றுகளின்மீது பொறுமையுடன் இருப்பீராக, மேலும் சூரிய உதயத்திற்கு முன்னரும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்னரும் உம் இரட்சகரைப் புகழவும் துதிக்கவும் செய்வீராக. மேலும் நீர் மகிழ்ச்சியோடு இருக்கும் பொருட்டு, இரவுப் பொழுதிலும், அவ்வண்ணமே பகலின் இருமுனைகளிலும் அவரைத் துதிப்பீராக.

131. மேலும் மற்றெந்த மக்களுக்கும் நாம் அளித்தவற்றின் மீது பேராவல் கொள்ளாதீர். அவை இந்த வாழ்வின் தற்காலிக அலங்காரங்களேயாகும், அவற்றின் மூலம் நாம் அவர்களைச் சோதனையில் ஆழ்த்துகின்றோம். உம் இரட்சகர் உமக்கு வழங்கியிருப்பவை மிகவும் மேலானதும், நிலைத்திருப்பதுமாகும்.

*பெற்றோர்களின் பொறுப்பு*

132. *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும் அவ்வாறு செய்து வருவதில் உறுதியோடு தொடர்ந்திருக்கவும் உம் குடும்பத்தாரை நீர் ஏவ வேண்டும். உம்மிடம் எந்த வாழ்வாதாரங்களையும் நாம் கேட்கவில்லை; நாம்தான் உமக்கு வழங்குகின்றோம். இறுதி வெற்றிக்களிப்பு நன்னெறியாளர்களுக்கே உரியது.

*தூதர்கள் ஏன்?*

133. அவர்கள் கூறினர், "அவருடைய இரட்சகரிடமிருந்து அவர் நமக்கு ஓர் அற்புதத்தை மட்டும் காட்ட முடிந்தால்!" முந்திய தூதுச் செய்திகளுடன் போதுமான அற்புதங்களை அவர்கள் பெறவில்லையா?

134. இதற்கு முன்னர் அவர்களை நாம் அழித்திருந்தால், அவர்கள் "எங்கள் இரட்சகரே, எங்களுக்கு ஒரு தூதரை நீர் அனுப்பியிருந்தால், உமது வெளிப்பாடுகளை நாங்கள் பின்பற்றியிருப்போம், மேலும் இந்தக் கேவலத்தையும் இழிவையும் தவிர்த்திருப்போம்," என்று கூறியிருப்பார்கள்.

135. கூறும், "நாம் அனைவரும் காத்துக் கொண்டு தான் இருக்கின்றோம், எனவே காத்திருங்கள்; சரியான பாதையில் இருப்பவர்கள் யார் என்றும், உண்மையில் வழிகாட்டப்பட்டவர்கள் யார் என்றும் நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள்."

****

# சூரா 21: நபிமார்கள் (அல்–அன்பியா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மனிதர்களுக்குரிய கணக்கெடுப்பு விரைந்து வருகின்றது, ஆனால் அவர்கள் கவனமற்றவர்களாக, வெறுப்புற்றவர்களாக இருக்கின்றனர்.

*புதிய சான்றுகளுக்கு எதிர்ப்பு*

2. புதிதான ஒரு சான்று, அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்களிடம் வரும்போதெல்லாம், அவர்கள் அலட்சியமாக அதனைச் செவிமடுக்கின்றார்கள்.

3. அவர்களுடைய மனங்கள் அலட்சியமாகவே இருக்கின்றன. மேலும் வரம்புமீறுபவர்கள் இரகசிய ஆலோசனை செய்கின்றனர்: "அவர் உங்களைப் போன்ற ஒரு மனிதர்தான் அல்லவா ? உங்கள் முன் காட்டப்படும் ஒரு மாயாஜாலத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா ?"*

4. அவர் கூறினார், "வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொரு எண்ணத்தையும் என் இரட்சகர் அறிந்திருக்கின்றார். அவர்தான் செவிமடுப்பவர், அனைத்தும் அறிந்தவர்."

5. இவ்வாறு கூட அவர்கள் கூறினர், "பிரமை," "அவர் இதனைப் புனைந்து கொண்டார்," மேலும், "அவர் ஒரு கவிஞர். முந்திய தூதர்களைப் போல ஓர் அற்புதத்தை அவர் நமக்குக் காட்டட்டும்."

6. நம்பிக்கை கொண்ட ஒரு சமூகத்தை கடந்த காலத்தில் நாம் ஒருபோதும் அழித்ததில்லை. இந்த மக்கள் நம்பிக்கை கொண்டவர்களா ?

7. உள்ளுணர்வளிக்கப்பட்ட ஆண்களை அன்றி உமக்கு முன்னர் நாம் அனுப்பவில்லை. உங்களுக்குத் தெரியவில்லையென்றால், வேதத்தை அறிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

8. உணவு உட்கொள்ளாத உடல்களை அவர்களுக்கு நாம் தரவில்லை, அன்றியும் அவர்கள் அமரத்துவம் பெற்றவர்களாகவும் இருந்ததில்லை.

9. நமது வாக்குறுதியை அவர்களுக்கு நாம் நிறைவேற்றினோம்; நாம் நாடியோருடன் சேர்த்து அவர்களை நாம் காத்துக் கொண்டோம், மேலும் வரம்புமீறியவர்களை அழித்து விட்டோம்.

10. உங்களுடைய செய்தியைக் கொண்டதாக ஒரு வேதத்தை நாம் உமக்கு இறக்கி அனுப்பி இருக்கின்றோம். நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ?

11. எத்தனையோ தலைமுறையினரை அவர்களுடைய வரம்புமீறலின் காரணமாக நாம் முடித்திருக்கின்றோம், மேலும் அவர்களுடைய இடத்தில் மற்ற மக்களை நாம் மாற்றியமைத்தோம்.

12. நம்முடைய பழிதீர்த்தல் நிகழ்ந்தேற வந்த போது, அவர்கள் ஓடத் துவங்கினர்.

13. ஓடாதீர்கள், உங்களுடைய ஆடம்பரங்களுக்கும் உங்களுடைய மாளிகைகளுக்கும் திரும்பி வாருங்கள், ஏனெனில் நீங்கள் கணக்குக் கொடுப்பதற்காகப் பிடிக்கப்பட்டாக வேண்டும்.

14. அவர்கள் கூறினர், "எங்களுக்குக் கேடுதான். நாங்கள் உண்மையில் தீயவர்களாகவே இருந்தோம்."

15. அவர்களை நாம் முற்றிலும் துடைத்தெடுக்கும்வரை, இதுவே அவர்களுடைய பிரலாபமாகத் தொடர்ந்து இருந்தது.

16. வானங்களையும் பூமியையும் மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும் வெறும் கேளிக்கைக்காக நாம் படைக்கவில்லை.

17. நமக்கு கேளிக்கை தேவைப்பட்டிருந்தால், இவை எதுவுமின்றி அதனை நம்மால் துவக்கியிருக்க முடியும், அதனைத்தான் நாம் செய்ய வேண்டும் என்று விரும்பியிருந்தால்.

18. மாறாக, அசத்தியத்திற்கெதிராக அதனைத் தோற்கடிக்கும் பொருட்டு, சத்தியத்திற்கு ஆதரவளிப்பது நம் திட்டமாகும். நீங்கள் கூறும் கூற்றுக்களுக்காக உங்களுக்குக் கேடுதான்.

19. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் அவருக்குரியவர்கள், மேலும் அவரிடம் இருப்பவர்கள் ஒருபோதும் அவரை வழிபடுவதை விட்டு மிகவும் ஆணவம் கொள்ள மாட்டார்கள், அன்றி அவர்கள் எப்பொழுதும் தடுமாறவும் மாட்டார்கள்.

20. எப்பொழுதும் சோர்வின்றி, அவர்கள் இரவும் பகலும் துதிப்பார்கள்.

**21:3 பைபிள் (மல்க்கியா 3:1) மற்றும் குர்ஆன் (3:81) ஆகியவை கடவுளின் உடன்படிக்கைத் தூதரின் வருகை குறித்து முன்னறிவித்த போதிலும், 'மாபெரும் அற்புதங்களில் ஒன்றின்' (74:30–35), ஆதரவுடன் அவர் தோன்றிய பொழுது, அவர் அலட்சியத்துடனும் விரோதத்துடனும் எதிர்கொள்ளப்பட்டார். ஒவ்வொரு 'புதிய' சான்றும் எதிர்க்கப்படுகின்றது என்ற இறைவனின் உறுதியான கூற்று, குர்ஆனின் அற்புதத்திற்கு அரேபியர்களின் எதிர்ப்பால் நிரூபிக்கப்பட்டதாகி விட்டது (பின் இணைப்பு 1 & 2).*

*ஒரு கடவுள்*

21. படைக்கக்கூடிய தெய்வங்களை பூமியில் அவர்கள் கண்டு விட்டனரா ?

22. அவற்றில் *(வானங்களிலும் பூமியிலும்)* **கடவுள்**–வுடன் வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், அங்கே பெருங்கலவரம்தான் இருந்திருக்கும். **கடவுள்** துதிப்பிற்குரியவர்; பரிபூரண அதிகாரத்தையுடைய இரட்சகர். அவர்களுடைய கூற்றுக்களுக்கும் அப்பாற்பட்டு மிகவும் உயர்வானவர்.

*கடவுளின் ஞானத்தை ஒருபோதும் கேள்வி கேட்கக் கூடாது*

23. அவர் செய்கின்ற எந்த விஷயத்தை பற்றியும் அவர் ஒருபோதும் கேட்கப்படமாட்டார், அதே சமயம் மற்ற அனைவரும் கேட்கப்படுவர்.

24. அவருடன் வேறு தெய்வங்களை அவர்கள் கண்டு விட்டனரா ? கூறும், "உங்கள் சான்றினை எனக்குக் காட்டுங்கள். இது முந்திய அனைத்துத் தூதுச் செய்திகளையும் பூரணப்படுத்துகின்ற, என் தலைமுறையினருக்கான தூதுச்செய்தியாகும். உண்மையில், அவர்களில் அதிகமானோர் சத்தியத்தை அடையாளம் கண்டு கொள்ளவில்லை; இதனால் தான் அவர்கள் அவ்வளவு விரோதத்துடன் இருக்கின்றார்கள்."

*ஒரே கடவுள்/*
*ஒரே தூதுச் செய்தி/*
*ஒரே மார்க்கம்*

25. இவ்வாறு உள்ளுணர்வளிக்கப்பட்டே அன்றி உமக்கு முன்னர் எந்தத் தூதரையும் நாம் அனுப்பியதில்லை: "என்னைத் தவிர தெய்வம் இல்லை; நீங்கள் என்னை மட்டுமே வழிபடவேண்டும்."

26. இருப்பினும், அவர்கள் கூறினர், "மிக்க அருளாளர் ஒரு மகனைப் பெற்றெடுத்திருக்கின்றார்!" துதிகள் அவருக்குரியவை. அனைத்து *(தூதர்களும் அவருடைய)* கண்ணியப்படுத்தபட்ட ஊழியர்களே ஆவர்.

27. அவர்கள் ஒருபோதும் சொந்தமாகப் பேச மாட்டார்கள், மேலும் அவருடைய கட்டளைகளைக் கண்டிப்புடன் பின்பற்றுவார்கள்.

*பரிந்துரை எனும் புராணம்*

28. அவர்களுடைய எதிர்காலத்தையும் அவர்களுடைய கடந்த காலத்தையும் அவர் அறிந்திருக்கின்றார். முன்னரே அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டவர்களுக்கே அன்றி, அவர்கள் பரிந்துரை செய்ய மாட்டார்கள், மேலும் அவர்கள் தங்களைப் பற்றியே* கவலையுற்றவர்களாக இருக்கின்றனர்.

29. அவருடன் ஒரு தெய்வமாக இருப்பதாக அவர்களில் எவரேனும் கூறினால், நாம் நரகத்தைக் கொண்டு அவருக்குக் கூலி கொடுப்போம்; இவ்விதமாகவே தீயவர்களுக்கு நாம் கூலி கொடுப்போம்.

*பெருவெடிப்புக் கொள்கை உறுதிப்படுத்தப்படுகின்றது**

30. இருப்பு நிலைக்குக் கொண்டு வர நாம் வெடிக்கச் செய்த ஒரே திடப்பொருளாக வானங்களும் பூமியும் இருந்தன என்பதை நம்பிக்கையற்றவர்கள் கண்டு கொள்ளவில்லையா ? மேலும் அனைத்து உயிரினங்களையும் நாம் நீரிலிருந்து படைத்தோம். அவர்கள் நம்பிக்கை கொள்வார்களா ?

31. மேலும் அவர்களோடு சேர்ந்து அது உருண்டு விடாதிருக்கும் பொருட்டு, பூமியின் மீது நிலைப்படுத்திகளை நாம் அமைத்தோம், மேலும் அவர்கள் வழிகாட்டப்படும் பொருட்டு, நேரான நெடுஞ்சாலைகளை அதில் நாம் அமைத்தோம்.

32. மேலும் பாதுகாக்கப்பட்ட ஒரு மேற்கூரையாக வானத்தை நாம் ஆக்கினோம். ஆயினும் அவற்றில் உள்ள அத்தாட்சிகள் அனைத்திலும் அவர்கள் முற்றிலும் கவனமற்று இருக்கின்றனர்.

33. இன்னும் அவர்தான் இரவையும் பகலையும், மேலும் சூரியனையும் சந்திரனையும் படைத்தவர்; ஒவ்வொன்றும் அதற்குரிய சுற்றுப்பாதையில் மிதந்து கொண்டிருக்கின்றது.

34. உமக்கு முன்னிருந்த எவருக்கும் அமரத்துவத்தை நாம் ஒருபோதும் விதித்ததில்லை; நீர் இறந்து போக நேரிடுமென்றால், அவர்கள் மட்டும் சாகாதிருப்பவர்களா ?

35. கஷ்டங்களும் வளமும் கொண்டு உங்களை நாம் சோதனையில் ஆழ்த்திய பின்னர், ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கும். பின்னர் நீங்கள் நம்மிடமே இறுதியில் திரும்புவீர்கள்.

*தூதர்கள் அனைவரும் பரிகசிக்கப்பட்டனர்*

36. நம்பமறுப்பவர்கள் உம்மைக் காணும்போது, அவர்கள் உம்மைப் பரிகசிக்கின்றனர். "இவர்தான் உங்கள் தெய்வங்களுக்குச் சவால் விடுபவரா ?" இதற்கிடையில், மிக்க அருளாளரிடமிருந்துள்ள தூதுச் செய்தி குறித்து அவர்கள் முற்றிலும் அலட்சியமாக இருக்கின்றனர்.

**21:28 பரிந்துரை எனும் கட்டுக்கதை, சாத்தானின் மிகத்திறன் வாய்ந்த தூண்டில் இரையாகும். (பார்க்க பின் இணைப்பு 8).*

**21:30 படைப்பாளரின், சந்தேகத்திற்கப்பாற்பட்ட கணிதக் குறியீட்டின் மூலம் பெருவெடிப்புக் கோட்பாடு இப்போது ஆதரவளிக்கப்பட்டுள்ளது. எனவே பெருவெடிப்புக் கோட்பாடு இனியும் ஒரு கோட்பாடல்ல; அது ஒரு விதி, நிரூபிக்கப்பட்டுவிட்ட ஒரு நிதர்சனமாகும்.*

37. மனிதன் இயல்பில் பொறுமையற்றவனாகவே இருக்கின்றான். தவிர்த்து விட முடியாதவாறு எனது அத்தாட்சிகளை நான் உங்களுக்குக் காட்டுவேன்; இப்படி அவசரப்பட்டுக் கொண்டு இருக்காதீர்கள்.

38. அவர்கள் சவால் விடுகின்றனர்: "நீர் உண்மையானவராக இருந்தால், அது *(அத்தண்டனை)* எங்கே ?"

39. நெருப்பிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள முயற்சிக்கும் பொழுது மட்டும் நம்பமறுப்பவர்கள் தங்களை நினைத்துப் பார்க்க முடிந்தால்; அவர்கள் முகங்களிலிருந்தும் அவர்களுடைய முதுகுகளிலிருந்தும்! அப்போது அவர்களுக்கு எவரும் உதவி செய்ய மாட்டார்.

40. உண்மையில், அவர்களிடம் அது திடீரென வரும், மேலும் அவர்கள் முற்றிலும் திகைப்படைந்திருப்பார்கள். அவர்கள் அதனைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியாது, அன்றியும் அவர்கள் அவகாசம் எதுவும் பெற்றுக் கொள்ளவும் முடியாது.

41. உமக்கு முன்னரும் தூதர்கள் பரிகசிக்கப்பட்டிருக்கின்றனர், மேலும், அதன் விளைவாக, அவர்களைப் பரிகசித்தவர்கள் அவர்களுடைய பரிகசிப்பிற்கான தண்டனைக்கு உள்ளானார்கள்.

*முன்னுரிமைகள் குழம்பி விட்டன*

42. கூறும், "இரவிலோ அல்லது பகலிலோ மிக்க அருளாளரிடமிருந்து உங்களைக் காக்க எவரால் இயலும் ?" உண்மையில், தங்கள் இரட்சகரின் தூதுச் செய்தியில் அவர்கள் முற்றிலும் கவனமற்று இருக்கின்றனர்.

43. நம்மிடமிருந்து அவர்களைக் காக்கக்கூடிய தெய்வங்களை அவர்கள் வைத்திருக்கின்றனரா ? அவர்கள் தங்களுக்கே கூட உதவி செய்து கொள்ள முடியாது. அன்றி நம்மைச் சந்திக்க அவர்கள் அழைக்கப்படும் போது அவர்கள் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து வரவும் முடியாது.

44. இந்த மக்களுக்கும் இவர்களுடைய முன்னோர்களுக்கும் முதிர்ந்ததொரு வயது முடியும் வரை நாம் வழங்கி உள்ளோம். பூமியின் மீது ஒவ்வொரு நாளும் அவர்களை முடிவை நோக்கி அவர்கள் நெருக்கிக் கொண்டு வருவதை காணவில்லையா ? இந்த நடைமுறையை அவர்களால் தலைகீழாக மாற்றிவிட முடியுமா ?

45. கூறும், "தெய்வீக உள்ளுணர்வுக்கு ஏற்பவே உங்களை நான் எச்சரிக்கின்றேன்." எப்படியாயினும், தாங்கள் எச்சரிக்கப்படும் பொழுது, செவிடர்களால் அழைப்பைச் செவியேற்க இயலாது.

46. உம் இரட்சகரின் தண்டனையின் மாதிரிகளில் ஒன்று அவர்களைத் துன்புறுத்தும் போது, உடனடியாக அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் உண்மையில் தீயவர்களாகவே இருந்தோம்."

47. உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று நீதியின் தராசுகளை நாம் நிறுவுவோம். எந்த ஆத்மாவும் சிறிதளவு அநீதியையும் அனுபவிக்காது. ஒரு கடுகின் வித்துக்குச் சமமானதும் கூட, கணக்கில் கொள்ளப்படும். நாமே மிகவும் திறன்வாய்ந்த கணக்கெடுப்பவர்கள் ஆவோம்.

*நபிமார்கள்களான*
*மோஸஸூம் ஆரோனும்*

48. நாம் மோஸஸுக்கும் ஆரோனுக்கும் சட்டப்புத்தகத்தைத் தந்தோம், ஒரு கலங்கரை விளக்கு, மேலும் நல்லவர்களுக்கொரு நினைவூட்டல்.

49. தங்களுடைய தனிமையில் தனித்திருக்கும் பொழுதில் கூட, தங்கள் இரட்சகரிடம் பயபக்தியோடு இருப்பவர்கள், மேலும் அந்த நேரத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படுகின்றனர்.

50. இதுவும் கூட நாம் இறக்கி அனுப்பிய ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு நினைவூட்டல் ஆகும். இதனையா நீங்கள் மறுக்கின்றீர்கள் ?

*ஆப்ரஹாம்*

51. அதற்கு முன்னர், ஆப்ரஹாமுக்கு, அவருடைய வழிகாட்டுதலையும் புரிந்துகொள்ளும் தன்மையையும் நாம் கொடுத்தோம், ஏனெனில் அவரைப்பற்றி நாம் முற்றிலும் அறிந்திருந்தோம்.*

52. அவர் தன் தந்தையிடமும் தன் சமூகத்தாரிடமும் கூறினார், "உங்களையே நீங்கள் அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்த சிலைகள் யாவை ?"

53. அவர்கள் கூறினர், "எங்கள் பெற்றோர்கள் அவற்றை வழிபட்டுக் கொண்டிருக்க நாங்கள் கண்டோம்."

54. அவர் கூறினார், "உண்மையில், நீங்களும் உங்கள் பெற்றோர்களும் முற்றிலும் வழிதவறிச் சென்று விட்டீர்கள்."

---

**21:51 கடவுளைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு ஆப்ரஹாம் அவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்தாரா, அல்லது அவர் காப்பாற்றப்படத் தகுதியானவர் என்பதைக் கடவுள் அறிந்திருந்ததால், அவர் அந்த அறிவுத்திறனை அவருக்கு அளித்தாரா ? இப்போது வெளிப்பட்டுள்ளபடி, நம்மிடையில் மீட்சிக்குத் தகுதியானவர்களை மீட்டுக் கொள்வதற்காகவே இந்த முழு உலகமும் படைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் ஜின்கள் ஆகிய கலகக்காரர்கள் அனைவரும் கடவுளின் சாம்ராஜ்யத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று வானவர்கள் யோசனை கூறியபொழுது, கடவுள் கூறினார், 'நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்' (2:30). அதே நேரத்தில், ஒரு தெய்வமாக, சாத்தானின் தகுதியின்மையை இவ்வுலகம் நிரூபிக்கின்றது. (பின் இணைப்பு 7).*

55. அவர்கள் கூறினர், "நீர் எங்களிடம் உண்மையைக் கூறுகின்றீரா, அல்லது நீர் விளையாடுகின்றீரா ?"

56. அவர் கூறினார், "வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகரே உங்களுடைய ஒரே இரட்சகர் ஆவார், அவற்றைப் படைத்தவர். இதுவே நான் சாட்சியம் அளிக்கின்ற பிரமாணம் ஆகும்.

57. "நான் **கடவுள்** மீது ஆணையிடுகின்றேன், நீங்கள் சென்ற உடன் உங்களுடைய சிலைகளைக் கவனித்துக் கொள்ளும் ஒரு திட்டம் என்னிடம் இருக்கின்றது."

58. அவர் அவற்றைத் துண்டுகளாக உடைத்து விட்டார், பெரியதான ஒன்றைத் தவிர, அவர்கள் அதனை விசாரிக்கும் பொருட்டு.

59. அவர்கள் கூறினர், "நம்முடைய தெய்வங்களுக்கு இதனைச் செய்தவர் எவராயினும் அவர் உண்மை யில் வரம்புமீறிய ஒருவர்தான்."

60. அவர்கள் கூறினர், "ஓர் இளைஞர் அவற்றை மிரட்டிக் கொண்டிருந்ததாக நாங்கள் கேள்விப்பட்டோம்; அவர் ஆப்ரஹாம் என்று அழைக்கப்படுகின்றார்."

61. அவர்கள் கூறினர், "மக்கள் அனைவருடைய கண்களின் எதிரே அவரைக் கொண்டு வாருங்கள், அவர்கள் சாட்சியம் அளிக்கும் பொருட்டு."

62. அவர்கள் கூறினர், "எங்கள் தெய்வங்களுக்கு இதனைச் செய்தவர் நீர்தானா, ஆப்ரஹாமே ?"

*ஆப்ரஹாம் தன் வாதத்தை நிரூபிக்கின்றார்*

63. அவர் கூறினார், "அதோ அந்தப் பெரிய ஒன்றுதான் அதனைச் செய்தது. அவற்றால் பேசமுடியுமாயின், சென்று அவற்றைக் கேட்டுப் பாருங்கள்."

64. அவர்கள் திகைத்துப் போயினர், மேலும் தங்களுக்குள்ளேயே கூறிக் கொண்டனர், "உண்மையில், நீங்கள்தான் வரம்புமீறிக் கொண்டிருந்தீர்கள்."

65. இருப்பினும், தங்களுடைய பழைய எண்ணப் போக்குகளுக்கே அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்: "இவற்றால் பேச முடியாது என்பதை நீர் முற்றிலும் நன்கறிவீர்."

66. அவர் கூறினார், "அப்படியென்றால் உங்களுக்குப் பயனளிக்கவோ அல்லது உங்களுக்குத் தீங்கிழைக்கவோ சக்தியற்றவற்றை **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடுவீர்களா ?

67. "**கடவுள்**–வுடன் சிலைகளை வழிபடுவதன் மூலம் நீங்கள் இழிவுக்குள்ளாகி விட்டீர்கள். நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ?"

*ஆழ்ந்த அற்புதம்*

68. அவர்கள் கூறினர், "அப்படித்தான் செய்ய வேண்டும் என்று நீங்கள் முடிவெடுத்து விட்டால், அவரை எரித்து உங்கள் தெய்வங்களுக்கு ஆதரவளியுங்கள்."

69. நாம் கூறினோம், "நெருப்பே, ஆப்ரஹாமுக்குக் குளிர்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் ஆகிவிடு."*

70. இவ்விதமாக, அவருக்கெதிராக அவர்கள் திட்டந் தீட்டினர், ஆனால் நாம் அவர்களைத் தோல்வியடைந்தவர்களாக ஆக்கி விட்டோம்.

71. நாம் அவரைக் காப்பாற்றினோம், அத்துடன் நாம் லோத்தையும் காப்பாற்றினோம், எல்லா மக்களுக்காகவும் நாம் ஆசீர்வதித்த நிலப்பரப்பின் பால்.

72. ஐசக்கையும் ஜேகபையும் ஒரு பரிசாக நாம் அவருக்களித்தோம், மேலும் அவர்கள் இருவரையும் நன்னெறியாளர்களாக நாம் ஆக்கினோம்.

*ஆப்ரஹாம்:*
*இஸ்லாத்தின் மார்க்கக்*
*கடமைகள் அனைத்தையும் சேர்ப்பித்தவர்*

73. நம்முடைய கட்டளைகளுக்கேற்ப வழிநடத்திய இமாம்களாக நாம் அவர்களை ஆக்கினோம், மேலும் நன்மைகள் செய்வது எப்படி என்பதையும், *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளையும் *(ஜகாத்)** கடமையான தர்மத்தையும் கடைப்பிடிப்பது எப்படி என்பதையும் நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தோம். நமக்கு, அர்ப்பணித்துக் கொண்ட அடியார்களாக அவர்கள் இருந்தனர்.

*லோத்*

74. லோத்தைப் பொறுத்த வரை, அவருக்கு நாம் ஞானத்தையும் அறிவையும் அளித்தோம், மேலும் வெறுக்கத்தக்கவற்றைச் செயல்படுத்தி வந்த சமூகத்திடமிருந்து நாம் அவரைக் காப்பாற்றினோம்; அவர்கள் மிகக் கெட்டவர்களாகவும், பாவிகளாகவும் இருந்தனர்.

75. நமது கருணைக்குள் நுழைய நாம் அவரை அனுமதித்தோம், ஏனெனில் அவர் நன்னெறியாளராக இருந்தார்.

*நோவா*

76. மேலும், அதற்கு முன்னர், நோவா அழைத்தார், நாம் அவருக்கு பதிலளித்தோம். அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் மிகப்பெரும் பிரளயத்திலிருந்து நாம் காத்தோம்.

---

**21:69* *"பாதுகாப்பாகவும்," என்பதில்லாமல் "குளிர்ச்சியாக" என்று மட்டும் இருந்தால், அது ஆப்ரஹாம் உறைந்து போகக் காரணமாகி இருந்திருக்கும்.*

**21:73* *குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட போது, மார்க்கக் கடமைகள் அனைத்தும் ஆப்ரஹாமால் முன்னரே நிலைநாட்டப் பட்டிருந்தது. (2:128, 16:123, 22:78).*

77. நமது வெளிப்பாடுகளை ஏற்கமறுத்துவிட்ட மக்களுக்கு எதிராக, அவருக்கு நாம் ஆதரவளித்தோம். அவர்கள் பாவிகளான மக்களாக இருந்தனர், எனவே அவர்கள் அனைவரையும் நாம் மூழ்கடித்தோம்.

*டேவிட்டும் ஸாலமனும்*

78. மேலும் டேவிட்டும் ஸாலமனும், எவரோ ஒருவருடைய பயிரை மற்றவருடைய செம்மறியாடு அழித்து விட்டது சம்பந்தமாக ஒருமுறை அவர்கள் தீர்ப்பளித்த போது, அவர்களுடைய தீர்ப்பை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

79. அவர்கள் இருவருக்கும் ஞானத்தையும் அறிவையும் நாம் கொடுத்திருந்த போதிலும், சரியான புரிந்து கொள்ளுதலை ஸாலமனுக்கு நாம் அளித்தோம். *(கடவுளைத்)* துதிப்பதில் டேவிட்டுடன் சேர்ந்து பணி செய்யுமாறு மலைகளையும், அவ்வாறே பறவைகளையும் நாம் பணித்தோம். இதுதான் நாம் செய்தது.

80. மேலும் போரில் உங்களைக் காத்துக் கொள்ளக் கேடயங்கள் செய்யும் கலையையும் அவருக்கு நாம் கற்றுத்தந்தோம். அப்பொழுதேனும் நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றீர்களா ?

81. ஸாலமனுக்காக, காற்றை அவருடைய கட்டுப்பாட்டில், வீசிக் கொண்டும் ஊதிக் கொண்டும் இருக்க நாம் பணித்தோம். அவர் விரும்பியவாறு, அவர் தேர்ந்தெடுத்த எந்த நிலப்பரப்பிற்கும் அதனைச் செலுத்த அவரால் இயன்றது, மேலும் அத்தகைய நிலப்பரப்பை அவருக்காக நாம் ஆசீர்வதித்தோம். அனைத்து விஷயங்களையும் நாம் முற்றிலும் அறிந்தே இருக்கின்றோம்.

82. மேலும் சாத்தான்களில் *(கடலில் அறுவடை செய்வதற்கென)* அவருக்காக மூழ்கக் கூடியவை, அல்லது செய்யுமாறு அவர் கட்டளையிடும் வேறு எந்தக் காரியத்தையும் செய்யக் கூடியவை இருந்தன. அவருடைய சேவகத்திற்கென அவற்றை நாம் பணித்தோம்.

*ஜோப்*

83. மேலும் ஜோப் தன் இரட்சகரை இறைஞ்சினார்: "எனக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன; மேலும், கருணையாளர் அனைவரிலும், நீரே மிக்க கருணையாளர்."

84. நாம் அவருக்கு பதிலளித்து, அவருடைய கஷ்டங்களை நிவர்த்தித்தோம், மேலும் அவருடைய குடும்பத்தாரை இரு மடங்காக்கி, அவருக்குத் திருப்பித் தந்தோம். அது நம்மிடமிருந்து ஒரு கருணையாகவும் வழிபடுவோருக்கொரு நினைவூட்டலாகவும் இருந்தது.

85. இன்னும் இஸ்மாயீல், இத்ரீஸ், ஜல்—கிஃப்ல்; அனைவரும் உறுதியோடு, பொறுமையோடு இருந்தனர்.

86. அவர்கள் நன்னெறியாளர்களாக இருந்த காரணத்தால், நமது கருணைக்குள் நாம் அவர்களை அனுமதித்தோம்.

*ஜோனா*

87. மேலும் ஜன்—நூன் *(ஜோனா, "தனது பெயரில் 'ந ஒன்றைக் கொண்டவர்")*, நாம் அவரைக் கட்டுப்படுத்த முடியாது என்றெண்ணிக் கொண்டு, ஆட்சேபனையுடன் தன் இறைப்பணியைக் கை விட்டார். அவர் *(பெரிய மீனின் வயிற்றின்)* இருளிலிருந்து இறைஞ்சுவதில் சென்று முடிந்தார்: "உம்மை விடுத்து வேறு தெய்வம் இல்லை. நீர் துதிப்பிற்குரியவர். நான் ஒரு பெரும்பாவத்தைச் செய்து விட்டேன்."

88. நாம் அவருக்குப் பதிலளித்து, அந்நெருக்கடியிலிருந்தும் அவரைக் காத்தோம்; இவ்விதமாகவே நம்பிக்கையாளர்களை நாம் காப்போம்.

*ஜகரிய்யாவும் ஜானும்*

89. மேலும் ஜகரிய்யா தன் இரட்சகரை இறைஞ்சினார்: "என் இரட்சகரே, நீரே சிறந்த வாரிசாக இருக்கும் போதிலும், ஒரு சந்ததி இல்லாமல் என்னை வைத்து விடாதீர்."

90. நாம்* அவருக்கு பதிலளித்து ஜானை அவருக்கு அளித்தோம்; அவருக்காக அவருடைய மனைவியை நாம் சரிப்படுத்தினோம். இது ஏனெனில் அவர்கள் நன்மைகளைச் செய்ய விரைபவர்களாகவும், இன்பமான நிலைகளிலும், அவ்வாறே அச்சத்திலும் நம்மை இறைஞ்சுபவர்களாகவும் இருந்தனர். நமக்கு, பயபக்தியுள்ளவர்களாக அவர்கள் இருந்தனர்.

*மேரியும் ஜீஸஸுஂம்*

91. தனது கன்னித்தன்மையைக் காத்துக் கொண்டவரைப் பொறுத்த வரை, நம்முடைய ஆவியிலிருந்து அவருக்குள் நாம் ஊதினோம், மேலும் இவ்விதமாக, அவரையும் அவருடைய மகனையும் அகிலம் முழுமைக்கும் ஓர் அறிகுறியாக நாம் ஆக்கினோம்.

*ஒரு கடவுள் / ஒரு மார்க்கம்*

92. உங்களுடைய கூட்டமைப்பு ஒரே கூட்டமைப்பே அன்றி இல்லை, மேலும் நான் மட்டுமே உங்களுடைய இரட்சகன்; நீங்கள் என்னை மட்டுமே வழிபட வேண்டும்.

---

**21:90 குர்ஆன் முழுவதிலும் பன்மைப்பதத்தின் பிரயோகமானது வானவர்களின் பங்களிப்பைக் குறிக்கின்றது. 3:39 மற்றும் பைபிளில் இருந்து, ஜான் பற்றிய நற்செய்தியை ஜகரிய்யாவுக்குக் கொடுக்கும் போது அவருடன் வானவர்கள் விரிவான பரிவர்த்தனைகள் செய்தனர் என்பது தெளிவாகின்றது. பார்க்க பின் இணைப்பு 10.*

93. ஆயினும், தர்க்கித்துக் கொள்ளும் மதங்களாக அவர்கள் தங்களைப் பிரித்துக் கொண்டனர். அவர்கள் அனைவரும் *(தீர்ப்பளிக்கப்படுவதற்காக)* நம்மிடமே திரும்பி வருவார்கள்.

94. நம்பிக்கை கொண்ட நிலையில் நன்மைகள் செய்வோரைப் பொறுத்தவரை, அவர்களுடைய உழைப்பு வீணாகப் போகாது; அதனை நாம் பதிவு செய்து கொண்டுள்ளோம்.

95. நாம் அழித்து விட்ட எந்தச் சமூகமும் திரும்பி வருவது தடுக்கப்பட்டுள்ளது.

*உலகத்தின் முடிவு**

96. காக் மற்றும் மேகாக் திரும்பத் தோன்றும் வரை,* அப்படி அவர்கள் திரும்பி வரும்போது – அவர்கள் ஒவ்வொரு திசையிலிருந்தும் வருவார்கள்.

97. அப்போதுதான் தவிர்த்து விட முடியாத அந்த முன்னறிவிப்பு நிகழ்ந்தேறும், மேலும் நம்பமறுப்பவர்கள் திகிலில் நிலைகுத்தி நின்றிடுவார்கள்: "எங்களுக்குக் கேடுதான்; நாங்கள் கவனமற்றவர்களாகவே இருந்தோம். உண்மையில், நாங்கள் தீயவர்களாகவே இருந்தோம்."

*மறுவுலகம்*

98. நீங்களும் **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடும் போலித் தெய்வங்களும் நரகத்திற்கு எரிபொருளாக இருப்பீர்கள்; இதுவே தவிர்த்து விட முடியாத உங்களுடைய விதியாகும்.

99. அவை தெய்வங்களாக இருந்திருந்தால்,அவை நரகம் சென்று சேர்ந்திருக்காது. அதில் வசிப்பவர்கள் அனைவரும் அங்கே நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள்.

100. அங்கே அவர்கள் பெருமூச்சு விட்டுக் கொண்டும் முனகிக் கொண்டும் இருப்பார்கள், மேலும் எந்தச் செய்தியையும் அவர்கள் அடைந்து கொள்ள முடியாது.

101. நமது மகத்தான வெகுமதிகளுக்குத் தகுதியானவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அதிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.

*நன்னெறியாளர்கள்*

102. அதன் சீற்றத்தை அவர்கள் செவியேற்கமாட்டார்கள். அவர்கள் விரும்பக் கூடிய ஒவ்வொன்றும் நிரந்தரமாகக் கிடைக்கக்கூடிய ஒரு வசிப்பிடத்தை அவர்கள் அனுபவிப்பார்கள்.

103. மாபெரும் திகில் அவர்களைக் கவலைக்குள்ளாக்காது, மேலும் வானவர்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்: "இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட, உங்களுடைய நாள் ஆகும்."

*உயிர்த்தெழுப்பப்படும் நாள்*

104. அந்நாளில், ஒரு புத்தகத்தை மடக்குவதைப் போல், வானத்தை நாம் மடக்கி விடுவோம். முதல் படைப் பை நாம் துவக்கியவாறே, அதனை நாம் மீண்டும் செய்வோம். இது நமது வாக்குறுதியாகும்; நிச்சயமாக அதனை நாம் நிறைவேற்றுவோம்.

105. நன்னெறிமிக்க என் அடியார்களால் பூமியானது வாரிசுரிமை கொள்ளப்பட வேண்டும் என சங்கீதத்திலும், அவ்வாறே மற்ற வேதங்களிலும், நாம் விதித்துள்ளோம்.

106. வழிபாடு செய்பவர்களாக இருக்கும் மக்களுக்கு இது ஒரு பிரகடனமாகும்.

107. முழு உலகின் பாலும் நம்மிடமிருந்துள்ள கருணையின் வெளிப்பாடாகவே உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.

108. பிரகடனப்படுத்துவீராக, "உங்கள் தெய்வம் ஒரே தெய்வம் என நான் தெய்வீக உள்ளுணர்வளிக்கப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் சரணடைவீர்களா ?"

109. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது கூறும், "நான் போதுமான அளவு உங்களை எச்சரித்து விட்டேன், மேலும் எவ்வளவு விரைவாக அல்லது தாமதமாக *(அத்தண்டனை)* உங்களிடம் வரும் என்பது எனக்குத் தெரியாது.

110. "உங்களுடைய பகிரங்கமான கூற்றுக்களை அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார், மேலும் நீங்கள் மறைத்து வைக்கும் ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

111. "நான் அறிந்திருப்பதெல்லாம், இந்த உலகம் உங்களுக்கு ஒரு சோதனையாகவும், தற்காலிகமான ஒரு சந்தோஷமாகவும் இருக்கின்றது என்பதேயாகும்."

112. கூறும், "என் இரட்சகரே, உமது தீர்ப்பே பரிபூரண நீதியாகும். எங்கள் இரட்சகர்தான் மிக்க அருளாளர்; உங்களுடைய கூற்றுகளுக்கு எதிராகத் தேடப்படுவது அவருடைய உதவி மட்டுமே."

****

**21:96 குர்ஆனில் உள்ள கடவுளின் கணிதக் குறியீட்டுக்கு நன்றி (பின் இணைப்பு1), கி.பி.2270க்குள், அமெரிக்கா இஸ்லாத்தின் மையமாகி விடும், மேலும் பூகோளத்தைச் சுற்றிலும் கோடிக்கணக்கானோர் குர்ஆனின் மீது நம்பிக்கை கொண்டிருப்பார்கள். (9:33, 41:53, 48:28, 61:9). காக் மற்றும் மேகாக் (துஷ்ட சமூகங்களின் உருவகப் பெயர்கள்) மட்டுமே கடவுள் நம்பிக்கையின்மையின் கோட்டை முகப்பாக இருப்பார்கள், மேலும் அவர்கள் சரணடைந்தோரைத் தாக்குவார்கள். அப்போதுதான் இவ்வுலகம் முடிவுக்கு வரும். (15:87, 18:94, பின் இணைப்பு 25). 18:94 & 21:96 ஆகியவற்றில் ஒவ்வொரு சூராவின் முடிவுக்கும் 17 வசனங்கள் முன்னதாக காக் மற்றும் மேகாக் குறிப்பிடப்படுகின்றனர்; இது அவர்கள் தோன்றக் கூடிய நேரத்தைக் குறிக்கின்றதெனக் கொள்ளலாம்.*

# சூரா 22: புனித யாத்திரை (அல்–ஹஜ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மனிதர்களே, நீங்கள் உங்கள் இரட்சகரிடம் பயபக்தியோடிருக்க வேண்டும், ஏனெனில், நேரத்தின் அதிர்வானது படுபயங்கரமான ஒன்றாகும்.

2. அதனை நீங்கள் காணும் நாளில், பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒரு தாய் கூடத் தன் சிசுவைத் தள்ளிவிட்டு விடுவாள், மேலும் ஒரு கர்ப்பிணியான பெண் தன் கருவைச் சிதைத்துக் கொள்வாள். மக்களை அவர்கள் போதையில் இல்லாதிருந்த போதிலும், அவர்கள் போதையிலிருப்பவர்களைப் போல் தள்ளாடியவர்களாக நீர் காண்பீர், இதன் காரணமாவது, **கடவுள்**–ன் தண்டனை மிகவும் அச்சமூட்டக்கூடியவராக உள்ளது.

3. மனிதர்களில், அறிவின்றிக் **கடவுள்**–ஐப்பற்றித் தர்க்கிப்பவர்கள் இருக்கின்றனர், மேலும் கலகக்காரனான ஒவ்வொரு சாத்தானையும் பின்பற்றுகின்றனர்.

4. அவனுடன் எவரேனும் தன்னைக் கூட்டாளியாக்கிக் கொண்டால், அவரை அவன் தவறாக வழி நடத்துவதுடன் நரகமெனும் மீளாத்துயரின்பால் அவரை வழிநடத்தி விடுவான் என்றும் விதிக்கப்பட்டுள்ளது.

*நாம் எங்கிருந்து வந்தோம் ?*

5. மனிதர்களே, உயிர்த்தெழுப்புதல் பற்றி நீங்கள் ஏதேனும் ஐயம் கொண்டிருப்பின் *(நினைவில் கொள்ளுங்கள்),* நாம் உங்களை மண்ணிலிருந்தும், அதன் பின்னர் தொங்குகின்ற ஒரு *(கருவாக)* மாறும் மிகச் சிறியதொரு துளியிலிருந்தும் படைத்தோம், பின்னர் அது உயிரளிக்கப்பட்ட ஒரு சிசுவாக ஆகிவிடுகின்றது, அல்லது உயிரற்றதெனக் கருதப்படுகின்றது. இவ்விதமாக நாம் விஷயங்களை உங்களுக்குத் தெளிவாக்குகின்றோம். முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு காலத்திற்கு* நாம் நாடியவற்றைக் கருவறைகளில் நாம் தங்கச் செய்கின்றோம். உங்களைச் சிசுக்களாக நாம் வெளிக் கொண்டு வந்தோம், பின்னர் நீங்கள் முதிர்ச்சியை அடைகின்றீர்கள். உங்களில் சிலர் இளவயதில் இறந்து விடும் அதே சமயம், மற்றவர்கள் குறிப்பிட்ட ஓர் எல்லைக்கு அப்பால், மேலும் அதிகமாக எந்த அறிவையும் அடைந்து கொள்ள முடியாது என்பதைக் கண்டு கொள்வதற்காகவே, மிக மோசமான வயது வரை உயிர் வாழ்கின்றீர்கள். இன்னும், நீங்கள் இறந்து விட்ட ஒரு நிலத்தைப் பார்க்கின்றீர்கள், பின்னர் அதில் நாம் தண்ணீரைப் பொழிந்தவுடன், அதில் உயிர் தளிர்க்கின்றது, மேலும் எல்லா வகைகளிலான அழகிய தாவரங்களையும் முளைப்பிக்கின்றது.

6. இது, **கடவுள்**தான் சத்தியம் எனவும், இறந்தவற்றை அவர் உயிர்ப்பிக்கின்றார் எனவும், அவர் சர்வசக்தியுடையவர் எனவும் நிரூபிக்கின்றது.

7. மேலும் அந்த நேரம் வந்து கொண்டிருக்கின்றது, அது பற்றி ஐயமில்லை எனவும், மேலும் மண்ணறைகளில் உள்ளோரைக் **கடவுள்** உயிர்த்தெழுப்புவார் எனவும்.

*ஒரு சாதாரண நிகழ்வு*

8. அறிவு இன்றி, வழிகாட்டல் இன்றி, ஒளி தரும் ஒரு வேதமுமின்றி **கடவுள்**–ஐக் குறித்துத் தர்க்கிக்கின்றவனும் மனிதர்களில் இருக்கின்றான்.

9. ஆணவத்துடன் அவன் மக்களைக் **கடவுள்**–ன் பாதையிலிருந்து திசை திருப்பப் பாடுபடுகின்றான். எனவே அவன் இவ்வுலகில் இழிவுக்கு உள்ளாகின்றான், மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று பொசுக்குகின்ற வேதனையில் அவனை நாம் போட்டு விடுவோம்.

10. இதுதான் உன் கரங்கள் உனக்காக முற்படுத்தி அனுப்பியது. **கடவுள்** ஒருபோதும் மக்களுக்கு அநீதி இழைப்பதில்லை.

*நல்ல காலத்தில் நண்பர்கள்*

11. **கடவுள்**–ஐ நிபந்தனையுடன் வழிபடுபவனும் மனிதர்களில் இருக்கின்றான். அவன் நினைத்தபடி விஷயங்கள் நடந்தால், அவன் திருப்தி அடைகின்றான். ஆனால் அவனுக்கு ஏதேனும் கஷ்டம் நேரிட்டால், அவன் முகம் திருப்பிச் சென்று விடுகின்றான். எனவே, அவன் இந்த வாழ்வு மற்றும் மறுவுலகம், இரண்டையும் இழந்து விடுகின்றான். மெய்யான நஷ்டம் இத்தகையதுதான்.

12. அவனுக்குப் பயனளிக்கவோ அல்லது அவனுக்குத் தீங்கிழைக்கவோ சக்தியற்றவற்றைக் **கடவுள்**–வுடன் அவன் இணைவழிபாடு செய்கின்றான்; மெய்யான வழிதவறுதல் இத்தகையதுதான்.

**22:5 குர்ஆனுடைய கணித அற்புதம் 19 என்ற எண்ணின் அடைப்படையிலானது. இப்போது வெளிப்பட்டுள்ளபடி, இந்த எண்ணானது, அவருடைய படைப்புகள் மீது படைப்பாளரின் கையொப்பமாகத் திகழ்கின்றது. இவ்விதமாக, நீங்களும் நானும் நமது உடல்களில் 209 எலும்புகளைக் கொண்டிருக்கின்றோம். (209=19x11) ஒரு கருவின் முழுகர்ப்ப கால அளவாவது, 266 நாட்களாகும் (19x14) (லாங்மன்ஸ் மெடிக்கல் எம்ப்ரையாலஜி T.W. சாட்லர், பக்கம் 88,1985).*

13. அவனுக்குப் பயன்தருவதை விட அவனுக்குத் தீங்கிழைக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளவற்றை அவன் இணைவழிபாடு செய்கின்றான். என்ன ஒரு துன்பகரமான எஜமானன்! என்ன ஒரு துன்பகரமான தோழன்!

14. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களை பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக்குள் **கடவுள்** அனுமதிக்கின்றார். **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பவே ஒவ்வொரு விஷயமும் உள்ளது.

*மகிழ்ச்சி இப்பொழுதும், எப்பொழுதும்*

15. எவனொருவன் இந்த வாழ்விலும் மறுவுலகிலும் தனக்குக் **கடவுள்** ஆதரவளிக்க முடியாதென எண்ணுகின்றானோ, அவன் வானத்தில் *(உள்ள தன் படைப்பாளரை)* நோக்கி முற்றிலும் திரும்பிக் கொள்ளட்டும், மேலும் *(வேறு எவர் ஒருவரையும் அவன் சார்ந்திருப்பதை)* துண்டித்துக் கொள்ளட்டும். இத்திட்டம் அவனை வருத்திக் கொண்டிருக்கின்ற எந்த ஒன்றையும், நீக்கிவிடுவதை அப்போது அவன் காண்பான்.

16. நாம் இவ்விதமாக இதிலே மிகத்தெளிவான வெளிப்பாடுகளையே வெளிப்படுத்தியுள்ளோம், பின்னர் தான் நாடுகின்ற எவரையும் **கடவுள்** வழிநடத்துகின்றார்.

*கடவுள்: ஒரே நீதிபதி*

17. நம்பிக்கை கொண்டோர், யூதர்களாக இருப்பவர்கள், மதம்மாறியவர்கள், கிறிஸ்துவர்கள், ஜோராஷ்டிரியர்கள், மற்றும் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள், அவர்களுக்கிடையில் **கடவுள்**தான் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று தீர்ப்பளிக்க இருப்பவர். **கடவுள்** அனைத்திற்கும் சாட்சியாக இருக்கின்றார்.

18. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும், மேலும் சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும் மலைகளும், மரங்களும் விலங்குகளும், ஏராளமான மனிதர்களும் **கடவுள்**–க்குச் சரணடைகின்றன என்பதை நீங்கள் உணரவில்லையா? மக்களில் ஏராளமான மற்றவர்கள் அழிவுக்கு ஆட்பட்டுவிட்டார்கள். எவனொருவனைக் **கடவுள்** இழிவாக்குகின்றாரோ, அவனை எவரும் கண்ணியப்படுத்த மாட்டார். ஒவ்வொன்றும் **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பவே உள்ளது.

*நரகம் எவ்வளவு பயங்கரமானது**

19. இதோ இரு கூட்டத்தினர் தாங்கள் இரட்சகரைக் குறித்துத் தர்க்கித்துக் கொண்டிருக்கின்றனர். நம்பமறுப்போரைப் பொறுத்தவரை, அவர்களுக்காகத் தைக்கப்பட்ட நெருப்பினாலான ஆடைகளை அவர்கள் கொண்டிருப்பார்கள். நரகத்தின் திரவங்கள் அவர்களுடைய தலைகளின் மீது ஊற்றப்படும்.

20. அவர்களுடைய உட்புறங்களையும், அத்துடன் அவர்களுடைய தோல்களையும் அது உருக்கி விடும்.

21. இரும்புக் கொப்பரைகளில் அவர்கள் அடைக்கப்படுவார்கள்.

22. இத்தகைய துன்பத்திலிருந்து அவர்கள் வெளியேற முயலும்போதெல்லாம், வலுக்கட்டாயமாக அவர்கள் உள்ளே திருப்பப்படுவார்கள்: "பொசுக்குகின்ற வேதனையைச் சுவையுங்கள்."

*சுவனத்தின் ஆனந்தம்*

23. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோரை, ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் **கடவுள்** அனுமதிப்பார். தங்கத்திலும் முத்துக்களிலுமான கடகங்கள் கொண்டு அங்கே அவர்கள் அலங்கரிக்கப்படுவார்கள், மேலும் அங்கே அவர்களுடைய ஆடைகள் பட்டாக இருக்கும்.

24. நல்ல வார்த்தைகளின் பால் வழிநடத்தப்பட்டவர்களாக அவர்கள் இருந்தனர்; மிகவும் புகழுக்குரியவரின் பாதையில் வழிநடத்தப்பட்டவர்களாக அவர்கள் இருந்தனர்.

25. நிச்சயமாக, நம்பமறுத்து மற்றவர்களைக் **கடவுள்**–ன் பாதையில் இருந்தும், – ஊர்வாசிகளாயினும், தரிசனத்திற்கு வந்தவர்களாயினும் – மக்கள் அனைவருக்காகவும் நாம் நியமித்த புனிதப் பள்ளியை விட்டும் தடுப்பவர்கள், மேலும் அதனை மாசுபடுத்தவும், அதனை சீர்கெடுக்கவும் முனைகின்ற அவர்களை வலி நிறைந்த தண்டனை கொண்டு நாம் வேதனை செய்வோம்.

**22:19–22 நரகத்திற்குச் செல்வதை வலியுறுத்திய மக்கள் தவிர்த்துவிட முடியாதவாறு புகார் கூறவே செய்வார்கள்: 'இது எவ்வளவு கெட்டது என்பதை நாங்கள் அறிந்திருந்தால், நாங்கள் வேறு விதமாக நடந்து கொண்டிருப்போம்.' உதாரணமான வார்த்தைகளாக இருந்த போதிலும், நரகின் பயங்கரங்கள் அவர்களுக்கு மிகவும் தத்ரூபமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது என்று அவர்களிடம் கூறப்படும். சொர்க்கமும் நரகமும் ஏறத்தாழ ஒரே சீராக, இணைத்தே குர்ஆனில் குறிப்பிடப்படுவது கவனிக்கப்பட வேண்டியதாகும்.*

*இஸ்லாத்தின் அனைத்துக் கடமைகளைப் போலவே, புனிதயாத்திரையும், ஆப்ரஹாமின்* மூலமே விதிக்கப்பட்டது*

26. ஆலயத்தை நிர்மாணிக்க ஆப்ரஹாமை நாம் நியமித்தோம்: "என்னுடன் வேறு எந்தத் தெய்வத்தையும் நீர் இணைவழிபாடு செய்ய வேண்டாம், மேலும் அதனைத் தரிசிக்க வருவோர், மற்றும் அதன் அருகில் வசிப்போர், மேலும் குனிவோர் மற்றும் சிரம் பணிவோருக்காக என் ஆலயத்தை தூய்மைப்படுத்துவீராக.

27. "மேலும் மக்கள் ஹஜ் புனிதயாத்திரை மேற்கொள்ள வேண்டுமெனப் பிரகடனிப்பீராக.* அவர்கள் உம்மிடம் நடந்து அல்லது களைத்துப்போன பல்வேறு *(போக்கு வரத்து சாதனங்கள் மீது)* சவாரி செய்தவர்களாக உம்மிடம் வருவார்கள். மிகத் தொலைவிலுள்ள இடங்களிலிருந்து அவர்கள் வருவார்கள்."

28. அவர்கள் வணிகப்பலன்களைத் தேடித் கொள்ளலாம், மேலும் கால்நடைகளை அவர்களுக்கு வழங்கியமைக்காக குறிப்பிட்ட நாட்களின் போது **கடவுள்**–ன் பெயரை அவர்கள் நினைவு கூர்ந்திட வேண்டும். "அதிலிருந்து உண்ணுங்கள் மேலும் நிராதரவானவர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவளியுங்கள்."

29. அவர்கள் தங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்யவும், தங்களுடைய நேர்ச்சைகளை நிறைவேற்றவும், மேலும் தொன்மை மிகு ஆலயத்தைத் தரிசிக்கவும் வேண்டும்.

30. **கடவுள்**–ஆல் விதிக்கப்பெற்ற சடங்குகளை கண்ணியம் செய்வோர் தங்கள் இரட்சகரிடம் நல்லதொரு வெகுமதிக்குத் தகுதியாகி விட்டனர். குறிப்பிடப்பட்டு உங்களுக்குத் தடுக்கப்பட்டவற்றைத் தவிர, அனைத்துக் கால்நடைகளும் உங்களுடைய உணவுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன. நீங்கள் போலித் தெய்வ வழிபாடு எனும் அருவருப்பைத் தவிர்த்துக் கொள்ளவும், பொய்சாட்சி பகர்வதைத் தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

31. நீங்கள் உங்களுடைய அர்ப்பணிப்பை **கடவுள்**–க்கு மட்டுமே பரிபூரணமாகப் பேணிவர வேண்டும். **கடவுள்**–வுடன் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்ற எவரும், விண்ணிலிருந்து விழுந்து, பின்னர் வல்லூறுகளால் பிடுங்கிச் செல்லப்பட்ட, அல்லது ஆழமானதொரு கணவாய்க்குள் காற்றில் அடித்துச் செல்லப்பட்ட ஒருவருக்கு ஒப்பாவார்.

32. உண்மையில், **கடவுள்**–ஆல் விதிக்கப்பெற்ற சடங்குகளைக் கண்ணியம் செய்வோர் தங்களுடைய இதயங்களிலுள்ள நன்னெறியைச் செயல்படுத்திக் காட்டுகின்றனர்.

*புனிதப்பயணத்தின் போது பிராணிப்பலிகள்**

33. தொன்மைமிகு ஆலயத்திற்கு நன்கொடையளிக்கப்படுவதற்கு முன்னர், ஒரு பருவம் வரை ஏராளமான பயன்களை *(கால்நடைகள்)* உங்களுக்கு வழங்குகின்றன.

34. கால்நடைகளை அவர்களுக்கு வழங்கியமைக்காகக் **கடவுள்**–ன் பெயரைஅவர்கள் நினைவு கூர்ந்திடும் முகமாக ஒவ்வொரு சமூகத்திற்கும் நாம் சடங்குகளை விதித்துள்ளோம். உங்கள் இறைவன் அதே ஒரே இறைவன்தான்; நீங்கள் அனைவரும் அவரைச் சரணடைய வேண்டும். கீழ்ப்படிவோருக்கு நற்செய்தி வழங்குவீராக.

35 **கடவுள்** என்று குறிப்பிடப்படும்போது நடுங்கிடும் இதயம் கொண்டவர்கள் அவர்கள்தான், துன்பத்தின் போது அவர்கள் உறுதியோடு சகித்துக் கொண்டிருப்பார்கள், அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பார்கள், மேலும் நம்முடைய வாழ்வாதாரங்களில் அவர்களுக்கு உரியவற்றில் இருந்து, அவர்கள் தர்மம் கொடுப்பார்கள்.

36. பிராணிப்பலிகளானது, உங்கள் சொந்த நலனுக்காகக் **கடவுள்**–ஆல் விதிக்கப்பெற்ற சடங்குகளில் உள்ளதாகும்.* வரிசையில் அவை நிற்கும் போது நீங்கள் அவற்றின் மீது **கடவுள்**–ன் பெயரை மொழிய வேண்டும். பலிக்காக அவை அர்ப்பணிக்கப்பட்டவுடன், நீங்கள் அதிலிருந்து உண்ணுவதுடன் ஏழைகளுக்கும் தேவையுடையோருக்கும் உணவளிக்கவும் வேண்டும். இதற்காகத்தான் அவற்றை உங்களுக்கு நாம் வசப்படுத்தினோம், நீங்கள் உங்களுடைய நன்றியறிதலைக் காட்டும் பொருட்டு.

37. அவற்றின் இறைச்சியோ, அன்றி அவற்றின் இரத்தமோ **கடவுள்**–ஐ அடைவதில்லை. அவரை அடைவது உங்களுடைய பயபக்திதான். உங்களுக்கு வழி காட்டியதற்காக **கடவுள்**–ஐத் துதிப்பதன் மூலம் உங்களுடைய நன்றியறிதலைக் காட்டும் பொருட்டு, அவர் அவற்றை உங்களுக்கு வசப்படுத்தினார். தர்மவான்களுக்கு நற்செய்தி வழங்குவீராக.

---

**22:26–27 (இஸ்லாம்) சரணடைதலின் ஆரம்பத் தூதர் ஆப்ரஹாமாவார். பார்க்க 22:78 மற்றும் பின் இணைப்பு 9.*

**22:36 புனித யாத்திரிகர்களின் பிராணிப் பலியானது, புனித யாத்திரைத் தலத்திலுள்ள வளங்களைப் பாதுகாக்கின்றது. புனித யாத்திரையின் போது மக்காவில் ஏறத்தாழ 2,000,000 யாத்திரிகள் குழுமுகின்றனர் என்பதைக் கவனிக்கவும்.*

*நம்பிக்கையாளர்களைக் கடவுள் காக்கின்றார்*

38. நம்பிக்கை கொண்டோரைக் **கடவுள்** காக்கின்றார். நம்பிக்கைத் துரோகி, நன்றிகெட்டவர் எவரையும் **கடவுள்** நேசிப்பதில்லை.

*யூத ஆலயங்கள், தேவாலயங்கள், மற்றும் மஸ்ஜித்கள்*

39. அவர்களுக்கு அநீதி நேரிட்டுவிட்ட காரணத்தால், அடக்குமுறை செய்யப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேலும் **கடவுள்** நிச்சயமாக அவர்களுக்கு ஆதரவளிக்க ஆற்றலுடையவர்.

40. "எங்கள் இரட்சகர் **கடவுள்**தான்" என்று கூறியதைத் தவிர மற்ற காரணம் எதற்காகவுமின்றி, அவர்கள் தங்களுடைய வீடுகளை விட்டு நியாயமின்றி வெளியேற்றப்பட்டனர். மற்றவர்களுக்கெதிராக சில மக்களுக்குக் **கடவுள்** ஆதரவளிக்கவில்லையெனில், மடங்கள், தேவாலயங்கள், யூத ஆலயங்கள், மற்றும் – **கடவுள்**–ன் பெயர் அடிக்கடி நினைவு கூர்ந்திடப்படும் – மஸ்ஜித்கள் அழிக்கப்பட்டுப் போயிருக்கும். பரிபூரணமாக, அவருக்கு ஆதரவளிப்பவர்களுக்குக் **கடவுள்** ஆதரவளிக்கின்றார். **கடவுள்** சக்தி நிறைந்தவர், எல்லாம் வல்லவர்.

41. அவர்கள் யாரென்றால், பூமியின் ஆட்சியாளர்களாக நாம் அவர்களை நியமித்தால், அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளையும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தையும் நிலைநாட்டுவார்கள், மேலும் நன்னெறியை ஆதரிப்பார்கள், மேலும் தீமையைத் தடுப்பார்கள். **கடவுள்**தான் மேலான அரசர் ஆவார்.

42. அவர்கள் உம்மை ஏற்றுக்கொள்ள மறுத்தால், அவர்களுக்கு முன்னர் நோவாவின் சமூகத்தார், ஆத் மற்றும் தமூது ஆகியோரும் நம்பமறுத்தனர்.

43. அத்துடன் ஆப்ரஹாமின் சமூகத்தாரும், லோத்தின் சமூகத்தாரும்.

44. மேலும் மித்யன்வாசிகளும். மோஸஸும் ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்டார். அம்மக்கள் அனைவரையும் நான் தொடர்ந்து இட்டுச் சென்றேன், பின்னர் நான் அவர்களைக் கணக்குக் கொடுக்க அழைத்தேன்; எனது பழிதீர்த்தல் எப்படி *(நாசம் விளைவிப்பதாக)* இருந்தது!

45. எத்தனையோ ஒரு சமூகத்தை அவர்களுடைய தீச் செயல்களின் காரணமாக நாம் அழித்திருக்கின்றோம். அவர்கள் சிதிலங்களுடனும், பாழடைந்த கிணறுகளுடனும், வெறுமையான பெரும்பெரும் மாளிகைகளுடனும் முடிந்து போயினர்.

46 அவர்கள் பூமியைச் சுற்றிப்பார்த்து, பின்னர் புரிந்து கொள்வதற்குத் தங்கள் மனங்களையும், கேட்பதற்குத் தங்கள் காதுகளையும் பயன்படுத்தவில்லையா? உண்மையில், மெய்யான குருடென்பது கண்களின் குருட்டுத்தனம் அல்ல, ஆனால் நெஞ்சங்களில் உள்ள இதயங்களின் குருட்டுத்தனமே ஆகும்.

47, தண்டனையைக் கொண்டு வருமாறு அவர்கள் உம்மிடம் சவால் விடுகின்றனர், மேலும் **கடவுள்** ஒரு போதும் தனது முன்னறிவிப்பைப் பூர்த்தி செய்யத் தவறமாட்டார். உம்முடைய இரட்சகரின் ஒரு நாள் என்பது உங்களுடைய ஓர் ஆயிரம் ஆண்டுகளைப் போன்றதாகும்.

48. கடந்த காலத்தில் எத்தனையோ ஒரு சமூகம் தீமைகள் புரிந்தது, மேலும் நான் அவர்களைச் சிறிது காலம் தொடர்ந்து செலுத்தினேன், பின்னர் நான் அவர்களைத் தண்டித்தேன். இறுதி விதி என் வசமே உள்ளது.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்*

49. கூறும், "மனிதர்களே, ஆழ்ந்த ஓர் எச்சரிப்பவனாக உங்களிடம் நான் அனுப்பப்பட்டுள்ளேன்." *

50. நம்பிக்கை கொண்டு, மேலும் நேரியதொரு வாழ்வு நடத்துவோர், மன்னிப்பிற்கும் தாராளமானதோர் பிரதிபலனுக்கும் தகுதி பெற்று விட்டார்கள்.

51. நம்முடைய வெளிப்பாடுகளுக்குச் சவால் விட முனைவோரைப் பொறுத்த வரை, அவர்கள் நரகிற்கு உள்ளாகின்றனர்.

**22:49 இக்கட்டளையானது கடவுளின் உடன்படிக்கைத் தூதரை நோக்கிக் குறிப்பாகக் கூறப்படுகின்றது. இந்த நிதர்சனமும், அத்தூதருடைய குறிப்பான பெயரும் குர்ஆனில் கணிதரீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மறுக்க முடியாத சான்றுகளுடன் விபரங்களை பின்இணைப்பு 2 மற்றும் 26ல் காண்க.*

*வழிமுறை**

52. உமக்கு முன்னர் எந்தத் தூதரையோ, அன்றி ஒரு நபியையோ, அவருடைய நாட்டத்தில் சாத்தானைச் குறுக்கிடச் செய்தே அல்லாமல் நாம் அனுப்ப வில்லை. பின்னர் சாத்தான் செய்தவற்றை **கடவுள்** செல்லாமல் ஆக்கி விடுகின்றார். **கடவுள்** தன்னு டைய வெளிப்பாடுகளைப் பூரணப்படுத்துகின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிக்கவர்*

*நயவஞ்சகர்கள் விலகிக் கொள்கின்றனர்*

53. இவ்விதமாக அவர் சாத்தானின் சூழ்ச்சியை, தங்கள் இதயங்களில் சந்தேகங்களைத் தாங்கியவர்களுக் கும், இதயங்கள் கடினமாகிப் போனவர்களுக்கும் ஒரு சோதனையாக அமைத்து விடுகின்றார். தீயவர் கள் எதிரணியில்தான் இருந்தாக வேண்டும்.

54. அறிவைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் உம் இரட்சகரிடமிருந்து வந்த சத்தியத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள், பின்னர் அதன் மீது நம்பிக்கை கொள்வார்கள், மேலும் அவர்களுடைய இதயங்கள் உவப்புடன் அதனை ஏற்றுக்கொள்ளும். வெகுநிச்சய மாக, நம்பிக்கையாளர்களைக் **கடவுள்** சரியான பாதையில் வழிநடத்துகின்றார்.

55. நம்பமறுப்போரைப் பொறுத்தவரையில், வேளை அவர் களிடம் திடீரென வரும் வரை, அல்லது பயங்கரமான தொரு நாளின் தண்டனை அவர்களிடம் வரும் வரை, அவர்கள் தொடர்ந்து சந்தேகங்களைத் தாங் கிய வண்ணமே இருப்பார்கள்.

*சாத்தானின்*
*தற்காலிக அரசுரிமை*

56. ஆட்சியதிகாரம் அனைத்தும் அந்நாளில் **கடவுள்**–க்கே உரியதாகும், எனவே அவர்களுக்கிடையில் அவர் தீர்ப்பளிப்பார். நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொரு வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, அவர்கள் ஆனந்தமயமான தோட்டங்களுக்குத் தகுதியாகி விட்டார்கள்.

57. அதேசமயம் நம்பிக்கை கொள்ள மறுத்து மேலும் நமது வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தவர் கள் இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*கடவுளுக்காகப் பாடுபடுதல்*

58. **கடவுள்**–ன் நிமித்தம் புலம்பெயர்ந்து, பின்னர் கொல்லப் பட்ட, அல்லது இறந்துவிட்ட, அவர்களுக்குக் **கடவுள்** நிச்சயமாக நல்ல வாழ்வாதாரங்களைப் பொழிவார். வழங்குபவர்களில் நிச்சயமாகக் **கடவுள்** மிகச் சிறந்த வர்.

59. மிகவும் உறுதியாக, அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த் தும் ஒரு நுழைவில் அவர் அவர்களை நுழையச் செய் வார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், கனிவானவர்.

*அடக்குமுறை செய்யப்பட்டோருக்கு*
*தெய்வீக உதவி*

60. தன் மீது நேரிட்ட ஓர் அநீதிக்காக, நீதமாகப் பழி தீர்த்த ஒருவன், பின்னர் அதன் காரணமாக அடக்கு முறை செய்யப்படுவானாயின், நிச்சயமாகக் **கடவுள்** அவனுக்கு ஆதரவளிப்பார் என விதிக்கப்பட்டுள்ளது. **கடவுள்** பிழைபொறுப்பவர், மன்னிக்கின்றவர்.

*கடவுளின் சர்வ வல்லமை*

61. **கடவுள்** பகலுக்குள் இரவைச் சேர்க்கின்றார், மேலும் இரவுக்குள் பகலைச் சேர்க்கின்றார் என்பதும், மேலும் **கடவுள்** கேட்பவர், பார்ப்பவர், என்பதும் ஒரு நிதர்சன மாகும்.

62. **கடவுள்**தான் சத்தியம், அதே சமயம் அவருடன் போலித் தெய்வங்கள் எதனையும் அமைத்துக் கொள்ளுதல் ஒரு பொய்மையாக அமைகின்றது என்பதும், **கடவுள்** மிகவும் உயர்ந்தவர், மேலதிகாரமிக்கவர் என்பதும் ஒரு நிதர்சனமாகும்.

63. நிலத்தைப் பசுமையாக மாற்றி விடும் தண்ணீரை விண்ணிலிருந்து **கடவுள்** இறக்கி அனுப்புகின்றார் என்பதை நீங்கள் காணவில்லையா ? **கடவுள்** மாண்பு மிக்கவர், நன்கறிந்தவர்.

64. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும், பூமியில் உள்ள ஒவ்வொன்றும், அவருக்குரியது. மிக நிச்சயமாக, **கடவுள்**தான் மிக்க செல்வந்தர், மிகவும் புகழுக்குத் தகுதியானவர்.

**22:52 இந்த பூலோகச் சோதனை முழுவதும், தனது கண்ணோட்டத்தை எடுத்துக்காட்ட சாத்தான் அனுமதிக்கப்படு கின்றான். (நமது உடல்களில் சாத்தானுடைய ஒரு பிரதிநிதியுடன் நாம் பிறப்பெடுக்கின்றோம்). கடவுளின் சாட்சியம் மற்றும் சாத்தானின் சாட்சியம் ஆகியவற்றுக்கிடையில், மக்கள் ஒன்றைத் தேர்வு செய்ய இது இடம் அளிக்கின்றது. சாத்தானின் சாட்சியங்கள் ஒரே சீராக, பொய்களின் அடிப்படையிலானது. சாத்தானின் பிரதிநிதிகள் ஒவ்வொரு தூதருக்கெதிராகவும் மிகவும் அபத்தமான பொய்களையும், நிந்தனைகளையும், குற்றச்சாட்டுக்களையும் தொடர்ந்து கொண்டு வருகின்றனர் எனும் நிதர்சனத்தை, இந்த வழிமுறை விவரிக்கின்றது. (காண்க 6:33–34, 8:30, 17:76–77, 27:70).*

65. பூமியின் மீது ஒவ்வொன்றையும் உங்களுக்குப் பணி செய்வதற்காகக் **கடவுள்** ஆக்கியிருக்கின்றார் என்பதை நீங்கள் காணவில்லையா? அவருடைய கட்டளைப்படி கப்பல்கள் பெருங்கடலில் ஓடுகின்றன. அவருடைய கட்டளைக்கேற்பவே தவிர, விண்ணகப் பொருட்கள் பூமியின் மீது மோதி விடாதவாறு அவர் தடுத்துக் கொண்டிருக்கின்றார். மனிதர்கள் மீது **கடவுள்** மிக்க கனிவுடையவராக இருக்கின்றார், மிக்க கருணையாளர்.

66. அவர்தான் உங்களுக்கு வாழ்வளித்தவர், பின்னர் அவர் உங்களை மரணத்தில் ஆழ்த்துகின்றார், பின்னர் அவர் மீண்டும் உங்களை வாழ்வுக்குக் கொண்டு வருகின்றார். நிச்சயமாக, மானிடன் நன்றியற்றவனாக இருக்கின்றான்.

67. ஒவ்வொரு சமூகத்திற்கும், அவர்கள் ஆதரித்தாக வேண்டிய சடங்குகளின் ஒரு தொகுப்பினை நாம் விதித்துள்ளோம். எனவே, அவர்கள் உம்முடன் சச்சர விட வேண்டாம். ஒவ்வொருவரையும் உம் இரட்சகரின் பால் நீர் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருக்க வேண்டும். மிக நிச்சயமாக, நீர் சரியான பாதையிலேயே இருக்கின்றீர்.

68. அவர்கள் உம்முடன் தர்க்கித்தால், அப்போது கூறும், "நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்."

69. உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று உங்களுடைய அனைத்துத் தர்க்கங்கள் குறித்தும், **கடவுள்** உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பார்.

70. வானங்களில் உள்ள ஒவ்வொன்றையும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிந்திருக்கின்றார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா? இவை அனைத்தும் ஒரு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்

71. இருப்பினும், அவற்றுக்குச் சக்தி எதையும் அவர் வழங்கியிருக்காத போலித்தெய்வங்களை அவர்கள் **கடவுள்**–வுடன் இணை வழிபாடு செய்கின்றனர், மேலும் அவர்களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. வரம்புமீறுபவர்களுக்கு உதவியாளர் எவருமிலர்.

*வன்முறை & சண்டைகுணம்:*
*நம்பமறுப்பின் அடையாளங்கள்*

72. நம்முடைய வெளிப்பாடுகள் அவர்களுக்குத் தெளிவாக ஓதிக்காட்டப்படும் போது, நம்பமறுப்பவர்களின் முகங்களில் பொல்லாத்தனத்தை நீர் காண்பீர். நமது வெளிப்பாடுகளை அவர்களிடம் ஓதிக் காட்டுபவர்களை அவர்கள் கிட்டத்தட்டத் தாக்கி விடுகின்றனர். கூறும், "இதனை விட மிகவும் மோசமான ஒன்றைப்பற்றி நான் உங்களுக்குத் தெரிவிக்கட்டுமா? நம்பமறுப்பவர்களுக்குக் **கடவுள்**–ஆல் நரகம் வாக்களிக்கப்பட்டுள்ளது; என்ன ஒரு துன்பகரமான விதி."

*அவர்களால் ஒரு ஈயைப் படைக்க முடியுமா?*

73. மனிதர்களே, நீங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தொரு நீதிபோதனை இங்கே: **கடவுள்**–வுடன் நீங்கள் அமைத்துக் கொள்ளும் போலித் தெய்வங்கள் ஒரு போதும் ஓர் ஈயைப் படைக்கவும் இயலாது, அவ்வாறு செய்வதற்காக அவர்கள் ஒன்று சேர்ந்து கொண்ட போதிலும். அது மட்டுமின்றி, அந்த ஈ அவர்களிடமிருந்து எதையேனும் திருடி விட்டால், அவர்களால் அதனை மீட்டுக் கொள்ளவும் இயலாது; தொடர்பவனும் தொடரப்படுபவனும் பலவீனர்களே.

74. **கடவுள்**–ஐ மதிக்க வேண்டியவாறு அவர்கள் அவரை மதிக்கவில்லை. **கடவுள்** மிகவும் சக்தி நிறைந்தவர், எல்லாம் வல்லவர்.

75. வானவர்களில் இருந்தும், அவ்வண்ணமே மனிதர்களில் இருந்தும் தூதர்களைக் **கடவுள்** தேர்ந்தெடுக்கின்றார். **கடவுள்** செவியேற்பவர், பார்ப்பவர்.

76. அவர்களுடைய கடந்த காலத்தையும் அவர்களுடைய எதிர்காலத்தையும் அவர் அறிந்திருக்கின்றார். அனைத்து விஷயங்களின் இறுதிக் கட்டுப்பாடும் **கடவுள்**–க்குரியதே ஆகும்.

77. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, நீங்கள் குனியவும், சிரம் பணியவும், உங்கள் இரட்சகரை வழிபடவும், நன்னெறிகள் புரியவும் வேண்டும்.

*ஆப்ரஹாம்:*
*இஸ்லாமின் ஆரம்ப தூதர்**

78. நீங்கள் **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபட வேண்டியவாறு அவர் நிமித்தமாக நீங்கள் பாடுபட வேண்டும். அவர் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார், மேலும் உங்கள் தந்தை ஆப்ரஹாமின் மார்க்கமாகிய–உங்கள் மார்க்கத்தைப் பயில்வதில் உங்கள் மீது எந்தச் சிரமத்தையும் அவர் வைக்கவில்லை. அவர்தான் முதலில் உங்களுக்கு "சரணடைந்தோர்" எனப் பெயரிட்டார். இப்படியாக, தூதர் உங்களுக்கிடையில் ஒரு சாட்சியாகத் திகழ வேண்டும், மேலும் நீங்கள் மக்களுக்கிடையில் சாட்சிகளாகத் திகழவேண்டும், எனவே நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுத்து வரவும், மேலும் **கடவுள்** –ஐ பற்றிக் கொள்ளவும் வேண்டும்; அவர்தான் உங்கள் இரட்சகர், மிகச்சிறந்த இரட்சகர், மேலும் மிகச் சிறந்த ஆதரவாளர்.

****

## சூரா 23: நம்பிக்கையாளர்கள் (அல்–முஃமினூன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நம்பிக்கையாளர்களே உண்மையில் வெற்றி பெற்றவர்கள்.

2. தங்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளின் போது பயபக்தியோடிருப்பவர்கள்.

3. மேலும் அவர்கள் வீண்பேச்சைத் தவிர்த்துக் கொள்வார்கள்.

4. மேலும் அவர்கள் *(ஜகாத்)* கடமையான தர்மத்தை கொடுப்பார்கள்.

5. மேலும் அவர்கள் தங்களுடைய கற்பைப் பாதுகாப்பார்கள்.

6. அவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைகளுடன் அல்லது சட்டபூர்வமாக அவர்களுக்குரியவர்களுடன் மட்டும், பாலியல் உறவு கொள்வார்கள்; அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக மாட்டார்கள்.

7. இந்த எல்லைகளை மீறுபவர்களே வரம்புமீறுபவர்கள்.

8. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வைப்புப் பொருட்கள், அவ்வண்ணமே அவர்கள் செய்து கொள்ளும் ஏதேனும் உடன்படிக்கைகள் என வரும்போது அவர்கள் நம்பத்தகுந்தவர்களாக இருப்பார்கள்.

9. மேலும் அவர்கள் தங்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பார்கள்.

10. இத்தகையவர்கள்தான் வாரிசுகள்.

11. அவர்கள் சுவர்க்கத்திற்கு வாரிசாவார்கள், அதில் அவர்கள் என்றென்றும் வசிப்பார்கள்.

*துல்லியமான கருயியல்*

12. ஒரு குறிப்பிட்ட வகையான சேற்றில் இருந்து மனிதப் படைப்பை நாம் படைத்தோம்.

13. அதன் பின்னர், நன்கு பாதுகாக்கப்பட்டதொரு கருவூலத்தில் வைக்கப்படுகின்ற, சின்னஞ் சிறியதொரு துளியிலிருந்து அவனை நாம் மீண்டும் உருவாக்கினோம்.

14. பின்னர் அத்துளியை தொங்குகின்ற *(கரு)* ஒன்றாக நாம் வளர்த்தோம், பின்னர் தொங்குகின்ற *(கருவை)* ஒரு பற்கடியளவு *(வளர்ச்சியற்ற கருவாக)* பெரிது படுத்தினோம், பின்னர் அந்த பற்கடியளவு *(வளர்ச்சியற்ற கருவை)* எலும்புகளாக நாம் படைத்தோம், பின்னர் தசைகளைக் கொண்டு எலும்புகளைப் போர்த்தினோம். இவ்விதமாகவே புதியதொரு படைப்பை நாம் உருவாக்குகின்றோம். **கடவுள்** மிகப் பாக்கியமிக்கவர், மிகச் சிறந்த படைப்பாளர்.

15. பின்னர், சிறிது காலம் கழித்து, நீங்கள் மரணிக்கின்றீர்கள்.

16. பின்னர், உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று, நீங்கள் உயிர்த்தெழுப்பப்படுவீர்கள்.

*ஏழு பிரபஞ்சங்கள்*

17. உங்களுக்கு மேலே அடுக்குகளாக ஏழு பிரபஞ்சங்களை நாம் படைத்தோம், மேலும் அவற்றில் உள்ள தனியொரு படைப்பையும் நாம் ஒரு போதும் அறியாமல் இல்லை.

*கடவுளிடமிருந்து*
*எண்ணற்ற ஆசீர்வாதங்கள்*

18. மிகச் சரியான அளவில், விண்ணிலிருந்து தண்ணீரை நாம் கீழிறக்குகின்றோம், பின்னர் அதனை நாம் நிலத்தில் சேகரிக்கின்றோம். நிச்சயமாக, அது நழுவிச் செல்லும்படி நாம் விட்டு விடமுடியும்.

**22:78 "கடவுளை மட்டும் வழிபடுங்கள்" என்ற அதே ஒரே செய்தியைத்தான் தூதர்கள் அனைவரும் உபதேசித்தனர் என்ற போதிலும், "சரணடைதல்" (இஸ்லாம்) மற்றும் "சரணடைந்தவர்" (முஸ்லிம்) (2:128) எனும் வார்த்தையை உருவாக்கிய முதல் தூதர் ஆப்ரஹாம் ஆவார். சரணடைதலுக்கு ஆப்ரஹாமின் பங்களிப்பு என்ன ? சரணடைதலின் மார்க்கக் கடமைகள் அனைத்தும் ஆப்ரஹாமின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டதென 16:123 லிருந்து நாம் கற்றுக் கொள்கின்றோம் (காண்க பின் இணைப்புக்கள் 9 & 26).*

19. அதனைக் கொண்டு, உங்களுக்காக பேரீச்சம் பழத் தோட்டங்களையும், திராட்சைகளையும், அனைத்துக் கனிவர்க்கங்களையும், மேலும் பல்வேறு உணவு களையும் நாம் உருவாக்குகின்றோம்.

20. அத்துடன், சினாயைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு மரம் எண்ணெயையும், அவ்வண்ணமே உண்ணு வோருக்கு விருப்பமிகு சுவையையும் தருகின்றது.

21. மேலும் கால்நடைகள் உங்களுக்கொரு படிப்பினையை வழங்க வேண்டும். அவற்றின் வயிறுகளிலிருந்து நாம் உங்களை *(பால்)* அருந்தச் செய்கின்றோம், அவற்றி லிருந்து வேறு பலன்களையும் நீங்கள் அடைகின்றீர் கள், மேலும் அவற்றில் சிலவற்றை நீங்கள் உணவுக் காகப் பயன் படுத்துகின்றீர்கள்.

22. அவற்றின் மீதும், மேலும் கப்பல்கள் மீதும் நீங்கள் சவாரி செய்கின்றீர்கள்.

*நோவா*

23. "என் சமூகத்தாரே, **கடவுள்**–ஐ வழிபடுங்கள். அவரு டன் வேறு தெய்வம் உங்களுக்கு இல்லை. நீங்கள் நன்னெறியுடையோராக இருக்கமாட்டீர்களா?" என்று கூறியவராக, நோவாவை அவருடைய சமூகத்தாரிடம் நாம் அனுப்பினோம்.

24. அவருடைய சமூகத்தாரில் உள்ள நம்பமறுத்த தலை வர்கள் கூறினர், " இவர் உங்களுக்கிடையில் முக்கி யத்துவம் அடைய விரும்புகின்ற, உங்களைப் போன்ற ஒரு மனிதர் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. **கடவுள்** நாடியிருந்தால், வானவர்களை அவர் கீழே அனுப்பியிருக்க முடியும். நம்முடைய முன்னோர்களிட மிருந்து இது போன்ற எதையும் நாம் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை.

25. "இவர் பித்துப் பிடித்துப் போன ஒரு மனிதர் அவ்வளவு தான். சிறிதொரு காலத்திற்கு அவரைச் சற்று அலட் சியப்படுத்தி விடுங்கள்."

26. அவர் கூறினார்,"என் இரட்சகரே, அவர்கள் என்னை நம்பமறுத்து விட்டதால், எனக்கு வெற்றியை வழங்கு வீராக."

27. பின்னர் நாம் அவருக்கு உள்ளுணர்வூட்டினோம்: "நம்முடைய விழிப்பான கண்களின் கீழ், மேலும் நம் முடைய உள்ளுணர்வூட்டலின்படி படகைக்* கட்டு வீராக. நமது கட்டளை வரும்போது, மேலும் வளி மண்டலம் கொதிப்படையும் போது, *(உம்முடைய வீட்டுப் பிராணிகளில்)* ஒவ்வொரு வகையிலும் ஒரு ஜோடியையும், அழிக்கப்படுவார்கள் எனக் கண்டனம் செய்யப்பட்டவர்களைத் தவிர உம் குடும்பத்தாரை யும் அதில் இட்டுக் கொள்வீராக. வரம்புமீறியவர்கள் சார்பாக என்னிடம் பேசாதீர்; அவர்கள் மூழ்கடிக்கப் படுவார்கள்.

28. "உம்முடன் இருப்பவர்களோடு சேர்ந்து, படகின் மீது நீர் அமர்ந்து விட்டவுடன், 'பாவிகளான மக்களிட மிருந்து நம்மைக் காத்ததற்காக, **கடவுள்**–ஐப் புகழுங் கள்,' என்று நீர் கூற வேண்டும்.

29. "மேலும் கூறுவீராக, 'என்னுடைய இரட்சகரே, பாக்கி யம் மிக்கதொரு இடத்தில் என்னைக் கரையிறங்கச் செய்வீராக; கரை சேர்ப்பவர்களில் நீரே மிகச் சிறந்த வர்.'"

30. இவை உங்களுக்குப் போதிய சான்றுகளை வழங்க வேண்டும். நிச்சயமாக நாம் உங்களைச் சோதனை யில் ஆழ்த்துவோம்.

31. அதற்குப் பிறகு, மற்றொரு தலைமுறையினரை அவர் களுக்குப் பின்னர் நாம் நிர்மாணித்தோம்.

32. "நீங்கள் **கடவுள்**–ஐ வழிபடவேண்டும். அவருடன் வேறு தெய்வம் எதுவும் உங்களுக்கு இல்லை. நீங்கள் நன்னெறியுடையோராக இருக்கமாட்டீர்களா?" என்று கூறியவாறு, அவர்களுக்கிடையில் இருந்து ஒரு தூதரை அவர்களிடம் நாம் அனுப்பினோம்.

33. அவருடைய சமூகத்தாரில் இருந்த நம்பமறுத்த, மேலும் மறுவுலகம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த தலைவர்கள் – இவ்வுலகில் நாம் அவர்களுக்குத் தாராளமாக வழங்கியிருந்த போதிலும்– கூறினர், " இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதர் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. நீங்கள் உண்ணுபவற்றையே அவர் உண்ணுகின்றார், மேலும் நீங்கள் அருந்து வதைப் போலவே அருந்துகின்றார்.

34. "உங்களைப் போன்ற ஒரு மனிதருக்கு நீங்கள் கீழ்ப் படிந்தால், பின்னர் நீங்கள் மெய்யாகவே நஷ்டப்பட்ட வர்களாவீர்கள்.

35. "நீங்கள் மரணித்த பிறகு, மேலும், மண்ணாகவும் எலும்புகளாகவும் மாறிய பின்னர், நீங்கள் மீண்டும் வெளிவருவீர்கள் என்று அவர் உங்களுக்கு வாக்களிக் கின்றாரா?

36. "சாத்தியமற்றது, உண்மையில் உங்களுக்கு வாக்களிக் கப்படுவது சாத்தியமற்றதே.

**23:27 கதை சொல்பவர்கள் நோவாவின் சரித்திரத்தைக் கேலிக்குரியதாக ஆக்கி விட்டார்கள். நோவாவின் படகு, மரக் கட்டைகளால் செய்யப்பட்டு, சாதாரணமான கயிறுகளால் ஒன்றாகக் கட்டப்பட்ட தட்டையானதொரு மரக்கலமேயாகும். (54:13), அவ்வெள்ளம் சாக்கடல் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் மட்டுமே ஏற்பட்டது, மேலும் அந்தப் பிராணிகள் நோவாவால் வளர்க்கப்பட்ட வீட்டுப் பிராணிகளே.*

37. "இந்த வாழ்வை மட்டுமே நாம் வாழ்கின்றோம் – நாம் வாழ்கிறோம் மேலும் மரணிக்கின்றோம் – மேலும் நாம் ஒருபோதும் உயிர்ப்பித்தெழுப்பப்பட மாட்டோம்.

38. "இவர் பொய்களைப் புனைவதுடன் அவற்றைக் **கடவுள்** மேல் சாட்டுகின்ற ஒரு மனிதர் மட்டுமே. நாங்கள் ஒருபோதும் அவரை நம்பமாட்டோம்."

39. அவர் கூறினார், "என் இரட்சகரே, அவர்கள் என்னை நம்பமறுத்து விட்டதால், எனக்கு வெற்றியை வழங்கு வீராக."

40. அவர் கூறினார், "விரைவில் அவர்கள் வருத்தப்பட்ட வர்களாவார்கள்."

41. நீதமாக, தண்டனை அவர்களைத் தாக்கியது, மேலும் இவ்வாறாக, அவர்களை நாம் சிதிலங்களாக மாற்றினோம். தீய மக்கள் நசிந்தார்கள்.

42. அதன்பிறகு, மற்றத் தலைமுறையினரை அவர்களுக் குப் பின்னர் நாம் நிர்மாணித்தோம்.

43. எந்தச் சமூகமும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட அதன் விதியை முற்படுத்தி விடவோ, அன்றி தாமதித்து விடவோ முடியாது.

44. பின்னர் நாம் தொடர்ச்சியாக நம் தூதர்களை அனுப்பி னோம். தூதர் ஒருவர் தன் சமூகத்தாரிடம் சென்ற ஒவ்வொரு முறையும், அவர்கள் அவரை நம்பமறுத்த னர். அதன் விளைவாக, ஒன்றன் பின் மற்றொன்றாக, அவர்களை நாம் அழித்தோம், மேலும் அவர்களை வரலாறுகளாக்கினோம். நம்பமறுத்த மக்கள் நசிந்து போனார்கள்.

*மோஸஸூம் ஆரோனும்*

45. பின்னர் நமது வெளிப்பாடுகளுடனும் ஆழ்ந்ததொரு சான்றுடனும் மோஸஸையும் அவருடைய சகோதரர் ஆரோனையும் நாம் அனுப்பினோம்.

46. ஃபேரோவிடமும் அவனுடைய பிரதானிகளிடமும், ஆனால் அவர்கள் ஆணவம் கொண்டவர்களாக மாறினார்கள். அவர்கள் அடக்குமுறை செய்கின்ற மக்களாக இருந்தனர்.

47. அவர்கள் கூறினார், "நமது அடிமைகளாக இருக் கின்ற சமூகத்தின் இரு மனிதர்களுக்காக நாம் நம் பிக்கை கொள்ள வேண்டுமா?"

48. அவர்கள் அவ்விருவரையும் ஏற்கமறுத்தனர், எனவே அதன் விளைவாக, அவர்கள் அழிக்கப்பட்டனர்.

49. அவர்கள் வழிகாட்டப்பட்டவர்களாகும் பொருட்டு, மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம்.

50. மேரியின் மகனையும் அவருடைய தாயாரையும் ஓர் அத்தாட்சியாக நாம் ஆக்கினோம், மேலும் உணவு மற்றும் பானத்துடன் ஒரு குன்றின் மீது அவர்களுக்கு நாம் புகலிடமளித்தோம்.

*ஒரு கடவுள்/ ஒரு மார்க்கம்*

51. தூதர்களே, நல்ல ஆகாரங்களிலிருந்து உண்ணுங் கள், மேலும் நற்பணிகள் புரியுங்கள், நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் நான் முற்றிலும் அறிந்திருக்கின் றேன்.

52. இவ்விதமானது உங்கள் சமூகம் – ஒரே சமூகம் – மேலும் நானே உங்கள் இரட்சகனாவேன்; நீங்கள் என்னிடம் பக்தியோடிருக்க வேண்டும்.

53. ஆனால் அவர்கள் தர்க்கித்துக் கொள்ளும் பிரிவு களாகத் தங்களையே பிளவுபடுத்திக் கொண்டனர்; ஒவ்வொரு கூட்டமும் தங்களிடம் இருப்பதைக் கொண்டு மகிழ்வடைகின்றனர்.

54. எனவே, சிறிது காலத்திற்கு, அவர்களுடைய குழப் பத்திலேயே அவர்களைச் சற்று விட்டு விடுவீராக.

55. செல்வமும் பிள்ளைகளும் கொண்டு நாம் அவர் களுக்கு வழங்கியிருப்பதால், அவர்கள் எண்ணிக் கொண்டனரா,

56. ஆசீர்வாதங்களை நாம் அவர்கள் மேல் பொழிந்து கொண்டிருக்கின்றோம் என்று? உண்மையில், அவர் களுக்கு எதுவும் தெரியாது.

57. நிச்சயமாக, தங்கள் இரட்சகரிடம் பக்தியான உணர் வுடன் இருப்பவர்கள்,

58. மேலும் தங்களுடைய இரட்சகரின் வெளிப்பாடு களில் நம்பிக்கை கொண்டவர்கள்,

59. மேலும் தங்கள் இரட்சகருடன் போலித் தெய்வங்கள் எதனையும் ஒரு போதும் அமைத்துக் கொள்ளாதவர் கள்,

60. தங்களுடைய தர்மங்களை அவர்கள் கொடுக்கும் போது, அவர்களுடைய இதயங்கள் முற்றிலும் பக்தி யோடிருக்கின்றன. ஏனெனில் தங்களுடைய இரட்ச கரின் முன்கொண்டு வரப்படுவோம் என்பதை அவர் கள் புரிந்து கொண்டிருக்கின்றனர்,

61. அவர்கள் நற்பணிகள் புரிய ஆவலுடன் உள்ளனர்; அவற்றைச் செய்ய அவர்கள் போட்டியிடுகின்றனர்.

*நம்பமறுப்பவர்கள் நன்றிகெட்டவர்கள்*

62. எந்த ஓர்ஆத்மாவுக்கும் அதன் சக்திக்கு அப்பாற் பட்டு நாம் ஒருபோதும் சுமத்துவதில்லை. மேலும் உண்மையே உரைக்கும் ஒரு பதிவேட்டை நாம் வைத் திருக்கின்றோம். எவர் ஒருவரும் அநீதத்தை அனுப விக்க மாட்டார்கள்.

63. அவர்களுடைய மனங்கள் இதுகுறித்து அறியாதிருப் பதால், இதற்கு ஒவ்வாத காரியங்களை அவர்கள் செய்கின்றனர்; அவர்களுடைய காரியங்கள் தீயவை யாக உள்ளன.

64. பின்னர், அவர்களுடைய தலைவர்களை நாம் தண்டனையைக் கொண்டு பழிவாங்கும் போது, அவர்கள் புகார் கூறுகின்றனர்.

65. இப்போது புகார் கூறாதீர்கள்; நம்மிடமிருந்து உதவி அனைத்தையும் நீங்கள் விட்டு விட்டீர்கள்.

66. என்னுடைய சான்றுகள் உங்களிடம் காட்டப்பட்டன, ஆனால் நீங்கள் உங்கள் குதிங்கால்களின் மீது திரும்பிச் சென்று விட்டீர்கள்.

67. அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் மிகவும் ஆணவம் கொண்டவர்களாக இருந்தீர்கள், மேலும் நீங்கள் அடங்காமல் அவற்றை அலட்சியம் செய்தீர்கள்.

68. அவர்கள் ஏன் இந்த வேதத்தைச் சிந்தித்துப் பார்க்க வில்லை ? அவர்களுடைய முன்னோர்களால் ஒரு போதும் அடையப்படாத ஒன்றை அவர்கள் பெற்றிருக் கின்றனர் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வில்லையா ?

69. அவர்கள் தங்களுடைய தூதரை அடையாளம் கண்டு கொள்ளத்தவறி விட்டனரா ? இதனால்தான் அவர் கள் அவரை அலட்சியம் செய்கின்றனரா ?

70. அவர் கிறுக்கர் என்று அவர்கள் தீர்மானித்து விட்டன ரா ? உண்மையில், அவர்களிடம் சத்தியத்தை அவர் கொண்டு வந்துள்ளார், ஆனால் அவர்களில் அதிக மானோர் சத்தியத்தை வெறுக்கின்றனர்.

71. உண்மையில், சத்தியம் அவர்களுடைய விருப்பங் களுக்கு ஒத்ததாக இருந்திருந்தால், வானங்களிலும் பூமியிலும் முற்றிலும் ஒழுங்கின்மையே இருந்திருக் கும்; அவற்றில் உள்ள ஒவ்வொன்றும் சீர்குலைந்து போயிருக்கும். அவர்களுக்குரிய சான்றை நாம் அவர்களுக்குக் கொடுத்தோம், ஆனால் அவர்கள் தங்களுக்குரிய சான்றை அலட்சியம் செய்கின்றனர்.

72. அவர்களிடம் நீர் ஒரு கூலி கேட்கின்றீரா ? உம் இரட் சகரின் கூலி மிகவும் மேலானதாகும். அவர்தான் வழங்குவோரில் மிகச்சிறந்தவர்.

73. மிக நிச்சயமாக, ஒரு நேரான பாதையின் பால் அவர் களை நீர் அழைக்கின்றீர்.

74. மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள், சரியான பாதையிலிருந்து நிச்சயம் விலகிச் சென்று விடுவார்கள்.

75. கருணையை நாம் அவர்கள் மீது பொழிந்து, மேலும் அவர்களுடைய பிரச்சனைகளை நிவர்த்தித்த போதி லும், அவர்கள் வரம்புமீறலில் ஆழமாக மூழ்கி விட்ட னர், மேலும் பெருந்தவறுகள் புரியத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

76. தண்டனையைக் கொண்டு நாம் அவர்களை வருத் திய போதிலும், இறைஞ்சியவாறு தங்கள் இரட்சகரி டம் அவர்கள் ஒரு போதும் திரும்பவில்லை.

77. அதன்பிறகு, அவர்கள் உள்ளாகியிருந்த அந்த கடும் தண்டனை கொண்டு அவர்களை நாம் பழிவாங்கிய போது, அவர்கள் அதிர்ந்து விட்டனர்.

78. அவர்தான் உங்களுக்குச் செவிப்புலனையும், பார் வைத்திறனையும், மூளைகளையும் வழங்கியவர். அரிதாகவே நீங்கள் நன்றியோடு இருக்கின்றீர்கள்.

79. அவர்தான் பூமியின் மீது உங்களை நிலைப்படுத்திய வர், மேலும் அவர் முன்னால் நீங்கள் ஒன்று திரட்டப் படுவீர்கள்.

80. அவர்தான் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப் படுத்துபவர், மேலும் அவர்தான் இரவையும் பகலை யும் மாற்றியமைப்பவர். நீங்கள் புரிந்து கொள்ள வில்லையா ?

81. அவர்களுடைய முன்னோர்கள் கூறியதையே அவர் களும் கூறினர்.

82. அவர்கள் கூறினர், "நாம் மரணித்து, மேலும் மண்ணா கவும் எலும்புகளாகவும் மாறிய பின்னர், நாம் உயிர்ப் பித்தெழுப்பப்படுவோமா ?

83. "கடந்த காலத்தில் இத்தகைய வாக்குறுதிகள் நமக்கும் நம்முடைய பெற்றோர்களுக்கும் கொடுக்கப்பட்டன. இவை கடந்த காலத்துக் கட்டுக்கதைகள் என்பதை விட அதிகம் எதுவுமில்லை."

*நம்பிக்கை கொண்டவர்களில் பெரும்பாலோர் நரகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளனர்**

84. கூறுவீராக, "நீங்கள் அறிந்திருந்தால், பூமியும் அதி லுள்ள ஒவ்வொருவரும் எவருக்குரியவர்கள் ?"

85. அவர்கள் கூறுவர், "**கடவுள்**–க்கு." கூறும், "பின்னர் ஏன் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை ?"

86. கூறும், "ஏழு பிரபஞ்சங்களின் இரட்சகர்; மகத்தான சாம்ராஜ்யத்தின் இரட்சகர் யார் ?"

87. அவர்கள் கூறுவர், " **கடவுள்.**" கூறுவீராக, "பின்னர் ஏன் நீங்கள் நல்லவர்களாக மாறவில்லை ?"

****23:84–89** கடவுளின் தன்மைகளை, உதாரணமாகக் கடவுள் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்துகின்றார் **(8:17)**, என்பது போன்ற நிதர்சனத்தை அடையாளம் கண்டு கொண்டால் மட்டுமே கடவுள் மீது நம்பிக்கை என்பது செல்லுபடியாகும். கடவுளைப் பற்றி அறியாத நம்பிக்கை கொண்டவர்கள் உண்மையில் நம்பிக்கையாளர்களே அல்லர். நம்பிக்கை கொண்ட வர்களில் அதிகமானோர், நபிமார்கள் மற்றும் மகான்கள் முதலான சக்தியற்ற போலித் தெய்வங்களை இணை வழிபாடு செய்வதன் மூலம், தங்களுடைய நம்பிக்கையைப் பயனற்றதாக ஆக்கி விடுகின்றனர் **(6:106)**.*

88. கூறுவீராக, "எவருடைய கரத்தில் அனைத்துப் பொருட்களின் மீதான ஆட்சியதிகாரம் உள்ளது, மேலும் அவர்தான் உதவி வழங்கக் கூடிய ஒரே ஒரு வர், ஆனால் எந்த உதவியும் தேவையில்லாதவர், நீங்கள் அறிந்திருந்தால் ?"

89. அவர்கள் கூறுவர், " **கடவுள்.**" கூறுவீராக, "எங்கே நீங்கள் தவறாகச் சென்றீர்கள் ?"

90. நாம் அவர்களுக்குச் சத்தியத்தைக் கொடுத்துள் ளோம், அதே சமயம் அவர்களோ பொய்யர்களாக இருக்கின்றனர்.

91. ஒருபோதும் **கடவுள்** ஒரு மகனைப் பெற்றெடுக்க வில்லை. அன்றி அவருடன் வேறு தெய்வம் எதுவும் எப்பொழுதும் இருந்ததில்லை. அவ்வாறெனில், ஒவ்வொரு தெய்வமும் தன் படைப்புக்களோடு சுயாட்சியைப் பிரகடனம் செய்திருக்கும், மேலும் அவர்கள் ஒருவர் மற்றவருடன் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டிருப்பார்கள். **கடவுள்** துதிப்பிற்குரியவர்; அவர்களுடைய கூற்றுகளுக்கெல்லாம் மிகவும் அப்பாற்பட்டவர்.

92. எல்லா இரகசியங்களையும் அறிவிப்புக்களையும் அறிந்தவர்; அவர் உயர்வானவர், ஒரு பங்குதாரரைக் கொண்டிருப்பதற்கு மிகவும் அப்பாற்பட்டவர்.

93. கூறும், "என் இரட்சகரே, அவர்கள் உள்ளாகியிருக்கும் *(தண்டனையான)* அதனை நீர் எனக்குக் காட்டினா லும், *(காட்டவில்லையென்றாலும்),*

94. "என் இரட்சகரே, வரம்புமீறுகின்ற மக்களில் ஒரு வனாக இருக்கும்படி என்னை விட்டு விடாதீர்."

95. நாம் அவர்களுக்காகத் தயார் செய்து வைத்திருக் கும் *(அத்தண்டனையை)* உமக்குக் காட்டுவதென் பது நாம் எளிதில் செய்யக்கூடிய ஒன்றேயாகும்.

96. எனவே, நன்மையைக் கொண்டு அவர்களுடைய தீயகாரியங்களை எதிர்கொள்வீராக; அவர்களு டைய கூற்றுகளைப் பற்றி நாம் முற்றிலும் அறிவோம்.

*சாத்தானிடமிருந்து பாதுகாக்கப்பட*

97. கூறுவீராக, "என் இரட்சகரே, சாத்தான்களின் கிசு கிசுப்புகளில் இருந்து நான் உம்மிடம் புகலிடம் தேடு கின்றேன்.

98. "மேலும் நான் உம்மிடம் புகலிடம் தேடுகின்றேன், என் இரட்சகரே, அவை என் அருகில் வருவதை விட்டும்."

*உயிர்தெழுப்பப்படும் நாள் வரை மாண்டவர்*
*ஒருபோதும் மீண்டு வர மாட்டார்*

99. அவர்களில் ஒருவனுக்கு மரணம் வரும் பொழுது அவன் கூறுகின்றான், "என் இரட்சகரே, என்னைத் திருப்பி அனுப்புவீராக.

100. "அப்போது நான் விட்டு வந்த ஒவ்வொன்றிலும் நன்னெறியான காரியங்களை நான் செய்வேன்" உண்மை அல்ல. இது அவன் கூறும் பொய்க் கூற்றா கும். உயிர்த்தெழுப்புதல் வரை இவ்வுலகிலிருந்து அவனது ஆத்மாவை ஒரு தடை பிரித்து வைக்கும்.

101. கொம்பு ஊதப்படும்போது, அந்நாளில் அவர்களுக் கிடையில் எந்த உறவும் இருக்காது, அன்றி அவர்கள் ஒருவரைப் பற்றி மற்றொருவர் கவலைப்படவும் மாட்டார்கள்.

102. எடைகள் கனத்தோரைப் பொறுத்தவரை, அவர்கள் தான் வெற்றியாளர்களாக இருப்பார்கள்.

103. எவர்களுடைய எடைகள் இலேசாக உள்ளதோ அவர் கள்தான் தங்களுடைய ஆத்மாக்களைத் தொலைத் தவர்கள்; என்றென்றும் அவர்கள் நரகில் தங்கி இருப் பார்கள்.

104. அவர்களுடைய முகங்களை நெருப்பு சூழ்ந்து கொள் ளும், மேலும் அங்கே அவர்கள் துன்பகரமாக நிலைத் திருப்பார்கள்.

105. என்னுடைய வெளிப்பாடுகள் உன்னிடம் ஓதிக் காட் டப்பட்டுக் கொண்டிருக்க, தொடர்ந்து நீ அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துக்கொண்டேயிருந்தாய் அல்லவா ?

106. அவர்கள் கூறுவர், "எங்கள் இரட்சகரே, எங்களுடைய பொல்லாத்தனம் எங்களை மூழ்கடித்து விட்டது, மேலும் நாங்கள் வழிதவறிச் சென்ற மக்களாகவே இருந்தோம்.

107. "எங்கள் இரட்சகரே, இதிலிருந்து எங்களை வெளியே எடுத்து விடுவீராக; *(எங்கள் பழைய நடத்தைகளுக்கு)* நாங்கள் திரும்பினால், பின்னர் நாங்கள் மெய்யாகவே தீயவர்களாவோம்."

108. அவர் கூறுவார், "இழிவு செய்யப்பட்டவர்களாக, அங் கேயே தங்கியிருங்கள், மேலும் என்னுடன் பேசாதீர் கள்.

*அவர்கள் நம்பிக்கையாளர்களைக்*
*கேலி செய்தனர்*

109. "என்னுடைய ஊழியர்களில் ஒரு கூட்டத்தினர் கூறி வந்தனர், 'எங்கள் இரட்சகரே, நாங்கள் நம்பிக்கை கொண்டோம், எனவே எங்களை மன்னிப்பீராக மேலும் எங்கள் மீது கருணையைப் பொழிந்திடுவீராக. கருணை யாளர்கள் அனைவரிலும், நீரே மிக்க கருணையாளர்.'

110. "ஆனால் என்னையே நீங்கள் மறக்கும் அளவுக்கு, அவர்களை நீங்கள் கேலியும் பரிகாசமும் செய்தீர் கள். அவர்களை நோக்கி நகைப்பவர்களாக நீங்கள் இருந்தீர்கள்.

111. "அவர்களுடைய உறுதிப்பாட்டுக்குப் பகரமாக, அவர் களை வெற்றியாளர்களாக ஆக்கியதன் மூலம், இன் றைய தினம் நான் அவர்களுக்கு வெகுமதியளித்து விட்டேன்."

112. அவர் கூறினார், "பூமியின் மீது எவ்வளவு காலம் நீங் கள் நிலைத்திருந்தீர்கள் ? எத்தனை வருடங்கள் ?"

113. அவர்கள் கூறினர், " நாங்கள் ஒரு நாளோ அல்லது ஒரு நாளின் பகுதியோ நிலைத்திருந்தோம். கணக் கெடுத்தவர்களைக் கேட்பீராக."

114. அவர் கூறினார், "உண்மையில், ஒரு குறுகிய கால அளவு மட்டுமே நீங்கள் தங்கியிருந்தீர்கள், நீங்கள் மட்டும் அறிந்திருந்தால்.

115. "உங்களை நாம் வீணுக்காக படைத்தோம் என்று எண்ணிக் கொண்டீர்களா; நம்மிடம் நீங்கள் திருப்பப் பட மாட்டீர்கள் என்று ?

116. **கடவுள்** மிகவும் உயர்ந்தவர், உண்மையான அரசர். அவருடன் வேறு தெய்வம் எதுவுமில்லை; மிகவும் கண்ணியத்திற்குரிய இரட்சகர், அனைத்து அதிகா ரங்களையும் வைத்திருப்பவர்.

117. எவ்விதமான ஆதாரமும் இன்றி, எவனொருவன் **கடவுள்**–வுடன் வேறு தெய்வத்தை இணை வழிபாடு செய்கின்றானோ, அவனுடைய கணக்கெடுப்பு அவனு டைய இரட்சகரிடமே உள்ளது. நம்பமறுப்பவர்கள் ஒரு போதும் வெற்றி பெற மாட்டார்கள்.

118. கூறுவீராக, "என் இரட்சகரே, மன்னிப்பையும் கருணை யையும் கொண்டு எங்கள் மேல் பொழிவீராக. கருணை யாளர்கள் அனைவரிலும், நீரே மிக்க கருணையாளர்."

****

# சூரா 24: ஒளி (அல்–நூர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நாம் இறக்கி அனுப்பிய, மேலும் நாம் சட்டமாக விதித் துள்ள ஒரு சூரா. தெளிவான வெளிப்பாடுகளை அதனில் நாம் வெளிப்படுத்தியுள்ளோம், நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

*விபசாரம்*

2. விபசாரி மற்றும் விபசாரன் ஆகிய அவர்கள் ஒவ் வொருவரையும் நீங்கள் ஒரு நூறு சவுக்கடிகள் அடிக்க வேண்டும். **கடவுள்** மீதும் இறுதி நாளின் மீதும் நீங்கள் உண்மையாகவே நம்பிக்கை கொண் டிருந்தால், **கடவுள்**–ன் சட்டத்தைச் செயல்படுத்து வதை விட்டும் அனுதாபத்தால் நீங்கள் ஊசலாடாதீர் கள். மேலும் நம்பிக்கையாளர்களின் ஒரு குழுவினர் அவர்களுடைய தண்டனையைக் காணட்டும்.*

3. விபசாரன் ஒரு விபசாரியையோ அல்லது போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருத்தியையோ திரு மணம் செய்வதில் சென்று முடிவான், மேலும் விபசாரி விபசாரன் ஒருவனையோ அல்லது போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஒருவனையோ திருமணம் செய் வதில் சென்று முடிவாள். இது நம்பிக்கையாளர் களுக்குத் தடுக்கப்பட்டுள்ளது.

4. எவர்கள் திருமணமான பெண்கள் மீது விபசாரக் குற்றஞ்சாட்டிவிட்டு, பின்னர் நான்கு சாட்சிகளைக் கொண்டுவரத் தவறுகின்றனரோ, அவர்களை நீங் கள் எண்பது சவுக்கடிகள் அடிக்க வேண்டும், மேலும் அவர்களிடமிருந்து எந்தச் சாட்சியத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்; அவர்கள் தீயவர்களாக இருக்கின்றனர்.

5. அதன்பின்னர் அவர்கள் வருந்தி, மேலும் சீர்திருத்திக் கொண்டால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

6. வேறு சாட்சிகள் எதுவுமின்றி, தங்களுடைய சொந்த வாழ்க்கைத் துணைகளைக் குற்றஞ்சாட்டுபவர் களைப் பொறுத்தவரை, அவன் உண்மையையே கூறு வதாக நான்கு முறை **கடவுள்** மீது சத்தியம் செய்தால், பின்னர் அந்தச் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

7. ஐந்தாம் ஆணையாவது, அவன் கூறுவது பொய்யாக இருந்தால், **கடவுள்**–ன் கண்டனம் அவன் மீது உள்ளாவதாக என்று இருத்தல் வேண்டும்.

8. அவன் ஒரு பொய்யன் என்று **கடவுள்** மீது நான்கு முறை அவள் சத்தியம் செய்தால் அவள் குற்றமற்ற வளாகக் கருதப்பட வேண்டும்.

9. ஐந்தாம் ஆணையாவது, அவன் கூறுவது உண்மை யாக இருந்தால் **கடவுள்**–ன் கோபத்தை அவள் தன் மீது உள்ளாக்கிக் கொள்வதாக வேண்டும்.

10. உங்கள் பால் இது **கடவுள்**–ன் அருளும் கருணையு மாகும். **கடவுள்** மீட்பவர், ஞானம் மிக்கவர்.

**24:2 சமூக நெருக்கடி, அதாவது தண்டனையைப் பொதுமக்கள் பார்ப்பதுதான், அடிப்படையான தண்டனை (மேலும் பார்க்க 5:38). சவுக்கடி அடையாளபூர்வமானதாகவே இருக்க வேண்டும், கடுமையானதாக அல்ல.*

*வதந்திகள் மற்றும் நிரூபணமில்லாத குற்றச்சாட்டுக்களைக் கையாள்வது எப்படி*

11. உங்களில் ஒரு கும்பல் பெரியதொரு பொய்யைக் கொண்டு வந்தது.* அது உங்களுக்குக் கெட்டதாக இருந்தது என்று நீங்கள் நினைக்காதீர்கள்; மாறாக, அது உங்களுக்கு நல்லதாகவே இருந்தது. இடைப் பட்ட நேரத்தில், அவர்களில் ஒவ்வொருவனும் குற்றத்தில் அவனுடைய பங்கைச் சம்பாதித்துக் கொண்டான். சம்பவம் முழுவதையும் துவக்கிய வனைப் பொறுத்தவரை, அவன் பயங்கரமானதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டான்.

12. அதனை நீங்கள் கேள்விப்பட்டபோது, நம்பிக்கை கொண்ட ஆண்களும் நம்பிக்கை கொண்ட பெண் களும் தங்களைப் பற்றியே நல்லெண்ணங்கள் கொண்டிருக்க வேண்டும், மேலும் "இது வெளிப் படையானதொரு பெரும் பொய்" என்று கூறியிருக்க வேண்டும்.

13. நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வந்தால் மட்டும் *(நீங்கள் அவர்களை நம்பலாம்).* அவர்கள் சாட்சிகளைக் கொண்டுவரத் தவறினால், பின்னர் அவர்கள்தான், **கடவுள்**–ஐப் பொறுத்த வரை, பொய் யர்கள்.

14. **கடவுள்**–ன் அருளும், அவருடைய கருணையும், இவ் வுலகிலும் மறுவுலகிலும் உங்கள்பால் இல்லாதிருந் தால், இச்சம்பவத்தின் காரணமாக மகத்தானதொரு தண்டனையால் துயருற்று இருப்பீர்கள்.

15. உங்களுடைய சொந்த நாவுகளால் அதனை நீங்கள் புனைந்து கொண்டீர்கள், உங்களில் மீதமுள்ளவர் கள் ஆதாரமின்றி உங்கள் வாய்களால் அதனைத் திரும்பக் கூறினீர்கள். அதனை சாதாரணமானதாக நீங்கள் நினைத்தீர்கள், ஆயினும் **கடவுள்**–ஐப் பொறுத்தவரை, அது மிகப்பெரியதாக இருந்தது.

*என்ன செய்வது*

16. அதனை நீங்கள் கேள்விப்பட்டபோது, "நாங்கள் இதனைத் திரும்பக் கூற மாட்டோம். நீர் துதிப்பிற்குரி யவர். இதுமிகப் பெரியதொரு பொய்யாகும்," என நீங்கள் கூறியிருக்க வேண்டும்.

17. நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், அதனை நீங்கள் மீண்டும் ஒருபோதும் செய்யலாகதென **கடவுள்** உங்களைக் கடிந்து கொள்கின்றார்.

18. **கடவுள்** இவ்விதமாக இந்த வெளிப்பாடுகளை உங் களுக்காக விவரிக்கின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்த வர், ஞானமுடையவர்

19. நம்பிக்கையாளர்களுக்கிடையில் ஒழுக்கக் கேடுகள் பரவுவதைக் காண விரும்புபவர்கள், இவ்வாழ்விலும் மறுவுலகிலும் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர். **கடவுள்** அறிந்திருக்கின்றார், அதே சமயம் நீங்கள் அறியமாட்டீர்கள்.

20. **கடவுள்** தனது அருளையும் கருணையையும் உங்கள் மேல் பொழிகின்றார். நம்பிக்கையாளர்கள் பால் **கடவுள்** மிக்க கனிவானவராக இருக்கின்றார், மிக்க கருணையாளர்.

*அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களைச் சாத்தான் ஊக்குவிக்கின்றான்*

21. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், சாத்தா னின் காலடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். சாத்தா னின் காலடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற எவனொ ருவனும், அவன் தீமையையும், ஒழுக்கக் கேட்டை யுமே ஆதரிக்கின்றான் என அறிந்து கொள்ள வேண் டும். **கடவுள்**–ன் அருளும், அவருடைய கருணையும், உங்கள் பால் இல்லாதிருந்தால் உங்களில் எவருமே தூய்மையடைந்திருக்க மாட்டீர்கள். ஆனால் தான் நாடுகின்ற எவரையும் **கடவுள்** தூய்மைப்படுத்து கின்றார். **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

22. உங்களில் வளங்களும் செல்வமும் கொண்டு ஆசீர் வதிக்கப்பட்டவர்கள், தங்களுடைய உறவினர்கள், ஏழைகள் மற்றும் **கடவுள்**–ன் நிமித்தம் புலம் பெயர்ந் தவர்களின் பால் தர்மவான்களாகத் திகழ வேண்டும். அவர்கள் கனிவுடனும் சகிப்புத் தன்மையுடனும், அவர் களை நடத்திட வேண்டும்; **கடவுள்**–ன் மன்னிப்பை அடைய நீங்கள் விரும்பவில்லையா? **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*மிகப்பெரும் பாவம்*

23. நிச்சயமாக, பக்தியுடையவர்களாக உள்ள நம்பிக்கை கொண்ட திருமணமான பெண்களைப் பொய்யாகக் குற்றஞ்சாட்டுபவர்கள், இவ்வாழ்விலும் மறுவுலகி லும் கண்டனத்திற்குள்ளாகி விட்டனர். அவர்கள் படு பயங்கரமானதொரு தண்டனைக்குள்ளாகி விட்ட னர்.

**24:11 நபியின் மனைவி ஆயிஷா தவறுதலாகப் பாலைவனத்தில் விட்டுச் செல்லப்பட்டு விட்ட பின்னர், ஓர் இளைஞரால் கண்டுபிடிக்கப்பட்டு நபியின் பிரயாணக் கூட்டத்தைப் பிடிக்க அவரால் உதவி செய்யப்பட்ட ஒரு சரித்திரச் சம்பவத்தை இது குறிக்கின்றது. இது ஆயிஷாவுக்கெதிரான பிரசித்தி பெற்ற 'பெரும் பொய்' யைத் துவக்கியது.*

24. அவர்களுடைய சொந்த நாவுகளும், கரங்களும், பாதங்களும், அவர்கள் செய்த ஒவ்வொன்றுக்கும் சாட்சி பகர்கின்ற அந்நாள் வரும்.

25. அந்நாளில், அவர்களுடைய காரியங்களுக்காகக் **கடவுள்** அவர்களுக்கு முழுமையான கூலி கொடுப்பார், மேலும் **கடவுள்** தான் சத்தியம் என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள்.

26. கெட்ட பெண்கள் கெட்ட ஆண்களுக்கு, மேலும் கெட்ட ஆண்கள் கெட்ட பெண்களுக்கு, மேலும் நல்ல பெண்கள் நல்ல ஆண்களுக்கு, மேலும் நல்ல ஆண்கள் நல்ல பெண்களுக்கு. பின்னவர்கள் இத்தகைய குற்றச்சாட்டுக்களில் குற்றமற்றவர்களாக உள்ளனர். அவர்கள் மன்னிப்பையும் தாராளமான தொரு வெகுமதியையும் அடைந்து விட்டார்கள்.

*தெய்வீக இங்கிதம்*

27. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுடையவற்றைத் தவிர வேறு வீடுகளில், அவற்றில் வசிப்பவர்களின் அனுமதி பெறாமலும், அவர்களை வாழ்த்தாமலும் நீங்கள் உள்ளே நுழையாதீர்கள். இதுவே உங்களுக்கு மிகவும் சிறப்பானதாகும், நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

28. அவற்றில் எவர் ஒருவரையும் நீர் காணாவிட்டால், அனுமதியைப் பெறும் வரை நீங்கள் அவற்றினுள் நுழையாதீர்கள். "திரும்பிச் செல்லுங்கள்," என்று உங்களிடம் கூறப்பட்டால், நீங்கள் திரும்பிச் சென்று விட வேண்டும். இதுவே உங்களுக்கு மிகவும் தூய்மையானது. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

29. வசிக்கப்படாத வீடுகளில் உங்களுக்குரியது ஏதேனும் இருந்தால் அதனுள் நுழைவதன் மூலம் நீங்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை. நீங்கள் வெளிப்படுத்தும் ஒவ்வொன்றையும், மேலும் நீங்கள் மறைத்து வைக்கும் ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிந்திருக்கின்றார்.

*நம்பிக்கையாளர்களுக்குரிய*
*ஆடைக் கட்டுப்பாடு**

30. நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும் *(மேலும் பெண்களை உற்றுப்பார்க்கக் கூடாது)* என்றும், மேலும் தங்களுடைய கற்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவீராக. இதுவே அவர்களுக்கு மிகவும் தூய்மையுடையதாகும். அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும், **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவர்.

31. மேலும் நம்பிக்கை கொண்ட பெண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்வதுடன், தங்கள் கற்பைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும் என்று கூறுவீராக. அவசியமானவற்றைத் தவிர, தங்களுடைய உடல்களின் எந்தப் பகுதியையும் அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம். அவர்கள் தங்களுடைய மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும், மேலும் தங்கள் கணவர்கள், தங்கள் தந்தையர், தங்கள் கணவர்களின் தந்தையர், தங்கள் மகன்கள், தங்கள் கணவர்களின் மகன்கள், தங்கள் சகோதரர்கள், தங்கள் சகோதரர்களின் மகன்கள், தங்கள் சகோதரிகளின் மகன்கள், மற்றப் பெண்கள், பாலியல் உந்துதல் அற்றுப் போன ஆண் சேவகர்கள் அல்லது பணியாளர்கள், அல்லது பருவம் அடையாத குழந்தைகள் முன்னிலையில் தவிர, இவ்விதியைத் தளர்த்த வேண்டாம். அவர்கள் நடக்கும் பொழுது தங்களுடைய உடல்களின் குறிப்பிட்ட விவரங்களைக் குலுக்கி வெளிப்படுத்துவதற்காகத் தங்கள் பாதங்களை அதிரச் செய்ய வேண்டாம். நீங்கள் அனைவரும் **கடவுள்**–யிடம் வருந்த வேண்டும், நம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் வெற்றியடையும் பொருட்டு.*

*ஒழுக்கக் கேட்டை*
*ஊக்கம் குன்றச் செய்ய*
*திருமணத்தை ஊக்கப்படுத்துங்கள்*

32. உங்களில் தனித்திருக்கும் நபர்களைத் திருமணம் புரிந்து கொள்ள நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் ஏழைகளாக இருந்தால், உங்கள் ஆண் மற்றும் பெண் ஊழியர்களிலுள்ள நன்னெறியுடையவர்களை அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். **கடவுள்** தன் அருளிலிருந்து அவர்களைச் செல்வந்தர்களாக்குவார். **கடவுள்** கொடையளிப்பவர், அறிந்திருப்பவர்.

**24:30–31* *எனவே, ஒழுக்கமாக ஆடையணிதல் நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் ஒரு பண்பாகும். ஒரு பெண்ணின் ஆடைக்கான குறைந்தபட்ச அவசியமாவது அவளுடைய ஆடையை நீளப்படுத்திக் கொள்வதும்* ***(33:59)*** *மேலும் அவளது மார்பை மறைத்துக்கொள்வதுமாகும். கொடுங்கோன்மையான அரேபியப் பாரம்பர்யங்கள் ஒரு பெண் உச்சி முதல் பாதம் வரை மூடப்படவேண்டும் என்பதைப் போன்ற ஒரு பொய்யான கருத்தைத் தந்துள்ளன; இத்தகையது குர்ஆனுடைய அல்லது இஸ்லாத்தினுடைய ஆடை அல்ல.*

33. திருமணம் செய்து கொள்ள வசதியில்லாதவர்கள், **கடவுள்** தன் அருளிலிருந்து அவர்களுக்கு வழங்கும் வரை ஒழுக்கத்தைப் பேணிக் கொள்ள வேண்டும். உங்கள் ஊழியர்களில் திருமணம் செய்து கொள் வதற்காக விடுதலையடைய விரும்புபவர்களுக்கு, அவர்கள் நேர்மையானவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டு விட்டால், அவர்களுடைய விருப்பத்தை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். உங் கள் மீது அவர் அருளிய **கடவுள்**–ன் பணத்திலிருந்து, அவர்களுக்குக் கொடுங்கள். உங்களுடைய பெண் மணிகளை, அவர்கள் கற்புடையவர்களாக இருக்க விரும்பினால், இவ்வுலகப் பொருட்களை தேடி, அவர் களை விபசாரம் செய்வதற்கு நிர்ப்பந்திக்க வேண் டாம். எவரேனும் நிர்ப்பந்தித்தால், பின்னர் **கடவுள்**, அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவதைக் காண்பதால், மன்னிப்பவர், கருணையாளர்.

34. தெளிவுபடுத்தும் வெளிப்பாடுகளையும், கடந்த காலத் தலைமுறைகளிலிருந்து உதாரணங்களை யும், மேலும் நன்னெறியுடையோருக்கு ஓர் உபதேசத் தையும் உமக்கு நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

*கடவுள்*

35. **கடவுள்** வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாக உள்ளார். அவருடைய ஒளிக்கு உதாரணமாவது, ஒரு கண்ணா டிக் குடுவைக்குள் வைக்கப்பட்டுள்ள, ஒரு விளக்கின் பின்னாலுள்ளதொரு குவி கண்ணாடியை போன்ற தாகும். அக்கண்ணாடிக் குடுவை முத்தினை ஒத்த பிரகாசமானதொரு நட்சத்திரத்தைப் போன்றுள்ளது. அதற்குரிய எரிபொருள், கிழக்கத்தியதுமல்லாத, மேற்கத்தியதுமல்லாத, ஆசீர்வதிக்கப்பட்டதொரு எண்ணெய் தரும் மரத்திலிருந்து வழங்கப்படுகின்றது. அதன் எண்ணெய் கிட்டத்தட்ட சுயமாகவே ஒளிரக் கூடியது; அதனை மூட்டுவதற்கு நெருப்பு எதுவும் தேவையில்லை. ஒளிக்கு மேல் ஒளி. *(வழிநடத்தப்பட வேண்டும் என)* நாடுகின்ற எவரையும் **கடவுள்** தன் ஒளியின் பால் வழி நடத்துகின்றார். நீதிபோதனை களை மனிதர்களுக்குக் **கடவுள்** இவ்விதமாக எடுத்துரைக்கின்றார். அனைத்து விஷயங்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

36. **கடவுள்**–ஆல் உயர்த்தப்பட்ட வீடுகளில் *(கடவுளின் வழிகாட்டல் காணப்படுகின்றது)* ஏனெனில் அவரு டைய பெயர் அங்கே நினைவு கூரப்படுகின்றது. இர வும் பகலும், அங்கே அவரைத் துதித்துக் கொண்டு–

*பள்ளிவாசல்களுக்கு அடிக்கடி வருபவர்கள்*

37. தங்களுடைய தொழில் அல்லது வியாபாரத்தினால் **கடவுள்**–ஐ நினைவு கூர்வதிலிருந்து திசை திருப்பப் படாத மக்கள்; அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழு கைகளைக் கடைப்பிடிப்பார்கள், மேலும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுப்பார்கள், மேலும் மனங்களும் கண்களும் திகிலடைந்து விடும் அந் நாள் குறித்து அவர்கள் எச்சரிக்கையுடன் இருப்பார் கள்.

38. அவர்களுடைய நல்ல காரியங்களுக்காகக் **கடவுள்** அவர்களுக்கு நிச்சயமாக வெகுமதி வழங்குவார், மேலும் தனது அருளை அவர்கள் மீது பொழிவார். தான் நாடியோருக்குக் **கடவுள்** அளவின்றி வழங்கு கின்றார்.

*ஒருகானலைத் துரத்திச் செல்லுதல்*

39. நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய செயல்கள் பாலைவனத்திலுள்ள ஒரு கானலைப் போன்றதாகும். தாகித்த ஒரு மனிதன் அதனைத் தண்ணீரென்றே நினைக்கின்றான். ஆனால் அவன் அதனை அடையும்போது, அது ஒன்றுமேயில்லை என் பதை அவன் காண்கின்றான், மேலும் அதற்கு மாறாக, அவனுடைய செயல்களுக்கு அவனை முற்றிலும் பழி தீர்ப்பதற்காகக் **கடவுள்**–ஐ அங்கே அவன் காண் கின்றான். **கடவுள்**தான் மிகத் திறன் வாய்ந்த கணக் காளர்.

*கடவுளிடமிருந்து வெளியேற்றம்:*
*முற்றிலும் இருட்டு*

40. மற்றொரு உருவகமாவது, அலைகளுக்கு மேல் அலைகளுடன், கூடுதலாக அடர்ந்த பனியுடன், உக் கிரமானதோர் பெருங்கடல் மத்தியில் முழுமையான இருளினுள் இருப்பதைப் போன்றதாகும். இருளுக்கு மேல் இருள் – அவன் தன் சொந்தக் கரத்தினை நோக்கினாலும், அவன் அதனைக் காண்பது அரிது. எவருக்குக் **கடவுள்** ஒளியைப் பறித்து விடுகின்றா ரோ, அவருக்கு ஒளி எதுவும் இருக்காது.

41. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும், இன்னும் அவை ஒரு வரிசையில் பறக்கையில் பறவை களும், **கடவுள்**–ஐத் துதிப்பதை நீங்கள் உணரவில் லையா? ஒவ்வொன்றும் அதன் தொழுகையையும் அதன் துதிப்பையும் அறிந்திருக்கின்றது. அவை செய் கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந் திருக்கின்றார்.

42. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் **கடவுள்**–க் குரியது, மேலும் இறுதி விதி **கடவுள்**–யி டமே உள்ளது.

43. **கடவுள்** மேகங்களை ஒட்டி, பின்னர் அவற்றை ஒன்றாகச் சேர்த்து, பின்னர் அவற்றை ஒன்றின் மீது மற்றொன்றாக அடுக்குகின்றார், பின்னர் அவற்றி லிருந்து மழை வெளிவருவதை நீங்கள் பார்க்கின்றீர் கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? விண்ணிலிருந்து ஏராளமான பனியை, தான் நாடு கின்ற எவரையும் மூடவும், அதே சமயம் தான் நாடு கின்ற எவரிடமிருந்தும் அதனை விலக்கியும் அவர் கீழ் அனுப்புகின்றார். அந்தப் பனியின் பிரகாசமானது கண்களைக் கிட்டத்தட்ட குருடாக்கி விடுகின்றது.

44. இரவையும் பகலையும் **கடவுள்**தான் கட்டுப்படுத்து கின்றார். கண்களுடையவர்களுக்கு இது ஒரு படிப் பினையாகத் திகழவேண்டும்.

45. மேலும் நீரிலிருந்தே ஒவ்வொரு உயிர்ப் பிராணியை யும் **கடவுள்** படைத்தார். அவற்றில் சில தங்கள் வயிறு களால் நடக்கின்றன, சில இரண்டு கால்களால் நடக் கின்றன, மேலும் சில நான்கினால் நடக்கின்றன. தான் நாடுகின்ற எதையும் **கடவுள்** படைக்கின்றார். **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

46. தெளிவூட்டும் வெளிப்பாடுகளையே நாம் உமக்கு இறக்கி அனுப்பியுள்ளோம், பின்பு நேரானதொரு வழியை விரும்புகின்ற எவரொருவரையும் **கடவுள்** வழிநடத்துகின்றார்.

*கடவுள் தன் தூதரின் மூலம்*
*கட்டளைகளை அனுப்புகின்றார்*

47. அவர்கள் கூறுகின்றனர், "நாங்கள் **கடவுள்** மீதும் தூதர் மீதும் நம்பிக்கை கொள்கின்றோம், மேலும் நாங்கள் கீழ்ப்படிகின்றோம்," ஆனால் பின்னர் அவர் களில் சிலர் அதற்குப் பிறகு பின்னால் சறுகி விடு கின்றனர். இவர்கள் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

48. அவர்களுக்கிடையில் தீர்ப்பளிக்கக் **கடவுள்**–யிட மும் அவருடைய தூதரிடமும் அவர்கள் அழைக்கப் படும்போது, அவர்களில் சிலர் கலக்கமடைந்து விடு கின்றனர்.

49. ஆயினும், தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாக இருந் தால், அவர்கள் தயக்கமின்றி அதனை ஏற்றுக் கொள் கின்றனர்!

50. அவர்களுடைய இதயங்களில் ஒரு நோய் இருக்கின்ற தா? அவர்கள் சந்தேகம் கொண்டிருக்கின்றார் களா? **கடவுள்**–ம் அவருடைய தூதரும் தங்களை அநீதமாக நடத்தக்கூடும் என்று அவர்கள் அஞ்சு கின்றனரா? உண்மையில், அவர்கள்தான் அநீதக் காரர்களாக உள்ளனர்.

*நம்பிக்கையாளர்கள்*
*கடவுளுக்கும் அவருடைய*
*தூதருக்கும் தயக்கமின்றிக் கீழ்ப்படிகின்றனர்*

51. அவர்களுடைய விவகாரங்களில் தீர்ப்பளிக்கப்படு வதற்காக **கடவுள்**–யிடமும் அவருடைய தூதரிடமும், அழைக்கப்படும்போதெல்லாம், நம்பிக்கையாளர் களின் கூற்று "நாங்கள் செவியேற்றோம், மேலும் நாங்கள் கீழ்ப்படிகின்றோம்," என்று கூறுவதாகவே இருந்தது இவர்கள்தான் வெற்றியாளர்கள்.

52. **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, **கடவுள்**–யிடம் பக்தி கொண்டு மேலும் அவரைக் கருத்தில் கொள்பவர்கள், இவர்கள்தான் வெற்றிக் களிப்பு அடைந்தவர்கள்.

53. புறப்படும்படி அவர்களுக்கு நீர் கட்டளையிட்டால், அவர்கள் புறப்படுவோம் என்று, **கடவுள்** மீது அவர்கள், பவித்திரமாக, சத்தியம் செய்கின்றார்கள். கூறுவீ ராக, "சத்தியம் செய்யாதீர்கள். கீழ்ப்படிதல் ஒரு கடமையாகும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்."

54. கூறும், "**கடவுள்**–க்குக் கீழ்ப்படியுங்கள், மேலும் தூதருக்குக் கீழ்ப்படியுங்கள்." அவர்கள் மறுத்து விட்டால், பின்னர் அவருடைய கடமைகளுக்கு அவர் பொறுப்பாவார், மேலும் உங்கள் கடமைகளுக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள். நீங்கள் அவருக்குக் கீழ்ப் படிந்தால், நீங்கள் வழிகாட்டப்படுவீர்கள். தூதரின் ஒரே பணி *(தூதுச்செய்தியை)* சேர்ப்பிப்பதே.

*கடவுளின் வாக்குறுதி பூமி மீது*
*ராஜாக்களாகவும் ராணிகளாகவும்*

55. உங்களில் நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொரு வாழ்வு நடத்துவோருக்கு, அவர்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு அவர் செய்தவாறே, அவர் களையும் பூமியின் மீது ஆட்சியாளர்களாக அவர் ஆக்குவார் என்று **கடவுள்** வாக்களிக்கின்றார், மேலும் அவர்களுக்காக அவர் தேர்ந்தெடுத்து கொண்ட மார்க்கத்தை அவர்களுக்காக அவர் நிலைப்படுத்து வார், மேலும் பயம் இருந்த இடத்தில் சாந்தியையும் பாதுகாப்பையும் அவர் மாற்றி அமைப்பார். இவை அனைத்தும் அவர்கள் என்னை மட்டும் வழிபட்டதற் காகவேயாகும்; அவர்கள் என்னுடன் போலித் தெய் வங்கள் எதையும் ஒரு போதும் அமைத்துக் கொள்வ தில்லை. இதன் பின்னரும் நம்பமறுப்பவர்கள் உண் மையில் தீயவர்களேயாவர்.

*வெற்றியின் சூத்திரம்*

56. நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்கவும் *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுத்து வரவும், மேலும் தூதருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும், நீங்கள் கருணையை அடையும் பொருட்டு.

57. நம்பமறுப்பவர்கள் அத்துடன் அப்படியே தப்பிச் சென்று விடுவார்கள் என்று ஒருக்காலும் நினைக்காதீர். அவர்களுடைய கடைசித் தங்குமிடம் நரகம் ஆகும்; என்ன ஒரு துன்பகரமான விதி.

*இங்கிதம்*
*இரு தொழுகைகள் பெயர் குறிப்பிடப்படுகின்றன*

58. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், பருவம் அடையாத குழந்தைகளும் உங்களுடைய ஊழியர்களும் *(உங்களுடைய அறைகளில் நுழைவதற்கு முன்னர்)* அனுமதி கேட்டாக வேண்டும். இது மூன்று சந்தர்ப்பங்களில் செய்யப்பட வேண்டும் – அதிகாலைத் தொழுகைக்கு முன்னர், பகலில் ஓய்வுக்காக நீங்கள் உங்களுடைய ஆடைகளை மாற்றியிருக்கும்போது, மேலும் இரவுத் தொழுகைக்குப் பிறகு. இவை உங்களுக்கு மூன்று அந்தரங்க நேரங்களாகும். மற்றச் சமயங்களில், நீங்கள் ஒருவர் மற்றவருடன் கலந்திருப்பதில் உங்கள் மீதோ அவர்கள் மீதோ தவறு இல்லை. **கடவுள்** இவ்விதமாக இந்த வெளிப்பாடுகளை உங்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிக்கவர்.

59. குழந்தைகள் பருவம் அடைந்து விட்டால், அவர்களுக்கு முன்னர் பருவம் அடைந்தவர்கள் *(நுழையும் முன்)* அனுமதி கேட்டதைப் போலவே அவர்களும் *(நுழையும் முன்)* அனுமதி கேட்டாக வேண்டும். **கடவுள்** இவ்விதமாக அவருடைய வெளிப்பாடுகளை உங்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிக்கவர்.

*நீங்கள் ஒழுக்கமாக ஆடையணிய வேண்டும்*

60. திருமணம் செய்து கொள்ளப்படுவதை எதிர்பார்க்காத வயது முதிர்ந்த பெண்கள், தங்களுடைய உடல்களை மிகவும் அதிகமாக வெளிப்படுத்தாத வரை, தங்களுடைய ஆடைக் கட்டுப்பாட்டைத் தளர்த்திக் கொள்வதன் மூலம் தவறெதுவும் செய்து விடவில்லை. ஒழுக்கத்தைப் பராமரித்துக் கொள்வதே அவர்களுக்குச் சிறந்ததாகும். **கடவுள்** செவியேற்பவர், அறிந்தவர்.

*உங்களுடைய உணவு சட்டபூர்வமானது*
*என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்*

61. குருடர்கள் குற்றம் சாட்டப்படக் கூடாது, முடவர்கள் குற்றம் சாட்டப்படக் கூடாது, அன்றி ஊனமுற்றவர்களும் குற்றம் சாட்டப்படக் கூடாது, உங்களுடைய வீடுகளில் உண்பதால் நீங்கள் குற்றம் சாட்டப்படமாட்டீர்கள் என்பதைப் போல, அல்லது உங்கள் தந்தையரின் வீடுகளில், அல்லது உங்கள் தாய்மார்களின் வீடுகளில், அல்லது உங்கள் சகோதரர்களின் வீடுகளில், அல்லது உங்கள் சகோதரிகளின் வீடுகளில், அல்லது உங்கள் தந்தையர்களுடைய சகோதரர்களின் வீடுகளில், அல்லது உங்கள் தந்தையர்களுடைய சகோதரிகளின் வீடுகளில், அல்லது உங்கள் தாய்மார்களுடைய சகோதரர்களின் வீடுகளில், அல்லது உங்கள் தாய்மார்களுடைய சகோதரிகளின் வீடுகளில், அல்லது அவற்றின் சாவிகளை நீங்கள் வைத்திருக்கின்ற உங்களுக்குச் சொந்தமான வீடுகளில், அல்லது உங்கள் நண்பர்களுடைய வீடுகளில். ஒன்றுசேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ உண்பதன் மூலம் நீங்கள் தவறெதுவும் செய்து விடவில்லை. எந்த வீட்டில் நீங்கள் நுழையும் போதும் **கடவுள்**–யிடமிருந்துள்ள ஆசீர்வதிக்கப் பட்டதும் நல்லதுமான, ஒரு வாழ்த்தைக் கொண்டு நீங்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்திக் கொள்ள வேண்டும். **கடவுள்** இவ்விதமாக இந்த வெளிப்பாடுகளை உங்களுக்கு விவரிக்கின்றார், நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு.

62. **கடவுள்** மீதும் அவருடைய தூதர்* மீதும் நம்பிக்கை கொண்டவர்களே உண்மையான நம்பிக்கையாளர்கள் ஆவர், மேலும் அவர்கள் ஒரு சமுதாயக் கூட்டத்தில் அவருடன் இருக்கும் போது, அனுமதியின்றி அவரை விட்டுச் சென்றுவிட மாட்டார்கள். அனுமதி கேட்பவர்களே **கடவுள்** மீதும் அவருடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள். தங்களுடைய விவகாரங்களில் சிலவற்றைக் கவனிப்பதற்காக, அவர்கள் உம்மிடம் அனுமதி கேட்டால், நீர் நாடுகின்ற எவருக்கும் நீர் அனுமதி வழங்கலாம், மேலும் அவர்களை மன்னிக்கும்படிக் **கடவுள்**–யிடம் கேட்பீராக. **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

63. நீங்கள் ஒருவர் மற்றவருடைய வேண்டுகோள்களைக் கருதுவதைப் போல தூதருடைய வேண்டுகோள்களைக் கருதாதீர்கள். உங்களில் பலவீனமான சாக்குப்போக்குகளைப் பயன்படுத்தி நழுவிச் சென்று விடுபவர்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார். அவர்கள் எச்சரிக்கையாக இருக்கட்டும்–அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாதவர்கள்–ஏனெனில் ஒரு பேரழிவோ அல்லது கடுமையானதொரு தண்டனையோ அவர்களைத் தாக்கக்கூடும்.

64. பரிபூரணமாக, வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும், **கடவுள்**–க்குரியது. நீங்கள் இருக்கக் கூடிய ஒவ்வொரு நிலைமையையும் அவர் முற்றிலும் அறிகின்றார். அவரிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படும் நாளில், அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அவர் தெரிவிப்பார். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

****

**24:62 இவ்வசனம் கடவுளின் உடன்படிக்கைத் தூதரைக் குறிக்கின்றது; "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலிஃபா" என்பதன் மதிப்பையும் (725), வசன எண்ணையும் (62), நாம் கூட்டினால் நமக்குக் கிட்டுவது 1292, ஒரு 19ன் பெருக்குத் தொகையாகும் (1292=19x68) பார்க்க பின் இணைப்பு 2.*

# சூரா 25:
# சட்டப்புத்தகம்
# (அல்–ஃபுர்கான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.

1. முழு உலகுக்கும் ஓர் எச்சரிப்பவராகப் அவர் பணியாற்றுவதற்காக, தன் ஊழியருக்கு, இந்தச் சட்டப் புத்தகத்தை வெளிப்படுத்திய அந்த ஒருவர், பாக்கியம் மிக்கவர்.

2. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் அனைத்திற்கும் உரிய ஒருவர். ஒருபோதும் அவர் ஒரு மகனைக் கொண்டிருக்கவில்லை, அன்றியும் ஆட்சியதிகாரத்தில் எந்தப் பங்குதாரர்களும் அவருக்கு இல்லை. அவர் ஒவ்வொன்றையும் மிகச் சரியான அளவில் படைத்தார்; ஒவ்வொன்றையும் அவர் மிகத் துல்லியமாக வடிவமைத்தார்.*

3. இருப்பினும், எந்த ஒன்றையும் படைக்காதவற்றை –அவர்களே படைக்கப்பட்டவர்களாக உள்ளனர்– மேலும் தங்களுக்கே நன்மையோ தீமையோ செய்து கொள்ளச் சக்தியற்றவற்றை, அவருடன் தெய்வங்களாக அவர்கள் அமைத்துக் கொள்கின்றனர், அன்றியும் வாழ்வையோ அல்லது மரணத்தையோ அல்லது உயிர்த்தெழுப்புதலையோ கட்டுப்படுத்தும் எந்தச் சக்தியையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை.

*குர்ஆனின் கணிதக் குறியீட்டின் மூலம்*
*நம்பமறுப்பவர்கள் வாயடைத்துப் போகின்றனர்*

4. நம்பமறுப்பவர்கள் கூறினர், "இது மற்ற சில மனிதர்களின் உதவியுடன், அவர் உருவாக்கி கொண்ட ஓர் இட்டுக்கட்டலேயாகும்." அவர்கள் ஓர் இறைநிந்தனையையும் ஒரு பொய்மையையும் உதிர்த்து விட்டனர்.

5. அத்துடன் அவர்கள் கூறினர், "அவர் எழுதிக் கொண்ட கடந்த காலக் கட்டுக்கதைகள்; அவை அவருக்கு இரவும் பகலும் எழுதிக் கொள்வதற்காக எடுத்துக் கூறப்பட்டன."*

6. கூறும், "வானங்கள் மற்றும் பூமியின் இரகசியங்களை* அறிந்த ஒருவரால் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

*நம்பமறுப்பவர்களுடைய*
*ஒரே விதமான கூற்றுக்கள்*

7. மேலும் அவர்கள் கூறினர், "இந்தத் தூதர் உணவுண்டு கொண்டும் அங்காடிகளில் நடந்து கொண்டும் இருப்பது எப்படி ? அவருடன் ஒரு பிரசாரகராகப் பணிபுரிய ஒரு வானவர் மட்டும் அவருடன் இறங்கி வரக்கூடுமானால் !"

8. அல்லது, "ஒரு புதையல் மட்டும் அவருக்குக் கொடுக்கப்பட்டால்!" அல்லது, "அதிலிருந்து அவர் உண்ணுகின்ற ஒரு தோட்டத்தை மட்டும் அவர் பெற்றிருப்பாரானால் ! "வரம்புமீறுபவர்கள் மேலும் கூறினர், "நீங்கள் சூன்யம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகின்றீர்கள்."

9. அவர்கள் எப்படி உம்மை எல்லாவிதமான பட்டப் பெயர்களையும் கொண்டு அழைத்தார்கள் என்றும், மேலும் எவ்வாறு இது அவர்களை ஒருபோதும் தங்கள் வழியைத் திரும்பக் காணாதவாறு வழி தவறிச் செல்லச் செய்தது என்பதையும் கவனிப்பீராக.

10. பாக்கியம் மிக்க ஒருவரான அவர் நாடினால், அவர்களுடைய கோரிக்கைகளை விடவும் மிகச்சிறந்தவற்றை – பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களையும், ஏராளமான மாளிகைகளையும் – உமக்குத் தர இயலும்.

*மெய்யான காரணம்*

11. உண்மையில், அவர்கள் வேளையின் *(உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள்),* மீது நம்பிக்கை கொள்ள மறுத்து விட்டனர், மேலும் வேளையின் மீது நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களுக்காக கொழுந்து விட்டெரியும் நரகத்தை நாம் தயார் செய்துள்ளோம்.

**25:2 விண்வெளி வீரர்களை அண்டவெளிக்குள் நாம் மிதக்க விடும்போது, நாம் உணவு, நீர், பிராணவாயு, மற்றும் பயணம் முழுவதற்குமான மற்றத் தேவைகளை மிகத் துல்லியமாக அளவிடுகின்றோம். அது போலவே, பூமியெனும் விண்கலத்தின் மீது அண்டவெளியில் கடவுள் நம்மை மிதக்க விட்டுள்ளார்–மேலும் நமக்கும் மற்றப் படைப்பினங்களுக்கும் புதுப்பித்துக் கொள்ளக் கூடிய அனைத்து வகை வாழ்வாதாரங்களையும், ஒரு மிகச் சரியான வடிவில் வடிவமைத்துள்ளார். உதாரணத்திற்கு, நமக்கும் தாவரங்களுக்கும் இடையில் உள்ள ஒன்றுக்கொன்று இசைவான தொடர்பினை எண்ணிப் பாருங்கள்; ஒளிச்சேர்க்கையின் மூலம் அவை உருவாக்கும் பிராணவாயுவை நாம் பயன்படுத்துகின்றோம், அதே சமயம் சுவாசிக்கும் போது நாம் வெளிப்படுத்தும் கரியமிலவாயுவை அவை பயன்படுத்திக் கொள்கின்றன.*

**25:5 முஹம்மதின் சமகாலத்தவர்கள், அவர் எழுதவும் படிக்கவும் தெரிந்த கல்வி கற்ற ஒருவர் என்பதை அறிந்திருந்தனர்; கடவுளின் வெளிப்பாடுகளை அவர் தன் சொந்தக் கரங்களால் எழுதிக் கொண்டார் (பார்க்க பின் இணைப்பு 28).*

**25:6 நம்பமறுப்பவர்களின் கூற்றுக்களுக்கு மறுக்க முடியாத பதிலான, குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீடு, 1400 வருடங்களாக தெய்வீகமாகப் பாதுகாக்கப்பட்டதோர் இரகசியமாக இருந்து வந்தது. கடவுளின் அனுமதிப்படி அதனைத் திரைவிலக்க, கடவுளின் உடன்படிக்கைத் தூதர் விதிக்கப்பட்டிருந்தார் (பின்இணைப்பு 1, 2 & 26).*

*நம்பமறுப்பவர்களுக்கான தண்டனை*

12. அது அவர்களைத் தொலைவிலிருந்து காணும் பொழுதே, அவர்கள் அதன் கோபத்தையும் சீற்றத்தையும் செவியேற்பார்கள்.

13. மேலும் ஒரு குறுகிய இடத்தின் ஊடே, முற்றிலும் தளைகள் இடப்பட்டவர்களாக, அவர்கள் அதில் எறியப்படும்பொழுது, தங்களுடைய கைசேதத்தை அவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

14. அந்நாளன்று, நீங்கள் ஒரே ஒரு கைசேதத்தை மட்டும் வெளிப்படுத்தமாட்டீர்கள்; மிக அதிக எண்ணிக்கையிலான கைசேதங்களின் மூலம் நீங்கள் துயரப்படுவீர்கள்.

*நன்னெறியாளர்களுக்கான வெகுமதி*

15. கூறுவீராக, "இது மேலானதா, அல்லது நன்னெறியாளர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் நிரந்தரமான சுவனமா ? அது அவர்களுக்கு நன்கு தகுதியான வெகுமதி; நன்கு தகுதியான ஒரு விதி."

16. அங்கே அவர்கள் விரும்புகின்ற எதுவும், என்றென்றும் அவர்களுக்குக் கிடைக்கும். இது உம்முடைய இரட்சகரின் திரும்பப் பெற முடியாத வாக்குறுதியாகும்.

17. **கடவுள்**–வுடன் அவர்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்களுடன் சேர்த்து, அவர்களை அவர் அழைக்கும் அந்நாளில், அவர் கூறுவார், "என்னுடைய இந்த சேவகர்களை நீங்கள் வழிகெடுத்தீர்களா, அல்லது அவர்கள் தாங்களாகவே வழிதவறிச் சென்றனரா ?"

18. அவர்கள் கூறுவர், "நீரே துதிப்பிற்குரியவர், உம்முடன் எந்த எஜமானர்களையும் அமைத்துக் கொள்வதென்பது எங்களுக்குச் ஏற்புடையதாக இருந்ததில்லை. ஆனால் அவர்களை, அவர்களுடைய பெற்றோர்களுடன் சேர்ந்து மகிழ நீர் அனுமதித்தீர். அதன் விளைவாக, அவர்கள் தூதுச்செய்தியைப் புறக்கணித்தனர், மேலும் இவ்விதமாகத் தீய மக்களானார்கள்."

19. நீங்கள் அவர்களுக்குக் கொடுத்த தூதுச் செய்தியை அவர்கள் நம்பமறுத்தனர், மேலும் அதன் விளைவாக, அவர்கள் உள்ளாகியிருக்கும் தண்டனையிலிருந்து உங்களால் அவர்களைக் காக்க இயலாது, அன்றியும் எந்த வகையிலும் அவர்களுக்கு நீங்கள் உதவி செய்யவும் முடியாது. உங்களில் தீமை செய்கின்ற எவராயினும், அவரை நாம் கடுமையான தண்டனையிலிட்டு விடுவோம்.

*தூதர்களும் மனிதர்களே*

20. உணவுண்ணாத, மேலும் அங்காடிகளில் நடந்து போகாத எந்தத் தூதர்களையும் உமக்கு முன்னர் நாம் அனுப்பவில்லை. இவ்விதமாக நாம் உங்களை ஒருவரையொருவர் மூலம் சோதனை செய்கின்றோம்; நீங்கள் உறுதியோடு சகித்துக் கொண்டிருப்பீர்களா ? உம்முடைய இரட்சகர் பார்ப்பவர்.

21. நம்மைச் சந்திப்பதை எதிர்பார்க்காதிருப்பவர்கள் கூறினர், "வானவர்கள் மட்டும் நம்மிடம் இறங்கி வரக்கூடுமானால், அல்லது நாம் நம்முடைய இரட்சகரைப் பார்க்க முடிந்தால் *(அப்போது நாங்கள் நம்பிக்கை கொள்வோம்)*!" உண்மையில், அவர்கள் மிகப் பெரும் ஆணவம் புரிந்து விட்டனர், மேலும் மிகப் பெரியதோர் இறைநிந்தனையைச் செய்து விட்டனர்.

22. வானவர்களை அவர்கள் காணும் அந்நாளில், குற்றவாளிகளுக்கு அது நற்செய்தியாக இருக்காது; அவர்கள் கூறுவர், "இப்பொழுது, நாம் திரும்பிச் செல்ல முடியாதவாறு அடைக்கப்பட்டு விட்டோம்."

23. அவர்கள் செய்த காரியங்கள் அனைத்தையும் நாம் நோட்டமிடுவோம், மேலும் அவற்றை செல்லாததாகவும் பயனற்றதாகவும் ஆக்கி விடுவோம்.

24. அந்நாளில் சுவர்க்கவாசிகள் மிகவும் மேலானவர்கள் ஆவார்கள்; அவர்கள் நல்ல செய்திகளைக் கேட்பார்கள்.

25. மேகங்களின் பாளங்களாக, வானம் உடைந்து துண்டாகி விடும், மேலும் எண்ணிலடங்காமல் வானவர்கள் இறங்கி வருவார்கள்.

26. ஆட்சியதிகாரம் அனைத்தும் அந்நாளில் மிக்க அருளாளருக்கே உரியதாகும். நம்பமறுப்பவர்களுக்கோ, அது ஒரு கடினமான நாளாக இருக்கும்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

27. வரம்புமீறுபவன் *(தாங்கொண்ணாத் துயரத்தால்)* தன் கரங்களைக் கடித்துக் கொள்ளும் அந்நாள் வரும், மேலும் கூறுவான், "ஐயோ, தூதருடன் அவ் வழியை நானும் பின்பற்றியிருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

28. "ஐயோ, எனக்குக் கேடே, ஒரு நண்பனாக அந்த மனிதனை நான் எடுத்துக் கொள்ளாதிருந்திருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

29. "தூதுச் செய்தி என்னிடம் வந்து விட்ட பின்னர், அதனை விட்டும் என்னை அவன் திருப்பி விட் டான். உண்மையில், சாத்தான் தன்னுடைய மனிதப் பலி களைக் கைவிட்டு விடுகின்றான்."

30. தூதர்* கூறினார், "என் இரட்சகரே, என் சமூகத் தார் இந்தக் குர்ஆனைக் கைவிட்டு விட்டார்கள்."

31. ஒவ்வொரு நபிக்கும் எதிராக குற்றவாளிகளிலி ருந்து விரோதிகளையும் நாம் அமைக்கின்றோம். ஒரு வழிகாட்டியாகவும், ஓர் எஜமானராகவும் உம்மு டைய இரட்சகர் போதுமானவர்.

32. நம்பமறுப்பவர்கள் கூறினர், "ஏன் இந்தக் குர்ஆன் மொத்தமும் ஒரே தடவையில் அவர் மூலம் வர வில்லை ?" உமது நினைவில் அதனை நிறுத்துவதற் காக, அதனை நாம் உமக்குப் படிப்படியாக விடுவித் தோம். குறிப்பிட்டதொரு வரிசைக் கிரமத்தில் அதனை நாம் ஓதிக்காட்டியுள்ளோம்.

*கடவுளின் சான்றுகள் மூழ்கடிப்பவை*

33. எவ்விதமான வாதத்துடன் அவர்கள் வந்தாலும், உமக்கு நாம் சத்தியத்தையும், மேலானதொரு புரிந்து கொள்ளுதலையும் வழங்குகின்றோம்.

34. வலுக்கட்டாயமாக நரகத்திற்கு வரவழைக்கப்படு பவர்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர்; அவர்கள்தான் சரியான பாதையிலிருந்து வெகு தொலைவில் இருப்பவர்கள்.

35. நாம் மோஸஸுக்கு வேதத்தைக் கொடுத்தோம், மேலும் அவருக்கு உதவியாளராக இருப்பதற்காக அவருடைய சகோதரர் ஆரோனை நியமித்தோம்.

36. நாம் கூறினோம், "நமது வெளிப்பாடுகளை ஏற்க மறுத்த மக்களிடம், நீங்கள் இருவரும் செல்லுங்கள்," மேலும் அதன் பின்னர், நிராகரித்தவர்களை நாம் முற்றிலுமாக அழித்து விட்டோம்.

37. அது போலவே, நோவாவின் சமூகத்தார் தூதர்களை நம்பமறுத்தபோது, அவர்களை நாம் மூழ்கடித்தோம், மேலும் அவர்களை மக்களுக்கான ஓர் அத்தாட்சி யாகவும் நாம் அமைத்தோம். வரம்புமீறுபவர்களுக்கு வலிநிறைந்ததொரு தண்டனையை நாம் தயாரித் துள்ளோம்.

38. அத்துடன் ஆத், தமூது, அல்–ரஸ் வாசிகள், மேலும் அவர்களுக்கிடையில் ஏராளமான தலைமுறையினர்.

39. இந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும், அவர்களை நாம் அழித்திடும் முன்னர், போதுமான உதாரணங் களை நாம் சேர்ப்பித்தோம்.

40. துன்பகரமானதொரு பொழிவினைக் கொண்டு பொழியப்பட்ட *(ஸாடம்)* சமுதாயத்தைக் கடந்து அவர்கள் கடந்துள்ளனர். அவர்கள் அதனைப் பார்க்க வில்லையா ? நிதர்சனமாவது, உயிர்த்தெழுப்புதல் மீது அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ள வில்லை.

*தூதர்கள் கேலி செய்யப்பட்டனர்*

41. அவர்கள் உம்மைக் கண்ட போதெல்லாம், அவர்கள் உம்மை எப்பொழுதும் கேலி செய்தனர்: "ஒரு தூதராக இருப்பதற்குக் **கடவுள்**–ஆல் தேர்ந்தெடுக்கப்பட்ட வர் இவர்தானா ?

42. "நம்முடைய தெய்வங்களிலிருந்து அவர் கிட்டத்தட்ட நம்மைத் திருப்பி விட்டார், நாம் அவற்றுடன் உறுதி யோடு சகித்துக் கொண்டு இருந்திராவிட்டால்." தண் டனையை அவர்கள் காணும்போது, பாதையிலிருந்து மெய்யாகவே வழிதவறியவர்கள் யார் என்பதை அவர் கள் நிச்சயம் கண்டு கொள்வார்கள்.

*அகந்தை ஒரு தெய்வமாக*

43. தன் சொந்த அகந்தையையே தெய்வமாகக் கொண்ட ஒருவனை நீர் பார்த்தீரா ? அவனுடைய வழக்குரைஞராக நீர் இருப்பீரா ?

**25:27–30 இந்த வசனம் "ரஷாத் கலீஃபா" என்று அவருடைய பெயரைக் கணித அடிப்படையில் குர்ஆனில் குறியீடு செய்யப்பட்டுள்ள கடவுளின் உடன்படிக்கைத் தூதரையும் குறிக்கின்றது. "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (505), தொடர்ந்து "கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725) தொடர்ந்து, இந்தச் சூராவின் எண்ணையும் (25), தொடர்ந்து வசனங்கள் 27, 28, 29 மற்றும் 30 ஆகியவற்றையும் நாம் எழுதினால், இறுதியில் கிடைக்கும் எண் (505725527282930) 19ன் ஒரு பெருக்குத் தொகையாகும் (விபரங்கட்கு பின் இணைப்பு 2 மற்றும் 26ஐப் பார்க்கவும்). 25:30ல் உள்ளபடி தீர்ப்பு நாளின்போது முஹம்மத் நபியும் இத்தகையதொரு வாக்குமூலத்தை அளிப்பார்.*

44. அவர்களில் அதிகமானோர் செவியேற்கின்றனர், அல்லது புரிந்து கொள்கின்றனர் என்று நீர் நினைக்கின்றீரா ? அவர்கள் மிருகங்களுக்கு ஒப்பானவர்களே; அல்ல, அவர்கள் அதைவிடவும் மோசமானவர்கள்.

*முடிவுறா அருட்கொடைகள் கடவுளிடமிருந்து*

45. உம் இரட்சகர் எவ்வாறு நிழலை வடிவமைத்துள்ளார் என்பதை நீர் பார்க்கவில்லையா ? அவர் நாடியிருந்தால், அதனை அவர் நிலையானதாக ஆக்கியிருக்க முடியும், அப்போது நாம் அதற்கேற்றவாறு சூரியனை வடிவமைத்திருப்போம்.

46. ஆனால் அதனை மெதுவாக நகரும்படி நாம் வடிவமைத்தோம்.

47. அவர்தான் ஒரு மறைப்பாகவும், நீங்கள் உறங்கி ஓய்வெடுப்பதற்காகவும் இரவை வடிவமைத்தவர். மேலும் பகலை ஓர் உயிர்த்தெழுப்புதலாக அவர் ஆக்கினார்.

48. அவர்தான் தன்னுடைய கருணையின் நற்சகுனங்களுடன் காற்றுகளை அனுப்புபவர், மேலும் விண்ணிலிருந்து தூய்மையான தண்ணீரை நாம் இறக்கி அனுப்புகின்றோம்.

49. அதனைக் கொண்டு, இறந்த நிலங்களை நாம் உயிர்ப்பிக்கின்றோம், மேலும் நம் படைப்புக்களுக்கு –எண்ணற்ற விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும்– பானம் வழங்குகின்றோம்.

50. அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கிடையில் மிகச் சரியாக அதனை நாம் பங்கிட்டோம். ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பமறுப்பதை வலியுறுத்துகின்றனர்.

51. நாம் நாடியிருந்தால், ஒவ்வோர் ஊருக்கும் ஓர் எச்சரிப்பவரை அனுப்பியிருக்க நம்மால் முடியும்.

52. எனவே, நம்பமறுப்பவர்களுக்குக் கீழ்ப்படியாதீர், மேலும் இதனைக்கொண்டு அவர்களுக்கெதிராகப் பாடுபடுவீராக, ஒரு மிகப்பெரும் பாடு.

53. அவர்தான் இரு கடல்களையும் கலப்பவர்; ஒன்று புத்துணர்வூட்டுவதாகவும் நாவிற்கினியதாகவும் உள்ளது, அதே சமயம் மற்றொன்று உப்பாகவும் அருந்த முடியாததாகவும் உள்ளது. மேலும் அவர் வலிமையான, மீறமுடியாததொரு தடை *(ஆவியாதல்)* கொண்டு அவற்றைப் பிரித்தார்.

54. அவர்தான் தண்ணீரிலிருந்து ஒரு மனிதனைப் படைத்து, பின்னர் திருமணம் மற்றும் கலவியின் மூலம் அவனை இனப்பெருக்கம் செய்யச் செய்தார். உம் இரட்சகர் சர்வ சக்தியுடையவர்.

55. ஆயினும், அவர்களுக்கு நன்மை செய்யவோ, அன்றி அவர்களுக்குத் தீமை செய்யவோ இயலாத போலித் தெய்வங்களை அப்போதும் அவர்கள் **கடவுள்**–வுடன் அமைத்துக் கொள்கின்றனர். உண்மையில், நம்பமறுப்பவன் தன்னுடைய இரட்சகரின் ஒரு விரோதியாவான்.

56. நற்செய்தியைச் சேர்ப்பிக்கின்ற ஒருவராகவும், அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராகவும் *(ரஷாத்)* உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.*

57. கூறும், "நான் உங்களிடம் பணம் எதுவும் கேட்கவில்லை. நான் முனைவதெல்லாம் உங்கள் இரட்சகரிடம் செல்லும் சரியான பாதையைக் கண்டு கொள்ள உங்களுக்கு உதவி செய்வதுதான், இதனை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதாக இருந்தால்."

*நபிமார்களும் மகான்களும்*
*இறந்து விட்டவர்களே*

58. உயிரோடிருக்கும் ஒருவரிடம் நீர் உமது பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் – ஒருபோதும் இறவாத ஒருவர் – மேலும் அவரைப் புகழவும் அவரை துதிக்கவும் செய்வீராக. தன்னுடைய படைப்பினங்களின் பாவங்களை அவர் முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

59. அவர்தான் வானங்களையும் பூமியையும், மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும், ஆறு நாட்களில் படைத்தவர், பின்னர் அனைத்து அதிகாரங்களையும் ஏற்றுக்கொண்டார். மிக்க அருளாளர்; அறிவில் நன்கு ஊன்றியவர்களிடம் அவரைப் பற்றிக் கேட்பீராக.

*நன்றிகெட்ட மானிடன்*

60. "மிக்க அருளாளரின் முன்னர் சிரம் பணிந்து விழுங்கள்," என்று அவர்களிடம் கூறப்படும்போது, அவர்கள் கூறுகின்றனர், "மிக்க அருளாளர் என்றால் என்ன ? நீர் ஆதரிப்பவற்றுக்கு முன்னால் எல்லாம் நாங்கள் சிரம் பணிய வேண்டுமா ?" இவ்விதமாக, அது அவர்களுடைய வெறுப்பைத்தான் அதிகரிக்கின்றது.

61. விண்ணில் நட்சத்திரக் கூட்டங்களை அமைத்து, மேலும் அதில் ஒரு விளக்கையும், பிரகாசிக்கும் ஒரு நிலவையும் அமைத்த அந்த ஒருவர் பாக்கியம் மிக்கவர்.

62. அவர்தான் மாறி மாறி வருமாறு இரவையும் பகலையும் வடிவமைத்தவர்: கவனத்தில் எடுத்துக் கொள்ள, அல்லது நன்றியுடையவராக இருக்க விரும்புவோருக்குப் போதுமானதொரு சான்று.

**25:56 "ரஷாத் கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (1230), சூரா மற்றும் வசன எண்களை (25+56) நாம் கூட்டினால் கிடைக்கப் பெறும் கூட்டுத் தொகை 1230+25+56 = 1311 = 19x69.*

*நன்னெறியாளர்களின் பண்புகள்*

63. பூமியில் சாந்தமாக நடமாடுபவர்களே மிக்க அருளாளரை வழிபடுபவர்கள் ஆவர், மேலும் அறியாதவர்கள் அவர்களிடம் பேசும்போது, அவர்கள் சாந்தியை மட்டுமே உதிர்ப்பார்கள்.

64. இரவின் தனிமையில், அவர்கள் தங்களுடைய இரட்சகரைத் தியானிப்பார்கள், மேலும் சிரம் பணிந்து விழுவார்கள்.

65. மேலும் அவர்கள் கூறுவர், "எங்கள் இரட்சகரே, நரகத்தின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பீராக; அதன் தண்டனை படுபயங்கரமானதாகும்.

66. "மிக மோசமான தங்குமிடம் அதுவேயாகும்; மிக மோசமான விதி."

67. அவர்கள் கொடுக்கும்பொழுது ஊதாரித்தனமாகவோ அன்றி கஞ்சத்தனமாகவோ இருக்க மாட்டார்கள்; அவர்கள் நடுத்தரமாகக் கொடுப்பார்கள்.

68. **கடவுள்**–வுடன் வேறு எந்தத் தெய்வத்தையும் அவர்கள் ஒருபோதும் இறைஞ்ச மாட்டார்கள், அன்றியும் எவர் ஒருவரையும் அவர்கள் கொலை செய்ய மாட்டார்கள் – ஏனெனில் **கடவுள்** உயிரினைப் புனிதமானதாக ஆக்கியிருக்கின்றார் – நீதியின் போக்கிலேயே தவிர. அன்றி அவர்கள் விபசாரமும் செய்ய மாட்டார்கள். இந்தக் குற்றங்களைச் செய்பவர்கள் அதற்குரிய விலையைக் கொடுத்தாக வேண்டும்.

69. உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர்களுக்குரிய தண்டனை இருமடங்காக்கப்படும், மேலும் இழிவு படுத்தப்பட்டவர்களாக அதிலே அவர்கள் வசிப்பார்கள்.

70. வருந்தி, நம்பிக்கை கொண்டு, மேலும் நன்னெறியான வாழ்வு நடத்துபவர்கள் விதிவிலக்களிப்படுகின்றனர். அவர்களுடைய பாவங்களைக் **கடவுள்** நன்மையின் வரவுகளாக மாற்றிவிடுவார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

71. எவர்கள் வருந்தி, மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றனரோ, அவர்களைக் **கடவுள்** மீட்டுக்கொள்கின்றார்; ஒரு முழுமையான மீட்சி.

*நன்னெறியாளர்களின் கூடுதல் பண்புகள்*

72. அவர்கள் பொய்சாட்சி பகரமாட்டார்கள். வீண் பேச்சினை அவர்கள் எதிர்கொள்ளும் போது, அவர்கள் அதனை அலட்சியம் செய்து விடுவார்கள்.

73. அவர்களுடைய இரட்சகரின் வெளிப்பாடுகளைப் கொண்டு நினைவூட்டப்படும் போது, அவற்றின் பால் அவர்கள் செவிடர்களையும் குருடர்களையும் போன்று ஒருபோதும் அவர்கள் நடந்து கொள்ள மாட்டார்கள்.

74. மேலும் அவர்கள் கூறுவர், "எங்கள் இரட்சகரே, எங்களுடைய வாழ்க்கைத் துணைகளும் பிள்ளைகளும் எங்களுடைய இன்பத்திற்கானதொரு மூலாதாரமாக இருக்கச் செய்வீராக, மேலும் நன்னெறியாளர்களின் முன்னணியில் எங்களை வைப்பீராக."

75. தங்களுடைய உறுதிப்பாட்டுக்குப் பகரமாக சுவனத்தை அடைபவர்கள் இவர்கள்தான்; இன்பகரமான வாழ்த்துகளுடனும் சாந்தியுடனும் அங்கே அவர்கள் வரவேற்கப்படுவார்கள்.

76. அங்கே நிரந்தரமாக அவர்கள் தங்கியிருப்பார்கள்; என்ன ஓர் அழகிய விதி; என்ன ஓர் அழகிய தங்குமிடம்.

77. கூறுவீராக, "உங்களுடைய வழிபாட்டின் மூலம் மட்டுமே என் இரட்சகரிடம் நீங்கள் நன்மதிப்பை அடைகின்றீர்கள். ஆனால் நீங்கள் நம்பமறுத்து விட்டால், தவிர்த்து விட முடியாத பின்விளைவுகளுக்கு நீங்கள் உள்ளாகின்றீர்கள்."

****

# சூரா 26: கவிஞர்கள் (அல்–ஷுஅரா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. த. ச. ம.*

2. *(எழுத்துக்களாகிய)* இவை தெளிவுபடுத்துகின்ற இவ்வேதத்தின் சான்றுகளாக அமைகின்றன.

3. அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லாததால் உம்மையே நீர் பழித்துக் கொள்ளக்கூடும்.

**26:1 இதற்கு முன்னர் மர்மமாக இருந்த இந்த எழுத்துக்களின் தாத்பர்யத்திற்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

4. நாம் நாடினால், அவர்களுடைய கழுத்துகளை குனியும்படி அழுத்துகின்றதோர் அத்தாட்சியை விண்ணிலிருந்து நாம் அனுப்பியிருக்க முடியும்.

*குர்ஆனின்*
*கணிதக் குறியீடு*

5. மிக்க அருளாளரிடமிருந்து, புதிதானதொரு நினைவூட்டல் அவர்களுக்கு வரும்போதெல்லாம் அவர்கள் வெறுப்பினால் திரும்பிச் சென்று விடுகின்றனர்.

6. அவர்கள் நம்பமறுத்த காரணத்தால், அவர்களுடைய கவனமின்மையின் பின்விளைவுகளுக்கு அவர்கள் உள்ளானார்கள்.

7. பூமியையும், எத்தனையோ வகையான அழகிய தாவரங்களை நாம் அதன் மீது வளர்த்திருப்பதையும் அவர்கள் பார்க்கவில்லையா?

8. இது அவர்களுக்குப் போதுமானதொரு சான்றாகத் திகழவேண்டும், ஆனால் அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்.

9. மிகவும் நிச்சயமாக, உம்முடைய இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*மோஸஸ்*

10. மோஸஸை உம்முடைய இரட்சகர் அழைத்ததை நினைவு கூர்வீராக: "வரம்புமீறுகின்ற மக்களிடம் செல்வீராக.

11. "ஃபேரோவின் மக்களிடம்; ஒருவேளை அவர்கள் சீர்திருந்தக் கூடும்."

12. அவர் கூறினார், "என் இரட்சகரே, அவர்கள் என்னை நம்பமறுத்து விடுவார்களே என்று நான் அஞ்சுகின்றேன்.

13. "நான் என் சுபாவத்தை இழந்துவிடக்கூடும். எனது நாவு பின்னிக்கொள்கின்றது; என்னுடைய சகோதரர் ஆரோனை வரவழைப்பீராக.

14. "அத்துடன், அவர்கள் என்னைத் தப்பியோடிய ஒருவன் என்றும் கருதுகின்றனர்; அவர்கள் என்னைக் கொன்று விடக்கூடும் என்று நான் அஞ்சுகின்றேன்."

15. அவர் கூறினார், "அல்ல, *(அவர்கள் செய்ய மாட்டார்கள்).* என்னுடைய சான்றுகளுடன் செல்வீராக. கவனத்துடன் செவியேற்றுக் கொண்டு, நாம் உம்முடன் இருப்போம்.

16. "ஃபேரோவிடம் சென்று சொல்லுங்கள், 'நாங்கள் பிரபஞ்சத்தின் இரட்சகருடைய தூதர்களாவோம்.

17. " 'இஸ்ரேலின் சந்ததியினரை விட்டு விடு' "

18. அவன் கூறினான், "உம்மை நாம் பாலகப் பருவம் முதல் வளர்க்கவும், நீர் எங்களுடன் ஆண்டுகள் பல கழிக்கவும் இல்லையா?

19. "பின்னர் நீர் செய்த அந்தக் குற்றத்தை நீர் செய்தீர், மேலும் நன்றி மறந்தவராக நீர் இருந்தீர்."

20. அவர் கூறினார், "ஆம், நான் வழிதவறியவனாக இருந்த போது அதனை நான் செய்தேன்.

21. "பின்னர் உன்னை நான் அஞ்சியபோது, நான் தப்பியோடினேன், மேலும் என் இரட்சகர் ஞானத்தைக் கொண்டு எனக்குக் கொடையளித்து தூதர்களில் ஒருவனாகவும் என்னை ஆக்கினார்.

22. "இஸ்ரேலின் சந்ததியினரை நீ அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நிலையில், எனக்கோர் உபகாரம் செய்து விட்டதாக நீ பெருமை பேசிக் கொள்கின்றாய்!"

23. ஃபேரோ கூறினான், "பிரபஞ்சத்தின் இரட்சகர் என்றால் என்ன?"

24. அவர் கூறினார், " வானங்கள் மற்றும் பூமி, இன்னும் அவற்றுக்கிடையிலுள்ள ஒவ்வொன்றுக்கும் இரட்சகர். இது குறித்து நீ உறுதியோடிருக்க வேண்டும்."

25. தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் அவன் கூறினான், "இதனை நீங்கள் செவியேற்றீர்களா?"

26. அவர் கூறினார், "உங்களுடைய இரட்சகர் மற்றும் உங்கள் மூதாதையர்களுடைய இரட்சகர்."

27. அவன் கூறினான், "உங்களிடம் அனுப்பப்பட்டுள்ள உங்களுடைய தூதர் பித்துப்பிடித்தவராக உள்ளார்."

28. அவர் கூறினார், "கிழக்கு மற்றும் மேற்கு, மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றுக்கும் இரட்சகர், நீ புரிந்து கொண்டால்."

29. அவன் கூறினான், "என்னை விடுத்து வேறு எந்தத் தெய்வத்தையும் நீர் ஏற்றுக்கொண்டால், நான் உம்மை சிறையில் தள்ளி விடுவேன்."

30. அவர் கூறினார், "ஆழ்ந்த ஏதேனும் ஒன்றை நான் உனக்குக் காட்டினால்?"

31. அவன் கூறினான், "நீர் உண்மையானவராக இருந்தால், அப்போது அதனைக் கொண்டு வாரும்."

32. பின்னர் அவர் தனது தடியை வீசினார், உடனே அது பெரியதொரு பாம்பாக ஆனது.

33. மேலும் அவர் தனது கரத்தை வெளியில் எடுத்தார், அது பார்ப்பவர்களுக்கு வெண்மையாக இருந்தது.

34. தன்னைச் சுற்றி இருந்த பிரதானிகளிடம் அவன் கூறினான், "இவர் அனுபவமிக்கதோர் மந்திரவாதி.

35. "தனது மந்திரத்தால், உங்களுடைய நாட்டை விட்டு உங்களை வெளியேற்ற அவர் விரும்புகின்றார். உங் களுடைய ஆலோசனை என்ன ?"

36. அவர்கள் கூறினர், "அவருக்கும் அவருடைய சகோ தரருக்கும் அவகாசம் அளித்து விட்டு, ஒவ்வொரு நகரத்திற்கும் அழைப்பவர்களை அனுப்புவீராக.

37. "அனுபவமிக்க மந்திரவாதி ஒவ்வொருவனையும் அவர்கள் வரவழைக்கட்டும்."

38. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில், நிர்ணயிக்கப்பட்ட நாள் அன்று, மந்திரவாதிகள் ஒன்று திரட்டப்பட்டி ருந்தனர்.

39. அந்த மக்களிடம் கூறப்பட்டது: "நீங்கள் அனை வரும் ஒன்றாக வாருங்கள்; நாம் ஒருங்கிணைந்து இங்கே ஒன்றுதிரள்வோம்.

40. "மந்திரவாதிகள் வெற்றி பெற்றுவிட்டால், நாம் அவர் களைப் பின்பற்றுபவர்களாக இருந்து கொள்ளலாம்."

41. மந்திரவாதிகள் வந்தபோது, அவர்கள் ஃபேரோவிடம் கூறினர், "நாங்கள் வெற்றிபெற்று விட்டால், எங் களுக்குச் சன்மானம் வழங்கப்படும் அல்லவா ?"

42. அவன் கூறினான், "ஆம் நிச்சயமாக; நீங்கள் எனக்கு நெருக்கமானவர்களாகவும் இருப்பீர்கள்."

43. மோஸஸ் அவர்களிடம் கூறினார் "நீங்கள் வீசப் போ வதை வீசுங்கள்."

44. அவர்கள் தங்களுடைய கயிறுகளையும் கோல் களையும் வீசினர், மேலும் கூறினர், "ஃபேரோவின் மாட்சிமை மீது ஆணையாக, நாம்தாம் வெற்றி பெற்றவர்களாக இருப்போம்."

45. மோஸஸ் தனது கோலை வீசினார், உடனே அது அவர்கள் உருவாக்கியவற்றை விழுங்கி விட்டது.

*நிபுணர்கள் சத்தியத்தைக் காண்கின்றனர்*

46. மந்திரவாதிகள் சிரம் பணிந்து விழுந்தனர்.

47. அவர்கள் கூறினர், "பிரபஞ்சத்தின் இரட்சகர் மீது நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம்.

48. "மோஸஸ் மற்றும் ஆரோனின் இரட்சகர்"

49. அவன் கூறினான், "நான் உங்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு முன்னர் அவருடன் நீங்கள் நம்பிக் கை கொண்டு விட்டீர்களா ? உங்களுக்கு மந்திரத் தைக் கற்றுக்கொடுத்த, உங்களுடைய குருவாகத் தான் அவர் இருக்க வேண்டும். நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள், நான் உங்களுடைய மாறு கைகள் மற்றும் மாறுகால்களை வெட்டி விடுவேன். உங்கள் அனைவரையும் நான் சிலுவையில் அறைந்து விடுவேன்."

50. அவர்கள் கூறினர், " இது எங்களுடைய தீர்மானத்தை மாற்றிவிடாது; எங்கள் இரட்சகரிடமே நாங்கள் திரும்பிச் செல்வோம்.

51. "குறிப்பிடத்தக்கவாறு, நாங்கள் முதல் நம்பிக்கை யாளர்களாக உள்ளோம் என்பதால், எங்கள் இரட்ச கர் எங்களுடைய பாவங்களை எங்களுக்கு மன்னிப் பார் என நாங்கள் நம்பி எதிர்பார்க்கின்றோம்."

52. நாம் மோஸஸுக்கு உள்ளுணர்வளித்தோம்: "என் ஊழியர்களுடன் பயணிப்பீராக; நீங்கள் பின் தொடரப் படுவீர்கள்."

53. ஃபேரோ அழைப்பாளர்களை நகரங்களுக்கு அனுப் பினான்.

54. " இது ஒரு சிறு கூட்டமே, *(எனப் பிரகடனித்தவாறு).*

55. " இப்போது அவர்கள் நம்மை எதிர்க்கின்றனர்.

56. "நாம் அனைவரும் அவர்களைப் பற்றி எச்சரிக்கை யாக இருந்து கொள்வோம்."

*தவிர்த்து விட முடியாத அந்த தண்டனை*

57. பின் விளைவாக, நாம் அவர்களிடமிருந்து தோட்டங் களையும் ஊற்றுக்களையும் பறித்துக் கொண்டோம்.

58. அத்துடன் பொக்கிஷங்களையும் கண்ணியமான தொரு அந்தஸ்தையும்.

59. பின்னர் இஸ்ரேலின் சந்ததியினருக்கு ஒரு வாரிசுரி மையாக அதனை நாம் ஆக்கினோம்.

60. அவர்கள் கிழக்கு நோக்கி அவர்களைத் தொடர்ந்த னர்.

61. இரு கூட்டத்தாரும் ஒருவர் மற்றவரைப் பார்த்த போது, மோஸஸின் சமூகத்தினர் கூறினர், "நாம் பிடி பட்டு விடுவோம்."

62. அவர் கூறினார், "வாய்ப்பே இல்லை. என் இரட்சகர் என்னுடன் இருக்கின்றார்; அவர் என்னை வழி நடத்து வார்."

63. பின்னர் மோஸஸுக்கு நாம் உள்ளுணர்வளித்தோம்: "உமது தடியைக் கொண்டு கடலினை அடிப்பீராக," உடனே அது பிரிந்தது. ஒவ்வொரு பகுதியும் மிகப் பெரியதொரு மலையைப் போன்று இருந்தது.

64. பின்னர் அவர்கள் அனைவரையும் நாம் கரைசேர்த் தோம்.

65. இவ்விதமாக, மோஸஸையும் அவருடன் இருந்த அனைவரையும் நாம் காப்பாற்றினோம்.

66. மற்றவர்களை நாம் மூழ்கடித்தோம்.

67. போதுமானதொரு சான்றாக இது திகழ வேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர் கள் அல்லர்.

68. மிகவும் நிச்சயமாக, உம் இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*ஆப்ரஹாம்*

69. ஆப்ரஹாமின் வரலாறுதனை அவர்களுக்கு எடுத்துக் கூறுவீராக.

70. அவர் தன் தந்தையிடமும் தன் சமூகத்தாரிடமும் கூறினார், "நீங்கள் வழிபடுகின்ற இவை என்ன ?"

71. அவர்கள் கூறினர், "நாங்கள் சிலைகளை வழிபடு கின்றோம்; அவற்றுக்கு நாங்கள் முழுமையாக அர்ப் பணித்தவர்களாக உள்ளோம்."

72. அவர் கூறினார், "நீங்கள் இறைஞ்சும் போது உங்க ளைச் செவியேற்க அவற்றால் இயலுமா ?

73. "உங்களுக்குப் பயன்தரவோ, அல்லது உங்களுக்குத் தீங்கிழைக்கவோ அவற்றால் இயலுமா ?"

74. அவர்கள் கூறினர், "இல்லை; ஆனால் எங்கள் பெற் றோர்கள் இதனைச் செய்ய நாங்கள் கண்டோம்."

75. அவர் கூறினார், "நீங்கள் வழிபடுகின்ற இந்தச் சிலை களை நீங்கள் பார்த்தீர்களா.

76. "நீங்களும் உங்கள் முன்னோர்களும்.

77. "நான் அவற்றுக்கு எதிரானவன், ஏனெனில் நான் பிர பஞ்சத்தின் இரட்சகருக்கு மட்டுமே அர்ப்பணித்துக் கொண்டவன் ஆவேன்.

78. "என்னைப் படைத்து, மேலும் எனக்கு வழிகாட்டிய அந்த ஒருவர்.

79. "எனக்கு உணவூட்டவும் எனக்கு நீர் புகட்டவும் செய் கின்ற அந்த ஒருவர்.

80. "மேலும் நான் நோயுறும் போது, அவர் என்னைக் குணப்படுத்துகின்றார்.

81. "என்னை மரணத்தில் ஆழ்த்தி, பின்னர் மீண்டும் எனக்கு உயிர் கொடுக்கின்ற அந்த ஒருவர்.

82. "தீர்ப்பு நாள் அன்று என் பாவங்களை மன்னிப்பார் என்று நம்பி எதிர்பார்க்கப்படுகின்ற அந்த ஒருவர்.

83. "என் இரட்சகரே, எனக்கு ஞானத்தை அருள்வீராக, மேலும் என்னை நன்னெறியாளர்களுடன் சேர்த்துக் கொள்வீராக.

84. "வருங்காலத் தலைமுறையினருக்கு நான் அமைக்கும் முன்மாதிரியை நல்லதான ஒன்றாக இருக்கச் செய் வீராக.

85. "ஆனந்தமயமான சுவனபதியின் வாரிசுகளில் ஒரு வனாக என்னை ஆக்குவீராக.

86. "மேலும் என் தந்தையை மன்னிப்பீராக, ஏனெனில் அவர் வழிதவறிச் சென்று விட்டார்.

87. "மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று என்னைக் கைவிட்டு விடாதிருப்பீராக."

88. பணமோ அன்றிப் பிள்ளைகளோ உதவ இயலாத நாள் அதுவாகும்.

89. தங்களுடைய முழு இதயத்துடன் **கடவுள்**–யிடம் வருபவர்கள் மட்டுமே *(காப்பாற்றப்படுவார்கள்).*

90. நன்னெறியாளர்களின் முன்னர் சுவனபதி கொண்டு வரப்படும்.

91. வழிதவறித் திரிந்தவர்களுக்காக நரகம் அமைக்கப் படும்.

*அவர்கள் தங்களுடைய போலித்*
*தெய்வங்களைக் கைவிட்டு விடுவார்கள்*

92. அவர்களிடம் கேட்கப்படும், "நீங்கள் வழிபட்டுக் கொண்டிருந்த போலித் தெய்வங்கள் எங்கே

93. "**கடவுள்**–வுடன் ? அவர்களால் இப்போது உங்களுக்கு உதவ முடியுமா ? அவர்கள் தங்களுக்கேனும் உதவிக் கொள்ள முடியுமா ?"

94. வழிதவறித் திரிந்தவர்களுடன் சேர்த்து, அவர்கள் அதிலே தள்ளப்படுவார்கள்.

95. மேலும் சாத்தானின் படைவீரர்கள் அனைவரும்.

96. தங்களுக்குள் தர்க்கித்தவர்களாக அங்கே அவர்கள் கூறுவார்கள்,

97. "**கடவுள்** மீது ஆணையாக, நாம் வெகுதூரம் வழி தவறி இருந்தோம்.

98. "பிரபஞ்சத்தின் இரட்சகருடன் சமமாக எப்படி நாங் கள் உங்களை அமைத்திருக்கக் கூடும் ?

99. "எங்களைத் தவறாக வழிநடத்தியவர்கள் மிகவும் தீயவர்களாகவே இருந்தனர்.

100. "இப்போது எங்களுக்குப் பரிந்துரையாளர்கள் இல்லை.

101. "அன்றி ஒரே ஒரு நெருங்கிய நண்பர் கூட.

102. "மற்றொரு வாய்ப்பை மட்டும் நாங்கள் பெற முடிந் தால், அப்போது நாங்கள் நம்பிக்கை கொள்வோம்."

103. நல்லதொரு படிப்பினையாக இது திகழவேண்டும். ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்.

104. உம்முடைய இரட்சகர் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*நோவா*

105. நோவாவின் சமூகத்தார் தூதர்களை நம்பமறுத்தனர்.

106. அவர்களுடைய சகோதரர் நோவா அவர்களிடம் கூறினார், "நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்க மாட்டீர்களா ?

107. "நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்.

108. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்திசெலுத்தவும் எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

109. "உங்களிடம் நான் எந்தக் கூலியும் கேட்கவில்லை. எனது கூலி பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்தே வருகின்றது.

110. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும் எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்."

111. அவர்கள் கூறினர், "எங்களுக்கிடையில் மிகவும் மோசமானவர்கள் உம்மைப் பின்பற்றிக்கொண்டு இருக்கும்போது, நாங்கள் எப்படி உம்முடன் நம்பிக்கை கொள்ள முடியும் ?"

112. அவர் கூறினார், "அவர்கள் என்ன செய்தார்கள் என நான் எப்படி அறிவேன் ?

113. "அவர்களுடைய தீர்ப்பு என் இரட்சகரிடம் மட்டுமே உள்ளது, உங்களால் உணர முடிந்தால்.

114. "நம்பிக்கையாளர்களை நான் ஒருபோதும் வெளியேற்றிவிட மாட்டேன்.

115. "நான் தெளிவுபடுத்துகின்ற ஓர் எச்சரிப்பவன் என்பதை விட அதிகம் எதுவுமில்லை."

116. அவர்கள் கூறினர், "நீர் விலகிக் கொள்ளவில்லையென்றால், நோவாவே, நீர் கல்லாலடித்துக் கொல்லப்படுவீர்."

117. அவர் கூறினார், "என் இரட்சகரே, என் சமூகத்தார் என்னை நம்பமறுத்து விட்டனர்.

118. "அவர்களுக்கெதிராக எனக்கு வெற்றியை வழங்குவீராக, மேலும் என்னையும் நம்பிக்கை கொண்ட என் குழுமத்தையும் காப்பீராக."

119. அவரையும் சுமை நிரம்பிய படகில் அவருடன் கூட இருந்தவர்களையும் நாம் கரை சேர்த்தோம்

120. பின்னர் மற்றவர்களை நாம் மூழ்கடித்தோம்.

121. இது ஒரு படிப்பினையாகத் திகழவேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

122. மிக நிச்சயமாக, உம்முடைய இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்

*ஹூத்*

123. ஆதுகள் தூதர்களை நம்பமறுத்தனர்.

124. அவர்களுடைய சகோதரர் ஹூத் அவர்களிடம் கூறினார், "நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்க மாட்டீர்களா ?

125. "நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்.

126. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

127. "நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை; எனது கூலி பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்தே வருகின்றது

128. "நீங்கள் வீண் பகட்டுக்காக ஒவ்வொரு குன்றின் மீதும் ஒரு மாளிகையை கட்டிக்கொள்கின்றீர்கள்.

129. "நீங்கள் நிரந்தரமாக நிலைத்திருக்கப் போவதைப் போல் கட்டடங்களை நீங்கள் அமைத்துக் கொள்கின்றீர்கள்.

130. "மேலும் நீங்கள் தாக்கும்போது, நீங்கள் ஈவிரக்கமின்றித் தாக்குகின்றீர்கள்.

131. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும் எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

132. "நீங்கள் அறிந்திருக்கும் அனைத்துப் பொருட்களையும் உங்களுக்கு வழங்கிய அந்த ஒருவரிடம் பக்தி செலுத்துங்கள்.

133. "அவர் உங்களுக்குக் கால்நடைகளையும் பிள்ளைகளையும் வழங்கினார்.

134. "மேலும் தோட்டங்களையும் ஊற்றுக்களையும்.

135. "அச்சுறுத்தும் ஒரு நாளின் தண்டனையை உங்களுக்கு நான் அஞ்சுகின்றேன்."

136. அவர்கள் கூறினர், "நீர் உபதேசித்தாலும், அல்லது உபதேசிக்கவில்லையென்றாலும் அது சமமேயாகும்.

137. "அந்தத் துன்பம் எங்களுடைய முன்னோர்கள் வரை மட்டிலுமே இருந்தது.

138. "எப்பொழுதும் எங்களுக்கு எந்தத் தண்டனையும் ஏற்படாது."

139. இவ்விதமாக அவர்கள் நம்பமறுத்தனர், மேலும், அதன் பின்விளைவாக, அவர்களை நாம் அழித்தோம். இது ஒரு படிப்பினையாகத் திகழ வேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

140. மிக நிச்சயமாக, உம்முடைய இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*ஸாலிஹ்*

141. தமூதுகள் தூதர்களை நம்பமறுத்தனர்.

142. அவர்களுடைய சகோதரர் ஸாலிஹ் அவர்களிடம் கூறினார், " நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்க மாட்டீர்களா ?

143. "நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்.

144. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

145. "நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை; எனது கூலி பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து மட்டுமே வருகின்றது.

146. "பாதுகாப்பாக இந்த நிலையிலேயே, நிரந்தரமாக நீங்கள் விட்டு விடப்படுவீர்கள் என்று கருதிக் கொண்டீர்களா?

147. "நீங்கள் தோட்டங்களையும் ஊற்றுக்களையும் அனுப விக்கின்றீர்கள்.

148. "மேலும் பயிர்களையும், ருசியான பழங்களுடன் பேரீத்த மரங்களையும்.

149. "மலைகளிலிருந்து ஆடம்பரமான மாளிகைகளை நீங்கள் குடைந்து கொள்கின்றீர்கள்.

150. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

151. "வரம்புமீறுபவர்களுக்குக் கீழ்ப்படியாதீர்கள்.

152. "நல்ல காரியங்கள் அல்லாது, தீமைகள் புரிகின்றவர் களுக்கு."

153. அவர்கள் கூறினர், "நீர் சூன்யம் செய்யப்பட்டவராக இருக்கின்றீர்.

154. "நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதர் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. நீர் உண்மையானவராக இருந்தால், ஓர் அற்புதத்தைக் கொண்டு வாரும்."

155. அவர் கூறினார், "இதோ, அதற்கென நிர்ணயிக்கப் பட்ட ஒரு நாளில் மட்டும் அருந்துகின்ற ஓர் ஒட்டகம்; உங்களுடைய அருந்துதலுக்கெனக் குறிப்பிடப்பட்ட நாட்களிலிருந்து வேறுபட்ட ஒரு நாள்.

156. "அச்சுறுத்தும் ஒரு நாளின் தண்டனைக்கு நீங்கள் உள்ளாகி விடாதிருக்கும் பொருட்டு, எந்தத் தீங்கை யும் கொண்டு அதனைத் தீண்டாதீர்கள்."

157. அவர்கள் அதனை அறுத்துவிட்டனர், மேலும் இவ் விதமாக துக்கத்திற்கு உள்ளாகினர்.

158. தண்டனை அவர்களைச் சூழ்ந்து கொண்டது. இது ஒரு படிப்பினையாகத் திகழவேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

159. மிக நிச்சயமாக, உம்முடைய இரட்சகர்தான் எல் லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*லோத்*

160. லோத்தின் சமூகத்தார் தூதர்களை நம்பமறுத்தனர்.

161. அவர்களுடைய சகோதரர் லோத் அவர்களிடம் கூறினார், "நீங்கள் நன்னெறியாளர்களாக இருக்க மாட்டீர்களா?

162. "நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்.

163. "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

164. "நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை; எனது கூலி பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து மட்டுமே வருகின்றது.

165. "மக்கள் அனைவரிலும், ஆண்களுடனா நீங்கள் காமம் கொள்கின்றீர்கள்?

166. "உங்களுக்காக உங்களுடைய இரட்சகர் படைத்த மனைவியரை நீங்கள் கைவிட்டு விடுகின்றீர்கள்! உண்மையில், நீங்கள் வரம்புமீறுகின்ற மக்களாகவே இருக்கின்றீர்கள்."

167. அவர்கள் கூறினர், "நீர் விலகிக் கொள்ளவில்லை யென்றால், லோத்தே, நீர் நாடுகடத்தப்பட்டவராகி விடுவீர்."

168. அவர் கூறினார், "உங்களுடைய செய்கைகளுக்காக நான் மிகவும் வருந்துகின்றேன்."

169. "என் இரட்சகரே, என்னையும் என் குடும்பத்தாரையும் அவர்களுடைய செயல்களிலிருந்து காப்பாற்றுவீராக."

170. அவரையும் அவருடைய குடும்பம் முழுவதையும் நாம் காப்பாற்றினோம்.

171. ஆனால் அந்தக் கிழவியை அல்ல; அவள் அழிக்கப் பட்டவளாக இருந்தாள்.

172. பின்னர் நாம் மற்றவர்களை நிலைகுலைத்து விட்டோம்.

173. துன்பகரமானதொரு பொழிவு கொண்டு அவர்கள் மீது நாம் பொழிந்தோம்; எச்சரிக்கப்பட்டவர்களாக இருந் தவர்களுக்கு என்ன பயங்கரமானதொரு பொழிவு!

174. இது ஒரு படிப்பினையாகத் திகழவேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

175. மிக நிச்சயமாக உம்முடைய இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*ஷுஐப்*

176. வனங்களில் வசித்த மக்களும் தூதர்களை நம்ப மறுத்தனர்.

177. ஷுஐப் அவர்களிடம் கூறினார், "நீங்கள் நன்னெறி யாளர்களாக இருக்க மாட்டீர்களா?

178. "நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்.

179 "நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்தவும், எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

180. "நான் உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை; எனது கூலி பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து மட்டுமே வருகின்றது.

181. "நீங்கள் வணிகம் செய்யும்போது அளவையை முழுமையாகக் கொடுக்க வேண்டும்; ஏமாற்றி விடாதீர்கள்.

182. "நியாயமானதொரு தராசு கொண்டு நீங்கள் எடை போட வேண்டும்.

183. "மக்களுடைய உரிமைகளிலிருந்து அவர்களை நீங்கள் ஏமாற்றி விடாதீர்கள், மேலும் சீர்குலைக்கும் முகமாகப் பூமியில் சுற்றித்திரியாதீர்கள்.

184. "உங்களையும் முந்திய தலைமுறையினரையும் படைத்த அந்த ஒருவரிடம் பக்தியோடிருங்கள்."

185. அவர்கள் கூறினர், "நீர் சூன்யம் செய்யப்பட்டவராக இருக்கின்றீர்.

186. "நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதர் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. உண்மையில், நீர் ஒரு பொய்யர் என்றே நாங்கள் நினைக்கின்றோம்.

187. "நீர் உண்மையாளராக இருந்தால், விண்ணிலிருந்து பாளங்கள் எங்கள் மீது விழட்டும்."

188. அவர் கூறினார், "என் இரட்சகர்தான் நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் அறிந்தவர்."

189. அவர்கள் அவரை நம்பமறுத்தனர், மேலும் அதன் விளைவாக, விதானத்தின் நாளுடைய தண்டனைக்கு அவர்கள் உள்ளானார்கள். அச்சுறுத்தும் ஒரு நாளின் தண்டனையாக அது இருந்தது.

190. இது ஒரு படிப்பினையாகத் திகழ வேண்டும், ஆனால் மக்களில் அதிகமானோர் நம்பிக்கையாளர்கள் அல்லர்.

191. மிக நிச்சயமாக, உம்முடைய இரட்சகர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

### *குர்ஆன்*

192. பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து ஒரு வெளிப்பாடாக இது உள்ளது.

193. நேர்மையான ஆவி *(கேப்ரியேல்)* அதனுடன் இறங்கி வந்தார்.

194. உம்முடைய இதயத்தில் அதனை வெளிப்படுத்துவதற்காக, எச்சரிப்பவர்களில் ஒருவராக நீர் இருக்கும் பொருட்டு.

195. பூரணமானதோர் அரபி மொழியில்.

196. முந்திய தலைமுறையினரின் புத்தகங்களிலும் இது முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

197. இஸ்ரேலின் சந்ததியினர்களுக்கிடையில் உள்ள அறிஞர்கள் இதனை அறிந்திருக்கின்றனர் என்பது அவர்களுக்குப் போதுமான ஓர் அத்தாட்சி அல்லவா?

### *குர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டாக வேண்டும்*

198. அரபி மொழி அறியாத மக்களுக்கு இதனை நாம் வெளிப்படுத்தி இருப்போமாயின்.

199. மேலும் அவரை *(அரபி மொழியில்)* இதனை ஓதிக் காட்டச் செய்திருப்போமாயின், அவர்கள் இதனில் நம்பிக்கை கொண்டிருக்கச் சாத்தியமில்லை.

200. இவ்விதமாகக் குற்றவாளிகளின் இதயங்களில் இதனை *(ஓர் அந்நிய மொழியைப் போல)* நாம் ஆக்கி விடுகின்றோம்.

201. இவ்விதமாக, அவர்களால் இதனில் நம்பிக்கை கொள்ள இயலாது; வலி நிறைந்த அந்தத் தண்டனையை அவர்கள் காணும் வரை இயலாது.

202. அவர்கள் சற்றும் எதிர்பாராத போது, அது அவர்களிடம் திடீரென வரும்.

203. அப்போது அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்கு ஓர் அவகாசமளிக்கப்படுமா?"

204. நமது தண்டனைக்கு அவர்கள் சவால் விடவில்லையா?

205. நீங்கள் காண்பதைப் போல், ஆண்டுக்கணக்கில் சுகமனுபவிக்க அவர்களை நாம் அனுமதித்தோம்.

206. பின்னர் வாக்களிக்கப்பட்ட அதே விதமாக, தண்டனை அவர்களிடம் வந்தது.

207. அவர்களுடைய பரந்த செல்வங்கள் அவர்களுக்குச் சிறிதளவும் உதவி செய்யவில்லை.

208. எச்சரிப்பவர்களை அனுப்பாமல் எந்தச் சமுதாயத்தையும் நாம் ஒருபோதும் அழிப்பதில்லை.

209. எனவே, இது ஒரு நினைவூட்டலாகும், ஏனெனில் நாம் ஒருபோதும் அநீதமிழைப்பவர்கள் அல்லர்.

*கடவுளை மட்டும் வழிபடுதலை உபதேசிக்க போலித் தூதர்களால் இயலாது**

210. சாத்தான்கள் இதனை ஒருபோதும் வெளிப்படுத்த இயலாது.

211. அவர்கள் செய்யவும் மாட்டார்கள், அன்றி இயலவும் செய்யாது.

212. ஏனெனில் அவர்கள் செவியேற்பதை விட்டுத் தடுக்கப்பட்டு இருக்கின்றனர்.

213. எனவே, தண்டனைக்கு நீர் உள்ளாகாமல் இருக்கும் பொருட்டு, **கடவுள்**–வுடன் வேறெந்தத் தெய்வத்தையும் இணை வழிபாடு செய்யாதீர்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

214. உமக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்களுக்கு நீர் உபதேசம் செய்ய வேண்டும்.

215. மேலும் உம்மைப் பின்பற்றுகின்ற நம்பிக்கையாளர்களுக்கு உமது இறக்கையைத் தாழ்த்திக் கொள்வீராக.

216. அவர்கள் உமக்கு மாறுசெய்தால், பின்னர் கூறிவிடும், "நீங்கள் செய்வதிலிருந்து நான் விலகிக் கொண்டேன்."

217. மேலும் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளரிடம் உமது பொறுப்புக்களை வைத்து விடுவீராக.

218. இரவுப் பொழுதில் நீர் தியானிக்கும்போது உம்மைப் பார்ப்பவர்.

219. மேலும் அடிக்கடியான உம்முடைய சிரம்பணிதல்களையும்.

220. அவர்தான் செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

221. சாத்தான்கள் எவர்மீது இறங்குகின்றனர் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?

222. இட்டுக்கட்டும் குற்றவாளிகள் ஒவ்வொருவர் மீதும் அவர்கள் இறங்குகின்றனர்.

223. கவனத்தோடு செவியேற்பதாக அவர்கள் பாவனை செய்கின்றனர், ஆனால் அவர்களில் அதிகமானோர் பொய்யர்கள் ஆவர்.

224. கவிஞர்களைப் பொறுத்தவரை, வழிதவறியவர்களால் மட்டுமே அவர்கள் பின்பற்றப்படுகின்றனர்.

225. நிலைக்குத் தக்கவாறு அவர்களுடைய விசுவாசம் மாறுவதை நீங்கள் பார்க்கவில்லையா?

226. மேலும் அவர்கள் செய்யாதவற்றை அவர்கள் கூறுகின்றனர் என்பதையும்?

227. நம்பிக்கை கொண்டு, நன்னெறியான வாழ்வு நடத்தி, **கடவுள்**–ஐ அடிக்கடித் துதித்து, மேலும் தங்களுடைய உரிமைகளுக்காக எழுந்து நிற்பவர்கள் விலக்களிக்கப்படுகின்றனர். நிச்சயமாக, வரம்பு மீறுபவர்கள் தங்களுடைய இறுதி விதி என்ன என்பதை கண்டு கொள்வார்கள்.

****

## சூரா 27: எறும்பு (அல்–நம்ல்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. த. ச.* *(எழுத்துக்களாகிய)* இவை இந்தக் குர்ஆனின் சான்றுகளாக அமைகின்றன; ஆழ்ந்ததோர் வேதம்.

2. நம்பிக்கையாளர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கு, மற்றும் நற்செய்தி ஆகும்.

3. அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடித்து, கடமையான தர்மத்தை *(ஜகாத்)* கொடுத்து வருபவர்கள், மேலும் அவர்கள், மறுவுலகைக் குறித்து, பரிபூரணமான உறுதியோடிருப்பார்கள்.

4. எவர்கள் மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளவில்லையோ, அவர்களுடைய செயல்களை அவர்களுடைய கண்களில் நாம் அழகானதாக ஆக்கிவிடுவோம். இவ்விதமாக, அவர்கள் பெருந்தவறுகளைத் தொடர்ந்து புரிகின்றனர்.

5. மிக மோசமான தண்டனைக்குள்ளானவர்கள் இவர்கள்தான், மேலும் மறுவுலகில், மிகவும் மோசமான நஷ்டமடைந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

---

**26:210 போலியான ஒரு தூதுவன் சாத்தானின் தூதுவன் ஆவான், ஏனெனில் அவன் மிகப் பயங்கரமான பொய்களைப் புனைபவன் ஆவான். இத்தகையதொரு தூதுவனால் போலித் தெய்வ வழிபாட்டைக் கண்டனம் செய்யவோ, கடவுளை மட்டும் வழிபடுவதைப் பிரசாரம் செய்யவோ ஒரு போதும் இயலாது.*

**26:214–223 இந்த வசனங்கள் கடவுளின் உடன்படிக்கைத் தூதரைக் குறிக்கின்றன: "ரஷாத் கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (1230), வசன எண்ணை, (214), நாம் கூட்டினால் கூட்டுத்தொகை 1230+214 = 1444 = 19x76 = 19x19x4, மேலும் வசன எண்கள் 214 முதல் 223 வரையிலான வசன எண்களின் கூட்டுத்தொகை 2185 ஆகும் = 19x115 (பின் இணைப்பு1).*

**27:1 குர்ஆனுடைய இந்த துவக்க எழுத்துக்களின் அர்த்தத்திற்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

6. நிச்சயமாக, இந்தக் குர்ஆனை ஞானம் மிக்கவரும், எல்லாம் அறிந்தவருமான ஒருவரிடமிருந்தே நீர் பெறுகின்றீர்.

*மோஸஸ்*

7. மோஸஸ் தன் குடும்பத்தாரிடம் கூறியதை நினைவு கூர்வீராக, "நான் ஒரு நெருப்பைக் காண்கின்றேன்; அதிலிருந்து உங்களுக்குச் செய்தியையோ, அல்லது உங்களுக்குக் கதகதப்பளிக்கும் ஒரு தீப்பந்தத்தை யோ கொண்டு வருகின்றேன்."

8. அவர் அதன் அருகில் வந்தபோது, அவர் அழைக்கப் பட்டார்: "நெருப்புக்குள்ளிருந்து *(பேசுகின்ற)* அந்த ஒருவரும், மேலும் அதனைச் சூழ்ந்திருப்பவர்களும் பாக்கியமானவர்கள்." **கடவுள்** துதிப்பிற்குரியவர், பிரபஞ்சத்தின் இரட்சகர்.

9. "மோஸஸே, நான்தான், **கடவுள்**, எல்லாம் வல்லவன், ஞானம் மிகுந்தவன்.

10. "உமது கைத்தடியைக் கீழே வீசுவீராக." அது ஒரு பிசாசை போல் நகர்வதை அவர் கண்டபோது, அவர் திரும்பியடித்து ஓடினார். "மோஸஸே, அச்சம் கொள் ளாதீர். என்னுடைய தூதர்கள் அச்சப்பட வேண்டிய தில்லை.

11. "ஒரு வரம்புமீறலைச் செய்தவர்களைத் தவிர, பாவம் புரிந்துவிட்ட பின்னர் நன்னெறியை மாற்றியமைத் தால்; நான் மன்னிப்பவன், மிக்க கருணையாளன்.

12. "உமது சட்டைப்பைக்குள் உமது கரத்தை வைப்பீராக; ஒரு மாசுமின்றி வெண்மையாக அது வெளியில் வரும். இவை ஃபேரோவுக்கும் அவனுடைய சமூகத்தாருக் கும் ஒன்பது அற்புதங்களில் உள்ளவையாகும், ஏனெ னில் அவர்கள் தீய மக்களாக இருக்கின்றனர்."

13. தெளிவான மற்றும் ஆழ்ந்த நமது அற்புதங்கள் அவர் கள் முன்வைக்கப்பட்டபோது, அவர்கள் கூறினர், "இது கண்கூடான மாயாஜாலமே ஆகும்."

14. அவற்றை அவர்கள் ஏற்கமறுத்தனர், மேலும் அவர்களு டைய ஆணவத்தின் காரணத்தால், தங்களுடைய தவறான வழிகளில் முற்றிலும் உறுதியான நம்பிக் கையை அடைந்திருந்தனர். தீமை செய்தவர்களுக் கான பின்விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக.

*டேவிட்டும் ஸாலமனும்*

15. டேவிட்டுக்கும் ஸாலமனுக்கும் நாம் அறிவைக் கொடையளித்தோம், மேலும் அவர்கள் கூறினர், "நம்பிக்கை கொண்ட தன்னுடைய ஊழியர்களில் பலரை விட அதிகமாக எங்களை ஆசீர்வதித்ததற்காக **கடவுள்**–ஐப் புகழுங்கள்."

16. ஸாலமன் டேவிட்டின் வாரிசாக இருந்தார். அவர் கூறினார், "மக்களே, பறவைகளின் மொழியைப் புரிந்து கொள்ளும் திறன் கொண்டு நாங்கள் கொடை யளிக்கப்பட்டுள்ளோம், மேலும் அனைத்து விதமான பொருள்களும் எங்களுக்கு அருளப்பட்டுள்ளன. உண்மையிலேயே இது மெய்யானதொரு ஆசீர்வாத மாகும்."

17. ஜின்களிலும் மனிதர்களிலும் அவ்வண்ணமே பற வைகளிலும் இருந்த அவருக்குக் கீழ்ப்படிந்த ராணு வத்தினர் ஸாலமனின் பணிக்கென ஒன்று திரட்டப் பட்டிருந்தனர்; அனைத்தும் அவருடைய கட்டளை யின் கீழ்.

18. எறும்புகளின் பள்ளத்தாக்கை அவர்கள் நெருங்கிய போது, ஓர் எறும்பு கூறியது, "ஓ எறும்புகளே, ஸாலம னும் அவருடைய படையினரும் அறியாமல் உங்களை நசுக்கி விடாதிருக்கும் பொருட்டு, உங்களுடைய வீடு களுக்குள் சென்று விடுங்கள்."*

19. அவளுடைய கூற்றைக்கேட்டு அவர் புன்னகைத்தார், மேலும் சிரித்தார்,* மேலும் கூறினார், "என் இரட்ச கரே, என் மீதும் என் பெற்றோர்கள் மீதும் நீர் அருளி யிருக்கின்ற ஆசிகளுக்கு நன்றிபாராட்டுபவனாக இருப்பதற்கும், உம்மை மகிழ்விக்கும் நன் னெறியான காரியங்களைச் செய்வதற்கும் என்னை செலுத்து வீராக, உமது கருணையால், நன்னெறி கொண்ட உம் முடைய ஊழியர்களின் குழுமத்தில் என்னை நுழைய அனுமதிப்பீராக."

20. அவர் பறவைகளைப் பரிசீலித்தார், மேலும் கவனித் தார்: "நான் ஹுப்போவை காணமுடியாதது ஏன்? அது தொலைந்து போனது ஏன்?

21. "சரியானதொரு காரணத்தை அது எனக்குத் தர வில்லையென்றால், நான் அதனைக் கடுமையாகத் தண்டிப்பேன், அல்லது அதனைப் பலிகொடுத்து விடு வேன்."

22. அவர் நீண்ட நேரம் காத்திருக்கவில்லை. *(ஹுப்போ)* கூறியது, "நீங்கள் பெற்றிராத செய்தி என்னிடம் இருக் கின்றது. ஷீபாவிலிருந்து, ஒரு முக்கியமான தகவல் தனை உங்களுக்கு நான் கொண்டு வந்துள்ளேன்.

**27:18–19 குறிப்பிட்ட சூராவில் எவ்வளவுக்கெவ்வளவு அசாதாரணமான நிகழ்வுகள் உள்ளனவோ, அவ்வளவுக்கவ்வளவு வலிமையான கணித ஆதாரங்கள் அவற்றுக்கு ஆதரவு அளிக்கின்றன. இத்தகைய வினோதமான அற்புத நிகழ்வுகள் கடவு ளின் வல்லமையைச் சுட்டிக்காட்டுபவையாக உள்ளன என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள இது உதவுகின்றது. இந்த சூராவின் துவக்க எழுத்துக்களான த.ச., குர்ஆனின் துவக்க எழுத்துக்களுடன் தொடர்புடைய கணித அற்புதத்தின் பின்னிப்பிணைந்த சிக்கலானதொரு அங்கமாக அமைகின்றது. ஜீஸஸின் அசாதாரணப் பிறப்பு மற்றும் அற்புதங்கள், ஐந்து துவக்க எழுத்துக்களைத் துவக்கத்தில் கொண்ட 19வது சூராவில் உள்ளது. விபரங்கட்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

23. "ஒவ்வொரு பொருளையும் கொண்டு ஆசீர்வதிக்கப் பட்ட, மேலும் பிரம்மாண்டமானதொரு மாளிகையைக் கொண்ட ஒரு பெண்மணி அவர்களை ஆட்சி செய்ய நான் கண்டேன்.

24. "அவளும் அவளுடைய சமூகத்தாரும், **கடவுள்–**ஐ விடுத்து, சூரியன் முன் சிரம்பணிந்து கொண்டிருக்க நான் கண்டேன். சாத்தான் அவர்களுடைய செயல் களை அவர்களுடைய கண்களில் அழகானதாக்கி விட்டான், மேலும் அவர்களைப் பாதையிலிருந்து விரட்டி விட்டான்; அதன் விளைவாக, அவர்கள் வழி காட்டப்பட்டவர்களாக இல்லை."

25. அவர்கள் **கடவுள்** முன் சிரம்பணிந்திருக்க வேண் டும், வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்து மர்மங்களையும் வெளியாக்குகின்ற அந்த ஒருவர், மேலும் நீங்கள் மறைத்து வைக்கும் ஒவ்வொன்றை யும் நீங்கள் அறிவிக்கும் ஒவ்வொன்றையும் அறிந் திருக்கும் அந்த ஒருவர்.

26. **கடவுள்:** அவருடன் வேறு எந்தத் தெய்வமும் இல்லை; மகத்தான சாம்ராஜ்யம் கொண்ட இரட்சகர்.

27. *(ஸாலமன்)* கூறினார், "நீ உண்மையைக் கூறினாயா, அல்லது நீ ஒரு பொய்யனாக இருக்கின்றாயா என் பதை நாம் காண்போம்.

28. "இந்தக் கடிதத்தை என்னிடமிருந்து எடுத்துக் கொள், அவர்களிடம் அதனைக் கொடு, பின்னர் அவர்களுடைய மறுமொழியைக் கவனித்துப்பார்."

*ஷீபாவில் நிகழ்ந்தது*

29. அவள் கூறினாள், "என்னுடைய ஆலோசகர்களே, நான் கண்ணியமானதொரு கடிதத்தைப் பெற்றிருக் கின்றேன்.

30. "அது ஸாலமனிடமிருந்து வந்துள்ளது, மேலும் அது **'கடவுள்–ன் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்,*'** என்றுள்ளது.

31. "பிரகடனிப்பதாவது: 'ஆணவம் கொண்டவர்களாக இருக்காதீர்கள்; சரணடைந்தவர்களாக என்னிடம் வாருங்கள்.'"

32. அவள் கூறினாள், "என் ஆலோசகர்களே, இந்த விஷ யத்தில் எனக்கு ஆலோசனையளியுங்கள். நீங்கள் எனக்கு ஆலோசனையளிக்காத வரை, நான் எந்த ஒரு முடிவும் எடுக்க மாட்டேன்."

33. அவர்கள் கூறினர், "நாம் வலிமையைக் கொண்டி ருக்கின்றோம், போர்த்திறனையும் நாம் பெற்றிருக் கின்றோம், எனினும் இறுதிக் கட்டளை உம் கரத்தி லேயே உள்ளது. என்ன செய்வதென்பதை நீரே முடிவெடுப்பீராக."

34. அவள் கூறினாள், "மன்னர்கள் தாங்கள் படையெடுக் கின்ற எந்த நாட்டையும் சீர்குலைத்து விடுகின்றனர், அதன் கண்ணியத்திற்குரிய மக்களை அடிமைப் படுத்தி விடுகின்றனர், இதுதான் அவர்கள் வழமை யாகச் செய்வது.

35. "நான் அவர்களுக்கு ஒரு பரிசை அனுப்புகின்றேன்; தூதர்கள் திரும்பக் கொண்டு வருவது என்ன என நாம் காண்போம்."

36. ஹுஃப்போ ஸாலமனிடம் திரும்பிய போது *(அது அவரிடம் செய்தியைச் சொன்னது)* மேலும் அவர் *(ஷீபாவின் மக்களுக்கு)* மறுமொழியுரைத்தார்: "எனக்கு நீங்கள் பணம் தருகின்றீர்களா? **கடவுள்** எனக்குத் தந்திருப்பது, உங்களுக்கு அவர் தந்திருப் பதை விட மிகவும் மேலானது. நீங்கள்தான் இத்த கைய பரிசுகளில் ஆனந்தம் அடைகின்றீர்கள்."

37. *(ஹுஃப்போவிடம், அவர் கூறினார்)*, "அவர்களிடம் திரும்பிச் செல், மேலும் அவர்களால் கற்பனையும் செய்யமுடியாத படைகளுடன் அவர்களிடம் நாம் வரு வோம் *(என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்)*. இழிவடைந்தவர்களாகவும், சிறுமைப் படுத்தப்பட்ட வர்களாகவும் அவர்களை நாம் வெளியேற்றுவோம்."

*ஒளியின் வேகத்தை விட விரைவாக*

38. அவர் கூறினார், "என் பிரதானிகளே, சரணடைந்த வர்களாக இங்கே அவர்கள் வருவதற்கு முன்னர், அவளுடைய மாளிகையை என்னிடம் கொண்டு வர உங்களில் எவரால் இயலும்?"

39. ஜின்களில் இருந்து அஃப்ரீத் என்ற ஒன்று கூறியது, "நீர் எழுந்து நிற்பதற்கு முன்னர் உம்மிடம் அதனைக் கொண்டு வர என்னால் இயலும். அதனைச் செய்யும் அளவுக்கு சக்தி நிறைந்தவனாக நான் இருக்கின் றேன்."

40. புத்தகத்திலிருந்து அறிவைப் பெற்றிருந்த ஒருவர் கூறினார், "உமது கண்ணிமைப்பில் அதனை உம்மிடம் கொண்டு வர என்னால் இயலும்." அவருக்கு முன் னால் அது நிர்மாணிக்கப்பட்டிருப்பதை அவர் கண்ட தும், அவர் கூறினார், "இது என் இரட்சகரிடமிருந்து ஓர் ஆசீர்வாதமாகும், நான் நன்றியுடையவனாக இருக்கின்றேனா அல்லது நன்றி கெட்டவனா என்று காட்டுவதற்காக, இதன் மூலம் அவர் என்னைச் சோதிக்கின்றார். எவரொருவர் நன்றியுடையவராக இருக்கின்றாரோ, அவர் தன் சொந்த நலனுக்காகவே நன்றியுடையவராக இருக்கின்றார், மேலும் ஒருவன் நன்றி கெட்டவனாக மாறிவிட்டால், பின்னர் என்னு டைய இரட்சகர் அவன்பால் எந்தத் தேவையும் இல்லா தவர், மிக்க கண்ணிய முடையவர்."

**27:30 இந்த வசனத்தில் உட்படுத்தப்பட்டுள்ள 'பஸ்மலா' 19 சூராக்களுக்கு முன்னதாக சூரா 9ல் இடம்பெறாத 'பஸ்மலா'வை ஈடுகட்டுகின்றது. இது 'பஸ்மலா'வின் மொத்த எண்ணிக்கையை மீண்டும் 114, 19x6 ஆக ஆக்குகின்றது. இந்த 'பஸ்மலா'வுடன் இணைக்கப்பட்டுள்ள விரிவான ஆழ்ந்த அற்புதத்தின் விபரங்கட்கு பின் இணைப்பு 29ஐப் பார்க்கவும்.*

41. அவர் கூறினார், "அவளுடைய மாளிகையினை அவளுக்காக நீங்கள் மாற்றி விடுங்கள். அவள் வழி காட்டப்பட்டவளாக இருக்கப் போகின்றாளா அல்லது தவறாக வழிநடத்தப்பட்டவர்களுடன் தொடரப் போகின்றாளா என்பதை நாம் காண்போம்."

42. அவள் வருகை தந்தபோது, அவளிடம் கேட்கப்பட்டது, "உன் மாளிகை இதைப் போன்றுதான் தோற்றமளிக் குமா ?" அவள் கூறினாள், "இதுதான் அது என்று தோன்றுகிறது." *(ஸாலமன் கூறினார்)* "அவள் என்ன செய்யப்போகின்றாள் என்பதை நாங்கள் முன்னரே அறிந்திருந்தோம், மேலும் நாங்கள் ஏற்கனவே சரண டைந்தவர்களாக இருந்தோம்."

43. **கடவுள்**–க்குப் பதிலாக போலித்தெய்வங்களை வழி பட்டதனால் திசை திருப்பப்பட்டவளாக அவள் இருந் தாள்; நம்பமறுக்கும் கூட்டத்தை சேர்ந்தவளாக அவள் இருந்தாள்.

44. அவளிடம் கூறப்பட்டது, "மாளிகையின் உள்ளே செல்." அதன் உட்புறத்தை அவள் கண்டபோது, அதனை ஒரு நீர்த் தடாகம் என்று எண்ணினாள், மேலும் *(தன் ஆடையை உயர்த்தியவளாக)* தன்னுடைய கால்களை வெளிப்படுத்தினாள். அவர் கூறினார், "இதன் உட்புற மானது இப்போது பளிங்கினால் மேவப்பட்டுள்ளது." அவள் கூறினாள், "என் இரட்சகரே, நான் என்னு டைய ஆத்மாவுக்குத் தீங்கிழைத்துக் கொண்டேன். இப்போது நான் சாலமனுடன் பிரபஞ்சத்தின் இரட்சக ரான **கடவுள்**–க்குச் சரணடைகின்றேன்."

*ஸாலிஹ்*

45. "நீங்கள் **கடவுள்**–ஐ வழிபட வேண்டும்" என்று கூறிய வராக, தமூதுகளிடம் அவர்களுடைய சகோதரர் ஸாலிஹை நாம் அனுப்பினோம். ஆனால் அவர்கள் சச்சரவு செய்கின்ற இரு பிரிவினர்களாக மாறினார் கள்.

46. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, நல்ல செயல் களுக்குப் பதிலாகத் தீமைகளைப் புரிய நீங்கள் ஏன் அவசரப்படுகின்றீர்கள் ? பாவமன்னிப்புக்காகக் **கடவுள்**–ஐ நீங்கள் இறைஞ்சினால் மட்டுமே, நீங்கள் கருணையை அடையலாம்."

47. அவர்கள் கூறினர், "நாங்கள் உம்மை, உம்மையும் உம் முடன் சேர்ந்து கொண்டவர்களையும், எங்களுக்கு ஒரு கெட்ட சகுனமாக கருதுகின்றோம்." அவர் கூறி னார், "உங்களுடைய சகுனம் **கடவுள்**–ஆல் முற்றி லும் கட்டுப்படுத்தப்படுகின்றது. உண்மையில், நீங் கள் வழிபிசகுகின்ற மக்களாக இருக்கின்றீர்கள்."

48. அந்நகரில், தீயவர்களான, மேலும் நல்லது எதனை யும் ஒருபோதும் செய்திராத, ஒன்பது கொடுங்குற்ற வாளிகள் இருந்தனர்.

49. அவர்கள் கூறினர், "அவரையும் அவருடைய கூட்டத் தாரையும் கொன்று விடுவதாகக் **கடவுள்** மீது ஆணையிட்டுவிட்டுப் பின்னர், அவருடைய குலத்த வரிடம், 'அவர்களுடைய மரணத்தைப் பற்றி எங்க ளுக்கு எதுவும் தெரியாது. நாங்கள் உண்மையாளர் களே,' என்று கூறி விடுவோம்."

*நம்பிக்கையாளர்களைக் கடவுள் காக்கின்றார்*

50. அவர்கள் திட்டமிட்டு சூழ்ச்சி செய்தனர், ஆனால் அதே சமயம் அவர்கள் உணராது, நாமும் திட்ட மிட்டு சூழ்ச்சி செய்தோம்.

51. அவர்களுடைய சூழ்ச்சியின் விளைவுகளைக் கவனிப் பீராக; அவர்களையும் அவர்களுடைய சமூகத்தார் அனைவரையும் நாம் அழித்து விட்டோம்.

52. அவர்களுடைய வரம்புமீறலின் காரணமாக, இதோ அவர்களுடைய வீடுகள் முற்றிலும் சிதிலமாகிக் கிடக்கின்றன. அறிந்திருக்கும் மக்களுக்கு இது ஒரு படிப்பினையாகத் திகழ வேண்டும்.

53. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோரை நாம் காப்பாற்றுகின்றோம்.

*லோத்*

54. லோத் தன்னுடைய சமூகத்தாரிடம் கூறினார், "இத் தகையதொரு அருவருக்கத்தக்க ஒன்றினை, பகிரங் கமாக, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்களால் எப்படிச் செய்ய முடிகின்றது ?

55. "பெண்களை விடுத்து, காமத்துடன், நீங்கள் ஆண் களோடு பாலுறவு கொள்கின்றீர்கள். உண்மையில், நீங்கள் அறிவில்லாத மக்களாக இருக்கின்றீர்கள்."

56. அவருடைய சமூகத்தாரின் ஒரே மறுமொழி, "லோத் தின் குடும்பத்தாரை உங்களுடைய நகரத்தை விட்டு வெளியேற்றி விடுங்கள்; அவர்கள் தூய்மையுடன் இருக்க விரும்புகின்ற மக்களாக உள்ளனர்," என்று கூறுவதாகவே இருந்தது.

57. அதன் விளைவாக, அவரையும் அவருடைய குடும்பத் தாரையும் நாம் காப்பாற்றினோம், அவருடைய மனைவியைத் தவிர; அழிந்து விட்டவர்களுடன் அவளை நாம் கணக்கிட்டோம்.

58. குறிப்பிட்டதொரு பொழிவைக் கொண்டு அவர்கள் மீது நாம் பொழிந்தோம். எச்சரிக்கப்பட்ட மக்களாக இருந்தவர்கள் மீது துன்பகரமானதொரு பொழிவாக அது இருந்தது.

*கடவுளின் தூதர்களுக்கிடையில் பேதங்கள் செய்யாதீர்கள்*

59. கூறும், "புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, மேலும் அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட அவருடைய ஊழியர்கள் மீது சாந்தி நிலவுவதாக. **கடவுள்** மேலானவரா, அல்லது சில மனிதர்கள் அமைத்துக் கொள்கின்ற போலித்தெய்வங்களா ?"

*கடவுள் மட்டுமே வழிபடுவதற்குத் தகுதியானவர்*

60. வானங்களையும் பூமியையும் படைத்த ஒருவர் யார்? எதன் மூலம் எழில் நிறைந்த தோட்டங்களை நாம் உருவாக்குகின்றோமோ அந்த தண்ணீரை விண்ணி லிருந்து உங்களுக்கு இறக்கி அனுப்புகின்ற ஒருவர் யார் – அதன் மரங்களை நீங்கள் உற்பத்தி செய்யச் சாத்தியமில்லையே? **கடவுள்**–வுடன் மற்றொரு தெய் வமா? உண்மையில், அவர்கள் வழி பிசகிச் சென்று விட்ட மக்களாக இருக்கின்றனர்.

*ஜீஸஸ், மேரி, முஹம்மத், மகான்கள், போன்றோர். ஒருபோதும் பங்குபெறவில்லை*

61. வசிக்கத்தக்கதாக பூமியை ஆக்கி, அதனூடே ஆறு களை ஓடச் செய்து, அதன் மீது மலைகளை அமைத்த துடன், நீர்ப்பரப்புகள் இரண்டிற்குமிடையே ஒரு தடுப் பினை உருவாக்கிய ஒருவர் யார்? **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வமா? உண்மையில், அவர்களில் அதிகமானோர் அறியாதவர்களே.

62. விரக்தியடைந்து அவரை அழைப்பவர்களை மீட்டு, இன்னலை நிவர்த்திப்பதுடன் மேலும் பூமிக்கு உங் களை வாரிசுகளாக ஆக்கிய ஒருவர் யார்? **கடவுள்**– வுடன் மற்றொரு தெய்வமா? அரிதாகவே நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றீர்கள்.

63. நிலத்திலும் கடலிலும் உள்ள இருள்களில் உங்களை வழிநடத்துகின்ற ஒருவர் யார்? அவருடைய கருணை யின் அடையாளமாக, நற்செய்திகளுடன் காற்று களை அனுப்புகின்ற ஒருவர் யார்? **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வமா? பங்குதாரர் எவரையும் கொண் டிருப்பதற்கெல்லாம் மேலாக, **கடவுள்** மிகவும் உயர் வானவர்.

64. படைப்பைத் துவக்கி, பின்னர் அதனை மீண்டும் செய்கின்ற ஒருவர் யார்? வானத்திலிருந்தும் பூமியி லிருந்தும் உங்களுக்கு வழங்குகின்ற ஒருவர் யார்? **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வமா? கூறும், "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய சான்றினை எனக்குக் காட்டுங்கள்."

65. கூறுவீராக, "**கடவுள்**–ஐத் தவிர வானங்கள் மற்றும் பூமியில் உள்ள எவர் ஒருவருக்கும் எதிர்காலம் தெரி யாது. எப்படி அல்லது எப்பொழுது அவர்கள் உயிர்த் தெழுப்பப்படுவார்கள் என்பதைக் கூட அவர்கள் உணரமாட்டார்கள்."

*மறுவுலகின் மீது நம்பிக்கை: அதிகமான மக்களுக்கு ஒரு மாபெரும் இடர்ப்பாடு*

66. நிதர்சனத்தில், மறுவுலகைக் குறித்து அவர்களு டைய அறிவு குழம்பியுள்ளது. நிதர்சனத்தில், அதைப் பற்றி அவர்கள் சந்தேகங்களைத் தாங்கி இருக் கின்றனர். நிதர்சனத்தில், அவர்கள் அதில் முற்றிலும் கவனமற்று இருக்கின்றனர்.

67. நம்பமறுத்தவர்கள் கூறினர், "நாங்களும் எங்களு டைய பெற்றோரும் கூட, மண்ணாக மாறிய பின்னர், நாங்கள் வெளிக்கொண்டு வரப்படுவோமா?

68. "கடந்த காலத்திலும் இதே வாக்குறுதி எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவை கடந்த காலத்திலிருந் துள்ள கட்டுக்கதைகளேயன்றி வேறில்லை."

69. கூறுவீராக, "பூமியைச் சுற்றிப்பார்த்து குற்றவாளி களுக்கான விளைவுகளைக் கவனிப்பீராக."

70. அவர்களுக்காக வருத்தப்படாதீர், மேலும் அவர்களு டைய சூழ்ச்சிகளால் நீர் எரிச்சல் அடையாதீர்.

71. அவர்கள் கூறுகின்றனர், "நீர் உண்மையானவராக இருந்தால், எப்பொழுது அந்த வாக்குறுதி நிகழ்ந் தேறும்?"

72. கூறும், "நீங்கள் அறைகூவல் விடுகின்ற அத்தண் டனையில் சிலவற்றால் நீங்கள் ஏற்கனவே துன்புறுக் கொண்டிருக்கின்றீர்கள்."

73. உம்முடைய இரட்சகர் மனிதர்கள்பால் அருள் நிறைந் தவராக இருக்கின்றார், ஆனால் அவர்களில் அதிக மானோர் நன்றிகெட்டவர்களே.

74. அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்து வைப்பவற் றையும், அவர்கள் அறிவிப்பவற்றையும் உம்முடைய இரட்சகர் முற்றிலும் அறிவார்.

75. வானங்கள் மற்றும் பூமியில் *(கடவுளிடமிருந்து)* மறைக்கப்பட்டவை எதுவுமில்லை; ஒவ்வொன்றும் ஆழ்ந்ததோர் பதிவேட்டில் உள்ளது.

76. இஸ்ரேலுடைய சந்ததியினரின் விவகாரங்களில் பலவற்றை இந்தக் குர்ஆன் தீர்த்து வைக்கின்றது; இன்னமும் அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் விவகாரங்கள்.

77. மேலும் மிக நிச்சயமாக, நம்பிக்கை கொண்டவர் களுக்கு இது ஒரு வழிகாட்டியாகவும் கருணையாக வும் உள்ளது.

78. உம்முடைய இரட்சகர்தான் தனது சட்டங்களுக் கேற்ப அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பவர். அவர் எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர்.

79. எனவே, உமது பொறுப்பைக் **கடவுள்** மீது வைப்பீராக; தெளிவான சத்தியத்தையே நீர் பின்பற்றுகின்றீர்.

80. இறந்துவிட்டவர்களையோ, அன்றிச் செவிடர்களை யோ, அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அழைப் பைச் செவியேற்கும்படிச் செய்ய உம்மால் முடியாது.

81. அன்றியும், குருடர்களை அவர்களுடைய வழி கேட் டிலிருந்து வெளியில் நடத்தவும் உம்மால் முடியாது. நம்முடைய வெளிப்பாடுகளின் மீது நம்பிக்கை கொண்டு சரணடைந்தோராக இருக்க முடிவெடுத் தவர்கள் மட்டுமே உம்மைச் செவியேற்பார்கள்.

*கணிணிதான்*
*அந்த விலங்கு**

82. சரியான தருணத்தில், மனிதர்கள் நம் வெளிப்பாடு களைக் குறித்து உறுதி இல்லாதவர்களாக இருக் கின்றனர் என்பதை அறிவிக்கின்ற, பூமியின் பொருட் களால் செய்யப்பட்ட, ஒரு விலங்கினை அவர்களுக் காக நாம் உருவாக்குவோம்.

83. ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும், நமது சான்று களின் மீது நம்பிக்கை கொள்ளாத சிலரை, நிர்ப்பந்த மாக, நாம் வரவழைக்கும் அந்நாள் வரும்.

*குர்ஆனின் கணிதக்குறியீட்டைக்*
*கவனத்துடன் பரிசீலியுங்கள்*

84. அவர்கள் வந்து சேர்ந்தவுடன், அவர் கூறுவார், "எனது வெளிப்பாடுகளைப் பற்றிய அறிவை அடை வதற்கு முன்னர், அவற்றை நீங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டீர்கள். இதுதான் நீங்கள் செய்தது, அல்லவா ?"

85. அவர்களுடைய துஷ்டத்தனத்திற்குரிய கூலிக்கு அவர்கள் உள்ளாவார்கள்; அவர்கள் எதுவும் கூற மாட்டார்கள்.

86. இரவை அவர்களுடைய ஓய்வுக்கெனவும், பகலை ஒளிமிக்கதாகவும் நாம் ஆக்கினோம் என்பதை அவர்கள் காணவில்லையா ? நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இவை போதுமான சான்றுகளாகத் திகழ வேண்டும்.

87. கொம்பு ஊதப்படும் அந்நாளில், **கடவுள்**–ஆல் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களைத் தவிர, வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் திகிலடைந்து விடுவார்கள். நிர்பந்திக்கப்பட்டவர்களாக, அனை வரும் அவர் முன்னர் வருவார்கள்.

*பூமியின் இயக்கம்:*
*ஒரு விஞ்ஞான அற்புதம்*

88. மலைகளை நீர் பார்க்கும் போது, அவை அசையாமல் நிற்பதாக நீர் நினைக்கின்றீர். ஆனால் அவை மேகங் களைப் போல் நகர்கின்றன. ஒவ்வொன்றையும் மிகச் சரியாக ஆக்கிய, **கடவுள்**–ன் உற்பத்தி இவ்விதமான தாகும். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

*தீர்ப்பு நாள்*

89. *(தங்களுடைய பதிவேடுகளில்)* நல்ல செயல்களைக் கொண்டு வருபவர்கள் மிகச் சிறப்பான வெகுமதி களைப் பெறுவார்கள், மேலும் அந்நாளின் திகில்களி லிருந்து அவர்கள் பூரணமான பாதுகாப்புடன் இருப் பார்கள்.

90. தீய காரியங்களைக் கொண்டு வருவோரைப் பொறுத் தவரை, அவர்கள் நரகத்திற்குள் நிர்ப்பந்திக்கப்படு வார்கள். நீங்கள் செய்தவற்றுக்குத்தான் நீங்கள் கூலி கொடுக்கப்படுகின்றீர்கள் அல்லவா ?

91. இந்த நகரத்தின் இரட்சகரை வழிபடவேண்டும் என்று தான் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன் – அவர் இதனைப் பாதுகாப்பானதொரு புனிதத்தலமாக ஆக்கியுள்ளார் – மேலும் அவர் அனைத்துப் பொருட் களையும் தன் வசம் கொண்டுள்ளார். சரணடைந்த ஒருவனாக இருக்க வேண்டுமென்று நான் கட்டளை யிடப்பட்டுள்ளேன்.

92. மேலும் இந்தக் குர்ஆனை ஓதி வர வேண்டுமென் றும். எவரொருவர் வழிநடத்தப்படுகின்றாரோ அவர் தன் சொந்த நலனுக்காகவே வழிநடத்தப்படுகின் றார், மேலும் அவர்கள் வழிதவறிச் சென்றால், பின்னர் கூறும், "நான் ஓர் எச்சரிப்பவன் மட்டுமே."

93. மேலும் கூறும், "புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது; அவர் தன் சான்றுகளை நீங்கள் அங்கீகரிக்கும் வரை அவற் றை உங்களுக்குக் காட்டுவார். நீங்கள் செய்யும் எந்த ஒன்றையும் உம் இரட்சகர் ஒருபோதும் அறியாதவர் அல்லர்."

****

## சூரா 28: வரலாறு (அல்–கஸஸ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. த. ச. ம.*

**27:82 (2+7+8+2=19) குர்ஆனுடைய கணித அற்புதத்தின் திரையை விலக்க கணிணி அவசியமானதாக இருந்தது, மேலும் அதிகமான மனிதர்கள் கடவுளின் தூதுச் செய்தியைக் கைவிட்டு விட்டனர் என்பதை இது நிரூபித்தது (பார்க்க பின் இணைப்புகள் 1 & 19).*

**28:1 குர்ஆனுடைய அற்புதமான கணிதக் குறியீட்டின் விபரங்களுக்கும், இந்த துவக்க எழுத்துகளின் அர்த்தம் அல்லது முக்கியத்துவத்திற்கு பின்இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

2. *(எழுத்துகளாகிய)* இவை இந்த ஆழ்ந்த புத்தகத்தின் சான்றுகளாக அமைகின்றன.

3. நம்பிக்கை கொண்ட மக்களின் நலனுக்காக, மோஸஸ் மற்றும் ஃபேரோவின் வரலாற்றில் சிலவற்றை சத்தியத்துடன் நாம் உமக்கு இதில் ஓதிக் காட்டுகின்றோம்.

4. ஃபேரோ பூமியில் ஒரு கொடுங்கோலனாக ஆனான், மேலும் மக்களில் சிலருக்கெதிராக பாரபட்சம் செய்தான். அவர்களில் உள்ள நாதியற்ற ஒரு கூட்டத்தாரை, அவர்களுடைய மகன்களைக் கொன்று விட்டு, அதே சமயம் அவர்களுடைய மகள்களை உயிருடன் விட்டு வைத்து, வன்கொடுமை செய்தான். அவன் உண்மையிலேயே தீயவனாக இருந்தான்.

*அடக்குமுறை செய்யப்பட்டோருக்குக் கடவுள் நஷ்ட ஈடு செய்கின்றார்*

5. பூமியில் அடக்குமுறை செய்யப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு செய்யவும், அவர்களைத் தலைவர்களாக ஆக்கவும், மேலும் அவர்களை வாரிசுகளாக்கவும் நாம் நாடினோம்.

6. அத்துடன் பூமியில் அவர்களை ஸ்திரப்படுத்தவும், மேலும் ஃபேரோ, ஹாமான் மற்றும் அவனுடைய படையினர் தயாரித்த மருந்தை அவர்களையே சுவைக்கச் செய்வதற்காகவும்.

*கடவுள் மீது உறுதியான நம்பிக்கை*

7. மோஸஸின் தாயாருக்கு நாம் உள்ளுணர்வளித்தோம்: "அவருக்குப் பாலூட்டுவீராக, மேலும் அவருடைய உயிரைக் குறித்து நீர் அச்சம் கொள்ளும் போது, அச்சமோ துக்கமோ இன்றி ஆற்றுக்குள் அவரைத் தள்ளிவிடுவீராக. அவரை நாம் உம்மிடம் திரும்பச் சேர்ப்போம், மேலும் தூதர்களில் ஒருவராகவும் அவரை நாம் ஆக்குவோம்."

8. எதிரணிக்கு அவர் தலைமை தாங்குவதற்காகவும் மேலும் தங்களுடைய துக்கத்திற்கு ஒரு மூலமாக இருப்பதற்காக மட்டுமே, ஃபேரோவின் குடும்பத்தார் அவரை எடுத்துக் கொண்டனர். அது ஏனெனில் ஃபேரோ, ஹாமான் மற்றும் அவனுடைய படையினர் வரம்புமீறியவர்களாக இருந்தனர்.

*சிங்கத்தின் குகைக்குள்*

9. ஃபேரோவின் மனைவி கூறினார், "எனக்கும் உமக்கும் மகிழ்ச்சியூட்டக்கூடிய ஒரு கண்டுபிடிப்பாக இது அமையலாம். அவரைக் கொன்று விடாதீர், ஏனெனில் அவர் நமக்கு ஏதேனும் பலனளிக்கக் கூடும், அல்லது நம்முடைய மகனாக அவரை நாம் தத்தெடுத்துக் கொள்ளலாம்." அவர்கள் எதையும் அறிந்திருக்கவில்லை.

10. மோஸஸின் தாயாருடைய மனம், கிட்டத்தட்ட அவரை அடையாளம் காட்டிவிடும் அளவுக்கு மிகவும் பதற்றம் அடைந்தது. ஆனால் அவரை ஒரு நம்பிக்கையாளராக்குவதற்காக, அவருடைய இதயத்தை நாம் திடப்படுத்தினோம்.

11. அவருடைய சகோதரியிடம் அவர் கூறினார், "அவருடைய பாதையைப் பின் தொடர்வாயாக." அவர்கள் உணர்ந்து கொள்ளாத அதே சமயம், அவள் அவரைத் தொலைவிலிருந்து கண்காணித்தாள்.

*பாலகன் தன்னுடைய தாயாரிடம் திரும்பச் சேர்ப்பிக்கப்படுகின்றார்*

12. செவிலித் தாய்கள் யாவரையும் ஏற்றுக் கொள்வதை விட்டும் நாம் அவரைத் தடுத்தோம். *(அவருடைய சகோதரி)* பின்னர் கூறினாள், "உங்களுக்காக அவரை வளர்த்தெடுக்கவும், அவர் மீது நல்ல கவனம் எடுத்துக் கொள்ளவும் கூடிய ஒரு குடும்பத்தை என்னால் உங்களுக்குக் காட்ட இயலும்."

13. இவ்விதமாக, அவருடைய தாயாரிடம் அவரை மீண்டும் தந்தோம், அவரை மகிழ்வடையச் செய்து, அவருடைய கவலைகளைப் போக்கி, மேலும் **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியம்தான் என்பதை அவர் அறிந்து கொள்ளச் செய்யும் பொருட்டு. ஆயினும், அவர்களில் அதிகமானோர் அறியமாட்டார்கள்.

14. அவர் பக்குவமும் பலமும் அடைந்த போது, ஞானத்தையும் அறிவையும் கொண்டு அவருக்கு நாம் கொடையளித்தோம். இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதியளிப்போம்.

*மோஸஸ் கொலை செய்கின்றார்*

15. மக்களால் கண்டுகொள்ளப்படாத நிலையில், ஒரு முறை எதிர்பாராதவிதமாக அவர் நகருக்குள் நுழைந்து விட்டார். இரண்டு மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதை அவர் கண்டார்; ஒருவன் அவருடைய சமூகத்தாரிலிருந்து *(ஒரு எபிரேயனாக)* இருந்தான், மேலும் மற்றொருவன் அவருடைய விரோதிகளிலிருந்து *(ஓர் எகிப்தியனாக)* இருந்தான். அவருடைய சமூகத்தாரிலிருந்தவன் தன்னுடைய விரோதிக்கு எதிராக அவரை உதவிக்கு அழைத்தான். மோஸஸ் அவனைக் குத்தினார், அவனைக் கொன்று விட்டார். அவர் கூறினார், "இது சாத்தானின் வேலையாகும்; அவன் மெய்யான ஒரு விரோதி, மேலும் ஒரு தீவிரமான வழிதவறச் செய்பவன் ஆவான்."

16. அவர் கூறினார், "என் இரட்சகரே, நான் என் ஆத்மாவுக்குத் தீங்கிழைத்துக் கொண்டேன். தயை கூர்ந்து என்னை மன்னிப்பீராக," மேலும் அவர் அவரை மன்னித்தார். அவர்தான் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

17. அவர் கூறினார், "என் இரட்சகரே, என் மீதான உமது ஆசிகளுக்குப் பகரமாக, குற்றவாளிகளுக்கு ஓர் ஆதரவாளனாக நான் ஒருபோதும் இருக்க மாட்டேன்."

18. காலையில், அச்சத்துடனும் விழிப்புடனும், அவர் நகரத்தில் இருந்தார். முந்திய தினம் அவருடைய உதவியைக் கோரியவன் மீண்டும் அவரிடம் உதவி கேட்டான். மோஸஸ் அவனிடம் கூறினார், "மெய்யாகவே நீ தொந்தரவை உருவாக்கும் ஒருவனாக இருக்கின்றாய்."

*மோஸஸின் குற்றம் வெளிப்படுத்தப்படுகின்றது*

19. அவர்களுடைய பொதுவான விரோதியை அவர் தாக்க முற்படும் முன்னர், அவன் கூறினான், "மோஸஸே, நேற்று மற்றொரு மனிதனை நீர் கொலை செய்ததைப் போல, என்னையும் நீர் கொன்று விட விரும்புகின் றீரா ? கண்கூடாக, பூமியின் மீது ஒரு கொடுங்கோல னாக இருக்கவே நீர் விரும்புகின்றீர்; நன்னெறியாள ராக இருக்க நீர் விரும்பவில்லை."

20. நகரின் மற்றொரு புறத்திலிருந்து ஒரு மனிதன், "மோஸஸே, மக்கள் உம்மைக் கொன்று விடத் திட்ட மிடுகின்றனர். நீர் உடனடியாகப் புறப்பட்டு விடுவதே மேலானதாகும். நான் உமக்கு நல்ல அறிவுரையே கூறுகின்றேன்," என்று கூறியவனாக ஓடி வந்தான்.

21. அச்சத்துடனும், விழிப்புடனும், அவர் நகரை விட்டுத் தப்பி ஓடினார். அவர் கூறினார், "என் இரட்சகரே, அடக்குமுறை செய்கின்ற இம்மக்களிடமிருந்து என்னைக் காப்பீராக."

*மித்யனில்*

22. மித்யனை நோக்கி அவர் பிரயாணித்த போது, அவர் கூறினார், "என் இரட்சகர் என்னைச் சரியான பாதை யில் வழிநடத்துவாராக."

23. மித்யனின் நீர்நிலையை அவர் அடைந்தபோது, மக் களில் ஒரு கூட்டத்தினர் தண்ணீர் எடுத்துக் கொண் டிருப்பதை அவர் கண்டார், மேலும் ஓரத்தில் இரு பெண்கள் காத்துக் கொண்டிருப்பதையும் அவர் கவனித்தார். அவர் கூறினார், "உங்களுக்கு வேண்டி யதென்ன ?" அவர்கள் கூறினர், "கூட்டம் கலைந்து செல்லும் வரை, எங்களால் தண்ணீர் எடுத்துக் கொள்ள முடியவில்லை, மேலும் எங்கள் தந்தையோ வயது முதிர்ந்த ஒருவராக இருக்கின்றார்."

24. அவர்களுக்காக அவர் தண்ணீர் எடுத்துக் கொடுத் தார், பின்னர் "என் இரட்சகரே, எந்த ஒரு வாழ்வா தாரத்தை நீர் எனக்கு அனுப்பினாலும், அதற்காக நான் கடும் தேவையுடையவனாக இருக்கின்றேன்," எனக் கூறியவாறு நிழலின் பால் திரும்பிச் சென்றார்.

25. விரைவில், அவ்விரு பெண்களில் ஒருவர் அவரை வெட்கத்துடன் அணுகினார், மேலும் கூறினார், "எங் களுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுத்ததற்கான கூலியைத் தருவதற்காக என் தந்தையார் உம்மை அழைக்கின்றார்." அவரைச் சந்தித்து அவர் தனது கதையை அவரிடம் கூறியபோது, அவர் கூறினார், "அச்சம் கொள்ளாதீர். அடக்குமுறை செய்கின்ற மக்களிடமிருந்து நீர் காப்பாற்றப்பட்டு விட்டீர்."

*மோஸஸ் திருமணம் புரிகின்றார்*

26. அவ்விரு பெண்களில் ஒருவர் கூறினார், "என் தந் தையே, அவரைக் கூலிக்கு அமர்த்திக் கொள்வீராக. அவர் கூலிக்கு அமர்த்திக் கொள்ள மிகச் சிறந்த ஒரு வராக உள்ளார், ஏனெனில் அவர் வலிமையுடைய வராகவும் நேர்மையுடையவராகவும் இருக்கின்றார்."

27. அவர் கூறினார், "எட்டு புனிதயாத்திரைகள் எனக்கு நீர் வேலை செய்வதற்குப் பிரதியுபகாரமாக, என்னு டைய இரு மகள்களில் ஒருவரை உமக்கு திருமணம் முடித்துத் தர நான் விரும்புகின்றேன்; அவற்றை நீர் பத்தாக ஆக்கினால் அது உமது சொந்த விருப்பத் தின்பாற்பட்டதாகும். இந்த விஷயத்தை உமக்கு மிக வும் கடினமான தாக்கிவிட நான் விரும்பவில்லை. **கடவுள்** நாடினால், என்னை நீர், நன்னெறியாளனாகக் காண்பீர்."

28. அவர் கூறினார்,"எனக்கும் உமக்கும் இடையில் இது ஓர் உடன்படிக்கையாகும். எந்த ஒரு காலகட்டத்தை நான் பூர்த்தி செய்தபோதிலும், அவற்றில் எந்த ஒன்றுக்கும் நீர் வெறுப்புக் கொள்ளமாட்டீர். நாம் கூறியவற்றுக்குக் **கடவுள்** உத்தரவாதம் அளிப்ப வராக இருக்கின்றார்."

*மீண்டும் எகிப்திற்கு*

29. அவர் தன் கடமையைப் பூர்த்தி செய்து விட்ட போது, தன் குடும்பத்தாருடன் அவர் *(எகிப்தை நோக்கி)* பயணம் செய்தார். சினாய் மலையின் சரிவுகளில் இருந்து ஒரு நெருப்பை அவர் கண்டார். தன்னுடைய குடும்பத்தாரிடம் அவர் கூறினார், "இங்கேயே இருங் கள். நான் ஒரு நெருப்பைக் கண்டேன். ஒரு வேளை உங்களுக்கு நான் செய்தியைக் கொண்டு வரவோ, அல்லது உங்களுக்குக் கதகதப்பு அளிப்பதற்காக நெருப்பிலிருந்து ஒரு பகுதியைக் கொண்டு வரவோ கூடும்."

*மோஸஸ் நியமிக்கப்படுகின்றார்*

30. அவர் அதனை அடைந்தபோது, எரிகின்ற புதர் இருந்த ஆசீர்வதிக்கப்பட்ட இடத்தில், பள்ளத்தாக் கின் வலப்புற ஓரத்திலிருந்து அவர் அழைக்கப்பட் டார்: "மோஸஸே, நான்தான். **கடவுள்**; பிரபஞ்சத்தின் இரட்சகர்."

31. "உமது கைத்தடியைக் கீழே வீசுவீராக." அது ஒரு பிசாசைப் போல் நகர்வதை அவர் கண்ட போது, அவர் திரும்பியடித்து ஓடினார். "மோஸஸே, திரும்பி வாரும்; பயப்படாதீர். நீர் பூரணமான பாதுகாப்புடன் இருக் கின்றீர்.

32. "உமது சட்டைப்பைக்குள் உமது கரத்தை வைப்பீராக; ஒரு மாசுமின்றி வெண்மையாக அது வெளிவரும். உமது கரங்களைக் கட்டிக்கொண்டு உம்முடைய அச் சத்திலிருந்து அமைதி அடைவீராக. இவை ஃபேரோ வுக்கும் அவனுடைய பிரதானிகளுக்கும் காட்டப்படு வதற்காக, உம் இரட்சகரிடமிருந்துள்ள இரு சான்று களாகும்; அவர்கள் தீய மக்களாக இருக்கின்றனர்."

33. அவர் கூறினார், "என் இரட்சகரே, அவர்களில் ஒரு வனை நான் கொலை செய்து விட்டேன், மேலும் அவர் கள் என்னைக் கொன்று விடுவார்களோ என்று நான் அஞ்சுகின்றேன்.

34. "மேலும், என் சகோதரர் ஆரோன் என்னை விட பேச்சுத் திறன் அதிகம் உடையவராக இருக்கின்றார். என்னை உறுதிப்படுத்தவும், பலப்படுத்தவும் ஓர் உதவி யாளராக அவரை என்னுடன் அனுப்புவீராக. அவர்கள் என்னை நம்பமறுத்துவிடுவார்களோ என்று நான் அஞ்சுகின்றேன்."

35. அவர் கூறினார், "உம்முடைய சகோதரருடன் உம்மை நாம் பலப்படுத்துவோம், மேலும் உங்கள் இருவருக் கும் தெளிவான அதிகாரத்தை நாம் வழங்குவோம். இவ்விதமாக, உங்கள் இருவரில் எவர் ஒருவரையும் அவர்களால் தொட முடியாது. நமது அற்புதங்களு டன், நீங்கள் இருவரும், உம்மைப் பின்பற்றியவர்களு டன் சேர்ந்து, வெற்றி யாளர்களாக இருப்பீர்கள்."

*ஃபேரோவின் ஆணவம்*

36. தெளிவான மற்றும் ஆழ்ந்த, நமது சான்றுகளுடன் மோஸஸ் அவர்களிடம் சென்ற போது, அவர்கள் கூறினர், "இது இட்டுக்கட்டப்பட்ட மாயாஜாலமாகும். நம்முடைய பண்டைய மூதாதையர்களிடமிருந்து இதனை நாம் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை."

37. மோஸஸ் கூறினார், "என் இரட்சகர், அவரிடமிருந்து வழிகாட்டலைக் கொண்டு வந்திருப்பது யாரென்றும், இறுதி வெற்றியாளர்களாக இருக்கப்போவது யாரென் றும் நன்கறிவார். நிச்சயமாக, வரம்புமீறுபவர்கள் ஒரு போதும் வெற்றியடைய மாட்டார்கள்."

38. ஃபேரோ கூறினான், "ஓ பிரதானிகளே உங்களைத் தான், என்னை விடுத்து உங்களுக்கு வேறு எந்தத் தெய்வத்தையும் நான் அறிந்திருக்கவில்லை. எனவே, ஹாமானே, மோஸஸின் தெய்வத்தை நான் ஒரு நோட்டமிடும் பொருட்டு, ஒரு கோபுரத்தை கட்டுவ தற்காக சூளையைப் பற்ற வைப்பாயாக. அவர் ஒரு பொய்யர் என்பதில் நான் உறுதியாக இருக்கின் றேன்."

39. இவ்விதமாக, அவனும் அவனுடைய படையினரும் பூமியின் மீது, எவ்வித நியாயமுமின்றி, தொடர்ந்து ஆணவம் புரிந்தனர், மேலும் நம்மிடம் அவர்கள் திரும்பக் கொண்டு வரப்படமாட்டார்கள் என்று நினைத்தனர்.

40. அதன் விளைவாக, அவர்களைக் கடலினுள் கொண்டு தள்ளியதன் மூலம் அவனையும் அவனுடைய சேனை களையும் நாம் தண்டித்தோம். வரம்புமீறுவோருக் கான பின்விளைவுகளைக் கவனித்துப் பார்ப்பீராக.

41. அவர்களுடைய சமூகத்தாரை நரகத்திற்கு வழிநடத் திய இமாம்களாக நாம் அவர்களை ஆக்கினோம். அத்துடனன்றி, உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர்களுக்கு எந்த உதவியும் இருக்காது.

42. இந்த வாழ்வில் அவர்கள் கண்டனத்திற்கு உள்ளானார் கள், மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர் கள் இகழப்பட்டவர்களாக இருப்பார்கள்.

*மோஸஸின் புத்தகம்**

43. முந்திய தலைமுறையினரை அழித்து விட்ட பின்னர், மேலும் அவர்கள் மூலமாக உதாரணங்களை அமைத்து விட்ட பின்னர், மக்களுக்கு அறிவூட்டலையும், வழி காட்டலையும், கருணையையும் வழங்குவதற்காக – மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம் – அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதரை நோக்கி கூறப்படுகின்றது*

44. மோஸஸுக்கு நாம் கட்டளையை வெளியிட்ட போது, மேற்கத்திய மலையின் சரிவுகளில் நீர் வருகை புரிந்து இருக்கவில்லை; நீர் ஒரு சாட்சியாக* இருக்க வில்லை.

45. ஆனால் நாம் பல தலைமுறையினரை நிர்மாணித் தோம், மேலும் காலம் நீண்ட காரணத்தால் *(அவர்கள் விலகிச் சென்றனர்)*. அன்றியும் நம் வெளிப்பாடுகளை அவர்களிடம் ஓதிக்காட்டிக் கொண்டு மித்யனின் சமூகத்தாருக்கிடையிலும் நீர் இருக்கவில்லை. ஆயினும் நாம் தூதர்களை அனுப்பவேசெய்தோம்.

---

**28:43* மோஸஸின் புத்தகம் உட்பட, இஸ்ரேலின் நபிமார்கள் அனைவருக்கும் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து வேதங்களின் தொகுப்பே தோரா ஆகும். குர்ஆன் ஒரே சீராக, மோஸஸுக்கு ஒரு புத்தகம் அல்லது "சட்டப்புத்தகம்" கொடுக்கப் பட்டதாகத்தான் கூறுகின்றது, "தோரா" மோஸஸுக்கு வழங்கப்பட்டதாக குர்ஆனில் எங்கேயும் நாம் காண முடியாது. எனவே இன்றைய பழைய ஏற்பாடுதான் தோரா ஆகும் (பார்க்க 3:50, 5:46).*

**28:44* இத்தூதரின் பெயர் கணித அடிப்படையில் உறுதிப்படுத்தப்படுகின்றது: "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பின் (1230) பக்கத்தில் வசன எண்ணை (44), நாம் அமைத்தால், நமக்குக் கிடைப்பது 123044 = 19 x 6476.*

46. அன்றி *(மோஸஸை)* நாம் அழைத்தபோது சினாய் மலையின் சரிவுகளில் நீர் இருக்கவில்லை. ஆனால் உமக்கு முன்னர் எச்சரிப்பவர் எவரையும் பெற்றுக் கொள்ளாத மக்களை எச்சரிப்பதற்காக, *(மனிதர்கள் பால்)* இது உம்முடைய இரட்சகரின் கருணையாகவே உள்ளது, அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

*மன்னிப்பதற்குக் காரணம் இல்லை*

47. இவ்விதமாக, அவர்களுடைய சொந்தச் செயல்களின் பின் விளைவாக ஒரு பேரழிவு அவர்களைத் தாக்கும்போது, "எங்கள் இரட்சகரே, நீர் எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பியிருந்தால், நாங்கள் உம்முடைய வெளிப்பாடுகளைப் பின்பற்றியிருப்போம், மேலும் நம்பிக்கையாளர்களாக இருந்திருப்போம்," என்று அவர்கள் கூற முடியாது.

*தோராவும் குர்ஆனும்*

48. இப்போது நம்மிடமிருந்து சத்தியம் அவர்களிடம் வந்திருப்பதால், அவர்கள் கூறினர், "மோஸஸுக்குக் கொடுக்கப்பட்டது மட்டும் நமக்கும் கொடுக்கப்பட்டால்!" கடந்த காலத்தில் மோஸஸுக்குக் கொடுக்கப்பட்டவற்றை அவர்கள் நம்பமறுக்கவில்லையா? அவர்கள் கூறினர், "இரண்டு *(வேதங்களும்)* ஒன்றிலிருந்து மற்றொன்று பிரதியெடுக்கப்பட்ட மாயா ஜால வேலைகளே." அத்துடன் அவர்கள் கூறினர், "அவை இரண்டையும் நாங்கள் நம்பமறுப்பவர்களாக இருக்கின்றோம்."

49. கூறும், "எனில் நான் அதனை பின்பற்றுவதற்காக, இவ்விரண்டையும் விட மேலான வழிகாட்டலைக் கொண்ட வேதத்தை **கடவுள்**–யிடமிருந்து கொண்டு வாருங்கள், நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்."

*கடவுள் தனது போதனைகளை தன் தூதர்கள் வாயிலாக நமக்கு அனுப்புகின்றார்*

50. அவர்கள் உமக்குப் பதிலளிக்கத் தவறினால், பின்னர் அவர்கள் தங்களுடைய சுயஅபிப்பிராயங்களையே பின்பற்றுகின்றனர் என்பதை அறிந்து கொள்வீராக. **கடவுள்**–யிடமிருந்து வழிகாட்டல் இன்றி, தங்களுடைய சுய அபிப்பிராயங்களைப் பின்பற்றுபவர்களை விட நெடிய வழிகேட்டில் இருப்பவர் யார்? இத்தகைய தீய மக்களைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

*மெய்யான நம்பிக்கையாளர்கள் அனைவரும் குர்ஆனை ஏற்றுக் கொள்கின்றனர்*

51. அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு, இந்தத் தூதுச் செய்தியை நாம் அவர்களிடம் சேர்ப்பித்தோம்.

52. முந்திய வேதங்களைக் கொண்டு நாம் ஆசீர்வதித்தவர்கள் இதில் நம்பிக்கை கொள்வார்கள்.

53. அவர்களிடம் இது ஓதிக்காட்டப்பட்டால், அவர்கள் கூறுவார்கள், "நாங்கள் இதில் நம்பிக்கை கொள்கின்றோம். இது நம்முடைய இரட்சகரிடமிருந்துள்ள சத்தியம் ஆகும். இதனைப் பற்றி நாங்கள் செவியேற்பதற்கு முன்னரே, நாங்கள் சரணடைந்தவர்களாக இருந்தோம்."

*சத்தியத்தை அடையாளம் காண்கின்ற கிறித்துவர்கள் & யூதர்களுக்கு இரு மடங்கு வெகுமதி*

54. அவர்கள் உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து இருந்த காரணத்தால், அவர்களுக்கு நாம் இருமடங்கு வெகுமதியை வழங்குவோம். அவர்கள் நல்ல செயல்களைக் கொண்டு தீய செயல்களை எதிர் கொள்வார்கள், மேலும் நமது வாழ்வாதாரங்களில் அவர்களுக்குரியதில் இருந்து, அவர்கள் கொடுப்பார்கள்.

55. வீணான பேச்சினை அவர்கள் செவியேற்க நேர்ந்தால், அவர்கள் அதனைப் புறக்கணித்து விட்டுக் கூறுவார்கள், "எங்கள் செயல்களுக்கு நாங்கள் பொறுப்பாவோம், மேலும் உங்கள் செயல்களுக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள். உங்கள் மீது சாந்தி நிலவுவதாக. அறியாதவர்களைப் போல நடந்து கொள்ள நாங்கள் விரும்பவில்லை."

*கடவுள் மட்டுமே வழி நடத்துகின்றார்*

56. நீர் நேசிப்பவர்களை எல்லாம் உம்மால் வழிநடத்த முடியாது. **கடவுள்** தான் தன்னுடைய நாட்டத்திற்கேற்பவும், வழிகாட்டலுக்குத் தகுதியுடையவர் எவர் என்ற அவருடைய அறிவிற்கேற்பவும் வழி நடத்துகின்ற ஒரே ஒருவர்.

57. அவர்கள் கூறினர், "உமது வழிகாட்டலை நாங்கள் பின்பற்றினால், நாங்கள் வன்கொடுமையால் துன்புறுவோம்." நம்மிடமிருந்தொரு வாழ்வாதாரமாக, அனைத்துக் கனிவர்க்கங்களும் முன்வைக்கப்படுகின்ற, ஒரு புனித ஆலயத்தை அவர்களுக்காக நாம் நிர்மாணிக்கவில்லையா? உண்மையில், அவர்களில் அதிகமானோர் அறியமாட்டார்கள்.

58. தங்களுடைய வாழ்க்கைகளுக்கு நன்றி கெட்டவர்களாக மாறிய எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம். அதன் விளைவாக, ஒரு சிலவற்றைத் தவிர, அவர்களுக்குப் பின்னர் எவரும் வசிக்காத சிதிலங்களாக, இதோ அவர்களுடைய வீடுகள். நாமே அவற்றின் வாரிசுகளாக இருந்தோம்.

59. ஏனெனில் உம் இரட்சகர் எந்தச் சமுதாயத்தையும், அதன் மத்தியில் நம் வெளிப்பாடுகளை அவர்களுக்கு ஓதிக்காட்ட ஒரு தூதரை அனுப்பாது, ஒரு போதும் அழித்துவிடுவதில்லை. எந்த ஒரு சமூகத்தையும், அதன் மக்கள் தீயவர்களாக இருந்தாலன்றி, நாம் ஒருபோதும் அழிப்பதில்லை.

60. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பவை ஒவ்வொன்றும் இந்த வாழ்வின் பொருட்களும், மேலும் அவற்றின் ஆடம்பரமுமேயாகும். **கடவுள்**–யிடம் இருப்பவையோ மிகவும் மேலானதாகவும், நிலைத்திருப்பவையாகவும் உள்ளன. நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?

61. நிச்சயமாக நிகழ்ந்தேறக் கூடிய நல்லதொரு வாக்குறுதியை நாம் வாக்களித்த ஒருவனும், இந்த வாழ்வின் தற்காலிகப் பொருட்கள் நம்மால் வழங்கப்பட்டு, பின்னர் உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று நிரந்தரமான அழிவை அனுபவிக்கும் ஒருவனும் சமமா?

*போலித் தெய்வங்கள் தம்மை இணைவழிபாடு செய்தவர்களைக் கைவிட்டு விடுகின்றன*

62. "என்னுடன் நீங்கள் அமைத்துக் கொண்ட அந்த போலித் தெய்வங்கள் எங்கே?" என்று கூறியவாறு, அவர்களை அவர் அழைக்கின்ற அந்நாள் வரும்.

63. தீர்ப்புக்கு உள்ளானவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, நாங்கள் வழிதவறச் செய்தவர்கள் இவர்கள்தான்; நாங்களே வழிதவறிச் சென்று விட்டவர்களாக இருந்ததனால்தான் நாங்கள் அவர்களை வழிதவறச் செய்தோம். இப்போது நாங்கள் எங்களை உமக்கு முற்றிலும் அர்ப்பணித்துக் கொள்கின்றோம். அவர்கள் உண்மையில் எங்களை வழிபட்டுக் கொண்டிருக்கவில்லை."

64. இவ்வாறு கூறப்படும், "*(உங்களுக்கு உதவ)* உங்களுடைய போலித்தெய்வங்களை அழையுங்கள்." அவர்கள் அவர்களை அழைப்பார்கள், ஆனால் அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள். அவர்கள் தண்டனையால் துன்புறுவார்கள், மேலும் வழிநடத்தப்பட்டவர்களாக இருந்திருக்க வேண்டுமே என விரும்புவார்கள்!

*தூதர்களுக்கு நம்முடைய மறுமொழி*

65. அந்நாளில், அவர் ஒவ்வொருவரையும் கேட்பார், "தூதர்களுக்கு எவ்வாறு நீங்கள் மறுமொழி அளித்தீர்கள்?"

66. அந்நாளின் நிதர்சனங்களால் அவர்கள் மிகவும் திகைத்துப் போயிருப்பார்கள், அவர்கள் பேச்சற்றிருப்பார்கள்.

67. வருந்தி, நம்பிக்கை கொண்டு, மேலும் நன்னெறியான வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, அவர்கள் வெற்றியடைந்தோருடன் இருப்பார்கள்.

68. உம்முடைய இரட்சகர்தான் அவர் நாடிய எதனையும் படைப்பவர், மேலும் தேர்ந்தெடுப்பவர்; வேறு எவர் ஒருவரும் எதனையும் தேர்ந்தெடுப்பதில்லை. **கடவுள்** துதிப்பிற்குரியவர், மிகவும் உயர்ந்தவர். பங்குதாரர்கள் தேவைப்படுவதற்கும் அப்பாற்பட்டு அவர் மிகவும் மேலானவர்.

69. அவர்களுடைய நெஞ்சங்களில் மறைக்கப்பட்டிருக்கின்ற உள்ளார்ந்த எண்ணங்களையும், அவ்வண்ணமே அவர்கள் அறிவிக்கும் ஒவ்வொன்றையும் உம் இரட்சகர் அறிந்திருக்கின்றார்.

70. அவர்தான் ஒரே **கடவுள்**; அவருடன் வேறு தெய்வம் இல்லை. இந்த முதல் வாழ்விலும், மறுவுலகிலும் அனைத்துப் புகழும் அவருக்குரியது. அனைத்துத் தீர்ப்பும் அவரிடமே உள்ளது, மேலும் அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்.

*கடவுளின் ஆசிகள்*

71. கூறுவீராக, "உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை, **கடவுள்** இரவை நிலைத்திருக்கச் செய்து விட்டால்? **கடவுள்**–ஐ விடுத்து வேறு எந்தத் தெய்வம், உங்களுக்கு ஒளியை வழங்க முடியும்? நீங்கள் செவியேற்கவில்லையா?"

72. கூறுவீராக, "உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை **கடவுள்** பகலின் ஒளியை நிலைத்திருக்கச் செய்து விட்டால்? **கடவுள்**–ஐ விடுத்து வேறு எந்தத் தெய்வம் உங்களுடைய ஓய்வுக்கென ஓர் இரவை வழங்க முடியும்? நீங்கள் பார்க்கவில்லையா?"

73. *(இரவுப்பொழுதில்)* ஓய்வெடுப்பதற்காகவும், பின்னர் *(பகற்பொழுதில்)* அவருடைய வாழ்வாதாரங்களைத் தேடுவதற்காகவும், இரவையும் பகலையும் உங்களுக்காக அவர் படைத்திருப்பது அவரிடமிருந்துள்ள கருணையே ஆகும், நீங்கள் நன்றியுடையோராய் இருக்கும் பொருட்டு.

*போலித் தெய்வங்கள் சக்தி எதையும் பெற்றிருக்கவில்லை*

74. "எனக்குச் சமமாக நீங்கள் புனைந்து கொண்ட அந்த போலித் தெய்வங்கள் எங்கே,?" என்று அவர்களை அவர் கேட்கின்ற அந்நாள் வரும்.

75. ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒரு சாட்சியை நாம் தேர்ந்தெடுப்போம், பின்னர் "உங்களுடைய சான்றினைக் காட்டுங்கள்," என்று கூறுவோம். சத்தியம் அனைத்தும் **கடவுள்**–க்குரியது என்பதை அப்போது அவர்கள் புரிந்து கொள்வார்கள், அதேசமயம் அவர்கள் புனைந்து கொண்ட போலித் தெய்வங்கள் அவர்களைக் கைவிட்டு விடும்.

*காரூன்*

76. *(அடிமை மேய்ப்பனான)* காரூன் மோஸஸின் சமூகத்தாரில் உள்ளவனாக இருந்து அவர்களுக்குத் துரோகமிழைத்து, அவர்களை அடக்கு முறை செய்தவன் ஆவான். வலிமையான ஒரு குழுவிற்கே கிட்டத்தட்ட மிகவும் கனமாக இருக்கும் அளவுக்கு அதன் சாவிகளைக் கொண்ட ஏராளமான பொக்கிஷங்களை நாம் அவனுக்குத் தந்தோம். அவனுடைய சமூகத்தார் அவனிடம் கூறினர்," ஆணவம் மிகக் கொள்ளாதே; ஆணவம் கொண்டோரைக் **கடவுள்** நேசிப்பதில்லை.

77. "இவ்வுலகில் உனது பங்கை அலட்சியம் செய்திடாமல், **கடவுள்** உன் மீது அருளிய வாழ்வாதாரங்களை மறுவுலகின் வீட்டைத் தேடப் பயன்படுத்திக் கொள். **கடவுள்** உன் பால் தாராளமாக இருந்ததைப் போலவே, தாராளமாக நடந்து கொள். தொடர்ந்து பூமியைச் சீர்குலைத்துக் கொண்டிருக்காதே. சீர்குலைப்போரைக் **கடவுள்** நேசிப்பதில்லை."

78. அவன் கூறினான், "இவை அனைத்தையும் என்னுடைய சொந்தச் சாமர்த்தியத்தால் நான் அடைந்தேன்." அவனுக்கு முன்னர் அவனை விடவும் வலிமை மிகுந்த, மேலும் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த தலைமுறைகளை **கடவுள்** அழித்திருக்கின்றார் என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லையா **?** *(அழிக்கப்பட்ட)* அந்த வரம்புமீறியவர்களிடம் அவர்களுடைய குற்றங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கப்படவில்லை.

79. ஒருநாள், முழு அலங்காரத்துடன் தன் சமூகத்தாரிடம் அவன் வந்தான். இவ்வுலக வாழ்வை விரும்பியவர்கள் கூறினர், "ஆ, காரூன் அடைந்தவற்றை நாங்கள் பெற்றிருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். மெய்யாகவே, அவன் மிகவும் அதிர்ஷ்டக்காரனாக இருக்கிறான்."

*மெய்யான செல்வம்*

80. அறிவு கொண்டு ஆசிர்வதிக்கப் பெற்றவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கூறினர், "உங்களுக்குக் கேடுதான், நம்பிக்கை கொண்டு மேலும் நேரிய வாழ்வு நடத்துவோருக்குக் **கடவுள்**–ன் சன்மானம் மிகவும் மேலானதாகும்." உறுதியோடு இருப்பவர்களைத் தவிர எவரும் இதனை அடைய மாட்டார்கள்.

*கொடுங்கோலர்களின் தவிர்க்க முடியாத விதி*

81. பின்னர் நாம் அவனையும் அவனுடைய மாளிகையையும் பூமி விழுங்கும்படிச் செய்தோம். **கடவுள்**–க்கெதிராக எந்தப் படையும் அவனுக்கு உதவி செய்திருக்க முடியாது; வெற்றி பெற்ற ஒருவனாக இருக்க அவன் விதிக்கப்படவில்லை.

82. முந்திய தினம் அவனைக் குறித்துப் பொறாமைப் பட்டவர்கள் கூறினர்,"தன்னுடைய ஊழியர்களில் தான்தேர்ந்தெடுத்தோருக்கு வழங்குபவரும், மேலும் நிறுத்தி வைத்துக் கொள்பவரும் **கடவுள்**தான் என்பதை இப்போது நாங்கள் புரிந்து கொண்டோம். **கடவுள்**–ன் அருள் நம் பால் இல்லாதிருந்தால், நம்மையும் கூட பூமி விழுங்கும்படிச் செய்திருக்க அவரால் இயலும். நம்பமறுப்பவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள் என்பதை இப்போது நாங்கள் புரிந்து கொண்டோம்."

*இறுதி வெற்றியாளர்கள்*

83. பூமியில் பெருமையையோ, அன்றி சீர்குலைவையோ நாடாதவர்களுக்கென மறுவுலக வீட்டை நாம் ஒதுக்கிவைத்துள்ளோம். இறுதி வெற்றி நன்னெறியாளர்களுக்கே உரியது.

84. நன்னெறிகள் புரிகின்ற எவராயினும் மிக மேலான வெகுமதியைப் பெறுகின்றார். பாவங்கள் செய்கின்றவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய பாவங்களுக்கான தண்டனை துல்லியமாக அவர்களுடைய காரியங்களுக்குச் சமமானதேயாகும்.

85. நிச்சயமாக, இந்தக் குர்ஆனை உமக்கு விதியாக்கிய அந்த ஒருவர், முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு சந்திப்பிற்காக உம்மை வரவழைப்பார். கூறுவீராக, "வழிகாட்டலை ஆதரிப்பவர் எவர் என்றும், வழிதவறிச் சென்று விட்டவர்கள் எவர் என்றும் என் இரட்சகர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்."

86. இந்த வேதம் உமது வழியில் வரும் என நீர் ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை; ஆனால் இது உம் இரட்சகரிடமிருந்துள்ள கருணையே ஆகும். எனவே, நம்பமறுப்பவர்களுடன் நீர் அணிசேரக் கூடாது.

87. அன்றியும், அவை உம்மிடம் வந்து விட்ட பின்னர், **கடவுள்**–ன் வெளிப்பாடுகளில் இருந்து நீர் திசை திருப்பப்பட்டு விடவேண்டாம், மேலும் மற்றவர்களை உம் இரட்சகரின் பால் அழைப்பீராக. மேலும் எந்த நிலையிலும் போலித் தெய்வ வழிபாட்டில் வீழ்ந்திடாதீர்.

88. **கடவுள்**–வுடன் வேறு எந்தத் தெய்வத்தையும் நீர் வழிபட வேண்டாம். அவருடன் வேறு தெய்வம் எதுவும் இல்லை. அவருடைய இருப்பைத்தவிர ஒவ்வொன்றும் அழிந்துவிடும். ஆட்சியதிகாரம் அனைத்தும் அவருக்குரியது, மேலும் அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்.

****

# சூரா 29: சிலந்திப் பூச்சி (அல்–அன்கபூத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம.*

*சோதனை கட்டாயமானது*

2. சோதனையில் ஆழ்த்தப்படாமலேயே, "நாங்கள் நம்பிக்கை கொண்டோம்" என்று கூறுவதற்கு அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்று மனிதர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனரா ?

3. அவர்களுக்கு முன்னிருந்தவர்களையும் நாம் சோதித்தோம், ஏனெனில் உண்மையாளர்களாக இருப்பவர்களைக் **கடவுள்** சிறப்பிக்க வேண்டியது உள்ளது, மேலும் பொய்யர்களை அவர் வெளிப்படுத்த வேண்டியதும் உள்ளது.

4. பாவங்களைச் செய்பவர்கள் நம்மை எப்பொழுதேனும் ஏமாற்றி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனரா ? அவர்களுடைய தீர்மானம் மெய்யாகவே தவறானதாகும்.

5. **கடவுள்**–ஐச் சந்திப்பதை எதிர்பார்க்கும் எவரொருவரும், **கடவுள்**–வுடன் அத்தகையதொரு சந்திப்பு மிக நிச்சயமாக நிகழ்ந்தேறும் *(என்பதை அறிந்து கொள்ள வேண்டும்).* அவர் செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

6. பாடுபடுகின்றவர்கள், தங்கள் சொந்த நலனுக்காகவே பாடுபடுகின்றனர். **கடவுள்** எவரொருவரிடமும் எந்தத் தேவையுமற்றவர்.

7. எவர்கள் நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்துகின்றனரோ, அவர்களுடைய பாவங்களை நிச்சயமாக நாம் மன்னித்து விடுவோம், மேலும் அவர்களுடைய நன்னெறியான காரியங்களுக்காக அவர்களுக்கு நிச்சயமாக தாராளமாக வெகுமதியளிப்போம்.

*உங்கள் பெற்றோர்களை நீங்கள் கண்ணியப்படுத்த வேண்டும்*

8. அவனுடைய பெற்றோரைக் கண்ணியப்படுத்துமாறு மனிதவர்க்கத்திற்கு நாம் கட்டளையிட்டோம். ஆனால் என்னுடன் போலித்தெய்வங்களை அமைத்துக் கொள்ளுமாறு அவர்கள் உம்மை நிர்பந்திக்க முயன்றால், அவர்களுக்குக் கீழ்ப்படியாதீர். உங்களுடைய இறுதித் திரும்புதல் என்னிடமே உள்ளது, பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் உங்களுக்கு நான் அறிவிப்பேன்.

9. எவர்கள் நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றனரோ, அவர்களை நிச்சயமாக நன்னெறியாளர்களுடன் நாம் அனுமதிப்போம்.

*நல்ல காலத்தில் நண்பர்கள்*

10. "நாங்கள் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்றோம்," என்று கூறுவோரும் மனிதர்களில் உள்ளனர், ஆனால் **கடவுள்**–க்காக ஏதேனும் கஷ்டங்களை அவர்கள் அனுபவித்தவுடன், அவர்கள் மனிதர்களின் வன்கொடுமையைக் **கடவுள்**–ன் தண்டனையோடு ஒப்பிடுகின்றனர். ஆனால் உம்முடைய ஆசீர்வாதங்கள் உமது வழியில் வந்தால், "நாங்கள் உங்களோடு தான் இருந்தோம்," என அவர்கள் கூறுகின்றனர். மக்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களை **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கவில்லையா ?

11. நம்பிக்கை கொண்டோரை மிக நிச்சயமாகக் **கடவுள்** சிறப்பிப்பார், மேலும் நயவஞ்சகர்களை மிக நிச்சயமாக அவர் வெளிப்படுத்தி விடுவார்.

12. நம்பமறுத்தவர்கள் நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறினர், "நீங்கள் எங்களுடைய வழியைப் பின்பற்றினால், உங்களுடைய பாவங்களுக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வோம்." உண்மை அல்ல; அவர்களுடைய பாவங்களில் எதையும் அவர்களால் சுமக்க முடியாது. அவர்கள் பொய்யர்களாக இருக்கின்றனர்.

13. உண்மையில், அவர்கள் தங்களுடைய சொந்தப் பாவங்களையும், அத்துடன் கூடுதலாக மற்ற மக்களின் பாவச்சுமைகளில் எவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்தனரோ, அவற்றையும் சுமப்பார்கள். மிகவும் நிச்சயமாக, உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று அவர்களுடைய பொய்க் கூற்றுகளைப் பற்றி அவர்கள் வினவப்படுவார்கள்.

*நோவா*

14. நாம் நோவாவை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம், மேலும் அவர் ஐம்பது குறைவாக,* ஆயிரம் வருடங்கள் அவர்களுடன் வாழ்ந்திருந்தார். அதன் பின்னர், அவர்களுடைய வரம்புமீறல்களின் காரணமாக அவர்கள் பிரளயத்திற்கு உள்ளானார்கள்.

**29:1 குர்ஆனுடைய கணிதக்கட்டமைப்பின் விபரங்களுக்கும், இதற்கு முன்னர் மர்மமாக இருந்து வந்த இந்த துவக்க எழுத்துகளின் அர்த்தத்திற்கும் பின் இணைப்பு 1ஐக் காண்க.*

**29:14 குர்ஆனுடைய அற்புதம் கணித ரீதியாக இருப்பதால் எண்களானவை, விசேஷமாக 19ன் அடிப்படையிலான குறியீட்டின் முக்கியப் பகுதியாக அமைகின்றன. எனவே, குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்களின் கூட்டுத்தொகை 162146, அல்லது 19x8534 ஆக உள்ளது (விபரங்கட்கு பின் இணைப்பு 1ஐக் காண்க).*

15. அவரையும் மரக்கலத்தில் அவருடன் கூட இருந்த வர்களையும் நாம் காப்பாற்றினோம், மேலும் மக்கள் அனைவருக்கும் ஒரு படிப்பினையாக அதனை நாம் அமைத்தோம்.

*ஆப்ரஹாம்*

16. ஆப்ரஹாம் தன் சமூகத்தாரிடம் கூறினார், "நீங்கள் **கடவுள்**–ஐ வழிபடவும், மேலும் அவரிடம் பக்தி கொள்ளவும் வேண்டும். நீங்கள் மட்டும் அறிந்திருந் தால், இதுவே உங்களுக்கு மேலானதாகும்.

17. "**கடவுள்**–க்குப் பதிலாக நீங்கள் வழிபடுபவை சக்தி யற்ற சிலைகளே; நீங்கள் ஒரு பொய்யைக் கண்டு பிடித்துக் கொண்டீர்கள்."

*கடவுள்: வாழ்வாதாரங்களின் ஒரே மூலாதாரம்*

**கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடும் போலித் தெய்வங் கள் உங்களுக்காக எந்த வாழ்வாதாரங்களையும் கொண்டிருக்கவில்லை. எனவே, வாழ்வாதாரங் களை நீங்கள் **கடவுள்**–யிடம் மட்டுமே தேட வேண் டும். நீங்கள் அவரை மட்டுமே வழிபட வேண்டும், மேலும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருங்கள்; அவரிடமே உங்களுடைய இறுதித் திரும்புதல் உள்ளது.

18. நீங்கள் நம்பமறுப்பீர்களாயின், உங்களுக்கு முன்னி ருந்த தலைமுறையினரும் நம்பமறுத்திருக்கின்ற னர். தூதரின் ஒரே பணி *(தூதுச் செய்தியை)* சேர்ப் பிப்பதே.

*உயிர்களின் துவக்கத்தை*
*அறிந்து கொள்ளுங்கள்**

19. **கடவுள்** எவ்வாறு படைப்பைத் துவக்குகின்றார், பின்னர் அதனை மீண்டும் செய்கின்றார் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

20. கூறுவீராக, "பூமியில் சுற்றித் திரிந்து உயிர்களின் துவக்கத்தைக் கண்டுகொள்ளுங்கள்."* ஏனெனில் **கடவுள்** இவ்விதமாகவே மறுவுலகில் படைப்பைத் துவக்குவார். **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

21. தான்நாடுகின்ற எவரையும் அவர் தண்டனைக்கு கண்டனம் செய்கின்றார், மேலும் தான்நாடுகின்ற எவர் மீதும் தன் கருணையைப் பொழிகின்றார். இறுதியாக, அவரிடமே நீங்கள் மீண்டும் திருப்பப்படு வீர்கள்.

22. பூமியின் மீதோ அல்லது வானத்திலோ, உங்களில் எவரும் இந்த நிதர்சனங்களில் இருந்து தப்பித்து விட முடியாது, மேலும் **கடவுள்**–வுடன் ஓர் இரட்சகராகவும் அதிபதியாகவும் உங்களுக்கு எவரும் கிடையாது.

23. **கடவுள்**–ன் வெளிப்பாடுகளையும், அவரைச் சந்திப் பதையும் நம்பமறுப்பவர்கள், என்னுடைய கருணையில் நம்பிக்கை இழந்து விட்டனர். அவர்கள் வலி நிறைந்த தொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*மீண்டும் ஆப்ரஹாமிடம்*

24. அவருடைய சமூகத்தாரின் ஒரே மறுமொழியானது, "அவரைக் கொல்லுங்கள், அல்லது அவரை எரித்து விடுங்கள்," என்று கூறுவதாகவே இருந்தது. ஆனால் **கடவுள்** நெருப்பிலிருந்து அவரை காப்பாற்றினார். நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இது படிப்பினை களை வழங்க வேண்டும்.

*சமூக அழுத்தம்: ஆழ்ந்ததொரு பெருநாசம்*

25. அவர் கூறினார், "இவ்வுலக வாழ்வில் உங்களுக் கிடையில் சில நட்புக்களைப் பேணிக்கொள்வதற் காகவே, சமூக அழுத்தம் காரணமாகக் **கடவுள்**–வுடன் சக்தியற்ற போலித் தெய்வங்களை நீங்கள் வழிபடு கின்றீர்கள். ஆனால் பின்னர், உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று, நீங்கள் ஒருவர் மற்றவரைக் கைவிட்டு விடுவீர்கள், மேலும் ஒருவர் மற்றவரைச் சபிப்பீர்கள். அங்கே நீங்கள் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொள்ள இயலாத, நரகமே உங்களுடைய விதியாகும்."

26. லோத் அவருடன் நம்பிக்கை கொண்டார், மேலும் கூறி னார், "நான் என் இரட்சகரிடம் புலம் பெயர்கின்றேன். அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்."

27. நாம் அவருக்கு ஐசக்கையும் ஜேகபையும் தந்தோம், அவருடைய சந்ததியினருக்கு நபித்துவத்தையும் வேதங்களையும் நாம் நிர்ணயித்தோம், இவ்வுலகில் அவருக்குரிய சன்மானத்தைக் கொண்டு அவருக்கு நாம் கொடையளித்தோம், மேலும் மறுவுலகில் அவர் நிச்சயமாக நன்னெறியாளர்களுடன் இருப்பார்.

*லோத்*

28. லோத் தன் சமூகத்தாரிடம் கூறினார், "உங்களுக்கு முன்னர் உலகில் எவர் ஒருவரும் எக்காலத்திலும் செய்திராத, இத்தகைய அருவருக்கத்தக்க ஒன்றை நீங்கள் செய்கின்றீர்கள்.

29. "நீங்கள் ஆண்களுடன் பாலுறவு கொள்கின்றீர்கள், நீங்கள் வழிப்பறிக் கொள்ளைகள் செய்கின்றீர்கள், மேலும் உங்களுடைய சமூகத்தில் அனைத்து வகை யான ஒழுக்கக் கேடுகளுக்கும் இடமளிக்கின்றீர் கள்." அவருடைய சமூகத்தாரின் ஒரே மறு மொழியா னது, "நீர் உண்மையாளராக இருந்தால், **கடவுள்**–ன் தண்டனையை எங்களிடம் கொண்டு வாரும்," என்று கூறுவதாகவே இருந்தது.

---

**29:19–20 பரிணாம வளர்ச்சி என்பது தெய்வீகமாக வழிகாட்டப்பெற்ற ஒரு செயல்முறையாக அமைந்துள்ளது என்பதை நாம் குர்ஆனிலிருந்து கற்றுக் கொள்கின்றோம். விபரங்கட்கு பின் இணைப்பு 31ஐக் காண்க.*

**30.** அவர் கூறினார், "என் இரட்சகரே, இந்தத் தீய மக்கள் மீது எனக்கு வெற்றியைத் தருவீராக."

*ஆப்ரஹாமையும் லோத்தையும் வானவர்கள் சந்திக்கின்றனர்*

**31.** *(ஐசக்கின் பிறப்பு குறித்த)* நற்செய்தியுடன் நம் தூதர்கள் ஆப்ரஹாமிடம் சென்ற போது,"*(ஸாடம் எனும்)* அந்நகரின் மக்களை நாங்கள் அழிக்கச் சென்று கொண்டு இருக்கின்றோம். ஏனெனில் அதன் மக்கள் தீயவர்களாக இருக்கின்றனர்," என்றும் அவர்கள் கூறினர்.

**32.** அவர் கூறினார், "ஆனால் அங்கே லோத் வசிக்கின்றார்." அவர்கள் கூறினர், "அதில் வசிக்கின்ற ஒவ்வொருவரைப்பற்றியும் நாங்கள் முற்றிலும் அறிந்திருக்கின்றோம். அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் நிச்சயமாக நாங்கள் காப்பாற்றி விடுவோம், அவருடைய மனைவியைத் தவிர; அவள் அழிக்கப்பட்டவள் ஆவாள்."

**33.** லோத்தின் இருப்பிடத்திற்கு நம் தூதர்கள் வந்து சேர்ந்த போது, அவர்கள் தவறாக நடத்தப்பட்டனர், மேலும் அவர்களுடைய வருகையினால் அவர் சங்கடத்திற்குள்ளானார். ஆனால் அவர்கள் கூறினர், "அச்சம் எதுவும் கொள்ளாதீர், மேலும் கவலையும் கொள்ளாதீர். உம்மையும் உம் குடும்பத்தாரையும் நாங்கள் காப்பாற்றுவோம், உம்முடைய மனைவியைத் தவிர; அவள் அழிக்கப்பட்டவளாள் ஆவாள்.

**34.** "அவர்களுடைய தீச்செயல்களின் விளைவாக, விண்ணிலிருந்து ஒரு பேரழிவை இந்நகரின் மக்கள் மீது நாங்கள் ஊற்றுவோம்."

**35.** புரிந்து கொள்ளக் கூடிய மக்களுக்கு ஆழ்ந்ததொரு படிப்பினையாகத் திகழ்வதற்காக, அவற்றின் சிதிலங்களில் சிலவற்றை நாம் அப்படியே விட்டு விட்டோம்.

*ஷுஐப்*

**36.** மித்யனுக்கு அவர்களுடைய சகோதரர் ஷுஐபை நாம் அனுப்பினோம். அவர் கூறினார், "என் சமூகத்தாரே, நீங்கள் **கடவுள்**–ஐ வழிபடவும் இறுதி நாளுக்காக முயலவும் வேண்டும், மேலும், சீர்குலைக்கும் முகமாக பூமியில் சுற்றித் திரியாதீர்கள்."

**37.** அவர்கள் அவரை நம்பமறுத்தனர், மேலும் அதன் விளைவாக, நிலநடுக்கம் அவர்களை அழித்தது; காலையில் அவர்கள் தங்களுடைய வீடுகளில் இறந்தவர்களாக விட்டு விடப்பட்டனர்.

**38.** அதைப்போலவே, ஆத் மற்று தமூது *(ஆகியோரும் அழிக்கப்பட்டனர்).* அவர்களுடைய சிதிலங்களின் வாயிலாக இது உங்களுக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளது. சாத்தான் அவர்களுடைய காரியங்களை அவர்களுடைய கண்களில் அழகானதாக ஆக்கி விட்டான், மேலும் கண்களுடையவர்களாக அவர்கள் இருந்த போதிலும், பாதையை விட்டு அவர்களைத் திருப்பிவிட்டான்.

*கடவுளின் மாறா வழிமுறை*

**39.** மேலும் காரூன், ஃபேரோ, மற்றும் ஹாமான்; மோஸஸ் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளுடன் சென்றார். ஆனால் அவர்கள் பூமியின் மீது தொடர்ந்து கொடுங்கோன்மை புரிந்தனர். அதன் விளைவாக, அவர்களால் *(தண்டனையை)* தவிர்த்துக் கொள்ள முடியவில்லை.

**40.** அந்த நம்பமறுப்பவர்கள் அனைவரும் அவர்களுடைய பாவங்களின் விளைவாக அழிக்கப்பட்டனர், அவர்களில் சிலரை நாம் உக்கிரமான காற்றுகளால் அழித்தோம், சிலர் நிலநடுக்கத்தால் அழிக்கப்பட்டனர், சிலரை பூமியானது விழுங்கும்படி நாம் செய்தோம், மேலும் சிலரை மூழ்கடித்தோம். அவர்களுக்கு அநீதியிழைத்தது **கடவுள்** அல்ல; அவர்கள் தான் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

*சிலந்திப் பூச்சி*

**41.** **கடவுள்**–வுடன் வேறு எஜமானர்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கு உவமானமாவது, சிலந்திப் பூச்சியும் அவளுடைய வீடுமாகும்; வீடுகள் அனைத்திலும் மிகவும் பலஹீனமானது சிலந்திப் பூச்சியின் வீடே ஆகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.*

**42.** அவருடன் அவர்கள் வழிபடுகின்ற எதுவாயினும் அவை உண்மையில் ஒன்றுமேயில்லை என்பதைக் **கடவுள்** முற்றிலும் நன்கறிகின்றார். அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

**43.** இந்த உதாரணங்களை நாம் மக்களுக்கு எடுத்துரைக்கின்றோம், எனினும் அறிவுடையோரைத் தவிர* எவர் ஒருவரும் அவற்றைப் போற்றிடமாட்டார்கள்.

**44.** **கடவுள்** வானங்களையும் பூமியையும், சத்தியத்துடன் படைத்தார். நம்பிக்கையாளர்களுக்குப் போதுமானதொரு சான்றினை இது வழங்குகின்றது.

**29:41–43 கருப்பு விதவைச் சிலந்தி தன் ஜோடியைக் கொன்று விடுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு மனிதர் அறிவைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். 29:41ல் சிலந்திப்பூச்சிக்கு பெண்பாற் சொற் குறிப்பு பயன் படுத்தப்படுவது இவ்விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிலந்திப் பூச்சியின் வலை இயல்பில் மிகவும் பலஹீனமானது என்ற நிதர்சனத்திற்கும் இது மேலதிகமாகும்.*

*(ஸலாத்) தொடர்புத் தொழுகைகள்*

45. வேதத்தில் உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை நீர் ஓதி வரவேண்டும், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பீராக, ஏனெனில் தொடர்புத் தொழுகைகள் தீமைகளையும் ஒழுக்கக் கேட்டையும் தடுக்கின்றன. ஆனால் *(ஸலாத் மூலம்)* **கடவுள்**–ஐ நினைவு கூர்வதே மிகவும் முக்கியமான குறிக்கோளாகும்.* நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிகின்றார்.

*ஒரே கடவுள் / ஒரே மார்க்கம்*

46. இயன்ற அளவு மிகச்சிறந்த முறையிலன்றி வேதத்தையுடைய *(யூத, கிறித்துவ, & முஸ்லிம்)* மக்களிடம் நீங்கள் வாதிக்கக் கூடாது – அவர்கள் வரம்புமீறினாலே தவிர – மேலும் கூறுவீராக,"எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும் உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றின் மீதும் நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம், மேலும் எங்களுடைய இறைவனும் உங்களுடைய இறைவனும் அதே ஒருவர்தான்; அவருக்கே நாங்கள் சரணடைந்தோராக இருக்கின்றோம்."

47. நாம் இந்த வேதத்தை உமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றோம், மேலும் முந்திய வேதத்தைக் கொண்டு நாம் ஆசீர்வதித்தவர்கள் இதில் நம்பிக்கை கொள்வார்கள். அத்துடன், உம்முடைய சமூகத்தாரில் சிலரும் இதில் நம்பிக்கை கொள்வார்கள். உண்மையில், நமது வெளிப்பாடுகளைப் புறக்கணிப்பவர்கள்தான் மெய்யான நம்பமறுப்பவர்கள்.

*குர்ஆன்: முஹம்மதின் அற்புதம்**

48. முந்திய வேதங்களை நீர் படிக்கவில்லை, அன்றி உமது கரத்தால் அவற்றை எழுதவுமில்லை. அவ்வாறு நிகழ்ந்திருந்தால், ஏற்கமறுத்தவர்கள் சந்தேகங்களைத் தாங்கிக் கொண்டிருக்கக் காரணம் இருந்திருக்கக் கூடும்.

49. நிதர்சனத்தில், அறிவைப் பெற்றிருப்பவர்களின் நெஞ்சங்களில் இந்த வெளிப்பாடுகள் தெளிவானதாக இருக்கின்றன. தீயவர்கள் மட்டுமே நமது வெளிப்பாடுகளை அலட்சியம் செய்வார்கள்.

50. அவர்கள் கூறினர், "அவருடைய இரட்சகரிட மிருந்து அற்புதங்கள்* மட்டும் அவருக்கு இறங்கி வரக் கூடுமானால்!" கூறுவீராக, "அற்புதங்கள் அனைத்தும் **கடவுள்**–யிடமிருந்து மட்டுமே வருகின்றன; நான் தெளிவானதோர் எச்சரிப்பவன் என்பதை விட அதிகமாக எதுவுமில்லை."

51. அவர்களுக்கு ஓதிக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற, இந்தப் புத்தகத்தை நாம் உமக்கு இறக்கி அனுப்பியிருப்பது போதுமானதோர் அற்புதமாக* இல்லையா ? மெய்யாகவே நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இது ஒரு கருணையாகவும் ஒரு நினையூட்டலாகவும் உள்ளது.

52. கூறும், "எனக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு சாட்சியாகக் **கடவுள்** போதுமானவர். வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றையும் அவர் அறிகின்றார். நிச்சயமாக, பொய்மையின் மீது நம்பிக்கை கொண்டு, **கடவுள்** மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள்தான் மெய்யான நஷ்டவாளிகள்."

*அவர்கள் நரகத்தில் இருக்கின்றனர்*

53. தண்டனையைக் கொண்டு வருமாறு உம்மிடம் அவர்கள் சவால் விடுகின்றனர்! முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு ஏற்பாடு என்பது இல்லாதிருந்தால், தண்டனை அவர்களிடம் உடனடியாக வந்திருக்கும்.* நிச்சயமாக, அவர்கள் அதனைச் சற்றும் எதிர்பாராத போது, அவர்களிடம் அது திடீரென வரும்.

54. தண்டனையைக் கொண்டு வருமாறு உம்மிடம் அவர்கள் சவால் விடுகின்றனர்! நம்பமறுப்பவர்களை நரகம் ஏற்கெனவே சூழ்ந்துள்ளது.

**29:45 உங்களுடைய மனங்களை அதிகமான நேரம் ஆக்கிரமித்திருப்பது எதுவாயினும் அதுவே உங்களுடைய கடவுளாகும் (பார்க்க 20:14 மற்றும் பின் இணைப்பு 27).*

**29:48–51 குர்ஆனிலிருந்து அதன் பிரமிப்பூட்டும் கணித அற்புதத்தை 1400 ஆண்டுகள் பிரித்து வைக்க வேண்டும் என்பது ஞானம் மிகுந்தவருடைய நாட்டமாக இருந்தது. முஸ்லிம்கள் எப்படி முஹம்மதை ஒட்டு மொத்தமாக இணைவழிபாடு செய்கின்றனர் என்பதைக் காண்கையில், குர்ஆனுடைய கணித அற்புதமும் முஹம்மதின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தால், ஏராளமான மக்கள் அவரைக் கடவுளின் அவதாரமாகவே வழிபாடு செய்திருப்பார்கள் என்பது கண்கூடானதாகும். இப்போதுள்ளபடி, குர்ஆனுடைய மகத்தான அற்புதம் (74:30–35) கணிணி யுகம் வரை காத்திருக்க வேண்டும் என்றும், அவருடைய உடன்படிக்கைத் தூதர் மூலமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கடவுள் நாடியிருந்தார் (பின் இணைப்பு 1, 2 மற்றும் 26 ஐக் காண்க).*

**29:53 வயது 40ஐ அடையும் முன்னர் மரணிக்கும் எவரொருவரும் சொர்க்கம் செல்கின்றார், ஆனால் எல்லாரும் அதற்குத் தகுதியுடையவர்கள் அல்லர். துஷ்டனான குற்றவாளி ஒருவன் சரியான நேரத்தில் மரணதண்டனைக்கு உட்படுத்தபடவில்லையென்றால் சில சமயங்களில் மனிதர்கள் நீதியின் தாமதத்திற்காகப் புலம்புகின்றனர். சுவனத்திற்குத் தகுதியானவர்கள் யார் என்பதைக் கடவுள் அறிகின்றார் (பார்க்க 46:15 மற்றும் பின் இணைப்பு 32).*

55. அவர்களுக்கு மேலிருந்தும் அவர்களுடைய பாதங்களுக்குக் கீழிருந்தும், தண்டனை அவர்களை அழுத்துகின்ற அந்நாள் வரும்; அவர் கூறுவார், "உங்களுடைய காரியங்களின் விளைவுகளைச் சுவையுங்கள்."

*கடவுளுக்காகப் புலம்பெயருங்கள்*

56. நம்பிக்கை கொண்ட என் ஊழியர்களே, என்னுடைய பூமி விசாலமானது, எனவே என்னையே வழிபடுங்கள்.

57. ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கும், பின்னர் இறுதியாக நீங்கள் நம்மிடமே திருப்பப் படுவீர்கள்.

58. எவர்கள் நம்பிக்கை கொண்டு, மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றனரோ, அவர்களை நிச்சயமாக நாம் மாளிகைகளும் பாயும் ஆறுகளும் கொண்ட சுவனத்தில் அமர்த்துவோம். என்றென்றும் அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். பணிபுரிவோருக்கு எத்தகையதொரு அழகிய வெகுமதி.

59. உறுதியோடு சகித்துக்கொண்டும், மேலும் தங்கள் இரட்சகரிடம் பொறுப்பேற்படுத்திக் கொண்டும் இருந்தவர்கள் அவர்கள்தான்.

60. எத்தனையோ ஒரு பிராணி தன் வாழ்வாதாரத்தைச் சுமந்து கொண்டிருக்கவில்லை, அதற்கும் அவ்வண்ணமே உங்களுக்கும், **கடவுள்** வழங்குகின்றார். அவர் செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

*பெரும்பாலான நம்பிக்கையாளர்கள்*
*நரகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளனர்*

61. "வானங்களையும் பூமியையும் படைத்தவரும், மேலும் சூரியனையும் சந்திரனையும் உங்களுக்குப் பணி செய்யும்படி ஆக்கியவரும் யார்," என்று அவர்களிடம் நீர் கேட்டால், அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்.**" பின்னர் ஏன் அவர்கள் விலகிச் செல்கின்றார்கள்?

62. **கடவுள்**தான் தன் படைப்புக்களில் இருந்து தான் தேர்ந்தெடுக்கும் எவருக்கும், வாழ்வாதாரத் தினை அதிகரிப்பவரும் நிறுத்திவைப்பவரும் ஆவார். அனைத்துப் பொருட்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

63. "இறந்த நிலத்தினை உயிர்ப்பிப்பதற்காக, விண்ணிலிருந்து தண்ணீரை இறக்கி அனுப்புபவர் யார்," என்று அவர்களிடம் நீர் கேட்டால், அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்.**" கூறுவீராக, " **கடவுள்**–ஐப் புகழுங்கள்." அவர்களில் பெரும்பாலானோர் புரிந்து கொள்வதில்லை.

*உங்களுடைய முன்னுரிமைகளை*
*மறு சீரமைத்துக் கொள்ளுங்கள்*

64. இவ்வுலக வாழ்வு வீண்பகட்டும் விளையாட்டும் என்பதை விட அதிகம் எதுவுமில்லை, அதே சமயம் மறுவுலகின் வீடுதான் மெய்யான வாழ்வாகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

65. அவர்கள் ஒரு கப்பலில் சவாரி செய்யும்போது, தங்களுடைய பிரார்த்தனைகளை அவருக்கே அர்ப்பணித்தவர்களாக, அவர்கள் **கடவுள்**–ஐ இறைஞ்சுகின்றனர். ஆனால் அவர்களை அவர் காப்பாற்றிக் கரை சேர்த்தவுடன், அவர்கள் போலித் தெய்வ வழிபாட்டிற்கு மீண்டும் திரும்பி விடுகின்றனர்.

66. அவர்களுக்கு நாம் கொடுத்தவற்றை அவர்கள் நம்பமறுக்கட்டும், மேலும் அவர்கள் தற்காலிகமாகச் சுகமனுபவிக்கட்டும்; அவர்கள் நிச்சயமாகக் கண்டு கொள்வார்கள்.

67. நம்மால் பாதுகாப்பாக ஆக்கப்பட்டதொரு புனித ஆலயத்தை நாம் நிர்மாணித்துள்ளோம் என்பதையும், அதே சமயம் அவர்களைச் சுற்றியுள்ள எல்லா மக்களும் தொடர்ந்த ஆபத்திலிருப்பதையும் அவர்கள் காணவில்லையா? அவ்வாறிருந்தும் அவர்கள் பொய்மையின் மீது நம்பிக்கை கொள்வதுடன், **கடவுள்**–ன் ஆசீர்வாதங்களை ஏற்கமறுத்தும் விடுவார்களா?

68. பொய்களைப் புனைந்து அவற்றைக் **கடவுள்** மீது சாட்டுகின்ற, அல்லது சத்தியம் அவனிடம் வரும் போது அதனை ஏற்கமறுக்கின்ற ஒருவனை விட மிகத்தீயவன் யார்? நம்பமறுப்பவர்களுக்கு நரகம் ஒரு நியாயமான தண்டனைதான் அல்லவா?

69. நமக்காகப் பாடுபடுவோரைப் பொறுத்தவரை, நமது பாதைகளில் நிச்சயமாக நாம் அவர்களை வழி நடத்துவோம். மிக நிச்சயமாக, **கடவுள்** பக்திமான்களுடன் இருக்கின்றார்.

****

## சூரா 30: ரோமர்கள் (அல்–ரூம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம.*

2. நிச்சயமாக, ரோமர்கள் தோற்கடிக்கப்படுவார்கள்.

3. அருகில் உள்ள நிலத்தில். அவர்களுடைய தோல்விக்குப் பின்னர், அவர்கள் மீண்டும் எழுச்சி கொண்டு வெற்றி பெறுவார்கள்.

**30:1 இதற்கு முன்னர் மர்மமாக இருந்து வந்த இந்த துவக்க எழுத்துக்களின் விரிவான விளக்கத்திற்கு பின் இணைப்பு 1 ஐக் காண்க.*

4. சில வருடங்களுக்குள். முதல் முன்னறிவிப்பு மற்றும் இரண்டாவது ஆகிய இரண்டிலும், **கடவுள்**–ன் தீர் மானம் இவ்விதமானதாகும். அந்நாளில், நம்பிக்கை யாளர்கள் மகிழ்ச்சியடைவார்கள்

5. **கடவுள்** தரும் வெற்றியில். தான்நாடிய எவருக்கும் அவர் வெற்றியை வழங்குகின்றார். அவர் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*தவறான வாழ்வில் மூழ்கிவிடுதல்*

6. **கடவுள்**–ன் வாக்குறுதி இவ்விதமானதாகும் – மேலும் **கடவுள்** ஒருபோதும் தன் வாக்குறுதியை முறிப்பதில்லை – ஆனால், மனிதர்களில் அதிகமா னோர் அறியமாட்டார்கள்.

7. அவர்களால் காண முடிகின்ற இவ்வுலக விஷயங் களைப் பற்றி மட்டுமே அக்கறை கொள்கின்ற அதே சமயம், மறுவுலகின்பால் அவர்கள் முற்றிலும் அலட்சி யமாக இருக்கின்றனர்.

8. அவர்கள் ஏன் தங்களைப் பற்றியே சிந்தித்துப் பார்க்க வில்லை ? வானங்களையும் பூமியையும், இன்னும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தவணைக்காகவுமே தவிர, **கடவுள்** படைக்கவில்லை. எப்படியிருப்பினும், அதிகமான மக்கள், தங்களுடைய இரட்சகரைச் சந்திப்பதைக் குறித்து, நம்பமறுப்பவர்களாக உள்ளனர்.

9. பூமியில் சுற்றித் திரிந்து, தங்களுக்கு முன்னிருந்த வர்களுக்கு நேர்ந்த விளைவுகளை அவர்கள் கவனித்துப் பார்க்கவில்லையா ? அவர்கள் மிகவும் வலிமை நிறைந்தவர்களாக, மிகவும் வளமானவர் களாக, மேலும் பூமியின் மீது அதிகம் விளைவித்த வர்களாகவும் இருந்து வந்தனர். அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளுடன் சென்றனர். ஆகவே, அவர்களுக்கு அநீதியிழைத்தது **கடவுள்** அல்ல, அவர்கள்தான் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

10. தீமைகள் புரிந்தவர்களுக்குரிய பின்விளைவுகள் தீயவையாகவே இருத்தல் வேண்டும். அது ஏனெ னில் அவர்கள் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை ஏற்க மறுத்தனர், மேலும் அவற்றைப் பரிகாசம் செய்தனர்.

*போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் தங்கள் போலித் தெய்வங்களைக் கைவிட்டு விடுகின்றனர்*

11. **கடவுள்**தான் படைப்பைத் துவங்கி, பின்னர் அதனை மீண்டும் செய்கின்றார். இறுதியாக, அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்.

12. வேளை நிகழ்ந்தேறும் அந்நாளில், குற்றவாளிகள் அதிர்ச்சியடைந்து விடுவார்கள்.

13. அவர்கள் சார்பாகப் பரிந்துரைக்க அவர்களுடைய போலித் தெய்வங்களுக்கு சக்தி எதுவுமிருக்காது; அதற்கு மாறாக, தங்களுடைய போலித் தெய்வங் களை அவர்கள் கைவிட்டு விடுவார்கள்.

14. வேளை நிகழ்ந்தேறும் அந்நாளின் போது, அவர்கள் பிரிந்து விடுவார்கள்.

15. நம்பிக்கை கொண்டு நன்னெறியான வாழ்வு நடத்து பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் களிப்புடன் சுவனத்தில் இருப்பார்கள்.

16. நம்பமறுத்து, நமது வெளிப்பாடுகளையும் மறுவுல கின் சந்திப்பையும் ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தண்டனையில் என்றென் றும் நிலைத்திருப்பார்கள்.

*எந்நேரமும், கடவுளை நினைவு கூர்ந்திடுங்கள்*

17. எனவே, இரவில் நீங்கள் ஓய்வெடுக்கும் போதும், காலையில் நீங்கள் விழித்தெழும் போதும் நீங்கள் **கடவுள்**–ஐத் துதிக்க வேண்டும்.

18. மாலை முழுவதும், அவ்வண்ணமே உங்களுடைய நாளின் நடுவிலும், வானங்களிலும் பூமியி லும் உள்ள அனைத்துப் புகழும் அவருக்குரியது.

19. இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றை அவர் கொண்டு வருகின்றார், மேலும் உயிருள்ளவற்றி லிருந்து இறந்தவற்றைக் கொண்டு வருகின்றார், மேலும் நிலத்தை அது இறந்துவிட்ட பின்னர் அவர் உயிர்ப்பிக்கின்றார்; அதைப்போலவே நீங்கள் உயிர்த் தெழுப்பப்படுகின்றீர்கள்.

*திருமணம்: ஒரு தெய்வீக ஒழுங்குமுறை*

20. மண்ணிலிருந்து அவர் உங்களை படைத்திருப்பதும், பின்னர் நீங்கள் இனவிருத்தி செய்கின்ற மனிதர் களானதும் அவருடைய சான்றுகளில் உள்ளவை யாகும்.

21. நீங்கள் ஒருவரைக் கொண்டு மற்றவர் மனஅமைதி யும் திருப்தியும் கொள்வதற்காக, உங்களிலிருந்தே உங்கள் வாழ்க்கைத் துணைகளை உங்களுக்காக அவர் படைத்திருப்பதும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும், மேலும் உங்கள் இதயங்களில் உங்களுடைய வாழ்க்கைத் துணைகளின்பால் அன்பையும் அக்கறையையும் அவர் அமைத்தார். இதில், எண்ணிப் பார்க்கின்ற மக்களுக்குப் போது மான சான்றுகள் உள்ளன.

*மேலதிகமான சான்றுகள்*

22. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பும், மேலும் உங்களுடைய மொழிகளிலும் நிறங்களிலும் உள்ள வேறுபாடுகளும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். இவற்றில், அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் உள்ளன.

23. இரவுப் பொழுதில் அல்லது பகலில் நீங்கள் உறங்குவதும், அவருடைய வாழ்வதாரங்களைத் தேடி நீங்கள் வேலை செய்வதும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். இதில், செவியேற்க இயலும் மக்களுக்குப் போதுமான சான்றுகள் உள்ளன.

24. அச்சத்திற்கும், அவ்வண்ணமே எதிர்ப்பார்ப்பிற்கும் மூலாதாரமாக மின்னலை அவர் உங்களுக்குக் காட்டுவதும், பின்னர் இறந்துபோயிருந்த ஒரு நிலத்தை உயிர்ப்பிப்பதற்காக விண்ணிலிருந்து தண்ணீரை அவர் இறக்குவதும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். இவற்றில், புரிந்து கொள்கின்ற மக்களுக்குப் போதுமான சான்றுகள் உள்ளன.

25. வானமும் பூமியும் அவருடைய கட்டளையின் கீழ் நிற்கின்றன என்பது அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். இறுதியில், பூமியை விட்டு வெளியே அவர் உங்களை அழைக்கும் போது, ஒரே அழைப்பு, நீங்கள் உடனடியாக வெளி வருவீர்கள்.

26. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் அவருக்குரியவர்கள்; அனைவரும் அவருக்கு அடங்கி நடப்பவர்களாகவே இருக்கின்றனர்.

27. மேலும் அவர்தான் படைப்பைத் துவக்குபவர், மேலும் அதனை மீண்டும் செய்பவர்; இது அவருக்கு இன்னமும் எளிதானதேயாகும். வானங்களிலும் பூமியிலும் உள்ள மிகச் சிறப்பான உவமானங்கள் அவருக்குரியன, மேலும் அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*போலித்தெய்வ வழிபாட்டின் அபத்தத்தன்மை*

28. உங்களிலிருந்தே ஓர் உதாரணத்தை அவர் இங்கே உங்களுக்கு உரைக்கின்றார்: நீங்கள் உங்களுடைய ஊழியர்களையோ அல்லது கீழுள்ளவர்களையோ உங்களுக்கே அவர்கள் போட்டியாக ஆகும் அளவுக்கு, உங்களுக்குச் செலுத்தப்படும் அதே அளவு மரியாதையை அவர்களுக்கு நீங்கள் செலுத்தும் அளவுக்கு எப்பொழுதாவது உயர்த்துகின்றீர்களா? புரிந்து கொள்கின்ற மக்களுக்கு இந்த வெளிப்பாடுகளை இவ்விதமாக நாம் விவரிக்கின்றோம்.

29. உண்மையில், வரம்புமீறியவர்கள் அறிவின்றி, தங்களுடைய சுய அபிப்பிராயங்களைப் பின்பற்றினார்கள். **கடவுள்**–ஆல் வழிகேட்டிற்கு அனுப்பப்பட்டவர்களைப் பின்னர் எவரால் வழிநடத்த முடியும்? எவரும் எக்காலத்திலும் அவர்களுக்கு உதவ இயலாது.

*ஏகத்துவம்: இயற்கையான உள்ளுணர்வு**

30. எனவே, கண்டிப்பான ஏகத்துவ மார்க்கத்திற்கு உங்களையே நீங்கள் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். **கடவுள்**–ஆல் மனிதர்களுக்குள் வைக்கப்பட்ட இயற்கை உள்ளுணர்வு இவ்விதமானதே. **கடவுள்**–ன் இவ்விதமான படைப்பு ஒருபோதும் மாறாது. இதுவே பூரணமான மார்க்கமாகும், ஆனால் பெரும்பாலான மக்கள் அறியமாட்டார்கள்.

31. நீங்கள் அவருக்குச் சரணடையவும், அவரிடம் பக்தியோடிருக்கவும், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும் வேண்டும், மேலும் – நீங்கள் என்ன செய்தாலும் – போலித்தெய்வ வழிபாட்டிற்குள் மட்டும் எக்காலத்திலும் விழுந்து விடாதீர்கள்.

*பிரிவினைவாதம் கண்டிக்கப்படுகின்றது*

32. தங்களுடைய மார்க்கத்தைப் பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டவர்களைப் போல் *(போலித் தெய்வ வழிபாட்டில் விழுந்து விடாதீர்கள்);* ஒவ்வொரு பிரிவும் தங்களிடம் இருப்பதைக் கொண்டு களிப்படைகின்றது.

*கஷ்ட காலத்தில் நண்பர்கள்*

33. துன்பம் மக்களை வருத்தும் பொழுது, தங்களையே முற்றிலும் அவருக்கு அர்ப்பணித்தவர்களாக, அவர்கள் தங்கள் இரட்சகரின்பால் திரும்புகின்றனர். ஆனால் பின்னர், அவர்கள் மீது அவர் கருணையைப் பொழிந்தவுடன், அவர்களில் சிலர் போலித் தெய்வ வழிபாட்டிற்கு மீண்டும் திரும்பி விடுகின்றனர்.*

34. நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றுக்கு அவர்கள் நன்றி கெட்டவர்களாக இருந்து கொள்ளட்டும். தற்காலிகமாகச் சுகமனுபவியுங்கள்; நீங்கள் நிச்சயமாக கண்டு கொள்வீர்கள்.

---

**30:30* கடவுளை மட்டுமே நம்முடைய இரட்சகராகவும் எஜமானராகவும் அடையாளம் கண்டுகொள்வது ஓர் இயற்கையான உள்ளுணர்வாகும். இத்தகையதொரு உள்ளுணர்வுடன்தான் நாம் இவ்வுலகில் அவதரித்துள்ளோம். பார்க்க 7:172–173 மற்றும் பின் இணைப்பு 7.*

**30:33 தங்களைக் குணப்படுத்தியதற்காக புனித ஜூடுக்கு நன்றி தெரிவித்து மக்கள் தினசரிகளில் கொடுக்கின்ற வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்களை நாம் காண்பது ஒரு பொதுவான உதாரணமாகும். அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னர், அவர்கள் தங்களைக் குணப்படுத்தும்படிக் கடவுளிடம் கபடமின்றி இறைஞ்சுகின்றனர். ஆனால் அறுவை சிசிச்சை வெற்றியடைந்தவுடன், அவர்கள் புனித ஜூடுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்!!!*

35. அவர்களுடைய போலித்தெய்வ வழிபாட்டை நியாயப் படுத்துகின்ற அதிகாரத்தை நாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றோமா ?

36. மனிதர்கள் மீது நாம் கருணையை அருளும் பொழுது அவர்கள் அதில் களிப்படைகின்றனர். ஆனால் அவர் களுடைய செயல்களின் விளைவாக, அவர்களுக் குத் துன்பம் நேரிடும் பொழுது, அவர்கள் நிராசைய டைந்து விடுகின்றனர்.

37. **கடவுள்** தான்நாடுகின்ற எவருக்கும் வாழ்வாதாரத் தினை அதிகரிக்கின்றார், அல்லது குறைக்கின்றார் என்பதை அவர்கள் உணரவில்லையா ? நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இவை படிப்பினைகளாக இருக்க வேண்டும்.

38. எனவே, உறவினர்களுக்கும், அவ்வாறே ஏழை களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவர்களுக்கு உரிமையுள்ள *(தர்மப்)* பங்கை கொடுக்க வேண் டும். மெய்யாகவே **கடவுள்**–ன் பொருத்தத்தைத் தேடு பவர்களுக்கு இதுவே மிகச் சிறந்ததாகும்; அவர் களே வெற்றியாளர்கள்.

39. சில மனிதர்களுடைய வளத்தைப் பெருக்குவதற் காக நடைமுறைப்படுத்தப்படும் பெருவட்டியானது, **கடவுள்**–யிடம் எந்த ஒரு லாபத்தையும் அடைவ தில்லை. ஆனால் நீங்கள் **கடவுள்**–ன் பொருத்தத் தைத் தேடியவர்களாக, தர்மம் வழங்கினால், இவர் கள்தான் தங்களுடைய வெகுமதியைப் பன்மடங் காக்கிப் பெற்றுக் கொள்பவர்கள்.

*வழிபடத் தகுதியானவர் யார் ?*

40. **கடவுள்**தான் உங்களைப் படைத்தவர். அவர்தான் உங்களுக்கு வழங்குபவர். அவர்தான் உங்களை மரணத்தில் ஆழ்த்துபவர். அவர்தான் உங்களை உயிர்ப்பித்தெழுப்புபவர். உங்களுடைய போலித் தெய்வங்கள் எதுவேனும் இவ்விஷயங்களில் எதை யேனும் செய்ய இயலுமா ? அவர் துதிப்பிற்குரியவர். பங்குதாரர்கள் எவரையும் கொள்வதற்கும் அப்பாற் பட்டு அவர் மிகவும் மேலானவர்.

41. மனிதர்கள் செய்தவற்றின் காரணத்தால், நிலம் மற்றும் கடல் எங்கிலும் பேரழிவுகள் பரவி விட்டன. இவ்விதமாக அவர்களுடைய சில செயல்களின் பின் விளைவுகளை அவர்கள் சுவைக்கும்படி அவர் செய் கின்றார், அவர்கள் *(சரியான காரியங்களுக்கு)* திரும் பும் பொருட்டு.

*சரித்திரத்திலிருந்து கற்றுக் கொள்ளுதல்*

42. கூறுவீராக, "பூமியில் சுற்றித் திரிந்து உங்களுக்கு முன்னர் இருந்தவர்களுக்கு நேர்ந்த பின்விளைவு களைக் கவனித்துப் பாருங்கள்." அவர்களில் பெரும் பாலோர் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களாக இருந்தனர்.

43. எனவே, தவிர்க்கப்பட முடியாததாக **கடவுள்**–ஆல் ஆக்கப்பட்டிருக்கின்ற ஒரு நாள் வருமுன்னர், பூரண மான இந்த மார்க்கத்திற்கு நீங்கள் உங்களையே முற்றிலும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அந் நாளில், அவர்கள் அதிர்ச்சியடைவார்கள்.

44. நம்பமறுக்கின்ற எவரொருவரும், தன் சொந்த ஆத்மாவுக்குக் கேடாகவே நம்பமறுக்கின்றார், அதே சமயம் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோர், தங்களுடைய சொந்த ஆத்மாக்களை பலப்படுத்திக் கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவுமே அவ்வாறு செய்கின்றனர்.

45. ஏனெனில் நம்பிக்கை கொண்டு நன்னெறியான வாழ்வு நடத்துவோருக்குத் தன்னுடைய கொடை களிலிருந்து அவர் தாராளமான பிரதிபலனளிப்பார். நம்பமறுப்பவர்களை அவர் நேசிப்பதில்லை.

46. தன்னுடைய கருணையை உங்கள்மீது பொழிவதற் காகவும், அவருடைய விதிகளுக்கேற்பக் கடலில் கப்பல்கள் செல்ல அனுமதிப்பதற்காகவும், மேலும் *(வணிகத்தின் மூலமாக)* அவருடைய கொடைகளை நீங்கள் தேடிக் கொள்வதற்காகவும் நற் சகுனங்களு டன் காற்றுகளை அவர் அனுப்புவது என்பது அவரு டைய சான்றுகளில் உள்ளவையாகும், நீங்கள் நன்றி யுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

*நம்பிக்கையாளர்களுக்கு*
*உத்தரவாதமான வெற்றி*

47. உமக்கு முன்னரும் தூதர்களை அவர்களுடைய சமூகத்தாருக்கு, ஆழ்ந்த அத்தாட்சிகளுடன் நாம் அனுப்பியுள்ளோம். அதனைத் தொடர்ந்து, வரம்பு மீறியவர்களை நாம் தண்டித்தோம். நம்பிக்கையாளர் களுக்கு வெற்றியை அளிப்பதென்பது நம்முடைய கடமையாகும்.

48. **கடவுள்**தான் அவருடைய நாட்டத்திற்கேற்ப, ஆகா யம் முழுவதும் பரவி இருக்கும் பொருட்டு, மேகங் களை எழுப்புவதற்காக, காற்றுகளை அனுப்புகின்றவர். பின்னர் அவர் மேகங்களை அடுக்குகின்றார், பின்னர் அதிலிருந்து மழை இறங்கி வருவதை நீங்கள் காண் கின்றீர்கள். தன்னுடைய ஊழியர்களில் அவர் தேர்ந் தெடுத்த எவர் மீதும் அது விழும் பொழுது, அவர்கள் களிப்படைகின்றார்கள்.

49. அவர்கள் மீது அது விழுவதற்கு முன்னர், அவர்கள் விரக்தியில் தஞ்சமடைந்து இருந்தனர்.

50. **கடவுள்**–ன் தொடர் கருணையையும், மேலும் இறந்து போன நிலத்தை அவர் எவ்வாறு உயிர்ப்பிக்கின்றார் என்பதையும் நீங்கள் போற்றிட வேண்டும். நிச்சயமாக அதைப்போலவே இறந்தவர்களை அவர் உயிர்த்தெழுப்புவார். அவர் சர்வ சக்தியுடையவர்.

51. அதற்கு மாறாக ஒரு மஞ்சள் நிற மணற்புயலை அவர்கள் மீது நாம் அனுப்பியிருந்தால், அவர்கள் தொடர்ந்து நம்பமறுத்துக் கொண்டிருந்திருப்பார்கள்.

52. இறந்தவர்களையோ, அன்றிச் செவிடர்களையோ, அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அழைப்பைச் செவியேற்கும்படிச் செய்ய உம்மால் இயலாது.

53. அன்றி குருடர்களை அவர்களுடைய வழிகேட்டை விட்டு வெளியே வழிநடத்தவும் உம்மால் இயலாது. நம்முடைய வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொள்வதுடன், சரணடைந்தோராக ஆவதென்று தீர்மானித்தவர்களால் மட்டுமே நீர் செவியேற்கப்பட முடியும்.

*இந்த வாழ்வு மிகவும் குறுகியது*

54. **கடவுள்**தான் உங்களை பலஹீனமாகப் படைத்தார், பிறகு பலஹீனத்திற்குப் பின்னர் உங்களுக்கு திடகாத்திரமளித்தார், பிறகு திடகாத்திரத்தைத் தொடர்ந்து பலஹீனத்தையும் நரைமுடியையும் மாற்றியமைத்தார். தான்நாடிய எதனையும் அவர் படைக்கின்றார். அவர் அனைத்தையும் அறிந்தவர், சர்வ சக்தியுடையவர்.

55. வேளை நிகழ்ந்தேறும் அந்நாள் வரும்போது, குற்றவாளிகள் ஒரு மணிநேரம் மட்டுமே *(இவ்வுலகில்)* நிலைத்திருந்ததாகச் சத்தியம் செய்வார்கள். அவர்கள் அவ்வளவு தவறாக இருந்தனர்.

56. அறிவையும் விசுவாசத்தையும் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் கூறுவார்கள், "**கடவுள்**–ன் உத்தரவிற்கேற்ப, உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை, நீங்கள் நிலைத்திருந்தீர்கள். இப்பொழுது, இதுதான் உயிர்த்தெழுப்பப்படும் நாளாகும், ஆனால் நீங்கள் இதனை அடையாளம் காணத் தவறி விட்டீர்கள்."

57. எனவே, சாக்குபோக்கு எதுவும், அந்நாளில், வரம்பு மீறுபவர்களுக்குப் பலனளிக்காது, அன்றி அவர்கள் பிழைபொறுக்கப்படவும் மாட்டார்கள்.

58. இவ்விதமாக, எல்லாவிதமான உதாரணங்களையும் இந்தக் குர்ஆனில் மக்களுக்காக நாம் எடுத்துரைத்துள்ளோம். இருப்பினும், என்ன விதமான சான்றை நீங்கள் நம்பமறுப்பவர்களுக்குக் காட்டினாலும் பொருட்டல்ல, அவர்கள் கூறுகின்றனர், "நீங்கள் பொய்யுரைப்பவர்கள்."

*தெய்வீகத்தலையீடு*

59. இவ்விதமாகக் **கடவுள்** அறியாதவர்களின் இதயங்களை முத்திரையிட்டு விடுகின்றார்.

60. எனவே, நீர் உறுதியுடன் சகித்துக் கொண்டிருக்க வேண்டும் – ஏனெனில் **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதாகும் – மேலும் உறுதிப்பாட்டை அடையாதவர்களால் கலக்கமடைந்து விடக் கூடாது.

****

# சூரா 31: லுக்மான் (லுக்மான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம.*

2. *(எழுத்துக்களாகிய)* இவை ஞானத்தைக் கொண்ட இப்புத்தகத்தின் சான்றுகளாக அமைகின்றன.

3. நன்னெறியாளர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கும் ஒரு கருணையுமாகும்.

4. அவர்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைபிடிப்பார்கள், கடமையான *(ஜகாத்)* தர்மத்தைக் கொடுப்பார்கள், மேலும் மறுவுலகைக் குறித்து, அவர்கள் பரிபூரணமான உறுதியோடிருப்பார்கள்.

5. அவர்கள் தங்கள் இரட்சகரிடமிருந்து வந்த வழிகாட்டலைப் பின்பற்றுகின்றனர், மேலும் அவர்களே வெற்றியாளர்கள்.

6. மனிதர்கள் மத்தியில், அடிப்படையற்ற *ஹதீஸ்*களை ஆதரிப்பவர்கள் இருக்கின்றனர், மேலும் இவ்விதமாக அறிவின்றி மற்றவர்களைக் **கடவுள்–ன்** பாதையிலிருந்து திருப்புகின்றனர், மேலும் அதனை வீணாகவும் எடுத்துக் கொள்கின்றனர். இழிவு நிறைந்த தொரு தண்டனைக்கு இவர்கள் உள்ளாகி விட்டனர்.

7. மேலும் அவர்களில் ஒருவனுக்கு நமது வெளிப்பாடுகள் ஓதிக்காட்டப்படும் போது, அவற்றை அவன் ஒரு போதும் கேளாததைப் போலவும், அவனது காதுகள் செவிடானதைப் போலவும் ஆணவத்துடன் அவன் திரும்பிச் சென்று விடுகின்றான். வலி நிறைந்த தொரு தண்டனையை அவனுக்கு வாக்களிப்பீராக.

**31:1 இந்த துவக்க எழுத்துக்களின் முக்கியமான பணிக்கு, பின் இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.*

8. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொரு வாழ்வு நடத்துவோர் ஆனந்தமயமான தோட்டங்களுக்குத் தகுதி பெற்று விட்டனர்.

9. நிரந்தரமாக அங்கு அவர்கள் தங்கியிருப்பார்கள். இது **கடவுள்–ன்** சத்தியமான வாக்குறுதியாகும். அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

10. நீங்கள் காணக்கூடிய தூண்கள் இன்றி வானங்களை அவர் படைத்தார். உங்களோடு சேர்ந்து அது உருண்டு விடாதிருக்கும் பொருட்டு பூமியின் மீது நிலைப்படுத்திகளை *(மலைகள்)* அவர் நிர்மாணித்தார், மேலும் அனைத்து வகைப் பிராணிகளையும் அதன் மீது அவர் பரப்பினார். அனைத்து வகையான அழகிய தாவரங்களையும் வளர்ப்பதற்காக விண்ணிலிருந்து தண்ணீரை நாம் இறக்கி அனுப்புகின்றோம்.

11. **கடவுள்**–ன் படைப்பு இத்தகையதே; அவருடன் நீங்கள் அமைத்துக் கொள்ளும் போலித் தெய்வங்கள் எதனைப் படைத்திருக்கின்றன என்பதை எனக்குக் காட்டுங்கள். உண்மையில், வரம்புமீறுபவர்கள் மிக நெடிய வழிகேட்டில் இருக்கின்றனர்.

*லுக்மானின் ஞானம்*

12. லுக்மானுக்கு நாம் ஞானத்தைக் கொடையளித்தோம்: "நீ **கடவுள்**–க்கு நன்றியுடையவனாக இருக்க வேண்டும்." எவரொருவர் நன்றியுடையவராக இருக்கிறாரோ, அவர் தன் சொந்த நலனுக்காகவே நன்றியுடையவராக இருக்கின்றார். நன்றி கெட்டவர்களாக மாறி விட்டவர்களைப் பொறுத்த வரை, **கடவுள்** எந்தத் தேவையுமற்றவர், புகழ்ச்சிக்குத் தகுதியானவர்.

13. லுக்மான் தன்னுடைய மகனிடம் அவருக்கு உபதேசம் செய்தவராக, அவர் கூறியதை நினைவு கூர்வீராக, "என் மகனே, **கடவுள்–வுடன்** போலித் தெய்வங்கள் எதனையும் அமைத்துக் கொள்ளாதே; போலித் தெய்வ வழிபாடு மிகப்பெரியதோர் அநீதியாகும்."*

*இரண்டாம் கட்டளை*

14. அவனுடைய பெற்றோரைக் கண்ணியப்படுத்துமாறு மனிதப்படைப்பை நாம் ஏவினோம். அவனுடைய தாய் அவனைச் சுமந்தாள், மேலும் அந்தச் சுமை கனத்துடன் மேலும் கனம் கூடிக்கொண்டே சென்றது. பால் குடி மறக்கச் செய்யப்படும் வரை அதற்கு இரண்டு வருடங்கள் *(தீவிர கவனம்)* எடுத்துக் கொள்ள வேண்டியது இருக்கின்றது. நீங்கள் எனக்கும் உங்களுடைய பெற்றோர்களுக்கும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இறுதி விதி என் வசமே உள்ளது.

15. என்னுடன் ஏதேனும் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்ள அவர்கள் உம்மை நிர்பந்திக்க முயற்சித்தால், அவர்களுக்குக் கீழ்ப்படியாதீர். ஆனால் தொடர்ந்து அவர்களை இவ்வுலகில் நல்லமுறையில் நடத்துவீராக. என்னைச் சரணடைந்தோருடைய பாதையை மட்டும் நீர் பின்பற்ற வேண்டும். இறுதியாக, நீங்கள் அனைவரும் என்னிடம் திரும்புவீர்கள், பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் நான் உங்களுக்கு அறிவிப்பேன்.

*லுக்மானின் உபதேசம்*

16. "என் மகனே, ஒரு பாறையின் ஆழத்தினுள் உள்ள, ஒரு கடுகின் வித்தளவு மிகச் சிறியதான ஒன்றாக இருந்தாலும், அது வானங்களிலோ அல்லது பூமியிலோ இருந்த போதிலும், **கடவுள்** அதனைக் கொண்டு வருவார் என்பதை அறிந்து கொள். **கடவுள்** கம்பீரமானவர், நன்கறிந்தவர்.

17. "என் மகனே, *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளை நீ கடைப்பிடிக்க வேண்டும். நன்மைகளை ஆதரிப்பதுடன் தீமைகளை நீ தடுக்கவும் வேண்டும், மேலும் இன்னல்களை எதிர்கொள்ளும் போது உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து இருக்க வேண்டும். இவை மிகவும் கண்ணியமான பண்புகளாகும்.

18. "மக்களை நீ ஆணவத்துடன் நடத்த வேண்டாம், அன்றி பெருமையாக பூமியில் சுற்றித் திரியவும் வேண்டாம். காட்டிக் கொள்ளும் ஆணவக்காரர்களைக் **கடவுள்** நேசிப்பதில்லை.

19. "எளிமையாக நடைபோடு, மேலும் உனது குரலைத் தாழ்த்திக் கொள்–குரல்களிலேயே அருவருப்பானது கழுதையின் குரலே ஆகும்."

20. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றையும் உங்களுக்குப் பணி செய்வதற்காகக் **கடவுள்** ஆக்கியிருக்கின்றார், மேலும் தன் ஆசிகளை–கண் கூடானவையும், மறைந்திருப்பவையும்–உங்கள் மீது பொழிந்திருக்கின்றார் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? இருப்பினும், சில மனிதர்கள் அறிவில்லாமலும், வழிகாட்டல் இல்லாமலும், மேலும் ஒளியூட்டும் வேதமில்லாமலும் **கடவுள்**–ஐப் பற்றித் தர்க்கிக்கின்றனர்.

*பெற்றோர்களைக் கண்மூடிப் பின்பற்றுதல்:*
*ஒரு பொதுவான சோகம்*

21. "**கடவுள்**–ன் இந்த வெளிப்பாடுகளைப் பின்பற்றுங்கள்," என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், "அல்ல, எங்கள் பெற்றோர்கள் எதனைச் செய்ய நாங்கள் கண்டோமோ அதனை மட்டுமே நாங்கள் பின்பற்றுகின்றோம்." சாத்தான் அவர்களை நரக வேதனையின்பால் வழிநடத்தினாலுமா?

**31:13 நீங்கள் ஒரு குழந்தையின் மீது அக்கறை எடுத்து, அவனுக்கு மிகச் சிறந்த கல்வியைக் கொடுத்து, மேலும் வாழ்க்கைக்காக அவனைத் தயார் செய்வது, பிறகு வேறு எவரோ ஒருவருக்கு அவன் நன்றி தெரிவிப்பதை நீங்கள் காணத்தான் என்றால், நீங்கள் எப்படி உணர்வீர்கள்? போலித்தெய்வ வழிபாடு இவ்விதமானதேயாகும்; அநீதியானது.*

*மிகவும் உறுதியான பிடிமானம்*

22. **கடவுள்**–க்கு முழுமையாகச் சரணடைந்து, அதே சமயம் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோர், மிகவும் உறுதியான பிடிமானத்தைப் பற்றிக் கொண்டு விட்டனர். ஏனெனில் **கடவுள்** அனைத்து விஷயங்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுள்ளார்.

23. நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய நம்பமறுத்தலால் கவலைக்குள்ளாகாதீர். அவர்களுடைய இறுதித் திரும்புதல் நம்மிடமே உள்ளது, பின்னர் அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் அவர்களுக்கு அறிவிப்போம். உள்ளார்ந்த எண்ணங்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

24. நாம் அவர்களைத் தற்காலிகமாகச் சுகமனுபவிக்க விடுகின்றோம், பின்னர் அவர்களைக் கடுமையான தண்டனைக்கு ஆட்படுத்துவோம்.

*அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை கொள்கின்றனர்*

25. "வானங்களையும் பூமியையும் படைத்தவர் யார்," என அவர்களிடம் நீர் கேட்டால், அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்.**" கூறுவீராக, "புகழ்ச்சி **கடவுள்**–க் குரியது." இருப்பினும், அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

26. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்குரியது. **கடவுள்**தான் மிக்க செல்வந்தர், மிக்க புகழுக்குத் தகுதியானவர்.

*நமக்குத் தேவையான வார்த்தைகள் எல்லாம் இவைதான்*

27. பூமியின் மீதுள்ள மரங்கள் அனைத்தும் எழுது கோல்களாக ஆக்கப்பட்டு, அந்தப் பெருங்கடல் மையை வழங்க, இன்னும் ஏழு பெருங்கடல்கள் அதிகரிக்கப் பட்டாலும், **கடவுள்**–ன் வார்த்தைகள் தீர்ந்திடாது. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

28. உங்கள் அனைவருடைய படைப்பும் உயிர்த்தெழுப்புதலும் ஒரு நபருடையதைப் போன்றதேயாகும். **கடவுள்** செவியேற்பவர், பார்ப்பவர்.

*கடவுள் மட்டுமே வழிபடத் தகுதியானவர்*

29. **கடவுள்** இரவைப் பகலினுள் ஒன்று சேர்க்கின்றார் மேலும் பகலை இரவினுள் ஒன்று சேர்க்கின்றார் என்பதையும், மேலும் சூரியனையும் சந்திரனையும் உங்களுடைய பணிக்கென அவர் ஆக்கியிருக்கின்றார் என்பதையும், ஒவ்வொன்றும் அதன் சுற்றுப் பாதையில் குறிப்பிடப்பட்டதொரு வாழ்க்கைத் தவணைக்கென ஓடிக்கொண்டிருக்கின்றன, மேலும் நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா ?

30. **கடவுள்**தான் சத்தியம், அதே சமயம் அவருடன் அவர்கள் அமைத்துக் கொள்கின்ற எந்த போலித் தெய்வமும் பொய்மையேயாகும் என்பதையும், மேலும் **கடவுள்** மிகவும் உயர்ந்தவர், மகாப் பெரியவர் என்பதையும் இது நிரூபிக்கின்றது.

31. அவருடைய சான்றுகளில் சிலவற்றை உங்களுக்குக் காட்டுவதற்காக, **கடவுள்–ன்** வாழ்வாதாரங்களைச் சுமந்துகொண்டு, கப்பல்கள் கடலைச் சுற்றுகின்றன என்பதை நீங்கள் பார்க்கவில்லையா ? உண்மையில், உறுதிப்பாடும், நன்றியுமுடைய ஒவ்வொருவருக்கும் இவை போதிய சான்றுகளாக இருக்க வேண்டும்.

32. உக்கிரமான அலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் பொழுது, தங்களுடைய பிரார்த்தனைகளைக் கலப்பின்றி அவருக்கு மட்டுமே அர்ப்பணித்தவர்களாக, அவர்கள் **கடவுள்–ஐ** இறைஞ்சுகின்றனர். ஆனால் அவர்களைக் காப்பாற்றி அவர் கரை சேர்த்தவுடன், அவர்களில் சிலர் திரும்பிச் சென்று விடுகின்றனர். நம்பிக்கைத் துரோகிகளாகவும், நன்றிகெட்டவர்களாகவும் இருப்பவர்களைத் தவிர, எவரும் நம்முடைய வெளிப்பாடுகளைக் கைவிட்டு விடமாட்டார்கள்.

33. மனிதர்களே, நீங்கள் உங்கள் இரட்சகரிடம் பக்தியோடிருக்கவும், மேலும் ஒரு தந்தை தன் சொந்தப் பிள்ளைக்கு உதவ முடியாத, அன்றி ஒரு பிள்ளை தன் தந்தைக்கு உதவ முடியாத ஒரு நாளுக்கு அஞ்சிக் கொள்ளவும் வேண்டும். நிச்சயமாக, **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதாகும். எனவே, இந்த வாழ்க்கையினால் கவனம் திருப்பப்பட்டவராகி விடாதீர்; வெற்று மாயைகளால் **கடவுள்**–யிடமிருந்து கவனம் திருப்பப்பட்டவராகி விடாதீர்.

*நாம் அறிந்திருக்கக் கூடிய மற்றும் அறியாமலிருக்கக் கூடிய விஷயங்கள் **

34. வேளையை *(உலக முடிவு)** பற்றிய அறிவு **கடவுள்**–யிடமே உள்ளது. அவர்தான் மழையை இறக்கி அனுப்புகின்றவர், மேலும் கர்ப்பத்தில் உள்ளவற்றையும் அவர் அறிந்திருக்கின்றார். எந்த ஆத்மாவும் நாளை அதற்கு என்ன நிகழும் என்பதை அறியாது, மேலும் எந்த நிலத்தில் அவனோ அல்லது அவளோ மரணிப்பார் என்பதையும் எவர் ஒருவரும் அறியமாட்டார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், நன்கறிந்தவர்.

**31:34 கடவுள் தன்னுடைய அறிவை அவர் நாடும்போதெல்லாம் வெளிப்படுத்துகின்றார். இவ்வசனத்திலிருந்து மழையையும், கருவின் பால் வகையையும், முன்னரே கணிக்க நம்மால் இயலலாம் என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம். ஆனால் நாம் மரணிக்கும் நேரத்தையோ அல்லது இடத்தையோ ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது. 72:27க்கேற்ப, தன்னுடைய உடன்படிக்கைத் தூதரின் மூலமாக உலக முடிவைக் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். விபரங்களுக்கு, 15:87, 20:15 மற்றும் பின் இணைப்பு 25ஐக் காண்க.*

# சூரா 32: சிர வணக்கம் (அல்–ஸஜ்தா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அ. ல. ம.*

2. இந்தப் புத்தகம், ஒரு சந்தேகமுமின்றி, பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்துள்ள ஒரு வெளிப்பாடாகும்.

3. அவர்கள் கூறினர், "அவர் இதனைப் புனைந்து கொண்டார்." உண்மையில், இது உம் இரட்சகரிடமிருந்துள்ள சத்தியமாகும், உமக்கு முன்னர் ஓர் எச்சரிப்பவரை ஒருபோதும் பெற்றிருக்காத மக்களை எச்சரிப்பதற்காக, அவர்கள் வழிகாட்டப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு.

*கடவுளுக்கும் உங்களுக்கும் இடையில் இடைத்தரகர் இல்லை*

4. **கடவுள்**தான் வானங்களையும் பூமியையும், அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும் ஆறு நாட்களில் படைத்து, பின்னர் அனைத்து அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டவர். அவருடன் எவரும் உங்களுக்கு இரட்சகராக இல்லை, அன்றி ஒரு பரிந்துரைப்பவரும் உங்களுக்கு இல்லை. நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டீர்களா ?

5. வானங்கள் முதல் பூமி வரை அனைத்து விஷயங்களும் அவரால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவருக்கு, ஒரு நாள் என்பது உங்களுடைய ஆயிரம் வருடங்களுக்குச் சமமானதாகும்.

6. அனைத்து இரகசியங்களையும் அறிவிப்புக்களையும் அறிந்தவர்; எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*மானிடனின் துவக்கம்*

7. அவர்தான் அவர் படைத்த ஒவ்வொன்றையும் பூரணப்படுத்தினார், மேலும் மானிடனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து துவக்கினார்.

8. பின்னர், குறிப்பிடப்பட்டதொரு தாழ்ந்த திரவத்தின் மூலமாக அவனுடைய இனவிருத்தியை அவர் தொடர்ந்தார்.

9. அவர் அவனை உருவமைத்தார், மேலும் தன்னுடைய ஆவியிலிருந்து அவனுக்குள் ஊதினார், மேலும் அவர் உங்களுக்கு செவிப்புலன், பார்வை, மற்றும் மூளைகளைக் கொடுத்தார்; அரிதாகவே நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றீர்கள்.

10. அவர்கள் வியக்கின்றனர், "பூமிக்குள் நாம் மறைந்து விட்ட பிறகு, மீண்டும் புதிதாக நாம் படைக்கப்படுவோமா ?" இவ்விதமாக, தங்களுடைய இரட்சகரைச் சந்திப்பதைக் குறித்து, அவர்கள் நம்பமறுப்பவர்களாக உள்ளனர்.

11. கூறும், "உங்களுக்கெனப் பொறுப்பேற்றுள்ள அந்த வானவரால் நீங்கள் மரணத்தில் ஆழ்த்தப்படுவீர்கள், பின்னர் உங்கள் இரட்சகரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்."

*மிகவும் தாமதம்*

12. குற்றவாளிகள் தங்களுடைய இரட்சகரின் முன் அவர்களுடைய தலைகளைக் குனிந்து கொண்டு இருக்கும்போது மட்டும் நீர் காணமுடிந்தால்: "எங்கள் இரட்சகரே, இப்போது நாங்கள் பார்த்து விட்டோம், மேலும் நாங்கள் கேட்டு விட்டோம். எங்களைத் திருப்பி அனுப்புவீராக, அப்போது நாங்கள் நன்னெறியாளர்களாக இருப்போம். இப்போது நாங்கள் உறுதிப்பாட்டினை அடைந்து விட்டோம்."*

13. நாம் நாடியிருந்தால், ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அதனுடைய வழிகாட்டலை நம்மால் கொடுத்திருக்க முடியும், ஆனால் ஜின்கள் மற்றும் மானிடர்கள் ஆகிய அனைவரையும் ஒன்று சேர்த்து நரகத்தை நான் நிரப்புவேன் என்று முன்னர் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது.*

14. இந்த நாளை நீங்கள் மறந்துவிட்டதன் விளைவுகளைச் சுவையுங்கள்; இப்போது நாம் உங்களை மறந்து விட்டோம். உங்களுடைய சொந்தச் செயல்களுக்குப் பிரதிபலனாக நிரந்தரமான தண்டனைக்கு நீங்கள் உள்ளாகி விட்டீர்கள்.

---

**32:1* இந்த எழுத்துக்களின் பொருள் அடுத்த வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது: "இந்தப் புத்தகம், ஒரு சந்தேகமுமின்றி, பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்துள்ள ஒரு வெளிப்பாடாகும்." விபரங்களுக்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

**32:12* திருப்பி அனுப்பப்பட்டால், அதே வரம்புமீறல்களையே அவர்கள் செய்வார்கள். பார்க்க 6:28ன் அடிக்குறிப்பு.*

**32:13* பெரும்பாலான மக்கள், அவர்களை மீட்டுக் கொள்வதற்கான கடவுளின் அழைப்பை அலட்சியம் செய்வதைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக, நரகத்திற்குச் செல்வதை "வலியுறுத்துகின்றனர்." ஒரே ஒரு நபரை கூட கடவுள் நரகத்தில் போடுவதில்லை. போலித்தெய்வ வழிபாட்டைக் கண்டனம் செய்து மேலும் கடவுளுக்கு மட்டும் தங்களையே அர்ப்பணித்துக் கொள்வதன் மூலம் தங்களுடைய ஆத்மாக்களை மீட்டுக்கொள்ளத் தவறி விட்டவர்கள், மேலும் நமது படைப்பாளரால் விதிக்கப்பட்டுள்ள அநுஷ்டானங்களின் மூலமாகத் தங்களுடைய ஆத்மாக்களை வளர்த்துக் கொள்ளத் தவறி விட்டவர்கள், தங்களுடைய சுயமான விருப்பத்தின்படியே நரகத்தை நோக்கி ஓட வேண்டும். கடவுளுடைய சக்தியின் ஸ்தூல இருப்பைத் தாங்க முடியாதவாறு அவர்கள் மிகவும் பலஹீனமாக இருப்பார்கள்.*

15. மெய்யாகவே நமது வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொண்ட ஒரே மக்கள் யாரென்றால், அவற்றைச் செவிமடுக்கும் போது சிரம்பணிந்து விழுபவர்களே யாவர். அவர்கள் ஆணவம் எதுவுமின்றி, தங்கள் இரட்சகரைத் துதிக்கவும் புகழவும் செய்கின்றனர்.

16. பக்தியுணர்வு மற்றும் ஆவலான எதிர்பார்ப்பின் மேலீட்டால், தங்களுடைய இரட்சகரை வழிபடுவதற் காக, அவர்களுடைய விலாப்புறங்கள் உவப்புடன் அவர்களுடைய படுக்கைகளைத் துறக்கும், மேலும் நம்முடைய வாழ்வாதாரங்களில் அவர்களுக்குரிய தில் இருந்து, அவர்கள் தர்மம் செய்வார்கள்.

*சொர்க்கம்: வர்ணிக்கமுடியாத அழகு நிறைந்தது*

17. உங்களுடைய *(நன்னெறியான)* காரியங்களுக்குரிய ஒரு வெகுமதியாக எவ்வளவு ஆனந்தமும் மகிழ்ச்சி யும் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது என உங்களால் கணிக்க இயலாது.

18. நம்பிக்கையாளராக இருக்கும் ஒருவர் தீயவராக இருக்கும் ஒருவருக்குச் சமமாவாரா ? அவர்கள் சமமானவர்கள் அல்லர்.

19. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துவோரைப் பொறுத்தவரை, அவர்கள் நிரந்தர மான சொர்க்கத்திற்குத் தகுதி பெற்று விட்டனர். அவர்களுடைய காரியங்களுக்குப் பிரதிபலனாக, அவர்களுடைய தங்குமிடம் இத்தகையதேயாகும்.

20. தீயவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய விதி நரகமேயாகும். அதிலிருந்து வெளியேற அவர்கள் முயல்கின்ற ஒவ்வொருமுறையும், திரும்புவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள். அவர்களிடம் கூறப்படும், "நீங்கள் நம்பமறுத்துக் கொண்டிருந்த நரகத்தின் வேதனையைச் சுவையுங்கள்."

*குறிப்பறிந்து கொள்ளுங்கள்*

21. *(மறுஉலகின்)* மாபெரும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாவதற்கு முன்னர் *(இவ்வுலகின்)* சிறிய தண் டனையை அவர்கள் சுவைக்கும்படி நாம் செய்வோம். அவர்கள் *(குறிப்பறிந்து கொண்டு)* சீர்திருந்தும் பொருட்டு.

22. அவனுடைய இரட்சகரின் இந்த வெளிப்பாடுகளைப் பற்றி நினைவூட்டப்பட்டும், பின்னர் அவற்றை அலட் சியப்படுத்துவதை வலியுறுத்தும் ஒருவனை விட மிகத் தீயவன் யார் ? நிச்சயமாக நாம் குற்றவாளி களைத் தண்டிப்போம்.

23. மோஸஸுக்கு நாம் வேதத்தைத் தந்தோம் – அவ ரைச் சந்திப்பதைப் பற்றி எந்த ஐயமும் கொள்ளாதீர் –மேலும் இஸ்ரேலின் சந்ததியினருக்கு ஒரு வழி காட்டியாக அதனை நாம் ஆக்கினோம்.

24. நம்முடைய கட்டளைகளுக்கேற்ப வழிநடத்திய இமாம்களை அவர்களிலிருந்து நாம் நியமித்தோம், ஏனெனில் அவர்கள் உறுதியோடு விடாமுயற்சி செய்தனர், மேலும் நம் வெளிப்பாடுகளைப் பற்றி உறுதிப்பாட்டினை அடைந்தனர்.

25. அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருந்த ஒவ்வொன் றைப் பற்றியும், உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று உம் இரட்சகர்தான் அவர்களுக்குத் தீர்ப்பளிப்பார்.

26. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறை யினரை நாம் அழித்திருக்கின்றோம் என்று எப்பொழு தாவது அவர்களுக்குத் தோன்றுகின்றதா ? அவர் களுடைய முன்னோர்களின் வீடுகளில் இப்போது அவர்கள் வசித்துக் கொண்டும் நடந்து கொண்டும் இருக்கின்றனர். போதுமான சான்றுகளை இது வழங்கவேண்டும். அவர்கள் செவியேற்கவில்லையா ?

27. வறண்ட நிலங்களின் பால் நாம் தண்ணீரை ஒட்டி, மேலும் அதனைக் கொண்டு அவர்களுடைய கால் நடைகளுக்கும், அவ்வண்ணமே அவர்களுக்கும் உணவளிப்பதற்காகப் பயிர்களை விளைவிக்கின் றோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில் லையா ? அவர்கள் பார்க்கவில்லையா ?

28. அவர்கள் சவால் விடுகின்றனர்: "நீங்கள் உண்மை யாளர்களாக இருந்தால், எங்கே அந்த வெற்றி ?"

29. கூறும், "அத்தகையதொரு வெற்றி வரும் நாளில், அதற்கு முன்னர் நம்பிக்கை கொள்ளாதவர்கள் நம்பிக்கை கொள்வது பலனளிக்காது, அன்றி அவர் கள் மற்றொரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவும் மாட்டார் கள்."

30. எனவே, அவர்களைப் புறக்கணித்து விடுவீராக, மேலும் காத்திருப்பீராக, அவர்களும் காத்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

****

# சூரா 33: படையினர் (அல்–அஹ்ஸாப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. உம்மைத்தான் நபியே, நீர் **கடவுள்**–யிடம் பக்தி செலுத்த வேண்டும், மேலும் நம்பமறுப்பவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் கீழ்ப்படியாதீர். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

2. உம்முடைய இரட்சகரிடமிருந்து உமக்கு வெளிப் படுத்தப்பட்டவற்றைப் பின்பற்றுவீராக. நீங்கள் அனை வரும் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிகின்றார்.

3. மேலும் உமது பொறுப்பைக் **கடவுள்** மீது வைப்பீராக. ஒரு பொறுப்பாளராகக் **கடவுள்** போதுமானவர்.

*கடவுளுக்கான அர்ப்பணிப்பு*
*பங்குவைக்க முடியாதது*

4. **கடவுள்** எந்த மனிதனுக்கும் அவனுடைய நெஞ்சத்தில் இரண்டு இதயங்களைத் தரவில்லை. அன்றியும் *(உங்களுடைய சமூக வழக்கத்திற்கேற்ப)* நீங்கள் பிணையறுத்துக் கொள்கின்ற உங்கள் மனைவியரை உங்களுடைய தாய்மார்களாக* அவர் மாற்றி விடுவதுமில்லை. அன்றி உங்களுடைய தத்துப் பிள்ளைகளை மரபணுவழிச் சந்ததியினராக மாற்றி விடுவதுமில்லை. இவையெல்லாம் நீங்களே கண்டு பிடித்துக் கொண்ட வெறும் கூற்றுக்களேயாகும். **கடவுள்** சத்தியத்தையே உரைக்கின்றார், மேலும் அவர் *(நேரான)* பாதையில் வழிநடத்துகின்றார்.

*உங்கள் பெயர்களை மாற்றிக்கொள்ளாதீர்கள்*

5. உங்களுடைய தத்துப் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய மரபணுவழிப் பெற்றோர்களுடனான அவர்களுடைய உறவைப்பேணிக் கொள்ளும் வண்ணம் நீங்கள் பெயர்கள் இட வேண்டும். **கடவுள்**–ன் பார்வையில் இதுவே மிகவும் நீதமானது. அவர்களுடைய பெற்றோர்களை நீங்கள் அறியாவிட்டால், பின்னர், உங்களுடைய மார்க்கச் சகோதரர்கள் என்ற முறையில், அவர்களை நீங்கள் உங்களுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களைப் போல் நடத்திட வேண்டும். இவ்விஷயத்தில் நீங்கள் ஒரு தவறு செய்து விட்டால், நீங்கள் பாவம் ஒன்றைச் செய்து விடவில்லை; குறிக்கோளுடன் கூடிய உங்களுடைய நோக்கங்களுக்கே நீங்கள் பொறுப்பாகின்றீர்கள். **கடவுள்** மன்னிப் பவர், மிக்க கருணையாளர்.

6. அவர்கள் ஒருவர் மற்றவருடன் இருப்பதை விடவும் நம்பிக்கையாளர்களுக்கு நபியானவர் மிகவும் நெருக்கமானவர் ஆவார், மேலும் அவருடைய மனைவியர் அவர்களுக்குத் தாய்மார்களைப் போன்றவர்கள் ஆவர். **கடவுள்**–ன் வேதத்திற்கேற்ப உறவினர்கள் ஒருவர் மற்றவரிடம் அக்கறை எடுத்துக் கொண்டாக வேண்டும். எனவே, நம்பிக்கையாளர்கள் முதலில் தங்களுடைய சொந்தக் குடும்பத்தின் மீது கவனம் எடுத்துக் கொண்டு விட்ட பட்சத்தில், தங்களிடம் புலம் பெயர்ந்து வரும் தங்களுடைய உறவினர்கள் மீது அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இவை இந்த வேதத்தின் கட்டளைகளாகும்.

*கடவுளின் உடன்படிக்கைத்*
*தூதருக்கு ஆதரவளிக்க*
*முஹம்மத் வாக்குறுதி செய்கின்றார்**

7. நபிமார்களிடம் அவர்களுடைய உடன்படிக்கையை நாம் எடுத்தோம் என்பதை நினைவு கூர்வீராக, *(முஹம்மதே)* நீர் உட்பட, நோவா, ஆப்ரஹாம், மோஸஸ் மற்றும் மேரியின் மகனான ஜீஸஸ். அவர்களிடமிருந்து பவித்திரமானதொரு வாக்குறுதியை நாம் எடுத்தோம்.*

8. அதன் பின்னர், சத்தியவான்களை அவர்களுடைய சத்தியத்தன்மை குறித்து அவர் நிச்சயம் விசாரிப்பார், மேலும் *(இந்த குர்ஆனிய உண்மையை)* நம்ப மறுப்பவர்களுக்கு வலிநிறைந்ததொரு தண்டனையைத் தயார் செய்துள்ளார்.

*படையினரின் யுத்தம்*

9. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசிகளை நினைவில் கொள்ளுங்கள்; படைவீரர்கள் உங்களைத் தாக்கிய பொழுது, அவர்கள் மீது உக்கிரமான காற்றையும் கண்ணுக்குத் தெரியாத படை வீரர்களையும் நாம் அனுப்பினோம். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்க்கின்றார்.

10. உங்களுக்கு மேலிருந்தும், உங்களுக்குக் கீழிருந்தும் அவர்கள் வந்த போது, உங்களுடைய கண்கள் திகிலடைந்தன, உங்களுடைய இதயங்கள் பொறுமையை இழந்து பதறின, மேலும் நீங்கள் **கடவுள்**–ஐப் பற்றித் தகாத எண்ணங்களுக்கு இடமளித்தீர்கள்.

11. அப்போதுதான் நம்பிக்கையாளர்கள் மெய்யாகவே சோதிக்கப்பட்டார்கள்; அவர்கள் கடுமையாக ஆட்டப் பட்டார்கள்.

12. நயவஞ்சகர்களும் தங்கள் இதயங்களில் சந்தேகங்களுடனிருப்பவர்களும் கூறினர், "**கடவுள்**–ம் அவருடைய தூதரும் நமக்கு வாக்களித்தது ஒரு மாயை என்பதை விட அதிகமில்லை!"

**33:4 கணவனின் தாய்க்கு ஒப்பானவளாக மனைவி இருக்கின்றாள் என்று அறிவித்து விடுவதன்மூலம் அவளை பிணையறுத்துக் கொள்ளுதல் அரேபியாவில் ஒரு சமூக வழக்கமாக இருந்து வந்தது. இத்தகையதொரு அநியாயமான பழக்க வழக்கம் இங்கே மாற்றியமைக்கப்படுகின்றது.*

**33:7 இந்த உடன்படிக்கை **3:81**ல் விவரிக்கப்பட்டுள்ளது. நபிமார்களிடம் அவர்களுடைய தூதுச்செய்திகளைத் தூய்மைப் படுத்தவும் ஒன்றிணைக்கவும் முஹம்மதுக்குப் பின் வர இருக்கின்ற அவருடைய உடன்படிக்கைத் தூதருக்கு அவர்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று கடவுள் ஓர் உடன்படிக்கை எடுத்தார். உலகத்தின் படைப்புக்கு முன்னரே இந்த உடன்படிக்கை எடுக்கப்பட்டு விட்டது, மேலும் துல்ஹஜ் 3, 1391 (டிசம்பர் 2, 1971) அன்று மக்காவில் பூர்த்தியாக்கப்பட்டது, இஸ்லாமிய வருடத்துடன் (12), நாள் (3) ஐக் கூட்டி, வருடம் (1391) ஐயும் கூட்டினால் கிடைக்கும் கூட்டுத்தொகை 1406, 19x74. கடவுளின் உடன்படிக்கைத் தூதராக ரஷாத் கலீஃபாவைக் அடையாளம் காட்டுகின்ற மூழ்கடிக்கும் சான்றுகள் குர்ஆன் முழுவதிலும் வழங்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு 2மற்றும் 26).*

13. அவர்களில் ஒரு கூட்டத்தார் கூறினர், "யத்ரிப்வாசிகளே, நீங்கள் வெற்றியை அடைய முடியாது; திரும்பிச் செல்லுங்கள்." மற்றவர்கள் நபியிடத்தில் சாக்குப்போக்குகள் கூறினர்: "எங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்றவையாக உள்ளன," அவை பாதுகாப்பற்றவையாக இல்லாதபோதே. அவர்கள் திரும்பி ஓடிவிடவே விரும்பினார்கள்.

14. எதிரி படையெடுத்து வந்து, மேலும் சேர்ந்து கொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டால், அவர்கள் தயக்கமின்றி எதிரியுடன் சேர்ந்து கொண்டிருப்பார்கள்.

15. அவர்கள் புறங்காட்டித் திரும்பி ஓடி விடமாட்டார்கள் என்று கடந்த காலத்தில் அவர்கள் **கடவுள்**–யிடம் வாக்குறுதி அளித்திருந்தனர்; **கடவுள்**–யிடம் ஒரு வாக்குறுதி செய்வது ஒரு மிகப்பெரும் பொறுப்பை உள்ளடக்கியதாகும்.

16. கூறுவீராக, "நீங்கள் திரும்பி ஓடினால், மரணத்தை விட்டோ அல்லது கொல்லப்படுவதை விட்டோ நீங்கள் ஒருபோதும் திரும்பி ஓடி விட முடியாது. என்ன நிகழ்ந்தாலும் ஒரு பொருட்டல்ல, குறுகியதொரு காலம் மட்டுமே நீங்கள் நீண்டு வாழ்கின்றீர்கள்."

17. கூறுவீராக, "**கடவுள்** ஏதேனும் துன்பத்தை உங்களுக்கு நாடியிருந்தால், அல்லது ஏதேனும் ஆசீர்வாதத்தை நாடியிருந்தால் அவரிடமிருந்து உங்களைக் காப்பாற்றுபவர் யார் ?" **கடவுள்**–வுடன் வேறு எந்த இரட்சகரையும் எஜமானரையும், அவர்கள் ஒருபோதும் காணமுடியாது.

18. உங்களில் இடையூறு செய்பவர்களையும், மேலும் தங்களுடைய சகாக்களிடம், "நாம் அனைவரும் பின் தங்கியிருந்து விடுவோம்," என்று கூறுபவர்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார். அரிதாகவே அவர்கள் தற்காப்புக்காகப் புறப்படுகின்றனர்.

19. அத்துடன், அவர்கள் உம்முடன் புழங்கும்போது கஞ்சத்தனமாகவும் நடந்து கொள்கின்றனர். சமூகத்தை ஏதேனும் அச்சுறுத்தினால், மரணம் அவர்களிடம் ஏற்கெனவே வந்து விட்டதைப் போல், அவர்களுடைய கண்கள் அச்சத்தால் உருளுவதை நீர் காண்கின்றீர். நெருக்கடி நீங்கி விட்டால், உடனே அவர்கள் கூரிய நாவுகளால் உங்களைச் சாடுகின்றனர். தங்களுடைய செல்வத்தில் அவர்கள் மிகவும் கஞ்சத்தனத்துடன் இருக்கின்றனர். இவர்கள் நம்பிக்கையாளர்கள் அல்லர், மேலும், அதன் விளைவாக, **கடவுள்** அவர்களுடைய காரியங்களை செல்லாதவையாக்கி விட்டார். இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

20. படையினர் திரும்பிவரக் கூடும் என்று அவர்கள் நினைத்தார்கள். அப்படி நடந்திருந்தால், அவர்கள் பாலைவனத்தில் தொலைந்து போனவர்களாகி, உங்களைப்பற்றிய செய்திகளை வெகுதொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென அவர்கள் விரும்புவார்கள். அவர்கள் உங்களுடன் இருக்கும்பொழுது படையினர் உங்களைத் தாக்கியிருந்தால், அவர்கள் அரிதாகவே உங்களுக்கு ஆதரவளிப்பார்கள்.

*நபியின் தீரம்**

21. உங்களில், **கடவுள்**–ஐயும் இறுதி நாளையும் தேடுபவர்களுக்கும், மேலும் இடையறாது **கடவுள்**–ஐப் பற்றி நினைப்பவர்களுக்கும் **கடவுள்**–ன் தூதர் நல்லதொரு முன்மாதிரியை அமைத்துள்ளார்.

22. *(தாக்குவதற்குத் தயாராக)* படையினரை உண்மையான நம்பிக்கையாளர்கள் கண்ட பொழுது, அவர்கள் கூறினார்கள், "இதுதான் **கடவுள்**–ம் அவருடைய தூதரும் நமக்கு வாக்களித்தது. மேலும் **கடவுள்**–ம் அவருடைய தூதரும் உண்மையாளர்களாகவே இருக்கின்றனர். "இது *(ஆபத்தான அச்சூழ்நிலை)* அவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்தவும் அவர்களுடைய சரணடைதலை அதிகரிக்கவும் மட்டுமே செய்தது.

23. **கடவுள்**–வுடனான தங்களுடைய வாக்குறுதிகளைப் பூர்த்தி செய்து விட்டவர்கள் நம்பிக்கையாளர்களில் இருக்கின்றனர். அவர்களில் சிலர் மரணமெய்தி விட்டனர், அதேசமயம் மற்றவர்களோ ஒருபோதும் தடுமாறாது, தயாராக நிற்கின்றனர்.

24. அவர்களுடைய சத்தியத்தன்மைக்காக சத்தியவான்களுக்கு **கடவுள்** நிச்சயமாகப் பிரதிபலனளிப்பார், மேலும் நயவஞ்சகர்களைத் தண்டிப்பார், அவ்வாறு அவர் நாடினால், அவர்களை மீட்டுக் கொள்வார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*முஹம்மதின் காலத்தில்*

25. நம்பமறுப்பவர்களை அவர்களுடைய கோபத்துடன் **கடவுள்** திருப்பி விரட்டினார், மேலும் அவர்கள் வெறுங்கையுடன் சென்றனர். **கடவுள்** இவ்விதமாக எந்தச் சண்டையிலிருந்தும் நம்பிக்கையாளர்களைத் தவிர்த்து விட்டார். **கடவுள்** சக்தி மிக்கவர், எல்லாம் வல்லவர்.

**33:21 சாத்தான் இவ்வசனத்தை அதன் அமைப்பிலிருந்து துண்டித்தெடுத்தான், மேலும் "நபியின் சுன்னா" என்றழைக்கப்படுகின்ற, அங்கீகாரமற்ற, அறிவுக்குப் புறம்பான சட்டவரையறைகளின் ஒரு முழுமையான தொகுதியைப் புனைவதற்கு, நபியான முஹம்மதின் மீது மக்கள் கொண்டிருந்த இணை வழிபாட்டையே அவன் சார்ந்திருந்தான். இது முற்றிலும் வேறுபட்ட ஒரு மார்க்கத்தை உருவாக்கியது (பார்க்க 42:21, மற்றும் பின் இணைப்பு 18).*

26. அத்துடன் வேதத்தையுடைய மக்களில் உள்ள அவர்களுடைய கூட்டாளிகளை, அவர்களுடைய பாதுகாப்பான நிலைகளிலிருந்து அவர் கீழே கொண்டு வந்தார், மேலும் அவர்களுடைய இதயங்களுக்குள் திகிலை எறிந்தார். அவர்களில் சிலரை நீங்கள் கொன்றீர்கள், மேலும் சிலரை நீங்கள் சிறைப் பிடித்தீர்கள்.

27. அவர்களுடைய நிலங்களுக்கும், அவர்களுடைய வீடுகளுக்கும், அவர்களுடைய பணத்திற்கும், மேலும் நீங்கள் ஒருபோதும் மிதித்திராத நிலங்களுக்கும் நீங்கள் வாரிசாகும்படி அவர் செய்தார். **கடவுள்** எல்லா விஷயங்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுள்ளார்.

*நெருக்கமாக இருப்பதால்*
*விசேஷமான பொறுப்பு*

28. நபியே, உம் மனைவியரிடம் கூறுவீராக, "இந்த வாழ்வையும் அதன் ஆடம்பரங்களையும் தேடுபவர்களாக நீங்கள் இருந்தால், பின்னர் நான் உங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கி, இணக்கமான முறையில் சென்று விட உங்களை அனுமதிக்கின்றேன்.

29. "ஆனால் நீங்கள் **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும், மேலும் மறுவுலகின் வீட்டையும் தேடுபவர்களாக இருந்தால், பின்னர் உங்களில் உள்ள நன்னெறியாளர்களுக்கு மகத்தானதொரு பிரதிபலனைக் **கடவுள்** தயார் செய்துள்ளார்."

*கூடுதல் பொறுப்பு*

30. நபியின் மனைவியரே, உங்களில் எவரேனும் ஒரு பெரும்பாவத்தைச் செய்வீர்களாயின், அவருக்குரிய தண்டனை இரட்டிப்பாக்கப்படும். இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

31. உங்களில் எவரொருவர் **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றாரோ, அவருக்குப் பிரதிபலனை நாம் இருமடங்காக வழங்குவோம், மேலும் தாராளமானதொரு வாழ்வாதாரத்தையும் அவருக்காக நாம் தயார் செய்துள்ளோம்.

*முன்னுதாரணத்தை அமைத்தல்*

32. நபியின் மனைவியரே, நீங்கள் மற்ற எந்தப் பெண்களையும் போன்றவர்கள் அல்லர், நீங்கள் நன்னெறியைக் கடைப்பிடிப்பீர்களாயின். *(உங்களுக்கு அதிகமானதொரு பொறுப்புள்ளது).* எனவே, தங்களுடைய இதயங்களில் நோய் உடையவர்கள் தவறான எண்ணங்கள் கொள்ளாதிருக்கும் பொருட்டு, நீங்கள் மிகவும் குழைந்து பேச வேண்டாம்; நன்னெறிகளை மட்டுமே நீங்கள் பேச வேண்டும்.

33. நீங்கள் உங்களுடைய வீடுகளில் தங்கியிருக்க வேண்டும், மேலும் பழைய அறியாமை நாட்களில் நீங்கள் செய்து கொண்டிருந்ததைப் போல், மக்களுடன் அளவுக்கதிகமாகக் கலக்காதீர்கள். நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்கவும், மேலும் கடமையான *(ஜகாத்)* தர்மத்தைக் கொடுக்கவும், மேலும் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். புனித ஆலயத்தைச் சுற்றி வசிப்பவர்களே, உங்களைத்தான், **கடவுள்** உங்களிடமிருந்து அனைத்துத் தீமைகளை அகற்றவும், மேலும் உங்களை முழுமையாகத் தூய்மைப்படுத்தவுமே நாடுகின்றார்.

34. உங்களுடைய வீடுகளில் ஓதப்படுகின்ற **கடவுள்**–ன் வெளிப்பாடுகளையும் அவற்றுள் பொதிந்துள்ள ஞானத்தையும் நினைவில் கொள்ளுங்கள். **கடவுள்** கம்பீரமானவர், நன்கறிந்தவர்.

*ஆண்கள் மற்றும் பெண்களின் சமத்துவம்*

35. சரணடைந்த ஆண்கள், சரணடைந்த பெண்கள், நம்பிக்கை கொண்ட ஆண்கள், நம்பிக்கை கொண்ட பெண்கள், கீழ்ப்படிகின்ற ஆண்கள், கீழ்ப்படிகின்ற பெண்கள், உண்மை நிறைந்த ஆண்கள், உண்மை நிறைந்த பெண்கள், உறுதிப்பாடுடைய ஆண்கள், உறுதிப்பாடுடைய பெண்கள், பக்தியுள்ள ஆண்கள், பக்தியுள்ள பெண்கள், தர்மசிந்தனையுள்ள ஆண்கள், தர்மசிந்தனையுள்ள பெண்கள், நோன்பு நோற்கும் ஆண்கள், நோன்பு நோற்கும் பெண்கள், கற்புடைய ஆண்கள், கற்புடைய பெண்கள், மேலும் **கடவுள்** –ஐ அடிக்கடி நினைவு கூர்கின்ற ஆண்கள், மற்றும் நினைவு கூர்கின்ற பெண்கள்; **கடவுள்** அவர்களுக்காக மன்னிப்பையும் மகத்தானதொரு பிரதிபலனையும் தயார் செய்துள்ளார்.

*முஹம்மத் செய்த*
*மிகப்பெரும் பிழை*

*முஹம்மத் என்ற மனிதர்*
*முஹம்மத் என்ற தூதருக்குக் கீழ்ப்படியவில்லை*

36. **கடவுள்**–ம் அவருடைய தூதரும் ஏதேனும் கட்டளையைப் பிறப்பித்து விட்டால், நம்பிக்கை கொண்ட எந்த ஆணுக்கோ அல்லது நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கோ, அந்தக் கட்டளை குறித்து தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எதுவும் கிடையாது. **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் கீழ்ப்படியாத எவரொருவரும் மிக நெடிய வழிகேட்டில் சென்று விட்டார்.

37. **கடவுள்**–ஆல் ஆசீர்வதிக்கப்பட்டு, மேலும் உம்மாலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவரிடம் நீர் கூறியதை நினைவு கூர்வீராக, "உம்முடைய மனைவியைத் தக்க வைத்துக் கொள்வீராக, மேலும் **கடவுள்**–ஐ அஞ்சிக் கொள் வீராக," மேலும் **கடவுள்** பிரகடனிக்க நாடியதை உமக்குள்ளேயே நீர் மறைத்துக் கொண்டீர். இவ்வித மாக, **கடவுள்**–ஐ மட்டுமே அஞ்ச வேண்டியவராக நீர் இருக்கும் பொழுது, நீர் மக்களுக்கு அஞ்சினீர். ஒரு மனிதன் தன்னுடைய தத்துப்பிள்ளையின் விவாகரத் துச் செய்யப்பட்ட மனைவியை மணந்து கொள்ளலாம் என்ற முன்மாதிரியை நிலைநாட்டுவதற்காக, ஜைது தன்னுடைய மனைவியை விட்டு முழுமையாக நீங் கிக் கொண்டு விட்ட பின்னர், அவரை நாம் உமக்கு மணம் செய்வித்தோம். **கடவுள்**–ன் கட்டளைகள் செய்து முடிக்கப்படவேண்டும்.

38. **கடவுள்**–ஆல் சட்டபூர்வமானதாக்கப்பட்ட எந்த விஷயத்தையும் செய்வதன் மூலம் நபியானவர் ஒரு தவறைச் செய்துவிடவில்லை. ஆரம்ப காலத் தலை முறைகள் முதல் **கடவுள்**–ன் வழிமுறை இவ்வாறா கவே இருக்கின்றது. **கடவுள்**–ன் கட்டளை புனித மானதொரு கடமையாக இருக்கின்றது.

39. **கடவுள்**–ன் தூதுச்செய்திகளைச் சேர்ப்பிப்பவர் களும், அவருக்கு மட்டுமே பக்திசெலுத்துபவர் களும், **கடவுள்**–ஐத்தவிர எவரொருவருக்கும் ஒரு போதும் அஞ்ச வேண்டாம். **கடவுள்**தான் மிகத் திறன் வாய்ந்த கணக்காளர்.

*இறுதித் தூதர் அல்லர்**

40. உங்களில் எந்த ஆணுக்கும் முஹம்மத் தந்தையாக இருக்கவில்லை. அவர் **கடவுள்**–வுடைய ஒரு தூதரா கவும் நபிமார்களில் இறுதியானவராகவும் இருந்தார். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

41. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–ஐ அடிக்கடி நினைவு கூர்ந்திட வேண்டும்.*

42. இரவும் பகலும் அவரை நீங்கள் துதித்திட வேண்டும்.

43. அவர்தான் தன்னுடைய வானவர்களுடன் சேர்ந்து, உங்களை இருளிலிருந்து வெளியேற்றி ஒளியினுள் வழிநடத்துவதற்காக உங்களுக்கு உதவுகின்றார். நம்பிக்கையாளர்களின்பால் அவர் மிக்க கருணை யாளராக இருக்கின்றார்.

44. அவர்கள் அவரைச் சந்திக்கும் அந்நாளில் அவர்களு டைய வாழ்த்துக்களாவது, "சாந்தி" என்பதாகும், மேலும் அவர்களுக்காகத் தாராளமானதொரு பிரதி பலனை அவர் தயாரித்துள்ளார்.

45. நபியே, ஒரு சாட்சியாக, நற்செய்தியைத் தாங்கியவ ராக, அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராக உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.

46. அவருடைய நாட்டத்திற்கொப்ப, **கடவுள்**–ன் பால் அழைப்பவராக, வழிகாட்டுகின்ற ஒரு கலங்கரை விளக்காக.

47. **கடவுள்**–யிடமிருந்து மகத்தானதொரு ஆசீர்வாதத் திற்கு அவர்கள் தகுதியாகி விட்டனர் என்ற நற் செய்தியை நம்பிக்கையாளர்களிடம் சேர்ப்பிப்பீராக.

48. நம்பமறுப்பவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் கீழ்ப் படியாதீர், அவர்களுடைய அவமரியாதைகளை அலட் சியம் செய்வீராக, மேலும் உம்முடைய பொறுப்பைக் **கடவுள்** மீது வைப்பீராக; ஒரு பொறுப்பாளராகக் **கடவுள்** போதுமானவர்.

*திருமணச் சட்டங்கள்*

49. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நம்பிக்கை கொண்ட பெண்களை நீங்கள் திருமணம் செய்து விட்டு, பின்னர் தாம்பத்ய உறவு கொள்வதற்கு முன்னர் அவர்களை விவாக விலக்குச் செய்து விட்டால், அவர்கள் *(மற்றொரு மனிதனை திருமணம் செய்வதற்கு முன்னர்)* உங்களுக்குக் காத்திருப்புத் தவணை எதையும் கடமைப்பட்டிருக்கவில்லை. நீங்கள் அவர்களுக்கு நியாயமான நஷ்ட ஈடு அளிக்க வும், இணக்கத்துடன் அவர்கள் சென்றிட அனுமதிக் கவும் வேண்டும்.

**33:40 முஹம்மதைப் பற்றி இந்தத் தெளிவான வரையறை இருந்தபோதிலும், அதிகமான முஸ்லிம்கள் அவர் இறுதி நபியாக வும், இறுதித் தூதராகவும் இருந்தார் என்று வலியுறுத்துகின்றனர். 40:34ல் நாம் காண்பதைப் போல இது ஒரு சோகமான மானிடப் பண்பாகும். கடவுள் மீது உடனடியாக நம்பிக்கை கொள்பவர்கள் நபிமார்களில் இறுதியானவரான முஹம்மதுக்குப் பின்னால் தூய்மைப்படுத்துகின்ற ஒன்றிணைக்கின்ற உடன்படிக்கைத் தூதரைக் கடவுள் அனுப்புகின்றார் என்பதைப் புரிந்து கொள்கின்றனர் (3:81, 33:7).*

**33:41–42 உங்களுடைய எண்ணங்களை அதிகமான நேரம் ஆக்கிரமித்திருக்கும் எதுவாயினும் அதுவே உங்களுடைய தெய்வமாகும். எனவேதான் கடவுளை நினைவு கூர்வதற்கும், இரவும் பகலும் அவரைத் துதிப்பதற்குமான இக்கட்டளை. பார்க்க பின் இணைப்பு 27.*

50. நபியே, உம்முடைய மனைவியரில் எவர்களுக்கு நீர் அவர்களுக்குரிய சீதனத்தைச் செலுத்தி விட்டீரோ அவர்களையும் அல்லது **கடவுள்**–ஆல் வழங்கப்பட்டுள்ளபடி ஏற்கெனவே நீர் கொண்டிருப்பவர்களையும் உமக்கு நாம் சட்டபூர்வமாக்கியுள்ளோம். அத்துடன் உம்முடன் புலம் பெயர்ந்த, உம் தந்தையின் சகோதரர்களுடைய மகள்களும், உம் தந்தையின் சகோதரிகளுடைய மகள்களும், உம் தாயின் சகோதரர்களுடைய மகள்களும் உம் தாயின் சகோதரிகளுடைய மகள்களும் உமக்கு சட்டபூர்வமானவர்களே ஆவார்கள். அத்துடன், நம்பிக்கை கொண்ட ஒரு பெண் நபிக்கு – வரதட்சனையைத் தள்ளுபடி செய்வதன் மூலம் – தன்னையே கொடுத்தால் ஒரு சீதனமுமின்றி நபி அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம், அவரும் அதை விரும்பினால். ஆயினும், சீதனத்தை அவள் தள்ளுபடி செய்தல் நபிக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகுமே அன்றி மற்ற நம்பிக்கையாளர்களுக்கல்ல. அவர்களுடைய வாழ்க்கைத் துணைகள் அல்லது அவர்கள் ஏற்கெனவே கொண்டிருப்பவர்களைக் குறித்து அவர்களுடைய உரிமைகளை நாம் ஏற்கெனவே விதித்துள்ளோம். இது உமக்கு எந்தச் சங்கடத்தையும் தவிர்ப்பதற்காகவேயாகும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

51. அவர்களில் எவர் ஒருவரையும் நீர் கனிவுடன் தள்ளி வைக்கலாம், மேலும் நீர் அவர்களில் எவர் ஒருவரையும் உம்பால் நெருக்கமாகக் கொண்டு வரலாம். நீர் பிணையறுத்துக் கொண்ட எவர் ஒருவருடனும் நீர் சமரசம் செய்து கொண்டால், நீர் குற்றமெதுவும் செய்யவில்லை. இந்த முறையில், அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள், கவலையெதுவும் கொள்ளாதிருப்பார்கள், மேலும் அவர்கள் அனைவருக்கும் நீதமாக நீர் வழங்குபவற்றைக் கொண்டு திருப்தியடைவார்கள். உங்கள் இதயங்களில் உள்ளவற்றைக் **கடவுள்** அறிகின்றார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், கனிவானவர்.

52. உமக்கு விவரிக்கப்பட்ட வகையினருக்கப்பால், வேறு எந்தப் பெண்களையும் திருமணம் செய்து கொள்வதிலிருந்து நீர் தடுக்கப்பட்டுள்ளீர், அன்றியும் *(தடை செய்யப்பட்ட வகையினரிலிருந்து)* புதியதொரு மனைவியை நீர் மாற்றி அமைத்துக் கொள்ளவும் கூடாது, அவர்களுடைய அழகை நீர் எவ்வளவு வியந்தபோதிலும் பொருட்டல்ல, ஏற்கெனவே உமக்குச் சட்டபூர்வமாக்கப்பட்டவர்களைக் கொண்டு திருப்தியடைந்தவராக நீர் இருக்க வேண்டும். அனைத்து விஷயங்கள் மீதும் **கடவுள்** கண்காணிப்புடன் உள்ளார்.

*இங்கிதம்*

53. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உண்ணுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கப்பட்டாலே அன்றி நபியின் வீடுகளுக்குள் நுழையாதீர்கள், அன்றி அத்தகையதொரு அழைப்பை எவ்விதத்திலும் நீங்கள் வலியுறுத்தவும் வேண்டாம். நீங்கள் அழைக்கப்பட்டால், நீங்கள் நுழையலாம். நீங்கள் உண்டு முடித்து விட்டால், நீங்கள் சென்று விட வேண்டும்; நீண்ட உரையாடல்களில் அவரை ஈடுபடுத்தாதீர்கள். இது நபியைப் புண்படுத்துவதாக இருந்தது, மேலும் உங்களிடம் சொல்வதற்கு அவர் மிகவும் கூச்சப்படுபவராக இருந்தார். ஆனால் **கடவுள்** உண்மையிலிருந்து கூச்சப்பட்டு விலகிவிடுவதில்லை. அவருடைய மனைவியரிடம் நீங்கள் எதையேனும் கேட்க வேண்டியது இருந்தால், ஒரு திரைக்கப்பாலிருந்து அவர்களிடம் கேளுங்கள். உங்களுடைய இதயங்களுக்கும் அவர்களுடைய இதயங்களுக்கும் இதுவே தூய்மைமிக்கதாகும். நீங்கள் **கடவுள்**–வுடைய தூதரைப் புண்படுத்தக் கூடாதவர்கள். அவருக்குப் பின்னர் அவரு டைய மனைவியரை நீங்கள் மணந்து கொள்ள வேண்டாம், ஏனெனில் **கடவுள்**–ன் பார்வையில் இது மிகப் பெரியதொரு குற்றச்செயலாகும்.*

54. எதையேனும் நீங்கள் அறிவித்தாலும், அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும், அனைத்து விஷயங்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

55. பெண்கள் தங்களுடைய தந்தையர், தங்களுடைய மகன்கள், தங்களுடைய சகோதரர்கள், தங்களுடைய சகோதரர்களின் மகன்கள், தங்களுடைய சகோதரிகளுடைய மகன்கள், மற்ற பெண்கள், மற்றும் அவர்களுடைய *(பெண்)* ஊழியர்கள் முன்னிலையில் *(தங்களுடைய ஆடைக் கட்டுப்பாட்டை)* தளர்த்திக் கொள்ளலாம். அவர்கள் **கடவுள்**–க்கு பக்திசெலுத்த வேண்டும். அனைத்து விஷயங்களுக்கும் **கடவுள்** சாட்சியாகின்றார்.

**33:53 ஏற்கெனவே நம் தந்தையருக்கு மணமுடிக்கப்பட்டிருந்த பெண்களைத் திருமணம் புரிந்து கொள்வதிலிருந்து 4:22 ல் நாம் தடுக்கப்பட்டுள்ளோம். அன்றி எந்தத் தந்தையும் தன் மகனுடைய விவாகரத்துச் செய்யப்பட்ட மனைவியைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது (4:23). இந்தத் தெய்வீகக் கட்டளை நம் தந்தையர்களுக்குரிய நமது மரியாதையையும் அவருடைய மிகவும் அந்தரங்கமான விவகாரங்களையும் பாதுகாக்கின்றது. அதே போல், நபியானவர் அவருடைய காலத்தில் நம்பிக்கையாளர்களுக்கு ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்தார். அந்த நம்பிக்கையாளர்களின் நலனுக்காக, முன்னரே நபிக்கு மணமுடிக்கப்பட்டிருந்த பெண்களைத் திருமணம் செய்து கொள்வதிலிருந்து கடவுள் அவர்களைத் தடை செய்தார். திருமணம் என்பது ஒரு புனிதமான மேலும் மிகவும் அந்தரங்கமான உறவாகும், எனவே நபியின் அந்தரங்க வாழ்வை அந்தரங்கமாக வைத்திருப்பதே மேலானதாகும்.*

*நபியுடைய வாழ்நாளின் போது**

56. **கடவுள்**–ம் அவருடைய வானவர்களும் நபிக்கு உதவியும் ஆதரவும் அளிக்கின்றனர். நம்பிக்கை கொண்டோரே, உங்களைத்தான், நீங்கள் அவருக்கு உதவியும் ஆதரவும் அளிக்க வேண்டும், மேலும் எவ்வாறு அவர் மதிக்கப்பட வேண்டுமோ அவ்வாறு அவரை மதியுங்கள்.*

57. நிச்சயமாக, எவர்கள் **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் எதிர்க்கின்றனரோ, அவர்களை இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஒரு சாபத்தைக் கொண்டு **கடவுள்** வருத்துகின்றார்; இழிவு நிறைந்ததொரு தண்டனையை அவர்களுக்காக அவர் தயார் செய்துள்ளார்.

58. எந்தத் தவறும் செய்யாத, நம்பிக்கை கொண்ட ஆண்களையும் நம்பிக்கை கொண்ட பெண்களையும் வன்கொடுமை செய்கின்றவர்கள், ஒரு பொய்மையை மட்டுமின்றி, அத்துடன் மிகப் பெரியதொரு பாவத்தையும் புரிந்து விட்டனர்.

*பெண்களுக்குரிய ஆடைக்கட்டுப்பாடு*

59. நபியே, உம்முடைய மனைவியர், உம்முடைய மகள்கள், மற்றும் நம்பிக்கையாளர்களின் மனைவியரிடம் அவர்கள் தங்களுடைய ஆடைகளை நீளப்படுத்திக் கொள்ளும்படி கூறுவீராக. இவ்விதமாக, அவர்கள் *(நன்னெறியுடைய பெண்களென)* அடையாளம் காணப்படுவர், மேலும் அவமதிக்கப்படுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்வர். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

60. நயவஞ்சகர்களும், தங்கள் இதயங்களில் நோயுடையவர்களும், நகரத்தின் ஒழுக்கம் கெட்ட பொய்யர்களும் *(உங்களைத் துன்புறுத்துவதிலிருந்து)* விலகிக் கொண்டாலே தவிர, நிச்சயமாக நாம் உம் கரத்தை மேலோங்கச் செய்வோம், பின்னர் சிறிதொரு காலத்திற்குள் அவர்கள் வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படுவர்.

61. அவர்கள் எங்கு சென்றபோதிலும், அவர்கள் கண்டனத்திற்குள்ளாகி விட்டனர்; *(உங்களைத் தாக்குவதை அவர்கள் நிறுத்தினாலன்றி)* அவர்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்படலாம்.

62. இதுவே **கடவுள்**–ன் நிரந்தரமான வழிமுறையாகும், மேலும் **கடவுள்**–ன் வழிமுறை மாற்றப்பட முடியாதது என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

*உலக முடிவு வெளிப்படுத்தப்படுகின்றது**

63. வேளையை *(உலக முடிவு)* பற்றி மக்கள் உம்மிடம் கேட்கின்றனர். கூறுவீராக, "அதனைப் பற்றிய அறிவு **கடவுள்**–யிடம் மட்டுமே உள்ளது. நீங்கள் அறிந்துள்ள அனைத்தின்படியும், வேளை மிகவும் நெருக்கத்திலேயே இருக்கக்கூடும்."

*பின்பற்றியவர்கள் தங்களுடைய தலைவர்கள் மீது கோபம் கொள்கின்றனர்*

64. நம்பமறுப்பவர்களைக் **கடவுள்** கண்டனம் செய்து விட்டார், மேலும் அவர்களுக்காக நரகத்தைத் தயார் செய்துள்ளார்.

65. நிரந்தரமாக அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். அவர்கள் எந்த இரட்சகரையோ, அன்றி ஒரு ஆதரவாளரையோ காணமாட்டார்கள்.

66. நரகத்திற்குள் அவர்கள் தள்ளப்படுகின்ற அந்நாளில், அவர்கள் கூறுவார்கள், "ஐயோ, நாங்கள் **கடவுள்**–க்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் தூதருக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் இருந்திருக்க வேண்டுமே, என நாங்கள் விரும்புகின்றோம்."

67. அத்துடன் அவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, நாங்கள் எங்களுடைய எஜமானர்களுக்கும் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்தோம், ஆனால் அவர்கள் எங்களை வழிகேட்டில் செலுத்தி விட்டார்கள்.

68. "எங்கள் இரட்சகரே, இருமடங்கு தண்டனையை அவர்களுக்குக் கொடுப்பீராக, மேலும் மிகப்பெரியதொரு சாபத்தைக் கொண்டு அவர்களைச் சபிப்பீராக."

69. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், மோஸலைப் புண்படுத்தியவர்களைப் போன்று நீங்கள் இருக்காதீர்கள், பின்னர் அவர்கள் கூறியவற்றிலிருந்து **கடவுள்** அவரை விடுவித்தார். **கடவுள்**–ன் பார்வையில், கண்ணியமானவராக, அவர் இருந்தார்.

70. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** பக்தி கொள்ளுங்கள், மேலும் சரியான கூற்றுகளை மட்டுமே கூறுங்கள்.

**33:56 "நபி" என்ற வார்த்தை ஒரே சீராக முஹம்மதை அவர் உயிருடன் இருந்த போது மட்டுமே குறிக்கின்றது. 33:41–42ல் ஏவப்பட்டுள்ளபடி கடவுளை நினைவு கூர்வதற்குப் பதிலாக, இடையறாது முஹம்மதை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் வண்ணம் முஸ்லிம்களை மயக்குவதற்கு சாத்தான் இந்த வசனத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.*

**33:63 ஓர் உதாரணத்திற்கு, ஒரு நூற்றாண்டைவிடக் குறைந்த காலத்திற்கு முன்னர், தொலைக்காட்சி மற்றும் அண்ட வெளியின் செயற்கைக் கோள்களைப் பற்றிய அறிவைக் கடவுள் மட்டுமே கொண்டிருந்தார், முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் இந்த அறிவை அவர் வெளிப்படுத்தினார். அதைப்போலவே, இந்த உலகத்தின் முடிவுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தைக் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார் (பின் இணைப்பு 25).*

71. அவர் அப்போது உங்களுடைய காரியங்களைச் சீர் செய்வார், மேலும் உங்களுடைய பாவங்களை மன்னிப்பார். **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் கீழ்ப்படிந்தவர்கள் மகத்தானதொரு வெற்றியால் பெரு வெற்றிக்களிப்படைந்தனர்.

*தேர்ந்தெடுக்கும் சுதந்திரம்*

72. வானங்களுக்கும், பூமிக்கும், மற்றும் மலைகளுக்கும் *(தேர்ந்தெடுக்கும் சுதந்திரமெனும்)* பொறுப்பை, நாம் முன்வைத்தோம், ஆனால் அவை அதனைச் சுமந்து கொள்ள மறுத்தன, மேலும் அதனைக் குறித்து அஞ்சியவையாகவும் இருந்தன. ஆனால் மானிடன் அதனை ஏற்றுக் கொண்டான்; அவன் வரம்புமீறுகின்றவனாகவும், அறியாதவனாகவும் இருந்தான்.*

73. ஏனெனில் நயவஞ்சக ஆண்களையும், நயவஞ்சகப் பெண்களையும், மேலும் போலித்தெய்வ வழிபாடு செய்கின்ற ஆண்களையும் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற பெண்களையும், தவிர்த்து விட முடியாதவாறு **கடவுள்** தண்டிப்பார். நம்பிக்கை கொண்ட ஆண்களையும் நம்பிக்கை கொண்ட பெண்களையும் **கடவுள்** மீட்டுக் கொள்கின்றார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

****

## சூரா 34: ஷீபா (ஸபா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றுக்கும் உரியவரான **கடவுள்**–க்கே புகழ்ச்சி உரியது; அத்துடன் மறுவுலகிலும் அனைத்துப் புகழும் அவருக்கே உரித்தானது. அவர்தான் ஞானம் மிகுந்தவர், நன்கறிந்தவர்.

2. பூமிக்குள் செல்லும் ஒவ்வொன்றையும், அதிலிருந்து வெளிவரும் ஒவ்வொன்றையும், மேலும் வானத்திலிருந்து இறங்கி வரும் ஒவ்வொன்றையும், அதில் ஏறும் ஒவ்வொன்றையும் அவர் அறிகின்றார். அவர்தான் மிக்க கருணையாளர், மன்னிக்கின்றவர்.

3. நம்பமறுப்பவர்கள் கூறினர், "வேளை ஒருபோதும் நிகழாது!" கூறுவீராக, "மிக நிச்சயமாக – என் இரட்சகர் மீது ஆணை – மிகவும் உறுதியாக அது உங்களிடம் வரும். அவர்தான் எதிர்காலத்தை அறிந்தவர். ஓர் அணுவின் எடைக்குச் சமமானது கூட அவருக்கு மறைவானதாக இல்லை. அது வானங்களிலோ அல்லது பூமியிலோ இருந்த போதிலும். அதனை விடச் சிறியதோ அல்லது பெரியதோ கூட *(மறைவானதில்லை).* அனைத்தும் ஆழ்ந்ததோர் பதிவேட்டில் உள்ளது."

4. மிக உறுதியாக, நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களுக்கு அவர் வெகுமதியளிப்பார். இவர்கள் மன்னிப்புக்கும் தாராளமானதொரு வாழ்வாதாரத்துக்கும் தகுதியாகி விட்டனர்.

5. நமது வெளிப்பாடுகளுக்குத் தொடர்ந்து சவால் விடுபவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் வலி நிறைந்த இழிவானதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

6. உம் இரட்சகரிடமிருந்து உமக்கு வந்துள்ள இந்த வெளிப்பாடு சத்தியம் என்பதும், மேலும் எல்லாம் வல்லவர், மிகுந்த புகழுக்குத் தகுதியானவரின் பாதையை நோக்கி இது வழி நடத்துகின்றது என்பதும் அறிவைக் கொண்டு ஆசீர்வதிக்கப் பெற்றவர்களுக்கு வெளிப்படையானதாகும்.

7. நம்பமறுப்பவர்கள் கூறினர், "நீங்கள் துண்டுகளாகக் கிழிந்து போன பின்னர், நீங்கள் மீண்டும் புதிதாகப் படைக்கப்படுவீர்கள் என்று உங்களிடம் கூறுகின்ற ஒரு மனிதனை நாங்கள் உங்களுக்குக் காட்டுகின்றோம்.

8. "ஒன்று, **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களை அவர் புனைந்து கொண்டார், அல்லது அவர் ஒரு கிறுக்கராக இருக்கின்றார்." உண்மையில், மறுவுலகினை நம்பமறுப்பவர்கள் மோசமான தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்; அவர்கள் நெடிய வழிகேட்டில் சென்று விட்டனர்.

9. வானத்திலும் பூமியிலும், அவர்களுக்கு முன்னாலும் பின்னாலுமுள்ள அனைத்துப் பொருட்களையும் அவர்கள் காணவில்லையா? நாம் நாடியிருந்தால், பூமி அவர்களை விழுங்கும்படி நாம் செய்திருப்போம், அல்லது விண்ணிலிருந்து பாளங்களை அவர்கள் மீது விழும்படிச் செய்திருப்போம். கீழ்ப்படிதலுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் போதுமானதொரு சான்றாக இது திகழ வேண்டும்.

**33:72 பிராணிகள், மரங்கள், நட்சத்திரங்கள் போன்றவை மிகவும் அருள்மிகுந்த இந்த வாய்ப்பைச் சாதகமாக எடுத்துக் கொண்டன. பார்க்க பின் இணைப்பு 7.*

*டேவிட் மற்றும் சாலமன்*

10. நம்மிடமிருந்து ஆசிகளைக் கொண்டு டேவிட்டுக்கு நாம் கொடையளித்தோம்: "மலைகளே, அவருடன் சரணடையுங்கள், மேலும் பறவைகளே, நீங்களும் தான்." அவருக்காக இரும்பை நாம் மிருதுவாக்கினோம்.

11. "மிகச் சரியாகப் பொருந்துகின்ற கவசங்களை நீர் செய்து கொள்ளலாம், மேலும் நன்னெறிகள் புரிவீராக. நீர் என்ன செய்தாலும், அதனைப் பார்ப்பவனாக நான் இருக்கின்றேன்."

*முதல் எண்ணெய் வயல்*

12. ஒரு மாதம் வந்து கொண்டும், ஒரு மாதம் சென்று கொண்டும் பயணிப்பதாக, சாலமனிடம் காற்றை அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் நாம் ஒப்படைத்தோம். மேலும் அவருக்காக ஒரு எண்ணெய் ஊற்றை நாம் பொங்கி வரச் செய்தோம். அத்துடன், அவருடைய இரட்சகரின் அனுமதியின் பேரில், ஜின்கள் அவருக்கு வேலை செய்தன. அவர்களில் நமது கட்டளைகளைப் புறக்கணித்த எவர் ஒருவராயினும், கடுமையானதொரு தண்டனைக்கு அவரை நாம் ஆட்படுத்தினோம்.

13. அவர் விரும்பிய எந்த ஒன்றையும் அவர்கள் அவருக்காகச் செய்தார்கள்–மாடங்கள், சிலைகள், ஆழமான குளங்கள், மேலும் கனத்த சமையல் பாத்திரங்கள். டேவிட்டின் குடும்பத்தாரே, உங்கள் நன்றியறிதலைக் காட்டுவதற்காக, *(நன்னெறியான)* காரியங்கள் செய்யுங்கள். என்னுடைய ஊழியர்களில் மிகச் சிலர் மட்டுமே நன்றியுடையவர்களாக இருக்கின்றனர்.

*ஜின்களின் அறிவு எல்லைக்குட்பட்டதே*

14. அவருடைய மரணத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட நேரம் வந்த பொழுது, அவர் மரணித்து விட்டார் என அவர்களுக்குத் துப்பு எதுவும் கிடைக்கவில்லை. பிராணிகளில் ஒன்று அவருடைய கைத்தடியை தின்ன முயற்சித்து அவர் கீழே விழும் வரை, அவர் மரணித்து விட்டார் என்பதை அந்த ஜின்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் மெய்யாகவே மறைவானவற்றை அறிந்திருப்பார்களாயின், அவர் மரணித்து விட்டவுடன் அத்தனை கடுமையாக வேலை செய்ததை அவர்கள் நிறுத்தியிருப்பார்கள் என்பதை இவ்விதமாக அவர்கள் புரிந்து கொண்டனர்.

15. ஷீபாவின் சொந்த நாடு, வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரு சோலைகளுடன் ஓர் அற்புதமாக இருந்து வந்தது. உங்களுடைய இரட்சகரின் வாழ்வாதாரங்களிலிருந்து உண்ணுங்கள், மேலும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருங்கள் – நல்ல நிலம், மேலும் மன்னிக்கின்ற ஓர் இரட்சகர்.

16. அவர்கள் திரும்பிச் சென்றனர், மேலும் அதன் விளைவாக, பேரழிவானதொரு வெள்ளத்தை அவர்கள் மீது நாம் ஊற்றினோம், மேலும் அவர்களுடைய இரு தோட்டங்களை, கெட்ட சுவை கொண்ட கனிகளையும், முட்செடிகளையும் மேலும் பற்றாக்குறை மகசூலையும் கொண்ட இரு தோட்டங்களாக நாம் மாற்றியமைத்தோம்.

17. இவ்விதமாக அவர்களுடைய நம்பமறுத்தலுக்காக அவர்களை நாம் பழிதீர்த்தோம். நம்பமறுப்பவர்களை மட்டுமே நாம் பழிதீர்க்கின்றோம் அல்லவா ?

18. அவர்களுக்கும் நாம் ஆசீர்வதித்த அந்த சமூகங்களுக்குமிடையில் வேறு பிற பாலைவனச் சோலைகளை நாம் அமைத்தோம், மேலும் அவற்றுக்கிடையில் பயணத்தை நாம் பாதுகாப்பானதாக ஆக்கினோம்: "இரவிலும் பகலிலும் முழுமையான பாதுகாப்புடன் அதில் பயணம் செய்யுங்கள்."

19. ஆனால் அவர்கள் *(நன்றிகெட்டவர்களாக மாறினார்கள், மேலும்)* சவால் விடுத்தார்கள்: "எங்கள் இரட்சகரே, *(நிறுத்தங்கள் எதுவுமின்றி)* எங்கள் பயணங்களின் தூரத்தை நீர் அதிகரித்தாலும் நாங்கள் கவலைப்பட மாட்டோம்." இவ்விதமாக அவர்கள் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டனர். அதன் விளைவாக, அவர்களை நாம் சரித்திரம் ஆக்கினோம், மேலும் பூமி எங்கிலும் சிறுசிறு சமூகங்களாக அவர்களை நாம் சிதறச்செய்தோம். உறுதிப்பாடு உடையவர்களாகவும், நன்றியுடையவர்களாகவும் இருப்பவர்களுக்கு இது படிப்பினைகளை வழங்க வேண்டும்.

*பெரும்பான்மையைச் சாத்தான்*
*தனக்கென எடுத்துக் கொள்கின்றான்*

20. தன்னுடைய எதிர்பார்ப்புகளை உவப்புடன் பூர்த்தி செய்பவர்களாக சாத்தான் அவர்களைக் கண்டான். ஒரு சில நம்பிக்கையாளர்களைத் தவிர, அவர்கள் அவனைப் பின்பற்றினர்.

*குறிக்கோள்:*
*நாம் மறுவுலகின் மீது*
*நம்பிக்கை கொண்டுள்ளோமா ?**

21. அவர்கள் மீது அவனுக்கு எந்த ஆதிக்கமும் ஒரு போதும் இருந்ததில்லை. ஆனால் இவ்விதமாக மறுவுலகின் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்களை, அதன் மீது ஐயம் கொண்டிருப்பவர்களிலிருந்து நாம் பிரித்துக் காட்டுகின்றோம்.* உம் இரட்சகர் அனைத்துப் பொருட்களையும் முழு கட்டுப்பாட்டில் வைத்து உள்ளார்.

**34:21 நாம் மறுவுலகின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றோமா இல்லையா என்பதை நமக்குத் தெரிவிக்கும் அளவு கோல்கள் **6:113, 17:45 & 39:45**ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று அளவுகோல்களும் நம்முடைய வாய் மொழியான அறிவிப்புகளை பொருட்படுத்தாமல், நமது மெய்யான திட நம்பிக்கைகளை வெளிக்கொண்டு வருகின்றன.*

22. கூறுவீராக, "**கடவுள்**–வுடன் நீங்கள் அமைத்துக் கொண்டிருக்கும் அந்தப் போலித் தெய்வங்களை இறைஞ்சுங்கள். வானங்களிலோ, அல்லது பூமியிலோ ஒரே ஓர் அணுவின் அளவு கூட அவர்கள் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை. அதில் எந்தப் பங்கும் அவர்களுக்கு இல்லை, அன்றி அவருடைய உதவியாளர்களாக இருக்கவும் அவர்களை அவர் அனுமதிப்பதில்லை."

*பரிந்துரை இல்லை*

23. அவருடைய நாட்டத்திற்கு ஒத்திருந்தாலேயன்றி, அவரிடம் பரிந்துரை என்பது வீணானதே ஆகும். இறுதியில் அவர்களுடைய மனங்கள் ஒய்ந்தவுடன், அவர்கள் கேட்கின்றனர், "உங்களுடைய இரட்சகர் என்ன கூறினார்," அவர்கள் கூறுவார்கள், "சத்தியம்." அவர்தான் மிக உயர்ந்தவர், மிகவும் பெரியவர்.

24. கூறுவீராக, "வானங்கள் மற்றும் பூமியிலிருந்து, உங்களுக்கு வழங்குபவர் யார்?" கூறுவீராக, "**கடவுள்**," மேலும் "வழிநடத்தப்பட்டவர்கள் அல்லது நெடிய வழிகேட்டில் சென்று விட்டவர்கள், நாங்களா அல்லது நீங்களா."

25. கூறுவீராக, "எங்கள் குற்றங்களுக்கு நீங்கள் பொறுப்பாக மாட்டீர்கள், அன்றி நீங்கள் செய்பவற்றுக்கு நாங்களும் பொறுப்பாக மாட்டோம்."

26. கூறுவீராக, "நம்முடைய இரட்சகர் நம் அனைவரையும் ஒன்றாக அவர் முன்னால் திரட்டுவார், பின்னர் நமக்கிடையில் அவர் நீதமாகத் தீர்ப்பளிப்பார். அவர்தான் நீதிபதி, எல்லாம் அறிந்தவர்."

27. கூறுவீராக, "அவருடன் பங்குதாரர்களாக நீங்கள் அமைத்துக் கொண்ட போலித்தெய்வங்களை எனக்குக் காட்டுங்கள்!" கூறுவீராக, "அல்ல; அவர்தான் ஒரே **கடவுள்**, எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்."

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்*

28. எல்லா மக்களுக்கும் நற்செய்தியைத் தாங்கிய ஒருவராக, அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராக உம்மை *(ரஷாதே)** நாம் அனுப்பியுள்ளோம், ஆனால் அதிகமான மக்கள் அறியமாட்டார்கள்.

29. அவர்கள் சவால் விடுகின்றனர், "நீர் உண்மையாளராக இருந்தால், எப்பொழுது இந்த வாக்குறுதி நிறைவேறும்?"

30. கூறுவீராக, "உங்களால் ஒரு மணி நேரமும் தாமதப்படுத்தவோ அல்லது முற்படுத்தவோ இயலாத, குறிப்பிட்டதொரு நேரம், குறிப்பிட்டதொரு நாளில் உங்களுக்கு உள்ளது."

31. நம்பமறுப்பவர்கள் கூறினர், "நாங்கள் இந்தக் குர்ஆனிலோ, அன்றி முந்திய வேதங்களிலோ நம்பிக்கை கொள்ள மாட்டோம்." தங்களுடைய இரட்சகரின் முன்னர் இந்த வரம்புமீறுகின்றவர்கள் நிற்பதைக் காண மட்டும் உம்மால் இயன்றால்! அவர்கள் ஒருவர் மற்றவருடன் முன்னும் பின்னும் தர்க்கித்துக் கொள்வார்கள். பின்பற்றியவர்கள் தங்களுடைய தலைவர்களிடம் கூறுவார்கள், "நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால், நாங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்திருப்போம்."

*உயிர்த்தெழுப்பப்படும் நாள் அன்று*

32. தலைவர்கள் தங்களைப் பின்பற்றியவர்களிடம் கூறுவார்கள், "வழிகாட்டுதலிலிருந்து, அது உங்களிடம் வந்ததன் பின்னர் நாங்களா உங்களைத் திசை திருப்பினோம்? அல்ல; நீங்கள்தான் தீயவர்களாக இருந்தீர்கள்."

33. பின்பற்றியவர்கள் தங்கள் தலைவர்களிடம் கூறுவார்கள், "நீங்கள்தான் இரவும் பகலும் சூழ்ச்சி செய்தீர்கள், பின்னர் **கடவுள்**–க்கு நன்றி கெட்டவர்களாக இருக்குமாறும், அவருடன் போட்டியாக போலித்தெய்வங்களை அமைத்துக் கொள்ளுமாறும் எங்களுக்குக் கட்டளையிட்டீர்கள்." தண்டனையை அவர்கள் காணும் பொழுது, அவர்கள் குற்றவுணர்வால் அழுத்தப்படுவார்கள், ஏனெனில் நம்பமறுத்தவர்களின் கழுத்துகளைச் சுற்றி விலங்குகளை நாம் அமைத்து விடுவோம். அவர்கள் செய்தவற்றுக்காக அவர்கள் நியாயமாகத்தான் கூலி கொடுக்கப்படுகின்றனர் அல்லவா?

*ஒவ்வொரு முறையும்!*

34. ஒரு சமூகத்துக்கு ஓர் எச்சரிப்பவரை நாம் அனுப்புகின்ற ஒவ்வொரு முறையும், அந்தச் சமூகத்தின் தலைவர்கள் கூறினர், "உம்முடன் அனுப்பப்பட்ட தூதுச் செய்தியை நாங்கள் மறுக்கின்றோம்."

**34:28* பின் இணைப்பு 2ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்தத் தூதரின் பெயர் "ரஷாத்கலீஃபா" என குர்ஆனிற்குள் கணித ரீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. "ரஷாத்" என்ற பெயரின் எழுத்தெண்மதிப்புடன்(505), "கலீஃபா" என்ற பெயரின் எழுத்தெண் மதிப்பையும் (725), சூரா எண்ணையும் (34), வசன எண்ணையும் (28) நாம் கூட்டினால், ரஷாத் கலீஃபாவால் திரைவிலக்கப்பட்ட 19ன் அடிப்படையிலான குர்ஆனின் கணித அற்புதத்திற்கு இசைந்திருக்கும் ஒரு கூட்டுத் தொகையை நாம் கிடைக்கப் பெறுகின்றோம் (505+725+34+28=1292=19x68). 5:19லும் அதற்குரிய அடிக்குறிப்பிலும் அதிகத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

35. அத்துடன் அவர்கள் கூறினர், "அதிகமான செல்வத்துடனும் பிள்ளைகளுடனும், நாங்கள் அதிக சக்தியுடையவர்களாக இருக்கின்றோம், மேலும் நாங்கள் தண்டிக்கப்பட மாட்டோம்."

36. கூறுவீராக, "என் இரட்சகர்தான் அனைத்து வாழ்வாதாரங்களையும் கட்டுப்படுத்துகின்றவர்; தான் நாடுகின்ற எவருக்கும் வாழ்வாதாரங்களை அவர் கொடுக்கின்றார், அல்லது அவற்றைக் குறைக்கின்றார், ஆனால் அதிகமான மக்கள் அறியமாட்டார்கள்."

37. உங்களுடைய பணமோ அல்லது உங்களுடைய பிள்ளைகளோ உங்களை நம்மிடம் நெருக்கமாகக் கொண்டு வருவதில்லை. நம்பிக்கை கொண்டு, நன்னெறியானதொரு வாழ்வை நடத்துபவர்கள் மட்டுமே தங்களுடைய காரியங்களுக்குரிய வெகுமதியை, பன்மடங்காகப் பெருக்கிப் பெற்றுக் கொள்வார்கள். சுவனவீட்டில் அவர்கள் பூரணமான சாந்தியுடன் வசிப்பார்கள்.

38. நமது வெளிப்பாடுகளுக்கு இடையறாது அறைகூவல் விடுபவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தண்டனையில் தங்கியிருப்பார்கள்.

39. கூறுவீராக, "என் இரட்சகர்தான் அனைத்து வாழ்வாதாரங்களையும் கட்டுப்படுத்துகின்றவர்; தன் ஊழியர்களில் தான்தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் வாழ்வாதாரங்களை அவர் அதிகரிக்கின்றார், அல்லது அவற்றைக் குறைக்கின்றார். *(கடவுள் நிமித்தம்)* எந்த ஒன்றை நீங்கள் செலவிட்டாலும், அதற்காக அவர் உங்களுக்கு வெகுமதியளிப்பார். வழங்குபவர்களில் அவர்தான் மிகச் சிறந்தவர்."

40. அவர்கள் அனைவரையும் அவர் ஒன்று திரட்டும் அந்நாளில், வானவர்களிடம் அவர் கூறுவார், "இந்த மக்கள் உங்களை வழிபட்டார்களா ?"

41. அவர்கள் பதிலளிப்பார்கள், "நீரே துதிப்பிற்குரியவர். நீரே எங்கள் இரட்சகரும் எஜமானருமாவீர், அவர்கள் அல்லர். மாறாக, அவர்கள் ஜின்களை வழிபட்டுக் கொண்டிருந்தனர்; அவர்களில் அதிகமானோர் அவற்றில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர்."

42. அந்நாளில், நீங்கள் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யவோ அல்லது தீங்கிழைக்கவோ சக்தி எதுவும் பெற்றிருக்க மாட்டீர்கள். மேலும் வரம்புமீறியவர்களிடம் நாம் கூறுவோம், "நீங்கள் ஏற்கமறுத்துக் கொண்டிருந்த நரகத்தின் தண்டனையைச் சுவையுங்கள்."

*குர்ஆனின் கணித அற்புதம்**

43. முற்றிலும் தெளிவாக, நமது சான்றுகள் அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்ட போது, அவர்கள் கூறினர், "இவர் உங்களுடைய பெற்றோர்கள் வழிபட்டுக் கொண்டிருக்கின்ற முறையை விட்டு உங்களைத் திருப்பி விட விரும்புகின்ற வெறும் மனிதர்தான்." அத்துடன் அவர்கள் கூறினர், "இவை புனைந்து கொள்ளப்பட்ட பொய்களாகும்." தங்களிடம் வந்த சத்தியத்தைப் பற்றி நம்பிக்கை கொள்ள மறுத்தவர்கள் இப்படிக் கூட கூறினர், "இது கண்கூடான மாயாஜாலமாகும்."

44. படிப்பதற்கு வேறு எந்தப் புத்தகத்தையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கவில்லை, அன்றி உமக்கு முன்னர் வேறொரு எச்சரிப்பவரை அவர்களுக்கு நாம் அனுப்பவுமில்லை.

45. அவர்களுக்கு முன்னர் இருந்தவர்கள் நம்பமறுத்தனர், மேலும் இந்தத் தலைமுறைக்கு நாம் தந்த *(அற்புதத்தில்)* பத்தில்* ஒன்றைக் கூட அவர்கள் கண்டிராத போதிலும், என் தூதர்களை அவர்கள் நம்பமறுத்த பொழுது, என்னுடைய தண்டனை எவ்வளவு கடுமையானதாக இருந்தது!

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

46. கூறுவீராக, "ஒரு விஷயத்தைச் செய்யும்படி உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்: இருவர் இருவராகவோ அல்லது தனித்தவர்களாகவோ **கடவுள்**–க்கு உங்களையே அர்ப்பணித்துக் கொள்ளுங்கள், பின்னர் சிந்தியுங்கள். உங்களுடைய தோழர் *(ரஷாத்)* கிறுக்கர் அல்லர். அவர் பயங்கரமானதொரு தண்டனையின் வருகைக்குச் சற்று முன்னர், உங்களுக்குத் தெளிவானதொரு எச்சரிப்பவரேயாவார்."

---

**34:43 "ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலீஃபா" என்பதன் மதிப்பையும் (725), இந்த வசன எண்ணையும் (43), நாம் கூட்டினால் நமக்குக் கிடைப்பது 505+725+43=1273=19x67. பின் இணைப்புகள் 1 & 2 ஐப் பார்க்கவும்.*

**34:45 மோஸஸுக்கும் ஜீஸஸுக்கும் கொடுக்கப்பட்ட மாபெரும் அற்புதங்கள் காலம் மற்றும் இடம் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்டிருந்தன; அந்த இடத்தில் அந்தக் காலகட்டத்தில் இருக்க நேர்ந்த சில மனிதர்களால் அவை பார்க்கப்பட்டன. ஆனால் குர்ஆனுடைய கணித அற்புதமோ நிலைத்திருப்பதாகும் (பார்க்க 74:30–35 மற்றும் பின் இணைப்பு 1).*

**34:46 "ரஷாத்" தின் எழுத்தெண்மதிப்புக்கு (505) அருகில் "கலீபா" என்பதன் மதிப்பையும் (725) பின்னர் சூரா எண்ணையும் (34), மேலும் வசன எண்ணையும் (46) நாம் அமைத்தால், நமக்குக் கிடைப்பது 5057253446=19x266171234.*

47. கூறுவீராக, "நான் உங்களிடம் எந்தக் கூலியும் கேட்கவில்லை; நீங்களே அதனை வைத்துக் கொள்ளலாம். எனது கூலி **கடவுள்**–யிடமிருந்து மட்டுமே வருகின்றது. அனைத்து விஷயங்களுக்கும் அவர் சாட்சியாகின்றார்."

48. கூறுவீராக, "என் இரட்சகர் சத்தியம் மிகைக்கும் படிச் செய்கின்றார். அவர்தான் அனைத்து இரகசியங் களையும் அறிந்தவர்."

49. கூறுவீராக, "சத்தியம் வந்துவிட்டது; அதே சமயம் பொய்மை எதனையும் துவக்கவோ அன்றி அதனை மறுபடியும் செய்யவோ முடியாது."

50. கூறுவீராக, "நான் வழிதவறிச் செல்வேனாயின், என்னுடைய சொந்தக் குறைபாடுகளினாலேயே நான் வழிதவறிச் செல்கின்றேன். மேலும் நான் வழி நடத்தப்பட்டால், என்னுடைய இரட்சகர் தந்த உள்ளுணர்வே அதற்குக் காரணமாகும். அவர் செவியேற்பவர், அருகிலிருப்பவர்."

51. அந்த மாபெரும் பயங்கரம் அவர்களைத் தாக்கும் பொழுது, அவர்களை உம்மால் பார்க்க மட்டும் முடிந் தால்; அப்போது அவர்களால் தப்பிக்க முடியாது, மேலும் அவர்கள் பலவந்தமாகப் பிடித்துச் செல்லப் படுவார்கள்.

52. அப்போது அவர்கள் கூறுவார்கள், "இப்போது நாங் கள் இதில் நம்பிக்கை கொள்கின்றோம்," ஆனால் அது மிக நீண்ட தாமதமாகி இருக்கும்.

53. இதற்கு முன்னர் அவர்கள் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்; அதற்குப் பதிலாக, யூகங்களையும்* அனுமானங்களையும் ஆதரிப்பதென அவர்கள் முடிவெடுத்து விட்டனர்.

54. அதன் விளைவாக, அவர்கள் விருப்பம் கொண்டி ருந்த ஒவ்வொன்றும் அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டது. முந்திய தலைமுறையினரில் அவர்களைப் போன்றவர்களுக்கு நேரிட்ட அதே விதிதான் இது. அவர்கள் மிக அதிகமான ஐயங்களைக் கொண்டி ருந்தனர்.

****

## சூரா 35: துவக்ககர்த்தா (ஃபாதிர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, வானங்கள் மற்றும் பூமி யின் துவக்ககர்த்தா, மேலும் சிறகுகள்– இரண்டு, மூன்று மற்றும் நான்கு *(சிறகுகள்)* கொண்ட தூதர் களாக வானவர்களை நியமிப்பவர். அவர் நாடுகின்ற வாறு படைப்புக்களை அவர் அதிகரிக்கின்றார். **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

2. மக்கள் மீது **கடவுள்** கருணையைப் பொழியும் பொழுது, எந்தச் சக்தியும் அதனைத் தடுத்திட முடி யாது, மேலும் அவர் அதனைத் தடுத்து நிறுத்திக் கொண்டால் எந்தச் சக்தியும், அவரைத் தவிர, அதனை அனுப்ப முடியாது, அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

3. மனிதர்களே, உங்கள் மீதான **கடவுள்**–ன் ஆசிகளை நினைவில் கொள்ளுங்கள், **கடவுள்**–ஐ விடுத்து வானத்திலும் பூமியிலுமிருந்து உங்களுக்கு வழங்கு கின்ற படைப்பாளர் எவரும் இருக்கின்றாரா? அவரு டன் வேறு தெய்வம் இல்லை. எவ்வாறு நீங்கள் வழிபிச கிட முடியும்?

4. அவர்கள் உம்மை நம்பமறுத்தால், உமக்கு முன்னி ருந்த தூதர்களும், நம்பமறுக்கப்பட்டுள்ளனர். **கடவுள்** அனைத்து விஷயங்களையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

5. மக்களே, **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதா கும்; ஆகவே இந்தக் கீழான வாழ்வின் மூலம் கவனம் திருப்பப்பட்டவர்களாகி விடாதீர்கள். வெற்று மாயை களினால் **கடவுள்**–யிடமிருந்து விலகிச் சென்று விடாதீர்கள்.

6. சாத்தான் உங்களுடைய விரோதியாவான், ஆகவே ஒரு விரோதியைப் போல அவனை நடத்துங்கள். நரகவாசிகளாக இருப்பதற்காக மட்டுமே அவன் தன் கட்சியினரை அழைக்கின்றான்.

7. நம்பமறுப்பவர்கள் கடுமையானதொரு தண்ட னைக்கு உள்ளாகிவிட்டனர், மேலும் நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர் கள் மன்னிப்பிற்கும் மகத்தானதொரு பிரதி பலனுக் கும் தகுதிபெற்று விட்டனர்.

8. தன்னுடைய தீய காரியத்தை அது நன்னெறியானது தான் என்று அவன் எண்ணிக்கொள்ளும் அளவுக்கு, அவனுடைய கண்களுக்கு அழகாக்கப்பட்ட ஒரு வனை கவனித்துப் பார்ப்பீராக. இவ்விதமாக *(வழி தவறிச் செல்ல)* நாடுவோரைக் **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார், மேலும் *(வழிகாட்டப்பட்ட வராக இருக்க)* நாடுவோரை அவர் வழி நடத்துகின் றார். எனவே, அவர்களுக்காகத் துக்கப் படாதீர். அவர் கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

**34:53 அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் கடவுளின் வார்த்தையை கைவிட்டு விட்டு மனிதர்களின் வார்த்தைகளை ஆதரிக்க முற்படுகின்றனர். யூதர்களும் முஸ்லிம்களும் மிஷ்னாஹ் (ஹதீஸ்) மற்றும் ஜெமரா (சுன்னா) வை ஆதரிக்கின்றனர், அதே சமயம் கிறித்துவர்களோ, ஜீஸஸிற்குப் பின்னர் 325 வருடங்கள் கழித்து நைசீன் மாநாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட திரித்துவத்தை ஆதரிக்கின்றனர்.*

9. **கடவுள்**தான் மேகங்களை எழுப்புவதற்காகக் காற்று களை அனுப்புகின்றவர், பின்னர் அவற்றைத் தரிசு நிலங்களின்பால் நாம் ஓட்டுகின்றோம், மேலும் அவை இறந்து விட்ட பின்னர் அத்தகைய நிலங்களை உயிர்ப்பிக்கின்றோம். உயிர்த்தெழுப்புதல் இவ்வித மானதேயாகும்.

*அனைத்துக் கண்ணியமும்*
*கடவுளிடம் உள்ளது*

10. கண்ணியத்தைத் தேடும் எவரொருவரும் அனைத் துக் கண்ணியமும் **கடவுள்**–க்குரியது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நல்ல வார்த்தைகள் அவரிடமே ஏறுகின்றன, மேலும் நன்னெறியான காரி யங்களை அவர் உயர்த்துகின்றார். தீய காரியங் களைச் சூழ்ச்சி செய்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளா கின்றனர்; இத்தகைய மக்களின் சூழ்ச்சிகள் தோல்வியுறும் என விதிக்கப்பட்டுள்ளது.

*கடவுள் முழுமையான*
*கட்டுப்பாடு கொண்டுள்ளார்*

11. மண்ணிலிருந்தும், பின்னர் ஒரு சிறு துளியிலிருந்தும் **கடவுள்** உங்களைப் படைத்தார், பின்னர் உங்களு டைய ஜோடிகளின் மூலமாக அவர் உங்களை இனப் பெருக்கம் செய்யச் செய்கின்றார். அவர் அறிந்தி டாமல், எந்தப் பெண்ணும் கருத்தரிப்பதோ அன்றிப் பிரசவிப்பதோ இல்லை. முன்னரே இருக்கின்ற ஒரு பதிவேட்டிற்கு ஏற்பவே அன்றி, எவர் ஒருவரும் ஒரு நீண்ட வாழ்வு வாழ்வதில்லை, மேலும் எவர் ஒருவரு டைய வாழ்வும் குறுகியதாக மாற்றப்படுவதுமில்லை. இது **கடவுள்**–க்கு எளிதேயாகும்.

*கடவுளின் மகத்துவத்தைப் போற்றுதல்**

12. இரு கடல்களும் ஒரே மாதிரியானவை அல்ல; ஒன்று புத்துணர்வூட்டுவதாகவும் மதுரமாகவும் இருக் கின்றது, அதே சமயம் மற்றொன்று உப்பாகவும் அருந்த இயலாததாகவும் உள்ளது. அவை ஒவ் வொன்றிலிருந்தும் நீங்கள் மிருதுவான இறைச்சியை உண்ணுகின்றீர்கள், மேலும் அணிவதற்கு ஆபரணங் களைப் பிரித்தெடுத்துக் கொள்கின்றீர்கள். மேலும் அவருடைய வாழ்வாதாரங்களைத் தேடியவாறு, கப்பல்கள் அவற்றினூடே சவாரி செய்வதை நீங்கள் பார்க்கின்றீர்கள், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

13. பகலுக்குள் இரவை அவர் படிப்படியாகக் கலக்கின் றார் மேலும் இரவுக்குள் பகலைப் படிப்படியாக கலக் கின்றார். முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு கால அளவுக்கு இயங்குமாறு சூரியனையும் சந்திரனையும் அவர் பணித்துள்ளார். உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர்; அரசுரிமை அனைத்தும் அவருக்குரி யது. அவருடன் நீங்கள் அமைத்துக் கொள்ளும் எந்த போலி தெய்வங்களும் ஒரு வித்துடைய ஓட்டின் அளவுக்குக் கூட சொந்தமாகக் கொண்டிருக்க வில்லை.

*போலித் தெய்வங்கள்*
*முற்றிலுமாகச் சக்தியற்றவை**

14. அவர்களை நோக்கி நீங்கள் அழைத்தால், அவர் களால் உங்களைச் செவியேற்க இயலாது. அவர்கள் உங்களைச் செவியேற்றாலும், அவர்களால் உங்க ளுக்கு மறுமொழி அளிக்க இயலாது. உயிர்த்தெழுப் பப்படும் நாளன்று, அவர்கள் உங்களைக்கை விட்டு விடுவார்கள். மிகவும் நன்கறிந்தவரைப் போல் எவரும் உங்களுக்குத் தெரிவிக்க இயலாது.

15. மக்களே, நீங்கள்தான் **கடவுள்**–ன் தேவையுடைய வர்கள், அதே சமயம் **கடவுள்** எவரொருவருடைய தேவையுமில்லாதவர். மிக்க புகழுக்குத் தகுதியானவர்.

16. அவர் நாடினால், உங்களை அவர் நீக்கிவிட்டு புதிய தொரு படைப்பை மாற்றியமைத்துவிட முடியும்.

17. **கடவுள்**–க்கு இது மிகவும் கடினமானதல்ல.

18. எந்த ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவின் பாவங்களைச் சுமக்க முடியாது. பாவங்களால் சுமையேற்றப்பட்ட ஓர் ஆத்மா தனது சுமையில் பகுதியைச் சுமந்து கொள்ளு மாறு மற்றொன்றை மன்றாடினால், அவர்கள் உற வினர்களாக இருந்த போதிலும், வேறு எந்த ஆத்மா வும் அதன் எந்தப் பகுதியையும், சுமக்க இயலாது. தங்களுடைய தனிமையில் தனித்திருக்கும் போதி லும், தங்கள் இரட்சகரிடம் பக்தி செலுத்துவோர், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிப்போர்தாம் உமது எச்சரிக்கைகளை கவனத்தில் கொள்ளும் ஒரே மக்கள் ஆவர். தன் ஆத்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் எவராயினும், தன் சொந்த நலனுக்காகவே அவ்வாறு செய்கின்றார். இறுதி விதி **கடவுள்** வசமே உள்ளது.

---

****35:12–13*** *அண்ட வெளிக்குள் நம் விண்வெளி வீரர்களை நாம் அனுப்பும்பொழுது, அவர்களுடைய உணவு, தண்ணீர், மற்றும் பிராணவாயு ஆகியவற்றின் குறைந்தபட்சத் தேவைகளையே நாம் அவர்களுக்கு வழங்குகின்றோம். கோடானு கோடிக் கணக்கான வருடங்களுக்கு முன்னர், சாத்தானுடைய இறைநிந்தனையின் பக்கம் நாம் சாய்ந்த போது (பின் இணைப்பு7), கடவுள் பூமியெனும் விண்கலத்தில் ஏற்றி நம்மை அண்ட வெளியில் மிதக்க விட்டுள்ளார். ஆனால், கடவுள் நமது விண் வெளிக் கலத்தில் ஏராளமான வகை புதிய உணவுகளையும், நீரையும், பிராணவாயுவையும் மேலும் விண்வெளிப் பயணி களான நமது இனப்பெருக்கத்தையும் கூட புதுப்பித்துக் கொள்ள பிரமிப்பூட்டும் வழிமுறைகளை வழங்கியுள்ளார்.*

**35:14 *மக்கள் ஜீஸஸ், மேரி, முஹம்மத், அலி மற்றும் / அல்லது மகான்கள் ஆகியோரை இணைவழிபாடு செய்கின்றனர்; இத்தகைய போலித்தெய்வங்கள் இறந்து விட்டவர்களாக, அறியாதவர்களாக, மேலும் முற்றிலும் சக்தியற்றவர்களாக உள்ளனர். அவர்கள் உயிருடன் இருந்த பொழுதும் கூட, அவர்கள் சக்தியற்றவர்களாகவே இருந்தனர்.*

19. குருடரும் பார்ப்பவரும் சமமானவர்கள் அல்லர்.

20. அன்றி இருளும் ஒளியும்.

21. அன்றி நிழலின் குளுமையும் சூரியனின் வெப்பமும்.

22. அன்றி உயிருள்ளவர்களும் மரணித்தவர்களும்; தான்நாடுவோரைக் **கடவுள்** செவியேற்கச் செய்கின்றார். சமாதிகளில் உள்ளோரைச் செவியேற்பவர்களாகச் செய்ய உம்மால் முடியாது.

23. நீர் ஓர் எச்சரிப்பவர் என்பதை விட அதிகம் ஒன்றுமில்லை.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

24. நற்செய்தியைத் தாங்கிய ஒருவராகவும், அவ்வண்ணமே ஓர் எச்சரிப்பவராகவும், சத்தியத்துடன் உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.* ஒவ்வொரு சமூகமும் ஓர் எச்சரிப்பவரைப் பெற்றாக வேண்டும்.

25. அவர்கள் உம்மை நம்பமறுத்தால், அவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் கூட நம்பமறுத்துள்ளனர். தெளிவான சான்றுகளுடனும், மேலும் சங்கீதம், மற்றும் ஒளியூட்டும் வேதங்களுடனும் அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் சென்றார்கள்.

26. அதனைத் தொடர்ந்து, நம்பமறுத்தவர்களை நான் தண்டித்தேன்; என் தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது!

*கடவுளின் வண்ணமயமான படைப்புகள்*

27. **கடவுள்** விண்ணிலிருந்து தண்ணீரை இறக்கி அனுப்புகின்றார், அதன் மூலம் பல்வேறு நிறங்களில் கனிகளை நாம் விளைவிக்கின்றோம் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லையா? மலைகளும் கூட வெவ்வேறு நிறங்களைக் கொண்டுள்ளன; சிகரங்கள் வெண்மையாகவோ, அல்லது சிகப்பாகவோ, அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறத்திலோ உள்ளன. மேலும் அண்டங்காக்கைகள் கறுப்பாக உள்ளன.

28. அத்துடன், மனிதர்கள், பிராணிகள், மற்றும் கால்நடைகளும் பல்வேறு நிறங்களில் இருக்கின்றன. இதனால்தான் **கடவுள்** மீது உண்மையில் பக்தியுடைய மக்கள்அறிவுடையவர்களாகவே இருக்கின்றனர். **கடவுள்** எல்லாம் வல்லவர், மன்னிக்கின்றவர்.

29. நிச்சயமாக, **கடவுள்**–ன் புத்தகத்தை ஓதி வருபவர்கள், *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பவர்கள், மேலும் அவர்களுக்குரிய நமது வாழ்வாதாரங்களில் இருந்து – இரகசியமாகவும் பகிரங்கமாகவும் – செலவு செய்பவர்கள் ஒரு போதும் நஷ்டமடையாத ஒரு முதலீட்டில் ஈடுபட்டிருக்கின்றனர்.

30. தாராளமாக அவர்களுக்கு அவர் பிரதிபலன் அளிப்பார், மேலும் அவர்கள் மீதான தன் ஆசீர்வாதங்களைப் பெருக்குவார். அவர் மன்னிக்கின்றவர், பாராட்டுபவர்.

*குர்ஆன்:*
*அனைத்து வேதங்களின் பூர்த்தி*

31. முந்திய அனைத்து வேதங்களையும் பூர்த்தி செய்வதாக, இந்த வேதத்தில் நாம் உமக்கு வெளிப்படுத்தியவையே சத்தியமாகும். **கடவுள்** தன் ஊழியர்களை முற்றிலும் நன்கறிந்தவர், பார்ப்பவர்.

32. ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு வேதத்தை நாம் கைமாற்றினோம், மேலும் நம் ஊழியர்களிலிருந்து நாம் தேர்ந்தெடுக்கும் எவரையும் அதனைப் பெறுவதற்கு நாம் அனுமதித்தோம். அதனைத் தொடர்ந்து, அவர்களில் சிலர் தங்கள் ஆத்மாக்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டனர், மற்றவர்கள் பகுதி நேரம் மட்டும் அதனை ஆதரித்தார்கள், அதே சமயம் மற்றவர்கள் **கடவுள்**–ன் நாட்டத்திற்கேற்ப நன்னெறியான காரியங்கள் புரிய ஆவலுடன் இருந்தனர்; இதுவே மகத்தான பெரு வெற்றியாகும்.

*நம்பிக்கையாளர்கள்*

33. அவர்கள் ஈடன் தோட்டங்களில் நுழைவார்கள், அங்கே அவர்கள் தங்கத்திலும் முத்துகளிலுமான காப்புகளால் அலங்கரிக்கப்படுவார்கள், மேலும் அதில் அவர்களுடைய ஆடைகள் பட்டாலானதாக இருக்கும்.

34. அவர்கள் கூறுவார்கள், "நமது எல்லாக் கவலைகளையும் நீக்கியதற்காகக் **கடவுள்**–ஐப் புகழுங்கள். நம் இரட்சகர் மன்னிக்கின்றவர், பாராட்டுபவர்.

35. "அவருடைய அருளின் வெளிப்பாடாக, நிலையான பேரின்ப வீட்டிற்குள் அவர் நம்மை அனுமதித்துள்ளார். இங்கே ஒருபோதும் நாம் சலிப்படைய மாட்டோம், ஒருபோதும் நாம் சோர்வடையவும் மாட்டோம்."

**35:24 "ரஷாத் கலீஃபா"வின் எண்மதிப்புடன் (1230) வசன எண்ணையும் (24) கூட்டினால் நமக்குக் கிடைக்கும் கூட்டுத் தொகை 19ன் பெருக்குத் தொகையாகும் (1230+24=1254=19x66).*

*நம்பமறுப்பவர்கள்*

36. நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நரகத்தின் நெருப்புக்கு உள்ளாகி விட்டனர், அங்கே அவர்கள் ஒருபோதும் மரணத்தின் மூலம் தீர்க்கப் பட்டு விடமாட்டார்கள், அன்றி தண்டனை அவர்களுக்கு எக்காலத்திலும் குறைக்கப்படவும் மாட்டாது. நன்றிகெட்டவர்களுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுப்போம்.

37. அங்கே அவர்கள் அலறுவார்கள், "எங்கள் இரட்சகரே, இங்கிருந்து எங்களை நீர் வெளியேற்றினால், நாங்கள் செய்து கொண்டிருந்த காரியங்களுக்குப் பதிலாக, நன்னெறியான காரியங்களை நாங்கள் புரிவோம்." கவனத்தில் எடுத்துக்கொள்ளக் கூடியவர்களுக்கு தொடர்ந்த நினைவூட்டல்களுடன், ஒரு வாழ்க்கை முழுவதுமான வாய்ப்பை உங்களுக்கு நாம் தரவில்லையா ? எச்சரிப்பவரை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையா ? எனவே, *(விளைவுகளைச்)* சுவையுங்கள். வரம்புமீறியவர்கள் தங்களுக்கு உதவி செய்ய எவரையும் கொண்டிருக்க மாட்டார்கள்.

38. **கடவுள்**தான் வானங்கள் மற்றும் பூமியின் எதிர் காலத்தை அறிந்தவர். அவர்தான் உள்ளார்ந்த எண்ணங்கள் அனைத்தையும் அறிந்தவராக இருக்கின்றார்.

*வெற்றி பெற்றவர்களும் தோற்றவர்களும்*

39. அவர்தான் பூமியின் வாரிசுகளாக உங்களை ஆக்கியவர். அதன் பின்னர், நம்பமறுப்பதைத் தேர்ந்தெடுக்கும் எவராயினும் தனக்கே கேடாகத்தான் அவ்வாறு செய்கின்றார். நம்பமறுப்பவர்களுடைய நம்பமறுத்தல் அவர்கள் பால் அவர்களுடைய இரட்சகரின் கோபத்தை மட்டுமே அதிகரிக்கின்றது. நம்பமறுப்பவர்களுடைய நம்பமறுத்தல் நஷ்டத்திற்குள் அவர்களை ஆழமாக ஆழ்த்தி விடுகின்றது.

40. கூறுவீராக, "**கடவுள்**–வுடன் நீங்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்களைச் சிந்தித்துப் பாருங்கள்; பூமியின் மீது அவர்கள் எதனைப் படைத்திருக்கின்றனர் என்று எனக்குக் காட்டுங்கள்." வானங்களில் ஏதேனும் பங்குரிமையை அவர்கள் சொந்தம் கொண்டிருக்கின்றனரா ? அதனில் சந்தேகம் எதுவும் இல்லாத ஒரு புத்தகத்தை நாம் அவர்களுக்குத் தந்திருக்கின்றோமா ? உண்மையில், வரம்புமீறுபவர்கள் ஒருவர் மற்றவருக்கு வாக்களித்துக் கொள்பவை ஒரு மாயை என்பதை விட அதிகம் எதுவுமில்லை.

41. **கடவுள்**தான் வானங்களையும் பூமியையும், அவை மறைந்திடாதவாறு பிடித்துக் கொண்டிருக்கின்றார். வேறு எவரேனும் ஒருவர் அவற்றைப் பிடிப்பதாக இருந்தால், மிக உறுதியாக அவை மறைந்து போய்விடும். அவர் கனிவானவர், மன்னிக்கின்றவர்.

*அவர்களைச் சோதனையில் ஆழ்த்துதல்*

42. ஓர் எச்சரிப்பவர் அவர்களிடம் வந்தால், குறிப்பிட்டதொரு கூட்டத்தாரைவிட சிறப்பாக வழிநடத்தப்பட்டவர்களாக அவர்கள் இருப்பார்கள் என அவர்கள் **கடவுள்**–ன் மீது பவித்திரமாக சத்தியமிட்டனர் ! ஆயினும், அந்த எச்சரிப்பவர் இப்போது அவர்களிடம் வந்து விட்டதால், இது அவர்களை வெறுப்புக்குள் ஆழமாக ஆழ்த்த மட்டுமே செய்தது.

43. பூமியின் மீது ஆணவத்தையும், தீய சூழ்ச்சிகளையும் அவர்கள் கைக்கொண்டனர், மேலும் தீய சூழ்ச்சிகள் அவற்றைச் சூழ்ச்சி செய்பவர்களை மட்டுமே திருப்பித் தாக்கும். கடந்த காலங்களில் இதே விஷயங்களைச் செய்தவர்களுக்கு நேர்ந்த விதியைத் தவிர வேறெதையும் அவர்கள் பின்னர் எதிர்பார்க்க முடியுமா ? **கடவுள்**–ன் வழிமுறை ஒருபோதும் மாற்ற முடியாதது என்பதை நீர் கண்டு கொள்வீர்; **கடவுள்**–ன் வழிமுறை மாறாதது என்பதை நீர் கண்டு கொள்வீர்.

44. இவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து அவர்களுக்கு முந்தியவர்களுக்கு நேர்ந்த விளைவுகளைக் கவனித்துப் பார்க்கவில்லையா ? இவர்களை விட இன்னும் வலிமை மிக்கவர்களாக அவர்கள் இருந்தனர். வானங்களிலோ அன்றிப் பூமியின் மீதோ **கடவுள்**–யிடமிருந்து எந்த ஒன்றும் மறைக்கப்பட்டு விட முடியாது. அவர் சர்வமும் அறிந்தவர், சர்வ சக்தியுடையவர்.

45. மனிதர்களை அவர்களுடைய பாவங்களுக்காகக் **கடவுள்** தண்டித்திருந்தால், பூமியின் மீது ஓர் உயிர்ப்பிராணியையும் அவர் விட்டு விட மாட்டார். ஆனால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு தவணை வரை அவர்களுக்கு அவர் அவகாசம் அளிக்கின்றார். அவர்களுடைய தவணை பூர்த்தியாகி விட்டால், பின்னர் **கடவுள்** தன் ஊழியர்களைப் பார்ப்பவராக இருக்கின்றார்.

****

## சூரா 36: ய. ச. (யா சீன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ய. ச.*

2. மேலும் ஞானம் நிறைந்த இந்தக் குர்ஆன்.

**36:1 இந்தத் துவக்க எழுத்துகளின் விரிவான விளக்கத்திற்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

3. மிகவும் நிச்சயமாக, நீர் *(ரஷாத்)* தூதர்களில்* ஒருவ ராக இருக்கின்றீர்.

4. நேரானதொரு பாதையின் மீது.

5. இந்த வெளிப்பாடு எல்லாம் வல்லவர், மிக்க கருணை யாளரிடமிருந்து வந்துள்ளது.

6. எவர்களுடைய பெற்றோர்கள் ஒருபோதும் எச்சரிக் கப்படாதிருந்தனரோ அந்த மக்களை எச்சரிப்பதற் காக, அதன் காரணமாக, அவர்கள் அறியாதவர் களாக இருக்கின்றனர்.

7. அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள் என்று முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டது.

8. ஏனெனில் அவர்களுடைய கழுத்துகளைச் சுற்றி, அவர்களுடைய முகவாய்க்கட்டைகள்வரை தளை களை நாம் அமைக்கின்றோம். அதன் விளைவாக, அவர்களுடைய நம்பமறுத்தலில் அவர்கள் அடை பட்டு விடுகின்றனர்.

9. மேலும், அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பினை யும், அவர்களுக்கு பின்னால் ஒரு தடுப்பினையும் நாம் அமைக்கின்றோம், மேலும் இவ்விதமாக, அவர் களுக்கு நாம் திரைபோட்டு விடுகின்றோம்; அவர் களால் பார்க்க இயலாது.

10. அவர்களை நீர் எச்சரிக்கின்றீரோ இல்லையோ அது சமமேயாகும், அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது.*

11. இந்தத் தூதுச் செய்தியை ஆதரிப்பவர்கள், மேலும் – தங்களுடைய தனிமையில் தனித்திருக்கும் பொழு தும் – மிக்க அருளாளரிடம் பக்தி செலுத்துபவர் களால் மட்டுமே நீர் கவனத்தில் கொள்ளப்படுவீர். மன்னிப்பு மற்றும் தாராளமானதொரு பிரதிபலனின் நற்செய்தியை அவர்களிடம் கூறுவீராக.

12. இறந்தவர்களை நிச்சயமாக நாம் உயிர்ப்பிப்போம், மேலும் இந்த வாழ்வில் அவர்கள் செய்த ஒவ்வொன் றையும், அவ்வண்ணமே அவர்களுடைய மரணத்திற் குப் பின்னர் தொடரும் விளைவுகளையும் நாம் பதிவு செய்திருக்கின்றோம். ஆழ்ந்ததோர் பதிவேட்டில் ஒவ் வொன்றையும் நாம் எண்ணி வைத்துள்ளோம்.

*தூதர்களை ஏற்க மறுத்தல்:*
*சோகமானதொரு மானிடப்பண்பு**

13. தூதர்களைப் பெற்றுக் கொண்ட ஒரு சமூகத்திலி ருந்த மக்களின் உதாரணத்தை அவர்களுக்கு உரைப்பீராக.

14. *(தூதர்கள்)* இருவரை நாம் அவர்களிடம் அனுப்பிய பொழுது, அவர்களை அவர்கள் நம்பமறுத்தனர். பின்னர் நாம் மூன்றாமவரைக் கொண்டு அவர் களுக்கு ஆதரவளித்தோம். அவர்கள் கூறினர், "நாங்கள் உங்களுக்கு *(கடவுளின்)* தூதர்களாக இருக்கின்றோம்."

15. அவர்கள் கூறினர், "நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்கள் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. மிக்க அருளாளர் எதனையும் இறக்கி அனுப்பவில் லை. நீங்கள் பொய்யர்களாக இருக்கின்றீர்கள்."

16. அவர்கள் கூறினார்கள்,"நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்டுள்ளோம் என்பதை எங்கள் இரட்சகர் அறிந்துள்ளார்.

17. "எங்களுடைய ஒரே பணி தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதே."

18. அவர்கள் கூறினர், "நாங்கள் உங்களைக் கெட்ட சகுனங்களாகக் கருதுகின்றோம். நீங்கள் விலகிக் கொள்ளவில்லையெனில், நிச்சயமாக நாங்கள் உங்களைக் கல்லாலடித்துக் கொன்று விடுவோம், அல்லது வலிநிறைந்த தண்டனையைக் கொண்டு வேதனை செய்வோம்."

19. அவர்கள் கூறினார்கள், "இப்போது நீங்கள் எச்சரிக் கப்பட்டவர்களாகி விட்டதனால், உங்களுடைய சகுனம் உங்களுடைய மறுமொழியைப் பொறுத்த தாகவே உள்ளது. உண்மையில், நீங்கள் வரம்புமீறு கின்ற மக்களாகவே இருக்கின்றீர்கள்."

20. அந்நகரத்தின் மறுகோடியிலிருந்து, "என் சமூகத் தாரே, இத்தூதர்களைப் பின்பற்றுங்கள்" எனக் கூறியவராக ஒரு மனிதர் வந்தார்.

21. "உங்களிடம் கூலி எதுவும் கேட்காதவர்களை, மேலும் வழிகாட்டப்பட்டவர்களாக இருப்பவர் களைப் பின்பற்றுங்கள்.

22. "என்னைத் துவக்கிய ஒருவரை நான் ஏன் வழி படாதிருக்க வேண்டும், மேலும் அவரிடமே உங்கள் இறுதித் திரும்புதலும் இருக்கும் போது ?

23. "அவருடன் தெய்வங்களை நான் அமைத்துக் கொள்ள வேண்டுமா ? மிக்க அருளாளர் எனக்கு ஏதேனும் தீங்கை நாடினால், அவர்களுடைய பரிந் துரை எனக்கு ஒரு சிறிதும் உதவ முடியாது, அன்றி அவர்கள் என்னை இரட்சிக்கவும் இயலாது.

24. "அவ்வாறாயின், நான் முற்றிலும் வழிதவறியவனா கவே இருப்பேன்.

**36:3 மறுக்க இயலாத கண்கூடான ஆதாரங்களுக்கு பின் இணைப்பு 2 & 26ஐப் பார்க்கவும்.*

**36:10 ஒவ்வொருவரும் ஏற்கனவே ஒரு நம்பிக்கையாளர் என்றோ அல்லது ஒரு நம்பமறுப்பவர் என்றோ முத்திரை குத்தப் பட்டுள்ளனர். பார்க்க பின் இணைப்பு 14.*

**36:13–27 கடவுளின் தூதர்கள் சான்று வைத்திருப்பார்கள், கடவுளை மட்டும் ஆதரிப்பார்கள், மேலும் பணம் கேட்க மாட்டார் கள்.*

25. "நான் உங்களுடைய இரட்சகர் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்; தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்."

*நன்னெறியாளர்கள் நேரடியாகச் சுவனம்* செல்கின்றனர்*

26. *(அவருடைய மரணத் தருவாயில்)* அவரிடம் கூறப் பட்டது, "சுவனத்தில் நுழைவீராக." அவர் கூறினார், "ஓ, என் சமூகத்தார் அறிந்திருக்க வேண்டுமே என நான் விரும்புகின்றேன்.

27. "என் இரட்சகர் என்னை மன்னித்து விட்டார், மேலும் கண்ணியத்திற்குரியவனாக என்னை ஆக்கி விட்டார் என்பதை."

28. அவருக்குப் பின்னர், அவருடைய சமூகத்தார் மீது விண்ணிலிருந்து படைவீரர்களை நாம் இறக்கி அனுப்பவில்லை; அவர்களை நாம் இறக்கி அனுப்பத் தேவையுமில்லை.

29. அதற்காக எடுத்துக் கொண்டதெல்லாம் ஓர் அடி தான், உடனே அவர்கள் அசைவற்றுப் போயினர்.

*தூதர்களைப் பரிகசித்தல் : சோகமானதொரு மானிடப்பண்பு**

30. மக்களின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமாக இருக் கின்றது! ஒரு தூதர் அவர்களிடம் சென்ற ஒவ்வொரு முறையும், அவர்கள் எப்பொழுதும் அவரைப் பரிகசித் தனர்.

31. அவர்களுக்கு முன்னர் எத்தனை தலைமுறையினரை நாம் அழித்திருக்கின்றோம் என்பதையும், மேலும் அவர் கள் ஒருபோதும் அவர்களிடம் திரும்பாதிருப்பது எப்படி என்பதையும் அவர்கள் பார்க்கவில்லையா?

32. அவர்களில் ஒவ்வொருவரும் நம் முன்னர் வரவழைக் கப்படுவார்கள்.

*கடவுளின் அத்தாட்சிகள்*

33. இறந்த நிலம் அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும்: நாம் அதனை உயிர்ப்பிக்கின்றோம், மேலும் அதிலிருந்து அவர்களுடைய உணவுக்காக தானியங்களை முளைப்பிக்கின்றோம்.

34. பேரீத்த மரத் தோட்டங்களையும் திராட்சைகளையும் அதில் நாம் வளர்க்கின்றோம், மேலும் அதிலிருந்து ஊற்றுகளைப் பொங்கி வரச் செய்கின்றோம்.

35. இது அவர்களுக்குப் பழங்களை வழங்குவதற்காகவும், மேலும் அவர்களுக்குத் தேவையான எதனையும் அவர்களுடைய சொந்தக் கரங்களாலேயே அவர்கள் உற்பத்தி செய்து கொள்வதற்காகவுமேயாகும். அவர் கள் நன்றியுடையோராய் இருப்பார்களா?

36. பூமியிலிருந்து அனைத்து வகைகளிலான தாவரங் களையும், அவ்வண்ணமே அவர்களையும், மேலும் அவர்கள் அறிந்தே இராத மற்றப் படைப்புகளையும் படைத்த அந்த ஒருவர் துதிப்பிற்குரியவர்.

37. இரவு அவர்களுக்கு மற்றொரு அத்தாட்சியாகும்: அதிலிருந்து பகலின் ஒளியை நாம் நீக்கி விடுகின் றோம், அப்போது அவர்கள் இருளில் மூழ்கி விடு கின்றனர்.

38. எல்லாம் வல்லவர், சர்வமும் அறிந்தவரின் வடிவமைப் புக்கு ஏற்ப, குறிப்பிட்டதொரு பகுதியினுள் சூரியன் அஸ்தமிக்கிறது.

39. வளைவான பழமைவாய்ந்த கத்தியின் உறை போன்று சந்திரன் ஆகும் வரை, பல நிலைகளில் தோன்றுமாறு அதனை நாம் வடிவமைத்தோம்.

40. சூரியன் ஒருபோதும் சந்திரனைப் பிடித்து விட முடியாது – இரவும் பகலும் ஒருபோதும் விலகாது– அவற்றில் ஒவ்வொன்றும் அதனதன் சுற்றுப் பாதை யில் மிதந்து கொண்டு இருக்கின்றது.

*முதல் கப்பலின் கண்டுபிடிப்பு*

41. அவர்களுடைய மூதாதையர்களை சுமை நிரம்பிய மரக்கலத்தில் நாம் சுமந்தது அவர்களுக்கு மற்று மொரு அத்தாட்சியாகும்.

42. பின்னர் அதனையே அவர்கள் சவாரி செய்வதற்காக நாம் படைத்தோம்.

43. நாம் நாடியிருந்தால், அவர்களுடைய அலறல்கள் செவியேற்கப்படாதவாறு, அன்றியும் அவர்கள் காப் பாற்றப்பட முடியாதவாறு, அவர்களை நாம் மூழ்கடித் திருக்க முடியும்.

44. மாறாக, நாம் அவர்கள் மீது கருணையைப் பொழி கின்றோம், மேலும் சிறிதுகாலம் சுகமனுபவிக்க அவர் களை விட்டு விடுகின்றோம்.

45. இருப்பினும், "நீங்கள் கருணையை அடையும் பொருட்டு, உங்களுடைய எதிர்காலத்திற்காக நன்னெறியான காரியங்கள் புரிய, உங்களுடைய கடந்த காலத்தி லிருந்து கற்றுக் கொள்ளுங்கள்," என்று அவர்களிடம் கூறப்பட்டபோது,

****36:26** நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை; அவர்கள் ஆதம் மற்றும் ஏவாள் வசித்த அதே சுவனத்திற்கு இடம் மாறுகின்றனர், அவ்வளவுதான். அவர்கள் நபிமார்கள், மகான்கள், வீரமரணம் அடைந்தவர்கள் ஆகியோருடன் சுறு சுறுப்பான மற்றும் குறையேயில்லாத மிகச் சிறப்பான ஒரு வாழ்வில் சேர்ந்து கொள்கின்றனர் (பார்க்க பின்இணைப்பு 17).*

****36:30** தூதுத்துவத்திற்கான திடமான சான்றினைத் தூதர் காட்டி, கடவுளை மட்டுமே வழிபடுவதை ஆதரித்து, நம்மிடம் பணம் கேட்காதிருந்தால், நாம் ஏன் நம்பிக்கை கொள்ளாதிருக்க வேண்டும்? (பார்க்க பின் இணைப்பு 2).*

46. அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்களுக்கு எந்த விதமான சான்று கொடுக்கப்பட்டாலும் பொருட்டல்ல, அவர்கள் எப்பொழுதும் அதனை அலட்சியம் செய்கின்றனர்.

47. "உங்களுக்குக் கொடுக்கப்பட்ட **கடவுள்**–ன் வாழ்வாதாரங்களில் இருந்து வழங்குங்கள்," என்று அவர்களிடம் கூறப்பட்டால், நம்பமறுப்பவர்கள் நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுகின்றனர், "அவ்வாறு அவர் நாடியிருந்தால், எவர்களுக்குக் **கடவுள்** உணவளித்திருக்க முடியுமோ அவர்களுக்கு நாங்கள் ஏன் அளிக்க வேண்டும்? மெய்யாகவே நீங்கள் நெடிய வழிகேட்டில் இருக்கின்றீர்கள்."

48. அத்துடன் அவர்கள் சவால் விடுகின்றனர், "நீர் உண்மையாளராக இருந்தால், எப்பொழுது அந்த வாக்குறுதி நிகழ்ந்தேறும்?"

49. அவர்கள் பார்ப்பதெல்லாம் அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் பொழுதே, அவர்களை மூழ்கடிக்கின்ற ஓர் அடியாகத்தான் இருக்கும்.

50. ஒரு மரணசாசனம் செய்வதற்குக் கூட அவர்களுக்கு நேரம் இருக்காது, அன்றி அவர்கள் தங்கள் சமூகத்தாரிடம் திரும்பி வரவும் இயலாது.

51. கொம்பு ஊதப்படும், உடனே அவர்கள் சமாதிகளிலிருந்து எழுந்து தங்கள் இரட்சகரை நோக்கிச் செல்வார்கள்.

52. அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்குக் கேடுதான். நம்முடைய மரணத்திலிருந்து நம்மை உயிர்த்தெழுப்பியது யார்? இதுதான் மிக்க அருளாளர் வாக்களித்திருந்தது. தூதர்கள் சரியானவர்களாகவே இருந்திருக்கின்றனர்."

53. அதற்கு எடுத்துக் கொள்ளப் போவதெல்லாம் ஓர் அடிதான், உடனே அவர்கள் நம் முன்னர் வரவழைக்கப்படுவார்கள்.

54. அந்த நாளில், எந்த ஆத்மாவுக்கும் சிறிதளவும் அநீதியிழைக்கப்படாது. நீங்கள் செய்தது எதுவானாலும் அதற்கான கூலியை மிகச் சரியாக நீங்கள் கொடுக்கப்படுவீர்கள்.

55. சுவனவாசிகள், அந்நாளில், மகிழ்ச்சியுடன் அலுவல்களில் மூழ்கி இருப்பார்கள்.

56. வசதியான ஆசனங்களை அனுபவித்தவாறு, எழில் மிக்க நிழல்தனில் அவர்கள் தங்கள் துணைகளுடன் வசிப்பார்கள்.

57. அங்கே அவர்களுக்குப் பழங்கள் கிடைக்கும்; அவர்கள் விரும்புகின்ற எந்த ஒன்றும் அவர்களுக்குக் கிடைக்கும்.

58. மிக்க கருணையுள்ள ஓர் இரட்சகரிடமிருந்து சாந்தியின் வாழ்த்துகள்.

59. குற்றவாளிகளே, உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் ஒதுக்கி வைக்கப்படுவீர்கள்.

*மற்றொரு மாற்று ஏற்பாடு சாத்தான்தான்*

60. உங்களிடம் நான் உடன்படிக்கை செய்து கொள்ளவில்லையா, ஆதமின் சந்ததிகளே, நீங்கள் சாத்தானை வழிபடக் கூடாதென்று? அவன் உங்களுடைய மிகத் தீவிரமான விரோதியென்று?

61. மேலும் நீங்கள் என்னை மட்டுமே வழிபட வேண்டுமென்று? இதுவே சரியான பாதையாகும்.

62. உங்களில் எண்ணற்றவர்களை அவன் வழிதவறச் செய்து விட்டான். நீங்கள் எந்தப் புரிந்து கொள்ளுதலையும் பெற்றிருக்கவில்லையா?

63. இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த நரகமாகும்.

64. உங்களுடைய நம்பமறுத்தலின் பின் விளைவாக, இன்றைய தினம் நீங்கள் அதில் கருகுவீர்கள்.

65. அந்நாளில் அவர்களுடைய வாய்களில் நாம் முத்திரையிட்டு விடுவோம்; அவர்களுடைய கரங்களும் பாதங்களும் அவர்கள் செய்த ஒவ்வொன்றுக்கும் சாட்சி பகரும்.

66. நாம் நாடினால், அவர்களுடைய கண்களை நாம் திரையிட்டு விட முடியும், அதன் விளைவாக, அவர்கள் பாதையைத் தேடும் பொழுது, அவர்கள் பார்க்க மாட்டார்கள்.

67. நாம் நாடினால், இருப்பிடத்திலேயே அவர்களை நாம் உறைந்து விடச் செய்ய முடியும்; இப்படியாக, அவர்கள் முன்னால் நகரவோ அன்றிப் பின்னால் செல்லவோ முடியாது.

68. எவரையெல்லாம் நீண்டதொரு ஆயுட்காலம் வாழ நாம் அனுமதிக்கின்றோமோ, அவரை பலஹீனத்திற்கு நாம் மீண்டும் திருப்பி விடுகின்றோம். அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா?

69. *(தூதராகிய)* அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தது கவிதை அல்ல, அன்றி அவரும் *(ஒரு கவிஞர்)* அல்லர். இது ஒரு வலிமையான சான்று,* மேலும் ஆழ்ந்ததொரு குர்ஆனேயன்றி வேறில்லை.

**36:69 "திக்ர்" எனும் வார்த்தை, நிச்சயமாக இலக்கியமோ அன்றிக் கவிதையோ அல்லாத, குர்ஆனின் மகத்தான கணிதக் குறியீட்டையே அடிக்கடி குறிக்கின்றது. தயவுசெய்து, 38:1,8; 15:6,9; 16:44; 21:2,24; 26:5; மற்றும் 36:11 ஆகியவற்றில் சரிபார்த்துக் கொள்ளவும்.*

70. உயிருள்ளவர்களுக்குப் பிரச்சாரம் செய்தற்காகவும், மேலும் நம்பமறுப்பவர்களை வெளிப்படுத்துவதற்காகவும்.

71. அவர்கள் சொந்தமாகக் கொண்டிருக்கும் கால் நடைகளை, நம் சொந்தக் கரங்களால், நாம் அவர் களுக்காகப் படைத்தோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?

72. மேலும் அவற்றை அவர்களுக்கு அடங்குமாறு நாம் செய்தோம்; சிலவற்றில் அவர்கள் சவாரி செய் கின்றனர், மேலும் சிலவற்றை அவர்கள் உண்ணு கின்றனர்.

73. அவற்றிலிருந்து மற்ற பலன்களையும், அவ்வண்ண மே பானங்களையும் அவர்கள் அடைந்து கொள் கின்றனர். அவர்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டாமா?

*சக்தியற்ற போலித்தெய்வங்கள்*

74. **கடவுள்**–வுடன் மற்றத் தெய்வங்களை அவர்கள் அமைத்துக் கொள்கின்றனர், ஒருவேளை அவர்க ளுக்கு உதவியாக அவர்கள் இருக்கக் கூடுமென்று!

75. நேர் மாற்றமாக, அவர்களுக்கு உதவ அவர்களால் முடியாது; அர்ப்பணித்துக் கொண்ட படை வீரர்களாக அவர்களுக்கு ஊழியம் செய்பவர்களாக அவர்கள் ஆகிவிடுவார்கள்.

76. எனவே, அவர்களுடைய கூற்றுகளால் கவலைக் குள்ளாகாதீர். அவர்கள் மறைக்கின்ற ஒவ்வொன் றையும், மேலும் அவர்கள் அறிவிக்கும் ஒவ்வொன் றையும் நாம் முற்றிலும் அறிந்திருக்கின்றோம்.

77. ஒரு சிறு துளியிலிருந்து அவனை நாம் படைத்தோம், பின்னர் அவன் தீவிரமானதொரு விரோதியாக மாறி விடுகின்றான் என்பதை மானிடன் காணவில்லையா?

78. அவன் நம்மிடம் ஒரு கேள்வி எழுப்புகின்றான் – தனது முதல் படைப்பை மறந்த நிலையில் – "எலும்பு களை அவை மக்கிப்போன பின்னர் எவரால் உயிர்த் தெழுப்ப இயலும்?"

79. கூறுவீராக, "முதல்முறை அவற்றைத் துவக்கியவரே அவற்றை உயிர்த்தெழுப்புவார். ஒவ்வொரு படைப்பை யும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்."

80. அவர்தான் பசுமையான மரங்களிலிருந்து, வெளிச் சத்திற்காக நீங்கள் எரிக்கின்ற எரிபொருளை, உங்களுக்காகப் படைப்பவர்.

81. வானங்களையும் பூமியையும் படைத்த அந்த ஒருவர் அதனையே மீண்டும் படைக்கும் திறன் கொண்டவர் அல்லவா? ஆம் நிச்சயமாக; அவர் தான் படைப்பவர், அனைத்தும் அறிந்தவர்.

82. எந்தக் கட்டளையையும் நிறைவேற்ற அவர் செய்ய வேண்டியதெல்லாம் அதன்பால் "ஆகு" என்று கூறு வதே, உடன் அது ஆகிவிடுகின்றது.

83. ஆதலால், அனைத்துப் பொருட்களின் ஆட்சியதிகார மும் எவருடைய கரத்தில் உள்ளதோ அந்த ஒருவர் துதிப்பிற்குரியவர், மேலும் அவரிடமே நீங்கள் திரும் பக் கொண்டு வரப்படுவீர்கள்.*

****

## சூரா 37: வரிசைப்படுத்துவோர் (அல்–ஸாஃப்பாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அணிகளில் வரிசைப்படுத்துவோர்.

2. பழிக்கப்பட வேண்டியவர்களைப் பழிப்போர்.

3. தூதுச் செய்திகளை ஓதுவோர்.

4. உங்கள் தெய்வம் ஒன்றே ஒன்று.

5. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றினுடைய இரட்சகர், மேலும் கிழக்குகளின்* இரட்சகர்.

6. அலங்காரமான கோள்களைக் கொண்டு மிகக் கீழுள்ள வானத்தை நாம் அலங்கரித்துள்ளோம்.*

7. தீய சாத்தான் ஒவ்வொன்றிடமிருந்தும் அதனை நாம் பாதுகாத்தோம்.

8. மேலான சமூகத்தாரை அவர்கள் வேவு பார்க்க முடியாது; ஒவ்வொரு புறத்திலிருந்தும் அவர்கள் குண்டுகளால் தாக்கப்படுவார்கள்.

---

**36:83* "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725), சூரா எண்ணையும் (36), வசன எண்ணையும் (83) கூட்டினால், அதன் கூட்டுத் தொகை ஒரு 19ன் பெருக்குத் தொகையைத் தரு கின்றது (505+725+36+83=1349=19x71). அத்துடன், துவக்க எழுத்துக்கள் கொண்ட 29 சூராக்களில், சூரா 36, 19வது ஆகும்.*

**37:5 சூரியன் சந்திரன் மற்றும் கிரகங்கள் போன்ற அண்டவெளிப்பொருட்கள் ஒவ்வொன்றும் பூமிக்கிரகத்தில் உதிக்கவும் அஸ்தமிக்கவும் செய்கின்றன. ஒவ்வொரு உதயமும் "கிழக்கு" என அழைக்கப்படுகின்றது.*

**37:6 மிகவும் உள்ளார்ந்த, மேலும் மிகச்சிறிய பிரபஞ்சத்தில் நாம் வசிக்கின்றோம். ஜின்கள் இந்தப் பிரபஞ்சத்திலேயே அடைக்கப்பட்டுள்ளனர்.*

9. அவர்கள் கண்டனம் செய்யப்பட்டவர்களாக உள்ளனர்; நிலையானதொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

10. அவர்களில் எவனேனும் அதன் வெளி எல்லைகளைத் கடப்பதற்குத் துணிந்தால், ஆவேசமானதொரு ஏவு கணையால் அவன் தாக்கப்படுகின்றான்.

11. அவர்களைக் கேளும், "படைப்பதற்கு மிகவும் கடின மானவர்கள் அவர்களா, அல்லது மற்றப் படைப்புகளா ?" அவர்களை நாம் ஈரமான களிமண்ணிலிருந்து படைத்தோம்.

12. நீர் பிரமிப்படையும் அதே சமயம், அவர்கள் கேலி செய்கின்றனர்.

13. நினைவூட்டப்படும் பொழுது, அவர்கள் கவனத்தில் எதுவும் எடுத்துக் கொள்வதில்லை.

14. சான்றினை அவர்கள் காணும் பொழுது, அவர்கள் அதனைப் பரிகசிக்கின்றனர்.

15. அவர்கள் கூறுகின்றனர், "இது வெளிப்படையான மாயாஜாலமேயாகும் !

16. "நாம் மரணித்து மேலும் மண்ணாகவும் எலும்புகளாக வும் ஆன பின்னர், நாம் உயிர்த்தெழுப்பப்படுவோமா ?

17. "முன்தோன்றிய எங்கள் மூதாதையரும் கூடவா ?"

18. கூறுவீராக, "ஆம், நிர்ப்பந்தமாக நீங்கள் வரவழைக் கப்படுவீர்கள்."

19. அதற்கு எடுத்துக் கொள்வதெல்லாம் ஒருலேசான இடிப்புதான், உடனே அவர்கள் பார்த்தவாறு *(எழுந்து நிற்பார்கள்).*

20. அவர்கள் கூறுவார்கள், "எங்களுக்குக் கேடுதான்; இதுதான் தீர்ப்பு நாளாகும்."

21. இதுதான் நீங்கள் நம்பமறுத்துக் கொண்டிருந்த தீர்மானத்தின் நாளாகும்.

22. வரம்புமீறியவர்களையும் அவர்களுடைய வாழ்க் கைத் துணைகளையும் வரவழையுங்கள், மேலும், தெய்வங்களாக அவர்கள் வழிபட்ட

23. **கடவுள்**–அல்லாதவர்களையும், மேலும் நரகத்தின் பாதையை நோக்கி அவர்களை வழிநடத்துங்கள்.

24. அவர்களை நிறுத்தி, அவர்களிடம் கேளுங்கள்:

25. "ஏன் நீங்கள் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொள்ள வில்லை ?"

26. அவர்கள், அந்நாளில், முற்றிலும் சரணடைந்து இருப் பார்கள்.

*பரஸ்பரம் பழித்துக் கொள்ளுதல்*

27. கேள்வி கேட்டுக்கொண்டும், ஒருவர் மற்றவரைப் பழித்துக் கொண்டும், அவர்கள் ஒருவர் மற்றவரிடம் வருவார்கள்.

28. *(தங்கள் தலைவர்களிடம்)* அவர்கள் கூறுவார்கள், "நீங்கள் வலப்புறத்திலிருந்து எங்களிடம் வருபவர் களாக இருந்தீர்கள்."

29. அவர்கள் மறுமொழியளிப்பார்கள், "நீங்கள்தான் நம்பிக்கையாளர்களாக இருக்கவில்லை.

30. "உங்கள் மீது நாங்கள் எந்த ஆதிக்கமும் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை; நீங்கள்தான் தீயவர்களாக இருந்தீர்கள்.

31. "நம் இரட்சகரின் தீர்ப்புக்கு நாம் நியாயமாக உள்ளாகி விட்டோம்; இப்போது நாம் துயரப்பட வேண்டியவர் கள்தான்.

32. "நாங்களே வழிதவறியவர்களாக இருந்ததனால் தான், நாங்கள் உங்களை வழிதவறச் செய்தோம்."

33. இவ்விதமாக, அந்நாளன்று தண்டனையில் அவர் கள் அனைவரும் ஒன்றாகப் பங்கெடுத்துக் கொள் வார்கள்.

34. இவ்விதமாகவே குற்றவாளிகளுக்கு நாம் கூலி வழங்குவோம்.

*முதற்கட்டளை*

35. "*லா இலாஹ இல்லல்லாஹ்* [**கடவுள்**–வுடன் வேறு தெய்வம் இல்லை]," என்று அவர்களிடம் கூறப்பட்ட போது, அவர்கள் ஆணவங் கொண்டார்கள்.

36. அவர்கள் கூறினார்கள், "கிறுக்குப் பிடித்த ஒரு கவிஞருக்காக எங்கள் தெய்வங்களை நாங்கள் விட்டுவிட வேண்டுமா ?"

37. உண்மையில், அவர் சத்தியத்தைக் கொண்டு வந் தார், மேலும் தூதர்களை உறுதிப்படுத்தி உள்ளார்.

38. மிக நிச்சயமாக, மிகவும் வலி நிறைந்த தண்டனையை நீங்கள் சுவைப்பீர்கள்.

39. நீங்கள் செய்தவற்றுக்காக மட்டுமே நீங்கள் கூலி கொடுக்கப்படுகின்றீர்கள்.

40. அவருக்கு மட்டும் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்ட **கடவுள்**–ன் ஊழியர்கள் மட்டுமே *(காப் பாற்றப்படுவார்கள்).*

41. அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள வாழ்வாதாரங்களுக்கு அவர்கள் தகுதி யாகி விட்டனர்.

42. அனைத்துக் கனிவர்க்கங்களும். அவர்கள் கண்ணி யப் படுத்தப்படுவார்கள்.

43. பேரானந்தமான தோட்டங்களில்.

44. அருகருகே அமைந்த ஆசனங்களில்.

45. தூய்மையான பானங்களைக் கொண்ட குவளைகள் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

46. அருந்துபவர்களுக்குத் தெளிவாகவும், மதுரமானதாகவும்.

47. ஒருபோதும் கெட்டுப்போகாது, ஒருபோதும் தீர்ந்து போகாது.

48. அற்புதமான துணைகள் அவர்களுடன் இருப்பார்கள்.

49. எளிதில் உடைந்திடக் கூடிய முட்டைகளைப் போல் பாதுகாக்கப்பட்டவர்கள்.

*சொர்க்கவாசிகள் நரகவாசிகளைச் சென்று சந்திக்கின்றனர்*

50. அவர்கள் ஒருவர் மற்றவரிடம் வருவார்கள், மேலும் ஒருவருக்கொருவர் கூடிப்பேசுவார்கள்.

51. அவர்களில் ஒருவர் கூறுவார், "எனக்கொரு நண்பன் இருந்து வந்தான்.

52. "அவன் கேலி செய்பவனாக இருந்தான்: 'இதையெல்லாம் நீ நம்புகின்றாயா ?

53. " 'நாம் இறந்து மண்ணாகவும் எலும்புகளாகவும் மாறிய பின்னர், கணக்குக் கொடுக்க நாம் அழைக்கப்படுவோமா ?' "

54. அவர் கூறுவார், "சற்று அங்கே பாருங்கள் !"

55. அவர் பார்க்கும் பொழுது, நரகின் மையத்தில் தன் நண்பனை அவர் காண்பார்.*

56. *(அவனிடம் சென்று)* அவர் கூறுவார், "**கடவுள்** மீது ஆணையாக, நீ கிட்டத்தட்ட என்னை நாசமாக்கி விட்டாய்.

57. "என் இரட்சகரின் ஆசீர்வாதம் மட்டும் இல்லாதிருந்தால், இப்போது நானும் உன்னுடன் இருந்திருப்பேன்.

58. "*(இப்பொழுதும் நீ நம்புகின்றாயா)* நாம் மரணிப்பது அந்த,

59. "முதல் மரணம் மட்டுமே, மேலும் நாம் ஒருபோதும் எந்தக் கூலியையும் பெற மாட்டோம் என்று ?"

*மீட்சி: மகத்தான பெருவெற்றி*

60. மகத்தான பெருவெற்றி இத்தகையதேயாகும்.

61. உழைப்பாளி ஒவ்வொருவரும் இதற்காகவே உழைக்க வேண்டும்.

62. இது மேலான ஒரு விதியா, அல்லது கசப்பான அந்த மரமா ?

63. வரம்புமீறுகின்றவர்களுக்கு, அதனை ஒரு தண்டனையாக நாம் ஆக்கியுள்ளோம்.

64. அது நரகத்தின் மையத்திலிருந்து வளர்கின்ற ஒரு மரமாகும்.

65. அதன் பூக்கள் சாத்தானின் தலைகளைப் போல் தோன்றுகின்றன.

66. அவர்களுடைய வயிறுகள் நிரம்பும் வரை அதிலிருந்து அவர்கள் உண்ணுவார்கள்.

67. பின்னர் அதன் மேல் ஒரு நரக பானத்தை நிரப்புவார்கள்.

68. பின்னர் அவர்கள் நரகத்திற்குத் திரும்புவார்கள்.

*அவர்கள் தங்களுடைய பெற்றோர்களைக் கண்மூடிப் பின்பற்றினார்கள்*

69. அவர்கள் தங்களுடைய பெற்றோர்களை வழி தவறியவர்களாகக் கண்டனர்.

70. மேலும் அவர்கள் குருட்டுத்தனமாக அவர்களுடைய காலடிச்சுவடுகளைப் பின்பற்றினர்.

71. முந்திய தலைமுறையினரில் அதிகமானவர்களும் இதே விதமாகவே வழிதவறினார்கள்.

72. எச்சரிப்பவர்களை அவர்களுக்கு நாம் அனுப்பியுள்ளோம்.

73. எச்சரிக்கப்பட்டவர்களுக்கு நேரிட்ட பின்விளைவுகளைக் கவனிப்பீராக.

74. அவருக்கு மட்டும் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்ட **கடவுள்**–ன் ஊழியர்கள் மட்டுமே *(காப்பாற்றப்படுவர்)*.

*நோவா*

75. இவ்விதமாக, நோவா நம்மை அழைத்தார், மேலும் நாமே சிறப்பாக மறுமொழியளிப்பவர்களாக இருந்தோம்.

76. அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் மகத்தான பேரழிவிலிருந்து நாம் காப்பாற்றினோம்.

77. உயிருடன் தப்பியவர்களாக அவருடைய சகாக்களை நாம் ஆக்கினோம்.

78. மேலும் பின்வரும் தலைமுறையினருக்காக அவருடைய சரித்திரத்தை நாம் பாதுகாத்தோம்.

79. மக்களில் நோவாவின் மீது சாந்தி நிலவுவதாக.

**37:55 சொர்க்கத்தை அடைந்து விட்ட மக்கள் தீய விளைவுகள் எதுவுமின்றி நரகத்திலுள்ள தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சென்று சந்திக்க இயலும். மறுவுலகில், எவரொருவரும் கீழ்நோக்கி நகர முடியும், ஆனால் குறிப்பிடப்பட்டதொரு எல்லைக்கப்பால் மேல் நோக்கிச் செல்ல முடியாது. அந்த எல்லை ஒருவருடைய வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது (பின் இணைப்பு5).*

80. இவ்விதமாகவே நாம் நன்னெறியாளர்களுக்கு வெகுமதியளிக்கின்றோம்.

81. நம்பிக்கை கொண்ட நம்முடைய ஊழியர்களில் அவர் ஒருவர் ஆவார்.

82. மற்றவர்கள் அனைவரையும் நாம் மூழ்கடித்தோம்.

*ஆப்ரஹாம்*

83. அவரைப் பின்பற்றியவர்களில் ஆப்ரஹாமும் இருந்தார்.

84. அவர் முழு இதயத்துடன் தன் இரட்சகரிடம் வந்தார்.

85. அவர் தன் தந்தையிடமும் தன் சமூகத்தாரிடமும் கூறினார், "நீங்கள் வழிபடுபவை என்ன?

86. "**கடவுள்**–க்குப் பதிலாக, இட்டுக்கட்டப்பட்ட இந்தத் தெய்வங்களா உங்களுக்கு வேண்டும்?

87. "பிரபஞ்சத்தின் இரட்சகரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?"

88. அவர் கவனத்துடன் நட்சத்திரங்களை நோக்கினார்.

89. பின்னர் அவர் தன் முயற்சியைக் கைவிட்டார், மேலும் கூறினார், "இதில் நான் களைப்படைந்து விட்டேன்!"

90. அவர்கள் அவரிடமிருந்து திரும்பிக் கொண்டனர்.

91. அவர் பின்னர் அவர்களுடைய போலித் தெய்வங்களை நோக்கித் திரும்பியவாறு, கூறினார், "நீங்கள் உண்ண விரும்புகின்றீர்களா?

92. "ஏன் நீங்கள் பேசுவதில்லை?"

93. பின்னர் அவற்றை அவர் உடைத்து விட்டார்.

94. பெருங்கோபத்துடன் அவர்கள் அவரிடம் சென்றனர்.

95. அவர் கூறினார், "நீங்களே செதுக்கியவற்றை எவ்வாறு நீங்கள் வழிபட முடியும்?

96. "உங்களையும் நீங்கள் உருவாக்குகின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** படைத்திருக்கும் பொழுது!"

97. அவர்கள் கூறினர், "நாம் ஒரு பெரும் நெருப்பை வளர்த்து, அவரை அதற்குள் தள்ளி விடுவோம்."

98. அவர்கள் அவருக்கெதிராகச் சூழ்ச்சி செய்தனர், ஆனால் நாம் அவர்களைத் தோல்வியுற்றவர்களாக ஆக்கினோம்.

99. அவர் கூறினார், "நான் என் இரட்சகரிடம் செல்கிறேன்; அவர் என்னை வழிநடத்துவார்."

100. "என் இரட்சகரே, நன்னெறியுடைய பிள்ளைகளை எனக்கு அளிப்பீராக."

101. நல்லவொரு பிள்ளை பற்றிய நற்செய்தியை நாம் அவருக்குக் கொடுத்தோம்.

*சாத்தானியக் கனவு**

102. "அவருடன் வேலை செய்யும் அளவுக்கு அவர் வளர்ந்து விட்ட போது, அவர் கூறினார், "என் மகனே, நான் உன்னைப் பலி கொடுப்பதாக, ஒரு கனவில் நான் காண்கின்றேன். நீ என்ன நினைக்கின்றாய்?" அவர் கூறினார், "என் தந்தையே, செய்யுமாறு உமக்குக் கட்டளையிடப்பட்டதை நீர் செய்வீராக. **கடவுள்** நாடினால், பொறுமையுடையவனாக என்னை நீர் காண்பீர்."

103. அவர்கள் இருவரும் சரணடைந்தனர், மேலும் அவர் *(அவரைப் பலியிடுவதற்காக)* அவருடைய நெற்றியைக் கீழே வைத்தார்.

*ஆப்ரஹாமையும் இஸ்மாயீலையும்*
*காப்பதற்காகக் கடவுள் குறுக்கிடுகின்றார்*

104. நாம் அவரை அழைத்தோம்: "ஆப்ரஹாமே,

105. "நீர் கனவை நம்பி விட்டீர். "இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதியளிக்கின்றாம்.

106. மெய்யாகவே அது ஒரு கடினமான சோதனையாக இருந்தது.

107. ஒரு பிராணிப்பலியைப் பகரமாக்கியதன்மூலம் *(இஸ்மாயீலை)* நாம் மீட்டுக் கொண்டோம்.

108. மேலும் பின்வரும் தலைமுறையினருக்காக அவருடைய சரித்திரத்தை நாம் பாதுகாத்தோம்.

109. ஆப்ரஹாமின் மீது சாந்தி நிலவுவதாக.

110. இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதியளிக்கின்றோம்.

111. நம்பிக்கை கொண்ட நம்முடைய ஊழியர்களில் அவர் ஒருவர் ஆவார்.

*ஐசக்கின் தோற்றம்*

112. பின்னர் நன்னெறியுடைய நபிமார்களில் ஒருவராக இருப்பாரென, ஐசக்கைக் குறித்த நற்செய்தியை நாம் அவருக்குக் கொடுத்தோம்.

113. அவரையும் ஐசக்கையும் நாம் ஆசீர்வதித்தோம். அவர்களுடைய சந்ததியினரில், சிலர் நன்னெறியுடையவர்களாக இருக்கின்றனர், மேலும் சிலர் கெட்ட வரம்புமீறுபவர்களாக இருக்கின்றனர்.

**37:102 மிக்க கருணையாளர் ஒருபோதும் தீமையை ஆதரிப்பதில்லை (7:28). ஜோப் விஷயத்தில் செய்ததைப் போல, ஆப்ரஹாம் தன் மகனை மிக அதிகமாக நேசித்தார் என்று சாத்தான் வாதிட்டான். எனவே அந்தக் கடுமையான சோதனையில் ஆப்ரஹாமை ஆழ்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டான்.*

*மோஸஸும் ஆரோனும்*

114. அத்துடன் மோஸஸையும் ஆரோனையும் நாம் ஆசீர் வதித்தோம்.

115. அவர்களையும் அவர்களுடைய சமூகத்தாரையும் மாபெரும் பேரழிவிலிருந்து நாம் காப்பாற்றினோம்.

116. அவர்கள் வெற்றியாளர்களாகும் வண்ணம், அவர் களுக்கு நாம் ஆதரவளித்தோம்.

117. ஆழ்ந்த வேதத்தை அவர்கள் இருவருக்கும் நாம் கொடுத்தோம்.

118. சரியான பாதையில் அவர்களை நாம் வழி நடத்தி னோம்.

119. பின்வரும் தலைமுறையினருக்காக அவர்களுடைய சரித்திரத்தை நாம் பாதுகாத்தோம்.

120. மோஸஸ் மற்றும் ஆரோன் மீது சாந்தி நிலவுவதாக.

121. இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதியளிக்கின்றோம்.

122. நன்னெறியுடைய நம் ஊழியர்களில் அவர்கள் இரு வரும் இருந்தனர்.

*இல்யாஸ்*

123. இல்யாஸ் தூதர்களில் ஒருவராக இருந்தார்.

124. அவர் தன் சமூகத்தாரிடம் கூறினார், "நீங்கள் நன் னெறிகள் புரிய மாட்டீர்களா?

125. "மேலதிகாரம் கொண்ட படைப்பாளருக்குப் பதிலாக, ஒரு சிலையையா நீங்கள் வழிபடுகின்றீர்கள்?

126. "**கடவுள்**; உங்களுடைய இரட்சகரும், உங்கள் முன்னோர்களுடைய இரட்சகருமாவார்!"

127. அவர்கள் அவரை நம்பமறுத்தனர். அதன் விளைவாக, அவர்கள் கணக்குக் கொடுக்க அழைக்கப்பட வேண்டியவர்களானார்கள்.

128. அவருக்கு மட்டும் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்ட **கடவுள்**–ன் ஊழியர்கள் மட்டுமே *(காப் பாற்றப்படுவர்).*

129. பின்வரும் தலைமுறையினருக்காக அவருடைய சரித்திரத்தை நாம் பாதுகாத்தோம்.

130. இல்யாஸின் மீதும் மேலும் இல்யாஸைப் போன்ற அனைவர் மீதும் சாந்தி நிலவுவதாக.

131. இவ்விதமாகவே நன்னெறியாளர்களுக்கு நாம் வெகுமதியளிக்கின்றோம்.

132. நம்பிக்கை கொண்ட நம் ஊழியர்களில் அவர் ஒருவர் ஆவார்.

*லோத்*

133. லோத் தூதர்களில் ஒருவராக இருந்தார்.

134. அவரையும் அவருடைய குடும்பத்தார் அனைவரையும் நாம் காப்பாற்றினோம்.

135. வயதான அந்தப் பெண் மட்டுமே அழிவுக்குள்ளான வளாக இருந்தாள்.

136. மற்றவர்கள் அனைவரையும் நாம் அழித்தொழித்தோம்.

137. இப்பொழுதும் அவர்களுடைய சிதிலங்களின் அருகில் பகலில் நீங்கள் கடக்கின்றீர்கள்.

138. மேலும் இரவிலும், நீங்கள் புரிந்து கொள்வீர்களா?

*ஜோனா*

139. ஜோனா தூதர்களில் ஒருவராக இருந்தார்.

140. சுமை நிரம்பிய கப்பலின் பால் அவர் தப்பித்துச் சென்றார்.

141. அவர் கலகம் புரிந்தார், மேலும் இவ்விதமாக, அவர் நஷ்டவாளிகளுடன் சேர்ந்து கொண்டார்.

142. அதன் விளைவாக, மீன் அவரை விழுங்கியது, மேலும் அவர்தான் பழிப்புக்கு உரியவராக இருந்தார்.

143. *(கடவுளின்)* தியானத்தில் மட்டும் அவர் தஞ்சமடை யாதிருந்தால்,

144. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாள் வரை அதன் வயிற்றிலேயே அவர் தங்கி இருந்திருப்பார்.

145. களைப்படைந்தவராக, பாலைவனத்தில் நாம் அவரை வீசியெறியச் செய்தோம்.

146. உண்ணத்தக்க கனியினைக் கொண்ட ஒரு மரத்தை அவருக்காக நாம் வளர்த்திருந்தோம்.

147. பின்னர் ஒரு நூறு ஆயிரம்,* அல்லது அதற்கும் அதிக மானோரிடம் நாம் அவரை அனுப்பினோம்.

148. அவர்கள் நம்பிக்கை கொண்டனர், எனவே இந்த வாழ்வை அவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும்படி நாம் செய்தோம்.

149. அவர்கள் மகன்களைக் கொண்டிருக்கும் அதே சமயம், உம் இரட்சகர் மகள்களைக் கொண்டிருக் கின்றாரா என்று அவர்களைக் கேட்பீராக!

150. பெண்ணினத்தவர்களாக இருப்பதற்காகவா வானவர் களை நாம் படைத்தோம்? அவர்கள் அதற்குச் சாட்சி யாக இருந்தனரா?

**37:147 குர்ஆன் 30 எண்களைக் குறிப்பிடுகின்றது: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2000, 3000, 5000, 50000, 100000. இந்த எண்களின் கூட்டுத்தொகை 162146, அல்லது 19x8534 (பார்க்க பின் இணைப்பு1).*

151. உண்மையில் அவர்கள் மிகப்பெரியதான இறைநிந்தனையைப் புரிகின்றனர், இவ்வாறு அவர்கள் கூறும் பொழுது–

152. "**கடவுள்** ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளார்," உண்மையில் அவர்கள் பொய்யர்களாக இருக்கின்றனர்.

153. ஆண்குழந்தைகளுக்கு மேலாகப் பெண் குழந்தைகளை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டாரா?

154. உங்களுடைய சிந்தனைத்திறனில் என்ன கோளாறு?

*நம்பமறுப்பவர்களை நோக்கி கூறப்படுகின்றது*

155. ஏன் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை?

156. உங்களிடம் ஏதேனும் சான்று உள்ளதா?

157. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய புத்தகத்தைக் காட்டுங்கள்

158. அவருக்கும் ஜின்களுக்கும் இடையில் தனிப்பட்டதொரு உறவுமுறையையும் அவர்கள் கற்பித்தனர். தாங்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்பதை ஜின்கள் கூட அறிந்தே இருக்கின்றனர்.

159. **கடவுள்** துதிப்பிற்குரியவர்; அவர்களுடைய கூற்றுகளுக்கும் மிக அப்பாற்பட்டு மேலானவர்.

160. அவருக்கு மட்டும் அர்ப்பணித்துக் கொண்ட **கடவுள்**–ன் ஊழியர்கள் மட்டுமே *(காப்பாற்றப் படுவர்).*

161. மெய்யாகவே, நீங்களும் நீங்கள் வழிபடுபவையும்.

162. அவர் மீது எந்த ஒன்றையும் சுமத்தி விட முடியாது.

163. நீங்கள்தான் நரகத்தில் கருகுவீர்கள்.

*வானவர்கள்*

164. எங்களில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிடப்பட்டதொரு பணி உண்டு.

165. நாங்கள்தான் வரிசைப்படுத்துபவர்கள்.

166. *(எங்கள் இரட்சகரை)* நாங்கள் உரிய முறையில் துதித்திருக்கின்றோம்.

*பெற்றோர்களைக் கண்மூடிப் பின்பற்றுதல்*

167. அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர்,

168. "எங்கள் பெற்றோர்களிடமிருந்து சரியான அறிவுறுத்தல்களை நாங்கள் பெற்றிருந்தால்,

169. "நாங்கள் வழிபடுபவர்களாக இருந்திருப்போம்; **கடவுள்**–க்கு மட்டும் அர்ப்பணித்துக் கொண்டவர்களாக."

170. ஆனால் அவர்கள் நம்பமறுத்தனர், எனவே அவர்கள் நிச்சயம் கண்டு கொள்வார்கள்.

*தூதர்களுக்கு வெற்றி உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது*

171. தூதர்களான நம்முடைய ஊழியர்களுக்கு நமது தீர்மானம் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ளது.

172. நிச்சயமாக அவர்கள்தான் ஜெயமடைந்தவர்கள்.

173. நம்முடைய படைவீரர்கள்தான் வெற்றியாளர்கள்.

174. எனவே சிறிதொரு காலம் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக.

175. அவர்களைக் கவனிப்பீராக; அவர்களும் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

176. நமது தண்டனைக்கு அவர்கள் சவால் விடுகின்றார்களா?

177. ஒரு நாள் அது அவர்களைத் தாக்கும் போது, அது துன்பகரமானதொரு நாளாக இருக்கும்; அவர்கள் போதுமான அளவு எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

178. சிறிதொரு காலம் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக.

179. அவர்களைக் கவனிப்பீராக; அவர்களும் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

180. உம்முடைய இரட்சகர் துதிப்பிற்குரியவர், மகத்தான இரட்சகர்; அவர்களுடைய கூற்றுகளுக்கும் அப்பாற்பட்டு மிக மேலானவர்.

181. தூதர்கள் மீது சாந்தி நிலவுவதாக.

182. புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, பிரபஞ்சத்தின் இரட்சகர்.

****

## சூரா 38: ஸ (ஸாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஸ. (ஸாத்),* மேலும் சான்றைக் கொண்டிருக்கின்ற இந்தக் குர்ஆன்.**

2. நம்பமறுப்பவர்கள் ஆணவத்திலும் எதிர்ப்பிலும் மூழ்கி விட்டனர்.

3. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்தொழித்து உள்ளோம். அவர்கள் உதவிக்கு அழைத்தனர்; வீணாக.

**38:1 இந்த துவக்க எழுத்து (ஸாத்) 7, 19, 38 ஆகிய சூராக்களில் 152 முறைகள் 19x8 இடம் பெறுகின்றது (பின் இணைப்பு 1).*

***38:1 "திக்ர்" எனும் வார்த்தை குர்ஆனிலிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது, மேலும் மிகத் தெளிவாக குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீட்டைச் சுட்டிக்காட்டுகின்றது. பார்க்க 15:6, 9; 16:44; 21:2, 24; 26:5; & 36:11,69.*

4. அவர்களிலிருந்தே ஓர் எச்சரிப்பவர் அவர்களிடம் வந்தது பற்றி அவர்கள் வியப்படைந்தனர். நம்பமறுப்பவர்கள் கூறினர், "ஒரு மந்திரவாதி; ஒரு பொய்யர்.

5. "தெய்வங்களையெல்லாம் ஒரே தெய்வமாக அவர் ஆக்கிவிட்டாரா? இது மெய்யாகவே ஆச்சர்யமாக இருக்கின்றது."

6. அந்தத் தலைவர்கள் அறிவித்தனர், "சென்று உங்களுடைய தெய்வங்களை வழிபடுவதில் உறுதியோடு விடாமுயற்சியுடனிருங்கள். இதுவே விரும்பத்தக்கதாகும்.

7. "நம்முடைய தந்தையரின் மார்க்கத்திலிருந்து இதனைப்பற்றி நாம் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை. இது ஒரு பொய்யேயாகும்.

8. "நமக்கு அல்லாமல் அந்தச் சான்று அவருக்கு ஏன் இறங்கி வந்தது?" உண்மையில், என் சான்றைக் குறித்து அவர்கள் சந்தேகத்திலிருக்கின்றனர். உண்மையில், என் தண்டனையை அவர்கள் இன்னும் சுவைக்கவில்லை.

9. எல்லாம் வல்லவர், கொடையளிப்பவரான உம் இரட்சகரின் கருணைப் பொக்கிஷங்களை அவர்கள் சொந்தங் கொண்டிருக்கின்றனரா.

10. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றின் ஆட்சியதிகாரத்தைத் தம் வசம் அவர்கள் கொண்டுள்ளனரா? அவர்கள் தங்களுக்கே உதவிக் கொள்ளட்டும்.

11. மாறாக, அவர்கள் ஒன்றுதிரட்ட இயன்ற எந்தப் படைகளானாலும் – அவர்களுடைய கட்சியினர் அனைவரும் கூட்டமாகச் சேர்ந்து கொண்டாலும் – தோற்கடிக்கப்படுவார்கள்.

12. அவர்களுக்கு முன்னர் நோவாவின் சமூகத்தார், ஆத், அபார பலம் கொண்ட ஃபேரோ ஆகியோர் நம்பமறுத்தனர்.

13. அத்துடன், தமூது, லோத்தின் சமூகத்தார், *(மித்யனின்)* வனங்களில் வசித்த மக்கள்; அவர்கள் எதிரணியினராக இருந்தனர்.

14. அவர்கள் ஒவ்வொருவரும் தூதர்களை நம்பமறுத்தனர், எனவே இவ்விதமாக, என்னுடைய தண்டனை தவிர்க்க முடியாததானது.

15. இந்த மக்கள் ஒரே ஓர் அடியை எதிர் நோக்கலாம், அதிலிருந்து அவர்கள் ஒருபோதும் மீண்டுவிட முடியாது.

16. அவர்கள் சவால் விடுத்தனர்: "எங்கள் இரட்சகரே, கணக்குக் கேட்கும் நாளுக்கு முன்னர், எங்களுக்கு உரிய தண்டனையை ஏன் நீர் விரைவு படுத்தவில்லை."

17. அவர்களுடைய கூற்றுகளைக் குறித்து நீர் பொறுமையுடன் இருப்பீராக, மேலும் வளம் நிறைந்தவரான, நம் ஊழியர் டேவிட்டை நினைவில் கொள்வீராக; அவர் கீழ்ப்படிந்தவராக இருந்தார்.

18. அவருடன் சேர்ந்து இரவும் பகலும் துதிக்குமாறு, மலைகளை அவருடைய பணிக்கென நாம் ஒப்படைத்தோம்.

19. அத்துடன் பறவைகளும் அவருக்குப் பணி செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டன; அனைத்தும் அவருக்குக் கீழ்ப்படிந்தவையாக இருந்தன.

20. நாம் அவருடைய அரசுரிமையைப் பலப்படுத்தினோம், மேலும் ஞானம் மற்றும் நல்ல சிந்தனைத் திறன் கொண்டு அவருக்குக் கொடையளித்தோம்.

21. அவருடைய தொழுமிடத்திற்குள் இரகசியமாக நுழைந்த, சச்சரவிட்டுக் கொண்ட மனிதர்களைப் பற்றிய செய்தியை நீர் பெற்றீரா?

22. அவருடைய அறைக்குள் அவர்கள் நுழைந்த பொழுது, அவர் திடுக்குற்றார். அவர்கள் கூறினர், "அச்சம் கொள்ளாதீர். நாங்கள் ஒருவர் மற்றவருடன் சச்சரவிட்டுக் கொண்டிருக்கின்றோம், மேலும் நாங்கள் உம்முடைய நியாயமான தீர்ப்பை பெற விரும்புகின்றோம். எங்களுக்கு அநீதி இழைத்து விடாதீர், மேலும் சரியான பாதையில் எங்களை வழி நடத்துவீராக.

23. "இந்த என்னுடைய சகோதரர் தொன்னூற்றொன்பது* ஆடுகளைச் சொந்தமாகக் கொண்டுள்ளார், அதே சமயம் நான் ஒரே ஆட்டைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய ஆட்டையும் அவருடைய வற்றுடன் கலந்து விட அவர் விரும்புகின்றார், மேலும் தொடர்ந்து என்னை நெருக்கிக் கொண்டிருக்கின்றார்."

**38:23 எண்99 இடம்பெறும் ஒரே இடம் இதுதான். குர்ஆனில் முப்பது வெவ்வேறு எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, மேலும் அவற்றின் கூட்டுத்தொகை **162146** ஆக வருகின்றது, **162146, 19x8534**. பார்க்க பின் இணைப்பு1.*

*டேவிட்டின் முன்னுதாரணமான பக்தி*

24. அவர் கூறினார், "உம்முடைய ஆட்டை அவருடைய வற்றுடன் சேர்த்துவிடும்படி கேட்டதன் மூலம் அவர் உம்மிடம் நியாயமற்றவராக இருந்துள்ளார். தங்களுடைய சொத்துகளை ஒன்றிணைத்துக் கொள்ளும் பெரும்பாலான மனிதர்கள் ஒருவரையொருவர் அநியாயமாக நடத்திக் கொள்கின்றனர், நம்பிக்கை கொண்டு நன்னெறிகள் புரிபவர்களைத் தவிர, மேலும் இத்தகையவர்கள் மிகச் சிலரே" அதன் பின்னர், தான் சரியான தீர்ப்பைத்தான் அளித்தோமா என டேவிட் ஐயம் கொண்டார். நாம் அவரைச் சோதிக்கின்றோம் என்று அவர் எண்ணினார். அவர் பின்னர் தன் இரட்சகரிடம் பாவமன்னிப்புக்காக இறைஞ்சினார், கீழே குனிந்தார், மேலும் வருந்தினார்.*

25. நாம் இந்த விஷயத்தில் அவரை மன்னித்தோம். நம்மிடம் கண்ணியமானதொரு அந்தஸ்தையும், அழகியதொரு தங்குமிடத்தையும் நாம் அவருக்கு அளித்தோம்.

26. டேவிட்டே, உம்மை நாம் பூமியின் மீது ஓர் ஆட்சியாளராக ஆக்கியுள்ளோம். எனவே, மக்களுக்கிடையில் நீர் நியாயமாகத் தீர்ப்பளிக்க வேண்டும், மேலும் உம்முடைய சுய அபிப்பிராயத்தைப் பின்பற்றாதீர், **கடவுள்**–ன் பாதையிலிருந்து உம்மை அது திசை திருப்பி விடாதிருக்கும் பொருட்டு. நிச்சயமாக, **கடவுள்**–ன் பாதையிலிருந்து வழிதவறிச் செல்பவர்கள், கேள்விக் கணக்கு நாளை மறந்தமைக்காக கடுமையான தண்டனைக்கு உள்ளாகின்றனர்.

27. வானத்தையும் பூமியையும், மேலும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை. இத்தகைய நினைப்பானது நம்ப மறுப்பவர்களுடையதேயாகும். ஆகவே, நம்பமறுப்பவர்களுக்குக் கேடுதான்; அவர்கள் நரகத்தில் துயரமடைவார்கள்.

28. பூமியில் தீமைகள் செய்பவர்களை நாம் நடத்துவதைப் போன்று நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களை நாம் நடத்துவோமா? தீயவர்களை நாம் நடத்துவதைப் போன்று நன்னெறியாளர்களை நாம் நடத்துவோமா?

29. இது உமக்கு நாம் இறக்கி அனுப்பிய புனிதமான ஒரு வேதமாகும்–ஒருவேளை அதன் வசனங்களை அவர்கள் சிந்திக்கக் கூடும். அறிவுத் திறனுடையவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

*சாலமனின் முன்னுதாரணமான அர்ப்பணிப்புணர்வு*

30. டேவிட்டுக்கு சாலமனை நாம் அளித்தோம்; ஒரு நல்லவர், மேலும் கீழ்ப்படிந்த ஊழியர்.

31. ஒருநாள் இரவு சூழும் வரை, அழகிய குதிரைகளுடன் அவர் தன்னை மறந்து மூழ்கி இருந்தார்.

32. அப்போது அவர் கூறினார், "என் இரட்சகரை வழிபடுவதில் நான் மகிழ்வடைவதை விடவும், பொருள் சார்ந்த விஷயங்களில் நான் மகிழ்ந்திருந்து விட்டேன், சூரியன் மறைந்து விடும் வரை.*

33. "அவற்றை மீண்டும் கொண்டு வாருங்கள்" *(வழியனுப்புவதற்காக)* அவற்றின் கால்களையும் கழுத்துகளையும் அவர் தடவிக் கொடுத்தார்.

34. இவ்விதமாக சாலமனை நாம் சோதனையில் ஆழ்த்தினோம்; திரளான பொருள் வளங்களைக் கொண்டு அவரை நாம் ஆசீர்வதித்தோம், ஆனால் அவர் உறுதியோடு சரணடைந்தார்.*

35. அவர் கூறினார், "என் இரட்சகரே, என்னை மன்னிப்பீராக, மேலும் வேறு எவரும் ஒருபோதும் அடைந்திராத ஓர் அரசுரிமையை எனக்கு அளிப்பீராக. நீரே கொடையளிப்பவர்."

36. நாம் *(அவருடைய பிரார்த்தனைக்குப் பதிலளித்தோம், மேலும்)* அவர் விரும்பிய இடமெல்லாம் மழை பொழியும் வண்ணம், காற்றை அவருடைய கட்டளையின் கீழ் பணித்தோம்.

37. மேலும் சாத்தான்களை, நிறுவிக்கொண்டும் மூழ்கிக் கொண்டும்.

38. மற்றவர்கள் அவருடைய கட்டளையின் கீழ் வைக்கப் பட்டனர்.

39. "இது உமக்கு நமது வாழ்வாதாரமாகும்; நீர் தாராளமாகக் கொடுக்கலாம், அல்லது நிறுத்திக் கொள்ளவும் செய்யலாம், வரம்புகள் எதுவுமின்றி."

**38:24 ஒரு புறத்தில் 99, அதற்கெதிராக மற்றொரு புறத்தில் 1 என்ற இந்தத் தெளிவான உதாரணத்தில், சரியான தீர்ப்பை வழங்க வேண்டுமென்ற டேவிட்டின் அதீத கவனம் அவரை மன்னிப்புக் கேட்கும்படிச் செய்தது. நாம் இந்த அளவுக்குக் கவனம் கொண்டிருக்கின்றோமா?*

**38:32 தன் குதிரைகளினால் ஸாலமன் தன்னுடைய பிற்பகல் தொழுகையைத் தவறவிட்டார். கடவுளை நேசிப்பதை விடவும் ஸாலமன் தன் குதிரைகளை அதிகமாக நேசித்தார் என்று சாத்தான் வாதிடக்கூடிய சாத்தியத்தை ரத்துச் செய்யும் விதமாக, அவர் தன் குதிரைகளை விட்டு நீங்கிக் கொண்டார்.*

**38:34 &41 ஸாலமனும் ஜோபும் சோதனை விளிம்பின் இரு எல்லைகளை பிரதிபலிக்கின்றனர். எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் கடவுளை மட்டும் வழிபடுகின்றோமா என்பதைக் காண்பதற்காக, செல்வம், உடல் நலம் அல்லது அவற்றின் குறைவு ஆகியவற்றின் மூலமாக நாம் சோதனையில் ஆழ்த்தப்படுகின்றோம்.*

40. நம்மிடத்தில் கண்ணியமானதொரு அந்தஸ்துக்கும், மேலும் அற்புதமானதொரு தங்குமிடத்திற்கும் அவர் தகுதி பெற்று விட்டார்.

*சாத்தான் ஜோபைக் கஷ்டப்படுத்துகின்றான்**

41. நம் ஊழியர் ஜோபை நினைவில் கொள்வீராக: அவர் தன் இரட்சகரை அழைத்தார், "கஷ்டத்தையும் வலியையும் கொண்டு சாத்தான் என்னைத் துன்பப்படுத்தி விட்டான்."

42. "உம் பாதங்களால் தரையில் அடிப்பீராக. ஓர் ஊற்று உமக்கு நிவாரணத்தையும் ஒரு பானத்தையும் தரும்."

*நம்பிக்கையாளர்களுக்கு*
*கடவுள் ஈடு செய்கின்றார்*

43. அவருடைய குடும்பத்தாரை நாம் அவருக்குத் திருப்பித் தந்தோம்; இரு மடங்குக்கும் அதிகமாக. நம் கருணை இவ்விதமானதேயாகும்; அறிவுத்திறன் பெற்றிருப்போருக்கு ஒரு நினைவூட்டல்.

44. "இப்போது, உமது நேர்ச்சையை நிறைவேற்றுவதற்காக, நீர் பூமியில் பிரயாணம் செய்து தூதுச் செய்தியை பிரசாரம் செய்ய வேண்டும்." நாம் அவரை உறுதியுடையவராகக் கண்டோம். எத்தகையதொரு நல்ல ஊழியர்! அவர் சரணடைந்த ஒருவராக இருந்தார்.

45. நம்முடைய ஊழியர்கள் ஆப்ரஹாம், ஐசக் மற்றும் ஜேகபையும் நினைவில் கொள்வீராக. அவர்கள் வளம் நிறைந்தவர்களாகவும், அகப்பார்வையுடையவர்களாகவும் இருந்தனர்.

46. அவர்கள் மீது மகத்தானதொரு ஆசீர்வாதத்தை நாம் அருளினோம்: மறுவுலகத்தைக் குறித்த விழிப்புணர்வு.

47. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் நன்னெறி மிக்கவர்களில் இருந்தனர்.

48. மிகவும் நன்னெறியாளர்களில்; இஸ்மாயில், எலிஷா, மற்றும் துல்கிஃப்லை நினைவில் கொள்வீராக.

*நன்னெறியாளர்கள்*

49. இது ஒரு நினைவூட்டல் ஆகும்: அற்புதமானதொரு விதிக்கு நன்னெறியாளர்கள் தகுதி பெற்று விட்டனர்.

50. ஏதேன் தோட்டங்கள் அவர்களுக்காகத் தங்களுடைய வாயில்களைத் திறந்து கொள்ளும்.

51. அதில் பொழுது போக்குகையில், பல்வகைக் கனிகளும் பானங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

52. அற்புதமான துணைகளை அவர்கள் கொண்டிருப்பார்கள்.

53. இதற்குத்தான் கேள்விக் கணக்கு நாளன்று நீங்கள் தகுதி பெற்று இருக்கின்றீர்கள்.

54. நம்முடைய வாழ்வாதாரங்கள் தீர்ந்து போகாதவை.

*நம்பமறுப்பவர்கள்: ஒருவர் மற்றவருடன்*
*சச்சரவிட்டுக் கொள்கின்றனர்*

55. வரம்புமீறுபவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் துன்பகரமானதொரு விதிக்கு உள்ளாகி விட்டனர்.

56. நரகத்தில்தான் அவர்கள் கருகுவார்கள்; என்ன ஒரு துன்பகரமான தங்குமிடம்.

57. அதில் அவர்கள் சுவைப்பதென்னவென்றால், நரக பானங்களும் கசப்பான உணவுமேயாகும்.

58. மேலும் அதே வகையில் இன்னும் மிக அதிகமானவையும்.

59. "இந்த ஒரு கூட்டம் உங்களுடன் நரகத்தினுள் தள்ளப்பட இருக்கின்றது." *(நரகத்தில் வசிப்பவர்களால்)* அவர்கள் வரவேற்கப்பட மாட்டார்கள். நரக நெருப்பில் கருகுவதற்கு அவர்கள் தகுதி பெற்று விட்டனர்.

60. புதிதாக வந்தவர்கள் மறுமொழியளிப்பார்கள்,"நீங்களும் வரவேற்கப்பட்டவர்களாக இருக்கவில்லை. நீங்கள் எங்களுக்கு முந்தியவர்களாக இருந்தீர்கள், மேலும் எங்களை வழிதவறச் செய்தீர்கள். எனவே, துன்பகரமான இந்த முடிவை அனுபவியுங்கள்."

61. அத்துடன் அவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, இவர்கள்தான் எங்களை இதனுள் இட்டுச் சென்றவர்கள்; நரக நெருப்பின் தண்டனையை அவர்களுக்கு இருமடங்காக்குவீராக."

*வியப்பு!*

62. அவர்கள் கூறுவார்கள், "தீயவர்களில் உள்ளவர்கள் என நாம் எண்ணிக் கொண்டிருந்த மக்களை *(நரகத்தில்)* நாம் காணாதிருப்பது எப்படி?

63. "நாம் அவர்களைப் பரிகசிப்பவர்களாக இருந்தோம்; அவர்களை விட்டு நம் கண்களைத் திருப்பிக் கொள்பவர்களாக நாம் இருந்தோம்."

64. இது முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு நிகழ்வாகும்: நரகத்தின் மக்கள் ஒருவர் மற்றவருடன் சச்சரவு செய்து கொள்வார்கள்.

65. கூறுவீராக, "நான் உங்களை எச்சரிக்கின்றேன்; **கடவுள்**–வுடன் வேறு தெய்வம் இல்லை, ஒருவர், மேலதிகாரம் கொண்டவர்.

*38:41 பார்க்க 38:34 & 41ன் அடிக்குறிப்பு .

66. "வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றின் இரட்சகர்; எல்லாம் வல்லவர், மன்னிக்கின்றவர்."

*மிகப்பெரும் கலகம்*

67. கூறுவீராக, "இதோ பிரமிப்பூட்டும் செய்தி.

68. "நீங்கள் முற்றிலும் கவனமற்று இருக்கும் ஒன்று.

69. "மேலான சமூகத்தாரின்* கலகத்தைப் பற்றி, இதற்கு முன்னர் நான் எந்த அறிவையும் கொண்டிருக்க வில்லை.

70. "என்னுடைய ஒரே பணி எச்சரிக்கைகளை உங்களி டம் சேர்ப்பிப்பதே என நான் உள்ளுணர்வளிக்கப் பட்டுள்ளேன்."

71. உம் இரட்சகர் வானவர்களிடம் கூறினார், "களி மண்ணிலிருந்து ஒரு மானிடனை நான் படைக் கின்றேன்.

72. "அவரை நான் வடிவமைத்து, என் ஆவியிலிருந்து அவருள் ஊதியவுடன், அவர் முன்னால் நீங்கள் சிரம் பணிந்து விழ வேண்டும்."

73. வானவர்கள் சிரம்பணிந்து வீழ்ந்தனர், அவர்கள் அனைவரும்,

74. சாத்தானைத் தவிர; அவன் மறுத்தான், மேலும் மிக வும் ஆணவம் கொண்டவனாகவும், நன்றி கெட்ட வனாகவும் இருந்தான்.

75. அவர் கூறினார், "சாத்தானே, என் கரங்களால் நான் படைத்ததன் முன் சிரம்பணிவதிலிருந்து உன்னைத் தடுத்தது எது ? நீ மிகவும் ஆணவம் கொண்டு விட் டாயா ? நீ கலகம் செய்கின்றாயா ?"

76. அவன் கூறினான், " நான் அவரை விடவும் மேலான வன்; என்னை நீர் நெருப்பிலிருந்து படைத்தீர், மேலும் அவரைக் களிமண்ணிலிருந்து படைத்தீர்."

77. அவர் கூறினார், "அப்படியென்றால், நீ துரத்தப்பட வேண்டியவனாகி விட்டாய், நீ விரட்டப்படுவாய்.

78. "தீர்ப்பு நாள் வரை என் கண்டனத்துக்கு நீ உள்ளாகி விட்டாய்."

79. அவன் கூறினான், "என் இரட்சகரே, உயிர்த்தெழுப் பப்படும் நாள் வரை எனக்கு அவகாசமளிப்பீராக."

80. அவர் கூறினார், "நீ அவகாசமளிக்கப்பட்டவனாக இருக்கின்றாய்.

81. "நிர்ணயிக்கப்பட்ட அந்நாள் வரை."

82. அவன் கூறினான், "அவர்களை மொத்தமாக நான் வழிகேட்டில் அனுப்பி விடுவேன் என்று உமது மாட்சி மையின் மீது நான் ஆணையிடுகின்றேன்.

83. "உமக்கு மட்டும் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்ட உம்முடைய அடியார்களைத் தவிர.

84. அவர் கூறினார், " இதுதான் சத்தியம், மேலும் நான் சொல்வதெல்லாம் சத்தியம்தான்.

85. "உன்னையும் உன்னைப் பின்பற்றிய அனைவரையும் கொண்டு நான் நரகத்தை நிரப்புவேன்."

86. கூறுவீராக, "நான் உங்களிடம் எந்தக் கூலியும் கேட்க வில்லை, மேலும் நான் ஒரு மோசடிக்காரனும் அல்லன்.

87. "உலகத்திற்கு இது ஒரு நினைவூட்டலாகும்.

88. "மேலும் குறுகியதொரு காலத்திற்குள் நீங்கள் நிச்ச யம் கண்டு கொள்வீர்கள்."

****

# சூரா 39: மக்கள் கூட்டங்கள் (அல்–ஜுமர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. எல்லாம் வல்லர், ஞானம் நிறைந்தவரான, **கடவுள்**–யிடமிருந்து வந்த வேதத்தின் ஒரு வெளிப்பாடாக இது உள்ளது.

2. சத்தியத்துடன், இந்த வேதத்தை உமக்கு நாம் இறக்கி அனுப்பினோம்; அவருக்கு மட்டுமே உங்கள் மார்க்கத்தை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக, நீங்கள் **கடவுள்**–ஐ வழிபட வேண்டும்.

*மத்தியஸ்தர்களாக போலித்தெய்வங்கள்:*
*ஒரு பரவலான கட்டுக்கதை*

3. நிச்சயமாக, மார்க்கம் **கடவுள்**–க்கு மட்டுமே அர்ப் பணிக்கப்பட வேண்டும். அவருடன் போலித் தெய்வங் களை அமைத்துக் கொள்பவர்கள் கூறுகின்றனர், "**கடவுள்**–க்கு நெருக்கமாக எங்களைக் கொண்டு செல்வதற்காகவே நாங்கள் அவர்களை இணைவழி பாடு செய்கின்றோம்; ஏனெனில் அவர்கள் மேலான தொரு நிலையில் இருக்கின்றனர்!" அவர்களுடைய தர்க்கங்கள் குறித்து **கடவுள்** அவர்களுக்குத் தீர்ப் பளிப்பார். இத்தகைய பொய்யர்களை, நம்பமறுப்பவர் களைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

4. ஒரு மகனைக் கொண்டிருக்க வேண்டுமெனக் **கடவுள்** விரும்பினால், தன்னுடைய படைப்புகளில் இருந்து அவர் நாடுகின்ற எவரையும் அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பார். அவர் துதிப்பிற்குரியவர்; ஒருவர், மேலதிகாரம் கொண்டவரான, அவரே **கடவுள்**.

**38:69 மேலான சமூகத்தாரின் சச்சரவு கடவுளின் பரிபூரண அதிகாரத்திற்கு எதிரான சாத்தானின் அறைகூவல் மூலம் துவங்கியது. நிச்சயமாக இது மானிட இனத்தின் வரலாற்றிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். கடவுளின் பரிபூரண அதிகாரம் குறித்து ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க நாம் தவறி விட்டோம். இந்த வாழ்வு நம்மை மீட்டுக் கொள்வதற்கான மூன்றாவது மற்றும் இறுதி வாய்ப்பாக அமைகின்றது (அறிமுகவுரையையும் பின் இணைப்பு 7 ஐயும் காண்க).*

*பூமியின் வடிவம்**

5. வானங்களையும் பூமியையும் சத்தியத்துடன் அவர் படைத்தார். அவர் பகலின் மீது இரவை உருட்டுகின்றார், மேலும் இரவின் மீது பகலை உருட்டுகின்றார்.* சூரியன் மற்றும் சந்திரன் ஒவ்வொன்றையும் ஒரு வரையறைக்குட்பட்ட காலத்திற்கு ஓடும்படி அவர் ஆக்கினார். நிச்சயமாக, அவர்தான் எல்லாம் வல்லவர், மன்னிக்கின்றவர்.

6. ஒரு நபரிலிருந்து அவர் உங்களைப் படைத்தார், பின்னர் அவரிலிருந்து அவருடைய ஜோடியைப் படைத்தார். அவர் எட்டு வகைக் கால்நடைகளை உங்களுக்கு இறக்கி அனுப்பினார். படைப்புக்குப் பின் படைப்பாக, இருள் நிறைந்த மூன்று கால கட்டங்களில், உங்கள் தாய்மார்களின் வயிறுகளில் அவர் உங்களைப் படைத்தார். உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர். அனைத்து ஆட்சியதிகாரமும் அவருக்குரியது. அவருடன் வேறு தெய்வம் இல்லை. எவ்வாறு நீங்கள் விலகிச் செல்ல முடியும்?

*உங்கள் சொந்த நலனுக்காக*
*நம்பிக்கை கொள்ளுங்கள்*

7. நீங்கள் நம்பமறுத்தால், **கடவுள்** எவரொருவருடைய தேவையும் இல்லாதவர். ஆனால் தன் ஊழியர்கள் தவறான முடிவெடுப்பதைக் காண அவர் விரும்புவதில்லை. நன்றியுடையவராக இருக்க நீங்கள் முடிவெடுத்தால், அவர் உங்கள்பால் திருப்தி கொள்கின்றார். எந்த ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவின் பாவங்களைச் சுமப்பதில்லை. இறுதியாக, உங்கள் இரட்சகரிடமே உங்களுடைய திரும்புதல் இருக்கின்றது, பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் உங்களுக்கு அவர் அறிவிப்பார். உள்ளார்ந்த எண்ணங்களை அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

8. மானிடன் ஏதேனும் சிரமத்திற்குள்ளானால், கலப்பின்றி அவருக்கு அர்ப்பணித்துக் கொண்டு, அவன் தன் இரட்சகரை இறைஞ்சுகின்றான். ஆனால் அவர் அவனை ஆசீர்வதித்தவுடன், அவன் முன்னர் இறைஞ்சியதை மறந்தவனாக, **கடவுள்**–க்குச் சமமாக்குவதற்காகவும், மற்றவர்களை அவருடைய பாதையிலிருந்து திருப்புவதற்காகவும் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றான். கூறுவீராக, "உங்களுடைய நம்பமறுத்தலில் தற்காலிகமாக சுகமனுபவியுங்கள்; நீங்கள் நரக நெருப்பிற்கு உள்ளாகி விட்டீர்கள்."

9. தங்களுடைய இரட்சகரின் கருணையைத் தேடியவாறு, மறுவுலகைக் குறித்து விழிப்புடன் இருந்த வண்ணம், சிரம்பணிந்தும் விழித்திருந்தும், இரவில் தியானம் செய்பவர்களில் ஒருவனாக இருப்பது மேலானதல்லவா? கூறுவீராக, "அறிந்திருப்பவர்கள் அறியாதிருப்பவர்களுக்குச் சமமாவார்களா?" அறிவுத்திறனைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

10. கூறுவீராக, "நம்பிக்கை கொண்ட என் ஊழியர்களே, உங்கள் இரட்சகரிடம் நீங்கள் பக்தி செலுத்த வேண்டும்." ஏனெனில் இவ்வுலகில் நன்னெறிகள் புரிந்தவர்களுக்கு, நல்லதொரு வெகுமதி. **கடவுள்**–ன் பூமி விசாலமானது, மேலும் உறுதிப்பாட்டுடன் விடா முயற்சி செய்பவர்கள், எல்லைகளின்றி, தங்களுடைய பிரதிபலனை தாராளமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

*கடவுள் மட்டும்*

11. கூறுவீராக, "மார்க்கத்தை அவருக்கு மட்டும் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டவாறு, **கடவுள்**–ஐ வழிபட வேண்டுமென நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்.

12. "மேலும் மிகவும் அதிகமாகச் சரணடைந்தவனாக இருக்க வேண்டுமென நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்."

13. கூறுவீராக, "என் இரட்சகருக்கு நான் கீழ்ப்படிய மறுத்தால், மகத்தானதொரு நாளின் தண்டனைக்கு, நான் அஞ்சுகின்றேன்."

14. கூறுவீராக, "மார்க்கத்தைப் பூரணமாக அவருக்கு மட்டும் அர்ப்பணித்துக் கொண்டவாறு, **கடவுள்** ஒருவரை மட்டுமே நான் வழிபடுகின்றேன்.

15. "ஆகையால், நீங்கள் விரும்புகின்ற எதனையும் அவருடன் வழிபட்டுக் கொள்ளுங்கள்." கூறுவீராக, "உயிர்த்தெழுப்பப்படும் நாளில் தங்களுடைய, மற்றும் தங்கள் குடும்பத்தாருடைய ஆத்மாக்களை நஷ்டப்படுத்திக் கொண்டவர்கள்தான், மெய்யாகவே நஷ்டப்பட்டவர்கள் ஆவார்கள்" மிக உறுதியாக, இதுதான் மெய்யான நஷ்டமாகும்.

16. அவர்களுக்கு மேலும் அவர்களுக்குக் கீழும் நெருப்பின் பாளங்களை அவர்கள் கொண்டிருப்பார்கள். **கடவுள்** இவ்விதமாகத் தன் ஊழியர்களை எச்சரிக்கின்றார்: என்னுடைய ஊழியர்களே, நீங்கள் என்னிடம் பக்தியோடிருக்க வேண்டும்.

**39:5 பூமி உருண்டையானது என்பதை நமக்கு இந்த வசனம் தெளிவாகத் தெரியப்படுத்துகின்றது. "அவர் உருட்டுகின்றார்" என்பதற்குரிய அரபி வார்த்தை (யுகவ்விர்) "பந்து" என்பதற்குரிய அரபி வார்த்தையான (குராஹ்) என்பதிலிருந்து பெறப்படுகின்றது. பூமியானது மிகச் சரியான உருண்டையாக இல்லாத காரணத்தால், அதன் வடிவத்தைப் பற்றிய ஒரு பிரத்தியேகக் குறிப்பு 79:30ல் கொடுக்கப்பட்டுள்ளது. குர்ஆனுடைய வெளிப்பாட்டிற்குப் பல நூற்றாண்டுகள் கழித்து நாம் அறிந்து கொண்ட விஞ்ஞானத் தகவல்கள் நிறைந்ததாகக் குர்ஆன் உள்ளது. பார்க்க பின் இணைப்பு 20.*

17. போலித்தெய்வங்கள் அனைத்தையும் வழிபடுவதைக் கைவிட்டு விட்டு, தங்களையே முற்றிலும் **கடவுள்**–க்கு மட்டும் அர்ப்பணித்துக் கொண்டவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் மகிழ்ச்சிக்குத் தகுதி பெற்று விட்டார்கள். என்னுடைய ஊழியர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக.

*கடவுளின் வார்த்தையைப் பின்பற்றுங்கள்*

18. அவர்கள்தான் அனைத்து வார்த்தைகளையும் பரி சீலித்து, பின்னர் சிறந்தவற்றைப் பின்பற்றுபவர்கள். **கடவுள்** வழிநடத்தியவர்கள் இவர்கள்தான்; அறிவுத் திறன் பெற்றிருப்பவர்கள் இவர்கள்தான்.

19. தண்டனைக்குத் தகுதியாகி விட்டவர்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே நரகத்தில் இருப்பவர் களை நீர் காப்பாற்றி விட முடியுமா ?

*நன்னெறியாளர்கள்*

20. தங்கள் இரட்சகரிடம் பக்தி செலுத்துபவர்களைப் பொறுத்தவரை, பாயும் ஆறுகளுடன், அவர்களுக் காகக் கட்டப்பட்ட மாளிகைகளுக்கு மேல் மாளிகை களை அவர்கள் பெற்றிருப்பார்கள். இது **கடவுள்**–ன் வாக்குறுதியாகும், மேலும் **கடவுள்** ஒருபோதும் தன் வாக்குறுதியை முறிப்பதில்லை.

21. **கடவுள்** விண்ணிலிருந்து தண்ணீரை இறக்கி அனுப்புகின்றார், பின்னர் அதனை நிலத்தடிக் கிணறு களில் தேக்கி வைக்கின்றார், பின்னர் அதனைக் கொண்டு பல்வேறு நிறங்களைக் கொண்ட தாவரங் களை முளைப்பிக்கின்றார், பின்னர் அவை மஞ்சள் நிறமாக மாறும் வரை வளர்கின்றன, பின்னர் அவர் அவற்றைக் கூளங்களாக மாற்றி விடுகின்றார் என் பதை நீங்கள் காணவில்லையா ? அறிவுத்திறன் கொண்டோருக்கு இது ஒரு நினைவூட்டலாகத் திகழ வேண்டும்.

22. ஒருவருடைய இதயத்தை சரணடைதலைக் கொண்டு திருப்தியுற்றதாகக் **கடவுள்** ஆக்கி விட்டால், அவர் தன் இரட்சகரிடமிருந்து ஓர் ஒளியைப் பின்பற்றிக் கொண்டிருப்பார். எனவே, **கடவுள்**–ன் தூதுச் செய் திக்கு எதிராகத் தங்கள் இதயங்கள் கடினமாகிப் போனவர்களுக்கு கேடுதான்; அவர்கள் மிகநெடிய வழிகேட்டில் சென்று விட்டார்கள்.

*மிகச்சிறந்த ஹதீஸ்*

23. **கடவுள்** இதிலே மிகச்சிறந்த ஹதீஸ்களை வெளிப் படுத்தியுள்ளார்; முரண்பாடுகளற்ற ஒரு புத்தகம், மேலும் *(சொர்க்கத்திற்கும் நரகத்திற்குமுரிய)* இரு வழிகளையும் சுட்டிக்காட்டுகின்றது. தங்கள் இரட் சகரிடம் பக்தியோடிருப்பவர்களின் தோல்கள் அதன் மூலம் சிலிர்த்து விடுகின்றன, பின்னர் அவர்களு டைய தோல்களும் இதயங்களும் **கடவுள்**–ன் தூதுச் செய்திக்காக இளகி விடுகின்றன. **கடவுள்**–ன் வழி காட்டல் இத்தகையதாகும்; தான்நாடுகின்ற எவர் மீதும் அதனை அவர் அருள்கின்றார். **கடவுள்** –ஆல் வழிகேட்டிற்கு அனுப்பப்பட்டு விட்டவர்களைப் பொறுத்தவரை, எந்த ஒன்றும் அவர்களை வழிநடத்த முடியாது.

24. உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று பயங்கரமான தண்டனையிலிருந்து ஒருவருடைய முகத்தைக் காத்துக் கொள்வதை விட மிகச்சிறந்தது எது ? வரம்புமீறுபவர்களிடம் கூறப்படும், "நீங்கள் சம்பா தித்தவற்றின் பின் விளைவுகளைச் சுவையுங்கள்."

25. அவர்களுக்கு முன்னிருந்த மற்றவர்களும் நம்ப மறுத்தனர், மேலும் அதன் விளைவாக, அவர்கள் ஒருபோதும் எதிர்பாராதிருந்த போது தண்டனை அவர்களைத் துன்பத்திற்குள்ளாக்கியது.

26. இந்த வாழ்வில் **கடவுள்** அவர்களை இழிவுக்குக் கண்டனம் செய்து விட்டார், மேலும் மறுவுலகின் தண்டனையோ மிகவும் மோசமானதாக இருக்கும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

*குர்ஆன்: இருவேறு கருத்துகளுக்கு இடமில்லாதது*

27. அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு, இந்தக் குர்ஆனில் ஒவ்வொரு வகையான உதாரணத் தையும் மக்களுக்காக நாம் எடுத்துரைத்துள்ளோம்.

28. அவர்கள் நன்னெறியாளர்களாக இருக்கும் பொருட்டு, இருவேறு கருத்துகளுக்கு இடம் எதுவுமின்றி, அரபி மொழியிலான ஒரு குர்ஆன்.

29. தர்க்கித்துக் கொள்ளும் பங்குதாரர்களை *(ஹதீஸ்)* கை யாளுகின்ற ஒரு மனிதனுடன் ஒப்பிட்டு, முரணற்ற ஒரே ஒரு மூலாதாரத்தினை *(குர்ஆன்)* கையாளு கின்ற ஒரு மனிதனைக் **கடவுள்** உதாரணமாக எடுத் துரைக்கின்றார். அவர்கள் சமமானவர்களா ? புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது; அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

*ஹதீஸ்: பெருந்ததொரு இறைநிந்தனை*

30. நிச்சயமாக *(முஹம்மதே)* நீர் மரணிப்பீர், அவர்கள் மரணிக்கப் போகின்ற அதே போல்.

31. உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று, உங்களுடைய இரட் சகரின் முன்னால், மக்களாகிய நீங்கள் ஒருவர் மற்றவருடன் சச்சரவிட்டுக் கொள்வீர்கள்.

32. தன்னிடம் வந்துள்ள சத்தியத்தை நம்பமறுத்துக் கொண்டிருக்கும் அதே சமயம், **கடவுள்** மீது பொய் களைச் சாட்டுகின்ற ஒருவனை விட மிகத் தீயவன் யார் ? நம்பமறுப்பவர்களுக்கு நரகம் ஒரு நியாய மான கூலிதான் அல்லவா ?

*குர்ஆன்: பரிபூரணமான சத்தியம்*

33. சத்தியத்தை ஆதரித்து, மேலும் அதில் நம்பிக்கை கொள்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள்தான் நன்னெறியாளர்கள்.

34. அவர்கள் விரும்புகின்ற ஒவ்வொன்றையும், தங்கள் இரட்சகரிடம் அவர்கள் பெறுவார்கள். நன்னெறி யாளர்களுக்குரிய வெகுமதி இத்தகையதேயாகும்.

35. அவர்களுடைய பாவகரமான காரியங்களைக் **கடவுள்** மன்னிக்கின்றார், மேலும் அவர்களுடைய நற்காரியங்களுக்காக அவர்களுக்குத் தாராளமாக வெகுமதியளிக்கின்றார்.

*ஆழ்ந்த கேள்வி*

36. அவருடைய ஊழியருக்குக் **கடவுள்** போதுமானவர் அல்லவா ? அவருடன் அவர்கள் அமைத்துக் கொள் கின்ற போலித்தெய்வங்களைக் கொண்டு உம்மை அவர்கள் அச்சுறுத்துகின்றனர். **கடவுள்** எவரை வழி கேட்டில் அனுப்பி விடுகின்றாரோ, அவரை எந்த ஒன்றும் வழிநடத்த முடியாது.

37. மேலும் **கடவுள்** எவரை வழிநடத்துகின்றாரோ, அவரை எந்த ஒன்றும் வழிகேட்டிற்கு அனுப்பி விட முடியாது. **கடவுள்** எல்லாம் வல்லவர், பழி தீர்ப்பவர் அல்லவா ?

*அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றனர், இருப்பினும் அவர்கள் நரகத்திற்குச் செல்கின்றனர்*

38. "வானங்களையும் பூமியையும் படைத்தவர் யார் ?" என்று நீர் அவர்களிடம் கேட்பீராயின், "**கடவுள்**" என்றே அவர்கள் கூறுவார்கள். கூறுவீராக, "பின்னர் ஏன் நீங்கள் **கடவுள்**–வுடன் போலித் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றீர்கள் ? **கடவுள்** எனக்கு ஏதேனும் துன்பத்தை நாடினால், அத்தகையதொரு துன்பத்தை நிவர்த்திக்க அவர்களால் இயலுமா ? மேலும் அவர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தை நாடினால், அத்தகையதொரு ஆசீர்வாதத்தை அவர்களால் தடுத்துவிட இயலுமா ?" கூறுவீராக, "**கடவுள்** எனக் குப் போதுமானவர்." பொறுப்பேற்படுத்துபவர்கள் அவர் மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

39. கூறுவீராக, "என் சமூகத்தாரே, உங்களால் இயன்றதை செய்யுங்கள், என்னால் இயன்றதை நான் செய்வேன்; நிச்சயமாக நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

40. "கேவலமான தண்டனைக்கு உள்ளாகி விட்டவர், மேலும் நிலையானதொரு தண்டனைக்குத் தகுதி பெற்று விட்டவர் யார் என *(நீங்கள் கண்டுகொள்வீர் கள்).*"

41. சத்தியம் நிறைந்ததாக, மனிதர்களின்பால் இவ் வேதத்தை உம் மூலமாக நாம் வெளிப்படுத்தியுள் ளோம். பின்னர், வழிநடத்தப்படுகின்ற எவரும் தன் சொந்த நலனுக்காகவே வழிநடத்தப்படுகின்றார். மேலும் வழிதவறிச் செல்கின்ற எவரும் தன் சொந்தக் கேட்டிற்காகவே வழிதவறிச் செல்கின்றார். நீர் அவர் களுக்காக வாதிடுபவர் அல்லர்.

42. ஆன்மாக்களை அவற்றுடைய வாழ்க்கையின் முடிவு வரும்பொழுதும், மேலும் தூக்கத்தின் பொழுதும் **கடவுள்** மரணத்தில் ஆழ்த்துகின்றார். இவ்விதமாக, அவர் சிலவற்றை அவற்றின் தூக்கத்தின் போதே திரும்ப எடுத்துக் கொள்கின்றார், அதே சமயம் மற்ற வை அவற்றின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட தவணை வரை தொடர்ந்து உயிர் வாழ அனுமதிக்கப்படுகின் றன. சிந்திக்கின்ற மக்களுக்கு இவை படிப்பினை களை வழங்க வேண்டும்.

*பரிந்துரை எனும் கட்டுக்கதை*

43. அவர்களுக்கும் **கடவுள்**–க்கும் இடையில் மத்தியஸ் தத்திற்குப் பரிந்துரையாளர்களை அவர்கள் கண்டு பிடித்துக் கொண்டனரா ? கூறுவீராக, "அவர்கள் எந்தச் சக்தியையோ, அன்றிப் புரிந்து கொள்ளுதலை யோ பெற்றிராமல் இருந்தால் ?"

44. கூறுவீராக, "பரிந்துரை அனைத்தும் **கடவுள்**–க்குரி யது." வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் ஆட்சி யதிகாரம் அனைத்தும் அவருக்குரியது, பின்னர் அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்.

*மாபெரும் அளவுகோல்**

45. **கடவுள் மட்டும்** மொழியப்பட்டால், மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களின் இதயங்கள் வெறுப் பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்களும் மொழியப்பட்டால், அவர்கள் திருப்தி அடைகின்றனர்.*

46. பிரகடனிப்பீராக: "எங்கள் இறைவா, வானங்கள் மற்றும் பூமியின் துவக்ககர்த்தாவே, அனைத்து இரகசியங் களையும் அறிவிப்புகளையும் அறிந்தவரே, உம்மு டைய ஊழியர்களுக்கிடையில் அவர்களுடைய தர்க் கங்களைக் குறித்து தீர்ப்பளிக்கின்ற ஒரே ஒருவர் நீர்தான்."

**39:45 இஸ்லாத்தின் முதல் தூணாவது "அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ் (கடவுளுடன் வேறு தெய்வம் இல்லை)," எனப் பிரகடனம் செய்வதுதான் என்று 3:18ல் தெளிவான கட்டளை இருந்த போதிலும், பெரும்பான்மையான "முஸ்லிம்கள்" முஹம்மதின் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றனர். முஹம்மதின் பெயரையோ அல்லது வேறு எந்தப் பெயரையோ சேர்த்துக் கொள்வதில் மகிழ்வடைவது, மறுவுலகின் மீதான நம்பமறுத்தலை வெளிப்படுத்துகின்றது என மகத்தான இந்த அளவுகோல் நம்மை எச்சரிக்கின்றது. 17:46க்குரிய அடிக்குறிப்பையும் பார்க்கவும்.*

47. பூமியில் உள்ள ஒவ்வொன்றையும், இன்னும் அதைப் போல் இருமடங்கையும் வரம்புமீறியவர்கள் சொந்த மாகக் கொண்டிருந்தாலும், உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று பயங்கரமான தண்டனையைத் தவிர்த்துக் கொள்ள அவர்கள் அதனை உடனடியாக விட்டுக் கொடுத்து விடுவார்கள். அவர்கள் ஒருபோதும் எதிர் பாராததவை **கடவுள்**–ஆல் அவர்களுக்குக் காட்டப் படும்.

48. அவர்கள் சம்பாதித்த பாவகரமான காரியங்கள் அவர் களுக்குக் காட்டப்படும், மேலும் அவர்கள் கேலி செய்த அதே விஷயங்கள் அவர்களை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யத் திரும்பி வரும்.

*மானிடனின் சலனபுத்தி*

49. மானிடன் துன்பத்தால் தீண்டப்பட்டால், அவன் நம்மை இறைஞ்சுகின்றான், ஆனால் ஓர் ஆசீர்வாதத் தை நாம் அவன் மீது அருளியவுடன், அவன் கூறு கின்றான், "இதனை நான் எனது சாமர்த்தியத்தால் அடையப் பெற்றேன்!" உண்மையில், இது ஒரு சோத னையேயாகும், ஆனால் அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

50. அவர்களுக்கு முன்பிருந்தவர்களும் இதனையே தான் கூறினார்கள், மேலும் அவர்களுடைய சம்பாத் தியங்கள் அவர்களுக்குச் சற்றும் உதவவில்லை.

51. அவர்களுடைய தீய காரியங்களின் பின்விளைவு களை அவர்கள் அனுபவித்தனர். அதைப் போலவே, தற்காலத் தலைமுறையில் உள்ள வரம்புமீறுபவர் களும் அவர்களுடைய தீயகாரியங்களின் பின் விளைவுகளை அனுபவிப்பார்கள்; அவர்கள் தப்பிக்க முடியாது.

52. **கடவுள்**தான் அவர் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும் வாழ்வாதாரத்தினை அதிகரிப்பவர், மேலும் தடுத்து நிறுத்துபவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லையா? நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இவை படிப்பினைகளாகும்.

*கடவுளின் எல்லையற்ற கருணை*

53. பிரகடனிப்பீராக: "வரம்புகளைத் தாண்டி விட்ட என் ஊழியர்களே, **கடவுள்**–ன் கருணையில் ஒருபோதும் நம்பிக்கையிழந்து விடாதீர்கள். ஏனெனில் **கடவுள்** எல்லாப் பாவங்களையும் மன்னிக்கின்றார். அவர் தான் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

54. தண்டனை உங்களை முந்துவதற்கு முன்னர், நீங்கள் உங்கள் இரட்சகருக்குக் கீழ்ப்படியவும், அவருக்கு முற்றிலும் சரணடையவும் வேண்டும், பின்னர் நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்.

55. மேலும் நீங்கள் சற்றும் எதிர்பாராதிருக்கும் போது, தண்டனை உங்களை திடீரென முந்துவதற்கு முன்னர், உங்களுடைய இரட்சகரால் உங்களுக்குச் சுட்டிக் காட் டப்பட்டுள்ள மிகச்சிறந்த பாதையைப் பின்பற்றுங்கள்.

56. "**கடவுள்**–ன் கட்டளைகளை அலட்சியம் செய்ததற் காக நான் மிகவும் வருந்துகின்றேன்; நிச்சயமாக நான் கேலி செய்பவர்களில் ஒருவனாகவே இருந்தேன்," என்று ஓர் ஆத்மா கூறக்கூடாது என்பதற்காக.

57. அல்லது, "**கடவுள்** என்னை வழிநடத்தியிருந்தால், நானும் நன்னெறியாளர்களுடன் இருந்திருப்பேன்" என்று கூறக்கூடாது என்பதற்காக.

58. அல்லது தண்டனையை அது காணும் பொழுது, "மற் றொரு வாய்ப்பை நான் பெற்றால், நான் நன்னெறியான காரியங்கள் புரிவேன்" என்று கூறக்கூடாது என்பதற்காக.

59. ஆம், உண்மையில் *(போதுமான வாய்ப்புகள் உனக்குக் கிடைக்கவே செய்தன).* என் சான்றுகள் உன்னிடம் வந்தன, ஆனால் நீ அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத் தாய், ஆணவம் கொண்டாய், மேலும் ஒரு நம்பமறுப்ப வனாக ஆனாய்.

60. **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்யுரைத்தவர்களின் முகங்கள் உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று துன்பத்தால் சூழப் பட்டிருக்க நீர் காண்பீர். ஆணவம் கொண்டவர் களுக்கு நரகம் சரியான தண்டனைதான் அல்லவா?

61. மேலும் நன்னெறியைப் பேணிக்கொண்டவர்களைக் **கடவுள்** காப்பாற்றுவார்; அவர்களுக்கு அவர் வெகு மதியளிப்பார். எந்தத் தீங்கும் அவர்களைத் தீண்டாது, அன்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இருக்காது.

62. **கடவுள்**தான் அனைத்துப் பொருட்களின் படைப் பாளர், மேலும் அவர் அனைத்து விஷயங்களையும் முழுக்கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

63. வானங்களிலும் பூமியிலும் உள்ள தீர்மானங்கள் அனைத்தும் அவருக்கே உரியன, மேலும் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை நம்பமறுப்பவர்கள்தான் மெய்யான நஷ்டவாளிகள்.

64. கூறுவீராக, "**கடவுள்**–ஐ விடுத்து மற்றவற்றை வழி படுவதற்காகவா என்னை நீங்கள் தூண்டுகின்றீர்கள், அறிவில்லாதவர்களே?"

*போலித்தெய்வ வழிபாடு எல்லாக் காரியங் களையும் பயனற்றதாக ஆக்கிவிடுகின்றது*

65. எப்பொழுது நீர் போலித்தெய்வ வழிபாடு செய்தாலும், உம்முடைய அனைத்துக் காரியங்களும் பயனற்ற தாகி விடும், மேலும் நீர் நஷ்டவாளிகளுடன் இருப்பீர் என உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

66. எனவே, நீர் **கடவுள்**–ஐ மட்டும் வழிபடவும், மேலும் நன்றியுடையவராக இருக்கவும் வேண்டும்.

*கடவுளின் மகத்துவம்**

67. **கடவுள்**–ன் மகத்துவத்தை அவர்கள் ஒருபோதும் முழுமையாக அளவிட முடியாது. உயிர்த்தெழுப்பப் படும் நாளன்று முழு உலகும் அவருடைய கைப்பிடிக் குள் உள்ளது. உண்மையில், பிரபஞ்சங்கள் அவரு டைய வலக்கரத்திற்குள்* மடிக்கப்பட்டுள்ளன. அவர் துதிப்பிற்குரியவர்; பங்குதாரர்கள் எவரும் தேவைப் படுவதை விட்டும் அவர் மிகவும் உயர்ந்தவர்.

*தீர்ப்பு நாள்*

68. கொம்பு ஊதப்படும், உடனே **கடவுள்**–ஆல் தவிர்த் துக் கொள்ளப்படுபவர்களைத் தவிர, வானங்களி லும் பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் மயக்கத்தில் ஆழ்ந்து விடுவார்கள். பின்னர் அது இன்னொரு முறை ஊதப்படும், உடனே அவர்கள் அனைவரும் உற்று நோக்கியவாறு எழுந்து நிற்பார்கள்.*

69. பின்னர் பூமி தன் இரட்சகரின் ஒளியால் பிரகாசிக் கும். பதிவேடு பகிரங்கமாகக் காட்டப்படும், மேலும் நபிமார்களும் சாட்சிகளும் முன் கொண்டு வரப்படு வார்கள். ஒவ்வொருவரும் பின்னர் நியாயமாகத் தீர்ப் பளிக்கப்படுவார்கள், சிறிதளவும் அநீதமின்றி.

70. ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது செய்தவற்றுக்கான கூலி கொடுக்கப்படும், ஏனெனில் அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர் முற்றிலும் அறிந் திருக்கின்றார்.

*நம்பமறுப்பவர்கள்*

71. நம்பமறுத்தவர்கள் நரகத்திற்குள் கூட்டங் கூட்டமாக வழிநடத்தப்படுவார்கள். அவர்கள் அதனை அடைந்து, மேலும் அதன் வாயில்கள் திறக்கப்படும் பொழுது, அதன் காவலர்கள் கூறுவார்கள், "உங்கள் இரட்ச கருடைய வெளிப்பாடுகளை உங்களுக்கு ஓதிக்காட் டிய, மேலும் இந்த நாளின் சந்திப்பைக் குறித்து உங் களை எச்சரித்த தூதர்களை உங்களில் இருந்தே நீங்கள் பெற்றுக் கொள்ள வில்லையா?" அவர்கள் பதிலளிப்பார்கள், "ஆம் மெய்தான். ஆனால் நம்ப மறுப்பவர்கள் மீது 'தண்டனை' எனும் வார்த்தை ஏற்கனவே முத்திரையிடப் பட்டுவிட்டது."

72. இவ்வாறு கூறப்படும், "அதிலே நீங்கள் என்றென்றும் தங்கியிருக்கக்கூடிய, நரகத்தின் வாயில்களுக்குள் நுழையுங்கள்." ஆணவம் கொண்டவர்களுக்கு என்ன ஒரு துன்பகரமான விதி.

*நம்பிக்கையாளர்கள்*

73. தங்கள் இரட்சகரிடம் பக்தி கொண்டவர்கள் சுவனத்திற்குக் கூட்டங் கூட்டமாக அழைத்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் அதனை அடைந்து, மேலும் அதன் வாயில்கள் திறக்கப்படும் பொழுது, அதன் காவலர்கள் கூறுவார்கள், "உங்கள் மீது சாந்தி நிலவுவதாக; நீங்கள் வெற்றி பெற்று விட்டீர் கள். ஆகையால், இங்கேயே நீங்கள் என்றென்றும் தங்கியிருப்பீர்கள்."

74. அவர்கள் கூறுவார்கள், "தன்னுடைய வாக்குறுதியை எங்களுக்கு நிறைவேற்றித் தந்து, மேலும் பூமிக்கு எங்களை வாரிசாக ஆக்கி, நாங்கள் விரும்பியவாறு சுவனத்தில் மகிழ்ந்திருக்கச் செய்தவரான **கடவுள்**–க்கே புகழ்ச்சி உரியது." பணிபுரிவோருக்கு என்ன ஓர் அழகிய வெகுமதி!

75. தங்கள் இரட்சகரைத் துதித்தவாறும் புகழ்ந்தவாறும், அரியாசனத்தைச் சுற்றிலும் வானவர்கள் மிதந்து கொண்டிருப்பதை நீர் காண்பீர். நியாயமான தீர்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட்டு விட்ட பின்னர், பிரகடனம் செய்யப்படும்: "பிரபஞ்சத்தின் இரட்சக ரான, **கடவுள்**–க்கே புகழ்ச்சி உரியது."

---

****39:67*** *கோடிக்கணக்கான நட்சத்திர மண்டலங்களுடனும், பன்னூறு கோடிக்கணக்கான நட்சத்திரங்களுடனும் எண்ண முடியாத கோடானுகோடி விண்ணகப் பொருட்களுடனும், கோடிக்கணக்கான ஒளி வருடங்கள் விரிந்திருக்கும் நமது பிரபஞ்சமானது, ஏழு பிரபஞ்சங்களிலும் மிகச் சிறியதாகவும் மிகவும் உள்ளமைந்ததாகவும் உள்ளது. ஏழு பிரபஞ்சங்களின் கிரகித்துக் கொள்ள முடியாத இந்த விரிந்த பரப்பு கடவுளின் கரத்தினுள் உள்ளது. கடவுளின் மகத்துவம் இத்தகையதாகும். பின் இணைப்பு **6** ஐக் காண்க.*

****39:68*** *உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று நிகழ்வுகளின் வரிசைக்கிரமம், அடையாளமாகக் கொம்பு ஊதப்படுவதுடன் துவங்கு கிறது. இரண்டாவது கொம்பு ஊதப்படுவது – மயக்கமடைவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு படைப்பின் மூலம் – எல்லா மக்களும் உயிர்த்தெழுப்பப்படுவதைக் குறிக்கின்றது; அவர்கள் இன்றைய பூமியின் மீது உயிர்த்தெழுப்பப்படுவார்கள். அப்போது கடவுளின் நேரடி வருகையின் மூலம் இந்தப் பூமி சின்னாபின்னமாகி விடும், பின்னர் புதியதொரு பூமியும், புதிய வானங்களும் படைக்கப்படும் **(14:48)**. பின்னர் நம்முடைய வளர்ச்சியின் அளவுக்கேற்ப நாம் அடுக்கப்படுவோம் (பின் இணைப்பு **11**).*

# சூரா 40: மன்னிப்பவர் (க்ஹாஂஃபிர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.*

2. இவ்வேதத்தின் இந்த வெளிப்பாடு எல்லாம் வல்லவர், அனைத்தும் அறிந்தவரான **கடவுள்**–யிடமிருந்து வந்துள்ளது.

3. பாவங்களை மன்னிப்பவர், வருந்துதலை ஏற்றுக் கொள்பவர், தண்டனையை நிறைவேற்றுவதில் கடுமையானவர், மேலும் அனைத்துச் சக்திக்கும் உடமையாளர், அவருடன் வேறு தெய்வம் இல்லை. இறுதி விதி அவரிடமே உள்ளது.

4. நம்பமறுப்பவர்களைத் தவிர எவரும் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு எதிராக வாதாடமாட்டார்கள். அவர்களுடைய போலி வெற்றியால் கவரப்பட்டு விடாதீர்.

5. அவர்களுக்கு முன்னர் நோவாவின் சமூகத்தாரும், அவர்களுக்குப் பின்னர் மற்ற ஏராளமான எதிரணியினரும் நம்பமறுத்தனர். ஒவ்வொரு சமூகமும் தங்களுடைய தூதரை மட்டுப்படுத்தும் பொருட்டு, அவரை அடக்குமுறை செய்தது.மேலும் சத்தியத்தைத் தோல்வியுறச் செய்வதற்காக, அவர்கள் பொய்மையைக் கொண்டு வாதித்தனர். அதன் விளைவாக, நான் அவர்களைத் தண்டித்தேன்; எனது தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது!

6. இவ்விதமாக, உம் இரட்சகரின் தீர்ப்பு, நம்பமறுப்பவர்கள் மீது ஏற்கெனவே முத்திரையிடப்பட்டுள்ளது, அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள் என.

*வானவர்கள் நம்பிக்கையாளர்களுக்காகப் பிரார்த்திக்கின்றனர்*

7. அரியாசனப் பணிபுரிபவர்களும் அதனைச் சூழ்ந்து இருப்பவர்களும் தங்களுடைய இரட்சகரைத் துதித்துக் கொண்டும் புகழ்ந்து கொண்டும் இருக்கின்றனர், மேலும் அவர் மீது நம்பிக்கை கொள்கின்றனர். மேலும் நம்பிக்கை கொண்டவர்களுக்காகஅவர்கள் பாவமன்னிப்புக் கோருகின்றனர்: "எங்கள் இரட்சகரே, உமது கருணையும் உமது அறிவும் எல்லாப் பொருட்களையும் சூழ்ந்துள்ளது. பாவங்களுக்காக வருந்தி, மேலும் உம்முடைய பாதையைப் பின்பற்றுபவர்களை மன்னிப்பீராக, மேலும் நரகத்தின் தண்டனையிலிருந்து அவர்களை விலக்கிடுவீராக.

8. "எங்கள் இரட்சகரே, மேலும் அவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களிலும், வாழ்க்கைத் துணைகளிலும், பிள்ளைகளிலும் உள்ள நன்னெறியாளர்களுக்கும், நீர் வாக்களித்துள்ள ஏதேன் தோட்டங்களுக்குள் அவர்களை அனுமதிப்பீராக. நீர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

9. "மேலும் பாவத்தில் வீழ்வதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பீராக. பாவத்தில் வீழ்வதிலிருந்து நீர் பாதுகாக்கும் எவரும், அந்நாளில், உம்மிடமிருந்து கருணையை அடைந்து விட்டார். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்."

*கடவுள் மட்டும்: நம்பமறுப்பவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்*

10. நம்பமறுப்பவர்களிடம் கூறப்படும், "உங்கள் மீது நீங்களே கொண்டிருக்கும் சுய வெறுப்பை விடவும் உங்கள் மீது **கடவுள்** கொண்டுள்ள வெறுப்பு மிகவும் மோசமானதாகும். ஏனெனில் நம்பிக்கை கொள்ளுமாறு நீங்கள் அழைக்கப்பட்டீர்கள், ஆனால் நீங்கள் நம்பமறுப்பதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள்."

*கடவுள் மட்டும்: நம்பமறுப்பவர்கள் இரு மரணங்களை அனுபவிக்கின்றனர்**

11. அவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, நீர் எங்களை இருமுறை மரணத்தில்* ஆழ்த்தினீர், மேலும் இரண்டு வாழ்வுகளை எங்களுக்குக் கொடுத்தீர்; இப்போது நாங்கள் எங்கள் பாவங்களை ஒப்புக் கொண்டு விட்டோம். இதிலிருந்து வெளியேற ஏதேனும் வழி உண்டா?"

*கடவுள் மட்டும்: காரணத்தைக் கவனியுங்கள்*

12. இது ஏனெனில் **கடவுள்** மட்டும் ஆதரிக்கப்பட்ட போது, நீங்கள் நம்பமறுத்தீர்கள், ஆனால் அவருடன் மற்றவர்களும் மொழியப்பட்டபோது நீங்கள் நம்பிக்கை கொண்டீர்கள், ஆகையால் **கடவுள்**–ன் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது; அவர் மிகவும் உயர்ந்தவர், மகாப்பெரியவர்.

**40:1 "ஹா மீம்" ஆகிய துவக்க எழுத்துகள் 40–46 சூராக்களில் இடம் பெறுகின்றன. "ஹே" மற்றும் "மீம்" ஆகிய எழுத்துகள் இந்த ஏழு சூராக்களிலும் இடம் பெறும் மொத்த எண்ணிக்கையாவது 2147, அல்லது 19x113 (பின் இணைப்பு 1).*

**40:11–12 நம்பமறுப்பவர்கள் இரண்டு மரணங்களை அனுபவிக்கின்றனர், அதே சமயம் நன்னெறியுடைய நம்பிக்கையாளர்கள் நாம் ஏற்கெனவே அனுபவித்து விட்ட மரணத்திற்கு அப்பால், மரணத்தைச் சுவைப்பதில்லை, (44:56). பின் இணைப்பு 17 ஐ தயவு செய்து பார்க்கவும். நரகத்திற்குச் செல்லும் காரணம் தெளிவானதாகும்; கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்கள் கூட மற்றவர்களை அவருடன் இணைத்துக் கொள்கின்றனர் (பார்க்க 39:45).*

13. அவர்தான் தன்னுடைய சான்றுகளைத் தொடர்ச்சியாக உங்களுக்குக் காட்டுபவர், மேலும் விண்ணிலிருந்து வாழ்வாதாரங்களை உங்களுக்கு இறக்கி அனுப்புபவர். முற்றிலும் சரணடைந்தவர்கள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ளும் திறன் பெற்றிருப்பார்கள்.

14. எனவே, நம்பமறுப்பவர்கள் அதனை விரும்பாத போதிலும், உங்களுடைய வழிபாட்டை நீங்கள் **கடவுள்**–க்கு மட்டுமே பரிபூரணமாக அர்ப்பணிக்க வேண்டும்.

15. மிக உயர்ந்த அந்தஸ்துகளுக்கு உடமையாளர், மேலும் மொத்த சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளர். வரவழைக்கப்படுகின்ற அந்நாளைக் குறித்து எச்சரிப்பதற்காக, தன் ஊழியர்களிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கின்ற எவருக்கும், தன்னுடைய கட்டளைகளைக் கொண்ட, உள்ளுணர்வை அவர் அனுப்புகின்றார்.

16. அதுதான் ஒவ்வொருவரும் முற்றிலும் வெளிப்படுத்தப்படுகின்ற நாளாகும்; அவர்களில் எவரும் **கடவுள்**–யிடமிருந்து எந்த ஒன்றையும் மறைக்க மாட்டார்கள். ஆட்சியதிகாரம் அனைத்தும் அந்நாளில் எவருக்குரியது ? **கடவுள்**–க்கு, ஒருவர், மேலதிகாரமுடையவர்.

*அந்தப் பெரிய நாளுக்காகத் தயாராகுங்கள்*

17. அந்நாளில், ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அது சம்பாதித்தவற்றுக்கான கூலி கொடுக்கப்படும். அந்நாளில் எந்த அநீதியும் இருக்காது. **கடவுள்** கணக்கெடுப்பதில் மிகத் திறன் வாய்ந்தவர்.

*பரிந்துரை இல்லை*

18. சமீபத்திலிருக்கும் அந்த நாளைப் பற்றி அவர்களை எச்சரிப்பீராக, அப்போது இதயங்கள் திகிலடைந்து விடும், மேலும் ஏராளமானோர் குற்ற உணர்வு நிறைந்தவர்களாக இருப்பார்கள். வரம்புமீறுபவர்களுக்குக் கீழ்ப்படிய எந்த நண்பனோ அன்றிப் பரிந்துரையாளரோ இருக்கமாட்டார்.

19. கண்கள் காணமுடியாதவற்றையும், மேலும் மனங்கள் மறைத்து வைக்கும் ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

20. **கடவுள்** நியாயமாகத் தீர்ப்பளிக்கின்றார், அதேசமயம் அவருடன் அவர்கள் இறைஞ்சுகின்ற போலித் தெய்வங்கள் எந்த ஒன்றுக்கும் தீர்ப்பளிக்க இயலாது. **கடவுள்**தான் செவியேற்பவராகவும், பார்ப்பவராகவும் இருக்கின்றவர்.

21. அவர்கள் பூமியைச் சுற்றிப்பார்த்து தங்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு நேர்ந்த விளைவுகளைக் கவனிக்கவில்லையா ? இவர்களை விட அவர்கள் வலிமையுள்ளவர்களாகவும், பூமியின் மீது அதிகம் விளைவித்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் **கடவுள்** அவர்களுடைய பாவங்களுக்காக அவர்களைத் தண்டித்தார், மேலும் **கடவுள்**–யிடமிருந்து எந்த ஒன்றும் அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை.

22. அது ஏனெனில், அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளுடன் சென்றனர், ஆனால் அவர்கள் நம்பமறுத்தனர். அதன் விளைவாக **கடவுள்** அவர்களைத் தண்டித்தார். அவர் சக்திமிக்கவர், தண்டனையை நிறைவேற்றுவதில் கடுமையானவர்.

*மோஸஸ்*

23. நம்முடைய அத்தாட்சிகளுடனும் ஆழ்ந்ததோர் அங்கீகாரத்துடனும் மோஸஸை நாம் அனுப்பினோம்.

24. ஃபேரோ, ஹாமான், மற்றும் காரூனிடம். ஆனால் அவர்கள் கூறினர், "ஒரு மந்திரவாதி; ஒரு பொய்யர்."

25. மேலும் அவர் நம்மிடமிருந்து சத்தியத்தை அவர்களுக்குக் காட்டிய பொழுது, அவர்கள் கூறினர், "அவருடன் நம்பிக்கை கொண்டவர்களின் மகன்களைக் கொன்று விடுங்கள், மேலும் அவர்களுடைய மகள்களை விட்டு விடுங்கள்." இவ்விதமாக, நம்பமறுப்பவர்களின் சூழ்ச்சிகள் எப்பொழுதும் தீயவையாகவே உள்ளன.

*மோஸஸுக்கு எதிராக ஃபேரோ*

26. ஃபேரோ கூறினான், "மோஸஸைக் கொல்ல என்னை விட்டு விடுங்கள், மேலும் அவர் தன் இரட்சகரை இறைஞ்சட்டும், அவர் உங்களுடைய மார்க்கத்தைப் பாழாக்கி விடுவார் என்றோ, அல்லது நாடு முழுவதும் தீமைகளைப் பரப்பி விடுவார் என்றோ நான் கவலைப்படுகின்றேன்."

27. மோஸஸ் கூறினார், "கணக்குக் கொடுக்கின்ற நாளின் மீது நம்பிக்கை கொள்ளாத ஆணவக்காரன் ஒவ்வொருவனிடமிருந்தும், என்னுடைய இரட்சகர் மற்றும் உங்களுடைய இரட்சகரிடம் நான் புகலிடம் தேடுகின்றேன்."

*கடவுள் பொய்யர்களை வழிநடத்துவதில்லை*

28. ஃபேரோவின் சமூகத்தாரிடையே தன்னுடைய நம்பிக்கையை மறைத்துக் கொண்டிருந்த, நம்பிக்கை கொண்ட ஒரு மனிதர் கூறினார், " 'என் இரட்சகர் **கடவுள்**தான்,' என்று கூறியதற்காக மட்டும் எப்படி ஒரு மனிதரை நீங்கள் கொலை செய்யலாம், மேலும் அவர் உங்கள் இரட்சகரிடமிருந்து தெளிவான சான்றுகளையும் உங்களுக்குக் காட்டியுள்ள போது ? அவர் ஒரு பொய்யராக இருந்தால், அது அவருடைய பிரச்சனையாகும், மேலும் அவர் உண்மையாளராக இருந்தால், அவர் வாக்களித்தவற்றிலிருந்து நீங்கள் பயனடைவீர்கள். நிச்சயமாக, வரம்புமீறுபவர், பொய்யர் எவரையும் **கடவுள்** வழிநடத்துவதில்லை.

29. "என் சமூகத்தாரே, இன்றைய தினம் அரசுரிமையும், மேன்மையும் உங்களிடம் உள்ளது. ஆனால் **கடவுள்**–ன் தீர்ப்புக்கெதிராக நமக்கு உதவுபவர் யார், அது நம்மிடம் வந்து விட்டால் ?" ஃபேரோ கூறினான், "நான் பொருத்தமெனக் காண்பதை மட்டுமே பின் பற்ற வேண்டியவர்களாகத்தான் நீங்கள் இருக்கின்றீர்கள்; சரியான பாதையில் மட்டுமே நான் உங்களை வழிநடத்துவேன்."

30. நம்பிக்கை கொண்ட அந்த ஒருவர் கூறினார், "என் சமூகத்தாரே, முந்திய எதிரணியினருக்கு நேரிட்டதைப் போன்ற அதே விதியை உங்களுக்கு நான் அஞ்சுகின்றேன்.

31. "நோவா, மேலும் ஆத், தமூது, மற்றும் அவர்களுக்குப் பின்னால் வந்த மற்றவர்களின் எதிரணியினர். மக்களுக்கு அநியாயம் எதையும் **கடவுள்** விரும்புவதில்லை.

32. "என் சமூகத்தாரே, அழைக்கப்படுகின்ற அந்த நாளை உங்களுக்கு நான் அஞ்சுகின்றேன்.

33. "புறங்காட்டித் திரும்பித் தப்பியோட நீங்கள் விரும்பக்கூடிய நாள் அதுவாகும். ஆனால் அப்போது எந்த ஒன்றும் **கடவுள்**–யிடமிருந்து உங்களைக் காப்பாற்றாது. **கடவுள்** எவரை வழிகேட்டில் அனுப்பி விடுகின்றரோ, அவரை எந்த ஒன்றும் வழிநடத்த இயலாது."

*யார் இறுதித் தூதர் ?**
*சோகமானதொரு மானிடப் பண்பு*

34. அதற்கு முன்னர் தெளிவான வெளிப்பாடுகளுடன் ஜோஸஃப் உங்களிடம் வந்திருந்தார், ஆனால் நீங்கள் அவருடைய தூதுச் செய்தியைத் தொடர்ந்து சந்தேகித்துக் கொண்டிருந்தீர்கள். பின்னர், அவர் இறந்து விட்ட பொழுது நீங்கள் கூறினீர்கள், "அவருக்குப் பின்னர் வேறு எந்தத் தூதரையும் **கடவுள்** அனுப்ப மாட்டார் *(அவர்தான் இறுதித் தூதர்)!"*** **கடவுள்** இவ்விதமாக வரம்புமீறுபவர்களையும், சந்தேகிப்பவர்களையும் வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார்.

35. எந்த அடிப்படையுமின்றி, **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு எதிராக அவர்கள் வாதிக்கின்றனர். இந்த தன்மை **கடவுள்** மற்றும் நம்பிக்கையாளர்களால் மிகவும் வெறுக்கப்படுவதாகும். இவ்விதமாக ஆணவங் கொண்ட ஒவ்வொரு கொடுங்கோலனின் இதயத்தையும் **கடவுள்** முத்திரையிட்டு விடுகின்றார்.

36. ஃபேரோ கூறினான், "ஹாமானே, உயர்ந்ததொரு கோபுரத்தை எனக்காக நீ கட்டுவாயாக, நான் எட்டிப் பார்த்துக் கண்டுபிடிக்கும் பொருட்டு.

37. "நான் வானத்தை எட்டிப்பிடிக்கவும், மோஸஸின் தெய்வத்தை ஒரு நோட்டமிடவும் விரும்புகின்றேன். அவர் ஒரு பொய்யர் என்று நான் கருதுகின்றேன்." இவ்வாறாக ஃபேரோவின் தீய காரியங்கள் அவனுடைய கண்களுக்கு அழகாக்கப்பட்டன, மேலும் இவ்வாறாக *(சரியான)* பாதையைப் பின்பற்றுவதிலிருந்து அவன் தடுக்கப்பட்டான். ஃபேரோவின் சூழ்ச்சி மெய்யாகவே தீயதாக இருந்தது.

38. நம்பிக்கை கொண்ட அந்த ஒருவர் கூறினார், "என் சமூகத்தாரே, என்னைப் பின்பற்றுங்கள், மேலும் நான் சரியான வழியில் உங்களை வழி நடத்துவேன்.*

39. "என் சமூகத்தாரே, இந்த முதல் வாழ்வு தற்காலிகமானதொரு மாயையேயாகும், அதே சமயம் மறுவுலகமே நிரந்தரமான தங்குமிடமாகும்."

*மிகச்சிறந்த பேரம்*

40. எவரேனும் ஒரு பாவத்தைச் செய்தால் அதற்கு உரிய கூலி மட்டுமே கொடுக்கப்படுவார், மேலும் எவரேனும் நம்பிக்கை கொண்ட நிலையில், நன்னெறியான காரியங்கள் புரிந்தால்–ஆணோ அல்லது பெண்ணோ–இவர்கள் சுவனத்திற்குள் நுழைவார்கள், அதிலே அவர்கள் எவ்வித வரம்புகளுமின்றி வாழ்வாதாரங்களைப் பெறுவார்கள்.

*நம்பிக்கை கொண்ட எகிப்தியர் தன்*
*சமூகத்தாருடன் விவாதம் செய்கின்றார்*

41. "என் சமூகத்தாரே, காப்பாற்றப்படுவதற்காக உங்களை நான் அழைக்கும் அதே சமயம், நீங்கள் நரக நெருப்பின் பால் என்னை அழைக்கின்றீர்கள்.

---

**40:34 மெஸையா அவர்களிடம் வந்தபோது, யூதர்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ள மறுத்தனர், முஹம்மத் அவர்களிடம் வந்த போது, கிறிஸ்துவர்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ள மறுத்தனர், மேலும் இன்றைய முஸ்லிம்களில் பெரும்பாலோர் முஹம்மத் இறுதித் தூதர் என்று நம்புகின்றனர். இந்தத் தவறான அடிப்படையில், கடவுளின் உடன்படிக்கைத் தூதரை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர்.* ***3:81–90*** *மற்றும்* ***33:7*** *ஆகியவற்றிலிருந்து, "கடவுளின் உடன்படிக்கைத் தூதர் மீது நம்பிக்கை கொண்டு ஆதரவளிக்க வேண்டும்," என்ற குர்ஆனின் கட்டளையை ஏற்றுக் கொள்ளத் தவறுபவர்கள், நம்பிக்கையாளர்களாக நீடிப்பதில்லை என்று நாம் கற்றுக் கொள்கின்றோம். பார்க்க பின்இணைப்பு* ***2&26.***

***40:34 "இறுதித் தூதர்" என்று கூறுவதற்கு எதிரான தடையுத்தரவுக்கு மிகச்சரியாக நான்கு வசனங்கள் முன்னாலும், அதிலிருந்து நான்கு வசனங்கள் பின்னாலும் "ரஷாத்" என்ற பெயர் அரபி மூலத்தில் காணப்படுவது கவனிக்கத் தக்கதாகும்.*

42. "**கடவுள்**–க்கு நன்றி கெட்டவனாகுமாறும், நான் அறியாத போலித் தெய்வங்களை அவருடன் அமைத்துக் கொள்ளுமாறும் என்னை நீங்கள் அழைக்கின்றீர்கள். நானோ உங்களை எல்லாம் வல்லவர், மன்னிப்பவரின்பால் அழைக்கின்றேன்.

43. "எதனைச் செய்யுமாறு என்னை நீங்கள் அழைக்கின்றீர்களோ அதற்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் எந்த அடிப்படையும் கிடையாது என்பதிலும், நம் இறுதித் திரும்புதல் **கடவுள்**–யிடமே என்பதிலும், மேலும் வரம்புமீறுபவர்கள் நரக நெருப்புக்கு உள்ளாகி விட்டனர் என்பதிலும் ஐயமெதுவும் இல்லை.

44. "இப்போது நான் உங்களிடம் கூறுவதை என்றேனும் ஒரு நாள் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இவ்விஷயத்தின் தீர்ப்பை நான் **கடவுள்**–யிடம் விட்டு விடுகின்றேன்; மக்கள் அனைவரையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்."

45. பின்னர் அவர்களுடைய தீய சூழ்ச்சிகளிலிருந்து **கடவுள்** அவரைக் காப்பாற்றினார், அதேசமயம் ஃபேரோவின் சமூகத்தார் மோசமான தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

*சமாதியில் இருக்கும் பொழுது:*
*தொடர்ச்சியானதொரு தீய கனவு*

46. இரவும் பகலும் நரகம் அவர்களுக்குக் காட்டப்படும், மேலும் உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று: "ஃபேரோவின் சமூகத்தாரை மோசமான தண்டனைக்குள் நுழையச் செய்யுங்கள்."

47. நரகத்தில் அவர்கள் தர்க்கித்தவாறு, பின்பற்றியவர்கள் தங்கள் தலைவர்களிடம் கூறுவார்கள், "நாங்கள் உங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தோம், இந்த நரகத்தின் எந்தப்பகுதியையாவது எங்களிடமிருந்து நீங்கள் விலக்கி விட முடியுமா?"

48. அந்தத் தலைவர்கள் கூறுவார்கள், "நாம் எல்லாரும் ஒன்றாக இதில் இருக்கின்றோம். மக்களுக்கிடையில் **கடவுள்** தீர்ப்பளித்துவிட்டார்."

*மிகவும் தாமதம்*

49. நரக நெருப்பில் இருப்பவர்கள் நரகத்தின் காவலர்களிடம் கூறுவார்கள், "எங்களுக்குத் தண்டனையைக் குறைக்கும்படி உங்கள் இரட்சகரை அழையுங்கள், ஒரு நாளைக்கேனும்."

50. அவர்கள் கூறுவார்கள், "தெளிவான தூதுச் செய்திகளை உங்களிடம் சேர்ப்பித்த உங்களுடைய தூதர்களை நீங்கள் பெறவில்லையா?" அவர்கள் பதிலளிப்பார்கள், "ஆம் நாங்கள் பெற்று கொண்டோம்." அவர்கள் கூறுவார்கள், "பின்னர் *(நீங்கள் விரும்பிய அளவு)* இறைஞ்சிக் கொள்ளுங்கள்; நம்பமறுப்பவர்களின் இறைஞ்சுதல் எப்பொழுதும் வீணானதேயாகும்."

*உத்தரவாதமான வெற்றி;*
*இங்கும் எப்பொழுதும்*

51. மிகவும் நிச்சயமாக, நம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும், இவ்வுலகம் மற்றும் சாட்சிகள் அழைக்கப்படும் அந்த நாள் ஆகிய இரண்டிலும் நாம் வெற்றியைத் தருவோம்.

52. அந்நாளில், நம்பமறுப்பவர்களின் மன்னிப்புக் கோருதல்கள் அவர்களுக்குப் பயனளிக்காது. அவர்கள் கண்டனத்திற்குள்ளாகி விட்டனர்; அவர்கள் மோசமான விதிக்கு உள்ளாகிவிட்டனர்.

*சரித்திரத்திலிருந்து படிப்பினை*
*பெற்றுக் கொள்ளுங்கள்*

53. மோஸஸுக்கு நாம் வழிகாட்டலைத் தந்தோம், மேலும் இஸ்ரவேலின் சந்ததியினரை வேதத்திற்கு வாரிசாக ஆக்கினோம்.

54. அறிவுத் திறனுடையவர்களுக்கு *(அவர்களுடைய வரலாறு)* ஒரு படிப்பினையும் ஒரு நினைவூட்டலுமாகும்.

55. எனவே, பொறுமையுடன் இருப்பீராக, ஏனெனில் **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமேயாகும், மேலும் உம்முடைய பாவத்திற்காக மன்னிப்புக் கேட்பீராக, மேலும் இரவும் பகலும் உம்முடைய இரட்சகரைத் துதிக்கவும் புகழவும் செய்வீராக.

56. நிச்சயமாக, சான்று இன்றி **கடவுள்**–ன் வெளிப்பாடுகளுக்கு எதிராக வாதிப்பவர்கள், தங்கள் நெஞ்சங்களில் மறைக்கப்பட்டுள்ள ஆணவத்தையே வெளிப்படுத்துகின்றார்கள், மேலும் அவர்கள் அதனைப் பற்றி அறியாமலும் இருக்கின்றார்கள். எனவே, **கடவுள்**–யிடம் புகலிடம் தேடுவீராக; அவர்தான் செவியேற்பவர், பார்ப்பவர்.

*பிரபஞ்சத்தின் பிரமிப்பூட்டும் கட்டுமானம்*

57. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பானது மானிடனின் படைப்பை விட இன்னும் அதிக பிரமிப்பூட்டுவதாகும், ஆனால் அதிகமான மக்கள் அறியமாட்டார்கள்.

58. குருடரும் பார்வையுடையவரும் சமமானவர்கள் அல்லர். அன்றி நம்பிக்கை கொண்டு நன்னெறியான காரியம் புரிபவர்கள் பாவிகளுக்குச் சமமானவர்கள் அல்லர். அரிதாகவே நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றீர்கள்.

59. மிக உறுதியாக, வேளை *(தீர்ப்பு நாள்)* வந்து கொண்டிருக்கின்றது, அதைப் பற்றி சந்தேகம் இல்லை, ஆனால் அதிகமான மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை.

*பிரார்த்தனை: வழிபாட்டின் ஒரு வடிவம்**

60. உங்களுடைய இரட்சகர் கூறுகின்றார், "என்னை இறைஞ்சுங்கள், மேலும் நான் உங்களுக்கு மறுமொழியளிப்பேன். நிச்சயமாக, என்னை வழிபடுவதற்கு மிகவும் ஆணவங்கொள்பவர்கள், நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாக எரிகிடங்கிற்குள் நுழைவார்கள்."

61. **கடவுள்**தான் இரவினை அதில் நீங்கள் ஒய்வெடுத்துக் கொள்வதற்காகவும், மேலும் பகலினைப் பிரகாசமானதாகவும் வடிவமைத்தார். மனிதர்கள் மீது **கடவுள்** ஏராளமான ஆசீர்வாதங்களை அருள்கின்றார், ஆனால் அதிகமான மக்கள் நன்றியுடையவர்கள் அல்லர்.

62. உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர், அனைத்துப் பொருட்களின் படைப்பாளர். அவரைத் தவிர தெய்வம் இல்லை. எவ்வாறு நீங்கள் வழிபிசகிச் செல்ல முடியும்?

63. **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை அலட்சியம் செய்பவர்களே வழிபிசகிச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

64. **கடவுள்**தான் பூமியை உங்களுக்கு வசிக்கத்தக்கதாகவும் வானத்தை கட்டுறுதியானதொரு அமைப்பாகவும் ஆக்கினார், மேலும் அவர் உங்களை வடிவமைத்தார், மேலும் உங்களை நன்கு வடிவமைத்தார். அவர்தான் நல்ல வாழ்வாதாரங்களை* உங்களுக்கு வழங்குகின்றவர். உங்கள் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர்; **கடவுள்** மிகவும் உயர்வானவர், பிரபஞ்சத்தின் இரட்சகர்.

65. அவர்தான் ஜீவித்திருப்பவர்: அவரைத் தவிர தெய்வம் இல்லை. உங்களுடைய மார்க்கத்தை அவருக்கு மட்டுமே பரிபூரணமாக அர்ப்பணித்தவாறு, அவரை மட்டுமே நீங்கள் வழிபட வேண்டும். புகழ்ச்சி **கடவுள்**–க்குரியது, பிரபஞ்சத்தின் இரட்சகர்.

*முஹம்மத் மீதான கடவுளின் ஆசீர்வாதத்திற்கு முன்னர் அவர் போலித் தெய்வங்களை வழிபடுபவராக இருந்தார்*

66. கூறுவீராக, "என் இரட்சகரிடமிருந்து தெளிவான வெளிப்பாடுகள் என்னிடம் வந்த பொழுது, **கடவுள்**–வுடன் நீங்கள் வழிபடுகின்ற போலித் தெய்வங்களை வழிபடுவதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன். பிரபஞ்சத்தின் இரட்சகருக்குச் சரணடைய வேண்டுமென நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்."*

67. அவர்தான் உங்களைத் மண்ணிலிருந்து, மேலும் அதன் பின்னர் சிறியதொரு துளியிலிருந்து, பின்னர் தொங்குகின்ற ஒரு கருவிலிருந்து படைத்தார், பின்னர் ஒரு குழந்தையாக உங்களை அவர் வெளிக்கொண்டு வருகின்றார், பின்னர் உங்களை அவர் முதிர்ச்சியடைய விடுகின்றார், பின்னர் நீங்கள் வயதானவர்களாகின்றீர்கள் – உங்களில் சிலர் சீக்கிரத்திலேயே மரணித்து விடுகின்றீர்கள். முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு வயதை நீங்கள் அடைகின்றீர்கள், நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு.

68. அவர்தான் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப்படுத்துகின்ற ஒரே ஒருவர். எந்த ஒன்றும் செய்யப்பட வேண்டுமெனில், அவர் அதனை நோக்கி "ஆகு" என்று மட்டும் கூறுகின்றார், உடனே அது ஆகிவிடுகின்றது.

69. **கடவுள்**–ன் சான்றுகளுக்கு எதிராக வாதிப்பவர்களையும், எவ்வாறு அவர்கள் வழிபிசகி விட்டனர் என்பதையும் நீர் கவனித்தீரா?

70. அவர்கள்தான் வேதத்தையும், மேலும் நம் தூதர்களுடன் நாம் அனுப்பிய தூதுச்செய்திகளையும் நம்பமறுத்து விட்டவர்கள். எனவே, அவர்கள் நிச்சயமாகக் கண்டு கொள்வார்கள்.

71. அவர்களுடைய கழுத்துகளைச் சுற்றித் தளைகள் இருக்கும், மேலும் அவர்களை இழுத்துச் செல்லச் சங்கிலிகள் பயன்படுத்தப்படும்.

**40:60* பொருள் சார்ந்த வசதிகள் உட்பட, எந்த ஒன்றுக்காகவும் பிரார்த்தித்தல், கடவுளை இறைஞ்சுதல், வழிபாட்டின் ஒரு வடிவமாகும். எனவேதான் நமக்கு ஏதேனும் தேவை ஏற்படும் போதெல்லாம் கடவுளை இறைஞ்சும்படிக் கட்டளையிடப்படுகின்றது. ஒருபோதும் எந்த ஒன்றுக்காகவும் ஒரு நாத்திகன் கடவுளை இறைஞ்ச மாட்டான்.*

**40:64* வசனங்கள் 15:20, 20:54, 25:2, மற்றும் 35:12–13 ஆகியவற்றுக்குரிய அடிக்குறிப்புகளை பார்க்கவும்.*

**40:66* இவ்வசனத்தில் பயன்படுத்தப்படும் "நஹா" என்ற அரபி வார்த்தை ஏற்கெனவே நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒன்றைத் தடுத்து நிறுத்துவதையே குறிக்கின்றது. உதாரணத்திற்கு 4:171ல் இதே வார்த்தையை பார்க்கவும். 93:7 ஐயும் பார்க்கவும்.*

72. தீக்கனலிலும்,* பின்னர் நெருப்பிலும், அவர்கள் கருகுவார்கள்.

73. அவர்களிடம் கேட்கப்படும், "நீங்கள் வழிபட்டுக் கொண்டிருந்த தெய்வங்கள் எங்கே,

*அவர்கள் வழிபட்டது ஒன்றுமில்லை*

74. "**கடவுள்**–வுடன் ?" அவர்கள் கூறுவார்கள், "அவர்கள் எங்களைக் கைவிட்டு விட்டனர். உண்மையில், அவர்களை நாங்கள் வழிபட்ட பொழுது, இல்லாத ஒன்றையே நாங்கள் வழிபட்டுக் கொண்டிருந்தோம்." இவ்விதமாகவே **கடவுள்** நம்பமறுப்பவர்களை வழிகேட்டில் அனுப்பி விடுகின்றார்.

75. இது ஏனெனில் பூமியின் மீது நீங்கள் பொய்யான கொள்கைகளில் மகிழ்ந்து கொண்டிருந்தீர்கள், மேலும் நீங்கள் அவற்றை ஆதரித்துக் கொண்டிருந்தீர்கள்.

76. எரிகிடங்கின் வாயில்களில் நுழையுங்கள், அதிலே நீங்கள் என்றென்றும் தங்கியிருப்பீர்கள். ஆணவம் கொண்டவர்களுக்கு என்ன ஒரு துன்பகரமான விதி.

77. பொறுமையுடன் இருப்பீராக, ஏனெனில் **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதாகும். அவர்களுக்கு நாம் வாக்களித்த *(தண்டனையில்)* சிலவற்றை உமக்கு நாம் காட்டினாலும், அல்லது அதற்கு முன்னரே உம்முடைய வாழ்க்கையை முடித்து விட்டாலும், அவர்கள் நம்மிடமே திரும்பக் கொண்டு வரப்படுவார்கள்.

*குர்ஆனின் கணித அற்புதத்திற்குக் கடவுளின் அங்கீகாரம்**

78. உமக்கு முன்னரும் தூதர்களை நாம் அனுப்பியுள்ளோம் – அவர்களில் சிலரை நாம் உமக்கு எடுத்துரைத்தோம், மேலும் சிலரை உம்மிடம் நாம் எடுத்துரைக்கவில்லை. எந்தத் தூதரும் **கடவுள்**–ன் அங்கீகாரமின்றி எந்த அற்புதத்தையும் கொண்டு வர முடியாது.* **கடவுள்**–ன் தீர்ப்பு வெளியிடப்பட்ட வுடன், சத்தியம் மேலோங்கும், மேலும் பொய்யர்கள் வெளிப்படுத்தப்பட்டு இழிவுபடுத்தப்படுவார்கள்.

79. **கடவுள்**தான் உங்களுக்காகக் கால்நடைகளைப் படைத்தவர்; சிலவற்றில் நீங்கள் சவாரி செய்கின்றீர்கள், மேலும் சிலவற்றை நீங்கள் உண்ணுகின்றீர்கள்.

80. அத்துடன் உங்களுடைய பல தேவைகளைத் பூர்த்தி செய்கின்ற கூடுதல் பலன்களையும் அவை உங்களுக்கு வழங்குகின்றன. அவற்றின் மீதும், அவ்வண்ணமே கப்பல்கள் மீதும், நீங்கள் சுமந்து செல்லப்படுகின்றீர்கள்.

81. இவ்விதமாக அவர் தன் சான்றுகளை உங்களுக்குக் காட்டுகின்றார். **கடவுள்**–ன் சான்றுகளில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

82. பூமியைச் சுற்றிப் பார்த்து தங்களுக்கு முன்சென்றவர்களுக்கு நேரிட்ட விளைவுகளைக் அவர்கள் கவனிக்கவில்லையா ? அவர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும், வலிமை மிகுந்தவர்களாகவும், பூமியின் மீது அதிகமான பரம்பரைச் சொத்துக்களைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இருப்பினும், அவர்களுடைய சாதனைகள் அனைத்தும் அவர்களுக்குச் சிறிதளவும் உதவவில்லை.

83. அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளுடன் சென்ற பொழுது, அவர்கள் பாரம்பரியமாகப் பெற்ற அறிவில் அவர்கள் மகிழ்ந்திருந்தனர், மேலும் அவர்கள் பரிகசித்துக் கொண்டிருந்த அதே விஷயங்கள் அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

*கடவுள் மட்டும்*

84. அதன் பின்னர், நம் தண்டனையை அவர்கள் கண்ட போது, அவர்கள் கூறினர், "இப்போது நாங்கள் **கடவுள்** மட்டும் என்பதில் நம்பிக்கை கொள்கின்றோம், மேலும் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருந்த போலித் தெய்வ வழிபாட்டை இப்போது நாங்கள் நிராகரிக்கின்றோம்."

*மிகவும் தாமதம்*

85. நம் தண்டனையை அவர்கள் கண்டுவிட்டவுடன், அவர்களுடைய நம்பிக்கை அப்போது அவர்களுக்குச் சிறிதளவும் உதவிட இயலவில்லை. அவருடைய படைப்புகளை நிர்வகிப்பதற்காக நிலைநாட்டப்பட்டுள்ள **கடவுள்**–ன் வழிமுறை இத்தகையதேயாகும்; நம்பமறுப்பவர்கள் எப்பொழுதும் அழிந்தே போவார்கள்.

**40:72 தங்களைத் தயார் செய்து கொள்ளாதவர்கள், தீர்ப்பு நாளன்று, கடவுளின் வருகையின் போது மிகப் பயங்கரமான துன்பத்தை அடைவார்கள். அவர்களுடைய ஆத்மாக்கள் போதுமான வளர்ச்சியையும் ஊட்டத்தையும் பெறாத காரணத்தால், கடவுளின் அருகாமையை அவர்களால் தாங்க இயலாது. குறிப்பிட்ட இந்தச் சூழ்நிலையை (55:44) வர்ணிக்க "தீக்கனல்" (Inferno) என்பதை நான் பயன்படுத்துகின்றேன். கடவுளால் விதிக்கப்பட்டுள்ள தொடர்புத் தொழுகை போன்ற சடங்குகளின் மூலம் ஆன்மாவின் தயாரிப்பு முழுமையடைகின்றது.*

**40:78 வசனங்கள் 17:45–46,18:57, மற்றும் 56:79 ஆகியவற்றில் இருந்து நம்பமறுப்பவர்கள் குர்ஆனை அடைந்து கொள்ள வழி இல்லை என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம்; நம்பிக்கையாளர்களும் மெய்யான தேடுதல் உடையவர்களும் மட்டுமே அதனைப் புரிந்து கொள்ளக் கடவுளால் அனுமதிக்கப்படுகின்றனர். "மகத்தான அற்புதங்களில் ஒன்றான" (74:30–35) குர்ஆனின் கணிதக் குறியீடு, கடவுளால் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் அவருடைய உடன் படிக்கைத் தூதர் மூலம் வெளிப்படுத்தப்பட்டது (பின் இணைப்பு 2).*

# சூரா 41: விவரிக்கப்பட்டது (ஃபுஸ்ஸிலத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.*

2. மிக்க அருளாளர், மிக்க கருணையாளரிடமிருந்து ஒரு வெளிப்பாடு.

3. அறிந்திருக்கும் மக்களுக்கு, அரபி மொழியிலான தொரு குர்ஆனில், முழுமையான விபரங்களை வழங்குகின்ற வசனங்களைக் கொண்ட ஒரு வேதம்.

4. நற்செய்திகளைத் தாங்கிய ஒன்று, அவ்வண்ணமே எச்சரிக்கும் ஒன்று. ஆயினும், அவர்களில் அதிகமானோர் திரும்பிச்சென்று விடுகின்றனர்; அவர்கள் செவியேற்பதில்லை.

5. அவர்கள் கூறினர், "எங்களுடைய மனங்கள் முடிவெடுத்து விட்டன, உம்முடைய தூதுச் செய்தியின்பால் எங்களுடைய காதுகள் செவிடாகி விட்டன, மேலும் உம்மிடமிருந்து எங்களை ஒரு தடுப்பு பிரித்து வைக்கின்றது. நீர் விரும்பியதைச் செய்து கொள்ளும், அவ்வாறே நாங்களும் செய்வோம்."

6. கூறுவீராக, "உங்கள் தெய்வம் ஒரே தெய்வம் என்று உள்ளுணர்வளிக்கப்பட்டுள்ள நான் உங்களைப் போன்ற ஒரு மானிடன் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. நீங்கள் அவருக்கு அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருக்கவும், மேலும் அவருடைய மன்னிப்பைக் கேட்கவும் வேண்டும். போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களுக்கு கேடுதான்.

7. "*(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்காதவர்கள், மேலும் மறுவுலகத்தைக் குறித்து, அவர்கள் நம்பமறுப்பவர்களாக இருக்கின்றனர்."

8. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்க்கை நடத்துபவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் நன்கு தகுதியானதொரு வெகுமதியைப் பெறுகின்றனர்.

9. கூறுவீராக, "பூமியை இரண்டு நாட்களில்* படைத்த அந்த ஒருவரை நீங்கள் நம்பமறுக்கின்றீர்கள், மேலும் அவரே பிரபஞ்சத்தின் இரட்சகராக இருக்கின்ற போதிலும், அவருடன் சமமாக்க, போலித் தெய்வங்களை நீங்கள் அமைத்துக் கொள்கின்றீர்கள்."

10. அவர் அதன் மீது நிலைப்படுத்திகளை *(மலைகள்)* அமைத்தார், அதனை வளமிக்கதாக ஆக்கினார், மேலும் அதில் வசிப்பவர்கள் அனைவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு, நான்கு நாட்களில் அதன் வாழ்வாதாரங்களை அவர் கணக்கிட்டார்.

11. பின்னர் அவர் வானத்தின் பால் திரும்பினார், அது வரை வாயுவாகவே அது இருந்த போது, அதனிடமும் பூமியிடமும் கூறினார், "விருப்பத்துடனோ அல்லது விருப்பமில்லாமலோ, இருப்பு நிலைக்கு வாருங்கள்." அவை கூறின, "விருப்புடனே நாங்கள் வருகின்றோம்."

12. இவ்விதமாக, அவர்* இரண்டு நாட்களில் ஏழு பிரபஞ்சங்களை முழுமைப்படுத்தினார், மேலும் ஒவ்வொரு பிரபஞ்சத்திற்குமுரிய விதிகளை அமைத்தார். மேலும் மிகக்கீழான பிரபஞ்சத்தை விளக்குகளைக் கொண்டு நாம் அலங்கரித்தோம், மேலும் அதனைச் சுற்றிப் பாதுகாவலர்களை அமைத்தோம். எல்லாம் வல்லவர், அனைத்தையும் அறிந்தவருடைய வடிவமைப்பு இவ்விதமானதாகும்.

### *எச்சரிக்கை*

13. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது கூறுவீராக, "ஆது மற்றும் தமூது ஆகியோரைச் சின்னாபின்னமாக்கிய பேரழிவைப் போன்றதொரு பேரழிவைப் பற்றி உங்களை நான் எச்சரிக்கின்றேன்."

14. "நீங்கள் **கடவுள்**–ஐத் தவிர வழிபாடு செய்ய வேண்டாம்" என்று கூறியவர்களாக, அவர்களிடமும், அவ்வாறே அவர்களுக்கு முன்னரும் அவர்களுக்குப் பின்னரும், அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் சென்றனர். அவர்கள் கூறினர், "எங்கள் இரட்சகர் நாடியிருந்தால், வானவர்களை அவர் அனுப்பியிருக்க முடியும். நீங்கள் கூறுபவற்றை நாங்கள் நம்பமறுப்பவர்களாக உள்ளோம்."

---

**41:1 இந்தக் குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் பொருளுக்கு, 40:1 க்குரிய அடிக்குறிப்பைக் காண்க.*

**41:9–10 படைப்பின் "நாட்கள்" என்பது ஒரு அளவுகோலாகத் திகழ்கின்றது. இவ்விதமாக, இந்தப் பௌதிகப் பிரபஞ்சம் இரண்டு நாட்களில் படைக்கப்பட்டது, அதே சமயம் பூமியின் மீதுள்ள அனைத்துப் படைப்புகளுக்கும் உரிய வாழ்வாதாரங்களைக் கணக்கிட நான்கு நாட்கள் அவசியமானது. இந்த பூமிக் கிரகத்தில் மட்டுமே உயிர்கள் இருக்கின்றன என்பதையும் இது நமக்குக் கற்றுக் கொடுக்கிறது.*

**41:12 கடவுள் மட்டுமே இப்பிரபஞ்சத்தைப் படைத்தார் (18:51), ஆனால் மிகக் கீழே உள்ள இப்பிரபஞ்சத்தில் சில குறிப்பிட்ட பணிகளைக் கையாளுவதற்காக வானவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். நம்முடைய பிரபஞ்சம் கடவுளின் நேரடி வருகையைத் தாங்க இயலாது (7:143). நம்முடைய பிரபஞ்சத்தில் வானவர்களின் பங்கை இப்பன்மைப்பதம் மெய்ப்பிக்கின்றது. (பின் இணைப்பு 10).*

15. ஆதுகளைப் பொறுத்தவரை, அவர்கள் பூமியின் மீது ஆணவங் கொண்டார்கள், சத்தியத்தை எதிர்த்தார்கள், மேலும் கூறினார்கள், "நம்மை விட அதிக வலிமை மிக்கவர்கள் யார்?" அவர்களைப் படைத்தவரான **கடவுள்** அவர்களை விடவும் அதிக வலிமை மிக்கவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா? அவர்கள் நமது வெளிப்பாடுகளைப் நன்றியற்றவர்களாக இருந்தனர்.

16. அதன் விளைவாக, அவர்கள் மீது உக்கிரமான காற்றை ஒரு சில துன்பகரமான நாட்கள் நாம் அனுப்பினோம். இவ்விதமாக நாம் இழிவு தரும் தண்டனையைக் கொண்டு இந்த வாழ்க்கையில் அவர்களை வருத்தினோம், மேலும் மறுவுலகின் தண்டனையோ இன்னும் அதிகமான இழிவு தருவதாகும்; அவர்கள் ஒருபோதும் ஜெயிக்க முடியாது.

17. தமூதுகளைப் பொறுத்த வரை, நாம் அவர்களுக்கு வழிகாட்டலை வழங்கினோம், ஆனால் அவர்கள் வழிகாட்டலை விடவும் குருட்டுத்தனத்தையே விரும்பி எடுத்துக் கொண்டார்கள். அதன் விளைவாக, பெருத்த நாசமுண்டாக்கிய மேலும் அவலம் நிறைந்த தண்டனை அவர்களை அழித்தொழித்தது, அவர்கள் சம்பாதித்தவற்றின் காரணத்தால்.

18. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களை நாம் எப்போதும் காப்பாற்றுகின்றோம்.

19. வலுக்கட்டாயமாக, **கடவுள்**–ன் எதிரிகள் நரக நெருப்பிற்கு வரவழைக்கப்படுகின்ற அந்நாள் வரும்.

20. அவர்கள் அங்கே சென்றடைந்தவுடன், அவர்களுடைய சொந்தச் செவிப்புலன், கண்கள் மற்றும் தோல்கள் அவர்கள் செய்த ஒவ்வொன்றுக்கும் சாட்சி பகர்ந்திடும்.

*வீடியோ பதிவு*

21. அவர்கள் தங்கள் தோல்களிடம் கூறுவார்கள், "ஏன் நீங்கள் எங்களுக்கெதிராகச் சாட்சியம் அளித்தீர்கள்?" அவை பதிலளிக்கும், "**கடவுள்** எங்களைப் பேசச் செய்தார்; அவர்தான் ஒவ்வொன்றையும் பேசச் செய்கின்றார். அவர்தான் உங்களை முதல் முறை படைத்தவர், மேலும் இப்போது நீங்கள் அவரிடமே திரும்பக் கொண்டு வரப்பட்டு இருக்கின்றீர்கள்."

22. உங்களுடைய சொந்தச் செவிப்புலன், உங்களுடைய கண்கள், அல்லது உங்களுடைய தோல்கள் ஆகியவற்றிலிருந்து நீங்கள் மறைத்துக் கொள்ள எந்த வழியுமில்லை. உண்மையில், நீங்கள் செய்கின்றவற்றில் அதிகமானதைக் **கடவுள்** அறியாமல் இருக்கின்றார் என்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்கள்.

23. உங்களுடைய இரட்சகரைப் பற்றிய இவ்வகையான நினைப்பு உங்களை வீழ்ந்து விடச் செய்யும், மேலும் பின்னர் நீங்கள் நஷ்டவாளிகள் ஆகி விடுவீர்கள்.

24. அவர்கள் இருக்கின்ற வழியிலேயே அவர்கள் தொடர்ந்து சென்றால், நரகமே அவர்களுடைய விதியாக இருக்கும், மேலும் அவர்கள் பிழை பொறுக்கக் கோரினாலும், அவர்கள் பிழை பொறுக்கப்பட மாட்டார்கள்.

*ஜின் கூட்டாளிகள்*

25. அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் அவர்களுடைய கண்களில் அலங்காரமாக்கும் கூட்டாளிகளை அவர்கள் பால் நாம் நியமிக்கின்றோம். இவ்விதமாக, முந்திய சமூகங்களின் ஜின்கள் மற்றும் மனிதர்களுக்கு நேர்ந்ததைப் போன்ற அதே விதிக்கு அவர்கள் உள்ளாவதில் சென்று முடிவார்கள். அவர்களும் நஷ்டவாளிகளாகவே இருந்தனர்.

26. நம்பமறுப்பவர்கள் கூறினர், "இந்தக் குர்ஆனை கவனித்துக் கேட்காதீர்கள், மேலும் நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அதனைச் சிதைத்து விடுங்கள்."

27. நிச்சயமாக நாம் இந்த நம்பமறுப்பவர்களைக் கடுமையானதொரு தண்டனையைக் கொண்டு வருத்துவோம். நிச்சயமாக அவர்களுடைய தீய காரியங்களுக்குரிய கூலியை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்போம்.

28. **கடவுள்**–ன் விரோதிகளுக்காகக் காத்திருக்கும் கூலி இத்தகையதேயாகும். நரகம்தான் அவர்களுடைய நிரந்தரமான தங்குமிடமாக இருக்கும்; நம்முடைய வெளிப்பாடுகளைக் கைவிட்டதற்கான ஒரு நியாயமான கூலி.

*தீர்ப்பு நாளன்று*

29. நம்பமறுப்பவர்கள் கூறுவார்கள், "எங்கள் இரட்சகரே, எங்களை வழிதவறச் செய்த இரு வகையினரில் உள்ளவர்களை – ஜின்கள் மற்றும் மானிடர்கள் – எங்கள் பாதங்களுக்குக் கீழே போட்டு நசுக்கி, மேலும் அவர்களை மிகக் கீழானவர்களாக ஆக்கி விடுவதற்காக, அவர்களை எங்களுக்குக் காட்டுவீராக."

*பூரணமான மகிழ்ச்சி:*
*இப்பொழுதும் எப்பொழுதும்*

30. "**கடவுள்**தான் எங்கள் இரட்சகர்," எனப் பிரகடனம் செய்து, பின்னர் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற அவர்கள் மீது வானவர்கள் இறங்குகின்றனர்: "நீங்கள் அச்சம் எதுவும் கொள்ள வேண்டாம், அன்றி நீங்கள் துக்கப்படவும் வேண்டாம். சுவனம் உங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற நற்செய்தியில் மகிழ்ச்சியடையுங்கள்.

31. "இந்த வாழ்விலும் மறுவுலகிலும் நாங்கள் உங்களுடைய தோழர்களாக இருக்கின்றோம். அதிலே நீங்கள் ஆசைப்படும் எதுவும் உங்களுக்குக் கிடைக்கும்; நீங்கள் விரும்புகின்ற எதுவும் உங்களுக்குக் கிடைக்கும்.

32. "*(இவ்விதமானது உங்களுடைய)* இறுதித் தங்குமிடம், மன்னிக்கின்ற ஒருவர், மிக்க கருணையாளரிடமிருந்து."

*சரணடைந்தோர்*

33. **கடவுள்**–ன் பால் அழைத்து, மேலும் நன்னெறியான காரியங்கள் செய்து, மேலும், "நான் சரணடைந்தவர்களில் ஒருவன்," என்று கூறும் ஒருவரை விட, நல்ல வார்த்தைகளை உதிர்க்க எவரால் இயலும் **?**

34. நல்ல நடத்தையும் கெட்ட நடத்தையும் சமமானவையல்ல. இயன்றவரை மிகச் சிறந்த நடத்தையைக் கைக்கொள்ள நீங்கள் வேண்டும். இதன் மூலமாக, உங்களுடைய விரோதியாக இருந்து வந்த ஒருவனும், உங்களுடைய மிகச் சிறந்த நண்பனாகி விடக்கூடும்.

35. உறுதியோடு தொடர்ந்திருப்பவர்களைத் தவிர எவரும் இதனை அடைந்து விட முடியாது. மகத்தான நற்பேறு பெற்றவர்களைத் தவிர எவரும் இதனை அடைந்து விட முடியாது.

*சாத்தான் உங்களைத் தூண்டும் போது*

36. சாத்தான் உங்களிடம் ஒரு யோசனையைக் கிசுகிசுத்தால், நீங்கள் **கடவுள்**–யிடம் புகலிடம் தேட வேண்டும். அவர்தான் செவியேற்பவர், அனைத்தையும் அறிந்தவர்.

*கடவுளின் சான்றுகள்*

37. இரவும் பகலும், மேலும் சூரியனும் சந்திரனும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். சூரியன் முன்னிலையிலோ அன்றிச் சந்திரனுக்கோ சிரம் பணியாதீர்கள்; நீங்கள் மெய்யாகவே அவரை மட்டும் வழிபட்டால், அவற்றைப் படைத்த **கடவுள்**–ன் முன்னிலையில்தான் நீங்கள் சிரம்பணிந்து விழ வேண்டும்.

38. இதனைச் செய்வதற்கு அவர்கள் மிகவும் ஆணவம் கொண்டவர்களாக இருந்தால், பின்னர் உம் இரட்சகரிடத்தில் இருப்பவர்கள், எப்பொழுதும் சோர்வடையாது இரவும் பகலும் அவரைத் துதி செய்கின்றனர்.

39. நிலமானது அசைவற்று இருப்பதை நீர் காண்பதும், பின்னர், அதன் மீது நாம் தண்ணீரைப் பொழிந்தவுடன், அது உயிர் கொண்டு துளிர்ப்பதும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். நிச்சயமாக, அதனை உயிர்ப்பித்தவரால் இறந்தவர்களை உயிர்ப்பிக்க இயலும். அவர் சர்வ சக்தியுடையவர்.

40. நிச்சயமாக, நம்முடைய வெளிப்பாடுகளைச் சிதைப்பவர்கள் நம்மை விட்டும் ஒளிந்தவர்களாக இல்லை. நரகத்தில் வீசப்படுகின்ற ஒருவன் மேலானவனா, அல்லது உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று பாதுகாப்புடன் வருகின்ற ஒருவரா **?** நீங்கள் விரும்பிய எதையும் செய்து கொள்ளுங்கள்; நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் பார்ப்பவராக அவர் இருக்கின்றார்.

*குர்ஆனின் கணித அற்புதம்**

41. குர்ஆனின் சான்றானது* அவர்களிடம் வந்த பொழுது அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள், கண்ணியமானதொரு புத்தகத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களாகி விட்டனர்.

42. கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ எந்தப் பொய்மையும் அதில் நுழைந்திட முடியாது; * ஞானம் மிகுந்தவர், புகழுக்குத் தகுதியானவரிடமிருந்து வந்த ஒரு வெளிப்பாடு.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

43. முந்திய தூதர்களுக்கு என்ன கூறப்பட்டதோ அதுவே துல்லியமாக உமக்கும் கூறப்பட்டுள்ளது. உம்முடைய இரட்சகரிடம் மன்னிப்பு உள்ளது, அத்துடன் அவரிடம் வலி நிறைந்த தண்டனையும் கூட உள்ளது.

---

**41:41 "திக்ர்" எனும் வார்த்தை, 38:1–ல் தெளிவாக்கப்பட்டுள்ளபடி, குர்ஆனின் கணிதக் குறியீட்டைக் குறிக்கின்றது.*

**41:42 குர்ஆனுடைய கணித அற்புதத்தின் தலையாய பணிகளில் ஒன்று, குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு அம்சத்தையும் பாதுகாப்பதாகும். இவ்விதமாக, எந்த சிதைத்தலும் உடனடியாக அடையாளம் காணப்பட்டு விடுகின்றது. (பின் இணைப்புகள் 1 & 24).*

**41:43 இவ்வசனம் கடவுளின் உடன்படிக்கைத் தூதரைக் குறிக்கின்றது என்று கணிதச் சான்று நிரூபிக்கின்றது. "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (505), "கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (725), இந்த வசன எண்ணையும் (43) நாம் கூட்டினால், நமக்குக் கிடைப்பது, 505 + 725 + 43 = 1273 = 19 x 67. பார்க்க பின் இணைப்பு 2.*

*மொழி ஒரு பொருட்டல்ல*

44. அரபி மொழி அல்லாத குர்ஆனாக நாம் இதனை ஆக்கியிருப்போமாயின், அவர்கள் கூறியிருப்பார்கள், "ஏன் இது அந்த மொழியில் இறங்கி வந்தது ?" அது அரபி மொழியோ அல்லது அரபி மொழி அல்லாததோ, கூறுவீராக, "நம்பிக்கை கொண்டவர்களுக்கு, இது ஒரு வழிகாட்டலும் நிவாரணமும் ஆகும். நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் மிகத் தொலைவிலிருந்து உரையாற்றப்படுவதைப் போன்று, இதன்பால் அவர்கள் செவிடர்களாகவும் குருடர்களாகவும் இருப்பார்கள்."

45. மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம், ஆனால் அதுவும் தர்க்கித்துக் கொள்ளப்பட்டது. உம்முடைய இரட்சகரின் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட தீர்மானம் இல்லாதிருந்தால், அவர்கள் உடனடியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார்கள். உண்மையில், அவர்கள் மிகவும் ஏராளமான ஐயங்களைத் தாங்கியிருக்கின்றனர்.

46. நன்னெறியான காரியங்கள் புரிகின்ற எவராயினும், தன் சொந்த நலனுக்காகவே அவ்வாறு செய்கின்றார், மேலும் தீமைகளைப் புரிகின்ற எவராயினும் தனக்கே கேடாகத்தான் அவ்வாறு செய்கின்றார். உம்முடைய இரட்சகர் ஒருபோதும் மக்களின்பால் அநீதி இழைப்பவர் அல்லர்.

*போலித் தெய்வங்கள் தங்களைப்*
*பின்பற்றியவர்களைக் கைவிட்டு விடுகின்றன*

47. வேளை *(உலகத்தின் முடிவு)** பற்றிய அறிவு அவரிடமே உள்ளது. அவருடைய அறிவு இல்லாமல், பழங்கள் எதுவும் அவற்றின் பாளைகளிலிருந்து வெளிவருவதில்லை, அன்றி எந்தப் பெண்ணும் கருத்தரிப்பதோ அல்லது பிரசவிப்பதோ இல்லை. அவர்களை அவர் வினவுகின்ற அந்நாள் வரும்: "என்னுடன் நீங்கள் அமைத்துக் கொண்ட அந்த போலித் தெய்வங்கள் எங்கே ?" அவர்கள் கூறுவார்கள், "எங்களில் எவருமே அதற்குச் சாட்சி கூறுபவர்கள் இல்லை என்று நாங்கள் உம்மிடம் பிரகடனிக்கின்றோம்."

48. அவர்கள் இணைவழிபாடு செய்த அந்தப் போலித் தெய்வங்கள் அவர்களைக் கைவிட்டு விடும், மேலும் விடுதலை இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

*கஷ்ட காலத்தில் நண்பர்கள்*

49. நல்ல விஷயங்களுக்காக இறைஞ்சுவதில் மானிடன் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால் அவனுக்குத் துன்பங்கள் நேரிட்டால், அவன் மனத் தளர்ச்சியடைந்தவனாகவும், நிராசையடைந்தவனாகவும் ஆகிவிடுகின்றான்.

50. மேலும், சில துன்பங்களை அனுபவித்த பின்னர் அவனை நாம் ஆசீர்வதித்தால், அவன் கூறுகின்றான், "இது எனக்குரியதே ஆகும். வேளை எப்பொழுதேனும் நிகழ்ந்தேறும் என்று நான் நம்பவில்லை. என் இரட்சகரிடம் நான் திருப்பப்பட்டாலும் கூட, அவரிடமும் நான் மேலானவற்றையே அடைவேன்." மிகவும் உறுதியாக, அவர்களுடைய அனைத்துக் காரியங்களைப் பற்றியும் நம்பமறுப்பவர்களுக்கு நாம் தெரிவிப்போம், மேலும் கடுமையான தண்டனைக்கு அவர்களை உட்படுத்துவோம்.

51. மானிடனை நாம் ஆசீர்வதிக்கும் போது, அவன் திரும்பிச் செல்கின்றான், மேலும் தூரத்திலும் தூரமாகத் தள்ளிச் சென்று விடுகின்றான், மேலும் அவன் ஏதேனும் துன்பத்தால் கஷ்டமடைந்தால், அவன் உரத்த குரலில் இறைஞ்சுகின்றான்.

52. பிரகடனம் செய்யுங்கள்: "இது மெய்யாகவே **கடவுள்–**யிடமிருந்து வந்ததாக இருந்து, பின்னர் அதனை நீங்கள் ஏற்கமறுப்பதென முடிவு செய்து விட்டால் ? இதனை எதிர்ப்பதென முடிவெடுத்து விட்டவர்களை விட மிக நெடிய வழிகேட்டில் இருப்பவர்கள் யார் ?"

*ஒரு மாபெரும் முன்னறிவிப்பு**

53. விளிம்புகளிலும், மேலும் அவர்களுக்குள்ளேயும், இது சத்தியம்தான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் வரை நமது சான்றுகளை நாம் அவர்களுக்குக் காட்டுவோம்.* அனைத்து விஷயங்களுக்கும் ஒரு சாட்சியாக, உம்முடைய இரட்சகர் போதுமானவர் அல்லவா ?

54. உண்மையில், தங்கள் இரட்சகரைச் சந்திப்பதைக் குறித்து அவர்கள் சந்தேகத்துடன் இருக்கின்றனர். அனைத்து விஷயங்களையும் அவர் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

****

## சூரா 42: ஆலோசனை (அல்–ஷூரா)

கடவுளின் பெயரால் ,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

**41:47 கடவுள் தன் உடன்படிக்கைத் தூதரின் மூலம் இந்த அறிவை வெளிப்படுத்தியுள்ளார் (பின் இணைப்பு 25).*

**41:53 இவ்வசனம் 19 எழுத்துகளால் இயற்றப்பட்டுள்ளது, மேலும் அவற்றின் எழுத்தெண் மதிப்புகளின் கூட்டுத் தொகை 1387 ஆகும், 19 x 73. 9:33, 48:28, 61:9, & 110:2 ஆகியவற்றுடன், இந்த மாபெரும் முன்னறிவிப்பு, மாற்றமேதும் செய்யப்படாத கடவுளின் தூதுச் செய்தியாக முழு உலகமும் குர்ஆனை ஏற்றுக் கொள்ளும் என விதிக்கப்பட்டுள்ளது என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது (பார்க்க பின் இணைப்பு 38).*

1. ஹ்ஹ. ம.*

2. ‘அ. ச. க.*

3. உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும், உள்ளுணர்வளிப்பது **கடவுள்** ஆகும், எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

4. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும், மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் அவருக்குரியது, மேலும் அவர் மிக உயர்ந்தவர், மகத்தானவர்.

5. அவர்களுக்கு மேலே வானங்கள், அவர் மீதுள்ள பக்தியின் காரணத்தால், ஏறத்தாழ வெடித்துப் பிளந்து விடுகின்றது, மேலும் வானவர்கள் தங்கள் இரட்சகரைப் புகழ்ந்து துதிக்கின்றனர், மேலும் பூமியில் உள்ளவர்களுக்காக அவர்கள் பாவமன்னிப்புக் கேட்கின்றனர். நிச்சயமாக, **கடவுள்**தான் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

6. அவருடன் மற்ற எஜமானர்களை அமைத்துக் கொள்பவர்கள், **கடவுள்**தான் அவர்களுடைய பொறுப்பாளராக இருக்கின்றார்; நீர் அவர்களுடைய வழக்குரைஞர் அல்லர்.

7. மையமான சமூகத்தையும் அதனைச் சுற்றியுள்ள அனைவரையும் எச்சரிப்பதற்காக, மேலும் தவிர்த்து விட முடியாத அந்த ஒன்று திரட்டும் நாளைப் பற்றி எச்சரிப்பதற்காக, அரபியிலானதொரு குர்ஆனை இவ்விதமாக நாம் உமக்கு வெளிப்படுத்துகின்றோம். சிலர் சுவனத்தைச் சென்றடைவார்கள், இன்னும் சிலர் நரகத்தை.

8. **கடவுள்** நாடியிருந்தால், அவர்களை ஒரே சமுதாயமாக அவர் ஆக்கியிருக்க முடியும். ஆனால் தான் நாடுகின்ற எவரையும் தன் கருணைக்குள் அவர் மீட்டுக் கொள்கின்றார். வரம்புமீறுபவர்களைப் பொறுத்த வரை, அவர்களுக்கு அதிபதியோ அன்றி ஓர் உதவியாளரோ கிடையாது.

9. அவருடன் வேறு எஜமானர்களை அவர்கள் கண்டு விட்டனரா? **கடவுள்**தான் ஒரே எஜமானரும் அதிபதியும் ஆவார். அவர்தான் இறந்தவர்களை உயிர்த்தெழுப்புகின்றார், மேலும் அவர்தான் சர்வ சக்தியுடையவர்.

10. இந்த தூதுச்செய்தியின் எந்தப் பகுதியையேனும் நீங்கள் தர்க்கித்துக் கொண்டால், இதனைச் செய்ததற்குரிய தீர்ப்பு **கடவுள்**–யிடமே உள்ளது. என் இரட்சகரான **கடவுள்** இவ்விதமானவர். அவர் மீது நான் பொறுப்பேற்படுத்துகின்றேன், மேலும் அவருக்கே நான் சரணடைகின்றேன்.

*கடவுளுக்கு நிகர் எவருமில்லை*

11. வானங்கள் மற்றும் பூமியின் ஆரம்பகர்த்தா. உங்களிலிருந்தே வாழ்க்கைத் துணைகளை அவர் உங்களுக்காக படைத்தார்–அத்துடன் விலங்குகளுக்கும் கூட. இவ்விதமாக அவர் இனப்பெருக்கத்திற்குரிய வழிமுறைகளை உங்களுக்கு வழங்குகின்றார். அவருக்கு நிகராக எந்த ஒன்றும் இல்லை. அவர்தான் செவியேற்பவர், பார்ப்பவர்.

12. வானங்கள் மற்றும் பூமியின் பூரண கட்டுப்பாடு அவருக்கே உரியது. தான் நாடுகின்ற எவருக்கும் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதோ அல்லது குறைப்பதோ அவர்தான். அனைத்து விஷயங்களையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*மார்க்கம் ஒன்றே ஒன்றுதான்*

13. நோவாவுக்கு விதிக்கப்பட்ட அதே மார்க்கத்தைத் தான் அவர் உங்களுக்கும் விதித்துள்ளார், மேலும் நாம் உமக்கு உள்ளுணர்வளித்ததும், ஆப்ரஹாம், மோஸஸ் மற்றும் ஜீஸஸுக்கு விதித்ததுமாவது: "இந்த ஒரு மார்க்கத்தை நீங்கள் ஆதரிக்க வேண்டும், மேலும் அதனைப் பிரித்து விடாதீர்கள்."

*ஏகத்துவவாதிகளுக்கெதிராக*
*போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள்*

அவர்கள் எதனைச் செய்ய வேண்டுமென்று நீர் அழைக்கின்றீரோ அதன்பால் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் பெரும் சீற்றம் அடைவார்கள். தான் நாடுகின்ற எவரையும் **கடவுள்** தன்பால் மீட்டுக் கொள்கின்றார். முற்றிலும் சரணடைந்தவர்களை மட்டுமே அவர் தன்பால் வழிநடத்துகின்றார்.

14. முரண் நகையாக, அவர்களிடம் அறிவு வந்ததற்குப் பின்னர்தான் தங்களுக்கிடையே பொறாமை மற்றும் சீற்ற உணர்வின் காரணமாக, அவர்கள் பிரிவுகளாகச் சிதறிப் போனார்கள். வரையறுக்கப்பட்டதொரு தவணைவரை அவர்களுக்கு அவகாசமளிப்பதெனஉம் இரட்சகரிடமிருந்து முன்னரே நிர்ணயிக்கப்பட்டதொரு தீர்மானம் இல்லாதிருந்தால், அவர்கள் உடனடியாகத் தீர்ப்பளிக்கப் பட்டிருப்பார்கள். உண்மையில், வேதத்திற்கு வாரிசுகளான பிந்திய தலைமுறையினர் முற்றிலும் ஐயங்களுடனே இருக்கின்றனர்.

**42:1 இந்த துவக்க எழுத்துகள் குர்ஆனுடைய அற்புதத்தின் முக்கியமானதொரு அங்கமாக அமைகின்றது. (40:1ன் அடிக் குறிப்பு).*

**42:2 ‘அ.ச.க. (‘அயன் ஸீன் காஃப்), என்ற இந்த துவக்க எழுத்துகளை இந்த ஒரு அத்தியாயத்தில் மட்டுமே நாம் காண்கின்றோம், மேலும் இந்த சூராவில் இந்த மூன்று எழுத்துகளும் இடம்பெறும் மொத்த எண்ணிக்கை 209, 19 x 11 ஆகும். அத்துடன் "க" என்ற இந்த எழுத்து இந்த சூராவில் 57 முறை, 19 x 3 இடம் பெறுகின்றது. "க" என்ற இந்த துவக்க எழுத்தை நாம் காணும் வேறு ஒரே சூரா, சூரா 50 ஆகும், மேலும் அந்த சூராவிலும் இந்த எழுத்து 57 முறைதான் இடம் பெறுகின்றது (பார்க்க பின் இணைப்பு1).*

*கிறிஸ்துவர்கள் மற்றும் யூதர்களுக்குரிய தூதுச்செய்தி*

15. இதனைத்தான் நீர் பிரச்சாரம் செய்ய வேண்டும், மேலும் செய்துவர வேண்டுமென உமக்கு கட்டளை யிடப்பட்டவற்றை உறுதிப்பாட்டுடன் கடைப்பிடிப் பீராக, மேலும் அவர்களுடைய ஆசைகளைப் பின் பற்றாதீர். மேலும் பிரகடனிப்பீராக: "**கடவுள்**–ஆல் இறக்கி அனுப்பப்பட்ட அனைத்து வேதங்களிலும் நான் நம்பிக்கை கொள்கின்றேன். உங்களுக்கிடை யில் நியாயமாகத் தீர்ப்பளிக்க வேண்டுமென நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். **கடவுள்**தான் எங்களு டைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகருமாவார். எங்களுடைய செயல்கள் எங்களுக்கு, மேலும் உங் களுடைய செயல்கள் உங்களுக்கு. எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் எந்தத் தர்க்கமும் இல்லை. **கடவுள்** நம் அனைவரையும் ஒன்றாகத் திரட்டுவார்; இறுதி விதி அவரிடமே உள்ளது."

16. எவர்கள் அவருடைய தூதுச் செய்தியைப் பெற்ற பின்னர், **கடவுள்**–ஐப் பற்றித் தர்க்கிக்கின்றனரோ, அவர்களுடைய தர்க்கம் அவர்களுடைய இரட்சகரி டத்தில் செல்லாததாக ஆக்கப்பட்டு விட்டது. அவர் கள் கண்டனத்திற்கு உள்ளாகி விட்டனர், மேலும் கடுமையானதொரு தண்டனைக்குத் தகுதியாகி விட்டனர்.

17. **கடவுள்**தான் சத்தியத்தையும் சட்டத்தையும் சேர்ப் பிப்பதற்காக, வேதத்தை இறக்கி அனுப்பியவர். நீங் கள் அறிந்துள்ள அனைத்தின்படியும், வேளை *(தீர்ப்பு நாள்)* மிக அருகில் இருக்கக்கூடும்.

*நம்பிக்கையாளர்கள் தீர்ப்பு நாள் பற்றி கவனத்துடன் இருக்கின்றனர்*

18. அதன்மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள்தான் அதற்கு எதிராக அறைகூவல் விடுகின்றனர். நம்பிக்கை கொண்டோரைப் பொறுத்தவரை, அவர்கள் அதனைக் குறித்துக் கவலையுற்றவர்களாக இருக்கின்றனர், மேலும் அது சத்தியம்தான் என்பதை அவர்கள் அறி வார்கள். நிச்சயமாக, வேளையை மறுப்பவர்கள் மிக நெடிய வழிகேட்டில் சென்று விட்டனர்.

19. **கடவுள்** தன்னுடைய அனைத்துப் படைப்புகளையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்; தான் நாடுகின்ற எவருக்கும் அவர் வழங்குகின்றார். அவர்தான் சக்தி மிக்கவர், எல்லாம் வல்லவர்.

20. எவர் மறுமையின் வெகுமதிகளைத் தேடுகின்றாரோ, அவருடைய வெகுமதிகளை நாம் பெருகும்படிச் செய்கின்றோம். மேலும் எவர் இவ்வுலகப் பொருட் களைத் தேடுகின்றாரோ, அவருக்கு அதிலிருந்து நாம் வழங்குகின்றோம், பின்னர் மறுவுலகில் அவர் எந்தப் பங்கையும் பெற்றுக் கொள்ள மாட்டார்.

*போலித்தெய்வங்கள்: புதிய மார்க்கச் சட்டங்களை உருவாக்குகின்றன**

21. **கடவுள்**–ஆல் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாத மார்க்கச் சட்டங்களை அவர்களுக்கு விதிக்கின்ற போலித் தெய்வங்களை அவர்கள் பின்பற்றுகின்றனர். முன்னரே நிர்ணயிக்கப்பட்ட தீர்மானம் இல்லாதிருந் தால், அவர்கள் உடனடியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப் பார்கள். உண்மையில், வரம்புமீறுபவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.*

22. அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் கவலை யுற்றவர்களாக வரம்புமீறுபவர்களை நீர் காண்பீர்; ஒவ்வொன்றும் திரும்பி வந்து அவர்களை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யும். நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்தியவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் சுவனத்தின் தோட்டங் களில் இருப்பார்கள். அவர்கள் விரும்புகின்ற எதனை யும் அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்கள் பெறுவார்கள். இதுவே மகத்தான ஆசீர்வாதமாகும்.

23. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்ற தன் ஊழியர்களுக்குக் **கடவுள்**–யிட மிருந்துள்ள நற்செய்தி இதுவேயாகும். கூறுவீராக, "உங்களிடம் நான் எந்தக் கூலியும் கேட்கவில்லை. உங்களுடைய சொந்த உறவினர்களைப் பற்றி அக் கறை எடுத்துக் கொள்ளுங்கள் என்றே உங்களில் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்கின்றேன்." எவரொருவர் ஒரு நன்னெறியான காரியத்தைப் புரிகின்றாரோ, அதற்குரிய வெகுமதியை அவருக்கு நாம் பெருக்குவோம். **கடவுள்** மன்னிப்பவர், நன்றி பாராட்டுபவர்.

---

**42:21* *இன்றைய முஸ்லிம் உலகின் இஸ்லாமானது ஒரு சாத்தானிய மார்க்கமாகி விட்ட அளவுக்கு மிகவும் சிதைக்கப்பட்டு விட்டது. உலமாக்கள், அதாவது மார்க்க அறிஞர்கள் கடவுளால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாத, சம்பந்தமில்லாத சட்டங் கள், தடைகள், ஆடைக் கட்டுப்பாடுகள், உணவுக் கட்டுப்பாடுகள் மற்றும் மார்க்க அனுஷ்டானங்களைச் சேர்த்து விட்டனர். கடவுளின் உடன்படிக்கைத் தூதரை அனுப்புவதற்கான முக்கியக் காரணங்களில் இதுவும் ஒன்றாகும். **(9:31, 33:67,** மற்றும் பின் இணைப்பு **33).***

*கடவுள் பொய்மையை அகற்றி சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றார்**

24. "**கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களை அவர் *(ரஷாத்)** புனைந்து கொண்டார்!" என்று அவர்கள் கூறுகின்றனரோ? **கடவுள்** நாடியிருந்தால், உம்முடைய மனத்தை அவர் முத்திரையிட்டிருக்க இயலும், ஆனால் **கடவுள்** பொய்மையை அகற்றுவதுடன் தன்னுடைய வார்த்தைகளால் சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றார். உள்ளார்ந்த எண்ணங்களை அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

25. அவர்தான் தன்னுடைய ஊழியர்களிடமிருந்து வருந்துதலை ஏற்றுக் கொள்கின்றவர், மேலும் பாவங்களை மன்னிக்கின்றவர். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

26. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்கள் தான் அவருக்கு மறுமொழி அளிக்கின்றனர். தன்னுடைய ஆசிகளை அவர்கள் மீது அவர் பொழிவார். நம்பமறுப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் கடுமையானதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

27. **கடவுள்** தன்னுடைய ஊழியர்களுக்கு வாழ்வாதாரத்தை அதிகரித்தால், பூமியில் அவர்கள் வரம்புமீற விழைவார்கள். இதன் காரணமாகவே அவர் தான் நாடுகின்ற எவருக்கும் மிகச் சரியாக அளவிட்டு அதனை அனுப்புகின்றார். தன்னுடைய ஊழியர்களை முற்றிலும் நன்கறிந்தவராகவும் பார்ப்பவராகவும் அவர் இருக்கின்றார்.

28. அவர்தான் அவர்கள் விரக்தியுற்ற பின்னர் மழையை இறக்கி அனுப்புகின்றார், மேலும் தன் கருணையைப் பரப்புகின்றார். அவர்தான் ஒரே எஜமானர், மிகுந்த புகழுக்குத் தகுதியானவர்.

29. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பும், அவற்றில் அவர் பரப்புகின்ற உயிரினங்களும் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும். தான் நாடும் போது, அவற்றை ஒன்று திரட்ட அவர் ஆற்றலுடையவர்.

*ஒரு பின்விளைவு மட்டுமே*

30. உங்களுக்கு நேரிடும் எந்த ஒரு கெட்டதும் உங்களுடைய சொந்தச் செயல்களின் பின்விளைவேயாகும். மேலும் *(உங்களுடைய பாவங்களில்)* அதிகமானவற்றை அவர் பிழை பொறுத்துக் கொள்கின்றார்.

31. நீங்கள் ஒருபோதும் தப்பித்து விட முடியாது, மேலும் **கடவுள்**–வுடன் ஓர் இரட்சகராகவும் அதிபதியாகவும் உங்களுக்கு எவரும் கிடையாது.

32. கொடிகளைப் போன்ற பாய்மரங்களுடன் கடலில் மிதந்து செல்லும் கப்பல்கள் அவருடைய சான்றுகளில் உள்ளவையாகும்.

33. அவர் நாடியிருந்தால், நீரின் மேல் அவை இயங்காது விட்டு விடும் வண்ணம், காற்றுகளை அசைவற்றதாக ஆக்கியிருக்க அவரால் இயலும். உறுதிப்பாடு உடையவர்களாகவும், நன்றியுடையவர்களாகவும் இருப்பவர்களுக்கு இவை சான்றுகளாகும்.

34. அவர்களுடைய சொந்தச் செயல்களின் பின்விளைவாக, அவர்களை அவர் அழித்தொழித்து விட இயலும். மாறாக, *(அவர்களுடைய பாவங்களில்)* அதிகமானவற்றை அவர் பிழைபொறுத்துக் கொள்கின்றார்.

35. நம்முடைய சான்றுகளுக்கெதிராக வாதிடுபவர்கள் தங்களுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதைக் கண்டு கொள்வார்கள்.

36. உங்களுக்குக் கொடுக்கப்பட்டது எதுவாயினும், இவ்வுலகின் தற்காலிகப் பொருள் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. தங்கள் இரட்சகர் மீது நம்பிக்கை கொண்டு மேலும் பொறுப்பேற்படுத்துபவர்களுக்கு, **கடவுள்** வசம் இருப்பவை மிகவும் மேலானதும் நிலைத்திருப்பதுமாகும்.

*நம்பிக்கையாளர்களின் பண்புகள்*

37. அவர்கள் பெரும் பாவங்களையும் ஒழுக்கக்கேட்டையும் தவிர்த்துக் கொள்வார்கள், மேலும் அவர்கள் கோபம் கொண்டால் மன்னித்து விடுவார்கள்.

38. *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தங்களுடைய இரட்சகருக்கு அவர்கள் மறுமொழியளிக்கின்றனர். அவர்களுடைய காரியங்கள்அவர்களுக்கிடையில் உரிய கலந்தாலோசனைக்குப் பின்னர் தீர்மானிக்கப்படுகின்றன. மேலும் நம்முடைய வாழ்வாதாரங்களில் அவர்களுக்கு உரியதில் இருந்து அவர்கள் *(தர்மம்)* கொடுப்பார்கள்.

39. அவர்களுக்கு மிகப்பெரும் அநீதி இழைக்கப்பட்டால், தங்களுடைய உரிமைகளுக்காக அவர்கள் எழுந்து நிற்பார்கள்.

40. ஓர் அநியாயத்திற்குரிய நியாயமான பதிலடி அதற்குச் சமமானதொரு தண்டனையாக இருப்பினும், பிழை பொறுத்துவிட்டு மேலும் நன்னெறியைப் பராமரிப்பவர்கள் **கடவுள்**–ஆல் வெகுமதியளிக்கப்படுகின்றனர். அநியாயக்காரர்களை அவர் நேசிப்பதில்லை.

**42:24 நம்பமறுப்பவர்கள் தங்களுடைய போலித் தெய்வமான நபி முஹம்மதின் ஞாபகார்த்தமாக 9வது சூராவின் இறுதியில் 2 போலி வாசகங்களைச் சேர்த்தனர். இந்த இறைநிந்தனையை அகற்றி சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக மூழ்கடிக்கும் ஆதாரங்களைக் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். "ரஷாத் கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (1230), வசன எண்ணை (24) நாம் கூட்டினால், நமக்குக் கிடைக்கப் பெறுவது 1254, 19 X 66 (தயவு செய்து விபரங்களுக்கு பின் இணைப்பு 2 & 24 ஐப் பார்க்கவும்).*

41. நிச்சயமாக, தங்களுக்கு அநியாயம் நேரிடும் பொழுது, தங்களுடைய உரிமைகளுக்காக எழுந்து நிற்பவர்கள் எந்தத் தவறும் செய்து விடவில்லை.

42. மக்களை அநீதமாக நடத்துவதுடன், தூண்டுதலின்றி வம்பு செய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் தான் அநியாயக்காரர்கள் ஆவார்கள். இவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

43. பொறுமையையும் மன்னிப்பையும் கைக்கொள்வது, குணநலனின் ஒரு மெய்யான பலத்தைப் பிரதிபலிக்கின்றது.

44. **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விட்ட எவரும் வேறு எந்த எஜமானரையும் ஒருபோதும் காணமாட்டார், மேலும் தண்டனையை அவர்கள் காணும் பொழுது, இத்தகைய வரம்புமீறுபவர்கள், "எங்களுக்கு மற்றொரு வாய்ப்பு கிடைக்குமா ?" என்று கூறுவதை நீர் காண்பீர்.

45. பார்த்துக் கொண்டும், ஆயினும் பார்ப்பதைத் தவிர்க்க முயற்சித்துக் கொண்டும், அவமானப்பட்டவர்களாகவும் இழிவடைந்தவர்களாகவும், அதனை அவர்கள் எதிர்கொள்வதை நீர் காண்பீர். நம்பிக்கை கொண்டவர்கள் பிரகடனம் செய்வார்கள்: "உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று தங்களுடைய மற்றும் தங்கள் குடும்பத்தாருடைய ஆத்மாக்களை நஷ்டப்படுத்திக் கொண்டவர்கள் தான் மெய்யான நஷ்டவாளிகள் ஆவார்கள். வரம்புமீறுபவர்கள் நீடித்திருக்கும் ஒரு தண்டனைக்குத் தகுதியாகி விட்டனர்."

46. **கடவுள்**–க்கெதிராக அவர்களுக்கு உதவி செய்ய நண்பர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். **கடவுள்** வழிகேட்டில் அனுப்பி விட்ட எவரும் ஒருபோதும் வழிநடத்தப்பட்டவராக முடியாது.

47. தவிர்த்திட முடியாததெனக் **கடவுள்**–ஆல் விதிக்கப்பட்ட ஒரு நாள் வருவதற்கு முன்னர் நீங்கள் உங்கள் இரட்சகருக்கு மறுமொழியளிக்க வேண்டும். அந்நாளில் உங்களுக்கு எந்தப் புகலிடமும் இருக்காது, அன்றி ஒரு வாதாடுபவரும் இருக்க மாட்டார்.

*தூதருடைய ஒரே இறைப்பணி*

48. அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அவர்களுடைய பாதுகாவலராக உம்மை நாம் அனுப்பவில்லை. உம்முடைய ஒரே இறைப்பணி தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதேயாகும். மானிடர்களின் மீது நாம் கருணையைப் பொழிந்தால், அவர்கள் பெருமை கொள்கின்றனர், ஆனால் அவர்களுடைய சொந்தச் செயல்களின் பின்விளைவாகத் துன்பம் அவர்களை வருத்தும் பொழுது, மானிடர்கள் நம்பமறுப்பவர்களாக மாறி விடுகின்றனர்.

49. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் **கடவுள்**–க்குரியது. தான்நாடுகின்ற எவருக்கும் மகள்களை வழங்கியும், மேலும் தான்நாடுகின்ற எவருக்கும் மகன்களை வழங்கியும், தான்நாடுகின்ற எதனையும் அவர் படைக்கின்றார்.

50. அல்லது, அவர் ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் மணம் புரியச் செய்து, பின்னர் அவர் நாடுகின்ற எவரையும் மலடாக ஆக்கி விடுகின்றார். அவர் சர்வமும் அறிந்தவர், சர்வ சக்தியுடையவர்.

*கடவுள் எவ்வாறு நம்முடன்*
*தகவல் தொடர்பு கொள்கின்றார்*

51. உள்ளுணர்வின் வாயிலாகவோ, அல்லது ஒரு தடுப்பிற்குப் பின் இருந்தோ, அல்லது தான் நாடுகின்ற எதனையும் அவர் மூலம் வெளிப்படுத்துகின்ற ஒரு தூதரை அனுப்பியோ தவிர, மானிடர் எவரும் **கடவுள்**–வுடன் தகவல் தொடர்பு கொள்ள முடியாது. அவர்தான் மிகவும் உயர்ந்தவர், ஞானம் மிகுந்தவர்.

52. இவ்விதமாக, நம்முடைய கட்டளைகளைப் பிரகடனிக்கின்ற ஒரு வெளிப்பாட்டினை உமக்கு நாம் உள்ளுணர்வளித்தோம். வேதம் அல்லது நம்பிக்கை பற்றி நீர் எதுவும் அறியாதவராக இருந்தீர். இருப்பினும், நம்முடைய ஊழியர்களிலிருந்து நாம் தேர்ந்தெடுக்கின்ற எவரையும் வழிநடத்துவதற்காக இதனை ஒரு கலங்கரை விளக்காக நாம் ஆக்கினோம். நிச்சயமாக, நேரானதொரு பாதையிலேயே நீர் வழிநடத்துகின்றீர்.

53. அப்பாதையானது, வானங்களில் உள்ள ஒவ்வொன்றும், மேலும் பூமியின் மீதுள்ள ஒவ்வொன்றும் எவருக்குரியதோ, அந்தக் **கடவுள்**–வுடையது. பரிபூரணமாக, அனைத்து விஷயங்களும் **கடவுள்**–ஆல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

****

## சூரா 43: ஆபரணங்கள் (அல்–ஜுக்ருஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.*
2. மற்றும் அறிவொளியூட்டும் இவ்வேதம்.

**43:1 பார்க்க 40:1க்குரிய அடிக்குறிப்பு. ஹ்ஹ. ம. என்ற துவக்க எழுத்துகளைக் கொண்ட ஏழு சூராக்களில் "ஹ்ஹ" (ஹே) மற்றும் "ம" (மீம்) ஆகிய எழுத்துகள் இடம் பெறும் எண்ணிக்கை முறையே 292 மற்றும் 1855 ஆகும். இதன் கூட்டுத் தொகை 2147, அல்லது 19 x 113 ஆகும்.*

3. நீங்கள் புரிந்து கொள்வதற்காக, அரபியிலான ஒரு குர்ஆனாக இதனை நாம் ஆக்கியுள்ளோம்.*

4. கண்ணியத்திற்குரிய, மற்றும் ஞானம் நிரம்பிய இது, மூலப்பிரதியில் நம்மிடம் பாதுகாக்கப்பட்டு உள்ளது.

5. நீங்கள் வரம்புகளை மீறிவிட்டீர்கள் எனும் நிதர்சனத்தை நாம் அப்படியே அலட்சியப்படுத்தி விட வேண்டுமா ?*

*மீட்சிக்கான திட்டம்*

6. எத்தனையோவொரு நபியை முந்திய தலைமுறையினருக்கு நாம் அனுப்பியுள்ளோம்.

7. ஒவ்வொரு முறையும் ஒரு நபி அவர்களிடம் சென்ற போது, அவர்கள் அவரைப் பரிகசித்தனர்.

8. அதன் விளைவாக, இவர்களை விட மிகவும் அதிக சக்தி படைத்திருந்த மக்களை நாம் அழித்தொழித்தோம். இவ்விதமாக முந்திய சமூகத்தினரிலிருந்து உதாரணங்களை நாம் அமைத்தோம்.

9. "வானங்களையும் பூமியையும் படைத்தது யார்," என்று நீர் அவர்களிடம் கேட்பீராயின், அவர்கள் கூறுவார்கள், "எல்லாம் வல்லவர், சர்வமும் அறிந்தவர்தான் அவற்றைப் படைத்தார்."

10. அவர்தான் உங்களுக்காக பூமியை வசிக்கத் தக்கதாக ஆக்கியவர், மேலும் உங்களுக்காக அதில் சாலைகளைப் ஆக்கினார், நீங்கள் சரியான வழியைப் பின்பற்றும் பொருட்டு.

11. அவர்தான் விண்ணிலிருந்து தண்ணீரை மிகச்சரியான அளவில் இறக்கி அனுப்புகின்றவர், அதன் மூலம் இறந்த நிலங்களை உயிர்ப்பிப்பதற்காக. இவ்விதமாகவே, நீங்கள் உயிர்த்தெழுப்பப்படுவீர்கள்.

12. அவர்தான் அனைத்து வகைகளையும் *(ஆண் மற்றும் பெண்ணினம் என)* ஜோடிகளில் படைத்தவர், மேலும் நீங்கள் சவாரி செய்வதற்காகக் கப்பல்களையும் கால் நடைகளையும் அவர் படைத்தார்.

13. அவற்றின் மீது நீங்கள் அமர்ந்தவுடன், உங்கள் இரட்சகரிடமிருந்து இத்தகையதொரு ஆசீர்வாதத்திற்கு நீங்கள் நன்றி செலுத்த வேண்டும், மேலும் கூறுங்கள், "இதனை எங்களுக்குக் கட்டுப்படுத்தித் தந்தவர் துதிப்பிற்குரியவர். நாங்களாகவே இவற்றைக் கட்டுப்படுத்தியிருக்க எங்களால் இயன்றிருக்காது.

14. "இறுதியில் நாங்கள் எங்கள் இரட்சகரிடமே திரும்புகின்றோம்."

*புதல்விகளாக வானவர்கள்: ஓர் இறைநிந்தனை*

15. அவருடைய சொந்தப் படைப்பினில் இருந்தே ஒரு பங்கினரை அவருக்குரியவர்களென அவர்கள் நியமிக்கவும் செய்தனர்! நிச்சயமாக, மானிடன் மிகவும் நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.

16. தன்னுடைய படைப்புகளுகிடையில் இருந்து தனக்காகப் புதல்விகளை அவர் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அதே சமயம் புதல்வர்களைக் கொண்டு உங்களை ஆசீர்வதித்து விட்டாரா ?

17. மிக்க அருளாளர் பற்றி அவர்கள் கூறியதுபோல, அவர்களில் ஒருவனுக்கு *(ஒரு புதல்வியைப் பற்றிய)* செய்தி கொடுக்கப்பட்ட போது, துக்கத்தாலும் கோபத்தாலும் அவன் முகம் இருண்டு விடுகின்றது!

18. *(அவர்கள் கூறுகின்றனர்)*, "அழகாக இருப்பதற்காக வளர்க்கப்படுவதும், மேலும் போரில் உதவி செய்ய முடியாததுமான ஒரு சந்ததியில் என்ன நன்மை இருக்கின்றது ?"

19. மிக்க அருளாளரின் ஊழியர்களான வானவர்கள் பெண்களாக இருக்கின்றனர் என்று அவர்கள் கூறினர்! அவர்களது படைப்பிற்கு இவர்கள் சாட்சிகளாக இருந்தனரா ? அவர்களுடைய கூற்றுகள் பதிவு செய்யப்படுகின்றன, மேலும் அவர்கள் வினவப்படுவார்கள்.

20. இப்படியும் அவர்கள் கூறினர், "மிக்க அருளாளர் நாடியிருந்தால், நாங்கள் அவர்களை வழிபட்டிருக்க மாட்டோம்." இத்தகையதொரு கூற்றுக்கு எந்த அடிப்படையும் அவர்களுக்கு இல்லை; அவர்கள் அனுமானிக்க மட்டுமே செய்கின்றனர்.*

21. இதற்கு முன் ஒரு புத்தகத்தை நாம் அவர்களுக்குத் தந்து, அதனை அவர்கள் ஆதரிக்கின்றனரா ?

**43:3 அரபி மிகத் திறன் வாய்ந்த மொழியாகும், குறிப்பாகக் கட்டளைகள், விதிகள், மற்றும் கடினமான சட்டங்களை தெளிவாகக் எடுத்துரைப்பதில். எனவேதான் மக்கள் அனைவரும், அவர்களுடைய மொழிகள் எதுவானபோதிலும், தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக குர்ஆன் அரபி மொழியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விபரங்கட்குப் பின் இணைப்பு 4ஐப் பார்க்கவும்.*

**43:5 முன்னுரை மற்றும் பின் இணைப்பு 7 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ளபடி இது நம்முடைய ஆதிபாவத்தைக் குறிக்கின்றது.*

**43:20 போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள், தங்களுடைய இணை வழிபாட்டிற்குக் கடவுள் மீது பழிபோட முடியாது, ஏனெனில் கடவுளை மட்டும் வழிபடுவதற்கோ அல்லது அவ்வாறில்லாமல் இருப்பதற்கோ பரிபூரணமான தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை நாம் பெற்றுள்ளோம்.*

*பாரம்பர்யப் பழக்கவழக்கங்கள் கண்டனம் செய்யப்படுகின்றன*

22. உண்மையாவது: அவர்கள் கூறினர், "குறிப்பிட்ட அனுஷ்டானங்களை எங்களுடைய பெற்றோர்கள் தொடர்ந்து செய்து வர நாங்கள் கண்டோம், மேலும் அவர்களுடைய காலடிச் சுவடுகளையே நாங்கள் பின்பற்றுகின்றோம்."

23. எந்தச் சமூகத்திற்கும் ஓர் எச்சரிப்பவரை நாம் அனுப்பிய போதெல்லாம் சிறிதும் மாற்றமின்றி, அந்தச் சமூகத்தின் தலைவர்கள் கூறுவார்கள், "குறிப்பிட்ட அனுஷ்டானங்களை எங்கள் பெற்றோர்கள் பின்பற்றி வர நாங்கள் கண்டோம், மேலும் அவர்களுடைய காலடிச்சுவடுகளிலேயே நாங்கள் தொடர்ந்து செல்வோம்."

24. *(அத்தூதர்)* கூறுவார், "உங்களுடைய பெற்றோர்களிடமிருந்து நீங்கள் பாரம்பர்யமாகப் பெற்றதை விடவும் மேலான வழிகாட்டலை நான் உங்களிடம் கொண்டு வந்தாலுமா ?" அவர்கள் கூறுவார்கள், "நீர் கொண்டு வந்த தூதுச்செய்தியின் மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்களாக நாங்கள் இருக்கின்றோம்."

25. அதன் விளைவாக, நாம் அவர்களைப் பழிதீர்த்தோம். ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களுக்கான பின்விளைவுகளைக் கவனிப்பீராக.

*ஆப்ரஹாமின் உதாரணம்*

26. ஆப்ரஹாம் தன் தந்தையிடமும் தன் சமூகத்தாரிடமும் கூறினார், "நீங்கள் வழிபடுபவற்றை நான் கைவிட்டு விலகிக் கொண்டேன்.

27. "என்னைத் துவக்கியவர் மட்டுமே என்னை வழி நடத்த முடியும்."

28. *(ஆப்ரஹாமின்)* இந்த உதாரணம் பின்தொடர்கின்ற தலைமுறையினருக்கு நிலைத்திருக்கும் ஒரு படிப்பினையாக ஆக்கப்பட்டது; ஒருவேளை அவர்கள் தங்களுடைய ஆத்மாக்களை மீட்டுக் கொள்ளக் கூடும்.

29. உண்மையில், இந்த மக்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் போதிய வாய்ப்புக்களை நான் கொடுத்து விட்டேன், பின்னர் சத்தியம் அவர்களிடம் வந்தது, மேலும் தெளிவுபடுத்துகின்ற ஒரு தூதரும்.

30. சத்தியம் அவர்களிடம் வந்த பொழுது, அவர்கள் கூறினர், "இது மாயாஜாலமாகும், மேலும் இதில் நாங்கள் நம்பிக்கை கொள்ள மறுப்பவர்களாக இருக்கின்றோம்."

*முஹம்மத் பரிகசிக்கப்பட்டார்*

31. அவர்கள் கூறினர், "*(மக்கா அல்லது யத்ரிபின்)* இரு சமூகங்களில் பிரபலமான வேறொரு மனிதர் மூலமாக மட்டும் இந்தக் குர்ஆன் இறக்கி அனுப்பப்பட்டிருந்தால்!"

32. இவர்களா உம்முடைய இரட்சகரின் கருணையை நிர்ணயிப்பவர்கள் ? அவர்கள் ஒருவர் மற்றவருக்கு ஊழியம் செய்யும் பொருட்டு, அவர்களில் சிலரை மற்றவர்களை விட அந்தஸ்தில் உயர்த்தியவாறு, இவ்வுலகில் அவர்களுடைய பங்கை நாமே நிர்ணயிக்கின்றோம். உம்முடைய இரட்சகரின் கருணையானது அவர்கள் சேர்க்கக்கூடிய எந்தப் பொருளையும் விட மிகவும் மேலானதாகும்.

*நம்பமறுப்பவர்களுக்குக் கிடைப்பதெல்லாம்: இந்த உலகப் பொருட்கள்தான்*

33. எல்லா மக்களும் *(நம்பமறுக்கின்ற)* ஒரே கூட்டமாக ஆகிவிடக் கூடும் என்பது இல்லாதிருந்தால், மிக்க அருளாளரை நம்பமறுக்கின்ற ஒவ்வொருவருக்கும் வெள்ளியிலான கூரைகள் மற்றும் அவர்கள் ஏறிச் செல்லக்கூடிய படிகள் கொண்ட மாளிகைகளை நாம் வழங்கியிருப்போம்.

34. அவர்களுடைய மாளிகைகள் மனங்கவரும் வாயில்களையும், ஆடம்பரமான ஆசனங்களையும் கொண்டதாக இருந்திருக்கும்.

35. அத்துடன் ஏராளமான ஆபரணங்களும். இவை அனைத்தும் கீழான இந்த வாழ்வின் தற்காலிகப் பொருட்களேயாகும். மறுவுலகம் – உம் இரட்சகரிடம் இருப்பது – நன்னெறியாளர்களுக்கு மிகவும் மேலானதாகும்.

*கண்ணுக்குத் தெரியாத, சாத்தானிய, கூட்டாளிகள்**

36. எவனொருவன் மிக்க அருளாளரின் தூதுச் செய்தியை அலட்சியம் செய்கின்றானோ, அவனுடைய நிலையான கூட்டாளியாக இருப்பதற்கென ஒரு சாத்தானை நாம் நியமிக்கின்றோம்.*

37. அத்தகைய கூட்டாளிகள் பாதையிலிருந்து அவர்களைத் திசை திருப்பி விடுவார்கள், இருப்பினும் அவர்கள் வழிகாட்டப்பட்டவர்களாகவே இருக்கின்றனர் என அவர்கள் நம்பும்படிச் செய்து விடுகின்றனர்.

**43:36–39 தொடர்ந்து உடனிருக்கும் ஒரு கூட்டாளியாக சாத்தானின் ஒரு பிரதிநிதியை நாம் ஒவ்வொருவரும் கொண்டிருக்கின்றோம் (பின் இணைப்பு 7).*

38. நம் முன்னால் அவன் வரும் பொழுது அவன் கூறுவான், "ஐயோ, இரு கிழக்குகளைப்* போல் என்னிடமிருந்து நீ தூரமாக இருந்திருக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன். என்ன ஒரு துன்பகரமான கூட்டாளி!"

39. வரம்புமீறியவர்களாக, நீங்கள் இருவரும் தண்டனையில் பங்கு பெற்றுக் கொள்ளப் போவதால், அந்நாளில் இது உங்களுக்கு ஆறுதல் அளிக்காது.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்*

40. செவிடர்களைக் கேட்கச் செய்ய உம்மால் இயலுமா; குருடர்களை அல்லது நெடிய வழிகேட்டில் இருப்பவர்களை பார்க்கச் செய்ய உம்மால் இயலுமா?

41. அதற்கு முன்னர் நாம் உம்மை மரணிக்கச் செய்கின்றோமோ அல்லவோ, நிச்சயமாக நாம் அவர்களைப் பழிதீர்ப்போம்.

42. அல்லது, அவர்களுக்கு நாம் வாக்களித்துள்ளதை *(தண்டனையை)* உமக்குக் காட்டவும் கூடும். அவர்கள் மீது நாம் முழுமையான கட்டுப்பாடுகொண்டிருக்கின்றோம்.

43. உமக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை நீர் உறுதிப்பாட்டுடன் பிரசாரம் செய்ய வேண்டும்; நீர் சரியான பாதையில்தான் இருக்கின்றீர்.*

44. இது உமக்கும் உம்முடைய சமூகத்தவருக்குமான தொரு தூதுச் செய்தியாகும்; நீங்கள் அனைவரும் விசாரிக்கப்படுவீர்கள்.

45. உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களிடம் சரி பார்த்துக் கொள்வீராக: "வழிபடப்படுவதற்காக– மிக்க அருளாளரை அன்றி – வேறு ஏதேனும் தெய்வங்களை எப்பொழுதேனும் நாம் நியமித்திருக்கின்றோமோ?"

46. உதாரணத்திற்கு, ஃபேரோ மற்றும் அவனுடைய பிரதானிகளிடம் நம் சான்றுகளுடன் மோஸஸை நாம் அனுப்பினோம், இவ்வாறு பிரகடனித்தவர்களாக: "நான் பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்துள்ள ஒரு தூதன் ஆவேன்"

47. அவர் நம்முடைய சான்றுகளை அவர்களிடம் காட்டிய பொழுது, அவற்றை அவர்கள் எள்ளி நகையாடினர்.

*மோஸஸும் ஃபேரோவும்*

48. அவர்களுக்கு நாம் காட்டிய ஒவ்வொரு அத்தாட்சியும் அதற்கு முந்தியதை விட பெரியதாகவே இருந்தது. ஒருவேளை அவர்கள் வருந்தக் கூடும் என்பதற்காகப், பீடைகளைக் கொண்டு அவர்களை நாம் கஷ்டத்திற்குள்ளாக்கினோம்.

49. அவர்கள் கூறினர், "மந்திரவாதியே, *(இந்தப் பீடையை நிவர்த்திக்க)* அவருடன் நீர் ஓர் உடன்படிக்கையைக் கொண்டிருப்பதால், எங்கள் சார்பாக உம்முடைய இரட்சகரை இறைஞ்சுவீராக; பின்னர் நாங்கள் வழி நடத்தப்பட்டவர்களாக இருப்போம்."

50. ஆனால் அவர்களுடைய கஷ்டத்தை நாம் நிவர்த்தித்தவுடன், அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

51. ஃபேரோ தன் சமூகத்தாருக்கு அறிவித்தான், "என் பிரஜைகளே, எகிப்தின் அரசுரிமை எனக்குச் சொந்தமானதல்லவா, மேலும் பாயும் இந்த ஆறுகள் எனக்குரியவை அல்லவா? நீங்கள் பார்க்கவில்லையா?

52. "யார் மேலானவர்; நானா அல்லது தாழ்ந்தவரும் பேசுவதற்கே சிரமப்படுகின்றவருமான அவரா?

53. "ஒரு தங்கக் கருவூலத்தை அவர் பெற்றிருக்காதது ஏன்; அவருடன் கூட வானவர்கள் வராததேன்?"

54. இவ்விதமாக அவன் தன் சமூகத்தாரை ஏமாற்றினான், மேலும் அவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்தனர்; அவர்கள் தீய மக்களாக இருந்தனர்.

55. நம்மை எதிர்ப்பதில் அவர்கள் பிடிவாதமாக இருந்தபோது, நாம் அவர்களைத் தண்டித்தோம் மேலும் அவர்கள் அனைவரையும் மூழ்கடித்தோம்.

56. மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் ஓர் உதாரணமாகவும் அவர்களை நாம் அமைத்தோம்.

*ஜீஸஸ்: மற்றொரு உதாரணம்*

57. மேரியின் மகன் ஓர் உதாரணமாக எடுத்துரைக்கப்பட்டபோது, உம் சமூகத்தார் அதனை அலட்சியம் செய்தனர்.

58. அவர்கள் கூறினர், "எங்களுடைய தெய்வங்களை வழிபடுவது மேலானதா, அல்லது அவரை வழிபடுவதா?" உம்முடன் வாதிப்பதற்காக மட்டுமே அவர்கள் இதனைக் கூறினர். உண்மையில், அவர்கள் எதிரணியினருடன் சேர்ந்து விட்ட மக்களாவர்.

---

**43:38* *"கிழக்குகள்" என்பது சூரிய உதயம், சந்திர உதயம், மற்றும் விண்ணகப் பொருட்கள் உதயமாகும் இடங்களைக் குறிக்கின்றது.*

**43:43* *"ரஷாத் கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்பு (1230) வுடன் 43ஐக் கூட்டினால் 1273, 19 x 67 ஆகும்.*

59. அவர் நம்மால் ஆசீர்வதிக்கப் பெற்ற ஓர் ஊழியர் என்பதை விட அதிகமாக ஒன்றுமில்லை, மேலும் இஸ்ரேலின் சந்ததியினருக்கு ஓர் உதாரணமாக அவரை நாம் அனுப்பினோம்.

60. நாம் நாடியிருந்தால், பூமியில் குடியேறி இனப் பெருக்கம் செய்கின்ற வானவர்களாக உங்களை நாம் ஆக்கியிருக்க இயலும்.

*ஜீஸஸும் உலகத்தின் முடிவும்**

61. உலகத்தின் முடிவை* அறிந்து கொள்வதற்கான ஓர் அறிகுறியாக அவர் திகழ இருக்கின்றார். எனவே இதற்கு மேலும் அதனைக் குறித்து நீங்கள் எந்தச் சந்தேகத்தையும் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. என்னை நீங்கள் பின்பற்ற வேண்டும்; இதுவே சரியான பாதையாகும்.

62. சாத்தான் உங்களை விரட்டி விடாதிருக்கட்டும்; அவன் உங்களுடைய மிகத் தீவிரமான விரோதியாவான்.

63. சான்றுகளுடன் ஜீஸஸ் சென்ற பொழுது, அவர் கூறினார், "ஞானத்தைக் கொண்டு வருவதற்காகவும், மேலும் நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கின்ற விஷயங்களில் சிலவற்றைத் தெளிவுபடுத்துவதற்காகவும் நான் உங்களிடம் வந்துள்ளேன். நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கவும், மேலும் எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

64. "**கடவுள்**தான் என்னுடைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகரும் ஆவார். நீங்கள் அவரை மட்டுமே வழிபடவேண்டும். இதுவே சரியான பாதையாகும்."

65. எதிரணியினர் தங்களுக்கிடையிலேயே தர்க்கித்துக் கொண்டனர். வலிநிறைந்ததொரு நாளின் தண்டனையின் மூலம் வரம்புமீறுபவர்களுக்குக் கேடுதான்.

66. வேளையானது *(தீர்ப்பு நாள்)*, அவர்கள் அதனைச் சற்றும் எதிர்பாராதிருக்கையில் திடீரென அவர்களிடம் வர வேண்டுமென அவர்கள் காத்திருக்கின்றனரா ?

67. நெருங்கிய நண்பர்கள் அந்நாளில் ஒருவர் மற்றவருக்கு விரோதிகளாகி விடுவார்கள், நன்னெறியாளர்களைத் தவிர.

*நன்னெறியாளர்கள்*

68. என் ஊழியர்களே, அந்நாளில் உங்களுக்கு அச்சம் எதுவும் இருக்காது, அன்றி நீங்கள் துக்கப்படவும் மாட்டீர்கள்.

69. அவர்கள்தான் நம்முடைய வெளிப்பாடுகளின் மீது நம்பிக்கை கொண்டவர்கள், மேலும் சரணடைந்தவர்களாக இருந்தவர்கள்.

70. உங்களுடைய துணைகளுடன் சேர்ந்து, சுவனத்தில் நுழையுங்கள், மேலும் களித்திருங்கள்.

71. தங்கத் தாம்பாளங்களும் குவளைகளும் அவர்களிடம் முன் வைக்கப்படும், அத்துடன் இதயங்கள் ஆசைப்படுகின்ற, மேலும் கண்கள் விரும்புகின்ற ஒவ்வொன்றையும் அவர்கள் காண்பார்கள். அதிலே நீங்கள் என்றென்றும் வசித்திடுவீர்கள்.

72. உங்களுடைய காரியங்களுக்குப் பலனாக, நீங்கள் வாரிசாகப் பெறுகின்ற சுவனம் இத்தகையதேயாகும்.

73. அதிலிருந்து நீங்கள் உண்ணுகின்ற, அனைத்துக் கனிவர்க்கங்களும் அங்கே உங்களுக்குக் கிடைக்கும்.

74. நிச்சயமாக, குற்றவாளிகள் எரிகிடங்கின் தண்டனையில் என்றென்றும் வாழ்ந்திடுவார்கள்.

75. தண்டனை ஒருபோதும் அவர்களுக்குக் குறைக்கப்பட மாட்டாது; அவர்கள் அதிலே அடைக்கப்படுவார்கள்.

76. அவர்களுக்கு அநீதமிழைத்தது நாமல்லர்; அவர்கள் தான் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே அநீதமிழைத்துக் கொண்டனர்.

77. அவர்கள் இறைஞ்சுவார்கள்: "மாலிகே, உம்முடைய இரட்சகர் எங்களை முடித்து விடட்டும்." அவர் கூறுவார், "நீங்கள் என்றென்றும் தங்குகின்றீர்கள்.

*அவர்கள் சத்தியத்தை வெறுக்கின்றனர்*

78. "நாம் உங்களுக்குச் சத்தியத்தைத் தந்துள்ளோம், ஆனால் உங்களில் அதிகமானோர் சத்தியத்தை வெறுக்கின்றீர்கள்."

79. அவர்கள் சில திட்டங்களைத் தீட்டுகின்றனரா ? நாமும்தான் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

80. அவர்களுடைய இரகசியங்களையும் சதித்திட்டங்களையும் நாம் செவியேற்கவில்லை என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனரா ? ஆம், மெய்யாகவே; நம் தூதர்கள் அவர்களுடன் இருக்கின்றனர், பதிவு செய்து கொண்டு.

81. பிரகடனிப்பீராக: "மிக்க அருளாளர் ஒரு மகனைக் கொண்டிருந்தாலும், அப்போதும் நான்தான் வழிபடுபவனாக முன்னணியில் இருப்பேன்."

**43:61 பின் இணைப்பு 25 ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, உலகத்தின் முடிவு குர்ஆனில் கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் ஜீஸஸின், பிறந்த தேதி இக்கணிப்பு சரியானது தான் என்பதற்கு முக்கியத்துவமிக்க அத்தாட்சிகளை வழங்கியது. ஜீஸஸின் பிறப்பிற்கு 2280 வருடம் (19x120) கழித்து உலகம் முடியும் என நாம் கற்றுக் கொள்கின்றோம் (பார்க்க 47:18). கூடுதலாக, சந்திர வருடம் (1710) மற்றும் சூரிய வருடம் (2280) ஆகிய இரண்டும் 570 (19x30) ஆல் வகுபடக் கூடியதாக உள்ளன, இது ஜீஸஸின் பிறப்பிலிருந்து முஹம்மதின் பிறப்பு வரைக்கும் உள்ள வருடங்களின் எண்ணிக்கையாகும். இவ்விதமாக, ஜீஸஸின் பிறந்த தேதி ஒரு அறிகுறியாகத் திகழ்கிறது.*

82. அவர் துதிப்பிற்குரியவர்; அவர்தான் வானங்கள் மற்றும் பூமியின் இரட்சகராவார், அவர்களுடைய கூற்றுகளுக்கு மிகவும் அப்பாற்பட்டு, மாபெரும் சாம்ராஜ்யத்தையுடைய இரட்சகர்.

83. அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற அவர்களுடைய நாளினை அவர்கள் சந்திக்கும் வரை அவர்கள் மூடத்தனமான தவறுகள் புரிந்து கொண்டும் விளையாடிக் கொண்டும் இருக்கட்டும்.

84. அவர்தான் விண்ணில் ஒரு தெய்வமாகவும் மேலும் பூமியில் ஒரு தெய்வமாகவும் இருக்கின்ற ஒரே ஒருவர். அவர்தான் ஞானம் மிகுந்தவர், சர்வமும் அறிந்தவர்.

85. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றின் ஆட்சியதிகாரம் அனைத்தையும் சொந்தமாகக் கொண்டிருக்கின்ற அந்த ஒருவர் மிகவும் உயர்வானவர். வேளை *(உலகத்தின் முடிவு)* பற்றிய அறிவு அவரிடமே உள்ளது, மேலும் அவரிடமே நீங்கள் திருப்பப் படுவீர்கள்.

86. அவருடன் அவர்கள் இணைவழிபாடு செய்கின்ற எவரும் பரிந்துரைப்பதற்கு எந்த அதிகாரத்தையும் பெற்றிருக்கவில்லை, அவர்களுடைய பரிந்துரை சத்தியத்துடன் ஒத்துப்போவதாகவும், அவர்கள் முற்றிலும் அறிந்தவர்களாகவும் இருந்தாலே அன்றி.

87. அவர்களைப் படைத்தது யாரென அவர்களிடம் நீர் கேட்பீராயின், அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்**." பின்னர் ஏன் அவர்கள் விலகிச் செல்கின்றனர்?

88. இது பிரகடனம் செய்யப்படும்; "என் இரட்சகரே, இந்த மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை."

89. அவர்களை நீர் அலட்சியம் செய்திட வேண்டும், மேலும் கூறுவீராக, "சாந்தி;" அவர்கள் நிச்சயம் கண்டு கொள்வார்கள்.

****

# சூரா 44: புகை (அல்–துகான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.

2. மற்றும் அறிவொளியூட்டும் இவ்வேதம்.

3. பாக்கியமிக்கதொரு இரவில் இதனை நாம் இறக்கி அனுப்பினோம், ஏனெனில் நாம் எச்சரிப்பவர்களாக இருக்கின்றோம்.

4. *(வேதமான)* இதிலே, ஞானத்தின் ஒவ்வொரு விஷயமும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

5. நாம் தூதர்களை அனுப்புவதுதென்பது நம்மிடமிருந்து முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு கட்டளையாக உள்ளது.

6. இது உம் இரட்சகரிடமிருந்து ஒரு கருணையாகும். அவர்தான் செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்.

7. வானங்கள் மற்றும் பூமி மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றினுடைய இரட்சகர். நீங்கள் மட்டும் உறுதியுடையவர்களாக இருக்க முடிந்தால்!

8. அவருடன் வேறு தெய்வம் எதுவுமில்லை. வாழ்வையும் மரணத்தையும் அவர் கட்டுப்படுத்துகின்றார்; உங்களுடைய இரட்சகர் மற்றும் உங்கள் முன்னோர்களுடைய இரட்சகர்.

9. உண்மையில், அவர்கள் சந்தேகம் நிறைந்தவர்களாக, அலட்சியம் செய்பவர்களாக இருக்கின்றனர்.

*புகை: முக்கியமானதொரு முன்னறிவிப்பு**

10. எனவே, ஆழ்ந்ததொரு புகையை வானம் கொண்டு வரும் அந்நாளுக்காகக் காத்திருப்பீராக.*

11. மனிதர்களை அது சூழ்ந்து கொள்ளும்; அது வலி நிறைந்ததொரு தண்டனையாகும்.

12. "எங்கள் இரட்சகரே, எங்களுக்கு இந்தத் தண்டனையை நிவர்த்திப்பீராக; நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றோம்."

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

13. இப்போது அது மிகத் தாமதமாகி விட்டபோது, அவர்கள் நினைவில் கொள்கின்றனர்! அறிவொளியூட்டுகின்ற ஒரு தூதர் அவர்களிடம் வந்திருந்தார்.*

14. ஆனால் அவர்கள், "நன்கு கல்வி கற்றவர், ஆனால் பித்துப்பிடித்தவர்!" என்று கூறியவர்களாக அவரிடமிருந்து திரும்பிக் கொண்டனர்.

15. சிறிது காலத்திற்கு தண்டனையை நாம் நிவர்த்திப்போம்; நீங்கள் விரைவில் திரும்பிச் சென்று விடுவீர்கள்.

16. பெரிய அடியை நாம் அடிக்கும் அந்நாளில், நாம் பழி தீர்ப்போம்.

17. அவர்களுக்கு முன் ஃபேரோவின் சமூகத்தாரை நாம் சோதித்தோம்; கண்ணியமானதொரு தூதர் அவர்களிடம் சென்றார்.

**44:10 இரண்டு அத்தாட்சிகள் மட்டுமே இன்னும் பூர்த்தியாக வேண்டியுள்ளது, இந்தப் புகை, மேலும் காக் மற்றும் மேகாக் (பின் இணைப்பு 25).*

**44:13 இந்த சூரா மற்றும் வசன எண்களின் கூட்டுத்தொகை (44+13) 57, 19x3 ஆகும், மேலும் குர்ஆனுடைய இக் குறியீடு கடவுளின் உடன்படிக்கைத் தூதரால் பிரகடனம் செய்யப்பட்டது (பின் இணைப்பு 1, 2, & 26).*

18. பிரகடனித்தவாறு: "நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள், **கடவுள்**–ன் ஊழியர்களே. நான் உங்களுக்கு நேர்மையானதொரு தூதன் ஆவேன்."

19. மேலும், "**கடவுள்**–க்கெதிராக வரம்புமீறாதீர்கள். வலிமை நிறைந்த சான்றுகளை உங்களிடம் நான் கொண்டு வந்துள்ளேன்.

20. "என்னை நீங்கள் எதிர்த்தால், என் இரட்சகர் மற்றும் உங்களுடைய இரட்சகரிடம் நான் புகலிடம் தேடுகின்றேன்.

21. "நீங்கள் நம்பிக்கை கொள்ள விரும்பவில்லையென்றால், பின்னர் என்னை அப்படியே விட்டுச் சென்று விடுங்கள்."

22. அதன் பிறகு, அவர் தன் இரட்சகரை இறைஞ்சினார்: "இவர்கள் தீய மக்களாக இருக்கின்றனர்."

23. *(கடவுள் கூறினார்)* "இரவுப் பொழுதில் என் ஊழியர்களுடன் பயணிப்பீராக; நீங்கள் பின் தொடரப்படுவீர்கள்.

24. "கடலினை விரைவாகக் கடந்து விடுங்கள்; அவர்களுடைய படைகள் மூழ்கடிக்கப்படும்."

25. இவ்விதமாக, பல தோட்டங்களையும் ஊற்றுகளையும் அவர்கள் பின்னால் விட்டுச் சென்று விட்டனர்.

26. பயிர்களையும் ஆடம்பரமானதொரு வாழ்வையும்.

27. அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த ஆசீர்வாதங்களையும்.

28. இவை அனைத்தையும் வேறு மக்கள் வாரிசாகப் பெறும்படி நாம் செய்தோம்.

29. வானமோ அன்றிப் பூமியோ அவர்களுக்காக அழவில்லை, மேலும் அவர்கள் அவகாசம் அளிக்கப்பட்டவர்களாகவும் இல்லை.

30. இதற்கிடையில், இஸ்ரேலின் சந்ததியினரை இழிவு தரும் வன்கொடுமையிலிருந்து நாம் காப்பாற்றினோம்.

31. ஃபேரோவிடமிருந்து; அவனொரு கொடுங்கோலனாக இருந்தான்.

32. நன்கறிந்து கொண்டே, அனைத்து மக்களுக் கிடையிலும் அவர்களை நாம் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

33. பெரியதொரு சோதனையாக அமைந்த, ஏராளமான பல சான்றுகளை அவர்களுக்கு நாம் காட்டினோம்.

*அதே விளைவுகளை எதிர்பாருங்கள்*

34. தற்காலத் தலைமுறையினர் கூறுகின்றனர்,

35. "முதல் மரணம் மட்டுமே நாம் மரணிக்கின்றோம்; நாம் ஒருபோதும் உயிர்த்தெழுப்பப்பட மாட்டோம்!

36. "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், எங்களுடைய முன்னோர்களைக் கொண்டு வாருங்கள்."

37. துப்பஉ சமூகத்தாரையும் அவர்களுக்கு முன்னிருந்த மற்றவர்களையும் விட இவர்கள் மேலானவர்களா? அவர்களுடைய குற்றங்களுக்காக அவர்களை நாம் அழித்தொழித்தோம்.

38. வானங்களையும் பூமியையும், மேலும் அவற்றுக்கிடையிலுள்ள ஒவ்வொன்றையும், வெறுமனே விளையாடுவதற்காகவென நாம் படைக்கவில்லை.

39. குறிப்பிட்டதொரு காரணத்துக்காகவே அவற்றை நாம் படைத்தோம், ஆனால் அவர்களில் அதிகமானோர் அறியமாட்டார்கள்.

40. தீர்மானத்தின் நாள் அவர்கள் அனைவருக்காகவும் காத்துக் கொண்டிருக்கின்றது.

41. எந்த நண்பனும் தன்னுடைய நண்பனுக்கு எந்த வகையிலும் உதவ இயலாத நாள் அதுவாகும்; எவர் ஒருவரும் உதவி செய்யப்பட இயலாது.

42. **கடவுள்**–யிடமிருந்து கருணையை அடைந்து விட்டவர்களைத் தவிர. அவர்தான் எல்லாம் வல்லவர், மிக்க கருணையாளர்.

*நம்பமறுப்பவர்கள்*

43. நிச்சயமாக, கசப்பினுடைய மரமானது–

44. பாவகரமானவர்களுக்கு உணவை வழங்கும்.

45. கடுங்கார திரவத்தைப் போல, வயிறுகளில் அது கொதிக்கும்.

46. நரகத்தின் பானங்கள் கொதிப்பதைப் போல.

47. அவனை எடுத்துச் சென்று நரகத்தின் மையத்தினுள் அவனை வீசி விடுங்கள்.

48. பின்னர் தீக்கொழுந்தின் தண்டனையை அவனுடைய தலையின் மீது ஊற்றுங்கள்.

49. "இதனைச் சுவைப்பாயாக; நீ எவ்வளவு சக்தியுடையவனாக, எவ்வளவு கண்ணியத்திற்குரியவனாக இருந்தாய்."

50. இதுதான் நீ சந்தேகித்துக் கொண்டிருந்தது.

*நன்னெறியாளர்கள்*

51. நன்னெறியாளர்கள் பாதுகாப்பானதொரு நிலையில் இருப்பார்கள்.

52. தோட்டங்களிலும் ஊற்றுக்களிலும் மகிழ்ந்தவர்களாக.

53. வெல்வெட்டையும் பளபளக்கும் பட்டையும் அணிந்தவர்களாக; ஒருவருக்கொருவர் நெருக்கமாக.

54. அற்புதமான துணைகளை அவர்களுக்கு நாம் வழங்குகின்றோம்.

55. பூரணமான அமைதியில், அனைத்துக் கனிவர்க்கங்களையும் அதில் அவர்கள் அனுபவிக்கின்றார்கள்.

*நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை**

56. அதிலே அவர்கள் மரணத்தைச் சுவைப்பதில்லை – முதல் மரணத்திற்கு* அப்பால் – மேலும் அவர் நரகத்தின் தண்டனையிலிருந்து அவர்களைத் தவிர்த்து விட்டார்.

57. இத்தகையதே உம் இரட்சகரிடமிருந்துள்ள ஆசீர்வாதம். இத்தகையதே மாபெரும் வெற்றி.

58. இவ்விதமாக இதனை உம்முடைய மொழியில் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம், அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு.

59. எனவே, காத்திருப்பீராக; அவர்களும் காத்திருக்க வேண்டியுள்ளது.

****

# சூரா 45: மண்டியிடுதல் (அல்–ஜாஸியா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.

2. இந்த வேதத்தின் வெளிப்பாடானது எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவரான **கடவுள்**–யிடமிருந்து வந்துள்ளது.

3. வானங்களும் பூமியும் நம்பிக்கையாளர்களுக்குச் சான்றுகள் நிரம்பியவையாக உள்ளன.

4. அத்துடன் உங்களுடைய படைப்பிலும், அனைத்து விலங்குகளின் படைப்பிலும், உறுதியுடைய மக்களுக்குச் சான்றுகள் உள்ளன.

5. அத்துடன், இரவு மற்றும் பகலின் மாறுபாடுகள், மேலும், இறந்த நிலங்களை உயிர்ப்பிப்பதற்காக விண்ணிலிருந்து **கடவுள்** இறக்கி அனுப்புகின்ற வாழ்வாதாரங்கள், மேலும் காற்றுகளைத் திறம்படக் கையாளுதல்; புரிந்து கொள்கின்ற மக்களுக்கு இவை அனைத்தும் சான்றுகளாகும்.

*எந்த ஹதீஸ் ?**

6. இவை, சத்தியத்துடன், நாம் உமக்கு எடுத்துரைக்கின்ற **கடவுள்**–ன் வெளிப்பாடுகளாகும். **கடவுள்**–க்கும் அவருடைய வெளிப்பாடுகளுக்கும் பின்னர் வேறு எந்த *ஹதீஸில்* அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர் ?

7. புனைந்துரைப்பவனான குற்றவாளி ஒவ்வொருவனுக்கும் கேடுதான்.*

8. **கடவுள்**–ன் வெளிப்பாடுகள் அவனிடம் எடுத்துரைக்கப்படுவதைச் செவியேற்றும், பின்னர் அவற்றை அவன் ஒருபோதும் செவியேற்காதவனைப் போல, ஆணவத்துடன் தன் வழியில் பிடிவாதமாக இருக்கின்றவன். வலி நிறைந்ததொரு தண்டனையை அவனுக்கு வாக்களிப்பீராக.

9. நம்முடைய வெளிப்பாடுகளைக் குறித்து எதையேனும் அவன் அறிந்து கொள்ளும் போது, அவற்றை அவன் கேலி செய்கின்றான். இத்தகையோர் இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டார்கள்.

10. எரிகிடங்கு அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது. அவர்களுடைய சம்பாத்தியங்களோ அன்றிக் **கடவுள்**–வுடன் அவர்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்களோ அவர்களுக்கு உதவாது. பயங்கரமானதொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

11. இது ஒரு கலங்கரை விளக்காகும், மேலும் தங்கள் இரட்சகரின் இந்த வெளிப்பாடுகள் மீது நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள் கண்டனத்திற்கும் வலி நிறைந்ததொரு தண்டனைக்கும் உள்ளாகி விட்டனர்.

12. **கடவுள்**தான் அவருடைய விதிமுறைகளுக்கேற்பக் கப்பல்கள் அதில் சுற்றி வருவதற்காக, கடலினை உங்களுடைய சேவைக்கெனப் பணித்தவர். இவ்விதமாக, அவருடைய வாழ்வாதாரங்களை நீங்கள் தேடுகின்றீர்கள், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

13. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றையும் உங்கள் சேவைக்கென அவர் பணித்தார்; அனைத்தும் அவரிடமிருந்து. சிந்திக்கின்ற மக்களுக்கு இவை சான்றுகளாகும்.

14. **கடவுள்**–ன் நாட்களை எதிர்பார்க்காதவர்களை மன்னித்து விடும்படி நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுவீராக. ஒவ்வொருவருக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றுக்காக அவர் முழுமையாகக் கூலி கொடுப்பார்.

**44:56 பின் இணைப்பு 17ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை; அவர்கள் ஆதமும் ஏவாளும் முன்னர் வசித்த அதே சுவனத்திற்கு நேரடியாகப் புறப்பட்டுச் செல்கின்றனர். இந்தக் கூற்றுடன் 40:11ல் நம்பமறுப்பவர்களின் கூற்றை ஒப்பிட்டுப் பாருங்கள்.*

**45:6–7 கடவுள் "ஹதீஸ்களைப்" பெயர் குறிப்பிட்டுக் கண்டனம் செய்கின்றார், மேலும் அது இறைநிந்தனையானதொரு புனைந்துரைதான் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றார்.*

15. நன்னெறியான காரியங்கள் புரிகின்ற எவராயினும் தன் சொந்த நலனுக்காகவே அவ்வாறு செய்கின்றார், மேலும் தீய செயல்கள் புரிகின்ற எவராயினும் தனக்கே கேடாகத்தான் அவ்வாறு செய்கின்றார். உங்களுடைய இரட்சகரிடமே நீங்கள் திருப்பப்படு வீர்கள்.

16. இஸ்ரேலின் சந்ததியினருக்கு வேதத்தையும், ஞானத் தையும், நபித்துவத்தையும் நாம் கொடுத்தோம், மேலும் நல்ல வாழ்வாதாரங்களை அவர்களுக்கு வழங்கினோம்; மற்றெந்த மக்களை விடவும் அதிக மான ஆசீர்வாதங்களை அவர்கள் மீது நாம் அருளி னோம்.

17. தெளிவான கட்டளைகளை இதிலே நாம் அவர் களுக்குக் கொடுத்துள்ளோம். முரண்நகையாக, அறிவு அவர்களிடம் வரும் வரை இதனை அவர்கள் தர்க்கிக்கவில்லை. இது அவர்கள் பக்கம் உள்ள பொறாமையின் காரணமாகவேயாகும். நிச்சயமாக, உம்முடைய இரட்சகர் உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளன்று அவர்கள் தர்க்கித்த ஒவ்வொன்றைக் குறித்தும் தீர்ப்பளிப்பார்.

18. பின்னர் சரியான சட்டங்களை நிலைநாட்டுவதற் காக உம்மை நாம் நியமித்தோம்; நீர் இதனைப் பின் பற்ற வேண்டும், மேலும் அறியாதவர்களின் விருப்பங் களைப் பின்பற்றாதீர்.

19. **கடவுள்**–க்கெதிராக எவ்விதத்திலும் அவர்கள் உங்களுக்கு உதவவே இயலாது. வரம்புமீறுபவர்கள் தான் தங்களையே ஒருவருக்கொருவர் கூட்டாளி களாக்கிக் கொள்கின்றனர், அதே சமயம் **கடவுள்** தான் நன்னெறியாளர்களின் இரட்சகராக இருக் கின்றார்.

20. இது மக்களுக்கு அறிவூட்டல்களையும், வழிகாட்ட லையும், உறுதியுடையவர்களுக்குக் கருணையையும் வழங்குகின்றது.

21. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களைப் போன்ற அதேவிதமாக தீய செயல்களைப் புரிபவர்களையும் நாம் நடத்துவோம் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனரா? அவர்களு டைய வாழ்வும் அவர்களுடைய மரணமும் ஒரே மாதிரி இருக்க முடியுமா?* உண்மையில் அவர் களுடைய தீர்ப்பு தவறானதேயாகும்.

22. வானங்களையும் பூமியையும் ஒரு குறிப்பிட்ட நோக் கத்திற்காகவே, **கடவுள்** படைத்தார், சிறிதளவும் அநீதமின்றி, ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அது சம்பா தித்தவற்றிற்கான கூலியைக் கொடுப்பதற்காக.*

*போலித்தெய்வ வழிபாட்டின் ஒரு பொதுவான வடிவம்: அகந்தை ஒரு தெய்வமாக*

23. தன்னுடைய அகந்தையையே தெய்வமாகக் கொண்ட ஒருவனை நீர் கவனித்தீரா? அதன் விளைவாக, அவ னுக்கு அறிவு இருந்த போதிலும், **கடவுள்** அவனை வழிகேட்டில் அனுப்பி, அவனுடைய செவிப்புலனிலும் அவனுடைய மனத்திலும் முத்திரையிடுகின்றார், மேலும் அவனுடைய கண்களின் மீது ஒரு திரையை அமைத்து விடுகின்றார். **கடவுள்**–ன் இத்தகைய தொரு தீர்மானத்திற்குப் பின் எவர் அவனை வழி நடத்த இயலும்? நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டீர்களா?

24. அவர்கள் கூறினர், "இந்த வாழ்வு மட்டுமே நாம் வாழ்கின்றோம்; நாம் வாழ்கின்றோம், மேலும் மரணிக் கின்றோம், மேலும் காலம்தான் நம்முடைய மரணத் திற்குக் காரணமாகின்றது!" இதனைப் பற்றி அவர் களுக்கு உறுதியான அறிவு எதுவும் கிடையாது; அவர் கள் அனுமானம் மட்டுமே செய்கின்றனர்.

25. நம்முடைய வெளிப்பாடுகள் அவர்களிடம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டால், அவர்களுடைய ஒரே வாத மாவது, "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், எங்கள் முன்னோர்களை மீண்டும் கொண்டு வாருங் கள்," என்று கூறுவதாகவே இருந்தது.

26. கூறுவீராக, "**கடவுள்** உங்களுக்கு வாழ்வை வழங் கினார், பின்னர் அவர் உங்களை மரணத்தில் ஆழ்த்துகின்றார், பின்னர் தவிர்த்து விட முடியாத தான, உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளுக்கென உங் களை அவர் ஒன்று திரட்டுவார். ஆனால் அதிகமான மக்கள் அறியமாட்டார்கள்."

27. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் அனைத் தும் **கடவுள்**–க்குரியது. வேளை *(தீர்ப்பு)* நிகழ்ந்தேறும் அந்நாள், அப்போதுதான் பொய்ப்பிப்பவர்கள் நஷ்ட மடைவார்கள்.

*மண்டியிடுதல்*

28. ஒவ்வொரு சமுதாயமும் மண்டியிட்டிருக்க நீர் காண் பீர். ஒவ்வொரு சமுதாயமும் அவர்களுடைய பதிவேட் டைப் பார்ப்பதற்காக அழைக்கப்படும். இன்றைய தினம், நீங்கள் செய்த ஒவ்வொன்றுக்காகவும் நீங்கள் கூலி கொடுக்கப் பெறுவீர்கள்.

**45:21 நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை என்பதை இப்போது நாம் அறிந்திருக்கின்றோம் –அவர்கள் நேரடியாகச் சுவர்க்கம் செல்கின்றனர் (16:32) – அதே சமயம் நன்னெறியற்றவர்கள் மரணத்தின் வானவர்களால் அடித்து நொறுக்கப்படுகின்றனர் (8:50, 47:27).*

**45:22 நம்மை மீட்டுக்கொள்வதற்கு, சாத்தானுடனான நம்முடைய பழமையான கூட்டணியை மறுதலிப்பதற்கு, மேலும் கடவுளின் சாம்ராஜ்யத்தில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கு ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பாக இந்த வாழ்வைக் கடவுள் நமக்கு வழங்கியுள்ளார். பார்க்க முன்னுரை & பின் இணைப்பு 7.*

29. இது நம்முடைய பதிவேடாகும்; உங்களைப் பற்றிய உண்மைகளை அது கூறுகின்றது. நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் நாம் பதிவு செய்து கொண்டிருந்தோம்.

30. நம்பிக்கை கொண்டு நன்னெறியான காரியங்கள் புரிபவர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய இரட்சகர் தன்னுடைய கருணைக்குள் நுழைய அவர்களை அனுமதிப்பார். இதுதான் மகத்தான பெரு வெற்றியாகும்.

31. நம்பமறுப்பவர்களைப் பொறுத்த வரை: "என்னுடைய வெளிப்பாடுகள் உங்களிடம் எடுத்துரைக்கப்படவில்லையா, ஆனால் நீங்கள் ஆணவம் கொண்டவர்களாகி தீயமக்களாக இருக்கவில்லையா ?"

32. **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியம்தான் எனவும், *(தீர்ப்பின்)* வேளை தவிர்த்து விட முடியாதது எனவும் பிரகடனம் செய்யப்பட்டபோது, நீங்கள் கூறினீர்கள், "வேளை என்றால் என்ன என்பதை நாங்கள் அறிய மாட்டோம்! அதனைப் பற்றி நாங்கள் முற்றிலும் அனுமானத்துடனேயே இருக்கின்றோம்; நாங்கள் உறுதியுடையவர்களாக இல்லை."

33. அவர்களுடைய செயல்களின் தீமைகள் அவர்களுக்குத் தெளிவாகப் புலப்பட்டு விடும், மேலும் அவர்கள் கேலி செய்து கொண்டிருந்த அதே விஷயங்கள் திரும்பி வந்து அவர்களை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யும்.

34. இவ்வாறு பிரகடனிக்கப்படும்: "இந்த நாளின் சந்திப்பை நீங்கள் மறந்ததைப் போல அதே விதமாகவே, இன்றைய தினம் நாம் உங்களை மறந்து விடுகின்றோம். நரகநெருப்புதான் உங்களுடைய தங்குமிடமாகும், மேலும் உங்களுக்கு உதவியாளர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

35. "இது ஏனெனில் **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை நீங்கள் வீணானதெனக் கருதினீர்கள், மேலும் முந்திய வாழ்வில் மூழ்கியவர்களாக இருந்தீர்கள்." அதன் விளைவாக, அதிலிருந்து அவர்கள் ஒருபோதும் வெளியேற மாட்டார்கள், அன்றி அவர்கள் பிழை பொறுக்கப்படவும் மாட்டார்கள்.

36. அனைத்துப் புகழும் **கடவுள்**–க்குரியது; வானங்களின் இரட்சகர், பூமியின் இரட்சகர், பிரபஞ்சத்தின் இரட்சகர்.

37. வானங்கள் மற்றும் பூமியில் அனைத்து மேன்மையும் அவருக்குரியது. அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

****

# சூரா 46: மணற்குன்றுகள் (அல்–அஹ்காஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஹ்ஹ. ம.

2. இந்த வேதத்தின் வெளிப்பாடானது எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவரான **கடவுள்**–யிடமிருந்து வந்துள்ளது.

3. வானங்களையும் பூமியையும், மேலும் அவற்றுக்கிடையில் உள்ள ஒவ்வொன்றையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், வரையறுக்கப்பட்டதொரு தவணைக்காகவுமே அன்றி நாம் படைக்கவில்லை. நம்பமறுப்பவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளின்பால் முற்றிலும் கவனமற்றவர்களாகவே இருக்கின்றனர்.

4. கூறுவீராக, "**கடவுள்**–வுடன் நீங்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்களைச் சிந்தித்துப் பாருங்கள். பூமியின் மீது அவை எதனைத்தான் படைத்திருக்கின்றன என்பதை எனக்குக் காட்டுங்கள். வானங்களின் பகுதியினை அவை சொந்தமாகக் கொண்டிருக்கின்றனவா ? இதற்கு முந்திய வேதம் வேறு எதையேனுமோ அல்லது உங்களுடைய போலித்தெய்வ வழிபாட்டிற்கு ஆதரவளிக்கும் நிலைபெற்ற அறிவின் பகுதி எதையேனுமோ, நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் எனக்குக் காட்டுங்கள்."

*போலித் தெய்வங்கள் முற்றிலும் அறியாதிருக்கின்றன*

5. உயிர்த்தெழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்கு ஒரு போதும் மறுமொழியளிக்க முடியாத, மேலும் அவர்களுடைய வழிபாட்டினைக் குறித்து முற்றிலும் அறியாதிருக்கின்ற போலித்தெய்வங்களைக் **கடவுள்**–வுடன் இணைவழிபாடு செய்பவர்களை விட, மிக நெடிய வழிகேட்டில் இருப்பவர்கள் யார் ?

*போலித்தெய்வங்கள் தங்களை வழிபட்டவர்களைக் கைவிட்டு விடுகின்றன**

6. மேலும் *(உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று)* மக்கள் ஒன்று திரட்டப்படும் பொழுது, அவர்களுடைய போலித் தெய்வங்கள் அவர்களுடைய விரோதிகளாகி விடுவார்கள், மேலும் அவர்களுடைய போலித் தெய்வ வழிபாட்டினைப்* பழித்துக் கூறுவார்கள்.

7. முற்றிலும் தெளிவாக, நம்முடைய வெளிப்பாடுகள் அவர்களிடம் எடுத்துரைக்கப்படும் பொழுது, தங்களிடம் வந்த சத்தியத்தைக் குறித்து நம்பமறுப்பவர்கள் கூறுகின்றனர், "இது கண்கூடான மாயாஜாலமேயாகும்!"

**46:6 மத்தேயு 7:21–23 ஐயும் பார்க்கவும். ஜீஸஸ் தன்னை "இரட்சகர்" என்று அழைப்பவர்களை தெளிவாகக் கைவிட்டு விடுகின்றார்.*

8. "இதனை அவர் புனைந்து கொண்டார்," என்று அவர்கள் கூறினால், கூறுவீராக, "இதனை நான் புனைந்து கொண்டிருப்பேனாயின், பின்னர் **கடவுள்**–யிடமிருந்து என்னைக் காக்க உங்களால் இயலாது. நீங்கள் செய்கின்ற சூழ்ச்சி ஒவ்வொன்றையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார். எனக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு சாட்சியாக அவர் போதுமானவர். அவர்தான் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்."

9. கூறுவீராக, "மற்றத் தூதர்களிலிருந்து நான் வேறுபட்டவன் அல்லன். எனக்கோ அல்லது உங்களுக்கோ என்ன நிகழும் என்பது குறித்து எனக்கு அறிவு எதுவும் கிடையாது. எனக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றை மட்டுமே நான் பின்பற்றுகின்றேன். ஆழ்ந்ததொரு எச்சரிப்பவன் என்பதை விட நான் அதிகம் எதுவுமில்லை."

*ரப்பி ஜுதா எனும் பக்திமான்**

10. கூறுவீராக, "**கடவுள்**–யிடமிருந்து இது வந்திருந்து இதனை நீங்கள் நிராகரித்து விட்டால்? இஸ்ரேலின் சந்ததியினரிலிருந்து ஒரு சாட்சி இதைப் போன்றதொரு அற்புத நிகழ்வுக்குச் சாட்சியம் பகர்ந்துள்ளார்,* மேலும் அவர் நம்பிக்கை கொண்டார், ஆயினும் நீங்கள் ஆணவம் கொண்டீர்கள். நிச்சயமாக, பாவிகளான சமூகத்தைக் **கடவுள்** வழிநடத்துவதில்லை."

11. நம்பமறுத்தவர்கள் நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றிக் கூறினர், "அது ஏதேனும் நல்லதாக இருந்திருந்தால், எங்களுக்கு முன்னர் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்." அவர்கள் அதன்பால் வழிநடத்தப்படாததால், அவர்கள் கூறினர், "இது பழமையானதொரு புனைந்துரையேயாகும்!"

12. இதற்கு முன்னர், மோஸஸின் புத்தகம் வழிகாட்டலையும் கருணையையும் வழங்கியது. இதுவும் மெய்ப்பிக்கின்ற ஒரு வேதமாகும், அரபி மொழியில், வரம்பு மீறியவர்களை எச்சரிப்பதற்காக, மேலும் நன்னெறியாளர்களுக்கு நற்செய்தி தருவதற்காக.

*நற்செய்தி*

13. நிச்சயமாக, "**கடவுள்**தான் எங்கள் இரட்சகர்," என்று கூறி, நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களுக்கு அச்சம் எதுவும் இருக்காது, அன்றி அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

14. அவர்கள் சுவனத்திற்குத் தகுதிபெற்று விட்டனர், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்; அவர்களுடைய காரியங்களுக்கொரு வெகுமதி.

*தீர்மானிக்கும் வயது: 40**

15. அவனுடைய பெற்றோரைக் கண்ணியப்படுத்துமாறு நாம் மானிடனை ஏவினோம். அவனுடைய தாய் கஷ்டத்துடன் அவனைச் சுமந்தாள், கஷ்டத்துடன் அவனைப் பிரசவித்தாள், மேலும் முப்பது மாதங்கள் அவன் மீது தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொண்டாள். அவன் பக்குவ முதிர்ச்சி அடைந்து, நாற்பது வயதை அடைந்தவுடன்,* அவன் கூற வேண்டும், "என் இரட்சகரே, என் மீதும் என் பெற்றோர் மீதும் நீர் அருளிய ஆசிகளுக்கு நன்றி பாராட்டுமாறும், மேலும் உமக்கு விருப்பமான நன்னெறிமிக்க காரியங்களைச் செய்யுமாறும் என்னை இயக்குவீராக. அது போலவே என்னுடைய குழந்தைகளையும் நன்னெறியுடன் இருக்கச் செய்வீராக. நான் உம்பால் மீண்டுவிட்டேன்; நான் சரணடைந்த ஒருவனாக இருக்கின்றேன்."

16. இவர்களிடமிருந்துதான் நன்னெறியான காரியங்களை நாம் ஏற்றுக் கொள்வோம், மேலும் அவர்களுடைய பாவங்களைப் பிழை பொறுத்துக் கொள்வோம். அவர்கள் சுவனத்திற்குத் தகுதிபெற்று விட்டனர். இதுவே அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சத்தியம் நிறைந்த வாக்குறுதியாகும்.

17. பின்னர் தன் பெற்றோரிடம் இவ்வாறு கூறுகின்ற ஒருவனும் இருக்கின்றான், "உங்களுக்குக் கேடு தான்; *(மரணத்திற்குப் பின்)* நான் மீண்டும் உயிர் பெறுவேன் என்று நீங்கள் என்னிடம் கூறுகின்றீர்களா? நமக்கு முன்னர் மரணித்தவர்கள் ஒருபோதும் திரும்பி வராதிருப்பது ஏன்?" அவனுடைய பெற்றோர்கள் **கடவுள்**–ன் உதவிக்காகக் கதறுவார்கள், மேலும் கூறுவார்கள், "உனக்குத்தான் கேடு; தயவு செய்து நம்பிக்கை கொள்! **கடவுள்**–ன் வாக்குறுதி சத்தியமானதாகும்." அவன் கூறுவான், "கடந்த காலத்தின் கட்டுக் கதைகள்!"

18. ஜின்கள் மற்றும் மனிதர்களின் ஒவ்வொரு தலைமுறைகளிலும் நம்பமறுப்பவர்களென முத்திரையிடப்பட்டவர்கள் இத்தகையவர்கள்தான். அவர்கள் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர்.

---

**46:10 இந்தச் சாட்சி, வேதத்தின் சிதைவுறாத சில துண்டுப் பகுதிகளில் இதே 19ன் அடிப்படையிலான கணிதக் குறியீட்டைக் கண்டுபிடித்த ரப்பி ஜுதா (கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு), என்னும் பக்திமானாவார் (பார்க்க பின் இணைப்பு 1).*

**46:15 சொர்க்கத்திற்கு செல்லும் தகுதியுடையவர் யார், மேலும் நரகத்திற்குச் செல்லும் தகுதியுடையவர் யார் என்பதைக் கடவுள் முற்றிலும் நன்கறிவார். எவரையெல்லாம் 40வயதுக்கு முன்பு அவர் மரணத்தில் ஆழ்த்தி விடுகின்றாரோ அவர் சுவனத்திற்குச் செல்ல வேண்டும் என்பது அவருடைய சட்டமாகும். பெரும்பான்மையான மக்கள் இந்த தெய்வீகக் கருணையை ஏற்றுக் கொள்ளக் கடினமானதாகக் காண்கின்றனர் என்ற நிதர்சனத்தில் கடவுளின் அளவற்ற கருணை வெளிப்படுகின்றது; அவர்கள் வாதிடுகின்றனர்: "அவர்களை நரகத்தில் போடுங்கள்!" பார்க்க பின் இணைப்பு 32.*

19. அவர்கள் அனைவரும் அவர்களுடைய காரியங்களுக்குத் தக்கவாறு, அவர்களுக்குத் தகுந்த அந்தஸ்துகளைப் பெறுவார்கள். சிறிதளவும் அநீதமின்றி, அவர்களுடைய காரியங்களுக்குரிய கூலியை அவர்களுக்கு அவர் கொடுப்பார்.

20. நம்பமறுப்பவர்களை நரக நெருப்புக்கு அறிமுகப்படுத்துகின்ற அந்நாள் வரும்: "உங்களுடைய உலக வாழ்வின் போது, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நல்ல வாய்ப்புக்களை நீங்கள் வீணடித்து விட்டீர்கள், மேலும் அவற்றில் நீங்கள் களிப்படைந்தீர்கள். அதன் விளைவாக, பூமியில் எந்த அடிப்படையுமின்றி நீங்கள் ஆணவம் புரிந்தமைக்கும், உங்களுடைய கெட்ட காரியங்களுக்கும் ஒரு கூலியாக இன்றைய தினம் இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு நீங்கள் உள்ளாகின்றீர்கள்."

*ஹூத்*

21. ஆதுகளின் சகோதரர் மணற்குன்றுகளில் தன் சமூகத்தாரை எச்சரித்ததை நினைவு கூர்வீராக – அவருக்கு முன்னும் அவருக்குப் பின்னும் எண்ணற்ற எச்சரிக்கைகளும் அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டன: "**கடவுள்**–ஐத் தவிர நீங்கள் வழிபட வேண்டாம். மகத்தானதொரு நாளின் தண்டனையை உங்களுக்கு நான் அஞ்சுகின்றேன்."

22. அவர்கள் கூறினர், "எங்களுடைய தெய்வங்களை விட்டும் எங்களைத் திசை திருப்புவதற்காக நீர் வந்திருக்கின்றீரா ? நீர் உண்மையாளராக இருந்தால், நீர் அச்சுறுத்துகின்றதை *(அத்தண்டனையை)* கொண்டு வருமாறு நாங்கள் உம்மிடம் சவால் விடுகின்றோம்."

23. அவர் கூறினார், "இதனைப் பற்றிய அறிவு **கடவுள்** வசம் உள்ளது; எதனைச் சேர்ப்பிக்க நான் அனுப்பப்பட்டேனோ அதனை மட்டுமே நான் உங்களிடம் சேர்ப்பிக்கின்றேன். இருந்தபோதிலும், அறியாத மக்களாகவே உங்களை நான் காண்கின்றேன்."

24. புயல் அவர்களை நோக்கி வருவதை அவர்கள் கண்ட போது, அவர்கள் கூறினர், "நமக்கு மிகவும் தேவைப்படுகின்ற மழையை இந்தப் புயல் கொண்டு வரும்." மாறாக, கொண்டு வருமாறு *(ஹூதிடம்)* நீங்கள் சவால் விடுத்தது இதுதான்; வலி நிறைந்த தண்டனையை தன்னில் கொண்டுள்ள உக்கிரமான காற்று.

25. தன்னுடைய இரட்சகரின் கட்டளைப்படி ஒவ்வொன்றையும் அது நாசம் செய்தது. அதிகாலையில், அவர்களுடைய வீடுகளைத் தவிர எதுவும் நின்று கொண்டிருக்கவில்லை. குற்றவாளிகளான மக்களுக்கு இவ்விதமாகவே நாம் கூலி கொடுக்கின்றோம்.

*தூதர்களுடைய எச்சரிக்கைகளை அவர்கள் பரிகசித்தனர்*

26. உங்களை நாம் நிறுவிய அதே விதமாகவே அவர்களையும் நாம் நிறுவியிருந்தோம், மேலும் அவர்களுக்குச் செவிப்புலனையும், கண்களையும், மனங்களையும் வழங்கினோம். ஆனால் அவர்களுடைய செவிப்புலனும், கண்களும் மனங்களும் அவர்களுக்கு எவ்வகையிலும் உதவவில்லை. இது ஏனெனில், **கடவுள்**–ன், வெளிப்பாடுகளை அலட்சியம் செய்வதென அவர்கள் தீர்மானித்தனர். இவ்விதமாக, அவர்கள் பரிகசித்த முன்னறிவிப்புகளும் எச்சரிக்கைகளும் அவர்களுடைய அழிவுக்குக் காரணமாயின.

27. அவர்கள் வருந்தக்கூடும் என்பதற்காக, சான்றுகளை நாம் விவரித்த பின்னரே, உங்களைச் சூழ்ந்துள்ள பல சமூகங்களை நாம் அழித்தொழித்தோம்.

28. **கடவுள்**–க்கு நெருக்கமாக அவர்களைக் கொண்டு செல்ல அவர்கள் அமைத்துக் கொண்ட போலித் தெய்வங்கள் பின்னர் ஏன் அவர்களுக்கு உதவி செய்யத் தவறி விட்டன ? மாறாக, அவர்களை அவை கைவிட்டு விட்டன. அவர்கள் இணை வழிபாடு செய்த போலித் தெய்வங்கள் இத்தகையதாகவே இருந்தன; அவர்கள் புனைந்து கொண்ட புதுமைகள் இத்தகையதாகவே இருந்தன.

*ஜின்களில் நம்பிக்கையாளர்கள்**

29. குர்ஆனை அவர்கள் செவியேற்கும் பொருட்டு, சில ஜின்களை நாம் உம்மிடம் வழி நடத்தினோம் என்பதை நினைவு கூர்வீராக. அவை அங்கு வந்து சேர்ந்தவுடன், அவை கூறின,"கவனித்துக் கேளுங்கள்." அது முடிவடைந்துவிட்டவுடன், எச்சரித்தவாறு, அவை தம் சமூகத்தாரிடம் விரைந்தன.*

30. அவை கூறின, "நம் சமூகத்தாரே, மோஸஸுக்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட, முந்திய வேதங்களை மெய்ப்பிக்கின்ற ஒரு புத்தகத்தை நாங்கள் செவியேற்றோம். அது சத்தியத்தின்பால் வழி நடத்துகின்றது; சரியான பாதையின்பால்.

31. "நம் சமூகத்தாரே, **கடவுள்**–ன் அழைப்புக்கு மறுமொழியளியுங்கள், மேலும் அவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அப்போது உங்களுடைய பாவங்களை அவர் மன்னிப்பார், மேலும் வலிநிறைந்ததொரு தண்டனையிலிருந்து உங்களைத் தவிர்த்து விடுவார்."

**46:29* *பல கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் சாத்தான் தன்னுடைய பிரசித்தி பெற்ற இறைநிந்தனையைத் அவன் துவக்கிய பொழுது அவனுடன் முற்றிலும் இசைந்திருந்த படைப்புக்களே ஜின்கள் ஆவர். சாத்தானின் சந்ததியினராக அவர்கள் இவ்வுலகத்திற்குள் கொண்டு வரப்படுகின்றனர். ஒரு மானிடன் பிறக்கும் ஒவ்வொரு முறையும் ஒரு ஜின்னும் பிறக்கின்றது. புதிதாகப் பிறந்த மானிடனைப் போல புதிதாகப் பிறந்த ஜின்னும் அதே உடம்பில் நியமிக்கப்படுகின்றது, மேலும் சாத்தானின் கண்ணோட்டத்தை இடையறாது தூண்டுகிறது (பின் இணைப்பு 7).*

32. **கடவுள்**–ன் அழைப்புக்கு மறுமொழியளிக்கத் தவறி விட்டவர்கள் தப்பித்து விட முடியாது, மேலும் அவரை விடுத்து வேறு இரட்சகர் எவரும் இருக்க மாட்டார்; அவர்கள் மிக நெடிய வழிகேட்டில் சென்று விட்டனர்.

33. சிறிதளவும் பிரயத்தனமின்றி வானங்களையும் பூமி யையும் படைத்த **கடவுள்**, இறந்தவர்களை உயிர்ப்பிக்க ஆற்றலுள்ளவராக இருக்கின்றார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா ? ஆம், மெய்யாகவே; அவர் சர்வசக்தி மிக்கவர்.

34. நம்பமறுப்பவர்கள் நரக நெருப்புக்கு அறிமுகப்படுத்தப் படுகின்ற அந்நாளில், அவர்கள் வினவப்படுவார்கள், "இது சத்தியம்தான் அல்லவா ?" அவர்கள் பதிலளிப் பார்கள், "ஆம், மெய்தான், எங்கள் இரட்சகர் மீது ஆணையாக." அவர் கூறுவார், "அப்படியென்றால் உங்களுடைய நம்பமறுத்தலுக்குரிய தண்டனையை அனுபவியுங்கள்."

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

35. எனவே, வலிமையைக் கொண்டிருந்தும் பொறுமை யைத் தஞ்சமடைந்த உமக்கு முந்திய தூதர்களைப் போல் பொறுமையுடன் இருப்பீராக. தவிர்த்து விட முடியாதவாறு அவர்களிடம் வர இருக்கின்ற தண்டனை யைக் காண அவசரப்படாதீர். அவர்கள் அதனைக் காணும் அந்நாளில், நாளின் ஒரு மணி நேரமே அவர் கள் வாழ்ந்திருந்ததைப் போல் தோன்றும். இது ஒரு பிரகடனமாகும்: தொடர்ந்து அழித்தொழிக்கப்படு பவர்கள் தீயவர்கள்தான் அல்லவா ?

****

## சூரா 47: முஹம்மத்

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. எவர்கள் நம்பமறுப்பதுடன் **கடவுள்**–ன் பாதையை விட்டும் தடுக்கின்றனரோ, அவர்களுடைய காரியங் களை அவர் பயனற்றதாக்கி விடுகின்றார்.

2. எவர்கள் நம்பிக்கை கொள்வதுடன் நன்னெறியான காரியங்களை புரிந்து, மேலும் முஹம்மதுக்கு இறக்கி அனுப்பப்பட்டதில் நம்பிக்கை கொள்கின்றனரோ– அது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தி யமாகும் – அவர்களுடைய பாவங்களை அவர் நீக்கி விடுகின்றார், மேலும் மனத் திருப்தியைக் கொண்டு அவர்களை ஆசீர்வதிக்கின்றார்.

3. இது ஏனெனில், நம்பமறுப்பவர்கள் பொய்மையைப் பின்பற்றுகின்றனர், அதே சமயம் நம்பிக்கை கொண்ட வர்களோ தங்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியத்தைப் பின்பற்றுகின்றனர். **கடவுள்** இவ்வித மாக மக்களுக்கு அவர்களது உதாரணங்களை எடுத் துரைக்கின்றார்.

4. நம்பமறுப்பவர்களை நீங்கள் *(போரில்)* எதிர் கொண் டால், நீங்கள் கழுத்துகளைத் தாக்கலாம். அவர்களை நீங்கள் கைதிகளாகப் பிடித்துக் கொண்டால், போர் முடியும் வரை, அவர்களை நீங்கள் விடுவிக்கலாம், அல்லது ஈடு பெற்றுக் கொண்டு அவர்களை விட்டு விடலாம். **கடவுள்** நாடியிருந்தால், போர் இன்றியே அவர் உங்களுக்கு வெற்றியை வழங்கியிருக்க இய லும். ஆனால் இவ்விதமாக அவர் உங்கள் ஒருவரைக் கொண்டு மற்றவரைச் சோதிக்கின்றார். **கடவுள்**–ன் நிமித்தம் கொல்லப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய தியாகத்தை அவர் ஒருபோதும் வீணாக்கி விட மாட்டார்.

5. அவர்களை அவர் வழிநடத்துவார், மேலும் மனத் திருப்தி கொண்டு அவர்களை ஆசீர்வதிப்பார்.

6. அவர்களுக்கு அவர் வர்ணித்திருந்த சுவனத்தினுள் நுழைய, அவர்களை அவர் அனுமதிப்பார்.

7. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்**–க்கு நீங்கள் ஆதரவளித்தால், அவர் உங்களுக்கு ஆதரவளிப்பார், மேலும் உங்களுடைய நிலைகளை பலப்படுத்துவார்.

8. நம்பமறுப்பவர்கள் துன்பத்திற்கு உள்ளாகின்றனர்; அவர்களுடைய காரியங்களை அவர் முற்றிலும் வீணானதாக ஆக்கி விடுகின்றார்.

9. இது ஏனெனில், அவர்கள் **கடவுள்** வெளிப்படுத்திய வற்றை வெறுத்தனர், மேலும் அதன் விளைவாக, அவர்களுடைய காரியங்களை அவர் பயனற்றதாக்கி விடுகின்றார்.

10. பூமியில் சுற்றித் திரிந்து அவர்களுக்கு முன்னிருந்த வர்களுக்கு நேர்ந்த பின்விளைவுகளை அவர்கள் பார்க்கவில்லையா ? **கடவுள்** அவர்களுடைய காரி யங்களை நாசமாக்கினார்; நம்பமறுப்பவர்கள் அனை வரும் இதே விதியைத்தான் அனுபவிப்பார்கள்.

11. இது ஏனெனில், நம்பிக்கை கொண்டவர்களின் இரட் சகராகக் **கடவுள்** இருக்கின்றார், அதே சமயம் நம்ப மறுப்பவர்களுக்கோ இரட்சகர் இல்லை.

**46:35 குர்ஆனுடைய மற்றும் கணிதத்தினுடைய சான்றுகள், இங்கே உரைக்கப்படும் தூதர் ரஷாத் கலீஃபா தான் என்பதை நிரூபிக்கின்றன. "ரஷாத் கலீஃபா" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் (1230), சூரா எண் (46), மற்றும் வசன எண் (35), ஆகிய வற்றை நாம் கூட்டினால் நமக்குக் கிட்டுவது 1311, அல்லது 19 x 69 ஆகும். இது குர்ஆனுடைய குறியீட்டுடன் இசைந்து செல் கின்றது (பின் இணைப்பு 2).*

12. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களை ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் **கடவுள்** அனுமதிக்கின்றார். நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் வாழ்ந்து கொண்டும், மிருகங்கள் தின்பதைப் போலத் தின்று கொண்டும் இருக்கின்றனர், பின்னர் நரக நெருப்பைச் சென்றடைவார்கள்.

13. உம்முடைய நகரத்தை விட்டு உம்மை வெளியேற்றிய சமூகத்தை விட மிகவும் வலிமையாக எத்தனையோ ஒரு சமூகம் இருந்தது; நாம் அவர்களை அழித்தொழித்த போது, எவர் ஒருவரும் அவர்களுக்கு உதவ இயலவில்லை.

14. தங்களுடைய இரட்கரால் அறிவூட்டப்பெற்றவர்களும், எவர்களுடைய தீய காரியங்கள், அவர்களுடைய கண்களுக்கு அழகாக்கப்பட்டு, தங்களுடைய சுய அபிப்பிராயங்களைப் பின்பற்றுகின்றனரோ அவர்களும் ஒப்பானவர்கள் ஆவார்களா ?

15. நன்னெறியாளர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவனத்தின் உவமானம் இதுவாகும்: அதில் மாசற்ற நீரைக் கொண்ட நதிகளும், மேலும் புத்தம் புதிய பாலாறுகளும், மது ஆறுகளும்—அருந்துபவர்களுக்கு மதுரமானது – வடிகட்டப்பட்ட தேனாறுகளும் உள்ளன. அதிலே அனைத்துக் கனிவர்க்கங்களும், அவர்களுடைய இரட்சகரின் மன்னிப்பும் அவர்களுக்குக் கிடைக்கும். *(அவர்கள் மேலானவர்களா)* அல்லது நரக நெருப்பில் என்றென்றும் தங்கியிருந்து, மேலும் அவர்களுடைய குடல்களைக் கிழித்து விடுகின்ற நரக நீரை அருந்துகின்றவர்களா ?

16. அவர்களில் சிலர் உம்மைக் கவனத்துடன் செவியேற்கின்றனர், பின்னர் அவர்கள் விலகிச் சென்றவுடன் அறிவூட்டப்பெற்றவர்களிடம் அவர்கள் கேட்கின்றனர், "அவர் இப்போது என்ன கூறினார் ?" **கடவுள்** இவ்விதமாக அவர்களுடைய இதயங்களில் முத்திரையிட்டு விடுகின்றார், மேலும் அதன் விளைவாக, அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை மட்டுமே பின்பற்றுகின்றார்கள்.

17. வழிகாட்டப்பெற்றவர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய வழிகாட்டலை அவர் அதிகரிக்கின்றார், மேலும் அவர்களுடைய நன்னெறியை அவர்களுக்கு வழங்குகின்றார்.

*உலகத்தின் முடிவு**

18. வேளை அவர்களிடம் திடீரென வரும் வரை அவர்கள் காத்திருக்கின்றனரா ? அதற்குரிய அடையாளங்கள் அனைத்தும் ஏற்கனவே வந்து விட்டன.* வேளை அவர்களிடம் வந்துவிட்டால், தங்களுக்குரிய தூதுச் செய்தியில் இருந்து எவ்வாறு அவர்கள் பயனடைவார்கள் ?

*லா இலாஹ இல்லல்லாஹ்:*
*முதற் கட்டளை*

19. நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்: "**கடவுள்—வுடன் வேறு தெய்வம் எதுவும் இல்லை,**"* மேலும் உம்முடைய பாவங்களுக்காகவும் நம்பிக்கை கொண்ட ஆண்கள், மற்றும் பெண்கள் அனைவருடைய பாவங்களுக்காகவும் மன்னிப்புக் கேட்பீராக. உங்களுடைய தீர்மானங்களையும் உங்களுடைய இறுதி விதியையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

*நயவஞ்சகர்களை வெளிப்படுத்துதல்*

20. நம்பிக்கை கொண்டவர்கள் கூறினர்; "எப்பொழுது ஒரு புதிய சூரா வெளிப்படுத்தப்படும் ?" ஆனால் சண்டையிடுவதைப் பற்றி அதிலே குறிப்பிடப்பட்ட, நேரடியானதொரு சூரா வெளிப்படுத்தப்பட்ட பொழுது, தங்கள் இதயங்களில் சந்தேகங்களைத் தாங்கியிருந்தவர்கள், மரணம் அவர்களிடம் ஏற்கனவே வந்து விட்டவர்களைப் போல, உம்மை நோக்குவதை நீர் காண்பீர். இவ்விதமாக அவர்கள் வெளிப்படுத்திக் காட்டப்பட்டனர்.

*முஹம்மதுடைய சகாப்தத்தின் போது*
*விசுவாசத்தின் சான்று*

21. கீழ்ப்படிதலும் நன்னெறியான கூற்றுக்களும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. புறப்பாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பொழுது **கடவுள்—**ன் மீது உறுதியான நம்பிக்கையை அவர்கள் மட்டும் காட்டியிருந்தால், அது அவர்களுக்கு மிகவும் மேலானதாக இருந்திருக்கும்.

22. நீங்கள் விலகிச் சென்றவுடன் நீங்கள் தீமைகள் புரியலாம், மேலும் உங்களுடைய உறவினர்களைத் தவறாக நடத்தலாம் என்பதும் உங்களுடைய நோக்கமா ?

23. இவர்கள்தான் **கடவுள்**—யிடமிருந்து சாபத்திற்கு உள்ளானவர்கள், அதன் மூலம் அவர்களைச் செவிடர்களாகவும் குருடர்களாகவும் அவர் ஆக்கினார்.

---

**47:18 இந்தக் குர்ஆன், இறுதி ஏற்பாடாக இருப்பதால், உலகத்தின் முடிவு கி.பி.2280 என்பதைச் சுட்டிக்காட்ட அவசியமான அனைத்து அடையாளங்களையும் வழங்குகின்றது. விபரங்களுக்கு பின் இணைப்பு 25 ஐப் பார்க்கவும்.*

**47:19 பொருள் பொதிந்த விதமாக, மார்க்கத்தின் "முதல் தூண்" முஹம்மத் என்று பெயரிடப்பட்ட சூராவில் கூறப்படுகின்றது, மேலும் அது முற்றிலும் கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டதாக உள்ளது. முஹம்மதின் பெயர் அவரை இணை வழிபாடு செய்பவர்களால், அவருடைய நாட்டத்திற்கு விரோதமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.*

*குர்ஆனை ஆராய்ந்து பாருங்கள்*

24. அவர்கள் ஏன் குர்ஆனைக் கவனத்துடன் ஆராய்ந்து பார்க்காதிருக்கின்றனர்? அவர்களுடைய மனங்களின் மீது அவர்களுக்குப் பூட்டுக்கள் இருக்கின்றனவா?

25. நிச்சயமாக, எவர்கள் வழிகாட்டல் தங்களுக்குத் தெளிவாக்கப்பட்ட பின்னரும், பின்னால் சருகி விடுகின்றார்களோ, அவர்களைச் சாத்தான் மயக்கி விட்டான், மேலும் தவறான வழியில் தொடர்ந்து இட்டுச் சென்று விட்டான்.

26. இது ஏனெனில் **கடவுள்** இறக்கி அனுப்பியவற்றை வெறுத்தவர்களிடம் அவர்கள் கூறினார்கள், "குறிப்பிட்ட சில விஷயங்களில் நாங்கள் உங்களுக்குக் கீழ்ப்படிவோம்." **கடவுள்** அவர்களுடைய இரகசியச் சூழ்ச்சிகளை முற்றிலும் அறிவார்.

27. வானவர்கள் அவர்களை மரணத்தில் ஆழ்த்தும் பொழுது அவர்களுக்கு அது எப்படி இருக்கும்? அவர்களுடைய முகங்களிலும் அவர்களுடைய பின்புறங்களிலும் அவர்களை அவர்கள் அடிப்பார்கள்.

28. இது ஏனெனில் **கடவுள்**–க்குக் கோபமுண்டாக்குபவற்றை அவர்கள் பின்பற்றினார்கள், மேலும் அவருக்குத் திருப்தியளிக்கும் விஷயங்களை வெறுத்தார்கள். அதன் விளைவாக, அவர்களுடைய காரியங்களை அவர் மதிப்பற்றதாக்கி விட்டார்.

29. தங்களுடைய இதயங்களில் சந்தேகங்களைத் தாங்கியிருப்பவர்கள் அவர்களுடைய தீய எண்ணங்களை **கடவுள்** வெளிக்கொணரமாட்டார் என எண்ணிக் கொண்டிருக்கின்றனரா?

30. நாம் நாடினால், அவர்களைப் பார்த்தவுடன் அவர்களை நீர் அடையாளம் கண்டு கொள்ளும் வண்ணம், அவர்களை உமக்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்க இயலும். எனினும், அவர்கள் பேசுகின்ற விதத்தின் மூலம் அவர்களை நீர் அடையாளம் கண்டு கொள்ளலாம். **கடவுள்** உங்களுடைய காரியங்கள் அனைத்தையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

31. உங்களில் பாடுபடுபவர்கள், உறுதிப்பாட்டுடன் தளராதிருப்பவர்கள் யார் என்பதைப் பிரித்துக் காட்டுவதற்காக, நிச்சயமாக நாம் உங்களைச் சோதனையில் ஆழ்த்துவோம். உங்களுடைய மெய்யான தகுதிகளை நாம் வெளிப்படுத்திக் காட்டியாக வேண்டியுள்ளது.

32. நம்பமறுப்பதுடன் **கடவுள்**–ன் பாதையிலிருந்து தடுத்து, மேலும் வழிகாட்டல் அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்ட பின்னரும் தூதரை எதிர்ப்பவர்கள் ஒருபோதும் **கடவுள்**–க்குச் சிறிதளவும் தீங்கிழைக்க முடியாது. மாறாக, அவர்களுடைய காரியங்களை அவர் பயனற்றதாக்கி விடுகின்றார்.

33. நம்பிக்கை கொண்டவர்களே, உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–க்குக் கீழ்ப்படியவும் , தூதருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். இல்லையேல், உங்களுடைய காரியங்கள் அனைத்தும் வீணானவையாகி விடும்.

*மகத்தான பெரு நாசம்*

34. எவர்கள் நம்பமறுப்பதுடன் **கடவுள்**–ன் பாதையிலிருந்து தடுத்து, பின்னர் நம்பமறுப்பவர்களாகவே இறந்து விடுகின்றனரோ, அவர்களைக் **கடவுள்** ஒருபோதும் மன்னிக்க மாட்டார்.

35. எனவே, நீங்கள் தடுமாற்றமடைந்து, சமாதானத்தைத் தேடிச் சரணடையாதிருக்க வேண்டும், ஏனெனில் வெற்றிக்கு நீங்கள் உத்தரவாதமளிக்கப் பட்டுள்ளீர்கள், மேலும் **கடவுள்** உங்களுடன் இருக்கின்றார். ஒருபோதும் உங்களுடைய உழைப்பை அவர் வீணாக்கி விட மாட்டார்.

36. இந்த உலக வாழ்வு விளையாட்டும் வீணும் என்பதை விட அதிகம் எதுவுமில்லை. ஆனால் நீங்கள் நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொரு வாழ்வு நடத்தினால், உங்களிடம் பணம் எதுவும் கேட்காமல், அவர் உங்களுக்கு வெகுமதியளிப்பார்.

37. உங்களுக்கு ஒரு கஷ்டத்தை உண்டாக்கும் அளவுக்கு, அவர் உங்களிடம் பணம் கேட்டிருந்தால், நீங்கள் கஞ்சர்களாகி இருக்கக் கூடும், மேலும் மறைக்கப்பட்டிருக்கின்ற உங்களுடைய தீயவை வெளிப்பட்டிருக்கக் கூடும்.

38. **கடவுள்**–ன் நிமித்தம் செலவு செய்யுமாறு அழைக்கப்படுகின்றவர்களாக நீங்கள் இருக்கின்றீர்கள், ஆனால் உங்களில் சிலர் கஞ்சர்களாக மாறிவிடுகின்றீர்கள். கஞ்சர்கள் தங்களுடைய சொந்த ஆத்மாக்களின்பாலே கஞ்சத்தனம் கொண்டவர்களாக இருக்கின்றனர். **கடவுள்** செல்வந்தராக இருக்கின்றார், அதே சமயம் நீங்களோ ஏழைகளாக உள்ளீர்கள்.

*அரேபியர்களுக்கான எச்சரிக்கை**

**நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், உங்களுடைய இடத்தில் மற்ற மனிதர்களை அவர் மாற்றியமைத்து விடுவார், மேலும் அவர்கள் உங்களைப் போன்று இருக்க மாட்டார்கள்.**

****

## சூரா 48: வெற்றி (அல்–ஃபத்ஹ்)

**47:38 இந்தக் குர்ஆன் அரேபியர்களுக்கு, அவர்களுடைய மொழியில், 1400 வருடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் தெளிவாக அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர், மேலும் அது முழுமையானது என்பதில் நம்பிக்கை கொள்ள மறுத்தனர்; அவர்கள் ஹதீஸ் மற்றும் சுன்னாவைப் புனைந்து கொண்டனர்.*

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. *(தூதரே),* மகத்தானதொரு வெற்றியை நாம் உம் மீது அருளியுள்ளோம்.*

2. அதன் மூலம் உம்முடைய கடந்தகாலப் பாவங்களையும் அவ்வண்ணமே எதிர்காலப் பாவங்களையும் **கடவுள்** மன்னிக்கின்றார், மேலும் உம் மீது தன்னுடைய ஆசீர்வாதங்களைப் பூரணப்படுத்துகின்றார், மேலும் நேரானதொரு பாதையில் உம்மை வழி நடத்துகின்றார்.

3. கூடுதலாக, ஆட்டம் காணாத ஓர் ஆதரவைக் கொண்டு **கடவுள்** உமக்கு ஆதரவளிப்பார்.

4. அவர்தான் நம்பிக்கையாளர்களின் இதயங்களில், அவர்களுடைய விசுவாசத்துடன் கூடுதலாக மேலும் விசுவாசத்தை அதிகரிப்பதற்காக, மனத் திருப்தியை அமைத்தவர். வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்துப் பட்டாளங்களும் **கடவுள்**–க்கே உரியவை. **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

5. நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் அவர் நிச்சயமாக நுழைய அனுமதிப்பார், அதிலே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்களுடைய பாவங்களை அவர் மன்னிப்பார். இதுதான், **கடவுள்**–ன் பார்வையில், மகத்தானதொரு பெருவெற்றியாகும்.

6. மேலும் நயவஞ்சக ஆண்களையும் பெண்களையும், போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற ஆண்களையும் பெண்களையும் அவர் பழி தீர்ப்பார். ஏனெனில் அவர்கள் **கடவுள்**–ஐப் பற்றிக் கெட்ட எண்ணங்களைத் தாங்கியிருந்தனர். அவர்களுடைய தீமை அவர்களுக்கெதிரான விளைவுகளையே திருப்பித் தரும். ஏனெனில் **கடவுள்** அவர்கள் மீது கோபம் கொண்டிருக்கின்றார், அவர்களைக் கண்டனம் செய்கின்றார், மேலும் அவர்களுக்காக எரிகிடங்கைத் தயார் செய்துள்ளார். என்ன ஒரு துன்பகரமான விதி!

7. வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்துப் படைகளும் **கடவுள்**–க்கு உரியவை. **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

8. ஒரு சாட்சியாக, ஒரு நற்செய்தி சுமப்பவராக, மேலும் ஓர் எச்சரிப்பவராக உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.

9. அதன் மூலம் மக்களாகிய நீங்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொண்டு, மேலும் அவரிடம் பக்தி கொண்டு, மேலும் அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து, மேலும் பகலும் இரவும் அவரைத் துதிக்கும் பொருட்டு.

*கடவுளின் தூதருக்கு நீங்கள்*
*ஆதரவளிக்க வேண்டும்*

10. நிச்சயமாக, உம்மிடம் விசுவாசம் கொள்வதாக வாக்குறுதியளிப்பவர்கள், **கடவுள்**–யிடமே விசுவாசம் கொள்வதாக வாக்குறுதியளிக்கின்றனர். **கடவுள்** அவர்களுடைய வாக்குறுதியை அங்கீகரிக்கின்றார்; அவர்களுடைய கரங்களுக்கு மேலே அவர் தன்கரத்தை வைக்கின்றார். இத்தகையதொரு வாக்குறுதியை மீறுபவர்கள், தங்களுக்கே கேடாகத்தான் அம்மீறுதலைப் புரிகின்றனர். **கடவுள்**–வுடனான தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களைப் பொறுத்த வரை, மகத்தானதொரு பிரதிபலனை அவர்களுக்கு அவர் வழங்குவார்.

11. பின்தங்கியவர்களாக உட்கார்ந்து கொண்ட அரேபியர்கள் கூறுவார்கள், "எங்களுடைய பணம் மற்றும் குடும்பங்களில் மூழ்கியவர்களாக நாங்கள் இருந்து விட்டோம், எனவே எங்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்பீராக!" அவர்களுடைய இதயங்களில் இல்லாததைத் தங்கள் நாவுகளால் அவர்கள் உதிர்க்கின்றனர். கூறுவீராக, "அவர் உங்களுக்கு ஏதேனும் துன்பத்தை நாடியிருந்தால், **கடவுள்**–யிடமிருந்து உங்களைக் காக்க எவரால் இயலும், அல்லது அவர் உங்களுக்கு ஏதேனும் ஆசீர்வாதத்தை நாடியிருந்தால் ?" நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

12. தூதரும் நம்பிக்கையாளர்களும் தோற்கடிக்கப்படுவார்கள், மேலும் ஒருபோதும் அவர்களுடைய குடும்பத்தாரிடம் திரும்பி வர மாட்டார்கள் என்று நீங்கள் இரகசியமாக எண்ணிக் கொண்டீர்கள், மேலும் இது உங்களுடைய இதயங்களில் உறுதியாக நிலைபெற்றிருந்தது. நீங்கள் கெட்ட எண்ணங்களைத் தாங்கியிருந்தீர்கள், மேலும் தீய மக்களாக மாறிவிட்டீர்கள்.

13. எவரொருவர் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொள்ள மறுக்கின்றாரோ, நம்பமறுப்பவர்களுக்கொரு நரகநெருப்பை நாம் தயார் செய்துள்ளோம்.

**48:1 நமது தலைமுறைதான் கடவுளின் தூய்மைப்படுத்தப்பட்ட, ஒன்றுபடுத்தப்பட்ட, மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட மார்க்கமான – சரணடைதலுக்குரிய (3:19,85) வெற்றித் தலைமுறையாகும் என்பதைக் குறிக்கும் விதமாக, ஆழ்ந்த இவ்வாசகம் 19 எழுத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. நமது தலைமுறைதான் குர்ஆனிலுள்ள கடவுளுடைய மகத்தான அற்புதத்தின் வெளிப்பாடுகளுக்கு சாட்சியானது (பின் இணைப்பு 1).*

14. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் **கடவுள்**–க் குரியது. தான் நாடுகின்ற எவரையும் அவர் மன்னிக்கின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் தண்டிக்கின்றார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

15. போரில் சூறையாடப்பட்ட பொருள்களைச் சேகரிப்பதை நீங்கள் எதிர்பார்த்திருக்கும் பொழுது, பின் தங்கியவர்களாக உட்கார்ந்து கொண்டவர்கள் கூறுவார்கள், "இதில் பங்கு பெறுவதற்காக உங்களைப் பின்தொடர எங்களை அனுமதியுங்கள்!" இவ்விதமாக அவர்கள் **கடவுள்**–ன் வார்த்தைகளை மாற்றி விட விரும்புகின்றனர். கூறுவீராக, "நீங்கள் எங்களைப் பின்தொடர மாட்டீர்கள். இதுதான் **கடவுள்**–ன் தீர்மானமாகும்." அவர்கள் அப்போது கூறுவார்கள், "*(பின்தங்கி விட்டதால்)* நீங்கள் எங்கள் மீது பொறாமை கொண்டிருக்கின்றீர்கள் போலும்." உண்மையில், அவர்கள் அரிதாகவே எதனையும் புரிந்து கொள்கின்றனர்.

*ஆரம்பத் தலைமுறையினருக்குரிய சோதனை*

16. பின்தங்கியவர்களாக அமர்ந்து கொண்ட அரேபியர்களிடம் கூறுவீராக, "வலிமை நிறைந்த மக்களைச் சந்திப்பதற்காகவும், மேலும் அவர்கள் சரணடையா விட்டால், அவர்களுடன் சண்டையிடுவதற்காகவும் நீங்கள் அழைக்கப்படுவீர்கள். நீங்கள் கீழ்ப்படிந்தால், தாராளமானதொரு பிரதிபலனைக் கொண்டு **கடவுள்** உங்களுக்கு வெகுமதியளிப்பார். ஆனால் கடந்த காலத்தில் நீங்கள் செய்ததைப் போல், நீங்கள் மீண்டும் திரும்பிச் சென்று விட்டால், வலி நிறைந்ததொரு தண்டனையைக் கொண்டு உங்களை அவர் பழி வாங்குவார்."

17. பார்வையற்றோர் குற்றம் சாட்டப்படுவதற்கில்லை, முடவர்களும் குற்றம் சாட்டப்படுவதற்கில்லை, மேலும் நோயாளிகளும் குற்றம் சாட்டப்படுவதற்கில்லை. எவர்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படிகின்றனரோ, அவர்களை ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் நுழைய அவர் அனுமதிப்பார். திரும்பிச் சென்று விடுபவர்களைப் பொறுத்தவரை, வலி நிறைந்ததொரு தண்டனையைக் கொண்டு அவர்களை அவர் பழி வாங்குவார்.

18. உம்மிடம் விசுவாசம் கொள்வதாக மரத்தின் அடியில் வாக்குறுதியளித்த நம்பிக்கையாளர்களிடம் **கடவுள்** திருப்தியடைந்தார். அவர்களுடைய இதயங்களில் இருந்தவற்றை அவர் அறிந்திருந்தார், மேலும் அதன் விளைவாக, மனத் திருப்தியைக் கொண்டு அவர்களை அவர் ஆசீர்வதித்தார், மேலும் உடனடியானதொரு வெற்றியைக் கொண்டு அவர்களுக்கு அவர் வெகுமதியளித்தார்.

19. கூடுதலாக, ஏராளமான சூறைப் பொருட்களை அவர்கள் அடைந்தனர். **கடவுள்** எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

20. ஏராளமான சூறைப்பொருட்களை நீங்கள் அடைவீர்கள் என்று **கடவுள்** உங்களுக்கு வாக்களித்துள்ளார். இவ்விதமாக அவர் சில பலன்களை இந்த வாழ்விலேயே உங்களுக்கு முற்படுத்தினார், மேலும் உங்களுக்கெதிராக மக்களின் அத்துமீறுகின்ற கரங்களை அவர் தடுத்து நிறுத்தினார், மேலும் நம்பிக்கையாளர்களுக்கு இதனை ஓர் அத்தாட்சியாக ஆக்கினார். இவ்விதமாக, அவர் உங்களை நேரானதொரு பாதையில் வழிநடத்துகின்றார்.

21. நீங்கள் தோற்கடிக்கச் சாத்தியமில்லாத கூட்டத்தைப் பொறுத்தவரை, **கடவுள்** அவர்களைக் கவனித்துக் கொண்டார்; **கடவுள்** சர்வ சக்தியுடையவர்.

*வெற்றியானது நம்பிக்கையாளர்களுக்கு உத்தரவாதமளிக்கப்படுகின்றது*

22. நம்பமறுப்பவர்கள் எப்பொழுதேனும் உங்களிடம் சண்டையிட்டால், அவர்கள் புறங்காட்டித் திரும்பி ஓடி விடுவார்கள். அவர்களுக்கு எந்த இரட்சகரும் எஜமானரும் இல்லை; அவர்களுக்கு உதவியாளரும் இல்லை.

23. வரலாறு முழுவதும் **கடவுள்**–ன் வழிமுறை இத்தகையதேயாகும், மேலும் **கடவுள்**–ன் வழிமுறை மாற்ற முடியாதது என்பதை நீர் காண்பீர்.

24. அவர்தான் உங்களுக்கெதிரான அவர்களுடைய அத்துமீறுகின்ற கரங்களைத் தடுத்து நிறுத்தினார், மேலும் அவர்கள் மீது உங்களுக்கு அவர் வெற்றியை வழங்கிய பின்னர், மக்காப் பள்ளத்தாக்கில் அவர்களுக்கெதிரான உங்களுடைய அத்துமீறல் கரங்களைத் தடுத்து நிறுத்தினார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

25. அவர்கள்தான் நம்பமறுத்து, புனிதப் பள்ளியை விட்டு உங்களைத் தடுத்தவர்கள், மேலும் உங்களுடைய அர்ப்பணங்கள் அவற்றிற்குரிய சேருமிடத்தை அடைவதையும் கூடத் தடை செய்தவர்கள். அங்கே *(எதிரிகளின் பாசறைக்குள்)* நீங்கள் அறிந்திராதவர்களான நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும் இருந்தனர், மேலும் நீங்கள் அறியாத நிலையில், அவர்களுக்குத் தீங்கிழைக்க இருந்தீர்கள். **கடவுள்** இவ்விதமாக தான் நாடுகின்ற எவரையும் தன்னுடைய கருணைக்குள் நுழைய அனுமதிக்கின்றார். அவர்கள் பிடிவாதம் செய்தால், அவர்களுக்கிடையில் உள்ள நம்பமறுப்பவர்களை வலி நிறைந்ததொரு தண்டனையைக் கொண்டு அவர் பழி வாங்குவார்.

26. நம்பமறுப்பவர்கள் கோபம் கொண்டவர்களாகி அவர்களுடைய இதயங்கள் அறியாமை நாட்களின் பெருமையால் நிறைந்திருந்த அதே சமயம், **கடவுள்** தன்னுடைய தூதரையும் நம்பிக்கையாளர்களையும் சாந்தி நிறைந்த மனத்திருப்தியைக் கொண்டு ஆசீர்வதித்தார், மேலும் நன்னெறியின் வார்த்தையை ஆதரிப்பதின்பால் அவர்களைச் செலுத்தினார். இதற்குத்தான் அவர்கள் நன்கு தகுதி பெற்றிருந்தனர். **கடவுள்** அனைத்துப் பொருட்களையும் நன்கு அறிந்தவராக இருக்கின்றார்.

27. **கடவுள்** தன்னுடைய தூதர் கண்ட சத்தியம் நிறைந்த தொலைநோக்கினை நிறைவேற்றி விட்டார்: "**கடவுள்** நாட்டப்படி, பூரணப் பாதுகாப்புடன், நீங்கள் புனிதப் பள்ளியில் நுழைவீர்கள், மேலும் *(புனித யாத்திரையின் சடங்குகளை நீங்கள் நிறைவு செய்தவாறு)* அங்கே உங்கள் முடிகளை சிரைத்துக் கொள்வீர்கள், அல்லது அதனைக் குறைத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. நீங்கள் அறியாதவற்றை அவர் அறிந்திருந்ததால், இத்துடன் உடனடியானதொரு வெற்றியையும் அவர் இணைத்துள்ளார்."

*மகத்தான முன்னறிவிப்பு**

28. அவர்தான் வழிகாட்டலையும் சத்திய மார்க்கத்தையும் கொண்டு தன்னுடைய தூதரை அனுப்பினார், மற்ற அனைத்து மார்க்கங்களையும் அது மிகைக்குமாறு செய்வதற்காக. ஒரு சாட்சியாகக் **கடவுள்** போதுமானவர்.*

*நம்பிக்கையாளர்களின் தனிப்பண்புகள்*

29. முஹம்மத் – **கடவுள்**–ன் தூதர் – மற்றும் அவருடன் இருப்பவர்கள் நம்பமறுப்பவர்களிடம் கடினமாகவும் கண்டிப்பாகவும், ஆனால் தங்களுக்கிடையில் கனிவுடனும் இரக்கத்துடனும் இருக்கின்றனர். அவர்கள் **கடவுள்**–ன் ஆசிகளையும் உவப்பையும் தேடிய வண்ணம், குனிந்தவர்களாகவும் சிரம்பணிந்தவர்களாகவும் அவர்களை நீர் காண்கின்றீர். சிரம்பணிதலின் காரணத்தினால், அவர்களுடைய அடையாளங்கள் அவர்களுடைய முகங்களில் உள்ளன. இது தோராவில் உள்ளதைப் போன்ற அதே உதாரணமாகும். சுவிசேஷத்தில் அவர்களுடைய உதாரணமானது உயரமாகவும் பலமாகவும் வளர்ந்து, விவசாயிகளை மகிழ்வடையச் செய்கின்ற தாவரங்களைப் போன்றதாகும். இவ்விதமாக அவர் நம்பமறுப்பவர்களுக்குக் கோபமூட்டுகின்றார். அவர்களுக்கிடையில் நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களுக்கு மன்னிப்பையும் மகத்தானதொரு பிரதிபலனையும் **கடவுள்** வாக்களிக்கின்றார்.

****

# சூரா 49: சுவர்கள் (அல்–ஹுஜுராத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உங்களுடைய அபிப்பிராயங்களை **கடவுள்** மற்றும் அவருடைய தூதருடையவற்றிற்கு மேலாக வைக்காதீர்கள். நீங்கள் **கடவுள்** மீது பக்தி செலுத்த வேண்டும். **கடவுள்** செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

2. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், நபியின்* குரலுக்கு மேலாக உங்களுடைய குரல்களை உயர்த்தாதீர்கள், அன்றியும் நீங்கள் உணர்ந்து கொள்ளாத பொழுதே உங்களுடைய காரியங்கள் மதிப்பற்றதாக ஆகிவிடாதிருக்கும் பொருட்டு, நீங்கள் ஒருவர் மற்றவரிடம் கூச்சலிடுவதைப் போன்று அவரிடம் நீங்கள் கூச்சலிட வேண்டாம்.

3. நிச்சயமாக, **கடவுள்**–வுடைய தூதரிடத்தில் தங்களுடைய குரல்களைத் தாழ்த்திக் கொள்பவர்களுடைய இதயங்கள்தான் நன்னெறியுடையவையாக இருப்பதற்காக **கடவுள்**–ஆல் தயார் செய்யப்படுகின்றன.* அவர்கள் மன்னிப்பிற்கும் மகத்தானதொரு பிரதிபலனுக்கும் தகுதி பெற்று விட்டனர்.

**48:28 தவிர்த்து விட முடியாதவாறு முழு உலகிலும் ஆதிக்கம் செலுத்தப்போவது சரணடைதலே என்பதை முக்கியமான இம்முன்னறிவிப்பு நமக்கு அறிவிக்கின்றது. இது, வசனங்கள் **9:33, 41:53** மற்றும் **61:9** ஆகியவற்றுடன் சேர்ந்து, இம்முன்னறிவிப்பில் குர்ஆனுடைய கடவுளின் கணித அற்புதம் ஒரு முக்கிய பங்கை ஆற்றும் என்பதில் எந்த ஐயத்தையும் விட்டு வைக்கவில்லை. குர்ஆனுடைய திடமான கணித ஆதாரங்கள், கடவுளின் உடன்படிக்கைத் தூதர் இம் முன்னறிவிப்பை நிறைவேற்றுவதாகச் சுட்டிக் காட்டுகின்றது. ஆதாரங்களுக்கும் குறிப்பான விபரங்களுக்கும் பின் இணைப்பு **2 & 26** ஐப் பார்க்கவும்.*

**49:2 முஹம்மதைக் குறிப்பதாக "நபி" என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் பொழுதெல்லாம், அது மாற்றமேதுமின்றி அவருடைய வாழ்வின் போது அவரைக் குறிக்கின்றதே அல்லாமல், அவருடைய இறப்பிற்குப் பின்னர் அல்ல. மிகத் தெளிவாக, இப்பொழுது அவர் இறந்து விட்டதால் முஹம்மதின் குரலுக்கு மேலாக நம்முடைய குரல்களை உயர்த்துவதற்கு சாத்தியமேயில்லை. மேலும் பார்க்க **33:56**.*

**49:3 தூதருக்கு மதிப்பளிப்பது வெளியாட்களும், சந்திக்க வருபவர்களும் கடவுளின் தூதுச் செய்திக்குள் வருவதற்கு உதவுகின்றது.*

4. சுவர்களுக்கு வெளியே இருந்து கொண்டு உம்மை அழைப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்களில் அதிகமானோர் புரிந்து கொள்வதில்லை.

5. நீர் அவர்களிடம் வெளியே வரும் வரை அவர்கள் பொறுமையாக இருந்திருந்தால், அது அவர்களுக்கு மேலானதாக இருந்திருக்கும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*வதந்திகளை நம்புவதற்கு முன்*
*அவற்றை விசாரித்துக் கொள்ளுங்கள்*

6. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், தீய மனிதன் ஒருவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டு வந்தால், அறியாமையின் காரணத்தால் சில மனிதர்களுக்கு எதிராக நீங்கள் அநியாயம் புரிந்து விட்டு, பின்னர் நீங்கள் செய்தவற்றுக்காக வருத்தமும் கைசேதமும் அடையாதிருக்கும் பொருட்டு, முதலில் நீங்கள் விசாரித்துக் கொள்ள வேண்டும்.

7. மேலும் **கடவுள்**–ன் தூதர் உங்கள் மத்தியில் வந்திருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பல விஷயங்களில் அவர் உங்களுடைய பேச்சைக் கேட்டிருந்தால், காரியங்களை நீங்கள் உங்களுக்கே கடினமானதாக ஆக்கிக் கொண்டிருந்திருப்பீர்கள். ஆனால் **கடவுள்** உங்களை விசுவாசத்தை நேசிக்கும் படிச் செய்தார், மேலும் உங்களுடைய இதயங்களில் அதனை அழகானதாக ஆக்கினார் மேலும் அவர் உங்களை நம்பமறுத்தல், தீய நடத்தை, மற்றும் கீழ்ப்படியாமையை வெறுக்கும்படிச் செய்தார். இவர்கள் தான் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

8. **கடவுள்**–யிடம் இருந்து அருளும் அவருடைய ஆசீர்வாதங்களும் இத்தகையதேயாகும். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

*நம்பிக்கையாளர்களை இணக்கப்படுத்துங்கள்*

9. நம்பிக்கையாளர்களின் இரு குழுமங்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டால், நீங்கள் அவர்களை இணக்கப்படுத்த வேண்டும். ஒரு குழுமம் மற்றதற்கு எதிராக அத்துமீறல் செய்தால், அவர்கள் **கடவுள்**–ன் கட்டளைக்குச் சரணடையும் வரை, அத்துமீறும் குழுமத்துடன் நீங்கள் சண்டையிட வேண்டும். அவர்கள் சரணடைந்தவுடன், இரு குழுமங்களையும் நீங்கள் நீதத்துடன் இணக்கப்படுத்த வேண்டும். நீங்கள் நீதியைப் பராமரிக்க வேண்டும்; நீதமாக இருப்பவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

*அசலான குடும்பம்*

10. நம்பிக்கையாளர்கள் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஆவர்; உங்களுடைய குடும்பத்திற்குள் நீங்கள் சமாதானம் பேணவும், மேலும் **கடவுள்** மீது பக்தி செலுத்தவும் வேண்டும், நீங்கள் கருணையை அடைந்திடும் பொருட்டு.

*நம்பிக்கையாளர்கள்*
*உதாரணம் அமைக்கின்றனர்*

11. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், எந்த சமூகத்தவரும் மற்ற சமூகத்தவரைப் பரிகசிக்க வேண்டாம், ஏனெனில் அவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். அன்றி எந்தப் பெண்களும் மற்றப் பெண்களை பரிகசிக்க வேண்டாம், ஏனெனில் அவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். அன்றியும் நீங்கள் ஒருவர் மற்றவரைக் கேலி செய்யவோ, உங்களுடைய பெயர்களில் கிண்டல் செய்யவோ வேண்டாம். விசுவாசத்தை அடைந்து விட்ட பின்னர் தீய நடத்தையின் பால் திரும்புவது மெய்யாகவே கெட்டதாகும். எவரொருவர் இதன் பின்னரும் வருந்தவில்லையோ, இவர்கள் தான் வரம்புமீறுபவர்கள் ஆவர்.

*சந்தேகம் பாவகரமானது*

12. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், எந்தச் சந்தேகத்தையும் நீங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் ஒரு சிறு அளவு சந்தேகம் கூடப் பாவகரமானதாகும். நீங்கள் ஒருவர் மற்றவரை வேவு பார்க்க வேண்டாம், அன்றி நீங்கள் ஒருவர் மற்றவரைப் புறங்கூறவும் வேண்டாம்; இது உங்களுடைய இறந்து போன சகோதரனுடைய மாமிசத்தைத் தின்பதைப் போல வெறுப்புக்குரியதாகும். நீங்கள் நிச்சயமாக இதனை வெறுப்பீர்கள். நீங்கள் **கடவுள்**–க்கு அஞ்ச வேண்டும். **கடவுள்** மீட்பவர், மிக்க கருணையாளர்.

*மக்களுக்கிடையில் வேறுபடுத்திக்*
*காண்பதற்கான ஒரே அளவுகோல்*

13. மக்களே, ஒரே ஆண் மற்றும் பெண்ணிலிருந்து உங்களை நாம் படைத்தோம், மேலும் நீங்கள் ஒருவர் மற்றவரை அடையாளம் கண்டு கொள்வதற்காக, உங்களை வெவ்வேறு சமூகங்களாகவும் இனங்களாகவும் ஆக்கினோம். **கடவுள்**–ன் பார்வையில் உங்களில் மிகவும் சிறந்தவர் மிகவும் நன்னெறி மிக்கவரே ஆவார். **கடவுள்** எல்லாம் அறிந்தவர், நன்கு அறிந்தவர்.

*முஸ்லிமும் முஃமினும்*

14. அரேபியர்கள் கூறினார்கள், "நாங்கள் முஃமின்கள் *(நம்பிக்கையாளர்கள்).*" கூறுவீராக, "நீங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை; நம்பிக்கை உங்கள் இதயங்களில் நிலைபெறும் வரை, நீங்கள் கூற வேண்டியது என்னவென்றால், 'நாங்கள் முஸ்லிம்கள் *(சரணடைந்தவர்கள்).*'" **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படிந்தால், உங்களுடைய காரியங்களில் எதனையும் அவர் வீணாக்கி விட மாட்டார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

15. முஃமின்கள் *(நம்பிக்கையாளர்கள்)* எவர்கள் என்றால் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொண்டு, பின்னர் எத்தகைய சந்தேகமு மற்ற நிலைப்பாட்டை அடைந்து, மேலும் தங்களு டைய பணத்தையும் தங்களுடைய வாழ்வுகளையும் கொண்டு **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுபவர்களே யாவர். இவர்கள்தான் உண்மையாளர்கள் ஆவர்.

16. கூறுவீராக, "உங்களுடைய மார்க்கத்தைப் பற்றி **கடவுள்**–க்கே நீங்கள் தெரியப்படுத்துகின்றீர்களா ? வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்குத் தெரியும். **கடவுள்** எல்லாம் அறிந்தவர்."

*யாருக்கு யார் சலுகை புரிகின்றார் ?*

17. சரணடைதலைத் தழுவுவதன் மூலம் உமக்கு ஏதோ ஓர் உபகாரம் புரிந்து விடுவதைப் போல் அவர்கள் நடந்து கொள்கின்றனர் ! கூறுவீராக, "சரணடை தலைத் தழுவுவதன் மூலம் நீங்கள் எனக்கு எந்த உப காரங்களும் புரிந்து விட வில்லை. நீங்கள் உண்மை யானவர்களாக இருந்தால், விசுவாசத்தின் பால் உங் களை வழிநடத்தியதன் மூலம் **கடவுள்**தான் உங் களுக்கு மகத்தான தொரு உபகாரம் புரிந்துள்ளார்."

18. வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்து இரக சியங்களும் **கடவுள்**–க்குத் தெரியும்; நீங்கள் செய் கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக் கின்றார்.

****

## சூரா 50: க்க (காஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. க்க., மற்றும் மகிமை மிக்க இக்குர்ஆன்.*

2. அவர்களிலிருந்தே ஓர் எச்சரிப்பவர் அவர்களிடம் வந் தார் என்பதை அவர்கள் வினோதமானதாகக் கண்ட னர் ! நம்பமறுப்பவர்கள் கூறினர், "இது உண்மையி லேயே வினோதமானதாகும்.

3. "நாம் இறந்து மண்ணாக ஆன பின்னர்; இது சாத்திய மற்றதாகும்."

4. அவர்களில் பூமியால் உட்கொள்ளப்படுகின்ற எந்த ஒருவரையும் நாம் முற்றிலும் அறிந்தே இருக்கின் றோம். மிகத் துல்லியமானதொரு பதிவேட்டை நாம் வைத்திருக்கின்றோம்.

5. சத்தியம் அவர்களிடம் வந்த போது அவர்கள் அதனை ஏற்க மறுத்தனர்; அவர்கள் முற்றிலும் குழம்பியவர் களாக இருக்கின்றனர்.

6. அவர்களுக்கு மேலே உள்ள வானத்தை, ஒரு குறை யும் இன்றி, எவ்வாறு நாம் அதனை நிர்மாணித்திருக் கின்றோம், மேலும் அழகுபடுத்தியிருக்கின்றோம் என்பதை அவர்கள் கவனித்துப் பார்க்கவில்லையா ?

7. மேலும் நாம் பூமியைப் படைத்தோம், அத்துடன் அதன் மீது மலைகளைத் தூவினோம், மேலும் அனைத்து வகைகளிலான அழகிய தாவரங்களையும் அதில் முளைப்பித்தோம்.

8. இது ஓர் அறிவூட்டலாகும், மேலும் பக்தி கொண்டு வழிபடக்கூடியவர் ஒவ்வொருவருக்கும் ஒரு நினை வூட்டலுமாகும்.

9. மேலும் தோட்டங்களையும் அறுவடைக்குரிய தானி யங்களையும் முளைப்பிப்பதற்காக, ஆசீர்வதிக்கப் பட்ட தண்ணீரை விண்ணிலிருந்து நாம் அனுப்பி னோம்.

10. குலைகளில் பழம் கொண்ட, நெடிதுயர்ந்த பேரீத்தம் பனைகள்.

11. மக்களுக்குரிய வாழ்வாதாரங்கள். மேலும் அதனைக் கொண்டு நாம் இறந்து விட்ட நிலங்களை உயிர்ப்பிக் கின்றோம்; இதைப் போலவே நீங்கள் உயிர்த்தெழுப் பப்படுவீர்கள்.

12. அவர்களுக்கு முன்னர் நோவாவின் சமூகத்தவரும், ரஸ்வாசிகளும், மேலும் தமூதுகளும் நம்பமறுத்துக் கொண்டிருந்தனர்.

13. மேலும் ஆதுகளும், ஃபேரோவும், மேலும் லோத்தின் சகோதரர்களும்.

14. மேலும் வனத்தில் வசித்த மக்களும், துப்பஉ சமூகத்தவரும். அவர்கள் அனைவரும் தூதர்களை நம்பமறுத்தனர், மேலும் அதன் விளைவாக, என் தண்டனை அவர்கள் மீது ஏற்பட்டு விட்டது.

15. முதல் படைப்பால் நமக்கு மிகவும் சுமையாகி விட்ட தா ? இதனால்தான் உயிர்த்தெழுப்பப்படுதலை அவர் கள் சந்தேகிக்கின்றனரா ?

16. நாமே மானிடனை படைத்தோம், மேலும் அவன் தனக்குள் கிசுகிசுத்துக் கொள்வது என்ன என்பதை யும் நாம் அறிவோம். அவனுடைய பிடரி நரம்பை விடவும் அவனுக்கு மிகவும் நெருக்கமாக நாம் இருக் கின்றோம்.

17. பதிவு செய்கின்ற இரண்டு *(வானவர்கள்)*, வலப்புறமும் இடப்புறமும், விடாமல் தொடர்ந்து பதிந்து கொண்டிருக் கின்றனர்.

**50:1 "க்க" என்ற துவக்க எழுத்துடன் தொடர்புடைய பிரமிப்பூட்டும் அற்புதங்களுக்கு பின் இணைப்பு 1ஐப் பார்க்கவும்.*

18. விழிப்புடனிருக்கின்ற ஒரு சாட்சியின்றி, எந்த ஒரு கூற்றையும் அவன் கூறுவதில்லை.

19. இறுதியில், தவிர்க்க முடியாத அந்த மரண மயக்கம் வருகின்றது; நீ தவிர்த்து விட முயன்றது இதுவே தான்.

20. கொம்பு ஊதப்படுகின்றது; இதுதான் வாக்களிக்கப் பட்ட நாளாகும்.

21. ஒவ்வொரு ஆத்மாவும் ஒரு மேய்ப்பவருடனும் ஒரு சாட்சியுடனும் வரும்.

22. இதைப் பற்றி நீ கவனமற்றவனாக இருந்து வந்தாய், உன்னுடைய திரையை இப்போது நாம் விலக்குகின் றோம்; இன்றைய தினம், உனது பார்வை எஃகு *(போல் உறுதி)* ஆக இருக்கின்றது.

23. அக்கூட்டாளி கூறினான், "இதோ என்னுடைய வலி மையான சான்று."*

24. பிடிவாதமான நம்பமறுப்பவன் ஒவ்வொருவனையும் எரிகிடங்கிற்குள் வீசுங்கள்.

25. தர்மத்தைத் தடுப்பவன், அத்துமீறுபவன், சந்தேகம் நிறைந்தவன்.

26. **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வத்தை அவன் அமைத் துக் கொண்டான். கடுமையான தண்டனைக்குள் அவனைத் தள்ளுங்கள்.

27. அவனுடைய கூட்டாளி கூறினான், "எங்கள் இரட்ச கரே, நான் அவனை வழிதவறச் செய்யவில்லை; அவனே மிக நெடிய வழிகேட்டில் இருந்தான்."

28. அவர் கூறினார், "என் முன்னால் தர்க்கித்துக் கொண் டிருக்காதீர்கள்; உங்களை நான் போதுமான அளவு எச்சரித்து விட்டேன்.

29. "இப்போது எதுவும் மாற்றப்பட முடியாது. நான் ஒரு போதும் மக்களுக்கு அநீதமிழைப்பவன் அல்லன்."

30. அந்நாளில்தான் நரகத்தை நாம் கேட்போம், "உனக் குப் போதுமானதாக இருக்கின்றதா ?" அது கூறும், "எனக்கு இன்னும் அதிகமாகத் தருவீராக."

31. நன்னெறியாளர்களுக்கு, தாமதமின்றி சுவனம் முன் வைக்கப்படும்.

32. வருந்துகின்றவர், உறுதிப்பாடு உடையவர் ஒவ்வொரு வருக்கும் வாக்களிக்கப்பட்டிருந்தது இதுதான்.

33. தங்களுடைய தனிமையிலும், அவர்கள் மிக்க அருளாளரிடம் பக்தியுடனிருந்தனர், மேலும் முழு மனத்துடன் வந்தனர்.

34. சாந்தியோடு அதனுள் நுழையுங்கள்; இதுதான் நிலை யான நாளாகும்.

35. அவர்கள் விரும்புகின்ற எந்த ஒன்றும் அதிலே அவர் களுக்குக் கிடைக்கும், மேலும் அதை விடவும் அதிக மாக நாம் வைத்திருக்கின்றோம்.

36. அவர்களுக்கு முன்னர், அதிக வலிமைநிறைந்தவர் களாக இருந்த எத்தனையோ ஒரு தலைமுறையினை நாம் அழித்தோம். அவர்கள் பூமியை ஆராய்ந்தனர்; தப்பிக்கும் வழி ஒன்றை அவர்கள் கண்டனரா ?

37. மனம் ஒன்றைக் கொண்ட, அல்லது செவியேற்கவும் பார்க்கவும் திறன் கொண்ட ஒவ்வொருவருக்கும் இது ஒரு படிப்பினையாகத் திகழ வேண்டும்.

38. வானங்களையும் பூமியையும், மேலும் அவற்றிற் கிடையில் உள்ள ஒவ்வொன்றையும் ஆறு நாட்களில் நாம் படைத்தோம், அதனால் எந்தக் களைப்பும் நம் மைத் தீண்டிவிடவில்லை.

39. எனவே, அவர்களுடைய கூற்றுகளுக்கு எதிராகப் பொறுமையுடன் இருப்பீராக, மேலும் சூரியோதயத் திற்கு முன்னரும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்ன ரும் உம் இரட்சகரைப் புகழவும் துதிக்கவும் செய் வீராக.

40. இரவுப் பொழுதிலும், சிரம்பணிதலுக்குப் பின்னரும் அவருடைய பெயரை நீங்கள் தியானிக்க வேண்டும்.

41. அருகில் உள்ள ஓர் இடத்திலிருந்து அழைப்பவர் அழைக்கின்ற அந்நாளுக்காகத் தயார்படுத்திக் கொள்வீராக.

42. தவிர்த்து விட முடியாத அந்த ஓலத்தை அவர்கள் செவியேற்கும் பொழுது; அந்த நாளில்தான் நீங்கள் வெளியில் வருவீர்கள்.

43. நாம்தாம் வாழ்வையும் மரணத்தையும் கட்டுப் படுத்து கின்றோம்; இறுதி விதி நம்மிடமே உள்ளது.

44. அவர்களை வெளித்தள்ளியவாறு, பூமி அவசரமாக உடைந்து விடும் அந்நாள் வரும். இவ்விதமான ஒன்று திரட்டுதலைச் செய்வது நமக்கு எளிதானதேயாகும்.

45. அவர்கள் கூறுகின்ற ஒவ்வொன்றையும் நாம் முற்றிலும் அறிந்தே இருக்கின்றோம், அதே சமயம் அவர்கள் மீது உமக்கு அதிகாரம் எதுவும் இல்லை. எனவே, என்னு டைய எச்சரிக்கைகளை அஞ்சுபவர்களுக்கு, இந்தக் குர்ஆனைக் கொண்டு நினைவூட்டுவீராக.

**50:23–28 உங்களுடைய வாழ்நாள் கூட்டாளி நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றுக்கும் சாட்சியாக இருக்கின்றார். பார்க்க பின் இணைப்பு 7.*

# சூரா 51: காற்றுகளைச் செலுத்துவோர் (அல்–தாரியாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வீசுகின்ற காற்றுகள்.
2. மழையைச் சுமந்தவாறு.
3. வாழ்வாதாரங்களைக் கொண்டு வந்தவாறு.
4. கட்டளைப்படி அவற்றை விநியோகித்தவாறு.
5. உங்களுக்கு வாக்களிக்கப்பட்டது நிச்சயமாக நிகழ்ந்தே தீரும்.
6. தீர்ப்பு நாள் தவிர்த்து விட முடியாதது.
7. வானம் குறையின்றிப் படைக்கப்பட்டிருந்த போதிலும்.
8. நீங்கள் தொடர்ந்து சத்தியத்தைத் தர்க்கித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.
9. விலகிச் செல்பவர்களே அதிலிருந்து விலகிச் செல்கின்றனர்.
10. பொய்ப்பிப்பவர்களுக்குக் கேடுதான்.
11. அவர்களுடைய மூடத்தனமான தவறுகளில், அவர்கள் முற்றிலும் கவனமற்றவர்களாக இருக்கின்றனர்.
12. தீர்ப்பு நாளை அவர்கள் சந்தேகிக்கின்றனர்.
13. நெருப்பின்பால் அவர்கள் கொண்டுவரப்படுகின்ற அந்நாளில்.
14. தண்டனையைச் சுவையுங்கள்; இதனைத்தான் நீங்கள் சவால் விட்டுக் கொண்டிருந்தீர்கள்.
15. நன்னெறியாளர்களோ தோட்டங்களுக்கும் ஊற்றுகளுக்கும் தகுதி பெற்று விட்டனர்.
16. தங்களுடைய இரட்சகரின் வெகுமதிகளை அவர்கள் பெறுவார்கள், ஏனெனில் அவர்கள் பக்தியுடையவர்களாகவே இருந்து வந்தனர்.
17. அரிதாகவே அவர்கள் இரவு முழுக்க உறங்கினர்.
18. விடியலில், அவர்கள் மன்னிப்புக்காகப் பிரார்த்தித்தனர்.
19. அவர்களுடைய பணத்தின் ஒரு பகுதி பிச்சைகாரர்களுக்கும், தேவையுடையவர்களுக்கும் என ஒதுக்கி வைக்கப்பட்டது.
20. உறுதியுடையவர்களுக்கு பூமியானது அத்தாட்சிகளால் நிறைந்துள்ளது.
21. மேலும் உங்களுக்குள்ளேயும்; உங்களால் பார்க்க முடிகின்றதா ?
22. உங்களுடைய வாழ்வாதாரமும், மேலும் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் வானத்தில் தான் உள்ளது.
23. வானம் மற்றும் பூமியின் இரட்சகர் மீது ஆணையாக, நீங்கள் பேசுகின்றீர்கள் எனும் நிதர்சனத்தைப் போல் இது அவ்வளவு சத்தியமானதாகும்.
24. ஆப்ரஹாமின் கண்ணியமான விருந்தினர்களின் வரலாற்றை நீர் கவனித்தீரா ?
25. "சாந்தி" என்று கூறியவர்களாக, அவர்கள் அவரைச் சந்தித்தனர். அவர் கூறினார், "அறிமுகமில்லாதவர்களே, உங்களுக்கு சாந்தி!"
26. கொழுத்ததொரு காளைக் கன்றினைத் தயாரிக்குமாறு தன் குடும்பத்தாரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.
27. அவர்களிடம் அதனை அவர் சமர்ப்பித்த போது, அவர் கவனித்தார், "நீங்கள் உண்ண மாட்டீர்களா ?"
28. அவர்களைப் பற்றி அவர் அச்சம் கொண்டார். அவர்கள் கூறினர், "அச்சம் எதுவும் கொள்ளாதீர்," மேலும் அவர்கள் அறிவாற்றலுடைய ஒரு மகனைப் பற்றிய நற்செய்தியைக் கொடுத்தனர்.
29. அவருடைய மனைவி வியப்படைந்தார். சுருக்கம் விழுந்த தனது முகத்தைச் சுட்டிக் காட்டியவாறு: "நான் ஒரு மலட்டுக் கிழவியாக இருக்கின்றேன்."
30. அவர்கள் கூறினர், "உம்முடைய இரட்சகர் இவ்விதமே சொன்னார். அவர் ஞானம் மிகுந்தவர், அனைத்தும் அறிந்தவர்."
31. அவர் கூறினார், "நீங்கள் வந்திருக்கும் விஷயம் என்ன, தூதர்களே ?"
32. அவர்கள் கூறினர், "குற்றம் புரிந்த சமூகத்தவரிடம் நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம்.
33. "களிமண்ணாலான பாறைகளை அவர்கள் மீது நாம் பொழிவோம்.
34. "வரம்புமீறுபவர்களுக்கென உம்முடைய இரட்சகரால் குறியிடப்பெற்றவை."
35. பின்னர் நம்பிக்கையாளர்கள் அனைவரையும் நாம் காப்பாற்றினோம்.
36. சரணடைந்தவர்களின் ஒரு வீட்டினை அன்றி அதனில் நாம் காணவில்லை.
37. வலிநிறைந்த தண்டனையை அஞ்சுகின்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக அதனை நாம் அமைத்தோம்.
38. மோஸஸிடம் *(ஒரு படிப்பினை உள்ளது)*. தெளிவான சான்றுகளுடன் ஃபேரோவிடம் நாம் அவரை அனுப்பினோம்.
39. ஆனால் அவன் ஆணவத்தினால், திரும்பிக் கொண்டான், மேலும் கூறினான், "மந்திரவாதி, அல்லது கிறுக்கர்."

40. அதன் விளைவாக, அவனையும் அவனுடைய படையினரையும் நாம் தண்டித்தோம். அவர்களை நாம் கடலுக்குள் வீசினோம். மேலும் அவன்தான் அதற்குப் பொறுப்பானவனாக இருந்தான்.

41. ஆதுகளிடம் *(ஒரு படிப்பினை உள்ளது)* பேரழிவான காற்றை அவர்கள் மீது நாம் அனுப்பினோம்.

42. அது புகுந்து வந்த எந்த ஒன்றும் முற்றிலும் சின்னாபின்னமாக்கப்பட்டது.

43. தமூதுகளிடம் *(ஒரு படிப்பினை உள்ளது)* அவர்களிடம் கூறப்பட்டது. "தற்காலிகமாகச் சுகமனுபவியுங்கள்."

44. தங்களுடைய இரட்சகரின் கட்டளைக்கெதிராக அவர்கள் கலகம் செய்தனர். அதன் விளைவாக, அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே மின்னல் அவர்களைத் தாக்கியது.

45. அவர்கள் ஒருபோதும் எழ முடியவில்லை, அன்றி அவர்கள் உதவி செய்யப்படவுமில்லை.

46. அதற்கு முன்னர், நோவாவின் சமூகத்தார்; அவர்கள் தீய மக்களாக இருந்தனர்.

*"விரிவடையும் பிரபஞ்சம்" எனும் கோட்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது*

47. நம்முடைய கரங்களால் வானத்தை நாம் நிர்மாணித்தோம். மேலும் நாம் தொடர்ந்து அதனை விரித்துக் கொண்டிருப்போம்.

48. மேலும் பூமியை வசிக்கத்தக்கதாக நாம் ஆக்கினோம்; மிகச்சரியானதொரு வடிவமைப்பு .

49. நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொன்றிலும் *(ஆண் மற்றும் பெண் என)* ஒரு ஜோடியை நாம் படைத்தோம்.

50. நீங்கள் **கடவுள்** பால் தப்பித்துச் செல்ல வேண்டும். தெளிவானதொரு எச்சரிப்பவனாக உங்களிடம் நான் அவரால் அனுப்பப்பட்டுள்ளேன்.

51. **கடவுள்**–வுடன் வேறு எந்தத் தெய்வத்தையும் அமைத்துக் கொள்ளாதீர்கள். தெளிவானதொரு எச்சரிப்பவனாக உங்களிடம் நான் அவரால் அனுப்பப்பட்டுள்ளேன்.

52. ஒரே சீராக, முந்திய தலைமுறையினரிடம் ஒரு தூதர் சென்ற பொழுதெல்லாம், அவர்கள் கூறினர், "மந்திரவாதி," அல்லது, "கிறுக்கர்."

53. அவர்கள் ஒருவருக்கொருவர் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளனரா ? உண்மையில், அவர்கள் வரம்பு மீறுபவர்களாக இருக்கின்றனர்.

54. அவர்களை நீர் அலட்சியம் செய்யலாம்; உம்மைக் குற்றம் சுமத்த இயலாது.

55. மேலும் நினைவூட்டுவீராக, ஏனெனில் நம்பிக்கையாளர்களுக்கு நினைவூட்டல் பலனளிக்கும்.

*நமது வாழ்வின் நோக்கம்*

56. என்னை மட்டுமே வழிபடுவதற்காகவே அன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் படைக்கவில்லை.

57. வாழ்வாதாரங்கள் எதுவும் அவர்களிடமிருந்து எனக்குத் தேவையில்லை, அன்றியும் எனக்கு உணவு புகட்டவும் அவர்களுடைய தேவை எனக்கு இல்லை.

58. **கடவுள்**தான் வழங்குபவர், அனைத்துச் சக்தியின் உடமையாளர், மேலதிகாரம் உடையவர்.

59. வரம்புமீறுபவர்கள் அவர்களுடைய முந்திய சகாக்களைப் போன்ற அதே விதிக்கு உள்ளாகி விட்டனர்; அவர்கள் சவால் விட வேண்டாம்.

60. அவர்களுக்காகக் காத்திருக்கும் அந்நாளில் நம்பமறுப்பவர்களுக்குக் கேடுதான்.

****

# சூரா 52: சினாய் மலை (அல்–தூர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. சினாய் மலை.

2. பதிவு செய்யப்பட்ட வேதம்.

3. புத்தகங்களில் பதிப்பிக்கப்படுவது.

4. அடிக்கடி தரிசிக்கப்படும் ஆலயம்.

5. உயர்த்தப்பட்ட முகடு.

6. பற்றி எரியச் செய்யப்பட்ட கடல்.

7. உம்முடைய இரட்சகரின் பழிதீர்த்தல் தவிர்க்கப்பட முடியாதது.

8. பிரபஞ்சத்தின் எந்தச் சக்தியும் அதனைத் தடுத்து விட இயலாது.

9. வானம் உக்கிரமாகக் குமுறும் அந்நாள் வரும்.

10. மலைகள் துடைத்தெடுக்கப்பட்டு விடும்.

11. நம்பமறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான் –

12. தங்களுடைய மடத்தனமான தவறுகளில், அலட்சிய மாக இருப்பவர்கள்.

13. வலுக்கட்டாயமாக எரிகிடங்கிற்குள் அவர்கள் ஓட்டிச் செல்லப்படுவார்கள்.

14. இதுதான் நீங்கள் நம்பமறுத்துக் கொண்டிருந்த நெருப்பாகும்.

15. இது மாயாஜாலமா, அல்லது நீங்கள் பார்க்கவில் லையா ?

16. கருகுதலுக்கு உட்படுங்கள். நீங்கள் பொறுமை யுடனோ அல்லது பொறுமையின்றியோ இருந்த போதிலும், அது உங்களுக்கு சமமாகவே இருக்கும். இதுவே நீங்கள் செய்தவற்றுக்கான நியாயமான பழி தீர்த்தலாகும்.

17. நன்னெறியாளர்கள் தோட்டங்களுக்கும் பேரானந் தத்திற்கும் தகுதி பெற்று விட்டனர்.

18. அவர்களுடைய இரட்சகர் அவர்களுக்காகத் தயார் செய்தவற்றை அவர்கள் அனுபவிப்பார்கள்; அவர்களு டைய இரட்சகர் நரகத்தின் தண்டனையிலிருந்து அவர்களைத் தவிர்த்து விட்டார்.

19. உங்களுடைய காரியங்களுக்குரிய பிரதிபலனாக, மகிழ்ச்சியுடன் உண்ணுங்கள், மேலும் பருகுங்கள்.

20. ஆடம்பரமான ஆசனங்களில் அவர்கள் ஓய்வை அனுபவிப்பார்கள், மேலும் நாம் அழகிய துணைகளை அவர்களுக்கு இணைசேர்ப்போம்.

21. நம்பிக்கை கொண்டவர்களையும், மேலும் நம்பிக்கை யில் அவர்களைப் பின் தொடர்ந்த அவர்களுடைய பிள்ளைகளையும், அவர்களுடைய பிள்ளைகளுடன் அவர்கள் சேர்ந்து கொள்ளுமாறு நாம் செய்வோம். எந்தக் காரியத்திற்கும் அவர்களுக்கு வெகுமதி யளிக்க நாம் ஒருபோதும் தவற மாட்டோம். ஒவ் வொரு மனிதரும் அவர் செய்தவற்றுக்குரிய கூலி கொடுக்கப்படுபவராக இருக்கின்றார்.

22. பழங்களையும் அவர்கள் விரும்புகின்ற இறைச்சி களையும் அவர்களுக்கு நாம் வழங்குவோம்.

23. ஒருபோதும் கெட்டுப்போகாத, மேலும் அருந்து வதற்கு ஒருபோதும் பாவகரமாக இல்லாத பானங் களை அவர்கள் அனுபவிப்பார்கள்.

24. பாதுகாக்கப்பட்ட முத்துகளைப் போன்ற பணியாளர் கள் அவர்களுக்குப் பரிமாறுவார்கள்.

25. ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டு தங்களுக் கிடையில் மலரும் நினைவுகளை அவர்கள் பகிர்ந்து கொள்வார்கள்.

26. அவர்கள் கூறுவார்கள், "நம் மக்களுக்கிடையில் கனிவுடனும் எளிமையுடனும் நாம் இருந்து வந்தோம்.

27. "**கடவுள்** நம்மை ஆசீர்வதித்து விட்டார், மேலும் கொ டிய காற்றுகளின் வேதனையிலிருந்து நம்மைத் தவிர்த்து விட்டார்.

28. "அவரை இறைஞ்சுவதை நாம் வழமையாகக் கொண் டிருந்தோம். அவர் மிக்க கனிவானவர், மிக்க கரு ணையாளர்."

*தூதர்*

29. நீர் மக்களுக்கு நினைவூட்ட வேண்டும். உம் மீதான உம்முடைய இரட்சகரின் ஆசீர்வாதத்தால், நீர் ஒரு ஜோசியக்காரர் அல்லர், அன்றி கிறுக்கரும் அல்லர்.

30. அவர்கள் கூறக்கூடும், "அவர் ஒரு கவிஞர்; அவர் இறந்து போகும் வரை நாம் சற்றுக் காத்திருப்போம்."

31. கூறுவீராக, "காத்துக் கொண்டே இருங்கள்; நானும் உங்களுடன் சேர்ந்து காத்துக் கொண்டிருப்பேன்."

32. அவர்களுடைய கனவுகள்தான் அவர்களுடைய நட வடிக்கைகளை ஏவுகின்றதா, அல்லது இயல்பிலேயே அவர்கள் தீயவர்களாக இருக்கின்றனரா ?

33. "அவரே இது அனைத்தையும் உருவாக்கிக் கொண் டார்," என்று அவர்கள் கூறுகின்றனரா ? அல்ல, அவர் கள் நம்பமறுப்பவர்களாக இருக்கின்றனர், அவ்வளவு தான்.

*"முஹம்மதியர்கள்" கடவுளுக்குச் சவால் விட்டு **ஹதீஸ்**களைக் கொண்டு வருகின்றனர்*

34. அவர்கள் உண்மையாளர்களாக இருந்தால், இது போன்ற ஒரு *ஹதீஸை* அவர்கள் கொண்டு வரட்டும்.

35. இல்லாத ஒன்றிலிருந்து அவர்கள் படைக்கப்பட்டு விட்டனரா ? அவர்கள் தான் படைப்பாளர்களா ?

36. வானங்களையும் பூமியையும், அவர்களா படைத்த னர் ? உண்மையில், அவர்கள் உறுதி கொண்டிருக்க வில்லை.

37. உம்முடைய இரட்சகரின் பொக்கிஷங்களை அவர்கள் சொந்தங் கொண்டிருக்கின்றனரா ? தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருக்கின்றனரா ?

38. அவர்கள் செவிமடுக்க வகை செய்யும் ஓர் ஏணியில் அவர்கள் ஏறுகின்றனரா ? அவர்களில் செவிமடுப் பவர்கள் தங்களுடைய சான்றுகளைக் காட்டட்டும்.

39. நீங்கள் மகன்களைக் கொண்டிருக்கின்ற அதே சமயம், அவர் மகள்களைக் கொண்டிருக்கிறாரா ?

40. அவர்களிடம் நீர் கூலி எதுவும் கேட்கின்றீரா, மேலும் அதனால் அவர்கள் சுமத்தப்பட்டு விட்டனரா ?

41. எதிர்காலத்தை அவர்கள் அறிந்திருக்கின்றனரா, மேலும் அதனைப் பதிவு செய்து வைத்திருக்கின்றனரா ?

42. அவர்கள் இரகசியத் திட்டங்களும் சூழ்ச்சிகளும் செய்கின்றனரா ? நம்பமறுப்பவர்களின் சூழ்ச்சிகள் அவர்களுக்கெதிராகவே திருப்பித் தாக்கும்.

43. **கடவுள்**–வுடன் மற்றொரு தெய்வம் அவர்களுக்கு இருக்கின்றதா ? **கடவுள்** துதிப்பிற்குரியவர், பங்காளி களைக் கொண்டிருப்பதை விட்டும் மிக மேலானவர்.

44. விண்ணிலிருந்து பாளங்கள் விழுவதை அவர்கள் பார்க்கும் போது, அவர்கள் கூறுவார்கள், "அடுக்கடுக் கான மேகங்கள் !"

45. அவர்கள் தாக்கப்படுகின்ற அந்நாளை அவர்கள் சந்திக்கும் வரை அவர்களை அலட்சியம் செய்வீராக.

46. அந்நாளில், அவர்களுடைய சூழ்ச்சிகள் அவர்களைக் காப்பாற்றாது, அன்றி அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.

47. வரம்புமீறுபவர்கள் இங்கேயே தண்டனைக்கு ஆட்படு கின்றனர், ஆனால் அவர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்.

48. உம்முடைய இரட்சகரின் கட்டளையை நிறைவேற்று வதில் நீர் உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து இருக்க வேண்டும் – நீர் நம் கண்களின் முன்னே இருக்கின் றீர் – மேலும் நீர் எழுந்திடும் பொழுதெல்லாம் உம் இரட்சகரைத் துதிக்கவும் புகழவும் செய்வீராக.

49. அத்துடன் இரவுப் பொழுதிலும், நட்சத்திரங்கள் மங்கிக் கொண்டே செல்லும் விடியலிலும் அவரைத் துதிப்பீராக.

****

## சூரா 53: நட்சத்திரங்கள் (அல்–நஜ்ம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நட்சத்திரங்கள் வீழ்ந்து விலகிச் சென்ற போது.*

2. உங்களுடைய தோழர் *(முஹம்மத்)* வழி தவறியவராக இருக்கவில்லை, அன்றி அவர் ஏமாற்றப்பட்டவராக வும் இருக்கவில்லை.

3. அன்றி அவர் சுயவிருப்பத்தின்படி பேசவும் இல்லை.

4. தெய்வீக உள்ளுணர்வாகவே அது இருந்தது.

5. மிகுந்த சக்தியுடையவரால் எடுத்துக் கூறப்பட்டது.

6. அனைத்து அதிகாரங்களுக்கும் உடமையாளர். அவரது அதிஉயரமான உயரத்தில் இருந்து.

7. மிக உயரமான அடிவானத்தில்.

8. இறங்கி வருவதன் மூலம் அவர் மிக அருகில் நெருங்கி வந்தார்.

9. சாத்தியமான அளவு மிக அருகில் அவர் ஆகும் வரை.

10. பின்னர் வெளிப்படுத்தப்பட இருந்தவற்றைத் தன் ஊழியருக்கு அவர் வெளிப்படுத்தினார்.

11. மனமானது அது கண்டவற்றை ஒருபோதும் உரு வாக்கி கொள்ளவில்லை.

12. அவர் கண்டவற்றை நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா ?

13. அவர் மற்றொரு இறங்குதலிலும் அவரைக் கண்டார்.

14. மிகத் தொலைவிலுள்ள இடத்தில்.

15. நிரந்தரமான சுவனம் அமைந்திருக்கும் இடத்தில்.

16. அந்த இடம் முழுவதும் மூழ்கியிருந்தது.

17. கண்களானது தடுமாறவில்லை, அன்றிக் குருடாகிப் போகவும் இல்லை.

18. அவர் தன் இரட்சகரின் மிகப்பெரும் அத்தாட்சிகளைக் கண்டார்.

*பலஹீனமான போலித்தெய்வங்கள்*

19. பெண் போலித் தெய்வங்களான, அல்லாத் மற்றும் அல்–உஸ்ஸாவுடன் இதனை ஒப்பிட்டுப் பாருங்கள்.

20. மேலும் மூன்றாவதான மனாத்தையும்.

21. இவற்றை மகள்களாக அவர் கொண்டிருக்கின்ற அதே சமயம், நீங்கள் மகன்களைக் கொண்டிருக் கின்றீர்களா ?

22. என்ன ஒரு கேவலமான பங்கீடு !

23. இவை நீங்கள் புனைந்து கொண்ட பெயர்களேயன்றி வேறில்லை, நீங்களும் உங்களுடைய மூதாதையர் களும். இத்தகையதொரு இறை நிந்தனைக்குக் **கடவுள்** ஒருபோதும் அங்கீகாரம் அளிக்கவில்லை. அவர்களுடைய இரட்சகரிடமிருந்து அவர்களுக்கு சத்திய வழிகாட்டல் இதிலே வந்துள்ள பொழுது, அவர் கள் அனுமானங்களையும் சுய விருப்பங்களையும் பின்பற்றுகின்றனர்.

**53:1–18 முஹம்மது இந்தக் குர்ஆனைத் தனது இதயத்தில் பெறுவதற்காக மிக உயர்ந்த பிரபஞ்சத்திற்கு அழைத்துச் செல் லப்பட்டார். ஒளியின் வேகத்தைப் போன்று கோடி மடங்குகளில் அவற்றின் ஊடே அவர் பயணிக்கையில் நட்சத்திரங்கள் வீழ்ந்து விலகிச் சென்றன. அதன் பின்னர், குர்ஆன் படிப்படியாக அவருடைய நினைவினில் வெளிப்படுத்தப்பட்டது. தயவு செய்து பார்க்க பின் இணைப்பு 28.*

24. மானிடன் எதனைத்தான் விரும்புகின்றான்?

25. மறுவுலகம் மற்றும் இவ்வுலகம் ஆகிய இரண்டும் **கடவுள்**–க்கே உரியவை.

26. விண்ணில் உள்ள வானவர்கள் கூடப் பரிந்துரைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. அவருடைய நாட்டம் மற்றும் அவருடைய அங்கீகாரம் ஆகிய வற்றுக்கொப்பச் செயல்படுகின்றவர்கள் மட்டுமே **கடவுள்**–ஆல் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

27. மறுவுலகை நம்பமறுப்பவர்கள் வானவர்களுக்குப் பெண்பால் பெயர்களைக் கொடுத்திருக்கின்றனர்.

28. அவர்களுக்கு இதுபற்றி எந்த அறிவும் இல்லை; அவர்கள் அனுமானிக்க மட்டுமே செய்கின்றனர். அனுமானமானது சத்தியத்திற்கு மாற்று ஆகாது.

*உங்களுடைய நண்பர்களைக்*
*கவனத்துடன் தேர்ந்தெடுங்கள்*

29. நம்முடைய செய்தியிலிருந்து திரும்பிக் கொள்வதுடன், இவ்வுலக வாழ்வில் மூழ்கிவிட்டவர்களை நீர் அலட்சியம் செய்து விட வேண்டும்.

30. அவர்களுடைய அறிவின் எல்லை இதுதான். உம் இரட்சகர் தன்னுடைய பாதையிலிருந்து வழி தவறிச் சென்று விட்டவர்கள் யார் என்பதை முற்றிலும் அறிந்திருக்கின்றார், மேலும் வழிகாட்டப்பட்டவர்களையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

31. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–க்கே உரியது. தீமை புரிபவர்களுக்கு அவர்களுடைய காரியங்களுக்குரிய கூலியை அவர் கொடுப்பார், மேலும் நன்னெறியாளர்களுக்கு அவர்களுடைய நன்னெறிக்குரிய வெகுமதியளிப்பார்.

32. அவர்கள் சிறு குற்றங்களைத் தவிர, பெரும் பாவங்களையும் வரம்புமீறுதல்களையும் தவிர்த்துக் கொள்வார்கள். உம்முடைய இரட்சகரின் மன்னிப்பு மிகவும் அளப்பரியது ஆகும். மண்ணிலிருந்து அவர் உங்களைத் துவக்கியது முதல், நீங்கள் உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளில் கருக்களாக இருந்த சமயத்திலும் உங்களைப்பற்றி அவர் முற்றிலும் அறிந்தவராக இருந்து வந்திருக்கின்றார். எனவே, உங்களையே நீங்கள் உயர்த்திக் கொள்ளாதீர்கள்; நன்னெறியாளர்களை அவர் முற்றிலும் அறிந்தே இருக்கின்றார்.

33. திரும்பிச் சென்று விட்ட ஒருவனை நீர் கவனித்தீரா?

34. அரிதாகவே அவன் தர்மம் கொடுத்தான், மேலும் அப்போதும் மிகக் குறைவாகவே.

35. எதிர்காலத்தைப் பற்றிய அறிவை அவன் பெற்றிருக்கின்றானா? அவனால் அதனைப் பார்க்க முடிகின்றதா?

36. மோஸஸின் வேதத்தில் உள்ள படிப்பினைகளைப் பற்றி அவனுக்குத் தெரியப்படுத்தப் படவில்லையா?

37. மேலும் நிறைவேற்றிய ஆப்ரஹாமைப் பற்றி?

38. எந்த ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவின் பாவங்களைச் சுமக்காது.

39. ஒவ்வொரு மானிடனும் தன்னுடைய சொந்தக் காரியங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றான்.

40. மேலும் ஒவ்வொருவருடைய காரியங்களும் எடுத்துக் காட்டப்படும்.

41. பின்னர் இத்தகைய காரியங்களுக்கு உரியது அவர்களுக்குக் முழுமையாகச் செலுத்தப்படும்.

42. இறுதி விதியானது உம்முடைய இரட்சகரிடமே உள்ளது.

43. அவர்தான் உங்களைச் சிரிக்கவோ அல்லது அழவோ வைக்கின்றவர்.

44. அவர்தான் மரணத்தையும் வாழ்வையும் கட்டுப் படுத்துகின்றவர்.

*குழந்தையின் பால்வகையைக்*
*கணவனே தீர்மானிக்கின்றான்*

45. அவர்தான் ஆண் மற்றும்பெண், இருவகைகளையும் படைத்தவர்–

46. விந்தின் ஒரு மிகச் சிறிய துளியிலிருந்து.

47. உயிர்த்தெழுப்புதலை அவர் நிகழ்த்துவார்.

48. அவர்தான் உங்களைச் செல்வந்தராகவோ அல்லது ஏழையாகவோ ஆக்குகின்றார்.

49. அவர்தான் நட்சத்திர மண்டலங்களின் இரட்சகர்.

50. அவர்தான் பண்டைய ஆதுகளை அழித்தவர்.

51. மேலும் தமூதுகளைத் துடைத்தெடுத்தவர்.

52. அத்துடன் அதற்கு முன்னர் நோவாவின் சமூகத்தாரையும்; அவர்கள் கெட்ட வரம்புமீறுபவர்களாக இருந்தனர்.

53. தீய சமூகங்கள் *(ஸாடம் மற்றும் கொமர்ரா)* மிகவும் தாழ்ந்தவர்களாக இருந்தனர்.

54. அதன் விளைவாக, அவர்கள் முற்றிலும் மறைந்து போயினர்.

55. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை நீங்கள் மறுக்க இயலும் ?

56. முந்தியவற்றைப் போல இது ஓர் எச்சரிக்கையே யாகும்.

57. தவிர்த்துவிட முடியாதது நிகழ இருக்கின்றது.

58. **கடவுள்**–ஐ அன்றி எவரும் அதனை நிவர்த்திக்க இயலாது.

59. இந்த விஷயத்தை நீங்கள் சந்தேகிக்கின்றீர்களா ?

60. அழுவதற்குப் பதிலாக நீங்கள் சிரித்துக் கொண்டிருக் கின்றீர்களா ?

61. உங்களுடைய வழிகளில் நீங்கள் பிடிவாதமாக இருக் கின்றீர்களா ?

62. **கடவுள்** முன்னர் நீங்கள் சிரம்பணிந்து விழவும், வழி படவும் வேண்டும்.

****

## சூரா 54: நிலவு (அல்–கமர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வேளை நெருங்கி வந்து விட்டது, மேலும் நிலவு பிளந்து விட்டது.*

2. அப்போது அவர்கள் ஓர் அற்புதத்தைக் கண்டனர்; ஆனால் அவர்கள் திரும்பிச் சென்றனர், மேலும் கூறினர், "பண்டைய மாயாஜாலம்."

3. அவர்கள் நம்பமறுத்தனர், தங்களுடைய அபிப்பிரா யங்களைப் பின்பற்றினர், தங்களுடைய பழைய மரபு களையே ஒட்டி ஒழுகினர்.

4. போதுமான எச்சரிக்கைகள் அவர்களை எச்சரிப்பதற் காகச் சேர்ப்பிக்கப்பட்டு விட்டன.

5. மிகப்பெரும் ஞானம்; ஆனால் அனைத்து எச்சரிக்கை களும் வீணாகிப் போயின.

6. அவர்களை அலட்சியம் செய்வீராக; பயங்கரமான தொரு பெருநாசத்தை அழைப்பாளர் அறிவிக்கின்ற அந்நாள் வரும்.

7. அவர்களுடைய கண்கள் இழிவடைந்த நிலையில், சிதறிய வெட்டுக்கிளிகளைப் போல சமாதிகளி லிருந்து அவர்கள் வெளிவருவார்கள்.

8. அழைப்பாளருக்கு மறுமொழியளித்த வண்ணம், நம்ப மறுப்பவர்கள் கூறுவார்கள், "இது ஒரு கடினமான நாளாகும்."

9. அவர்களுக்கு முன்னர் நோவாவின் சமூகத்தார் நம்ப மறுத்தனர். நம்முடைய ஊழியரை அவர்கள் நம்ப மறுத்தனர் மேலும் கூறினர், "கிறுக்கர்!" அவர் துன் புறுத்தப்பட்டார்.

10. அவர் தன் இரட்சகரை இறைஞ்சினார், "நான் அடக்கு முறை செய்யப்பட்டவனாக இருக்கின்றேன்; எனக்கு வெற்றியை அளிப்பீராக."

11. பின்னர் நாம் தண்ணீரை ஊற்றியவண்ணம், வானத் தின் வாயில்களைத் திறந்து விட்டோம்.

12. மேலும் நாம் பூமியிலிருந்து ஊற்றுகளைப் பொங்கி வரச்செய்தோம். முன்னரே நிர்ணயிக்கப்பட்டதொரு தீர்மானத்தைச் செயல்படுத்த நீர்பரப்புகள் ஒன்று கலந்தன.

*மரக்கலம்*

13. கட்டைகளாலும் கயிறுகளாலும் செய்யப்பட்ட ஒரு படகில் அவரை நாம் சுமந்து கொண்டோம்.

14. நம்முடைய விழிப்பான கண்களின் கீழ் அது ஓடியது; நிராகரிக்கப்பட்ட ஒருவருக்குரிய ஒரு வெகுமதி.

15. அதனை ஒரு படிப்பினையாக நாம் அமைத்தோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்பு கின்றீர்களா ?

16. எச்சரிக்கைகளுக்குப் பின்னர் என்னுடைய தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது!

17. கற்றுக் கொள்ள எளிதானதாக இந்தக் குர்ஆனை நாம் ஆக்கியுள்ளோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா ?

18. ஆதுகள் நம்பமறுத்தனர். அதன் விளைவாக, எச்சரிக் கைகளுக்குப் பின்னர் என்னுடைய தண்டனை எவ் வளவு பயங்கரமானதாக இருந்தது.

**54:1 உலக முடிவு நெருங்கி வருவதைக் குறிக்கும் இந்த முக்கியமான அடையாளம் 1969ல் மானிடர்கள் நிலவில் கால் பதித்ததுடன் நிலவின் துண்டுகளை பூமிக்குக் கொண்டு வந்த போது நிகழ்ந்தேறியது. அதே நேரத்தில், குர்ஆனுடைய கடவுளின் கணித அற்புதம் படிப்படியாக திரை விலக்கம் செய்யப்பட்டது. பாரம்பர்ய முஸ்லிம்களுடைய செயல்பாடுகளின் மூடத்தனமான பொய்மையை அது வெளிப்படுத்தியதால், அவர்கள் அதனை எதிர்த்தனர் (பின் இணைப்பு 25).*

19. தொடர்ச்சியான துன்பமிக்க ஒரு நாளில், உக்கிரமான காற்றுகளை நாம் அவர்கள் மீது அனுப்பினோம்.

20. இற்றுப்போன பேரீத்த மரத் தண்டுகளைப் போன்று மக்களை அது சுற்றிலும் தூக்கியெறிந்தது.

21. எச்சரிக்கைகளுக்குப் பின்னர் என்னுடைய தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது!

22. கற்றுக் கொள்ள எளிதானதாக இந்தக் குர்ஆனை நாம் ஆக்கியுள்ளோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா ?

23. தமூதுகள் எச்சரிக்கைகளை ஏற்கமறுத்தனர்.

24. அவர்கள் கூறினர், "நம்மில் ஒருவரை நாம் பின்பற்ற வேண்டுமா; ஒரு மானிடர் ? அப்படியானால் நாம் வழி தவறிச் சென்று விடுவோம், பின்னர் நரகத்தைச் சென்றடைந்து விடுவோம்.

25. "நமக்குப் பதிலாக தூதுச் செய்தி அவருக்கு இறங்கி வந்து விட்டதா ? இவர் வெளிப்படையான ஒரு பொய்யரே ஆவார்."

26. வெளிப்படையான பொய்யர் யார் என்பதை அவர்கள் நாளை கண்டு கொள்வார்கள்.

27. இவ்வொட்டகத்தை அவர்களுக்கு ஒரு சோதனையாக நாம் அனுப்புகின்றோம். அவர்களைக் கண்காணிப்பீராக, மேலும் பொறுமையுடன் இருப்பீராக.

28. தண்ணீர் அவர்கள் மத்தியில் பங்கிடப்பட வேண்டும் என அவர்களுக்குத் தெரியப்படுத்துவீராக; அதற்கென நியமிக்கப்பட்ட நாளில் *(அவ்வொட்டகம்)* அருந்த அனுமதிக்கப்பட வேண்டும்.

29. ஆனால் அவர்கள் தங்களுடைய நண்பனை *(அவ்வொட்டகத்தினைக்)* கொல்லுமாறு தூண்டினர். அவனும் இணங்கினான்.

30. அதன் விளைவாக, என்னுடைய தண்டனை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது! அவர்கள் எச்சரிக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

31. அறுவடை செய்யப்பட்ட கூளங்களைப் போல அவர்களை ஆக்கி விட்ட ஓர்அடியினை அவர்கள் மீது நாம் அனுப்பினோம்.

32. கற்றுக் கொள்ள எளிதானதாக இந்தக் குர்ஆனை நாம் ஆக்கியுள்ளோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா ?

33. லோத்தின் சமூகத்தார் எச்சரிக்கைகளை ஏற்க மறுத்தனர்.

34. நாம் அவர்கள் மீது பாறைகளைப் பொழிந்தோம். விடியற்காலையில் லோத்தின் குடும்பத்தார் மட்டும் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

35. அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் நாம் ஆசீர்வதித்தோம்; இவ்வாறே நாம் நன்றியுடையவர்களுக்கு வெகுமதி வழங்குகின்றோம்.

36. நம்முடைய பழிதீர்த்தலைக் குறித்து அவர்களை அவர் எச்சரித்தார், ஆனால் அவர்கள் எச்சரிக்கைகளைப் பரிகசித்தனர்.

37. அவருடைய விருந்தினர்களுக்காக அவர்கள் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்; அவர்களை நாம் குருடாக்கினோம். என்னுடைய தண்டனையைச் சுகியுங்கள்; நீங்கள் எச்சரிக்கப்பட்டவர்களாக இருந்தீர்கள்.

38. மறுநாள் விடியற்காலையில், பெருநாசம் ஏற்படுத்துகின்றதொரு தண்டனை அவர்களைத் தாக்கியது.

39. என்னுடைய தண்டனையைச் சுகியுங்கள்; நீங்கள் எச்சரிக்கப்பட்டவர்களாக இருந்தீர்கள்.

40. கற்றுக் கொள்ள எளிதானதாக இந்தக் குர்ஆனை நாம் ஆக்கியுள்ளோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா ?

41. ஃபேரோவின் சமூகத்தார் எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

42. நம்முடைய அத்தாட்சிகள் அனைத்தையும் அவர்கள் ஏற்கமறுத்தனர். அதன் விளைவாக, எல்லாம் வல்லவர் ஒருவர், சர்வசக்தியுடையவர் செய்ய வேண்டியவாறு அவர்களை நாம் பழிதீர்த்தோம்.

43. உங்களுடைய நம்பமறுப்பவர்கள் அந்த நம்பமறுப்பவர்களை விட மேலானவர்களா ? வேதத்தின் மூலம் நீங்கள் விதிவிலக்களிக்கப்பட்டு விட்டீர்களா ?

44. "நாம் தாம் வெற்றியாளர்களாக இருப்போம்," என்று ஒருவேளை அவர்கள் நினைக்கக் கூடும்.

45. அவர்கள் அனைவரும் தோற்கடிக்கப்படுவார்கள்; அவர்கள் புறங்காட்டித் திரும்பி ஓடிவிடுவார்கள்.

46. வேளை அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது, மேலும் வேளையானது மிகவும் மோசமானதாகவும், மிகவும் வலிநிறைந்ததாகவும் உள்ளது.

47. நிச்சயமாக, குற்றவாளிகள் வழிதவறிவிட்டனர், மேலும் நரகத்தைச் சென்றடைவார்கள்.

48. நிர்ப்பந்தமாக, நரகநெருப்பினுள் அவர்கள் இழுத்துச் செல்லப்படுவார்கள். தண்டனையின் வேதனையால் கஷ்டப்படுங்கள்.

49. நாம் படைத்த ஒவ்வொன்றும் மிகச் சரியாக அளவிடப்பட்டுள்ளது.

50. ஒரு கண்ணிமைப்பிற்குள் நமது கட்டளைகள் நிறைவேற்றப்படும்.

51. உங்களுடைய முந்திய சகாக்களை நாம் அழித்தொழித்தோம். உங்களில் எவரேனும் கற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா ?

52. அவர்கள் செய்த ஒவ்வொன்றும் வேதங்களில் பதியப் பட்டுள்ளது.

53. சிறியதோ அல்லது பெரியதோ, ஒவ்வொன்றும் எழுதப்பட்டுள்ளது.

54. நிச்சயமாக, நன்னெறியாளர்கள் தோட்டங்களுக்கும், ஆறுகளுக்கும் தகுதிபெற்று விட்டனர்.

55. கண்ணியமானதொரு அந்தஸ்தில், சர்வசக்தியுடைய அரசரிடத்தில்.

****

## சூரா 55: மிக்க அருளாளர் (அல்–ரஹ்மான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மிக்க அருளாளர்.

2. குர்ஆனின் ஆசிரியர்.

3. மானிடர்களின் படைப்பாளர்.

4. பகுத்தறிவது எப்படியென அவர்களுக்கு அவர் கற்றுக் கொடுத்தார்.

5. சூரியனும் சந்திரனும் மிகச் சரியாகக் கணக்கிடப் பட்டுள்ளன.

6. நட்சத்திரங்களும் மரங்களும் சிரம் பணிகின்றன.

7. வானத்தை அவர் நிர்மாணித்தார், மேலும் விதிமுறை யினை நிலைநாட்டினார்.

8. நீங்கள் விதிமுறையினை மீறவேண்டாம்.

9 நீங்கள் நீதியை நிலைநாட்ட வேண்டும்; விதிமுறை யினை மீறக் கூடாது.

10. அனைத்துப் படைப்புகளுக்காகவும் பூமியை அவர் படைத்தார்.

11. அதிலே பழங்களும், தொங்குகின்ற பழக்குலை களுடன் கூடிய பேரீத்தம் பனைகளும் உள்ளன.*

12. அத்துடன் தானியங்களும் வாசனைப் பொருட்களும்.

13. *(மானிடர்கள் மற்றும் ஜின்களே,)* உங்களுடைய இரட் சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

14. குயவனின் களிமண்ணைப் போன்ற, முற்றிய களி மண்ணிலிருந்து மானிடனை அவர் படைத்தார்.

15. மேலும் கொழுந்து விட்டெரியும் நெருப்பிலிருந்து ஜின்களைப் படைத்தார்.

16. *(மானிடர்கள் மற்றும் ஜின்களே,)* உங்களுடைய இரட் சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

17. இரு கிழக்குகள் மற்றும் இரு மேற்குகளின் இரட்சகர்.

18. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

19. இரு கடல்களையும் அவை சந்திக்குமிடத்தில் அவர் பிரிக்கின்றார்.

20. எல்லை மீறுவதை விட்டு அவற்றைத் தடுக்கும் வண்ணம், அவற்றிற்கிடையில் ஒரு தடுப்பு அமைக்கப் பட்டுள்ளது.

21. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

22. அவை இரண்டிலிருந்தும் முத்துகளும் பவளங்களும் உங்களுக்குக் கிடைக்கின்றன.

23. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

24. கொடிகளைப் போல கடலில் சுற்றிவரும் கப்பல்களை அவர் உங்களுக்குத் தந்தார்.

25. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

26. பூமியிலுள்ள ஒவ்வொருவரும் அழிந்து விடுவார்கள்.

27. உம்முடைய இரட்சகரின் இருப்பு மட்டுமே நிலைத் திருக்கும். மாட்சிமை மற்றும் கண்ணியம் உடையவர்.

28. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

29. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொரு வரும் அவரை இறைஞ்சுகின்றனர். ஒவ்வொரு நாளிலும் அவர் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார்.

30. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும் ?

**55:11 பூமியெனும் விண்வெளிக்கலத்தின் புதுப்பித்துக் கொள்ளக் கூடிய வழிமுறைகளையும் இனப்பெருக்கம் செய்கின்ற விண்வெளிப் பயணிகளையும், நாம் அண்ட வெளிக்குள் மிதக்க விடுகின்ற அதிநவீன விண்வெளிக்கலங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கடவுள் துதிப்பிற்குரியவர்.*

31. கணக்குக் கொடுப்பதற்காக உங்களை நாம் அழைப் போம், மானிடர்கள் மற்றும் ஜின்களே.

32. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

33. ஜின்கள் மற்றும் மானிடர்களே, வானங்கள் மற்றும் பூமி யின் வெளிப்புற எல்லைகளை உங்களால் ஊடுருவ இயலுமானால், தொடர்ந்து சென்று ஊடுருவிக் கொள்ளுங்கள். அதிகாரம் இன்றி உங்களால் ஊடு ருவ இயலாது.

34. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

35. நெருப்பு மற்றும் உலோகத்தினாலான ஏவுகணை களால், நீங்கள் தொடர்ந்து தாக்கப்படுவீர்கள், மேலும் உங்களால் ஜெயிக்க இயலாது.

36. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

37. வானம் உடைந்து சிதறி, இளஞ்சிகப்பு சாயம் போல நிறம் மாறி விடும்போது.

38. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

39. அந்நாளில், எந்த மானிடனிடமோ அன்றி எந்த ஜின் னிடமோ அவனுடைய பாவங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கப்படாது.

40. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

41. *(இது ஏனெனில்)* குற்றவாளிகள் அவர்களுடைய தோற்றங்களைக் கொண்டே அடையாளம் கண்டு கொள்ளப்படுவார்கள்; முன்குடுமிகள் மற்றும் பாதங் களால் அவர்கள் எடுத்துச் செல்லப்படுவார்கள்.

42. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

43. இதுதான் குற்றவாளிகள் மறுத்துக் கொண்டிருந்த எரிகிடங்காகும்.

44. சகிக்க முடியாததொரு தீக்கனலுக்கும் அதற்கும் இடையில் அவர்கள் சுழன்று வருவார்கள்.*

45. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

46. தங்களுடைய இரட்சகரின் மாட்சிமையை அஞ்சுபவர் களுக்கு, இருதோட்டங்கள் *(ஜின்களுக்கு ஒன்று மேலும் மானிடர்களுக்கு ஒன்று).*

47. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களின் எதனை உங்களால் மறுக்க இயலும்?

48. வாழ்வாதாரங்கள் நிரம்பியவை.

49. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

50. அவற்றில் இரு ஊற்றுகள், பாய்ந்தோடிக் கொண்டு இருக்கின்றன.

51. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

52. அவற்றில் ஒவ்வொரு பழங்களிலும், இரு வகைகள்.

53. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

54. பளபளக்கும் பட்டால் சுற்றிலும் அழகூட்டப்பட்ட ஆசனங்களில் அவர்கள் ஓய்வெடுக்கின்ற அச் சமயம், பழங்களோ கைக்கெட்டக் கூடியவையாக இருக்கும்.

55. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

56. எந்த மனிதர்களாலோ அல்லது ஜின்களாலோ அவர் களுடைய அழகிய ஜோடிகள் ஒருபோதும் தொடப் பட்டிருக்கவில்லை.

57. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

58. இரத்தினங்களையும் பவளங்களையும் போன்று அவர்கள் இருப்பார்கள்.

59. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

60. நன்மைக்குரிய வெகுமதி நன்மையைத் தவிர வேறெதுவும் உண்டா?

61. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

62. அவர்களுக்குக் கீழே இரு தோட்டங்கள் இருக்கின் றன *(ஜின்களுக்கு ஒன்று மேலும் மானிடர்களுக்கு ஒன்று).*

63. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

64. அருகருகே.

---

***55:44** *மேல் சொர்க்கம், தாழ்வான சொர்க்கம், ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம், நரகம், மற்றும் சகிக்க இயலாத தீக்கனல் ஆகியன பற்றிய முழு விபரங்கள் பின் இணைப்பு 5 மற்றும் 11ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

65. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

66. அவற்றில், இறைக்கப்பட வேண்டிய கிணறுகள்.

67. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

68. அவற்றில் பழங்கள், பேரீத்தம் பனைகள் மற்றும் மாதுளை.

69. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

70. அவற்றில் அழகிய ஜோடிகள் உள்ளன.

71. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

72. கூடாரங்களில் தடுக்கப்பட்டு.

73. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

74. மானிடர் எவருமோ அன்றி ஒரு ஜின்னோ, எக்காலத்திலும் அவர்களைத் தொட்டதில்லை.

75. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

76. பச்சை நிறக் கம்பளங்களின் மீது, அழகிய சூழல்களில் அவர்கள் பொழுது போக்குவார்கள்.

77. உங்களுடைய இரட்சகரின் அற்புதங்களில் எதனை உங்களால் மறுக்க இயலும்?

78. உம்முடைய இரட்சகரின் திருப்பெயர் மிகவும் உயர்வானது, மாட்சிமை மற்றும் கண்ணியம் உடையவர்.

****

## சூரா 56: தவிர்க்க இயலாதது (அல்–வாகிஆ)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. தவிர்க்க இயலாதது நிகழ்ந்தேறும் பொழுது.

2. அது நிகழ்வதை எந்த ஒன்றும் தடுக்க இயலாது.

3. சிலரை அது தாழ்த்தும், மேலும் மற்றவர்களை உயர்த்தும்.

4. பூமி குலுக்கப்படும்.

5. மலைகள் துடைத்தெடுக்கப்படும்.

6. அவை ஒருபோதும் இருந்திராததைப் போல.

7. மூன்று விதங்களில் நீங்கள் வகைப்படுத்தப் படுவீர்கள்.

8. பேரின்பத்திற்குத் தகுதி பெற்றவர்கள் பேரின்பத்தில் இருப்பார்கள்.

9. பெருந்துன்பத்திற்குத் தகுதி பெற்றவர்கள் பெருந்துன்பத்தில் இருப்பார்கள்.

10. பின்னர் அங்கே மேன்மையானவர்களில் மேன்மையானவர்களும் இருக்கின்றனர்.

11. அவர்கள்தான் *(கடவுளுக்கு)* மிகவும் நெருக்கமானவர்களாக இருப்பார்கள்.

12. பேரின்பத் தோட்டங்களில்.

13. முதல் தலைமுறையினரிலிருந்து ஏராளமானவர்கள்.*

14. பிந்திய தலைமுறையினரிலிருந்து ஒரு சிலர்.

15. ஆடம்பரமான ஆசனங்களில்.

16. ஒவ்வொன்றையும் அனுபவித்தவாறு, அவர்கள் அண்மையில் உள்ளவர்களாக இருப்பார்கள்.

17. அவர்களுக்குப் பணிபுரிபவர்கள் அமரத்துவம் வாய்ந்த ஊழியர்களாக இருப்பார்கள்.

18. கிண்ணங்கள், கூஜாக்கள் மற்றும் தூய்மையான பானங்களுடன்.

19. அவை ஒருபோதும் தீர்ந்து போகாது, அன்றி அவர்கள் சலிப்படையவும் மாட்டார்கள்.

20. அவர்களுடைய விருப்பத்தின்படி தேர்ந்தெடுக்கின்ற பழங்கள்.

21. அவர்கள் விரும்புகின்ற பறவைகளின் இறைச்சி.

22. அழகிய ஜோடிகள்.

23. பாதுகாக்கப்பட்ட முத்துகளைப் போல்.

24. அவர்களுடைய காரியங்களுக்குரிய வெகுமதிகள்.

**56:13–40 நம்பிக்கை கொண்டு கடவுளை மட்டும் வழிபடுவதன் மூலம் தங்களுடைய ஆத்மாக்களை ஊட்டப்படுத்திக் கொள்கின்ற மக்கள் மேலான சுவர்க்கத்திற்கு என்று விதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தூதருடைய சமகாலத்திய சீடர்களும் பாரம்பர்யவாதிகள் மற்றும் சீர் கெட்டுப் போன மத ஆதரவாளர்களினால் வன்கொடுமைக்குத் உள்ளாகின்றனர். எனவே மேலான சுவர்க்கத்தில் ஒரு சிறப்பான இடம் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 40 வயதுக்கு முன்னர் மரணிக்கின்ற அனைவரும் குறைந்த பட்சம் கீழான சுவர்க்கத்திற்குச் செல்கின்றனர் (46:15).*

25. அங்கே அவர்கள் அபத்தமான எதனையுமோ அன்றிப் பாவகரமான கூற்றுகளையோ ஒருபோதும் செவியேற்க மாட்டார்கள்.

26. "சாந்தி, சாந்தி" என்று மட்டுமே மொழியப்படும்.

*தாழ்வான சொர்க்கம்*

27. வலப்புறத்தார், வலப்புறத்தில் இருப்பார்கள்.

28. செழிப்பான பழத்தோட்டங்களில்.

29. மணம் பரப்பும் பழங்கள்.

30. விரிந்த நிழல்.

31. அபரிமிதமான தண்ணீர்.

32. ஏராளமான பழங்கள்.

33. ஒருபோதும் முடிவுறாதவை; ஒருபோதும் தடுக்கப்படாதவை.

34. ஆடம்பரமான ஆசனங்கள்.

35. அவர்களுக்காக நாம் ஜோடிகளைப் படைக்கின்றோம்.

36. முன்னர் ஒரு போதும் தொடப்படாதவர்கள்.

37. மிகச் சரியான பொருத்தமுடையவர்கள்.

38. வலப்புறத்தவர்களுக்காக.

39. ஆரம்பகாலத் தலைமுறையினரிலிருந்து ஏராளமானவர்கள்.

40. பிந்திய தலைமுறையினரிலிருந்து ஏராளமானவர்கள்.*

*நரகம்*

41. இடப்புறத்தார், இடப்புறத்தில் இருப்பார்கள்.

42. பெருந்துன்பத்திலும் தீக்கனலிலும்.

43. அவற்றின் நிழல் கூட வெப்பமானது.

44. ஒருபோதும் குளுமை இன்றி, ஒருபோதும் சகிக்க இயலாதவாறு.

45. அவர்கள் செல்வந்தர்களாகவே இருந்து வந்தனர்.

46. அவர்கள் மகத்தான இறை நிந்தனையில் பிடிவாதமாக இருந்தனர்.

47. அவர்கள் கூறினர், "நாம் இறந்து விட்டு மண்ணாகவும் எலும்புகளாகவும் மாறிய பின்னர், நாம் உயிர்த்தெழுப்பப்படுவோமா ?

48. "இதில் நம்முடைய மூதாதையர்களும் உட்படுவார்களா ?"

49. கூறுவீராக, "ஆரம்பகாலத் தலைமுறையினரும் பிந்திய தலைமுறையினரும்.

50. "முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு நாளின் ஒரு சந்திப்பிற்கென ஒன்று திரட்டப்படுவார்கள்.

51. "நம்பமறுக்கின்ற வழி தவறியோரே, பின்னர் நீங்கள்.

52. "கசப்புத்தன்மையுள்ள மரங்களிலிருந்து உண்ணுவீர்கள்.

53. "அதன் மூலம் உங்களுடைய வயிறுகளை நிரப்பிக் கொள்வீர்கள்.

54. "பின்னர் அதற்கு மேலாக நரக பானங்களை அருந்துவீர்கள்.

55. "பின்னர் மணல் கலந்த பானங்களைச் சேர்த்துக் கொள்வீர்கள்."

56. தீர்ப்பு நாளன்று அவர்களுடைய பங்கு இத்தகையதேயாகும்.

*சிந்தனைகள்*

57. நாமே உங்களைப் படைத்தோம், உங்களால் நம்பிக்கை கொள்ள மட்டும் இயன்றால்!

58. நீங்கள் வெளிப்படுத்துகின்ற விந்தினை நீங்கள் கவனித்தீர்களா ?

59. அதனை நீங்கள் படைத்தீர்களா, அல்லது நாமா ?

60. உங்களுக்குரிய மரணத்தை நாம் முன்னரே தீர்மானித்துள்ளோம். எந்த ஒன்றும் நம்மைத் தடுக்க இயலாது–

61. உங்களுடைய இடத்தில் புதிய தலைமுறையினரை நாம் மாற்றியமைத்து, நீங்கள் அறியாவதற்றை ஸ்தாபிப்பதில் இருந்து.

62. முதல் படைப்பைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு நினைவில்லையா ?

63. நீங்கள் அறுவடை செய்கின்ற பயிர்களை நீங்கள் கவனித்தீர்களா ?

64. அதனை நீங்கள் வளர்த்தீர்களா, அல்லது நாமா ?

65. நாம் நாடினால், அதனைக் கூளமாக மாற்றி விட நம்மால் இயலும். பின்னர் நீங்கள் புலம்புவீர்கள்:

66. "நாம் நஷ்டப்பட்டு விட்டோம்.

67. "நாம் பறிக்கப்பட்டவர்களாகி விட்டோம்."

68. நீங்கள் அருந்துகின்ற தண்ணீரை நீங்கள் கவனித்தீர்களா ?

69. மேகங்களிலிருந்து அதனை நீங்கள் கீழே அனுப்பினீர்களா, அல்லது நாமா ?

70. நாம் நாடினால், அதனைக் உப்புச் சுவையுடையதாக ஆக்கிவிட நம்மால் இயலும். நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

*56:40 பார்க்க 56:13–40ன் அடிக்குறிப்பு.

71. நீங்கள் மூட்டுகின்ற நெருப்பை நீங்கள் கவனித்தீர்களா?

72. அதன் மரத்தை நீங்கள் துவக்கினீர்களா, அல்லது நாமா?

73. ஒரு நினைவூட்டலாகவும், உபயோகிப்பவர்களுக்கு உபயோகமானதொரு சாதனமாகவும் அதனை நாம் தந்தோம்.

74. மகத்தானவரான, உம்முடைய இரட்சகரின் பெயரை நீங்கள் துதிக்க வேண்டும்.

*உண்மையானவர்கள் மட்டுமே குர்ஆனைப் புரிந்து கொள்ள இயலும்*

75. நட்சத்திரங்களின் நிலைகளைக் கொண்டு நான் ஆணையிடுகின்றேன்.

76. இது ஒரு பிரமாணமாகும், நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், பிரமிப்பூட்டுவதாக இருப்பது.*

77. இது கண்ணியமானதொரு குர்ஆனாகும்.

78. பாதுகாக்கப்பட்டதொரு புத்தகத்தில் உள்ளது.

79. உண்மையானவர்களைத் தவிர எவரும் அதனைக் கிரகிக்க இயலாது.*

80. பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்துள்ளதொரு வெளிப்பாடு.

81. இந்த விவரிப்பையா நீங்கள் புறக்கணிக்கின்றீர்கள்?

82. நீங்கள் நம்பமறுப்பதையே உங்களுடைய தொழிலென நீங்கள் ஆக்கிக் கொண்டு விட்டீர்களா?

83. நேரம் வந்து அது *(உங்களுடைய ஆத்மா)* உங்களுடைய தொண்டையை அடையும் பொழுது –

84. அப்போது நீங்கள் சுற்றுமுற்றும் நோக்குவீர்கள்.

85. நீங்கள் இருப்பதை விடவும் அதற்கு நெருக்கமாக நாம் இருக்கின்றோம், ஆனால் நீங்கள் பார்ப்பதில்லை.

86. நீங்கள் எந்தக் கணக்கும் கொடுக்க வேண்டியதில்லை என்பது உண்மையானால் –

87. ஏன் *(உங்களுடைய ஆத்மாவை)* நீங்கள் மீட்டெடுத்துக் கொள்ளக் கூடாது, நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்?

88. எனக்கு நெருக்கமானவர்களில் ஒருவராக அவர் இருந்தால் –

89. பின்னர் ஆனந்தம், மலர்கள், மேலும் பேரின்பத் தோட்டங்கள்.

90. மேலும் வலப்புறத்தவர்களில் ஒருவராக அவர் இருந்தால்–

91. வலப்புறத்தவர்களுக்குரிய பங்கு சாந்தியே ஆகும்.

92. ஆனால் நம்பமறுப்பவர்களில், வழிதவறியவர்களில் ஒருவனாக அவன் இருந்தால் –

93. பின்னர் தீக்கனலில் ஒரு தங்குமிடம் –

94. மேலும் நரகத்தில் கருகுதல்.

95. இதுவே பூரணமான சத்தியமாகும்.

96. மகத்தானவரான, உம்முடைய இரட்சகரின் பெயரை நீங்கள் துதிக்க வேண்டும்.

****

## சூரா 57: இரும்பு (அல்–ஹதீத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–ஐத் துதித்துக் கொண்டிருக்கின்றன. அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

2. வானங்கள் மற்றும் பூமியின் அரசுரிமை அவருக்கே உரியது. வாழ்வையும் மரணத்தையும் அவரே கட்டுப்படுத்துகின்றார். அவர் சர்வ சக்தியுடையவர்.

3. அவர்தான் முதன்மையானவர் மற்றும் முடிவுமானவர். அவர்தான் மிகவும் வெளியிலிருப்பவர் மற்றும் மிகவும் உள்ளிருப்பவர். அவர் அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்தவர்.

**56:75–76 ஏழு பிரபஞ்சங்களில் மிகச்சிறியதும் மிகவும் உள்ளார்ந்ததுமான நம்முடைய பிரபஞ்சம், பல்லாயிரம் கோடி ஒளி வருடங்கள் விரிந்திருக்கின்ற பல்லாயிரம் கோடி நட்சத்திர மண்டலங்கள், மேலும் பல லட்சம் கோடி நட்சத்திரங்களையும் தன்னுள் கொண்டுள்ளது. எண்ண முடியாத கோடானு கோடிக்கணக்கான விண்ணகப் பொருட்கள் தெய்வீகமான முறையில் கட்டுப்படுத்தப்பட்டு, மிகச்சரியாகத் தங்களுடைய சுற்றுப்பாதையில் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றன. எவ்வளவு அதிகம் நாம் கற்றுக் கொள்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக இந்தப் பிரமாணம் எத்தனை பிரமிப்பூட்டுவதாக உள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்கின்றோம். பார்க்க பின் இணைப்பு 6.*

**56:79 குர்ஆன் மட்டும் என்பதுடன் திருப்தியடையாதவர்களாக உள்ள நேர்மையற்றவர்கள் குர்ஆனைப் புரிந்து கொள்வதிலிருந்து தெய்வீகமான முறையில் தடுக்கப்பட்டு விடுகின்றனர். இந்தக் கருத்து குர்ஆன் முழுவதிலும் மீண்டும் மீண்டும் உள்ளது (17:45, 18:57). அதன் விளைவாக, அவர்களால் இந்த வசனத்தையே புரிந்து கொள்ள இயலாது. உதாரணத்திற்காக, 7:3, 17:46, 41:44, & 56:79க்கான இந்த மொழிபெயர்ப்பை மற்ற மொழி பெயர்ப்புகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.*

4. அவர்தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில்* படைத்தவர், பின்னர் அனைத்து அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டவர். பூமிக்குள் நுழைகின்ற ஒவ்வொன்றையும், அதிலிருந்து வெளியில் வரும் ஒவ்வொன்றையும், விண்ணிலிருந்து இறங்கி வரும் ஒவ்வொன்றையும், அதில் ஏறுகின்ற ஒவ்வொன்றையும் அவர் அறிவார். நீங்கள் எங்கிருந்த போதிலும் அவர் உங்களுடன் இருக்கின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் பார்ப்பவராகக் **கடவுள்** இருக்கின்றார்.

5. வானங்கள் மற்றும் பூமியின் அரசுரிமை அவருக்கே உரியது. அனைத்து விஷயங்களும் **கடவுள்**–ஆல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

6. அவர் இரவைப் பகலுடன் படிப்படியாகக் கலக்கின்றார், மேலும் பகலை இரவுடன் படிப்படியாகக் கலக்கின்றார். உள்ளார்ந்த எண்ணங்களை முற்றிலும் அறிந்தவராக அவர் இருக்கின்றார்.

7. **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள், மேலும் அவர் உங்கள் மீது அருளியவற்றிலிருந்து வழங்குங்கள். உங்களில் நம்பிக்கை கொண்டு *(தர்மம்)* வழங்குபவர்கள் மகத்தானதொரு பிரதிபலனுக்குத் தகுதியானவர்களாகி விட்டனர்.

8. உங்கள் இரட்சகர் மீது நம்பிக்கை கொள்ளுமாறு தூதர் உங்களை அழைக்கின்ற பொழுது நீங்கள் ஏன் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்ளக் கூடாது ? நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், உங்களிடமிருந்து ஓர் உறுதிமொழியை அவர் எடுத்திருக்கின்றார்.

9. அவர்தான் உங்களை இருளிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்திற்குள் வழிநடத்துவதற்காக, தன்னுடைய ஊழியருக்குத் தெளிவான வெளிப்பாடுகளை இறக்கி அனுப்பியவர். **கடவுள்** உங்கள்பால் இரக்கமுள்ளவராக, மிக்க கருணையாளராக இருக்கின்றார்.

10. வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்துச் செல்வங்களையும் **கடவுள்** தன்வசம் வைத்திருக்கின்ற போது, ஏன் நீங்கள் **கடவுள்**–ன் நிமித்தம் செலவு செய்யாதிருக்கின்றீர்கள் ?

*தனிச் சிறப்பு*

உங்களில் வெற்றிக்கு முன்னரே செலவு செய்து பாடுபட்டவர்கள் மற்றவர்களிலிருந்து சிறப்பிக்கப்பட்டவர்கள் ஆவர். வெற்றிக்குப் பின்னர் செலவு செய்து பாடுபட்டவர்களை விட மிகவும் மேலான ஓர் அந்தஸ்தை அவர்கள் அடைகின்றனர். ஒவ்வொரு தரப்பினருக்கும் **கடவுள்** மீட்சியை வாக்களிக்கின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** நன்கறிந்தவராக இருக்கின்றார்.

11. நன்னெறியின் ஒரு கடனை **கடவுள்**–க்கு கடனாக அளித்து, பன்மடங்காக அதனைத் தனக்குப் பெருக்கிக் கொள்ளவும், மேலும் தாராளமானதொரு பிரதிபலனை அடைந்து கொள்ளவும் விரும்புகின்றவர் யார் ?

*மகத்தான பெருவெற்றி*

12. நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களைத் தங்களுடைய ஒளிகளுடன் அவர்கள் முன்னாலும் வலப்புறமும் பிரகாசித்தவர்களாக நீர் காணும் அந்நாள் வரும். உங்களுக்குரிய நற்செய்தியாவது, அந்நாளில், ஆறுகள் பாய்கின்ற தோட்டங்களை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்பதாகும். அதிலே நீங்கள் என்றென்றும் தங்கியிருப்பீர்கள். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

*மிகவும் மோசமான நஷ்டவாளிகள்*

13. அந்நாளில், நயவஞ்சக ஆண்களும் பெண்களும் நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுவார்கள், "தயவு செய்து உங்களுடைய ஒளியிலிருந்து கொஞ்சம் கிரகித்துக் கொள்ள எங்களை அனுமதியுங்கள்." இவ்வாறு கூறப்படும், "உங்களுக்குப் பின்னே திரும்பிச் சென்று ஒளியைத் தேடிக் கொள்ளுங்கள்." அவர்களுக்கிடையில் ஒரு தடுப்பு அமைக்கப்படும், அதன் வாசலானது உட்புறத்தின் கருணையை வெளிப்புறத்தின் தண்டனையிலிருந்து பிரித்து வைக்கும்.

14. அவர்களை அவர்கள் அழைப்பார்கள், "நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா ?" அவர்கள் பதிலளிப்பார்கள், "ஆம், ஆனால் நீங்கள் **கடவுள்**–ன் தீர்ப்பு வரும் வரை, உங்களுடைய ஆத்மாக்களை ஏய்த்துக் கொண்டீர்கள், தயங்கினீர்கள், சந்தேகித்தீர்கள், மேலும் உங்களுடைய அபிலாஷை மிக்க எண்ணங்களால் வழிதவறியவர்கள் ஆகி விட்டீர்கள். மாயைகளின் மூலம் **கடவுள்**–யிடமிருந்து நீங்கள் திசை திருப்பப்பட்டவர்களாக இருந்தீர்கள்.

15. "ஆகையால், இன்றைய தினம் உங்களிடமிருந்தோ அன்றி நம்பமறுத்தவர்களிடமிருந்தோ ஈட்டுத்தொகை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது. நெருப்புதான் உங்களுடைய தங்குமிடமாக இருக்கும்; அதுவே உங்களுடைய எஜமானாகும், மேலும் துன்பகரமான தங்குமிடமாகும்."

**57:4 படைப்பின் ஆறு நாட்கள் என்பது பூமிக் கிரகத்தின் தனிச்சிறப்பை அழுத்தமாகக் கூறுவதற்காக, அதன் பல்வேறு அங்கங்களின் ஒன்றுக்கொன்று தொடர்புடைய முக்கியத்துவத்தை நமக்கு அறிவிக்கவும், மேலும் பூமி மட்டுமே வசிக்கத் தக்க கிரகமாக இருக்கின்றது என்பதை நமக்குத் தெரியப்படுத்துவதற்காகவுமான ஓர் அளவுகோலாக மட்டுமே இருக்கின்றது. பார்க்க 41:9–10 ன் அடிக்குறிப்பு.*

*மார்க்கத்தின் சீரழிவு*

16. **கடவுள்**–ன் செய்திக்காகவும், இதிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்திற்காகவும், நம்பிக்கை கொண்டவர்கள் தங்களுடைய இதயங்களைத் திறந்து கொள்ள வேண்டிய நேரம் இது இல்லையா? காலப்போக்கில் தங்களுடைய இதயங்கள் கடினமாகிப்போன முந்திய வேதங்களைப் பின்பற்றியவர்களைப் போன்று அவர்கள் இருக்கக் கூடாது, மேலும் அதன் விளைவாக, அவர்களில் பலர் தீயவர்களாக மாறி விட்டார்கள்.

17. பூமியை அது இறந்துவிட்ட பின்னர் **கடவுள்** உயிர்ப்பிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு, இவ்வெளிப்பாடுகளை இவ்வாறு நாம் உங்களுக்கு விவரிக்கின்றோம்.

18. நிச்சயமாக, தர்மம் செய்கின்ற ஆண்களும் பெண்களும், **கடவுள்**–க்கு நன்மையின் ஒரு கடனைக் கடனாக அளித்துள்ளனர். அவர்கள் தங்களுடைய வெகுமதியைப் பன்மடங்காகப் பெருக்கிப் பெற்றுக் கொள்வார்கள்; அவர்கள் தாராளமானதொரு பிரதி பலனுக்குத் தகுதியாகி விட்டனர்.

19. **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் புனிதர்களும் உயிர்த் தியாகிகளும் ஆவார்கள். அவர்களுடைய வெகுமதிகளும் அவர்களுடைய ஒளியும் அவர்களுடைய இரட்சகரிடத்தில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. நம்பிக்கை கொள்ள மறுத்து நம் வெளிப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நரகத்திற்கு உள்ளாகி விட்டார்கள்.

*இந்த வாழ்வில் மூழ்கி விடுதல்*
*கண்டனம் செய்யப்படுகின்றது*

20. இவ்வுலக வாழ்க்கையானது வேடிக்கை மற்றும் விளையாட்டுகள், மேலும் உங்களுக்கிடையில் பெருமையடித்துக் கொள்ளுதல், மேலும் பணத்தையும் பிள்ளைகளையும் பெருக்கிக்கொள்ளுதல் ஆகியவற்றை விட அதிகம் எதுவுமில்லை என்பதை அறிந்து கௌ்ளுங்கள். இது தாவரங்களை முளைப்பித்து நம்பமறுப்பவர்களை மகிழ்விக்கும் அபரிமிதமான மழையைப் போன்றதாகும். ஆனால் பின்னர் அத் தாவரங்கள் பயனற்ற கூளமாகிக் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றன. மறுவுலகில் கடுமையான தண்டனை அல்லது **கடவுள்**–யிடமிருந்து மன்னிப்பும் உவப்பும் ஆகிய இரண்டில் ஒன்றே உள்ளது. இவ்வுலக வாழ்வு தற்காலிகமானதொரு மாயை என்பதை விட அதிகம் எதுவுமில்லை.

*புத்திசாலித்தனமான மாற்று ஏற்பாடு*

21. ஆகையால், நீங்கள் உங்கள் இரட்சகரிடமிருந்து மன்னிப்பு, மற்றும் வானத்தையும் பூமியையும் சூழ்ந்திருக்கும் அளவு அகலத்தைக் கொண்ட ஒரு சுவனத்தை நோக்கி விரைந்து செல்ல வேண்டும். **கடவுள்** மற்றும் அவருடைய தூதர்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்காக அது காத்துக் கொண்டிருக்கின்றது. தான் நாடுகின்ற எவர்மீதும் அவர் அருள்கின்ற **கடவுள்**–ன் அருட்கொடையானது இத்தகையதே யாகும். **கடவுள்** எல்லையற்ற அருட்கொடையை உடையவராக இருக்கின்றார்.

*தீர்க்கமான உண்மை**

22. பூமியின் மீதோ, அல்லது உங்களுக்கோ, நிகழ்கின்ற எந்த ஒன்றும் ஏற்கெனவே பதியப்பட்டுள்ளது, படைக்கப்படுவதற்கும் முன்னரே. இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

23. எனவே, நீங்கள் தவற விட்ட எந்த ஒன்றுக்காகவும் நீங்கள் துக்கப்படக் கூடாது, அன்றியும் அவர் உங்கள் மீது அருளிய எந்த ஒன்றுக்காகவும் கர்வம் கொள்ளவும் கூடாது. தற்பெருமை நிறைந்தவர்களை, கர்வம் கொண்டவர்களைக் **கடவுள்** நேசிப்பதில்லை.

24. அவர்கள் கஞ்சர்களாக இருக்கின்றனர், மேலும் மக்களைக் கஞ்சர்களாக இருக்கும்படியும் ஏவுகின்றனர். ஒருவர் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் **கடவுள்** செல்வந்தர், புகழுக்குத் தகுதியானவர்.

*இரும்பு: மிகப் பயன்நிறைந்த உலோகம்*

25. தெளிவான சான்றுகளுடன் ஆதரிக்கப்பட்டவர்களாக நம்முடைய தூதர்களை நாம் அனுப்பினோம், மேலும் மக்கள் நீதியை ஆதரிக்கும் பொருட்டு, வேதத்தையும் சட்டத்தையும் அவர்களுக்கு நாம் இறக்கி அனுப்பினோம். மேலும் நாம் இரும்பை இறக்கி அனுப்பினோம், அதில் பலமும் மனிதர்களுக்குப் பல பயன்களும் உள்ளன. இவை அனைத்தும் விசுவாசத்தின் பேரில் அவருக்கும் அவருடைய தூதருக்கும் ஆதரவளிப்பவர்கள் யார் என்பதைக் **கடவுள்** அடையாளம் காட்டுவதற்காகவேயாகும். **கடவுள்** சக்தி நிறைந்தவர், எல்லாம் வல்லவர்.

**57:22 கடவுளுடனோ அல்லது சாத்தானுடனோ சேர்ந்து கொள்வதற்குப் பூரணமான சுதந்திரமுடையவர்களாக நாம் இருக்கின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் எந்த விதமான முடிவை எடுக்க இருக்கின்றோம் என்பதைக் கடவுள் மிகச்சரியாக அறிந்த நிலையில் இருக்கின்றார். பிறப்பிலிருந்து இறப்பு வரை உங்களுடைய வாழ்வின் ஒளிநாடா ஏற்கனவே பதியப்பட்டுள்ளது. பார்க்க பின் இணைப்பு 14.*

*நபிமார்கள்*

26. நாம் நோவாவையும் ஆப்ரஹாமையும் அனுப்பினோம், மேலும் அவர்களுடைய சந்ததியினருக்கு நபித்துவத்தையும் வேதத்தையும் அளித்தோம். அவர்களில் சிலர் வழிநடத்தப்பட்டவர்களாக இருந்தனர், அதேசமயம் பலர் தீயவர்களாக இருந்தனர்.

*மார்க்கத்தின் சீரழிவு*

27. அவர்களுக்குப் பிறகும், நம்முடைய தூதர்களை நாம் அனுப்பினோம். மேரியின் மகன் ஜீஸஸை நாம் அனுப்பினோம், மேலும் **இன்ஜீலை** *(சுவிசேஷம்)* நாம் அவருக்குத் தந்தோம், மேலும் அவரைப் பின்பற்றியவர்களின் இதயங்களில் கனிவையும் கருணையையும் நாம் அமைத்தோம். ஆனால் அவர்களுக்கு நாம் ஒருபோதும் விதித்திராத துறவித்தனத்தை அவர்கள் கண்டுபிடித்துக் கொண்டனர். அவர்களிடம் நாம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டதெல்லாம், **கடவுள்**–ஆல் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்பதே. ஆனால் அவர்கள் செய்திருக்க வேண்டியவாறு அத்தூதுச் செய்தியை அவர்கள் உயர்த்திப் பிடிக்கவில்லை. எனவே, அவர்களுக்கிடையில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு, அவர்களுக்குரிய பிரதிபலனை நாம் கொடுத்தோம், அதே சமயம் அவர்களில் பலர் தீயவர்களாகவே இருந்தனர்.

28. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கவும், மேலும் அவருடைய தூதர் மீது நம்பிக்கை கொள்ளவும் வேண்டும். அப்போது அவர் தன்னுடைய கருணையிலிருந்து இருமடங்கு வெகுமதியை உங்களுக்கு வழங்குவார், உங்களை வழிநடத்துவதற்காக உங்களுக்கு ஒளியைக் கொடையளிப்பார், மேலும் உங்களை மன்னிப்பார். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

29. எனவே, முந்திய வேதத்தைப் பின்பற்றுபவர்கள், **கடவுள்**–ன் கருணைக்கும் அருளுக்கும் ஏகபோகத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்றும், மேலும் அருட்கொடை அனைத்தும் **கடவுள்**–ன் கரத்திலேயே உள்ளது என்றும் அறிந்து கொள்ள வேண்டும். தான் நாடுகின்ற எவர் மீதும் அவர் அதனை அருள்கின்றார். **கடவுள்** எல்லையற்ற அருளை உடையவர்.

****

## சூரா 58: தர்க்கம் (அல்–முஜாதலா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. தன்னுடைய கணவனைப் பற்றி உம்முடன் தர்க்கித்து, **கடவுள்**–யிடம் புகார் கொடுத்த அப்பெண்மணியைக் **கடவுள்** செவியேற்றுக் கொண்டார். நீங்கள் இருவரும் விவாதித்த ஒவ்வொன்றையும் **கடவுள்** செவியேற்றார். **கடவுள்** செவியேற்பவர், பார்ப்பவர்.

2. தங்களுடைய தாய்மார்களை போன்றவர்கள் என *(தாம்பத்யத்திற்கு தடை செய்யப்பட்டவர்களாக அவர்களை அறிவிப்பதன் மூலம்)* தங்களுடைய மனைவியரைப் பிணையறுத்துக் கொள்ளும் உங்களில் உள்ளவர்கள், அவர்கள் தங்களுடைய தாய்மார்கள் அல்லர் என்பதை முற்றிலும் நன்கறிந்தே இருக்கின்றனர்.* அவர்களைப் பெற்றெடுத்த பெண்களே அவர்களுடைய தாய்மார்கள் ஆவார்கள். மெய்யாகவே, அவர்கள் ஓர் அவதூறையும் ஒரு பொய்மையையுமே புரிகின்றனர். **கடவுள்** பிழை பொறுப்பவர், மன்னிப்பவர்.

3. இந்த முறையில் தங்களுடைய மனைவியரைப் பிணையறுத்துக் கொண்டு விட்டவுடன், அதற்குப் பின்னர் இணக்கமாகிக் கொள்பவர்கள், தங்களுடைய தாம்பத்யத் தொடர்புகளை மீண்டும் துவங்குவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுதலை செய்வது கொண்டு பரிகாரம் செய்ய வேண்டும். இது உங்களுக்கு அறிவூட்டுவதற்காகவேயாகும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** நன்கறிந்தவராக இருக்கின்றார்.

4. விடுதலை செய்வதற்கு ஓர் அடிமையை நீங்கள் காண இயலாமற் போனால், தாம்பத்யத் தொடர்புகளை மீண்டும் துவங்குவதற்கு முன்னர் தொடர்ச்சியான இரு மாதங்களுக்கு நீங்கள் நோன்பிருக்க வேண்டும். உங்களால் நோன்பிருக்க இயலாவிட்டால், பின்னர் நீங்கள் அறுபது ஏழை மக்களுக்கு உணவளிக்க வேண்டும். **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும். நம்பமறுப்பவர்கள் வலி நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

5. நிச்சயமாக, **கடவுள்** மற்றும் அவருடைய தூதருடன் சண்டையிடுபவர்கள், முன்னிருந்த அவர்களுடைய சகாக்கள் தோல்வியடையுமாறு செய்யப்பட்டதைப் போல் தோல்வியடையுமாறு செய்யப்படுகின்றனர். தெளிவான சான்றுகளை நாம் இறக்கி அனுப்பியுள்ளோம், மேலும் ஏற்கமறுப்பவர்கள் இழிவு நிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

6. **கடவுள்** அவர்கள் அனைவரையும் உயிர்த்தெழுப்பி, பின்னர் அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அறிவிக்கின்ற அந்நாள் வரும். அவர்கள் அதனை மறந்துவிட்ட அதே சமயம், **கடவுள்** ஒவ்வொன்றையும் பதிவு செய்துள்ளார். எல்லா விஷயங்களுக்கும் **கடவுள்** சாட்சியாக இருக்கின்றார்.

**58:2 மனைவியைத் தன்னுடைய தாயைப் போன்றவள் என்று அறிவித்து விட்டு அவளைப் பிணையறுத்துக் கொள்வது அரேபியாவில் பண்டைய பாரம்பர்ய வழக்கங்களில் ஒன்றாக இருந்தது. ஒவ்வொரு வசனத்திலும் "அல்லாஹ்" என்ற வார்த்தை இடம் பெறுகின்ற ஒரே சூரா இதுவேயாகும்.*

*கடவுள் இப்பொழுது*
*உங்களுடன் இருக்கின்றார்*

7. வானங்களில் உள்ள ஒவ்வொன்றையும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் **கடவுள்** அறிந்திருக்கின்றார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ? மூன்று மனிதர்கள் எவரும் நான்காமவராக அவர் இல்லாமல், அன்றி ஐவர், ஆறாமவராக அவர் இல்லாமல், அன்றி அதற்குக் குறைவாகவோ, அன்றி அதிகமாகவோ, அவர்கள் எங்கிருந்த போதிலும் அங்கே அவர்களுடன் அவர் இல்லாமல் இரகசியமாகச் சூழ்ச்சி செய்ய இயலாது. பின்னர், உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று, அவர்கள் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்களுக்கு அவர் அறிவிப்பார். அனைத்து விஷயங்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்

*சூழ்ச்சி செய்யாதீர்கள்*

8. இரகசியமாகச் சூழ்ச்சி செய்வதிலிருந்து தடுக்கப்பட்டவர்களாக இருந்தும், பின்னர் சூழ்ச்சி செய்தலை வலியுறுத்துபவர்களை நீர் கவனித்தீரா ? பாவம், வரம்புமீறல், மேலும் தூதருக்குக் கீழ்ப்படியாமை, ஆகியவற்றைப் புரிவதற்காக அவர்கள் சூழ்ச்சி செய்கின்றனர். உம்மிடம் அவர்கள் வரும் போது, **கடவுள்**–ஆல் கட்டளையிடப்பட்டதை விடுத்து வேறு ஒரு வாழ்த்தைக் கொண்டு உம்மை அவர்கள் வாழ்த்துகின்றனர். அவர்கள் தங்களுக்குள் கூறிக் கொள்கின்றனர், "நம்முடைய கூற்றுகளுக்காகக் **கடவுள்** நம்மைத் தண்டிக்க மாட்டார்." அவர்களுக்குரிய ஒரே கைம்மாறு எரி கிடங்கேயாகும், அதிலே அவர்கள் கருகுவார்கள்; எத்தகையதொரு துன்பகரமான விதி.

9. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் இரகசியமாகக் கலந்தாலோசிக்க வேண்டியிருந்தால், பாவகாரியம், வரம்புமீறல் மற்றும் தூதருக்குக் கீழ்ப்படியாமை ஆகியவற்றுக்காகக் கலந்தாலோசிக்க கூடாது. நன்னெறி மற்றும் பக்தி ஆகியவற்றைப் புரிவதற்காகவே நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். எவர் முன்னர் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்களோ, அந்தக் **கடவுள்**–க்கு நீங்கள் பக்தியோடிருக்க வேண்டும்.

10. இரகசியச் சூழ்ச்சியானது சாத்தானின் யோசனையாகும், அதன் மூலம் நம்பிக்கை கொண்டவர்களைப் புண்படுத்த அவன் முயலுகின்றான். எப்படியிருப்பினும், **கடவுள்**–ன் நாட்டத்திற்கு எதிராக அவர்களை அவன் புண்படுத்த இயலாது. நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

11. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், "தயவு செய்து இடமளியுங்கள்," என்று உங்களிடம் கூறப்பட்டால், நீங்கள் ஒருவருக்கொருவர் அமர்வதற்கு இடமளிக்க வேண்டும். **கடவுள்** அப்போது உங்களுக்கு இடமளிப்பார்; எழுந்து நகரும்படி உங்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டால், எழுந்து நகர்ந்திடுங்கள். உங்களுக்கிடையில் நம்பிக்கை கொண்டவர்களையும், அறிவு பெற்றவர்களையும் உயர் அந்தஸ்துகளுக்குக் **கடவுள்** உயர்த்துகின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

12. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், தூதருடன் கலந்தாலோசிக்க நீங்கள் விரும்பினால், அவ்வாறு செய்வதற்கு முன்னர், நீங்கள் *(ஏழைகளுக்கு)* ஒரு தர்மத்தை முன்வைக்க வேண்டும். இது உங்களுக்கு மேலானதும், தூய்மையானதும் ஆகும். உங்களால் அது இயலாவிட்டால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

13. கலந்தாலோசிப்பதற்கு முன்னர் நீங்கள் தர்மம் கொடுக்கத் தவறிவிட்டு, அதற்குப் பின்னர் வருந்தினால், **கடவுள்** உங்களுடைய வருந்துதலை ஏற்றுக் கொள்கின்றார். நீங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும், *(ஜகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்கவும், மேலும் **கடவுள்** மற்றும் அவருடைய தூதருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

*உங்களுடைய நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்*

14. எவர்கள் மீது **கடவுள்** கோபம் கொண்டிருக்கின்றாரோ, அவர்களுடன் நட்புக்கொண்ட மக்களை நீர் கவனித்தீரா ? அவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களோ, அன்றி அவர்களைச் சேர்ந்தவர்களோ அல்லர். அவர்கள் நன்கறிந்து கொண்டே பொய்களால் சத்தியமிடுகின்றனர் !

15. கடுமையானதொரு தண்டனையைக் **கடவுள்** அவர்களுக்காகத் தயார் செய்துள்ளார். அவர்கள் செய்து கொண்டிருந்தவை உண்மையில் மிகவும் துக்ககரமானவையாகும்.

16. தங்களுடைய சத்தியப்பிரமாணங்களை **கடவுள்**–ன் பாதையிலிருந்து தடுக்கின்ற ஓர் உபாயமாக அவர்கள் பயன்படுத்தினர். அதன் விளைவாக, இழிவுநிறைந்ததொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

17. அவர்களுடைய பணமோ, அன்றி அவர்களுடைய பிள்ளைகளோ **கடவுள்**–க்கெதிராக அவர்களுக்கு உதவி செய்யாது. அவர்கள் நரகநெருப்பிற்கு உள்ளாகி விட்டனர், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

18. அவர்கள் அனைவரையும் **கடவுள்** உயிர்த்தெழுப்புகின்ற அந்நாள் வரும். தாங்கள் மெய்யாகவே சரியானவர்கள் என்றெண்ணிக் கொண்டு, இப்பொழுது உங்களிடம் அவர்கள் சத்தியமிடுவதைப் போல, அவரிடமும் அப்போது அவர்கள் சத்தியமிடுவார்கள் ! உண்மையில், அவர்கள்தான் அசலான பொய்யர்கள்.

19. சாத்தான் அவர்களைக் கையகப்படுத்திக் கொண்டான், மேலும் **கடவுள்**–ன் தூதுச் செய்தியை அவர்கள் அலட்சியப்படுத்துமாறு செய்துவிட்டான். இவர்கள்தான் சாத்தானின் கட்சியினர். மிக நிச்சயமாக, சாத்தானின் கட்சியினர்தான் நஷ்டவாளிகள்.

20. நிச்சயமாக, **கடவுள்**–ஐயும் அவருடைய தூதர்களையும் எதிர்ப்பவர்கள் மிகக் கீழ்மையானவர்களுடன் இருப்பார்கள்.

21. **கடவுள்** விதித்துள்ளார்: "நானும் என்னுடைய தூதர்களும் மிக நிச்சயமாக வெற்றி பெறுவோம்." **கடவுள்** சக்தி நிறைந்தவர், எல்லாம் வல்லவர்.

*உங்களைக் காப்பாற்றிக்*
*கொள்ள விரைந்திடுங்கள்*

22. **கடவுள்** மற்றும் இறுதி நாள் மீது நம்பிக்கை கொண்ட மக்கள், **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் எதிர்ப்போர் தங்கள் பெற்றோர்களாகவோ, தங்கள் பிள்ளைகளாகவோ, தங்கள் உடன்பிறப்புக்களாகவோ, தங்களுடைய குலத்தவராகவோ இருந்த போதிலும் அவர்களுடன் நட்புக்கொள்வதை நீர் காணமாட்டீர். இத்தகையோருக்கு, அவர்களுடைய இதயங்களில் விசுவாசத்தை அவர் விதிக்கின்றார், மேலும் தன்னிடமிருந்து உள்ளுணர்வைக் கொண்டு அவர்களுக்கு ஆதரவளிக்கின்றார், மேலும் அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருக்கும் ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் அவர்களை அனுமதிக்கின்றார். **கடவுள்** அவர்கள் மீது திருப்தி கொண்டார், மேலும் அவர்கள் அவர் மீது திருப்தி கொண்டனர். இவர்கள்தான் **கடவுள்**–ன் கட்சியினர். மிக நிச்சயமாக, **கடவுள்**–ன் கட்சியினர்தான் வெற்றியாளர்கள்.

****

# சூரா 59: வெளியேற்றம் (அல்–ஹஷ்ர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–ஐத் துதித்துக் கொண்டிருக்கின்றன, மேலும் அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

*நம்பிக்கையாளர்களைக்*
*கடவுள் காக்கின்றார்*

2. அவர்தான், வேதத்தைக் கொண்ட மக்களில் உள்ள நம்பமறுத்தவர்களை அவர்களுடைய இல்லங்களிலிருந்து ஒரு பெருங்கூட்டமான வெளியேற்றமாக வெளியேற்றியவர். அவர்கள் நகர்ந்து சென்று விடுவார்கள் என்று நீங்கள் ஒருபோதும் நினைக்கவில்லை, மேலும் அவர்கள் தங்களுடைய ஏற்பாடுகள் **கடவுள்**–யிடமிருந்து தங்களைக் காப்பாற்றி விடுமென்று அவர்கள் நினைத்தனர். ஆனால் பின்னர் **கடவுள்** அவர்கள் ஒருபோதும் எதிர்பாராத புறத்திலிருந்து அவர்களிடம் வந்தார், மேலும் அவர்களுடைய இதயங்களுக்குள் திகிலை எறிந்தார். இவ்விதமாக, கூடுதலாக நம்பிக்கையாளர்களிடமிருந்து நெருக்கடியினால், அவர்கள் தங்கள் சுயமான முடிவின்படியே தங்களுடைய இல்லங்களைத் துறந்தனர். அகப்பார்வையுடையவர்களே உங்களைத் தான், இதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

3. புறப்படும்படி அவர்களைக் **கடவுள்** நிர்ப்பந்தித்திருக்காவிட்டால், *(புறப்படும்படி அவர்களை நிர்ப்பந்தித்ததைவிட இன்னும் மிக மோசமாக)* இவ்வுலகில் அவர்களை அவர் பழிவாங்கியிருப்பார். மறுவுலகில் நரகத்தின் தண்டனைக்கென அவர்களை அவர் ஒப்படைத்துவிடுவார்.

4. இது ஏனெனில் அவர்கள் **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் எதிர்த்தனர். **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் எதிர்ப்பவர்களுக்கு, தண்டனையை நிறைவேற்றுவதில் **கடவுள்** மிகவும் கண்டிப்பானவர்.

5. நீங்கள் ஒரு மரத்தை வெட்டிவிட்டாலும், அல்லது அதன் அடித்தண்டுடன் அதனை விட்டு விட்டாலும், அது **கடவுள்**–ன் நாட்டத்திற்கு ஒப்பவேயாகும். தீயவர்களை நிச்சயமாக அவர் இழிவுபடுத்துவார்.

6. **கடவுள்** தன்னுடைய தூதருக்கு மீட்டுக்கொடுத்தது எதுவாயினும், அது உங்களுடைய போர்ப் பயிற்சியின் விளைவால் கிடைத்ததல்ல, நீங்கள் குதிரைகளிலோ அல்லது நின்று கொண்டோ போரிட்ட போதிலும் சரியே. **கடவுள்**தான் அவர் நாடுகின்ற எவருக்கும் எதிராகத் தன்னுடைய தூதர்களை அனுப்புகின்றார். **கடவுள்** சர்வசக்தியுடையவர்.

*போரின் மீதப் பொருட்கள்*

7. *(தோற்கடிக்கப்பட்ட)* சமூகங்களிடமிருந்து **கடவுள்** தன்னுடைய தூதருக்கு மீட்டுக் கொடுத்தது எதுவாயினும், *(ஒரு தர்மம் என்ற முறையில்)* **கடவுள்**–ஐயும் அவருடைய தூதரையும் சென்றடைய வேண்டும். நீங்கள் அதனை உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் கொடுக்க வேண்டும். இவ்விதமாக, அது உங்களுக்கிடையில் உள்ள வலியவர்களின் ஏகபோகமாகத் தொடர்ந்து இருந்து கொண்டிருக்காது. தூதரால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட போரின் மீதப் பொருட்களை நீங்கள் வைத்துக் கொள்ளலாம், ஆனால் எவற்றை எடுத்துக் கொள்வதிலிருந்து அவர் உங்களைத் தடுக்கின்றாரோ அவற்றை எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க வேண்டும். தண்டனையை நிறைவேற்றுவதில் **கடவுள்** கண்டிப்பானவர்.

8. புலம் பெயர்ந்து வந்திருக்கின்ற தேவையுடையவர்களுக்கு *(நீங்கள் கொடுக்க வேண்டும்).* **கடவுள்**–ன் அருளையும் உவப்பையும் தேடியதனாலும், மேலும் **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும் ஆதரவளித்த காரணத்தாலும், அவர்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர், மேலும் அவர்களுடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டன. அவர்கள்தான் உண்மையாளர்கள்.

9. அவர்களுக்கு முன்னரே நம்பிக்கையாளர்களாக இருந்து வந்து, அவர்களுக்கு ஓர் இல்லமும் ஒரு புகலிடமும் வழங்கியவர்களைப் பொறுத்த வரை, தங்களிடம் புலம் பெயர்ந்து வந்தவர்களை அவர்கள் நேசிக்கின்றனர், மேலும் அவர்களுக்கு உதவி செய்வதில் தங்கள் இதயங்களில் எந்தத் தயக்கமும் கொள்வதில்லை. உண்மையில், அவர்கள் கொடுத்து விடுபவற்றின் தேவை அவர்களுக்கே இருந்த பொழுதும், அவர்கள் தங்களுக்கும் மேலாக அவர்களுக்கு உடனடியாக முன்னுரிமை கொடுக்கின்றனர். உண்மையில், தங்களுடைய இயல்பான கஞ்சத்தனத்தை வெல்பவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.

10. அவர்களுக்குப் பின்னர் நம்பிக்கையாளர்களாக ஆனவர்கள் கூறுகின்றனர், "எங்கள் இரட்சகரே, எங்களையும் விசுவாசம் கொள்வதில் எங்களை முந்தியவர்களான எங்களுடைய சகோதரர்களையும் மன்னிப்பீராக, மேலும் நம்பிக்கை கொண்டவர்கள் பால் எந்த வெறுப்பும் கொண்டிருப்பதிலிருந்து எங்கள் இதயங்களைத் தடுத்து விடுவீராக. எங்கள் இரட்சகரே, நீர் இரக்கமுடையவராக, மிக்க கருணையாளராக இருக்கின்றீர்."

11. நயவஞ்சகத்தால் பீடிக்கப்பட்டவர்களையும், மேலும் அவர்கள் வேதத்தையுடைய மக்களுக்கிடையில் நம்பமறுத்தலில் உள்ள தங்களுடைய தோழர்களிடம், "நீங்கள் வெளியேற்றப்பட்டால் நாங்களும் உங்களுடன் சேர்ந்து வெளியில் வந்து விடுவோம், மேலும் உங்களை எதிர்க்கின்றவர்கள் எவர் ஒருவருக்கும் ஒருபோதும் கீழ்ப்படிய மாட்டோம். எவரேனும் உங்களுடன் சண்டையிட்டால், உங்களுடைய அணியில் நாங்கள் சண்டையிடுவோம்," என்று எவ்வாறு கூறினார்கள் என்பதையும் நீர் கவனித்தீரா ? அவர்கள் பொய்யர்கள் என்று **கடவுள்** சாட்சி பகர்கின்றார்.

12. உண்மையில், அவர்கள் வெளியேற்றப்பட்டால், அவர்களுடன் சேர்ந்து அவர்கள் வெளியேறி இருக்கமாட்டார்கள், மேலும் எவரேனும் அவர்களுடன் சண்டையிட்டால், அவர்களுக்கு அவர்கள் ஆதரவளித்திருக்கமாட்டார்கள். அவர்களுக்கு அவர்கள் ஆதரவளித்தாலும், அவர்கள் புறங்காட்டித் திரும்பி ஓடியிருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற இயலாது.

13. மெய்யாகவே, **கடவுள்** மீது அவர்களுடைய அச்சத்தைக் காட்டிலும், அவர்களுடைய இதயங்களில் அதிகமான திகிலை நீங்கள் அறைகின்றீர்கள். இது ஏனெனில், அவர்கள் கிரகித்துக் கொள்ளாத மக்களாக இருக்கின்றனர்.

14. நன்கு பாதுகாக்கப்பட்ட கட்டிடங்களுக்குள்ளோ, அல்லது சுவர்களுக்குப் பின்னாலோ அவர்கள் இருந்தாலேயன்றி, உங்களுடன் சண்டையிட அவர்கள் ஒன்று சேர மாட்டார்கள். அவர்களுக்கிடையில், அவர்களுடைய வல்லமை எதிர்க்க இயலாததைப் போன்று தோன்றுகின்றது. அவர்கள் ஒற்றுமையாக இருப்பதாக நீர் நினைக்கக் கூடும், ஆனால் உண்மையில் அவர்களுடைய இதயங்கள் பிரிந்திருக்கின்றன. இது ஏனெனில் அவர்கள் புரிந்து கொள்ளாத மக்களாக இருக்கின்றனர்.

15. அவர்களுடைய தலைவிதி அவர்களுக்கு முன்னிருந்தவர்களைப் போன்றவர்களுக்கு நேர்ந்த அதைப் போன்றதேயாகும். அவர்களுடைய தீர்மானங்களின் விளைவுகளை அவர்கள் அனுபவித்தனர். வலி நிறைந்ததொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

16. அவர்கள் சாத்தானைப் போன்றவர்கள் ஆவார்கள்: மானிடனிடம் அவன் கூறுகின்றான், "நம்பமறுத்து விடு," பின்னர் அவன் நம்பமறுத்து விட்டவுடன், அவன் கூறுகின்றான், "நான் உன்னைக் கைவிட்டு விட்டேன். பிரபஞ்சத்தின் இரட்சகரான, **கடவுள்**–ஐ நான் அஞ்சுகின்றேன்."

17. அவர்கள் இருவருக்குமுரிய விதியானது நரக நெருப்பேயாகும், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள், வரம்புமீறியவர்களுக்குரிய கைம்மாறு இதுவேயாகும்.

18. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க வேண்டும், மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் நாளைக்கென முற்படுத்தி அது அனுப்பியிருப்பதென்ன என்பதைப் பரிசீலித்துக் கொள்ளட்டும். நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க வேண்டும்; நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

19. **கடவுள்**–ஐ மறந்துவிட்டவர்களைப் போன்று நீங்கள் இருக்கக் கூடாது, அதனால் அவர்கள் தங்களையே மறந்து விடுமாறு அவர் செய்து விட்டார். இவர்கள் தான் தீயவர்கள்.

20. நரகநெருப்பில் வசிப்பவர்களும், சுவனத்தில் வசிப்பவர்களும் சமமாக மாட்டார்கள், சுவனத்தில் வசிப்பவர்களே வெற்றியாளர்கள் ஆவார்கள்.

*குர்ஆனின் மகத்துவம்*

21. இந்தக் குர்ஆனை ஒரு மலையின் மீது நாம் வெளிப்படுத்தியிருப்போமாயின், **கடவுள்**–ன் மீதுள்ள அச்சத்தால், அது நடுநடுங்கி, பொடிப் பொடியாகி இருப்பதை நீர் காண்பீர், அவர்கள் சிந்திக்கக் கூடும் என்பதற்காக, இத்தகைய உதாரணங்களை மனிதர்களுக்கு நாம் எடுத்துரைக்கின்றோம்.

*கடவுள்*

22. அவர்தான் ஒரே **கடவுள்**; அவரை அன்றி வேறு தெய்வம் இல்லை. அனைத்து இரகசியங்களையும் அறிவிப்புகளையும் அறிந்தவர். அவர்தான் மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்.

23. அவர்தான் ஒரே **கடவுள்**; அவரை அன்றி வேறு தெய்வம் இல்லை. அரசர், மிகப் புனிதமானவர், சாந்தியுடையவர், மிகுந்த நம்பிக்கைக்குரியவர், மேலதிகாரம் மிக்கவர், எல்லாம் வல்லவர், மிகவும் சக்திநிறைந்தவர், மிகவும் கௌரவமானவர். **கடவுள்** துதிப்பிற்குரியவர்; பங்காளிகள் கொண்டிருப்பதை விடவும் மிக மேலானவர்.

24. அவர்தான் ஒரே **கடவுள்**; படைப்பாளர், ஆரம்ப கர்த்தா, வடிவமைப்பவர். மிகவும் அழகிய பெயர்கள் அவருக்கே உரியவை. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் அவரைத் துதித்துக் கொண்டிருக்கின்றன. அவர் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

****

# சூரா 60: பரிசோதனை (அல்–மும்தஹனஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களிடம் வந்திருக்கின்ற சத்தியத்தை அவர்கள் நம்ப மறுத்துவிட்ட போதிலும், நேசத்தையும் நட்பையும் அவர்கள்பால் காட்டியவர்களாக, என்னுடைய விரோதிகளுடனும் உங்களுடைய விரோதிகளுடனும் நீங்கள் நட்புக் கொள்ள வேண்டாம். உங்கள் இரட்சகரான, **கடவுள்** மீது நீங்கள் நம்பிக்கை கொண்டதற்காக மட்டுமே, தூதரையும், உங்களையும் அவர்கள் வன்கொடுமை செய்கின்றனர். என்னுடைய ஆசீர்வாதங்களைத் தேடியவர்களாக, என் நிமித்தம் போராடுவதற்காக நீங்கள் புறப்பட்டால், எவ்வாறு நீங்கள் அவர்களை இரகசியமாக நேசிக்க முடியும்? நீங்கள் மறைத்துக் கொள்கின்ற ஒவ்வொன்றையும் நீங்கள் அறிவிக்கின்ற ஒவ்வொன்றையும் நான் முற்றிலும் அறிந்திருக்கின்றேன். உங்களுக்கிடையில் இதனைச் செய்கின்றவர்கள் உண்மையில் சரியான பாதையிலிருந்து வழிதவறிச் சென்று விட்டனர்.

2. உங்களை அவர்கள் எதிர்கொள்ளும் பொழுதெல்லாம், விரோதிகளைப் போல் அவர்கள் உங்களை நடத்துகின்றனர், மேலும் தங்களுடைய கரங்களாலும் நாவுகளாலும் உங்களைத் துன்புறுத்துகின்றனர். நீங்கள் நம்பமறுக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர்.

3. உங்களுடைய உறவினர்களும், உங்களுடைய பணமும் ஒருபோதும் உங்களுக்கு உதவ இயலாது. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளில், உங்களுக்கிடையில் அவர் தீர்ப்பளிப்பார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** பார்ப்பவராக இருக்கின்றார்.

*ஆப்ரஹாம்: ஒரு முன்னுதாரணம்*

4. ஆப்ரஹாம் மற்றும் அவருடன் இருந்தவர்கள் மூலம் உங்களுக்கு நல்லதொரு முன்னுதாரணம் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய சமூகத்தாரிடம் கூறினர், "உங்களையும் **கடவுள்**–ஐ அன்றி நீங்கள் வழிபடுபவற்றையும் விட்டு நாங்கள் விலகிக் கொண்டோம். உங்களை நாங்கள் கண்டனம் செய்கின்றோம், மேலும் **கடவுள்** மட்டும்* என்பதில் நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை, எங்களிடமிருந்து பகைமையையும் வெறுப்பையும் தவிர எந்த ஒன்றையும் நீங்கள் காணமாட்டீர்கள்." ஆயினும், அவர் தன் தந்தையிடம் "உம்முடைய பாவமன்னிப்பிற்காக நான் பிரார்த்திப்பேன்,** ஆனாலும் **கடவுள்**–யிடமிருந்து உம்மைக் காக்கின்ற எந்தச் சக்தியையும் நான் பெற்றிருக்கவில்லை," என்று கூறிய பொழுது ஆப்ரஹாம் ஒரு தவறு புரிந்துவிட்டார். "எங்கள் இரட்சகரே, நாங்கள் உம்மிடம் பொறுப்பேற்படுத்துகின்றோம், மேலும் உமக்குச் சரணடைகின்றோம்; இறுதி விதியானது உம்வசமே உள்ளது.

**60:4 "மட்டும்" என்பதற்குரிய அரபி வார்த்தை (வஹ்தஹு) ஆறுமுறைகள் மட்டுமே குர்ஆனில் இடம் பெறுகின்றன, அவற்றில் ஒன்று குர்ஆனை மட்டும் உயர்த்திப் பிடிப்பதைக் குறிக்கின்றது (17:46). கடவுள் மட்டும் என்பதைக் குறிப்பவை 7:70, 39:45, 40:12,84 மற்றும் 60:4 ஆகியவற்றில் இடம் பெறுகின்றன. இந்த எண்களின் கூட்டுத் தொகை யானது (7+70+ 39+ 45+40+12+84+60+4) 361க்குச் சமமாகின்றது, அல்லது 19x19. குர்ஆனின் பிரதான மூலக்கரு, "கடவுளை மட்டும் வழிபடுங்கள்," என்பதேயாகும் என இது அழுத்தமாகக் கூறுகின்றது. பார்க்க பின் இணைப்பு 1.*

***60:4 போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களுடைய வழிகாட்டலுக்காக நாம் பிரார்த்திக்கலாம், மன்னிப்பிற்கல்ல, ஏனெனில் மன்னிக்கப்பட மாட்டாத ஒரேபாவம் இணை வழிபாடேயாகும் என்பது கடவுளின் சட்டமாகும் (4:48 & 116).*

5. "எங்கள் இரட்சகரே, நம்பமறுத்து விட்டவர்களால் அடக்கு முறை செய்யப்பட்டவர்களாக இருக்க எங்களை விட்டுவிடாதீர், மேலும் எங்களை மன்னிப்பீராக. நீரே எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்."

6. **கடவுள்** மற்றும் இறுதி நாளைத் தேடுபவர்களுக்கு நல்லதொரு முன்னுதாரணம் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. திரும்பிச் சென்று விடுபவர்களைப் பொறுத்தவரை *(அவர்களிடம்)* **கடவுள்** எந்தத் தேவையுமற்றவர், மிகவும் புகழுக்குத் தகுதியானவர்.

7. **கடவுள்** உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உள்ள பகைமையை நேசமாக மாற்றி விடக் கூடும். **கடவுள்** சர்வசக்தியுடையவர். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*நம்பிக்கையற்றவர்களுடனான உறவுகளை வரைமுறைப்படுத்துகின்ற அடிப்படைச் சட்டம்*

8. உங்களுடைய மார்க்கத்தின் காரணமாக உங்களுடன் சண்டையிடாதவர்கள், மேலும் உங்களுடைய வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுடன் நட்புக் கொள்வதிலிருந்து **கடவுள்** உங்களைத் தடுக்கவில்லை. நீங்கள் அவர்களுடன் நட்புக் கொள்ளலாம், மேலும் அவர்கள்பால் நீதத்துடன் நடந்து கொள்ளுங்கள். நீதிமான்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

9. உங்களுடைய மார்க்கத்தின் காரணமாக உங்களுடன் சண்டையிட்டு, உங்களுடைய வீடுகளை விட்டு உங்களை வெளியேற்றி, மேலும் உங்களை வெளியேற்றுவதற்காக மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து கொள்பவர்களுடன் நட்புக் கொள்வதிலிருந்து மட்டுமே **கடவுள்** உங்களைத் தடுக்கின்றார். நீங்கள் அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டாம். அவர்களுடன் நட்புக் கொள்பவர்கள்தான் வரம்புமீறுபவர்கள்.

*போர் ஏற்பட்டால்*

10. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நம்பிக்கை கொண்ட பெண்கள் *(எதிரியைக் கைவிட்டு விட்டு வந்து)* உங்களிடம் அபயம் கோரினால், நீங்கள் அவர்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய நம்பிக்கையைக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார். அவர்கள் நம்பிக்கையாளர்கள்தான் என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டு விட்டால், நம்பமறுப்பவர்களிடம் அவர்களைத் திருப்பியனுப்பி விட வேண்டாம். அவர்களுடன் திருமண உறவில் தொடர்ந்திருப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர், அன்றி அவர்களை மணந்து கொள்ள நம்பமறுப்பவர்களை அனுமதிக்கவும் வேண்டாம். நம்பமறுப்பவர்கள் செலுத்திய சீதனத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அவர்களுக்குரிய சீதனத்தை நீங்கள் செலுத்தி விட்டால், அவர்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் நீங்கள் தவறெதுவும் செய்து விடவில்லை. நம்பமறுக்கின்ற மனைவியரை *(அவர்கள் எதிரியுடன் சேர்ந்து கொள்ள விரும்பினால்)* நீங்கள் தடுத்து வைத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் செலுத்திய சீதனத் தொகையை நீங்கள் கேட்கலாம், மேலும் அவர்கள் கொடுத்தவற்றை அவர்கள் கேட்கலாம். இது **கடவுள்**–ன் தீர்ப்பாகும்; அவர் உங்களுக்கிடையில் தீர்ப்பளிக்கின்றார். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

11. உங்கள் மனைவியரில் எவரேனும் எதிரிகளின் பாசறையில் சேர்ந்து கொண்டால், மேலும் சண்டையிடுவதற்கு நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டால், தங்கள் மனைவியரை இழந்த அந்த ஆண்களுக்கு, அவர்கள் தங்கள் மனைவியருக்காகச் செலவு செய்ததைக் கொடுப்பதன் மூலம் நஷ்டஈடு செய்ய எதிரியை நீங்கள் நிர்ப்பந்திக்க வேண்டும். எவர் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களோ, அந்தக் **கடவுள்**–யிடம் நீங்கள் பக்தியோடிருக்க வேண்டும்.

12. நபியே உம்மைத்தான், *(நம்பமறுப்பவர்களைக் கைவிட்டு விட்டவர்களான)* நம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் அபயம் தேடுவதற்காக வந்து, அவர்கள், **கடவுள்**–வுடன் எந்த போலித் தெய்வங்களையும் அமைத்துக் கொள்ள மாட்டோம், அன்றித் திருடமாட்டோம், அன்றி விபசாரம் செய்ய மாட்டோம், அன்றித் தங்களுடைய குழந்தைகளைக் கொல்ல மாட்டோம், அன்றிப் பொய்மை எதனையும் புனைந்துரைக்க மாட்டோம், அன்றி உம்முடைய நன்னெறியான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதிருக்கமாட்டோம் என்று உம்மிடம் உறுதி மொழி செய்தால், நீர் அவர்களுடைய உறுதிமொழியை ஏற்றுக் கொள்ளவும் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும்படிக் **கடவுள்**–ஐப் பிரார்த்திக்கவும் வேண்டும். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

13. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், **கடவுள்** கோபம் கொண்டிருக்கின்ற, மேலும் எதிர்பார்க்கவே முடியாதவாறு நம்பமறுப்பில் ஒட்டிக் கொண்டு விட்ட மக்களுடன் நீங்கள் நட்புக் கொள்ளக் கூடாது; ஏற்கனவே சமாதிகளில் இருக்கின்ற நம்பமறுப்பவர்களைப் போல் அதே விதமாக அவர்கள் எதிர்பார்க்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

****

## சூரா 61: அணிவகுப்பு (அல்–ஸஃப்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–ஐத் துதித்துக் கொண்டிருக்கின்றன. அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

2. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் செய்யாதவற்றை ஏன் நீங்கள் கூறுகின்றீர்கள் ?

3. நீங்கள் செய்யாதவற்றைக் கூறுவது **கடவுள்**–ன் பார்வையில் மிகவும் வெறுப்புக்குரியதாகும்.

4. ஒரு சுவரின் செங்கற்களைப் போல், ஓரணியில் ஒற்றுமையாய் அவர் நிமித்தமாகச் சண்டையிடுபவர்களைக் **கடவுள்** நேசிக்கின்றார்.

5. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறியதை நினைவு கூர்வீராக, "என் சமூகத்தாரே, நான் உங்களுக்குக் **கடவுள்**–ன் தூதனாக இருக்கின்றேன் என்பதை நீங்கள் அறிந்தவர்களாக இருந்த போதிலும், ஏன் என்னை நோகடிக்கின்றீர்கள் ?" அவர்கள் பாதை விலகிச் சென்ற போது, **கடவுள்** அவர்களுடைய இதயங்களைத் திசை திருப்பி விட்டார். ஏனெனில் **கடவுள்** தீய மக்களை வழிநடத்துவதில்லை.

*ஜீஸஸுக்குப் பின்னர் தூதர்*

6. மேரியின் மகனான, ஜீஸஸ் கூறியதை நினைவு கூர்வீராக, "இஸ்ரேலின் சந்ததியினரே, தோராவை உறுதிப்படுத்துகின்றவனாகவும், இன்னும் அதிகம் புகழப்பட்டதாக இருக்கும் பெயருடைய *(அஹ்மத்)* ஒரு தூதர் எனக்குப் பின் வர இருக்கின்ற நற்செய்தியைக் கொண்டு வருபவனாகவும், நான் உங்களுக்குரிய **கடவுள்**–ன் தூதர் ஆவேன்." பின்னர், தெளிவான சான்றுகளை அவர்களிடம் அவர் காட்டிய போது, அவர்கள் கூறினர், "இது ஆழ்ந்த மாயாஜால மாகும்."

7. சரணடைதலின் பால் அழைக்கப்பட்டவனாக அவன் இருக்கின்ற நிலையில், **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களைப் புனைகின்ற ஒருவனை விட மிகத் தீயவன் வேறு யார் ? பாவிகளான மக்களைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

8. **கடவுள்**–ன் ஒளியைத் தங்களுடைய வாய்களால் அணைத்து விட அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் நம்பமறுப்பவர்கள் வெறுத்த போதிலும், தன்னுடைய ஒளியைப் பூரணப்படுத்துவதில் **கடவுள்** உறுதியுடனிருக்கின்றார்.

*மாபெரும் முன்னறிவிப்பு*

9. வழிகாட்டலுடனும் சத்திய மார்க்கத்துடனும் அவர் தன்னுடைய தூதரை* அனுப்பியுள்ளார், மேலும் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் வெறுத்த போதிலும், அனைத்து மார்க்கங்களையும் அது மிகைக்கு மாறு செய்வார்.

*மிகச்சிறந்த பேரம்*

10. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், வலி நிறைந்த தண்டனையிலிருந்து உங்களைக் காக்கக் கூடிய ஒரு வியாபாரத்தை உங்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

11. **கடவுள்** மற்றும் அவருடைய தூதரின் மீது நம்பிக்கை கொண்டு மேலும் உங்களுடைய பணத்தையும் உங்கள் வாழ்வுகளையும் கொண்டு **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபடுங்கள். நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், இதுவே உங்களுக்கு மிகச்சிறந்த பேரமாகும்.

12. இதற்குப் பிரதிபலனாக, அவர் உங்களுடைய பாவங்களை மன்னிப்பார், மேலும் ஏதேன் தோட்டங்களில் அழகிய மாளிகைகளுடன், ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் உங்களை அனுமதிக்கின்றார். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

13. கூடுதலாக, மெய்யாகவே நீங்கள் விரும்பக்கூடிய ஒன்றும் உங்களுக்குக் கிடைக்கும்: **கடவுள்**–யிடமிருந்து ஆதரவு மற்றும் உத்தரவாதமான வெற்றி. நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி கொடுப்பீராக.

14. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், மேரியின் மகன், ஜீஸஸின் சீடர்களைப் போல, **கடவுள்**–ன் ஆதரவாளர்களாக இருங்கள். "**கடவுள்**–ன் பால் என்னுடைய ஆதரவாளர்களாக இருப்பவர்கள் யார்," என்று அவர்களிடம் அவர் கூறிய பொழுது, அவர்கள் கூறினர், "நாங்கள் **கடவுள்**–ன் ஆதரவாளர்களாக இருக்கின்றோம்." இவ்விதமாக, இஸ்ரேலின் சந்ததியினரிலிருந்து ஒரு கூட்டம் நம்பிக்கை கொண்டது, மேலும் மற்றொரு கூட்டம் நம்பமறுத்தது. நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களுடைய விரோதிக்கெதிராக நாம் உதவி செய்தோம், அவர்கள் வெற்றி பெறுகின்ற அளவுக்கு.

****

## சூரா 62: வெள்ளிக்கிழமை (அல்–ஜுமுஆ)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–ஐத் துதித்துக் கொண்டிருக்கின்றன; அரசர், மிகப் புனிதமானவர், எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

**61:9 குறிப்பிட்ட இந்தத் தூதரின் பெயர் கணித ரீதியில் எழுதிக் காட்டப்பட்டுள்ளது (பின் இணைப்பு 2).*

2. அவர்தான் வேதம் வழங்கப்படாத மக்களுக்கு அவர்களுக்கிடையிலிருந்தே ஒரு தூதரை, தன்னுடைய வெளிப்பாடுகளை அவர்களுக்கு எடுத்துரைக்கவும், அவர்களைத் தூய்மைப்படுத்தவும், மேலும் வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கவும் அனுப்பியவர். இதற்கு முன்னர், அவர்கள் மிக நெடிய வழி கேட்டில் சென்று விட்டிருந்தனர்.

3. மேலும் அவர்களுக்குப் பின்னர் ஏராளமான தலைமுறையினர்களுக்கும். அவர்தான் எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

4. தான் நாடுகின்ற எவர் மீதும் அவர் அருள்கின்ற **கடவுள்**–ன் அருட்கொடை இத்தகையதேயாகும். **கடவுள்** எல்லையற்ற கருணையை உடையவர்.

5. தோராவைக் கொடுக்கப் பெற்று, பின்னர் அதனை ஆதரிக்கத் தவறியவர்களுக்குரிய உதாரணமாவது, மாபெரும் இலக்கிய நூல்களை சுமக்கின்ற கழுதையைப் போன்றதாகும். **கடவுள்**–ன் வெளிப் பாடுகளை ஏற்க மறுக்கின்ற மக்களின் உதாரணம் உண்மையில் இழிவானதேயாகும். தீய மக்களைக் **கடவுள்** வழி நடத்துவதில்லை.

6. கூறுவீராக, "யூதர்களாக இருப்பவர்களே உங்களைத்தான், மற்ற மக்கள் அனைவரையும் தவிர்த்து, நீங்கள் **கடவுள்**–ஆல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று நீங்கள் கோருவீர்களாயின், பின்னர் நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் நீங்கள் மரணத்தை விரும்ப வேண்டும்!"

7. அவர்கள் செய்தவற்றின் காரணத்தால், அவர்கள் ஒருபோதும் அதனை விரும்ப மாட்டார்கள். **கடவுள்** தீயவர்களை முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

8. கூறுவீராக, "நீங்கள் தவிர்த்து விட முயல்கின்ற அந்த மரணமானது, விரைவிலோ அல்லது தாமதமாகவோ உங்களை வந்தடைந்து விடும். பின்னர் அனைத்து இரகசியங்களையும் அறிவிப்புகளையும் அறிந்தவரிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள், அப்போது நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் பற்றி அவர் உங்களுக்குத் தெரிவிப்பார்."

*நம்பிக்கையாளர்கள்*
*அனைவருக்குமான முக்கியக் கட்டளைகள்*

9. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், வெள்ளிக்கிழமை அன்று கூட்டுத்தொழுகை *(ஸலாத் அல்–ஜுமுஆ)* அறிவிக்கப்படும் பொழுது, **கடவுள்**–ஐ நினைவு கூர்வதற்காக நீங்கள் விரைந்து செல்லவும், வேலைகள் அனைத்தையும் போட்டு விடவும் வேண்டும். நீங்கள் மட்டும் அறிந்திருந்தால், இதுவே உங்களுக்கு மிகவும் சிறந்ததாகும்.

10. தொழுகை முடிந்து விட்டவுடன், **கடவுள்**–ன் அருட்கொடைகளைத் தேடுவதற்காக பூமி முழுவதும் நீங்கள் பரவிச் செல்லலாம், மேலும் நீங்கள் வெற்றி பெறுவதற்காக, தொடர்ந்து **கடவுள்**–ஐ அடிக்கடி நினைவில் கொள்ளுங்கள்.

11. அவர்களில் சிலர் ஒரு வியாபாரப் பரிவர்த்தனையையோ, அல்லது ஏதேனும் பொழுது போக்கினையோ காண நேரும் போது, உம்மை நின்று கொண்டிருக்க விட்டுவிட்டு அவர்கள் அதன்பால் விரைந்து சென்று விடுகின்றனர்! கூறுவீராக, "**கடவுள்** வசமிருப்பது பொழுது போக்கினையோ அல்லது வியாபாரத்தையோ விட மிகவும் மேலானதாகும். **கடவுள்**தான் வழங்குபவர்களில் மிகச் சிறந்தவர்."

****

## சூரா 63: நயவஞ்சகர்கள் (அல்–முனாஃபிகூன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நயவஞ்சகர்கள் உம்மிடம் வரும் பொழுது அவர்கள் கூறுகின்றனர், "நீர் **கடவுள்**–ன் தூதர்தான் என நாங்கள் சாட்சியம் பகர்கின்றோம்.*" நீர் அவருடைய தூதராக இருக்கின்றீர் என்பதைக் **கடவுள்** அறிவார், மேலும் இந்நயவஞ்சகர்கள் பொய்யர்களாக இருக்கின்றனர் என்று **கடவுள்** சாட்சியம் பகர்கின்றார்.

2. போலித்தனமான அவர்களுடைய நம்பிக்கையெனும் போர்வையின் கீழ், அவர்கள் **கடவுள்**–ன் பாதையிலிருந்து மக்களை விரட்டுகின்றனர். மெய்யாகவே அவர்கள் செய்வது மிகக் கேவலமானதாகும்.

**63:1. "இஸ்லாத்தின் முதல் தூண்" கடவுள் மட்டுமே ஒரே தெய்வமாக இருக்கின்றார் என்று 3:18ல் கூறப்பட்டுள்ளபடி சாட்சியம் பகர்வதே ஆகும். ஆனால் சீர்கெட்டுப்போன "முஸ்லிம்" அறிஞர்கள், "முஹம்மத் கடவுளின் தூதராவார்" என்பதைச் சேர்த்துக் கொள்கின்றனர், இது பற்பல கட்டளைகளை மீறுகின்றது (பார்க்க 2:285). குர் ஆனில் வசனம் 63:1 ஒரு இடத்தில் மட்டுமே, இத்தகையதொரு வாசகம் கூறப்படுகின்றது. நயவஞ்சகர்கள் மட்டுமே இத்தகையதொரு வாசகத்தைக் கூறுகின்றனர்.*

3. இது ஏனெனில், அவர்கள் நம்பிக்கை கொண்டனர், பின்னர் நம்பமறுத்து விட்டனர். எனவே, அவர்களுடைய மனங்கள் தடுக்கப்பட்டு விட்டன; அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

*அவர்களுடைய தோள்பட்டைகளில் ஓர் அடையாளம்*

4. அவர்களை நீர் காணும் பொழுது, அவர்களுடைய தோற்றங்களால் நீர் கவரப்படக் கூடும். மேலும் அவர்கள் பேசும் பொழுது, அவர்களுடைய சொல்வன்மையை நீர் கவனத்துடன் செவியேற்கக் கூடும். அவர்கள் நிற்கின்ற மரக்கட்டைகளைப் போன்றவர்கள். ஒவ்வொரு கூச்சலும் அவர்களுக்கு எதிரான நோக்கத்தில் உள்ளதென்றே அவர்கள் நினைக்கின்றனர். இவர்கள் தான் மெய்யான விரோதிகள் ஆவர்; அவர்களைக் குறித்து எச்சரிக்கையுடன் இருப்பீராக. **கடவுள்** அவர்களைக் கண்டனம் செய்கின்றார்; அவர்கள் விலகிச் சென்று விட்டனர்.

5. "வாருங்கள், **கடவுள்**–ன் தூதர் உங்களுடைய பாவமன்னிப்பிற்காகப் பிரார்த்தனை செய்யட்டும்," என அவர்களிடம் கூறப்பட்டால், பரிகாசமாகத் தங்களுடைய தலைகளை அவர்கள் திருப்பிக் கொள்கின்றனர், மேலும் அவர்கள் மற்றவர்களை விரட்டுவதையும் ஆணவத்துடன் நடந்து கொள்வதையும் நீர் காண்கின்றீர்.

*பரிந்துரை எனும் கட்டுக்கதை உடைத்தெறியப் படுகின்றது**

6. அவர்களுடைய பாவமன்னிப்பிற்காக நீர் பிரார்த்தித்தாலும், அல்லது அவர்களுடைய பாவமன்னிப்பிற்காகப் பிரார்த்திக்காவிட்டாலும், அவர்களுக்கு அது சமமேயாகும்; **கடவுள்** அவர்களை மன்னிக்க மாட்டார். ஏனெனில் **கடவுள்** தீய மக்களை வழிநடத்த மாட்டார்.

7. "**கடவுள்**–ன் தூதரைப் பின்பற்றியவர்களுக்குப் பணம் எதுவும் கொடுக்காதீர்கள், ஒரு வேளை அவர்கள் அவரைக் கைவிட்டு விடக்கூடும்" என்று கூறுபவர்கள் அவர்கள்தான். ஆயினும், வானங்கள் மற்றும் பூமியின் பொக்கிஷங்களைக் **கடவுள்**தான் வைத்திருக்கின்றார், ஆனால் இந்நயவஞ்சகர்கள் புரிந்து கொள்வதில்லை.

8. அவர்கள் கூறுகின்றனர், "நகருக்குள் நாம் திரும்பிச் சென்றால், அங்குள்ள சக்தி வாய்ந்தவர்கள் பலஹீனர்களை வெளியேற்றி விடுவார்கள் *(மேலும் நாம் மோசம் போய் விடுவோம்)*." கண்ணியம் அனைத்தும் **கடவுள்**–க்கும் அவருடைய தூதருக்கும், நம்பிக்கையாளர்களுக்குமே உரியது *(என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்)*. ஆயினும் இந்நயவஞ்சகர்கள் அறிந்து கொள்வதில்லை.

9. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுடைய பணத்தாலும் உங்களுடைய பிள்ளைகளாலும் **கடவுள்**–ஐ நினைவு கூர்வதிலிருந்து கவனம் திருப்பப்பட்டு விடாதீர்கள். இதனைச் செய்பவர்கள் நஷ்டவாளிகள் ஆவார்கள்.

10. மரணம் உங்களிடம் வருவதற்கு முன்னர், உங்களுக்குரிய நம்முடைய வாழ்வாதாரங்களிலிருந்து நீங்கள் கொடுக்க வேண்டும், அப்போது நீங்கள், "என் இரட்சகரே, சிறிதொரு காலம் மட்டும் இதனை நீர் தாமதப்படுத்தினால்! அப்போது நான் தர்மம் செய்பவனாகி மேலும் நன்னெறியாளர்களுடன் சேர்ந்து கொள்வேன்!" என்று கூறுவீர்கள்.

11. எந்த ஓர் ஆத்மாவுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மரணத்தின் நேரத்தைக் **கடவுள்** ஒருபோதும் தாமதப்படுத்துவதில்லை. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்தவராக இருக்கின்றார்.

****

## சூரா 64: பரஸ்பரம் பழித்துக் கொள்ளுதல் (அல்–தகாபுன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானங்களில் உள்ள ஒவ்வொன்றும் மேலும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் **கடவுள்**–ஐத் துதித்துக் கொண்டிருக்கின்றன. அனைத்து அரசுரிமையும் அவருக்கேயுரியது, மேலும் அனைத்துப் புகழும் அவருக்கேயுரியது, மேலும் அவர் சர்வசக்தியுடையவர்.

2. அவர்தான் உங்களைப் படைத்தவர், பின்னர் உங்களுக்கிடையில் நம்பமறுப்பவரும் நம்பிக்கையாளரும் இருக்கின்றார். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் பார்ப்பவராக இருக்கின்றார்.

3. வானங்களையும் பூமியையும் குறிப்பிட்டதொரு காரணத்திற்காகவே* அவர் படைத்தார், உங்களை வடிவமைத்தார், மேலும் உங்களுடைய வடிவத்தை மிகச் சரியாக அமைத்தார், பின்னர் உங்களுடைய இறுதி விதி அவரிடமே உள்ளது.

4. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் அவர் அறிகின்றார், மேலும் நீங்கள் மறைக்கின்ற ஒவ்வொன்றையும் அறிவிக்கின்ற ஒவ்வொன்றையும் அவர் அறிகின்றார். உள்ளார்ந்த எண்ணங்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

**63:6 இந்தக் கட்டுக்கதையின் காரணமாகவே பல இலட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய நபிமார்களை இணை வழிபாடு செய்கின்றனர் (பின் இணைப்பு 8).*

**64:3 கடவுளின் அளவற்ற கருணையின் காரணமாகவே நாம் இவ்வுலகில் இருக்கின்றோம். மிக்க அருளாளர் நம்மை மீட்டுக் கொள்வதற்காகவே நமக்கு ஒரு வாய்ப்புத் தந்திருக்கின்றார். அறிமுகவுரை மற்றும் பின்இணைப்பு 7ஐப் பார்க்க.*

5. கடந்த காலத்தில் நம்பமறுத்து, பின்னர் தங்களுடைய தீர்மானங்களின் பின் விளைவுகளை அனுபவித்தவர்களை நீங்கள் கவனித்தீர்களா ? வலி நிறைந்ததொரு தண்டனைக்கு அவர்கள் உள்ளானார்கள்.

6. இது ஏனெனில், அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான சான்றுகளுடன் சென்றனர், ஆனால் அவர்கள் கூறினர், "நம்மைப் போன்ற மானிடர்களையா நாம் பின்பற்ற வேண்டும் ?" அவர்கள் நம்பமறுத்தனர், மேலும் திரும்பிச் சென்று விட்டனர். அவர்களின் தேவை **கடவுள்**–க்கு இல்லை; **கடவுள்** எந்தத் தேவையுமற்றவர், புகழ்ச்சிக்குத் தகுதியானவர்.

7. நம்பமறுப்பவர்கள் தாங்கள் உயிர்த்தெழுப்பப்பட மாட்டோம் என்று உறுதியுடன் கூறுகின்றனர் ! ஆம், மெய்யாகவே, என் இரட்சகர் மீது ஆணையாக, நீங்கள் உயிர்த்தெழுப்படுவீர்கள், மேலும் நீங்கள் செய்த ஒவ்வொன்றுக்கும் நீங்கள் பொறுப்பாக்கப்படுவீர்கள். இதனைச் செய்வது **கடவுள்**–க்கு எளிதானதேயாகும்.

8. ஆகவே, நீங்கள் **கடவுள்** மற்றும் அவருடைய தூதர் மீதும், மேலும் இதிலே நாம் வெளிப்படுத்தியுள்ள இந்த ஒளியின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் **கடவுள்** முற்றிலும் நன்கறிந்திருக்கின்றார்.

9. ஒன்று திரட்டுகின்ற அந்நாளுக்காக அவர் உங்களை ஒன்று திரட்டுகின்ற அந்நாள் வரும். அது தான் பரஸ்பரம் பழித்துக் கொள்கின்ற நாளாகும். எவரொருவர் **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றாரோ, அவருடைய பாவங்களை அவர் நீக்கி விடுவார், மேலும் ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குள் அவரை அனுமதிப்பார். அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். இதுவே மகத்தான பெரு வெற்றியாகும்.

10. நம்பமறுத்து நம்முடைய வெளிப்பாடுகளை ஏற்க மறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தான் நரக நெருப்பில் வசிப்பவர்கள் ஆவார்கள்; அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். என்ன ஒரு துன்பகரமான விதி !

*தெய்வீகச் சட்டம்*

11. **கடவுள்**–ன் நாட்டத்திற்கு ஏற்பவே தவிர எந்த ஒன்றும் உங்களுக்கு நிகழ்வதில்லை. எவரொருவர் **கடவுள்** மீது நம்பிக்கை கொள்கின்றாரோ, அவருடைய இதயத்தை அவர் வழிநடத்துவார். அனைத்து விஷயங்களையும் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

12. நீங்கள் **கடவுள்**–க்குக் கீழ்ப்படிய வேண்டும், அத்துடன் நீங்கள் தூதருக்குக் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் நம்முடைய தூதரின் ஒரே இறைப்பணி தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதேயாகும்.

13. **கடவுள்:** அவருடன் வேறு தெய்வம் இல்லை. நம்பிக்கையாளர்கள் **கடவுள்** மீதே பொறுப்பேற்படுத்த வேண்டும்.

14. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங்களுடைய வாழ்க்கைத் துணைகளும் உங்களுடைய பிள்ளைகளும் உங்களுடைய விரோதிகளாக இருக்கக்கூடும்; எச்சரிக்கை. நீங்கள் பிழை பொறுத்து, மறந்து, மன்னித்து விட்டால், பின்னர் **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

15. உங்களுடைய பணமும் பிள்ளைகளும் ஒரு சோதனையாகும், மேலும் மகத்தானதொரு பிரதிபலன் **கடவுள்** வசமுள்ளது.

16. ஆகையால், நீங்கள் உங்களால் இயன்றவரை **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கவும், கவனத்துடன் செவியேற்கவும், கீழ்ப்படியவும், மேலும் உங்களுடைய சொந்த நலனுக்காக *(தர்மம்)* கொடுக்கவும் வேண்டும். எவரொருவர் தன் சொந்தக் கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றாரோ, இவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.

17. நீங்கள் நன்னெறியின் கடனைக் **கடவுள்**–க்கு கடனளித்தால், அவர் உங்களுக்குரிய வெகுமதியைப் பன்மடங்காகப் பெருக்குவார், மேலும் உங்களை மன்னிப்பார். **கடவுள்** நன்றி பாராட்டுபவர், கனிவானவர்.

18. அனைத்து இரகசியங்களையும் அறிவிப்புக்களையும் அறிந்தவர்; எல்லாம் வல்லவர். ஞானம் மிகுந்தவர்.

****

## சூரா 65: விவாகரத்து (அல்–தலாக்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நபியே உம்மைத்தான், மனிதர்களாகிய நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்தால், விவாகரத்திற் குரியதோர் இடைக்காலத் தவணை பூர்த்தியாகி விட்டதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அத் தகையதோர் இடைக்காலத்தவணையை மிகத் துல் லியமாகக் நீங்கள் கணக்கிட வேண்டும்.* உங்கள் இரட்சகரான **கடவுள்**–யிடம் நீங்கள் பக்தியோடி ருக்க வேண்டும். அவர்களுடைய வீடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றி விடாதீர்கள், அன்றி அவர் கள் நிரூபிக்கப்பட்டதொரு விபசாரம் புரிந்தாலே யன்றி, அவர்களாகவே வெளியேறி விடுவதற்காக அவர்களை நிர்ப்பந்தித்து, வாழ்க்கையை அவர்க ளுக்குத் துன்பகரமானதாக ஆக்கி விடவும் வேண் டாம். இவை **கடவுள்**–ன் சட்டங்களாகும். எவரொரு வர் **கடவுள்**–வுடைய விதி முறைகளின் வரம்புகளை மீறுகின்றாரோ, அவர் தனக்கெதிராகவே ஓர் அநீதம் புரிந்து கொள்கின்றார். நீங்கள் சற்றும் அறியமாட்டீர் கள்; இதிலிருந்து நல்லது ஏதேனும் வெளிவரக் **கடவுள்** நாடுவதாய் இருக்கக் கூடும்.

2. இடைக்காலத் தவணை பூர்த்தியடைந்தவுடன், நியா யமாக அவர்களுடன் நீங்கள் இணக்கம் செய்து கொள் ளலாம், அல்லது நியாயமாக முழுவதும் பிரிந்து சென்று விடலாம். **கடவுள்**–ன் முன்பு விவாகரத்திற் குச் சாட்சியாக நீங்கள் இரு நீதமான சாட்சிகளை வைத்துக் கொள்ள வேண்டும். இது, **கடவுள்** மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவேயாகும். எவரொருவர் **கடவுள்** –யிடம் பக்தியோடிருக்கின்றாரோ, அவருக்கு வெளி யேறுகின்ற ஒரு வழியை அவர் உருவாக்குவார்.

3. மேலும் அவர் ஒருபோதும் எதிர்பாராப் புறத்திலிருந்து அவருக்கு வழங்குவார். எவரொருவர் **கடவுள்** மீது பொறுப்பேற்படுத்துகின்றாரோ, அவருக்கு அவர் போதுமானவர். **கடவுள்**–ன் கட்டளைகள் நிறைவேற் றப்படும். ஒவ்வொன்றுக்கும் அதன் தலைவிதியைக் **கடவுள்** தீர்மானித்திருக்கின்றார்.

4. மாதவிடாய் நிறுத்தத்தை அடைந்து விட்ட பெண் களைப் பொறுத்தவரை, உங்களுக்கு ஏதேனும் சந்தே கங்கள் இருந்தால் அவர்களுடைய இடைக் காலத் தவணை மூன்று மாதங்களாக இருத்தல் வேண்டும். மாதவிடாய் வராமல், அவர்கள் கர்ப்பமாக இருக்கின் றனர் என்று தெரிய வரும் பெண்களைப் பொறுத்த வரை, அவர்கள் பிரசவிப்பதுடன் அவர்களுடைய இடைக்காலத் தவணை முடிவடைகின்றது. எவரொ ருவர் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கின்றாரோ, அவருக்கு அவர் ஒவ்வொன்றையும் இலகுவாக்கி விடுவார்.

5. இது, அவர் உங்களுக்கு இறக்கியனுப்புகின்ற **கடவுள்**–ன் கட்டளையாகும். எவரொருவர் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்கின்றாரோ, அவருடைய பாவங் களை அவர் நீக்குகின்றார், மேலும் தாராளமாக அவ ருக்கு வெகுமதியளிக்கின்றார்.

6. உங்களுடன் அவர்கள் வசித்து வந்த அதே வீட்டில் அவர்கள் வசிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும், மேலும் அவர்களாகவே வெளியேறி விடும்படி வாழ்க் கையை அவர்களுக்கு மிகவும் துன்பகரமானதாக ஆக்கி விடாதீர்கள். அவர்கள் கர்ப்பமாக இருந்தால், அவர்கள் பிரசவிக்கும் வரை அவர்களுக்கு நீங்கள் செலவு செய்ய வேண்டும். அச்சிசுவுக்கு அவர்கள் பாலூட்டினால், அவர்களுடைய இந்தப் பணிக்கென நீங்கள் ஊதியமளிக்க வேண்டும். உங்களுக்கிடை யில் இணக்கமான உறவுகளை நீங்கள் பராமரிக்க வேண்டும். நீங்கள் மனவேற்றுமை கொண்டால், குழந்தைக்குப் பாலூட்டுவதற்காக மற்றொரு பெண் ணை நீங்கள் பணிக்கமர்த்திக் கொள்ளலாம்.

7. செல்வந்தரான கணவர் தன்னுடைய வருவாய்க் கேற்ப ஜீவனாம்சம் வழங்க வேண்டும், மேலும் ஏழ்மை யானவர் **கடவுள்** அவருக்கு அளித்த வருவாய்க் கேற்ப வழங்கிட வேண்டும். **கடவுள்** எந்த ஆத்மாவுக் கும் அவர் கொடுத்திருப்பதை விடவும் அதிகமாகச் சுமத்துவதில்லை. கஷ்டத்திற்குப் பின்னர் எளிதான தை **கடவுள்** வழங்குவார்.

8. எத்தனையோ ஒரு சமூகம் அதன் இரட்சகரின் கட்ட ளைகளுக்கெதிராகவும் அவருடைய தூதர்களுக்கெ திராகவும் கலகம் செய்தது. அதன் விளைவாக, கண் டிப்புடன் அவர்களை நாம் பொறுப்பாக்கிப் பிடித் தோம், மேலும் பயங்கரமானதொரு பழியாக அவர் களைப் பழி தீர்த்தோம்.

9. அவர்களுடைய தீர்மானங்களின் விளைவுகளால் அவர்கள் துன்பப்பட்டார்கள்; ஆழ்ந்ததொரு நஷ்டம்.

10. கடுமையானதொரு தண்டனையைக் **கடவுள்** அவர் களுக்காகத் தயார் செய்துள்ளார். ஆகவே, அறிவுத் திறன் கொண்டுள்ள நம்பிக்கையுடையவர்களே, நீங்கள் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க வேண்டும். **கடவுள்** உங்களுக்கொரு தூதுச் செய்தியை* இறக்கி அனுப்பியுள்ளார் –

**65:1 மறுமணத்திற்குத் தகுதியாகும் முன்னர் , விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணுக்குரிய இடைக்காலத் தவணையாவது மூன்று மாதவிடாய்க் காலங்கள் காத்திருப்பதாகும். விவாகரத்துச் செய்யப்பட்ட பெண் கர்ப்பவதியாக இல்லை என்பதை இது உறுதிப்படுத்துகின்றது (2:228).*

**65:10–11 தெளிவாக, இங்கே "தூதர்" என்பது குர்ஆன்தான். வசனம் 10, "ஒரு தூதுச் செய்தியை இறக்கி அனுப்புவதைப்" பற்றிப் பேசுகின்றது, மேலும் 65:11ல் இது குர்ஆனைத்தான் தூதராகச் சுட்டிக் காட்டுகின்றது (பின் இணைப்பு 20).*

11. நம்பிக்கை கொண்டு நன்னெறியான காரியங்கள் புரிவோரை, இருளில் இருந்து வெளியேற்றி ஒளிக்குள் வழிநடத்துவதற்காக, **கடவுள்**–ன் வெளிப்பாடுகளை, தெளிவாக உங்களுக்கு ஓதிக் காட்டுகின்ற ஒரு தூதர்.* எவரொருவர் **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துகின்றாரோ, அவரை பாயும் ஆறுகள் கொண்ட தோட்டங்களுக் குள் அவர் அனுமதிப்பார்; அங்கே அவர்கள் என் றென்றும் தங்கியிருப்பார்கள். **கடவுள்** தாராளமாக அவருக்கு வெகுமதியளிப்பார்.

*ஏழு பிரபஞ்சங்களும் ஏழு பூமிகளும்**

12. ஏழு பிரபஞ்சங்களையும் அதே எண்ணிக் கையி லான பூமிகளையும் **கடவுள்** படைத்தார். அவற்றுக் கிடையே கட்டளைகள் இறங்குகின்றன. இது, **கடவுள்** சர்வசக்தியுடையவர் என்பதையும், மேலும் **கடவுள்** அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார் என்பதையும் உங்க ளுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே.

****

## சூரா 66: தடை செய்தல் (அல்–தஹ்ரீம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நபியே உம்மைத்தான், உமக்கு அனுமதிக்கப்பட்டதா கக் **கடவுள்** ஆக்கியதை நீர் ஏன் தடை செய்கின்றீர், வெறுமனே உம்முடைய மனைவியரைத் திருப்திப் படுத்துவதற்காகவா? **கடவுள்** மன்னிப்பவர், கருணையாளர்.*

2. உங்களுடைய சத்தியப் பிரமாணங்களைக் குறித்த சட்டங்களைக் **கடவுள்** உங்களுக்காக விதித்துள் ளார். **கடவுள்** உங்களுடைய இரட்சகர் ஆவார், மேலும் அவர்தான் சர்வமும் அறிந்தவர், ஞானம் மிகுந்தவர்.

3. நபியானவர் தன்னுடைய மனைவியரில் சிலரை குறிப்பிட்டதொரு வாக்குமூலத்தைக் குறித்து நம்பிக்கை வைத்தார். பின்னர் அவர்களில் ஒருவர் அதனைப் பரப்பி விட்டார், மேலும் அதனைப் பற்றி, **கடவுள்** அவருக்குத் தெரியப்படுத்தினார். அவர் பின் னர் தன் மனைவியிடம், அவ்விவகாரத்தின் பாகத் தைக் தெரியப்படுத்தினார், பாகத்தை விட்டு விட் டார். அவர் அவரைக் கேட்டார், "இதனைப் பற்றி உங்களுக்குத் தெரிவித்தவர் யார்?" அவர் கூறி னார், "சர்வமும் அறிந்தவர் நன்கறிந்தவரால் நான் தெரியப்படுத்தப்பட்டேன்."

4. நீங்கள் இருவரும் **கடவுள்**–யிடம் வருந்தினால், பின்னர் உங்கள் இதயங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டன. ஆனால் அவருக்கெதிராக நீங்கள் ஒன்று சேர்ந்து கொண்டால், பின்னர் அவருடைய தோழராக **கடவுள்** இருக்கின்றார், மேலும் கேப்ரியே லும் நன்னெறியுடைய நம்பிக்கையாளர்களும் அவ் வாறே இருக்கின்றனர். அத்துடன், வானவர்களும் அவருடைய உதவியாளர்களாக இருக்கின்றனர்.

5. அவர் உங்களை விவாகரத்துச் செய்து விட்டால், உங்களுடைய இடத்தில் உங்களை விடச் சிறந்த சரணடைந்தவர்கள் *(முஸ்லிம்கள்)*, நம்பிக்கையாளர் கள் *(மு஁மின்கள்)*, கீழ்ப்படிபவர்கள், பாவத்திற்காக வருந்துபவர்கள், வழிபடுபவர்கள், மார்க்கப் பற்றுடை யவர்களான, முன்னரே திருமணமானவர்களையோ அல்லது கன்னிப் பெண்களையோ, அவருடைய இரட் சகர் மாற்றியமைத்து விடுவார்.

6. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உங் களையும் உங்களுடைய குடும்பத்தாரையும், மனிதர் களையும் பாறைகளையும் எரிபொருளாகக் கொண் டிருக்கின்ற அந்நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள். **கடவுள்**–ன் உத்தரவை ஒருபோதும் மீறாத, கண்டிப்பான, மற்றும் வலிமை மிக்க வானவர் கள் அதற்குக் காவலாக இருக்கின்றனர்; செய்யுமாறு அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை எதுவாயினும் அவர்கள் செய்வார்கள்.

7. நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களே உங்களைத் தான், இன்றைய தினம் மன்னிப்புக் கோராதீர்கள். நீங்கள் செய்தவற்றுக்காக மட்டுமே நீங்கள் கூலி கொடுக்கப்படுகின்றீர்கள்.

*நம்பிக்கையாளர்கள்*
*பாவத்திற்காக வருந்துகின்றனர்*

8. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், உறுதி மிக்க ஒரு வருந்துதலாக, உங்களுடைய பாவங்களுக் காக நீங்கள் **கடவுள்**–யிடம் வருந்த வேண்டும். உங்க ளுடைய இரட்சகர் பின்னர் உங்களுடைய பாவங்களை நீக்குவார், மேலும் பாயும் ஆறுகள் கொண்ட தோட் டங்களுக்குள் உங்களை அனுமதிப்பார். அந்நாளில், நபியையும் மற்றும் அவருடன் நம்பிக்கை கொண்டவர் களையும் **கடவுள்** ஏமாற்றி விடமாட்டார். அவர்களு டைய ஒளியானது அவர்களுக்கு முன்புறமும் அவர் களுடைய வலப்புறமும் ஒளிரும். அவர்கள் கூறுவார் கள், "எங்கள் இரட்சகரே, எங்களுடைய ஒளியை எங் களுக்குப் பூரணப் படுத்துவீராக, மேலும் எங்களை மன்னிப்பீராக; நீர் சர்வசக்தியுடையவராக இருக் கின்றீர்."

*65:11 பார்க்க 65:10–11க்குரிய அடிக்குறிப்பு.

****65:12*** *நம்முடைய பூமியை ஒத்த மற்ற ஆறு கிரகங்களைக் கடவுள் படைத்துள்ள போதிலும், நம்முடைய கிரகத்தில் மட்டுமே ஜீவராசிகள் உள்ளன. எனவே, இக்கிரகத்தின் மீது அதன் விசேஷமான சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் மட்டுமே உயிர்கள் "பரிணாமம்" அடைந்து விடவில்லை என்று பரிணாமவாதிகளுக்கு தீர்ப்பு நாளன்று எடுத்துக்காட்டப்படும்.*

****66:1*** *உலகெங்கிலுமுள்ள முஹம்மதியர்கள், முஹம்மத் தவறிழைக்காதவராக இருந்தார் என்று நம்பிக் கொண்டிருக் கின்றனர். உண்மையில் தவறிழைக்கக் கூடிய ஒரு மானிடராகவே அவர் இருந்தார் என்பதை இந்த வசனம் நமக்குப் போதிக் கின்றது **(18:110, 33:37, 40:66, 80:1)**.*

9. நபியே, நம்பமறுப்பவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் எதிராகப் பாடுபடுவீராக, மேலும் அவர்களிடம் கண்டிப்புடன் இருப்பீராக. அவர்களுடைய தங்குமிடம் எரிகிடங்காகும். மேலும் துன்பகரமானதொரு விதியுமாகும்.

*பரிந்துரையெனும் கட்டுக்கதை தகர்த்தெறியப்படுகின்றது*

10. நம்பமறுத்தவர்களுக்குரிய உதாரணங்களாக நோவாவின் மனைவியையும் லோத்தின் மனைவியையும் **கடவுள்** எடுத்துரைக்கின்றார். நன்னெறி மிக்க நம்முடைய ஊழியர்களில் இருவருக்கு அவர்கள் மண முடிக்கப்பட்டிருந்தனர், ஆனால் அவர்கள் அவர்களுக்குத் துரோகம் புரிந்தனர் மேலும், அதன் விளைவாக, **கடவுள்**–க்கெதிராக அவர்களால் அவர்களுக்கு எவ்வகையிலும் உதவ இயலவில்லை. அவர்கள் இருவரிடமும் கூறப்பட்டது, "அதற்குத் தகுதியானவர்களுடன் சேர்ந்து நரகநெருப்பில் நுழையுங்கள்."

*நம்பிக்கையாளர்களுக்கு உதாரணங்கள்: ஃபேரோவின் மனைவி*

11. மேலும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஓர் உதாரணமாக ஃபேரோவின் மனைவியைக் **கடவுள்** எடுத்துரைக்கின்றார். அவர் கூறினார், "என் இரட்சகரே, சுவனத்தில் உம்மிடம் எனக்கென ஓர் இல்லத்தைக் கட்டுவீராக, மேலும் ஃபேரோ மற்றும் அவனது செயல்களிலிருந்து என்னைக் காப்பீராக; வரம்புமீறுகின்ற மக்களிடமிருந்து என்னைக் காப்பீராக."

*மேரி*

12. அத்துடன் இம்ரானின் சந்ததியான, மேரி. அவர் தன் கற்பைக் காத்துக்கொண்டார், பின்னர் நாம் நம்முடைய ஆவியிலிருந்து அவருக்குள் ஊதினோம். அவர் தன் இரட்சகரின் வார்த்தைகள் மற்றும் அவருடைய வேதங்களின் மீது நம்பிக்கை கொண்டார்; அவர் கீழ்ப்படிந்தவராக இருந்தார்.

****

## சூரா 67: அரசுரிமை (அல்–முல்க்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அரசுரிமை அனைத்தும் எவருடைய கரங்களில் உள்ளதோ அந்த ஒருவர் மிகவும் மேன்மையானவர், மேலும் அவர் சர்வசக்தியுடையவர்.

*நம்முடைய வாழ்வின் நோக்கம்**

2. உங்களுக்கிடையில் சிறப்பாகச் செயல்படக் கூடியவர்கள் யார் என்பதை பிரித்தறியும் நோக்கத்திற்காக மரணத்தையும் வாழ்வையும் படைத்த அந்த ஒருவர்.* அவர்தான் எல்லாம் வல்லவர், மன்னிக்கின்றவர்.

3. அவர் ஏழு பிரபஞ்சங்களையும் அடுக்கடுக்காகப் படைத்தார். மிக்க அருளாளரால் படைக்கப்பட்டவற்றில் எவ்விதமான குறைபாட்டையும் நீர் காண்பதில்லை. தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருப்பீராக; ஏதேனும் விரிசலை நீர் காண்கின்றீரா ?

4. மீண்டும் மீண்டும் உற்றுப் பார்ப்பீராக; ஸ்தம்பித்துப் போய் தோல்வியுற்றவையாக உம்முடைய கண்கள் திரும்பி வரும்.

5. மிகக் கீழுள்ள பிரபஞ்சத்தை விளக்குகளைக் கொண்டு நாம் அலங்கரித்தோம், மேலும் சாத்தான்களுக்கெதிராக அதன் எல்லைகளை ஏவுகணைகளைக் கொண்டு பாதுகாத்தோம்; நரகத்தில் ஒரு தண்டனையை நாம் அவர்களுக்காகத் தயாரித்தோம்.

6. தங்களுடைய இரட்சகரின் மீது நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களுக்கு, எரிகிடங்கின் தண்டனை. என்ன ஒரு துன்பகரமான விதி.

7. அதிலே அவர்கள் வீசப்படும் போது, அதன் புகைச்சலால், அதன் சீற்றத்தை அவர்கள் செவியுறுவார்கள்.

8. கோபாவேசத்தில் அது கிட்டத்தட்ட வெடிக்கின்றது. ஒரு கூட்டம் அதிலே வீசப்படுகின்ற பொழுதெல்லாம், அதன் பாதுகாவலர்கள் அவர்களைக் கேட்பார்கள், "எச்சரிப்பவர் ஒருவரை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லையா ?"

9. அவர்கள் பதிலளிப்பார்கள், "ஆம் மெய்யாக; எச்சரிப்பவர் ஒருவர் எங்களிடம் வரவே செய்தார், ஆனால் நாங்கள் நம்பமறுத்தோம், மேலும் கூறினோம், '**கடவுள்** எந்த ஒன்றையும் வெளிப்படுத்தவில்லை. நீங்கள் முற்றிலும் வழிதவறியவர்களாக இருக்கின்றீர்கள்.'"

10. அத்துடன் அவர்கள் கூறுவர், "நாங்கள் செவியேற்றிருந்தால் அல்லது புரிந்து கொண்டிருந்தால், நாங்கள் நரகவாசிகளில் இருந்திருக்க மாட்டோம்!"

11. இவ்விதமாக, அவர்கள் தங்களுடைய பாவங்களை ஒப்புக் கொண்டனர். நரகவாசிகளுக்குக் கேடுதான்.

12. தங்களுடைய தனிமையில் தனித்து இருக்கும் பொழுது, தங்கள் இரட்சகரிடம் பக்தியோடிருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மன்னிப்பையும் மகத்தானதொரு பிரதிபலனையும் அடைந்து விட்டனர்.

**67:2 இவ்வுலகத்திற்குப் பின்னாலுள்ள நோக்கத்தின் விபரங்களுக்கு அறிமுகவுரை மற்றும் பின் இணைப்பு 7 ஆகியவற்றைக் காண்க.*

13. உங்களுடைய கூற்றுகளை நீங்கள் இரகசியமாக வைத்துக் கொண்டாலும், அல்லது அவற்றை அறிவித்தாலும், உள்ளார்ந்த எண்ணங்களை அவர் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

14. அவர் படைத்தவற்றை அவர் அறியாமலிருப்பாரா ? அவர் மகிமை மிக்கவர், மிகவும் நன்கறிந்தவர்.

15. அவர்தான் பூமியை உங்களுடைய பணிக்கென அமைத்தவர். அதன் மூலைகளில் சுற்றித்திரியுங்கள், மேலும் அவருடைய வாழ்வாதாரங்களிலிருந்து உண்ணுங்கள். இறுதியான அழைப்பு ஆணை அவருக்குரியது.

16. வானத்தில் உள்ள அந்த ஒருவர் பூமியைத் தாக்கி அதனைத் தடுமாறி விழும்படிச் செய்துவிட மாட்டார் என்று நீங்கள் உத்தரவாதம் கொண்டிருக்கின்றீர்களா ?

17. வானத்தில் உள்ள அந்த ஒருவர் உக்கிரமான தொரு புயலை உங்கள் மீது அனுப்பி விட மாட்டார் என்று நீங்கள் உத்தரவாதம் கொண்டிருக்கின்றீர்களா ? அப்போதாவது என்னுடைய எச்சரிக்கையின் முக்கியத்துவத்தை நீங்கள் சரியாக மதிப்பிடுவீர்களா ?

18. அவர்களுக்கு முன்னர் மற்றவர்களும் நம்பமறுத்துள்ளனர்; என்னுடைய பழி தீர்த்தல் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது !

19. வரிசைகளில் அணிவகுத்தவாறும் தம்முடைய இறக்கைகளை விரித்தவாறும் அவர்களுக்கு மேலே பறவைகளை அவர்கள் பார்த்ததில்லையா ? மிக்க அருளாளர்தான் அவற்றைக் காற்றில் தாங்கிக் கொண்டிருக்கின்றார். அவர் அனைத்துப் பொருட்களையும் பார்ப்பவராக இருக்கின்றார்.

20. மிக்க அருளாளருக்கெதிராக உங்களுக்கு உதவக் கூடிய அந்தப் படைவீரர்கள் எங்கே ? உண்மையில், நம்பமறுப்பவர்கள் ஏமாற்றப்பட்டு விட்டனர்.

21. தன்னுடைய வாழ்வாதாரங்களை அவர் நிறுத்தி வைத்துக் கொண்டால், உங்களுக்கு வழங்குவதற்கு யார் இருக்கின்றார் ? உண்மையில், அவர்கள் வரம்புமீறலிலும் வெறுப்பிலும் ஆழமாக மூழ்கி விட்டனர்.

22. தன்னுடைய முகத்தால் குப்புற வீழ்ந்தவாறு நடக்கின்ற ஒருவன் சிறப்பாக வழி நடத்தப்பட்டவனா, அல்லது சரியான பாதையில் நேராக நடக்கின்ற ஒருவனா ?

23. கூறுவீராக, "அவர்தான் உங்களைத் துவக்கியவர், மேலும் செவிப்புலனையும் கண்களையும் மூளைகளையும் உங்களுக்கு அளித்தவர். அரிதாகவே நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றீர்கள்."

24. கூறுவீராக, "அவர்தான் பூமியின் மீது உங்களை அமைத்தவர், மேலும் அவர் முன் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்."

25. அவர்கள் சவால் விடுகின்றனர்: "நீர் உண்மையாளராக இருந்தால், அந்த முன்னறிவிப்பு எப்போது நிகழ்ந்தேறும் ?"

26. கூறுவீராக, "அதனைப் பற்றிய அறிவு **கடவுள்**–யிடம் உள்ளது; நான் தெளிவானதொரு எச்சரிப்பவன் என்பதை விட அதிகம் எதுவுமில்லை."

27. அது நிகழ்வதை அவர்கள் காணும்பொழுது, நம்ப மறுத்தவர்களின் முகங்கள் துன்பகரமானதாக மாறி விடும், மேலும் பிரகடனிக்கப்படும்: "இதுதான் நீங்கள் கேலி செய்து கொண்டிருந்தது."

28. கூறுவீராக, "என்னையும் என்னுடன் இருப்பவர்களையும் அழித்துவிடவோ, அல்லது அவருடைய கருணையைக் கொண்டு எங்கள் மீது பொழியவோ **கடவுள்** தீர்மானித்த போதிலும், வலி நிறைந்ததொரு தண்டனையிலிருந்து நம்பமறுப்பவர்களைக் பாதுகாக்க யார் இருக்கின்றார் ?"

29. கூறுவீராக, "அவர்தான் மிக்க அருளாளர்; நாங்கள் அவர் மீது நம்பிக்கை கொள்கின்றோம், மேலும் அவர் மீது பொறுப்பேற்படுத்துகின்றோம். மெய்யாகவே நெடிய வழிகேட்டில் இருப்பவர்கள் யார் என நீங்கள் நிச்சயம் கண்டு கொள்வீர்கள்."

30. கூறுவீராக, "உங்களுடைய தண்ணீர் ஆழத்திற்குச் சென்று விட்டால், தூய்மையான தண்ணீரை உங்களுக்கு யார் வழங்குவார் ?"

****

## சூரா 68: பேனா (அல்–கலம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. னுஉன்,* பேனாவும், மேலும் அவர்கள் *(இம் மக்கள்)* எழுதுபவையும்.

2. உம்முடைய இரட்சகரிடமிருந்து மகத்தானதொரு ஆசியை நீர் அடைந்து விட்டீர், நீர் கிறுக்கர் அல்லர்.

**68:1 "னுஉன்" குர்ஆனுடைய அற்புதமான துவக்க எழுத்துக்களில் தனித்தன்மை வாய்ந்ததாகும். பார்க்க பின் இணைப்பு 1.*

3. நன்கு தகுதியானதொரு பிரதிபலனை நீர் அடைந்து வீட்டீர்.

4. மகத்தானதொரு ஒழுக்க மாண்பினைக் கொண்டு நீர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளீர்.

5. நீரும் காண்பீர், மேலும் அவர்களும் காண்பார்கள்.

6. உங்களில் கண்டனம் செய்யப்பட்டவர் எவர் என்பதை.

7. உம்முடைய இரட்சகர் தன்னுடைய பாதையிலிருந்து வழிதவறிச் சென்று விட்டவர்கள் எவர் என்பதை முற்றிலும் அறிந்திருக்கின்றார், மேலும் வழி நடத்தப்பட்டவர்கள் எவர் என்பதையும் அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

8. ஏற்றுக்கொள்ள மறுப்போருக்குக் கீழ்ப்படியாதீர்.

9. நீர் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர், எனவே அவர்களும், சமரசம் செய்து கொண்டுவிடலாம் என்பதற்காக.

10. கீழ்மையான சத்தியம் செய்கின்றவன் ஒவ்வொருவனுக்கும் கீழ்ப்படியாதீர்.

11. அவதூறு கூறும் ஒருவன், புறம் பேசுகின்ற ஒருவன்,

12. தர்மத்தைத் தடுப்பவன், வரம்புமீறுகின்ற ஒருவன், பாவம் செய்கின்ற ஒருவன்.

13. நன்றி கெட்டவன், மேலும் பேராசைக்காரன்.

14. போதுமான பணத்தையும் பிள்ளைகளையும் அவன் பெற்றிருந்த போதிலும்.

15. நம்முடைய வெளிப்பாடுகள் அவனிடம் ஓதிக் காட்டப்படும் போது, அவன் கூறுகின்றான், "கடந்த காலக் கட்டுக் கதைகள்!"

16. அவனுடைய முகத்தில் நாம் அடையாளமிடுவோம்.

17. காலையில் அவர்கள் அதனை அறுவடை செய்து விடுவார்கள் என்று சத்தியமிட்ட தோட்டத்தின் சொந்தக்காரர்களை நாம் சோதித்தது போல் அவர்களையும் நாம் சோதித்தோம்.

18. அவர்கள் மிகவும் பரிபூரணமான உறுதியுடனிருந்தனர்.

19. அவர்கள் உறக்கத்திலிருந்த பொழுது உம்முடைய இரட்சகரிடமிருந்து கடந்து செல்கின்ற *(புயல்)* ஒன்று அதனைக் கடந்து சென்றது.

20. காலைப் பொழுதில், அது பொட்டலாக இருந்தது.

21. காலையில் அவர்கள் ஒருவர் மற்றவரை அழைத்தார்கள்.

22. "பயிர்களை நாம் அறுவடை செய்து விடலாம்."

23. அவர்கள் செல்கின்ற வழியில், அவர்கள் ஒருவர் மற்றவரிடம் இரகசியமாகக் கூறிக் கொண்டனர்.

24. அப்பொழுது முதல், அவர்களில் எவரும் ஏழையாக இருக்க மாட்டார்கள் என்று.

25. தங்களுடைய அறுவடையைக் குறித்து அவர்கள் மிகப் பரிபூரணமான உறுதியுடனிருந்தார்கள்.

26. ஆனால் அவர்கள் அதனைக் கண்ட பொழுது, அவர்கள் கூறினர். "நாம் மிகவும் தவறானவர்களாக இருந்திருக்கின்றோம்!

27. "இப்போது, நம்மிடம் இருப்பது ஒன்றுமில்லை!"

*அவர்கள் கூறியிருக்க வேண்டும்:*
*"கடவுள் நாடினால்."*

28. அவர்களுக்கிடையில் நன்னெறியாளர்கள் கூறினர், "நீங்கள் மட்டும் *(கடவுளைத்)* துதித்திருந்தால்!"

29. அவர்கள் கூறினார்கள், "எங்கள் இரட்சகர் துதிப்பிற்குரியவர். நாம் வரம்பு மீறி விட்டோம்."

30. அவர்கள் ஒருவர் மற்றவரைப் பழித்துக் கொள்ளத் துவங்கினர்.

31. அவர்கள் கூறினர், "நமக்குக் கேடுதான். நாம் பாவம் செய்துவிட்டோம்.

32. "நம்முடைய இரட்சகர் இதைவிடவும் சிறப்பான ஒன்றை நமக்குத் தரக்கூடும். எங்கள் இரட்சகரிடம் நாங்கள் பாவங்களுக்காக வருந்துகின்றோம்."

33. பழிதீர்த்தல் இவ்விதமானதாகவே இருந்தது. ஆனால் மறுவுலகின் தண்டனையோ மிகவும் மோசமானதாகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

34. நன்னெறியாளர்கள், அவர்களுடைய இரட்சகரிடம், பேரானந்தமயமான தோட்டங்களுக்குத் தகுதி பெற்றுவிட்டனர்.

35. சரணடைந்தவர்களைக் குற்றவாளிகளைப் போல் நாம் நடத்துவோமா?

36. உங்களுடைய பகுத்தறிவில் என்ன கோளாறு?

37. நீங்கள் ஆதரிப்பதற்கு வேறொரு புத்தகம் இருக்கின்றதா?

38. அதனில், நீங்கள் விரும்புகின்ற எந்த ஒன்றையும் நீங்கள் காண்கின்றீர்களா?

39. அல்லது, உயிர்த்தெழுப்பப்படும் நாளன்று நீங்கள் விரும்புகின்ற எதுவாயினும் அதனை உங்களுக்கு வழங்கக்கூடிய பவித்திரமான உறுதிமொழிகளை நம்மிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கின்றீர்களா?

40. அவர்களைக் கேட்பீராக, "உங்களுக்குக் இந்த உத்தரவாதத்தை வழங்குகின்றவர் யார்?"

41. அவர்களுக்கு போலித் தெய்வங்கள் உள்ளனவா? அவர்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்களுடைய போலித்தெய்வங்கள் அவர்களுக்கு உதவி செய்யட்டும்.

42. அவர்கள் அம்பலப்படுத்தப்படுகின்ற அந்நாள் வரும், மேலும் சிரம்பணிந்து விழுமாறு அவர்கள் கட்டளையிடப்படுவார்கள், ஆனால் அவர்களால் இயலாது.

43. அவர்களுடைய கண்கள் பணிந்தவையாக, இழிவு அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் முழு நலத்துடனும் இயன்றவர்களாகவும் இருந்த பொழுது சிரம் பணிந்து விழுமாறு அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

44. எனவே, இந்த *ஹதீஸை* ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றேன்; அவர்கள் ஒருபோதும் அறியாத விதத்தில் அவர்களை நாம் செலுத்துவோம்.

45. அவர்களுக்குப் போதுமான அளவு நான் அவகாசம் கொடுப்பேன்; என்னுடைய திட்டம் கடுமையானது.

46. அவர்களிடம் நீர் பணத்தைக் கேட்கின்றீரா, எனவே அந்த அபராதத்தினால் அவர்கள் சுமத்தப் படுகின்றனரா ?

47. அவர்கள் எதிர்காலத்தை அறிவார்களா ? அதனை அவர்கள் பதிந்து வைத்திருக்கின்றனரா ?

48. உம்முடைய இரட்சகரின் கட்டளைகளைச் செயல்படுத்துவதில் நீர் உறுதிப்பாட்டுடன் விடாமுயற்சி செய்ய வேண்டும். மீனின் உள்ளிருந்து அழைத்தவர் *(ஜோனா)* போல் இருக்காதீர்.

49. அவருடைய இரட்சகரின் அருள் மட்டும் இல்லாதிருந்தால், ஒரு பாவியாக அவர் பாலைவனத்தில் தூக்கியெறியப்பட்டிருப்பார்.

50. ஆனால் அவருடைய இரட்சகர் அவரை ஆசீர்வதித்தார், மேலும் அவரை நன்னெறியாளராக்கினார்.

51. தூதுச் செய்தியை அவர்கள் செவியேற்கும் பொழுது, நம்பமறுத்தவர்கள் தங்களுடைய பரிகாசத்தைத் தங்களுடைய கண்களில் காட்டுகின்றனர், மேலும் கூறுகின்றனர், "அவர் ஒரு கிறுக்கர்!"

52. நிதர்சனத்தில் இது உலகத்திற்குரிய ஒரு தூதுச் செய்தியேயாகும்.

****

## சூரா 69: எதிர்க்க இயலாதது (அல்–ஹாக்காஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. எதிர்க்க இயலாததான *(நிகழ்வு).*

2. எத்தகையதொரு எதிர்க்க இயலாததான *(நிகழ்வு)*!

3. மெய்யாகவே அது எதிர்க்க இயலாதது.

4. தமூது மற்றும் ஆத் அதிர்ச்சியூட்டுவதை நம்ப மறுத்தனர்.

5. தமூதைப் பொறுத்தவரை, *(நில அதிர்வெனும்)* பேரழிவால் அவர்கள் அழிக்கப்பட்டனர்.

6. ஆதைப் பொறுத்த வரை, தொடர்ந்திருந்ததொரு, உக்கிரமான புயலால் அழிக்கப்பட்டனர்.

7. ஏழு இரவுகளும், எட்டுப் பகல்களும், உக்கிரமாக அவர்கள் மீது அவர் அதனைக் கட்டவிழ்த்து விட்டார். உலுத்துப் போன பனைமரத் தண்டுகளைப் போல சுற்றிலும் வீசியெறியப்படுகின்றவர்களாக மக்களை நீர் கண்டிருப்பீர்.

8. அவர்களுடைய சுவடுகளில் எதையேனும் நீர் காண முடிகின்றதா ?

9. ஃபேரோ, அவனுக்கு முந்தியிருந்த மற்றவர்கள், மேலும் *(ஸாடமின்)* பாவிகள், தீயவர்களாக இருந்தனர்.

10. தங்களுடைய இரட்சகரின் தூதருக்கு அவர்கள் கீழ்ப்படிய மறுத்தனர். அதன் விளைவாக, பேரழிவானதொரு பழிதீர்த்தலாக அவர்களை அவர் பழி தீர்த்தார்.

11. அவ்வெள்ளம் பெரு நாசம் விளைவிப்பதாக இருந்தது, எனவே நாம் உங்களை மிதக்கின்ற *(மரக் கலத்தில்)* சுமந்து கொண்டோம்.

12. செவியேற்கின்ற எந்தச் செவியும் புரிந்து கொள்ளக் கூடும் என்பதற்காக, அதனை உங்களுக்கு ஒரு படிப்பினையாக நாம் ஆக்கினோம்.

13. கொம்பு ஒரு முறை ஊதப்படும் பொழுது.

14. பூமியும் மலைகளும் தூக்கியெறியப்பட்டு மேலும் தூள்தூளாக ஆக்கப்படும்; முற்றிலும் தூள் தூளாக்கப்படும்.

15. அந்த நாளின் போதுதான் தவிர்த்துவிட இயலாத அந்நிகழ்வு நிகழ்ந்தேறும்.

16. வானம் பிளந்து விடும், துண்டு துண்டாக விழுந்து விடும்.

17. வானவர்கள் முற்றிலும் சூழ்ந்திருப்பார்கள், மேலும் அப்போது உம்முடைய இரட்சகரின் சாம்ராஜ்யமானது *(பிரபஞ்சங்கள்)** எட்டினை உள்ளடக்கியதாக இருக்கும்.

**69:17 பௌதிக ரீதியாக கடவுளிடமிருந்து மிகவும் தொலைவில் இருப்பதால் தான் இந்தப்பூமி துன்பம் நிறைந்ததாக இருக்கின்றது, ஏனெனில் இது ஏழாவது பிரபஞ்சத்தில் உள்ளது (7:143). மறுவுலகில் நம்முடைய ஏழாவது பிரபஞ்சத்தை விடவும், இன்னும் மிகத் தொலைவில் இருக்கின்ற ஓர் எட்டாவது பிரபஞ்சம் படைக்கப்படும்; அதுவே "நரகம்" என்றழைக்கப்படும் (89:23).*

18. அந்நாளில், நீங்கள் அம்பலப்படுத்தப்படுவீர்கள், உங்களுடையதில் எந்த ஒன்றும் மறைக்கப்பட்டதாக இருக்காது.

*நம்பிக்கையாளர்கள்*

19. தன்னுடைய வலக்கரத்தால் தன்னுடைய பதிவேட்டைப் பெறுகின்றவனைப் பொறுத்த வரை, அவன் கூறுவான், "வாருங்கள், என் பதிவேட்டைப் படியுங்கள்.

20. "நான் பதிலளிக்க வேண்டியவனாக இருக்கின்றேன் என்பதை நம்பியவனாகவே நான் இருந்தேன்."

21. மகிழ்ச்சியானதொரு வாழ்வுக்கு அவன் தகுதியானவனாகி விட்டான்.

22. மேன்மையானதொரு சுவனத்தில்.

23. அதன் பழங்கள் அடையக்கூடிய தூரத்திற்குள் உள்ளன.

24. கடந்துபோன நாட்களில் உங்களுடைய காரியங்களுக்கான பலனாக மகிழ்வுடன் உண்ணுங்கள் மேலும் பருகுங்கள்.

*நம்பமறுப்பவர்கள்*

25. தன்னுடைய பதிவேட்டை அவனுடைய இடக்கரத்தில் கொடுக்கப்படுபவனைப் பொறுத்தவரை, அவன் கூறுவான், "ஐயோ என்னுடைய பதிவேட்டை நான் ஒருபோதும், பெறாதிருந்திருக்க வேண்டுமே என நான் விரும்புகின்றேன்.

26. "என்னுடைய கணக்கை நான் ஒருபோதும் அறியாதிருந்திருக்க வேண்டுமே என நான் விரும்புகிறேன்.

27. "என்னுடைய மரணம் நிரந்தரமானதாக இருந்திருக்க வேண்டுமே என நான் விரும்புகிறேன்.

28. "என்னுடைய பணம் எனக்கு உதவ இயலவில்லை.

29. "என்னுடைய சக்தி அனைத்தும் நீங்கி விட்டது."

30. பிடியுங்கள் அவனை, மேலும் அவனுக்கு விலங்கிடுங்கள்.

31. நரகத்தில் அவனைக் கருகச் செய்யுங்கள்.

32. எழுபது முழம் நீளமான ஒரு சங்கிலியால், அவனைக் கட்டிப்போடுங்கள்.

33. ஏனெனில், மிகவும் மகத்தானவரான, **கடவுள்** மீது அவன் நம்பிக்கை கொள்ளாதிருந்தான்.

34. அன்றி ஏழைகளுக்கு உணவளிப்பதையும் அவன் ஆதரிக்கவில்லை.

35. அதன் விளைவாக, இங்கே அவனுக்கு நண்பர்கள் எவருமில்லை.

36. அன்றி கசப்பான வகைகளைத் தவிர, எந்த உணவுமில்லை.

37. பாவிகளுக்குரிய உணவு.

38. நீங்கள் காண்பவற்றின் மீது நான் சத்தியமிடுகின்றேன்.

39. மேலும் நீங்கள் காணாதவற்றின் மீதும்.

40. இது கண்ணியமானதொரு தூதரின் கூற்றாகும்.

41. ஒரு கவிஞனின் கூற்றல்ல; அரிதாகவே நீங்கள் நம்பிக்கை கொள்கின்றீர்கள்.

42. அன்றி ஒரு ஜோசியக்காரனின் கூற்றுமல்ல; அரிதாகவே நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றீர்கள்.

43. பிரபஞ்சத்தின் இரட்சகரிடமிருந்து ஒரு வெளிப்பாடு.

*மார்க்க போதனைகள் எதனையும் வெளியிடுவதை விட்டு முஹம்மத் தடுக்கப்படுகின்றார்*

44. வேறு எந்தப் போதனைகளையும் அவர் கூறியிருப்பாராயின்.

45. நாம் அவரைத் தண்டித்திருப்போம்.

46. வெளிப்பாடுகளை நாம் அவருக்கு நிறுத்தியிருப்போம்.

47. உங்களில் எவரும் அவருக்கு உதவி செய்திருக்க இயலாது.

48. இது நன்னெறியாளர்களுக்குரியதொரு நினைவூட்டலாகும்.

49. நாம் அறிவோம்; உங்களில் சிலர் ஏற்க மறுப்பவர்கள்.

50. நம்பமறுப்பவர்களுக்கு இது துக்கத்தைத் தவிர வேறில்லை.

51. இதுவே பரிபூரணமான சத்தியமாகும்.

52. எனவே, மிகவும் மகத்தானவரான, உம்முடைய இரட்சகரின் பெயரை நீர் துதிக்க வேண்டும்.

****

## சூரா 70: உயரங்கள் (அல்–மஆரிஜ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வினா எழுப்புகின்ற ஒருவன் தவிர்த்து விட முடி யாத அத்தண்டனையைப் பற்றி வினவக் கூடும்.

2. நம்பமறுப்பவர்களுக்கு, அதனைத் தடுத்து விடக் கூடியவர் எவருமில்லை.

3. **கடவுள்**–யிடமிருந்து; மிகவும் உயர்வான உயரத்தையுடையவர்.

4. வானவர்கள் தங்களுடைய அறிக்கைகளுடன், ஐம்ப தாயிரம் வருடங்களுக்குச் சமமானதொரு நாளில் அவரிடம் மேலேறுகின்றனர்.

5. எனவே, அழகியதொரு பொறுமையை நீர் கைக் கொள்ள வேண்டும்.

6. ஏனெனில் அவர்கள் அதனை மிகத் தொலைவாகக் காண்கின்றனர்.

7. அதே சமயம் நாமோ அதனை மிக அருகில் காண் கின்றோம்.

8. வானமானது உருக்கப்பட்ட பாறைகளைப் போல ஆகிவிடும் அந்நாள் வரும்.

9. மலைகள் கம்பளிப் பொதி போல் ஆகி விடும்.

10. எந்த நண்பனும் தன் நெருங்கிய நண்பனைப் பற்றி அக்கறை கொள்ள மாட்டான்.

11. அவர்களை அவர்கள் காணும் பொழுது, குற்றவாளியா னவன் அந்நாளின் தண்டனையிலிருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்ள, தன் சொந்தப் பிள்ளைகளைக் கூட ஈடாகக் கொடுத்து விட விரும்புவான்.

12. அத்துடன் தன்னுடைய வாழ்க்கைத் துணையையும், தன்னுடைய சகோதரனையும்.

13. அவனை வளர்த்தெடுத்த குலத்தினர் அனைவரை யும் கூட.

14. அது அவனைக் காப்பாற்றுமானால், பூமியிலுள்ள அனைத்து மக்களையும் கூட.

15. அல்ல; அது கொழுந்து விட்டு எரிகின்றது.

16. கருக்குவதற்கு ஆர்வமாக.

17. திரும்பிச் சென்று விட்டவர்களை அது அழைக் கின்றது.

18. சேர்த்து வைத்துக் கொண்டும் எண்ணி வைத்துக் கொண்டும் இருந்தவர்களை.

19. உண்மையில், மானிடன் பதற்றமுடையவனாக இருக் கின்றான்.

20. துன்பத்தால் தீண்டப்பட்டால், விரக்தியடைந்தவனா கின்றான்.

21. வளம் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டால், கஞ்சத்தனம் கொண்டவனாகின்றான்.

22. வழிபடுபவர்களைத் தவிர.

23. அவர்கள் எப்பொழுதும், *(ஸலாத்)* தொடர்புத் தொழு கைகளைக் கடைப்பிடிப்பவர்கள்.

24. அவர்களுடைய பணத்தில் ஒரு பாகம் ஒதுக்கி வைக்கப்படுகின்றது.

25. ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்காக.

26. தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை அவர்கள் கொள் கின்றனர்.

27. தங்களுடைய இரட்சகரின் பழிதீர்த்தலை அஞ்சுப வர்கள்.

28. அவர்களுடைய இரட்சகரின் தண்டனை சாதார ணமாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

29. அவர்கள் தங்கள் கற்பைக் காப்பாற்றுவார்கள்.

30. தங்களுடைய வாழ்க்கைத் துணைகளுடனோ, அல்லது சட்டபூர்வமாக அவர்களுக்குரியவர்களுட னோ மட்டுமே *(அவர்கள் உறவு கொள்வார்கள் )* –

31. எவரொருவர் இந்த எல்லைகளுக்கப்பால் வரம்பு மீறுகின்றாரோ அவர் ஒரு பாவியாவார்.

32. மேலும் நம்பிக்கையாளர்கள் தங்களுடைய வாக்குறு திகளைக் காப்பார்கள்; அவர்கள் நம்பகத்திற்குரிய வர்களாக இருக்கின்றனர்.

33. அவர்களுடைய சாட்சியம் சத்தியம் நிறைந்ததாக உள்ளது.

34. அவர்கள் தங்களுடைய *(ஸலாத்)* தொடர்புத் தொழு கைகளை, சரியான நேரத்தில் சீராகக் கடைப்பிடிக் கின்றனர்.

35. சுவனத்தில் கண்ணியமானதொரு அந்தஸ்துக்கு அவர்கள் தகுதி பெற்று விட்டனர்.

36. உங்களுடன் சேர்ந்து கொள்வதிலிருந்து நம்பமறுத் தவர்களைத் தடுப்பது எது ?

37. வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அவர்கள் விரண் டோடுகின்றனர்.

38. பேரானந்தமயமான சுவனத்தில் நுழைவதை அவர் களில் எவரும் எவ்வாறு எதிர்பார்க்க இயலும் ?

39. ஒருபோதுமில்லை; அவர்களை நாம் படைத்தோம், எதிலிருந்து என்பதை அவர்கள் அறிவார்கள்.

40. கிழக்குகள் மற்றும் மேற்குகளின் இரட்சகர் மீது நான் பவித்திரமான சத்தியமிடுகின்றேன்; நாம் ஆற்றலுடையவர்களாக இருக்கின்றோம் –

41. உங்களுடைய இடத்தில் மேலான மக்களை மாற்றி யமைப்பதற்கு; நாம் ஒருபோதும் தோற்கடிக்கப் பட மாட்டோம்.

42. எனவே, அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக் கின்ற அந்நாளை அவர்கள் சந்திக்கும் வரை, மூடத் தனமான தவறுகள் செய்யவும் விளையாடிக் கொண் டிருக்கவும் அவர்களை விட்டு விடும்.

43. *(பலியிடும்)* பீடங்களுக்கு ஓட்டி வரப்படுவதைப் போல, சமாதிகளிலிருந்து விரைவாக அவர்கள் வெளியில் வருகின்ற நாள் அதுவாகும்.

44. அவர்களுடைய கண்கள் பணிந்தவையாக, இழிவு அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அதுதான் அவர் களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற அந் நாளாகும்.

****

# சூரா 71: நோவா

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. நோவாவை அவருடைய சமூகத்தாரிடம் நாம் அனுப்பினோம்: "வலி நிறைந்ததொரு தண்டனை அவர்களை வருத்துவதற்கு முன்னர் உம்முடைய மக்களை நீர் எச்சரிக்க வேண்டும்."

2. அவர் கூறினார், "என் சமூகத்தாரே, நான் உங்களுக்குத் தெளிவானதொரு எச்சரிப்பவனாக இருக்கின்றேன்.

3. "நீங்கள் **கடவுள்**–ஐ வழிபடவும், அவரிடம் பக்தியோடிருக்கவும், மேலும் எனக்குக் கீழ்ப்படியவும் வேண்டும் என்று உங்களை எச்சரிப்பதற்காக.

4. "அப்போது அவர் உங்களுடைய பாவங்களை உங்களுக்கு மன்னித்து விடுவார், மேலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு காலத்திற்கு உங்களுக்கு அவகாசம் அளிப்பார். மிக நிச்சயமாக, **கடவுள்**–ன் நிர்ணயமானது, அதற்குரிய நேரம் வந்து விட்டவுடன், ஒருபோதும் தாமதிக்கப் பட இயலாது, நீங்கள் மட்டும் அறிந்திருந்தால்."

5. அவர் கூறினார், "என் இரட்சகரே, இரவும் பகலும் என் சமூகத்தாரை நான் அழைத்து விட்டேன்.

6. "ஆனால் என்னுடைய அழைப்பு அவர்களுடைய வெறுப்பை அதிகரிக்க மட்டுமே செய்தது.

7. "உம்மால் மன்னிக்கப்படுவதற்காக அவர்களை நான் அழைத்த பொழுதெல்லாம், அவர்கள் தங்களுடைய காதுகளில் தங்களுடைய விரல்களை வைத்துக் கொண்டனர், தங்களுடைய ஆடைகளினால் தங்களை மூடிக் கொண்டனர், பிடிவாதம் செய்தனர், மேலும் ஆணவம் கொண்டவர்களானார்கள்.

8. "பின்னர் அவர்களை நான் பகிரங்கமாக அழைத்தேன்.

9. "பின்னர் அவர்களுக்கு நான் உரக்கப் பிரகடனித்தேன். மேலும் அந்தரங்கமாகவும் நான் அவர்களிடம் பேசினேன்.

10. "நான் கூறினேன், 'உங்கள் இரட்சகரிடம் பாவ மன்னிப்பிற்காக இறைஞ்சுங்கள்; அவர் மன்னிக்கின்றவர்.

11. " 'பின்னர் அவர் உங்கள் மீது தாராளமாக மழையைப் பொழிவார்.

12. " 'மேலும் பணத்தையும் பிள்ளைகளையும், மேலும் பழத் தோட்டங்களையும், ஊற்றுகளையும் உங்களுக்கு வழங்குவார்."

13. நீங்கள் ஏன் **கடவுள்**–யிடம் பக்தியோடிருக்க முனையக்கூடாது ?

14. அவர்தான் உங்களைப் பல கட்டங்களில் படைத்தவர்.

15. ஏழு பிரபஞ்சங்களைக் **கடவுள்** அடுக்கடுக்காகப் படைத்தார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா ?

16. அதிலே ஒரு வெளிச்சமாக இருப்பதற்காகச் சந்திரனை அவர் வடிவமைத்தார், மேலும் ஒரு விளக்காக இருப்பதற்காகச் சூரியனை அமைத்தார்.

17. மேலும் பூமியிலிருந்து செடிகளைப் போல் **கடவுள்** உங்களை முளைவிடச் செய்தார்.

18. பின்னர் அதற்குள்ளேயே உங்களை அவர் திருப்புகின்றார், மேலும் நிச்சயமாக அவர் உங்களை வெளியில் கொண்டு வருவார்.

19. பூமியைக் **கடவுள்** உங்களுக்கு வசிக்கத்தக்கதாக ஆக்கினார்.

20. அதிலே நீங்கள் சாலைகளை அமைத்துக் கொள்ளும் வண்ணம்.

21. நோவா கூறினார், "என் இரட்சகரே, அவர்கள் எனக்குக் கீழ்ப்படிய மறுத்தனர், மேலும் பணமும் பிள்ளைகளும் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்ட போது, இன்னும் அதிகமாகச் சீர்கெட்டுப் போனவர்களைப் பின்பற்றினர்.

22. "பயங்கரமான சூழ்ச்சிகளை அவர்கள் தீட்டினர்.

23. "அவர்கள் கூறினர், 'உங்களுடைய தெய்வங்களைக் கைவிட்டு விடாதீர்கள். வத், சுவாஆ, யாகூத், யாஊக், மற்றும் நஸ்ரைக் கைவிட்டு விடாதீர்கள்.'

24. "அவர்கள் ஏராளமானோரை வழிதவறச் செய்தனர். எனவே, தீயவர்களை ஆழமாக நஷ்டத்தில் மூழ்கடித்து விடுவீராக."

25. அவர்களுடைய பாவங்களின் காரணத்தால் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டனர், மேலும் நரகநெருப்பிற்கென நியமிக்கப்பட்டனர். **கடவுள்**–யிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற உதவியாளர்கள் எவரையும் அவர்கள் காணவில்லை.

26. நோவா மேலும் கூறினார், "என் இரட்சகரே, பூமியில் ஒரே ஒரு நம்பமறுப்பவனைக் கூட விட்டு விடாதீர்.

27. "ஏனெனில், நீர் அவர்களை விட்டு வைத்தால், அவர்கள் உம்முடைய ஊழியர்களை வழிகெடுக்க மட்டுமே செய்வார்கள், மேலும் தீயோரான நம்பமறுப்பவர்களைத் தவிர வேறு எந்த ஒன்றையும் பெற்றெடுக்க மாட்டார்கள்.

28. "என் இரட்சகரே, என்னையும் என் பெற்றோரையும், மேலும் ஒரு நம்பிக்கையாளராக என் இல்லத்தில் நுழைகின்ற எவரொருவரையும், மேலும் நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் மன்னிப்பீராக. ஆனால் நம்பமறுப்பவர்களுக்கு அழிவைத் தவிர எந்த ஒன்றையும் தந்து விடாதீர்.''

****

# சூரா 72: ஜின்கள் (அல்–ஜின்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. கூறுவீராக, "ஜின்களில் ஒரு கூட்டத்தார் கவனத்துடன் செவியேற்றனர் என்று நான் உள்ளுணர்வளிக்கப் பட்டேன், மேலும் கூறினர், 'நாங்கள் ஓர் அற்புதமான குர்ஆனைச்* செவியேற்றோம்.

2. " 'நன்னெறியின் பால் அது வழிநடத்துகின்றது, மேலும் நாங்கள் அதனில் நம்பிக்கை கொண்டோம்; எங்கள் இரட்சகருடன் வேறு போலித்தெய்வங்கள் எதனையும் நாங்கள் ஒருபோதும் அமைத்துக் கொள்ள மாட்டோம்.

3. " 'மிகவும் உயர்வானவரே நம்முடைய ஒரே இரட்சகராவார். அவர் ஒரு ஜோடியையோ, அன்றி ஒரு மகனையோ ஒருபோதும் கொண்டிருந்ததில்லை.

4. " 'நமக்கிடையில் மூடர்கள் தான் **கடவுள்**–ஐப் பற்றி இத்தகைய அறிவுக்குப் புறம்பானவற்றைக் கூறிக் கொண்டிருந்தனர்.

5. " 'மானிடர்களோ, அன்றி ஜின்களோ, **கடவுள்**–ஐப் பற்றிப் பொய்களைக் கூறுதல் சாத்தியமல்ல என்று நாங்கள் எண்ணிக் கொண்டிருந்தோம்.

6 " 'மானிட இனத்தினர் ஜின் இனத்தினர் மூலம் ஆதிக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் ஏராளமானதொரு கஷ்டத்தைக் கொண்டு அவர்களை வருத்த மட்டுமே செய்தனர்.

7. " '**கடவுள்** மற்றொருவரை *(தூதர்)* அனுப்ப மாட்டார் என்று நீங்கள் நினைத்ததைப் போலவே, அவர் களும் நினைத்தனர்.

8. " 'நாங்கள் வானத்தைத் தொட்டுப் பார்த்தோம், மேலும் அது வலிமையான காவலர்களாலும் ஏவுகணைகளாலும் நிரம்பியிருந்ததைக் கண்டோம்.

9. " 'உளவறிவதற்காக நாங்கள் அங்கே அமரக் கூடியவர்களாக இருந்தோம். ஒட்டுக் கேட்கின்ற எவரொருவரும் சக்திநிறைந்ததொரு ஏவுகணையால் துரத்தப்பட்டார்.

10. " 'பூமியில் வசிப்பவர்களுக்கு ஏதேனும் கெட்டது நாடப்பட்டுள்ளதா, அல்லது அவர்களுடைய இரட்சகர் அவர்களை மீட்டுக் கொள்ள நாடியுள்ளாரா என்பதைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது.

11. " 'நம்மில் சிலர் நன்னெறியாளர்களாக உள்ளனர், மேலும் சிலர் நன்னெறியில் குறைவானவர்களாக உள்ளனர்; நாம் வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றோம்.

12. " 'பூமியில் **கடவுள்**–யிடமிருந்து நாம் ஒருபோதும் விரண்டோடிச் சென்று விட இயலாது என்பதை நாம் முற்றிலும் நன்கறிந்திருக்கிறோம்; நாம் ஒரு போதும் விரண்டோடிச் சென்று தப்பித்து விட இயலாது.

13. " 'வழிகாட்டலை நாம் செவியேற்ற போது, நாம் அதிலே நம்பிக்கை கொண்டோம். தன்னுடைய இரட்சகர் மீது நம்பிகை கொள்ளும் எவரொருவரும் எந்த அநீதியையோ அன்றி எந்தக் கஷ்டத்தையோ ஒருபோதும் அஞ்சமாட்டார்.

14. " 'நம்மிடையே சரணடைந்தோரும் உள்ளனர், மேலும் நம்மிடையே சமரசம் செய்து கொள்பவர்களும் உள்ளனர்.'" சரணடைந்தோரைப் பொறுத்தவரை, அவர்கள் சரியான பாதையில் உள்ளனர்.

15. சமரசம் செய்து கொள்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் எரிகிடங்கிற்குரிய எரிபொருளாக இருப்பார்கள்.

16. அவர்கள் சரியான பாதையில் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தால், அபரிமிதமான தண்ணீரைக் கொண்டு அவர்களை நாம் ஆசீர்வதிப்போம்.

17. அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் சோதிப்போம். தன் இரட்சகருடைய தூதுச் செய்தியை அலட்சியம் செய்பவனைப் பொறுத்த வரை, எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்ற தண்டனையின் பால் அவர் அவனைச் செலுத்துவார்.

18. வழிபாட்டுத் தலங்கள் **கடவுள்**–க்குரியவை; **கடவுள்**–வுடன் வேறு எவரொருவரையும் அழைக்காதீர்கள்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்**

19. **கடவுள்**–ன் ஊழியர்* அவரை மட்டும் ஆதரித்த போது, அவரை எதிர்ப்பதற்காக ஏறத்தாழ அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டனர்.

20. கூறுவீராக, "நான் என்னுடைய இரட்சகரை மட்டுமே வழிபடுகின்றேன்; அவருடன் வேறு எந்த போலித் தெய்வங்களையும் நான் ஒருபோதும் அமைத்துக் கொள்வதில்லை."

21. கூறுவீராக, "உங்களுக்குத் தீங்கிழைக்கவோ, அன்றி உங்களை வழி நடத்தவோ எந்தச் சக்தியையும் நான் பெற்றிருக்கவில்லை."

**72:1–28 கடவுள் எவருக்கு உலக முடிவை வெளிப்படுத்தினாரோ, அத்தூதர், இங்கே, "ரஷாத் கலீஃபா" எனக் கணிதரீதியில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் (பின் இணைப்பு 25). 1:1 முதல் இத்தூதர் குறிப்பிடப்பட்டுள்ள இடமான 72:27 வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கை 5472 ஆகும். <u>19x72x4.</u> "ரஷதா" எனும் வார்த்தை சூரா 72ல் 4 முறைகள் இடம்பெறுகின்றது. "ரஷதா" வின் மதிப்பு 504 ஆகும், மேலும் 504+28 (சூரா 72ன் வசனங்கள்) 532, 19x28. "ரஷாத் கலீஃபா"வின் மதிப்பு, (1230) +72+28=1330=19x70. சூரா 72 மற்றும் அதன் வசனங்களுடைய எண்ணிக்கையின் (28) இலக்கங்களுடைய கூட்டுத் தொகையாவது 7+2+2+8=19 ஆகும். அத்துடன் "அவர் தேர்ந்தெடுக்கின்ற ஒரு தூதருக்கு மட்டுமே" என்ற முக்கியத்துவம் வாய்ந்த இக்கூற்று 1919, 19x101 என்றொரு மதிப்பைக் கொண்டதாக உள்ளது.*

22. கூறுவீராக, "**கடவுள்**–யிடமிருந்து எவரொருவரும் என்னைக் காப்பாற்ற இயலாது, அன்றி அவரைத் தவிர வேறு எந்தப் புகலிடத்தையும் என்னால் காண இயலாது.

23. "நான் **கடவுள்**–ன் பிரகடனங்களையும் தூதுச் செய்தி களையும் சேர்ப்பிக்கின்றேன்." **கடவுள்** மற்றும் அவரு டைய தூதருக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் நரகத் தின் நெருப்புக்கு உள்ளாகின்றனர், அங்கே அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

24. அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பவற்றை அவர்கள் கண்டவுடன், மெய்யாகவே பலம் குன்றிய வர்கள், மேலும் எண்ணிக்கையில் குறைவானவர் கள் யார் என அவர்கள் கண்டு கொள்வார்கள்.

25. கூறுவீராக, "உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருப்பது விரைவில் நிகழ்ந்தேறுமா, அல்லது என் இரட்சகர் சிறிதொரு காலம் அதனைத் தாமதப்படுத்துவாரா என்பதை நான் அறியமாட்டேன்."

26. அவர்தான் எதிர்காலத்தை அறிந்தவர்; எதிர்காலத்தை அவர் எவரொருவருக்கும் வெளிப்படுத்தமாட்டார்.

27. தான் தேர்ந்தெடுக்கின்ற* ஒரு தூதருக்கு மட்டுமே, கடந்த காலம் மற்றும் எதிர்காலத்திலிருந்து, குறிப் பான செய்திகளை* அவர் வெளிப்படுத்துவார்.

28. இது, அவர்கள் தங்களுடைய இரட்சகரின் தூதுச் செய்திகளைச் சேர்ப்பித்து விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கேயாகும். அவர்களிடம் இருப்ப வற்றை அவர் முற்றிலும் அறிந்திருக்கின்றார். அவர் அனைத்துப் பொருட்களின் எண்ணிக்கைகளையும் கணக்கிட்டு வைத்துள்ளார்.

****

## சூரா 73: அங்கி அணிந்தவர் (அல்–முஸ்ஸம்மில்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அங்கி அணிந்தவரே, உம்மைத்தான்.

2. அரிதாகத் தவிர்த்து, இரவுப் பொழுதுகளில் தியா னிப்பீராக.

3. அதன் பாதி, அல்லது ஒரு சற்றுக் குறைவாக.

4. அல்லது ஒரு சற்று அதிகமாக. மேலும் முதல் பக்கத்தி லிருந்து கடைசிப்பக்கம் வரை இக்குர்ஆனைப் படிப் பீராக.

5. நாம் உமக்கு ஒரு கனமான தூதுச் செய்தியைத் தரு வோம்.

6. இரவினில் தியானிப்பதானது அதிக நற்பலனளிப் பது, மேலும் மிகவும் நன்னெறியானது.

7. மற்ற விஷயங்களுக்கு பகற்பொழுதில் உமக்கு ஏராள மானதொரு நேரம் உள்ளது.

8. எப்பொழுதும் அவருக்கு அருகிலும் மிக அருகிலும் வருவதற்காக, உம்முடைய இரட்சகரின் பெயரை நீர் நினைவு கூர்ந்திட வேண்டும்.

9. கிழக்கு மற்றும் மேற்கின் இரட்சகர்; அவருடன் வேறு தெய்வம் இல்லை. உமக்கு ஆதரவாளராக அவரை நீர் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

10. மேலும் அவர்களுடைய கூற்றுகளை எதிர் கொள்ளும் போது உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து இருப்பீராக, மேலும் அழகியதொரு முறையில் அவர்களை அலட்சி யம் செய்து விடுவீராக.

11. தாராளமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்ற, ஏற்றுக் கொள்ள மறுப்போர் மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றேன்; அவர்களுக்குச் சற்று அவகாசம் அளிப்பீராக.

12. கடுமையான தண்டனைகளும், நரகமும் நம்மிடம் உள்ளன.

13. கடினமாகவே விழுங்கக் கூடிய உணவும், வலி நிறைந்தொரு தண்டனையும்.

14. பூமியும் மலைகளும் அதிரும் பொழுது அந்நாள் வரும், மேலும் மலைகளானவை எடையற்றதோர் குவிய லாகி விடும்.

15. ஃபேரோவுக்கு ஒரு தூதரை நாம் அனுப்பிய அதே விதமாகவே, உங்களுக்கும் நாம் ஒரு தூதரை அனுப்பியுள்ளோம்.

16. ஃபேரோ அத்தூதருக்குக் கீழ்ப்படிய மறுத்தான் மேலும், அதன் விளைவாக, நாம் அவனைக் கடுமை யாகத் தண்டித்தோம்.

17. நீங்கள் நம்பமறுத்தால், சிசுக்களையும் நரைத்த முடி யுடையவர்களாக ஆக்கி விடுகின்ற அளவுக்கு மிகப் பயங்கரமானதொரு நாளினை எவ்வாறு நீங்கள் தவிர்த்துக் கொள்ள இயலும்?

18. வானம் அங்கிருந்து தகர்ந்து விடும். அவருடைய வாக்குறுதி உண்மையானதாகும்.

*72:27 பார்க்க 72:1–28க்குரிய அடிக்குறிப்பு.

19. இது ஒரு நினைவூட்டலாகும்; எவரெல்லாம் நாடுகின் றாரோ, அவர் தன் இரட்சகரின் பால் தன்னுடைய பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.

20. இரவுப் பொழுதினில் மூன்றில் இரண்டு பாகம், அல் லது அதில் பாதி, அல்லது அதில் மூன்றில் ஒரு பாகம் நீர் தியானிக்கின்றீர், மேலும் உம்முடன் நம்பிக்கை கொண்ட சிலரும் அவ்வாறே செய்கின்றனர் என் பதை உம்முடைய இரட்சகர் அறிகின்றார். இரவையும் பகலையும் **கடவுள்** வடிவமைத்துள்ளார், மேலும் எல்லாக் காலங்களிலும் உங்களால் இதனைச் செய்ய முடியாது என்பதையும் அவர் அறிகின்றார். அவர் உங் களைப் பிழை பொறுத்து விட்டார். அதற்குப் பதிலாக, குர்ஆனிலிருந்து உங்களால் இயன்ற வரை நீங்கள் படிக்க வேண்டும். உங்களில் சிலர் நோயுற்றிருக்கக் கூடும், மற்றவர்கள் **கடவுள்**–ன் வாழ்வாதாரங் களைத் தேடியவாறு பிரயாணத்தில் இருக்கக் கூடும், மேலும் மற்றவர்கள் **கடவுள்**–ன் நிமித்தம் பாடுபட்டுக் கொண்டிருக்கக் கூடும் என்பதை அவர் அறிகின் றார். அதிலிருந்து உங்களால் இயன்றவரை நீங்கள் படிக்க வேண்டும், மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்கவும் *(ஜகாத்)* கடமை யான தர்மத்தைக் கொடுக்கவும், மேலும் நன்னெறி யெனும் ஒரு கடனைக் **கடவுள்**–க்குக் கடனளிக்கவும் வேண்டும். உங்களுடைய ஆத்மாக்களுக்காக நீங் கள் முற்படுத்தி அனுப்பி வைக்கின்ற நல்லது எதுவா யினும், அதனை மிகச் சிறந்ததாகவும் தாராளமாக வெகுமதியளிக்கப்பட்டதாகவும் **கடவுள்**–யிடம் நீங் கள் காண்பீர்கள். மேலும் பாவமன்னிப்பிற்காகக் **கடவுள்**–யிடம் இறைஞ்சுங்கள். **கடவுள்** மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

****

## சூரா 74: மறைக்கப்பட்ட இரகசியம் (அல்–முத்தஸ்ஸிர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மறைக்கப்பட்ட இரகசியமே உன்னைத்தான்.*
2. வெளியில் வந்து எச்சரிக்கை செய்.
3. உன்னுடைய இரட்சகரைப் பெருமைப்படுத்து.
4. உன்னுடைய ஆடையைத் தூய்மை செய்.*
5. தவறானவற்றைக் கைவிட்டு விடு.
6. உன்னிடம் உள்ளதைக் கொண்டு திருப்தியடை.
7. உறுதிப்பாட்டுடன் உன்னுடைய இரட்சகரை நினைவு கூர்ந்திடு.
8. பின்னர், கொம்பு ஊதப்படும் பொழுது.
9. அது ஒரு சிரமமான நாளாக இருக்கும்.
10. நம்பமறுப்பவர்களுக்கு, எளிதானதல்ல.
11. தனியொருவனாக நான் படைத்த ஒருவன் மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றேன்.
12. ஏராளமான பணத்தை அவனுக்கு நான் வாரி வழங்கினேன்.
13. கவனித்துக்கொள்வதற்குப் பிள்ளைகளையும்.
14. ஒவ்வொன்றையும் அவனுக்கு நான் இலகுவாக்கி னேன்.
15. இருப்பினும், அதிகம் பெறுவதற்கு அவன் பேராசைப் படுகின்றான்.
16. இந்தச் சான்றுகளை ஏற்றுக் கொள்ள அவன் பிடி வாதமாக மறுத்தான்.
17. அதிகரித்தவாறே அவனை நான் தண்டிப்பேன்.
18. ஏனெனில் அவன் சிந்தித்தான், பின்னர் தீர்மானித் தான்.
19. அவன் தீர்மானித்தது மிகவும் துன்பகரமானது.
20. மெய்யாகவே, அவன் தீர்மானித்தது மிகவும் துன் பகரமானது.
21. அவன் நோக்கினான்.
22. அவன் முகஞ்சுளித்தான் மேலும் முனகினான்.
23. பின்னர் அவன் ஆணவத்துடன் திரும்பிச் சென்றான்.
24. அவன் கூறினான், "இது சாதுர்யமான தந்திரமே அன்றி வேறில்லை!
25. "இது மனிதனால் செய்யப்பட்டது."
26. தக்க தண்டனைக்கு அவனை நான் உள்ளாக்கு வேன்.
27. எத்தகைய தண்டனை!
28. முழுமையானது மேலும் உள்ளடக்கக் கூடியது.
29. மக்கள் அனைவருக்கும் கண்கூடானது.

**74:1 கடவுளின் எல்லையற்ற ஞானம் இக்குர்ஆனை முஹம்மதின் மூலமாக வெளிப்படுத்த நாடியது, அதே சமயம் குர் ஆனின் பிரமிப்பூட்டும் 19ன் அடிப்படையிலான கணித அற்புதம் குர்ஆனுடைய வெளிப்பாட்டிற்கு 1406 சந்திர வருடங்கள் கழித்து, (1406=19x74 & கி.பி.1974 இக்கண்டுபிடிப்பின் சூரிய வருடமாக இருந்தது) கடவுளின் உடன்படிக்கைத் தூதர் மூல மாக வெளிப்படுத்தப்பட்டது. நடந்தவற்றை நினைத்துப் பார்க்கையில், இந்த முழு சூராவும் குர்ஆனுடைய 19ன் அடிப்படை யிலான அற்புதத்தையே குறிக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம் (பின் இணைப்பு 1 & 2).*

**74:4 குர்ஆன்தான் இந்த இரகசியக் குறியீட்டைத் தன்னகத்தே கொண்ட ஆடையாக உள்ளது. இது 9:128–129 ஐ நீக்கு வதைக் குறிக்கின்றது.*

*குர்ஆனின்*
*பொது வகுஎண்*

30. **அதன் மீது பத்தொன்பது உள்ளது.***

31. நரகத்தின் பாதுகாவலர்களாக இருப்பதற்காக வான வர்களை நாம் நியமித்தோம், மேலும் அவர்களுடைய எண்ணை *(19)* நாம் நிர்ணயித்தோம்

*(1)* நம்பமறுப்பவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற் காக,

*(2) (இது ஓர் இறைவேதம் தான் என்பதில்)* கிறிஸ்து வர்களையும் யூதர்களையும் உறுதி கொள்ளச் செய் வதற்காக,

*(3)* விசுவாசம் கொண்டோரின் விசுவாசத்தை வலுப் படுத்துவதற்காக,

*(4)* கிறிஸ்துவர்கள், யூதர்கள், அவ்வண்ணமே நம் பிக்கையாளர்களின் இதயங்களில் சந்தேகத்தின் அனைத்துச் சுவடுகளையும் நீக்குவதற்காக, மேலும்

*(5)* தங்களுடைய இதயங்களில் சந்தேகத்தைத் தாங்கியிருப்பவர்களையும், நம்பமறுப்பவர்களையும் அம்பலப்படுத்துவதற்காக; அவர்கள் கூறுவார்கள், "**கடவுள்** இந்த உதாரணத்தின் மூலம் என்ன கூற நாடுகின்றார்?" **கடவுள்** இவ்விதமாக அவர் நாடு கின்ற எவரையும் வழிகேட்டில் அனுப்பி விடுகின் றார், மேலும் அவர் நாடுகின்ற எவரையும் வழிநடத்து கின்றார். உம்முடைய இரட்சகரின் படைவீரர்களை அவரைத் தவிர எவரும் அறிய மாட்டார். இது மக் களுக்குரியதொரு நினைவூட்டலாகும்.

32. மிக நிச்சயமாக, நிலவின் மீது *(நான் ஆணையிடு கின்றேன்).*

33. மேலும் இரவானது அது கடந்து செல்கின்றபோது.

34. மேலும் காலையானது அது பிரகாசிக்கின்ற போது.

*மாபெரும்*
*அற்புதங்களில் ஒன்று*

35. இது மாபெரும் அற்புதங்களில் ஒன்றாகும்*.

36. மானிட இனத்திற்கோர் எச்சரிக்கை.

37. உங்களில் முன்செல்லவோ, அல்லது பின்வாங்கவோ விரும்புபவர்களுக்காக.

38. ஒவ்வொரு ஆன்மாவும் அதன் பாவங்களால் பொறி யில் அகப்பட்டுக் கொள்கின்றது.

39. வலப்புறத்தினில் இருப்பவர்களைத் தவிர.

40. சுவனத்தில் இருக்கும் சமயத்தில், அவர்கள் வினவு வார்கள்.

41. குற்றவாளிகளைப் பற்றி.

42. "இந்தத் தண்டனைக்கு உங்களைக் கொண்டு வந்தது எது?"

43. அவர்கள் கூறுவார்கள், "நாங்கள் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவில்லை.

44. "நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவில்லை.

45. "மூடத்தனமான தவறுகள் செய்பவர்களுடன் சேர்ந்து நாங்கள் மூடத்தனமான தவறுகள் செய்து கொண்டி ருந்தோம்.

46. "தீர்ப்பு நாளின் மீது நாங்கள் நம்பிக்கை கொள்ள மறுத்தோம்.

47. "எங்களுக்கு உறுதிப்பாடு வந்துவிட்ட இப்பொழுது வரை."

48. பரிந்துரையாளர்களின் பரிந்துரை ஒருபோதும் அவர் களுக்கு உதவாது.

49. ஏன் அவர்கள் இந்த நினைவூட்டலின்பால் இவ்வளவு வெறுப்புக் கொண்டவர்களாக இருக்கின்றனர்?

50. விரைந்தோடும் வரிக்குதிரைகளைப் போல்.

51. சிங்கத்திடமிருந்து விரண்டோடுகின்றவர்கள்!

52. அவர்களில் ஒவ்வொருவனும் தனிப்பட்ட முறையில் வேதத்தைப் பெற விரும்புகின்றானா?

53. உண்மையில், அவர்கள் மறுவுலகத்தை அஞ்சுவ தில்லை.

54. உண்மையில், இது ஒரு நினைவூட்டலாகும்.

55. கவனத்தில் எடுத்துக் கொள்ள விரும்புபவர்களுக்காக.

56. **கடவுள்**–ன் நாட்டத்திற்கெதிராக அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள இயலாது. அவர்தான் நன்னெறி யின் மூலாதாரமாவார்; அவர்தான் மன்னிப்பின் மூலாதாரமாவார்.

****

## சூரா 75: உயிர்த்தெழுப்புதல் (அல்–கியாமஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளின் மீது நான் ஆணையிடுகின்றேன்.

2. மேலும் பழிபோடுகின்ற ஆன்மாவின் மீது நான் ஆணையிடுகின்றேன்.

3. அவனுடைய எலும்புகளை நாம் மீண்டும் கட்டமைக்க மாட்டோம் என்று மானிடன் நினைக்கின்றானா?

4. ஆம், மெய்யாக; அவனுடைய விரல் நுனியையும் மீண்டும் கட்டமைக்கின்ற ஆற்றலுடையவர்களாக நாம் இருக்கின்றோம்.

**74:30–35 "மாபெரும் அற்புதங்களில் ஒன்றான" இது, குர்ஆன் உலகத்திற்குரிய கடவுளின் தூதுச் செய்திதான் என்பதற் கான முதல் பௌதிகச் சான்றை வழங்குகின்றது. 19ன் அடிப்படையிலான இந்த அற்புதம் பின் இணைப்பு 1ல் விவரிக்கப் பட்டுள்ளது.*

5. ஆனால் மானிடனானவன் தன் முன்னால் அவன் காண்பவற்றை மட்டுமே நம்புகின்ற மனப்பாங்குடையவனாக இருக்கின்றான்.

6. உயிர்த்தெழுப்பப்படுகின்ற நாளை அவன் சந்தேகிக்கின்றான்!

7. பார்வை ண்கூர்மையானவுடன்.

8. மேலும் சந்திரன் கிரகணமானவுடன்.

9. மேலும் சூரியனும் சந்திரனும் ஒன்று மற்றொன்றுடன் மோதியவுடன்.

10. அந்த நாளில் மானிடன் கூறுவான், "எங்கே தப்பிப்பது ?"

11. நிச்சயமாக, தப்பித்தல் எதுவுமில்லை.

12. அந்நாளில், உம்முடைய இரட்சகரிடம்தான் இறுதி விதி உள்ளது.

13. அந்த நாளில், மானிடனானவன் தன்னை முற்படுத்திக் கொள்ள அவன் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும், மேலும் தன்னைப் பிற்படுத்திக் கொள்ள அவன் செய்த ஒவ்வொன்றைப் பற்றியும் தெரியப்படுத்தப்படுவான்.

14. மானிடனானவன் தனக்கே நீதிபதியாக இருப்பான்.

15. மன்னிப்புக் கோரல் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

*குர்ஆனை விளக்குவதில் இருந்து முஹம்மத் தடுக்கப்பட்டார்*

16. அதனை விரைவுபடுத்துவதற்காக உமது நாவை அசைக்காதீர்.

17. குர்ஆனாக அதனை ஒன்று சேர்க்கப்போவது நாம் தாம்.

18. அதனை நாம் ஓதிக்காட்டியவுடன், அந்தக் குர்ஆனை நீர் பின்பற்ற வேண்டும்.

19. பின்னர் அதனை நாமே விளக்குவோம்.

20. உண்மையில், விரைந்தோடும் இந்த வாழ்வை நீங்கள் நேசிக்கின்றீர்கள்.

21. அதே சமயம் மறுவுலகை அலட்சியம் செய்கின்றீர்கள்.

22. சில முகங்கள், அந்நாளில், மகிழ்ச்சியுடன் இருக்கும்.

23. தங்களுடைய இரட்சகரை நோக்கியவாறு.

24. மற்ற முகங்கள், அந்நாளில், துன்பகரமாக இருக்கும்.

25. மோசமானதை எதிர்பார்த்தவாறு.

26. உண்மையில், *(ஆன்மாவானது)* தொண்டையை அடையும் போது.

27. மேலும் அதற்கு உத்தரவிடப்படுகின்றது: "சென்று விடட்டும்!"

28. அதுதான் முடிவு என்பதை அவன் அறிவான்.

29. ஒரு காலானது மறு காலின் அருகே அசைவற்றுக் கிடக்கும்.

30. அந்நாளில், உம்முடைய இரட்சகரிடம்தான், ஒன்று திரட்டுதல் உள்ளது.

31. ஏனெனில், அவன் தர்மத்தையோ, அன்றி *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளையோ கடைபிடிக்கவில்லை.

32. ஆனால் அவன் நம்பமறுத்தான், மேலும் திரும்பிச் சென்றான்.

33. தன்னுடைய குடும்பத்தாருடன், அவன் ஆணவமாக நடந்து கொண்டான்.

34. நீ இதற்கு தகுதியானவனாகி விட்டாய்.

35. மெய்யாகவே, நீ இதற்குத் தகுதியானவனாகி விட்டாய்.

36. மானிடனானவன் தான் ஒன்றுமேயில்லாமல் போய் விடுவோம் என்று நினைக்கின்றானா ?

37. பீய்ச்சப்பட்ட விந்தின் ஒரு துளியாக அவன் இருக்கவில்லையா ?

38. பின்னர் அவர் அதிலிருந்து ஒரு கருவை உருவாக்கினார்!

39. ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ அதனை அவர் ஆக்கினார்!

40. பின்னர் அவர் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் திறனற்று இருக்கின்றாரா ?

****

## சூரா 76: மானிடன் (அல்–இன்ஸான்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. குறிப்பிடப்படுவதற்கு என எந்த ஒன்றுமாக மானிடன் இல்லாதிருந்த ஒரு காலம் இருந்தது என்பது ஒரு நிதர்சனம் அல்லவா ?

2. அவனைச் சோதனை செய்யும் பொருட்டு, பெற்றோர்கள் இருவருடைய, ஒரு திரவக் கலவையிலிருந்து மானிடனை நாம் படைத்தோம். இவ்வாறாக, செவியுறக் கூடியவனாகவும் பார்க்கக்கூடியவனாகவும் அவனை நாம் ஆக்கினோம்.

3. இரண்டு பாதைகளை அவனுக்கு நாம் காட்டினோம், பின்னர், அவன் நன்றியுடையவனாகவோ, அல்லது நன்றி கெட்டவனாகவோ இருக்கின்றான்.

4. நம்பமறுப்பவர்களுக்காகச் சங்கிலிகளையும், தளைகளையும், மேலும் கொழுந்து விட்டெரிகின்ற ஒரு நரகத்தையும் நாம் தயாரித்தோம்.

5. நற்குணங்களையுடையவர்களைப் பொறுத்த வரை, அமுதத்தைக் கொண்டு வாசனையூட்டப்பட்ட கோப்பைகளிலிருந்து அவர்கள் அருந்துவார்கள்.

6. **கடவுள்**–ன் ஊழியர்களுக்கென ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்ற ஓர் ஊற்று; அவர்கள் நாடியவாறு அது பொங்கி எழும்.

7. அவர்கள் தங்கள் நேர்ச்சைகளை நிறைவேற்றுகின்றனர், மேலும் அதிகபட்ச சிரமமான அந்த ஒரு நாளை அஞ்சுகின்றனர்.

8. அவர்கள் தங்களுக்குப் பிரியமான உணவை ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், மேலும் சிறைப் பிடிக்கப்பட்டோருக்கும் தானமளிக்கின்றனர்.

9. "**கடவுள்**–க்காகவே நாங்கள் உங்களுக்கு உணவளிக்கின்றோம்; உங்களிடமிருந்து எந்தக் கைம்மாறையோ அல்லது நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

10. "எங்கள் இரட்சகரிடமிருந்து துன்பமும் சங்கடமும் நிறைந்த அந்த நாளை நாங்கள் பயப்படுகின்றோம்."

11. அதன் விளைவாக, அந்த நாளின் தீங்குகளிலிருந்து **கடவுள்** அவர்களைப் பாதுகாக்கின்றார், மேலும் இன்பத்தையும் திருப்தியையும் கொண்டு அவர்களுக்கு வெகுமதியளிக்கின்றார்.

12. அவர்களுடைய உறுதிப்பாட்டுக்காக சுவனத்தையும் பட்டையும் கொண்டு அவர்களுக்கு வெகுமதியளிக்கின்றார்.

13. அங்கே அவர்கள் ஆடம்பரமான ஆசனங்களின் மீது பொழுது போக்குவார்கள். அவர்கள் சூரியனின் வெப்பத்தையோ, அன்றி எந்த குளிரையோ அனுபவிக்க மாட்டார்கள்.

14. நிழல் அங்கே அவர்களை மூடிக்கொள்ளும், மேலும் பழங்கள் கைக்கெட்டும் தூரத்திற்குக் கொண்டு வரப்படும்.

15. ஒளி ஊடுருவுகின்ற வெள்ளிப்பாத்திரங்கள் மற்றும் கோப்பைகளில் அவர்கள் பானங்கள் பரிமாறப்படுகின்றனர்.

16. வெள்ளியில் செய்யப்பட்ட போதிலும், ஒளி ஊடுருவுகின்ற கோப்பைகள்; இது அனைத்திற்கும் மிகச் சரியாகத் தகுதி பெற்று விட்டனர்.

17. மதுரமான சுவையூட்டப்பட்ட பானங்களை அவர்கள் மகிழ்ந்து அனுபவிக்கின்றனர்.

18. அங்கே "ஸல்ஸபீல்" என்று அறியப்பட்ட ஓர் ஊற்றில் இருந்து.

19. அமரத்துவம் வாய்ந்த ஊழியர்கள் அவர்களுக்குப் பரிமாறுவார்கள். அவர்களை நீங்கள் காணும் போது, சிதறிய முத்துகளைப் போல் அவர்கள் தோன்றுவார்கள்.

20. நீங்கள் எங்கு நோக்கினாலும், பேரானந்தத்தையும், அற்புதமானதொரு சாம்ராஜ்யத்தையுமே நீங்கள் காண்பீர்கள்.

21. அவர்கள் மீது பச்சை வெல்வெட்டு மற்றும் பளபளக்கும் பட்டில் ஆன ஆடைகளும் மேலும் வெள்ளி ஆபரணங்களும் இருக்கும். அவர்களுடைய இரட்சகர் தூய்மையான பானங்களை அவர்களுக்கு வழங்குவார்.

22. இதுவே உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற வெகுமதியாகும், ஏனெனில் உங்களுடைய பிரயத்தனங்கள் பராட்டப்பட்டவையாக உள்ளன.

23. இந்தக் குர்ஆனை நாம் உமக்கு வெளிப்படுத்தியுள்ளோம்; நம்மிடமிருந்து தனிச்சிறப்பானதொரு வெளிப்பாடு.

24. உம்முடைய இரட்சகரின் கட்டளைகளை உறுதிப்பாட்டுடன் நீர் செயல்படுத்த வேண்டும், மேலும் அவர்களில் உள்ள பாவம் நிறைந்த நம்பமறுப்பவன் எவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர்.

25. மேலும் பகலும் இரவும் உம்முடைய இரட்சகரின் பெயரை நினைவு கூர்வீராக.

26. இரவுப் பொழுதுகளில், அவர் முன் சிரம் பணிந்து வீழ்வீராக, மேலும் பல நீண்டதோர் இரவு அவரைத் துதிப்பீராக.

27. இந்த மக்கள் விரைந்தோடும் இந்த வாழ்வில் மூழ்கி விட்டனர், அதே சமயம் – அவர்களுக்குச் சற்றே முன்னிருக்கின்ற – கனமானதொரு நாளை அலட்சியம் செய்கின்றனர்.

28. நாம் அவர்களைப் படைத்தோம், மேலும் அவர்களை ஸ்தாபித்தோம், மேலும், எப்பொழுது நாம் நாடினாலும், அவர்களுடைய இடத்தில் மற்றவர்களை மாற்றி அமைத்து விட நம்மால் இயலும்.

29. இது ஒரு நினைவூட்டலாகும்: நாடுகின்ற எவரும் தன்னுடைய இரட்சகரை நோக்கிய பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

30. நீங்கள் நாடுவது எதுவானாலும் **கடவுள்**–ன் நாட்டத்திற்கு ஏற்பவேயாகும். **கடவுள்** சர்வமும் அறிந்தவர், ஞானமுள்ளவர்.

31. தான் நாடுகின்ற எவரையும் தன்னுடைய கருணைக்குள் நுழைய அவர் அனுமதிக்கின்றார். வரம்புமீறுபவர்களைப் பொறுத்தவரை, வலி நிறைந்ததொரு தண்டனையை அவர்களுக்காக அவர் தயாரித்துள்ளார்.

****

## சூரா 77: அனுப்பப்படுகின்றவர்கள் (அல்–முர்ஸலாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. தொடர்ந்து அனுப்பப்படுகின்ற *(வானவர்கள்).*
2. காற்றை ஓட்டுவதற்காக.
3. மேகங்களை எழுப்புவதற்காக.
4. வாழ்வாதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக.
5. தூதுச் செய்திகளைச் சேர்ப்பிப்பதற்காக.
6. நற்செய்திகளை, அவ்வண்ணமே எச்சரிக்கைகளை.
7. வாக்களிக்கப்பட்டவை நிகழ்ந்தேறும்.
8. எனவே, நட்சத்திரங்கள் அணைக்கப்படும் போது.
9. வானமானது திறந்து விடப்படுகின்றது.
10. மலைகளானவை வெடித்துச் சிதறச் செய்யப்படுகின்றன.
11. தூதர்களானவர்கள் அழைக்கப்படுகின்றனர்.
12. அதுதான் நிர்ணயிக்கப்பட்ட நாளாகும்.
13. தீர்மானத்தின் நாள்.
14. எத்தகையதொரு தீர்மானத்தின் நாள்!
15. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
16. முந்திய தலைமுறையினரை நாம் அழித்தொழிக்கவில்லையா ?
17. பின்னர் மற்றவர்கள் அவர்களைப் பின் தொடரும்படி நாம் செய்தோமல்லவா ?
18. இதுதான் குற்றவாளிகளுக்கு நாம் செய்வது.
19. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
20. தாழ்ந்ததொரு திரவத்திலிருந்து உங்களை நாம் படைக்கவில்லையா ?*
21. பின்னர் அதனை நன்கு பாதுகாக்கப்பட்டதொரு பெட்டகத்தில் நாம் வைத்தோம்.
22. குறிப்பிட்டதொரு காலத்திற்கு.
23. மிகச்சரியாக நாம் அதனை அளவிட்டோம்.* வடிவமைப்பவர்களில் நாமே மிகச்சிறந்தவர்களாவோம்.
24. ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
25. ஒரு தங்குமிடமாக இந்தப் பூமியை நாம் ஆக்கவில்லையா ?
26. வாழ்பவர்களுக்கும் மரணித்தவர்களுக்கும் ?
27. உயர்ந்த மலைகளை அதன் மீது நாம் அமைத்தோம், மேலும் அருந்துவதற்காகப் புத்துணர்வூட்டுகின்ற தண்ணீரை வழங்கினோம்.
28. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
29. நீங்கள் நம்பமறுத்துக் கொண்டிருந்தவற்றை நோக்கிச் செல்லுங்கள்.
30. மூன்று வெவ்வேறு அடர்த்திகளைக் கொண்ட நிழலை நோக்கிச் செல்லுங்கள்.
31. ஆயினும், அது குளிர்ச்சியையோ, அன்றி வெப்பத்திலிருந்து பாதுகாப்பையோ அளிக்காது.
32. மாளிகைகளை ஒத்த பெரிய அளவு தீப்பொறிகளை அது எறியும்.
33. ஒட்டகங்களின் நிறத்தை ஒத்த மஞ்சள் வண்ணத்தில்.
34. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
35. அதுதான் அவர்கள் பேசாதிருக்கும் நாளாகும்.
36. அன்றி மன்னிப்புக் கோருவதற்கும் அவர்கள் அனுமதியளிக்கப்பட மாட்டார்கள்.
37. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.
38. இதுதான் தீர்மானத்தின் நாளாகும். நாம் உங்களையும் முந்திய தலைமுறையினரையும் ஒன்று திரட்டியுள்ளோம்.

**77:20–23 T.W. சாட்லரின் லாங்மன்ஸ் மெடிக்கல் எம்ப்ரையாலஜி என்ற புத்தகத்தில் உள்ளபடி (ஐந்தாம் பதிப்பு, பக்கம் 88): "பொதுவாக முழு வளர்ச்சியடைந்த ஒரு கருவுக்குரிய கர்ப்ப கால அளவு கருத்தரித்த பின்னர் 266 நாட்கள் அல்லது 38 வாரங்கள் ஆகும்." 266 மற்றும் 38 ஆகிய இரண்டும் 19ன் பெருக்குத் தொகைகளாகும் (பின் இணைப்பு1).*

39. சூழ்ச்சிகள் ஏதேனும் உங்களிடம் இருக்குமாயின், தயங்காமல் சென்று சூழ்ச்சி செய்யுங்கள்.

40. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.

41. நன்னெறியாளர்கள் நிழலையும் ஊற்றுகளையும் மகிழ்ந்து அனுபவிப்பார்கள்.

42. மேலும் அவர்கள் ஆசைப்படுகின்ற பழங்களை.

43. உங்களுடைய காரியங்களுக்குரிய பிரதிபலனாக மகிழ்வுடன் உண்ணுங்கள், மேலும் பருகுங்கள்.

44. நற்குணங்களையுடையவர்களுக்கு இவ்விதமாகவே நாம் வெகுமதியளிப்போம்.

45. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.

46. தற்காலிகமாக உண்ணுங்கள், மேலும் சுகமனுவியுங் கள்; நீங்கள் குற்றவாளிகளாக இருக்கின்றீர்கள்.

47. ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.

48. "குனிந்து வழிபடுங்கள்," என்று அவர்களிடம் கூறப் பட்டால், அவர்கள் குனிந்து வழிபடுவதில்லை.

49. ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு அந்நாளில் கேடு தான்.

50. இதனை விடுத்து, வேறு எந்த *ஹதீஸை,* அவர்கள் ஆதரிக்கின்றனர் ?

****

## சூரா 78: அந்த நிகழ்வு (அல்–நபஅ)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அவர்கள் என்ன கேள்வி எழுப்புகின்றனர் ?

2. மகத்தான அந்நிகழ்வு.

3. அவர்களால் தாக்கித்துக் கொண்டிருக்கப்படுவது.

4. மெய்யாகவே, அவர்கள் கண்டு கொள்வார்கள்.

5. மிக நிச்சயமாக, அவர்கள் கண்டு கொள்வார்கள்.

6. வசிக்கத்தக்கதாக இந்தப் பூமியை நாம் ஆக்கவில் லையா ?

7. மேலும் மலைகளை நிலைப்படுத்திகளாக ?

8. உங்களை நாம் *(ஒருவருக்கு மற்றொருவரை)* ஜோடி களாகப் படைத்தோம்.

9. நீங்கள் ஓய்வெடுப்பதற்காகத் தூக்கத்தை நாம் படைத்தோம்.

10. இரவானதை ஒரு மறைப்பாக நாம் ஆக்கினோம்.

11. மேலும் பகலானதை வாழ்வாதாரங்களைத் தேடு வதற்காக.

12. ஏழு பிரபஞ்சங்களை உங்களுக்கு மேலே நாம் நிர்மாணித்தோம்.

13. பிரகாசமானதொரு விளக்கை நாம் படைத்தோம்.

14. மேகங்களிலிருந்து ஊற்றப்படுகின்ற தண்ணீரை நாம் இறக்கியனுப்பினோம்.

15. அதனைக் கொண்டு தானியங்களையும் தாவரங் களையும் முளைப்பிப்பதற்காக.

16. மேலும் பல்வேறு பழத்தோட்டங்களையும்.

17. தீர்மானத்தின் நாளானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

18. கொம்பு ஊதப்படுகின்ற நாளன்று, நீங்கள் கூட்டங் கூட்டமாக வருவீர்கள்.

19. வானமானது வாசல்களைப் போல் திறக்கப்படும்.

20. மலைகளான அவை ஒரு கானலாக இருந்ததைப் போல பெயர்க்கப்பட்டு விடும்.

21. எரிகிடங்கு தவிர்த்து விட முடியாததாகும்.

22. வரம்புமீறுபவர்களுக்கு; அதுதான் அவர்களுடைய தங்குமிடமாக இருக்கும்.

23. யுகங்களாக அவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள்.

24. அவர்கள் ஒருபோதும் அதில் குளிர்ச்சியையோ, அன்றி ஒரு பானத்தையோ சுவைக்க மாட்டார்கள்.

25. ஒரு தீக்கொழுந்தும், மேலும் கசப்பான உணவும் மட்டுமே.

26. நியாயமான ஒரு கூலி.

27. கணக்குக் கொடுப்பதற்காகப் பிடிக்கப்படுவோம் என அவர்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

28. மேலும் நம்முடைய அத்தாட்சிகளை முற்றிலும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

29. ஒரு பதிவேட்டில் ஒவ்வொன்றையும் நாம் எண்ணி வைத்துள்ளோம்.

30. அதன் விளைவுகளை அனுபவியுங்கள்; தண்டனையை மட்டுமே நாம் உங்களுக்கு அதிகரிப்போம்.

31. நன்னெறியாளர்கள் ஒரு வெகுமதிக்குத் தகுதியாகி விட்டனர்.

32. பழத்தோட்டங்கள் திராட்சைகள்.

33. அபாரமான வாழ்க்கைத் துணைகள்.

34. மதுரமான பானங்கள்.

35. அபத்தமான எதையுமோ அல்லது பொய்களையோ அதனில் அவர்கள் ஒருபோதும் செவியுறமாட்டார்கள்.

36. உம்முடைய இரட்சகரிடமிருந்தொரு வெகுமதி; தாராளமானதொரு பிரதிபலன்.

37. வானங்கள் மற்றும் பூமி, மேலும் அவற்றிற்கிடையில் உள்ள ஒவ்வொன்றினுடைய இரட்சகர். மிக்க அருளாளர். அவருடைய தீர்மானங்களை எவரொருவரும் ரத்துச் செய்து விட இயலாது.

38. பரிசுத்த ஆவியானவரும் வானவர்களும் ஒரு வரிசையில் நிற்கின்ற போது அந்நாள் வரும். மிக்க அருளாளரால் அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர எவரொருவரும் பேசமாட்டார்கள், மேலும் அவர்கள் சரியானதை மட்டுமே கூறுவார்கள்.

39. தவிர்க்க முடியாத நாளானது இவ்விதமானதேயாகும். எவரெல்லாம் நாடுகின்றாரோ அவர் தன் இரட்சகரிடம் புகலிடம் எடுத்துக் கொள்ளட்டும்.

40. விரைவில் நிகழவிருக்கின்றதொரு தண்டனையைப் பற்றி போதுமான அளவு நாம் உங்களுக்கு எச்சரித்து விட்டோம். அதுதான் ஒவ்வொருவனும் தன் கரங்கள் முற்படுத்தி அனுப்பியவை என்ன என்பதைப் பரிசீலித்து பார்த்துக் கொள்கின்ற நாளாகும், மேலும் நம்ப மறுப்பவன் கூறுவான், "ஐயோ, நான் புழுதியாக இருந்திருக்க வேண்டுமே என விரும்புகின்றேன்."

****

## சூரா 79: பறிப்பவர்கள் (அல்–நாஸியாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. *(நம்பமறுப்போருடைய ஆன்மாக்களை)* பலவந்தமாகப் பறிப்பவர்கள் *(ஆகிய வானவர்கள்)*.

2. மேலும் *(நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களை)* மகிழ்ச்சியோடு மென்மையாக எடுப்பவர்கள்.

3. மேலும் எல்லா இடங்களிலும் மிதக்கின்றவர்கள்.

4. ஆர்வத்துடன் ஒருவரையொருவர் முந்துபவர்கள்–

5. பல்வேறு கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக.

6. அதிர்வானது அதிரும் அந்நாள்.

7. இரண்டாவது ஊதுதலைத் தொடர்ந்து.

8. குறிப்பான சில மனங்கள் திகிலூட்டப்பட்டு விடும்.

9. அவர்களுடைய கண்கள் கீழ் நோக்கியவையாகி விடும்.

10. அவர்கள் கூறுவார்கள், "சமாதியிலிருந்து மீண்டும் நாம் படைக்கப்பட்டு விட்டோம்!

11. "சிதைந்து போன எலும்புகளாக நாம் மாறிவிட்ட பின்னர் எவ்வாறு இது நிகழ்ந்தது?"

12. அவர்கள் கூறி இருந்தனர், "இது மீண்டும் நிகழச் சாத்தியமில்லாத ஒன்றாகும்."

13. அதற்கு எடுத்துக் கொள்வதெல்லாம் ஓர் இடிப்பு தான்.

14. உடனே அவர்கள் எழுந்து விடுவார்கள்.

15. மோஸஸின் சரித்திரத்தைப் பற்றி நீர் அறிந்து கொண்டீரா?

16. துவா எனும் புனிதப்பள்ளத்தாக்கில் அவருடைய இரட்சகர் அவரை அழைத்தார்.

17. "ஃபேரோவிடம் செல்வீராக; அவன் வரம்புமீறி விட்டான்."

18. அவனிடம் கூறுவீராக, "நீ சீர்திருந்த மாட்டாயா?

19. "நீ பக்தியுடையவனாக மாறும் பொருட்டு, உன்னுடைய இரட்சகரிடம் உன்னை நான் வழி நடத்துவேன்."

20. அவர் பின்னர் அவனிடம் அந்த மாபெரும் அற்புதத்தைக் காட்டினார்.

21. ஆனால் அவன் நம்பமறுத்தான். மேலும் கலகம் செய்தான்.

22. பின்னர் அவன் ஓர் அவசரத்தில் திரும்பிச் சென்று விட்டான்.

23. அவன் ஒன்று திரட்டிப் பிரகடனம் செய்தான்.

24. அவன் கூறினான், "நான்தான் உங்களுடைய இரட்சகன்; மிகவும் உயர்ந்தவன்."

25. அதன் விளைவாக, மறுவுலகிலும், அவ்வண்ணமே இந்த முதல் வாழ்விலும் **கடவுள்** அவனைத் தண்டனைக்கு உட்படுத்தினார்.

26. பக்தியுடையோருக்கு இது ஒரு படிப்பினையாகும்.

27. படைக்கப்படுவதற்கு வானத்தை விடவும் மிகக் கடினமானவர்களா நீங்கள்? அவர் அதனை நிர்மாணித்தார்.

28. அதன் பருமன்களை அவர் உயர்த்தினார், மேலும் அதனைப் பூரணப்படுத்தினார்.

29. அதன் இரவுப் பொழுதை அவர் இருளுடையதாக்கி னார், மேலும் அதன் காலைப் பொழுதை அவர் பிரகாசமானதாக்கினார்.

30. இந்தப் பூமியை முட்டை வடிவில்* அவர் ஆக்கினார்.

31. அதிலிருந்தே, அதற்குரிய தண்ணீரையும் மேய்ச்சல் நிலத்தையும் அவர் உருவாக்கினார்.

32. மலைகளை அவர் நிலைநிறுத்தினார்.

33. இவை அனைத்தும் உங்களுக்கும் உங்களுடைய பிராணிகளுக்கும் வாழ்விற்கான ஆதாரங்களை வழங்குவதற்காகவேயாகும்.

34. பின்னர், அந்த மாபெரும் அடியானது வரும் போது.

35. அதுதான் மானிடனானவன் தான் செய்த ஒவ்வொன் றையும் நினைத்துப் பார்க்கின்ற நாளாகும்.

36. நரகம் இருப்புநிலைக்குக் கொண்டு வரப்படும்.

37. வரம்புமீறிவிட்ட ஒருவனைப் பொறுத்த வரை.

38. இந்த வாழ்வில் மூழ்கியவனாக இருந்தவன்.

39. நரகம்தான் இருப்பிடமாக இருக்கும்.

40. தன்னுடைய இரட்சகரின் மாட்சிமையை அஞ்சி, பாவ கரமான மோகங்களில் இருந்து தன்னையே தடுத் துக் கொண்டவனைப் பொறுத்த வரை.

41. சுவனம்தான் இருப்பிடமாக இருக்கும்.

42. அவர்கள் அந்த வேளையைப் பற்றியும், எப்பொழுது அது நிகழ்ந்தேறும் என்றும் உம்மிடம் கேட்கின்ற னர்!

43. அதன் நேரத்தைப் பற்றி அறிவிக்க விதிக்கப்பட்டிருப் பவர் *(முஹம்மதான)* நீர் அல்லர்.

44. உம்முடைய இரட்சகரே அதன் தலைவிதியைத் தீர்மானிக்கின்றார்.

45. உம்முடைய இறைப்பணியானது அதனை எதிர்பார்ப் பவர்களை எச்சரிப்பதேயாகும்.

46. அவர்கள் அதனைக் காண்கின்ற அந்நாளில், ஒரு மாலைப்பொழுதோ அல்லது ஒரு நாளின் பாதியோ அவர்கள் நிலைத்திருந்ததாக அவர்கள் உணர்வார் கள்.

****

## சூரா 80: அவர் முகம் சுளித்தார் (அபஸ)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அவர் *(முஹம்மத்)* முகம் சுளித்தார், மேலும் திரும் பிக் கொண்டார்.

2. பார்வையற்ற அந்த மனிதர் அவரிடம் வந்த பொழுது.

3. உமக்கு எப்படித் தெரியும்? தன்னையே அவர் தூய் மைப் படுத்திக் கொள்ளக் கூடும்.

4. அல்லது அவர் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடும், மேலும் தூதுச் செய்தியிலிருந்து பயன் பெறக் கூடும்.

5. செல்வந்தனான அம்மனிதனைப் பொறுத்த வரை.

6. உம்முடைய கவனத்தை நீர் அவனிடம் செலுத்தினீர்.

7. அவனுடைய மீட்சிக்கு உம்மால் உத்தரவாதம் அளிக்க இயலாத போதிலும்.

8. ஆர்வத்துடன் உம்மிடம் வந்த அந்த ஒருவர்.

9. மேலும் மெய்யாகவே பக்தியுடையவர்.

10. அவரை நீர் அசட்டை செய்தீர்.

11. உண்மையில், இது ஒரு நினைவூட்டலாகும்.

12. விரும்புகின்ற எவரும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

13. கண்ணியமான வேதங்களில்.

14. மேன்மையானது மற்றும் தூய்மையானது.

15. தூதர்களின் கரங்களால் *(எழுதப்பட்டது)*.

16. கண்ணியமானவர்கள் மற்றும் நன்னெறியாளர்கள்.

17. மானிடனுக்குக் கேடுதான்; அவன் மிகவும் நன்றி கெட்டவனாக இருக்கின்றான்!

18. எதிலிருந்து அவர் அவனைப் படைத்தார்?

19. ஒரு சிறு துளியிலிருந்து, அவர் அவனைப் படைக்கின் றார், மேலும் அவனை வடிவமைக்கின்றார்.

20. பின்னர் அவனுக்குரிய பாதையை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

21. பின்னர் அவனை மரணத்திலும், பின்னர் சமாதியி னுள்ளும் அவர் ஆழ்த்துகின்றார்.

22. அவர் நாடும் பொழுது, அவர் அவனை உயிர்த் தெழுப்புவார்.

23. அவன் அவருடைய கட்டளைகளை ஆதரிக்க வேண் டும்.

24. மானிடனானவன் தன் உணவைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கட்டும்!

**79:30 "தஹாஹா" எனும் அரபி வார்த்தை "முட்டை" எனப் பொருள்படும் "தஹ்யஹ்" என்பதிலிருந்து பெறப்படுகின்றது.*

25. தண்ணீரை நாம் தாராளமாக ஊற்றுகின்றோம்.

26. பின்னர் நாம் மண்ணைப் பிளந்து திறக்கச் செய்கின்றோம்.

27. தானியங்களை அதனில் நாம் முளைப்பிக்கின்றோம்.

28. திராட்சைகளும் மேய்ச்சல் நிலங்களும்.

29. ஒலிவமும் பேரீச்சைகளும்.

30. விதவிதமான பழத்தோட்டங்கள்.

31. பழங்கள் மற்றும் காய்கறிகள்.

32. உங்களுக்கும் உங்களுடைய கால்நடைகளுக்கும் வாழ்விற்கான ஆதாரங்களை வழங்குவதற்காக.

33. பின்னர் ஊதுதல் நிகழ்ந்தேறும் போது.

34. அதுதான் ஒருவன் தன் சகோதரனிடமிருந்து விரண்டோடும் நாளாகும்.

35. தன் தாய் மற்றும் தந்தையிடமிருந்து.

36. தன் வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளிடமிருந்து.

37. அவர்கள் ஒவ்வொருவரும், அந்நாளில், தன்னுடைய சொந்தத் தலைவிதியைப் பற்றியே கவலைப் படுவார்.

38. சில முகங்கள் அந்நாளில் மகிழ்ச்சியுடன் இருக்கும்.

39. சிரித்துக் கொண்டும் ஆனந்தத்துடனும்.

40. மற்ற முகங்களோ, அந்நாளில், துன்பத்தால் சூழப்பட்டிருக்கும் .

41. குற்றவுணர்வில் ஆழ்ந்தவர்களாக.

42. இவர்கள்தான் தீய நம்பமறுப்பவர்களாவர்.

****

## சூரா 81: சுருட்டுதல் (அல்–தக்வீர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. சூரியனானது சுருட்டப்படும் பொழுது.

2. நட்சத்திரங்கள் ஒன்றோடொன்று நொறுக்கப்படுகின்றன.

3. மலைகள் துடைத்தெடுக்கப்படுகின்றன.

4. இனப்பெருக்கம் நிறுத்தப்படுகின்றது.

5. மிருகங்கள் ஒன்று திரட்டப்படுகின்றன.

6. பெருங்கடல்கள் தீப்பற்றி எரியச் செய்யப்படுகின்றன.

7. ஆன்மாக்களானவை அவற்றின் உடல்களுக்குள் திருப்பப்படுகின்றன.

8. உயிரோடு புதைக்கப்பட்ட சிறுமியிடம் வினவப்படுகின்றது:

9. எந்தக் குற்றத்திற்காக அவள் கொலை செய்யப்பட்டாள் ?

10. பதிவேடுகள் தெரியப்படுத்தப்படுகின்றன.

11. வானமானது நீக்கப்படுகின்றது.

12. நரகம் பற்ற வைக்கப்படுகின்றது.

13. சுவனமானது முன் வைக்கப்படுகின்றது.

14. ஒவ்வொரு ஆன்மாவும் அது கொண்டு வந்த ஒவ்வொன்றையும் அறிந்து கொள்ளும்.

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர்*

15. நட்சத்திர மண்டலங்களின் மீது நான் பவித்திரமான சத்தியம் செய்கின்றேன்.

16. மிகச்சரியாக அவற்றின் சுற்றுப்பாதையில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

17. இரவின் மீது அது கவிழும் பொழுது.

18. மேலும் காலைப் பொழுது அது சுவாசிக்கும் பொழுது.

19. இது கண்ணியமானதொரு தூதரின் கூற்றாகும்*.

20. அரியாசனத்தின் உடமையாளரால் அங்கீகரிக்கப்பட்டவர், முற்றிலும் ஆதரவளிக்கப்பட்டவர்.

21. அவர் கீழ்ப்படியப்படவும் நம்பிக்கை கொள்ளப்படவும் வேண்டும்.

22. உங்களுடைய தோழர் *(ரஷாத்)* பித்துப்பிடித்தவர் அல்லர்.

23. உயர்ந்த தொடுவானத்தில் அவர் அவரைப் பார்த்தார்.*

24. அவர் எந்தச் செய்தியையும் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை.

25. இது ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்ட சாத்தானின் பேச்சு அல்ல.

26. பின் இப்போது, நீங்கள் எங்கு செல்வீர்கள் ?

27. இது மக்கள் அனைவருக்கும் உரிய ஒரு தூதுச் செய்தியாகும்.

**81:19 இந்த சூராவின் எண்ணுடன், வசன எண்ணையும், "ரஷாத்" என்ற பெயரின் எழுத்தெண் மதிப்பையும் (505) "கலீஃபா" என்பதன் மதிப்பையும் (725), நாம் கூட்டினால், நமக்குக் கிடைப்பது 1330, 19x70 ஆகும். இத்தூதர் ரஷாத் கலீஃபாதான் என்பதற்குக் குர்ஆனியக் கணிதச் சான்றினை இது வழங்குகின்றது.*

**81:23 பின் இணைப்பு 2ல் விவரிக்கப்பட்டுள்ளபடி உயர்ந்த தொடுவானத்திற்கு ரஷாத் கலீஃபா அழைக்கப்பட்டார்.*

28. நேராகச் செல்ல விரும்புபவர்களுக்காக.

29. நீங்கள் நாடுகின்ற எதுவும், **கடவுள்**–ன் நாட்டத்திற் கேற்பவேயாகும் பிரபஞ்சத்தின் இரட்சகர்.

****

## சூரா 82: நொறுங்குதல் (அல்–இன்ஃபிதார்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானமானது நொறுக்கப்படும் பொழுது.

2. கோள்கள் சிதறடிக்கப்படுகின்றன.

3. பெருங்கடல்கள் வெடிக்க வைக்கப்படுகின்றன.

4. சமாதிகள் திறக்கப்படுகின்றன.

5. ஒவ்வொரு ஆன்மாவும் தன்னுடைய முன்னேற்றத் திற்குக் காரணமானது எது, மேலும் அது பின்தங் கக் காரணமானது எது என்று கண்டு கொள்ளும்.

*கடவுளின் படைப்புகளைப் பற்றிச் சிந்தியுங்கள்*

6. மானிடனே உன்னைத்தான், மிகுந்த கண்ணியத்திற் குரியவரான, உன்னுடைய இரட்சகரிடமிருந்து உன் னைத் திசை திருப்பியது எது ?

7. உன்னைப் படைத்து, உன்னை வடிவமைத்து, உன் னைப் பூரணப்படுத்திய அந்த ஒருவர்.

8. அவர் தேர்ந்தெடுத்த எந்த வடிவத்திலும், அவர் அதனைக் கட்டமைத்தார்.

9. உண்மையில், மார்க்கத்தின் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றீர்கள்.

10. உங்களைச் சுற்றிலும் *(கண்ணுக்குத் தெரியாத)* காவ லர்கள் இருக்கின்றனர் என்ற நிதர்சனத்தின் மீது கவனமற்றவர்களாக.

11. அவர்கள் கண்ணியமான பதிவாளர்களாக இருக் கின்றனர்.

12. நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் அவர்கள் பதிவு செய்கின்றனர்.

13. நிச்சயமாக, பக்திமான்கள் பேரானந்தத்திற்குத் தகுதியடைந்து விட்டனர்.

14. அதே சமயம் தீயவர்கள் நரகத்திற்குத் தகுதியாகி விட்டனர்.

15. தீர்ப்பு நாளில் அதற்கு உள்ளாவார்கள்.

16. அவர்கள் ஒருபோதும் அதனை விட்டு அகல மாட் டார்கள்.

17. தீர்ப்பு நாளானது அச்சமூட்டுவதாகும்.

18. எப்படிப்பட்ட ஒரு நாள்; அத்தீர்ப்பு நாள்!

19. அதுதான் எந்த ஓர் ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவுக்கு உதவ இயலாத நாளாகும், மேலும் அனைத்துத் தீர் மானங்களும், அந்நாளில், **கடவுள்**–க்கு உரியதாக இருக்கும்.

****

## சூரா 83: மோசடியாளர்கள் (அல்–முதஃப்ஃபிஃபீன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மோசடியாளர்களுக்குக் கேடுதான்.

2. அவர்கள் மக்களிடமிருந்து பெறும் போது முழு அள வையையும் உரிமையுடன் கேட்கின்றனர்.

3. ஆனால் அவர்களுக்கு அளவைகளையோ அல்லது எடைகளையோ தரும் போது, அவர்கள் மோசடி செய் கின்றனர்.

4. தாங்கள் உயிர்த்தெழுப்பப்படுவோம் என்பதை அவர் கள் அறியமாட்டார்களா ?

5. மகத்தானதொரு நாளன்று ?

6. அதுதான் மனிதர்கள் அனைவரும் பிரபஞ்சத்தின் இரட்சகரின் முன்னால் நிற்கின்ற நாளாகும்.

*எண்ணியல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட புத்தகங்கள்*

7. உண்மையில், தீயவர்களின் புத்தகமானது, *ஸிஜ்ஜீனில்* உள்ளது.

8. *ஸிஜ்ஜீன்* என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா ?

9. எண்ணியலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட தொரு புத்தகம்.

10. ஏற்கமறுப்பவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

11. அவர்கள் தீர்ப்பு நாளின் மீது நம்பிக்கை கொள்வ தில்லை.

12. வரம்புமீறுகின்றவன், பாவகரமானவன் தவிர எவரொ ருவரும் அதனை நம்பமறுக்க மாட்டார்கள்.

13. நம்முடைய வெளிப்பாடுகள் அவனிடம் ஓதிக்காட் டப்படுகின்றபொழுது, அவன் கூறுகின்றான், "கடந்த காலக் கட்டுக்கதைகள்!"

14. உண்மையில், அவர்களுடைய இதயங்கள் அவர் களுடைய பாவங்களால் மூடப்பட்டதாகி விட்டன.

15. உண்மையில், அந்நாளில், அவர்களுடைய இரட்சகரி டமிருந்து அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

16. பின்னர் நரகத்திற்குள் அவர்கள் தள்ளப்படுவார்கள்.

17. அவர்களிடம் கூறப்படும், "இதுதான் நீங்கள் மறுத்துக் கொண்டிருந்தது."

18. உண்மையில், நன்னெறியாளர்களின் புத்தகமானது *'இல்லிய்யீனில்'* உள்ளது.

19. *'இல்லிய்யீன்'* என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா ?

20. எண்ணியலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதொரு புத்தகம்.

21. எனக்கு நெருக்கமானவர்களால் பார்க்கப்பட இருப்பது.

22. நன்னெறியாளர்கள் பேரானந்தத்திற்குத் தகுதியடைந்து விட்டனர்.

23. ஆடம்பரமான ஆசனங்களின் மீது அவர்கள் ரசித்துக் கொண்டிருப்பார்கள்.

24. பேரானந்தத்தின் உல்லாசத்தை அவர்களுடைய முகங்களில் நீர் அடையாளம் காண்பீர்.

25. அவர்களுடைய பானங்கள் அமிழ்தத்தால் மணமூட்டப்பட்டிருக்கும்.

26. அதன் மணம் கஸ்தூரியைப் போன்றது. போட்டியாளர்கள் போட்டியிட வேண்டியது இதற்குத் தான்.

27. அதனுள் கலக்கப்பட்டிருப்பவை சிறப்பான தனிச் சுவைகளாகும்.

28. எனக்கு நெருக்கமானவர்களுக்கெனத் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓர் ஊற்றிலிருந்து.

29. தீயவர்கள் நம்பிக்கை கொண்டவர்களைப் பார்த்து நகைப்பதை வழமையாகக் கொண்டிருந்தனர்.

30. அவர்கள் அவர்களைக் கடந்து சென்ற போதெல்லாம், அவர்கள் ஏளனம் செய்தனர்.

31. அவர்கள் தங்கள் சமூகத்தாருடன் ஒன்று சேர்ந்து கொண்ட போதெல்லாம், அவர்கள் நகைச்சுவை செய்தவாறிருந்தனர்.

32. அவர்கள் அவர்களைக் கண்ட பொழுதெல்லாம், அவர்கள் கூறினார்கள், "இந்தக் கூட்டத்தினர் மிக நெடிய வழிகேட்டில் இருக்கின்றனர்!

33. "*(கண்ணுக்குத் தெரியாத)* காவலர்கள் என்று எத்தகைய விஷயமும் அவர்களுக்கு இல்லை."

34. இன்றைய தினம், நம்பிக்கை கொண்டவர்கள் நம்ப மறுத்தவர்களைப் பார்த்து நகைத்துக் கொண்டிருக்கின்றனர்.

35. ஆடம்பரமான ஆசனங்களின் மீது அவர்கள் ரசித்துக் கொண்டிருப்பார்கள்.

36. மிகவும் நிச்சயமாக, நம்பமறுப்பவர்கள் அவர்கள் செய்தவற்றிற்காகவே திருப்பிக் கொடுக்கப்படுகின்றனர்.

****

## சூரா 84: தகர்க்கப்படுதல் (அல்–இன்ஷிகாக்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வானமானது தகர்க்கப்படுகின்ற அந்நேரம் வரும்.

2. அது தன் இரட்சகரிடம் சரணடைந்து விடும். மேலும் காலாவதியாகி விடும்.

3. பூமியானது சமப்படுத்தப்படும்.

4. கக்கியவாறாக, அது தன்னுள்ளிருப்பவற்றை வெளித் தள்ளிவிடும்.

5. அது தன் இரட்சகரிடம் சரணடைந்து விடும், மேலும் காலாவதியாகி விடும்.

6. மானிடர்களே, பின்னோக்கிச் செல்ல இயலாதவாறு உங்களுடைய இரட்சகருடன் ஒரு சந்திப்பை முன்னோக்கிச் நீங்கள் சென்று கொண்டிருக்கின்றீர்கள்.

7. தன்னுடைய பதிவேட்டை அவருடைய வலக்கரத்தில் பெற்றுக் கொள்கின்ற ஒருவரைப் பொறுத்த வரை,

8. அவருடைய கேள்விக் கணக்கு இலகுவானதாக இருக்கும்.

9. அவர் உல்லாசமாகத் தன்னுடைய சமூகத்தாரிடம் திரும்பிச் செல்வார்.

10. தன்னுடைய பதிவேட்டை அவனுடைய முதுகுக்குப் பின்னால் பெற்றுக் கொள்கின்ற ஒருவனைப் பொறுத்தவரை,

11. அவன் குற்றவுணர்வால் அழுத்தப்பட்டவனாகி விடுவான்.

12. மேலும் நரகத்தில் கருகுவான்.

13. தன்னுடைய சமூகத்தாரிடம் ஆணவத்துடன் நடந்து கொள்பவனாக அவன் இருந்தான்.

14. கணக்குக் கொடுப்பதற்காக ஒருபோதும் அழைக்கப் படமாட்டோம் என்று அவன் நினைத்தான்.

15. ஆம், மெய்யாகவே, அவனுடைய இரட்சகர் அவனைப் பார்ப்பவராக இருந்தார்.

16. ரோஜா வண்ண அந்திப் பொழுதின் மீது நான் பவித்திரமான சத்தியம் செய்கின்றேன்.

17. மேலும் இரவின் மீது அது பரவும் போது.

18. மேலும் நிலவின் மீதும் அதன் பட்சங்கள் மீதும்.

19. படிப்படியாக நீங்கள் நிலை மாறுவீர்கள்.

20. ஏன் அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை?

21. மேலும் அவர்களுக்குக் குர்ஆன் ஓதிக்காட்டப்பட்டால், அவர்கள் சிரம் பணிந்து வீழ்வதில்லை.

22. இது ஏனெனில் நம்பிக்கை கொள்ள மறுப்பவர்கள் *(இக்குர்ஆனை)* ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

23. அவர்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களைக் **கடவுள்** முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

24. வலி நிறைந்த தண்டனையை அவர்களுக்கு வாக்களிப்பீராக.

25. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்தியவர்களைப் பொறுத்தவரை, நன்கு தகுதியானதொரு பிரதிபலனை அவர்கள் பெறுகின்றனர்.

****

## சூரா 85: நட்சத்திர மண்டலங்கள் (அல்–புரூஜ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஆகாயமும் அதன் நட்சத்திர மண்டலங்களும்.

2. வாக்களிக்கப்பட்டுள்ள அந்நாள்.

3. சாட்சியும் சாட்சி சொல்லப்படுவதும்.

4. செங்குத்துப் பள்ளத்தாக்கின் மக்களுக்குக் கேடுதான்.

5. கொழுந்து விட்டெரியும் ஒரு நெருப்பை அவர்கள் மூட்டினர்.

6. பின்னர் அதனைச் சுற்றிலும் அவர்கள் அமர்ந்து கொண்டனர்.

7. நம்பிக்கையாளர்கள் கருகுவதை ரசிப்பதற்காக.

8. எல்லாம் வல்லவரும், புகழுக்குத் தகுதியானவருமான **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டனர் என்பதைத் தவிர, வேறு காரணம் எதற்காகவும் அவர்களை அவர்கள் வெறுக்கவில்லை.

9. வானங்கள் மற்றும் பூமியின் அரசுரிமை அவருக்கே உரியது. மேலும் **கடவுள்** எல்லா விஷயங்களுக்கும் சாட்சியாகின்றார்.

10. நிச்சயமாக, நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் வன்கொடுமை செய்து, பின்னர் வருந்தத் தவறி விட்டவர்கள், எரிகிடங்கின் தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்; கருகுதலின் தண்டனைக்கு அவர்கள் உள்ளாகி விட்டனர்.

11. நிச்சயமாக, நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்தியவர்கள், ஆறுகள் பாயும் தோட்டங்களுக்குத் தகுதியடைந்து விட்டனர். இதுவே மகத்தான பெருவெற்றியாகும்.

12. உண்மையில், உம்முடைய இரட்சகரின் அடி கடுமையானதாகும்.

13. அவர்தான் துவக்குகின்றவர், மேலும் அதனை மீண்டும் செய்கின்றவர்.

14. மேலும் அவர்தான் மன்னிக்கின்றவர், மிகுந்த கனிவுடையவர்.

15. மகிமைமிக்க அந்த அரியாசனத்தின் உரிமையாளர்.

16. அவர் நாடுகின்ற எதனையும் செய்கின்றவர்.

17. சேனைகளின் வரலாற்றை நீர் கவனித்தீரா?

18. ஃபேரோ மற்றும் தமூதுடையவை?

19. நம்பமறுப்பவர்கள் ஏற்கமறுத்தலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

20. **கடவுள்** அவர்களைப் பற்றி முற்றிலும் அறிந்திருக்கின்றார்.

21. உண்மையில், இது மகத்தானதொரு குர்ஆனாகும்.

22. பாதுகாக்கப்பட்டதொரு மூலப் பலகையில்.

****

## சூரா 86: பிரகாசமான நட்சத்திரம் (அல்–தாரிக்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஆகாயம் மற்றும் அல்–தாரிக்கின் மீது.

2. அல்–தாரிக் என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா?

3. பிரகாசமான நட்சத்திரம்.

4. பரிபூரணமாக, ஒவ்வொருவரும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

5. மானிடனானவன் தன்னுடைய படைப்பைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கட்டும்.

6. பீய்ச்சப்பட்ட திரவத்திலிருந்து அவன் படைக்கப்பட்டான்.

7. முதுகெலும்பிற்கும் உள்ளுறுப்புகளுக்கும் இடையில் இருந்து.

8. அவர் நிச்சயமாக அவனை உயிர்ப்பித்தெழுப்பு வதற்கு ஆற்றலுடையவர்.
9. அனைத்து இரகசியங்களும் அறியப்பட்டதாகி விடு கின்ற அந்நாள்.
10. அவனுக்கு எந்தச் சக்தியோ, அன்றி ஓர் உதவி யாளரோ கிடையாது.
11. *(தண்ணீரைத்)* திருப்பித்தருகின்ற ஆகாயத்தின் மீது.
12. *(தாவரங்களை முளைப்பிப்பதற்காகப்)* பிளக்கின்ற பூமியின் மீது.
13. இது சிந்தனைக்குரிய ஒரு விவரிப்பு ஆகும்.
14. இலேசாக எடுத்துக் கொள்ளப்படக் கூடியதல்ல.
15. அவர்கள் திட்டங்களும் சூழ்ச்சிகளும் செய்கின்றனர்.
16. ஆயினும் நானும் அவ்வாறே செய்கின்றேன்.
17. நம்பமறுப்பவர்களுக்குக் குறுகியதொரு அவகாசத் தைச் சற்றே அவகாசமளிப்பீராக.

****

## சூரா 87: மிகவும் மேலானவர் (அல்–அஃலா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மிகவும் மேலானவராகிய, உம் இரட்சகரின் பெயரைத் துதிப்பீராக.
2. அவர் படைக்கின்றார், மேலும் உருக் கொடுக்கின்றார்.
3. அவர் வடிவமைக்கின்றார், மேலும் வழிநடத்து கின்றார்.
4. மேய்ச்சல் நிலங்களை அவர் முளைப்பிக்கின்றார்.
5. பின்னர் அதனை இலேசான வைக்கோலாக மாற்றி விடுகின்றார்.
6. நாம் உமக்கு ஓதிக் காட்டுவோம்; மறந்து விடாதீர்.
7. ஒவ்வொன்றும் **கடவுள்**–ன் நாட்டத்திற்கொப்பவே உள்ளது; அறிவிக்கப்பட்டவற்றையும், மேலும் மறைத்து வைக்கப்பட்டவற்றையும் அவர் அறிகின்றார்.
8. மிகவும் இலகுவான பாதையில் உம்மை நாம் செலுத் துவோம்.
9. எனவே, நீர் நினைவூட்ட வேண்டும்; ஒருவேளை அந்நினைவூட்டல் பயனளிக்கக் கூடும்.
10. பக்தியுடையவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள் வார்கள்.
11. தீயவர்கள் அதனைத் தவிர்த்து விடுவார்கள்.
12. அதன் விளைவாக, மாபெரும் நரக நெருப்பால் அவன் துன்புறுவான்.
13. அங்கே அவன் ஒருபோதும் சாகவும் மாட்டான், அன்றி உயிருடன் வாழவும் மாட்டான்.
14. தன் ஆத்மாவை மீட்டுக் கொண்டவன் மெய்யாகவே வெற்றி பெற்றவன்தான்.
15. தன்னுடைய இரட்சகரின் பெயரை நினைப்பது, மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப் பதன் மூலம்.
16. உண்மையில், இந்த முதல் வாழ்வில் நீங்கள் மூழ்கி இருக்கின்றீர்கள்.
17. மறுவுலகமோ மிகவும் மேலானதாகவும் நிலைத்திருப் பதாகவும் இருந்த போதிலும்.
18. முந்திய போதனைகளிலும் இது பதியப்பட்டுள்ளது.
19. ஆப்ரஹாம் மற்றும் மோஸஸின் போதனைகளில்.

****

## சூரா 88: மூழ்கடித்தல் (அல்–காஷியா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மூழ்கடித்தலைப் பற்றி நீர் அறிந்திருக்கின்றீரா ?
2. முகங்கள் அந்நாளில் இழிவுற்றிருக்கும்.
3. கடுமையான வேலை செய்து கொண்டும் களைப்புற்ற வாறும்.
4. கொழுந்து விட்டெரிகின்ற ஒரு நரக நெருப்பில் துன் புற்றுக் கொண்டிருந்தவாறும்.
5. தகிக்கின்றதோர் ஊற்றிலிருந்து அருந்திக் கொண்டி ருந்தவாறும்.
6. பயனற்ற வகைகளைத் தவிர, அவர்களுக்கு உணவு எதுவும் இருக்காது.
7. அது ஒருபோதும் ஊட்டமளிக்காது, அன்றி பசியை யும் தணிக்காது.
8. மற்ற முகங்கள் அந்நாளில் உல்லாசம் நிறைந் திருக்கும்.
9. தங்களுடைய காரியங்களால் திருப்தியடைந்தவை யாக.
10. மேன்மையானதொரு சுவனத்தில்.

11. அபத்தமான எதுவும் அதனில் செவியுறப்படாது.

12. அதனுள் ஓர் ஊற்று பொங்குகின்றது.

13. அதனுள் ஆடம்பரமான ஆசனங்கள் இருக்கின்றன.

14. மேலும் பானங்கள் கிடைக்கும்படிச் செய்யப்படும்.

15. மேலும் கூஜாக்கள் வரிசைகளில்.

16. மேலும் எங்கெங்கிலும் கம்பளங்கள்.

17. ஒட்டகத்தையும் அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றியும் அவர்கள் ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?

18. மேலும் ஆகாயத்தையும் எவ்வாறு அது உயர்த்தப்பட்டுள்ளது எனவும்.

19. மேலும் மலைகளையும் அவை எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன எனவும்.

20. மேலும் பூமியையும் அது எவ்வாறு கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது எனவும்.

21. நீர் நினைவூட்ட வேண்டும், ஏனெனில் உமது இறைப்பணி இந்த நினைவூட்டலைச் சேர்ப்பிப்பதே.

22. அவர்கள் மீது உமக்குச் சக்தி எதுவும் கிடையாது.

23. திரும்பிச் சென்று நம்பமறுத்து விடுபவர்களைப் பொறுத்த வரை.

24. **கடவுள்** அவர்களை மாபெரும் தண்டனைக்கு உட்படுத்துவார்.

25. அவர்களுடைய இறுதி விதி நம் வசமே உள்ளது.

26. பின்னர் நாம் அவர்களைக் கணக்குக் கொடுப்பதற்காக அழைப்போம்.

****

## சூரா 89: விடியல் (அல்–ஃபஜ்ர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. விடியலின் மீது.

2. மேலும் பத்து இரவுகள்* மீது.

3. இரட்டைப்படை மற்றும் ஒற்றைப்படையின் மீது.*

4. இரவின் மீது அது கடந்து செல்கின்ற போது.

5. அறிவுத்திறன் உடைய ஒருவனுக்கு, ஆழ்ந்ததொரு பிரமாணம்.

6. ஆதுகளை உம்முடைய இரட்சகர் என்ன செய்தார் என்பதை நீர் கவனித்தீரா?

7. இரம்; உயர்ந்த கட்டடங்களையுடைய நகரம்.

8. அதனைப் போன்ற எந்த ஒன்றும் எங்கேயும் இருந்ததில்லை.

9. அத்துடன் தங்களுடைய பள்ளத்தாக்குகளில் பாறைகளைக் குடைந்துகொண்ட, தமூதுகள்.

10. மேலும் பலம் பொருந்திய ஃபேரோ.

11. அவர்கள் அனைவரும் பூமியின் மீது வரம்பு மீறினார்கள்.

12. தீமைகளை அவர்கள் எங்கெங்கிலும் பரப்பினார்கள்.

13. அதன் விளைவாக, சவுக்கடியின் ஒரு தண்டனையை உம்முடைய இரட்சகர் அவர்கள் மீது ஊற்றினார்.

14. உம்முடைய இரட்சகர் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கின்றார்.

15. தன்னுடைய இரட்சகரால் ஆசிகள் மற்றும் உல்லாசத்தைக் கொண்டு மானிடன் சோதிக்கப்படுகின்ற பொழுது, அவன் கூறுகின்றான், "என் இரட்சகர் என்பால் தாராளமானவராக இருக்கின்றார்."

16. ஆனால் வாழ்வாதாரங்களைக் குறைத்தலின் மூலம் அவனை அவர் சோதித்தால், அவன் கூறுகின்றான், "என் இரட்சகர் என்னை இழிவுபடுத்துகின்றார்!"

17. தவறு! அனாதையை மதிக்காததன் மூலம் நீ தான் அதனை உன் மீதே வரவழைத்துக் கொண்டாய்.

18. மேலும் ஏழைகளின் பால் தர்மத்தை ஆதரிக்காததாலும்.

19. மேலும் நாதியற்ற அனாதைகளின் சொத்துகளை விழுங்கியதாலும்.

20. மேலும் பணத்தை மிகவும் அதிகமாக நேசித்ததாலும்.

21. உண்மையில், பூமியானது பொடிப்பொடியாக நொறுக்கப்படுகின்ற, முற்றிலும் பொடிப்பொடியாக நொறுக்கப்படுகின்ற பொழுது.

**89:2 நம்பிக்கையாளர்கள் பலர் பள்ளிவாசல்களில் அடைக்கலமாகிக் கொள்கின்ற, ரமளானின் கடைசிப் பத்து இரவுகள் (2:187).*

**89:3 இரட்டைப்படை எண்கள் மற்றும் ஒற்றைப்படை எண்களின் பங்கென்ன என்பதற்குப் பின் இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.*

22. மேலும் அணி அணியாக வானவர்களுடன், உம்முடைய இரட்சகர் வருகின்றார்.

23. அந்நாளில், எரிகிடங்கு முன்னால் கொண்டு வரப்படும். அந்நாளில், மானிடன் நினைவு கூர்வான்– ஆனால், என்ன ஒரு நினைவு கூர்தல் – அது மிகவும் தாமதமானதாக இருக்கும்.

24. அவன் கூறுவான், "ஐயோ, *(நிரந்தரமான)* என்னுடைய வாழ்வுக்காக நான் தயாராக இருந்திருக்க வேண்டுமே என்று நான் விரும்புகின்றேன்."

25. அந்நாளில், அவர் தருகின்ற தண்டனையை விட மிகவும் மோசமான எந்தத் தண்டனையும் இருக்க இயலாது.

26. அவர் அடைப்பதைப் போல சக்தி மிக்கதாக எந்த அடைப்பும் இருக்காது.

27. திருப்தியடைந்த ஆத்மாவே, உன்னைப் பொறுத்தவரை.

28. திருப்தியுற்றதாகவும் திருப்தியளிப்பதாகவும், உன்னுடைய இரட்சகரிடம் திரும்பி விடு.

29. என்னுடைய ஊழியர்களுக்குள் நல்வரவாகுக.

30. என்னுடைய சுவனத்திற்குள் நல்வரவாகுக.

****

## சூரா 90: நகரம்
## (அல்–பலத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. இந்த நகரத்தின் மீது நான் பவித்திரமான ஆணையிடுகின்றேன்.

2. நீர் வசிக்கின்ற அந்நகரம்.

3. பெற்றெடுப்பவர்கள் மற்றும் பெறப்பட்டவர்கள்.

4. *(தன்னையே மீட்டுக் கொள்வதற்கு)* மிகவும் கடினமாக உழைப்பதற்காக மானிடனை நாம் படைத்தோம்.*

5. கணக்குக் கொடுக்க அவனை எவரும் அழைக்க மாட்டார் என்று அவன் எண்ணிக் கொண்டானா?

6. அவன் தற்பெருமையடித்துக் கொள்கின்றான், "மிகவும் ஏராளமான பணத்தை நான் செலவு செய்து விட்டேன்!"

7. எவரும் அவனைப் பார்க்கவில்லை என்று அவன் எண்ணிக் கொண்டானா?

8. இரு கண்களை நாம் அவனுக்குத் தரவில்லையா?

9. ஒரு நாவும் இரு உதடுகளும்?

10. இரண்டு பாதைகளை நாம் அவனுக்குக் காட்டவில்லையா?

11. கடினமான பாதையை அவன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

12. எது கடினமான பாதை?

13. அடிமைகளை விடுவித்தல்.

14. கஷ்ட காலத்தின் போதும், உணவளித்தல்.

15. உறவினர்களான அனாதைகளுக்கு.

16. அல்லது தேவையுடையவர்களான ஏழைகளுக்கு.

17. அத்துடன் நம்பிக்கை கொண்டவர்களில் ஒருவனாக, ஒருவர் மற்றவரிடம் உறுதிப்பாட்டுடன் இருக்குமாறு உபதேசித்துக் கொண்டும், ஒருவர் மற்றவரிடம் கனிவுடன் இருக்குமாறு உபதேசித்துக் கொண்டும் இருத்தல்.

18. இவர்கள் மகிழ்ச்சிக்குத் தகுதியடைந்து விட்ட னர்.

19. நம்முடைய வெளிப்பாடுகளின் மீது நம்பிக்கை கொள்ள மறுத்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கடுந்துன்பத்திற்கு உள்ளாகி விட்டார்கள்.

20. நரகநெருப்பில் அவர்கள் அடைக்கப்படுவார்கள்.

****

## சூரா 91: சூரியன்
## (அல்–ஷம்ஸ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. சூரியன் மற்றும் அதன் பிரகாசத்தின் மீது.

2. அதனைத் தொடர்கின்ற சந்திரன்.

3. வெளிப்படுத்துகின்ற பகல்.

4. மூடிக் கொள்கின்ற இரவு.

5. ஆகாயமும் அதனைக் கட்டமைத்த அவரும்.

6. பூமியும் அதனைப் போஷிக்கின்ற அவரும்.

7. ஆன்மாவும் அதனைப் படைத்த அவரும்.

8. பின்னர் அதற்குக் கெட்டது எது, மேலும் நல்லது எது என்றும் காட்டியவர்.

**90:4 நம்முடைய படைப்பிற்குப் பின்னாலுள்ள நோக்கத்திற்கு அறிமுகவுரையையும் பின் இணைப்பு 7ஐயும் பார்க்கவும்*

9. அதனை மீட்டுக் கொண்டவன் வெற்றியடைந்தவனாக இருக்கின்றான்.

10. அதனை அலட்சியப்படுத்தியவன் தோல்வியடைந்தவனாக இருக்கின்றான்.

11. தமூதுகளின் நம்பமறுத்தல் அவர்கள் வரம்புமீறக் காரணமானது.

12. தங்களில் மிகவும் மோசமானவனை அவர்கள் பின்பற்றினர்.

13. **கடவுள்**–ன் தூதர் அவர்களிடம் கூறினார், "இது **கடவுள்**–ன் ஒட்டகம் ஆகும்; அதனை நீரருந்த விட்டு விடுங்கள்."

14. அவர்கள் அவரை நம்பமறுத்தனர் மேலும் அதனை வெட்டி விட்டனர். அவர்களுடைய இரட்சகர் பின்னர் அவர்களுடைய பாவத்திற்காக அவர்களைப் பழி வாங்கி அவர்களை அழித்தொழித்தார்.

15. இருப்பினும், அவர்களுக்குப் பின்னர் வந்தவர்களும் கவனம் செலுத்தாமலேயே இருக்கின்றனர்.

****

## சூரா 92: இரவு (அல்–லைல்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. இரவின் மீது அது மூடிக் கொள்ளும் போது.

2. பகலின் மீது அது வெளிப்படுத்திக் காட்டும் போது.

3. மேலும் ஆணினம் மற்றும் பெண்ணினத்தைப் படைத்தவரான அவர்.

4. உங்களுடைய காரியங்கள் பல்வேறு விதங்களாக இருக்கின்றன.

5. எவனொருவன் தர்மம் கொடுத்து நன்னெறியைப் பராமரிக்கின்றானோ.

6. மேலும் வேதத்தை ஆதரிக்கின்றானோ.

7. மகிழ்ச்சியின் பால் அவனை நாம் செலுத்துவோம்.

8. ஆனால் அவன் செல்வந்தனாக இருந்த போதிலும், எவன் கஞ்சத்தனமாக இருக்கின்றானோ.

9. மேலும் வேதத்தின் மீது நம்பிக்கை கொள்ள மறுக்கின்றானோ.

10. துன்பத்தின் பால் நாம் அவனைச் செலுத்துவோம்.

11. அவன் வீழும் போது அவனுடைய பணத்தால் அவனுக்கு உதவி செய்ய இயலாது.

12. வழிகாட்டலை நாமே வழங்குகின்றோம்.

13. மறுவுலகையும், அவ்வண்ணமே இந்த வாழ்வையும் நாமே கட்டுப்படுத்துகின்றோம்.

14. கொழுந்து விட்டெரிகின்ற நரக நெருப்பைப் பற்றி நான் உங்களை எச்சரித்து விட்டேன்.

15. தீயவனைத் தவிர வேறெவரும் அதில் கருக மாட்டார்கள்.

16. நம்பமறுத்து அத்துடன் திரும்பிச் சென்று விடுகின்றவன்.

17. நன்னெறியாளர் அதனைத் தவிர்த்துக் கொள்பவராக இருப்பார்.

18. தன்னுடைய செல்வத்திலிருந்து தர்மம் கொடுப்பவர்.

19. பிரதிபலனாக எந்த ஒன்றையும் நாடாதவர்.

20. மிகவும் உயர்ந்தவரான, தன்னுடைய இரட்சகரை மட்டும் நாடுபவர்.

21. நிச்சயமாக அவர் மீட்சியை அடைந்திடுவார்.

****

## சூரா 93: முற்பகல் (அல்–துஹா)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. முற்பகலின் மீது.

2. இரவின் மீது அது கவிழும் போது.

3. உம்முடைய இரட்சகர் ஒருபோதும் உம்மைக் கைவிட்டு விடவில்லை, அன்றி அவர் மறந்து விடவுமில்லை.

4. முந்திய *(வாழ்வான)* இதனை விடவும் மறுவுலகமானது உமக்கு மிகவும் மேலானதாக உள்ளது.

5. மேலும் உம்முடைய இரட்சகர் போதுமான அளவு உமக்குத் தருவார்; நீர் திருப்தியடைந்தவராக இருப்பீர்.

6. அனாதையானவராக உம்மை அவர் கண்டு மேலும் உமக்கொரு வீட்டை அவர் தரவில்லையா?

7. வழி தவறியவராக உம்மை அவர் கண்டார், உம்மை வழி நடத்தினார்.

8. ஏழையாக உம்மை அவர் கண்டார், உம்மைச் செல்வந்தராக்கினார்.

9. ஆதலால், அனாதையை நீர் கைவிட்டு விட வேண்டாம்.

10. அன்றி பிச்சையெடுப்பவரை நீர் கடுகடுக்கவும் வேண்டாம்.

11. உம்முடைய இரட்சகர் உம்மீது அருளிய ஆசீர்வாதங்களை நீர் பிரகடனம் செய்யவேண்டும்.

****

## சூரா 94: சுபாவத்தைக் குளிர்வித்தல் (அல்–ஷர்ஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. உம்முடைய சுபாவத்தை நாம் குளிர்விக்கவில்லையா ?

2. மேலும் உம்முடைய *(பாவங்களுடைய)* சுமையின் பாரத்தை நாம் இறக்கி வைத்தோம்.

3. உம்முடைய முதுகில் பாரமாக இருந்த அந்த ஒன்று.

4. கண்ணியமானதொரு அந்தஸ்திற்கு உம்மை நாம் உயர்த்தினோம்.

5. சிரமத்துடன் இலாபம் உள்ளது.

6. நிச்சயமாக, சிரமத்துடன் இலாபம் உள்ளது.

7. இயலும் பொழுதெல்லாம் நீர் பாடுபடவேண்டும்.

8. உம்முடைய இரட்சகரை மட்டும் தேடியவராக.

****

## சூரா 95: அத்தி (அல்–தீன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அத்தி மற்றும் ஒலிவத்தின் மீது.

2. சினாய் மலை.

3. மேலும் கண்ணியப்படுத்தப்பட்ட இந்த *(மக்கா)* நகரம்*

4. மிகச் சிறந்த வடிவில் மனிதனை நாம் படைத்தோம்.

5. பின்னர் அவனைக் கீழினும் கீழானவனாக மாற்றினோம்.

6. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்துபவர்களைத் தவிர; நன்கு தகுமானதொரு வெகுமதியை அவர்கள் பெறுகின்றனர்.

7. இன்னும் ஏன் நீங்கள் விசுவாசத்தை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கின்றீர்கள் ?

8. ஞானமுடையவர்கள் அனைவரிலும், மிகுந்த ஞானமுடையவர் **கடவுள்** அல்லவா ?

****

## சூரா 96: கருமுளை (அல்–அலக்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. படிப்பீராக, படைத்தவரான, உம்முடைய இரட்சகரின் பெயரால்.*

2. ஒரு கருமுளையிலிருந்து மனிதனை அவர் படைத்தார்.

3. படிப்பீராக, மேலும் உம்முடைய இரட்சகர், மிகவும் உயர்வானவர்.

4. பேனாவெனும் சாதனத்தின் மூலம் கற்றுக் கொடுக்கின்றார்.

5. அவன் ஒருபோதும் அறிந்திராதவற்றை மனிதனுக்கு அவர் கற்றுக் கொடுக்கின்றார்.

6. உண்மையில், மானிடனானவன் வரம்புமீறுகின்றான்.

7. அவன் செல்வந்தன் ஆகும் பொழுது.

8. இறுதி விதியானது உம்முடைய இரட்சகர் வசமே உள்ளது.

9. தடை செய்கின்ற ஒருவனை நீர் பார்த்தீரா.

10. தொழுவதை விட்டும் மற்றவர்களை ?

11. வழிகாட்டலைப் பின்பற்றுவது அவனுக்கு மிகவும் நல்லதல்லவா ?

**95:1–3 அத்தி, ஒலிவம், சினாய் மற்றும் மக்கா ஆகியவை முறையே ஆதம், ஜீஸஸ், மோஸஸ், ஆப்ரஹாம் மற்றும் முஹம்மத் ஆகியோரைக் குறிப்பிடுகின்றதெனக் கொள்ளலாம். இவ்விதமாக, முக்கியமான அனைத்து மதங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகின்றது.*

**96:1–19 சூரா 96 முதல் 114 வரை 19 சூராக்கள் உள்ளன. முதல் வெளிப்பாடான இதில் (96:1–5) 19 அரபி வார்த்தைகள், 76 எழுத்துகள் (19x4) உள்ளன. இந்த சூரா 19 வசனங்களையும் 304 அரபி எழுத்துகளையும் தன்னில் கொண்டுள்ளது (பின் இணைப்பு 1 &23).*

12. அல்லது நன்னெறியை ஆதரிப்பது ?

13. அவன் நம்பமறுத்து மேலும் திரும்பிச் சென்று விட்டால்.

14. **கடவுள்** பார்க்கின்றார் என்பதை அவன் உணர்ந்து கொள்ளவில்லையா ?

15. உண்மையில், அவன் விலகிக் கொள்ளாவிட்டால், முன்னங்குடுமியால் அவனைப் பிடித்துக் கொள் வோம்.

16. நம்பமறுக்கின்ற மேலும் பாவகரமானதொரு முன்னங்குடுமி.

17. தன்னுடைய உதவியாளர்களைப் பின்னர் அவன் அழைத்துக் கொள்ளட்டும்.

18. நரகத்தின் காவலர்களை நாம் அழைப்போம்.

19. அவனுக்கு நீர் கீழ்ப்படிய வேண்டாம்; நீர் சிரம் பணிந்து வீழ்ந்து மேலும் நெருங்கி வர வேண்டும்.

****

## சூரா 97: விதி (அல்–கத்ர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. விதியின் இரவில்* இதனை நாம் இறக்கினோம்.

2. விதியின் இரவானது எத்தனை பிரமிப்பூட்டுவது!

3. விதியின் இரவானது ஆயிரம் மாதங்களை விடவும் மேலானது.

4. வானவர்களும் பரிசுத்த ஆவியும், தங்கள் இரட்சக ரின் அனுமதியுடன், ஒவ்வொரு கட்டளைகளையும் நிறைவேற்றுவதற்காக அந்நேரத்தில் இறங்கி வரு கின்றனர்.

5. வைகறையின் வருகை வரை அது சாந்திமயமான தாக இருக்கின்றது.

****

## சூரா 98: சான்று (அல்– பய்யினஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வேதத்தையுடைய மக்களில் நம்பமறுத்தவர்களும், அவ்வண்ணமே போலித் தெய்வ வழிபாடு செய்பவர் களும், சான்றானது அவர்களுக்குத் தரப்பட்டிருந்த போதிலும், தங்களுடைய போக்குகளையே வலியுறுத்து கின்றனர்.*

2. **கடவுள்**–யிடமிருந்து ஒரு தூதர், புனிதமான போதனை களை அவர்களுக்கு ஓதிக்காட்டுகின்றார்.*

3. அவற்றில் மதிப்புமிக்க படிப்பினைகள் உள்ளன.

4. நிதர்சனத்தில், வேதத்தைப் பெற்றவர்கள், சான்றானது அவர்களுக்குத் தரப்படுகின்ற வரையில் தர்க்கித்துக் கொள்ளவில்லை.

5. அவர்களிடம் கூறப்பட்டதெல்லாம், மார்க்கத்தைப் பரிபூரணமாக அவருக்கு மட்டுமே அர்ப்பணித்தவாறு, **கடவுள்**–ஐ வழிபடவேண்டும், *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்க வேண்டும், மேலும் *(ஸகாத்)* கடமையான தர்மத்தைக் கொடுக்க வேண் டும் என்பதாகவே இருந்தது. பூரணமான மார்க்கம் இவ்விதமானதேயாகும்.

6. வேதத்தையுடைய மக்களில் நம்பமறுத்தவர்களும், போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களும், எரி கிடங்கின் நெருப்பிற்கு என்றென்றும் உள்ளாகி விட் டனர். அவர்கள்தான் மோசமான படைப்பினங்களாக இருக்கின்றனர்.

7. நம்பிக்கை கொண்டு நன்னெறியான வாழ்வு நடத்தி யவர்கள்தான் மிகச் சிறந்த படைப்பினங்களாக இருக் கின்றனர்.

8. அவர்களுடைய இரட்சகரிடம் அவர்களுடைய வெகு மதியாவது ஆறுகள் பாய்கின்ற ஏதேன் தோட்டங்கள், அங்கே அவர்கள் என்றென்றும் வசிப்பார்கள். **கடவுள்** அவர்களிடம் திருப்தியடைந்தார், அவர்களும் அவரி டம் திருப்தியடைந்தனர். தங்களுடைய இரட்சகரிடம் பக்தி கொள்வோருக்குரிய வெகுமதி இத்தகையதே யாகும்.

**97:1 ஹி.மு.13 (ஹிஜ்ரத்திற்கு முன்னர்), ரமளானின் 27வது இரவு அன்று இக்குர்ஆன் முஹம்மதின் ஆத்மாவில் வைக்கப் பட்டது. மேலும் பார்க்க 17:1, 44:3, 53:1–18, மற்றும் பின் இணைப்பு 28.*

**98:1–2 இச்சான்றாவது குர்ஆனின் கணிதக்குறியீடேயாகும் (பின் இணைப்பு1) மேலும் இத்தூதர் ரஷாத் கலீஃபாவேயாவார். இந்த சூரா எண்ணுடன் (98), வசன எண்ணைக் கூட்டி (2) ரஷாத் கலீஃபா என்பதன் எண் மதிப்பையும் (1230) கூட்டினால் அவற்றின் கூட்டுத்தொகை 1330 (19x70), 81:19ல் உள்ளதைப்போல் அதே கூட்டுத்தொகை (பின் இணைப்பு 2).*

## சூரா 99: அதிர்வு (அல்–ஜல்ஜலஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. பூமியானது கடுமையாக அதிரச் செய்யப்படும் பொழுது.
2. மேலும் பூமியானது தன் சுமைகளை வெளித்தள்ளி விடும்.
3. மானிடன் வியப்பான்: "என்ன நடக்கின்றது ?"
4. அந்நாளில், அது தன் செய்திகளைக் கூறிவிடும்.
5. உம்முடைய இரட்சகர் அதற்குக் கட்டளையிட்டபடி.
6. அந்நாளில், மனிதர்கள் அவர்களுடைய செயல்கள் காட்டப்படுவதற்காக, ஒவ்வொரு திக்கிலிருந்தும் வெளிவருவார்கள்.
7. எவரேனும் ஓர் அணுவின் எடையளவு நல்லது செய்தாலும் அதனைக் காண்பார்.
8. மேலும் எவரேனும் ஓர் அணுவின் எடையளவு தீமை செய்தாலும் அதனைக் காண்பார்.

****

## சூரா 100: பாய்ந்தோடுபவை (அல்– ஆதியாத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. வேகமாகப் பாய்ந்தோடுபவற்றால்.
2. பற்ற வைக்கப்படுகின்ற தீப்பொறிகள்.
3. அதிகாலையில் *(எதிரியின் மீது)* படையெடுப்பவை.
4. அதன் மூலம் திகில் அறைபவை.
5. அவர்களுடைய பிரதேசத்தின் மையப்பகுதியினுள் ஊடுருவுகின்றவை.
6. மானிட இனத்தவன் தன் இரட்சகரிடம் நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.
7. இந்த நிதர்சனத்திற்கு அவனே சாட்சியாக இருக்கின்றான்.
8. பொருள் சார்ந்த விஷயங்களை அவன் மிதமிஞ்சி நேசிக்கின்றான்.
9. சமாதிகள் திறக்கப்படுகின்ற அந்நாள் வரும் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லையா ?
10. மேலும் ரகசியங்கள் அனைத்தும் வெளிக்கொண்டு வரப்படுகின்றவையாக இருக்கின்றன.
11. அவர்களுடைய இரட்சகர், அவர்களைப் பற்றி முற்றிலும் நன்கறிந்தவராக இருந்திருக்கின்றார் என்பதை, அந்நாளில், அவர்கள் கண்டு கொள்வார்கள்.

****

## சூரா 101: அதிர்ச்சியூட்டுவது. (அல்–காரியஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அதிர்ச்சியூட்டுவது.
2. எத்தகையதோர் அதிர்ச்சியூட்டுவது !
3. அதிர்ச்சியூட்டுவது என்றால் என்ன என்று உமக்கு ஏதேனும் தெரியுமா ?
4. அதுதான் பட்டாம்பூச்சிகளின் கூட்டங்களைப் போல் மனிதர்கள் வெளிவருகின்ற நாளாகும்.
5. மலைகள் பொதி போன்ற கம்பளியைப் போல் ஆகி விடும்.
6. எவனுடைய எடைகள் கனமாக இருக்கின்றதோ அவனைப் பொறுத்தவரை.
7. அவன் மகிழ்ச்சியானதொரு *(நிரந்தர)* வாழ்வு நடத்துவான்.
8. எவனுடைய எடைகள் இலேசாக இருக்கின்றதோ அவனைப் பொறுத்த வரை.
9. அவனுடைய விதி மிகவும் கீழானதாகும்.
10. அது என்னவென்று உமக்குத் தெரியுமா ?
11. கொழுந்து விட்டெரிகின்ற நரகநெருப்பு.

****

## சூரா 102: சேகரித்தல் (அல்–தகாஸுர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. சேகரித்தலில், தொடர்ந்து மூழ்கியவர்களாக நீங்கள் இருக்கின்றீர்கள்.
2. நீங்கள் சமாதிகளுக்குச் செல்லும் வரை.
3. உண்மையில், நீங்கள் கண்டு கொள்வீர்கள்.
4. மிகவும் நிச்சயமாக, நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

5. நீங்கள் மட்டும் உறுதியாகக் கண்டு கொள்ள இயன்றால்.

6. நீங்கள் நரகத்தைக் கற்பனையில் காண்பீர்கள்.

7. பின்னர் நீங்கள் நிஜக் கண்ணால் அதனைக் காண் பீர்கள்.

8. பின்னர் நீங்கள் மகிழ்ந்தனுபவித்த ஆசீர்வாதங் களைப்பற்றி, அந்நாளில், விசாரிக்கப்படுவீர்கள்.

****

## சூரா 103: பிற்பகல் (அல்–அஸ்ர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. பிற்பகலின் மீது.

2. மானிடனானவன் முற்றிலும் நஷ்டமடைந்து விட் டான்.

3. நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வு நடத்தி, சத்தியத்தை ஆதரிக்குமாறு ஒருவரை ஒருவர் தூண்டிக் கொண்டும், உறுதிப்பாட்டுடன் இருக்குமாறு ஒருவரை ஒருவர் தூண்டிக் கொண்டும் இருப்பவர்களைத் தவிர.

****

## சூரா 104: புறங்கூறுபவன் (அல்–ஹுமஜஹ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. புறங் கூறுபவன், அவதூறு கூறுபவன் ஒவ்வொரு வனுக்கும் கேடுதான்.

2. அவன் பணத்தைத் திரட்டி அதனை எண்ணிக் கொண்டு இருக்கின்றான்.

3. அவனுடைய பணம் அவனை அமரனாக்கி விடும் என்பதைப் போல்.

4. ஒருபோதும் இல்லை; நாசமாக்கியினுள் அவன் வீசியெறியப்படுவான்.

5. நாசமாக்கி என்றால் என்ன என்று உமக்குத் தெரியுமா ?

6. **கடவுள்**–ன் கொழுந்து விட்டெரிகின்ற நரக நெருப்பு.

7. அது அவர்களை உள்ளும் புறமும் கருக்குகின்றது.

8. அவர்கள் அங்கே கட்டப்படுவார்கள்.

9. நீண்டிருக்கின்ற தூண்களில்.

## சூரா 105: யானை (அல்–ஃபீல்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. யானைக் கூட்டத்தாரை உம்முடைய இரட்சகர் என்ன செய்தார் என்பதை நீர் கவனித்தீரா ?

2. அவர்களுடைய சூழ்ச்சிகள் திருப்பித்தாக்கும்படி அவர் செய்யவில்லையா ?

3. பறவைகளின் கூட்டங்களை அவர்கள் மீது அவர் அனுப்பினார்.

4. அவர்கள் மீது கடினமான கற்களை அவை பொழிந் தன.

5. மெல்லப்பட்டு விட்ட வைக்கோலைப் போன்று அவர் களை அவர் ஆக்கிவிட்டார்.

****

## சூரா 106: குறைஷ் (குறைஷிக் குலம்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. குறைஷிகளால் இது வாஞ்சை கொள்ளப்பட வேண் டும்.

2. குளிர்காலம் மற்றும் கோடை காலத்தின் வியாபாரக் கூட்டங்களை அவர்கள் வாஞ்சை கொள்ளும் அதே விதமாக.

3. இந்த ஆலயத்தின் இரட்சகரை அவர்கள் வழிபட வேண்டும்.

4. ஏனெனில் அவர்தான் பசிக்குப் பின்னர் அவர்களுக்கு உணவளித்தவர், மேலும் அச்சத்திற்குப் பின்னர் அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கியவர்.

****

## சூரா 107: தர்மம் (அல்–மாஊன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. மெய்யாகவே விசுவாசத்தை ஏற்க மறுப்பவன் யாரென நீர் அறிவீரா ?

2. அனாதைகளைத் தவறாக நடத்துகின்றானே அவன் தான்.

3. மேலும் ஏழைகளுக்கு உணவளிப்பதை ஆதரிக்காதவன்.

4. மேலும் *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்குக் கேடுதான்–

5. அவர்கள் தங்களுடைய தொழுகைகளைப் பற்றி முற்றிலும் கவனமற்றவர்களாக இருப்பவர்கள்.

6. அவர்கள் காட்டிக் கொள்ள மட்டுமே செய்கின்றனர்.

7. மேலும் அவர்கள் தர்மத்தைத் தடுக்கின்றனர்.

****

## சூரா 108: கொடை (அல்–கவ்த்ஸர்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. ஏராளமானதொரு கொடை கொண்டு உம்மை நாம் ஆசீர்வதித்துள்ளோம்.

2. எனவே, நீர் உம்முடைய இரட்சகரை *(ஸலாத்)* தொழவும், மேலும் தர்மம் கொடுக்கவும் வேண்டும்.

3. உம்முடைய எதிரிதான் நஷ்டப்பட்டவனாக இருப்பான்.

****

## சூரா 109: நம்பமறுப்பவர்கள் (அல்–காஃபிரூன்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. கூறுவீராக, "நம்பமறுப்பவர்களே உங்களைத்தான்.

2. "நீங்கள் வழிபடுவற்றை நான் வழிபடுவதில்லை.

3. "அன்றி நான் வழிபடுவதை நீங்கள் வழிபடுவதில்லை.

4. "அன்றி நீங்கள் வழிபடுபவற்றை நான் எக்காலத்திலும் வழிபட மாட்டேன்.

5. "அன்றி நான் வழிபடுவதை நீங்கள் எக்காலத்திலும் வழிபட மாட்டீர்கள்.

6. "உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு, மேலும் என்னுடைய மார்க்கம் எனக்கு."

****

## சூரா 110: வெற்றிக்களிப்பு (அல்–நஸ்ர்)

### [கடைசியில் வெளிப்படுத்தப்பட்ட சூரா]*

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. **கடவுள்**–யிடமிருந்து வெற்றிக்களிப்பும், ஜெயமும் வரும் பொழுது.

2. **கடவுள்**–ன் மார்க்கத்தை மனிதர்கள் கூட்டங் கூட்டமாகத் தழுவுவதை நீர் காண்பீர்.

3. நீர் உம்முடைய இரட்சகரைத் துதிக்கவும் புகழவும் வேண்டும், மேலும் பாவமன்னிப்பிற்காக அவரை இறைஞ்சுவீராக. அவர்தான் மீட்பவர்.

****

## சூரா 111: முட்கள் (அல்–மஸத்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. அபீ லஹபின் காரியங்கள் கண்டனம் செய்யப்படுகின்றன, அத்துடன் அவனும் கண்டனம் செய்யப்படுகின்றான்.*

2. அவனுடைய பணமும் அவன் சாதித்தது எதுவும் அவனுக்கு ஒருபோதும் உதவாது.

3. கொழுந்து விட்டெரிகின்ற நரகத்திற்கு அவன் உள்ளாகி விட்டான்

---

**110:1–3 வெளிப்படுத்தப்பட்ட வரிசையில், கடைசியான இந்த சூரா, 19 அரபி வார்த்தைகளைத் தன்னகத்தே கொண் டுள்ளது (பார்க்க 96:1). மேலும் இதன் முதல் வசனம் 19 எழுத்துகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தத் தலைமுறையின் நம்பிக்கையாளர்கள் வாக்களிக்கப்பட்ட இந்த வெற்றியை அடைந்தே தீருவார்கள் என்பதை இது குறிக்கின்றது. சரணடைதல் (மெய்யான இஸ்லாம்) உலகம் முழுவதிலும் மிகைக்கும் (48:28).*

**111:1 அபீ லஹப் முஹம்மதின் சிற்றப்பாவாகவும் எதிரணியினரின் தலைவனாகவும் இருந்தான். அவனுடைய மனைவி முஹம்மதுக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் எதிராக ஒரு வன்கொடுமைப் பிரசாரத்தை நடத்தினாள். சுவனம் மற்றும் நரகத்தின் அனைத்து வர்ணனைகளையும் போலவே, முட்களாலான கயிறு என்பது ஓர் உவமானமேயாகும்.*

4. அத்துடன் வன்கொடுமைக்கு தலைமை தாங்கிய, அவனுடைய மனைவியும்.

5. அவளுடைய கழுத்தைச் சுற்றிலும் முட்களாலான ஒரு கயிற்றுடன் அவள் *(உயிர்த்தெழுப்பப்படுபவளாக)* இருப்பாள்.

****

## சூரா 112: பரிபூரணத்துவம் (அல்–இக்ஹ்லாஸ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. பிரகடனப்படுத்துவீராக, "அவர்தான் ஒரே ஒரு **கடவுள்** ஆவார்.

2. "பரிபூரணமான **கடவுள்.**

3. "ஒருபோதும் அவர் பெற்றெடுக்கவில்லை. அன்றி அவர் பெறப்பட்டவராகவும் இல்லை.

4. "எவரும் அவருக்கு நிகர் இல்லை."

****

## சூரா 113: விடியல் (அல்–ஃபலக்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. கூறுவீராக, "விடியலின் இரட்சகரிடம் நான் அடைக்கலம் தேடுகின்றேன்.

2. "அவருடைய படைப்புகளுக்கிடையில் உள்ளவற்றின் தீங்குகளில் இருந்து.

3. "இரவின் தீங்குகளிலிருந்து, அது கவிழும் போது.

4. "இடையூறு செய்பவர்களின் தீங்குகளிலிருந்து.

5. "பொறாமைக்காரர்களின் தீங்குகளிலிருந்து, அவர்கள் பொறமைப்படும் போது."

****

## சூரா 114: மனிதர்கள் (அல்–நாஸ்)

கடவுளின் பெயரால்,
மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்

1. கூறுவீராக, "மனிதர்களின் இரட்சகரிடம் நான் அடைக்கலம் தேடுகின்றேன்.

2. "மனிதர்களின் அரசர்.

3. "மனிதர்களின் இறைவன்.

4. "நழுவிச் செல்லும் கிசுகிசுப்போரின் தீங்குகளிலிருந்து.

5. "மனிதர்களின் நெஞ்சங்களுக்குள் கிசுகிசுப்பவர்கள்.

6. "அவர்கள் ஜின்களிலோ, அல்லது மனிதர்களிலோ இருந்த போதிலும்."

---

**2698*** **118123***

**இவ்விதமாக, மிக முக்கியத்துவம் வாய்ந்த "கடவுள்" (அல்லாஹ்) எனும் வார்த்தை குர்ஆன் முழுவதிலும் இடம் பெறும் மொத்த எண்ணிக்கை **2698**, **19x142** ஆகும். வாசகர் இந்த மொத்த எண்ணிக்கையின் பிழையின்மையை இந்தப் புத்தகத்தின் ஏதேனும் ஒரு பக்கத்தின் கீழே "கடவுள்" எனும் வார்த்தையின் எண்ணிக்கையை அவர்கள் இஷ்டப்பட்ட பக்கத்தில் சரிபார்த்துக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். கூடுதலாக, "கடவுள்" என்ற வார்த்தை இடம் பெறும் வசனங்களின் எண்களையெல்லாம் ஒருவர் கூட்டினால் கூட்டுத்தொகை **118123** என வருகிறது, இதுவும் **19**ன் ஒரு பெருக்குத் தொகையேயாகும் (**118123 = 19x6217**). குர்ஆனின் தனித்தன்மை வாய்ந்த கணிதக்கட்டமைப்பின் விபரங்கள் பின் இணைப்புகள் 1, 2, 24, 25, 26 மற்றும் 29ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

# பின்இணைப்புகள்

# பின்இணைப்புகள்

**பின்இணைப்பு** **பக்கம்**


1. மாபெரும் அற்புதங்களில் ஒன்று [74:35] . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 375
2. கடவுளின் உடன்படிக்கைத் தூதர் [3:81] . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 404
3. இக்குர்ஆனை நாம் இலகுவாக ஆக்கினோம் [54:17] . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 416
4. ஏன் இந்தக் குர்ஆன் அரபியில் வெளிப்படுத்தப்பட்டது? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 417
5. சுவனம் மற்றும் நரகம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 418
6. கடவுளின் மகத்துவம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 419
7. நாம் ஏன் படைக்கப்பட்டோம்? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 420
8. பரிந்துரை எனும் புராணம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 422
9. ஆப்ரஹாம்: இஸ்லாமின் ஆதித்தூதர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 423
10. பன்மைப் பதத்தில் கடவுளுடைய பிரயோகம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 424
11. உயிர்த்தெழுப்பப்படுகின்ற அந்நாள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 425
12. முஹம்மத் நபியின் பணி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 426
13. இஸ்லாமின் முதல் தூண்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 427
14. விதி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 428
15. மார்க்கக் கடமைகள்: கடவுளிடமிருந்து ஓர் அன்பளிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . 429
16. உணவுத் தடைகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 435
17. மரணம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 435
18. உங்களுக்குத் தேவையானதெல்லாம் குர்ஆன்தான் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 437
19. ஹதீஸ் & சுன்னா: சாத்தானியக் கண்டுபிடிப்புக்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 437
20. குர்ஆன்: மற்ற எந்தப் புத்தகத்தையும் போன்றதல்ல . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 438
21. சாத்தான்: வீழ்ந்த வானவன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 439
22. ஜீஸஸ் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 439
23. வெளிப்பாட்டின் வரிசைக்கிரமம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 442
24. போலியான இரண்டு வசனங்கள் குர்ஆனில் இருந்து நீக்கப்பட்டு விட்டன . . . . . . . . . . . . 443
25. இவ்வுலகத்தின் முடிவு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 466
26. இஸ்லாமின் மூன்று தூதர்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 468
27. உங்களுடைய கடவுள் யார்? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 472
28. முஹம்மத் தன் சொந்தக் கரத்தால் கடவுளின் வெளிப்பாடுகளை எழுதினார் . . . . . . . . . . 473
29. இடம் பெறாத பஸ்மலஹ் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 474
30. பலதார மணம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 477
31. பரிணாம வளர்ச்சி: தெய்வீகமாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயல்முறை . . . . . . . . . . . . 478
32. தீர்மானிக்கின்ற வயதான 40 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 479
33. கடவுள் ஏன் இப்பொழுது ஒரு தூதரை அனுப்பினார்? . . . . . . . . . . . . . . . . . . . . . . . 480
34. கன்னித்தன்மை / கற்பு நெறி : மெய்விசுவாசிகளின் ஒரு பண்பு . . . . . . . . . . . . . . . . . . 483
35. போதைப் பொருள்கள் & மதுவகைகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 483
36. மகத்தானதொரு தேசத்திற்கு என்ன விலை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 484
37. இஸ்லாமில் குற்றவியல் நீதிமுறை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 485
38. படைப்பாளரின் கையொப்பம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 486

## பின்இணைப்பு 1

# மாபெரும் அற்புதங்களில் ஒன்று [74:35]

*மானிடர்களால் இயற்றப்பட்ட எந்தப் புத்தகத்திலும் ஒருபோதும் காணப்படாததோர் ஒப்பற்ற அற்புத நிகழ்வினால் இக்குர்ஆன் தனித்தன்மை உடையதாக உள்ளது. இக்குர்ஆனின் ஒவ்வொரு அம்சமும் கணித ரீதியில் தொகுக்கப்பட்டுள்ளது– இதன் சூராக்கள், வசனங்கள், வார்த்தைகள், குறிப்பிட்ட எழுத்துகளின் எண்ணிக்கை, ஒரே வேர்ச்சொல்லில் இருந்து பெறப்படுகின்ற வார்த்தைகளின் எண்ணிக்கை, தெய்வீகப் பெயர்களின் எண்ணிக்கை மற்றும் வகைகள், குறிப்பிட்ட வார்த்தைகளின் தனித்துவமான எழுத்துக் கூட்டமைப்பு, குறிப்பிட்ட வார்த்தைகளுக்குள் குறிப்பிட்ட எழுத்துகளின் இடம் பெறாமை அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், மற்றும் அதன் உள்ளடக்கத்திற்கும் அப்பால் குர்ஆனின் மற்ற பல அம்சங்கள். இக்குர்ஆனின் கணித ரீதியிலான ஒழுங்கமைப்பில் இரண்டு முக்கிய பரிமாணங்கள் உள்ளன: (1) கணிதரீதியிலான இலக்கியத் தொகுப்பு, மற்றும் (2) சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்ணிக்கைகளை உள்ளடக்கிய கணிதக் கட்டமைப்பு. அனைத்தையும் உள்ளடக்கியதான இக்கணிதக் குறியீட்டின் காரணத்தினால், குர்ஆனுடைய மூல வாசகங்கள் அல்லது உருவ ஒழுங்கமைப்பின் சிறிதளவு சிதைவும் உடனடியாக வெளிப்படுத்தப்பட்டு விடுகின்றது.*

### புரிந்து கொள்ள எளிதானது
### போலியாகத் தயாரிக்க சாத்தியமற்றது

சரித்திரத்தில் முதன் முறையாக தெய்வீக இயற்றுதலுக்குரிய சான்றினைத் தன்னுள் கட்டமைத்துக் கொண்டுள்ள ஒரு வேதம் நம்மிடம் உள்ளது– மானிட சக்திக்கு அப்பாற்பட்டதொரு கணித ரீதியிலான தொகுப்பு.

இந்தக் குர்ஆனின் கணித ரீதியிலான அற்புதத்தை இந்தப் புத்தகத்தின் எந்த வாசகரும் எளிதில் சரிபார்த்துக் கொள்ள இயலும். இதன் உரை முழுவதிலும் ''கடவுள்'' *(அல்லாஹ்)* எனும் வார்த்தை தடித்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. ''கடவுள்'' எனும் வார்த்தையின் நிகழ்வுகளுடைய தொடர்கூட்டல் எண்ணிக்கை இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தின் கீழும் இடப்புற ஓரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வலப்புற ஓரத்திலுள்ள எண் ''கடவுள்'' எனும் வார்த்தையைக் கொண்டுள்ள வசனங்களின் எண்களுடைய தொடர்கூட்டல் ஆகும். கடைசிப் பக்கத்தில், பக்கம் 372, ''கடவுள்'' எனும் வார்த்தையின் மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை 2698, அல்லது 19X142 எனக் காட்டப்பட்டுள்ளது. ''கடவுள்'' எனும் வார்த்தையைக் கொண்டுள்ள எல்லா வசனங்களின் வசன எண்களுடைய மொத்தக் கூட்டுத் தொகை 118123 ஆகும், இதுவும் 19–ன் ஒரு பெருக்குத்தொகையே, (118123 = 19X6217).

இக்குர்ஆனுடைய கணித ரீதியிலான ஒழுங்கமைப்பு முழுவதிலும் பொது வகு எண்ணாக உள்ளது பத்தொன்பதுதான்.

இந்தக் குர்ஆன் உலகத்திற்குரிய கடவுளின் தூதுச் செய்திதான் என்பதற்கு மறுக்க இயலாத சான்றாக இந்த அற்புத நிகழ்வே போதுமானதாகும். மானிட இனத்தவர் (கள்) எவரும் " கடவுள்" எனும் வார்த்தையின் 2698 நிகழ்வுகளையும், அவை இடம் பெறுகின்ற வசனங்களின் எண்களையும் தொடர்ந்து தடம் பார்த்துக் கொண்டு இருந்திருக்க இயலாது. குறிப்பாக (1) குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட போது நிலவிய அறியாமை யுகத்தையும், மேலும் (2) சூராக்கள் மற்றும் வசனங்கள், அவை வெளிப்படுத்தப்பட்ட நேரம் மற்றும் இடம் ஆகியவற்றால் அகன்ற அளவில் வேறுபட்டிருந்தன என்ற உண்மையையும் கண்ணோட்டத்தில் கொண்டால் குறிப்பிடத்தக்கவாறு இது சாத்தியமற்றதாகவே உள்ளது. வெளிப்பாட்டின் காலவாரியான வரிசையானது இறுதி வடிவத்தில் இருந்து விரிந்த வேறுபாடுகளைக் கொண்டிருந்தது (பின் இணைப்பு 23). எனினும், இக்குர்ஆனின் கணித ஒழுங்கமைப்பு " கடவுள்" என்ற வார்த்தைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல; அது பெருமளவு விரிந்தது, பெருமளவு பின்னிப்பிணைந்தது, அத்துடன் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் உள்ளது.

# எளிய உண்மைகள்

குர்ஆனாகிய அதனைப்போலவே, குர்ஆனின் கணிதக் குறியீடும் மிக எளிதானவற்றிலிருந்து, மிகவும் சிக்கலானவை வரை விரிந்த எல்லை கொண்டதாக உள்ளது. எளிதான உண்மைகளானவை கருவிகள் எதனையும் பயன்படுத்தாமல் உறுதிப்படுத்திக்கொள்ள இயன்ற விஷயங்களாகும். சிக்கலானவற்றிற்கு ஒரு கணக்கிடும் கருவி அல்லது கணிணியின் உதவி அவசியமாகின்றது. கீழ்க்கண்ட உண்மைகளைச் சரிபார்த்துக் கொள்ளக் கருவிகள் எதுவும் அவசியமில்லை, ஆனால் அவை அனைத்தும் அரபி மூல உரையினை குறிப்பவையாகும் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்:

1. *"பஸ்மலஹ்"* என்று அறியப்படுகின்ற முதல் வசனம் (1:1) கொண்டிருப்பது.................................................. 19 எழுத்துக்கள்.
2. குர்ஆன் 114 சூராக்களைக் கொண்டது, அதாவது.................................................................................. 19 x 6.
3. குர்ஆனிலுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கை 6346 அல்லது ........................................................19 x 334.
[6234 எண் இடப்பட்ட வசனங்கள் மற்றும் 112 எண் இடப்படாத வசனங்கள்
*(பஸ்மலஹ்கள்)* 6234+112=6346] கவனிக்கவும் 6+3+4+6=.................................................................... 19.
4. கவனத்தை ஈர்க்கும் விதமாக சூரா 9ல் *பஸ்மலஹ்* இடம் பெறாத போதிலும், அது 114 முறைகளே இடம் பெறுகின்றது. (சூரா27ல் அது இருமுறை இடம்பெறுகின்றது) & 114=............................................................ 19 x 6.
5. *பஸ்மலஹ்* இடம் பெறாத சூரா 9 முதல் அதிகப்படியான *பஸ்மலஹ்* இடம் பெறுகின்ற சூரா 27 வரை, இடையில் மிகச்சரியாக உள்ளவை....................................... 19 சூராக்கள்.
6. அதனைத் தொடர்வது 9 முதல் 27 வரையுள்ள சூரா எண்களின் கூட்டுத்தொகை (9+10+11+12........ 26+27) 342, அல்லது ........................................................................ 19 x 18.
7. இந்தக் கூட்டுத் தொகை (342) சூரா 27ன் இரண்டு *பஸ்மலஹ்களுக்கு* இடையில் உள்ள வார்த்தைகளின் எண்ணிக்கைக்குச் சமமானதாகவும் உள்ளது, மேலும் 342=............................................................19x18.
8. பிரசித்தி பெற்ற முதல் வெளிப்பாடு (96:1–5) கொண்டிருப்பது.....................................................................19 வார்த்தைகள்.
9. 19 வார்த்தைகளையுடைய இந்த முதல் வெளிப்பாடு 76 எழுத்துக்களை கொண்டது.............................. 19x4.
10. கால வரிசைமுறையில் முதன்மையான சூரா 96 கொண்டிருப்பது..................................................................19 வசனங்கள்.
11. கால வரிசை முறையில் முதலாவதான இந்தசூரா அமைக்கப்பட்டிருப்பது கடைசியிலிருந்து முன்னதாக......................19 சூராக்கள்.
12. சூரா 96, அரபி எழுத்துக்கள் 304 கொண்டது, அத்துடன் 304=..........................................................................19x16.
13. இறுதி வெளிப்பாடு (சூரா 110) கொண்டிருப்பது ..........................................................................................19 வார்த்தைகள்.
14. இறுதி வெளிப்பாட்டின் முதல் வசனம் (110:1) கொண்டிருப்பது ........................................................................ 19 எழுத்துக்கள்.
15. 14 வெவ்வேறு அரபி எழுத்துக்கள், "குர்ஆனின் துவக்க எழுத்துக்களைக்" கொண்ட 14 வெவ்வேறு வகைகளை (2:1 ன் அ.ல.ம. போன்றவை), உருவாக்குகின்றன, அத்துடன் 29 சூராக்களின் துவக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த எண்கள் கூட்டப்பட்டால் 14+14+29=57=................................19x3.
16. குர்ஆனின் துவக்க எழுத்துக்கள் இடம்பெறுகின்ற 29 சூரா எண்களின் கூட்டுத் தொகையாவது 2+3+7+....+50+68=822, மேலும் 822+14 (14 வகைகளிலான துவக்க எழுத்துக்கள்) =836 அல்லது ...................................................................................................................................... 19x44.
17. துவக்க எழுத்துக்கள் கொண்ட முதல் சூராவுக்கும் (சூரா2) துவக்க எழுத்துக்கள் கொண்ட கடைசி சூராவுக்கும் (சூரா68) இடையில் துவக்க எழுத்துக்கள் இல்லாத சூராக்கள் 38 உள்ளன....................19x2.
18. முதல் மற்றும் கடைசியான துவக்க எழுத்துக்கள் கொண்ட சூராக்களுக்கிடையில் "துவக்க எழுத்துக்கள்" கொண்டதும், " துவக்க எழுத்துக்கள்" இல்லாத சூராக்களுமாக மாறி மாறி வருபவை...........................19 வகைகள்.
19. குர்ஆன் 30 வெவ்வேறு எண்களைக் குறிப்பிடுகின்றது: 1,2,3,4,5,6,7, 8,9,10,11,12,19,20,30,40,50,60,70,80,99,100,200,300, 1000,2000,3000,5000,50,000, & 100,000
இந்த எண்களின் கூட்டுத்தொகை 162146=...................................................................................... 19x8534.

*இது எளிய உண்மைகளின் சுருக்கப்பட்டதொரு தொகுப்பேயாகும்.*

# கணிதரீதியிலான இலக்கியத் தொகுப்பு

இந்தக் குர்ஆன் வேறு எந்தப் புத்தகத்திலும் ஒருபோதும் காணப்படாத ஒப்பற்றதோர் அற்புத நிகழ்வினால் தனித்தன்மை உடையதாக உள்ளது. ஒரு வகைதனில் ஒன்று முதல் ஐந்து எழுத்துக்கள் வரையிலான" குர்ஆனியத் துவக்க எழுத்துக்கள்" கொண்ட 14 வெவ்வேறு வகைகள், 29 சூராக்களின் துவக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. பதினான்கு எழுத்துக்கள், அரபி அகர வரிசையில் சரிபாதி, இந்தத் துவக்க எழுத்துக்களில் பங்கு பெறுகின்றன. இந்தக் குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் உள்ளர்த்தம் 14 நூற்றாண்டுகளாக தெய்வீகமான முறையில் பாதுகாக்கப்பட்ட இரகசியமாக இருந்து வந்தது.

10:20 மற்றும் 25:4–6ல் அதன் அற்புதம், அதாவது, தெய்வீக இயற்றுதலுக்குரிய அதன் ஆதாரம், முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு குறிப்பிட்ட தவணை வரை இரகசியமாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டிருந்ததாகக் குர்ஆன் கூறுகின்றது.

**அவர்கள் கூறினர், "அவருடைய இரட்சகரிட மிருந்து ஏன் அவருக்கு ஓர் அற்புதம் இறங்கி வரவில்லை ?" கூறுவீராக, "எதிர்காலத்தை அறிந்தவர் கடவுள் மட்டுமே. எனவே, காத்தி ருங்கள், அத்துடன் நானும் உங்களோடு சேர்ந்து காத்திருப்பேன். " (10:20)**

**********

**நம்பமறுத்துவிட்டவர்கள் கூறினர், “மற்ற மக்களின் உதவியுடன், அவரால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட ஒரு புனைந்துரை இது என்பதை விட அதிகம் எதுவுமில்லை”. மெய்யாகவே, அவர்கள் இறை நிந்தனை ஒன்றை உதிர்த்து விட்டனர்; ஒரு பொய்மை. மற்றவர்கள் கூறினர், "அவர் எழுதிக் கொண்ட, கடந்த காலத்தில் இருந்துள்ள கட்டுக்கதைகள்; அவை இரவிலும் பகலிலும் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டன." கூறுவீராக,"வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ‘இரகசியத்தை’ அறிந்த ஒருவரிடமிருந்து இது இறக்கி அனுப்பப்பட்டது". நிச்சயமாக, அவர் மன்னிக்கின்றவர், மிக்க கருணையாளர். (25:4–6)**

குர்ஆனின் இந்தத் துவக்க எழுத்துக்கள் குர்ஆனுடைய 19–ன் அடிப்படையில் அமைந்த கணித அற்புதத்தின் முக்கிய பகுதியாக அமைகின்றன.

அட்டவணை 1 : குர்ஆனிய துவக்க எழுத்துக்கள் மற்றும் அவற்றின் சூராக்களுடைய பட்டியல்

| எண் | சூரா எண் | சூராவின் தலைப்பு | குர்ஆனிய துவக்க எழுத்துக்கள் |
|---|---|---|---|
| 1. | 2 | பசுங்கன்று | அ.ல.ம. |
| 2. | 3 | இம்ரானியர்கள் | அ.ல.ம. |
| 3. | 7 | ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம் | அ.ல.ம.ஸ. |
| 4. | 10 | ஜோனஹ் | அ.ல.ர. |
| 5. | 11 | ஹூத் | அ.ல.ர. |
| 6. | 12 | ஜோசப் | அ.ல.ர. |
| 7. | 13 | இடியோசை | அ.ல.ம.ர. |
| 8. | 14 | ஆப்ரஹாம் | அ.ல.ர. |
| 9. | 15 | அல்–ஹிஜ்ர் பள்ளத்தாக்கு | அ.ல.ர. |
| 10. | 19 | மேரி | க.ஹ.ய.‘அ.ஸ. |
| 11. | 20 | த.ஹ | த.ஹ. |
| 12. | 26 | கவிஞர்கள் | த.ச.ம. |
| 13. | 27 | எறும்பு | த.ச. |
| 14. | 28 | வரலாறு | த.ச.ம. |
| 15. | 29 | சிலந்திப்பூச்சி | அ.ல.ம. |
| 16. | 30 | ரோமானியர்கள் | அ.ல.ம. |
| 17. | 31 | லுக்மான் | அ.ல.ம. |
| 18. | 32 | சிரம்பணிதல் | அ.ல.ம. |
| 19. | 36 | ய.ச. | ய.ச. |
| 20. | 38 | ஸ. | ஸ. |
| 21. | 40 | மன்னிப்பவர் | ஹ்ஹ.ம. |
| 22. | 41 | விவரிக்கப்பட்டது | ஹ்ஹ.ம. |
| 23. | 42 | கலந்தாலோசனை | ஹ்ஹ.ம.‘அ.ச.க்க. |
| 24. | 43 | ஆபரணங்கள் | ஹ்ஹ.ம. |
| 25. | 44 | புகை | ஹ்ஹ.ம. |
| 26. | 45 | முழந்தாளிடுதல் | ஹ்ஹ.ம. |
| 27. | 46 | மணற்குன்றுகள் | ஹ்ஹ.ம. |
| 28. | 50 | க்க. | க்க. |
| 29. | 68 | பேனா | னுஉன். |

# வரலாற்றுப் பின்னணி

1968ல், வழக்கிலுள்ள குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் கடவுளுடைய இறுதி ஏற்பாட்டின் உண்மையான தூதுச் செய்தியை முன்வைக்கவில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். உதாரணத்திற்கு, மிகவும் பிரசித்தி பெற்ற இரண்டு மொழிபெயர்ப்பாளர்களான, யூசுஃப் அலியும் மார்மட்யூக் பிக்தலும் 39:45ல் உள்ள குர்ஆனின் மகத்தான அளவுகோல் என்று வந்த போது, சீர்கெட்டுப் போய் விட்ட அவர்களுடைய மார்க்கப் பாரம்பர்யங்களை மீறி வர இயலவில்லை.

**கடவுள் மட்டும் குறிப்பிடப்படுகின்ற போது, மறுவுலகத்தின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய இதயங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்கள் குறிப்பிடப்படுகின்ற போது, அவர்கள் களிப்படைகின்றனர். (39:45)**

யூசுஃப் அலீ தன் மொழி பெயர்ப்பில் **"மட்டும்"** எனும் முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையைத் தவிர்த்து விட்டார், மேலும் வசனத்தின் எஞ்சிய பகுதியை " (தெய்வங்கள்)" எனும் வார்த்தையை நுழைத்ததன் மூலம் புரட்டி விட்டார். இவ்விதமாக, அவர் மிகவும் முக்கியமான குர்ஆனிய அளவுகோலை முற்றிலும் தகர்த்தெறிந்து விட்டார். 39:45 ஐ அவர் கீழ்கண்டவாறு மொழிபெயர்த்தார்.

**கடவுளான, அந்த ஒரே ஒருவர், மொழியப்பட்டால், மறுவுலகத்தின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய இதயங்கள் வெறுப்பு மற்றும் திகில் நிறைந்தவையாகி விடுகின்றன; ஆனால் அவரை விடுத்த (தெய்வங்கள்) மொழியப்பட்டால், கவனியுங்கள், அவர்கள் சந்தோஷத்தில் திருப்தியடைந்தவர்களாகி விடுகின்றனர் (39:45).**
**(யூசுஃப் அலீயின் மொழிபெயர்ப்பின் படி)**

" கடவுளான, அந்த ஒரே ஒருவர், மொழியப்பட்டால், " எனும் சொற்றொடரும் " கடவுள் **மட்டும்** மொழியப்பட்டால்," என்று கூறுவதும் ஒன்றல்ல. ஒருவர் "கடவுளான அந்த ஒரே ஒருவர்" என்று மொழிந்து விட்டு, அத்துடன் முஹம்மத் அல்லது ஜீஸஸையும் கூடக் குறிப்பிடலாம், அதனால் எவரும் பாதிக்கப்பட்டுவிட மாட்டார்கள். ஆனால்" கடவுள் **மட்டும்** மொழியப்பட்டால்," நீங்கள் வேறு எவரொருவரையும் குறிப்பிட இயலாது, அதனால் மக்களில் திரளானவர்கள் – முஹம்மதை அல்லது ஜீஸஸை போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் – பாதிக்கப்பட்டு விடுவார்கள். இவ்விதமாக, குர்ஆனுடைய சத்தியத்தை எடுத்து வைப்பதற்கு யூசுஃப் அலீ முன்வரவில்லை, சீர்கெட்டுப் போய் விட்ட அவருடைய நம்பிக்கையை அது வெளிப்படுத்தி விட்ட போதிலும்.

மர்மட்யூக் பிக்தல் **"மட்டும்"** என்பதை சரியாகவே மொழிபெயர்த்தார், ஆனால் தன்னுடைய தனிப்பட்ட நம்பிக்கையை அடைப்புக்குறிக்குள் நுழைத்ததன் மூலம் இந்த அளவுகோலைத் தகர்த்தெறிந்து விட்டார்; 39:45ஐ அவர் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்தார்:

**மேலும் அல்லாஹ் மட்டும் மொழியப்பட்டால், மறுவுலகின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களுடைய இதயங்கள் வெறுப்புக் கொண்டவையாகி விடுகின்றன, மேலும் அவருடன் (அவர்கள் வழிபடுகின்றவர்கள்) மொழியப்பட்டால், கவனியுங்கள்! அவர்கள் மகிழ்வடைகின்றனர் . (39:45).**
**(மர்மட்யூக் பிக்தலுடைய மொழிபெயர்ப்பின் படி)**

கடவுளுடைய வார்த்தையின் சத்தியமானது இவ்விதமாகத் திரித்துக் கூறப்பட்டிருப்பதை நான் கண்ட போது, குறைந்தபட்சம் என் சொந்தப் பிள்ளைகளின் நலனுக்காகவேனும், குர்ஆனை மொழிபெயர்க்க நான் முடிவெடுத்தேன். உத்தியோக ரீதியில் நான் ஒரு ரசாயன விஞ்ஞானியாக இருந்ததனால், என்னுடைய விசாலமான மார்க்கப் பின்னணியையும் பொருட்படுத்தாது – என் தந்தையார் எகிப்தில் புகழ்பெற்ற ஒரு சூஃபி தலைவராக இருந்தார் – ஒரு வசனத்திலிருந்து அடுத்ததற்கு அதனை நான் முழுமையாகப் புரிந்து கொண்டாலேயன்றி நான் நகர மாட்டேன் என்று கடவுளிடம் நான் பிரமாணம் செய்து கொண்டேன்.

என்னால் காண இயன்ற, கிடைக்கக் கூடிய குர்ஆனின் மொழிபெயர்ப்புக்கள் மற்றும் விரிவுரைகள் *(தஃப்ஸீர்கள்)* அத்தனையையும் நான் வாங்கிக் கொண்டேன், ஒரு பெரிய மேஜையின் மீது அவற்றை வைத்துக் கொண்டு, என்னுடைய மொழிபெயர்ப்பைத் துவக்கினேன். முதல் சூராவான, திறவுகோல், ஒரு சில தினங்களில் பூர்த்தியானது. 2வது சூராவின் முதல் வசனம் "அ.ல.ம." இந்த வசனத்திற்குரிய மொழிபெயர்ப்புக்கு நான்கு ஆண்டுகள் எடுத்துக்கொண்டது, அத்துடன் குர்ஆனுடைய மகத்தான கணித அற்புதமெனும் " இரகசியத்தின்" தெய்வீகத் திரை விலக்குதலுடன் ஒத்திருந்தது.

குர்ஆனின் விரிவுரைப் புத்தகங்கள், "குர்ஆனியத் துவக்க எழுத்துகளாகிய அ.ல.மவின், அல்லது வேறு எந்தத் துவக்க எழுத்துக்களின் அர்த்தத்தையோ அல்லது முக்கியத்துவத்தையோ எவர் ஒருவரும் அறிய மாட்டார்", என்று ஒருமித்து

ஒத்துக்கொண்டன. நான் குர்ஆனை கணிணிக்குள் எழுதி, உரைப்பகுதி முழுமையையும் விரிவாக ஆய்ந்து பார்க்கவும், குர்ஆனின் இந்தத் துவக்க எழுத்துக்களுக்கிடையில் ஏதேனும் கணித ரீதியிலான சம்பந்தங்கள் இருக்கின்றனவா என்றும் பார்க்க முடிவெடுத்தேன்.

தொலைபேசி மூலம் ஓர் இராட்சசக் கணிணியுடன் இணைப்புக் கொண்ட நேரப்பங்கீட்டு முனையம் ஒன்றை நான் பயன்படுத்திக் கொண்டேன். என்னுடைய உத்தேசத்தைச் சோதித்துப் பார்ப்பதற்காக, ஒரெழுத்துக் கொண்ட குர்ஆனின் துவக்க எழுத்துக்களை உற்று நோக்க முடிவெடுத்தேன் – சூராக்கள் 42 மற்றும் 50ன் (க்காஃப்) " க்க", சூராக்கள் 7, 19, மற்றும் 38ன் (ஸாத்) "ஸ" மற்றும் சூரா 68ன் (னூன்) " ன." என்னுடைய முதல் புத்தகமான **குர்ஆனின் அற்புதம் : மர்ம எழுத்துக்களின் மெய்ப்பொருள்** –ல் (இஸ்லாமிக் ப்ரொக்ஷன்ஸ், 1973) விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த மர்மத்தை விடுவிப்பதற்கான முந்திய பல முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன.

## குர்ஆனின் துவக்க எழுத்தான ‘‘க்க’’ (க்காஃப்)

கணிணித் தகவல் விபரங்கள் க்க – எனும் துவக்க எழுத்தினைக் கொண்ட சூராக்களின் உரைப்பகுதி மட்டும், 42 மற்றும் 50, ஒரே எண்ணிக்கையிலான ‘க்க’– க்களைக் கொண்டிருப்பதாகக் காட்டியது, 57 மற்றும் 57. நிதானித்து செய்யப்பட்டுள்ள ஒரு கணித ஒழுங்கமைப்பு குர்ஆனுக்குள் இருக்கக் கூடும் என்பதற்கான முதல் தடயம் அதுவாகவே இருந்தது.

சூரா 50 "க்க" என்று தலைப்பிடப்பட்டுள்ளது, " க்க" – வைத் துவக்கத்தில் கொண்டுள்ளது. அத்துடன் முதல் வசனமானது, " க்க, மேலும் மகிமைமிக்க இக்குர்ஆன்," எனப்பொருள் தருகின்றது. " க்க" என்பது ‘‘குர்ஆனை’’க் குறிக்கின்றது என்றும், அத்துடன் "க்க" எனும் துவக்க எழுத்தினைக் கொண்ட சூராக்கள் இரண்டிலும் உள்ள "க்க"– க்களின் மொத்த எண்ணிக்கையானது குர்ஆனின் 114 சூராக்களைச் சுட்டிக்காட்டுகின்றது என்றும் இது குறிப்பாகக் கூறியது, (57+57=114=19x6). "குர்ஆன்" என்பது இக்குர்ஆனில் 57 முறைகள் காணப்படுகின்றது எனும் உண்மையின் மூலம் இந்த எண்ணம் வலுப்படுத்தப்பட்டது.

சூரா "க்க"– வில் குர்ஆனானது "மஜீத்" (மகிமை மிக்கது) என்று வர்ணிக்கப்படுகின்றது, அத்துடன் "மஜீத்’’ எனும் அரபி வார்த்தையானது 57 எனும் எழுத்தெண் மதிப்பினைக் கொண்டது: ம (40) + ஜ் (3) +யீ (10) + த் (4) = 57.

சூரா 42 கொண்டிருப்பவை 53 வசனங்கள், மேலும் 42+53 =95 =19x5

சூரா 50 கொண்டிருப்பவை 45 வசனங்கள், மேலும் 50+45 =95, சூரா 42ன் அதே கூட்டுத் தொகை.

குர்ஆன் முழுவதிலுமுள்ள " வசனம் 19" ஒவ்வொன்றிலும் உள்ள "க்க" எனும் எழுத்தைக் கூட்டுவதன் மூலம், கூட்டுத்தொகை 76க்கு வருகின்றது, 19x4. க்க – தொடர்பான தகவல் தொகுப்புக்களின் ஒரு சுருக்கமான வரைவு இங்கே உள்ளது.

1. "க்க" சூராவில் (எண் 50) காணப்படுகின்ற "க்க" வின் எண்ணிக்கை 57 ஆகும், 19x3.
2. மற்றொரு " க்க" துவக்க எழுத்துக் கொண்ட சூரா (எண்42)ல் "க்க" எனும் எழுத்து மிகச்சரியாக அதே எண்ணிக்கையில் இடம் பெறுகின்றது, 57.
3. "க்க" எனும் துவக்க எழுத்துக் கொண்ட இரண்டு சூராக்களிலும் "க்க" எனும் எழுத்து இடம்பெறுகின்ற மொத்த எண்ணிக்கை 114 ஆகும், இது குர்ஆனிலுள்ள சூராக்களின் எண்ணிக்கைக்குச் சமமானதாகும்.
4. "குர்ஆன்" என்பது இக்குர்ஆனில் 57 முறைகள் குறிப்பிடப்படுகின்றது.
5. இக்குர்ஆனின் வர்ணனையான ‘‘மஜீத்’’ (மகிமை மிக்கது) எனப்படுவது "க்க" எனும் துவக்க எழுத்துக்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு சூராவிலுமுள்ள "க்க" எனும் எழுத்து இடம்பெறுகின்ற எண்ணிக்கையுடன் தொடர்புடையதாக உள்ளது. "மஜீத்" எனும் வார்த்தை 57ஐ எழுத்தெண் மதிப்பாகக் கொண்டுள்ளது.
6. சூரா42 கொண்டிருப்பவை 53 வசனங்கள், எனவே 42+53 =95, அல்லது 19x5.
7. சூரா 50 கொண்டிருப்பவை 45 வசனங்கள், எனவே 50+45ம் கூட 95 ஆகும், 19x5.
8. குர்ஆன் முழுவதிலுமுள்ள "19" என்ற எண்ணிடப்பட்டுள்ள எல்லா வசனங்களிலும் இடம் பெறுகின்ற "க்க" க்களின் எண்ணிக்கை 76, 19x4 ஆகும்.

குர்ஆனுடைய கணிதத் தொகுப்பின் ஒளிக் கீற்றுக்கள் தோன்றத் துவங்கின. உதாரணத்திற்கு, லோத்தின் மீது நம்பிக்கை கொள்ள மறுத்த மக்கள் 50:13ல் குறிப்பிடப்படுகின்றனர் என்றும், மேலும் குர்ஆனில் 13 முறைகள் – 7:80; 11:70, 74, 89; 21:74; 22:43; 26:160; 27:54, 56; 29:28; 38:13; 50:13, மற்றும் 54:33 ல் அவர்கள்இடம் பெறுகின்றனர் என்றும் கவனிக்கப்பட்டது. "இக்ஹ்வான்" என்று அவர்கள் குறிப்பிடப்படுகின்ற, "க்க" எனும் துவக்க எழுத்தைக் கொண்ட சூரா 50 என்ற ஒரே ஒரு விதிவிலக்கினைத் தவிர, ஒரே சீராக அவர்கள் "க்கவ்ம்" என்றே குறிப்பிடப்படுகின்றனர். கண்கூடாக, "க்க" என்னும் எழுத்தினைக் கொண்ட

"க்கவ்ம்" என்ற வழக்கமான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தால், சூரா 50ல் உள்ள " க்க" எனும் எழுத்தின் எண்ணிக்கை 58 ஆகியிருக்கும், அத்துடன் இந்த அற்புத நிகழ்வு முழுமையும் மறைந்து விட்டிருக்கும். கணிதவியலின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பரிபூரணமான பிழையற்ற தன்மையினால், ஒரே ஓர் எழுத்தின் மாற்றமும் கூட இந்த ஒழுங்கமைப்பைக் குலைத்து விடுகின்றது.

மற்றுமொரு பொருத்தமான உதாரணமாவது, 3:96ல் மெக்காவை *"பெக்கா"* எனக் குறிப்பிடுவதாகும்! கீர்த்திமிக்க இந்நகரத்தைக் குறிக்கின்ற வித்தியாசமான இந்த எழுத்துக் கோவை பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய அறிஞர்களைப் புதிரில் ஆழ்த்தி வந்துள்ளது. 48:24ல் இந்தக் குர்ஆனிலேயே முறையான எழுத்துக் கோவையில் மெக்கா குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 3:96ல் "ம" என்பது "ப" எனும் எழுத்தினைக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சூரா 3, ம – துவக்க எழுத்தைக் கொண்ட சூராவாக உள்ளது, எனவே 3:96ல் "மெக்கா" சரியான முறையில் எழுத்துக் கூட்டப்பட்டிருந்தால் " ம" எனும் எழுத்தின் எண்ணிக்கை குர்ஆனின் குறியீட்டிலிருந்து விலகிச் சென்றிருக்கும் என்பதை இது எடுத்துக்காட்டியது.

## னுஉன் (னூன்)

இந்தத் துவக்க எழுத்து தனித்தன்மை வாய்ந்தாகும்; இது ஒரே ஒரு சூராவில் காணப்படுகின்றது, 68, அத்துடன் இந்த எழுத்தின் பெயர் மூல உரையினில், மூன்று எழுத்துக்களாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ளது – *னூன் வாவ் னூன்* – எனவே இரண்டு "ன"க்களாக கணக்கிடப்படுகின்றது. ன – துவக்க எழுத்தைக் கொண்ட இந்த சூராவில் இந்த எழுத்தின் மொத்த எண்ணிக்கை 133, 19X7 ஆகும்.

குர்ஆனின் துவக்க எழுத்துக்களில் கடைசியாக இந்த "ன" உள்ளது என்ற உண்மை (பார்க்க அட்டவணை 1) ஏராளமான விசேஷத் தகவல்களை நம் கவனத்திற்குக் கொண்டு வருகின்றது. உதாரணத்திற்கு, குர்ஆனின் முதல் துவக்க எழுத்திலிருந்து (2:1–ன் அ.ல.ம), கடைசி துவக்க எழுத்தான (68:1 –ல் உள்ள ன) வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கை 5263, அல்லது 19x277 ஆகும்.


"கடவுள்" (அல்லாஹ்) எனும் வார்த்தை முதல் துவக்க எழுத்து மற்றும் கடைசி துவக்க எழுத்து ஆகியவற்றிற்கு இடையில் 2641 (19x139) முறைகள் இடம் பெறுகின்றது. " கடவுள்" எனும் வார்த்தையின் மொத்த நிகழ்வு 2698 என இருப்பதனால், அதனைத் தொடர்ந்து ஒருபுறம் 2:1–ன் "அ.ல.ம." எனும் துவக்க எழுத்துக்கும் மறுபுறம் 68:1 –ன் "ன" எனும் துவக்க எழுத்துக்கும் வெளியில் அதன் நிகழ்வுகளின் எண்ணிக்கை 57, 19x3 ஆகும். துவக்க எழுத்தான "னுஉன்" இரண்டு "ன"–க்களைக் காட்டுமாறு எழுதப்பட வேண்டும் என்பதை 9 முதல் 20 வரையுள்ள அட்டவணைகள் நிரூபிக்கின்றன.

## ஸ (ஸாத்)

இந்தத் துவக்க எழுத்து 7,19, மற்றும் 38 ஆகிய மூன்று சூராக்களின் துவக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது, மேலும் "ஸ" (ஸாத்) எனும் எழுத்து இந்த மூன்று சூராக்களிலும் இடம்பெறுகின்ற மொத்த எண்ணிக்கையானது 152 , 19x8 ஆகும். (அட்டவணை 2). 7:69ல் உள்ள "பஸ்தத்தன்" எனும் வார்த்தை சில அச்சுக்களில் "ஸீன்" –க்குப் பதிலாக , ஒரு "ஸாத்" கொண்டு எழுதப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இது குர்ஆனின் குறியீட்டினை மீறுகின்ற ஒரு தவறான சிதைத்தல் ஆகும். இருப்பதிலேயே மிகப் பழமையான குர்ஆன் பிரதியான தாஷ்கெண்ட் பிரதியை கூர்ந்து நோக்கியதன் மூலம் "பஸ்தத்தன்" எனும் வார்த்தை சரியான விதத்தில் ஒரு "ஸீன்" கொண்டு எழுதப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது (கீழே நிழற்படப் பிரதியை பார்க்கவும்).

*அட்டவணை 2 : ஸாத் துவக்க எழுத்துள்ள சூராக்களில் "ஸ" எனும் எழுத்து இடம் பெறுகின்ற முறைகள்.*

| சூரா | "ஸ"வின் எண்ணிக்கை |
|---|---|
| 7 | 97 |
| 19 | 26 |
| 38 | 29 |
| | 152 |
| | (19x8) |



தாஷ்கண்ட் குர்ஆனின் நிழற்படப் பிரதி

# வரலாற்றுக் குறிப்பு

குர்ஆனின் பொது வகு எண்ணானது ‘‘19’’ ஆகும், என்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு ஜனவரி 1974 ஹிஜ்ரீ 1393–ஜுல் – ஹிஜ்ஜாவுடன் ஒத்த சமயத்தில், ஓர் உண்மை நிகழ்வு ஆகியது. குர்ஆனானது ஹி.மு. 13ல் (ஹிஜ்ரத்திற்கு முன்னர்) வெளிப்படுத்தப்பட்டது. இது குர்ஆனின் வெளிப்பாட்டில் இருந்து அதனுடைய அற்புதத்தின் வெளிப்பாடு வரையுள்ள வருடங்களின் எண்ணிக்கையை 1393 +13 =1406 = 19X74 என்று ஆக்குகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, அற்புதத்தின் திரை விலக்கல் ஜனவரி 1974ல் நடைபெற்றது. 19x74 சந்திர வருடங்களுக்கும் 1974 சூரிய வருடங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு கவனத்தை ஈர்க்காமல் இருக்க இயலாது. சூரா 74ல் "19" குறிப்பிடப்பட்டுள்ளது எனும் உண்மையை கண்ணோட்டத்தில் கொண்டால் இது குறிப்பிடத்தக்கவாறு மிகவும் விநோதமானதாகும்.

## ய.ச. (யா ஸீன்)

இந்த இரு எழுத்துக்களும் சூரா 36ன் துவக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. " ய" எனும் எழுத்து இந்த சூராவில் 237 முறைகள் இடம்பெற்றுள்ளன, அதே சமயம் "ச" (ஸீன்) எனும் எழுத்து 48 முறைகள் இடம் பெற்றுள்ளன. இந்த இரண்டு எழுத்துக்களின் கூட்டுத் தொகையானது 285, 19x15 ஆகும்.

"ய" எனும் எழுத்து குர்ஆனில் இரு வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கதாகும்; ஒன்று வெளிப்படையானதாகவும் மற்றொன்று நுட்பமானதாகவும் உள்ளது. அரபி மொழியுடன் முழுவதுமாக நன்கு பரிச்சயமில்லாதவர்களுக்கு இந்த எழுத்தின் நுட்பமான வடிவம் குழப்பத்தை உண்டாக்கக் கூடும். ஒரு நல்ல உதாரணமாவது, 12:36ல் இரு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ள "அரானி أراني " எனும் வார்த்தையாகும். இந்த வார்த்தையில் "ய" எனும் எழுத்து இருமுறை பயன்படுத்தப்படுகின்றது, முதல் “ய” வானது நுட்பமானது, மேலும் இரண்டாவது வெளிப்படையானதாகும். சூரா 36 நுட்பமான வகையைச் சேர்ந்த "ய" ஒன்றே ஒன்றைக் கூடக் கொண்டிருக்கவில்லை. இது குறிப்பிடத்தக்கதோர் அற்புத நிகழ்வாகும். அத்துடன் சூரா 36ஐப்போன்ற ஒரு நீண்ட சூராவில் சாதாரணமாக நிகழக்கூடிய ஒன்றல்ல. *QURAN : VISUAL PRESENTATION OF THE MIRACLE* (இஸ்லாமிக் ப்ரொடக்ஷன்ஸ், 1982) என்ற என்னுடைய புத்தகத்தில் சூரா 36–ல் உள்ள " ய" மற்றும் "ச" ஒவ்வொன்றும் ஒரு நட்சத்திரத்தைக் கொண்டு குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

## ஹ்ஹ.ம. (ஹ்ஹா மீம்)

சூரா 40 முதல் 46 வரை, "ஹ்ஹ ح " மற்றும் " ம م ", எனும் எழுத்துக்களைத் துவக்கத்தில் கொண்டுள்ள சூராக்கள் 7 உள்ளன. இந்த 7 ஹ்ஹ. ம – துவக்க எழுத்துக்களைக் கொண்ட சூராக்களிலும் இவ்விரு எழுத்துக்களும் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கை 2147 அல்லது 19x113 ஆகும். விரிவான தகவல்கள் அட்டவணை 3ல் காட்டப்பட்டுள்ளன.

இயல்பாகவே, ஹ்ஹ. ம. – துவக்க எழுத்துக்களைக் கொண்ட இந்த ஏழு சூராக்களில் ஏதேனும் "ஹ்ஹ"அல்லது "ம" எழுத்துக்களின் ஒரே ஒரு மாற்றமும் பின்னிப்பிணைந்திருக்கின்ற இந்த அற்புத நிகழ்வை நிலை குலையச் செய்திருக்கும்.

## ‘அ.ச.க்க (‘அய்ன் ஸீன் க்காஃப்)

இந்தத் துவக்க எழுத்துக்கள் சூரா 42ன் 2வது வசனத்தில் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த சூராவில் இந்த எழுத்துக்கள் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கையானது 209, அல்லது 19x11 ஆகும். "அ" (அய்ன்) என்னும் எழுத்து 98 முறைகள் இடம் பெறுகின்றன, " ச" (ஸீன்) எனும் எழுத்து 54 முறைகள் இடம் பெறுகின்றன, மற்றும் "க்க" (க்காஃப்) எனும் எழுத்து 57 முறைகள் இடம் பெறுகின்றன.

அட்டவணை 3 : ஹ்ஹ.ம. துவக்க எழுத்துக்களைக் கொண்ட ஏழு சூராக்களில் "ஹ்ஹ" மற்றும் "ம" எனும் எழுத்துக்கள் இடம் பெறுகின்ற எண்ணிக்கை.

| சூரா | இடம்பெறுகின்ற எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| எண் | "ஹ்ஹ" | "ம" | "ஹ்ஹ+ம" |
| 40 | 64 | 380 | 444 |
| 41 | 48 | 276 | 324 |
| 42 | 53 | 300 | 353 |
| 43 | 44 | 324 | 368 |
| 44 | 16 | 150 | 166 |
| 45 | 31 | 200 | 231 |
| 46 | 36 | 225 | 261 |
| | 292 | 1855 | 2147 (19x113) |

## அ.ல.ம. (அலிஃப் லாம் மீம்)

அரபி மொழியில் மிகவும் அடிக்கடிப் பயன்படுத்தப்படுகின்ற எழுத்துக்கள் "அ" " ல" மற்றும் "ம" ஆகிய எழுத்துக்களேயாகும், அதுவும் குர்ஆனின் துவக்க எழுத்துக்களில் நாம் காண்கின்ற அதே வரிசையிலேயே, " அ", அடுத்து "ல", அடுத்து "ம". இந்த எழுத்துக்கள் – 2, 3, 29, 30,31 மற்றும் 32 ஆகிய ஆறு சூராக்களில் துவக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன–

அத்துடன் இந்த மூன்று எழுத்துக்களும் இந்த ஆறு சூராக்கள் ஒவ்வொன்றிலும் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கை யானது 19ன் பெருக்குத் தொகையாகவே உள்ளது. [ முறையே 9899(19x521) , 5662 (19x298), 1672 (19x88), 1254 (19x66), 817 (19x43), மற்றும் 570 (19x30)]. இவ்விதமாக, இந்த ஆறு சூராக்களிலும் இந்த மூன்று எழுத்துக்கள் இடம்பெறுகின்ற மொத்த எண்ணிக்கையானது 19874 (19x1046), ஆகவே இந்த எழுத்துக்களில் ஒரு மாற்றம் செய்யப்பட்டாலும் இந்த அற்புதம் தகர்ந்து விடும் .

*அட்டவணை 4 : அ.ல.ம. துவக்க எழுத்துக்களை கொண்ட சூராக்களில் "அ," "ல," "ம," – ஆகிய எழுத்துக்கள் இடம் பெறுகின்ற எண்ணிக்கைகள்*

| சூரா எண். | இடம் பெறுகின்ற முறைகள் "அ" | "ல" | "ம" | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 4502 | 3202 | 2195 | 9899 (19x521) |
| 3 | 2521 | 1892 | 1249 | 5662 (19x298) |
| 29 | 774 | 554 | 344 | 1672 (19x88) |
| 30 | 544 | 393 | 317 | 1254 (19x66) |
| 31 | 347 | 297 | 173 | 817 (19x43) |
| 32 | 257 | 155 | 158 | 570 (19x30) |
| | 8945 | 6493 | 4436 | 19874(19x1046) |

## அ.ல.ர
## (அலிஃப் லாம் ரா)

இந்தத் துவக்க எழுத்துக்கள் 10, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய சூராக்களில் காணப்படுகின்றன. இந்த சூராக்களில் இந்த எழுத்துக்கள் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கையாவன, முறையே 2489 (19x131), 2489 (19x131), 2375(19x125), 1197 (19x63), மற்றும் 912 (19X48) ஆகும் (அட்டவணை 5).

அட்டவணை 5: அ.ல.ர. துவக்க எழுத்துக்களை கொண்ட சூராக்களில் "அ," "ல," "ர," – ஆகிய எழுத்துக்கள் இடம் பெறுகின்ற எண்ணிக்கைகள்

| சூரா எண். | இடம் பெறுகின்ற முறைகள் "அ" | "ல" | "ர" | மொத்தம் |
|---|---|---|---|---|
| 10 | 1319 | 913 | 257 | 2489 (19X131) |
| 11 | 1370 | 794 | 325 | 2489 (19X131) |
| 12 | 1306 | 812 | 257 | 2375 (19X125) |
| 14 | 585 | 452 | 160 | 1197 (19X63) |
| 15 | 493 | 323 | 96 | 912 (19X48) |
| | 5073 | 3294 | 1095 | 9462 (19x498) |

## அ.ல.ம.ர. (அலிஃப் லாம் மீம் ரா)

இந்தத் துவக்க எழுத்துக்கள் ஒரு சூராவில், முதலில் வைக்கப்பட்டுள்ளன, எண் : 13, மேலும் இந்த நான்கு எழுத்துக்களும் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கை 1482 அல்லது 19X78ஆகும். "அ" எனும் எழுத்து 605 முறைகள் இடம் பெறுகின்றன, "ல" 480 முறைகள் இடம் பெறுகின்றன, "ம" 260 முறைகள் இடம் பெறுகின்றன, மற்றும் "ர" 137முறைகள் இடம் பெறுகின்றன.

## அ.ல.ம.ஸ. (அலிஃப் லாம் மீம் ஸாத்)

ஒரு சூரா மட்டுமே இந்தத் துவக்க எழுத்துக்களைக் கொண்டு முதலில் அமைக்கப்பட்டுள்ளது, சூரா 7, மேலும் இந்த சூராவில் "அ" எனும் எழுத்து 2529 முறைகள் இடம் பெற்றுள்ளன, "ல" 1530 முறைகள் இடம் பெற்றுள்ளன, "ம" 1164 முறைகள் இடம் பெற்றுள்ளன, மற்றும் "ஸ" (ஸாத்) எனும் எழுத்து 97 முறைகள் இடம் பெற்றுள்ளன. இவ்விதமாக, இந்த சூராவில் இந்நான்கு எழுத்துக்கள் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கையாவது, 2529+1530+1164+97=5320=19x280

இங்கு ஒரு முக்கியமான குறிப்புரையாவது, "ஸ" (ஸாத்) எனும் எழுத்தைச் சூழ்ந்து கொண்டுள்ள பின்னிப்பிணைந்த தொடர்பு ஆகும். இத்துவக்க எழுத்து சூரா 19 மற்றும் 38–லும் கூட இடம் பெறுகின்றது. சூரா 7ல் அதன் இதர எழுத்துக்களுடன் பங்குபெற்று 19ஆல் வகுபடக்கூடிய ஒரு கூட்டுத் தொகையைத் தந்து நிறைவு செய்கின்ற அதே சமயம், இந்த எழுத்தின் எண்ணிக்கையானது சூரா 19 மற்றும் 38ல் அதன் இதர எழுத்துக்களுடன் சேர்ந்து அவற்றிற்கும் 19ன் ஒரு பெருக்குத் தொகையைத் தருவதற்கான பங்களிப்பைச் செய்கின்றது (பார்க்க பக்கம் 380).

இன்னும் கூடுதலாக, "ஸ" (ஸாத்) எனும் குர்ஆனின் இந்தத் துவக்க எழுத்து சூரா 19ல் உள்ள குர்ஆனின் துவக்க எழுத்துக்களான க.ஹ.ய.'அ (காஃப் ஹே யே அய்ன்) ஆகியவற்றுடன் செயலாற்றி அதற்கும் 19ன் பெருக்குத் தொகையாகவே உள்ள மற்றொரு கூட்டுத்தொகையைத் தருகின்றது. (பார்க்க பக்கம் 383). பின்னிப் பிணைந்த இத்தொடர்பு – "ஸ" (ஸாத்) எனும் துவக்க எழுத்துக்கு மட்டுமே உரிய தனித்தன்மையாக இல்லாமல் – குர்ஆனுடைய எண்ணியல் குறியீட்டின் ஒன்றோடென்று பின்னிப்பிணைந்துள்ள தன்மைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

# க.ஹ.ய.‘அ.ஸ (காஃப் ஹா யா ‘அய்ன் ஸாத்)

ஐந்து எழுத்துக்களைக் கொண்டுள்ள, இதுவே மிக நீண்ட வகையிலான துவக்க எழுத்துக்களாகும், மேலும் இது, ஒரு சூராவில் இடம் பெற்றுள்ளது, சூரா 19. "க" எனும் எழுத்து சூரா 19ல் 137 முறைகள் இடம் பெறுகின்றன, "ஹ" 175 முறைகள் இடம் பெறுகின்றன, "ய"343 முறைகள் இடம் பெறுகின்றன, "‘அ" 117முறைகள் இடம் பெறுகின்றன, அத்துடன் "ஸ" (ஸாத்) 26 முறைகள் இடம் பெறுகின்றன. இவ்விதமாக, இந்த ஐந்து எழுத்துக்கள் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கையாவது 137+175+343+117+26=798=19x42.

# ஹ., த.ஹ. (தா ஹா), த.ச. (தா ஸீன்), மற்றும் த.ச.ம. (தா ஸீன் மீம்)

ஒன்றின் மேல் மற்றொன்றாக அடுக்கப்பட்டுள்ள குர்ஆனின் இந்தத் துவக்க எழுத்துக்கள், 19ன் பெருக்குத் தொகையிலான ஒரு கூட்டுத்தொகையைக் கொடுப்பதற்காக, பல சிக்கலான பாகங்கள் கொண்ட, ஒன்றுக்கொன்று தொடர்புடைய பிணைப்பு இணைக்கின்றது. "ஹ" எனும் துவக்க எழுத்து சூராக்கள் 19 மற்றும் 20ல் காணப்படுகின்றது. ‘‘த.ஹ’’ எனும் துவக்க எழுத்துக்கள் சூரா 20ன் துவக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ‘‘த.ச.’’ எனும் துவக்க எழுத்துக்கள் சூரா 27ல் காணப்படுகின்றன, அதே சமயம் துவக்க எழுத்துக்களான "த.ச.ம" அதனைச் சூழ்ந்துள்ள சூராக்களான 26 மற்றும் 28ன் துவக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மிக நீண்ட, மிகவும் சிக்கலான, ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் ஒன்றின்மேல் மற்றொன்றாக அடுக்கப் பட்டுள்ள துவக்க எழுத்துக்கள் அசாதாரண சக்தி வாய்ந்த அற்புதங்கள் விவரிக்கப்படுகின்ற சூராக்களில் காணப்படுவது இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். உதாரணத்திற்கு, ஜீஸஸின் கன்னிப் பிறப்பு, க.ஹ.ய.‘அ.ஸ. எனும் மிக நீண்ட வகையிலான துவக்க எழுத்துக்கள் துவக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரா 19ல் கொடுக்கப்பட்டுள்ளது.

"ஹ"., "த. ஹ.," "த.ச.," மற்றும் "த.ச.ம." ஆகிய, ஒன்றுக் கொன்று தொடர்புடைய இத்துவக்க எழுத்துக்கள் மோஸஸ், ஜீஸஸின் அற்புதங்களையும், ஸாலமன் மற்றும் அவருடைய ஜின்களைச் சுற்றிலும் நிகழ்ந்த அசாதாரண நிகழ்வுகளையும் வர்ணிக்கின்ற சூராக்களின் துவக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை 6 : "ஹ., "த. ஹ.," "த. ச.," மற்றும் "த, ச. ம" குர்ஆனின் துவக்க எழுத்துக்கள் அவற்றின் சூராக்களில் இடம் பெறுகின்ற முறைகள்*

| சூரா | இடம் பெறுகின்ற முறைகள் | | | |
|---|---|---|---|---|
| | "ஹ" | "த" | " ச" | " ம" |
| 19 | 175 | – | – | – |
| 20 | 251 | 28 | – | – |
| 26 | – | 33 | 94 | 484 |
| 27 | – | 27 | 94 | – |
| 28 | – | 19 | 102 | 460 |
| | 426 | 107 | 290 | 944 |

426+107+290+944=1767=(19X93)

கடவுள் இவ்விதமாக, சக்தி வாய்ந்த அற்புதங்களுக்கு ஆதரவளிக்க வலிமை மிக்க ஆதாரங்களை வழங்குகின்றார். இந்தத் துவக்க எழுத்துக்கள் இடம் பெறுகின்ற எண்ணிக்கைகள் அட்டவணை 6ல் காட்டப்பட்டுள்ளன.

# "எழுத்தெண் மதிப்பு" என்பதென்ன ?

14 நூற்றாண்டுகளுக்கு முன்னர், குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட போது, இன்று அறியப்பட்டிருக்கின்ற எண்கள் வழக்கில் இல்லை. அரபி, ஹீப்ரு, அராமைக், மற்றும் கிரேக்க எழுத்துக்களை எண்களாக உபயோகப் படுத்திக் கொள்கின்ற உலகளாவிய ஓர் ஒழுங்குமுறை பயன்படுத்தப்பட்டு வந்தது. ஒவ்வோர் எழுத்துக்கும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணானது அதன் ‘‘எழுத்தெண் மதிப்பு’’ ஆகும். அரபி எழுத்துக்களின் எண் மதிப்புக்கள் அட்டவணை 7ல் காட்டப் பட்டுள்ளன.

*அட்டவணை 7 : அரபி எழுத்துக்களின் எழுத்தெண் மதிப்புக்கள்.*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ا 1 |
| ي 10 | ط 9 | ح 8 | ز 7 | و 6 | ه 5 | د 4 | ج 3 | ب 2 |
| ق 100 | ص 90 | ف 80 | ع 70 | س 60 | ن 50 | م 40 | ل 30 | ك 20 |
| غ 1000 | ظ 900 | ض 800 | ذ 700 | خ 600 | ث 500 | ت 400 | ش 300 | ر 200 |

# துவக்க எழுத்துக்களைக் கொண்ட சூராக்களின் கணிதரீதியான மற்ற தனித்தன்மைகள்

அரபி எழுத்துக்களில் பாதி, பதினான்கு அரபி எழுத்துக்கள், 14 வெவ்வேறு வகையான குர்ஆனின் துவக்க எழுத்துக்களை அமைப்பதில் பங்கு பெறுகின்றன. இந்த எழுத்துக்களில் ஒவ்வொன்றினுடைய எழுத்தெண் மதிப்புக்களைக் கூட்டி, அத்துடன் குர்ஆனிய துவக்க எழுத்துக்களைக் கொண்டு முன் அமைக்கப்பட்டுள்ள சூராக்களின் எண்ணிக்கையையும் (29) கூட்டினால், நமக்குக் கிடைக்கும் மொத்தத் தொகையானது 722, அல்லது 19x19x2

கூடுதலாக, 14 துவக்க எழுத்துக்கள் அனைத் தினுடைய மொத்த எழுத்தெண் மதிப்பைக் கூட்டி, அத்துடன், அந்தத் துவக்க எழுத்து இடம் பெறுகின்ற முதல் சூராவின் எண்ணையும் நாம் கூட்டினால் 988, 19x52 எனும் மொத்தக் கூட்டுத்தொகையை நாம் கிடைக்கப்பெறுகின்றோம். அட்டவணை 8 அத்தகவல் தொகுப்புக்களை எடுத்துக் காட்டுகின்றது.

*அட்டவணை 8 : குர்ஆனியத் துவக்க எழுத்துக்களை அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள 14 எழுத்துக்கள்*

| எழுத்து | மதிப்பு | முதல் சூரா |
|---|---|---|
| அ (அலிஃப்) | 1 | 2 |
| ல (லாம்) | 30 | 2 |
| ம (மீம்) | 40 | 2 |
| ஸ (ஸாத்) | 90 | 7 |
| ர (ரே) | 200 | 10 |
| க (காஃப்) | 20 | 19 |
| ஹ (ஹே.) | 5 | 19 |
| ய (யே) | 10 | 19 |
| ‘அ (‘அய்ன்) | 70 | 19 |
| த (தே) | 9 | 20 |
| ச (ஸீன்) | 60 | 26 |
| ஹ்ஹ (ஹே) | 8 | 40 |
| க்க (க்காஃப்) | 100 | 42 |
| னு (னூன்) | 50 | 68 |
| | 693 | 295 |

693 +295=988 = 19x 52.

மேலும் 693 + 29 (சூராக்கள்) = 722 = 19x19x2.

அட்டவணை 8 ல் ஒரு துவக்க எழுத்தாகப் பட்டியலிடப் பட்டுள்ள 14 எழுத்துக்கள் **ஒவ்வொன்றும்** இடம் பெறுகின்ற எண்ணிக்கையுடன் அத்துவக்க எழுத்து இடம் பெறுகின்ற சூராக்களின் எண்களையும் நாம் கூட்டினால், மொத்தக் கூட்டுத் தொகை 2033, 19x107 ஆக வருகின்றது. அட்டவணை 9ஐக் காண்க.

*அட்டவணை 9 : குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் கணித ரீதியில் கட்டமைக்கப்பட்ட பங்கீடு.*

| துவக்க எழுத்து | நிகழ்வுகளின் எண்ணிக்கை | அது இடம் பெறும் சூராக்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| அ(அலிஃப்) | 13 | [+2+3+7+10+11+12+13 +14+15+29+30+31+32] | 222 |
| ல(லாம்) | 13 | [+2+3+7+10+11+12+13 +14+15+29+30+31+32] | 222 |
| ம(மீம்) | 17 | [+2+3+7+13+26+28+29+30+31 +32+40+41+42+43+44+45+46] | 519 |
| ஸ (ஸாத்) | 3 | +7+19+38 | 67 |
| ர (ரே) | 6 | +10+11+12+13+14+15 | 81 |
| க (காஃப்) | 1 | +19 | 20 |
| ஹ (ஹே) | 2 | +19+20 | 41 |
| ய (யே) | 2 | +19+36 | 57 |
| ‘அ (‘அய்ன்) | 2 | +19+42 | 63 |
| த (தே) | 4 | +20+26+27+28 | 105 |
| ச (ஸீன்) | 5 | +26+27+28+36+42 | 164 |
| ஹ்ஹ (ஹே) | 7 | +40+41+42+43+44+45+46 | 308 |
| க்க (க்காஃப்) | 2 | +42+50 | 94 |
| னு (னூன்) | 2 | +68 | 70 |
| | 79 | 1954 | 2033 (19x107) |

அட்டவணை 10 குர்ஆனின் துவக்க எழுத்துக்கள் இடம் பெறுகின்ற மொத்த எண்ணிக்கையையும், அத்துடன் அந்த சூரா முழுவதிலும் உள்ள இந்த எழுத்துக்களின் மொத்த எழுத்தெண் மதிப்பினையும் கூட்டிக் காட்டுகின்றது. துவக்க எழுத்துக்களைக் கொண்ட அனைத்து சூராக்களுக்கு உரிய மொத்தக் கூட்டுத் தொகை 1089479 ஆகும். பத்து இலட்சத்திற்கும் அதிகமான இந்த எண் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகும் (1089479 = 19x57341). சிறிதளவு மாற்றமோ அல்லது சிதைவோ இந்த ஒழுங்கமைப்பினை நிலை குலையச் செய்து விடும்.

**குறிப்பு : குறிப்பிட்ட ஒரு சூராவில் உள்ள குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் மொத்த எழுத்தெண் மதிப்பானது, ஒவ்வொரு துவக்க எழுத்தின் எழுத்தெண் மதிப்புடன் அந்த சூராவில் உள்ள அந்தத் துவக்க எழுத்து இடம் பெறுகின்ற எண்ணிக்கையுடன் பெருக்கப் படும் போது கிடைக்கின்ற எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளது.**

## குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் முக்கியமான விசேஷ அம்சங்கள் (சூராக்கள் , வசனங்கள் , இடம் பெறும் எண்ணிக்கைகள், முதல் சூரா மற்றும் கடைசி சூரா)

குர்ஆனியத்துவக்க எழுத்துக்கள் காணப் படுகின்ற சூராக்கள் மற்றும் வசன எண்களின் கூட்டுத் தொகையுடன், அந்த சூராவில் இடம் பெறுகின்ற துவக்க எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கூட்டி, அத்துடன் அந்தத் துவக்க எழுத்துக்கள் இடம் பெறுகின்ற முதல் சூராவின் எண்ணைக் கூட்டி, அத்துடன் அந்தத் துவக்க எழுத்துக்கள் இடம்பெறுகின்ற கடைசி சூராவின் எண்ணையும் கூட்டினால் விளைவது 44232, அல்லது 19 x 2348 க்குச் சமமானதொரு கூட்டுத் தொகை, என்பது அட்டவணை 11ல் காட்டப்படுகின்றது. இவ்விதமாக, துவக்க எழுத்துக்களைக் கொண்ட சூராக்களில் குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் பகிர்தலானது அவற்றின் எண்ணிக்கைகளும் அவற்றின் அமைப்பிடங்களும் அந்தந்த சூராக்களில் அவை பின்னிப்பிணைந்து 19ன் ஒரு பெருக்குத் தொகையை மொத்தக் கூட்டுத் தொகையாகத் தருகின்ற வண்ணம் பல சிக்கலான கட்டமைப்புகளைக் கொண்டதாக உள்ளது.

துவக்க எழுத்தான "னு" இரண்டு "னு"க்களாகக் கணக்கிடப்பட்டாக வேண்டும் என்பது கவனிக்கத்தக்கது. மூலக் குர்ஆனின் உரைப்பகுதியில் இந்தத் துவக்க எழுத்து இரண்டு "னு" க்களைக் கொண்டு எழுத்துக் கூட்டப்பட்டுள்ளது என்ற உண்மையை இது பிரதிபலிக்கின்றது.

*அட்டவணை 10 : குர்ஆனியத் துவக்க எழுத்துக்கள் அனைத்திற்கும் அவற்றின் சூராக்களில் உள்ள மொத்த எழுத்தெண் மதிப்பு*

| சூரா | துவக்க எழுத்துக்கள் | துவக்க எழுத்துக்களின் இடம் பெறுகின்ற முறைகள் | சூராவில் மொத்த எழுத்தெண் மதிப்பு |
|---|---|---|---|
| 2 | அ.ல.ம. | 9899 | 188362 |
| 3 | அ.ல.ம. | 5662 | 109241 |
| 7 | அ.ல.ம.ஸ. | 5320 | 103719 |
| 10 | அ.ல.ர. | 2489 | 80109 |
| 11 | அ.ல.ர. | 2489 | 90190 |
| 12 | அ.ல.ர. | 2375 | 77066 |
| 13 | அ.ல.ம.ர. | 1482 | 52805 |
| 14 | அ.ல.ர. | 1197 | 46145 |
| 15 | அ.ல.ர. | 912 | 29383 |
| 19 | க.ஹ.ய.'அ.ஸ. | 798 | 17575 |
| 20 | த.ஹ. | 279 | 1507 |
| 26 | த.ச.ம. | 611 | 25297 |
| 27 | த.ச. | 121 | 5883 |
| 28 | த.ச.ம. | 581 | 24691 |
| 29 | அ.ல.ம. | 1672 | 31154 |
| 30 | அ.ல.ம. | 1254 | 25014 |
| 31 | அ.ல.ம. | 817 | 16177 |
| 32 | அ.ல.ம. | 570 | 11227 |
| 36 | ய.ச. | 285 | 5250 |
| 38 | ஸ. | 29 | 2610 |
| 40 | ஹ்ஹ . ம. | 444 | 15712 |
| 41 | ஹ்ஹ. ம. | 324 | 11424 |
| 42 | ஹ்ஹ.ம.அ.ச.க்க. | 562 | 28224 |
| 43 | ஹ்ஹ. ம. | 368 | 13312 |
| 44 | ஹ்ஹ. ம. | 166 | 6128 |
| 45 | ஹ்ஹ. ம. | 231 | 8248 |
| 46 | ஹ்ஹ. ம. | 261 | 9288 |
| 50 | க்க | 57 | 5700 |
| 68 | னு,னு | 133 | 6650 |
| | | 41388 | 1048091 |

41388 + 1048091 = 1089479 (19 x 57341)

*அட்டவணை 11 : தனித்தனியான 14குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் விசேஷ அம்சங்கள்*

| துவக்க எழுத்து | சூரா, வசனம் மற்றும் ஒவ்வொரு சூராவிலும் உள்ள துவக்க எழுத்துக்கள் (இடம் பெறும் எண்ணிக்கை) | முதல் சூரா | கடைசி சூரா |
|---|---|---|---|
| அ (அலிஃப்) | 2:1 (4502), 3:1 (2521), 7:1 (2529), 10:1 (1319) 11:1(1370), 12:1(1306), 13:1 (605), 14:1 (585), 15:1 (493), 29:1 (774), 30:1(544), 31:1(347), 32:1 (257) | 2 | 32 |
| ல (லாம்) | 2:1 (3202), 3:1 (1892), 7:1 (1530), 10:1(913) 11:1 (794) 12:1 (812), 13:1 (480), 14:1(452) 15:1 (323), 29:1 (554), 30:1 (393), 31:1 (297), 32:1 (155) | 2 | 32 |
| ம (மீம்) | 2:1 (2195), 3:1 (1249), 7:1(1164), 13:1 (260), 26:1 (484), 28:1 (460), 29:1 (344), 30:1 (317), 31:1 (173), 32:1 (158), 40:1 (380), 41:1 (276), 42:1 (300), 43:1 (324), 44:1 (150), 45:1 (200), 46:1 (225) | 2 | 46 |
| ஸ (ஸாத்) | 7:1 (97), 19:1 (26), 38:1 (29) | 7 | 38 |
| ர (ரே) | 10:1 (257), 11:1 (325), 12:1 (257), 13:1 (137), 14:1 (160), 15:1 (96) | 10 | 15 |
| க (காஃப்) | 19:1 (137) | 19 | 19 |
| ஹ (ஹே) | 19:1 (175), 20:1 (251) | 19 | 20 |
| ய (யே) | 19:1 (343), 36:1 (237) | 19 | 36 |
| ‘அ (அய்ன்) | 19:1 (117), 42:2 (98) | 19 | 42 |
| த (தே) | 20:1 (28), 26:1 (33), 27:1 (27), 28:1 (19) | 20 | 28 |
| ச (ஸீன்) | 26:1 (94), 27:1 (94), 28:1 (102), 36:1 (48), 42:2 (54) | 26 | 42 |
| ஹ்ஹ (ஹ்ஹ) | 40:1 (64), 41:1 (48), 42:1 (53), 43:1 (44) 44:1 (16), 45:1 (31) 46:1 (36) | 40 | 46 |
| க்க (க்காஃப்) | 42:2 (57), 50:1 (57) | 42 | 50 |
| னு (னுஉன்) | 68:1 (133) | 68 | 68 |
| | 43423 | 295 | 514 |
| மொத்த கூட்டுதொகை : 43423 + 295+514=44232=19x2328 | | | |

குர்ஆனியத் துவக்க எழுத்துக்கள் காணப்படுகின்ற வசன எண்களான அவற்றையும் விசேஷமானதொரு கணிதக் குறியீடு உண்மையானதென உறுதிப்படுத்துகின்றது. அட்டவணை 11ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, குர்ஆனின் அனைத்துத் துவக்க எழுத்துக்களும் 1ஆம் வசனத்தில் இடம் பெறுகின்றன, சூரா 42ஐத் தவிர (துவக்க எழுத்துக்கள் வசனம் 1மற்றும் 2ல் உள்ளன). அட்டவணை 12ல் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க கணித ரீதியான அற்புத நிகழ்வின் மூலம் இந்த உண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது. அட்டவணை 12ல் உள்ள முதல் இரண்டு வரிசைகளைக் கூட்டுவதற்குப் பதிலாக, நாம் பெருக்கினால், அப்போதும் 19 ஆல் வகுபடக்கூடிய ஒரு கூட்டுத் தொகையினையே நாம் அடைகின்றோம் [பார்க்க அட்டவணை 13].

*அட்டவணை 12 : துவக்க எழுத்துக்கள் கொண்ட வசனங்களுடைய எண்ணிக்கை கணித ரீதியாகக் குறியீடு செய்யப்படுதல்*

| சூரா எண் | துவக்க எழுத்துக்களின் எண்ணிக்கை | துவக்க எழுத்துக் கொண்ட வசனங்கள் |
|---|---|---|
| 2 | 3 | 1 |
| 3 | 3 | 1 |
| 7 | 4 | 1 |
| 10 | 3 | 1 |
| 11 | 3 | 1 |
| 12 | 3 | 1 |
| 13 | 4 | 1 |
| 14 | 3 | 1 |
| 15 | 3 | 1 |
| 19 | 5 | 1 |
| 20 | 2 | 1 |
| 26 | 3 | 1 |
| 27 | 2 | 1 |
| 28 | 3 | 1 |
| 29 | 3 | 1 |
| 30 | 3 | 1 |
| 31 | 3 | 1 |
| 32 | 3 | 1 |
| 36 | 2 | 1 |
| 38 | 1 | 1 |
| 40 | 2 | 1 |
| 41 | 2 | 1 |
| 42 | 5 | 2 |
| 43 | 2 | 1 |
| 44 | 2 | 1 |
| 45 | 2 | 1 |
| 46 | 2 | 1 |
| 50 | 1 | 1 |
| 68 | 2 | 1 |
| 822 | 79 | 30 |

822+79+30 = 931 (19X49)

*அட்டவணை 13 : அட்டவணை 12 –ன் முதல் இரண்டு வரிசைகளைக் கூட்டுவதற்குப் பதிலாக பெருக்குதல்*

| சூரா எண் | | துவக்க எழுத்துக்களின் எண்ணிக்கை | துவக்க எழுத்துக்கள் கொண்ட வசனங்கள் |
|---|---|---|---|
| 2 | x | 3 | 1 |
| 3 | x | 3 | 1 |
| 7 | x | 4 | 1 |
| – | | – | – |
| 42 | x | 5 | 2 |
| – | | – | – |
| 50 | x | 1 | 1 |
| 68 | x | 2 | 1 |
| 2022 | | | 30 |

2022+30=2052 (19x108)

கண்கூடாக, குர்ஆனின் கணிதக் குறியீட்டுடன் ஒத்துப் போகும் பொருட்டு சூரா 42 ல் இரு வெவ்வேறு துவக்க எழுத்துக்களிடப்பட்ட வசனங்கள் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். சூரா 42ன் வசனம் 1 "ஹ, ம " எனும் இரண்டு குர்ஆனியத் துவக்க எழுத்துக்களைக் கொண்டிருக் கின்றது, அத்துடன் இரண்டாவது வசனம் " ‘அ.ச.க்க" எனும் மூன்று எழுத்துக்களைக் கொண்டிருக்கிறது எனும் நிதர்சன மானது முஸ்லீம் அறிஞர்களையும் கீழ்த்திசை நாடுகளைச் சேர்ந்தவர்களையும் 14 நூற்றாண்டுகளாகக் குழப்பத்தில் ஆழ்த்தி வந்துள்ளது.

இந்தப் பின் இணைப்பின் முடிவிற்குள், குர்ஆனின் ஒவ்வொரு அம்சமும் கணித ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை இதன் வாசகர் கண்டு கொள்வார். இப்போது நாம் கண்டு வருகின்ற அம்சங்கள், "துவக்க எழுத்துக்களைக் கொண்ட ஒவ்வொரு சூராவிலுமுள்ள குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் எண்ணிக்கை" மற்றும் " குர்ஆனியத் துவக்க எழுத்துக்களைக் கொண்டுள்ள வசனங்களின் எண்ணிக்கை" ஆகியவையாகும். 11 முதல் 13 வரையிலான அட்டவணைகள் இவ்விரு அம்சங்களையும் முக்கிய விஷயமாகக் கொண் டுள்ளன. அட்டவணைகள் 14 மற்றும் 15ல் கூடுதலான கணிதவியல் நிரூபணம் காட்டப்பட்டுள்ளது. அட்டவணை 14ல் துவக்க எழுத்துக்களைக் கொண்டுள்ள அனைத்து சூராக்களின் எண்கள் அந்த ஒவ்வொரு சூராவிலுள்ள வசனங்களின் எண்ணிக்கைகளுடன் கூட்டப்பட்டு, அத்துடன், அந்தந்தத் துவக்க எழுத்துக்களைக் கொண்ட வசனங்களின் எண்ணிக்கைகளைக் கூட்டி, அத்துடன் அந்தத் துவக்க எழுத்துக்களின் எழுத்தெண் மதிப்பும் கூட்டப்பட்டுள்ளது. மொத்தக் கூட்டுத் தொகையானது 7030, அல்லது 19x370 ஆகும்.

*அட்டவணை 14 : துவக்க எழுத்துக்களிடப்பட்ட சூராக்களின் கணிதப் பண்புகள்*

| *சூரா எண்* | *வசனங்களின் எண்ணிக்கை* | *துவக்க எழுத்துக்கள் கொண்ட வசனங்களின் எண்ணிக்கை* | *துவக்க எழுத்துக்களின் எழுத்தெண்மதிப்பு* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| 2 | 286 | 1 | 71 | 360 |
| 3 | 200 | 1 | 71 | 275 |
| 7 | 206 | 1 | 161 | 375 |
| 10 | 109 | 1 | 231 | 351 |
| 11 | 123 | 1 | 231 | 366 |
| 12 | 111 | 1 | 231 | 355 |
| 13 | 43 | 1 | 271 | 328 |
| 14 | 52 | 1 | 231 | 298 |
| 15 | 99 | 1 | 231 | 346 |
| 19 | 98 | 1 | 195 | 313 |
| 20 | 135 | 1 | 14 | 170 |
| 26 | 227 | 1 | 109 | 363 |
| 27 | 93 | 1 | 69 | 190 |
| 28 | 88 | 1 | 109 | 226 |
| 29 | 69 | 1 | 71 | 170 |
| 30 | 60 | 1 | 71 | 162 |
| 31 | 34 | 1 | 71 | 137 |
| 32 | 30 | 1 | 71 | 134 |
| 36 | 83 | 1 | 70 | 190 |
| 38 | 88 | 1 | 90 | 217 |
| 40 | 85 | 1 | 48 | 174 |
| 41 | 54 | 1 | 48 | 144 |
| 42 | 53 | 2 | 278 | 375 |
| 43 | 89 | 1 | 48 | 181 |
| 44 | 59 | 1 | 48 | 152 |
| 45 | 37 | 1 | 48 | 131 |
| 46 | 35 | 1 | 48 | 130 |
| 50 | 45 | 1 | 100 | 196 |
| 68 | 52 | 1 | 50+50 | 221 |
| -------- | --------- | ------- | --------- | --------- |
| 822 + | 2743 + | 30 | + 3435 | = 7030 |
| | | | | (19 x370) |

குறிப்பிடத்தக்க விதமாக, அட்டவணை 14ல் உள்ள முதல் இரண்டு வரிசைகளைக் கூட்டுவதற்குப் பதிலாக, அவற்றை நாம் பெருக்கினால், **அப்போதும் 19 ஆல் வகுபடக்கூடிய ஒரு மொத்தக் கூட்டுத் தொகையையே நாம் கிடைக்கப் பெறுகின்றோம்** (அட்டவணை 15).

ஒவ்வொரு சூராவினுடைய வசனங்கனின் எண்ணிக்கை, மற்றும் ஒவ்வொரு வசனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்கள் ஆகியவை குர்ஆனின் அடிப்படை அம்சங்களில் உள்ளவையாகும். கணித ரீதியில் இந்த அம்சங்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதோடு மட்டுமின்றி, துவக்க எழுத்துக்களைக் கொண்ட மற்றும் துவக்க எழுத்துக்கள் இல்லாத சூராக்கள் ஆகிய இரண்டும் கூட தனித்தனியே குறியீடு செய்யப்பட்டுள்ளன. இப்போது நாம் துவக்க எழுத்துக்களைக் கொண்ட சூராக்களை அலசிக் கொண்டிருப்பதனால், இந்த சூராக்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்களுடன், ஒவ்வொரு சூராவினுடைய வசனங்களின் எண்ணிக்கைகளைக் கூட்டி, அத்துடன் வசன எண்களின் மொத்தக் கூட்டுத்தொகையைக் கூட்டினால் (1+2+3+.....n) மொத்தக் கூட்டுத்தொகையானது 190133, அல்லது 19x10007 ஆகும் என்பதை அட்டவணை 16 எடுத்துக் காட்டுகின்றது.

*அட்டவணை 15 : அட்டவணை 14ன் முதல் இரண்டு வரிசைகளைக் கூட்டுவதற்குப் பதிலாக பெருக்குதல்*

| சூரா எண் | | வசனங்களின் எண்ணிக்கை | | துவக்க எழுத்துக்கள் கொண்ட வசனங்களின் எண்ணிக்கை | | துவக்க எழுத்துக்களின் எழுத்தெண் மதிப்பு | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | x | 286 | + | 1 | + | 71 | = | 644 |
| 3 | x | 200 | + | 1 | + | 71 | = | 672 |
| 7 | x | 206 | + | 1 | + | 161 | = | 1604 |
| – | | – | | – | | – | | – |
| 50 | x | 45 | + | 1 | + | 100 | = | 2351 |
| 68 | x | 52 | + | 1 | + | (50+50) | = | 3637 |
| | | 60071 | + | 30 | + | 3435 | = | 63536 (19 x3344) |

ஒவ்வொரு சூரா எண்ணுடன் அடுத்த சூராவின் எண்ணைக் கூட்டுவதன் மூலம், அத்துடன் சூரா எண்களின் கூட்டுத் தொகையைச் சேர்த்துக் கொண்டே வந்து இவ்விதமாகக் குர்ஆனின் கடைசி வரை இந்த செயல்முறையைத் தொடர்ந்தால், ஒவ்வொரு சூராவுக்கும் பொருத்தமான ஒரு மதிப்பை நாம் பெற்றிருப்போம். இவ்விதமாக, சூரா 1 அதற்கொத்த மதிப்பான 1 ஐக் கொண்டிருக்கும், சூரா 2, 1+2=3 எனும் மதிப்பினைக் கொண்டிருக்கும். சூரா 3, 3+3 = 6 எனும் ஒரு மதிப்பினைக் கொண்டிருக்கும், சூரா 4, 6+4 =10 எனும்

*அட்டவணை 16: துவக்க எழுத்துக்களிடப்பட்ட சூராக்களுடைய வசனங்கள் கணித ரீதியில் கட்டமைக்கப்படுதல்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசனஎண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2 | 286 | 41041 | 41329 |
| 3 | 200 | 20100 | 20303 |
| 7 | 206 | 21321 | 21534 |
| – | – | – | – |
| 50 | 45 | 1035 | 1130 |
| 68 | 52 | 1378 | 1498 |
| 822 | 2743 | 186568 | 190133 (19x10007) |

*அட்டவணை 17 : சூரா எண்களின் தொடர்ச்சியான கூட்டலின் மூலம் பெறப்பட்ட மதிப்புகள்*

| சூரா எண் | கணக்கிடப்பட்ட மதிப்பு |
|---|---|
| 2 | 3 |
| 3 | 6 |
| 7 | 28 |
| 10 | 55 |
| 11 | 66 |
| 12 | 78 |
| 13 | 91 |
| 14 | 105 |
| 15 | 120 |
| 19 | 190 |
| 20 | 210 |
| – | – |
| 44 | 990 |
| 45 | 1035 |
| 46 | 1081 |
| 50 | 1275 |
| 68 | 2346 |
| | 15675 (19x825) |

மதிப்பினைக்கொண்டிருக்கும்., இவ்வாறே குர்ஆனின் கடைசி வரை. துவக்க எழுத்துக்களைக் கொண்ட மற்றும் துவக்க எழுத்துக்கள் இல்லாத சூராக்களின் மொத்த மதிப்புக்கள் தனித்தனியாக 19ஆல் வகுபடக் கூடியதாக உள்ளன. துவக்க எழுத்துக்களைக் கொண்ட சூராக்களின் மதிப்புக்கள் அட்டவணை 17ல் காட்டப்பட்டுள்ளன.

துவக்க எழுத்துக்கள் இல்லாத சூராக்களுக்குரிய கணக்கிடப்பட்ட மதிப்புக்கள் 237785 எனும் மொத்தத் தொகைக்குக் கூடி வருகின்றன, அதுவும் கூட 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே உள்ளது (237785 = 19x12515).

# விசேஷமான வார்த்தைகளின் கணிதரீதியிலான குறியீடு
# "கடவுள்" (அல்லாஹ்) எனும் வார்த்தை

[1] துவக்கத்திலேயே காட்டப்பட்டுள்ளபடி "கடவுள்" எனும் வார்த்தை குர்ஆனில் 2698 முறைகள், 19x142 இடம் பெறுகின்றது.

[2] "கடவுள்" எனும் வார்த்தை இடம் பெறுகின்ற வசனங்களின் எண்கள் 118123 எனக் கூடி வருகின்றது, இதுவும் 19ன் ஒரு பெருக்குத் தொகையேயாகும் (118123 = 19x6217).

எளிதில் கவனிக்கப்படக்கூடிய இந்த அற்புத நிகழ்வுகள் "கடவுள்" எனும் வார்த்தையை மட்டும் கணக்கிடும் சமயத்தில் ஏராளமான கஷ்டங்களை எங்களுக்குத் தந்தன. நாங்கள் ஒரே குழுமமான பணியாளர்களாக, தேவையான கணிணிகளுடன், மேலும் நாங்கள் அனைவரும் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களாகவும் இருந்தோம். ஆயினும் நாங்கள் எண்ணுவதில், கணக்கிடுவதில் அல்லது வெறுமனே " கடவுள்" எனும் வார்த்தையின் எண்ணிக்கைகளை எழுதுவதில் சிலபல தவறுகள் செய்தோம். குர்ஆனை இயற்றியவர் முஹம்மதுதான் என்று இன்னும் கூறுபவர்கள் முற்றிலும் அறிவற்றவர்களாகவே உள்ளனர்; அவர் ஒரு போதும் கல்லூரிக்குச் சென்றதில்லை, மேலும் அவர் ஒரு கணிணியையும் கொண்டிருக்கவில்லை.

*அட்டவணை 18 : துவக்க எழுத்துக்களிடப்பட்ட பகுதிக்கு வெளியில் " கடவுள்" எனும் வார்த்தையின் நிகழ்வு*

| சூரா எண் | வசனங்களின் எண்கள் | இடம்பெறுகின்ற முறைகள் |
|---|---|---|
| 1 | 1,2 | 2 |
| 69 | 33 | 1 |
| 70 | 3 | 1 |
| 71 | 3,4,13,15,17,19,25 | 7 |
| 72 | 4,5,7,12,18,19,22,23 | 10 |
| 73 | 20 | 7 |
| 74 | 31,56 | 3 |
| 76 | 6,9,11,30 | 5 |
| 79 | 25 | 1 |
| 81 | 29 | 1 |
| 82 | 19 | 1 |
| 84 | 23 | 1 |
| 85 | 8,9,20 | 3 |
| 87 | 7 | 1 |
| 88 | 24 | 1 |
| 91 | 13 | 2 |
| 95 | 8 | 1 |
| 96 | 14 | 1 |
| 98 | 2,5,8 | 3 |
| 104 | 6 | 1 |
| 110 | 1,2 | 2 |
| 112 | 1,2 | 2 |
| 1798 | 634 | 57 |
| | | (19x3) |

சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்களுடைய கூட்டுத்தொகை = 1798 + 634 = 2432 = 19x128.
துவக்க எழுத்துக்களிடப்பட்ட பகுதிக்கு வெளியே "கடவுள்" எனும் வார்த்தையின் மொத்த இடம் பெறுதல் = 57 (19x3)

(3) குர்ஆனியத் துவக்க எழுத்துக்களில் முதன்மையான (2:1–ன் அ.ல.ம) முதல் இறுதித் துவக்க எழுத்தான (68:1–ன் னு) வரை, "கடவுள்" எனும் வார்த்தை 2641, 19x139 முறைகள் இடம் பெறுகின்றன.

(4) "கடவுள்" எனும் வார்த்தை துவக்க எழுத்துக்களுக்கு வெளிப்பகுதியில் 57 முறைகள் இடம் பெறுகின்றன (அட்டவணை 18).

(5) "கடவுள்" எனும் வார்த்தை காணப்படுகின்ற இந்த 57 வசனங்களும் இடம் பெறுகின்ற சூராக்கள் மற்றும் வசனங் களின் எண்களைக் கூட்டுவதன் மூலம் 2432, அல்லது 19x128 என்ற ஒரு கூட்டுத்தொகை நமக்கு கிடைக்கின்றது. அட்டவணை 18 பார்க்க.

(6) "கடவுள்" எனும் வார்த்தை 85 சூராக்களில் இடம் பெறுகின்றது. " கடவுள்" எனும் வார்த்தை இடம் பெறுகின்ற முதல் மற்றும் கடைசி வசனங்களுக்கிடையிலுள்ள வசனங் களின் எண்ணிக்கையுடன், அவ்விரண்டு வசனங்கள் உட்பட, ஒவ்வொரு சூரா எண்ணையும் நாம் கூட்டினால், மொத்தக் கூட்டுத் தொகையானது 8170, அல்லது 19x430 என வருகின்றது. இத்தகவல் தொகுப்பின் சுருக்கப்பட்டதொரு படம் அட்டவணை 19ல் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை 19 : "கடவுள் " (அல்லாஹ்) எனும் வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சூராக்கள்*

| | சூரா எண் | முதல் வசனம் | கடைசி வசனம் | வசனங்கள் 1லிருந்து கடைசி வரை |
|---|---|---|---|---|
| 1. | 1 | 1 | 2 | 2 |
| 2. | 2 | 7 | 286 | 280 |
| 3. | 3 | 2 | 200 | 199 |
| – | – | – | – | – |
| 84. | 110 | 1 | 2 | 2 |
| 85. | 112 | 1 | 2 | 2 |
| | 3910 | | | 4260 |

3910 + 4260 =8170 =19x430

இந்தக் கணிதத் தன்மைகள் " கடவுள்" எனும் வார்த்தையின் அத்தனை நிகழ்வுகளையும் உட்படுத்துகின்றன.

(7) குர்ஆனுடைய பிரதான தூதுச் செய்தியாவது ஒரே " ஒரு கடவுள்" தான் இருக்கின்றார் என்பதேயாகும். அரபி மொழியில் "ஒன்று" எனும் வார்த்தையான *"வாஹித்"* இக்குர்ஆனில் 25 முறைகள் இடம் பெறுகின்றது. இவற்றில் ஆறு நிகழ்வுகள் கடவுளை விடுத்து மற்றவற்றைக் குறிப்ப தாகும். (ஒரே விதமான உணவு, ஒரு வாசல், இன்னபிற.) மற்ற 19 நிகழ்வுகளும் கடவுளைக் குறிப்பவையாகும். இந்தத் தகவல் தொகுப்பு, தரம் வாய்ந்த குறிப்பேடான **குர்ஆனுடைய வார்த்தைகளுக்குரிய சொல் அகராதி**யில் காணப்படுகின்றது.

*குர்ஆனுடைய அடிப்படைத் தூதுச் செய்தியான **"ஒன்று"** எனும் வார்த்தையின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம், குர்ஆனுடைய பொது வகு எண்ணான, 19 ஆனது **"ஒன்று"** எனும் வார்த்தைக்குரிய எழுத்தெண் மதிப்பாகத் திகழ்கின்றது எனும் உண்மையின் மூலம் வெளிப்படுத்தப் படுகின்றது.*

# ஏன் 19!

இந்தப் பின் இணைப்பின் பிற்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, குர்ஆன் மட்டுமின்றி, கடவுளின் அனைத்து வேதங்களும் 19 எனும் எண்ணைக் கொண்டு கணித ரீதியில் குறியீடு செய்யப்பட்டிருந்தன. முழுமையான இப்பிரபஞ்சம் கூட இந்தத் தெய்வீக அடையாளத்தைக் கொண்டுள்ளது. 19எனும் எண்ணை அவர் படைத்துள்ள ஒவ்வொன்றின் மீதும் எல்லாம் வல்ல படைப்பாளரின் கையொப்பமாகக் கருதிக்கொள்ளப்படலாம் (பார்க்க பின் இணைப்பு 38). இந்தப் பின் இணைப்பின் வீச்சிற்கும் அப்பாற்பட்ட தனித்தன்மை வாய்ந்த கணிதத் தன்மைகளை 19எனும் எண் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு:

[1] அது ஒரு பகா எண்ணாகும்.

[2] 57:3ல் உள்ள கடவுளின் தனிப்பண்பான "முதன்மையானவர் மற்றும் முடிவானவர்" என்பதைப் பிரகடனிப்பதைப் போல் முதல் எண்ணையும் (1) கடைசியான எண்ணையும் (9) தன்னுள் கொண்டுள்ளது.

[3] உலகின் எல்லா மொழிகளிலும் அது ஒரே விதமாகவே தோற்றமளிக்கின்றது. அதன் இரு அங்கங்களும், 1 மற்றும் 9 ஆகியவை மட்டுமே எல்லா மொழிகளிலும் ஒரே விதமாகத் தோற்றமளிக்கின்ற இலக்கங்களாக உள்ளன.

[4] அது பல விசேஷமான கணிதப் பண்புகளைக் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு, 19 ஆனது 9 மற்றும் 10ன் ஒன்றாம் அடுக்கின் கூட்டுத்தொகையாகவும், அத்துடன் 9 மற்றும் 10–ன் இரண்டாம் அடுக்கின் வித்தியாசமாகவும் உள்ளது.

19 எனும் எண்ணைக் கொண்டு கடவுளின் படைப்புக்களின் மீதான இந்த அண்டமளாவிய குறியீடு, வேதங்கள் சார்ந்த அனைத்து மொழிகளிலும் – அராமைக், ஹீப்ரு, மற்றும் அரபியில், "ஒன்று" எனும் வார்த்தையின் எழுத்தெண் மதிப்பாக உள்ளது எனும் நிதர்சனத்தைச் சார்ந்தது என்பதை இப்போது நாம் புரிந்து கொள்கின்றோம்.

எனவே, 19 என்ற எண், அனைத்து வேதங்களிலுமுள்ள முதற் கட்டளையைப் பிரகடனிக்கின்றது: அதாவது ஒரே **ஒரு** கடவுள் மட்டுமே இருக்கின்றார்.

**நம்முடைய இரட்சகரான கடவுள் ஒருவரே ஆவார்!**
**எனவே, உங்கள் இரட்சகரான கடவுளை**
**உங்களுடைய முழு இதயத்துடனும்,**
**உங்களுடைய முழு ஆத்மாவுடனும்,**
**உங்களுடைய முழு மனத்துடனும்,**
**மேலும் உங்களுடைய முழு பலத்துடனும்**
**நீங்கள் வழிபட வேண்டும்.**

**[ஆதியாகமம் 6:4–5]**
**[மாற்கு 12:29]**
**[குர்ஆன் 2:163 17:22–23]**

*அட்டவணை 20 : ஏன் "19 ! "*

| எழுத்து | | |
|---|---|---|
| ஹீப்ரு | அரபி | மதிப்பு |
| வ | வ | 6 |
| அ | அ | 1 |
| ஹ | ஹ | 8 |
| த | த | 4 |
| | | 19 |

அட்டவணை 7ல் காட்டப்பட்டுள்ளபடி, அராமைக், ஹீப்ரு, மற்றும் அரபிய எழுத்துக்கள், அண்டமளாவிய அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வழிமுறைக்கு ஏற்ப, எண்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன. **"ஒன்று"** என்பதற்கு ஹீப்ரு வார்த்தையானது **வஅஹத்** ஆகும். **(வ–அஹத்** என உச்சரிக்கப்படுவது). அரபியில், **"ஒன்று"** எனும் வார்த்தை **வஅஹத்** ஆகும். **(வாஹித்** என உச்சரிக்கப்படுவது). பார்க்க அட்டவணை 20.

## "குர்ஆன்"எனும்வார்த்தை

" குர்ஆன்" எனும் வார்த்தை இந்தக் குர்ஆனில் 58 முறைகள் இடம் பெறுகின்றது, அவற்றில் ஒன்று, 10:15ல் " மற்றொரு குர்ஆன்" தனைக் குறிப்பிடுகின்றது. எனவே, குறிப்பிட்ட இந்த இடம் பெறுதல், தவிர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இவ்விதமாக, " இந்தக் குர்ஆன்" ஆனது குர் ஆனில் 57, அல்லது 19×3 முறைகள் இடம் பெறுகின்றது.

"குர்ஆன்" என்ற வார்த்தையின் மற்ற இரு இலக்கண வடிவங்கள் 12 வசனங்களில் இடம் பெறுகின்றது. இவை "குர்ஆனன் " எனும் வார்த்தை மற்றும் "குர்ஆனஹு" எனும் வார்த்தையையும் உள்ளடக்கியதாகும். இவற்றின் நிகழ்வு களில் ஒன்று 13:31ல் உள்ள மலைகளை நொறுங்கி விடச் செய்யும் "மற்றொரு குர்ஆனைக்" குறிப்பிடுகின்றது. 41:44ல் உள்ள மற்றொரு நிகழ்வு "அரபியில் அல்லாத ஒரு குர்ஆனைக்" குறிக்கின்றது. எனவே, இந்த இரு நிகழ்வுகளும் தவிர்த்துக் கொள்ளப்படுகின்றன. அட்டவணை 21 "குர்ஆன்" எனும் வார்த்தையின் அனைத்து இலக்கண வடிவங்களும் இடம் பெறுகின்ற சூராக்கள் மற்றும் வசனங்களின் பட்டியலைக் காட்டுகின்றது.

*அட்டவணை 21 :" குர்ஆன்" இடம் பெறுகின்ற சூராக்கள் மற்றும் வசனங்கள்*

| சூரா | வசனம் |
|---|---|
| 2 | 185 |
| 4 | 82 |
| 5 | 101 |
| 6 | 19 |
| 7 | 204 |
| 9 | 111 |
| 10 | 37 |
| – | 61 |
| 12 | 2 |
| – | 3 |
| 15 | 1 |
| – | 87 |
| – | 91 |
| 16 | 98 |
| 17 | 9 |
| – | 41 |
| – | 45 |
| – | 46 |
| – | 60 |
| – | 78 |
| – | 82 |
| – | 88 |
| – | 89 |
| – | 106 |
| 18 | 54 |
| 20 | 2 |
| – | 113 |
| – | 114 |
| 25 | 30 |
| – | 32 |
| 27 | 1 |
| – | 6 |
| – | 76 |
| – | 92 |
| 28 | 85 |

| சூரா | வசனம் |
|---|---|
| 30 | 58 |
| 34 | 31 |
| 36 | 2 |
| – | 69 |
| 38 | 1 |
| 39 | 27 |
| – | 28 |
| 41 | 3 |
| – | 26 |
| 42 | 7 |
| 43 | 3 |
| – | 31 |
| 46 | 29 |
| 47 | 24 |
| 50 | 1 |
| – | 45 |
| 54 | 17 |
| – | 22 |
| – | 32 |
| – | 40 |
| 55 | 2 |
| 56 | 77 |
| 59 | 21 |
| 72 | 1 |
| 73 | 4 |
| – | 20 |
| 75 | 17 |
| – | 18 |
| 76 | 23 |
| 84 | 21 |
| 85 | 21 |
| ............ | ............ |
| 1356 | 3052 |
| 1356 + 3052 = 4408 | |
| | (19×232) |

# பலமானதோர் அஸ்திவாரம்


*பஸ்மலஹ்* என அறியப்படுகின்ற குர்ஆனின் முதல் வசனமான, " கடவுளின் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்", 19 அரபி எழுத்துக்கள் கொண்டது. அதில் அங்கம் வகிக்கின்ற வார்த்தைகள் குர்ஆனில் ஒரே சீராக 19ன் பெருக்குத் தொகைகளாகவே இடம் பெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| முதல் வார்த்தை | "இஸ்ம்" (பெயர்) | இடம்பெறுவது | 19 முறைகள். |
| இரண்டாம் வார்த்தை | " அல்லாஹ்" (கடவுள்) | இடம் பெறுவது | 2698 முறைகள் (19X142). |
| மூன்றாம் வார்த்தை | " அல் – ரஹ்மான்" (மிக்க அருளாளர்) | | 57, 19X3 முறைகள். |
| நான்காம் வார்த்தை | " அல்– ரஹீம்" (மிக்க கருணையாளர்) | | 114, 19X6 முறைகள். |

பேராசிரியர் சீஸர் மஜுல் 400க்கும் அதிகமான கடவுளின் பண்புப் பெயர்களின் எழுத்தெண் மதிப்புக்களை நோட்டமிட்டு, நான்கு பெயர்கள் மட்டுமே அவற்றின் எழுத்தெண் மதிப்புக்கள் 19ன் பெருக்குத் தொகை கொண்டவையாக இருக்கின்றன என்பதைக் கண்டார்.

| தெய்வீகப் பெயர்கள் | எழுத்தெண் மதிப்பு |
|---|---|
| 1. "வாஹித்" (ஒன்று) | 19 |
| 2. ‘‘ஜுல் – ஃபள்ல் அல் அஜீம்’’ (எல்லையற்ற அருளையுடையவர்) | 2698 |
| 3. "மஜீத்" (மகத்தானவர்) | 57 |
| 4. "ஜாமிஃ" (ஒன்று திரட்டுபவர்) | 114 |

மேலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, 19ஆல் வகுபடக்கூடிய எழுத்தெண் மதிப்பினைக் கொண்ட தெய்வீகப் பெயர்கள் மட்டும் மிகச்சரியாக **பஸ்மலஹ்**வின் நான்கு வார்த்தைகள் இடம் பெறுகின்ற எண்ணிக்கைக்குத் தொடர்புடையவையாக உள்ளன. கீழே காட்டப்பட்டுள்ள சித்திரம் குறிப்பிடத்தக்க இந்த அற்புத நிகழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றது:




*பஸ்மலஹ்வின் நான்கு வார்த்தைகள் இடது புறத்தில் காட்டப்பட்டுள்ளன, அத்துடன் 19ஆல் வகுபடக்கூடிய எழுத்தெண் மதிப்பைக் கொண்ட நான்கு பெயர்கள் மட்டும் வலப்புறத்தில் காட்டப்பட்டுள்ளன. நடுவில் உள்ள எண்கள் பஸ்மலஹ்வின் வார்த்தைகள் இடம் பெறுகின்ற எண்ணிக்கையாகவும், அதே சமயம் அந்த நான்கு தெய்வீகப் பெயர்களின் எழுத்தெண் மதிப்பாகவும் உள்ளன.*

# இஸ்லாமின் ஐந்து தூண்கள்

நமது வாழ்வின் அனைத்து நிலைகளையும் நெறிப்படுத்துகின்ற எண்ணற்ற முக்கியமான கட்டளைகளைக் குர்ஆன் வழங்குகின்ற போதிலும் (உதாரணத்திற்குப் பார்க்க 17:22–38), பாரம்பர்யமாக ஐந்து அடிப்படைத் "தூண்கள்" அழுத்திச் சொல்லப்பட்டு வந்துள்ளன. அவையாவன:

1. *ஷஹாதஹ்* : கடவுளுடன் வேறு தெய்வம் எதுவுமில்லை என்று சாட்சியம் பகர்தல்.

2. *ஸலாத்* : அன்றாடத் தொடர்புத் தொழுகைகள் ஐந்தினைக் கடைப்பிடித்தல்.

3. *ஸியாம்* : இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாவது மாதத்தில் (ரமளான்) நோன்பிருத்தல்.

4. *ஜகாத்* : ஒருவரது நிகர வருமானத்தில் 2.5% – ஐ குறிப்பிடப்பட்டுள்ள மக்களுக்குத் தர்மமாக கொடுத்து விடுதல்.

5. *ஹஜ்* : அதற்குச் செலவிட இயன்றவர்கள் வாழ்நாளில் ஒருமுறை மக்காவிற்குப் புனித யாத்திரை செல்லுதல்.

குர்ஆனிலுள்ள மற்ற ஒவ்வொன்றையும் போலவே, இவை கணித ரீதியில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

## 1. ஒரு கடவுள் (ஷஹாதஹ்):

முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடவுளைக் குறிக்கின்ற "**ஒன்று**" எனும் வார்த்தை இக்குர்ஆனில் 19 முறைகள் இடம் பெற்றுள்ளது. கடவுள் "**மட்டும்**" எனும் குறிப்பு 5 முறைகள் இடம் பெறுகின்றது, நாம் காண்கின்ற இந்த ஐந்து இடங்களின் சூரா மற்றும் வசன எண்களின் கூட்டுத் தொகையாவது 361, 19x19.

இஸ்லாமின் முதல் தூணானது 3:18ல் கூறப்பட்டுள்ளபடி **"லா இலாஹ இல்லா ஹுவ்"** (அவருடன் வேறு தெய்வம் எதுவுமில்லை) என்பதேயாகும். மிக முக்கியமான இந்தச் சொற்றொடர் 19 சூராக்களில் இடம் பெறுகின்றது. முதல் இடம் பெறுதலானது 2:163 லும், மற்றும் கடைசி இடம் பெறுதல் 73:9லும் உள்ளது. அட்டவணை 22, இதன் முதல் மற்றும் கடைசி இடம் பெறுதல்கள் ஆகியவற்றுக்கிடையில் சூரா எண்களின் கூட்டுத்தொகையையும் வசனங்களின் எண்ணிக்கையையும் கூட்டி, அத்துடன் இந்த வசன எண்களின் கூட்டுத் தொகையையும் கூட்டினால் வருவது 316502, அல்லது 19x16658 ஆகும் என்பதைக் காட்டுகின்றது.

அத்துடன் **லா இலாஹ இல்லா ஹுவ்** இடம் பெறுகின்ற 19 சூராக்களின் எண்களையும், அத்துடன் மிக முக்கியமான இந்தச் சொற்றொடர் காணப்படுகின்ற வசன எண்களையும் கூட்டி அத்துடன் இதன் மொத்த நிகழ்வுகளின்

*அட்டவணை 22: லா இலாஹ இல்லா ஹுவ் – வின் முதல் நிகழ்விலிருந்து கடைசி நிகழ்வு வரையுள்ள அனைத்து சூராக்கள் மற்றும் வசனங்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2 | 123 | 27675 | 27800 |
| 3 | 200 | 20100 | 20303 |
| – | – | – | – |
| 9 | 127 | 8128 | 8264 |
| – | – | – | – |
| 72 | 28 | 406 | 506 |
| 73 | 9 | 45 | 127 |
| .......... | .......... | ................ | .............. |
| 2700 | 5312 | 308490 | 316502 (19X16658) |

*அட்டவணை 23: "லா இலாஹ இல்லா ஹுவ்" (அவருடன் வேறு தெய்வம் எதுவுமில்லை): எனும் முக்கியமான வாசகத்தின் நிகழ்வுகள் அனைத்தினுடைய பட்டியல்*

| எண் | சூரா எண் | ஷஹாதஹ்வைக் கொண்ட வசனங்கள் | ஷஹாதஹ் இடம் பெறும் முறைகள் |
|---|---|---|---|
| 1. | 2 | 163, 255 | 2 |
| 2. | 3 | 2,6,18 (இருமுறை) | 4 |
| 3. | 4 | 87 | 1 |
| 4. | 6 | 102, 106 | 2 |
| 5. | 7 | 158 | 1 |
| 6. | 9 | 31 | 1 |
| 7. | 11 | 14 | 1 |
| 8 | 13 | 30 | 1 |
| 9. | 20 | 8,98 | 2 |
| 10. | 23 | 116 | 1 |
| 11. | 27 | 26 | 1 |
| 12. | 28 | 70,88 | 2 |
| 13. | 35 | 3 | 1 |
| 14. | 39 | 6 | 1 |
| 15. | 40 | 3,62,65 | 3 |
| 16. | 44 | 8 | 1 |
| 17. | 59 | 22,23 | 2 |
| 18. | 64 | 13 | 1 |
| 19. | 73 | 9 | 1 |
| | ........ | .......... | ........... |
| | 507 | 1592 | 29 |

507 +1592+29 = 2128 = 19 x 112

எண்ணிக்கையையும் (29) கூட்டினால் மொத்தக் கூட்டுத் தொகையானது 2128, அல்லது 19x112. விபரங்கள் அட்டவணை 23ல் காட்டப்பட்டுள்ளன.

## 2. தொடர்புத் தொழுகைகள் "ஸலாத்":

**"ஸலாத்"** எனும் வார்த்தை குர்ஆனில் 67 முறைகள் இடம் பெறுகின்றது, அத்துடன் இந்த 67 நிகழ்வுகளின் சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்களை நாம் கூட்டினால், கூட்டுத் தொகையானது 4674 அல்லது 19x246 என வருகின்றது. (பார்க்க ***குர்ஆனின் சொல் அகராதி)***

## 3. நோன்பிருத்தல் (ஸியாம்):

நோன்பிருத்தலுக்கான கட்டளை 2:183, 184, 185, 187, 196; 4:92; 5:89, 95; 33:35, 35; மற்றும் 58:4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்களின் கூட்டுத் தொகையாவது 1387, அல்லது 19x73 ஆகும். 33:35 ல் நோன்பிருத்தல், நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு ஒரு முறை, நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு மற்றொருமுறை என இருமுறைகள் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

## 4. கடமையான தர்மம் (ஜகாத்): & 5. மக்காவிற்குப் புனித யாத்திரை:

முதல் மூன்று " இஸ்லாமின் தூண்கள்", அனைத்து முஸ்லிம் ஆண்கள் மற்றும் பெண்கள் மீது கடமையாக உள்ள அதே சமயம், *ஜகாத்* மற்றும் ஹஜ் ஆகியவை அவற்றிற்குச் செலவிட இயன்றவர்களுக்கென மட்டுமே விதிக்கப்பட்டுள்ளன. ஜகாத் மற்றும் ஹஜ் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட சுவாரசியமான கணித ரீதியிலான அற்புதத்தினை இது விவரிக்கின்றது.

*ஜகாத்* தர்மமானது 2:43, 83, 110,177, 277; 4:77, 162; 5:12, 55; 7:156; 9:5, 11, 18, 71; 18:81; 19:13, 31, 55; 21:73; 22:41, 78; 23:4; 24:37, 56; 27:3; 30:39; 31:4; 33:33; 41:7; 58:13; 73:20; மற்றும் 98:5 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்கள் கூட்டப்பட்டால் வருவது 2395, இக்கூட்டுத்தொகை இதனை 19ன் ஒரு பெருக்குத் தொகையாக ஆக்கிவிடவில்லை, அதில் ஒன்று அதிகமாக உள்ளது.

ஹஜ் புனித யாத்திரையானது 2:189, 196, 197, 9:3 மற்றும் 22:27–ல் இடம்பெறுகின்றது. இந்த எண்கள் கூட்டப்பட்டால் வருகின்ற எண் 645, இக்கூட்டுத்தொகை இதனை 19ன் ஒரு பெருக்குத் தொகையாக ஆக்கி விடவில்லை; அதில் ஒன்று குறைவாக உள்ளது.

இவ்விதமாக *ஜகாத்* மற்றும் ஹஜ், ஒன்றிணைந்து, 2395+645=3040=19x160, எனும் ஒரு கூட்டுத் தொகையைத் தருகின்றன.

# இந்தக் குர்ஆனுடைய கணிதக் கட்டமைப்பு

இந்தக் குர்ஆனின் சூராக்கள், வசனங்கள், வார்த்தைகள் மற்றும் எழுத்துக்கள் கணிதரீதியில் தொகுக்கப்பட்டுள்ளதோடு மட்டுமின்றி, கூடுதலாக கலப்பற்ற கணிதரீதியிலான, மானிட சக்திக்கப்பாற்பட்ட கட்டமைப்பிற்குள் வரிசைப்படுத்தப்பட்டும் உள்ளது. அதாவது, இவ்விதமான ஒரு வரிசைப்படுத்துதலுடன் அதன் இலக்கிய உள்ளடக்கம் எந்தத் தொடர்பும் கொண்டதில்லை.

இந்தக் குர்ஆனின் பௌதிக நிர்மாணம் கலப்பற்ற கணிதரீதியில் அமைந்திருப்பதனால், இக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் குர்ஆனின் 19ன் அடிப்படையிலான குறியீட்டுடன் ஒத்துப் போக வேண்டும் என்று எதிர்பார்க்கப் படும்.

மொத்தமாக முப்பது தனித்த எண்கள் குர்ஆன் முழுவதிலும் குறிப்பிடப்படுகின்றன, மேலும் இந்த எண்கள் அனைத்தினுடைய கூட்டுத்தொகையாவது 162146, 19ன் ஒரு பெருக்குத் தொகை (162146 = 19x8534). மீண்டும் மீண்டும் கூறப்படுப்படுபவற்றைத் தவிர்த்து, குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த எண்கள் அனைத்தையும் அட்டவணை 24 பட்டியலிடுகின்றது.

ஒரே ஒரு முறை குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள எண் களாவன :11, 19,20,50,60,80,99,300,2000, 3000, 5000, 50,000, மற்றும் 10,0000.

மீண்டும் மீண்டும் கூறப்படுபவற்றுடன் சேர்த்து, குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து எண்களும் 285 முறைகள் இடம் பெறுகின்றன, அத்துடன் இந்த எண்ணும் 19ன் ஒரு பெருக்குத் தொகையேயாகும்; 285 = 19 x 15.

## சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்கள்

குர்ஆனிலுள்ள சூராக்கள் மற்றும் வசனங்களுக்கு எண் இடப்படுகின்ற வழிமுறை மிகப் பரிபூரணமாகப் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளது. ஒரு சில அங்கீகரிக்கப்படாத மற்றும் எளிதில் கண்டுபிடித்துவிடக்கூடிய அச்சு வடிவங்கள் மட்டுமே, தெய்வீகமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள நியமமான வழிமுறையி லிருந்து விலகிச் செல்கின்றன.

அனைத்து சூராக்களின் எண்களையும், ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் எண்ணிக்கையையும், வசன எண்களின் கூட்டுத்தொகையையும் நாம் கூட்டினால், முழுக் குர்ஆனுக்கும் உரிய மொத்தக் கூட்டுத்தொகையானது 346199, 19x19x959 என்று வருகின்றது. அட்டவணை 25 இந்தத் தகவல் தொகுப்புக்களின் சுருக்கப்பட்ட ஒரு வடிவம் ஆகும். இவ்விதமாக, ஒரேஒரு சூராவின் அல்லது வசனத்தின் சிறிதளவு மாற்றமும் இந்த ஒழுங்கமைப்பைச் சீர்குலைத்து விட்டிருக்கும். அட்டவணை 16ல் காட்டப்பட்டுள்ளபடி, துவக்க எழுத்துக்கள் கொண்ட 29 சூராக்களை மட்டும் நாம் கவனத்தில் கொண்டாலும், இதே இந்தத் தகவல் தொகுப்புக்கள், அதுவும் கூட 19ன் பெருக்குத் தொகையாக உள்ள ஒரு மொத்தக் கூட்டுத் தொகையினையே உருவாக்கு கின்றது. துவக்க எழுத்துக்கள் இல்லாத சூராக்களுக்கு உரிய தகவல் தொகுப்புக்களும் கூட 19ஆல் வகுபடக் கூடியதாகவே உள்ளது என்பது அதனைத் தொடர்வதாகும்.

*அட்டவணை 25 : சூரா மற்றும் வசன எண்ணிக்கைகள் கணித ரீதியில் குறியீடு செய்யப்படுதல்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 2 | 286 | 41041 | 41329 |
| – | – | – | – |
| 9 | 127 | 8128 | 8264 |
| – | – | – | – |
| 113 | 5 | 15 | 133 |
| 114 | 6 | 21 | 141 |
| ––– | –– | ––– | ––– |
| 6555 | 6234 | 333410 | 346199 |
| | | | (19x19x959) |

*அட்டவணை 24 : குர்ஆனிய எண்கள் அனைத்தும்.*

| எண்கள் | உதாரணம் இருக்குமிடம் |
|---|---|
| 1 | 2:163 |
| 2 | 4:11 |
| 3 | 4:171 |
| 4 | 9:2 |
| 5 | 18:22 |
| 6 | 25:59 |
| 7 | 41:12 |
| 8 | 69:17 |
| 9 | 27:48 |
| 10 | 2:196 |
| 11 | 12:4 |
| 12 | 9:36 |
| 19 | 74:30 |
| 20 | 8:65 |
| 30 | 7:142 |
| 40 | 7:142 |
| 50 | 29:14 |
| 60 | 58:4 |
| 70 | 9:80 |
| 80 | 24:4 |
| 99 | 38:23 |
| 100 | 2:259 |
| 200 | 8:65 |
| 300 | 18:25 |
| 1000 | 2:96 |
| 2000 | 8:66 |
| 3000 | 3:124 |
| 5000 | 3:125 |
| 50000 | 70:4 |
| 100000 | 37:147 |
| 162146 (19x8534) | |

அட்டவணை 26, துவக்க எழுத்துக்கள் கொண்டிராத 85 சூராக்களுடன் தொடர்பு கொண்ட இதேவிதமான தகவல் தொகுப்புக்களின் சுருக்கப்பட்ட ஒரு வடிவம் ஆகும்.

சூரா மற்றும் வசன எண்கள் சம்பந்தப்பட்ட மற்றொரு வகையிலான அற்புதங்களை இப்போது நாம் நோக்குவோம்.

சூரா எண்ணையும், தொடர்ந்து அந்த சூராவில் உள்ள வசனங்களின் எண்ணிக்கை, பின்னர் அந்த ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும், அத்துடன் கடைசியாக வசன எண்களின் கூட்டுத்தொகையையும் எழுதுங்கள். ஆகவே, சூரா 1க்கு நீங்கள், சூராவுக்குரிய 1 பின்னர் வசனங்களின் எண்ணிக்கைகளுக்கு உரிய 7, ஒவ்வொரு வசன எண்ணுக்கு உரிய 1234567, அத்துடன் கடைசியில் வசன எண்களின் கூட்டுத் தொகைக்குரிய 28 ஆகியவற்றை எழுதுவீர்கள். அதாவது 1 7 1234567 28. சூரா 2க்குரிய எண் இது போல் காட்சியளிக்கும்: 2 286 123456........ 286 41041. 114 சூராக்கள் முழுவதற்கும் இதனையே செய்யுங்கள், அத்துடன் பின்னர் இந்த எண்களைக் கூட்டுங்கள். அதன் கூட்டுத் தொகை 759 இலக்கங்கள் கொண்டதாகும், மேலும் 19ன் ஒரு பெருக்குத் தொகையுமாகும்.

*அட்டவணை 27: ஒவ்வொரு சூராவிற்குமுரிய சூரா, வசனங்கள் மொத்த எண்ணிக்கை, வசன எண்கள் & வசன எண்களின் கூட்டுத்தொகை*

| சூரா | சூரா, வசனங்களின் எண்ணிக்கை, வசன எண்கள்,&வசன எண்களின் கூட்டுத்தொகை |
|---|---|
| 1 | 17123456728 |
| 2 | 228612345............................28641041 |
| – | |
| 114 | 114612345621 |
| மொத்தம் 759 இலக்கங்கள் கொண்டது & 19ன் பெருக்குத்தொகை | |

*அட்டவணை 26: துவக்க எழுத்துகளற்ற 85 சூராக்கள் கணித ரீதியில் குறியீடு செய்யப்படுதல்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 4 | 176 | 15576 | 15756 |
| – | – | – | – |
| 9 | 127 | 8128 | 8264 |
| – | – | – | – |
| 113 | 5 | 15 | 133 |
| 114 | 6 | 21 | 141 |
| 5733 | 3491 | 146842 | 156066 (19x8214) |

இப்போது ஒரு சூராவிலுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கை எண்ணிக்கை, தொடர்ந்து வசன எண்களின் கூட்டுத்தொகை ஆகியவற்றை எழுதி அந்த எண்கள் அனைத்தையும் இடப்புறமாக நெறிப்படுத்தி அமைத்துக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு சூரா1ன் வசனங்களின் எண்ணிக்கை 7ஆகும். மேலும் அவ்வசன எண்களின் கூட்டுத்தொகை 28 ஆகும். எனவே, சூரா 1–க்குரிய இணைந்த எண் 7 28 ஆக இருக்கும். சூரா 2–க்கு அது 286 41041 ஆக இருக்கும், சூரா 3–க்கு அது 200 20100 ஆக இருக்கும்; இவ்வாறே தொடர்ந்து சூரா 114க்குரிய இணைந்த எண்ணானது 6 21 ஆகும். அட்டவணை 28ல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த எண்கள் முழுவதும் இடது புறமிருந்தே தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள், பின்னர் வழக்கமான முறைப்படி வலப்புறத்திலிருந்து இடப்புறமாக, அவற்றைக் கூட்டுங்கள். இடப்புறத்தில் நெறிப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த எல்லா எண்களின் கூட்டுத்தொகையாவது 4, 859, 309, 774 அல்லது 19x255753146.

கடைசியாக, மேற்குறிப்பிட்ட அதே விஷயத்தை (அனைத்து எண்களையும் இடப்புறமாக நெறிப்படுத்தி அமைத்துக் கொள்வதை தொடர்ந்தவாறு), வசனங்களின் மொத்த எண்ணிக்கைக்குப் பதிலாக, ஒவ்வொரு வசனத்தின் எண்ணை மட்டும் எழுதிக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு சூரா 1 க்குரிய எண்ணாக அதன் ஏழு வசனங்களுடன் (1234567) அந்த எண்களின் கூட்டுத்தொகையும் (28) இணைக்கப்படுகின்றது. எனவே, சூரா 1க்குரிய இணைந்த எண் 1234567 28 ஆக இருக்கும்.

*அட்டவணை 29 : இடப்புறத்தில் நெறிப்படுத்தப்பட்டு, வசன எண்கள் மற்றும் வசன எண்களின் கூட்டுத்தொகை*

| சூரா | வசன எண்கள் & வசனங்களின் கூட்டுத் தொகை |
|---|---|
| 1 | 123456728 |
| 2 | 1234.................. 28641041 |
| – | – |
| 114 | 12345621 |
| மொத்தம் 757 இலக்கங்கள் கொண்டது & 19ன் பெருக்குதொகை | |

*அட்டவணை 28 : இடப்புறத்தில் நெறிப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சூராவிற்குமுரிய வசனங்களின் எண்ணிக்கை & வசன எண்களின் கூட்டுத்தொகை*

| சூரா எண் | மொத்த வசனங்கள் & வசனங்களின் கூட்டுத்தொகை |
|---|---|
| 1 | 728 |
| 2 | 28641041 |
| 3 | 20020100 |
| – | – |
| 114 | 621 |
| | 4859309774 = |
| | 19 x 255753146 |

சூரா 114க்குரிய இணைந்த எண்ணானது 123456 21 ஆக இருக்கும். அட்டவணை 29 இந்தச் செயல்முறையை எடுத்துக் காட்டுகின்றது. இடப்புறம் நெறிப்படுத்தி அமைக்கப்பட்ட இந்த அனைத்து எண்களின் கூட்டுத் தொகையானது 757 இலக்கங்களைக் கொண்டுள்ளது, அத்துடன் அப்போதும் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே உள்ளது.

# மானிட சக்திக்கப்பாற்பட்ட எண்களின் கோவைகள்

குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும், அந்த சூராவின் வசனங்களின் எண்ணிக்கையை முன்னர் அமைத்து ஒவ்வொரு சூராவுக்கும் நாம் எழுதுவோம். இவ்விதமாக ஏழு வசனங்களைக் கொண்டதான சூரா 1 ஆனது, 7 1234567 என்ற எண்ணின் மூலம் எடுத்துக்காட்டப்படும். இங்கே நாம் செய்வது என்னவென்றால் வசனங்களின் எண்களை ஒன்றின் அருகில் மற்றொன்றாக எழுதுவதன் மூலம் நீண்ட எண்களை அமைக்கின்றோம். சூரா 2ன் எண்ணை எடுத்துக்காட்டுவதற்காக, நீங்கள் இந்த சூராவின் வசனங்களின் எண்ணிக்கையான 286 ஐ எழுதி, தொடர்ந்து ஒவ்வொரு வசனத்தின் எண்ணும் ஒன்றின் அருகில் மற்றொன்றாக எழுதப்பட வேண்டும். இவ்விதமாக, சூரா 2ஐ எடுத்துக்காட்டுகின்ற எண் இதனைப் போல் காட்சியளிக்கும்: 286 123456.......... 284285286. முதல் இரண்டு சூராக்களை எடுத்துக்காட்டுகின்ற இரண்டு எண்களாவன:

**7 1 2 3 4 5 6 7 & 286 1 2 3 4 5 .......... 284 285 286.**

முதல் இரண்டு சூராக்களையும் எடுத்துக் காட்டுகின்ற இந்த இரண்டு எண்களையும் ஒரு எண்ணாக அமைப்பதற்காக ஒன்றாகச் சேர்த்து இடுவதன்மூலம் நமக்கு இந்த எண் கிடைக்கும் :

**7 1 2 3 4 5 6 7 286 1 2 3 4 5...... 284 285 286.**

குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வசனமும் எழுதப்படுகின்ற வரை, இந்தச் செயல் முறை தொடரப்படுகின்றது, இவ்விதமாகக் குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும் உள்ளடக்கிய ஒரு மிக நீண்ட எண் அமைக்கப்படுகின்றது. முழுக் குர்ஆனையும் எடுத்துக் காட்டுகின்ற எண்ணானது **19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது, மேலும் 12692 இலக்கங்களைக் கொண்டுள்ளது, இதுவும் கூட 19ன் ஒரு பெருக்குத் தொகையேயாகும்.**

**7 1234567 286 12345...... 286 ..... 5 12345 6 123456**

**முதல் எண் : மிக நீண்ட இந்த எண் 12692 இலக்கங்களைக் கொண்டுள்ளது (19x668) மேலும் குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வசனத்தையும் உட்படுத்திக் கொள்கின்றது. ஒவ்வொரு சூராவிலுள்ள வசனங்களின் எண்ணிக்கை அதன் வசனங்களுக்கு முன்னால் அமைந்துள்ளது. மிக நீண்ட எண்களை வகுக்கின்ற ஒரு விசேஷக் கணினித் திட்டம் இந்த நீண்ட எண் 19ன் ஒரு பெருக்குத் தொகையாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.**

ஒவ்வொரு சூராவிற்கும் முன்னர் அந்த சூராவிலுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையை இடுவதற்குப் பதிலாக, அதனை நாம் ஒவ்வொரு சூராவின் இறுதியில் இடுவோம். எனவே, சூரா 1–ஐ எடுத்துக்காட்டும் எண் இதனைப் போல் காட்சியளிக்கும்: 71234567 என்பதற்குப் பதிலாக, 12345677. சூரா 2ஐ எடுத்துக்காட்டுகின்ற எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கும்: 286 12345........ 284 285286 என்பதற்குப் பதிலாக, 12345......... 284 285 286 286. முதல் இரண்டு சூராக்களை எடுத்துக் காட்டுகின்ற எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கும் :

**1 2 3 4 5 6 7 7 & 1 2 3 4 5 ............ 284 285 286 286.**

முதல் இரண்டு சூராக்களையும் எடுத்துக்காட்டுகின்ற மிக நீண்ட ஓர் எண்ணை அமைக்கும் வண்ணம் மேற்கூறப்பட்ட இரண்டு எண்களையும் நாம் ஒன்றாக இட்டால் இதனைப் போல் காட்சியளிக்கக் கூடியதொரு எண் நமக்குக் கிட்டுகின்றது:

**1 2 3 4 5 6 7 7 1 2 3 4 5 ....... 284 285 286 286.**

ஒவ்வொரு சூராவினுடைய வசனங்களின் மொத்த எண்ணிக்கையை நாம் ஒவ்வொரு சூராவின் கடைசியில் எழுதி வருவதால், குர்ஆனின் இறுதியில் எண் இடப்பட்டுள்ள அதன் வசனங்களின் மொத்த எண்ணிக்கையை (6234) நாம் இட வேண்டும். எனவே, கடைசியான எண்கள் கடைசி சூராவையும் (123456 6), தொடர்ந்து குர்ஆனிலுள்ள எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கையும் [6234] எடுத்துக் காட்டுகின்றன :

**1 2 3 4 5 6 6 & 6234 >>> 1 2 3 4 5 6 6 6234.**

எல்லா சூராக்களின் எல்லா வசனங்களையும் ஒன்றாக இடுவது, 12696 இலக்கங்கள் கொண்ட நீண்டதொரு எண்ணைத் தருகின்றது, மேலும் **19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.**

**1234567 7 12345....... 286 286 12345 5.... 123456 6 6234**

**இரண்டாம் எண் : ஒவ்வொரு சூராவிலுமுள்ள ஒவ்வொரு வசன எண்ணும் அந்தந்த சூராவின் வசனங்களுடைய எண்ணிக்கையைக் கொண்டு தொடரப்படுகின்றது. இங்கே காட்டப்பட்டுள்ள கடைசி 11 இலக்கங்களாவன, கடைசி சூராவின் 6 வசனங்கள், அதன் வசனங்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு (6), குர்ஆனிலுள்ள எண் இடப்பட்டுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையால் (6234) தொடரப்படுகின்றது. அந்த முழுமையான, மிக நீண்ட எண், 19ன் ஒரு பெருக்குத் தொகையாகும்.**

## இப்போது நாம் ஒவ்வொரு சூரா எண்ணையும் உட்படுத்திக் கொள்வோம்.

ஒவ்வொரு சூராவின் ஒவ்வொரு வசன எண்ணையும் எழுதி, அந்த சூரா எண்ணைக் கொண்டு தொடர்ந்து, அந்த சூராவிலுள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு தொடருங்கள். எனவே, சூரா 1ஐ எடுத்துக்காட்டுகின்ற எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கும் : 1234567 1 7. சூரா 2ஐ எடுத்துக் காட்டுகின்ற எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கும் : 12345........ 284285286 2 286. கடைசி சூராவை (எண்.114) எடுத்துக்காட்டுகின்ற எண் இதனைப் போல் காட்சியளிக்கும் : 123456 114 6. மீண்டும், எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கை (6234) இறுதியில் சேர்க்கப்படுகின்றது. முழுக் குர்ஆனையும் எடுத்துக் காட்டுகின்ற, இந்த எண், **19ன் ஒரு பெருக்குத் தொகையாகும்;** அது இதனைப் போல் காட்சியளிக்கும்:

**1234567 1 7 12345 ..... 286 2 286 123456 114 6 6234**

**மூன்றாம் எண் : ஒவ்வொரு வசனத்தின் எண்ணும், அந்த சூரா எண்ணால் தொடரப்பட்டு, பின்னர் அந்த சூராவிலுள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு தொடரப்படுகின்றது. எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கை இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட எண் (12930 இலக்கங்கள்) 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.**

ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையை அந்த சூராவிற்குப் பின்னால் இடுவதற்குப் பதிலாக, இப்போது நாம் அதனை அந்த சூராவிற்கு முன்னால் இடுவோம். எனவே, சூரா 1ஐ எடுத்துக்காட்டுகின்ற எண் இதனைப் போல் காட்சியளிக்கும் : 123456 1 7 என்பதற்குப் பதிலாக, 7 1234567 1, மேலும் சூரா 2ஐ எடுத்துக்காட்டுகின்ற எண் இதனைப் போல் காட்சியளிக்கும்: 12345.... 284 285 286 2 286 என்பதற்குப் பதிலாக, 286 12345....... 284 285 286 2. குர்ஆன் முழுமையையும் எடுத்துக்காட்டுகின்ற மிக நீளமான இந்த எண்_***19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.***

**7 1234567 1 286 12345 ...... 286 2 ..... 6123456 114 6234**

**நான்காம் எண் : ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையானது, ஒவ்வொரு வசனத்தின் எண்ணைக் கொண்டும், பின்னர் அந்த சூரா எண்ணாலும் தொடரப்படுகின்றது. மேலே காட்டப்பட்டுள்ளதில் கடைசி 14 இலக்கங்களாவன கடைசி சூராவிலுள்ள வசனங்களின் எண்ணிக்கையான (6), அந்த ஆறு வசனங்களின் எண்களால் தொடரப்பட்டு (123456), அந்த சூரா எண்ணைக் கொண்டு தொடரப்பட்டு (114), பின்னர் குர்ஆனிலுள்ள எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டதாகும். மிக நீண்ட இந்த எண் (12930 இலக்கங்கள் கொண்டது) 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.**

இப்போது, நாம் ஒவ்வொரு சூராவிலுமுள்ள, ஒவ்வொரு வசன எண்ணையும் எழுதி, ஒவ்வொரு சூராவின் வசன எண்களுடைய கூட்டுத் தொகையால் அதனைத் தொடர்வோம். சூரா 1 வசனங்கள் 7ஐக் கொண்டுள்ளது, மேலும் இந்த வசன எண்களின் கூட்டுத் தொகையாவது 1+2+3+4+5+6+7 = 28. இவ்விதமாக, சூரா 1ஐ எடுத்துக் காட்டும் எண் இதனைப் போல் காட்சியளிக்கும் : 1234567 28.

சூரா 2–க்குரிய வசன எண்களின் கூட்டுத்தொகையாவது 41041 ஆகும். (1+2+3...... +286). எனவே சூரா 2 ஐ எடுத்துக்காட்டும் எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கும் : 12345..... 284 285 286 41041.

6 வசனங்களைக் கொண்ட , கடைசி சூராவை எடுத்துக்காட்டும் எண், இதனைப் போல் காட்சியளிக்கும் : 123456 21, ஏனெனில் 1+2+3+4+5+6=21.

மொத்தக் குர்ஆனையும் எடுத்துக்காட்டுகின்ற, முழுமையான எண், 12836 இலக்கங்களைக் கொண்டது, மேலும் **19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.** அது இதனைப் போல் காட்சியளிக்கும் :

**1234567 28 12345 .......... 284285286 41041 ...... 123456 21**

**ஐந்தாம் எண் : ஒவ்வொரு சூராவிலுமுள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணும் அந்த வசன எண்களின் கூட்டுத்தொகையால் தொடரப்படுகின்றது. இந்நீண்ட எண் 12836 இலக்கங்கள் கொண்டது, மேலும் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.**

குறிப்பிடத்தக்கவாறு, மேலே காட்டப்பட்டுள்ள "ஐந்தாம் எண்ணை" நாம் எடுத்து அதன் வசன எண்கள் மற்றும் வசன எண்களின் கூட்டுத்தொகையின் வரிசையை நாம் பின்னோக்கி அமைத்தால், அதாவது, வசன எண்களின் கூட்டுத் தொகையை நகர்த்தி, அதனை அந்த சூராவிற்கு முன்னால் இட்டால், அதனால் கிடைக்கப்பெறுகின்ற நீண்ட எண்ணானது **அப்போதும் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே உள்ளது.**

**28 1234567 41041 12345 ........ 285286 .............. 21 123456**

**ஆறாவது எண் : ஒவ்வொரு சூராவிற்கும் பின்னால் என்பதற்குப் பதிலாக, வசன எண்களின் கூட்டுத் தொகையை முன்னால் அமைத்தல், அதுவும் கூட 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே இருக்கின்ற (12836 இலக்கங்கள்) நீண்டதொரு எண்ணைக் கொடுக்கின்றது.**

இந்த சூராக்களைப் பின்னோக்கி எழுதினாலும் கூட, அதாவது, கடைசி சூராவில் துவங்கி முதல் சூராவுடன் முடிப்பதன் மூலம் சூராக்களின் வரிசை அமைப்பை பின்னோக்கி அமைத்தல், வசன எண்களின் கூட்டுத்தொகையை ஒவ்வொரு சூராவின் வசனங்களுக்குப் பின்னால் அமைத்தல் மூலம், கிடைக்கின்ற விளைவு அப்போதும் **19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே இருக்கின்றது.**

**123456 21 12345 15 ... 12345 ... 286 41041 1234567 28**

**ஏழாவது எண் : சூராக்களின் வரிசையமைப்பைப் பின்னோக்கி அமைத்தல் – கடைசி சூராவிலிருந்து துவங்கி முதல் சூராவுடன் முடிவடைதல் – மேலும் ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும் எழுதி, அத்துடன் ஒவ்வொரு சூராவிற்குமுரிய வசன எண்களின் கூட்டுத்தொகையை அதன் வசனங்களுக்குப் பின்னால் எழுதினால், அதன் விளைவு 12836 இலக்கங்கள் கொண்ட நீண்டதொரு எண்ணாக உள்ளது. இந்த நீண்ட எண் 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.**

முழுக் குர்ஆனுக்குரிய வசன எண்களின் கூட்டுத் தொகையை (333410), குர்ஆனில் எண் இடப்பட்டுள்ள வசனங்களின் மொத்தத் தொகையால் (6234) தொடர்ந்து, பின்னர் சூராக்களின் எண்ணிக்கையையும் (114) எழுதுங்கள். அப்போது ஒவ்வொரு சூராவும் அதன் எண்ணைத் தொடர்ந்து அதன் வசனங்களின் எண்ணிக்கையால் எடுத்துக் காட்டப்படுகின்றது. சூராக்கள் 1 மற்றும் 2ஐ எடுத்துக் காட்டுகின்ற எண்கள் 1 7 மற்றும் 2 286 ஆகும், குர்ஆனுடைய அனைத்து சூராக்களையும் உள்ளடக்கிய, முழுமையான அந்த எண் 474 இலக்கங்களைக் கொண்டது, மேலும் அது **19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.** அது இதனைப் போல் காட்சியளிக்கின்றது :

| |
|---|
| **333410 6234 114 1 7 2 286 3 200 .... 113 5 114 6** |

**எட்டாவது எண் : வசன எண்களின் மொத்தக் கூட்டுத் தொகையானது, (333410), எண் இடப்பட்டுள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கை (6234), சூராக்களின் எண்ணிக்கை (114), பின்னர் சூரா எண்கள் அத்துடன் ஒவ்வொரு சூராவின் வசனங்களின் எண்ணிக்கைகள் ஆகியவற்றால் தொடரப்படுகின்றது.**

இப்போது நாம் "எட்டாவது எண்ணில்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சூரா எண் மற்றும் அதன் வசனங்களுடைய எண்ணிக்கையின் வரிசையைத் திருப்பி அமைப்போம். இவ்விதம், முதல் இரண்டு சூராக்களை எடுத்துக்காட்டுகின்ற எண்கள் இதனைப் போல் காட்சியளிக்கும் : 1 7 & 2 286 என்பதற்குப் பதிலாக 7 1 & 286 2. இந்த முழுமையான எண்ணும் கூட 474 இலக்கங்களைக் கொண்டிருப்பதோடன்றி **அப்போதும் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே உள்ளது.** அது இதனைப் போல் காட்சியளிக்கும்:

| |
|---|
| **333410 6234 114 7 1 286 2 200 3 .... 5 113 6 114** |

**ஒன்பதாவது எண் : சூரா எண் மற்றும் வசனங்களுடைய எண்ணிக்கையின் வரிசைக்கிரமத்தைப் பின்னோக்கி அமைத்தல் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவே இருக்கின்ற நீண்டதொரு எண்ணை அப்போதும் நமக்குத் தருகின்றது.**

சூரா 1க்குரிய வசன எண்களின் கூட்டுத்தொகையை (28) நாம் எழுதி, சூரா 2க்குரிய வசன எண்களின் கூட்டுத் தொகையை (41041) கொண்டு தொடர்ந்து, அத்துடன் இவ்வாறே குர்ஆனின் இறுதி வரை செய்து, அத்துடன் இறுதியில் வசன எண்களின் மொத்தக் கூட்டுத் தொகையை (333410) அமைப்பதால், விளைகின்ற நீண்ட எண் (பத்தாவது எண்.) 377 இலக்கங்களைக் கொண்டது, **மேலும் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.**

| |
|---|
| **28 41041 20100..... 15 21 333410** |

**பத்தாவது எண் : குர்ஆனிலுள்ள ஒவ்வொரு சூராவிற்குமுரிய வசன எண்களின் கூட்டுத்தொகைகள் ஒன்றின் அருகில் மற்றொன்றாக எழுதப்பட்டு, இறுதியில் வசன எண்களின் மொத்தக் கூட்டுத்தொகையால் (333410) தொடரப்படுகின்றது.**

**இந்த நீண்ட எண் (377 இலக்கங்கள்) 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.**

குர்ஆனிலுள்ள சூராக்களின் எண்ணிக்கையை எழுதி (114), எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கையால் (6234) தொடரப்பட்டு, ஒவ்வொரு சூரா எண் மற்றும் அதன் வசன எண்களின் கூட்டுத் தொகையால் தொடரப்பட்டால், இறுதியான அந்நீண்ட எண் (612 இலக்கங்கள்) **19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **114** | **6234** | **1** | **28** | **2** | **41041** | **3** | **20100.....** | **113** | **15** | **114** | **21** |

**பதினொன்றாவது எண் : சூராக்களின் எண்ணிக்கையானது எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கை, பின்னர் ஒவ்வொரு சூரா எண் மற்றும் அதன் வசன எண்களின் கூட்டுத்தொகையால் தொடரப்படுவது, 19ன் பெருக்குத் தொகையாக உள்ள இந் நீண்ட எண்ணை (612 இலக்கங்கள்) தருகின்றது.**

குர்ஆனின் முக்கிய அம்சம் எதுவும் பிரமிப்பூட்டும் இந்தக் கணிதக் குறியீட்டைக் கொண்டு பாதுகாக்கப்படாமல் விட்டு விடப்பட்டுள்ளது என்று எவரொருவரும் நினைத்துக் கொள்ளாதிருக்கும் பொருட்டு, இன்னும் அதிகமான அம்சங்களை நாம் நோக்குவோம்.

சூராக்களின் எண்ணிக்கையை நாம் எழுதி (114), எண் இடப்பட்ட வசனங்களின் மொத்த எண்ணிக்கையால் தொடரப்பட்டு, முழுக்குர்ஆனிலுமுள்ள வசன எண்களின் மொத்தக் கூட்டுத்தொகையால் தொடரப்பட்டு (333410), ஒவ்வொரு சூரா மற்றும் அதன் வசனங்களின் எண்களால் தொடரப்பட்டு வந்தால், 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ள மிக நீண்டதோர் எண்ணை (12712 இலக்கங்கள்) நாம் அடைகின்றோம்.

**114 6234 333410 1 1 2 3 4 5 6 7 ..... 114 1 2 3 4 5 6**

**பன்னிரண்டாவது எண்**

ஒவ்வொரு சூராவின் வசனங்களுடைய எண்ணிக்கைகளை ஒன்றின் அருகே மற்றொன்றாக நாம் எழுதினால், **19ன் பெருக்குத் தொகையாக உள்ள** 235 இலக்கங்கள் கொண்ட ஓர் எண்ணை நாம் அடைகின்றோம். இதனைச் செய்வதற்கு, குர்ஆனிலுள்ள எண் இடப்பட்டுள்ள வசனங்களின் (6234) மொத்த எண்ணிக்கையை எழுதி, ஒவ்வொரு சூராவினுடைய வசனங்களின் எண்ணிக்கையை எழுதி, பின்னர் குர்ஆனிலுள்ள எண் இடப்பட்டுள்ள வசனங்களின் எண்ணிக்கையால் நிறைவு செய்ய இறுதியான அந்த நீண்ட எண் இதனைப் போல் காட்சியளிக்கும் :

| 6234 | 7 286 200 176........... | 127 ........... | 5 4 5 6 | 6234 |
|---|---|---|---|---|
| ( மொத்த வசனங்கள் ) | ( முதல் 4 சூராக்கள் ) | (சூரா 9) | ( கடைசி 4 சூராக்கள் ) | ( மொத்த வசனங்கள் ) |

**பதின்மூன்றாம் எண்**

குர்ஆனிலுள்ள எண் இடப்பட்ட வசனங்களின் எண்ணிக்கையை (6234) எழுதி, சூராக்களின் எண்ணிக்கையால் (114) தொடரப்பட்டு, ஒவ்வொரு சூராவிலுமுள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணால் தொடரப்பட்டு, பின்னர் குர்ஆனிலுள்ள எண் இடப்பட்ட வசனங்களின் எண்ணிக்கையையும் (6234) சூராக்களின் எண்ணிக்கையையும் (114) கொண்டு அதனை நிறைவு செய்யுங்கள். இறுதியான அந்த எண் 12479 இலக்கங்கள் கொண்டது, **19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.**

**6234 114 1234567 12345... 286.... 123456 6234 114**

**பதினான்காம் எண்**

ஒவ்வொரு சூராவிலுமுள்ள ஒவ்வொரு வசன எண்ணையும் எழுதி, அதன் வசனங்களின் எண்ணிக்கையுடன் கூட்டப்பட்ட ஒவ்வொரு சூரா எண்ணால் தொடரப்படுவதன் மூலம் 12774 இலக்கங்கள் கொண்ட மற்றொரு நீண்ட எண் அமைக்கப்படுகின்றது. சூரா 1 கொண்டிருப்பவை 7 வசனங்கள், எனவே கூட்டுத்தொகை 1+7 = 8 ஆகும். எனவே, சூரா 1ஐ எடுத்துக்காட்டுகின்ற அந்த எண் இதனைப்போல் காட்சியளிக்கும் : 1234567 8 சூரா 2 ஆனது 286 வசனங்கள் கொண்டது, சூரா 2–ஐ எடுத்துக்காட்டுகின்ற எண் இதனைப்போல் காட்சியளிக்கும்: 12345 ...... 286 288. குர்ஆனிலுள்ள ஒவ்வொரு

சூராவுக்கும் இவ்வாறு செய்யப்படுகின்றது. இறுதியான ஒன்றிணைக்கப்பட்ட அந்த எண் 12774 இலக்கங்கள் கொண்டது, **19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது.**

**1234567 8 12345 ..... 286 288...... 123456 120**

**(1+7) (2+286) (114+6)**

**பதினைந்தாம் எண்**

இன்னும் குறிப்பான விசேஷ அம்சங்கள் பின் இணைப்பு 2, 9, 19, 24, 25, 26, 29, மற்றும் 37ல் உள்ளன.

# இஸ்ரேலின் சந்ததியினரில் இருந்து ஒரு சாட்சி (46:10)

*பிரகடனிப்பீராக : "கடவுளிடமிருந்து இது வந்திருந்து, இதனை நீங்கள் நிராகரித்து விட்டால் ? இஸ்ரேலின் சந்ததியினரில் இருந்து ஒரு சாட்சி இதனைப் போன்றதொரு அற்புத நிகழ்வுக்குச் சான்று பகர்ந்துள்ளார், மேலும் அவர் நம்பிக்கை கொண்டு விட்டார், ஆயினும் நீங்கள் நம்பிக்கை கொள்வதற்கு ஆணவம் மிகக் கொண்டவர்களாக மாறிவிட்டீர்கள். தீயவர்களைக் கடவுள் வழிநடத்த மாட்டார்." [46:10]*

கீழ்கண்ட மேற்கோள் **STUDIES IN JEWISH MYSTICISM,** (யூத ஆய்வுகளுக்குரிய சங்கம், கேம்ரிட்ஜ், மாஸ்., ஜோஸஃப் டான் மற்றும் ஃப்ராங்க் டால்மேஜ், பக்கம் 88, 1982) எனும் புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. இம்மேற்கோள் ரப்பி ஜுதா எனும் பக்திமானின் (கி.பி.12ம் நூற்றாண்டு) புத்தகத்தைக் குறித்து சொல்லப்படுகின்றது:

*ஃப்ரான்சில் உள்ள (யூத) மக்கள் இவ்வார்த்தையை (காலைத் தொழுகையில்) சேர்த்துக் கொள்வதை ஒரு வழக்கமாக ஆக்கினர். " அஷ்ரீ தெமிமே தெரக் (நன்னெறியான வழியில் நடப்பவர்கள் பாக்கியவான்கள்)", ஆனால் நம்முடைய மதகுரு, பக்திமான், ஆசீர்வதிக்கப்பெற்ற நினைவாற்றலை உடையவர், அவை அனைத்தும் முற்றிலும் தவறானது என எழுதினார். இவை அனைத்தும் மொத்தமான பொய்மையாகும், ஏனென்றால் அங்கே 19 முறைகள் மட்டுமே புனிதமான பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (காலைத் தொழுகையின் அப் பகுதியில்).... மேலும் அதே விதமாக வெ – எல்லஹ் ஷெமோட்டின் உட்கட்டமைப்பில் எலோஹிம் எனும் வார்த்தையை நீங்கள் 19 முறைகள் காண்கின்றீர்கள்... அதே போல, இஸ்ரவேலர்கள் பத்தொன்பது முறைகள் " மகன்கள்" என்றழைக்கப்படுவதை நீங்கள் காண்கின்றீர்கள், இன்னும் வேறு பல உதாரணங்களும் உள்ளன. பத்தொன்பதின் இந்த வகைகள் அனைத்தும் பல சிக்கலான பாகங்களாகப் பின்னிப்பிணைந்துள்ளன, மேலும் அவை எட்டிற்கும் அதிகமான பெரும் புத்தகத் தொகுப்புக்களின் உள்ளே இருக்கின்ற பல இரகசியங்களையும் தத்துவ அர்த்தங்களையும் தன்னுள் கொண்டுள்ளன............மேலும் கூடுதலாக இந்தப் பகுதியில் 152 (19x8) வார்த்தைகள் உள்ளன.*

# பெற்றுக்கொண்டோம்

**குர்ஆனிலுள்ள அவருடைய அற்புதம் இந்த நேரத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டுமென நாடியிருந்த அந்தக் கடவுளுக்கே அனைத்துப் புகழ்ச்சியும் நன்றிகளும் உரியன. மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கண்டுபிடிப்பின் பல பகுதிகளை கீழ் குறிப்பிட்டுள்ள இவர்கள் மூலமாக வெளிப்படுத்தியதனால் இந்நபர்களை கடவுள் சிறப்பித்து மேலும் அவர்களை ஆசிர்வதித்துமுள்ளார் : அப்துல்லாஹ் ஆரிக், மஹ்மூத் அலீ ஆபிப், லிசா ஸ்ப்ரே , எதிப் யுக்ஸல், இஹ்ஸான் ரமதான், ஃபெரோஸ் கர்மலி , இஸ்மாயீல் பரக்கத், கட்டுட் அடிஸொமா, அஹ்மத் யூசுஃப், சீஸர் A.மஜுல், முஹ்தஸீம் எரிஸன் மற்றும் எமிலி கே ஸ்டெர்ரட்.**

# பின் இணைப்பு 2

# கடவுளின் உடன்படிக்கைத் தூதர்

*கடவுளின் உடன்படிக்கைத் தூதரானவர் ஒன்றுபடுத்துகின்ற ஒரு தூதராவார். அவருடைய பணியாவது இருக்கின்ற எல்லா மார்க்கங்களையும் தூய்மைப்படுத்தியும், ஒற்றுமைப்படுத்தியும் அவற்றை ஒன்றாக : இஸ்லாம் (சரணடைதல்) ஆக்குவதே.*

*இஸ்லாம் என்பது ஒரு பெயர் **அல்ல**; அது ஜீஸஸையோ, மேரியையோ, முஹம்மதையோ அல்லது புனிதர்களையோ இணை வழிபாடு செய்யாது கடவுளுக்கு **மட்டுமேயான** ஒருவரது பூரண சரணடைதல் மற்றும் அர்ப்பணித்தலைப் பற்றியதொரு விவரிப்பு ஆகும். இந்த அளவுகோலைப் பூர்த்தி செய்கின்ற எவரொருவரும் ஒரு "முஸ்லிம்" (சரணடைந்தவர்) ஆவார். எனவே, ஒருவர் ஒரு யூத முஸ்லிமாக, ஒரு கிறிஸ்தவ முஸ்லிமாக, ஒரு ஹிந்து முஸ்லிமாக, ஒரு பௌத்த முஸ்லிமாக அல்லது ஒரு முஸ்லிம் முஸ்லிமாகவும் இருக்கலாம்.*

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர், "கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கம் சரணடைதலேயாகும்" (3:19) எனவும், மேலும் "எவரொருவர் சரணடைதலை விடுத்து மற்றவற்றை ஒரு மார்க்கமாகத் தேடுகின்றாரோ, அவன்/அவளிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" (3:85) எனவும் கடவுளின் பிரகடனத்தைச் சேர்ப்பிக்கின்றார்.*

*கடவுளின் ஒரு தூதர் அவர் கடவுளின் தூதர்தான் என்பதற்கான சான்றினை முன் வைத்தாக வேண்டும். அவருடைய தூதுச் செய்திகளைச் சேர்ப்பிப்பதற்கு எல்லாம் வல்லவரால் அங்கீகரிக்கப்பட்டவராக அவர் இருக்கின்றார் என்பதை நிரூபிக்கின்ற மறுக்க இயலாத தெய்வீக அத்தாட்சிகளால் கடவுளின் ஒவ்வொரு தூதரும் ஆதரவளிக்கப்படுகின்றார். மோஸஸ் தன்னுடைய கைத்தடியைக் கீழே எறிய அது ஒரு நாகமாக மாறியது, ஜீஸஸ் கடவுளின் அனுமதியுடன் தொழுநோயாளிகளுக்கு நிவாரணமளித்தார், மேலும் இறந்தவர்களை உயிர்ப்பித்தார், ஸாலிஹின் அத்தாட்சி பிரசித்தி பெற்ற அந்த ஒட்டகமாக இருந்தது. ஆப்ரஹாம் நெருப்பைக் கடந்து வெளியே வந்தார், மேலும் முஹம்மதின் அற்புதம் இக்குர்ஆனாகவே இருந்தது (29:50–51).*

*இந்தக் குர்ஆன் (3:81, 33:7, 33:40) மற்றும் பைபிள் (மல்க்கியா 3:1–3) ஆகியவை கடவுளின் உடன்படிக்கைத்தூதரான, ஒன்றுபடுத்துகின்ற இத்தூதரின் வருகையைப் பற்றி முன்னறிவித்து உள்ளன. இத்தகையதொரு மிக முக்கியத்துவம் வாய்ந்த இறைப்பணியைக் கொண்ட ஒரு தூதர் மிகவும் வலிமையான அற்புதத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும் என்பது பொருத்தமான ஒன்றேயாகும் (74:30–35). முந்திய தூதர்களின் அற்புதங்கள் காலம் மற்றும் இடத்தின் வரையறைக்கு உட்பட்டதாக இருந்த அதே சமயம், அவருடைய உடன்படிக்கைத் தூதருக்கு ஆதரவளிக்கின்ற கடவுளின் அற்புதம் நிலைத்திருப்பதாகும்; எவரொருவராலும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அதனைக்காண இயலும்.*

*கடவுளின் உடன்படிக்கைத் தூதர் ரஷாத் கலீஃபாவேயாவார் என்பதற்கான, பௌதீகரீதியான, சோதித்தறியக்கூடிய, சரி பார்த்துக் கொள்ளக் கூடிய அத்துடன் சற்றும் மறுக்க இயலாத ஆதாரத்தை இந்தப் பின் இணைப்பு எடுத்துக்காட்டுகின்றது.*

## ஒரு குர்ஆனிய உண்மை

நபிமார்கள் அனைவரும் இந்த உலகிற்கு வந்துவிட்ட பின்னர், கடவுளின் அனைத்து வேதங்களும் சேர்ப்பிக்கப்பட்டு விட்ட பின்னர், கடவுளின் உடன்படிக்கைத் தூதரானவர் அனுப்பப்படுவார் என்பது குர்ஆனிலுள்ள முக்கியமான முன்னறிவிப்புகளில் ஒன்றாகும்.

**நபிமார்களிடம் கடவுள், ‘‘நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுப்பேன். அதன் பின்னர், வழக்கிலுள்ள அனைத்து வேதங்களையும் உறுதிப்படுத்துவதற்காக ஒரு தூதர் வருவார். நீங்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ளவும் அவருக்கு ஆதரவளிக்கவும் வேண்டும்,’’ என்று கூறியவாறு ஓர் உடன்படிக்கை எடுத்தார். அவர் கூறினார், ‘‘இதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளவும், இந்த உடன்படிக்கையை நிறைவேற்றவும் உறுதிமொழியளிக்கின்றீர்களா?’’ அவர்கள் கூறினர், ‘‘நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்’’. அவர் கூறினார், ‘‘இவ்விதமாக நீங்கள் சாட்சியம் பகர்ந்துள்ளீர்கள், அத்துடன் நானும் உங்களுடன் சேர்ந்து சாட்சி பகர்கின்றேன்.’’ [3:81]**

முஹம்மத் மர்மட்யூக் பிக்தால் 3:81 ஐக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்தார்:

**நபிமார்களுடனான [தன்னுடைய] உடன்படிக்கையை அல்லாஹ் செய்த போது, [அவர் கூறினார்] : வேதம் மற்றும் அறிவில் இருந்து நான் உங்களுக்குக் கொடுத்தவற்றைக் கவனித்துப் பாருங்கள். மேலும் அதன் பின்னர் நீங்கள் கொண்டிருப்பவற்றை உறுதிப்படுத்தியவராக, ஒரு தூதர் உங்களிடம் வருவார். நீங்கள் அவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும், அத்துடன் நீங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும். அவர் கூறினார்: நீங்கள் இதனை ஏற்றுக் கொண்டு, மேலும் இதில் [இந்த விஷயத்தில்] [நான் உங்கள் மீது சுமத்துகின்ற] என்னுடைய சுமையை நீங்கள் எடுத்துக் கொள்வீர்களா? அவர்கள் பதிலளித்தனர்: நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அவர் கூறினார்: அப்படியெனில் சாட்சியம் பகருங்கள். உங்களுடன் நானும் ஒரு சாட்சியாக இருப்பேன்.**

கடவுளுடன் அந்தப் பவித்திரமான உடன்படிக்கை செய்து கொண்ட நபிமார்களில் முஹம்மதும் ஒருவராக இருந்தார் என்பதை சூரா 33–ல் இருந்து நாம் அறிந்து கொள்கிறோம்.

**நபிமார்களிடம் இருந்தும், [முஹம்மதே] உம்மிடமிருந்தும், மேலும் நோவா மற்றும் ஆப்ரஹாம் மற்றும் மோஸஸ் மற்றும் மேரியின் மகனான ஜீஸஸிடமிருந்தும் ஓர் உடன்படிக்கையை நாம் வாங்கியபோது, பவித்திரமானதொரு உடன்படிக்கையையே அவர்களிடமிருந்து நாம் எடுத்தோம். [33:7] [முஹம்மத் மர்மட்யூக் பிக்தாலின் மொழிபெயர்ப்பின்படி]**

ஏனைய பல வசனங்களுடன், வசனம் 3:81, “*நபி*” [வேதம் வழங்கப்பட்ட தூதர்] மற்றும் “*ரஸூல்*” [தூதர்] ஆகியோரின் வரையறைதனை வழங்குகின்றது. இவ்விதமாக “*நபி*” என்பவர் புதியதொரு வேதத்தைச் சேர்ப்பிக்கின்ற கடவுளின் ஒரு தூதராவார், அதே சமயம் ‘‘*ரஸூல்*” என்பவர் வழக்கிலுள்ள வேதத்தை உறுதிப்படுத்துவதற்காகக் கடவுளால் நியமிக்கப்பட்ட ஒரு தூதுவராவார்; அவர் புதியதொரு வேதத்தைக் கொண்டு வருவதில்லை. குர்ஆனின்படி, ஒவ்வொரு “*நபி*”யும் ஒரு “*ரஸூல்*” ஆக இருக்கின்றார், ஆனால் ஒவ்வொரு “*ரஸூல்*”–ம் ஒரு “*நபி*” ஆக இருப்பதில்லை.

ஒவ்வொரு தூதருக்கும் புதியதொரு வேதம் கொடுக்கப்படவில்லை. சில முஸ்லிம் “அறிஞர்களால்” கூறப்படுவதைப் போல், கடவுள் ஒரு வேதத்தை நபிக்குத் தந்து அதனை அவருக்கு மட்டுமெனத் தனிப்பட்ட முறையில் வைத்துக் கொள்ளுமாறு கூறுவார் என்பது அறிவுக்குகந்ததாக இல்லை [2:42, 146, 159]. குர்ஆனுடன் போதுமான அளவுக்குப் பரிச்சயமில்லாதவர்கள், 19:53ல் கூறப்பட்டுள்ளதனால், ஆரோன் வேதம் ஒன்றினைப் பெற்றிராத ஒரு “*நபி*”யாக இருந்தார் என்று எண்ண முற்படுகின்றனர். ஆயினும், சாசனப் புத்தகமானது குறிப்பாக “மோஸஸ் மற்றும் ஆரோன் இருவருக்கும்” கொடுக்கப்பட்டது என்பதைக் குர்ஆன் தெளிவாக எடுத்துரைக்கின்றது [21:48, 37:117].

குர்ஆனின், 33:40ல் இருந்து, முஹம்மத் இறுதி *நபி*யாக இருந்தாரே அன்றி, இறுதித் தூதர் [*ரஸூல்*] ஆக இல்லை என்று நாம் கற்றுக் கொள்கின்றோம்:

**உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மத் தந்தையாக இருந்ததில்லை; அவர் கடவுளின் ஒரு தூதராகவும் [*ரஸூல்*] மேலும் இறுதி நபியாகவும் இருந்தார். [33:40]**

மிக முக்கியமான இந்த வரையறை குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. 33:40ல் உபயோகப்படுத்தப்படுகின்ற சொற்றொடரான *"முஹம்மத் காத்தம் அல் – நபிய்யீன்"* (இறுதி நபி) என்பது 1349, 19x71 என்ற எழுத்தெண் மதிப்பினைக் கொண்டுள்ளது, அதே சமயம் தவறான சொற்றொடரான *"முஹம்மத் காத்தம் அல் – முர்ஸலீன்"* (கடைசித்தூதர்) என்பது 19ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

சமகாலத்திய, உயிருடன் உள்ள ஒரு தூதரை ஏற்றுக்கொள்ள மறுத்தல் புராதன காலம் முதலே மானிடர்களின் ஓர் இயல்பாக இருந்து வந்துள்ளது. ஜோசஃப் "கடைசித் தூதர்" (40:34) என்று அறிவிக்கப்பட்டார். இருப்பினும், அவருக்குப் பின்னர் மோஸஸ், டேவிட், ஸாலமன், ஜீஸஸ் மற்றும் முஹம்மத் உட்பட பல தூதர்கள் வந்தனர்.

## உடன்படிக்கை பூர்த்தியானது

இவ்வுலகத்தைப் பொறுத்த வரை, நபிமார்கள் இறந்தவர்களாகி விட்ட போதிலும், அவர்களுடைய ஆன்மாக்கள், உண்மையான அந்த நபர்கள், ஆதமும் ஏவாளும் வசித்திருந்த அந்த ஏதேன் தோட்டத்தில் இப்போது உள்ளனர் என நாம் அறிவோம். தங்கள் உடல்களை உதிர்த்து விட்டு, இந்த உலகத்திலிருந்து புறப்பட்டு விட்ட நம்பிக்கையாளர்களை இறந்து விட்டவர்களென்று எண்ணுவதிலிருந்து சில வசனங்கள் நம்மைத் தடுக்கின்றன (2:154, 3:169, 4:69). நம்முடைய உலகத்திற்கு அவர்கள் திரும்பி வர இயலாது என்ற போதிலும் (23:100), அவர்கள் சுவனத்தில் "உயிருடன்" இருக்கின்றனர். தயவுசெய்து பின் இணைப்பு 17ஐப் பார்க்கவும்.

மெக்காவிற்கு என்னுடைய ஹஜ் புனிதயாத்திரையின் போது, டிசம்பர் 21, 1971, ஹிஜ்ஜஹ் 3, 1391, செவ்வாய்க்கிழமை அன்று சூரிய உதயத்திற்க முன்னர் நான், ரஷாத் கலீஃபா, அந்த ஆன்மா, உண்மையான அந்த நபர், உடல் அல்ல, பிரபஞ்சத்தில் உள்ள ஓர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, கடவுளின் உடன்படிக்கைத் தூதர் நான் என நபிமார்கள் அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டேன். 1408 ரமதான் வரை அந்த நிகழ்வைப் பற்றிய விவரங்கள் மற்றும் மெய்யான தாத்பர்யம் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை.

கூர்மையான தன்னுணர்வுடன், நான் கண்டதென்னவென்றால், நான் அசைவற்று அமர்ந்திருந்தேன், அதேசமயம், நபிமார்கள், ஒருவர் பின் ஒருவராக, என்னை நோக்கி வந்தனர். என் முகத்தை நோக்கினர், பின்னர் அவர்களுடைய தலைகளை அசைத்தனர். இந்த உலகத்தில் அவர்கள் காட்சியளித்தபடி, அவர்களுக்குரிய பாணியிலான உடை அணிந்தவர்களாக, கடவுள் அவர்களை எனக்கு காட்டினார், மகத்தான பிரமிப்பு, ஆனந்தம், மற்றும் மரியாதையான ஒரு சூழ்நிலை அங்கு நிலவியது.

ஆப்ரஹாமைத் தவிர, நபிமார்கள் எவரும் எனக்கு அடையாளம் காட்டப்படவில்லை. மோஸஸ், ஜீஸஸ், முஹம்மத், ஆரோன், டேவிட், நேவா மற்றும் ஏனையவர்கள் உட்பட அனைத்து நபிமார்களும் அங்கே இருந்தனர் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆப்ரஹாமின் அடையாளம் வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக நான் நம்புவதென்னவென்றால், நான் அவரைப்பற்றிக் கேட்டேன் என்பதேயாகும். என்னுடைய சொந்தக் குடும்பத்தினர் – நான், என் தந்தை, என் தந்தையுடன் பிறந்தவர்கள் ஆகியோருடன் அவர் கொண்டிருந்த அழுத்தமான சாயலினால் நான் வியப்படைந்தேன். நான் வியந்து நின்ற ஒரே நேரம் அதுவாகத்தான் இருந்தது, "என்னுடைய உறவினர்களைப் போல் தோற்றமளிக்கின்ற இந்த நபி யார்?" விடை வந்தது: "ஆப்ரஹாம்". எந்த மொழியும் பேசப்படவில்லை. தகவல் தொடர்பு அனைத்தும் மனோரீதியிலேயே செய்யப்பட்டது.

நபிமார்களின் இந்த உடன்படிக்கை பூர்த்தியடைந்த தேதியானது **ஜூல் ஹிஜ்ஜஹ் 3, 1391** என்பது கவனிக்கத்தக்கதாகும். மாதத்துடன் (12), தேதியைக் கூட்டி (3), அத்துடன் வருடத்தையும் (1391) நாம் கூட்டினால், நமக்குக் கிட்டுகின்ற ஒரு மொத்தத் தொகை 1406, 19 x 74. சூரா 74–ல் தான் குர்ஆனின் பொது வகு எண்ணான, 19 எனும் எண், குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண் 1406, குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது முதல் அதன் அற்புதம் வெளிப்படுத்தப்பட்ட காலம் வரையிலான வருடங்களின் எண்ணிக்கையும் ஆகும் என்பதைக் கவனியுங்கள் (பின் இணைப்பு 1).

கடவுளின் உடன்படிக்கைத் தூதருடைய இறைப் பணியாவது வழக்கிலுள்ள வேதங்களை உறுதிப்படுத்தி, அவற்றை தூய்மைப்படுத்தி, ஒரே தெய்வீகச் செய்தியாக அதனை ஒன்றுபடுத்துவதேயாகும். கடவுளின் தூதுச் செய்தியை அதன் தூய்மையான பழைய நிலைக்கு மீட்பது, நன்னெறியுடைய நம்பிக்கையாளர்களை – யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், இந்துக்கள் இன்னும் மற்றவர்களை – காரிருளிலிருந்து வெளியேற்றி ஒளியினுள் கொண்டுவருவது ஆகிய பொறுப்புக்கள் இத்தகையதொரு தூதர் மீது சாட்டப்பட்டுள்ளன என்பதைக் குர்ஆன் எடுத்துரைக்கின்றது (5:19, & 65:11). *கடவுளால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஒரே மார்க்கம் இஸ்லாம் (கடவுளுக்குப் பூரணமாகச் சரணடைதல்) ஆகும்* எனப் பிரகடனிப்பவராக அவர் உள்ளார் *(3:19)*.

**இதோ நான் என் தூதனை அனுப்புகின்றேன், அவன் எனக்கு முன்பாகப்போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**
**ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்?**
**அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்?**
**அவர் புடமிடுகிறவனுடைய அக்கினையைப் போலவும்**
**வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்.** (மல்கியா 3 : 1–2)

# சான்று

கடவுளின் உடன்படிக்கைத் தூதரின் பெயர் "ரஷாத் கலீஃபா" என்று குர்ஆனுக்குள் கணித ரீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ளது, கணிணியுகத்தில் உலகத்திற்குக் கடவுளின் தூதரை அறிமுகப்படுத்த மிகவும் உகந்த முறை நிச்சயமாக இதுவேயாகும்.

**(1)** பின் இணைப்பு 1ல் காட்டப்பட்டுள்ளபடி, குர்ஆனில் உள்ள கடவுளின் மகத்தான அற்புதம் பகா எண்ணான 19ன் அடிப்படையிலானது, மேலும் 1406 வருடங்கள் (19 X 74) அது மறைக்கப்பட்டதாக இருந்து வந்தது. பிரமிப்பூட்டும் இந்த அற்புதம் ரஷாத் கலீஃபா மூலம் திரைவிலக்கப்பட வேண்டுமென எல்லாம் வல்ல கடவுளால் முன்னரே விதிக்கப்பட்டிருந்தது. கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்களும், கீழ்த்திசை நாடுகளைச் சேர்ந்த பண்டிதர்களும் வீணாக முயற்சித்துக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்களில் எவரும் குர்ஆனுடைய துவக்க எழுத்துக்களுடைய தாத்பர்யத்தின் இரகசியத்தை விடுவிக்க அனுமதிக்கப்படவில்லை.

**(2) உண்மையான நம்பிக்கையாளர்களுக்கும், தேடுபவர்களுக்கும்** இந்தக் குர்ஆன் இலகுவாக்கப்பட்டுள்ளது (54:17, 22, 32, 40; 39:28). குறிப்பிட்ட தெய்வீக அங்கீகாரம் கொடுக்கப்பெற்ற உண்மையான நம்பிக்கையாளராக அவனோ அல்லது அவளோ இருந்தாலேயன்றி, இந்தக் குர்ஆனை, அதன் மகத்தான அற்புதத்தைக் கூறவில்லை, அடைவதற்குக்கூட எவர் ஒருவரும் அனுமதிக்கப்படுவதில்லை என்பது ஒரு மாற்றப்பட மாட்டாத தெய்வீக விதியாகும் (17:45–46, 18:57, 41:44, 56:79). ரஷாத் கலீஃபா மூலம் குர்ஆனின் அற்புதம் திரைவிலக்கப்படுதலானது, அவருடைய தூதுத்துவத்திற்குரிய முக்கியமானதோர் அத்தாட்சியாகும்.

**(3)** "ரஷாத் رشاد" எனும் பெயரின் வேர்ச் சொல் "ரஷத رشد" (நேர்வழி காட்டலை உயர்த்திப் பிடித்தல்) ஆகும். இந்த வேர்ச் சொல்லானது குர்ஆனில் 19 முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. குர்ஆனின் பொது வகுஎண் பத்தொன்பதே யாகும். (பார்க்க **குர்ஆனிலுள்ள வார்த்தைகளுக்கான சொல்லகராதி**, முதல் அச்சு, பக்கம் 320).

**அட்டவணை : 1**
"ரஷத" மற்றும் "கலீஃபா"வுடைய
சூராக்கள் மற்றும் வசனங்கள்

| | "ரஷத" | | "கலீஃபா" | |
|---|---|---|---|---|
| எண் | சூரா | வசனம் | சூரா | வசனம் |
| 1. | 2 | 186 | (2) | 30 |
| 2. | - | 256 | 38 | 26 |
| 3. | 4 | 6 | | |
| 4. | 7 | 146 | | |
| 5. | 11 | 78 | | |
| 6. | - | 87 | | |
| 7. | - | 97 | | |
| 8. | 18 | 10 | | |
| 9. | - | 17 | | |
| 10. | - | 24 | | |
| 11. | - | 66 | | |
| 12. | 21 | 51 | | |
| 13. | 40 | 29 | | |
| 14. | - | 38 | | |
| 15. | 49 | 7 | (சூரா 2 | |
| 16. | 72 | 2 | மீண்டும் இடம் | |
| 17. | - | 10 | பெறுகின்றது) | |
| 18. | - | 14 | | |
| 19. | - | 21 | | |
| | 224 | 1145 | 38 | 56 |

224+1145+38+56=1463=19x77

**(4)** “ரஷாத்” எனும் வார்த்தை 40:29 மற்றும் 38ல் இடம்பெறுகிறது. “கலீஃபா” எனும் வார்த்தை 2:30 மற்றும் 38:26ல் இடம் பெறுகின்றது. முதலாவது “கலீஃபா” மானிடர் அல்லாத ஒரு “கலீஃபாவை”, அதாவது சாத்தானைக் குறிக்கின்றது, அதே சமயம் இரண்டாவது நிகழ்வு (சூரா 38), ஒரு மானிட “கலீஃபாவைக்” குறிக்கின்றது. “ரஷாத்” (40:29, 38) மற்றும் “கலீஃபா” (38:26) ஆகியவற்றின் சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்களை நாம் கூட்டினால் நமக்குக் கிட்டுவது 40+29+38+38+26 = 171 = 19 x 9.

**(5)** பாகுபாடின்றி எல்லா “ரஷத”க்களும் மற்றும் எல்லாக் “கலீஃபா”க்களும் இடம் பெறுகின்ற எல்லா சூரா மற்றும் வசன எண்களின் கூட்டுத்தொகையானது 1463, 19x77 என கூடிவருகின்றது (அட்டவணை 1).

**(6)** “ரஷத” எனும் வேர்ச்சொல் இடம் பெறுகின்ற அனைத்து சூராக்கள் மற்றும் வசனங்களின் மொத்தத் தொகையானது 1369, அல்லது (19 x 72) + 1, அதே சமயம் “கலீஃபா”வின் அனைத்து இடம்பெறுதல்களுக்கும் உரிய மொத்தத் தொகையாவது 94, (19 x 5)—1 ஆகும். “ரஷத” வில் ஒன்று கூட உள்ளது, மேலும் “கலீஃபா” வில் ஒன்று குறைவாக உள்ளது எனும் உண்மையானது அந்தப் பெயர் “ரஷாத் கலீஃபா” என்பதைத் தெளிவாக ஒன்று சேர்க்கின்றது, வேறு “ரஷாத்” எவரையோ அல்லது வேறு “கலீஃபா” எவரையோ அல்ல.

**(7)** “ரஷாத்” தின் எழுத்தெண் மதிப்பு 505 ஆகும், அத்துடன் “கலீஃபா” வின் மதிப்பு 725 ஆகும் (அட்டவணை 7, பின்இணைப்பு 1). குர்ஆனின் துவக்கத்தில் இருந்து முதல் “ரஷத”வின் முதல் நிகழ்வு வரை சூரா எண்கள் மற்றும் வசனங்களின் எண்ணிக்கையுடன் “ரஷாத் கலீஃபா”வின் மதிப்பை (1230) நாம் கூட்டினால், மொத்தத் தொகை 1425, 19 x 75 ஆகும். விபரங்கள் அட்டவணை 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை–2: குர்ஆனின் துவக்கம் முதல் “ரஷத“ எனும் வேர்சொல்லின் முதல் நிகழ்வு வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | 7 | 28 |
| 2 | 185 | 17205 |
| 3 | 192 | 17233 (19 x 907) |

அத்துடன், “ரஷாத்” (505) + “கலீஃபா” (725) + சூரா கூட்டுத் தொகை (3) மொத்த வசனங்கள் (192)=1425 (19x75)
505 + 25 + 3 + 192 = 1425 = 19 x 75

**(8)** குர்ஆனின் துவக்கத்தில் இருந்து “ரஷத” எனும் வேர்ச்சொல்லின் முதல் நிகழ்வு வரையுள்ள ஒவ்வொரு சூராவிலுமுள்ள எல்லா வசனங்களின் எண்களையும் நாம் கூட்டினால், அதாவது வசன எண்களின் கூட்டுத்தொகை (1+2+3+.........+n) மொத்தத் தொகையாக வருவது 17233, 19 x 907 (அட்டவணை 2).

**(9)** குர்ஆனுடைய அற்புதத்தின் அடிப்படை அஸ்திவாரமாக அமைந்திருப்பது குர்ஆனியத் துவக்க எழுத்துக்கள் ஆகும். இத்துவக்க எழுத்துக்கள் சூராக்கள் 2, 3, 7, 10, 11, 12, 13, 14, 15, 19, 20, 26, 27, 28, 29, 30, 31, 32, 36, 38, 40, 41, 42, 43, 44, 45, 46, 50 மற்றும் 68ல் இடம்பெறுகின்றன. “ரஷாத் கலீஃபா” வின் மதிப்புடன் (1230), இந்த எண்களின் கூட்டுத்தொகையை (822) நாம் சேர்த்தால் மொத்தத் தொகை 2052, 19x108 ஆகும்.

**(10)** அட்டவணை 3ல் காட்டப்பட்டுள்ளபடி, “ரஷத” எனும் வேர்ச்சொல் இடம்பெறுகின்ற அனைத்து சூராக்களின் எண்களுடன் வசனங்களின் எண்ணிக்கையை நாம் கூட்டினால், நமக்குக் கிட்டுவது 1368, அல்லது 19 x 72.

**(11)** “ரஷத” எனும் வேர்ச்சொல்லின் முதல் இடம்பெறுதலில் இருந்து (2:186) “ரஷத”வின் கடைசி இடம் பெறுதல் (72:21) வரை, சூரா எண்ணை நாம்

அட்டவணை 3: “ரஷத” எனும் வேர்ச்சொல் இடம் பெறுகின்ற சூராக்கள்.

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 2 | 286 | 288 |
| 4 | 176 | 180 |
| 7 | 206 | 213 |
| 11 | 123 | 134 |
| 18 | 110 | 128 |
| 21 | 112 | 133 |
| 40 | 85 | 125 |
| 49 | 18 | 67 |
| 72 | 28 | 100 |
| 224 | 1144 | 1368 (19 x 72) |

எழுதி, ஒவ்வொரு சூராவின் வசனங்களின் எண்ணிக்கையால் தொடரச் செய்து, தனித்தனி வசன எண்களால் தொடர்ந்து, அத்துடன் இந்த எண்களை ஒன்றின் அருகில் மற்றொன்றை நாம் அமைத்தால், 11087 இலக்கங்கள் கொண்ட மிக நீண்டதொரு எண் நமக்குக் கிட்டுகின்றது, அத்துடன் 19ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது. மிக நீண்ட இந்த எண் சூராவின் எண்ணான 2ஐக் கொண்டு துவங்கி வசனம் 186ல் உள்ள "ரஷத" வின் முதல் நிகழ்வில் இருந்து அந்த சூராவின் இறுதி வரை (100 வசனங்கள்) சூரா 2ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கையால் தொடரப்படுகின்றது. எனவே, இந்த எண்ணின் துவக்கம் இதனைப் போல் காட்சியளிக்கின்றது : 2 100. இந்த 100 தனித்தனி வசனங்களின் எண்கள் (187 முதல் 286) இந்த எண்ணிற்கு அடுத்து அமைக்கப்படுகின்றன. இவ்விதமாக, சூரா 2ஐ எடுத்துக் காட்டுகின்ற இந்த எண்ணானது இதனைப் போல் காட்சியளிக்கின்றது: 2 100 187 188 189 ...... 285 286. இதே செயல் முறை "ரஷத" எனும் வேர்ச்சொல்லின் கடைசி நிகழ்வான, 72:21 வரை தொடர்ந்து செய்யப்படுகின்றது. அந்த முழு எண் இவ்வாறு காட்சியளிக்கின்றது:

**2 100 187 188 189 .... 72 21 1 2 3 .... 19 20 21**

**"ரஷத" வின் முதல் நிகழ்வில் இருந்து கடைசி வரை (2:187 முதல் 72:21 வரை) சூரா எண்ணானது வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டும், பின்னர் தனித்தனி வசனங்களின் எண்களைக் கொண்டும் தொடரப்படுகின்றது.**

**அந்த முழு எண் 11087 இலக்கங்களைக் கொண்டது, அத்துடன் 19 ஆல் வகுபடக்கூடியதாகவும் உள்ளது.**

**(12)** "ரஷத" எனும் வேர்ச்சொல்லின் முதல் இடம் பெறுதலில் இருந்து 38:26ல் உள்ள "கலீஃபா" எனும் வார்த்தை வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்களை நாம் ஆராய்ந்தால், சூரா எண்கள் மற்றும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கைகளின் கூட்டுத் தொகை 4541, அல்லது 19 X 239 என்பதை நாம் காண்கிறோம். விபரங்கள் அட்டவணை 4ல் உள்ளன.

**(13)** "ரஷாத்" தின் மதிப்பை நாம் எழுதி (505), "கலீஃபா"வின் மதிப்பால் தொடர்ந்து (725), "ரஷத" எனும் வேர்ச்சொல் இடம் பெறுகின்ற ஒவ்வொரு சூரா எண்ணால் தொடர்ந்து, முதல் "ரஷத" வில் (2:186) இருந்து "கலீஃபா" (38:26) எனும் வார்த்தை வரை அதன் வசனங்களின் எண்களால் தொடரச் செய்தால், 19ஆல் வகுபடக்கூடிய நீண்டதொரு எண் நமக்குக் கிட்டுகின்றது.

"ரஷத"வின் முதல் நிகழ்வானது 2:186 ல் உள்ளது. எனவே நாம் 2 186ஐ எழுதுகின்றோம். இரண்டாம் நிகழ்வானது 2:256ல் உள்ளது, எனவே நாம் 256ஐ எழுதுகின்றோம். அடுத்த நிகழ்வானது 4:6 ல் உள்ளது, எனவே நாம் 4 6ஐ எழுதுகின்றோம், தொடர்ந்து 38 26ஐ (38:26ல் "கலீஃபா" இடம்பெறுகின்றது) நாம் எழுதுகின்ற வரை அவ்வாறே செய்கின்றோம். அந்த முழு எண் இவ்வாறு காட்சியளிக்கின்றது.

*அட்டவணை 4: முதல் "ரஷத" வில் இருந்து கலீஃபா வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 2 | 100 (187-286) | 102 |
| 3 | 200 | 203 |
| 4 | 176 | 180 |
| 5 | 120 | 125 |
| - | - | - |
| 36 | 83 | 119 |
| 37 | 182 | 219 |
| 38 | 26 | 64 |
| 740 | 3801 | 4541 (19 x 239) |

**505 725 2 186 256 4 6 ..... 38 26**

**"ரஷாத்" தின் எழுத்தெண் மதிப்பு "கலீஃபா"வின் மதிப்பால் தொடரப்பட்டு, "ரஷத"வின் முதல் நிகழ்வில் இருந்து 38:26ல் "கலீஃபா"வின் நிகழ்வு வரை, "ரஷத" என்னும் வேர்ச்சொல்லின் ஒவ்வொரு நிகழ்வுக்குமுரிய சூரா எண் மற்றும் வசன எண்களால் தொடரப்படுகின்றது.**

# கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கம் இஸ்லாம் ஆகும் (3:19)

**(14)** இக்குர்ஆன் [சரணடைதல்] இஸ்லாமின் மூன்று தூதர்களை குறிப்பிடுகின்றது:

| | | |
|---|---|---|
| **ஆப்ரஹாம்** | இஸ்லாமின் அனுஷ்டானங்கள் அனைத்தையும் சேர்ப்பித்தார். அவருடைய பெயரின் மதிப்பாவது | = 258 |
| **முஹம்மத்** | இக்குர்ஆனைச் சேர்ப்பித்தார். அவருடைய பெயரின் மதிப்பாவது | = 92 |
| **ரஷாத்** | இஸ்லாமின் நம்பகத்தன்மைக்குரிய சான்றினைச் சேர்ப்பித்தார். அவருடைய பெயரின் மதிப்பாவது | = 505 |
| | இந்த மூன்று பெயர்களின் மொத்த எழுத்தெண் மதிப்பு = 258 + 92 + 505 | = 855 (19 x 45) |

உண்மையான யூதமதம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் ஆகியவை ஒரே மார்க்கமாக ஒன்றுபடுத்தப்படும் – கடவுளுக்கு **மட்டுமே**யான முழுமையான சரணடைதல் மற்றும் பரிபூரண அர்ப்பணிப்பு.

வழக்கிலுள்ள மதங்களான யூத மதம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் ஆகியவை கடுமையாகச் சீர்கெட்டு விட்டன, எனவே அவை அப்படியே மடிந்து போகும் [9:33, 48:28, 61:9].

**(15)** சில சமயங்களில் இக்குர்ஆன் “ஆப்ரஹாம், இஸ்மாயில், மற்றும் ஐஸாக்” எனக் குறிப்பிடுவதால், இஸ்மாயில் மற்றும் ஐஸாக் உட்படுத்தப்பட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது. குறிப்பிடத்தக்க விதமாக, இஸ்மாயில் மற்றும் ஐஸாக் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது, அப்போதும் 19–ன் பெருக்குத் தொகையாக உள்ள ஒரு மொத்தத் தொகையையே தந்தது. அட்டவணை 5ல் காட்டப்பட்டுள்ளபடி, புதிய மொத்தத் தொகையானது 1235 அல்லது 19x65 ஆக உள்ளது. 19ஆல் வகுபடக்கூடிய இத்தன்மையானது, ஆப்ரஹாம், முஹம்மத், அல்லது ரஷாத் ஆகிய பெயர்களில் ஏதேனுமொன்று விடுபட்டுவிட்டால் சாத்தியமாகாது.

## ஏன் 81 : வசனம் 81 & சூரா 81.

**(16)** சூரா 3–ன் **வசனம் 81**ல் கடவுளின் உடன்படிக்கைத் தூதர் முன்னறிவிக்கப்படுகின்றார். “ரஷாத்” தின் எழுத்தெண் மதிப்புடன் [505] “கலீஃபா”வின் எழுத்தெண் மதிப்பை [725] கூட்டி, அத்துடன் இந்த வசன எண்ணை யும் [81] கூட்டினால், விளைவது 05+725+81= 1311=19x69.

**(17)** **சூரா 81–ஐ** நாம் நோக்கினால், எல்லாம் வல்லவரால் வலிமையாக ஆதரிக்கப்பட்டு மேலும் அங்கீகரிக்கப்பட்டவரான கடவுளின் ஒரு தூதரைப்பற்றி நாம் படிக்கின்றோம் [வசனம் 19]. எனவே சூரா 3ன் வசனம் 81, மற்றும் சூரா 81, வசனம் 19 ஆகியவை “ரஷாத் கலீஃபா” எனும் பெயருடன் பலமான தொடர்பு கொண்டுள்ளன. 505+725+81=1311=19x69.

**(18)** குர்ஆனின் துவக்கத்தில் இருந்து, கடவுளின் உடன்படிக்கைத் தூதர் முன்னறிவிக்கப்படுகின்ற வசனம் 3:81 வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கையுடன் சூரா எண்களை நாம் கூட்டினால், மொத்தத் தொகையானது 380, 19X20 என வருகின்றது. இந்தத் தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 6–ல் உள்ளன.

*அட்டவணை 5: ஐந்து தூதர்களின் எழுத்தெண் மதிப்பு*

| பெயர் | தனித்தனி எழுத்துக்களின் மதிப்பு | மொத்தம் |
|---|---|---|
| ஆப்ரஹாம் | 1+2+200+5+10+40 | 258 |
| இஸ்மாயில் | 1+60+40+70+10+30 | 211 |
| ஐஸாக் | 1+60+8+100 | 169 |
| முஹம்மத் | 40+8+40+4 | 92 |
| ரஷாத் | 200+300+1+4 | 505 |
| | 1235 | 1235 (19x65) |

*அட்டவணை 6: சூராக்கள் மற்றும் வசனங்கள் 1 : 1 முதல் 3:81 வரை*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 2 | 286 | 288 |
| 3 | 81 | 84 |
| 6 | 374 | 380 (19 x 20) |

**(19)** வசனம் 3:81—ன் எழுத்தெண் மதிப்பாவது 13148, 19X692 ஆகும். இந்த மதிப்பு இந்த வசனத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தின் எண் மதிப்பையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுகின்றது.

**(20)** "நீங்கள் கொண்டிருப்பவற்றை உறுதிப்படுத்துகின்றவரான, ஒரு தூதர் உங்களிடம் வருவார்": என்று வசனம் 3:81—ல் உடன்படிக்கைத் தூதரைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் பகுதியை நாம் நோட்டமிட்டால், அரபி மொழியில்:

*"ஜாஅகும் ரஸுலுன் முஸத்திகுன் லிமா மஅகும்"*

جَآءَكُمْ رَسُولٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمْ

இந்த முக்கியமான சொற்றொடரின் எழுத்தெண் மதிப்பு 836, 19X44 என்பதை நாம் காண்கின்றோம்.

## "நிச்சயமாக, நீர் தூதர்களில் ஒருவராக இருக்கின்றீர்" (36:3)

**(21)** சூரா 36—ன் வசனம் 3 குறிப்பாக என்னைச் சுட்டிக்காட்டுகின்றது என வானவர் கேப்ரியேல் மூலமாக நான் மிகவும் உறுதிபடக் கூறப்பட்டேன். சூரா 2, பின்னர் சூரா 3, பின்னர் சூரா 7, எனத் தொடர்ந்து துவக்க எழுத்துக்கள் கொண்ட சூராக்களை மட்டும் நாம் வரிசைப்படுத்தினால், யா சீன், சூரா 36, 19ம் இடத்தினை ஆக்கிரமித்திருப்பதை நாம் காண்கிறோம்.

**(22)** சூரா 36—ன் வசனம் 3 கூறுகின்றது, "நிச்சயமாக, நீர் தூதர்களில் ஒருவராக இருக்கின்றீர்." இந்தச் சொற்றொடரின் எழுத்தெண் மதிப்பு 612 ஆகும். இந்த மதிப்புடன் (612), சூரா எண்ணையும் (36), வசன எண்ணையும் (3), "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பையும் (505+725), கூட்டினால் நமக்குக் கிடைப்பது 36+3+612+505+725=1881=19X99.

**(23)** சூரா 36, வசனங்கள் 83 கொண்டது. சூரா எண்ணுடன் (36), அதன் வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி (83), "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பையும் நாம் கூட்டினால் (505+725), நமக்குக் கிடைப்பது 36+83+505+725=1349=19X71.

**(24)** உடன்படிக்கைத் தூதர் முன்னறிவிக்கப்படுகின்ற 3:81 முதல் சூரா 36 வரை 3330 வசனங்கள் உள்ளன. "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்புடன் (1230), இந்த வசனங்களின் எண்ணிக்கையை (3330) கூட்டுவதன் மூலம் நமக்குக் கிடைப்பது 505+725+3330=4560, 19X240.

**(25)** 3:81 முதல் 36:3 வரை 3333 வசனங்கள் அங்கே உள்ளன. இந்த எண்ணை "ரஷாத்" என்பதன் எழுத்தெண் மதிப்புடன் கூட்டுவதன் மூலம் (505), நமக்குக் கிடைப்பது 3333+505=3838=19X202.

**(26)** 1:1 முதல் 36:3 வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கை 3705 ஆகும், 19X195 (அட்டவணை 7).

*அட்டவணை 7: சூரா 1 முதல் சூரா 36 வசனம் 3 வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | 7 | 28 |
| 2 | 286 | 41041 |
| 3 | 200 | 20100 |
| - | - | - |
| 9 | 127 | 8128 |
| - | - | - |
| 34 | 54 | 1485 |
| 35 | 45 | 1035 |
| 36 | 2 | 3 |
| 666 | 3705 | 257925 |
| | (19 x 195) | (19 x 13575) |

**(27)** 1:1 முதல் 36:3 வரையுள்ள ஒவ்வொரு சூராவினுடைய வசன எண்களின் கூட்டுத்தொகை 257925, 19X13575 (அட்டவணை 7).

**(28)** சூரா 1 முதல் சூரா 36 வரையுள்ள சூரா எண்களின் கூட்டுத்தொகை 666 ஆகும் (அட்டவணை 7). "ரஷாத் கலீஃபா" வின் எழுத்தெண் மதிப்பினை (505+725), இந்தக் கூட்டுத்தொகையுடன் நாம் கூட்டி, அத்துடன் வசனம் 36:3ன் "நிச்சயமாக நீர் தூதர்களில் ஒருவராக இருக்கின்றீர்", என்பதன் எழுத்தெண் மதிப்பையும் (612) கூட்டினால், மொத்தத் தொகையாவது:666+505+725+612=2508= 19x132.

**(29)** "ரஷத" எனும் வேர்ச்சொல்லின் முதல் இடம் பெறுதலில் இருந்து 36:3 (நீர் தூதர்களில் ஒருவராக இருக்கின்றீர்) வரையுள்ள வசன எண்களின் கூட்டுத் தொகையுடன் (1+2+3+.....+n) சூராக்களின் மொத்தத்தையும் (35) கூட்டி, அத்துடன் சூரா எண்களையும் நாம் கூட்டினால், கூட்டுத் தொகையானது, 241395, 19 x 12705 ஆகும் (அட்டவணை 8).

*அட்டவணை 8: முதல் "ரஷத" வில் இருந்து 36:3 வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்:*

| எண். | சூரா எண் | வசன எண்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | 2 (186-286) | 23836 |
| 2. | 3 | 20100 |
| 3. | 4 | 15576 |
| 4. | 5 | 7260 |
| - | - | - |
| 10. | 9 | 8128 |
| - | - | - |
| 33. | 34 | 1485 |
| 34. | 35 | 1035 |
| 35. | 36 (1-3) | 6 |
| 35 | 665 | 240695 |

35 + 665 + 240695 = 241395 (19 x 12705)

**(30)** "ரஷத" எனும் வேர்ச்சொல்லின் முதல் இடம்பெறுதலில் இருந்து 36:3 வரையுள்ள சூரா எண்களின் கூட்டுத்தொகையானது 665, 19 x 35 ஆகும். இவை 35 சூராக்கள் என்பதை கவனிக்கவும்.

## "வேதத்தையுடைய மக்களுக்கு ஒரு தூதர்"
### (யூதர்கள், கிறிஸ்தவர்கள், மற்றும் முஸ்லிம்கள்)

**வேதத்தையுடைய மக்களே, தூதர்கள் இல்லாத நீண்டதொரு காலத்திற்குப் பின்னர், விஷயங்களை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, நம்முடைய தூதர் உங்களிடம் வந்துள்ளார். "எந்த ஒரு பிரச்சாரகரோ அல்லது எச்சரிப்பவரோ எங்களிடம் வரவில்லை" என நீங்கள் கூறாதிருக்கும் பொருட்டு. ஒரு பிரச்சாரகர் மற்றும் எச்சரிப்பவர் உங்களிடம் வந்துள்ளார். கடவுள் சர்வ சக்தியுடையவர். (5:19)**

**(31)** கண்கூடாக, இந்த வசனத்தின் எண்ணானது, ரஷாத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட குர்ஆனின் பொது வகு எண்ணும், இக்குர்ஆனில் "ரஷத" இடம்பெறுகின்ற எண்ணிக்கையுமான 19 ஆகும்.

**(32)** "ரஷாத் கலீஃபா" வின் மதிப்புடன் (1230), சூரா எண்ணான (5) ஐக் கூட்டி, வசன எண்ணான 19ஐ நாம் கூட்டினால், நமக்குக் கிடைப்பது 1230+5+19= 1254=19 x 66.

**(33)** குர்ஆனின் துவக்கத்தில் இருந்து இந்த வசனம் (5:19) வரையுள்ள சூரா எண்கள் மற்றும் வசனங்களுடைய எண்ணிக்கையின் கூட்டுத்தொகையானது 703, 19X37 ஆகும். பார்க்க அட்டவணை : 9

*அட்டவணை 9: துவக்கம் முதல் 5:19 வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 2 | 286 | 288 |
| 3 | 200 | 203 |
| 4 | 176 | 180 |
| 5 | 19 | 24 |
| 15 | 688 | 703 |
| | | (19 x 37) |

**(34)** "சான்று" எனும் சூரா 98ன் வசனம் 2, "வேதத்தையுடைய மக்களின் (யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள்)" நலனுக்காக கடவுளின் உடன்படிக்கைத் தூதரின் வருகையைப் பிரகடனிக் கின்றது. "ரஷாத்

கலீஃபா"வின் எழுத்தெண் மதிப்புடன் (505+725), சூராவின் எண்ணைக் கூட்டி (98), அத்துடன் வசன எண்ணையும் (2) நாம் கூட்டினால், நமக்கு கிடைப்பது 505+725+98+2=1330=19x70.

**வேதத்தையுடைய மக்களுக்கிடையில் (யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள்) நம்பமறுத்து விட்டவர்கள், மற்றும் போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள், ஆழ்ந்த அத்தாட்சிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட போதிலும், நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (98:1) கடவுளிடமிருந்து ஒரு தூதர், புனித வேதங்களை எடுத்துரைக்கின்றவர். (98:2)**

**(35)** "ஆழ்ந்த அத்தாட்சி" எனப்பொருள் தருகின்றதும், அத்துடன் சூரா 98–ன் தலைப்பாகவும் உள்ள "பய்யினஹ்" எனும் வார்த்தை இக்குர்ஆனில் 19 முறைகள் இடம்பெறுகின்றது என்பது கவனிக்கத்தக்கதாகும். குர்ஆனுடைய தெய்வீக இயற்றுதலுக்குரிய சான்று பகா எண்ணான 19ன் அடிப்படையிலானது, மேலும் 98:2ல் தூதர் எனப்படுபவர் "ரஷாத் கலீஃபா"வே ஆவார் என்பதற்கு, இது மற்றொரு கணிதரீதியிலான உறுதிப்படுத்துதல் ஆகும்.

## ஓர் ஆழ்ந்த தூதர் வந்துள்ளார் (44:13)

**(36)** 1:1 முதல் 44:13 வரை சூரா எண்களை, ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் எண்ணிக்கையுடன் கூட்டுவதன் மூலம், மொத்தமாக வருவது 5415, 19X19X15 (அட்டவணை 10).

**(37)** இந்த சூராவின் எண்ணுடன் (44). தூதர் முன்னுரைக்கப்படுகின்ற வசனத்தின் (13), கூட்டுத் தொகையானது 57, 19x3க்கு சமம். பார்க்க அட்டவணை 10.

### இவ்வுலகத்தின் முடிவு

**(38)** எதிர்காலத்தை அறிந்தவர் கடவுள் ஒருவர்தான்; இந்த உலகம் எப்பொழுது முடிவுறும் என்று மிகச் சரியாக அவர் அறிவார் (7:187; 31:34; 33:63; 41:47; 43:85). தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய தூதர்களுக்கு எதிர்காலத்தின் குறிப்பிட்ட அம்சங்களைக் கடவுள் வெளிப்படுத்துகிறார் என்று குர்ஆனில் இருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். 72:27–ல் உள்ளபடி, ரஷாத் கலீஃபா உலக முடிவின் திரைவிலக்கம் கொண்டு ஆசிர்வதிக்கப்பட்டவராக இருந்தார் என்பதற்கான ஆதாரம் பின் இணைப்பு 25ல் காட்டப்படுகின்றது.

**(39)** குர்ஆனின் துவக்கத்தில் இருந்து வசனம் 72:27 வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கையானது 5472, அல்லது 19 x 72 x 4. 72 : 27ல் அத்தூதர் எதிர்காலத்தைப் பற்றிய தகவல் தரப்படுகின்றார் என்பதையும், அத்துடன் இந்த சூரா 4 "ரஷத" எனும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது என்பதையும் கவனியுங்கள் (72:2, 10, 14 & 21). "ரஷாத் கலீஃபா"வின் எழுத்தெண் மதிப்புடன் (1230), சூரா எண்ணான (72)ஐக் கூட்டி, "ரஷத" குறிப்பிடப்படுகின்ற அந்த 4 வசனங்களின் எண்களைக் கூட்டினால் நமக்குக் கிடைப்பது 1230+72+2+10+14+21 = 1349 = 19x71

**(40)** வசனம் 72:27 இவ்வாசகத்துடன் துவங்குகின்றது:

" الا من ارتضى من رسول "

(அவர் தேர்ந்தெடுக்கின்ற அத்தூதர் மட்டும்). எதிர்காலத்தைப் பற்றிய செய்தியைப் பெறுவதற்குக் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவரான அத்தூதருக்கான இந்தக் குறிப்பு 1919 எனும் ஓர் எழுத்தெண் மதிப்பைக் கொண்டுள்ளது. அட்டவணை 11 தகவல்களை முன்வைக்கின்றது.

*அட்டவணை 10: சூராக்கள் மற்றும் வசனங்கள், 1:1 முதல் 44:13 வரை*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 2 | 286 | 288 |
| 3 | 200 | 203 |
| 4 | 176 | 180 |
| 5 | 120 | 125 |
| - | - | - |
| 9 | 127 | 136 |
| - | - | - |
| 41 | 54 | 95 |
| 42 | 53 | 95 |
| 43 | 89 | 132 |
| 44 | 13 | 57 |
| 990 | 4425 | 5415 |
| | | (19 x 19 x 15) |

அட்டவணை 11: வசனம் 72:27ல் உள்ள
தேர்ந்தெடுக்கப்பட்ட தூதரின்
எழுத்தெண் மதிப்பு

إِلَّا مَنِ ارْتَضَىٰ مِن رَّسُولٍ

| எழுத்து | எழுத்தெண் மதிப்பு |
|---|---|
| அ | 1 |
| ல | 30 |
| அ | 1 |
| ம | 40 |
| ன | 50 |
| அ | 1 |
| ர | 200 |
| த | 400 |
| ட | 800 |
| ய | 10 |
| ம | 40 |
| ன | 50 |
| ர | 200 |
| ச | 60 |
| வ | 6 |
| ல | 30 |
| | 1919 |

## ஒரு போலித்தூதரிடம் இருந்து கடவுளின் தூதரை எவ்வாறு பிரித்தறிவது

போலித் தூதர்களிடமிருந்து மெய்யான கடவுளின் தூதர்களை வேறுபடுத்திக் காண நேரடியான அளவுகோல் களைக் குர்ஆன் வழங்குகின்றது.

(1) கடவுளை **மட்டும்** வழிபடுதலையும், அனைத்து வடிவங்களிலுமான போலித் தெய்வ வழிபாட்டினை முடிவுக்குக் கொண்டு வருவதையும் கடவுளின் தூதர் ஆதரிப்பார்.

(2) கடவுளின் தூதர் தனக்கென ஒரு கூலியை ஒருபோதும் கேட்பதில்லை.

(3) கடவுளின் தூதர் அவருடைய தூதுத்துவத்திற்குரிய தெய்வீகமான, மறுக்க இயலாத சான்று கொடுக்கப்படு கின்றார்.

எவரேனும் கடவுளின் தூதராக இருப்பதாகக் கோரிக் கொண்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள இம்மூன்று குறைந்தபட்ச அளவுகோல்களைப் பூர்த்தி செய்யவில்லை எனில் அவர் பொய்யாகக் கோருகின்றவர் ஆவார்.

**கடவுளின் தூதருக்கும் போலியானதொரு தூதருக்கும் இடையில் மிகவும் முக்கியமான வித்தியாசமாவது, கடவுளின் தூதர் கடவுளால் ஆதரவளிக்கப்பட்டவராக உள்ளார், அதே சமயம் போலித் தூதரானவர் அப்படியல்ல:**

- **கண்களுக்குத் தென்படாத, கடவுளுடைய படைவீரர்கள் மூலம் கடவுளின் தூதர் ஆதரவளிக்கப் பட்டவராக உள்ளார் (3:124–126; 9:26 & 40; 33:9; 37:171–173; 48:4 & 7; 74:31).**
- **கடவுளின் தூதர் கடவுளின் பொக்கிஷத்தைக் கொண்டு ஆதரவளிக்கப்படுகின்றார். (63:7–8)**
- **கடவுளின் தூதரும், அவ்வண்ணமே நம்பிக்கையாளர்களும், இந்த உலகத்திலும் என்றென்றும் வெற்றி மற்றும் கண்ணியத்திற்கு உத்தரவாதமளிக்கப்பட்டவர்களாக உள்ளனர் (40:51 & 58:21).**

எனவே, கடவுளின் தூதருடைய சத்தியத்தன்மை ஒரே சீராக மிகைக்கின்றது, அதே சமயம் ஒரு போலித்தூதரின் பொய்மையானது மாற்றமின்றி, விரைவிலோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, வெளிப்படுத்தப்பட்டு விடுகின்றது.

# கடவுளின் உடன்படிக்கைத் தூதருடைய பிரதான கடமைகள்

குர்ஆன் 3:81—ல் கூறப்பட்டுள்ளபடி, கடவுளின் உடன்படிக்கைத் தூதரானவர் நபிமார்கள் அனைவராலும் சேர்ப்பிக்கப்பட்ட வேதங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்திடவும், மேலும் அவற்றின் அசலான தூய நிலைக்கு மீட்டெடுக்கவும் வேண்டும்.

## கடவுளிடமிருந்துள்ள கருணை (21:107)

நம்பிக்கை கொண்டவர்கள் ஒரு பிரச்சனையை சந்திக்கின்றபோது, அவர்கள் சாத்தியமுள்ள ஒரு சில தீர்வுகளை உருவாக்குகின்றனர், ஆயினும் இது எப்பொழுதும் மாற்றமின்றி கணிசமான சச்சரவுகள், ஒற்றுமைக் குலைவு, மற்றும் ஒழுங்கின்மைக்கு வழிகோலுகின்றது. 2:151, 3:164, மற்றும் 21:107—லிருந்து நம்முடைய பிரச்சினைகளுக்கான இறுதியான தீர்வுகளை வழங்குவதற்காக நம்மிடம் தூதர்களை அவர் அனுப்புவது என்பது கடவுளிடமிருந்து வந்துள்ள கருணையை அன்றி வேறில்லை என்று நாம் கற்றுக் கொள்கின்றோம். நம்முடன் தொடர்பு கொள்வதற்காகவும், அத்துடன் புதிய தகவல்களைப் பரப்புவதற்காகவும் கடவுள் தன்னுடைய தூதர்களை அனுப்புகின்றார் என்று நாம் 42:51—லிருந்து கற்றுக்கொள்கின்றோம். இதனால்தான் 4:65, 80ல் சிறிதளவும் தயக்கமின்றி, கடவுளின் தூதர்கள் மூலம் நம்மிடம் சேர்ப்பிக்கப்பட்ட போதனைகளை ஏற்றுக் கொள்ளுமாறு அழுத்தமான உத்தரவிடப்பட்டுள்ளது.

பின்வருவது கடவுளின் உடன்படிக்கை தூதருடைய பிரதான கடமைகளின் ஒரு பட்டியல் ஆகும்:

1. குர்ஆனுடைய கணிதரீதியிலான அற்புதத்தைத் திரைவிலக்குதல் மேலும் பிரகடனித்தல் (பின்இணைப்பு 1).
2. குர்ஆனில் இருந்து இரண்டு போலியான வசனங்களான 9:128—129—ஐ வெளிப்படுத்தி அகற்றுதல் (பின்இணைப்பு 24).
3. நம்முடைய வாழ்வுகளின் நோக்கத்தை விவரிப்பது ; நாம் ஏன் இங்கு இருக்கின்றோம் (பின்இணைப்பு 7).
4. அனைத்து மக்களுக்குமுரிய ஒரு மார்க்கத்தைப் பிரகடனித்தல், அத்துடன் யூதம் கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாமினைப் பீடித்திருக்கின்ற அனைத்துச் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டுவதும் சுத்திகரிப்பதும் (பின் இணைப்பு 13, 15, 19).
5. ஜகாத் (கடமையான தர்மம்) மீட்சிக்குரிய ஒரு முன் அவசியமாக உள்ளது (7:156) எனப் பிரகடனித்தல், மேலும் ஜகாத்தைக் கடைப்பிடிக்கும் சரியான வழிமுறையை விளக்குதல் (பின்இணைப்பு 15).
6. இவ்வுலக முடிவுதனைத் திரை விலக்குதல் (பின் இணைப்பு 25).
7. 40 வயதிற்கு முன்னர் மரணிக்கின்றவர்கள் சுவர்க்கம் செல்கின்றனர் எனப் பிரகடனித்தல் (பின்இணைப்பு 32).
8. ஜீஸஸின் மரணத்தை விளக்குதல் (பின்இணைப்பு 22).
9. முஹம்மதிற்கும், பின்னர் அவர் வாயிலாகவும் குர்ஆன் சேர்ப்பிக்கப்படுதல் குறித்து விளக்குதல் (பின் இணைப்பு 28).
10. கடவுளின் வெளிப்பாடுகளை (இந்தக் குர் ஆனை) முஹம்மத் தன் சொந்தக் கரத்தினால் எழுதினார் என்பதை அறிவித்தல் (பின்இணைப்பு 28).
11. கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களில் அதிகமானோர் ஏன் சுவனத்தை அடைய முடிவதில்லையென விளக்குதல் (பின்இணைப்பு 27).
12. ஆப்ரஹாமிடம் அவருடைய மகனைக் கொல்லும்படி கடவுள் ஒருபோதும் கட்டளையிடவில்லை எனப் பிரகடனித்தல் (பின்இணைப்பு 9).
13. பரிபூரண மகிழ்ச்சியின் இரகசியத்தைப் பிரகடனித்தல் (அறிமுகவுரை XX).
14. குற்றவியல் நீதி வழிமுறை ஒன்றை நிறுவுதல் (பின்இணைப்பு 37).

## பின் இணைப்பு 3

# இக்குர்ஆனை நாம் இலகுவாக ஆக்கினோம் (54:17)

குர்ஆனுடைய அற்புதமானது (1) மானிட சக்திக்கு அப்பாற்பட்ட அதன் பௌதிகக் கட்டமைப்பின் கணித ரீதியிலான வடிவமைப்பு மற்றும் (2) அதே சமயத்தில் அசாதாரணமான தலைசிறந்ததொரு இலக்கியக் கிரந்தத்தின் தொகுப்புதனையும் உட்படுத்தியுள்ளது என வசனம் 11:1 நமக்குத் தெரிவிக்கின்றது.

ஓர் எளிமையான கணித வடிவமைப்பின் எண் சார்ந்த பங்கீட்டின் நிபந்தனைகளை ஒருவர் எட்டிவிட இயலக்கூடும். ஆயினும், இது எப்பொழுதும் மாறுதலின்றி இலக்கியத்தரத்தினைத் தியாகம் செய்தே பெறப்படுகின்றது. ஒத்த சமயத்தில் அதன் இலக்கிய நடை மற்றும் குர்ஆன் முழுவதிலும் தனித்தனி எழுத்துக்களின் சிக்கல் வாய்ந்த கணித ரீதியிலான பங்கீட்டின் கட்டுப்பாடானது (பின் இணைப்பு 1) இக்குர்ஆன் மனனம் செய்வதற்கும், புரிந்து கொள்வதற்கும், அனுபவித்து மகிழ்வதற்கும் எளிதாக்கப்பட்டுள்ளது எனும் உண்மையில் தெளிவாகின்றது. மானிடர் எழுதிய ஒரு புத்தகத்தைப் போல் அல்லாமல், இக்குர்ஆனானது மீண்டும் மீண்டும், எண்ணற்ற முறைகள் படித்து மகிழத்தக்கதாக உள்ளது.

இந்தப் பின் இணைப்பின் தலைப்பானது சூரா 54–ல் வசனங்கள் 17, 22, 32 மற்றும் 40–ல் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது. இப்போது வெளிப்பட்டுள்ளபடி, இக்குர்ஆனின் அரபி உரைப் பகுதியானது வாசகர் அல்லது மனனம் செய்பவருக்கு சரியான அடுத்த வாசகம் அல்லது அடுத்த வசனத்தை நினைவூட்டுகின்ற விதமானதோர் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது. கடவுளே நம்மைப் படைத்தார் என்பதுடன் இலக்கிய வடிவங்களை நமது நினைவில் நிறுத்துவதற்குரிய மிகத் திறன்வாய்ந்த வழியையும் அவர் அறிவார். எழுதப்பட்ட புத்தகங்கள் அரிதான ஒன்றாக இருந்த அக்காலத்தின்போது இக்குர்ஆனை மனனம் செய்தலானது தலைமுறைக்குப் பின் தலைமுறையாக அந்த மூல உரைப்பகுதியைப் பாதுகாப்பதில் ஓர் இன்றியமையாப் பங்கினை ஆற்றியுள்ளது.

குர்ஆனை மனனம் செய்கின்ற நபர் குர்ஆனுடைய வார்த்தைகளின் சப்தங்களை உச்சரிக்கின்றபோதே பின்னிப்பிணைந்ததொரு இலக்கிய ஒழுங்கமைப்பின் மூலமாக, அதனை அடையாளம் கண்டு கொள்ளாமலே கூட, தெய்வீகமான முறையில் உதவி செய்யப்படுகின்றார். "நினைவூட்டும் மணிகள்" என நான் அழைப்பதைக் கிட்டத்தட்டக் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வசனமும் கொண்டுள்ளது. அடுத்து வருவது என்ன என்பதை வாசகருக்கு நினைவூட்டுவதே அவற்றின் பணியாகும். இந்த ஒழுங்கமைப்பு மிகவும் விரிந்ததாக உள்ளது, எடுத்துக்காட்டுகின்ற உதாரணங்கள் இரண்டை மட்டும் நான் தருகின்றேன்:

1. சூரா 2ல், வசனங்கள் 127, 128 மற்றும் 129 ஒவ்வொன்றும் கடவுளின் இரண்டு வெவ்வேறு பெயர்களுடன் முடிவடைகின்றன. இந்தப் பெயர்களின் ஜோடிகள் முறையே "***அல்–ஸமீ அல்–அலீம்*** (செவியேற்பவர், சர்வமும் அறிந்தவர்)," "***அல்–தவ்வாப் அல்–ரஹீம்*** (மீட்பவர், மிக்க கருணையாளர்)" மற்றும் "***அல்–அஸீஸ் அல்–ஹகீம்*** (எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்)" ஆகியனவாகும். வழக்கமானதொரு புத்தகமாக இது இருந்திருந்தால், இந்த ஆறு பெயர்களையும் இயல்பாக ஒருவர் பொருந்தாமல் ஜோடி சேர்த்து விட்டிருக்கக்கூடும். இக்குர்ஆனில் அவ்வாறல்ல. இந்த ஜோடிகளில் ஒவ்வொன்றும் சரியான பெயர்களின் ஜோடியை நமக்கு நினைவூட்டுகின்ற ஒரு "நினைவூட்டும் மணி"யை அதே வசனத்தில் முன்னால் கொண்டுள்ளது. இவ்விதமாக, வசனம் 127ஆனது ஆப்ரஹாம் மற்றும் இஸ்மாயில் கஅபாவின் அஸ்திவாரங்களை உயர்த்துவதைப் பற்றிப் பேசுகின்றது. இவ்வசனம் "***அல்–ஸமீ அல்–அலீம்***" எனும் பெயர்களுடன் முடிவடைகின்றது. இங்கே கவனத்தை ஈர்க்கின்ற சப்தங்கள் **"ஸ"**, **"ம"** மற்றும் **"அய்ன்"** ஆகியனவாகும். "இஸ்மாயில்" எனும் வார்த்தையில் இந்த மூன்று எழுத்துக்களும் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. அந்த வாக்கியத்தில் கவனத்தை ஈர்க்கும் விதமாக இந்த வார்த்தை தாமதப்படுத்தப்படுகின்ற அதே சமயம், அதன் இலக்கியத் தரத்தினையும் அது செம்மைப்படுத்துகின்றது என்பதை நாம் காண்கின்றோம். எனவே, அவ்வசனம் இவ்வாறு செல்வதை நாம் காண்கிறோம்: *கஅபா*வின் அஸ்திவாரங்களை ஆப்ரஹாம் உயர்த்தியபோது, இஸ்மாயீலுடன் சேர்ந்து...." வழக்கமாக ஒரு மானிட எழுத்தாளர் "*கஅபா*வின் அஸ்திவாரங்களை ஆப்ரஹாமும் இஸ்மாயீலும் உயர்த்தியபோது...." என்றே கூறுவார். ஆனால் இஸ்மாயீலில் உள்ள சப்தங்களைத் தாமதப்படுத்துதல் அவற்றை வசனத்தின் இறுதிக்குக் கொண்டு வருகின்றது, மேலும் இவ்விதமாக இந்த வசனத்தில் உள்ள கடவுளின் பொருத்தமான பெயர்கள் ***"அல்–ஸமீ அல்–அலீம்"*** என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது.

வசனம் 128 ஆனது ***"அல்–தவ்வாப் அல்–ரஹீம்"*** எனும் பெயர்களுக்கு சற்றே முன்னர் "துப்" எனும் கவனத்தை ஈர்க்கின்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. "துப்" எனும் வார்த்தை இவ்விதமாக நினைவூட்டும் மணியாகத் திகழ்கின்றது. 2:129ன் இறுதியில் கடவுளின் பெயர்களாவன "அஜீஸ், ஹகீம்" ஆகியவையாகும். இங்கே கவனத்தை ஈர்க்கின்ற சப்தங்கள் **"ஜ"** மற்றும் **"க"** ஆகியவையாகும். கண்கூடாக, இந்த வசனத்தில் நினைவூட்டும் மணியாவது "*யுஜக்கீஹிம்*" எனும் வார்த்தை ஆகும்.

2. மற்றொரு நல்ல உதாரணம் நம்பமறுப்பவர்களுக்குரிய தண்டனை முறையே "*அஜீம்* (பயங்கரமானது)", "*அலீம்* (வலி நிறைந்தது)" மற்றும் "*முஹீன்* (இழிவு படுத்துவது)" என்று வர்ணிக்கப்படுகின்ற 3:176, 177, 178—ல் காணப்படுகின்றது. ஒரு மானிடர் படைத்த புத்தகத்தில், மனனம் செய்பவர் இந்த மூன்று வர்ணனைகளையும் எளிதில் குழப்பிக் கொள்ளக்கூடும். ஆனால் இத்தகையதொரு குழப்பத்தைத் தடுக்கின்ற சக்தி வாய்ந்த நினைவூட்டும் மணிகள் இந்த அடைமொழிகள் ஒவ்வொன்றுக்கும் முன்னால் வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் காண்கின்றோம். வசனம் 176—ல் உள்ள "*அஜீம்*" எனும் வார்த்தை **"ஜ"** எனும் எழுத்தில் ஓர் அழுத்தத்தால் தனிப்பண்புடையதாக உள்ள, *"ஹஜ்ஜுன்"* எனும் வார்த்தையால் முந்தப்படுகின்றது. இது இந்த வசனத்தின் இறுதியில் உள்ள குறிப்பிட்ட அந்த அடைமொழியைப் பற்றி நமக்கு நினைவூட்டுகின்ற பணியைச் செய்கின்றது. வசனம் 177—ன் "*அலீம்*" எனும் வார்த்தைக்கு ஒரு நினைவூட்டும் மணியாகப் பணியாற்று வதற்காக, "*ஈமான்*" எனும் வார்த்தையின் சப்தம் முன்னால் வைக்கப்படுகின்றது. மேலும் 3:178ன் "*முஹீன்*" எனும் வார்த்தையானது, இந்த வசனம் முழுவதிலும் தாராளமான **"ம"** மற்றும் **"ஹ"** ஆகியவற்றால் முன் வைக்கப்படுகின்றது.

நினைவூட்டும் மணிகளின் மற்ற உதாரணங்களில் 3:173—ன் முடிவும் 3:174—ன் துவக்கமும், 4:52ன் முடிவும் 4:53—ன் துவக்கமும், 4:61ன் முடிவும் 4:62—ன் துவக்கமும், 18:53—ன் முடிவும் 18:54—ன் துவக்கமும், இன்னும் அதிகமான பற்பலவும் உள்ளடங்கும்.

****************************

### பின் இணைப்பு 4

# ஏன் இந்தக் குர்ஆன் அரபியில் வெளிப்படுத்தப்பட்டது?

41:44—ல் இருந்து உண்மையான நம்பிக்கையாளர்கள் அவர்களுடைய தாய்மொழி எதுவாயினும் பொருட்டின்றி இந்தக் குர்ஆனை அணுகிடும் வழிவகையைப் பெற்றிருக்கின்றனர் என்று நாம் கற்றுக் கொள்கின்றோம். மற்றொரு புறமோ, நம்பமறுப்பவர்கள், அரபி மொழியில் அவர்கள் பேராசிரியர்களாக இருந்தாலும் இக்குர்ஆனை அணுகிட அனுமதிக்கப்படுவதில்லை (17:45, 18:57, 41:44 & 56:79).

உலகிலேயே மிகத்திறன்வாய்ந்த மொழி அரபியே ஆகும், குறிப்பாகச் சட்டங்களின் துல்லியமான கூற்றுக்கள் என்று வரும் பொழுது. இந்தக் குர்ஆன் ஒரு சட்டப்புத்தகமாக உள்ளதனால், அத்தகைய சட்டங்கள் மிகத்தெளிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். கடவுள் தன்னுடைய இறுதி ஏற்பாட்டிற்கு அரபியைத் தேர்ந்தெடுத்தது அந்த நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமான மொழியாக அது உள்ளது என்ற வெளிப்படையான காரணத்தினாலேயாகும். அரபிமொழியானது அதன் திறனிலும் பிழையின்மையிலும் ஒப்பற்றதாகும். உதாரணத்திற்கு, தமிழில் "அவர்கள்" எனும் வார்த்தை "அவர்கள்" ஆண்களா அல்லது பெண்களா என உங்களுக்குக் கூறுவதில்லை. அரபியில், ஆண்களுக்கு உரியதொரு "அவர்கள்" "*ஹூம்*", மற்றும் பெண்களுக்குரிய "அவர்கள்" "*ஹுன்ன*" என உண்டு. இரண்டு ஆண்களுக்குரியதொரு "அவர்கள்" "*ஹுமா*", மற்றும் இரண்டு பெண்களுக்குரிய "அவர்கள்" "*ஹாதான்*" கூட உண்டு. இந்த விசேஷமான அம்சம் உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை. நான் மொழிபெயர்ப்பு செய்தபோது அரபிமொழியின் இந்த திறனை மிகவும் மெச்சும் நிலையினை அடைந்தேன், உதாரணத்திற்கு, 2:228. இந்த வசனமானது விவாகரத்து செய்யப்பட்டவளை, அவள் கர்ப்பமாக இருக்கின்றாள் என்பதை அவள் அறிந்து கொண்டால், அவளுடைய கணவனை விவாக விலக்குச் செய்வதற்கான அவளுடைய சொந்த விருப்புகளை, அக்கணவன் இணக்கமாகிவிட விரும்புகையில் விட்டுக்கொடுத்துவிடுமாறு ஏவுகின்றது — அக்குழந்தையின் நலனானது ஒரு முன்னுரிமை பெறுகின்றது. அரபி மொழியின் திறனானது இந்தச் சட்டத்தை எடுத்துரைப்பதில் பெருமளவில் உதவிகரமாக இருந்தது.வேறு எந்த மொழியும் எவருடைய விருப்பங்கள் மாற்றியமைத்துக் கொள்ளப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டுவதைக் கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகவே ஆக்கியிருக்கும், குறைந்தபட்சம் 2:228—ல் நாம் காண்பது போல இவ்வளவு ஒரு சில வார்த்தைகளில் அல்ல.

28:23—ன் "*காலத்தா*" எனும் வார்த்தை, உதாரணத்திற்கு தமிழில் நான்கு வார்த்தைகளால் மொழி பெயர்க்கப்படுகின்றது: "அந்த இரு பெண்கள் சொன்னார்கள்". அரபி மொழியின் திறன் இவ்விதமானதாகும்.

"அவன்" மற்றும் "அவள்" இயல்பான பால் வகையைக் குறிப்பதாகக் கொள்ளப்பட வேண்டிய அவசியமில்லை என்ற உண்மையானது அரபியைத் தேர்ந்தெடுத்ததற்குரிய மற்றொரு சாத்தியமான காரணமாக உள்ளது. எனவே கடவுளை "அவன்" என குறிப்பிடப்படுகின்ற போது இது சற்றும் பால்வகையைக் குறிப்பிடுவதாக இல்லை, கடவுள் துதிப்பிற்குரியவர்; அவர் ஆணாகவோ அன்றிப் பெண்ணாகவோ இல்லை.

ஆங்கில மொழியில் கடவுளைக் குறிப்பதற்கு "He" என்பதன் பயன்பாடானது, உதாரணத்திற்கு, கடவுளின் ஒரு தவறான பிரதிபிம்பத்திற்குக் காரணமாகியுள்ளது. கடவுளைக் குறிக்கும்பொழுது "தந்தை" போன்ற சிதைக்கப்பட்ட இத்தகைய வார்த்தைகள் நிலைமையை இன்னும் மோசமாக்கவே செய்கின்றது. இந்தக் குர்ஆனில் கடவுளுக்கு அத்தகையதொரு குறிப்புரையை நீங்கள் ஒருபோதும் காண்பதில்லை.

*****************************

## பின் இணைப்பு 5

# சுவனம் மற்றும் நரகம்

இந்தக் குர்ஆன் முழுவதிலும் சுவனம் மற்றும் நரகத்தின் வர்ணனைகள் உவமானரீதியிலேயே உள்ளன. பொதுவானதொரு விஷயத்திற்குள் அல்லாது, இத்தகைய வர்ணணைகள் தனி வாக்கியங்களாக இடம்பெறுகின்றபொழுதெல்லாம் இக்குர்ஆன் நமக்கு அவ்வாறு கூறுகின்றது. பார்க்க 2:24–26, 13:35, மற்றும் 47:15. "மஸல்" (உதாரணம்) எனும் வார்த்தை இந்த வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மொழி வழக்கில், இந்த வசனங்களில் உள்ள "மஸல்" எனும் வார்த்தை நீக்கப்பட்டு விட்ட போதிலும், அப்போதும் மிகச்சரியான வாசகங்களையே நாம் கிடைக்கப்பெறுவோம். எனினும் சுவனம் மற்றும் நரகத்தின் வர்ணனைகள் உவமானரீதியிலேயே உள்ள காரணத்தினால் அது அங்கு உள்ளது.

சுவனம் மற்றும் நரகம் ஆகியவை மெய்யாகவே எப்படி இருக்கின்றன என்பது நமது கிரகிப்புக்கு மிகவும் அப்பாற்பட்டதாக உள்ளது. எனவேதான் உவமானம் அவசியம் ஆகின்றது.

உதாரணத்திற்கு, சாக்லேட்டினை ஒருபோதும் சுவைத்திராத ஒரு நபருக்கு, சாக்லேட்டின் அச்சுவையினை ஒருவர் எவ்வாறு விவரிக்க இயலும்? உவமானம் பயன்படுத்தப்பட வேண்டியது உள்ளது. சாக்லேட்டின் சுவை என்ன என்று தெரிந்து கொள்வதற்கு அந்நபர் உண்மையில் சாக்லேட்டினைச் சுவைப்பதற்காகக் காத்திருக்க வேண்டும். சாக்லேட்டின் சுவையை விவரிக்க நாம் பயன்படுத்துகின்ற உவமானம் எதுவாயினும் ஒருபோதும் உண்மையான விஷயத்திற்குப் பொருத்தமாகிவிட இயலாது.

ஆதமும் ஏவாளும் அவர்களுடைய குற்றமற்ற நாட்களின் போது அதனில் அமர்த்தப்பட்டதில் இருந்து சுவனமானது ஏற்கெனவே உள்ளது (2:35). சூரா 55–ல் இருந்து இரண்டு "உயர்ந்த சுவனங்கள்" உள்ளன – மானிடர்களுக்கு ஒன்று, மற்றும் ஜின்களுக்கென ஒன்று – மேலும் இரண்டு "தாழ்வான சுவனங்கள்"– மானிடர்களுக்கென ஒன்று, மற்றும் ஜின்களுக்கென ஒன்று – உள்ளன என நாம் அறிந்து கொள்கின்றோம் (அதிகமான விபரங்களுக்குப் பின் இணைப்பு 11–ஐப் பார்க்கவும்).

நரகம் இன்னும் படைக்கப்படவில்லை. தீர்ப்பு நாள் அன்று அது படைக்கப்படும் (69:17 & 89:23). அதிகமான விபரங்கள் பின் இணைப்பு 11–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## உயர்ந்த சுவனமும் தாழ்வான சுவனமும்

உயர்ந்த சுவனத்திற்கும் தாழ்வான சுவனத்திற்குமிடையே ஆழ்ந்த வித்தியாசங்கள் உள்ளன. உவமானரீதியில், உயர்ந்த சுவனத்தில் தண்ணீரானது தங்குதடையின்றிப் பாய்கின்றது (55:50), அதே சமயம் தாழ்வான சுவனத்தின் தண்ணீர் இறைத்து எடுக்கப்பட வேண்டும் (55:66).

உவமானரீதியில், உயர்ந்த சுவனம் அனைத்துக் கனிவர்க்கங்களையும் கொண்டுள்ளது (55:52), அதே சமயம் தாழ்வான சுவனமானது ஓர் எல்லைக்குட்பட்ட கனிவகைகளையே கொண்டுள்ளது (55:68).

உவமானரீதியில், உயர்ந்த சுவனத்தில் தூய்மையான ஜோடிகள் தங்களுடைய ஜோடிகளுடன் உடனடியாகச் சேர்ந்து கொள்வர் (55:56), அதே சமயம் தாழ்வான சுவனத்தில் வசிப்பவர்கள் சென்று தங்களுடைய துணைகளை அழைத்து வரவேண்டும் (55;72).

இருப்பினும், நரகத்தை விட்டுத் தப்பித்து தாழ்வான சுவனத்தைச் சென்றடைகின்ற அளவுக்குப் பாக்கியமுள்ளவர்களுக்குத் தாழ்வான சுவனமுமே கூட நம்ப இயலாத அளவுக்குப் பிரமாதமானதொரு பரிசாக உள்ளது (3:185) – தாழ்வான சுவனத்திற்கு செல்வதும் மகத்தானதொரு பெருவெற்றியாகும். தங்களுடைய 40–வது பிறந்த நாளை அடைவதற்கு முன் இந்த வாழ்வை விட்டுச் சென்று விடுகின்ற, மேலும் போதுமான அளவுக்குத் தங்களுடைய ஆத்மாக்களை வளர்த்துக் கொள்ளாத மக்கள் தாழ்வான சுவனத்திற்குச் செல்வார்கள் (46:15, பின் இணைப்புகள் 11 & 32). நம்பிக்கை கொண்டு, நன்னெறியானதொரு வாழ்வு நடத்தி, அத்துடன் தங்களுடைய ஆத்மாக்களைப் போதுமான அளவுக்கு வளர்த்துக் கொண்டவர்களுக்காக உயர்ந்த சுவனம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

**நூலிழையிலேனும் நரகத்தை விட்டுத் தப்புவதில் வெற்றிபெற்று, சுவனத்தில் அனுமதிக்கப்படுகின்ற எவராயினும் மகத்தானதோர் பெருவெற்றியை அடைந்து விட்டார். (3:185)**

****************************

### பின் இணைப்பு 6

## கடவுளின் மகத்துவம்


வசனம் 39:67ல் இருந்து கடவுளின் மகத்துவமானது மானிட கிரகிப்புக்கு மிகவும் அப்பாற்பட்டதாக உள்ளது என்று நாம் அறிந்து கொள்கின்றோம் – அவ்வசனம் ஏழு பிரபஞ்சங்கள் முழுவதும் "கடவுளின் கைக்குள் மடித்து வைக்கப்பட்டுள்ளன" என்று கூறுகின்றது.

குர்ஆனுடைய பிரமிப்பூட்டுகின்ற கணிதக் குறியீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு, ஏழு பிரபஞ்சங்களிலேயே மிகச்சிறியதாகவும் மிகவும் உள்ளார்ந்ததாகவும் இருப்பது நமது பிரபஞ்சமே என்று நாம் கற்றுக் கொடுக்கப்படுகின்றோம் (41:12, 55:33, 67:5, & 72: 8 –12). இதற்கிடையில், பால்வீதி எனும் நமது நட்சத்திர மண்டலம் 100,000 ஒளி வருடங்கள் குறுக்களவு கொண்டதாக உள்ளது, அத்துடன் நமது பிரபஞ்சம் இத்தகைய ஒரு பில்லியன் நட்சத்திர மண்டலங்களும் ஒரு பில்லியன் ட்ரில்லியன் நட்சத்திரங்களும், இன்னும் எண்ணற்ற டெசில்லியன் விண்ணகப் பொருட்களும் கொண்டுள்ளது என்று நம்முடைய விஞ்ஞான முன்னேற்றங்கள் காட்டியுள்ளன. நமது பிரபஞ்சம் 20,000 000 000 ஒளி வருடங்களினும் அதிகமான தொலைவுகள் விரிந்திருப்பதாக மதிப்பிடப்படுகின்றது.

## நட்சத்திரங்களை எண்ணுங்கள் !

நட்சத்திரங்களில் ஒரு குவிண்டில்லியன் (1,000,000,000,000,000,000)–ஐ மட்டும் நாம் எடுத்துக்கொண்டு ஒரு நொடிக்கு ஓர் எண் என்று பகலும் இரவும் வெறுமனே அவற்றை நாம் எண்ணிக்கொண்டே சென்றால் (0 முதல் குவிண்டில்லியன் வரை) அதற்கு 32 பில்லியன் வருடங்கள் எடுத்துக்கொள்ளும் (நமது பிரபஞ்சத்தின் ஆயுளை விட அதிகம்). அவற்றை "எண்ணுவதற்கு" மட்டுமே அத்தனை நீண்டகாலம் அது எடுத்துக்கொள்ளும், ஆனால் கடவுள் அவற்றைப் "படைத்தார்". கடவுளின் மகத்துவமானது இத்தகையதேயாகும்.

ஒரு விண்வெளிப் பயணத்தில் செல்வதாக நாம் கற்பனை செய்து கொண்டால் நம்முடைய பிரபஞ்சத்தின் விரிந்த தன்மையை நம்மால் மெச்சிட இயலும். ஒளியின் வேகத்தில், பூமிக்கிரகத்தில் இருந்து சூரியனை நோக்கி நாம் புறப்பட்டுச் சென்றால், 93,000,000 மைல்கள் மற்றும் 8 நிமிடங்களுக்கு அப்பால் நாம் சூரியனை அடைகின்றோம், நம்முடைய நட்சத்திர மண்டலத்தை விட்டு வெளியேறுவதற்கு நமக்கு ஒளியின் வேகத்தில் 50,000–த்திற்கும் அதிகமான வருடங்கள் எடுத்துக் கொள்ளும். பால் வீதியின் வெளிப்புற எல்லையில் இருந்து நமது கிரகமான பூமி கண்களுக்குத் தென்படாததாக உள்ளது. மிகவும் சக்திவாய்ந்த தொலைநோக்கி கூட நமது மிகச்சிறிய "பூமி"யை கண்டுபிடிக்க இயலாது.



நம்முடைய அடுத்த வாசல் நட்சத்திர மண்டலத்தை அடைய ஒளியின் வேகத்தில் 2,000,000 வருடங்களுக்கும் அதிகமாக நாம் செலவிட வேண்டும், நமது பிரபஞ்சத்தின் வெளிப்புற எல்லையை அடைய ஒளியின் வேகத்தில், குறைந்த பட்சம் 10,000,000,000 வருடங்கள் செலவிட வேண்டும். நமது பிரபஞ்சத்தின் வெளிப்புற எல்லையில் இருந்து, பால் வீதி கூட பெரியதோர் அறையில் உள்ள தூசியின் ஒரு துகளைப் போன்றதேயாகும்.

இரண்டாவது பிரபஞ்சம் நமது பிரபஞ்சத்தைச் சூழ்ந்துள்ளது. மூன்றாவது பிரபஞ்சமானது இரண்டாவதை விடவும் பெரியதாக உள்ளது. அப்படியே தொடர்கின்றது. இன்னும் மிகச்சரியாக, ஐந்தாவது பிரபஞ்சத்தால் சூழப்பட்டு அவ்வாறே தொடர்ந்து அந்த ஆறாவது பிரபஞ்சத்தால் சூழப்பட்டிருக்கின்ற ஏழாவது பிரபஞ்சமாக நமது

பிரபஞ்சம் கருதப்படவேண்டும். முதலாவதான, அனைத்திற்கும் வெளியிலுள்ள, அந்த முதல் பிரபஞ்சத்தின் விஸ்தீரணத்தை உங்களால் கற்பனை செய்ய இயலுமா? முதல் பிரபஞ்சத்தின் சுற்றளவை வர்ணிக்க எண்கள் எதுவும் வழக்கில் இல்லை. கிரகித்துக் கொள்ள இயலாத இந்த விஸ்தீரணம் "கடவுளுடைய உள்ளங்கையினுள்" உள்ளது. அனைத்திற்கும் வெளியிலுள்ள அப்பிரபஞ்சத்தின் வெளிப்புற எல்லையில் இருந்து பூமி எனும் கிரகம் எங்குள்ளது? என்ன முக்கியத்துவம் உள்ளது அதற்கு? பூமி என்றழைக்கப்படுகின்ற அளவிடற்கரிய மிகச்சிறிய துகளின் மீது, மேரி, ஜீஸஸ், முஹம்மத் போன்ற சின்னஞ்சிறிய படைப்புக்கள் வாழ்ந்தனர். இருப்பினும், சில மக்கள் சக்தியற்ற இந்த மானிடர்களை தெய்வங்களாக அமைத்துக்கொள்கின்றனர்!

கடவுளின் மகத்துவம் ஏழுபிரபஞ்சங்களையும் தன்னுடைய கரத்தில் அவர் பிடித்துக் கொண்டிருக்கின்றார் எனும் உண்மையின் மூலம் மட்டுமல்ல, அத்துடன் மிகப்பெரும் பிரபஞ்சம் எங்கிலும், அவர் ஒவ்வொரு அணுவினையும், அணுவிற்குள் பொதிந்துள்ள கூறுகளையும் கூட அவர் முழுமையாகக் கட்டுப்படுத்துகின்றார் எனும் உண்மையின் மூலமும் சித்தரிக்கப்படுகின்றது (6:59. 10:61 & 34:3).

*****************************

### பின் இணைப்பு 7

## நாம் ஏன் படைக்கப்பட்டோம்?

மிகப் பயங்கரமானதொரு குற்றத்தை நாம் புரிந்ததன் காரணமாகவே இந்த உலகில் நாம் இருக்கின்றோம், அத்துடன் இந்த வாழ்வானது நம்மை மீட்டுக்கொள்வதற்கு, நமது குற்றத்தைப் பழித்துரைத்து கடவுளின் சாம்ராஜ்யத்தில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கு, நமக்குரிய வாய்ப்பு ஆகும்.

இது அத்தனையும் ஒரு சில பில்லியன் வருடங்களுக்கு முன்னர் "விண்ணக சமூகத்தினில் ஒரு கலகம் எழுந்த போது" துவங்கியது (38:69). உயர் அந்தஸ்துடைய படைப்புகளில் ஒருவனான, சாத்தான், அவனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட சக்திகள் கடவுளுடன் மற்றொரு தெய்வமாக இருப்பதற்கு அவனைத் தகுதிப்படுத்தி விட்டது என்ற இறுமாப்பான எண்ணங்களை மனதில் கொண்டிருந்தான். இவ்விதமாக அவன் கடவுளின் பரிபூரண அதிகாரத்திற்கு அறைகூவல் விடுத்தான். சாத்தானின் இந்த எண்ணம் இறைநிந்தனையானதாக மட்டும் இருக்கவில்லை, அது தவறானதாகவும் இருந்தது – கடவுள் மட்டுமே, வேறு எவரொருவரும் அல்லர், ஒரு தெய்வமாக இருப்பதற்குரிய தகுதியையும் திறனையும் கொண்டிருக்கிறார். சாத்தானின் இறைநிந்தனையைத் தொடர்ந்து, விண்ணக சமூகத்தில் ஒரு பிரிவினை நிகழ்ந்தது, மேலும் கடவுளுடைய சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் அனைவரும் நான்கு இனங்களாக வகைப்படுத்தப்பட்டார்கள்:

1. **வானவர்கள்:** கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரித்த படைப்பினங்கள்.
2. **விலங்கினங்கள்:** கலகம் செய்த போதிலும் பின்னர் திருந்துவதற்கான கடவுளின் அழைப்பினை ஏற்றுக் கொண்ட படைப்பினங்கள்.
3. **ஜின்கள்:** சாத்தானுடன் ஒத்துப்போன படைப்பினங்கள்; அவன் ஒரு "தெய்வம்" ஆக இருப்பதற்குரிய திறன் கொண்டவனாக இருக்கிறான் என.
4. **மானிடர்கள்:** தங்களுடைய மனங்களில் முடிவெடுக்காத படைப்பினங்கள்; கடவுளின் ஏகோபித்த அதிகாரத்தில் ஓர் உறுதியான நிலையை எடுக்க அவர்கள் தவறிவிட்டனர்.

### மிக்க கருணையாளர்

அவருடைய பரிபூரண அதிகாரத்தை ஆதரிக்காதவர்களான படைப்பினங்களைக் கடவுள் வெளியேற்றிட வேண்டும் என்று வானவர்கள் எதிர்பார்த்தனர் (2:30). ஆனால் கடவுளோ மிக்க கருணையாளர்; நம்முடைய தவறைப் பழித்துரைக்க ஒரு வாய்ப்பை நமக்குத் தர அவர் தீர்மானித்தார், அத்துடன் வானவர்களிடம் அவர்கள் அறியாதவற்றை அவர் அறிந்திருப்பதாகத் தெரிவித்தார் (2:30). சில படைப்புகள் மீட்டுக்கொள்ளப்படுவதற்குரிய ஒரு வாய்ப்புக்குத் தகுதி பெற்றிருப்பதைக் கடவுள் அறிந்திருந்தார்.

நீங்கள் ஒரு விமானத்தைப் பறக்கச் செய்கின்ற திறமையுள்ளவர் என்று கோரினால் உங்களுடைய கோரிக்கையைப் பரிசோதிக்க மிகச்சிறந்த வழி ஒரு விமானத்தை உங்களிடம் தந்து அதனைப் பறக்கச் செய்யும்படி கேட்டுக்கொள்வதுதான். சாத்தானின் கோரிக்கைக்கு பதிலளிக்குமுகமாகக் கடவுள் செய்யத் தீர்மானித்தது மிகச் சரியாக இதனைத்தான். கடவுள் ஏழு விரிந்த பிரபஞ்சங்களைப் படைத்தார். பின்னர் வானவர்களிடம் "பூமி" என்றழைக்கப்படுகின்ற மிகச்சிறிய துகளினில் சாத்தானை ஒரு தெய்வமாக அவர் நியமிக்கின்றார் என்பதைத் தெரிவித்தார் (2:30). நிலையற்ற ஒரு "தெய்வமாக" சாத்தானை நியமிப்பது தொடர்பான குர்ஆனின் விளக்கங்கள் (36:60) முந்திய வேதத்தினை உறுதிப்படுத்துகின்றது.

கடவுளின் திட்டப்படி மரணம் படைக்கப்பட்டு (67:1–2), பின்னர் மானிடர்களையும் ஜின்களையும் இந்த உலகத்திற்குக் கொண்டு வர வேண்டியதானது. இவ்விதமாக அவர்கள் எந்தப் பாரபட்சமும் இன்றித்

துவங்குகின்றனர், மேலும் கடவுளின் பரிபூரண அதிகாரத்தையோ அல்லது சாத்தானின் பல தெய்வக் கோட்பாட்டையோ ஆதரிப்பதற்கான முழு சுதந்தரத்தைப் பிரயோகிக்கின்றனர். மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்காக, கடவுளிடமிருந்து அவருடைய பரிபூரண அதிகாரத்தை ஆதரிக்கின்ற ஒரு தூதுச் செய்தியையும், அவ்வண்ணமே சாத்தானிடமிருந்து அவனுடைய பல தெய்வக் கொள்கைகளைப் புகுத்துகின்ற ஒரு செய்தியையும் மானிட இனத்தவர் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்கின்றனர்.

சாதகமான துவக்கம் ஒன்றை நமக்குத் தருவதற்காக, இந்த உலகத்திற்கு நம்மை அனுப்புவதற்கு முன்னர், மிக்க கருணையாளர் மானிட இனத்தவர் அனைவரையும் அவர் முன் ஒன்று திரட்டினார், மேலும் அவர் மட்டுமே நம்முடைய இரட்சகர் மற்றும் அதிபதியாக உள்ளார் என்று நாம் சாட்சியம் பகர்ந்தோம் [7:172]. எனவே, கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரிப்பதென்பது மானிட இனத்தவர் ஒவ்வொருவருக்கும் உள்ளமைந்த ஓர் அங்கமாக இருக்கின்ற இயற்கையான ஓர் உள்ளுணர்வாகும்.

> லூஸிஃபர், நீ, உன் மனதில் கூறினாய்:
> நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னத மானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே!
> [ஏசாயா 14:13–15]
>
> பின்னர், சாத்தான் அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.
> [மத்தேயு 4:8–10] & [லூக்கா 4:5–8]

கலகக்காரர்களை மரணத்தில் ஆழ்த்திய பின்னர், மானிடர்கள் மற்றும் ஜின்களின் ஆத்மாக்கள் தனிச்சிறப்பான ஒரு களஞ்சியத்தில் வைக்கப்பட்டன. கடவுள் பின்னர் சோதனைக் காலத்தின்போது ஜின்கள் மற்றும் மானிடர்களின் ஆத்மாக்கள் தங்குவதற்குத் தகுந்த உடல்களைப் படைத்தார். முதலாவது ஜின்னின் உடல் நெருப்பில் இருந்து உருவாக்கப்பட்டது, மேலும் சாத்தான் அந்த உடலுக்கென நிர்ணயிக்கப்பட்டான் [15:27]. பூமியிலுள்ள பொருளான, களிமண்ணில் இருந்து முதல் மானிட உடல் படைக்கப்பட்டது [15:26], மேலும் கடவுள் அந்த உடலுக்கென முதல் மானிட ஆத்மாவை நிர்ணயித்தார். தெய்வீகத் திட்டத்தின்படி வானவர்கள் பூமியின் மீது மானிடர்களுக்குச் சேவைபுரிய வேண்டியதானது – அவர்களைப் பாதுகாத்தல், காற்றுக்களை ஓட்டி அதனால் அவர்களுக்காக மழைபொழியச் செய்தல், வாழ்வாதாரங்களை விநியோகித்தல் போன்றவை. இந்த உண்மை இக்குர்ஆனில் உவமானம் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது: “உம்முடைய இரட்சகர் வானவர்களிடம் கூறினார், ‘ ஆதமின் முன்னர் சிரம் பணிந்து விழுங்கள்”. எதிர்பார்த்தவாறே மானிட இனத்திற்குச் சேவை செய்வதுடன் தொடர்புடைய எந்த ஒன்றையும் செய்வதற்குச் சாத்தான் மறுத்துவிட்டான் [2:34, 7:11, 17:61, 18:50, 20:116].

ஆதமுடைய உடல் பூமியின் மீது இருந்த அதே சமயம், மெய்யான அந்நபர், அந்த ஆத்மா, மிகவும் வெளிப்புறமாக உள்ள பிரபஞ்சத்தில் இருக்கின்ற சுவனத்திற்குள் அனுமதிக்கப்பட்டார். தடுக்கப்பட்ட அந்த மரத்தின் மூலம் சித்தரிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட கட்டளைகளைக் கடவுள் ஆதமுக்குக் கொடுத்தார், சாத்தானும் அவனுடைய சாத்தானியத் தூதுச் செய்தியை ஆதமிடம் தெரிவிப்பதற்காக ஆதமின் கூட்டாளியாக நியமிக்கப்பட்டான். மற்றவை மானிட சரித்திரம்.

மானிட இனத்தவர் ஒருவர் பிறக்கின்ற ஒவ்வொரு முறையும், அப்புதிய குழந்தைக்கு ஆத்மாக்களின் கருவூலத்தில் இருந்து மானிட நபர் ஒருவர் நிர்ணயிக்கப்படுகின்றார். கடவுள் அவருடைய அறிவுக்கேற்ப அவ்வாத்மாக்களை நிர்ணயிக்கின்றார் [28:68]. ஒவ்வோர் ஆத்மாவும் குறிப்பிட்ட ஓர் உடலுக்கென நிர்ணயிக்கப்பட்டு, அத்துடன் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் வாழத் தகுதி பெறுகின்றது. எந்த ஆத்மாக்கள் நல்லவையாக உள்ளன, எந்த ஆத்மாக்கள் தீயவையாக உள்ளன என்பதைக் கடவுள் மட்டுமே அறிவார். கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப நம்முடைய குழந்தைகள் நமது வீடுகளுக்கென நிர்ணயிக்கப்படுகின்றனர்.

அந்தப் புதிய மானிட இனத்தவருக்கு சாத்தானின் கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டுவதற்காக சுதந்தரமானதொரு ஜின் ஆத்மாவும் கூட நிர்ணயிக்கப்படுகின்றது. எந்த ஒரு ஜின்னின் பௌதிக உடலும் அதன் பெற்றோர் ஜின்களிடம் இருந்து இனப்பெருக்கம் செய்யப்படுகின்ற அதே சமயம், அந்த ஜின் ஆத்மாவானது சுதந்தரமானதொரு தனி நபருடையதாக உள்ளது. ஜின்கள் சாத்தானின் சந்ததியினராக உள்ளனர் [7:27, 18:50]. நிர்ணயிக்கப்பட்ட அந்த ஜின்னானது மானிட இனத்தவனுடன் ஜனனம் முதல் மரணம் வரை உடனிருக்கின்றது, அத்துடன் நியாயத் தீர்ப்பு நாள் அன்று பிரதான சாட்சியாகத் திகழ்கின்றது [50:23]. நமது மண்டைகளுக்குள்

மானிட ஆத்மாவுக்கும் ஜின் ஆத்மாவுக்கும் இடையில் அவர்கள் இருவரும் ஒரு கண்ணோட்டத்தில் ஒத்துப்போகின்ற வரை தொடர்ந்ததொரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## ஆதிபாவம்

பொதுவான நம்பிக்கைக்கு மாறாக, "ஆதிபாவம்" ஆனது தடுக்கப்பட்ட அம்மரத்தில் இருந்து ஆதம் உண்டபோது கடவுளின் சட்டத்தை அவர் மீறியது அல்ல. ஆதிபாவமானது மிகப்பெரும் கலகத்தின் போது கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரிப்பதில் நமது தோல்வியே ஆகும். அந்த ஆதிபாவத்தைப் பழித்துரைத்து அத்துடன் கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரிப்பதற்கு அந்த மானிட நபர் அவனுடைய அல்லது அவளுடைய ஜின் கூட்டாளியை ஒப்புக்கொள்ள வைத்துவிட்டால், இரண்டு படைப்புகளும் தீர்ப்பு நாள் அன்று கடவுளின் நிரந்தர சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் அந்த ஜின் கூட்டாளியானது அந்த மானிட நபரை சாத்தானின் இணை வழிபாட்டுக் கண்ணோட்டங்களை ஆதரிப்பதற்கு ஒப்புக்கொள்ள வைத்து விட்டால், பின்னர் இரண்டு படைப்புகளும் கடவுளின் சாம்ராஜ்யத்தில் இருந்து என்றென்றும் வெளியேற்றப்பட்டவர்களாகி விடுகின்றனர்.

அவனுடைய கண்ணோட்டத்தை மேம்படுத்துவதற்காக, சாத்தானும் அவனுடைய பிரதிநிதிகளும் முஹம்மத், ஜீஸஸ், மேரி மற்றும் மகான்கள் முதலான சக்தியற்ற படைப்புகளை இணைவழிபாடு செய்தலை ஆதரித்து வாதாடுகின்றனர். பல தெய்வக் கோட்பாடுடைய நமது சுபாவங்களினால்தான் நாம் இங்கே இருக்கின்றோம் என்பதனால், நம்மில் அதிகமானோர் சாத்தானுக்கு சுலபமான இரையாகவே இருக்கின்றனர்.

ஒரு "தெய்வம்" ஆக சாத்தானின் யோக்கியதையின்மையானது அவனது சாம்ராஜ்யம் முழுவதும் கலவரம், வியாதி, விபத்துக்கள், துன்பம் மற்றும் யுத்தம் ஆகியன வியாபித்திருத்தல் மூலம் முன்னரே நிரூபிக்கப்பட்டுவிட்டதாக உள்ளது (36:60–62). மற்றொருபுறம், சாத்தானைப் பழித்துரைத்து, கடவுளின் பரிபூரண அதிகாரத்தை ஆதரித்து, அத்துடன் ஜீஸஸ், மற்றும் முஹம்மத் போன்ற சக்தியற்ற அத்துடன் இறந்து விட்ட படைப்புகளை இணைவழிபாடு செய்தலில் இருந்து விலகிக் கொள்கின்ற மானிட இனத்தவர்கள் கடவுளின் பாதுகாப்பிற்குள் மீட்டுக்கொள்ளப்படுகின்றனர் – அவர்கள் இங்கே இந்த உலகிலும் என்றென்றும் குறைவற்ற ஒரு வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர்.

இந்த உலகத்தில் நமது வாழ்வானது நம்முடைய பலதெய்வக் கோட்பாட்டு எண்ணங்களை அம்பலப்படுத்து வதற்காக வடிவமைக்கப்பட்ட சோதனைகளின் ஒரு தொடராக இருக்கின்ற காரணத்தால், போலித் தெய்வ வழிபாடு மட்டுமே மன்னிக்கப்பட மாட்டாத குற்றமாக உள்ளது (4:48,116). ஒன்று கடவுளின் பரிபூரண அதிகாரத்தையோ, அல்லது சாத்தானின் இணைவழிபாட்டுக் கண்ணோட்டங்களையோ ஆதரிப்பதற்கான நம்முடைய தீர்மானத்தை தெளிவாகக் காட்டுவதற்காக இவ்வுலகமானது தெய்வீகரீதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது (67:1–2). அதிகாலைத் தொழுகையையும் உச்சபட்ச வெப்பம் கொண்ட மிக நீண்ட நாட்களின்போது நோன்பிருத்தலையும் கடைப்பிடிப்பதன் மூலம் கடவுளின் சட்டங்களை ஆதரிப்பதற்கான நம்முடைய விருப்பத்தை சோதிக்கும் வண்ணம் பகல் மற்றும் இரவு தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கின்றது. கடவுளின் பரிபூரண அதிகாரத்தைப் பற்றி முற்றிலும் உறுதியுடன் இருக்கின்றவர்கள் மட்டுமே மீட்டுக்கொள்ளப்படுகின்றனர் (26:89).

*****************************

### பின் இணைப்பு 8

## பரிந்துரை எனும் புராணம்

கடவுளை விடுத்து, நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கோ அல்லது நம்முடைய விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கோ நம் சார்பாக எவரொருவரும் பரிந்துரைக்க இயலும் என்று நம்புதல், கடவுளுடன் பங்குதாரர்களை அமைத்துக் கொள்வது ஆகும். இது போலித்தெய்வ வழிபாடே ஆகும். "அனைத்துப் பரிந்துரையும் கடவுளுக்குரியது" (39 : 44) என்றும், மேலும் "தீர்ப்பு நாள் அன்று பரிந்துரை எதுவும் இல்லை" (2:254) என்றும் இக்குர்ஆன் பிரகடனிக்கின்றது.

கோடிக்கணக்கான மக்களை ஏமாற்றி போலித் தெய்வ வழிபாட்டிற்குள் கொண்டு செல்வதற்கு சாத்தானின் மிகவும் திறன்வாய்ந்த யுக்திகளில் பரிந்துரை எனும் புராணமும் ஒன்றாகும். கோடிக்கணக்கான கிறிஸ்துவர்கள் தங்களுக்காகக் கடவுளிடம் ஜீஸஸ் பரிந்துரைப்பார் என்று நம்புகின்றார்கள், அத்துடன் கோடிக்கணக்கான முஸ்லிம்களும் அவர்களுடைய சார்பில் முஹம்மத் பரிந்துரைப்பார் என்று நம்புகின்றார்கள், எனவே, இந்த மக்கள் ஜீஸஸ் மற்றும் முஹம்மதை இணை வழிபாடு செய்கின்றனர்.

பரிந்துரை எனும் எண்ணம் முற்றிலும் அறிவுக்குப்புறம்பானதாகும். உதாரணத்திற்கு, முஹம்மதின் பரிந்துரையில் நம்பிக்கை கொண்டவர்கள், அவர் கடவுளிடம் அவர்களை மன்னிக்குமாறு கேட்டு அவர்களைச்

சுவனத்திற்குள்ளும் புகுத்தி விடுவார் என்று கோருகின்றனர். தீர்ப்பு நாள் அன்று முஹம்மத் தன்னுடைய பரிந்துரையை வேண்டுவோரைத் தேர்ந்தெடுப்பார் என்று அவர்கள் கற்பனை செய்கின்றார்கள். பரிந்துரையை நம்புபவர்களிடம், "முஹம்மத் தனது பரிந்துரைக்குத் தகுதியானவர் யார் என்பதை எப்படி அடையாளம் கண்டு கொள்வார்?" என்று நீங்கள் கேட்டால், அவர்கள் உங்களிடம் சொல்வார்கள், "கடவுள் அவருக்குச் சொல்வார்!" இந்த எண்ணத்தின்படி ஒரு நபர் முஹம்மதிடம் சென்று அவருடைய பரிந்துரையை வேண்டிக் கேட்பார். முஹம்மத் பின்னர் கடவுளிடம் இந்த நபர் அவருடைய பரிந்துரைக்குத் தகுதியானவரா அல்லவா எனக் கேட்பார். அந்த நபர் சுவனத்திற்குச் செல்லத் தகுதிபெறுகின்றார் என்று கடவுள் முஹம்மதுக்குத் தெரிவிப்பார். முஹம்மத் பின்னர் சுற்றித் திரும்பி சுவனத்திற்குச் செல்வதற்கு அந்த நபர் தகுதிபெறுகின்றார் என்று கடவுளிடம் சொல்வார்! இறைநிந்தனையானது வெளிப்படையானதாக உள்ளது; பரிந்துரையின் மீது நம்பிக்கை கொள்கின்றவர்கள், அவர்களுடைய போலித்தெய்வமான முஹம்மதுக்குக் கடவுளை ஒரு காரியதரிசியாக ஆக்குகின்றனர். கடவுள் துதிப்பிற்குரியவர்.

இந்தக் குர்ஆன் மிகவும் துல்லியமான புத்தகமாக இருப்பதனால், சுவனத்திலுள்ள ஒவ்வொருவரும் அவனுடைய அல்லது அவளுடைய நேசத்திற்கு உரியவர்கள் சார்பாகப் பரிந்துரைப்பார்கள் என்பதை ஒத்துக் கொள்கின்றது : "தயவு செய்து, கடவுளே, என்னுடைய தாயாரை சுவனத்திற்குள் அனுமதிப்பீராக". அந்நபரின் தாயார் சுவனத்திற்குச் செல்லும் தகுதியுடையவராக இருந்தால் இந்தப் பரிந்துரை பலனளிக்கும் (2:255, 20:109, 21:28). எனவே, பரிந்துரையானது, இந்த விதத்தில் நடைபெற்ற போதிலும் அது, முற்றிலும் பயனற்றதாக உள்ளது.

ஆப்ரஹாம், கடவுளின் நேசத்திற்குரிய ஊழியர், தன் தந்தையின் சார்பாக பரிந்துரைக்க இயலவில்லை என்பதை நாம் குர்ஆனில் இருந்து அறிந்து கொள்கின்றோம் (9:114), நோவாவினால் அவருடைய மகன் சார்பாக பரிந்துரைக்க இயலவில்லை (11:46). முஹம்மத் தன்னுடைய சிறிய தந்தையாரின் சார்பாகவோ (111:1–3) அல்லது உறவினர்களுக்கோ (9:80) பரிந்துரைக்க இயலவில்லை. இவ்வாறிருக்க ஒரு நபியோ அல்லது ஒரு மகானோ முற்றிலும் அந்நியர் ஒருவருக்காகப் பரிந்துரைப்பார் என்று எவரொருவரையும் எண்ணச் செய்வது எது? பார்க்க 2:48, 123; 6:51, 70, 94; 7:53; 10:3; 19:87; 26:100; 30:13; 32:4; 36:23; 39:44; 40:18; 43:86; 53:26. & 74:48. முஹம்மதின் பரிந்துரை 25:30–ல் உள்ளது.

*****************************

**பின் இணைப்பு 9**

# ஆப்ரஹாம்: இஸ்லாமின் ஆதித்தூதர்

இஸ்லாமின் ஸ்தாபகர் முஹம்மத் ஆவார் என்பது எங்கும் வியாபித்திருக்கின்ற புராணங்களில் ஒன்றாக உள்ளது. ஆதமின் காலத்தில் இருந்து கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கமாக இஸ்லாம், கடவுளுக்கு மட்டுமே முற்றிலும் சரணடைதல், இருந்த போதிலும் (3:19, 85), "இஸ்லாம்" (சரணடைதல்) எனும் வார்த்தையை முதலில் பயன்படுத்தியவர் ஆப்ரஹாம்தான் என்றும், மேலும் நமக்கு "முஸ்லிம்கள்", அதாவது சரணடைந்தோர் என பெயரிட்டவர் என்றும் இந்தக் குர்ஆனில் விவரித்துக் கூறப்படுகின்றது (22:78). ஆப்ரஹாமின் கடவுளுக்கான முன்மாதிரியான சரணடைதல், அது கடவுளின் கட்டளை என்று அவர் நினைத்தபோது, அவருடைய ஒரே மகனான இஸ்மாயிலைப் பலியிடுவதற்கு, பிரசித்திபெற்ற அவருடைய தயார் நிலையின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இப்போது வெளிப்பட்டுள்ளபடி, அத்தகையதொரு கட்டளை உண்மையில் சாத்தானிடம் இருந்து வந்ததாகும்.

### ஆப்ரஹாமிடம் அவருடைய மகனைப் பலியிடுமாறு கடவுள் ஒருபோதும் கட்டளையிடவில்லை

கடவுள் மிக்க கருணையாளராக இருக்கின்றார். தன்னுடைய சொந்தச் சட்டத்தை அவர் ஒருபோதும் மீறுவதில்லை (7:28). மிக்க கருணையாளர் ஆப்ரஹாமிடம் அவருடைய மகனைக் கொல்லுமாறு கட்டளையிட்டார் என்று நம்புகின்ற எந்த நபரும் கடவுளின் சுவனத்தை அடைவது சாத்தியமானதாக இல்லை. கடவுளைப்பற்றிய இத்தகைய தீய எண்ணம் மிகப்பெருமளவில் இறைநிந்தனை நிறைந்ததாகும். கடவுள் ஆப்ரஹாமிடம் அவருடைய மகனைக் கொல்லுமாறு கட்டளையிட்டதாக இந்த குர்ஆனில் எந்த இடத்திலும் நாம் காணவில்லை. மாறாக, சாத்தானின் சதியில் இருந்து ஆப்ரஹாமையும் இஸ்மாயீலையும் காப்பாற்றுவதற்காகத்தான் கடவுள் குறுக்கிட்டார் (37:107), மேலும் அவர் ஆப்ரஹாமிடம் கூறினார்: "நீர் அந்தக் கனவை நம்பி விட்டீர்" (37:105). சந்தேகத்திற்கிடமின்றி, அது சாத்தானால் உந்தப்பட்ட ஒரு கனவாக இருந்தது. கடவுளின் மாற்ற முடியாத சட்டமாவது : "கடவுள் ஒருபோதும் பாவத்தை ஆதரிப்பதில்லை" (7:28).

### மில்லத் இப்ராஹீம்

இக்குர்ஆன் முழுவதிலும் இஸ்லாம் *"மில்லத் இப்ராஹீம்"* (ஆப்ரஹாமின் மார்க்கம்) என்று அழைக்கப்படுகின்றது

(2:130, 135; 3:95; 4:125; 6:161; 12:37–38; 16:123; 21:73; 22:78). இன்னும் அதிகமாக, முஹம்மத் ஆப்ரஹாமைப் பின்பற்றியவராக இருந்தார் என்பதை இக்குர்ஆன் நமக்குத் தெரிவிக்கின்றது (16:123).

இஸ்லாமின் ஆதித்தூதராக இருந்தவர் ஆப்ரஹாம்தான் என்ற உண்மையைக் குறித்த பொதுவானதோர் அறியாமையின் காரணத்தால், பெயர்தாங்கி முஸ்லிம்கள் பலர் கடவுளுக்குச் சவால் விடுகின்றனர்: "(கடவுளால் உறுதியாகக் கூறப்பட்டுள்ளபடி) இந்தக் குர்ஆன் முழுமையானதாகவும் முற்றிலும் விவரிக்கப்பட்டுள்ளதாகவும் இருந்தால், ஒவ்வொரு *(ஸலாத்)* தொடர்புத் தொழுகையின் *ரக அத்துகளின்* (தொகுதிகளின்) எண்ணிக்கையை எங்கே நாம் காண்பது?" இஸ்லாமின் (சரணடைதல்) அனைத்து வழிபாட்டு அநுஷ்டானங்களும் இக்குர்ஆனின் வெளிப்பாட்டிற்கு முன்னர் ஏற்கனவே நிலைநாட்டப்பட்டிருந்தன என்பதை நாம் இக்குர்ஆனில் இருந்து அறிந்து கொள்கின்றோம் (8:35; 9:54; 16:123; 21:73; 22:27; 28:27). முஹம்மத் பிறந்தபோது இஸ்லாமின் வழிபாட்டு அனுஷ்டானங்கள் அனைத்தும் சிதையாமல் இருந்தன என்பதற்கு வசனம் 16:123 நேரடியான சான்றாகும். "ஆப்ரஹாமின் மார்க்கத்தைப் பின்பற்றுமாறு" முஹம்மத் கட்டளையிடப்பட்டிருந்தார். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வாங்குமாறு நான் உங்களிடம் கூறினால், உங்களுக்கு ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி என்றால் என்ன என்று தெரியும் என்பது புரிந்துகொள்ளப்படுகிறது. அதுபோலவே, ஆப்ரஹாமின் அநுஷ்டானங்களைப் பின்பற்றுமாறு கடவுள் முஹம்மதுக்குக் கட்டளையிட்ட பொழுது (16:123), இத்தகைய அநுஷ்டானங்கள் நன்கு அறியப்பட்டவையாகத்தான் இருந்திருக்கவேண்டும்.

ஆப்ரஹாமுக்குக் கொடுக்கப்பட்ட இஸ்லாமிய அநுஷ்டானங்களின் தெய்வீகப் பாதுகாவலுக்கான மற்றொரு சான்று இத்தகைய சடங்குகளின் "உலகளாவிய அங்கீகாரம்" ஆகும். ஐந்து அன்றாடத் தொழுகைகள் அனைத்திலுமுள்ள *ரக்கஅத்து*களின் எண்ணிக்கையைக் குறித்து எந்தத் தர்க்கமும் இல்லை. *ஸலாத்*தின் தெய்வீகப் பாதுகாவலை இது நிரூபிக்கின்றது. முறையே, ஐந்து தொழுகைகளிலும் உள்ள 2,4,4,3,4 *ரக்கஅத்து*களின் எண்ணிக்கையை இக்குர்ஆனின் கணிதக் குறியீடு உறுதிப்படுத்துகின்றது. 24434 எனும் எண் 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.

சிதைக்கப்பட்டிருந்த அநுஷ்டானங்களுக்கு எதிராக மட்டுமே இக்குர்ஆன் நடவடிக்கை எடுக்கின்றது. உதாரணத்திற்கு, சிதைக்கப்பட்டுவிட்ட அங்கசுத்தியானது 5:6–ல் அதன் அசலான நான்கு படிகளுடன் பழைய நிலைக்கு மீட்கப்படுகின்றது. *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளின்போது குரலின் தொனி சிதைக்கப்பட்டது – முஸ்லிம்கள் பலர் சப்தமின்றித் தொழுகின்றனர். இந்தக் குர்ஆனில் இது சீர்செய்யப்பட்டது, 17:110. இரவுப் பொழுதுகளில் தாம்பத்ய உறவை அனுமதிக்கும் வண்ணம் ரமளானின் போது நோன்பிருத்தல் தளர்த்தப்பட்டது (2:187). 6:141ல் *ஜகாத்* புதுப்பிக்கப்படுகின்றது, அத்துடன் *ஹஜ்* சரியான நான்கு மாதங்களுக்கு மீட்கப்படுகின்றது (பார்க்க பின் இணைப்பு 15).

*****************************

## பின் இணைப்பு 10

# பன்மைப் பதத்தில் கடவுளுடைய பிரயோகம்

திரித்துவக் கொள்கை மிகைத்திருக்கின்ற, ஆங்கிலம் பேசும் இவ்வுலகில், இந்தக் குர்ஆனில் பன்மைப் பதத்தின் கடவுளுடைய பிரயோகத்தின் மூலம் சில மக்கள் வியப்படைகின்றனர். இந்தக் குர்ஆனின் மகத்தான தூதுச் செய்தியானது, எந்தச் சமரசத்திற்கும் நிச்சயம் இடமில்லாத, "கடவுள் ஒருவரேயாவார்" என்பதேயாகும் (2:133, 163; 4:171; 5:73; 6:19; 9:31; 12:39; 13:16; 14:48,52; 16:22, 51; 18:110; 21:108; 22:34; 37:4; 38:65; 39:4; 40:16; 41:6; 112:1).

எல்லாம் வல்லவரால் தன்மையில் பன்மை வடிவம் பயன்படுத்தப்படுகின்ற பொழுதெல்லாம், அது ஒரே சீராக வானவர்கள் முதலான மற்றப் படைப்புகளின் பங்கெடுப்பினைக் குறிக்கின்றது. உதாரணத்திற்கு, இந்தக் குர்ஆனின் வெளிப்பாட்டில் வானவர் கேப்ரியேல் மற்றும் நபி முஹம்மதின் பங்களிப்பு உள்ளடங்கியுள்ளது. எனவேதான் 15:9–ல் பன்மை வடிவத்தின் பிரயோகம் : "***நாமே*** இந்த வேதத்தை வெளிப்படுத்தினோம், மேலும் ***நாமே*** அதனைப் பாதுகாப்போம்." இங்கே பன்மை வடிவமானது இக்குர்ஆனைச் சேர்ப்பிக்கின்ற செயல்பாட்டினில் வானவர் கேப்ரியேல் மற்றும் நபி முஹம்மதின் பங்கெடுப்பினை நேரடியாகப் பிரதிபலிக்கின்றது.

ஆதம் மற்றும் ஜீஸஸினுள் உயிர்மூச்சு ஊதப்படுதல் இத்துடன் தொடர்பு கொண்ட மற்றோர் உதாரணமாகும். ஆதமுடைய படைப்பு விண்ணில் நடைபெற்றதால் கடவுள் அவருக்குள் உயிர் மூச்சை நேரடியாக ஊதினார். எனவே மாறுதலின்றி ஒருமைப் பதம் தன்மையில் பயன்படுத்தப்படுகின்றது:

"என்னுடைய ஆவியில் இருந்து ஆதமுக்குள் நான் ஊதினேன்" (15:29, 38:72). மற்றொருபுறம், ஜீஸஸின் படைப்பானது பூமியில் நடைபெற்றது, எனவே மேரியிடம் கடவுளின் "வார்த்தையை" கேப்ரியேல் எடுத்துச் சென்றார். இயேசுவின் படைப்பை குறிக்கின்றபோதெல்லாம் மாறுதலின்றி பன்மை வடிவம் பயன்படுத்தப் படுகின்றது (21:91, 66:12).

கடவுள் மோஸஸுடன் நேரடியாக வானவர்களின் இடையீடு இன்றிப் பேசியபோது, கடவுள் பிரத்தியேகமாக ஒருமைப் பதத்தில் பேசுவதை நாம் காண்கின்றோம்: ***நான்*** தான் கடவுள். ***என்னை*** அன்றி தெய்வம் இல்லை. நீங்கள் ***என்னை*** மட்டுமே வழிபட வேண்டும், மேலும் (*ஸலாத்*) அன்றாடத் தொடர்புத் தொழுகைகளை ***என்னை*** நினைவு கூர்வதற்காகக் கடைப்பிடியுங்கள்" (20:12–14).

கடவுளின் வழிபாட்டைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றபோதெல்லாம், ஒருமைப் பதம் பயன்படுத்தப் படுகின்றது (51:56).

*****************************

## பின் இணைப்பு 11

# உயிர்த்தெழுப்பப்படுகின்ற அந்நாள்

| |
|---|
| கொம்பு ஊதப்படுகின்றது, உடனே கடவுளால் விலக்களிக்கப்பட்டவர்களை தவிர, வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொருவரும் மயக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். பின்னர் அது இரண்டாவது முறை ஊதப்படுகின்றது, உடனே அவர்கள் எழுந்து நிற்கின்றனர். (39:68) |

மனிதர்கள் மற்றும் ஜின்களின் அனைத்துத் தலைமுறைகளும் இந்தப் பூமியின் மீது உயிர்த்தெழுப்பப் படுவார்கள்; கிட்டத்தட்ட 150 பில்லியன். ஆனால் நாம் பூமியுடன் பிணைக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டோம். கடவுள் ஒரு முட்டைப்புழுவின் உதாரணத்தின் மூலம் நமக்குக் கற்றுக் கொடுக்கின்றார்; அதன் புழுக் கூட்டில் (கல்லறை) அது ஒரு கூட்டுப்புழுவாக மாறுகின்றது, பின்னர் காற்றில் பறக்கின்ற ஒரு பட்டாம்பூச்சியாக அந்தப் புழுக்கூட்டில் இருந்து வெளியேறுகின்றது. அப்பு போலவே, நாம் இங்கே பூமியின் மீது வாழ்கின்றோம், ஆனால் உயிர்த்தெழுப்பப்படுகின்ற அந்நாளில், சமாதிகளில் இருந்து நாம் வெளியேறும் பொழுது நாம் பூமியுடன் பிணைக்கப்பட்டவர்களாக இருக்க மாட்டோம்; அந்தப் பட்டாம் பூச்சியை போல (101:4).

வானவர்களுடன் சேர்ந்து நம்முடைய பிரபஞ்சத்திற்கு அவர் வருகின்ற போது (89:22), பூமியானது கடவுளின் ஒளியினால் பிரகாசிக்கும் (39:69). நம்முடைய பிரபஞ்சம் சாத்தானுக்குரிய தற்காலிகமானதொரு சாம்ராஜ்யமாக இருப்பதனால், அது கடவுளின் நேரடி இருப்பினைத் தாங்க இயலாது (7:143). எல்லாம் வல்லவர் நெருங்கி வருகையில், நட்சத்திரங்கள் ஒன்று மற்றொன்றிற்குள் மோதி நொறுங்கும் (77:8, 81:2), அத்துடன் பூமியானது நமது பாதங்களுக்குக் கீழ் அதிரும் (69:14,89:21). இந்தப் பயங்கரங்கள் நம்பிக்கையாளர்களைக் கவலை கொள்ளச் செய்யாது (21:103).

### மேலான சுவனம்

எல்லாம் வல்ல கடவுளின் வருகையின் போது, மானிடர்கள் மற்றும் ஜின்கள் அனைவரும் தங்களுடைய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அளவினைப் பொறுத்து தாங்களாகவே வகைப்படுத்தப் படுவார்கள். கடவுளை மட்டும் வழிபட்டு, மறுவுலகத்தின் மீது நம்பிக்கை கொண்டு, அத்துடன் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துதலின் மூலம் தங்களுடைய ஆன்மாக்களை ஊட்டப்படுத்திக் கொண்டவர்கள் கடவுளுக்கு நெருக்கமாக இருப்பதற்குப் போதுமான வலிமையுடன் இருப்பார்கள்; அவர்கள் மிக உயர்ந்த அந்தஸ்துக்களை சொந்தமாக்கிக் கொள்வார்கள் (பார்க்க பின் இணைப்பு 5).

### தாழ்வான சுவனம்

குறைவானதோர் அளவுக்குத் தங்களுடைய ஆத்மாக்களை வளர்த்துக் கொண்டவர்கள், அவ்வண்ணமே நாற்பது வயதுக்கு முன்னர் மரணித்து விட்டவர்கள், தாழ்வான சுவனத்திற்குக் கீழ்நோக்கி நகர்வார்கள். அவர்களுடைய வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அவர்களை அனுமதிக்கின்ற அளவு கடவுளுக்கு நெருக்கமாக அவர்கள் இருக்கக் கூடிய அந்த இடத்திற்கு அவர்கள் செல்வார்கள்.

### ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலம்

நரகத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்கு, ஆனால் தாழ்வான சுவனத்திற்குள் நுழைவதற்குப் போதுமான அளவு இல்லாது தங்களுடைய ஆன்மாக்களை ஊட்டப்படுத்திக் கொண்டவர்களும் அங்கிருப்பார்கள். அவர்கள் நரகத்திலும் இல்லை, அன்றி சுவனத்திலும் இல்லை. தாழ்வான சுவனத்திற்குள்

அவர்களை நுழைய அனுமதிக்குமாறு அவர்கள் கடவுளை இறைஞ்சுவார்கள் [7:46–50]. கடவுள் அவர்கள் மீது கருணை கொள்வார், மேலும் ஆத்ம சுத்திகரிப்பு ஸ்தலத்தினைத் தாழ்வான சுவனத்திற்குள் ஒன்று கலந்திடுவார்.

**நரகம்**

தங்களுடைய நலிவின் காரணத்தினால் கடவுளிடமிருந்து விரண்டோடி விடுபவர்களைத் தங்க வைப்பதற்காக ஒரு புதிய, எட்டாவது பிரபஞ்சம் படைக்கப்படும்; அவர்கள் தங்களுடைய ஆத்மாக்களை ஊட்டப்படுத்தவும் வளர்த்துக் கொள்ளவும் தவறிவிட்டனர் [69:17]. கடவுள் ஒருவரையும் நரகத்தில் போட மாட்டார்; அவர்களுடைய சுயமான தேர்வினால் அவர்களே அதன்பால் செல்வார்கள் [பின் இணைப்பு 5].

****************************

### பின் இணைப்பு 12

# முஹம்மத் நபியின் பணி

நபியுடைய ஒரே இறைப்பணியானது குர்ஆனைச் சேர்ப்பிப்பதே; முழுமையான குர்ஆன், குர்ஆனைத் தவிர எந்த ஒன்றுமில்லை [3:20; 5:48–50, 92, 99; 6:19; 13:40; 16:35, 82; 24:54; 29:18; 42:48; 64:12].

வேறு எதனையும் செய்வதற்கு நபிக்கு நேரம் எதுவும் இருந்திடாத அளவுக்கு இக்குர்ஆனைச் சேர்ப்பித்தல் அத்தகையதொரு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பிரம்மாண்டமான பணியாக இருந்தது. இன்னும் கூடுதலாக, இக்குர்ஆனை அன்றி எந்த மார்க்கப் போதனைகளையும் வெளியிடுவதில் இருந்து மிகக் கடுமையான வார்த்தைகளால் நபியானவர் தடுக்கப்பட்டிருந்தார் [69:38–47]. இக்குர்ஆனை விளக்குவதிலிருந்தும் கூட அவர் தடுக்கப்பட்டிருந்தார் [75:15–19]. கடவுள்தான் இக்குர்ஆனுடைய ஒரே ஆசிரியராக இருக்கின்றார் [55:1–2], மேலும் குர்ஆன் தான் மிகச்சிறந்த *ஹதீஸ்* ஆகும் [39:23 & 45:6].

நபியின் மேல் சாட்டப்பட்ட இந்த வார்த்தைகளும் செயல்களும் *(ஹதீஸ் மற்றும் சுன்னா)* அவருடைய மரணத்திற்குப் பின்னர் இரண்டு நூற்றாண்டுகள் வரை தோன்றவில்லை என்ற சரித்திரப்பூர்வமான நிகழ்வினில் இந்தக் குர்ஆனிய உண்மைகள் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. நபியுடைய எதிரிகளின் *ஹதீஸ்* மற்றும் *சுன்னா*வின் புனைந்துரைதனை இக்குர்ஆன் முன்னறிவித்துள்ளது [6:112–115]. தங்களுடைய உள்ளங்களில் அல்லாது தங்களுடைய உதடுகளால் மட்டும் நம்பிக்கை கொண்டவர்களை வெளிப்படுத்துவதற்கான அளவுகோல்களாகத் திகழ்வதற்காக *ஹதீஸ்* மற்றும் *சுன்னா*வின் கண்டுபிடிப்பை அனுமதிப்பது கடவுளின் நாட்டமாக இருந்தது என்று குர்ஆன் நமக்குக் கற்றுக் கொடுக்கின்றது. *ஹதீஸ்* மற்றும் *சுன்னாவின்* பால் ஈர்க்கப்படுகின்றவர்கள் போலி நம்பிக்கையாளர்கள் என நிரூபிக்கப்பட்டு விட்டவர்களாக இருக்கின்றனர் [6:113]. முரண் நகையாக, *ஹதீஸ்* புத்தகங்களானவை இக்குர்ஆனைத் தவிர அவரிடம் இருந்து எந்த ஒன்றையும் எழுதிக் கொள்ளக்கூடாது என்ற நபியின் கட்டளைகளையும் எடுத்துரைக்கின்றன! கீழே காட்டப்பட்டிருப்பவை ஹதீஸ்வாதிகளின் மிகவும் நம்பகமான மூலாதாரங்களான, ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் இஸ்ஹாஹ் அஹ்மத் இப்னு ஹன்பலில் இருந்து எடுக்கப்பட்ட அத்தகைய இரண்டு ஹதீஸ்களேயாகும்:

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ
عَلَيْهِ وَسَلَّمَ : «لَا تَكْتُبُوا عَنِّي شَيْئاً سِوَى الْقُرْآنِ . مَنْ كَتَبَ شَيْئاً
سِوَى الْقُرْآنِ فَلْيَمْحُهُ» (١)

நபி கூறினார், “இக்குர்ஆனைத் தவிர எந்த ஒன்றையும் என்னிடம் இருந்து எழுதிக் கொள்ளாதீர்கள்”.
[அஹ்மத், தொகுப்பு 1, பக்கம் 171, மற்றும் ஸஹீஹ் முஸ்லிம்]

عَنْ عَبْدِ الْمُطَّلِبِ بْنِ عَبْدِ اللهِ قَالَ : [دَخَلَ زَيْدُ بْنُ ثَابِتٍ رَضِيَ اللهُ
عَنْهُ عَلَى مُعَاوِيَةَ رَضِيَ اللهُ عَنْهُ ، فَحَدَّثَهُ حَدِيثًا ، فَأَمَرَ إِنْسَانًا أَنْ يَكْتُبَ ،
فَقَالَ زَيْدٌ : إِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَهَى أَنْ نَكْتُبَ شَيْئًا
مِنْ حَدِيثِهِ ، فَمَحَاهُ] .

நபியானவர் மரணிக்கும் வரை ஹதீஸ்களுக்கு எதிரான தன்னுடைய நிலையில் உறுதியுடன் இருந்தார் என்று இந்த ஹதீஸ் எடுத்துரைக்கின்றது. (அஹ்மத், தொகுப்பு 1, பக்கம் 192)

****************************

### பின் இணைப்பு 13

## (சரணடைதல்) இஸ்லாமின் முதல் தூண்:

## "லா இலாஹ இல்லா அல்லாஹ்" (கடவுளைத் தவிர தெய்வம் இல்லை)

வசனம் 3:18 (சரணடைதல்) இஸ்லாமின் முதல் தூணை எடுத்துரைக்கின்றது : "அவருடன் வேறு தெய்வம் இல்லை என்று கடவுள் சாட்சியம் பகர்கின்றார், மேலும் வானவர்களும் அறிவைப் பெற்றிருப்பவர்களும் அவ்வாறே செய்கின்றனர்".

மிகவும் அதிமுக்கியமான இத்தூண் சிதைக்கப்பட்டுள்ளது. மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் சாத்தானின் பலதெய்வக் கொள்கை சார்ந்த கூற்றினை சுவீகரித்துக் கொண்டுவிட்டனர், எனவே கடவுளின் பெயருடன் முஹம்மதின் பெயரும் மொழியப்படுதலை அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆயினும், 39:45–ல் உள்ள இக்குர்ஆனின் மகத்தான அளவுகோல் இத்தகைய முஸ்லிம்களை நம்பமறுப்பவர்கள் என்று முத்திரையிடுகின்றது: "கடவுள் **மட்டும்** <u>மொழியப்படுகின்ற</u> போது, மறுவுலகில் நம்பிக்கையற்றவர்களாக இருப்பவர்களுடைய இதயங்கள் வெறுப்புக் கொண்டு சுருங்கிடுகின்றன, ஆனால் அவருடன் மற்றவர்களும் <u>மொழியப்படுகின்ற</u> போது, அவர்கள் திருப்தியடைந்தவர்கள் ஆகிவிடுகின்றனர்".

இந்த அளவுகோலை மையமாக வைத்து நான் விரிவான ஆய்வு செய்தேன், பின்பு அதிர்ச்சி தருகின்றதொரு தீர்மானத்தை நான் அடைந்தேன்: 3:18–ல் கட்டளையிடப்பட்டுள்ளபடியான இஸ்லாமின் முதல் தூணை ஆதரிக்காத போலித் தெய்வ வழிபாடு செய்கின்றவர்கள் சரியான <u>*ஷஹாதா*</u>வை உச்சரிப்பதில் இருந்து கடவுளால் தடுக்கப்பட்டு உள்ளனர். அவர்களால் இவ்வாறு மட்டும் கூற இயலாது: முஹம்மதின் பெயரை மொழியாமல் தனித்து "<u>*அஷ்ஹது அல்லா இலாஹ இல்லா அல்லாஹ்*</u>" என்பதை மட்டும். ஒரு முஸ்லிமாக இருப்பதாகக் கூறிக்கொள்ளும் போலித் தெய்வ வழிபாடு செய்கின்ற எவருடனும் இதனை முயற்சித்துப் பாருங்கள். இவ்வாறு கூறும்படி அவர்களிடம் அறைகூவல் விடுங்கள் : "<u>*அஷ்ஹது அல்லா இலாஹ இல்லா அல்லாஹ்*</u>" அவர்கள் ஒருபோதும் அதனைக் கூற இயலாது. இது ஆப்ரஹாமுடைய மார்க்கமாக இருப்பதனால் (2:130, 135; 3:95; 4:125; 6:161; 12:37–38; 16:123; 22:78; பின் இணைப்பு 9) **ஒரே** சமயக் கோட்பாடு "**லா இலாஹ இல்லா அல்லாஹ்**" (அந்த ஒரு கடவுளைத் தவிர வேறு தெய்வம் இல்லை) என்றுதான் இருக்க வேண்டும். ஆப்ரஹாமுக்கு முன்னர் முஹம்மத் இந்தப்பூமியின் மீது இருந்திடவில்லை.

### மிகப்பெரியதோர் இறைநிந்தனை

நபியான முஹம்மதை அவருடைய விருப்பத்திற்கு எதிராக போலித் தெய்வ வழிபாடு செய்வதற்காகக் குர்ஆனைச் சிதைத்தலை விடவும் மிகப் பெரிய இறைநிந்தனை எதுவும் இல்லை. சூரா "*முஹம்மத்*" –ன் வசனம் 19 கூறுகின்றது (47:19) : "அந்த ஒரு கடவுளைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்." கீழே காட்டப்பட்டிருப்பது *THE REVIEW OF RELIGIONS* (The London Mosque, 16 Gressenhall Road London SWI85QL England) எனும் முஸ்லிம் பிரசுரத்தின் வழக்கமாக இடம்பெறுகின்ற அடையாளச் சின்னத்தின் பிரதி ஆகும். குர்ஆனுடைய எழுத்தோவிய பாணியைப்பயன்படுத்தி, "*THE REVIEW*

*OF RELIGIONS"* எனும் பிரசுரத்தினர் 47:19–ன் குர்ஆனிய வாசகம் இத்தகையதுதான் என்ற பொய்யான கருத்தைத் தருகின்ற ஒரு வகையில் *"முஹம்மத் ரஸூல் அல்லாஹ்"* என்ற வாசகத்தைச் சேர்த்துக் கொண்டனர். என்ன ஓர் இறைநிந்தனை!



அல்லாஹ்வாகிய அந்த ஒரு கடவுளுடன் வேறு தெய்வம் எதுவுமில்லை. முஹம்மத் கடவுளின் ஒரு தூதராக உள்ளார்.

(அந்த இறை நிந்தனை)

*சிதைவுண்ட இஸ்லாமினை எடுத்துக்காட்டுகின்ற உதாரணம்*

****************************

## பின் இணைப்பு 14

# விதி

கடவுள் மீது நம்பிக்கை கொள்ளவோ அல்லது நம்பிக்கை கொள்ள மறுக்கவோ நாம் முற்றிலும் சுதந்தரமானவர்களாக உள்ளோம். நாம் சுதந்தரமாக நாடவேண்டுமென்பது கடவுளின் நாட்டமாக உள்ளது (18:29, 25:57, 73:19, 74:37, 76:29, 78:39, 80:12).

நம்முடைய ஆதிபாவத்தைப் புரிந்துவிட்ட பின்னர் (பின் இணைப்பு 7), நம்முடைய குற்றத்தைப் பழித்துரைப்பதுடன் அவருடைய பரிபூரண அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பினைக் கடவுள் நமக்குத் தந்தார் (33:72). ஆனால் ஒரு தெய்வமாக சாத்தானுடைய யோக்கியதையின் ஒரு செயல்முறை விளக்கத்தை நாம் காண வேண்டுமெனத் தீர்மானித்தோம். பெருவாரியான மக்கள் திகிலூட்டும் இந்தச் சோதனைக்கு உள்ளாக்குவதற் காகக் கடவுள் அவர்களைப் படைத்தார் எனும் உண்மையை ஆட்சேபிக்கின்றனர். வெளிப்படையாக, இத்தகைய மக்கள் (1) அவர்கள் பயங்கரமானதொரு குற்றத்தைப் புரிந்து விட்டனர் (அறிமுகவுரை & பின் இணைப்பு 7), அத்துடன் (2) அவர்களுடைய குற்றத்தைப் பழித்துரைப்பதுடன் அவர்களையே மீட்டுக்கொள்வதற்கானதொரு வாய்ப்பினை அவர்கள் கொடுக்கப்பெற்றனர், ஆயினும் இச்சோதனைக்கு உள்ளாவதை அவர்கள் <u>தேர்ந்தெடுத்தனர்</u> என்பதை அறியாதவர்களாக உள்ளனர்.

ஓர் ஒளிப்பதிவு நாடா போன்ற ஏதோ ஒன்றில் நம்முடைய வாழ்வுகள், நம்மைச் சுற்றியுள்ள மற்ற ஒவ்வொன்றுடனும் சேர்த்து, முன்னரே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று 57:22–ல் இருந்து நாம் கற்றுக்கொள்கின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் எந்தவிதமான தீர்மானத்தைச் செய்ய இருக்கின்றோம் என்று கடவுள் முற்றிலும் அறிந்திருக்கின்றார்; நம்மில் எவர் சுவனத்திற்குச் செல்ல இருக்கின்றோம், மேலும் எவர் நரகத்திற்குச் செல்ல இருக்கின்றனர் என்று அவர் அறிந்திருக்கின்றார். நாம் இந்த உலகத்திற்குள் பிறப்பதற்கு முன்னரே கூட, எந்த ஆத்மாக்கள் நல்லவை, மேலும் எந்த ஆத்மாக்கள் தீயவை என்று கடவுள் அறிந்திருந்தார். கடவுளின் சர்வஞானத்தைப் பொறுத்த வரை, ஒவ்வொருவருடைய முன்நெற்றியிலும் "சுவனம்" அல்லது "நரகம்" என்று கூறுகின்ற ஒரு முத்திரையை நாம் கற்பனை செய்து கொள்ளலாம். இருப்பினும், நம்மைப் பொறுத்த வரை, கடவுளின் பரிபூரணமான அதிகாரத்திலோ, அல்லது சாத்தானின் பல தெய்வக் கொள்கை சார்ந்த கண்ணோட்டங்களுடனோ சேர்ந்து கொள்வதற்கு நாம் முற்றிலும் சுதந்தரமானவர்களாக உள்ளோம். எனவே, விதியானது, கடவுளைப் பொறுத்தவரையான ஒரு நிதர்சனமாகும், நம்மைப் பொறுத்த வரை அல்ல.

இந்தப் புரிதலானது "தான் நாடுகின்ற எவரையும் கடவுள் வழி நடத்துகின்றார், மேலும் தான் நாடுகின்ற எவரையும் வழிதவறச் செய்கின்றார்" என்று கூறுகின்ற அநேக வசனங்களை விளக்குகின்றது. அவருடைய அறிவின் அடிப்படையில், நமக்குத் தகுதியான சூழ்நிலைகளில் கடவுள் நம்முடைய ஆத்மாக்களை நியமிக்கின்றார். கடவுள் வானவர்களிடம், "நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்" (2:30) என்று கூறிய பொழுது, இதன் அர்த்தமானது நம்மையே மீட்டுக் கொள்வதற்கானதொரு வாய்ப்புக்கு நம்மில் சிலர் தகுதி பெற்றிருந்தனர் என்பதேயாகும். வழிகாட்டலுக்குத் தகுதியுடையவர்களுக்குக் கடவுளுடைய வழிகாட்டலின் ஓர் உதாரணம் 21:51–ல் காணப்படுகின்றது: "ஆப்ரஹாமுக்கு அவருடைய வழிகாட்டலை நாம் வழங்கினோம், ஏனெனில் நாம் அவரைப் பற்றி முற்றிலும் அறிந்தவர்களாக இருந்தோம்." வேறு வார்த்தைகளில், ஆப்ரஹாம் வழிகாட்டப்பட்டிருப்பதற்குத் தகுதி பெற்றிருந்த நல்லதோர் ஆத்மா என்பதைக் கடவுள் அறிந்திருந்தார், ஆகவே கடவுள் அவருடைய வழிகாட்டலையும்

புரிந்துகொள்ளுதலையும் அவருக்கு வழங்கினார். மற்றொரு நல்ல உதாரணம் 12:24–ல் எடுத்துரைக்கப்படுகின்றது. "அவருடைய இரட்சகரிடமிருந்து ஓர் அத்தாட்சியை அவர் கண்டிராவிட்டால்," ஜோஸஃப் எகிப்திய கனவானின் மனைவிக்குப் பலியாகினார், அத்துடன் கிட்டத்தட்டக் கள்ளவுறவு கொண்டு விட்டார். 12:24–ல் கடவுள் நமக்குக் கற்றுத்தருவதாவது, அவர் "தீமையையும் பாவத்தையும் ஜோஸஃபிடமிருந்து திசை திருப்பினார். ஏனெனில் அர்ப்பணித்துக் கொண்ட என்னுடைய வழிபாட்டாளர்களில் ஒருவராக அவர் இருந்தார்." தன்னுடைய காமத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டவராக இருந்தது ஜோஸஃபா? அல்லது அவரை கற்புடையவராக ஆக்கியது பாவத்தில் இருந்தான கடவுளின் பாதுகாப்பா? விதி என்பது இவ்விதமானதாகவே உள்ளது.

****************************

## பின் இணைப்பு 15

# மார்க்கக் கடமைகள்: கடவுளிடமிருந்து ஓர் அன்பளிப்பு

14:40–ல் ஆப்ரஹாம் கடவுளை இறைஞ்சிய பொழுது, பொருள் வளத்தையோ அல்லது உடல்நலத்தையோ அவர் கேட்கவில்லை; அவர் இறைஞ்சிக் கேட்ட அன்பளிப்பாக இருந்ததாவது: "தயவு செய்வீர் கடவுளே, *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றவர்களில் ஒருவனாக என்னை ஆக்குவீராக." கடவுளால் நிறுவப்பட்டுள்ள மார்க்கக் கடமைகளானவை உண்மையில் அவரிடமிருந்து வந்த மகத்தானதோர் அன்பளிப்பாகவே உள்ளன. அவை நம்முடைய ஆத்மாக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உரிய ஊட்டமாக அமைகின்றன. இத்தகையதொரு ஊட்டம் இல்லாமல், தீர்ப்பு நாள் அன்று கடவுளுடைய நேரடி வருகையுடன் தொடர்புடைய அபரிமிதமான சக்தியில் நம்மால் எஞ்சியிருக்க இயலாது. கடவுள் மீதான நம்பிக்கை மட்டுமே நம்முடைய மீட்சிக்கு உத்தரவாதமளித்து விடுவதில்லை; நம்முடைய ஆத்மாக்களை நாம் ஊட்டப்படுத்திக் கொள்ளவும் வேண்டும் (6:158, 10:90–92). கூடுதலாக, கடவுளால் நிறுவப்பட்டுள்ள மார்க்கக் கடமைகளைக் கடைப்பிடித்தலானது உறுதிப்பாட்டினை அடைவதற்கான நம்முடைய உபாயமாக உள்ளது என்று 15:99 எடுத்துரைக்கின்றது: "உறுதிப்பாட்டினை அடையும் பொருட்டு உம்முடைய இரட்சகரை வழிபடுவீராக".

### (ஸலாத்) தொடர்புத் தொழுகைகள்

ஐந்து அன்றாடத் தொடர்புத் தொழுகைகள் ஆத்மாவிற்குரிய முக்கியமான உணவாக உள்ளன. தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்காவிட்டாலும் நன்னெறியானதொரு வாழ்வு நடத்துதலின் மூலம் ஓர் ஆத்மா ஓரளவு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடையக் கூடுமென்கிற அதே சமயம், இது முறையான உணவு இன்றி நொறுக்குத் தீனிகளினால் உயிர்வாழ்தலைப் போன்றதாக இருக்கும்.

கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட <u>அரபி வார்த்தைகளை</u> உச்சரிப்பதன் மூலம் கடவுளுடனான தொடர்பினை நாம் நிலைப்படுத்திக் கொள்ள இயலும் என்று 2:37ல் இருந்து நாம் கற்றுக்கொள்கின்றோம். சூரா 1, திறவுகோல், கடவுளுக்கும் நமக்கும் இடையிலுள்ள கதவினைத் திறக்கின்ற, கணித ரீதியில் தொகுக்கப்பட்ட, சப்தங்களின் ஒரு சங்கமமாக உள்ளது.

1. வைகறைத் தொழுகையானது சூரிய உதயத்திற்கு முன்னரான இரண்டு மணிநேரங்களில் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் (11:114, 24:58).

2. சூரியன் நண்பகலின் அதன் உச்சிப்புள்ளியில் இருந்து சாய்கின்றபோது நண்பகல் தொழுகைக்கு உரிய நேரம் வந்து விடுகின்றது (17:78).

3. பிற்பகல் தொழுகை சூரிய அஸ்தமனத்திற்கு முந்திய 3–4 மணி நேரங்களின்போது கடைப்பிடிக்கலாம் (2:238)

4. சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் அந்தித் தொழுகைக்கு உரிய நேரம் வந்து விடுகின்றது (11:114).

5. விண்ணில் இருந்து அந்தி ஒளி மறைந்த பின்னர் இரவுத் தொழுகையைக் கடைப்பிடிக்கலாம். (24:58)

* வெள்ளிக்கிழமை நண்பகல் கூட்டுத்தொழுகையானது சரணடைகின்ற ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் மீதான கட்டாயமானதொரு கடமையாக உள்ளது (62:9). வெள்ளிக்கிழமை தொழுகையைக் கடைப்பிடிக்கத் தவறுதல் மிகப்பெரியதொரு குற்றமாகும்.

ஒவ்வொரு தொடர்புத் தொழுகையும் அதற்கு உரியநேரம் ஆனதிலிருந்து அடுத்த தொழுகைக்கு உரியநேரம் ஆகும் வரையிலுள்ள கால இடைவெளியின்போது எந்த நேரத்தில் கடைப்பிடிக்கப்பட்டாலும் செல்லுபடியாகக் கூடியதாக உள்ளது. எப்போதேனும் தவறவிட்டுவிட்டால், குறிப்பிட்டதொரு தொடர்புத் தொழுகையானது ஈடு செய்யப்பட இயலாத, தவறவிடப்பட்ட ஒரு வாய்ப்பாகவே உள்ளது; ஒருவர் வருந்தவும்

மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் மட்டுமே இயலும். அந்த ஐந்து தொழுகைகள் முறையே, 2,4,4,3, மற்றும் 4 தொகுதிகள் *(ரக அத்துக்கள்)* கொண்டுள்ளது.

*ஸலாத்* ஆப்ரஹாம் மூலமாக ஏற்கெனவே நிலைநாட்டப்பட்டிருந்தது என்பதற்கான சான்று 8:35, 9:54, 16:123, & 21:73ல் காணப்படுகின்றது. (சரணடைதல்) இஸ்லாமின் மிகவும் முக்கியமான இந்தக் கடமை முஸ்லிம்களின் திரளான பெரும்பான்மையினருக்கு போலித் தெய்வ வழிபாட்டின் ஓர் அநுஷ்டானமாக *(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகள் ஆகிவிடுகின்ற அளவுக்கு மிகவும் கடுமையாகச் சிதைக்கப்பட்டிருக்கின்றன. நமது தொடர்புத் தொழுகைகள் கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று குர்ஆன் கட்டளையிடுகின்ற போதிலும் (20:14; 39:3, 45), இன்றைய முஸ்லிம்கள் தங்களுடைய தொழுகைகளின்போது "முஹம்மதையும் அவர் குடும்பத்தாரையும்" அத்துடன் "ஆப்ரஹாமையும் அவர் குடும்பத்தாரையும்" நினைவு கூர்ந்திடுவதை வலியுறுத்துகின்றனர். இது அந்தத் தொழுகைகளை செல்லத் தகாதவையாக ஆக்கி விடுகின்றது. (39:65).

*தொடர்புத் தொழுகைகளை உறுதிப்படுத்துகின்ற அற்புதங்கள் சம்பந்தப்பட்ட, கீழ்க்கண்ட உரைப்பகுதி, Dr. ரஷாத் கலீஃபாவால் எழுதப்பட்டபடி சப்மிட்டர்ஸ் பெர்ஸ்பெக்டிவ்வின் ஜனவரி 1990 வெளியீடுகளில் (வழமையான மற்றும் இலவசச் சிறப்பிதழ் வெளியீடுகள்) இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.*

## பிரமிப்பூட்டும் கணித அற்புதம்
## 5 தொடர்புத் தொழுகைகள் அனைத்தையும் உறுதிப்படுத்துகின்றது

**[1]** அவருடனான தொடர்பினை (ஸலாத்) நிலைப்படுத்திக் கொள்வதற்காக, சூரா 1 ஆனது நமக்குக் கடவுளின் அன்பளிப்பாகும். சூரா எண்ணையும் வசனங்களின் எண்ணிக்கையையும் ஒன்றின் அருகில் மற்றொன்றாக எழுதுகையில் உங்களுக்குக் கிடைப்பது 17, 5 அன்றாடத் தொழுகைகளில் உள்ள தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை.

**[2]** நாம் சூரா எண்ணை எழுதி, அந்த சூராவில் உள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்களால் அதனைத் தொடர்வோம். நமக்குக் கிடைப்பது இதுதான்:

**1 1 2 3 4 5 6 7** இந்த எண் 19–ன் ஒரு பெருக்குத் தொகையாகும்.

**[3]** இப்போது, நாம் ஒவ்வொரு வசன எண்ணுக்குப் பதிலாக அந்த வசனத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டு மாற்றியமைப்போம். நமக்குக் கிடைப்பது இதுதான்.

*சூரா 1, திறவுகோலின் தன்மைகள்*

| வசன எண் | எழுத்துக்களின் எண்ணிக்கை | எழுத்தெண் மதிப்பு |
|---|---|---|
| 1 | 19 | 786 |
| 2 | 17 | 581 |
| 3 | 12 | 618 |
| 4 | 11 | 241 |
| 5 | 19 | 836 |
| 6 | 18 | 1072 |
| 7 | 43 | 6009 |

**1 19 17 12 11 19 18 43–**ம் கூட 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது. வாதப்படி, ஒருவர் சூரா 1–ன் எழுத்துக்களை மாற்றி விட்டு, அப்போதும் அதே எண்ணிக்கையிலான எழுத்துக்களை வைத்துக் கொள்ளக்கூடும், ஆயினும், பின் வருகின்ற கணிதரீதியிலான அற்புத நிகழ்வு அந்தச் சாத்தியக் கூற்றைத் தவிர்த்து விடுகின்றது. ஏனெனில் தனித்தனியான ஒவ்வொரு எழுத்தின் எண்மதிப்பும் கணக்கில் கொள்ளப் படுகின்றது. அது இங்கே உள்ளது:

**[4]** ஒவ்வொரு வசனத்திலும் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து, ஒவ்வொரு வசனத்தின் எழுத்தெண் மதிப்பையும் நாம் எழுதிக் கொள்வோம்:

**1 19 786 17 581 12 618 11 241 19 836 18 1072 43 6009–ம்** கூட 19–ன் ஒரு பெருக்குத் தொகையே.

**[5]** இப்போது, நாம் அந்த வசனத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை, அடுத்து அந்த வசனத்தின் எழுத்தெண் மதிப்பினால் தொடரப்படுகின்ற வண்ணம், ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும் சேர்த்துக் கொள்வோம். நமக்குக் கிடைப்பது இதுதான்:

**1 1 19 786 2 17 581 3 12 618 4 11 241 5 19 836 6 18 1072 7 43 6009,** 19–ன் ஒரு பெருக்குத் தொகை.

**[6]** ஒவ்வொரு வசனத்தின் எழுத்தெண் மதிப்புக்களுக்குப் பதிலாக, சூரா 1–ல் உள்ள ஒவ்வொரு தனி எழுத்தினுடைய எழுத்தெண் மதிப்புக்களை நாம் எழுதுவோம். விளைகின்ற அந்நீண்ட எண், 274 இலக்கங்கள் கொண்டிருப்பது, கூட 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது என்று உண்மையிலேயே பிரமிப்பூட்டுகின்ற இந்த அற்புதம் காட்டுகின்றது. **அல்லாஹு அக்பர்.**

**1 7 1 19 2 60 40 1 30 30 5 1 30 200 8 40 50 1 30 200 8 10 40 2 17 ... 50**

இந்த எண் சூரா எண்ணுடன் துவங்கி, அந்த சூராவில் உள்ள வசனங்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு, வசன எண்ணால் தொடரப்பட்டு, இந்த வசனத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு, இந்த வசனத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தினுடைய எழுத்தெண் மதிப்புக்களால் தொடரப்பட்டு, அடுத்த வசனத்தின் எண்ணால் தொடரப்பட்டு, இந்த வசனத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு, இந்த வசனத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தினுடைய எழுத்தெண் மதிப்புக்களால் தொடரப்பட்டு, இவ்வாறே இந்த சூராவின் கடைசி வரை செய்யப்படுகிறது. இவ்விதமாக, கடைசி அங்கமானது 50 ஆகும், "ன" வின் மதிப்பு (கடைசி எழுத்து).

**[7]** மிகவும் நீண்ட எண்களை இங்கே நான் எழுத இயலாது என்பதால், ஒவ்வொரு வசனத்தின் எண், அவ்வசனத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு, அவ்வசனத்தில் உள்ள ஒவ்வொரு தனி எழுத்தினுடைய எழுத்தெண் மதிப்பினால் தொடரப்படுகின்ற அந்நீண்ட எண்ணுக்கு (*) எனும் குறியைப் பகரமாக்குவோம். நாம் சூராவின் எண்ணை எழுதி, அதன் வசனங்களின் எண்ணிக்கையால் தொடர்ந்தால், நமக்குக் கிடைப்பது 17, 5 அன்றாடத் தொழுகைகளில் உள்ள தொகுதிகளின் (ரக அத்துகளின்) எண்ணிக்கை. 17க்குப் பக்கத்தில், முதல் தொழுகையின் எண்ணை எழுதி (1), அதன் ரக்க அத்துக்களின் எண்ணிக்கையாக உள்ள 2–ஐயும், பின்னர் இரண்டு (*)(*) –களையும் தொடர்ந்து, இரண்டாவது தொழுகையின் எண்ணையும் (2), தொடர்ந்து இந்த இரண்டாவது தொழுகையின் ரக்க அத்துக்களுடைய எண்ணிக்கையையும் (4), தொடர்ந்து நான்கு (*) –களையும், அத்துடன் இவ்வாறே தொடர்ந்திட வேண்டும். விளைகின்ற அந்நீண்ட எண் 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது மட்டுமல்ல, அதன் அங்கமாக உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை கூட 4636 (19 X 244)…. ஆகும். சூரா 1–ன் பிரதிநிதித்துவம் எதுவும் விளைவினைப் பாதிக்காமல் (*) –க்குப் பதிலாக இடம்பெற இயலும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்; அவை அனைத்தும் 19–ன் பெருக்குத் தொகைகளையே தருகின்றன. உதாரணத்திற்கு, "திறவுகோல்"–ன் ஒரு சிறிய பிரதிநிதித்துவம் சூரா எண் (1), வசனங்களின் எண்ணிக்கையால் தொடரப்பட்டு (7), சூரா 1–ல் உள்ள எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கையால் தொடரப்பட்டு (139) முழு சூராவினுடைய மொத்த எழுத்தெண் மதிப்பினால் (10143) தொடரப்பட்டதாக உள்ளது. விளைகின்ற அந்த எண்ணும் கூட (1713910143) (*) –ஐப் பிரதிநிதித்துவப்படுத்த இயலும்.

**1712 [*][*] 24 [*][*][*][*] 34 [*][*][*][*] 43 [*][*][*] 54 [*][*][*][*]**

## வெள்ளிக்கிழமைத் தொழுகைகளுக்குரிய அத்தாட்சி

**[8]** வெள்ளிக்கிழமை தொழுகை இரண்டு உபதேசவுரைகளையும் இரண்டு ரக்க அத்துகளையும் (அப்போதும் மொத்தம் 4 தொகுதிகளே உள்ளன) கொண்டிருப்பதனால், மற்ற நாட்களில் 17–வுடன் ஒப்பிடுகையில், வெள்ளிக்கிழமை அன்று நாம் 15 "திறவுகோல்களை" மட்டுமே ஓதுகின்றோம். (7)–ல் உள்ள அந்நீண்ட எண்ணில் 17–க்குப் பதிலாக 15–ஐ நாம் மாற்றியமைத்து, மேலும் நண்பகல் தொழுகையில் இருந்து இரண்டு "திறவுகோல்களை" நீக்கினால், அப்போதும் 19–ன் ஒரு பெருக்குத் தொகையையே நாம் பெறுகின்றோம் என்பதை அப்துல்லா ஆரிக் கண்டுபிடித்தார். இது வெள்ளிக்கிழமைத் தொழுகையை, நண்பகலில் இரண்டு "திறவுகோல்களுடன்" உறுதிப்படுத்துகின்றது. கீழே காட்டப்பட்டுள்ள இந்த நீண்ட எண் வெள்ளிக்கிழமையின் ஐவேளைத் தொழுகைகளை குறிக்கின்றது. அது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாகும்.

**1512 [*][*] 24 [*][*] 34 [*][*][*][*] 43 [*][*][*] 54 [*][*][*][*]**

## "திறவுகோல்" (அல்ஃபாத்திஹா) அரபியில்தான் ஓதப்பட வேண்டும்

**[9]** இக்குர்ஆனில் உள்ள முதல் சூராவானது உலகின் மிகப்பெரும் கணித வல்லுநர்களுக்கு அறைகூவல் விடுத்து திகைக்கச் செய்கின்றதொரு விதத்தில் கணிதரீதியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. சூரா 1 ஆன, "திறவுகோல்"தனை நம்முடைய தொடர்புத் தொழுகைகளில் நாம் ஓதும்போது, இப்பிரபஞ்சத்தில் ஏதோ விஷயம் நடக்கின்றது, மேலும் நம்முடைய படைப்பாளருடனான தொடர்பினை நாம் நிலைப்படுத்திக் கொள்கின்றோம், என்ற உண்மையை இப்போது நாம் உணர்ந்து கொள்கின்றோம். விளைவு பரிபூரண மகிழ்ச்சி ஆகும், இப்பொழுதும் எப்பொழுதும். நம்முடைய எல்லாம் வல்ல படைப்பாளரை ஒரு நாளுக்கு 5 முறைகள் தொடர்பு கொள்வதன் மூலம், கடவுளை நாம் சந்திக்கின்ற அந்தப் பெரிய நாளுக்கான தயாரிப்பில் நம்முடைய ஆத்மாக்களை நாம் ஊட்டப்படுத்தி முன்னேற்றிக் கொள்கின்றோம். தங்களுடைய ஆத்மாக்களை ஊட்டப்படுத்திக் கொண்டவர்கள் மட்டுமே எல்லாம் வல்ல கடவுளின் நேரடி இருப்பினைத் தாங்கிக் கொள்ளவும் மகிழ்ந்து அனுபவிக்கவும் திறனுடையவர்களாக இருப்பார்கள்.

சரணடைந்தோர் அனைவரும், அனைத்து நாடுகளைச் சேர்ந்தவர்களும், கடவுளாலேயே எழுதப்பட்டு,

அவருடனான தொடர்பினை நிலைப்படுத்திக் கொள்வதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள "திறவு கோல்"–ன் வார்த்தைகளை ஓதுகின்றனர் (2:37).

எதிப் யுக்ஸலின் கண்டுபிடிப்பு "திறவுகோல்"–ன் பிரமிப்பூட்டும் தன்மைக்கு வலுச்சேர்ப்பதுடன் அது அரபிமொழியில் தான் ஓதப்பட வேண்டும் எனத் தெளிவாகப் பிரகடனிக்கின்றது.

நீங்கள் "திறவுகோல்" தனை அரபியில் ஓதுகின்ற பொழுது, உங்களுடைய உதடுகள் மிகச்சரியாக 19 முறைகள் ஒன்றையொன்று தொட்டுக்கொள்கின்றன.

"ப" மற்றும் "ம" ஆகிய எழுத்துக்கள் இடம் பெறுகின்றபோது உங்கள் உதடுகள் ஒன்றையொன்று தொட்டுக் கொள்கின்றன. அங்கு 4 "ப"க்களும் 15 "ம"க்களும் உள்ளன. மேலும் இது கூட்டப்பட்டால் வருவது 19. நான்கு "ப"க்களின் எழுத்தெண் மதிப்பாவது 4 x 2 = 8 ஆகும், மேலும் 15 "ம"க்களின் எழுத்தெண் மதிப்பாவது 15x40=600 ஆகும். 4 "ப"க்கள் மற்றும் 15 "ம"க்களின் மொத்த எழுத்தெண் மதிப்பாவது 608, அதாவது 19 x 32 ஆகும்.

| | வார்த்தை | எழுத்து | மதிப்பு |
|---|---|---|---|
| 1. | பிஸ்ம் | ப | 2 |
| 2. | பிஸ்ம் | ம | 40 |
| 3. | ரஹ்மான் | ம | 40 |
| 4. | ரஹிம் | ம | 40 |
| 5. | அல்–ஹம்து | ம | 40 |
| 6. | ரப் | ப | 2 |
| 7. | ஆலமீன் | ம | 40 |
| 8. | ரஹ்மான் | ம | 40 |
| 9. | ரஹீம் | ம | 40 |
| 10. | மாலிக் | ம | 40 |
| 11. | யவ்ம் | ம | 40 |
| 12. | நஃபுது | ப | 2 |
| 13. | முஸ்தகீம் | ம | 40 |
| 14. | முஸ்தகீம் | ம | 40 |
| 15. | அன்அம்த | ம | 40 |
| 16. | அலைஹிம் | ம | 40 |
| 17. | மக்ளூப் | ம | 40 |
| 18. | மக்ளூப் | ப | 2 |
| 19. | அலைஹிம் | ம | 40 |
| | | | 608 (19 X 32) |

## 5 அன்றாடத் தொழுகைகள், குனிதல்கள் (ருகுவு), சிரம்பணிதல்கள் (ஸுஜூத்) மற்றும் தஷஹ்ஹுதின் எண்ணிக்கைகளை உறுதிப்படுத்துதல்

**[10]** பொதுவான அறைகூவல்களில் ஒன்றாக ..... உள்ளதாவது: "(6:19, 38, 114–ல் உறுதியாகக் கூறப்பட்டுள்ளபடி) குர்ஆனானது முழுமையானதாகவும் விவரிக்கப்பட்டதாகவும் இருந்தால், (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளின் விபரங்கள் எங்கே உள்ளன?" இந்த மக்கள் இக்கேள்வியைக் கேட்பதன் காரணமாவது தொடர்புத் தொழுகைகள் ஆப்ரஹாமிடமிருந்து வந்தன என்று இக்குர்ஆன் நமக்குத் தெரிவிக்கின்றது என்பதை அவர்கள் அறியாதவர்களாக உள்ளனர் என்பதனாலேயாகும். (21:73 & 22:78). தொழுகைகளின் எண்களை அவற்றின் குனிதல்கள், சிரம்பணிதல்கள், மற்றும் தஷஹ்ஹுத்களுடன் எழுதினால், நாம் பெறுவது:

1 1 2 2 4 1 2 4 4 8 2 3 4 4 8 2 4 3 3 6 2 5 4 4 8 2

இந்த நீண்ட எண்ணானது 5 தொழுகைகளில் நாம் ஓதுகின்ற சூராவை (1) , அந்த முதல் தொழுகையின் எண்ணால் (1) தொடர்ந்து, பிறகு இந்தத் தொழுகையில் நாம் ஓதுகின்ற "திறவுகோல்"களின் எண்ணிக்கை (2), பிறகு குனிதல்களின் (ருகுவு) எண்ணிக்கை (2) பிறகு சிரம் பணிதல்களின் எண்ணிக்கை (4), (இருப்பு நிலையில்) தஷஹ்ஹுத்களின் எண்ணிக்கை (1), பின்னர் இரண்டாவது தொழுகையின் எண் (2), பின்னர் இரண்டாவது தொழுகையில் நாம் ஓதுகின்ற "திறவுகோல்"–களின் எண்ணிக்கை (4), பின்னர் இந்தத் தொழுகையில் குனிதல்களின் (ருகுவு) எண்ணிக்கை (4), பிறகு சிரம்பணிதல்களின் எண்ணிக்கை (8), பிறகு தஷஹ்ஹுத்களின் எண்ணிக்கை (2), பின்னர் மூன்றாவது தொழுகையின் எண் (3), இவ்வாறே கடைசித் தொழுகை வரை. இந்த நீண்ட எண் 19ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது, அத்துடன் இது தொழுகைகளின் மிகச் சிறிய விபரங்களையும் உறுதிப்படுத்துகின்றது, ருகுவு, ஸுஜூத், மற்றும் தஷஹ்ஹுதின் எண்ணிக்கைகள் உட்பட.

# கடமையான தர்மம் (ஜகாத்)

"அறுவடை நாள் அன்றே" *ஜகாத்* கொடுக்கப்பட்டுவிட வேண்டும் (6:141). "நிகர வருமானம்"தனை நாம் பெறுகின்ற பொழுதெல்லாம், 2.5% ஒதுக்கி வைத்து குறிப்பிடப்பட்டுள்ள பெறுநர்கள்–பெற்றோர்கள், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள் மற்றும் பயணத்தில் இருக்கின்ற அந்நியர்களுக்கு, இதே வரிசையில், நாம் அதனைக் கொடுத்து விடவேண்டும் (2:215). *ஜகாத்*தின் இன்றியமையாத முக்கியத்துவமானது கடவுளின் சட்டத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது:"என்னுடைய கருணை அனைத்துப் பொருட்களையும் சூழ்ந்துள்ளது, எனினும் *ஜகாத்* கொடுக்கின்ற நன்னெறியாளர்களுக்கென நான் அதனைக் குறிப்பிட்டு வைப்பேன்" (7:156).

ஏதேனும் வருமானத்தை நாம் பெறுகின்ற போதெல்லாம் முறையானதோர் அடிப்படையில் *ஜகாத்*தானது கவனத்துடன் கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டுவிட வேண்டும். அரசாங்க வரிகள் கழித்துக் கொள்ளப்பட வேண்டும், ஆனால் மற்ற செலவினங்களான கடன்கள், அடமானங்கள், மற்றும் வாழ்க்கைச் செலவினங்கள் போன்றவற்றை அல்ல. தேவையுடைய நபர்களை ஒருவர் அறியாவிட்டால், அவன் அல்லது அவள் அந்த ஜகாத்தை ஒரு பள்ளிவாசலுக்கோ அல்லது தர்ம ஸ்தாபனத்திற்கோ, ஏழை மக்களுக்கு உதவுகின்ற அத்தெளிவான நோக்கத்துடன் கொடுத்து விடலாம். பள்ளிவாசலுக்கோ, அல்லது மருத்துவமனைகளுக்கோ அல்லது ஸ்தாபனங்களுக்கோ கொடுக்கப்படுகின்ற தர்மங்கள் *ஜகாத்* ஆகக் கருதப்பட இயலாது.

# நோன்பிருத்தல்

நோன்பிருத்தலின் முழு விபரங்கள் 2:183–187–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# புனிதயாத்திரை: ஹஜ் & உம்ரஹ்

வாழ்நாளில் ஒரு முறை, ஹஜ் மற்றும் *உம்ரஹ்* ஆகியவை அதற்கு இயன்றவர்களுக்குக் கடமையாக்கப் பட்டுள்ளது. புனிதயாத்திரையானது ஆப்ரஹாமின் கடவுளுக்கான முன்னோடியான சரணடைதலை நினைவு கூர்கின்றது (பின் இணைப்பு 9), அத்துடன் நான்கு புனித மாதங்களான ஜீல்–ஹிஜ்ஜா, முஹர்ரம், ஸஃபர், மற்றும் ரபியுல் அவ்வலின்போது கடைப்பிடிக்கப்பட வேண்டும் (12–வது, 1–வது, 2வது, 3வது மாதங்கள்) (2:197, 9:2, 36), *உம்ரஹ்* எப்பொழுது வேண்டுமானாலும் கடைப்பிடிக்கப்படலாம். இஸ்லாமின் மற்ற அனைத்துக் கடமைகளையும் போலவே ஹஜ்ஜும் சிதைக்கப்பட்டுள்ளது. அதிகமான முஸ்லிம்கள் ஜீல்–ஹிஜ்ஜாவில் ஒரு சில நாட்களின்போது மட்டுமே ஹஜ்ஜைக் கடைப்பிடிக்கின்றனர், மேலும் அவர்கள் ரஜப், ஜீல்–காஇதா, ஜீல்–ஹிஜ்ஜா மற்றும் முஹர்ரமைப் புனித மாதங்களாகக் கருதுகின்றனர். (7வது, 11வது, 12வது, 1வது மாதங்கள்) கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்டுள்ள ஒரு சிதைவாக இது உள்ளது (9:37).

புனிதயாத்திரை ஒரு முழுக்குடனோ அல்லது குளியலுடனோ துவங்குகின்றது, பின்னர் ஆண் யாத்திரீகர்கள் தையலற்ற நீண்ட அங்கிகளை அணிந்து கொள்கின்ற, மேலும் பெண்கள் ஒரு கண்ணியமான உடையணிந்து கொள்கின்ற *"இஹ்ராம்,"* எனும் புனித நிலையால் தொடரப்படுகின்றது (2: 196). ஹஜ் நெடுகிலும் யாத்திரீகர் தாம்பத்ய இன்பம், முடியை வெட்டிக் கொள்ளுதல் மற்றும் சிரைத்துக் கொள்ளுதல் போன்ற அலங்காரங்கள், வாக்குவாதங்கள், துர்நடத்தை, மற்றும் கெட்ட வார்த்தைகள் ஆகியவற்றில் இருந்து விலகி இருக்கின்றார் (2:197). தூய்மைப்படுத்திக் கொள்ளல், குளியல் மற்றும் வழமையான சுகாதாரப் பழக்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. மக்காவில் உள்ள புனிதப்பள்ளியை வந்தடைந்த உடன், கடவுளைத் துதித்தவாறும் புகழ்ந்தவாறும், ஏழு முறைகள் கஅபாவைச் சுற்றி நடக்கின்றார் (2:125, 22:26–29). பொதுவான உச்சாடனமாவது : "*லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்*" (என் கடவுளே, நான் உமக்கு மறுமொழி அளித்துள்ளேன்). "*லப்பைக்க லாஷரீக லக லப்பைக்*" (நான் உமக்கு மறுமொழி அளித்துள்ளேன், மேலும் உம்முடன் வேறு தெய்வம் இல்லையென நான் பிரகடனம் செய்கின்றேன்; நான் உமக்கு மறுமொழி அளித்துள்ளேன்). அதற்கடுத்த படியாவது ஸஃபா மற்றும் மர்வா குன்றுகளுக்கு இடையே உள்ள அந்த அரை மைல் தொலைவினை, அவ்வப்பொழுது குதித்தோடுதல்களுடன், ஏழு முறைகள் நடந்து செல்லுதல் (2:158), யாத்திரையின் *உம்ரஹ்* பகுதியினை இது நிறைவு செய்கின்றது.

பின்னர் அந்த யாத்திரீகர் விடியற்காலையில் இருந்து சூரிய அஸ்தமனம் வரை வழிபாடு, தியானம், மற்றும் கடவுளின் துதிகளுடன் கூடிய ஒரு நாளைச் செலவிடுவதற்கென அரஃபாத்திற்குச் செல்கின்றார் (2:198). சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர், அந்த யாத்திரீகர் இரவுத் தொழுகை கடைப்பிடிக்கப்படுகின்ற, அத்துடன் சாத்தானின் மீதான அடையாளபூர்வக் கல்லெறிதலுக்கென 21 சிறுகூழாங்கற்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்கின்ற, முஜ்தலிஃபாவுக்குச் செல்கின்றார். முஜ்தலிஃபாவில் இருந்து, இரண்டு அல்லது மூன்று நாட்கள் செலவிடுவதற்காக மினாவுக்கு அந்த யாத்திரீகர் செல்கின்றார் (2:203). மினாவில் முதல் காலைப் பொழுதில், ஏழைகளுக்கு உணவளிப்பதற்காகவும், அத்துடன் சாத்தானின் தந்திரத்தில் இருந்து ஆப்ரஹாமையும்

இஸ்மாயிலையும் காப்பாற்றுவதற்காகக் கடவுளின் குறுக்கீட்டை நினைவு கூர்வதற்காகவும் அந்த யாத்திரீகர் ஒரு பிராணிப் பலியை அர்ப்பணிக்கின்றார் (37:107, பின் இணைப்பு 9). கல்லெறிகின்ற சடங்குகள் சாத்தானின் பல தெய்வக் கோட்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுத்தலை அடையாளப்படுத்துகின்றது, மேலும் கடவுளைத் துதித்தவாறு, மூன்று நிறுத்தங்களில் ஒவ்வொன்றிலும் ஏழு சிறு கூழாங்கற்களை எறிவதன் மூலம் செய்யப்படுகின்றது (15:34). பின்னர் அந்த யாத்திரீகர் மக்காவிற்குத் திரும்பியவுடன் கஅபாவை ஏழுமுறைகள் பிரிவுபசார வலம் வருகின்றார்.

துரதிர்ஷ்டவசமாக, இன்றைய முஸ்லிம் யாத்திரீகர்கள் அதிகமானோர், அங்கே அவர்கள் போலித் தெய்வ வழிபாட்டின் மிகவும் வெளிப்படையான செயல்களைப் புரிவதுடன் முஹம்மது நபியின் சமாதியினைத் தரிசிப்பதை ஒரு வழக்கமாக ஆக்கிக் கொண்டுள்ளனர், மேலும், இவ்விதமாக தங்களுடைய ஹஜ்ஜினை செல்லாததாக ஆக்கிக் கொள்கின்றனர். குர்ஆனானது ஒரே சீராக "புனிதப்பள்ளிவாசல்" என்று பேசுகின்ற அதே சமயம் இன்றைய முஸ்லிம்கள் "இரண்டு புனித பள்ளிவாசல்கள்" என்று பேசுகின்றனர்! போலித் தெய்வ வழிபாட்டின் பளிச்சிடுகின்ற ஒரு காரியத்தில், இந்த முஸ்லிம்கள் முஹம்மதின் சமாதியை மற்றொரு "புனித பள்ளிவாசலாக" அமைத்துக்கொண்டு விட்டனர்! இது குர்ஆனின் புனிதத்தை அவமதிக்கின்றதோர் அத்துமீறலாகும், அத்துடன் முரண் நகையாக இது ***ஹதீஸையும்*** கூட மீறுகின்றது. கீழே காட்டப்பட்டுள்ள இந்த ***ஹதீஸ்*** வினோதமான இந்த முரண் நகையைச் சித்தரிக்கின்றது.

لعنة الله على اليهود والنصارى اتخذوا قبور أنبيائهم مساجد

**இந்த பொய்யான வாக்குமூலத்தின் மொழிபெயர்ப்பு: யூதர்களையும் கிறிஸ்துவர்களையும் அவர்களுடைய நபிமார்களின் சமாதிகளைப் பள்ளிவாசல்களாக மாற்றி விட்டமைக்காகக் கடவுள் சபித்துவிட்டார். (புகாரி, நவவீ பதிப்பு, தொகுப்பு 6, பக்கம் 14).**

## உடற்கூறு ரீதியான பலன்கள்

*(ஸலாத்)* தொடர்புத் தொழுகைகள், *(ஜகாத்)* கடமையான தர்மம், ரமளான் மாதத்தின்போது நோன்பிருத்தல் மற்றும் ஹஜ்ஜினைக் கடைப்பிடிப்பதன் மூலமாக, அவற்றின் விலைமதிப்பற்ற ஆன்மீகப் பலன்களுடன் கூடுதலாக, உடற்கூறுரீதியான, பொருளாதாரம் சார்ந்த மற்றும் ஆரோக்கியத்திற்கு உகந்த பலன்கள் அளவிலாது உள்ளன.

விடியற்காலைத் தொழுகையைக் கடைப்பிடித்தல் தூக்கத்தின்போது நீண்ட நேரங்கள் அசைவற்றிருத்தலைத் தடுத்து நிறுத்துகின்றது; இது மூட்டு வலியைத் தவிர்த்து விடுகின்றது என்று இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காலையில் சீக்கிரமாக எழுந்து விடுதல் மன அழுத்தம் போன்ற மற்ற மனோரீதியான பிரச்சனைகளை எதிர்த்துப் போராட உதவுகின்றது. தொடர்புத் தொழுகைகளின் போது மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற சிரம்பணிதல் எனும் நிலை நமது மூளைகளில் உள்ள இரத்த நாளங்களை அதிக இரத்தத்திற்கு இடமளிக்கும் வண்ணம் விரிவடையச் செய்கின்றது, மேலும் இது தலைவலிகளைத் தவிர்த்திடுகின்றது. முதுகு மற்றும் மூட்டுக்களை மீண்டும் மீண்டும் வளைத்தல் ஆரோக்கியம் நிறைந்ததோர் உடற்பயிற்சியாக உள்ளது. இவை அனைத்தும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்ட உண்மைகளாக உள்ளன.

தொடர்புத் தொழுகைகளுக்கு முன்னர் அவசியமாக உள்ள அங்கசுத்திகள் கழிப்பறையை மிகவும் அடிக்கடி உபயோகப்படுத்துவதற்கு நம்மை ஊக்குவிக்கின்றன. இந்தப் பழக்கமானது பொதுவான மற்றும் நாசகரமான புற்றுநோயான, குடல் புற்றுநோயில் இருந்து நம்மைப் பாதுகாக்கின்றது. தீங்கிழைக்கின்ற இரசாயனங்கள் சிறுநீர் மற்றும் மலப்பொருட்களில் கழிக்கப்பட்டு விடுகின்றன. இந்த கழிவுகள் நீடிக்கப்பட்ட கால அளவுகளுக்கு குடலில் வைக்கப்பட்டிருந்தால், தீங்கு தரும் பொருட்கள் மீண்டும் உடலுக்குள் உறிஞ்சப்பட்டு விடுகின்றன, மேலும் புற்றுநோயை உண்டாக்குகின்றன.

ரமளான் மாதத்தின்போது நோன்பிருத்தல், விரிந்து விட்ட நமது வயிறுகளை மீண்டும் அவற்றின் வழக்கமான அளவுகளுக்குக் கொண்டு வருகின்றது, தற்காலிக நீரிழப்பின் மூலம் நமது இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது, தீங்கிழைக்கின்ற நச்சுப்பொருட்களை உடலை விட்டு நீக்குகின்றது, நமது சிறுநீரகங்களுக்கு மிகவும் அவசியமான ஓய்வினை அவற்றுக்கு அளிக்கின்றது, அத்துடன் அளவுக்கதிகமான மற்றும் தீங்கிழைக்கின்ற கொழுப்பினை நீக்குவதன் மூலம் நமது எடையினைக் குறைக்கின்றது.

*ஜகாத்* தர்மம் மற்றும் ஹஜ் புனித யாத்திரை மிகவும் விரிவான தாக்கங்கள் கொண்ட பொருளாதார மற்றும் சமூகப் பலன்களைக் கொண்டுள்ளன.

## பின் இணைப்பு 16

# உணவுத் தடைகள்

இக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுத் தடுக்கப்பட்டிராத எந்த ஒன்றையும் தடுப்பவர்கள் மீது கடவுள் மிகவும் அதிருப்தியுள்ளவராக இருக்கின்றார் என்று இக்குர்ஆன் போதிக்கின்றது (16:112–116). இக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுக் கூறப்படாத தடைகள் எதனையும் மேற்கொள்வது போலித் தெய்வ வழிபாட்டிற்கு நிகரானதாகும் (6:142–152). இத்தகைய தடைகள் கடவுளுடன் மற்ற தெய்வங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. நீங்கள் கடவுளை **மட்டும்** வழிபடுவீர்களாயின், நீங்கள் அவருடைய போதனைகளை **மட்டும்** மேற்கொள்வீர்கள், அத்துடன் அவரால் மட்டும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டளைகளையும் தடைகளையுமே செயல்படுத்துவீர்கள்.

இக்குர்ஆனில் உணவுத் தடைகளை எடுத்துரைக்கும் குறிப்பான தன்மை 6:145–146–ல் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இந்த இரு வசனங்களில் இருந்து கடவுள் “இறைச்சி”தனைத் தடைசெய்கின்றபோது அவர் “இறைச்சி”யைத்தான் தடைசெய்கின்றார், வேறு எந்த ஒன்றையும் அல்ல, மேலும் அவர் “கொழுப்பு” தனைத் தடைசெய்கின்றபோது அவர் தடைசெய்வது குறிப்பாக அதனைத்தான் என்று நாம் கற்றுக்கொள் கின்றோம். இந்த இருவசனங்களும் பன்றியின் “இறைச்சி”தான் தடைசெய்யப்பட்டுள்ளது, “கொழுப்பு” அல்ல என்பதை நமக்குத் தெரிவிக்கின்றன. மிகத் தெளிவாக, பல நாடுகளில் பன்றிக்கொழுப்பு சுடப்பட்ட உணவுகளிலும் மற்ற உணவுப் பொருட்களிலும் பயன்படுத்தப்படும் என்பதைக் கடவுள் அறிந்தேயிருந்தார், மேலும் இத்தகைய பயன்பாடு அந்த உணவுகளை *ஹராம்* (தடுக்கப்பட்டவை) ஆக ஆக்கி விடுவதில்லை. இக்குர்ஆன் குறிப்பாக நான்கு உணவுகளை மட்டுமே தடைசெய்கின்றது (2:173, 5:3, 6:142–145 மற்றும் 16:112):

கூறுவீராக, “எனக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றில் உண்ணுபவர் எவருக்கும்
எந்த ஒன்றும் தடுக்கப்பட்டிருக்க நான் காணவில்லை,
அது (1) செத்தவை, (2) வடிகின்ற ரத்தம்,
(3) பன்றிகளின் இறைச்சி, ஏனெனில் இது தூய்மையற்றதாக உள்ளது, மேலும்
(4) இறைநிந்தனையாக கடவுளை விடுத்து மற்றவர்க்கு
அர்ப்பணிக்கப்பட்ட இறைச்சியாக இருந்தாலேயன்றி.”
வன்மத்துடனோ அல்லது வீம்புக்காகவோ அல்லாமல்
இவற்றை உண்ணுவதற்கு ஒருவர் நிர்பந்திக்கப்படுவாராயின்,
பின்னர் உம்முடைய இரட்சகர் மன்னிப்பவர், மிக்க கருணையாளர். (6:145)

****************************

## பின் இணைப்பு 17

# மரணம்

பெருவாரியான மக்களுக்கு மரணம் ஒரு மாபெரும் மர்மமாகவே உள்ளது. இக்குர்ஆனுடைய மாணவர்களுக்கு அவ்வாறல்ல. மரணம் மிகச் சரியாகத் தூக்கத்தைப் போன்றதாகும் என்று நாம் கற்றுக் கொள்கின்றோம்; கனவுகளுடன் கூடியது (6:60, 40:46). மரணம் மற்றும் உயிர்த்தெழுப்பப்படுதலுக்கு இடையே உள்ள கால அளவு ஓர் இரவுத் தூக்கத்தைப்போல் கடந்து சென்று விடுகின்றது (2:259; 6:60; 10:45; 16:21; 18:11, 19, 25; 30:55).

மரணத் தருவாயின் போது, ஒவ்வொருவரும் அவனுடைய அல்லது அவளுடைய விதியை அறிந்து கொள்வர்; சுவனம் அல்லது நரகம். நம்பமறுப்பவர்களுக்கு, மரணம் பயங்கரமானதொரு நிகழ்வாக உள்ளது: வானவர்கள் அவர்களை முகங்களிலும் விலாப்புறங்களிலும் அடித்தவாறு அவர்களுடைய ஆன்மாக்களைப் பறித்துச் செல்கின்றனர் (8:50, 47:27, 79:1).

ஒரே சீராக, இக்குர்ஆன் இரண்டு மரணங்களைப் பற்றிப் பேசுகின்றது, முதல் மரணமானது கடவுளின் பரிபூரண அதிகாரத்தில் ஒரு நிலையை எடுக்க நாம் தவறிய போது நிகழ்ந்தது (பின் இணைப்பு 7). இந்த உலகிற்குள் நாம் பிறக்கின்றவரை அந்த முதல் மரணம் நீடித்திருந்தது. இரண்டாம் மரணமானது இந்த உலகத்தில் நம் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகின்றது (2:28, 22:66, 40:11).

*குறிப்பு : பின் வருவது United Submitters International-ன் மாதாந்திரச் சிறுபிரசுரமான, Submitters Perspective-ன் ஃபிப்ரவரி 1990 வெளியீட்டில் இருந்து அதன் தலையங்கத்தின் ஒரு மறு பதிப்பு ஆகும். இது Dr. ரஷாத் கலீஃபாவால் எழுதப்பட்ட கடைசி இதழுக்கு முந்தியதாக இருந்தது. இது டிசம்பர் 1989–ல் குறித்த*

*காலத்திற்கு முன்னரே பூர்த்தி செய்யப்பட்டு அஞ்சல் செய்யப்பட்டிருந்தது. Dr. கலீஃபா 1990, ஜனவரி 31 அன்று வீர மரணம் அடைந்தார், மேலும் அவரது ஆன்மாவானது நேரடியாகச் சுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.*

## நன்னெறியாளர்கள் உண்மையில் மரணிப்பதில்லை அவர்கள் நேராகச் சுவனத்திற்குச் செல்கின்றனர்.



*நம்பிக்கை கொண்டு நன்னெறிகள் புரிகின்றவர்களுக்கு அவர்கள் பாய்கின்ற ஆறுகளுடன் கூடிய தோட்டங்களைப் பெற்றிருப்பார்கள் என்ற நற்செய்தியைக் கொடுப்பீராக. அங்கே பழங்களினால் ஆன வாழ்வாதாரங்கள் வழங்கப்படுகின்ற பொழுது, அவர்கள் கூறுவார்கள், "கடந்த காலத்திலும் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது இதுவாகத்தான் இருந்தது." ஒப்பான வாழ்வாதாரங்களே அவர்களுக்குக் கொடுக்கப்படும், மேலும் அங்கே அவர்கள் தூய்மையான வாழ்க்கைத் துணைகளைப் பெற்றிருப்பார்கள். அங்கே அவர்கள் நிரந்தரமாகத் தங்கி இருப்பார்கள் [2:25].*

*கடவுளின் நிமித்தமாகக் கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நினைக்காதீர்கள்; வாழ்வாதாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களாக, தங்களுடைய இரட்சகரிடம் அவர்கள் உயிருடன் இருக்கின்றனர் [3:169].*

*கடவுளின் நிமித்தம் கொல்லப்பட்டு விட்டவர்களைப் பற்றி "அவர்கள் இறந்து விட்டவர்கள்" என்று கூறக் கூடாது. ஏனெனில் அவர்கள் உயிருடன் உள்ளனர், ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள் [2:154].*

*நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நீங்கள் கடவுளுக்கும் அத்துடன் தூதருக்கும், உங்களை உயிருள்ளவர்களாக வைத்திருக்கக் கூடியவற்றின் பால் அவர் உங்களை அழைக்கின்ற பொழுது மறுமொழியளிக்க வேண்டும் [8:24].*

*கடவுளின் நிமித்தம் புலம் பெயர்ந்து, பின்னர் கொல்லப்பட்டோ அல்லது மரணித்தோ விடுபவர்கள், நிச்சயமாகக் கடவுள் அவர்களுக்கொரு நல்ல வாழ்வாதாரத்தை வழங்குவார் [22:58].*

*முதல் மரணத்திற்கு அப்பால், அவர்கள் மரணத்தைச் சுவைக்க மாட்டார்கள், அத்துடன் கடவுள் அவர்களுக்கு நரகத்தின் தண்டனையைத் தவிர்த்து விடுவார் [44:56].*

*அவரிடம் கூறப்பட்டது, "சொர்க்கத்திற்குள் நுழைவீராக." அவர் கூறினார்." என்னுடைய இரட்சகர் என்னை மன்னித்து விட்டார், மேலும் என்னைக் கண்ணியப்படுத்தினார் என்பதை; (பூமியின் மீது) என்னுடைய சமூகத்தார் அறிந்திருக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்" [36:26–27].*

பாவத்தின் சம்பளம் மரணம் ஆகும் [ரோமர்கள் 6:23]

3:81 மற்றும் 46:9–ல் கூறப்பட்டுள்ள படி கடவுளின் உடன்படிக்கைத் தூதரானவர் புதியதான எதனையும் கொண்டு வருவதில்லை; நான் பெற்றுக்கொண்டு உங்களிடம் அனுப்புகின்ற ஒவ்வொன்றும் இக்குர்ஆனில் ஏற்கனவே உள்ளன. இருப்பினும், எல்லாம் வல்ல கடவுளால் குறிப்பிட்டதொரு நேரத்தில் வெளிப்படுத்தப்படுவதற்காக வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நிறைந்ததாக இக்குர்ஆன் உள்ளது. மேலே காட்டப்பட்டுள்ள வசனங்களை நோக்கி இந்த மகத்தான செய்தியை அறிந்து கொள்ளும் நேரம் இதுவேயாகும்: **நன்னெறியாளர்கள் மரணிப்பதில்லை;** இந்தப் பூமியின் மீது அவர்களுடைய வாழ்வுகள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட முடிவுக்கு வருகின்றபொழுது, அவர்களுடைய இவ்வுலக உடம்புகளை விட்டு விலகி முன்னர் ஆதமும் ஏவாளும் வசித்திருந்த அதே சொர்க்கத்திற்கு இடம் மாறும்படி மரணத்தின் வானவர்கள் அவர்களை அழைக்க மட்டுமே செய்கின்றனர். ஆதம் மற்றும் ஏவாளின் காலத்தில் இருந்தே சுவனம் இருப்பு நிலையில் இருந்து வந்துள்ளது. 89:27–30–ல் இருந்து நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்களைக் கடவுள் வரவேற்கின்றார் என்று நாம் கற்றுக் கொள்கின்றோம்: "என்னுடைய சொர்க்கத்திற்குள் நுழைவாயாக".

### என்னுடைய சொந்த அனுபவம்

3:81–ல் உள்ளதற்கேற்ப நபிமார்களுடைய கடவுளின் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டபோது, நன்னெறியாளர்கள் இப்போது (4:69) வசிக்கின்ற சுவனத்திற்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். என்னுடைய உடம்பு இங்கே கீழே பூமியில் இருந்தபோது, ஆதம் மற்றும் ஏவாளின் அதே சொர்க்கத்தில் நான் இருந்தேன்.

### நம்பமறுப்பவர்கள்

நம்ப மறுப்பவர்களைப் பொறுத்த வரை, மரணத் தருவாயின் போது அவர்கள் நரகத்திற்கென விதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர்கள் அறிந்து கொள்கின்றனர். அவ்வானவர்கள் அவர்களை முகங்களின் மீதும் விலாப்புறங்களிலும் கடுமையாக அடிக்கின்றனர் (8:50 & 47:27), அவர்களுடைய ஆத்மாக்களை வெளியேற்றுமாறு உத்தர விடுகின்றனர் (6:93), பின்னர் "அவர்களுடைய ஆத்மாக்களைப் பறிக்கின்றனர்" (79:1), நம்ப மறுப்பவர்கள் இரண்டு மரணங்களை அனுபவிக்கின்றனர் என்று இக்குர்ஆன் போதிக்கின்றது (2:28 & 40:11). அவர்கள் மரணத்தில் ஆழ்த்தப் படுகின்றனர் – தீர்ப்பு நாள் வரை நீடித்திருக்கின்ற தொடர்ந்ததொரு கெட்ட கனவில் இரவும் பகலும் நரகத்தினைக் காண்கின்ற ஒன்றுமற்ற ஒரு நிலை (40:46). நரகம் இன்னும் இருப்பு நிலைக்கு வரவில்லை (40:46,89:23).

### ஆம், நிச்சயமாக நன்னெறியாளர்கள் புறப்படுகின்றனர்

பூமியின் மீதுள்ள மக்களைப் பொறுத்த வரை, நன்னெறியாளர்கள் "மரணிக்கின்றனர்". நன்னெறியாளர்கள் தங்களுடைய உடம்புகளை விட்டு வெறுமனே வெளியேறி, சொர்க்கத்திற்கு இடம் மாறுகின்றனர் என்பதை மக்கள் அறிந்து கொள்வதில்லை. மேலே காட்டப்பட்டுள்ள வசனங்கள் தாமாகவே விளக்கமளிக் கின்றவையாக உள்ளன. அவை நன்னெறி யாளர்கள் ஒரு முறை மட்டுமே மரணிக்கின்றனர் – மாபெரும் கலகத்தின் ஒரு விளைவாக நாம் ஏற்கனவே அனுபவித்த அந்த மரணம் – என்று நமக்குக் கூறுகின்றன (38:69). 36:26–27–ல் நன்னெறியாளர்கள், அவர்களுடைய நண்பர்களும் உறவினர்களும் அப்போதும் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அதே சமயம் சொர்க்கத்திற்குச் செல்கின்றனர் என்பதற்கான மிகச் சிறந்த ஆதாரத்தினை நாம் காண்கிறோம். ஹவாய்க்குச் சென்று அங்கு நமக்காகக் காத்திருப்பதைப் போல்.

மேலும் பார்க்க 16 : 32 & 6:60–62

## பின் இணைப்பு 18

# இக்குர்ஆன்: மீட்சிக்கென உங்களுக்குத் தேவையான அனைத்தும்

19:64ல் குர்ஆனின் வார்த்தைகள் பேசுகின்றன, அது கூறுவதாவது, "உம்முடைய இரட்சகரின் கட்டளைகளுக்கேற்பவே நாங்கள் இறங்கி வருகின்றோம். கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் அவருக்கே உரியதாகும். உம்முடைய இரட்சகர் ஒருபோதும் மறப்பதில்லை." உதாரணத்திற்கு, எப்படித் தூங்குவது என நமக்குச் சொல்ல, கடவுள் மறந்து விடவில்லை [18:109, 31:27], ஆயினும், *ஹதீஸ் & சுன்னா* போன்ற போலிக் கொள்கைகளின் புனைந்துரையாளர்கள் தங்களுடைய சீடர்களுக்கு எப்படித் தூங்குவது, மற்றும் உங்களுடைய நகங்களை எப்படி வெட்டிக் கொள்வது என்றும் கூட கட்டளையிடுகின்ற மார்க்கப் போதனைகளுடன் வந்துவிட்டனர். மக்காவில் உள்ள புனிதப்பள்ளியும் மதினாவின் சட்டவிரோதமான "புனிதப்பள்ளி"யும், களைத்துப்போன தரிசிக்க வந்தவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் குப்புறப் படுத்துத் தூங்கி விட்டால் அவர்களை ஒரு குச்சியால் அடிப்பதற்காகச் சில தனிநபர்களைப் பணிக்கமர்த்துகின்றன!

இந்தக் குர்ஆன் முழுமையானது, குறையற்றது, மேலும் முற்றிலும் விவரிக்கப்பட்டதாக உள்ளது [6:19, 38, 114, 115; 50:45] என்றும், மேலும் இந்தக் குர்ஆனில் குறிப்பிடப்பட்டு ஸ்தாபிக்கப்படாத மார்க்க வரையறைகள் இஸ்லாம், அதாவது, சரணடைதல் அல்லாத வேறு ஒரு மார்க்கத்தை உண்டாக்குகின்றது [42:21, 17:46] என்றும் இக்குர்ஆன் பிரகடனிக்கின்றது. உண்மையான நம்பிக்கையாளர்கள் இக்குர்ஆனை ஆதரிக்கின்றனர், முழுமையான இக்குர்ஆனை, மேலும் குர்ஆனையன்றி எந்த ஒன்றையும் அல்ல, இந்தக் கோட்பாடு குர்ஆனுடைய கணிதக்குறியீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. சூரா 17–ன் வசனம் 46 நாம் குர்ஆனை **மட்டுமே** ஆதரிக்க வேண்டும் எனப் பிரகடனிக்கின்றது. "**மட்டும்**" எனும் வார்த்தை இக்குர்ஆனில் 6 முறைகள் இடம்பெறுகின்றது: 7:70, 17:46, 39:45, 40:12 & 84 மற்றும் 60:4. இந்த இடம்பெறுதல்கள் அனைத்தும் கடவுளைக் குறிக்கின்றன, 17:46–ஐத் தவிர. **"கடவுள் மட்டும்"** எனக் குறிக்கின்ற சூராக்கள் மற்றும் வசனங்களின் எண்களை நாம் கூட்டினால், நாம் பெறுவது 361, 19 x 19. "இந்தக் குர்ஆன் ***மட்டும்***" என்பதையே 17:46 குறிக்கின்றது என இது நிரூபிக்கின்றது.

***************************

## பின் இணைப்பு 19

# ஹதீஸ் & சுன்னா: சாத்தானியக் கண்டுபிடிப்புக்கள்

**கடவுள் மற்றும் அவருடைய வெளிப்பாடுகளை விடுத்து வேறு எந்த *ஹதீஸ்* தனை அவர்கள் ஆதரிக்கின்றனர்? [45:6]**

**இந்தக் குர்ஆன் புனைந்துரைக்கப்பட்ட ஒரு *ஹதீஸ்* அல்ல;.... இது ஒவ்வொன்றையும் விவரிக்கின்றது. [12:111]**

**கடவுளின் பாதையில் இருந்து மற்றவர்களைத் திசை திருப்ப சில மனிதர்கள் வீணான *ஹதீஸ்* தனை ஆதரிக்கின்றனர். [31:6]**

**பின்பற்றுவதற்குரிய ஒரே *சுன்னா* கடவுளின் *சுன்னா* ஆகவே இருத்தல் வேண்டும். [17:77, 33:62, 48:23, 6:114]**

நபியின் சில விரோதிகள், "மானிட மற்றும் ஜின் சாத்தான்கள்" என வர்ணிக்கப்படுகின்றவர்கள் பொய்களைப் புனைந்து அத்துடன் அவற்றை நபியின் மீது சாட்டுவார்கள் என்று இக்குர்ஆன் நமக்குத் தெரிவிக்கின்றது [6:112, 25:31]. முஹம்மது நபியின் மரணத்திற்குப் பின்னர் நிகழ்ந்தது மிகச்சரியாக இதுவேயாகும்; *ஹதீஸ்* [சொற்கள்] மற்றும் *சுன்னா* [செயல்கள்] கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவை நபியின் மீது சாட்டப்பட்டன. *ஹதீஸ்* மற்றும் *சுன்னா* ஆகியவை சாத்தானியக் கண்டுபிடிப்புக்களாகும், ஏனெனில் அவை: (1) இக்குர்ஆன் முழுமையானது, குறையற்றது, முற்றிலும் விவரிக்கப்பட்டதாக உள்ளது, மேலும் மார்க்க வழிகாட்டலின் ஒரே மூலாதாரமாக இருக்க வேண்டியது [6:19, 38, 114, & 45 : 6–7] எனும் உறுதியான

தெய்வீகக் கூற்றுகளை எதிர்க்கின்றன, (2) நபியான முஹம்மதுக்கு எதிராக நிந்தனை செய்வதுடன் இந்தக் குர்ஆனை உயர்த்திப்பிடிக்காத மிகக் கெட்ட கொடுங்கோலானாக அவரைச் சித்தரிக்கின்றன, (3) மூட நம்பிக்கை, அறியாமை, மற்றும் நியாயப்படுத்த இயலாத, அறிவுக்கு முரணான, பாரம்பர்யப் பழக்க வழக்கங்களின் அடிப்படையிலான போலிக் கொள்கைகளை உருவாக்குகின்றன. நபி முஹம்மத், குர்ஆனுடன் எந்த மார்க்கப் போதனைகளையும் வெளியிடுவதில் இருந்து மிகக் கடுமையான வார்த்தைகளால் தடுக்கப்பட்டிருந்தார் (69:38–48).

சில முஸ்லிம்கள் சமரசம் செய்கின்றனர் : "ஒரு *ஹதீஸ்* குர்ஆனுடன் ஒத்துப்போனால் அதனை நாம் ஏற்றுக்கொள்வோம், ஆனால் அது குர்ஆனுக்கு முரண்பாட்டால் நாம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவோம்!" இத்தகைய வாதங்கள் இக்குர்ஆன் "முழுமையானது, குறையற்றது, அத்துடன் முற்றிலும் விவரிக்கப்பட்டதாக உள்ளது" என்ற கடவுளின் உறுதி கூறல்களை இந்த மக்கள் நம்பவில்லை என்பதை நிரூபிக்கின்றது. குர்ஆனுடன் எந்த ஒன்றிலிருந்தும் வழிகாட்டலைத் தேடுகின்ற அக்கணமே, எவ்வளவு "சரியானதாக" அது தோன்றுகின்றது என்பது ஒரு பொருட்டல்ல, அவர்கள் சாத்தானின் பொறிக்குள் விழுந்து விடுகின்றனர் (பார்க்க 63:1). ஏனெனில் அவர்கள் கடவுளின் வார்த்தைகளை ஏற்க மறுத்து விட்டதுடன் கடவுளோடு மற்றொரு தெய்வத்தை அமைத்துக் கொண்டு விட்டனர் (18:57). பார்க்க பின் இணைப்பு 33.

இக்குர்ஆன்தான் நம்முடைய மார்க்கப் போதனைகளின் ஒரே மூலாதாரமாக இருக்க வேண்டும் என்பதற்குரிய கணித ரீதியான சாட்சியத்தை இக்குர்ஆனுடைய கணித அற்புதம் வழங்குகின்றது. 2 உதாரணங்கள் மட்டுமே இங்கே உள்ளன:

1. " ما فرطنا فى الكتب من شئ = இந்தப் புத்தகத்திற்கு அப்பால் எந்த ஒன்றையும் நாம் விட்டுவிடல்லை," வசனம் 38 (19 X 2)ல் உள்ளது, அத்துடன் 19 அரபி எழுத்துக்களைக் கொண்டுள்ளது (6:38).

2. " انزل اليكم الكتب مفصلا = இந்தப் புத்தகத்தை முற்றிலும் விவரிக்கப்பட்டதாக அவர் இறக்கி அனுப்பினார்", வசனம் 114 (19 X 6)ல் உள்ளது, அத்துடன் 19 அரபி எழுத்துக்களைக் கொண்டுள்ளது (6:114).

****************************

## பின் இணைப்பு 20

# குர்ஆன்: மற்ற எந்தப் புத்தகத்தையும் போன்றதல்ல

இந்தக் குர்ஆன் இவ்வுலகிற்குரிய கடவுளின் இறுதி ஏற்பாடாகும், மேலும் மிகச்சிறிய சிதைவில் இருந்தும் அதனைப் பாதுகாப்பதாக அவர் உறுதிமொழி அளித்துள்ளார் (15:9). எனவே, இக்குர்ஆனானது, அதனைப் பாதுகாத்து அதற்குப் பணிபுரிகின்ற கண்ணுக்குத் தென்படாத படைகளால் சூழப்பட்டுள்ளது (13:39, 41:42, 42:24).

மற்ற எந்தப் புத்தகத்தையும் போல் அல்லாமல், குர்ஆனானது கடவுளால் கற்றுக்கொடுக்கப்படுகின்றது (55:1–2) நமக்குத் தேவையானதை நமக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் அவர் நமக்குக் கற்றுத் தருகின்றார். இதன் காரணமாகவே சலிப்படையாமல் நூற்றுக்கணக்கான முறைகள் நாம் இக்குர்ஆனைப் படிக்கின்றோம். உதாரணத்திற்கு, ஒரு நெடுங்கதையினை, ஒரு முறை மட்டுமே நாம் படிக்க இயலும், ஆனால் இக்குர்ஆன் எண்ணற்ற முறைகள் படிக்கப்பட இயலும், மேலும் ஒவ்வொரு முறையும் அதிலிருந்து புதிய மற்றும் மதிப்பு மிக்க தகவல்களை நாம் பெறுகின்றோம். மற்றொருபுறம், வஞ்சகத்தனமுடைய வாசகர்கள் – அதனில் குற்றங்குறை காண்பதற்காகக் குர்ஆனை படிப்பவர்கள் – குர்ஆனில் இருந்து திசை திருப்பப்படுகின்றனர் (7:146, 17:45, 18:57, 41:44). உண்மையில், அவர்கள் தேடுகின்ற குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்க, கண்ணுக்குத் தென்படாத கடவுளின் படைகள் அவர்களுக்கு உதவுகின்றன. இக்குர்ஆன் குறையற்றதாக இருப்பதனால், இத்தகைய "குற்றங்குறைகள்" கடவுளுடைய விரோதிகளின் மூடத்தனத்தை வெளிப்படுத்த மட்டுமே துணை செய்கின்றன.

இக்குர்ஆனை வர்ணிப்பதற்காகக் கடவுள் தன்னுடைய சொந்தப் பண்புப் பெயர்களைப் பயன்படுத்துகின்றார்; இந்தக் குர்ஆனை "அஸீம் = மகத்தானது" (15:87), "ஹகீம் = ஞானம் நிறைந்தது" (36:2), "மஜீத்=மகிமைமிக்கது" (50:1) மற்றும் "கரீம் = கண்ணியத்திற்குரியது" (56:77), என்று அவர் அழைக்கின்றார். நாம் என்ன சொல்ல இயலும்?

அவர்களுடைய மொழி ஒரு பொருட்டின்றி, அனைத்து மக்களுக்கும் உரிய கடவுளின் தூதுச் செய்தியாக இக்குர்ஆன் இருப்பதனால், அவர்களுடைய மொழி ஒரு பொருட்டின்றி, இக்குர்ஆன் நம்பிக்கையாளர்களால் அடையப்படக்கூடியதாக உள்ளது (41:44). ஆழ்ந்ததோர் அசாதாரண நடப்பினை இது விளக்குகின்றது: அரபி தெரியாத நம்பிக்கையாளர்கள், அரபி பேசுகின்ற நம்பிக்கையற்றவர்களை விடவும் இக்குர்ஆனை மிகவும் நன்றாக அறிந்திருக்கின்றனர். இக்குர்ஆனுக்குப் பணிபுரிகின்ற கண்ணுக்குத் தென்படாத படைகளின் காரணத்தால், உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு அது உடனடியாகவும், அனுபவித்து மகிழத்தக்கதாகவும் அடையப்படக் கூடியதாக, ஆனால் நம்பிக்கையற்றவர்களுக்கு முற்றிலுமாக அனுகிட இயலாததாக உள்ளது (17:45, 18:57, 56:79).

## பின் இணைப்பு – 21

# சாத்தான்: வீழ்ந்த வானவன்

கடவுளின் சாம்ராஜ்யத்தில், குறிப்பிட்ட படைப்புகள் தங்களுடைய பணிகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான சக்திகளை அவசியத்தின் நிமித்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றனர். சாத்தான், கடவுளால் கொடுக்கப்பட்ட அவனுடைய சக்திகள் அவனை சுதந்திரமானதொரு தெய்வமாக இயங்குவதற்கு தகுதிப்படுத்தி விட்டதாகக் கருதினான். அவனுடைய இராஜ்யத்தில் துன்பம், நோய், விபத்துக்கள் மற்றும் போர்களுடைய மிகைப்பின் மூலம் நிரூபிக்கபட்டுள்ள படி, சாத்தான் அருகதையற்றவனாக உள்ளான் என்பதை இப்போது நாம் அறிந்திருக்கின்றோம்.

அவன் மீது அருளப்பட்ட மிகப்பெரும் சக்திகள் மற்றும் அந்தஸ்தின் காரணமாக, சாத்தான் ஒரு வானவனாக இருந்தான் என்று குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது. இதனால்தான் அவனுடைய வீழ்ச்சிக்கு முன்னர், அவன் ஒரு வானவன் என்று குறிப்பிடப்படுகின்றான் [2:34, 7:11, 15:29, 17:61, 18:50, 20:116, 38:71]. வரையறையின்படி, ஒரு ஜின்னானது வீழ்ச்சியடைந்த ஒரு வானவன் ஆவான் [18:50]. வானவர்கள் தங்களுக்கென்று சுயமான மனம் மற்றும் பரிபூரணமான தேர்ந்தெடுக்கின்ற சுதந்தரத்துடன் படைக்கப்பட்டிருந்தனர் என்பதை சாத்தானின் கலகமானது நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது [2:34].

****************************

## பின் இணைப்பு – 22

# ஜீஸஸ்

கடவுளின் தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதையே ஒரே இறைப்பணியாகக் கொண்டிருந்த ஜீஸஸ் கடவுளின் ஒரு மானிடத் தூதராக இருந்தார் என இக்குர்ஆன் நமக்குத் தெரிவிக்கின்றது; அவர் ஒருபோதும் எந்தச் சக்தியையும் பெற்றிருக்கவில்லை, அத்துடன் இப்போது அவர் இறந்து விட்டவராகவும் உள்ளார் [4:171, 5:75, 117]. ஜீஸஸைக் கடவுள் ஆகவோ, அல்லது கடவுளின் மகனாகவோ, அல்லது திரித்துவத்தில் ஒரு அங்கமானவர் என்றோ கருதுகின்றவர்கள் "நம்பிக்கையற்றவர்கள்" ஆகவே உள்ளனர் [5:17,72,73]. மிகப் பிரபலமான கிறிஸ்துவ அறிஞர்கள் இதே இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர் [1977–ல் ஃபிலடெல்ஃபியாவின் வெஸ்ட் மினிஸ்டர் அச்சக வெளியீடான, ஜான் ஹிக் எழுதிய **THE MYTH OF GOD INCARNATE** [கடவுளின் அவதாரம் எனும் மாயை] & 1986ல் ஹார்ப்பர் & ரோ வெளியிட்ட, ஹயாம் மக்கோபி எழுதிய **THE MYTH MAKER** [மாயையை உருவாக்குபவர்]. கிறிஸ்துவம் நைசீனின் விளைவேயாகும் [கி,பி 325].

# பைபிளின் ஜீஸஸ்

*அப்பொழுது ஜீஸஸ் சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கின்றவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கின்றான்;.... ஏனெனில் நான் சுயமாய்ப் பேசவில்லை. நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார் , அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளை பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். [யோவான் 12:44–50].*

*நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கின்றது. [யோவான்5:30]*

*ஜீஸஸ் அவர்களுக்குப் பிரதியுத்தாராமாக என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கின்றது. [யோவான் 7:16]*

*இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய ஜீஸஸைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். [நடபடிகள் 2:22]*

*“.......என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு”,*
*(யோவான் 5:24)*

*“.....என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்,”*
*(மத்தேயு 10:40 , மாற்கு 9:37 லூக்கா 9:48, & யோவான் 13:20)*

*“.....நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள், நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை அனுப்பியிருக்கிற படியினாலும், நானே அவரை அறிந்திருக்கிறேன்”, என்றார், (யோவான் 7:28–29)*

*ஜீஸஸ் தம்முடைய கண்களை வானத்திற்கு ஏறெடுத்துக் கூறினார், “...நித்திய ஜீவன் இதுவேயாகும்: ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய ஜீஸஸ் க்றைஸ்டையும் அறிவதே.*
*(யோவான் 17:1–3)*

*எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்*
*(ரோமர்கள் 8:14)*

*ஜீஸஸ் தம்முடைய கண்களை ஏறெடுத்து : “பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கின்றேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கின்றீர் என்பதை நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன்” என்றார், (யோவான் 11:41–42)*

*பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு “நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டான், அதற்கு ஜீஸஸ்: “நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே” (மாற்கு 10:17–18)*

*“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக சாம்ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை”. (மத்தேயு 7:21)*

*“...நீ என் சகோதரரிடத்திற்குப் போய் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு” என்றார்,*
*(யோவான் 20:17)*

*“கடவுள்தான் என்னுடைய இரட்சகரும் உங்களுடைய இரட்சகரும் ஆவார்; நீங்கள் அவரை மட்டும் வழிபடவேண்டும், இதுவே சரியான பாதையாகும்,” (குர்ஆன் 3:51,19:36 &43:64)*

*கிறிஸ்துவர்களால் போதிக்கப்படுகின்ற கடவுள் கோட்பாடான திரித்துவம், கடவுள் சாரத்தில் ஒருவராகவும் ஆனால் சரீரத்தில் பிதா, சுதன், மற்றும் பரிசுத்த ஆவியென மூவராகவும் இருக்கின்றார் என்று அறுதியிட்டுக் கூறுகின்றது, திரித்துவம் எனும் வார்த்தையோ, அன்றி வெளிப்படையான அத்தகைய சமயக் கோட்பாடோ புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை, அன்றியும் ஜீஸஸும் அவருடைய சீடர்களும் பழைய ஏற்பாட்டில் உள்ள ஷெமாவுக்கு முரண்பட எண்ணவில்லை: “கேளுங்கள் இஸ்ரவேலர்களே : இரட்சகரான நம் கடவுள் ஒருவரே ஆவார்”.*
*(உபாகமம் 6:4)*

*(என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா 1975)*

## ஜீஸஸின் மரணம்

இவ்வுலகத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு விஷயமாக இதுவே இருந்து வந்துள்ளது. இக்குர்ஆனின் அற்புதமான கணிதக்குறியீடு இப்போது இந்தப் பிரச்சினைக்கு இறுதி விடையை வழங்கியுள்ளது:

ஜீஸஸின் ஆத்மா உயர்த்தப்பட்டது , அதாவது, அவருடைய உடலைக் கைது செய்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் அவர் மரணத்தில் ஆழ்த்தப்பட்டு விட்டார், இவ்விதமாக, அவரை வன்கொடுமை செய்தவர்கள் காலியான ஓர் உடம்பைக் கைது செய்து, சித்திரவதைப்படுத்தி, சிலுவையிலும் அறைந்தனர்– ஜீஸஸானவர் ஆன்மாக்களின் உலகத்திற்கு முன்னரே சென்று விட்டார் (3:55,4:157).

*அவர்கள் சூழ்ச்சியும் திட்டங்களுமிட்டனர்,*
*ஆனால் கடவுளும் அவ்வாறே செய்தார்,*
*மேலும் கடவுள்தான் திட்டமிடுபவர்களில் மிகச் சிறந்தவர்.*
*இவ்விதமாக, கடவுள் கூறினார், "ஜீஸஸே*
*நான் உம்மை மரணத்தில் ஆழ்த்துகின்றேன்,*
*அத்துடன் என்பால் உம்மை உயர்த்திக்கொள்கிறேன்;*
*நம்பமறுப்பவர்களிடம் இருந்து நான் உம்மை காப்பற்றுவேன்",* *[குர்ஆன் 3:54–55]*

*மெஸையா, மேரியின் மகன், ஜீஸஸாகிய, கடவுளின் தூதரை அவர்கள்*
*கொன்றுவிட்டதாக அவர்கள் கோரினர்!*
*உண்மையில், அவர்கள் ஒருபோதும் அவரைக் கொல்லவில்லை:*
*அவர்கள் ஒருபோதும் அவரைச் சிலுவையில் அறைந்திடவுமில்லை:*
*அவர்கள் அதனைச் செய்ததாக நம்பும்படி அவர்கள் செலுத்தப்பட்டனர்.* *[குர்ஆன் 4:157]*

கருணை நிறைந்த விதமாக, கடவுள் நமது தலைமுறைக்கு, ஒரு நபருடைய ஆத்மா இந்த உலகத்தை விட்டு புறப்பட்டு விட்டாலும், அவருடைய உடல் 19 மாதங்கள் உயிருடன் தொடர்ந்து இருந்த, நினைவில் நிற்கின்ற ஓர் உதாரணத்தைத் தந்துள்ளார். 1984, நவம்பர் 25 அன்று கென்டக்கியிலுள்ள, லூயி வில்லியின் ஹ்யூமானா மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் வில்லியம் ஷ்ரோடர் என்பவரின் நோய்வாய்ப்பட்ட இதயத்தை நீக்கிவிட்டு ப்ளாஸ்டிக் மற்றும் உலோகக் குழாய் ஒன்றை மாற்றியமைத்தார்கள் [த நியூயார்க் டைம்ஸ், 1984, நவம்பர் 26, திங்கட்கிழமை].

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறுவை சிகிச்சைக்குப் பின் 19–வது நாள் அன்று– 1984,டிசம்பர்13, வியாழக்கிழமை–ஷ்ரோடர் என்பவர், அந்த ஆத்மா, உண்மையான அந்நபர் இந்த உலகைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். ஷ்ரோடர் இறந்து விட்டார். ஆனால் அவருடைய உடலில் பொருத்தப் பட்டிருந்த செயற்கை இதயத்துடன் அவருடைய உடல் தொடர்ந்து இயங்கியது, அவர் "வாதத்தால் தாக்கப்பட்டிருக்கக் கூடும்" என்று இவ்வுலகத்திற்குக் கூறப்பட்டது [த நியூயார்க் டைம்ஸ்,1984, டிசம்பர் 14] குறிப்பிடத்தக்க விதமாக, ஷ்ரோடரின் புறப்பாட்டிற்கு ஒரே ஒரு நாள் முன்னர், தேசியத் தொலைக்காட்சியில் ஜனாதிபதி ரோனால்ட் ரேகனுடன் உரையாடினார், மேலும் சமூகப்பாதுகாப்பு நிர்வாகம் அவருக்குச் செலுத்த வேண்டிய காசோலையை அனுப்பவேண்டும் என்று கோரினார். அவர் பூரணமான விழிப்புடன் இருந்தார். "வாதம் ஒன்றால் அவர் தாக்கப்பட்ட" அக்கணத்தில் இருந்து, அவர் தேதியையோ அல்லது நேரத்தையோ, அன்றி அவருடைய குடும்ப அங்கத்தினர்களையோ அவர் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. உண்மையில், அதற்கப்பால் ஷ்ரோடர் இந்த உலகத்தில் இருக்கவில்லை.

கைது செய்யப்பட்ட ஜீஸஸின் உடலானது அதனைச் சூழ்ந்திருந்த நிகழ்வுகளை அறியாதிருந்தது என்பதை சுவிசேஷங்கள் தெளிவாகக் கூறுகின்றன:

*பிரதான ஆசாரியார்கள் அவர்மேல் அநேகங்குற்றங்களைச் சாட்டினார்கள்.*
*அவரோ மறுப்பாக ஒன்றுசொல்லவில்லை.*
*அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி:*
*"இதோ இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே,*
*அதற்கு நீ உத்தரவு ஒன்றுஞ் சொல்லுகிறதில்லையா", என்று கேட்டான்.*
*<u>ஜீஸஸோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றுஞ் சொல்லவில்லை:</u>*
*அதனால் பிலாத்து ஆச்சர்யப்பட்டான்.* *[மாற்கு15:3–5]*

*ஏரோது ஜீஸஸைக் குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும் அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசை கொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களை அவரிடம் வினாவினான். <u>அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றுஞ்சொல்லவில்லை.</u> அப்பொழுது ஏரோது தன் போர்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரிகாசம் பண்ணினான். [லூக்கா 23:8–11]*

*மீட்பர் என்னிடம் கூறினார், "மரத்தின் மீது மகிழ்வுடனும் சிரித்தவாறும் எவரை நீ கண்டாயோ, இதுதான் உயிருள்ள ஜீஸஸாகும்", ஆனால் எவருடைய கைகளிலும் பாதங்களிலும் அவர்கள் ஆணிகளை அறைகின்றனரோ, இது மாமிசப் பகுதியேயாகும். [பேதுருவின் அருள் வெளிப்பாடு VII 3,81] நாக் ஹம்மாதியின் நூலகம் [ஹார்ப்பர் & ரோ,1977, ஜேம்ஸ் எம்,ராபின்சன் எழுதியது, பக்கம் 339].*

(1) ஷ்ரோடரின் ஆன்மாவானது அறுவை சிகிச்சைக்கு பின்னர் 19–வது நாள் அன்று புறப்பட்டது, மேலும் (2) அவருடைய உடலானது 19 மாதங்கள் உயிருடன் இருந்தது ஆகியவை, ஷ்ரோடரின் நிலைக்கும், மேலும் ஜீஸஸின் கைது, சித்திரவதை, மற்றும் அவருடைய ஆன்மாவற்ற உடலின் சிலுவையிலறைதலுக்கு முன்னர் அவர் புறப்பட்டு விட்டார் எனும் நிரூபிக்கப்பட்ட நிகழ்வு ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒத்தநிலையை இவ்வுலகம் அறிந்துகொள்ள வேண்டுமென கடவுள் விரும்பிய விசித்திர நினைவூட்டல்களாக உள்ளன.

****************************

**பின் இணைப்பு – 23**

## வெளிப்பாட்டின் வரிசைக்கிரமம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை சூரா | 17.....107 | 34.....50 | 51.....10 | 68.....88 | 85.....29 | 102.....24 |
| 1.....96 | 18.....109 | 35.....90 | 52.....11 | 69.....18 | 86.....83 | 103.....22 |
| 2.....68 | 19.....105 | 36.....86 | 53.....12 | 70.....16 | 87.....2 | 104.....63 |
| 3.....73 | 20.....113 | 37.....54 | 54.....15 | 71.....71 | 88.....8 | 105.....58 |
| 4.....74 | 21.....114 | 38.....38 | 55.....6 | 72.....14 | 89.....3 | 106.....49 |
| 5.....1 | 22.....112 | 39.....7 | 56.....37 | 73.....21 | 90.....33 | 107.....66 |
| 6.....111 | 23.....53 | 40.....72 | 57.....31 | 74.....23 | 91.....60 | 108.....64 |
| 7.....81 | 24.....80 | 41.....36 | 58.....34 | 75.....32 | 92.....4 | 109.....61 |
| 8.....87 | 25.....97 | 42.....25 | 59.....39 | 76.....52 | 93.....99 | 110.....62 |
| 9.....92 | 26.....91 | 43.....35 | 60.....40 | 77.....67 | 94.....57 | 111.....48 |
| 10.....89 | 27.....85 | 44.....19 | 61.....41 | 78.....69 | 95.....47 | 112.....5 |
| 11.....93 | 28.....95 | 45.....20 | 62.....42 | 79.....70 | 96.....13 | 113.....9 |
| 12.....94 | 29.....106 | 46.....56 | 63.....43 | 80.....78 | 97.....55 | 114.....110 |
| 13.....103 | 30.....101 | 47.....26 | 64.....44 | 81.....79 | 98.....76 | |
| 14.....100 | 31.....75 | 48.....27 | 65.....45 | 82.....82 | 99.....65 | |
| 15.....108 | 32.....104 | 49.....28 | 66.....46 | 83.....84 | 100.....98 | |
| 16.....102 | 33.....77 | 50.....17 | 67.....51 | 84.....30 | 101.....59 | |

## பின்இணைப்பு 24

# கடவுளின் வார்த்தைகளில் இடைச்செருகல்

*மானிட சக்திக்கப்பாற்பட்டதொரு கணித ஒழுங்கமைப்பு இக்குர்ஆன் முழுதும் விரவியிருந்து அதில் உள்ள ஒவ்வொரு அங்கத்தையும் பாதுகாக்கவும் அங்கீகரிக்கவும் பணி செய்கின்றது.*

*நபியின் மரணத்திற்குப் பத்தொன்பது ஆண்டுகள் கழித்து, சில எழுத்தர்கள் மதினாவில் வெளிப்படுத்தப்பட்ட கடைசி சூராவான, சூரா 9-ன் இறுதியில் இரண்டு போலி வசனங்களை புகுத்தினர். இந்தப் பின் இணைப்பில் முன் வைக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் மறுக்க இயலாதவாறு இந்த மானிடத் திணிப்புக்களை நீக்குகின்றது, இக்குர்ஆனை ஆதியிலிருந்த அதன் தூய நிலைக்கு மீட்டெடுக்கின்றது, அத்துடன் இக்குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் முக்கிய பணி ஒன்றை, அதாவது, மிகச் சிறிதளவு இடைச்செருகலில் இருந்தும் இக்குர்ஆனைப் பாதுகாப்பதை எடுத்துக் காட்டுன்றது. இவ்வகையில், போலித் திணிப்புக்களான 9:128-129 ஐ மட்டுமே இக்குறியீடு நிராகரிக்கின்றது.*

**நிச்சயமாக, இந்த வேதத்தை நாம் வெளிப்படுத்தினோம், மேலும் நிச்சயமாக, நாம் இதனைப் பாதுகாப்போம் [15:9]**

இக்குர்ஆன் கடவுளின் இறுதி ஏற்பாடாகும். எனவேதான் இதனைப் பரிபூரணமாகப் பாதுகாப்பதென இந்தத் தெய்வீக உறுதிமொழி. இதன் தெய்வீக இயற்றுதல் மற்றும் இக்குர்ஆனின் பரிபூரணப் பாதுகாப்பு இரண்டையும் நமக்கு உறுதிப்படுத்துவதற்காக, இதனை இயற்றியவரான எல்லாம் வல்லவர் இக்குர்ஆனைக் கணித ரீதியில் தொகுத்துள்ளார். பின் இணைப்பு 1ல் உள்ள பௌதிக ரீதியான ஆதாரத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளபடி, இத்தகைய கணித ரீதியிலான தொகுப்பு மானிடத் திறன்களுக்கு மிகவும் அப்பாற்பட்டதாகும். கடவுளுடைய இறுதி ஏற்பாட்டில் செய்யப்படுகின்ற மிகச் சிறிய மீறலும் பளிச்சிடும் வேற்றுமையில் தனித்து நின்றிட வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. ஒரே 1 விலகலும் – ஒரு சூரா, ஒரு வசனம், ஒரு வார்த்தை, ஓர் எழுத்து கூட – உடனடியாக வெளிப்படுத்தப்பட்டு விடுகின்றது.

நபி முஹம்மதின் மரணத்திற்கு பத்தொன்பது ஆண்டுகள் கழித்து, கலீஃபா உத்மானின் ஆட்சிக்காலத்தின் போது, புதிய முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பப்படுவதற்கென குர்ஆனின் சில பிரதிகள் எழுதப்படுவதற்காக எழுத்தர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அப்பிரதிகள் முஹம்மதின் கைப்பட எழுதப்பட்ட மூலக்குர்ஆனில் இருந்து எழுதப்பட இருந்தன [பின் இணைப்பு 28].

அந்த குழுவானது உத்மான் இப்னு அஃப்ஃபான், அலீ இப்னு அபீதாலிப், ஜைது இப்னு தாபித், உபை இப்னு கஅப், அப்துல்லா இப்னு அல்-ஜீபைர், ஸயீத் இப்னு அல்-ஆஸ், மற்றும் அப்துர்ரஹ்மான் இப்னு அல்-ஹாரித் இப்னு ஹிஷாம் ஆகியோரால் மேற்பார்வையிடப்பட்டது. நபியானவர், ஐயத்திற்கிடமின்றி, இக்குர்ஆனை அதன் வெளிப்பாட்டின் வரிசைக்கிரமத்தில் [பின் இணைப்பு 23], ஒவ்வொரு பகுதியையும் அதன் சரியான இடத்தில் அமைப்பதற்குரிய அத்தியாவசியமான குறிப்புக்களுடன், எழுதியிருந்தார். மதீனாவில் வெளிப்படுத்தப்பட்ட கடைசி சூராவானது சூரா 9-ஆக இருந்தது. மிகச் சிறியதொரு சூராவான, சூரா 110 மட்டும், 9-வது சூராவிற்குப் பின்னர், மினாவில் வெளிப்படுத்தப்பட்டது.

எழுத்தர்களின் குழுவானது இறுதியாக சூரா 9-னை வந்தடைந்தது, அதன் பொருத்தமான இடத்தில் அதனை வைத்தது. எழுத்தர்களில் ஒருவர் நபியைக் கண்ணியப்படுத்துவதற்காக ஒரு ஜோடி வசனங்களைச் சேர்த்துக் கொள்ள யோசனை கூறினார். பெரும்பான்மை எழுத்தர்கள் ஒத்துக் கொண்டனர். அலீ அதிர்ச்சியால் கோபம் கொண்டவரானார். இறுதி நபியின் கைப்பட எழுதப்பட்ட, கடவுளின் வார்த்தை ஒருபோதும் மாற்றப்படக் கூடாது என அவர் உக்கிரத்துடன் நிலையாக நின்றார்.

அலீயின் ஆட்சேபம் பல குறிப்பேடுகளில் பதியப்பட்டுள்ளது, ஆயினும் நான் ஹிஜ்ரீ 1318ல், எகிப்தின், கெய்ரோவில், அல் அஸ்ஹரிய்யா அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்ட, ஜலாலுத்தீன் அல்–ஸுயூத்தியால் எழுதப்பட்ட அல்–இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் எனும் முதல் தரமான குறிப்பேட்டினுடைய பக்கம் 59–ஐ எடுத்துரைத்து இங்கே பிரதி செய்கின்றேன் (பார்க்க உள் இணைப்பு 1 ).

قعد علي بن أبي طالب في بيته فقيل ما أقعدك قال رأيت كتاب الله يزاد فيه
فحدثت نفسي أن لا ألبس ردائي إلا لصلاة حتى أجمعه

**மொழிபெயர்ப்பு: அலீயிடம் கேட்கப்பட்டது: "ஏன் நீங்கள் வீட்டிலேயே தங்கியிருக்கின்றீர்கள்?" அவர் கூறினார், "குர்ஆனுடன் சில விஷயங்கள் சேர்க்கப்பட்டு விட்டன, எனவே இக்குர்ஆன் மீட்கப்படுகின்ற வரை, தொழுகைக்காகத் தவிர, வெளியில் செல்லும் ஆடைகளை ஒருபோதும் அணிவதில்லை என நான் உறுதி பூண்டுள்ளேன்."**

**(உள் இணைப்பு 1)**

இதன் விளைவுகளை நாம் உற்று நோக்கியவுடன் இந்தக் குற்றத்தின் பயங்கரமான பரிமாணங்களை உணர்ந்து கொள்ள இயலும்:

(1) உத்மான் படுகொலை செய்யப்பட்டார். அத்துடன் நான்காவது கலீஃபாவாக அலீ நியமிக்கப்பட்டார்.

(2) புதிய கலீஃபா மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் ஒரு புறம், இக்குர்ஆனைச் சிதைத்த முஹம்மதியர்கள் மறுபுறம் என இருதரப்பாருக்கிடையில் 50– வருடப் போர் ஒன்று வெடித்தது.

(3) அலீ வீரமரணம் எய்தினார், அத்துடன் சில பெண்களையும் குழந்தைகளையும் தவிர்த்து, அவருடைய குடும்பத்தினரான, நபி முஹம்மதின் குடும்பத்தினர் இறுதியில் கொல்லப்பட்டனர்.

(4) இந்தப் பேரழிவு அலீயின் மகன் ஹுசைன், மற்றும் அவருடைய குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட, துர்பிரசித்தி பெற்ற கர்பலா யுத்தத்துடன் உச்சத்தை அடைந்தது.

(5) முஸ்லிம்கள் 1400 வருடங்களுக்கு, தூய்மையான, மாற்றம் செய்யப்படாத குர்ஆனை இழந்தனர்.

இறுதியாக குர்ஆனைச் சிதைத்தவர்கள் போரை வென்றனர், மேலும் நம்மிடம் வந்த "அதிகாரபூர்வமான" வரலாறு வெற்றி பெற்றவர்களின் கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டியது. கடவுளின் விரோதிகளுக்குரிய இந்தப் போலி வெற்றியானது, சந்தேகமின்றி, கடவுளின் நாட்டத்திற்கொப்பவே இருந்தது. நபியினால் மக்கா வெற்றியில் (கி.பி.632) தோற்கடிக்கப்பட்டவர்களான போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள், நபியின் மரணத்திற்குப்பின்னர் சரியாக இருபது ஆண்டுகளில் போலித் தெய்வ வழிபாட்டிற்குத் திரும்பிவிட்டனர். முரண் நகையாக, இந்த முறை அவர்களுடைய போலித் தெய்வமாக நபியாகிய அவரே இருந்தார். இத்தகைய போலித் தெய்வ வழிபாடு செய்பவர்கள் தூய்மையான குர்ஆனை வைத்திருப்பதற்கு நிச்சயம் தகுதியுடையவர்களாக இல்லை. எனவேதான் இக்குர்ஆனை மீட்க முயன்ற மெய்யான நம்பிக்கையாளர்களுக்கு ஆசீர்வதிக்கப்பட்ட வீர மரணமும், கடவுளின் வார்த்தையைச் சிதைத்தவர்களுக்கு இந்தப் போலியான வெற்றியும்.

நீண்ட மற்றும் பெருநாசமுண்டாக்கிய இந்தப் போருக்குப் பின்னர் முதல் அமைதிக் கால ஆட்சியாளராக இருந்தவர் மர்வான் இப்னு அல் ஹகம் ஆவார் (இறப்பு 65 ஹிஜ்ரி/ 684 கி.பி). அவர் நிறைவேற்றிய முதல் கடமைகளில் ஒன்றாக இருந்ததாவது, நபியின் சொந்தக் கைப்பட மிகவும் கவனத்துடன் தவறின்றி எழுதப்பட்ட அக்குர்ஆனை "புதிய சர்ச்சைகளுக்கு காரணமாகி விடக்கூடும் என்று அஞ்சியவராக" அதனை அழித்ததேயாகும். (பார்க்க 1983ல் லீசெஸ்டர், இங்கிலாந்துதனில் இஸ்லாமிக் ஃபவுண்டேஷனால் வெளியிடப்பட்ட, அஹ்மத் வான் டென்ஃபர் என்பவரால் எழுதப்பட்ட உலூம் அல் குர்ஆன் எனும் புத்தகத்தின் பக்கம் 56). புத்திசாலியான ஒரு நபர் கேட்க வேண்டிய கேள்வியாவது: "அந்த சமயத்தில் புழக்கத்தில் இருந்த குர்ஆனுக்கு ஒத்தாக அந்த மூலக் குர்ஆன் இருந்திருக்குமாயின், மர்வான் இப்னு அல் ஹகம் அதனை அழிக்க வேண்டியிருந்தது ஏன்?!"

மிகப்பழமையான இஸ்லாமியக் குறிப்பேடுகளை ஆராய்கின்ற போது, இந்தப் போலித் திணிப்புக்களான 9:128 – 129 எப்போதுமே சந்தேகத்திற்குரியவையாகவே இருந்து வந்துள்ளன என நாம் தெளிவாக அறிந்து கொள்கின்றோம். உதாரணத்திற்கு, புகாரியின் பிரசித்தி பெற்ற ஹதீஸ் மற்றும் அல்–ஸுயூத்தியின் பிரபலமான *'இத்கான்'* ஆகியவற்றில்,

சூரா 9—ன் வசனங்கள் 128 மற்றும் 129—ஐத் தவிர குர்ஆனிலுள்ள ஒவ்வொரு தனி வசனமும் ஏராளமான சாட்சிகள் மூலம் ருசுப்படுத்திக் கொள்ளப்பட்டது; அவை குஸைமஹ் இப்னு தாபித் அல்—அன்ஸாரியிடம் மட்டுமே காணப்பட்டன, என்றும் நாம் அறிந்து கொள்கின்றோம். சில மக்கள் முறையற்ற இந்த விதிவிலக்கைச் சந்தேகித்த போது, எவரோ ஒருவர் " குஸைமாவின் சாட்சிப்பிரமாணம் இரண்டு ஆண்களின் சாட்சிப்பிரமாணத்திற்குச் சமமானதாகும்!!!," என்று கூறுகின்ற ஒரு *ஹதீஸுடன்* வந்து நின்றார்.

வினோதமாக, இப்போலித் திணிப்புகள் 9:128—129 பாரம்பர்யக் குர்ஆன் பதிப்புக்களில் "மக்காவைச் சேர்ந்தது" என்று முத்திரையிடப்பட்டுள்ளன (பார்க்க உள் இணைப்பு 2)



**"கடைசி இரு வசனங்களைத் தவிர", இந்த சூரா மதீனாவைச் சேர்ந்தது என்பதைக் காட்டுகின்ற, மாதிரிக் குர்ஆன் ஒன்றில் உள்ள சூரா 9—ன் தலைப்புப்படம்; "அவை மக்காவைச் சேர்ந்தவையாம்"!!!**

**(உள் இணைப்பு 2 )**

"மக்காவைச் சேர்ந்த " இந்த வசனங்கள் "மதினாவைச் சேர்ந்த" கடைசி முஸ்லிம்களில் ஒருவரான குஸைமாவிடம் எப்படிக் காணப்பட இயலும்?! மக்காவில் இருந்து நபியின் *ஹிஜ்ரஹ்*விற்குப் பிறகு அனைத்து வெளிப்பாடுகளையும் 'மதினாவைச் சேர்ந்தது' என முத்திரையிடுதல் பொதுவான உடன்பாடாக இருந்து வந்துள்ள போது, மதினாவைச் சேர்ந்த ஒரு சூரா மக்காவைச் சேர்ந்த வசனங்களை எவ்வாறு கொண்டிருக்க இயலும்??!! இந்த மாறுபாடுகளுடன் கூடுதலாக, பளிச்சிடுகின்ற பற்பல முரண்பாடுகள் வசனங்கள் 9:128—129 உடன் சம்பந்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் நம்பகத்தன்மையைப் பற்றிக் கேள்வி எழுப்ப எவர் ஒருவரும் துணியவில்லை. என்றாலும், 1974—ல் இக்குர்ஆனின் கணிதக் குறியீட்டின் கண்டுபிடிப்பானது, இக்குர்ஆனிலுள்ள ஒவ்வொரு அங்கத்தின் நம்பகத்தன்மையும் நிரூபிக்கப்பட்டு விட்டதாக உள்ள ஒரு புதிய சகாப்தத்திற்குக் கட்டியம் கூறியது (பின் இணைப்பு 1).

இப்போது வெளிப்பட்டுள்ளபடி, இரண்டு போலி வசனங்களான 9:128—129—ன் திணிப்பின் விளைவுகளாவன:

(1) குர்ஆனுடைய கணித ஒழுங்கமைப்பின் தலையாய பணியினைச் செயல்படுத்திக் காட்டுதல், மேலும்,

(2) அதன் சொந்தத் தகுதியிலேயே பிரமிப்பூட்டும் ஓர் அற்புதத்தைக் காட்டுதல், மேலும்

(3) நயவஞ்சகர்களில் இருந்து (அவர்கள் பாரம்பர்யப் பழக்கங்களை ஆதரிக்கின்றனர்) உண்மையான நம்பிக்கை யாளர்களைப் பிரித்துக்காட்டுதல்,

அந்த இரு போலி வசனங்களின் மொழிபெயர்ப்பு உள் இணைப்பு 3—ல் காட்டப்பட்டுள்ளது :

**"உங்களை எந்தக் கஷ்டமும் வருத்துவதை விரும்பாத, அத்துடன் உங்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ள, மேலும் நம்பிக்கையாளர்கள் பால் இரக்கமுள்ளவராக, கருணையாளராக உள்ள ஒரு தூதர் உங்கள் மத்தியில் இருந்தே உங்களிடம் வந்துள்ளார். அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், பின்னர் கூறுவீராக, 'கடவுள் எனக்கு போதுமானவராக உள்ளார், அவரைத் தவிர தெய்வம் எதுவும் இல்லை. என்னுடைய பொறுப்பை நான் அவர் மீது வைக்கின்றேன். அவர்தான் மகத்தான அரியாசனத்தையுடைய இரட்சகராக உள்ளார்'." (உள் இணைப்பு 3)**

## பௌதிகப்பூர்வமான ஆதாரம்

**(1)** வசனங்கள் 9:128—129 குர்ஆனின் குறியீட்டை மீறுவது, முதலில் "கடவுள்" (அல்லாஹ்) எனும் வார்த்தையின் எண்ணிக்கை, ஒன்றை நாம் நீக்கினாலன்றி, 19—ன் பெருக்குத் தொகையாக இல்லாத, 2699 என இருப்பதைக் கண்ட போதுதான் புலப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ்ப்பகுதியில் "கடவுள்" எனும் வார்த்தையின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. இக்குர்ஆனின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை 2698,19 x 142, ஆகும், ஏனெனில் இப்போலித் திணிப்புகள் 9:128—129 நீக்கப்பட்டு விட்டன.

**(2)** “கடவுள்” எனும் வார்த்தை இடம்பெறுகின்ற அனைத்து வசன எண்களின் கூட்டுத் தொகையானது 118123, அல்லது 19 X 6217 ஆகும். இந்த மொத்த எண்ணிக்கையானது எங்கெங்கெல்லாம் “கடவுள்” எனும் வார்த்தை காணப்படுகின்றதோ அந்தந்த வசனங் களின் எண்களைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுகின்றது. போலி வசனமான 9:129 உட்படுத்திக் கொள்ளப்பட்டால் இந்த அற்புத நிகழ்வு மறைந்து போய் விடுகின்றது.

**(3)** இந்த மொழிபெயர்ப்பில் சூரா 9–ன் இறுதியில் காட்டப்பட்டுள்ளபடி, சூரா 9–ன் இறுதி வரை “கடவுள்” எனும் வார்த்தையுடைய இடம் பெறுதல்களின் மொத்த எண்ணிக்கை யானது 1273, 19 X 67 ஆகும். போலித் திணிப்புக்களான 9:128–129 உட்படுத்திக் கொள்ளப்பட்டால். மொத்த எண்ணிக்கையானது 1274 என ஆகி இருக்கும், 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

**(4)** முதல் குர்ஆனியத் துவக்க எழுத்தில் இருந்து (2:1–ன் “அ.ல.ம”) கடைசித் துவக்க எழுத்து வரை (68:1–ன் “ன”) “கடவுள்” எனும் வார்த்தையின் மொத்த இடம்பெறுதல் 2641, அல்லது 19X139. இக்குர்ஆனில் துவக்க எழுத்துக்களையுடைய பகுதிக்கு வெளிப்புறப்பகுதியிலுள்ள சூராக்களைப் பட்டியலிடுவது எளிதானதாக இருப்பதால், அட்டவணை 1 அந்தப்பகுதியில் உள்ள “கடவுள்” எனும் வார்த்தையின் 57 இடம்பெறுதல்களைக் காட்டுகின்றது. “கடவுள்” எனும் வார்த்தையின் மொத்த இடம் பெறுதலில் இருந்து 57–ஐக் கழிப்பது 2698–57=2641=19 X 139–ஐ நமக்குத் தருகின்றது, முதல் துவக்க எழுத்தில் இருந்து கடைசித் துவக்க எழுத்து வரை. மானிடத் திணிப்புக்களான 9:128 மற்றும் 129 உட்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால், துவக்க எழுத்துக்களைக் கொண்ட பகுதியில் “கடவுள்” எனும் வார்த்தை யின் எண்ணிக்கை 2642 என ஆகி இருக்கும், 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

**(5)** சூரா 9–ஆனது துவக்க எழுத்துக்களைக் கொண்டிராத ஒரு சூராவாகும், எனவே 85 துவக்க எழுத்துக்களைக் கொண்டிராத சூராக்களில் நாம் நோக்கினால், “கடவுள்” எனும் வார்த்தை இந்த சூராக்களில் 57–ல் இடம் பெறுகின்றது என்பதை நாம் காண் கின்றோம், 19X3.இந்த சூராக்களில் “கடவுள்” எனும் வார்த்தை காணப்படுகின்ற வசனங்களின் மொத்த எண்ணிக்கை 1045, 19X55 ஆகும். 9:128–129 உட்படுத்திக் கொள்ளப்பட்டிருந் தால், “கடவுள்” எனும் வார்த்தையைக் கொண்ட வசனங்களில் 1 அதிகமாகி இருந்திருக்கும்.

**(6)** இடம் பெறாத *பஸ்மலஹ்* முதல் (சூரா 9) உபரி *பஸ்மலஹ்* வரை (சூரா 27) கடவுள் எனும் வார்த்தை, 19 சூராக்களுக்குள், 513 வசனங்களில், 19X27, இடம் பெறுகின்றது (அட்டவணை 2). போலி வசனங்களான 9:128–129 உட்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால் “கடவுள்” எனும் வார்த்தையைக் கொண் டிருக்கின்ற வசனங்களின் எண்ணிக்கை 514 என ஆகியிருக்கும், அத்துடன் இந்த அற்புத நிகழ்வு மறைந்து விட்டிருக்கும்.

**(7)** “தெய்வம்” எனப் பொருள் தருகின்ற *“இலாஹ்”* எனும் வார்த்தை வசனம் 9:129ல் இடம்பெறுகின்றது. இக்குர்ஆனில்

*அட்டவணை1: துவக்க எழுத்துக்கள் கொண்ட பகுதிக்கு வெளியில் “கடவுள்” எனும் வார்த்தையின் இடம்பெறுதல்கள்*

| சூரா எண் | “கடவுள்”–ன் எண்ணிக்கை | சூரா எண் | “கடவுள்”–ன் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2 | 84 | 1 |
| 69 | 1 | 85 | 3 |
| 70 | 1 | 87 | 1 |
| 71 | 7 | 88 | 1 |
| 72 | 10 | 91 | 2 |
| 73 | 7 | 95 | 1 |
| 74 | 3 | 96 | 1 |
| 76 | 5 | 98 | 3 |
| 79 | 1 | 104 | 1 |
| 81 | 1 | 110 | 2 |
| 82 | 1 | 112 | 2 |
| | | | 57 |
| | | | 19x3 |

*அட்டவணை2: இடம் பெறாத பஸ்மலஹ்வில் இருந்து உபரியான பஸ்மலஹ் வரையுள்ள “கடவுள்” எனும் வார்த்தை*

| வரிசை எண் | சூரா எண் | “கடவுள்” கொண்ட வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 9 | 100 |
| 2. | 10 | 49 |
| 3. | 11 | 33 |
| 4. | 12 | 34 |
| 5. | 13 | 23 |
| 6. | 14 | 28 |
| 7. | 15 | 2 |
| 8. | 16 | 64 |
| 9. | 17 | 10 |
| 10. | 18 | 14 |
| 11. | 19 | 8 |
| 12. | 20 | 6 |
| 13. | 21 | 5 |
| 14. | 22 | 50 |
| 15. | 23 | 12 |
| 16. | 24 | 50 |
| 17. | 25 | 6 |
| 18. | 26 | 13 |
| 19. | 27 | 6 |
| 19 | 342 | 513 |

சூராக்களின் எண்ணிக்கை=19
சூரா எண்களின் கூட்டுத்தொகை=342=19X18
மொத்த வசனங்கள் = 513 = 19X27

இந்த வார்த்தையின் மொத்த இடம் பெறுதல் 95, 19X5 ஆகும். 9:128–129–ன் உட்திணிப்பு இந்த வார்த்தையில் 1–ஐ, 96 ஆக அதிரிக்கச் செய்கின்றது.

**(8)** ***குர்ஆனின் வார்த்தைகளுக்கான சொல்லகராதி*** 116 *''ரஸுல்''* (தூதர்) வார்த்தைகளைப் பட்டியலிடுகின்றது இந்த வார்த்தைகளில் ஒன்று 9:128–ல் உள்ளது. இந்தப் போலி வசனத்தை நீக்குவதன் மூலம் 115 '*ரஸுல்''* எனும் வார்த்தைகள் மிஞ்சுகின்றன. எண்ணுவதில் இருந்து தவிர்க்கப்பட வேண்டிய மற்றொரு *"ரஸுல்"* எனும் வார்த்தை 12:50 ல் உள்ளது, ஏனெனில் அது "ஃபேரோவின் தூதர்"–ஐக் குறிக்கின்றது, கடவுளின் தூதரை அல்ல. எனவே, கடவுளுடைய *"ரஸுல்"* –ன் மொத்த இடம்பெறுதல் 114, 19 X 6 ஆகும்.

**(9)** போலி வசனங்களான 9:128–129–ல் இடம்பெறுகின்ற மற்றொரு முக்கியமான வார்த்தை '*'ரஹீம்'*' (கருணையாளர்) என்பதாகும். இந்த வார்த்தை குர்ஆனில் பிரத்தியேகமாகக் கடவுளின் ஒரு பெயராகவே பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும் நபியைக் குறிக்கின்ற 9:128–ன் '*'ரஹீம்'*' எனும் வார்த்தையை நீக்கிய பின்னர், அதன் மொத்த எண்ணிக்கையாவது 114, 19 X 6 ஆகும். 7:188, 10:49, மற்றும் 72:21–ன் படி நபியானவர் கருணையின் மீது எந்த அதிகாரத்தையும் பெற்றிருக்கவில்லை.

**(10)** அந்தச் ***சொல்லகராதி*** *''அர்ஷ்''* (அரியாசனம்) எனும் வார்த்தையின் 22 நிகழ்வுகளைப் பட்டியலிடுகின்றது.போலித் திணிப்பான 9:129, அத்துடன் 12:100 இடம்பெறுகின்ற ஜோஸஃபின் *"அர்ஷை"* யும், மேலும் ஷீபாவின் அரசியுடைய *"அர்ஷ்"* (27:23)–ஐயும்நீக்கிய பிறகு, நாம் 19 *"அர்ஷ்"* எனும் வார்த்தைகளை அடைகின்றோம். 9:129–ன் *"அர்ஷ்"* எனும் வார்த்தை குர்ஆனைச் சேர்ந்தது அல்ல என்பதை இது நிரூபிக்கின்றது.

**(11)** குர்ஆனியக் கட்டளையான *"குல்"* (கூறுவீராக) இக்குர்ஆனில் 332 முறைகள் இடம்பெறுகின்றன. அத்துடன் *"காலூ"* (அவர்கள் கூறினார்கள்) எனும் வார்த்தையும் கூட அதே எண்ணிக்கையிலான முறைகளே இடம் பெறுகின்றன, 332. போலி வசனமான 9:129, '*'குல்"* (கூறுவீராக) எனும் வார்த்தையைக் கொண்டிருப்பதால், அதன் உட்புகுத்தல் இந்த வகையிலான குர்ஆனின் அற்புத நிகழ்வினைத் தகர்த்திருக்கும்.

**(12)** இக்குர்ஆன் 6234 எண் இடப்பட்ட வசனங்களையும் 112 எண் இடப்படாத வசனங்களையும் *(பஸ்மலஹ்கள்)* கொண்டுள்ளது. எனவே, இக்குர்ஆனில் உள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கை 6346, 19 X 334. போலி வசனங்களான 9:128–129, குர்ஆனுடைய குறியீட்டின் முக்கியமான இந்த அளவுகோலினை மீறுகின்றன.

**(13)** மேலே பட்டியலிடப்பட்டுள்ள வார்த்தைகளின் எண்ணிக்கைகளை மீறுவதுடன் கூடுதலாக, 9:128–129 குர்ஆனின் கணிதரீதியிலான கட்டமைப்பையும் மீறுகின்றன. ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் எண்ணிக்கையை, வசன எண்களின் கூட்டுத்தொகையுடன் (1+2+3+.......+n , இங்கே n= வசனங்களின் எண்ணிக்கை) கூட்டி, அத்துடன் ஒவ்வொரு சூரா எண்ணையும் நாம் கூட்டும் பொழுது, முழுமையான குர்ஆனுக்குமுரிய தொடர் கூட்டுத்தொகை 346199 அல்லது 19 X 19 X 959. 9:128–129 – ஐ விலக்கி விடுகின்ற அதே சமயம், இந்த அற்புத நிகழ்வு இக்குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வசனத்தின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துகின்றது. விஷயம் 13–ன் கணக்கீடுகளுடைய சுருக்கப்பட்டதொரு எடுத்துக் காட்டாக அட்டவணை 3 உள்ளது. போலி வசனங்களான 9:128–129 சேர்த்துக் கொள்ளப்பட்டால் இந்த அற்புத நிகழ்வு சாத்தியமற்றதாகும்.

*அட்டவணை 3: குர்ஆனின் சூராக்கள் & வசனங்கள், "19"–ன் அடிப்படையில் கணித ரீதியில் குறியீடு செய்யப்படுதல்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 2 | 286 | 41041 | 41329 |
| - | - | - | - |
| 9 | 127 | 8128 | 8264 |
| - | - | - | - |
| 114 | 6 | 21 | 141 |
| 6555 | 6234 | 333410 | 346199 (19x19x959) |

**(14)** விஷயம் 13–ல் உள்ளபடியான அதே கணக்கீடுகளை நாம் செய்யும் பொழுது, சூரா 9–ஐ உள்ளடக்கிய துவக்க எழுத்துக்கள் இல்லாத 85 சூராக் களுக்கு மட்டும் என்றாலும் கூட, தொடர் கூட்டுத்தொகை யானது 19–ன் பெருக்குத் தொகையாகவே உள்ளது. துவக்க எழுத்துக்களற்ற அனைத்து சூராக்களுக்குமுரிய தொடர் கூட்டுத்தொகை 156066 அல்லது 19X8214. இந்த விளைவு சூரா 9,127 வசனங்களைக் கொண்டது எனும் உண்மை நிகழ்வைச் சார்ந்ததாக உள்ளது, 129 அல்ல. தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 4–ல் காட்டப்பட்டுள்ளன. போலி வசனங்கள் இந்த அளவுகோலைத் தகர்த்து விட்டிருக்கும்.

*அட்டவணை 4: துவக்க எழுத்துக்கள் கொண்டிராத, குர்ஆனின் 85 சூராக்களின் கணிதரீதியிலான குறியீடு.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 4 | 176 | 15576 | 15756 |
| - | - | - | - |
| 9 | 127 | 8128 | 8264 |
| - | - | - | - |
| 114 | 6 | 21 | 141 |
| | | | 156066 |

156066 = (19x8214)

**(15)** குர்ஆனின் துவக்கத்திலிருந்து சூரா 9–ன் முடிவு வரை துவக்க எழுத்துக்களற்ற அனைத்து சூராக்களின் (85 சூராக்கள்) சூரா எண்களை, அவற்றின் வசனங்களின் எண்ணிக்கையுடன் கூட்டுவதன் மூலம் நமக்குக் கிடைப்பது 703, 19 X 37. விரிவான தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 5–ல் காட்டப்பட்டுள்ளன.

இந்த அற்புத நிகழ்வு சூரா 9, 127 வசனங்களைக் கொண்டது எனும் உண்மை நிகழ்வினைச் சார்ந்துள்ளது.

**(16)** துவக்க எழுத்துக்களற்ற சூராக்களின் எண்ணுடன், வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி, அத் துடன் *பஸ்மலஹ்* இடம்பெறாத (9:1)–ல் இருந்து குர்ஆனின் இறுதி வரையுள்ள வசன எண்களின் கூட்டுத்தொகையை நாம் கூட்டுவதன் மூலம், மொத்தக் கூட்டுத்தொகையானது 116090 அல்லது 19 X 6110 என வருகின்றது. இந்தத் தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 6ல் உள்ளன. வசனங்கள் 9:128–129 உட்படுத்திக் கொள்ளப்பட்டால், சூரா 9க்குரிய வசனங்களின் எண்ணிக்கையானது 129 ஆகிவிடுகின்றது, அத்துடன் மொத்தக் கூட்டுத்தொகையானது 116349 ஆகி விடுகின்றது, 19ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

*அட்டவணை 5: துவக்கத்தில் இருந்து சூரா 9 வரையுள்ள துவக்க எழுத்துக்கள் கொண்டிராத சூராக்கள் & அவற்றின் வசனங்கள்.*

| சூரா | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 4 | 176 | 180 |
| 5 | 120 | 125 |
| 6 | 165 | 171 |
| 8 | 75 | 83 |
| 9 | 127 | 136 |
| | | 703 |
| | | (19x37) |

*அட்டவணை 6: இடம் பெறாத பஸ்மலஹ் (சூரா 9) முதல் குர்ஆனின் முடிவு வரை துவக்க எழுத்துக்கள் கொண்டிராத சூராக்கள் & அவற்றின் வசனங்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 16 | 128 | 8256 | 8400 |
| - | - | - | - |
| 113 | 5 | 15 | 133 |
| 114 | 6 | 21 | 141 |
| | | | 116090 |
| | | | (19x6110) |

**(17)** விஷயம் 16–ன் அதே கணக்கிடுதல்கள் சூரா 9–ன் இடம் பெறாத *'பஸ்மலஹ்'* வில் இருந்து சூரா 27–ன் உபரி *பஸ்மலஹ்* வரையுள்ள அனைத்து வசனங்களுக்கும் செய்யப்பட்டால், மொத்தக் கூட்டுத் தொகையானது 119966, அல்லது 19X6314 என வருகின்றது. சூரா 9ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கை 129 ஆக இருந்திருந்தால், இந்த அற்புத நிகழ்வு தகர்ந்துபோயிருக்கும், மேலும் அந்த மொத்தக் கூட்டுத்தொகையானது அதற்கு மேலும் 19ஆல் வகுபடக் கூடியதாக இருந்திருக்காது. இந்த அற்புத நிகழ்வு சூரா 9–ல் *பஸ்மலஹ்*வின் இடம் பெறாமையுடன் தொடர்பு கொண்டதாகவும் இருப்பதனால், அது விவரிக்கப் பட்டுள்ளதுடன் விவரிக்கப்பட்ட தகவல் தொகுப்புகள் பின் இணைப்பு 29–ல் அட்டவணை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

**(18)** விஷயங்கள் 16 மற்றும் 17–ல் அதே கணக்கிடுதல்கள் இடம் பெறாத *பஸ்மலஹ்*வான (9:1) முதல், 19 எனும் எண் குறிப்பிடப்படுகின்ற வசனம் (74:30) வரை செய்யப்படுகின்ற போது, மொத்தக் கூட்டுத்தொகையானது 207670, அல்லது 19 X 10930 என வருவதை நாம் காண்கின்றோம் (அட்டவணை 7). சூரா 9 கொண்டிருக்கின்ற வசனங்கள் 127 ஆகவே இருத்தல் வேண்டும்.

*அட்டவணை 7: இடம் பெறாத பஸ்மலஹ் முதல் 74:30 வரையுள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 10 | 109 | 5995 | 6114 |
| - | - | - | - |
| 73 | 20 | 210 | 303 |
| 74 | 30 | 465 | 569 |
| 2739 | 4288 | 200643 | 207670 |
| | | | (19x10930) |

**(19)** சூரா 9 கொண்டிருப்பது 127வசனங்கள். 127–ன் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 1+2+7+=10. சூரா 9–ன் இடம் பெறாத *பஸ்மலஹ்* முதல் சூரா 27–ன் உபரி *பஸ்மலஹ்* வரை அவற்றின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற அனைத்து வசனங்களையும் நாம் நோக்குவோம். சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், மொத்தக் கூட்டுத்தொகையானது 2470

(19 X 130) க்குப் பதிலாக 2472 ஆக இருந்திருக்கும். 2472 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல, ஆகையால் இந்த அற்புத நிகழ்வு மறைந்து போயிருக்கும். தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 8ல் உள்ளன.

**(20)** பொய்ப்பிப்பவர்கள் சூரா 9 கொண்டிருப்பது 129 வசனங்கள் என நாம் நம்ப வேண்டுமென விரும்பினர். 129 என்ற எண் 9 என்னும் இலக்கத்துடன் முடிகின்றது, இலக்கம் “ 9 ” ஐக் கொண்டு முடிவடைகின்ற வசனங்களின் எண்ணிக்கை கொண்ட முதல் சூரா மற்றும் கடைசி சூராவை நாம் நோக்குவோம். அவை சூரா 10 மற்றும் சூரா 104 ஆகும். சூரா 10 முதல் சூரா 104 வரையிலான சூரா எண்ணுடன், வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி, அத்துடன் வசன எண்களின் கூட்டுத்தொகையையும் நாம் கூட்டினால் 23655, அல்லது 19 X 1245 –க்குச் சமமான தொரு மொத்தக் கூட்டுத் தொகையினை நாம் கிடைக்கப் பெறுகின்றோம். அட்டவணை 9–ல் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

தவறான வசனங்களின் எண்ணிக்கை யான, 129 உடன் சூரா 9–ன் உட்படுத்தல் வசன எண்களின் கூட்டுத்தொகை மற்றும் தொடர்கூட்டல் மொத்தத் தொகை ஆகிய இரண்டையும் மாற்றியிருக்கும் – வசன எண்களின் கூட்டுத் தொகையானது 627+129=756 என ஆகியிருக்கும், மேலும் தொடர்கூட்டல் மொத்தத் தொகையானது 23655 ஆக இருந்திருக்காது – எனவே இக்குர்ஆனின் குறியீடு மீறப்பட்டு இருந்திருக்கும் (அட்டவணை 9).

*அட்டவணை 8:அவற்றின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற வசனங்கள், 9:1 முதல் 27:29 வரை,*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | கூட்டப்பட்டால் 10வருவது எத்தனை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 9 | 127 | 12 | 148 |
| 10 | 109 | 10 | 129 |
| 11 | 123 | 11 | 145 |
| 12 | 111 | 10 | 133 |
| 13 | 43 | 3 | 59 |
| 14 | 52 | 4 | 70 |
| 15 | 99 | 9 | 123 |
| 16 | 128 | 12 | 156 |
| 17 | 111 | 10 | 138 |
| 18 | 110 | 10 | 138 |
| 19 | 98 | 9 | 126 |
| 20 | 135 | 12 | 167 |
| 21 | 112 | 10 | 143 |
| 22 | 78 | 7 | 107 |
| 23 | 118 | 11 | 152 |
| 24 | 64 | 6 | 94 |
| 25 | 77 | 7 | 109 |
| 26 | 227 | 22 | 275 |
| 27 | 29 | 2 | 58 |
| 342 | 1951 | 177 | 2470 |

342 = 19 x 18 & 2470 = 19 x 130

**(21)** போலித் திணிப்புக்களானவை சூரா 9–ன் இறுதியில் வசனங்கள் 128 மற்றும் 129–ஐக் கொண்டிருந்தது. எண்கள் 128 மற்றும் 129 – ஐ நாம் நோக்கினால், அவற்றில் இரண்டு 1'–கள், இரண்டு 2'–கள், ஓர் 8 மற்றும் ஓர் 9–ஐ நாம் காண்கின்றோம். இப்போது குர்ஆனிலுள்ள அனைத்து வசனங்களையும் நோக்கி, அவற்றில் நாம் காண்கின்ற 1'–கள் அனைத்தையும் எண்ணுவோம். அதாவது, வசனங்கள் 1,10,11,12,13,.......21, 31, மேலும் இவ்வாறே தொடருதலில் நாம் காண்கின்ற 1'–கள் ஆகும். சூரா 9–ன் சரியான வசனங்களின் எண்ணிக்கையான 127 பயன்படுத்தப்படுகின்ற பட்சத்தில் 1'–களின் மொத்த எண்ணிக்கை 2546 (19 X 134) ஆகும். 128 மற்றும் 129 ஆகியவை உட்படுத்திக் கொள்ளப் பட்டால் மொத்தக் கூட்டுத் தொகையானது, 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்லாத, 2548 என அது ஆகியிருக்கும் (அட்டவணை 11).

**(22)** சூரா 9 துவக்க எழுத்துக்களற்ற ஒரு சூராவாக இருப்பதால், துவக்க எழுத்துக்களற்ற 85 சூராக்களில் உள்ள அனைத்து வசன எண்களையும் நாம் நோக்குவதுடன் நாம் காணக்கூடிய அனைத்து 1'–களையும் எண்ணுவோம். அட்டவணை 10–ல் காட்டப்பட்டுள்ளபடி, துவக்க

*அட்டவணை 10: துவக்க எழுத்துக்கள் கொண்டிராத சூராக்கள் 85–ல் உள்ள அனைத்து 1–களை எண்ணுதல்*

| சூரா | வசனங்களின் எண்ணிக்கை | 1'–களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 7 | 1 |
| 4 | 176 | 115 |
| - | - | - |
| 9 | 127 | 61 |
| - | - | - |
| 113 | 5 | 1 |
| 114 | 6 | 1 |
| | | ........... 1406 (19 x 74) |

*அட்டவணை 9: அவற்றின் வசன எண் “ 9” கொண்டு முடிவடைகின்ற சூராக்கள் அனைத்தும்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 10 | 109 | 5995 | 6114 |
| 15 | 99 | 4950 | 5064 |
| 29 | 69 | 2415 | 2513 |
| 43 | 89 | 4005 | 4137 |
| 44 | 59 | 1770 | 1873 |
| 48 | 29 | 435 | 512 |
| 52 | 49 | 1225 | 1326 |
| 57 | 29 | 435 | 521 |
| 81 | 29 | 435 | 545 |
| 82 | 19 | 190 | 291 |
| 87 | 19 | 190 | 296 |
| 96 | 19 | 190 | 305 |
| 104 | 9 | 45 | 158 |
| 748 | 627 | 22280 | 23655 (19 x 1245) |

எழுத்துக்களற்ற சூராக்களில் உள்ள "1" எனும் இலக்கத்தின் மொத்த எண்ணிக்கையாவது 1406, 19 X 74 ஆகும். கண்கூடாக, சூரா 9–ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், 128 மற்றும் 129 ஆகியவற்றில் கூடுதலாக இரண்டு 1'–களை நாம் கண்டிருப்போம், எனவே இக்குறியீடு மீறப்பட்டிருக்கும்.

**(23)** விஷயங்கள் 22 மற்றும் 23–ல் விவரிக்கப்பட்டுள்ள இலக்கம் "1"–க்குரிய அதே செயல் முறையைப் பின்பற்றி, குர்ஆன் முழுமையும் அனைத்து வசன எண்களிலும் உள்ள 2–கள், 8–கள் மற்றும் 9–கள் அனைத்தையும் நாம் எண்ணுவோம். அட்டவணை 11–ல் காட்டப்பட்டுள்ளபடி, அனைத்து 2–கள், 8–கள், மற்றும் 9–களின் மொத்த எண்ணிக்கையாவது 3382, அல்லது 19 X 178 ஆகும். இது, அனைத்து 1–கள், 2–கள், 8–கள், மற்றும் 9–களின் மொத்தக் கூட்டுத்தொகையினை 2546+3382 = 5928, 19 X 312 என ஆக்குகின்றது.

அட்டவணை 11: குர்ஆன் முழுவதும் 128 மற்றும் 129–ல் இடம்பெறுகின்ற இலக்கங்களை எண்ணுதல்

| சூரா | 1–களின் எண்ணிக்கை | 2–களின் எண்ணிக்கை | 8–களின் எண்ணிக்கை | 9–களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | 0 | 0 | 2 |
| 2 | 159 | 146 | 55 | 48 | 408 |
| - | - | - | - | - | - |
| 9 | 61 | 31 | 22 | 22 | 136 |
| 10 | 31 | 21 | 21 | 21 | 94 |
| - | - | - | - | - | - |
| 114 | 1 | 1 | 0 | 0 | 2 |
| | ................. | .............. | ............ | ........... | ............... |
| | 2546 | 1641 | 908 | 833 | 5928 |
| | 19 x 134 | | | | (19 x 312) |

குறிப்பிடத்தக்க இந்த அற்புத நிகழ்வினில், குர்ஆனில் உள்ள ஒவ்வொரு தனி வசனத்தையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அத்துடன் வசனங்கள் 128 மற்றும் 129–ல் அமைந்துள்ள தனித்தனியான இலக்கங்ளைப் பரிசீலித்தோம். 128 மற்றும் 129, 6 இலக்கங்களைக் கொண்டிருப்பதால், இந்த மானிடத் திணிப்புக்களின் உட்படுத்தலானது முழுக்குர்ஆனிலும் உள்ள இந்த இலக்கங்களின் மொத்த எண்ணிக்கையை, 19–ன் ஒரு பெருக்குத்தொகை அல்லாத 5928+6 = 5934 என ஆக்கி விடுகின்றது.

**(24)** 127 வசனங்கள் கொண்ட சூரா 9–ஐ உட்படுத்திக் கொண்டுள்ள, துவக்க எழுத்துக்களற்ற 85 சூராக்களுடைய அனைத்து வசன எண்களிலும் உள்ள (1 முதல் 9 வரையிலான) அனைத்து இலக்கங்களின் மொத்த எண்ணிக்கை, 27075 அல்லது 19 X 19 X 75 ஆகும்.

**(25)** சூரா 9க்குரிய சரியான வசனங்களின் எண்ணிக்கையான, 127–ஐ எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், குர்ஆனுடைய சூராக்கள் மற்றும் வசனங்களுடைய இலக்கங்களைக் கூட்டுவதன் மூலம் விளைவது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாகும். இதனைச் செய்ய, குர்ஆனுடைய 114 சூராக்கள் மற்றும் ஒவ்வொரு சூராவிலுமுள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்ட ஒரு பட்டியலை உருவாக் குங்கள். ஒவ்வொரு சூரா எண்ணின் இலக்கங்களைக் கூட்டுங்கள். 10–ன் இலக்கங்களுடைய கூட்டுத்தொகை=1, 11=2, 12=3, 99=18, இவ்வாறே தொடர வேண்டும். அனைத்து சூராக்களுக்குமுரிய மொத்தத் தொகை 975 ஆகும். இதே விஷயம் ஒவ்வொரு சூராவின் வசனங்களு டைய எண்ணிக்கைகளுக்கும் செய்யப்படுகின்றது. உதாரணத்திற்கு, சூரா 2 கொண்டிருப்பவை 286 வசனங்கள். 286–ன் இலக்கங்கள் கூட்டப்படும் போது வருவது 2+8+6=16. சூரா 9–க்குரிய அதன் வசனங்களுடைய இலக்கங்கள் கூட்டப்படும் போது வருவது1+2+7=10. 114 சூராக்கள் அனைத்திற்குமுரிய மொத்த தொகையாவது 906 ஆகும். இவ்விதமாக, அனைத்து சூராக்கள் மற்றும் வசனங்களின் இலக்கங்களுக்குரிய மொத்தக் கூட்டுத் தொகையாவது 975+906=1881 = 19 X 99 ஆகும்.

அட்டவணை 12: முழுக்குர்ஆனிலும் உள்ள அனைத்து சூராக்கள் மற்றும் வசன எண்களின் இலக்கங்களுடைய கூட்டுத்தொகை

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | இலக்கங்களின் கூட்டுத்தொகை சூராக்கள் | இலக்கங்களின் கூட்டுத்தொகை வசனங்கள் |
|---|---|---|---|
| 1 | 7 | 1 | 7 |
| 2 | 286 | 2 | 16 |
| 3 | 200 | 3 | 2 |
| - | - | - | - |
| 9 | 127 | 9 | 10 |
| - | - | - | - |
| 114 | 6 | 6 | 6 |
| | | .......... | .......... |
| | | 975 | 906 |

975+906 = 1881 = 19 x 99

இயல்பாக, சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால் இந்த முடிவு சாத்தியமானதாக இராது. இக்கணக்கீடுகளை எடுத்துக்காட்டுவதற்காக அட்டவணை 12 சுருக்கப்பட்டுள்ளது.

**(26)** அற்புதமான விதமாக, குர்ஆனிலுள்ள ஒவ்வொரு சூராவிற்கும் உரிய இலக்கங்களின் கூட்டுத்தொகையை நாம் கணக்கிட்டு, அதன் வசனங்களுடைய எண்ணிக்கையின் இலக்கங்களுடைய கூட்டுத் தொகையுடன் ஒவ்வொரு சூராவிற்குமுரிய கூட்டுத் தொகையைக் *கூட்டுவதற்குப் பதிலாக, பெருக்கினாலும்* கூட அப்போது 19−ன் ஒரு பெருக்குத் தொகையாகவே உள்ள ஒரு மொத்தக் கூட்டுத் தொகையினையே நாம் அடைகின்றோம். உதாரணத்திற்கு, சூரா 2 கொண்டிருப்பது 286 வசனங்கள். 2+8+6 ஆகிய இலக்கங்களில் கூட்டுத்தொகை =16. எனவே, விஷயம் 26−ல் நாம் செய்ததைப் போல் 2+16 ஐக் கூட்டுவதற்குப் பதிலாக, நீங்கள் 2−ஐப் 16−ஆல் பெருக்குங்கள், அப்போது உங்களுக்கு 32 கிடைக்கும். குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவுக்கும் இது செய்யப்படுகின்றது. அனைத்து சூராக்களுக்குமுரிய மொத்தக் கூட்டுத் தொகையாவது 7771, அல்லது 19 X 409. மீண்டும் ஒருமுறை, குர்ஆனில் உள்ள ஒவ்வொரு தனித்த வசனமும் உறுதிப்படுத்தப்படுகின்றது, அதே சமயம் போலியான வசனங்கள் முற்றிலும் மறுக்கப்பட்டு விடுகின்றன. பார்க்க அட்டவணை 13.

*அட்டவணை 13: குர்ஆனின் சூராக்கள் மற்றும் வசனங்களுடைய இலக்கங்களின் கூட்டுத்தொகையைப் பெருக்குதல்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | இலக்கங்களின் கூட்டுத்தொகை சூராக்கள் | | இலக்கங்களின் கூட்டுத்தொகை வசனங்கள் | | பெருக்கலின் விளைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 1 | x | 7 | = | 7 |
| 2 | 286 | 2 | x | 16 | = | 32 |
| 3 | 200 | 3 | x | 2 | = | 6 |
| - | - | - | | - | | - |
| 9 | 127 | 9 | x | 10 | = | 90 |
| - | - | - | | - | | - |
| 114 | 6 | 6 | x | 6 | = | 36 |
| | | 975 | | 906 | | 7771 |
| | | | | | | (19x409) |

975 + 906 = 1881 = 19x99

**(27)** மெய்யாகவே பிரமிப்பூட்டுகின்ற மற்றோர் அற்புத நிகழ்வு: சூரா 9 ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட ஒரு சூராவாகும், எனவே மேலே விவரிக்கப்பட்டுள்ள அதே கணக்கீடுகளை ஒற்றைப்படை எண்ணைக் கொண்டுள்ள சூராக்களுக்கு மட்டும் நாம் செயல்படுத்தினால், சூராக்களுக்கு உரிய மொத்தத் தொகை 513 (19 X 27) என, வசனங்களுக்கு உரிய மொத்தத் தொகை 437(19 X 23) என, எனவே இரண்டிற்கும் உரிய மொத்தக் கூட்டுத் தொகை 513+437 = 950 (19 X 50) என இருப்பதை நாம் காண்கிறோம். அட்டவணை 14 அசாதாரணமான இந்த அற்புத நிகழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

**(28)** 127 அல்லது அதற்குக் குறைவான வசனங்களைக் கொண்டுள்ள அனைத்து சூராக்களையும் நாம் எடுத்துக் கொள்வோம். இத்தகைய சூராக்கள் 105 உள்ளன. இந்த 105 சூராக்களுடைய சூரா எண்களின் கூட்டுத்தொகையுடன், அவற்றின் வசன எண்களின் கூட்டுத்தொகையைக் கூட்டினால் 10963, அல்லது (19X577) ஆகும். 127 வசனங்களைக் கொண்ட ஒரே சூராவாக சூரா 9 உள்ளது. பார்க்க அட்டவணை 15. சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டதாகவே இருந்திருப்பின் அது இந்த சூராக்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்காது, மொத்தத் தொகையானது 10827 (10963−136) ஆக இருந்திருக்கும், இந்த அற்புதம் மறைந்து போயிருக்கும், அத்துடன் குர்ஆனின் இக்குறியீடும் மீறப்பட்டதாக இருந்திருக்கும்.

*அட்டவணை 14: அட்டவணை 12−ல் உள்ள அதே தகவல்தொகுப்புக்கள், ஆனால் ஒற்றைப்படை எண் கொண்ட சூராக்களுக்கு மட்டும்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | இலக்கங்களின் கூட்டுத்தொகை சூராக்கள் | இலக்கங்களின் கூட்டுத்தொகை வசனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 7 | 1 | 7 | 8 |
| 3 | 200 | 3 | 2 | 5 |
| - | - | - | - | - |
| 9 | 127 | 9 | 10 | 19 |
| - | - | - | - | - |
| 113 | 5 | 5 | 5 | 10 |
| | | 513 | 437 | 950 |
| | | (19x27) | (19x23) | (19x50) |

**(29)** சூரா 9 ஒற்றைப்படை எண்ணைக் கொண்டதாக, அத்துடன் அதன் வசனங்களின்

எண்ணிக்கையும் கூட ஒற்றைப்படை எண்ணைக் கொண்டதாக இருப்பதனால், ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட சூராக்களில் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கையும் கூட ஒற்றைப்படை எண்ணாகவே உள்ளவற்றை நாம் நோக்குவோம். இது நமக்கு 27 சூராக்களைத் தருகின்றது. 1, 9, 11, 13, 15, 17, 25, 27, 29, 33, 35, 39, 43, 45, 57, 63, 81, 87, 91, 93, 97, 101, 103, 105, 107, 111 மற்றும் 113. இவை முறையே 7, 127, 123, 43, 99, 111, 77, 93, 69, 73, 45, 75, 89, 37, 29, 11, 29, 19, 15, 11, 5, 11, 3, 5, 7, 5 மற்றும் 5 வசனங்களைக் கொண்டுள்ளன. இந்த சூரா எண்களின் கூட்டுத்தொகை, அவற்றின் வசன எண்களின் கூட்டுத்தொகையுடன் கூட்டப்பட்டால் 2774, 19 X 146. சூரா 9க்குரிய தவறான வசனங்களின் எண்ணிக்கையை, அதாவது 129–ஐ நாம் எடுத்துக் கொண்டால், இந்த அற்புதம் மறைந்து போய் விடுகின்றது.

*அட்டவணை 15: வசனங்கள் 127 அல்லது அதற்குக் குறைவான வசனங்களைக் கொண்ட அனைத்து சூராக்களின் கணித ரீதியிலான குறியீடு*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 5 | 120 | 125 |
| 8 | 75 | 83 |
| 9 | 127 | 136 |
| - | - | - |
| 113 | 5 | 118 |
| 114 | 6 | 120 |
| 6434 | 4529 | 10963 |
| | | (19 x 577) |

**(30)** சூரா 9–ல் உள்ள வசனங்களின் சரியான எண்ணிக்கை 127 ஆகும், அத்துடன் இது ஒரு பகா எண்ணும் ஆகும் – அது 1 மற்றும் அதனாலேயே தவிர வேறு எந்த எண்ணாலும் வகுபடாததாக உள்ளது. அனைத்து சூராக்களிலும், அவற்றின் வசனங்களின் எண்ணிக்கை ஒரு பகா எண்ணாக உள்ளவற்றை நாம் நோக்குவோம். இவை சூராக்கள் 1, 9, 13, 33, 43, 45, 57, 63, 81, 87, 93, 97, 101, 103, 105, 107, 111 மற்றும் 113 ஆகும். இந்த சூராக்களில் வசனங்களுடைய எண்ணிக்கைகளாவன, முறையே 7, 127, 43, 73, 89, 37, 29, 11, 29, 19, 11, 5, 11, 3, 5, 7, 5 மற்றும் 5 ஆகும். இந்த சூராக்களின் இலக்கங்களை நீங்கள் கூட்டினால் உங்களுக்குக் கிடைப்பது 137, அதே சமயம் வசனங்களின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் கிடைப்பது 129. அனைத்து இலக்கங்களின் மொத்த கூட்டுத்தொகையை இது 137+129 = 266 = 19 X 14 என ஆக்குகின்றது.

**(31)** புரட்டர்கள் சூரா 9–ல் இரண்டு போலி வசனங்களைச் சேர்த்தனர், எனவே இது அந்த சூரா 129 வசனங்களைக் கொண்டிருக்கக் காரணமானது. 129 கொண்டிருப்பது 3 இலக்கங்கள், மேலும் அது 3–ஆல் வகுபடக் கூடியதாகவும் இருப்பதனால், 3–ஆல் வகுபடக்கூடிய, அத்துடன் வசனங்களின் எண்ணிக்கை 3 இலக்கங்களைக் கொண்டதாக உள்ள சூராக்களை நாம் நோக்குவோம். இந்த சூரா எண்களின் மொத்தத் தொகை 71 ஆகும், அத்துடன் வசனங்களுடைய எண்ணிக்கையின் மொத்த தொகை 765 ஆகும். 71+765=836, அல்லது 19 X 44 என்றதொரு மொத்தக் கூட்டுத் தொகையினை இது விளைவிக்கின்றது. தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 16–ல் காட்டப்பட்டுள்ளன.

*அட்டவணை:16 அவற்றின் வசனங்களின் எண்ணிக்கை 3 இலக்கங்கள் கொண்ட தாகவும், 3–ஆல் வகுபடக்கூடியதாகவும் உள்ள அனைத்து சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 5 | 120 | 125 |
| 6 | 165 | 171 |
| 11 | 123 | 134 |
| 12 | 111 | 123 |
| 17 | 111 | 128 |
| 20 | 135 | 155 |
| 71 | 765 | 836 |
| | | (19 x 44) |

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், இந்த அட்டவணையில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும், மேலும் இந்த அற்புத நிகழ்வினைத் தகர்த்திருக்கும்.

*அட்டவணை 17: வசனங்கள் 129 அல்லது அதற்கு அதிகமான வசனங்கள் கொண்டுள்ள சூராக்கள் அனைத்தும்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2 | 286 |
| 3 | 200 |
| 4 | 176 |
| 6 | 165 |
| 7 | 206 |
| 20 | 135 |
| 26 | 227 |
| 37 | 182 |
| | 1577 |
| | (19 x 83) |

**(32)** நாம் நம்ப வேண்டுமென்று பொய்ப்பிப்பவர்கள் விரும்பியவாறு, சூரா 9ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், அப்போது நாம் 129 அல்லது அதற்கு அதிகமான வசனங்களைக் கொண்டுள்ள அனைத்து சூராக்களையும் நாம் நோக்கலாம். இத்தகைய சூராக்கள் 8 உள்ளன. அவற்றின் தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 17–ல் காட்டப்பட்டுள்ளன.

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், வசனங் களுடைய எண்ணிக்கையின் மொத்தத் தொகையானது, 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக இல்லாத, 1577+129=1706 என இருந்திருக்கும்.

**(33)** 127, 128 மற்றும் 129 ஆகிய எண்கள் இரண்டு இலக்கங் களைப் பொதுவில் கொண்டுள்ளன, “1” மற்றும் “2”. அனைத்து சூராக்களிலும் வசனங்களின் எண்ணிக்கையில் 1மற்றும் 2 ஆகிய இலக்கங்களைக் கொண்டிருப்பவற்றை நாம் நோட்டமிடுவோம். சூரா எண்களையும்

வசனங்களின் எண்ணிக்கைகளையும் நாம் கூட்டுவதன் மூலம், நமக்குக் கிடைப்பது 1159, 19X61. பார்க்க அட்டவணை 18.

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டதாக இருந்திருந்தால், மொத்தத் தொகையானது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக அல்லாத, 1159+2=1161 என்று ஆகியிருக்கும்.

*அட்டவணை 18: விவாதத்திற்குரிய வசனங்களில் (127,128 மற்றும் 129) பொதுவாக உள்ள இலக்கங்களான “1” மற்றும் “2” ஆகியவற்றை அதன் இறுதி வசனத்தில் கொண்டிருக்கும் சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 5 | 120 | 125 |
| 9 | 127 | 136 |
| 11 | 123 | 134 |
| 16 | 128 | 144 |
| 21 | 112 | 133 |
| 37 | 182 | 219 |
| 65 | 12 | 77 |
| 66 | 12 | 78 |
| 92 | 21 | 113 |
| 322 | 837 | 1159 (19x61) |

சூரா 9ஆனது 129 வசனங்களைக் கொண்டதாக இருந்திருந்தால் அம்மொத்தக் தொகை 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக இல்லாத, 247+2=249 ஆக இருந்திருக்கும்.

**(34)** சூரா 9 அதன் வசனங்களின் எண்ணிக்கையில் இலக்கங்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றைக் கொண்டுள்ள ஒற்றை இலக்கம் கொண்ட ஒரு சூராவாகும். இந்தத் தன்மைகளைக் கொண்ட வேறு சூரா ஒன்றே ஒன்றுதான் உள்ளது: சூரா 5 ஒற்றை இலக்கம் கொண்ட ஒரு சூராவாகவும், அது 120 வசனங்களைக் கொண்டதாகவும் உள்ளது. அட்டவணை 19–ல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த இரண்டு சூராக்களிலும் வசனங்களின் எண்ணிக்கையானது 120+127=247=19X13.

*அட்டவணை 19: அதன் எண் ஒற்றை இலக்கமாகவும், அதன் வசனங்களின் எண்ணிக்கையில் இலக்கங்கள் “1” மற்றும் “2”–ஐக் கொண்டிருக்கின்ற சூராக்கள் மட்டும்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 5 | 120 |
| 9 | 127 |
| | 247 (19 x 13) |

**(35)** அனைத்து சூராக்களிலும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கையில் “1” மற்றும் “2” ஐக் கொண்டிருக்கின்றவற்றை நாம் நோக்கினோம். இப்போது நாம் அனைத்து சூராக்களிலும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை “1” எனும் இலக்கத்தைக் கொண்டு துவங்குபவற்றை நாம் நோக்குவோம். 30 சூராக்கள் இந்தத் தன்மையைக் கொண்டவையாக உள்ளன: சூராக்கள் 4, 5, 6, 9, 10, 11, 12, 16, 17, 18, 20, 21, 23, 37, 49, 60, 61, 62, 63, 64, 65, 66, 82, 86, 87, 91, 93, 96, 100, மற்றும் 101.

அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கைகளாவன, 176, 120, 165, 127, 109, 123, 111, 128, 111, 110, 135, 112, 118, 182, 18, 13, 14, 11, 11, 18, 12, 12, 19, 17, 19, 15, 11, 19, 11, மற்றும் 11. இந்த 30 சூராக்களுடைய வசன எண்களின் கூட்டுத்தொகை (1+2+3+.........n ) 126122. அல்லது 19X6638 ஆகும்.

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டதாக இருந்தால், அவற்றின் வசன எண்களின் கூட்டுத்தொகையானது 126122+128+129=126379, என ஆகியிருக்கும், மேலும் இம்மொத்தத் தொகை 19ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

*அட்டவணை 20: சூரா எண் மற்றும் வசனங்களின் எண்ணிக்கையில் உள்ள இலக்கங்கள் கூட்டப்பட்டால் 19 வருகின்ற அனைத்து சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 9 | 127 | 136 |
| 22 | 78 | 100 |
| 26 | 227 | 253 |
| 45 | 37 | 82 |
| 54 | 55 | 109 |
| 64 | 18 | 82 |
| 72 | 28 | 100 |
| 77 | 50 | 127 |
| 78 | 40 | 118 |
| 84 | 25 | 109 |
| 531 | 685 | 1216 (19x64) |

**(36)** சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள், அத்துடன் 9+1+2+7 ஆனது 19க்குச் சமமாகின்றது. இப்போது நாம் அனைத்து சூராக்களிலும் அவற்றின் சூரா மற்றும் வசனங்களுடைய இலக்கங்கள் கூட்டப்பட்டால் 19 வருகின்றவற்றை நோக்குவோம். குறிப்பிடப்பட்ட இந்தத் தகுதியை எட்டுகின்ற சூராக்கள் 10 உள்ளன, அத்துடன் அவற்றின் சூரா எண்கள் மற்றும் வசனங்களுடைய எண்ணிக்கைகளின் மொத்தத் தொகையாவது 1216, அல்லது 19X64 ஆகும். அட்டவணை 20–ல் தகவல் தொகுப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.

**மஸ்ஜித் தூஸானைச் சேர்ந்த சகோ. கட்டுட் அடிஸோமா கீழ்க்கண்ட இரண்டு கண்டுபிடிப்புக்களைச் செய்தார்**

**(37)** சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள், மேலும் [9] +[1+2+7] கூட்டப்பட வருவது 19. குர்ஆன் முழுக்கவும் சூராவின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 9 வருகின்ற, மேலும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கையின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற மற்ற சூராக்கள் மூன்று உள்ளன. அவை சூராக்கள் 9, 45, 54 மற்றும் 72 ஆகியவையாகும். அவை, முறையே 127, 37, 55 மற்றும் 28 வசனங்களைக் கொண்டுள்ளன. இந்த மூன்று சூராக்களிலும் உள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையாவது 247, 19X13 ஆகும்.

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால் இந்த அட்டவணையின் துவக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்காது. பார்க்க அட்டவணை 21.

*அட்டவணை 21: சூரா எண்ணின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 9, மேலும் வசனங்களின் எண்ணிக்கை யுடைய இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற சூராக்கள் அனைத்தும்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 9 | 127 |
| 45 | 37 |
| 54 | 55 |
| 72 | 28 |
| | 247 |
| | (19x13) |

**(38)** புரட்டர்கள் கோரியவாறு சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், அப்போது சூராவின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 9 வருகின்ற, மேலும் அதன் வசனங்களுடைய எண்ணிக்கையின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 12 வருகின்ற மற்ற ஒரே ஒரு சூரா உள்ளது, அதாவது சூரா 27.

அட்டவணை 22–ல் காட்டப்பட்டுள்ளபடி, சூரா 9–க்கு 129 வசனங்களுடன் கூடிய, இந்தச் சேர்க்கை குர்ஆனின் குறியீட்டுடன் ஒத்துப்போகவில்லை.

*அட்டவணை 22: சூரா 9 ஆனது 129 வசனங்கள் கொண்டது எனக் கருதிக் கொண்டு, சூரா எண்ணின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 9, மேலும் வசனங்களின் எண்ணிக்கையுடைய இலக்கங்கள் கூட்டப்பட்டால் 12 வருகின்ற சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 9 | 129 |
| 27 | 93 |
| | 222 |
| | [19ன் பெருக்குத் தொகை அல்ல] |

**(39)** சிறிதொரு நேரத்திற்கு சூரா 9 கொண்டிருப்பது 129 வசனங்கள் என்று நாம் கருதிக் கொள்வோம். 129 எனும் எண் இலக்கம் "9"–வுடன் முடிவடைவதனால், வசனங்களின் எண்ணிக்கையானது 9 எனும் இலக்கத்துடன் முடிவடைகின்ற அனைத்து சூராக்களையும் நாம் நோக்குவோம்.

*அட்டவணை 23: அவற்றின் வசனங்களின் எண்ணிக்கை "9" எனும் இலக்கம் கொண்டு முடிவடைகின்ற சூராக்கள் அனைத்தும்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 10 | 109 | 5995 | 6114 |
| 15 | 99 | 4950 | 5064 |
| 29 | 69 | 2415 | 2513 |
| 43 | 89 | 4005 | 4137 |
| 44 | 59 | 1770 | 1873 |
| 48 | 29 | 435 | 512 |
| 52 | 49 | 1225 | 1326 |
| 57 | 29 | 435 | 521 |
| 81 | 29 | 435 | 545 |
| 82 | 19 | 190 | 291 |
| 87 | 19 | 190 | 296 |
| 96 | 19 | 190 | 305 |
| 104 | 9 | 45 | 158 |
| 748 | 627 | 22280 | 23655 |
| | (19x33) | | (19x1245) |

இலக்கம் "9"–வுடன் முடிவடைகின்ற வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்ட 13 சூராக்களை இக்குர்ஆனில் நாம் காண்கின்றோம். அவை சூராக்கள் 10, 15, 29, 43, 44, 48, 52, 57, 81, 82, 87, 96, மற்றும் 104. அவற்றின் வசனங்களின் எண்ணிக்கைகள் முறையே 109, 99, 69, 89, 59, 29, 49, 29,29, 19, 19, 19 மற்றும் 9 ஆகும்.

அட்டவணை 23–ல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளபடி, சூரா 9 தவிர்த்துக்கொள்ளப்பட்டால் மட்டுமே பற்பல முடிவுகள் குர்ஆனின் கணிதக் குறியீட்டுடன் ஒத்துப் போகின்றன; அது 129 வசனங்களைக் கொண்டது அல்ல, சூரா 9 சேர்க்கப்படாமல் இந்த 13 சூராக்களின் வசனங்களுடைய எண்ணிக்கையின் மொத்தத் தொகையாவது 627, 19X33. கூடுதலாக, சூரா எண், அத்துடன் வசனங்களின் எண்ணிக்கை, அத்துடன் வசன எண்களின் கூட்டுத்தொகை ஆகியன கூட்டப்பட வருவது 23655 அல்லது 19X1245. சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால் இந்த அற்புத நிகழ்வுகள் மறைந்து போயிருக்கும்.

**(40)** சூரா 9 அதன் வசனங்களின் எண்ணிக்கை "9" எனும் இலக்கத்தை கொண்டு முடிவடைகின்ற ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட ஒரு சூரா என்று கருதப்படுகின்றது. இப்போது நாம் ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட அனைத்து

சூராக்களிலும் அவற்றின் வசனங்களின் எண்ணிக்கை "9 " –உடன் முடிவடைகின்றவற்றை நோக்குவோம். அட்டவணை 24–ல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த சூராக்களில் சூரா எண் மற்றும் வசனங்களுடைய எண்ணிக்கையின் மொத்தத் தொகை 646, அல்லது 19X34 ஆகும். சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், இந்தத் தொகுப்பினுள் அது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும், அத்துடன் மொத்தத் தொகையானது 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்லாத, 646+129+9=784 என இருந்திருக்கும்.

*அட்டவணை 24: அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை "9" கொண்டு முடிவடைகின்ற ஒற்றைப்படை எண் கொண்ட சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 15 | 99 | 114 |
| 29 | 69 | 98 |
| 43 | 89 | 132 |
| 57 | 29 | 86 |
| 81 | 29 | 110 |
| 87 | 19 | 106 |
| 312 | 334 | 646 |
| | | (19x34) |

**(41)** இவ்வாறாக இப்பொழுது, சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள் என்பது மறுக்க இயலாதவாறு நிரூபிக்கப்பட்டு விட்டது. இப்போது நாம் "7"–உடன் முடிவடைகின்ற வசனங்களின் எண்ணிக்கை யைக் கொண்டுள்ள சூராக்களை நோக்குவோம். அத்தகைய சூராக்கள் 7 உள்ளன; அவை சூராக்கள் 1, 9, 25, 26, 45, 86, மற்றும் 107 ஆகியன வாகும். அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கைகள் முறையே, 7, 127, 77, 227, 37, 17 மற்றும் 7 ஆகியனவாகும். இந்த ஏழு சூராக்களுக் குரிய சூரா எண்களுடன் வசனங்களின் எண்ணிக்கையை கூட்ட, மொத்தக் கூட்டுத்தொகையாவது 798, 19X42. அட்டவணை 25–ல் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்விதமாக, சூரா 9 உட்பட, "7" எனும் இலக்கத்துடன் முடிவடைகின்ற வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ள ஒவ்வொரு சூராவும், குறியீட்டுடன் ஒத்துப் போகின்றது.

*அட்டவணை 25: அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை "7" எனும் இலக்கம் கொண்டு முடிவடைகின்ற சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 9 | 127 | 136 |
| 25 | 77 | 102 |
| 26 | 227 | 253 |
| 45 | 37 | 82 |
| 86 | 17 | 103 |
| 107 | 7 | 114 |
| 299 | 499 | 798 |
| | | (19x42) |

**(42)** சூரா 9–ன் கடைசி இரண்டு வசனங்கள் 126 மற்றும் 127 ஆகியனவாகும். பொய்ப்பிப்பவர்கள் இரண்டு வசனங்களைக் கூட்டிக் கொண்டதனால், இந்த இரண்டு கடைசி வசனங்களுடன், குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவின் கடைசி இரு வசனங்களையும் நோக்கி, "7" எனும் இலக்கத்தை, அவை அனைத்தையும், நாம் எண்ணுவோம்.

அட்டவணை 26–ல் காட்டப்பட்டுள்ளபடி, குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவின் கடைசி இரண்டு வசனங்களில் "7" எனும் இலக்கத்தின் மொத்த எண்ணிக்கை 38, 19X2 ஆகும்.

சூரா 9–ல் உள்ள கடைசி வசனமானது 127க்குப் பதிலாக 129 ஆக இருந்திருந்தால் "7" எனும் இலக்கத்தின் நிகழ்வுகளுடைய எண்ணிக்கை 38 ஆக அல்ல, 37 ஆக இருந்திருக்கும், அத்துடன் இந்த அளவுகோல் நிலை குலைந்து போயிருக்கும்.

**(43)** சூரா 9 கொண்டிருப்பது 129 வசனங்கள் என்று கருதிக் கொண்டவாறு, 129 எனும் வசன எண் ஒன்றைக் கொண்டுள்ள அனைத்து சூராக்களையும் நாம் நோக்குவோம். அதாவது 129 அல்லது அதற்கும் அதிகமான வசனங்களைக் கொண்டிருக்கின்ற அனைத்து சூராக்களையும் நாம் நோக்குகின்றோம். உதாரணத் திற்கு, சூரா 2 கொண்டிருப்பது 286 வசனங்கள். ஆகவே "129" எனும் எண் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு வசனத்தை அது கொண்டுள்ளது. பின்னர் நாம் இந்த வசனத்தை எடுத்துக் கொண்டு குர்ஆன் முழுவதிலும் 129 எனும் எண் நிர்ணயிக்கப்பட்டுள்ள மற்ற வசனங்கள் அனைத்துடனும் கூட்டுகின்றோம். இந்தக் கருதுதலின் கீழ், வசன எண் 129 ஒன்றைக் கொண்ட 9 சூராக்கள் அங்குள்ளன. சுவாரசியமான விதமாக, இந்த 9 சூராக்களுடைய சூரா எண்களின் மொத்தத் தொகையானது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது (114), அதே சமயம் இந்த ஒன்பது 129–களுக்குரிய மொத்தத் தொகையில் இருந்து 2 கழிக்கப்பட்டால் அம்மொத்தத் தொகையானது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக இருக்க இயலும். வேறு வார்த்தைகளில், இந்த 9 சூராக்களில் ஒன்று 2

*அட்டவணை 26: குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவின் கடைசி இரண்டு வசனங்களில் "7" எனும் இலக்கத்தின் மொத்த எண்ணிக்கை*

| சூரா எண் | கடைசி2 வசனங்கள் | கடைசி 2 வசனங்களில் உள்ள "7"–கள் |
|---|---|---|
| 1 | 6,7 | 1 |
| 2 | 285,286 | 0 |
| 3 | 199,200 | 0 |
| 4 | 175,176 | 2 |
| - | - | - |
| 9 | 126,127 | 1 |
| - | - | - |
| 25 | 76,77 | 3 |
| - | - | - |
| 114 | 5,6 | 0 |
| | | 38 |

அதிகப்படியான வசனங்களைக் கொண்டுள்ளது என நாம் கூறப்படுகின்றோம். விபரங்கள் அட்டவணை 27–ல் உள்ளன.

114–உடன், 1161 ஐக் கூட்டி, அத்துடன் 2–ஐ நீக்கினால், நாம் பெறுவது 1273, அல்லது 19X67. இந்த மொத்தத் தொகையுடன் (1273) கீழே விஷயம் 44–ல் அறிவிக்கப்பட்டுள்ள மொத்த தொகையை ஒப்பிட்டுப் பாருங்கள். அட்டவணை 27–ல் பட்டியலிடப்பட்டுள்ள 9 சூராக்களில் எந்த ஒன்று அதிகப்படியான அவ்விரண்டு வசனங்களைக் கொண்டுள்ளது? இதன் விடை விஷயம் 44–ல் வழங்கப்பட்டுள்ளது.

*அட்டவணை 27: வசன எண் "129" ஒன்றைக் கொண்டுள்ள அனைத்து சூராக்கள்*

| சூரா எண் | வசன எண் |
|---|---|
| 2 | 129 |
| 3 | 129 |
| 4 | 129 |
| 6 | 129 |
| 7 | 129 |
| 9? | 129 |
| 20 | 129 |
| 26 | 129 |
| 37 | 129 |
| 114 | 1161 |

(114+1161-2=**1273**=19x67)

**(44)** இந்த இரண்டு போலி வசனங்களின் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட வசன எண் 128–ஒன்றைக் கொண்ட அனைத்து சூராக்களையும் நாம் நோக்குவோம், அதே சமயம் சூரா 9 கொண்டிருப்பது 129 வசனங்கள் எனும் கருதுதலைத் தொடர்ந்திடுவோம்.

அட்டவணை 27–ல் உள்ள அதே சூராக்களின் பட்டியலையே இது நமக்குத் தரும், அத்துடன் மிகச் சரியாக 128 வசனங்களைக் கொண்டுள்ள சூரா 16–ஐயும் கூட உள்ளே கொண்டு வரும். அட்டவணை 28–ல் காட்டப்பட்டுள்ளபடி, பளிச்சிடுகின்ற பொருத்தமின்மையுடன் சூரா 9 தணித்து நிற்கின்றது; போலியான வசனங்களைக் கொண்டிருக்கின்ற சூரா என அது தனித்துக் கட்டப்படுகின்றது. சூராக்கள் மற்றும் வசனங்களின் மொத்தத் தொகையானது சூரா 9 நீக்கப்பட்டால் **<u>மட்டுமே</u>** 19–ஆல் வகுபடக்கூடியதாக ஆகின்றது. சூரா 9–ஐ நீக்கிய பின்னர் வகுபடக்கூடிய அம் மொத்தத் தொகையானது விஷயம் 43–ல் இரண்டு வசனங்களை நீக்கிய பின்னர் கிடைக்கப்பெற்ற அதே மொத்தத் தொகையான 1273, 19X67, ஆக இருப்பதைக் கவனியுங்கள். குறிப்பிடத்தக்க இந்த அற்புத நிகழ்வு சூரா 9 வசன எண் 128 ஒன்றைக் கொண்டிருக்க முடியாது என்பதை நிரூபிக்கின்றது.

*அட்டவணை 28: வசன எண் "128" ஒன்றைக் கொண்டுள்ள அனைத்து சூராக்கள்*

| சூரா எண் | வசன எண் |
|---|---|
| 2 | 128 |
| 3 | 128 |
| 4 | 128. |
| 6 | 128 |
| 7 | 128 |
| 9? | 128 |
| 16 | 128 |
| 20 | 128 |
| 26 | 128 |
| 37 | 128 |
| 130 | 1280 |

(130+1280=1410, 19ன் பெருக்குத் தொகை அல்ல )
அதன் 128 வசனங்களுடன், சூரா 9–ஐ நாம் நீக்கி விட்டால் நமக்குக் கிடைப்பது 1410-9-128=**1273**=19x67.

**(45)** சூரா 9 அதன் கடைசி இரண்டு வசனங்களாக 126 மற்றும் 127–ஐக் கொண்ட துவக்க எழுத்துக்கற்ற ஒரு சூராவாகும். நாம் துவக்க எழுத்துக்களற்ற 85 சூராக்களை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு சூராவிலும் உள்ள கடைசி இரு வசனங்களின் எண்ணிக்கைகளைக் கூட்டிக் கொண்ட வருவோம். உதாரணத்திற்கு சூரா 1–ல் உள்ள கடைசி இரு வசனங்கள் 6 மற்றும் 7. 6+7 ஐக் கூட்டுங்கள் அப்போது நீங்கள் பெறுவது 13.துவக்க எழுத்துக்களற்ற அடுத்த சூராவானது சூரா 4 ஆகும்; அதன் கடைசி இரண்டு வசனங்கள் 175 மற்றும் 176 ஆகியனவாகும். 175 + 176 கூட்டப்பட நீங்கள் பெறுவது 351. துவக்க எழுத்துக்களற்ற சூராக்கள் அனைத்திற்கும் இவ்வாறு செய்யுங்கள். அட்டவணை 29–ல் தகவல் தொகுப்புக்கள் உள்ளன. இவ்விதமாக, சூரா 9–ன் கடைசி இரண்டு வசனங்கள் 126 மற்றும் 127 ஆக உள்ளது உறுதிப்படுத்தப்படுகின்றது.

*அட்டவணை29: துவக்க எழுத்துக்கள் கொண்டிராத சூராக்களில் கடைசி இரண்டு வசனங்களின் சுருக்கப்பட்ட அட்டவணை.*

| சூரா எண் | கடைசி 2 வசனங்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | 6+7 | 13 |
| 4 | 175+176 | 351 |
| 5 | 119+120 | 239 |
| - | - | - |
| 9 | 126+127 | 253 |
| - | - | - |
| 114 | 5+6 | 13 |
| | | 6897 |
| | | (19x363) |

**(46)** இப்போது நாம் குர்ஆனில் உள்ள துவக்க எழுத்துக்கள் கொண்ட மற்றும் துவக்க எழுத்துக்களற்ற ஒவ்வொரு சூராவின் கடைசி இரண்டு வசனங்களை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு சூராவிலுமுள்ள அந்தக் கடைசி இரண்டு வசனங்களின் இலக்கங்களைக் கூட்டுவோம் (அட்டவணை 30).

ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்துள்ள இக்கணிதக்குறியீட்டின் மூலமாகக் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவின் கடைசி இரண்டு வசனங்கள் தெய்வீகமான முறையில் பதிக்கப்பட்டுள்ளது, மேலும் தெய்வீகமான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பது உடனடியாகத் தெளிவாகின்றது. சூரா 9–ன் கடைசி இரண்டு வசனங்கள் 128 & 129 அல்ல, 126 & 127 ஆகவே உள்ளன என்று உறுதிப்படுத்தப்படுகின்றது.

**(47)** சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள், மேலும் 127 கொண்டிருப்பது 3 இலக்கங்கள். 3 இலக்கங்களைக் கொண்டுள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்ட சூராக்கள் அனைத்தையும் நாம் நோக்குவோம்; இவை சூராக்கள் 2, 3, 4, 5, 6, 7, 9, 10,11, 12, 16, 17, 18, 20, 21, 23, 26, மற்றும் 37 ஆகியனவாகும். அவற்றின் வசன எண்கள் முறையே 286, 200, 176, 120, 165, 206, 127, 109, 123, 111, 128, 111, 110, 135, 112, 118, 227 மற்றும் 182 ஆகியன வாகும். வசனங்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றிலும் உள்ள கடைசி இலக்கத்தை எடுத்துக் கொண்டு, பின்னர் இந்த இலக்கங்களைக் கூட்டிக் கொண்டே வர, நமக்குக் கிடைப்பது 6 + 0 + 6 + 0 + 5 + 6 + 7 + 9 + 3 + 1 + 8 + 1 + 0 + 5 + 2 + 8 + 7 + 2 = 76 = 19 X 4.

சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால் அதன் வசனங்களின் எண்ணிக்கையின் கடைசி இலக்கமானது 7க்குப் பதிலாக 9 ஆக இருந்திருக்கும், மேலும் கடைசி இலக்கங்களின் மொத்தத் தொகையானது 76–க்குப் பதிலாக 78 ஆக இருந்திருக்கும், அத்துடன் இந்த அற்புத நிகழ்வு மறைந்து விடும்.

*அட்டவணை 30: குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவின் கடைசி இரண்டு வசனங்களுடைய இலக்கங்களின் கூட்டுத்தொகை*

| சூரா எண் | கடைசி 2 வசனங்கள் | இலக்கங்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | 6,7 | 6+7 |
| 2 | 285, 286 | 2+8+5+2+8+6 |
| 3 | 199, 200 | 1+9+9+2+0+0 |
| - | - | - |
| 9 | 126,127 | 1+2+6+1+2+7 |
| - | - | - |
| 113 | 4,5 | 4+5 |
| 114 | 5,6 | 5+6 |
| | | 1824 = 19x96 |

**(48)** மேலே விஷயம் 47–ல் காட்டப்பட்டுள்ள சூராக்களின் பட்டியலை நாம் நோக்குவோம். சூரா 9–ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கையானது ஓர் ஒற்றைப்படை எண்ணாக உள்ளதனால், இப்போது நாம் ஒற்றைப் படையிலான வசன எண்ணிக்கைகளைக் கருத்தில் கொள்வோம். மூன்று இலக்கங்களைக் கொண்ட, ஒற்றைப் படை வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்ட சூராக்கள் அங்கு 8 உள்ளன: சூராக்கள் 6, 9, 10, 11, 12, 17, 20 மற்றும் 26. அவற்றின் வசனங்களின் எண்ணிக்கைகளாவன 165, 127, 109, 123, 111, 111, 135 & 227.

*அட்டவணை 31: அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை ஒற்றைப்படை எண் கொண்டதாக, மேலும் 3 இலக்கங்கள் கொண்டதாகவும் உள்ள அனைத்து சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | கடைசி இலக்கம் |
|---|---|---|
| 6 | 165 | 5 |
| 9 | 127 | 7 |
| 10 | 109 | 9 |
| 11 | 123 | 3 |
| 12 | 111 | 1 |
| 17 | 111 | 1 |
| 20 | 135 | 5 |
| 26 | 227 | 7 |
| | | 38 (19x2) |

இந்த வசனங்களுடைய எண்ணிக்கையின் கடைசி இலக்கங்களாவன முறையே 5, 7, 9, 3, 1, 1, 5 மற்றும் 7. அத்துடன் இந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 38, அல்லது 19 X 2 ஆகும். கண்கூடாக, சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால் அதன் கடைசி இலக்கம் 7–ஆக அல்ல, 9ஆக இருந்திருக்கும், அத்துடன் கடைசி இலக்கங்களின் கூட்டுத்தொகையானது, 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்லாத, 40 ஆக இருந்திருக்கும், விவரிக்கப்பட்ட தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 31–ல் காட்டப்பட்டுள்ளன. இவ்விதமாக, வசனங்களுடைய எண்ணிக்கையின் கடைசி இலக்கத்தை நெருக்கமாகப் பார்க்கப் பார்க்க, அதிகமதிகமான உறுதிப்பாட்டினை நாம் அடைகின்றோம்,

**(49)** விஷயங்கள் 47 மற்றும் 48–ன் சூராக்களுடைய அதே தொகுதியில் கணக்கிடுவதை நாம் தொடர்வோம். சூரா 9 ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட ஒரு சூராவாக இருப்பதனால், விஷயம் 47–ல் காட்டப்பட்டுள்ள சூராக்களின் பட்டியலில் இருந்து இரட்டைப்படை எண்ணிக்கை கொண்ட அனைத்து சூராக்களையும் இப்போது நாம் நீக்கி விடுவோம். இப்போது நாம் ஒற்றைப்படை எண் கொண்ட வசனங்களுடன் ஒற்றைப்படை எண் கொண்ட சூராக்களைக் கொண்டுள்ளோம். முழுக்குர்ஆனிலும் இத்தகைய சூராக்கள் மூன்று மட்டுமே உள்ளன: 9, 11 மற்றும் 17. அவற்றின் வசனங்களின் எண்ணிக்கைகள் 127, 123 மற்றும் 111 ஆகும் (அட்டவணை 32). சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், குறிப்பிடத்தக்க இந்த அற்புத நிகழ்வு தகர்க்கப்பட்டு விட்டிருக்கும்.

**(50)** விஷயம் 49–ல் பட்டியலிடப்பட்டுள்ள மூன்று சூராக்களைக் கொண்டு கணக்கிடுவதை நாம் தொடர்வோம். இக்குர்ஆனில், அவற்றின் எண் (சூரா 9 போல்) ஒற்றைப்படையிலான, அவற்றின் வசனங்களின் எண்ணிக்கை (சூரா 9 போல்)

3 இலக்கங்களைக் கொண்ட, மேலும் அவற்றின் வசனங்களின் எண்ணிக்கையும் கூட, (சூரா 9 போல்) ஒற்றைப்படையிலான சூராக்கள் இவையே ஆகும்.

அட்டவணை 32–ல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த 3 சூராக்களின் வசன எண்ணிக்கைகள் 127, 123 மற்றும் 111 ஆகியனவாகும். இந்தத் தனித்தனி இலக்கங்களைக் கூட்டிட மட்டும் செய்யுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கிடைப்பது 1+2+7+1+2+3+1+1+1=19.

கண்கூடாக, இந்த அற்புத நிகழ்வானது இப்போது நிரூபிக்கப்பட்டு விட்ட உண்மையான, சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள் என்பதைச் சார்ந்ததாக உள்ளது. சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருக்கும் பட்சத்தில், மேலே கூறப்பட்டுள்ள தன்மைகளை இக்குர்ஆனில் கொண்டுள்ள சூராக்கள் மட்டும் கூட்டப்பட வருவது 1 + 2 + 9 + 1 + 2 + 3 + 1 + 1 + 1 = 21 ஆகியிருக்கும். வேறு வார்த்தைகளில், குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் முக்கியமான இந்த அங்கம் மறைந்து விட்டிருக்கும்.

*அட்டவணை 32: அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை ஒற்றைப்படை எண் கொண்டதாக, அத்துடன் 3 இலக்கங்கள் கொண்டதாகவும் உள்ள ஒற்றைப்படை எண் கொண்ட சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 9 | 127 |
| 11 | 123 |
| 17 | 111 |
| | 361 |
| | (19x19) |

**(51)** சூராக்களில், (1) அவற்றின் எண்கள் ஒற்றைப்படையிலமைந்த, (2) அவற்றின் வசனங்களின் எண்ணிக்கைகள் ஒற்றைப்படையிலமைந்த, மேலும் (3) அவ்வசனங்களின் எண்ணிக்கை மூன்று இலக்கங்கள் கொண்டதாகவும் உள்ளவை மூன்று உள்ளன. அவை சூராக்கள் 9, 11 மற்றும் 17 ஆகியனவாகும் (இந்த அம்சத்தின் கண்ணோட்டத்திற்கு விஷயங்கள் 48–லிருந்து 50 வரை பார்க்கவும்). இம்மூன்று சூரா எண்களின் அங்கமாக உள்ள தனித்தனி இலக்கங்களைக் கூட்டி மட்டும் பாருங்கள், உடன் உங்களுக்குக் கிடைப்பது 9+1+1+1+7=19.

**(52)** 129 எனும் எண் 3–ஆல் வகுபடக்கூடியதாக உள்ளது. புரட்டர்கள் கோரியபடி சூரா 9–ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்தால், அப்போது அது (1) ஓர் ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட சூராவாக (2) வசனங்களின் எண்ணிக்கை 3 இலக்கம் கொண்ட, (3) அவ்வசனங்களின் எண்ணிக்கை ஒற்றைப்படையிலான, (4) அத்துடன் அவ்வசனங்களின் எண்ணிக்கை 3–ஆல் வகுபடக் கூடியதாகவும் இருந்திருக்கும். முழுக் குர்ஆனிலும் இந்தத் தன்மைகளைக் கொண்டதாக உள்ள சூராக்கள் இரண்டு மட்டுமே அங்குள்ளன: சூரா 11 ஆனது 123 வசனங்களுடன், மற்றும் சூரா 17 ஆனது 111 வசனங்களுடன். சூரா எண்கள் மற்றும் வசனங்களின் எண்ணிக்கைகள் ஆகிய இரண்டின் இலக்கங்களுடைய கூட்டுத்தொகையாக வருவது 1+1+1+2+3+1+7+1+1+1=19. சூரா 9 ஆனது 127 வசனங்களைக் கொண்டிருந்தால் மட்டுமே இதனை காண இயலும்.

**(53)** சூரா 9, (1) ஒற்றைப்படை எண் இடப்பட்டது, (2) அதன் வசனங்களின் எண்ணிக்கை ஒற்றைப்படையில் உள்ளது, (3) அதன் வசனங்களின் எண்ணிக்கை இலக்கம் "7" எனும் இலக்கத்தை கொண்டு முடிவடைகின்றது, (4) அதன் வசனங்களின் எண்ணிக்கை ஒரு பகா எண்ணாக உள்ளது, (5) அந்த சூரா எண் 3 & 9 ஆல் வகுபடக்கூடியதாக உள்ளது. இந்தத் தன்மைகளைப் பெற்றிருக்கின்ற சூராக்கள் இரண்டு மட்டுமே உள்ளன: சூரா 9 (127 வசனங்கள்), மற்றும் சூரா 45 (37 வசனங்கள்). நீங்கள் காணும் இலக்கங்களைக் கூட்டி மட்டும் பாருங்கள்:

**9 + 1 + 2 + 7 = 19 & 4 + 5 + 3 + 7 = 19 ; இரண்டு சூராக்களுக்கும் மொத்தம் = 19 + 19 = 38.**

**(54)** சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டது என்றே நாம் கருதிக் கொள்வோம். அந்த நிலையில் முழுக்குர்ஆனிலும் உள்ள சூராக்களில் அதன் எண் 9–உடன் துவங்குகின்ற, அத்துடன் அதன் வசனங்களின் எண்ணிக்கை 9–ஐக் கொண்டு முடிவடைகின்றதாகவும் உள்ளவை இரண்டு மட்டுமே நமக்கு இருக்கும்: சூரா 9 (129 வசனங்கள்) மற்றும் சூரா 96 (19 வசனங்கள்). அட்டவணை 33–ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சூரா எண், அதன் வசனங்களின் எண்ணிக்கையுடன் கூட்டப்பட்டு, அதன் வசன எண்களின் கூட்டுத்தொகையுடன் கூட்டப்பட்டால் அனைத்திற்குமுரிய மொத்தக் கூட்டுத் தொகையானது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக அல்லாத, 8828 ஆகும்.

*அட்டவணை 33: அவற்றின் எண் "9" கொண்டு துவங்குவதாக, மேலும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கை "9" கொண்டு முடிவடைகின்ற சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 129? | 8385 | 8523 |
| 96 | 19 | 190 | 305 |
| 105 | 148 | 8575 | 8828 |
| | | (19–ன் பெருக்குத் தொகை அல்ல) | |

இப்போது நாம் இந்தப் போலி வசனங்கள் (128 மற்றும் 129)–ஐ சூரா 9–லிருந்து நீக்கி விடுவோம், மேலும் அதே கணக்கிடுதல்களை மீண்டும் செய்வோம்.

இந்தத் திருத்தத்தின் விளைவானது அட்டவணை 34–ல் காட்டப்பட்டுள்ளது. அனைத்திற்குமுரிய மொத்தக் கூட்டுத் தொகை 8569, 19 X 451 ஆகிவிடுகின்றது.

*அட்டவணை 34: சூரா 9–ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கையைத் திருத்திய பின்னர், அட்டவணை 33–ல் உள்ளது போன்ற அதே தகவல் தொகுப்புக்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 96 | 19 | 190 | 305 |
| 105 | 146 | 8318 | 8569 (19x451) |

**(55)** சூரா 9 ஆனது 129 வசனங்கள் கொண்டிருப்பதாக நாம் கருதிக் கொள்வோம். இந்த இலக்கங்களின் கூட்டுத் தொகையாவது 9+1+2+9=21. அனைத்து சூராக்களிலும் அவற்றின் வசனங்களுடைய எண்ணிக்கையின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 21 வருகின்றவற்றையெல்லாம் நாம் நோக்குவோம். இத்தகைய சூராக்கள் 7 உள்ளன: 9, 25, 27, 37, 68, 94 மற்றும் 97.

சூரா எண்களுடன், ஒவ்வொரு சூராவிலும் உள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி, வசன எண்களின் கூட்டுத் தொகை கூட்டப்பட்டால் கிடைக்கின்ற முழு மொத்தக் கூட்டுத் தொகை , 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக அல்லாத, 34744 ஆகின்றது [அட்டவணை 35].

*அட்டவணை 35: சூரா 9 கொண்டிருப்பது 129 வசனங்கள் என்று கருதிக்கொண்டு, அவற்றின் சூரா எண்கள் மற்றும் வசன எண்களுடைய இலக்கங்கள் கூட்டப்பட்டால் 21 வருகின்ற சூராக்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 129? | 8385 | 8523 |
| 25 | 77 | 3003 | 3105 |
| 27 | 93 | 4371 | 4491 |
| 37 | 182 | 16653 | 16872 |
| 68 | 52 | 1378 | 1498 |
| 94 | 8 | 36 | 138 |
| 97 | 5 | 15 | 117 |
| 357 | 546 | 33841 | 34744 |
| | | [19–ஆல் வகுபடாது] | |

இப்போது சூரா 9–க்குரிய வசனங்களின் சரியான எண்ணிக்கையான, 127–ஐ நாம் பயன்படுத்தி, தொடர்ந்து அட்டவணை 35–ல் உள்ள அதே கணக்கிடுதல்களை மீண்டும் செய்வோம், மொத்தக் கூட்டுத்தொகையானது 34485, அல்லது 19 X 1815 என ஆவதற்கு இது காரணமாகின்றது. பார்க்க அட்டவணை 36.

*அட்டவணை36: சூரா 9–ல் உள்ள வசனங்களைத் திருத்திய பின்னர், அட்டவணை 35–ல் உள்ள கணக்கீடுகள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 25 | 77 | 3003 | 3105 |
| 27 | 93 | 4371 | 4491 |
| 37 | 182 | 16653 | 16872 |
| 68 | 52 | 1378 | 1498 |
| 94 | 8 | 36 | 138 |
| 97 | 5 | 15 | 117 |
| 357 | 544 | 33584 | 34485 (19x1815) |

**(56)** கடைசித் தடவையாக, சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டது என்று நாம் கருதிக்கொள்வோம். இங்கே நாம் [1] ஒற்றைப்படை எண் கொண்ட ஒரு சூராவாக உள்ள, [2] அதன் எண்ணானது 3–ஆல் வகுபடக்கூடியதாக உள்ள, [3] அதன் வசனங்களின் எண்ணிக்கையான, 129–ம் கூட 3–ஆல் வகுபடுவதாக உள்ள, [4] அதன் வசனங்களின் எண்ணிக்கை "9" எனும் இலக்கத்துடன் முடிவடைகின்றதாக உள்ள ஒரு சூராவைக் கொண்டுள்ளோம். இந்தத்தன்மைகளைப் பெற்றிருக்கின்றதாக ஒரு சூரா மட்டுமே உள்ளது: சூரா 15 ஆனது 3–ஆல் வகுபடக்கூடியதாக உள்ளது, அதன் வசனங்களின் எண்ணிக்கை 99 ஆக உள்ளது, அது 3–ஆல் வகுபடக்கூடியதாகவும், "9" எனும் இலக்கத்துடன் முடிவடைகின்றதாகவும் உள்ளது. சூரா 9 ஆனது 129 வசனங்களைக் கொண்டிருந்து, இந்த இரண்டு சூராக்களுக்குமுரிய சூரா மற்றும் வசன எண்ணிக்கைகளைக் கூட்டினால், கீழ்க்கண்ட முடிவுகளை நாம் அடைந்திடுவோம்: 9+129+15+99= 252 – 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல.

போலி எண் 129–ஐ நாம் வீசி எறிந்து விட்டால், நாம் இக்குர்ஆனில் உள்ள சூராக்களில், அதன் எண் ஒற்றைப்படையில் ஆனதாக, மேலும் அதன் வசனங்களின் எண்ணிக்கை 3–ஆல் வகுபடக் கூடியதாகவும் 9 எனும் இலக்கத்துடன் முடிவடைகின்றதுமான ஒரே சூராவை நாம் கொண்டுள்ளோம் – சூரா15. இப்போது நமக்குக் கீழ்க்கண்ட முடிவு கிடைக்கின்றது:

**15+99=114=19 x 6.**

**(57)** இப்போது சிறிது நேரமாக, எண்களுடன் நாம் புழங்கி வந்துள்ளோம். இப்போது நாம் இப்போலித் திணிப்புக்கள்9:128–129–ல் இடம் பெறுகின்ற குறிப்பிட்ட வார்த்தைகளையும் எழுத்துக்களையும் நோக்குவோம். 9:127–ன் கடைசி வாசகம் ***"லா யஃப்கஹுூன்"*** என நம்ப மறுப்பவர்களை வர்ணிக்கின்றது (அவர்கள் புரிந்து கொள்வதில்லை). இவ்விதமாக, சூரா 9–ல் உள்ள கடைசி எழுத்து ''**ன**'' (னூன்) ஆகும்.

பொய்ப்பிப்பவர்களின் வாதப்படி, கடைசி வசனம் 129 ஆகும், மேலும் கடைசி எழுத்து "ம" (மீம்) ஆகும், ஏனெனில் கடைசி போலி வார்த்தையானது *"அஸீம்"* ஆகும். இப்போது குர்ஆனின் துவக்கத்தில் இருந்து சூரா 9 வரை ஒவ்வொரு சூராவின் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் நாம் நோக்கி, அவற்றின் எழுத்தெண் மதிப்பை (எண்கள் சார்ந்த) கணக்கிடுவோம். சூரா 9–ன் உண்மையான கடைசி எழுத்து "ம" ஆக அல்ல ''**ன**'' ஆகத்தான் இருக்க வேண்டும் என்பதை அட்டவணை 37 காட்டுகின்றது.

*அட்டவணை 37 : குர்ஆனின் துவக்கத்தில் இருந்து சூரா 9 வரை ஒவ்வொரு சூராவின் முதல் மற்றும் கடைசி எழுத்துக்களுடைய எழுத்தெண் மதிப்பு.*

| சூரா எண் | முதல் எழுத்து | கடைசி எழுத்து | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | ப = 2 | ன = 50 | 52 |
| 2 | அ = 1 | ன = 50 | 51 |
| 3 | அ = 1 | ன = 50 | 51 |
| 4 | ய = 10 | ம = 40 | 50 |
| 5 | ய = 10 | ர = 200 | 210 |
| 6 | அ = 1 | ம = 40 | 41 |
| 7 | அ = 1 | ன = 50 | 51 |
| 8 | ய = 10 | ம = 40 | 50 |
| 9 | ப = 2 | ன = 50 | 52 |
| | ................. | .................. | ........ |
| | 38 (19x2) | 570 (19x30) | 608 (19x32) |

**(58)** மஸ்ஜித் தூஸானைச் சேர்ந்த சகோதரி இஹ்ஸான் ரமதான் சூரா 9–ன் கடைசி எழுத்தான "**ன**" (னூன்) எனும் எழுத்துடன் முடிவடைகின்ற, குர்ஆனின் அனைத்து சூராக்களையும் எண்ணினார்.

சூரா 9–ஐப் போல அதே (**ன**) எழுத்துடன், 43 சூராக்கள்–1, 2, 3, 7, 9, 10, 11, 12, 15, 16, 21, 23, 26, 27, 28, 29, 30, 32, 36, 37, 38, 39, 40, 43, 44, 46, 49, 51, 58, 61, 62, 63, 66, 67, 68, 70, 77, 81, 83, 84, 95, 107 மற்றும் 109 முடிவடைகின்றன என்று அவர் கண்டுகொண்டார். ''**ன**'' எனும் எழுத்துடன் முடிவடைகின்ற சூரா எண்கள் + சூராக்களின் எண்ணிக்கையைக் கூட்டி மட்டும் பாருங்கள், இப்போது உங்களுக்குக் கிடைப்பது:

**1919**

இவ்விதமாக, சூரா 9–ல் உள்ள கடைசி எழுத்து "ம" அல்ல, "**ன**" ஆகத்தான் உள்ளது என மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்படுகின்றது.

**(59)** இப்போது நாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வாசகமான **"லா இலாஹ இல்லா ஹுூவ்"** (அவரை தவிர தெய்வம் எதுவுமில்லை), என்பதை நோக்குவோம். போலித் திணிப்பான 9:129–ல் இந்தச் சொற்றொடர் இடம் பெறுகின்றது.

மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த இந்தச் சொற்றொடர் 19 சூராக்களில் 29 முறைகள் இடம்பெறுகின்றன (அட்டவணை 38). இந்த 19 சூராக்களின் சூரா எண்களையும், **"லா இலாஹ இல்லா ஹுூவ்"** எனும் சொற்றொடர் இடம் பெறுகின்ற வசன எண்களையும் கூட்டி, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாசகத்தினுடைய நிகழ்வுகளின் எண்ணிக்கையையும் கூட்டினால், மொத்தக் கூட்டுத் தொகை 2128, அல்லது 19x112 என வருகின்றது. பிரமிப்பூட்டுகின்ற இந்த முடிவு 9:128–129 குர்ஆனில் உள்ளது அல்ல எனும் உண்மையைச் சார்ந்ததாக உள்ளது.

கண்கூடாக, 9:129 சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தால், இஸ்லாமின் முதல் தூணான, **"லா இலாஹ இல்லா ஹுூவ்"** எனும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இவ்வாசகம் கணிதரீதியிலான இக்குறியீட்டுடன் ஒத்துப் போயிருக்காது.

**(60)** **"லா இலாஹ இல்லா ஹுூவ்"**–ன் முதல் நிகழ்வானது 2:163–ல் உள்ளது, மேலும் கடைசி நிகழ்வானது 73:9–ல் உள்ளது. இந்த முதல் நிகழ்வில் இருந்து கடைசி நிகழ்வு வரையுள்ள சூரா எண்களுடன், வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி, அத்துடன் வசன எண்களின் கூட்டுத்தொகையையும் நாம் கூட்டினால் அம்மொத்த கூட்டுத்தொகையானது 316502, அல்லது 19x16658 என வருகின்றது.

*அட்டவணை 38: முக்கியத்துவமிக்க சொற்றொடரான: **"லா இலாஹ இல்லா ஹுவ்"** [அவருடன் வேறு தெய்வம் எதுவும் இல்லை] இடம்பெறுகின்ற அனைத்து வசனங்களின் பட்டியல், 9:129–ஐ நீக்கிய பின்னர்*

| எண் | சூரா எண் | முக்கியமான சொற்றொடர் கொண்ட வசனங்கள் | சொற்றொடர் இடம்பெறும் முறைகள் |
|---|---|---|---|
| 1. | 2 | 163,255 | 2 |
| 2. | 3 | 2,6,18 (2x) | 4 |
| 3. | 4 | 87 | 1 |
| 4. | 6 | 102, 106 | 2 |
| 5. | 7 | 158 | 1 |
| 6. | 9 | 31 | 1 |
| 7. | 11 | 14 | 1 |
| 8. | 13 | 30 | 1 |
| 9. | 20 | 8, 98 | 2 |
| 10. | 23 | 116 | 1 |
| 11. | 27 | 26 | 1 |
| 12. | 28 | 70, 88 | 2 |
| 13. | 35 | 3 | 1 |
| 14. | 39 | 6 | 1 |
| 15. | 40 | 3, 62, 65 | 3 |
| 16. | 44 | 8 | 1 |
| 17. | 59 | 22, 23 | 2 |
| 18. | 64 | 13 | 1 |
| 19. | 73 | 9 | 1 |
| | 507 | 1592 | 29 |

507+1592+29=2128=19x112

*அட்டவணை 39: **"லா இலாஹ இல்லா ஹுவ்"** வின் முதல் இடம்பெறுதலில் இருந்து கடைசி இடம்பெறுதல் வரையுள்ள அனைத்து சூராக்கள் மற்றும் வசனங்கள்.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2 | 123 (286-163) | 27675 | 27800 |
| 3 | 200 | 20100 | 20303 |
| - | - | - | - |
| 9 | 127 | 8128 | 8264 |
| - | - | - | - |
| 72 | 28 | 406 | 506 |
| 73 | 9 | 45 | 127 |
| 2700 | 5312 | 308490 | 316502 (19x16658) |

அட்டவணை 39 விரிவான தகவல் தொகுப்புக்களை முன் வைக்கின்றது. இயல்பாக, போலி வசனம் 129–ன் **"லா இலாஹ இல்லா ஹுவ்"** சேர்த்துக் கொள்ளப்பட்டிருந் தால், இந்த அற்புத நிகழ்வு மறைந்து விட்டிருக்கும்.

**(61)** சூரா 9–ல் இடம்பெறாத *பஸ்மலஹ்* முதல் சூரா 27–ன் உபரியான *பஸ்மலஹ்* வரை **"லா இலாஹ இல்லா ஹுவ்"** எனும் சொற் றொடர் 9:31, 11:14, 13:30, 20:8, 20:98, 23:116 மற்றும் 27:26–ல் என 7 முறைகள் இடம் பெறுகின்றன. இந்த 7 வசனங்களின் எண்களை நாம் கூட்டுவதன் மூலம், நாம் பெறுவது 323, அல்லது 19 X 17. விரிவான தகவல் தொகுப்புக்கள் அட்டவணை 40–ல் காட்டப்பட்டுள்ளன.

*அட்டவணை 40: இடம்பெறத் தவறுகின்ற பஸ்மலஹ் முதல் உபரியான பஸ்மலஹ் வரை **"லா இலாஹ இல்லா ஹுவ்"** எனும் சொற்றொடரின் இடம் பெறுதல்கள்.*

| சூரா எண் | சொற்றொடரைக் கொண்டிருக்கும் வசன எண்கள் |
|---|---|
| 9 | 31 |
| 11 | 14 |
| 13 | 30 |
| 20 | 8 |
| 20 | 98 |
| 23 | 116 |
| 27 | 26 |
| | 323 |
| | (19x17) |

***9:129 இக்குர்ஆனின் அங்கமாக இருந்திருந்தால், அட்டவணை 40ன் மொத்தத் தொகையானது இவ்வாறு இருந்திருக்கும்: 323+129=452. 19–ன் ஒரு பெருக்குத் தொகை அல்ல. அது சத்தியமாகவே இருந்த போதிலும், நயவஞ்சகர்கள் கூறுவதைக் கடவுள் நிராகரித்துவிடுகின்றார். [63:1].***

# உச்சபட்சக் குர்ஆனிய அற்புதம்

**(62)** உச்சபட்சக் குர்ஆனிய அற்புதம் என்று நான் கருதுவதை சகோதரர் அப்துல்லாஹ் ஆரிக் கண்டுபிடித்துள்ளார், அதிசயமான இந்த அற்புத நிகழ்வு போலித் திணிப்புக்களான, 9:128–129–ஐ அம்பலப்படுத்தி, ஒதுக்கிவிடுகின்ற அதே சமயம், இக்குர்ஆனில் உள்ள ஒவ்வொரு தனி வசனத்தின் – ஒவ்வொரு சூராவிலும் உள்ள வசனங்களின் எண்ணிக்கையின், மற்றும் இந்தக் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு தனி வசனத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்களின் – நம்பகத்தன்மையை மறுக்க இயலாதவாறு நிரூபிக்கின்றது. மகத்தான இந்த அற்புதத்தைக் காண பக்கம் 398–ஐ பார்க்கவும். இக்குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணையும் துவக்கத்தில் இருந்து முடிவு வரை வரிசையாக அமைத்து, அத்துடன் ஒவ்வொரு சூராவின் வசன எண்களுக்கு முன்னால் ஒவ்வொரு சூராவின் வசனங்களுடைய எண்ணிக்கையையும் அமைத்தால் இறுதியான அந்த எண் 12692 இலக்கங்கள் (19 x 668) கொண்டுள்ளது, அத்துடன் அந்த எண்ணும் கூட 19–ன் ஒரு பெருக்குத்தொகையாகவே உள்ளது. 127–க்குப் பதிலாக, சூரா 9க்குரிய வசனங்களின் தவறான எண்ணிக்கையான 129–பயன்படுத்தப்பட்டால், இலக்கங்களின் அந்த எண்ணிக்கையோ, அன்றி அந்த எண்ணோ கூட 19–ஆல் வகுபடக் கூடியதாக இருந்திருக்காது.

**(63)** இந்தப் பின் இணைப்பின் மிக முக்கியமான விஷயமாக சூரா 9–ம் மற்றும் அதன் வசனங்களின் உண்மையான எண்ணிக்கையும் என இருப்பதால், நாம் இந்த சூராவின் எண்ணை எழுதி, 9, தொடர்ந்து அதன் வசனங்களின் சரியான எண்ணிக்கையையும் எழுதி, 127, அதனை 1 முதல் 127 வரையிலான அனைத்து வசனங்களின் எண்களால் தொடர்ந்தால், விளைகின்ற அந்நீண்டஎண் 19–ன் ஒரு பெருக்குத்தொகையாக உள்ளது. கூறுவதற்கு அவசியமின்றி, வசனங்களின் தவறான எண்ணிக்கை, அதாவது, 127–க்குப் பதிலாக 129, பயன்படுத்தப்பட்டால், குறிப்பிடத்தக்க இந்த அற்புதம் மறைந்து விட்டிருக்கும்:

**9 127 1 2 3 4 5 .......... 122 123 124 125 126 127.**

சூரா 9–ன் மொத்த வசனங்களின் எண்ணிக்கையானது 1–லிருந்து 127 வரை சூராவில் உள்ள ஒவ்வொரு வசன எண்களால் தொடரப்படுகின்றது. விளைகின்ற அந்நீண்ட எண் 19–ன் ஒரு பெருக்குத் தொகையாகும்.

**(64)** சூரா 9–ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கையான, 127, ஓர் ஒற்றைப்படை எண்ணாகும். புரட்டர்கள் இரண்டு போலி வசனங்களைச் சேர்த்தனர், எனவே இது அவ்வசனங்களின் எண்ணிக்கையை, அதுவும் கூட ஓர் ஒற்றைப்படை எண்ணாகவே உள்ள 129 ஆக ஆக்கியது. சகோதரர் ஆரிக் மேலே கூறப்பட்டுள்ள விஷயம் 62–க்காக அவர் வடிவமைத்த அதே கணிணித் திட்டத்தை இக்குர்ஆனில் உள்ள ஒற்றைப்படை எண் இடப்பட்ட வசனங்கள் அனைத்தையும் ருசுப்படுத்திக் கொள்ளப் பயன் படுத்தினார். இவ்விதமாக, ஒவ்வொரு சூராவிலும் உள்ள வசனங்களின் எண்ணிக்கை எழுதப்பட்டு, அந்த சூராவில் உள்ள ஒற்றைப்படையிலான வசனங்கள் ஒவ்வொன்றினுடைய கடைசி இலக்கத்தால் மட்டும் தொடரப்பட்டது. சூரா 1 ஆனது 71357 எனும் எண் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. சூரா 2 ஆனது 286 13579......5, மேலும் இவ்விதமாகக் கடைசி சூராவின் இறுதி வரை செய்யுங்கள். அதன் விளைவாவது 3371 இலக்கங்கள் கொண்ட, 19–ஆல் வகுபடக் கூடியதாக உள்ள ஒரு நீண்ட எண்ணாகும். கண்கூடாக, சூரா 9 ஆனது 12713579.........7 எனும் எண் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது :

**7 1 3 5 7 286 1 3 5 ... 3 5 ...... 5 1 3 5 6 1 3 5.**

ஒவ்வொரு சூராவிலும் உள்ள வசனங்களின் எண்ணிக்கையானது ஒற்றைப்படை எண்ணைக் கொண்ட ஒவ்வொரு வசனத்தினுடைய கடைசியான இலக்கத்தினால் தொடரப்படுகின்றது. விளைகின்ற நீண்ட எண், 3371 இலக்கங்கள், 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது.

**(65)** சூரா 9 துவக்க எழுத்துக்களற்ற ஒரு சூராவாக இருப்பதனால், சகோதரர் ஆரிக் அதே கணிணித் திட்டத்தை 85 துவக்க எழுத்துக்களற்ற சூராக்கள் அனைத்திற்கும் பிரயோகித்தார். 85 சூராக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஒவ்வொரு வசனத்தின் எண்ணும், அந்த சூராவில் உள்ள வசனங்களின் எண்ணிக்கை இன்றி, எழுதப்பட்டது. இவ்விதமாக, சூரா 1 ஆனது 1234567 எனும் எண்ணைக் கொண்டு எடுத்துக் காட்டப்பட்டது, 71234567–ஆல் அல்ல. துவக்க எழுத்துக்களற்ற அனைத்து சூராக்களிலும் இது செய்யப்பட்டது. இதன் இறுதி விளைவாவது 6635 இலக்கங்கள் கொண்ட ஓர் எண்ணாகும், அத்துடன் அது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாகவும் உள்ளது, சூரா 9க்குரிய வசனங்களின் தவறான எண்ணிக்கையை, அதாவது 127 க்குப் பதிலாக 129–ஐ நாம் பயன்படுத்தியிருந்தால் பிரமிப்பூட்டுகின்ற இந்த அற்புத நிகழ்வு தகர்ந்து விட்டிருக்கும்.

# கடவுளின் உடன்படிக்கைத் தூதர் இக்குர்ஆனைத் தூய்மைப்படுத்துவதற்கென்று விதிக்கப்பட்டுள்ளார்.

**(66)** இறுதியாக, குர்ஆனை இயற்றியவரான எல்லாம் வல்லவருடைய முன்னறிவின் ஆழ்ந்ததோர் செயல்முறை விளக்கமாக " சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்கள்தான் என்பதை நிரூபிப்பதற்கென விதிக்கப்பட்டிருந்த நபர் கடவுளின் உடன்படிக்கைத் தூதரான, ரஷாத் கலீஃபாவேயாவார்" என்பது கணிதரீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ளது (பார்க்க பின் இணைப்பு 2). இங்கே முன்வைக்கப்படுகின்ற விஷயமானது ஏராளமான அந்த சான்றுகளில் மற்றொன்றே ஆகும்; இந்தப் பின் இணைப்புடன் உள்ள அதன் தொடர்புக்காக அது தேர்ந்தெடுக்கப்பட்டது.

இக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளவாறு (40:29,38), "ரஷாத்" எனும் வார்த்தையின் எழுத்தெண் மதிப்பாவது 505 ஆகும் (ர=200, ஷ=300, அ=1 மற்றும் த=4). இக்குர்ஆனின் எழுதப்பட்டுள்ளவாறு (38:26) "கலீஃபா" எனும் வார்த்தையின் எழுத்தெண் மதிப்பாவது 725 (க்ஹ=600, ல=30, யீ=10, ஃப=80 மற்றும் ஹ=5) ஆகும். "ரஷாத்"–ன் மதிப்பை எழுதி, "கலீஃபா" வின் மதிப்பால் தொடரப்பட்டு, சூரா எண்ணான 9–ஆல் தொடரப்பட்டு, இந்த சூராவில் உள்ள வசனங்களின் சரியான எண்ணிக்கையால் தொடரப்படுவதன் மூலம், விளைவது 5057259127. இந்த எண் 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது; அது 19 x 266171533 –க்குச் சமமாகின்றது.

**(67)** கடவுளின் உடன்படிக்கைத் தூதர் முன்னறிவிக்கப் படுகின்ற 3:81–ல் இருந்து சூரா 9–ன் முடிவான 9:127 வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கை 988(19 x 52) ஆக உள்ளது. அட்டவணை 41.

**(68)** 3:81 –ல் இருந்து 9:127 வரையுள்ள வசன எண்களின் கூட்டுத்தொகையும் கூட 19–ன் ஒரு பெருக்குத்தொகையாகவே உள்ளது (அட்டவணை 41).

**(69)** வசனம் 3:78–ல், கடவுளின் உடன்படிக்கைத் தூதரைப் பிரகடனிப்பதற்கு 3 வசனங்கள் சற்றே முன்னதாக, "கடவுள்" எனும் வார்த்தை 361 (19 x 19)–ம் முறையாக இடம் பெறுகின்றது. இந்த வசனம் (3:78) புரட்டர்கள் சிலர் "குர்ஆனுக்குள் பொய்மையைச் சேர்த்துக் கொண்டு, பின்னர் அதனைக் குர்ஆனின் ஓர் அங்கமெனக் கோருவார்கள்; அவர்கள் அறிந்து கொண்டே, கடவுள் பால் பொய்களைச் சாட்டுகின்றனர்," என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது.

**(70)** வசனம் 3:78–ல் இருந்து, பொய்ப்பிப்பவர்களை வெளிப்படுத்துகின்ற 9:127 வரை "கடவுள்" எனும் வார்த்தை 912 முறைகள் (19 x 48) இடம் பெறுகின்றது.

**(71)** 3:78–லும் மற்றும் போலி வசனங்களான 9:128–129–லும் எழுத்துக்களின் எண்ணிக்கையுடன், வார்த்தை களின் எண்ணிக்கையைக் கூட்டினால், அதே மொத்த எண்ணிக் கையைத் தருகின்றது, 143. வசனம் 3:78 கொண்டிருப்பது 27 வார்த்தைகள் மற்றும் 116 எழுத்துக்கள் & 9:128–129 கொண்டுள்ளது 115 எழுத்துக்கள் மற்றும் 28 வார்த்தைகள்.

وَإِنَّ مِنْهُمْ لَفَرِيقًا يَلْوُونَ أَلْسِنَتَهُم
بِالْكِتَابِ لِتَحْسَبُوهُ مِنَ الْكِتَابِ وَمَا هُوَ مِنَ الْكِتَابِ وَيَقُولُونَ هُوَ مِنْ
عِندِ اللَّهِ وَمَا هُوَ مِنْ عِندِ اللَّهِ وَيَقُولُونَ عَلَى اللَّهِ الْكَذِبَ وَهُمْ يَعْلَمُونَ ٧٨

*அட்டவணை 41: வசனம் 3:81 முதல் சூரா 9–ன் இறுதி வரை உள்ள வசனங்களின் எண்ணிக்கை.*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|
| 3 | 119 | 16860 |
| 4 | 176 | 15576 |
| 5 | 120 | 7260 |
| 6 | 165 | 13695 |
| 7 | 206 | 21321 |
| 8 | 75 | 2850 |
| 9 | 127 | 8128 |
| | 988 | 85690 |
| | (19x52) | (19x4510) |

*அட்டவணை 42: வசனம் 3:78 முதல் சூரா 9–ன் இறுதி வரை "கடவுள்" எனும் வார்த்தையின் இடம்பெறுதல்கள்*

| சூரா எண் | "கடவுள்" இடம்பெறும் முறைகள் |
|---|---|
| 3 | 132 |
| 4 | 229 |
| 5 | 147 |
| 6 | 87 |
| 7 | 61 |
| 8 | 88 |
| 9 | 168 |
| | 912 |
| | (19x48) |

# நாம் என்ன சொல்ல இயலும்?

எல்லாம் வல்லவரால் அவருடைய தூதுச்செய்தியைப் பாதுகாப்பதற்கும் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கும் வழங்கப்பட்ட மூழ்கடிக்கின்ற பௌதிக ஆதாரங்கள் இவற்றில் எந்த ஐயத்தையும் விட்டு வைக்கவில்லை, அவை : (1) எந்த விதமான சிதைவும் குர்ஆனுக்குள் நுழைய இயலாது, (2) வசனங்கள் 9:128–129 குர்ஆனைச் சேர்ந்தவை அல்ல, மேலும் (3) இக்குர்ஆனில் உள்ள ஒவ்வொரு அங்கமும் மானிடத் திறன்களுக்கு மிகவும் அப்பாற்பட்டதாகக் கணித ரீதியில் கட்டமைக்கப்பட்டுள்ளது– சூராக்களின் எண்ணிக்கை, வசனங்களின் எண்ணிக்கை, சூராக்களுக்கும் வசனங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்கள், அடிப்படையான வாசகங்களுடைய நிகழ்வுகளின் எண்ணிக்கை, வார்த்தைகளின் எண்ணிக்கை, எழுத்துக்களின் எண்ணிக்கை, மற்றும் குறிப்பிட்ட வார்த்தைகளின் தனித்துவம் வாய்ந்த அத்துடன் அவ்வப்போது இடம்பெறுகின்ற அசாதாரணமான எழுத்துக் கோவை ஆகியன.

இந்தப் பின் இணைப்பு அதற்கென்றே உரிய ஆழ்ந்ததோர் அற்புதத்தை ஆவணப்படுத்துகின்றது. விரிந்ததாகவும் முற்றிலும் மூழ்கடிக்கின்றதாகவும் அது இருந்தபோதிலும், பின் இணைப்பு ஒன்றில் விவரிக்கப்பட்டுள்ள இக்குர்ஆனின் முழுமையான கணித அற்புதத்தை அது மிஞ்சி விடவோ அல்லது நிகராகிவிடவோ இல்லை. கீழ்கண்ட காரணங் களுக்காக இக்குர்ஆனை இயற்றியவரான எல்லாம் வல்லவர் சூரா 9–க்குள் இரண்டு வசனங்களின் அந்த இறைநிந்தனையான சேர்க்கையினை வேண்டுமென்றே அனுமதித்தார் எனும் உண்மையை இது உறுதிப்படுத்த மட்டுமே செய்கின்றது:

(1) குர்ஆனுடைய கணிதத் தொகுப்பின் அத்தியாவசியப் பணி ஒன்றைச் செயல்படுத்திக் காட்டுதல்
(2) குர்ஆனில் தலையீடு செய்வதன் சாத்தியமற்ற தன்மையை நிரூபித்தல்
(3) நம்பிக்கையாளர்களைச் சிறப்பித்துக் காட்டுவதுடன் நயவஞ்சகர்களை அம்பலப்படுத்துவதென்ற கடவுளின் வாக்குறுதியைப் பூர்த்தியாக்குதல்.

# 1400 வருடங்களாகக் கடவுள் ஏன் அதனை அனுமதித்தார்??

நபி முஹம்மதின் மரணத்திற்குப் பின்னர் குறுகிய காலத்திற்குள்ளாகவே இஸ்லாமின் ஒட்டு மொத்த சீர்கேட்டின் காரணமாக, 47:38–ல் உள்ள தன்னுடைய உறுதிமொழியைக் கடவுள் வெளிப்படையாக நிறைவேற்றி விட்டார். “முஹம்மத்” என்று தலைப்பிடப்பட்ட சூரா 47–ல், ஒரு தெய்வீகக் கட்டளை வெளியிடப்படுகின்றது, வசனம் 38 (19X 2) “அரேபியர்கள் இக்குர்ஆனை உயர்த்திப்பிடிக்கத் தவறினால், கடவுள் தன்னுடைய அருளில் இருந்து அவர்களை அகற்றி விடுவார், அத்துடன் அவர்களுடைய இடத்தில் மற்ற மக்களை மாற்றியமைத்து விடுவார்,” என்று நிபந்தனை விதிக்கின்றது.

நபியின் மரணத்திற்குப் பின்னர் சில வருடங்களில் அரேபியர்கள் இக்குர்ஆனைச் சிதைத்து, அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளில் நபியின் குடும்பத்தை நிர்மூலமாக்கிய போது, 47:38–ல் உள்ள கடவுளின் உறுதிமொழிக்கு அவர்கள் உள்ளானார்கள், அத்துடன் அதற்கு மேலும் குர்ஆனை, அந்த உண்மையான குர்ஆனைச் சொந்தம் கொண்டிருக்க அவர்கள் தகுதி பெற்றிருக்கவில்லை.அரேபியர்கள் இக்குர்ஆனை ஒட்டு மொத்தமாகக் கைவிட்டு விட்டனர் என்பதால் இந்த ஆதாரமானது மறுக்க இயலாததாகி விடுகின்றது.

உதாரணத்திற்கு, இன்றைய (1989) பெயர்தாங்கி முஸ்லிம் உலகத்தில் கீழ்க்கண்ட மிக முக்கியமான கட்டளையை ஆதரிக்கின்ற ஒரே ஒரு பள்ளிவாசல் கூட இல்லை: “பள்ளிவாசல்கள் கடவுளுக்குரியவை; கடவுளுடன் வேறு எவரொருவரிடமும் நீங்கள் முறையிட வேண்டாம்” (72:18).

தொழுகைக்குரிய அழைப்பு (அதான்) மற்றும் தொழுகையுமே கூட இப்போது கடவுளுக்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்டவையாக இல்லை; கடவுளின் பெயருடன் முஹம்மதின் பெயரும் எப்பொழுதும் முறையிடப்படுகின்றது.

“இஸ்லாமின் முதல் தூண்”ஆனது இக்குர்ஆனில் தெளிவாக கூறப்படுகின்றது, 3:18 & 47:19, மேலும் அதன் வார்த்தைகள் இவ்வாறு இருக்க வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள்ளது: **லா இலாஹ இல்லல்லாஹ்** (கடவுளுடன் வேறு இறைவன் எவரும் இல்லை). ஆனால் இந்த முஸ்லிம்களுக்கு, எவ்வளவு இயலுமோ அவ்வளவு சீக்கிரம், ஹிஜ்ரி முதல் நூற்றாண்டிலேயே, அவருடன் சேர்த்து முஹம்மதும் முறையிடப்படாவிட்டால், கடவுள் அவர்களுக்குத் தேவையில்லை என்றானது. ஏதேனும் பள்ளிவாசலுக்குள் சென்று **“லா இலாஹ இல்லல்லாஹ்”** எனப் பிரகடனிப்பதன் மூலம் இன்று இது எளிதில் செயல்முறைப்படுத்திக் காட்டப்படக்கூடியதாக உள்ளது; உண்மையில் இது இன்றைய முஸ்லிம்களைக் கடுங்கோபத்திற்குள்ளாக்கி விடும். இத்தகைய நடத்தை இக்குர்ஆனில் பதியப்பட்டுள்ளது, 39:45. இன்னும் கூறுவதென்றால், பாரம்பர்ய முஸ்லிம்கள் குர்ஆனிலுள்ள தெய்வீகமாகக் கட்டளையிடப்பட்ட ஷஹாதா ஆன: *“அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்”*, –வைக் கூறுவதில் இருந்து **கடவுளால் தடுக்கப்பட்டு விட்டனர்**

என்று என்னுடைய சொந்த ஆய்வு இப்போது என்னை சமாதானப்படுத்தி விட்டது.(முஹம்மதின் பெயரை முறையிடாமல்) இந்த *ஷஹாதா* வை அவர்களால் ஒரு போதும் கூற இயலாது. நீங்களே அவர்களைச் சோதித்துப் பாருங்கள். சிதையுண்ட இஸ்லாமின் முதல் தூணான **லா இலாஹ இல்லல்லாஹ், முஹம்மத் ரஸூல் அல்லாஹ்** என்பது முஹம்மத் மூலம் நம்மிடம் வந்த கடவுளின் கட்டளைகளுடன் ஒத்துபோகவில்லை (பார்க்க பின் இணைப்பு 13).

குறிப்பிட்டதோர் எண்ணிக்கையிலான ஏனைய கட்டளைகளும் கூட இந்த முஹம்மதிய *ஷஹாதா* வினால் மீறப்படுகின்றன. உதாரணத்திற்கு, கடவுளின் தூதர்களுக்கிடையில் பாகுபாடு எதுவும் செய்வதில் இருந்து இக்குர்ஆன் நம்மைத் திரும்பத் திரும்பத் தடுக்கின்றது(2:136, 285; 3:84). சிதைக்கப்பட்ட இந்த *ஷஹாதா* முஹம்மதுக்கு, அவருடைய விருப்பத்திற்கு எதிராக அதிகமான தனிச்சிறப்பினை அளிக்கின்றது. அது "முழுமையானது, மிகச்சரியானது, மேலும் முற்றிலும் விவரிக்கப்பட்டதாக உள்ளது" என்ற குர்ஆனின் அடுத்தடுத்த வலியுறுத்தல்கள் இருந்த போதிலும் (6:19, 38, 114), இந்த "முஸ்லிம்கள்" தங்களுடைய படைப்பாளரை நம்பமறுத்து விட்டனர்; அவர்கள் நகைப்பிற்கிடமான மற்றும் அபத்தமான *ஹதீஸ்* மற்றும் *சுன்னா* போன்ற மூலாதாரங்களை ஆதரிக்கின்றனர். கடவுள் மற்றும் அவருடைய தூதருக்கெதிரான ஒருமித்த இந்தக் கலகம், மற்றும் அப்பட்டமான போலித்தெய்வ வழிபாட்டிற்கு – நபிமார்கள் மற்றும் மகான்களை இணைவழிபாடு செய்வதற்கு – ஒட்டுமொத்தமாகத் திரும்பி விட்டது, 47:38–ல் உள்ள கடவுளின் உறுதிமொழி நிறைவேற்றப் படுதலை அவசியமாக்கியது.

இங்கும் மற்றும் பின் இணைப்புக்கள் 1,2 மற்றும் 26–லும் முன்வைக்கப்பட்டுள்ள மறுக்க இயலாத தெய்வீக ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, எவரும் கீழ்க்கண்ட வசனங்களை உண்மையாகவே மெச்சிட இயலும்:

**நிச்சயமாக, நாம் இந்தத் தூதுச்செய்தியை வெளிப்படுத்தி உள்ளோம்; மேலும் நிச்சயமாக, நாம் அதனைப் பாதுகாப்போம். (15:9)**

**கூறுவீராக, "மானிடர்கள் அனைவரும், அத்துடன் ஜின்கள் அனைவரும், இதனைப் போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டு வருவதற்காக, ஒன்று சேர்ந்து கொண்டாலும், அவர்கள் நிச்சயமாகத் தோற்று விடுவார்கள், அவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு எவ்வளவு அதிகம் உதவி அளித்துக் கொள்கின்றனர் என்பது பொருட்டல்ல. (17:88)**

**ஆழ்ந்ததோர் வேதமாக அது இருந்த போதிலும், இந்தத் தூதுச் செய்தி அவர்களிடம் வந்த போது நம்பமறுப்பவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். சேர்த்தல் அல்லது நீக்குதல் மூலமாக, பொய்மை எதுவும் அதற்குள் நுழைய இயலாது. ஏனெனில் இது மிக்க புகழுக்குத் தகுதியானவரிடம் இருந்துள்ள ஒரு வெளிப்பாடாகும். (41:41–42)**

**இந்தக் குர்ஆனை ஒரு மலைக்கு நாம் வெளிப்படுத்தியிருந்தால், கடவுள் மீதுள்ள பக்தியின் காரணத்தால் அது நடுநடுங்கி, நொறுங்கி விடுவதை நீர் கண்டிருப்பீர். (59:21)**

**மஹ்மூத் அலீ அபீப், கட்டுட் அடிஸோமா, அப்துல்லாஹ் ஆரிக், இஹ்ஸான் ரமதான், லிஸா ஸ்ப்ரே மற்றும் எதிப் யுக்ஸலின் மதிப்புமிக்க பங்களிப்புக்களை நன்றியுடன் நான் ஏற்றுக் கொள்கின்றேன். இந்தப் பின் இணைப்பினில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வியப்பூட்டுகின்ற கணிதரீதியான உண்மைகளில் சில மஸ்ஜித் தூஸானைச் சேர்ந்த கடின உழைப்பாளிகளான இந்த ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.**

பின் இணைப்பு 25

# இவ்வுலகத்தின் முடிவு

> **(கடவுள்தான்) எதிர்காலத்தை அறிந்தவர்;**
> **அத்தகைய அறிவினைத் திரைவிலக்க எவரொருவரையும் அவர் அனுமதிப்பதில்லை.**
> **அவர் தேர்ந்தெடுக்கின்ற தூதர்களின் வாயிலாக மட்டும் எதிர்காலம் மற்றும்**
> **கடந்த கால நிகழ்வுகளை அவர் வெளிப்படுத்துகின்றார்.** **( 72:27 )**

உலகத்தின் முடிவினைத் திரை விலக்குதலானது கடவுளின் உடன்படிக்கைத் தூதர் என்ற முறையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளில் உள்ளதாகும் (பக்கம் 415). 18:7–8 மற்றும் 69:13–15–ல் இருந்து இந்த உலகம் ஒரு முடிவுக்கு வரும் என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம். புதியதொரு பூமியும் புதிய வானங்களும் தற்போதைய வானங்களையும் பூமியையும் மாற்றியமைக்கும்(14:48).

## நெருங்கி வருகின்ற உலக முடிவின் அறிகுறிகள்

பற்பல அறிகுறிகளை இக்குர்ஆன் வழங்குகின்றது, மேலும் உலகத்தின் முடிவினைத் திரை விலக்குதற்குரிய உபாயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றது(47:18) இக்குர்ஆனில் கொடுக்கப்பட்டுள்ள அறிகுறிகளில் உள்ளவை:

1. **நிலவானது பிளக்கப்படுதல்:** இது ஏற்கெனவே ஜுன் 1969–ல் நாம் நிலவின் மீது தரை இறங்கியதோடன்றி, திரும்புகையில் நிலவுப் பாறைகளைக் கொண்டு வந்த போது நிகழ்ந்தேறியது. பூமியில் உள்ள மக்கள் இப்போது பல அருங்காட்சியகங்கள், கல்லூரிகள், மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்குச் சென்று நிலவின் துண்டுகளைக் காணலாம்.

2. **19–ன் அடிப்படையிலான குர்ஆனுடைய கணிதக் குறியீடு கண்டுபிடிக்கப்படுதல்** (74:30–37): 1969–1974–ல் நிறைவேற்றப்பட்டது.

3. **விலங்கு** (27:82): "பூமியில் இருந்து உருவாக்கப்பட்டு, தங்களுடைய இரட்சகரின் பால் மக்கள் கவனமற்றவர்களாக இருந்து வந்துள்ளனர் என்று அது எச்சரிக்கின்றது". இந்த விலங்கு, பூமியில் இருந்து உருவாக்கியது, தோன்றிவிட்டதுடன் குர்ஆனுடைய எண்ணியல் குறியீட்டினைத் திரைவிலக்குவதில் உபகரணமாக இருந்து, கடவுளின் தூதுச் செய்தியை இவ்வுலகம் அலட்சியப்படுத்தி விட்டது எனப் பிரகடனம் செய்கின்றது; அந்த விலங்கு கணிணியே ஆகும். 27:82ன் அங்கங்களான இலக்கங்கள் கூட்டப்பட வருவது 19 என்பதைக் கவனிக்கவும்.

4. **கடவுளின் உடன்படிக்கைத் தூதருடைய வருகை** (3:81): பின் இணைப்பு 2–ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, நபிமார்கள் அனைவரும் வேதங்களைச் சேர்ப்பித்துவிட்டவுடன், தூய்மைப்படுத்தவும் ஒன்றிணைக்கவும், இக்குர்ஆனில் முன்னறிவிக்கப்பட்டுள்ள, ஒன்றுபடுத்துகின்ற ஒரு தூதர் வருவார். இந்த முன்னறிவிப்பு ரமளான் 1408–ல் நிறைவேறியது.

5. **புகை** (44:10): கடவுளின் உடன்படிக்கைத் தூதரானவர் ஒன்றிணைக்கப்பட்ட தூதுச் செய்தியைச் சேர்ப்பிப்பதுடன் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரே மார்க்கமாக இஸ்லாமை (சரணடைதல்)பிரகடனித்து விட்ட பின்னர் நிகழ்கின்றது.

6. **காக் மற்றும் மேகாக்:** கடவுளின் திட்டத்திற்கேற்ப, ஹிஜ்ரி 1700–வது வருடம் (கி.பி 2271), அவர்கள் மீண்டும் தோன்றுகின்றனர்.18:94 மற்றும் 21:96–ல் காக் மற்றும் மேகாக் குறிப்பிடப்படுகின்றனர். 18:94–ல் இருந்து 18வது சூராவின் இறுதி வரை வசனங்களை நீங்கள் எண்ணினால், நீங்கள் அவற்றை 17 எனக் காண்கின்றீர்கள். 21:96–ல் இருந்து 21–வது சூராவின் இறுதி வரை வசனங்களை நீங்கள் எண்ணினால், அவற்றையும் கூட நீங்கள் 17, ஆகவே காண்கின்றீர்கள். காக் மற்றும் மேகாக் ஹிஜ்ரி 1700–ல் மீண்டும் தோன்றுவார்கள் என்பதற்கு இக்குர்ஆனின் அறிகுறி இதுவேயாகும்.

## அது மறைக்கப்பட்ட நிலையிலேயே இருந்திடாது (20:15)

இவ்வுலகத்தின் முடிவானது இவ்வுலக முடிவிற்கு முன்னரே கடவுளால் வெளிப்படுத்தப்படும் என சூரா 20–ன் வசனம் 15 நமக்குத் தெரிவிக்கின்றது, சூரா 15, வசனம் 87 அந்தச் சம்பவத்திற்குரிய காலத்தைத் தருகின்றது :

**நாம் உமக்கு 7 ஜோடிகளையும், மகத்தான இக்குர்ஆனையும் தந்துள்ளோம். [15:87]**

14 குர்ஆனியத் துவக்க எழுத்துக்களே அந்த ஏழு ஜோடிகள் ஆகும். இக்குர்ஆனுடைய அற்புதத்தின் ஆழ்ந்த இந்தத் தூண்களின் மொத்த எழுத்தெண் மதிப்பானது உலக முடிவிற்கான வருடத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது. சூரா 15−ன் வசனம் 85 எடுத்துரைப்பது கவனிக்கத்தக்கதாகும்: “இவ்வுலகத்தின் முடிவானது நிச்சயமாக நிகழ்ந்தேறியே தீரும்”. அதற்கு அடுத்த வசனம், 15:86, கடவுள்தான் இவ்வுலகத்தின் படைப்பாளர் ஆவார், மேலும் ஐயமின்றி, எப்பொழுது அது முடிவடையும் எனவும் அவர் அறிவார் என்று நமக்குச் சொல்கின்றது. தொடர்கின்ற இவ்வசனம், 15:87, இவ்வுலகம் எப்பொழுது முடிவடையும் என்று நமக்குச் சொல்கின்றது. அட்டவணை 1−ல் காட்டப்பட்டுள்ளபடி, குர்ஆனியத் துவக்க எழுத்துக்களான இந்த “ஏழு ஜோடி”களின் மொத்த எழுத்தெண் மதிப்பாவது 1709 ஆகும்(பின் இணைப்பு 1−ன் அட்டவணை 1−ஐயும் பார்க்கவும்). 15:87−ல் கூறப்பட்டுள்ளபடி, குர்ஆனில் இந்த முன்னறிவிப்பு எடுத்துரைக்கப்பட்ட தருணத்தில் இருந்து 1709 சந்திர வருடங்கள் இவ்வுலகம் ஜீவித்திருக்கும். இதன் அர்த்தமாவது இவ்வுலகம் ஹிஜ்ரி 1710−ல் முடிவடைந்து விடும் என்பதேயாகும். இந்த எண் 19−ன் ஒரு பெருக்குத் தொகையாகும்; 1710 = 19 x 90.

இந்தத் தகவலின் திரைவிலக்கலானது முன்னறிவிக்கப்பட்டுவிட்ட உலக முடிவுக்கு 309 வருடங்கள் முன்னதாக, ஹிஜ்ரி 1400−ம் ஆண்டு நடைபெற்றது (1709−1400=309) 309 எனும் எண் ஒரு குர்ஆனிய எண்ணாகும் (18:25), மேலும் உலகத்தின் முடிவுடன் தொடர்புடையதுமாகும் (18:21). 18:25−ல் 309 ஆனது, “9−ஆல் அதிகரிக்கப்பட்டு, முந்நூறு வருடங்கள்” என எழுதப்படுகின்ற வினோதமான விதமானது, 309 என்பது சந்திர வருடங்கள் என்பதைக் குறிக்கின்றது. 300 சூரிய வருடங்களுக்கும் 300 சந்திர வருடங்களுக்கும் இடையே யுள்ள வித்தியாசம் 9 வருடங்கள் ஆகும்.

*அட்டவணை 1: குர்ஆனியத் துவக்க எழுத்துக்களின் “ஏழு ஜோடி”களுடைய மொத்த எழுத்தின் மதிப்பு*

| | குர்ஆனியத் துவக்க எழுத்து | எழுத்தெண் மதிப்பு |
|---|---|---|
| 1. | க்க | 100 |
| 2. | ன | 50 |
| 3. | ஸ(ஸாத்) | 90 |
| 4. | ஹ்.ஹ.ம. | 48 |
| 5. | ய.ச. | 70 |
| 6. | த.ஹ. | 14 |
| 7. | த.ச. | 69 |
| 8. | அ.ல.ம. | 71 |
| 9. | அ.ல.ர | 231 |
| 10. | த.ச.ம. | 109 |
| 11. | அ.ச.க்க. | 230 |
| 12. | அ.ல.ம.ஸ. | 161 |
| 13. | அ.ல.ம.ர. | 271 |
| 14. | க.ஹ.ய.அ.ஸ. | 195 |
| | | 1709 |

இந்தக் கண்டுபிடிப்பின் வருடமான ஹிஜ்ரி 1400, கி.பி. 1980 உடன் ஒத்திருந்தது, மேலும்1980 உடன் 300 சூரிய வருடங்கள் கூட்டப்பட வருகின்ற 2280, 19−ன் ஒரு பெருக்குத் தொகையேயாகும் 19 X 120. இவ்விதமாக இந்த உலகம் கி.பி. 2280, 19 x 120 உடன் ஒத்திருக்கின்ற ஹிஜ்ரி 1710, 19 X 90−ல் முடிவுறுகின்றது. வலிமை மிகுந்த இந்தக் குர்ஆனியச் சான்றுகளை ஏற்றுக் கொள்ளாத நம்பமறுப் பவர்களுக்கு இவ்வுலகின் முடிவு திடீரென வரும் (6:31, 44,47; 7:95; 187; 12:107; 21:40;22:55; 26:202; 29:53; 39:55; 43:66 மற்றும் 47:18).

மார்க்கப் போதனைகளின் ஒரு மூலாதாரமாக *ஹதீஸ்* தடைசெய்யப்பட்டுள்ள அதே சமயம் (பின் இணைப்பு 19) அது பயனுள்ளதொரு வரலாற்று மூலாதாரமாக இருக்க இயலும். இஸ்லாமின்ஆரம்ப நூற்றாண்டுகளின் போதான சரித்திர நிகழ்வுகளையும் அப்பகுதியின் பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பர்யங்களையும் பற்றி ஏராளமானதொரு தகவலை நாம் அடைந்திட இயலும். இந்தக் குர்ஆனியத் துவக்க எழுத்துக்கள் முஸ்லிம் *உம்மத்*தின் ஆயுட் காலத்தை நிச்சயிப்பதாக நம்பப்பட்டன என்று ஹதீஸ் புத்தகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. குர்ஆனியத் துவக்க எழுத்துக்களுக்குரிய சாத்தியமானதொரு விளக்கமாக, அல்−பைளாவியின் பாரம்பர்யமிக்க விளக்கவுரை, பின் வருகின்ற சரித்திர நிகழ்வினை எடுத்துக்கூறுகின்றது. இதே நிகழ்ச்சி அல்−ஸுயூத்தியின் *இத்கான்*, முதல்அச்சு ஹிஜ்ரீ 1318, தொகுதி2, பக்கம் 10−ல் விவரிக்கப்பட்டுள்ளது:

**மதினாவில் உள்ள யூதர்கள் நபியிடம் சென்று கூறினார்கள், "உம்முடைய குர்ஆன் அ.ல.ம. கொண்டு துவக்க எழுத்துக்கள் இடப்பட்டுள்ளது., மேலும் இந்தத் துவக்க எழுத்துக்கள் உம்முடைய மார்க்கத்தின் ஆயுட் காலத்தை நிச்சயிக்கின்றன. 'அ' 1 ஆகவும், 'ல' 30 ஆகவும், 'ம' 40 ஆகவும் உள்ளதால், உம்முடைய மார்க்கம் 71 ஆண்டுகள் மட்டுமே ஜீவித்திருக்கும் என்பதே இதன் பொருளாகும்." முஹம்மத் கூறினார், "நாங்கள் அ.ல.ம.ஸ–வையும் பெற்றிருக்கின்றோம்." அவர்கள் கூறினார்கள், அ என்பது 1 ஆகவும் 'ல' ஆனது 30 ஆகவும், 'ம' ஆனது 40 ஆகவும், மேலும் 'ஸ' ஆனது 90 ஆகவும் உள்ளது. இதனைக் கூட்டினால் வருவது 161. வேறு எதுவேனும் உம்மிடம் உள்ளதா?" நபி கூறினார், "ஆம், அ.ல.ம.ர" அவர்கள் கூறினார்கள், "இது மிக நீளமானதாகவும் மிகக் கனமானதாகவும் உள்ளது ; 'அ' என்பது 1 ஆக உள்ளது, 'ல' 30 ஆக உள்ளது, 'ம' 40 ஆக உள்ளது, மேலும் 'ர' ஆனது 200 ஆக உள்ளது, மொத்தத்தை 271 ஆக்குகின்றது." இறுதியில் அவர்கள், "இந்தத் துவக்க எழுத்துக்கள் எத்தனை அவருக்குக் கொடுக்கப்பட்டது என்பதை நாங்கள் அறியமாட்டோம்!," என்று கூறியவர்களாக, இறுதியில் தங்கள் முயற்சியைக் கைவிட்டு விட்டனர்.**

**[அல்–ஸுயூத்தியின் பிரசித்தி பெற்ற குறிப்பேடு *இத்கான்*]**

இந்த விவரிப்பு நன்கறியப்பட்டதாக இருந்த போதிலும், குர்ஆனியத் துவக்க எழுத்துக்களுக்கும் இவ்வுலகத்தின் முடிவுக்கும் இடையேயுள்ள தெளிவான தொடர்பினை ஏற்றுக் கொள்ள பற்பல அறிஞர்கள் விருப்பமில்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இந்த விஷயத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் முன்வர இயலாததன் எளிய காரணம், இக்கணக்கீடுகள் இவ்வுலகத்தின் முடிவினையும், தீர்ப்பினையும், ஒரு நிதர்சனமாக ஆக்குகின்றது என்பதேயாகும்.

****************************

## பின் இணைப்பு 26

# இஸ்லாமின் மூன்று தூதர்கள்

இந்தப் பின் இணைப்பு [1] இஸ்லாம், அதாவது, சரணடைதலின் முதல் தூதராக இருந்தவர் ஆப்ரஹாமேயாவார் [22:78], [2] வேதத்தைச் சேர்ப்பிக்கின்ற தூதராக இருந்தவர் முஹம்மத் ஆவார் [47:2], மேலும் [3] இம்மார்க்கத்தின் நம்பகத்தன்மையை நிரூபிக்கின்ற சான்றினைச் சேர்ப்பித்த, தூய்மைப்படுத்தி ஒன்றிணைக்கின்ற தூதர் ரஷாத் ஆவார் [3:81 & பின் இணைப்பு 2], என்பதற்குரிய குர்ஆனுடைய கணிதரீதியான நிரூபணத்தினை வழங்குகின்றது.

## நிலையானதும் ஒத்துப் பார்த்துக் கொள்ளக் கூடியதுமான நிரூபணம்

**(1)** பின் இணைப்பு 2 –ல் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி "ஆப்ரஹாம்" – ன் எழுத்தெண் மதிப்பு 258, "முஹம்மத் "–ன் எழுத்தெண் மதிப்பு 92, "ரஷாத்"–ன் எழுத்தெண் மதிப்பு 505, எனவே 258 + 92 + 505 = 855 = 19 x 45.

**(2)** 211–ஐ எழுத்தெண் மதிப்பாகக் கொண்ட "இஸ்மாயீல்" மற்றும் 169–ஐ எழுத்தெண் மதிப்பாகக் கொண்ட "இஸ்ஹாக்"–ஐயும் நாம் உட்படுத்திக் கொண்டால் அப்போது நாம் 855 + 211 + 169 = 1235 = 19 x 65 எனும் மொத்த எழுத்தெண் மதிப்பினையே நாம் அடைகின்றோம். இந்த மூன்று, அல்லது, ஐந்து தூதர்களுடைய எழுத்தெண் மதிப்பானது ஆப்ரஹாமோ, முஹம்மதோ, அல்லது ரஷாதோ உட்படுத்திக் கொள்ளப் படாவிட்டால், குர்ஆனுடைய 19–ன் அடிப்படையிலான கணிதக் குறியீட்டுடன் ஒத்துப் போக முடியாது.

*அட்டவணை 1: ஆப்ரஹாமின் முதல் இடம்பெறுதலில் இருந்து கடைசி இடம்பெறுதல் வரை உள்ள சூராக்கள் மற்றும் வசனங்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டுத்தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 2 | 163 | 33415 | 33580 |
| 3 | 200 | 20100 | 20303 |
| 4 | 176 | 15576 | 15756 |
| 5 | 120 | 7260 | 7385 |
| - | - | - | - |
| 9 | 127 | 8128 | 8264 |
| - | - | - | - |
| 84 | 25 | 325 | 434 |
| 85 | 22 | 253 | 360 |
| 86 | 17 | 153 | 256 |
| 87 | 19 | 190 | 296 |
| 3827 | 5835 | 323598 | 333260 (19x17540) |

*அட்டவணை 2 : ஆப்ரஹாம், முஹம்மத், மற்றும் ரஷதவின் இடம்பெறுதல்களும் அதன் சூராக்களும்.*

| சூரா எண் | இடம் பெறுதலின் எண்ணிக்கை ஆப்ரஹாம், | முஹம்மத், | ரஷத |
|---|---|---|---|
| 2 | 15 | - | 2 |
| 3 | 7 | 1 | - |
| 4 | 4 | - | 1 |
| 6 | 4 | - | - |
| 7 | - | - | 1 |
| 9 | 3 | - | - |
| 11 | 4 | - | 3 |
| 12 | 2 | - | - |
| 14 | 1 | - | - |
| 15 | 1 | - | - |
| 16 | 2 | - | - |
| 18 | - | - | 4 |
| 19 | 3 | - | - |
| 21 | 4 | - | 1 |
| 22 | 3 | - | - |
| 26 | 1 | - | - |
| 29 | 2 | - | - |
| 33 | 1 | 1 | - |
| 37 | 3 | - | - |
| 38 | 1 | - | - |
| 40 | - | - | 2 |
| 42 | 1 | - | - |
| 43 | 1 | - | - |
| 47 | - | 1 | - |
| 48 | - | 1 | - |
| 49 | - | - | 1 |
| 51 | 1 | - | - |
| 53 | 1 | - | - |
| 57 | 1 | - | - |
| 60 | 2 | - | - |
| 72 | - | - | 4 |
| 87 | 1 | - | - |
| 991 | 69 | 4 | 19 |

991+69+4+19=1083=19x19x3

* ரஷத 19 முறைகள் இடம்பெறுகின்றது

* மொத்தமானது 19 X 19 X 3 ஆகும், 3தூதர்கள்.

**(3)** "ஆப்ரஹாம்"–ன் முதல் மற்றும் கடைசி இடம் பெறுதல்கள் 2:124 மற்றும் 87:19 –ல் உள்ளன. முதல் இடம் பெறுதலில் இருந்து கடைசி இடம் பெறுதல் வரையுள்ள சூரா எண்களுடன் வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டி, வசன எண்களின் கூட்டுத்தொகையையும் கூட்டுவதன் மூலம் மொத்தக் கூட்டுத்தொகையாவது 333260, 19 X 17540 [அட்டவணை–1].

**(4)** பின் இணைப்பு 2–ல் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள படி, கடவுளுடைய உடன்படிக்கைத் தூதரின் பெயரானது இந்தக் கணிணி யுகத்திற்கு கணிதரீதியிலான குறியீட்டின் மூலம் அறிமுகப் படுத்தப்படுகின்றது. இப்பெயர் குர்ஆனில் குறிப்பிடப் பட்டிருந்தால், கடந்தகாலத் தூதர்களுடைய விஷயத்தில் நடந்ததைப் போலவே, இலட்சக் கணக்கானோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு "ரஷாத் கலீஃபா" எனப் பெயரிட்டிருப்பார்கள். எனவே, "ரஷத" எனும் வேர்ச்சொல் இக்குர்ஆனில் 19 முறைகள் குறிப்பிடப் பட்டுள்ளது [பின்இணைப்பு 2].

**(5)** "ஆப்ரஹாம்" 25 சூராக்களில் குறிப்பிடப்பட்டுள்ளார், "முஹம்மத்" 4 சூராக்களில் குறிப்பிடப்படுகின்றார், மேலும் "ரஷத" 9 சூராக்களில் காணப்படுகின்றது. இந்த சூராக்களின் கூட்டுத் தொகை 25+4+9=38=19X2 [குர்ஆனின் வார்த்தைகளுக்குரிய சொல்லகராதி, அப்துல் பாக்கி].

**(6)** ஆப்ரஹாம், முஹம்மத், ரஷத இடம் பெறுகின்ற சூராக்களின் எண்களுடன் ஒவ்வொரு சூராவிலும் இடம்பெறுதல்களின் எண்ணிக்கையையும் நாம் கூட்டினால், மொத்த எண்ணிக்கையாக வருவது 1083, 19 X 19 X 3 [அட்டவணை 2 ].

**(7)** ஆப்ரஹாம், முஹம்மத், மற்றும் "ரஷத" எனும் வேர்ச்சொல் குறிப்பிடப்படுகின்ற அனைத்து சூராக்களையும் நாம் எடுத்து, மேலும் அந்த சூரா எண்களைக் கூட்டி, இந்த மூன்று வார்த்தைகளில் ஒவ்வொன்றும் குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு சூராவிலுமுள்ள முதல் வசனத்தின் எண்ணையும் கூட்டினால் மொத்த எண்ணிக்கையாவது 2793, 19 X 147 [அட்டவணை 3].

**(8)** மீண்டும் மீண்டும் கூறப்படுபவற்றை விடுத்து விட்டு, இம்மூன்று வார்த்தைகளும் இடம்பெறுகின்ற சூரா எண்கள் அனைத்தினுடைய கூட்டுத்தொகையுடன், மீண்டும் மீண்டும் கூறப்படுபவற்றை விடுத்து விட்டு, வசன எண்கள் அனைத்தினுடைய கூட்டுத் தொகை கூட்டப்பட வருவது 6479, 19 X 341. அந்த சூராக்களாவன

2, 3, 4, 6, 7, 9, 11, 12, 14, 15, 16, 18, 19, 21, 22, 26, 29, 33, 37, 38, 40, 42, 43, 47, 48, 49, 51, 53, 57, 60, 72, மற்றும் 87. இந்த எண்களின் கூட்டுத்தொகையாவது 991 ஆகும் (பார்க்க அட்டவணை 3). மீண்டும் மீண்டும் கூறப்படுபவற்றை விடுத்து விட்டு இந்த மூன்று வார்த்தைகளும் குறிப்பிடப்படுகின்ற வசனங்களாவன, 2, 4, 6, 7, 10, 13, 14, 16, 17, 19, 21, 24, 26, 29, 31, 33, 35, 37, 38, 40, 41, 43, 45, 46, 51, 54, 58, 60, 62, 65, 66, 67, 68, 69, 70, 74, 75, 76, 78, 83, 84, 87, 95,97, 104, 109, 114, 120, 123, 124, 125, 126, 127, 130, 132, 133, 135, 136, 140, 144, 146, 161, 163, 186, 256, 258, மற்றும் 260 ஆகியனவாகும். இந்த எண்களின் கூட்டுத்தொகை 5488 ஆகும், மேலும் 5488+991= 6479=19X341.

**(9)** ஆப்ரஹாம், முஹம்மத், மற்றும் ரஷதவைக் கொண்டுள்ள சூரா எண்களுடன், வசன எண்ணைக் கூட்டி அவை இடம்பெறுகின்ற வசனங்களின் எண்ணிக் கையையும் நாம் கூட்டினால், 7505, 19x395–க்குச் சமமானதொரு முழுமையான மொத்த எண்ணிக்கை நமக்குக் கிடைக்கின்றது (அட்டவணை4).

*அட்டவணை 3: ஆப்ரஹாம், முஹம்மத், & ரஷத இடம்பெறுகின்ற சூராக்கள் & முதல் வசனம்*

| சூரா | முதலில் இடம்பெறுகின்ற வசனம் | | |
|---|---|---|---|
| எண் | ஆப்ரஹாம் | முஹம்மத் | ரஷத |
| 2 | 124 | - | 186 |
| 3 | 33 | 144 | - |
| 4 | 54 | - | 6 |
| 6 | 74 | - | - |
| 7 | - | - | 146 |
| 9 | 70 | - | - |
| 11 | 69 | - | 78 |
| 12 | 6 | - | - |
| 14 | 35 | - | - |
| 15 | 51 | - | - |
| 16 | 120 | - | - |
| 18 | - | - | 10 |
| 19 | 41 | - | - |
| 21 | (51) | - | (51) |
| 22 | 26 | - | - |
| 26 | 69 | - | - |
| 29 | 16 | - | - |
| 33 | 7 | 40 | - |
| 37 | 83 | - | - |
| 38 | 45 | - | - |
| 40 | - | - | 29 |
| 42 | 13 | - | - |
| 43 | 26 | - | - |
| 47 | - | 2 | - |
| 48 | - | 29 | - |
| 49 | - | - | 7 |
| 51 | 24 | - | - |
| 53 | 37 | - | - |
| 57 | 26 | - | - |
| 60 | 4 | - | - |
| 72 | - | - | 2 |
| 87 | 19 | - | - |
| ......... | ............ | ............. | .......... |
| 991 | 1123 | 215 | 464 |

991+1123+215+464 = 2793 = 19x147

* வசனம் 21:51 இரண்டு முறை கூட்டப்படமாட்டாது

*அட்டவணை 4: "ஆப்ரஹாம்", "முஹம்மத்", மற்றும் "ரஷத"வின் சூராக்கள், வசனங்கள், மற்றும் இடம் பெறுதல்கள்*

| சூரா எண் | 3வார்த்தைகள் குறிப்பிடப்படுகின்ற வசனங்கள் ஆப்ரஹாம் | முஹம்மத் | ரஷத | வசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2 | 124,125,126,127, 130,132,133,135 136,140,258,260 | - | 186,256 | 14 |
| 3 | 33,65,67,68 84,95,97 | 144 | - | 8 |
| 4 | 54,125,163 | - | 6 | 4 |
| 6 | 74,75,83,161 | - | - | 4 |
| 7 | - | - | 146 | 1 |
| 9 | 70,114 | - | - | 2 |
| 11 | 69,74,75,76 | - | 78,87,97 | 7 |
| 12 | 6,38 | - | - | 2 |
| 14 | 35 | - | - | 1 |
| 15 | 51 | - | - | 1 |
| 16 | 120,123 | - | - | 2 |
| 18 | - | | 10,17,24,66 | 4 |
| 19 | 41,46,58 | - | - | 3 |
| 21 | 51,60,62,69 | - | 51 | 5 |
| 22 | 26,43,78 | - | - | 3 |
| 26 | 69 | - | - | 1 |
| 29 | 16,31 | - | - | 2 |
| 33 | 7 | 40 | - | 2 |
| 37 | 83,104,109 | - | - | 3 |
| 38 | 45 | - | - | 1 |
| 40 | - | - | 29,38 | 2 |
| 42 | 13 | - | - | 1 |
| 43 | 26 | - | - | 1 |
| 47 | - | 2 | - | 1 |
| 48 | - | 29 | - | 1 |
| 49 | - | - | 7 | 1 |
| 51 | 24 | - | - | 1 |
| 53 | 37 | - | - | 1 |
| 57 | 26 | - | - | 1 |
| 60 | 4 | - | - | 1 |
| 72 | - | - | 2,10,14,21 | 4 |
| 87 | 19 | - | - | 1 |
| ........ | ....... | ....... | ........ | ...... |
| 991 | 5068 | 215 | 1145 | 86 |

991 + 5068 + 215 + 1145 + 86 = 7505 = 19x395

இவ்விதமாக, ஆப்ரஹாம், முஹம்மத் மற்றும் ரஷாத் ஆகியோர் (சரணடைதல்) இஸ்லாமின் மூன்று தூதர்கள் என்று குர்ஆனில் கணித ரீதியில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(10)** அட்டவணை 4–ல் காட்டப்பட்டுள்ளபடி, “ரஷத” எனும் வேர்ச்சொல்லின் 19 இடம் பெறுதல்கள், வசனங்கள் 186, 256, 6, 146, 78, 87, 97, 10, 17, 24, 66, 51, 29, 38, 7, 2, 10, 14, மற்றும் 21–ல் உள்ளன. இவை 38 இலக்கங்களாகும், 19 x 2.

**(11)** “ ரஷத” எனும் வேர்ச்சொல்லின் 19 இடம்பெறுதல்களுடைய வசன எண்களின் கூட்டுத்தொகை 1145 ஆக உள்ளது என்பதை அட்டவணை 4 காட்டுவதை நாம் காண்கின்றோம். வசன எண்களின் இந்த மொத்தத் தொகையை (1145), “ரஷாத்” எனும் பெயருடைய எழுத்தெண் மதிப்புடன் கூட்டி(505), “கலீஃபா” எனும் பெயருடைய எழுத்தெண் மதிப்பையும்(725) கூட்டுவதன் முலம், நாம் கிடைக்கப்பெறுவது 1145+505+725=2375, 19 x 125.

**(12)** இந்த எண்களை ஒன்றின் அருகில் மற்றொன்றாக நாம் எழுதினால், அதாவது, வசன எண்களின் மொத்தத்தொகை (1145), “ரஷாத்” எனும் பெயரின் எழுத்தெண் மதிப்பினால் தொடரப்பட்டு (505) “கலீஃபா” எனும் பெயரின் எழுத்தெண் மதிப்பினால் தொடரப்பட்டாலும் (725), 19–ன் பெருக்குத் தொகையாக உள்ள ஒரு எண்ணையே நாம் கிடைக்கப் பெறுகின்றோம்: 1145505725 = 19 x 60289775,

| | |
|---|---|
| 19 “ரஷத” இடம்பெறுகின்ற வசன எண்களின் கூட்டுத்தொகை ............ | = 1145 |
| “ரஷாத்” எனும் பெயரின் எழுத்தெண் மதிப்பு ............ | = 505 |
| “கலீஃபா” எனும் பெயரின் எழுத்தெண் மதிப்பு ............ | = 725 |

**1145+505+725 = 2375 = 19 x 125**

**1145 505 725 = 1145505725 = 19 x 60289775**

****************************

### பின் இணைப்பு 27

# உங்களுடைய கடவுள் யார்?

அதிகமான மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் கொந்தளித்து விடுகின்றனர். “உங்களுடைய தெய்வம் யார் என்றால், நீங்கள் கூற வருவதென்ன?” என்று அவர்கள் கேட்கின்றனர். “ வானங்கள் மற்றும் பூமியின் படைப்பாளர்தான் என் தெய்வம்.” ஆனால் இந்த மக்களில் அதிகமானோர் வானங்கள் மற்றும் பூமியின் படைப்பாளர்தான் அவர்களுடைய தெய்வம் என்ற தங்களுடைய பிரகடனம் உதட்டளவில் என்பதை விட அதிகம் எதுவுமில்லை, மேலும் உண்மையில் அவர்கள் நரகத்திற்கென விதிக்கப்பட்டு விட்டவர்களாக இருக்கின்றனர், என்பதை கண்டு கொள்ளும் போது அதிர்ந்து போனவர்களாக இருப்பார்கள்(12:106).

**உங்களுடைய நினைவில் அதிகமான நேரத்தினை ஆக்கிரமித்திருக்கின்ற எவராயினும் அல்லது எதுவாயினும் அதுவே உங்கள் தெய்வமாகும்.**

உங்களுடைய குழந்தைகள் (7:190) உங்களுடைய வாழ்க்கைத் துணை (9:24), உங்களுடைய தொழில் (18:35), அல்லது உங்கள் அகந்தை (25:43) உங்களுடைய தெய்வமாக இருக்கக் கூடும். அதனால் தான் இக்குர்ஆனில் மிகவும் முக்கியமானதும் அதிகமாக மீண்டும் மீண்டும் கூறப்படுவதுமாக உள்ள கட்டளைகளில் ஒன்றாக இது இருப்பதை நாம் கவனிக்கின்றோம்.

**நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், நீங்கள் கடவுளை அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும்; பகலும் இரவும் அவரைத் துதியுங்கள். (33:41)**

இந்த கட்டளையைச் செயல்பாட்டில் கொண்டுவருவதற்கு, வேறு எந்த ஒன்றையும் விட அதிகமாக நமது மனங்களில் கடவுளே நிறைந்திருக்கின்றார் என்று நாம் உத்தரவாதம் கொள்ளும் விதமாக குறிப்பிட்ட பழக்கங்களை நாம் நிலைப்படுத்திக் கொண்டாக வேண்டும். ஆத்மாவைக் காப்பாற்றுகின்ற இத்தகைய பழக்கங்களை நிலைப்படுத்திக் கொள்ள இக்குர்ஆன் நமக்கு உதவுகின்றது.

1. தொடர்பு தொழுகைகள் ***(ஸலாத்):*** 5 அன்றாடத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கின்றவர்கள், தங்களுடைய விழித்திருக்கும் நேரங்களில் கணிசமானதொரு விகிதம் கடவுளை நினைவு கூர்வதன் பால் நெடுந்தொலைவு வந்து

விட்டனர். தொழுகையின் போதான அந்த சில நிமிடங்கள் மட்டுமென்றில்லாமல், அதனை எதிர்பார்த்திருக்கின்ற நேரங்களிலும் கூட கடவுளை நினைவில் கொள்ள *ஸலாத்* நமக்கு உதவுகின்றது. முற்பகல் 11.00 மணிக்கு ஒருவர் நண்பகல் தொழுகைக்குரிய நேரம் வந்து விட்டதா என்பதைக் காண்பதற்காக அவனுடைய அல்லது அவளுடைய கடிகாரத்தினை நோக்கக் கூடும். அந்நபர் கடவுளைப் பற்றி நினைக்க இச்செயல் காரணமாகின்றது, மேலும் அந்நபர் அதற்கேற்றவாறு நன்மையளிக்கப்படுகின்றார் [20:14].

2. <u>உண்பதற்கு முன்னர் கடவுளை நினைவு கூர்ந்திடுங்கள்</u>: வசனம் 6:121 நாம் உண்பதற்கு முன்னர் கடவுளின் பெயரினை மொழியுமாறு நமக்குக் கட்டளையிடுகின்றது. "கடவுளின் பெயர் மொழியப் படாதவற்றிலிருந்து நீங்கள் உண்ண வேண்டாம்".

3. <u>கடவுள் நாடினால்,</u> *[இன்ஷா அல்லாஹ்]*: "கடவுள் நாடினால் *[இன்ஷா அல்லாஹ்]* என்று கூறாமல், 'இதனையோ அல்லது அதனையோ நான் நாளை செய்வேன்' என்று நீர் கூற வேண்டாம். இதனைச் செய்ய நீர் மறந்து விட்டால், பின்னர் பிழை பொறுக்கத் தேடியவாறு கூறுவீராக, 'அடுத்தமுறை சிறப்பாகச் செய்வதற்கு என் இரட்சகர் என்னை வழிநடத்துவாராக' " [18:24].நாம் எவருடன் பேசிக்கொண்டிருக்கின்றோம் என்பது பொருட்டல்ல, நாம் செயல்படுத்தியாக வேண்டியதொரு நேரடிக் கட்டளையாக இது உள்ளது.

4. <u>கடவுளின் பரிசு</u> *[மா ஷா அல்லாஹ்]*: நமக்கு மிகவும் விருப்பமான விஷயங்களுக்கு – நம் பிள்ளைகள், நம்முடைய வாகனங்கள், நமது வீடுகள், போன்றவற்றுக்கு கடவுளின் பாதுகாப்பினை வேண்டுவதற்கு, "மா ஷா அல்லாஹ்" [இது கடவுளின் பரிசாகும்] என்று கூறுமாறு 18:39–ல் நாம் ஏவப்படுகின்றோம்.

5. <u>பகலும் இரவும் கடவுளைத் துதியுங்கள்</u>: எந்த ஒன்றையும் நாம் உண்ணும் பொழுது, நாம் விலங்குகளைப் போல் இருக்கக்கூடாது; நாம் உண்ணுகின்ற உணவின் கடவுளுடைய அந்தப் படைப்பைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் – அதன் மணம், கடவுள் நமக்குத் தந்திருக்கின்ற புலன்களின் காரணத்தால் நம்முடைய மகிழ்வான அனுபவம், ஆரஞ்ச் அல்லது வாழைப்பழத்தின் கச்சிதமான உறையிடல், கடவுளால் படைக்கப்பட்ட வெவ்வேறு விதமான கடல் உணவுகள், போன்றவற்றை–மேலும் அவருடைய வாழ்வாதாரங்களை நாம் மகிழ்ந்து அனுபவித்தவாறு அவரைத் துதித்திடவும் வேண்டும். அழகியதொரு மலரையோ, அல்லது விலங்கினையோ அல்லது சூரிய அஸ்தமனங்களையோ நாம் காண்கின்ற போது, நாம் கடவுளைத் துதித்திட வேண்டும். கடவுள் நம்முடைய கடவுளாக இருக்கும் பொருட்டு, கடவுளை நினைப்பதற்கும் துதிப்பதற்குமுரிய சாத்தியமான ஒவ்வொரு வாய்ப்பினையும் நாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

6. <u>முதல் கூற்று</u>: ஒவ்வொரு காலையிலும் நீங்கள் விழித்தெழுகின்ற அக்கணமே, "கடவுளின் பெயரால் , மிக்க அருளாளர்,மிக்க கருணையாளர். கடவுளுடன் வேறு தெய்வம் எதுவுமில்லை." என்று கூறுவதை ஒரு வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த நல்ல பழக்கத்தை நீங்கள் நிலைப்படுத்திக் கொண்டால், நீங்கள் உயிர்த்தெழுப்பப்படுகின்ற பொழுது இதனைத்தான் நீங்கள் கூறுவீர்கள்.

*****************************

### பின் இணைப்பு 28

# முஹம்மத் தன் சொந்தக் கரத்தால் கடவுளின் வெளிப்பாடுகளை எழுதினார்

முதல் வெளிப்பாடானது "படிப்பீராக", என்பதாக இருந்தது, அத்துடன் "<u>பேனா</u>வெனும் சாதனத்தின் மூலம் கடவுள் கற்றுக் கொடுக்கின்றார்" [96:1–4] என்ற வாக்குமூலத்தை உள்ளடக்கியதாகவும் இருந்தது, மேலும் இரண்டாவது வெளிப்பாடும் "பேனா"[68:1] ஆகவே இருந்தது. பேனாவின் ஒரே பயன்பாடு எழுதுவதேயாகும்.

இக்குர்ஆனுக்குப் பின்னரான முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த அறியாமை நிறைந்த முஸ்லிம் அறிஞர்களால் இதனைப் போன்ற ஏதேனும் ஒன்றைக் கொண்டு வருமாறு இக்குர்ஆன் விடுத்த அறைகூவலைப் புரிந்து கொள்ள இயலவில்லை. இக்குர்ஆனுடைய கணிதரீதியிலான தொகுப்பினைப் பற்றி அவர்கள் எந்த சிந்தனையையும் கொண்டிருக்கவில்லை, அத்துடன் பல இலக்கிய மேதைகள் இக்குர்ஆனுடன் ஒப்பிடக்கூடிய இலக்கியப்படைப்புக்களைத் தொகுத்திட இயலும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். உண்மையில், அத்தகைய பல இலக்கிய மேதைகள்

இக்குர்ஆனைப் போல மிகச் சிறப்பானதோர் இலக்கிய படைப்பினைக் கொண்டு வருகின்ற திறமை இருப்பதாகக் கோரவே செய்தனர். சமீபத்திய கோரிக்கை பிரசித்தி பெற்ற எகிப்திய எழுத்தாளரான, தாஹா ஹுசைனிடமிருந்து வந்தது.

அறியாமை நிறைந்த இந்த முஸ்லிம் அறிஞர்கள் பின்னர் முஹம்மதை எழுத்தறிவற்ற ஒரு மனிதர் எனப் பிரகடனிக்கத் தீர்மானித்தனர்! இது குர்ஆனுடைய அசாதாரணமான இலக்கிய நேர்த்தியினை மெய்யாகவே அற்புதமானதாக ஆக்கி விடும் என்று அவர்கள் கருதிக் கொண்டனர். நபியின் மீது கல்லாமையைச் சுமத்துவதற்கு அவர்கள் சார்ந்திருந்தது **"உம்மி"** எனும் வார்த்தையாகவே இருந்தது. அந்த முஸ்லிம் "அறிஞர்களின்" துரதிர்ஷ்டமாக இந்த வார்த்தை மிகத் தெளிவாக "புற சமயத்தவர்" அல்லது வேதம் [தோரா, இன்ஜீல் அல்லது குர்ஆன்] எதனையும் பின்பற்றாத ஒருவர் என்று அர்த்தம் தருகின்றது [பார்க்க 2:78,3:20 & 75,62:2]; அதன் அர்த்தம் "எழுத்தறிவற்றவர்" என்பது **அல்ல.**

நபியானவர் வெற்றிகரமான ஒரு வியாபாரியாக இருந்தார். இந்தக் கல்லாமைப் பொய்யினைப் புனைந்துரைத்த அந்த "முஸ்லிம் அறிஞர்கள்" நபியின் காலத்தில் எண்கள் எதுவும் இருக்கவில்லை என்பதை மறந்து விட்டனர்; அகர வரிசையின் எழுத்துக்களே எண்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஒவ்வொரு நாளும் எண்களுடன் புழங்குகின்ற ஒரு வியாபாரியாக, ஒன்று முதல் ஓராயிரம் வரை, அகரவரிசையை நபி அறிந்திருக்க வேண்டியது இருந்தது.

முஹம்மத் இக்குர்ஆனை எழுதிக்கொண்டார் என்று இக்குர்ஆன் நமக்குச் சொல்கின்றது – முஹம்மதின் சமகாலத்தவர்கள் கூறுவதாக மேற்கோள் காட்டப்படுகின்றது, "இவை இவர் எழுதிக் கொண்ட கடந்த காலத்திய கட்டுக்கதைகளேயாகும். அவருக்கு அவை பகலும் இரவும் படித்துக்காட்டப்படுகின்றன" [25:5]. எழுத்தறிவற்ற ஒரு நபரிடம் நீங்கள் எழுதிக் கொள்வதற்காகப் "படித்துக்காட்ட இயலாது". கல்லாமை கொண்டு அவரைக் குற்றஞ்சாட்டுகின்றவர்களான நபியின் விரோதிகள், குறிப்பிடப்பட்டு முந்திய வேதங்களுடன் தொடர்புடைய வசனம் 29:48 –ஐத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

ஹி.மு. 13–ல் [ஹிஜ்ரத்திற்கு முன்னர்] ரமளானின் 27–வது இரவின் போது, முஹம்மத் எனும் ஆன்மா, உண்மையான அந்நபர், அந்த உடல் அல்ல, மிகவும் மேலான பிரபஞ்சத்திற்கு வரவழைக்கப்பட்டதுடன் குர்ஆன் அவருக்கு கொடுக்கப்பட்டது [2:97,17:1,44:3,53:1–18,97:1–5]. அதனைத் தொடர்ந்து, அந்த ஆன்மாவில் இருந்து முஹம்மதின் நினைவிற்கு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குர்ஆனின் ஒரு சில வசனங்களை வெளியிடுவதற்கு வானவர் கேப்ரியேல் முஹம்மதுக்கு உதவினார். நபியானவர் அப்போதுதான் அவருடைய மனதிற்குள் வெளியிடப்பட்ட வசனங்களை எழுதிக்கொண்டதுடன் மனப்பாடமும் செய்து கொண்டார். நபி மரணித்த போது, ஒவ்வொரு வசனத்தையும் எங்கு அமைக்க வேண்டுமென்ற குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுடன் கூடிய, வெளிப்பாட்டின் வரிசை முறையில் தன்னுடைய சொந்த கரத்தினால் எழுதப்பட்ட, முழுமையான குர்ஆனை அவர் விட்டுச் சென்றார், நபியினால் பதியப்பட்டிருந்த தெய்வீக அறிவுறுத்தல்கள், இவ்வுலகிற்குரிய கடவுளின் இறுதி ஏற்பாட்டிற்கென உத்தேசிக்கப் பட்டிருந்த இறுதி வடிவத்திற்கு இக்குர்ஆனை ஒன்று சேர்த்து அமைக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தன [75:17] ஆரம்பகால முஸ்லிம்கள் கலீஃபா ரஷீத் உத்மானின் காலம் வரை இக்குர்ஆனை ஒன்றுபடுத்தி அமைக்க முன்வரவில்லை. இந்தக் கடினமான பணியை செயல் வடிவில் கொண்டு வர ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. விபரங்களுக்கு பின் இணைப்பு 24–ஐப் பார்க்கவும்

*****************************

## பின் இணைப்பு 29

# இடம் பெறாத பஸ்மலஹ்

இக்குர்ஆனில் உள்ள ஒவ்வொரு சூராவும் *பஸ்மலஹ்* என்று அறியப்படுகின்ற, "கடவுளின் பெயரால், மிக்க அருளாளர், மிக்க கருணையாளர்", எனும் வாசகத்துடன் துவங்குகின்றது, சூரா 9–ஐத் தவிர. சூரா 9–ல் கவனத்தை ஈர்க்கின்ற *பஸ்மலஹ்*வின் இந்த இடம் பெறாமை, 14 நூற்றாண்டுகளாக இக்குர்ஆனின் ஆர்வம் தூண்டுகின்ற ஒரு முக்கிய அம்சமாகவே இருந்து வந்துள்ளது. இந்த வினோத நிகழ்வினை விவரிக்க ஏராளமான வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இடம் பெறாத *பஸ்மலஹ்*வானது [1] இக்குர்ஆனுடைய கணித அற்புதத்தின் பொருள் பொதிந்ததோர் அங்கமாகவும், அத்துடன் [2] சூரா 9 சீர்குலைக்கப்பட்டுள்ளதுடன் தூய்மைப்படுத்தப்பட்டாக வேண்டும் என்று மிக்க அருளாளர், மிக்க கருணையாளர் வசமிருந்து ஒரு பளிச்சிடுகின்ற அத்தாட்சியாகவும் குறிப்பிடத்தக்கதொரு பங்காற்றுகின்றது என்பதை இப்போது நாம் அறிந்து கொள்கின்றோம் [பின் இணைப்பு 24]. இடம்பெறாத இந்த *பஸ்மலஹ்*வின் இரண்டு பணிகளும் குர்ஆனுடைய கணிதக் குறியீட்டின் கண்டுபிடிப்புடன் வெளிப்படுத்தப்பட்டது.

*அட்டவணை 1: இடம்பெறத் தவறுகின்ற பஸ்மலஹ் முதல் உபரியான பஸ்மலஹ் வரை "அல்லாஹ்" எனும் வார்த்தையைக் கொண்டுள்ள வசனங்கள்.*

| சூரா எண் | "அல்லாஹ்"இ/பெ வசனங்கள் |
|---|---|
| 9 | 100 |
| 10 | 49 |
| 11 | 33 |
| 12 | 34 |
| 13 | 23 |
| 14 | 28 |
| 15 | 2 |
| 16 | 64 |
| 17 | 10 |
| 18 | 14 |
| 19 | 8 |
| 20 | 6 |
| 21 | 5 |
| 22 | 50 |
| 23 | 12 |
| 24 | 50 |
| 25 | 6 |
| 26 | 13 |
| 27 | 6 |
| 342 | 513 |
| (19x18) | (19x27) |

உண்மைகளின் அடிப்படையிலான முடிவுகளின் கீழ்க்கண்ட பட்டியல் இடம்பெறாத *பஸ்மலஹ்*வின் அற்புதமயமான முக்கிய அம்சங்களைச் சித்தரிக்கின்றது.

**(1)** *பஸ்மலஹ்* 19 அரபி எழுத்துக்களைக் கொண்டிருப்பதனாலும், ஒன்றைத் தவிர அனைத்து சூராக்களிலும் முன்வைக்கப்பட்டிருப்பத னாலும், இக்குர்ஆனின் 19–ன் அடிப்படையில் ஆன குறியீடு கட்டப் பட்டுள்ள அஸ்திவாரமாக அது கருதப்பட வேண்டும். ஆனால் சூரா 9–ல் *பஸ்மலஹ்*வின் இந்த இடம் பெறாமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் துவக்க வாசகத்தின் எண்ணிக்கையை, குர்ஆனுடைய கணிதக் குறியீட்டுடன் ஒத்துப் போகாத ஓர் எண்ணான 113 ஆக்கக் காரணமா கின்றது. ஆயினும், இந்தப் பற்றாக்குறையானது சூரா 27–ல் ஈடுசெய்யப் பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். சூரா–27ல் ஒரு துவக்கமாகவும் வசனம் 30–ல் ஒன்றாகவும் இரண்டு *பஸ்மலஹ்*கள் இடம் பெறுகின்றன. இது குர்ஆனில் *பஸ்மலஹ்*களின் மொத்த எண்ணிக்கையை 114, 19X6–க்கு மீட்டுக் கொண்டுவருகின்றது.

**(2)** சூரா 9–ல் இடம் பெறாத *பஸ்மலஹ்*வில் இருந்து சூரா 27–ன் அதிகப்படியான *பஸ்மலஹ்* வரை, அங்கு 19 சூராக்கள் உள்ளன.

**(3)** இடம் பெறாத *பஸ்மலஹ்*வில் இருந்து, அதிகப்படியான *பஸ்மலஹ்*வரை (சூரா 27) உள்ள சூரா எண்களின் கூட்டுத் தொகையானது 9+10+11 + 12+............25 + 26 + 27 = 342, 19X18. இது ஒரு கணிதவியல் தன்மை யாகும், தொடர்ச்சியான 19 எண்கள் எதுவும் கூட்டப்பட்டால் விளை வது 19–ன் பெருக்குத் தொகையாகவே இருக்கும். ஆனால் இங்கு அற்புதமயமான வினோத நிகழ்வு என்னவென்றால், இந்த எண், 342, சூரா 27–ன் முதல் *பஸ்மலஹ்வில்* இருந்து 27:30–ல் உள்ள இரண்டாவது *பஸ்மலஹ்* வரையுள்ள வார்த்தைகளின் எண்ணிக் கைக்குச் சமமானதாக உள்ளது,

*அட்டவணை2: இடம்பெறத் தவறுகின்ற பஸ்மலஹ் முதல் உபரியான பஸ்மலஹ் வரை உள்ள சூராக்கள் &வசனங்கள்.*

| சூரா | வசனங்கள் | வசன எண்களின் கூட்டுத் தொகை |
|---|---|---|
| 9 | 127 | 8128 |
| 10 | 109 | 5995 |
| 11 | 123 | 7626 |
| 12 | 111 | 6216 |
| 13 | 43 | 946 |
| 14 | 52 | 1378 |
| 15 | 99 | 4950 |
| 16 | 128 | 8256 |
| 17 | 111 | 6216 |
| 18 | 110 | 6105 |
| 19 | 98 | 4851 |
| 20 | 135 | 9180 |
| 21 | 112 | 6328 |
| 22 | 78 | 3081 |
| 23 | 118 | 7021 |
| 24 | 64 | 2080 |
| 25 | 77 | 3003 |
| 26 | 227 | 25878 |
| 27 | 29 | 435 |
| 342 | 1951 | 117673 |

1951+117673=119624=19x6296

**(4)** 27:30–ல் அதிகப்படியான *பஸ்மலஹ்* இடம்பெறுவதானது, அந்த சூரா எண்ணுடன் வசன எண்ணைக் கூட்ட கிடைப்பது 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது என்பதில் குர்ஆனின் குறியீட்டுடன் ஒத்துப் போகின்றது (27+30=57=19X3).

**(5)** அதிகப்படியான *பஸ்மலஹ்* வசனம் 27:30 – ல் இடம் பெறுதல், வசனம் 30 – ல் தான் (சூரா 74) 19 எனும் எண்ணே இடம் பெறுகின்றது என்பதுடன் ஒத்ததாக உள்ளது.

**(6)** இக்குர்ஆன் 6234 எண் இடப்பட்ட வசனங்களைக் கொண்டுள்ளது. சூரா 9–ல் *பஸ்மலஹ்* வின் இடம் பெறாமையும், அத்துடன் சூரா 27 –ன் வசனம் 30–ல் அது ஈடு செய்யப்படுவதுமாக எண் இடப்பட்ட *பஸ்மலஹ்கள்* இரண்டினையும், 1:1 & 27;30, மற்றும் 112 எண் இடப்படாத *பஸ்மலஹ்களையும்* நமக்குத் தருகின்றது. இது இக்குர்ஆனில் உள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கையை 6234+112=6346, 19 x 334 என்றாக்கக் காரணமாகின்றது.

**(7)** இடம்பெறாத *பஸ்மலஹ்* வில் இருந்து உபரியான *பஸ்மலஹ்* வரை " அல்லாஹ்" எனும் வார்த்தையைக் கொண்டிருக்கின்ற வசனங்களின் எண்ணிக்கை 513, 19X27 ஆகும். உபரியான *பஸ்மலஹ்* இடம்பெறுகின்ற சூராவின் எண் 27 ஆக உள்ளது என்பதைக் கவனிக்கவும். விவரங்கள் அட்டவணை 1–ல் உள்ளன.

**(8)** இடம் பெறாத *பஸ்மலஹ்வில்* இருந்து உபரியான *பஸ்மலஹ்* வரையுள்ள வசன எண்களின் கூட்டுத் தொகையுடன் (1+2+3+............+n), வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்ட 119624, 19X6296 ஆகும். பார்க்க அட்டவணை 2.

**(9)** சூரா 9 கொண்டிருப்பது 127 வசனங்களே, 129 அல்ல என்பதையும் கூட இந்தத் தகவல் நிரூபிக்கின்றது (பார்க்க பின் இணைப்பு 24). 127 – ன் இலக்கங்களுடைய கூட்டுத் தொகை 1+2+7=10 ஆகும். சூரா 9 –ன் இடம் பெறாத *பஸ்மலஹ்வில்* இருந்து சூரா 27 – ன் உபரியான *பஸ்மலஹ்* வரை, அவற்றின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற அனைத்து வசனங்களையும் கண்டெடுத்து, பின்னர் இந்த வசனங்களின் எண்ணிக்கையை, இடம் பெறாத *பஸ்மலஹ் வில்* இருந்து அதிகப்படியான *பஸ்மலஹ்* வரையுள்ள வசனங்களின் எண்ணிக்கையுடன் கூட்டுவதன் மூலம், நாம் பெறுவது 2128, அல்லது 19X112. (அட்டவணை 3.)

**(10)** சூரா 9, அதன் வசனங்களின் எண்ணிக்கையும் கூட (127) ஒற்றைப்படை எண்ணாகவே உள்ள ஓர் ஒற்றைப்படை எண் இடப்பட்ட சூராவாகும். இடம் பெறாத *பஸ்மலஹ்வில்* இருந்து உபரியான *பஸ்மலஹ்* வரை இந்தத் தனித்தன்மையைப் பெற்றிருக்கின்ற 7 சூராக்கள் உள்ளன; அவற்றின் வசனங்களின் எண்ணிக்கைகளும்கூட ஒற்றைப்படை எண்ணாகவே உள்ள ஒற்றைப்படை எண் இடப்பட்ட சூராக்களாக அவை உள்ளன. அட்டவணை 4–ல் விவரிக்கப்பட்டுள்ளபடி இவை சூராக்கள் 9, 11, 13, 15, 17, 25 மற்றும் 27 ஆகியனவாகும், இந்த சூரா எண்களிலும் வசனங் களின் எண்ணிக்கையிலும் அங்கமாகவுள்ள இலக் கங்களைக் கூட்டுவதன் மூலம், முழுமையான மொத்த எண்ணிக்கை 114, 19X6 ஆகும்.

**(11)** அடுத்த இரு விசேஷ அம்சங்கள், இடம்பெறாத *பஸ்மலஹ்* மற்றும் (இரண்டு போலி வசனங்கள் திணிக்கப்பட்ட) சூரா 9 –ல் உள்ள வசனங்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டின் உண்மையையும் நிரூபிக்கின்றது. அட்டவணை 4–ல் பட்டியலிடப்பட்டுள்ள அதே சூராக்களை, அவற்றின் வசனங்களின் எண்ணிக்கையும் கூட ஒற்றைப்படை எண்ணாகவே உள்ள ஒற்றப்படை எண் இடப்பட்ட சூராக்களை நாம் எடுத்து, ஒவ்வொரு சூரா எண்ணையும், தொடர்ந்து அதன் வசனங்களின் எண்ணிக்கையையும் எழுதினால், விளைகின்ற நீண்ட எண் (30 இலக்கங்கள்) 19–ன் ஒரு பெருக்குத் தொகையாக உள்ளது (படம் 1).

*அட்டவணை 3: இடம் பெறத் தவறுகின்ற பஸ்மலஹ் முதல் உபரியான பஸ்மலஹ் வரை, அவற்றின் இலக்கங்கள் கூட்டப்பட்டால் 10 வருகின்ற வசனங்கள்*

| சூரா எண் | வசனங்களின் எண்ணிக்கை | இடம் பெறுதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9 | 127 | 12 |
| 10 | 109 | 10 |
| 11 | 123 | 11 |
| 12 | 111 | 10 |
| 13 | 43 | 3 |
| 14 | 52 | 4 |
| 15 | 99 | 9 |
| 16 | 128 | 12 |
| 17 | 111 | 10 |
| 18 | 110 | 10 |
| 19 | 98 | 9 |
| 20 | 135 | 12 |
| 21 | 112 | 10 |
| 22 | 78 | 7 |
| 23 | 118 | 11 |
| 24 | 64 | 6 |
| 25 | 77 | 7 |
| 26 | 227 | 22 |
| 27 | 29 | 2 |
| 342 | 1951 | 177 |

(19x18) x 1951+177=2128=19x112

*அட்டவணை 4: அவற்றின் வசனங்களின் எண்ணிக்கையும் கூட ஒற்றைப்படையாகவே உள்ள ஒற்றைப்படை எண் இடப்பட்ட சூராக்கள்*

| சூரா எண் | இலக்கங்களின் கூட்டுத்தொகை | வசனங்களின் எண்ணிக்கை | இலக்கங்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|---|
| 9 | 9 | 127 | 10 |
| 11 | 2 | 123 | 6 |
| 13 | 4 | 43 | 7 |
| 15 | 6 | 99 | 18 |
| 17 | 8 | 111 | 3 |
| 25 | 7 | 77 | 14 |
| 27 | 9 | 29 | 11 |
| | 45 | | 69 |

45+69=114=19x6

(12) இடம் பெறாத *பஸ்மலாவில்* இருந்து உபரியான *பஸ்மலஹ்* வரையுள்ள அனைத்து வசனங்களின் கடைசி இலக்கத்தை நாம் எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு சூராவின் எண்ணையும், தொடர்ந்து அந்த சூராவில் உள்ள ஒவ்வொரு வசனத்தினுடைய கடைசி இலக்கத்தையும் நாம் எழுதினால், 19–ஆல் வகுபடுகின்ற, 1988 இலக்கங்கள் கொண்ட, நீண்டதோர் எண்ணை நாம் அடைகின்றோம் (படம் 2).

| |
|---|
| **9 127 11 123 13 43 15 99 17 111 25 77 27 29** |
| **ஒவ்வொரு சூரா எண்ணும் அந்த சூராவில் உள்ள வசனங்களின் எண்ணிக்கையைக் கொண்டு தொடரப்படுகின்றது.** |
| **இந்த நீண்ட எண் 19 x 4803742753338505219532240909 1 - க்குச் சமமாகின்றது. (படம் 1)** |

| |
|---|
| **9 1 2 3 4 5 6 7 8 9 0 1 2 3 ... ...27 1 2 3 4 5 6 7 8 9 0 ... 789** |
| **சூரா 9–ல் இருந்து சூரா 27, வசனம் 29 வரை சூராவின் எண்ணானது ஒவ்வொரு வசன எண்ணிலும் உள்ள கடைசி இலக்கத்தினைக் கொண்டு தொடரப்படுகின்றது. (படம் 2)** |

****************************

### பின் இணைப்பு 30

## பலதார மணம்

1400 வருடங்களுக்கு முன்னர் இக்குர்ஆன் வெளிப்படுத்தப்படுகின்ற வரை பலதார மணம் ஒரு வாழ்க்கை முறையாகவே இருந்தது. இந்த பூமி இளமையானதாகவும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டதாகவும் இருந்த போது, அதன் மக்கள் தொகையைப் பெருக்கி கடவுளின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அவசியமான மானிட இனத்தவர்களைக் கொண்டுவருவதற்கு, பலதார மணம் ஒரு வழியாக இருந்தது. இக்குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட நேரத்தில், இவ்வுலகம் போதுமான அளவு மக்கள் தொகையுடையதாக ஆகி இருந்தது, எனவே இக்குர்ஆன் பலதாரமணத்திற்கு எதிரான முதல் வரையறைகளை விதிக்கின்றது.

இக்குர்ஆனில் பலதார மணம் அனுமதிக்கப்பட்டுள்ளது, ஆனால் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுகின்ற சூழ்நிலைகளின் கீழ் மட்டுமே. இந்தத் தெய்வீக அனுமதியின் எந்த துஷ்பிரயோகமும் கடும் தண்டனைக்கு உள்ளாக்குகின்றது. எனவே, பலதாரமணம் கடவுளால் அனுமதிக்கப்பட்டதாக இருந்த போதிலும், குறிப்பிட்டதொரு பலதார உறவுமுறை அனுமதிக்கப்பட்டதுதான் என்று கூறுவதற்கு முன் நமது சூழ்நிலைகளை கவனத்துடன் ஆராய்வதை அது நமக்கு அவசியமாக்குகின்றது.

இங்கே நமக்கு மிகச்சரியான உதாரணம் முஹம்மத் நபி ஆவார். கதீஜா எனும் ஒரே மனைவிக்கே, அவர் மரணிக்கின்ற வரை, அவர் மணம் முடிக்கப்பட்டிருந்தார். அவர் தன்னுடைய குழந்தைகள் அனைவரையும், ஒருவரைத் தவிர, கதீஜாவின் மூலமாகவே பெற்றிருந்தார். இவ்விதமாக, அவருடன் அவர் மணம் முடிக்கப்பெற்றிருந்த காலம் எல்லாம், இருபத்தி ஐந்து ஆண்டுகள், அவரும் அவருடைய குழந்தைகளும் நபியின் முழுமையான கவனிப்பை மகிழ்வுடன் அனுபவித்தனர். நடைமுறைக் காரணங்கள் அனைத்திற்கும், முஹம்மத் ஒரு மனைவியையே கொண்டிருந்தார் – 25 வயதில் இருந்து 50 வயது வரை. அவருடைய வாழ்வின் எஞ்சிய 13 வருடங்களின் போது, பல குழந்தைகளை விட்டுச் சென்ற அவருடைய நண்பர்களின் வயதான விதவையரை அவர் மணந்து கொண்டார். அக்குழந்தைகளுக்கு ஒரு தந்தையின் வடிவுடன் கூடிய, முழுமையானதொரு இல்லம் தேவைப்பட்டது, எனவே நபி அதனை வழங்கினார். இக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள பலதார மணத்திற்கு ஆதரவான குறிப்பிட்ட ஒரே சூழ்நிலையானது அனாதைக் குழந்தைகளுக்கு ஒரு தந்தையின் வடிவத்தை வழங்குவதேயாகும் (4:3).

அனாதைகளின் விதவைத் தாய்மார்களை மணந்து கொண்டதற்கு அப்பால், நபியின் வாழ்வில் மூன்று அரசியல் திருமணங்கள் இருந்தன. அவருடைய நெருங்கிய நண்பர்களான அபூபக்ரும், உமரும், தங்களுக்கிடையில் பரம்பரைக் குடும்ப உறவுகளை நிலைப்படுத்திக் கொள்ள, தங்களுடைய மகள்களான ஆயிஷா மற்றும் ஹஃப்ஸாவை அவர் மணமுடித்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர். மூன்றாம் திருமணம் மரியா எனும் எகிப்தியருடன் ஆனது; அவர் எகிப்தின் ஆட்சியாளரிடமிருந்து அரசியல் நட்பின் ஒரு சமிக்ஞையாக அவருக்குக் கொடுக்கப்பட்டார்.

மகிழ்ச்சியான மற்றும் நலம் பயக்கின்ற ஒரு குடும்பத்தை வளர்ப்பதற்காக, திருமணத்தில் ஓர் ஆண் தன்னுடைய முழுமையான கவனம் மற்றும் விசுவாசத்தைத் தன் மனைவி மற்றும் குழந்தைகளுக்குக் கொடுத்தாக வேண்டும், என்பதை மிகச் சரியான இந்த உதாரணம் நமக்குச் சொல்கிறது.

பலதாரமணத்திற்கு எதிரான வரையறைகளை இக்குர்ஆன் மிக அழுத்தமான வார்த்தைகளில் வலியுறுத்திக்

கூறுகின்றது: “ஒரு மனைவிக்கும் அதிகமானவர்களை நடத்துவதில் உங்களால் பூரணமான நீதத்துடன் இருக்க முடியாமல் ஆகிவிடக் கூடும் என்று நீங்கள் அஞ்சினால், அப்போது நீங்கள் ஒன்றுடன் திருப்தியடைந்தவராக இருக்க வேண்டும்.” (4:3) “நீங்கள் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும் சரியே, பலதார உறவுமுறை ஒன்றில் நீங்கள் நீதத்துடன் இருக்க இயலாது.” (4:129)

பலதார மணத்திற்கு எதிரான இக்குர்ஆனின் வரையறைகள் கடவுளின் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற சாத்தியத்தை கவனத்திற்குக் கொண்டு வருகின்றது. எனவே, கடவுளின் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படாது என்பதில் பரிபூரணமான நிச்சயத்துடன் நாம் இருந்தாலேயன்றி, நமது காமத்தைத் தடுத்துக் கொண்டு பலதாரமணத்தில் இருந்து விலகியிருப்பதே நமக்கு நலமாகும். சூழ்நிலைகளானவை பலதாரமணத்திற்குக் கட்டளையிடவில்லையென்றால், ஒரு மனைவிக்கும், குழந்தைகளின் ஒரு குழுமத்திற்கும் நமது முழுமையான கவனத்தைத் தருவதே நமக்கு நலமாகும். குறிப்பாக பலதார மணம் தடைசெய்யப்பட்டுள்ள நாடுகளில், குழந்தைகளின் மனோரீதியான மற்றும் சமூக நல்வாழ்வு, கிட்டத்தட்ட ஒரே சீராக ஒரு தார மணத்தையே கட்டளையிடுகின்றது. பலதார மணத்தைப் பற்றிச் சிந்திக்கையில் ஒரு சில அடிப்படை அளவுகோல்கள் கடைப்பிடிக்கப்பட்டாக வேண்டும்.

1. அது வலியையும் கஷ்டத்தையும் நிவர்த்திப்பதாக இருக்க வேண்டுமேயன்றி எந்த வலிக்கோ அல்லது கஷ்டத்திற்கோ காரணமாகக் கூடாது.

2. இளம் குடும்பம் ஒன்று உங்களுக்கு இருக்குமாயின், பலதார மணம் ஒரு துஷ்பிரயோகம் என்பது கிட்டத்தட்ட நிச்சயமே.

3. இளமையான ஒரு மனைவியை மாற்றியமைத்துக் கொள்வதற்காகப் பலதாரமணம் செய்து கொள்ளுதல் கடவுளுடைய சட்டத்தின் ஒரு துஷ்பிரயோகமேயாகும் (4 : 19).

****************************

## பின் இணைப்பு 31

# பரிணாம வளர்ச்சி: தெய்வீகமாகக் கட்டுப்படுத்தப்பட்டது

பரிணாம வளர்ச்சியானது தெய்வீகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும் என்று நாம் இக்குர்ஆனில் இருந்து கற்றுக் கொள்கிறோம்:

| | |
|---|---|
| நீரில் இருந்து உயிர் தோன்றியது: | **“ உயிருள்ளவை அனைத்தையும் நாம் நீரில் இருந்து துவங்கினோம்.” (21:30,24:45)** |

| | |
|---|---|
| மானிடர்கள் குரங்குகளின் வழி வந்தவர்கள் அல்லர்: | **“மனிதனின் படைப்பினை அவர் களிமண்ணில் இருந்து துவக்கினார்” (32:7)** |
| மனிதன் “முற்றிய” களிமண்ணில் இருந்து படைக்கப்பட்டான்: | **“‘முற்றிய’ களிமண்ணில் இருந்து மானிட இனத்தவரை நான் படைக்கின்றேன்” (15:28)** |

பரிணாம வளர்ச்சி குறிப்பிட்டதொரு இனங்களுக்குள் மட்டுமே சாத்தியமானதாகும். உதாரணத்திற்கு, கொட்டையுள்ள ஆரஞ்சில் இருந்தே கொட்டையில்லாத ஆரஞ்சு பரிணாமம் அடைந்தது, ஆப்பிள்களில் இருந்து அல்ல, சாத்தியக்கூறினுடைய சட்டங்கள் இனங்களுக்கிடையில் யதேச்சையான பரிணாம வளர்ச்சியின் சாத்தியத்தை விலக்கி விடுகின்றன.ஒரு மீன் ஆனது ஒரு பறவையாகப் பரிணாமம் அடைய இயலாது; ஒரு குரங்கு ஒரு போதும் ஒரு மானிடனாகப் பரிணாமம் அடைய இயலாது.

# சாத்தியக் கூறினுடைய சட்டங்கள் டார்வினின் பரிணாமத்தை சாத்தியமற்றது என்கின்றன

இந்தக் கணிணி யுகத்தில் குறிப்பிட்டதொரு நிகழ்வு சாத்தியமானதா இல்லையா என்பதை நமக்குக் கூறுகின்ற கணிதரீதியான விதிகள் நம்மிடம் உள்ளன. எண் இடப்பட்ட ஐந்து பகடைகளை மேல் நோக்கிக் காற்றில் நாம் வீசி அவற்றை ஒரு நேர்க்கோட்டில் விழும்படிச் செலுத்தினால், நமக்கு கிடைக்கூடிய கலவைகளின் சாத்தியமான எண்ணிக்கையை சாத்தியக்கூறினுடைய விதிகள் நமக்குச் சொல்கின்றன : 1 X 2 X 3 X 4 X 5 = 120 கலவைகள். எனவே எந்தக் கலவையையும் அடைவதற்குரிய சாத்தியக்கூறானது 120–ல் 1 ஆகும், அல்லது 1/120, அல்லது 0.0086 பகடைகளின் எண்ணிக்கையை நாம் அதிகரிக்கும் போது சாத்தியக்கூறானது வேகமாகக் குறைகின்றது. அவற்றில் ஒன்றினை நாம் அதிகரித்தால், கலவைகளின் எண்ணிக்கை 1 X 2 X 3 X 4 X 5 X 6 = 720 ஆகின்றது, எனவே

எந்தக் கலவையும் கிடைப்பதற்குரிய சாத்தியக்கூறானது 1/720, 0.0014–க்குக் குறைகின்றது. மிகவும் துல்லியமான விஞ்ஞானிகளான, கணிதவியலாளர்கள், பகடைகளின் எண்ணிக்கையை 84 ஆக நாம் அதிகரித்தால், அதன் சாத்தியக்கூறு “பூஜ்யம்” ஆகக் குறைந்து விடுகின்றது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். 84 பகடைகளைக் கொண்டு நாம் செய்தால், சாத்தியக்கூறானது 209 X $10^{-50}$ அல்லது 0. 000000000000000000000000000000000000000000000000209–க்குக் குறைகின்றது.

‘‘உயிர் ஆனது ஒரு ‘தனித்த’ உயிரணுவாகத் துவங்கியது,’’ என்ற டார்வினின் பிரசித்தி பெற்ற கூற்று நகைக்கத்தக்கதாக உள்ளது. மிகச் சமீபமாக 50 வருடங்கள் முன்னர் கூட, வெல்ஸ், ஹக்ஸ்லி மற்றும் வெல்ஸ் தங்களுடைய தரமிகு பாடப்புத்தகத்தில் “தெளிந்த நீர்மத்தைத் தவிர, மையக்கருவின் உள்ளே எந்த ஒன்றும் காணப்பட இயலாது,” என்று எழுதினர். இப்போது நாம் உயிரணுவானது, மையக்கருவின் உள்ளே உயிர்மப் பொருளில் பில்லியன் கணக்கில் நியூக்ளியோடைட்கள் மற்றும் மில்லியன் கணக்கில் உயிர் வேதியியல் எதிர்விளைவுகளுடன், உச்சபட்சச் சிக்கலான ஒன்றாக உள்ளது என்பதை அறிந்திருக்கின்றோம். DNA–க்களுக்குள் உள்ள நியூக்ளியோடைட்களுடைய துல்லியமான வரிசைகளின் யதேச்சையான படைப்பிற்கான சாத்தியக்கூறு பூஜ்யமாகும், பற்பல மடங்குகள் அதிகமாக, என்பதை சாத்தியக்கூறினுடைய விதிகள் நமக்குச் சொல்கின்றன. நாம் 84 நியூக்ளியோடைட்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கவில்லை; ஒரு குறிப்பிட்ட வரிசையில் கட்டமைக்கப்பட வேண்டிய பில்லியன் கணக்கான நியூக்ளியோடைட்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

பரிணாமவாதிகள் சிலர் மானிட உயிர்மமும் குரங்கினுடைய உயிர்மமும் 90% ஒப்பானதாக உள்ளன என்று கூறியுள்ளனர்.எப்படியிருப்பினும்,அந்த ஒற்றுமையானது99% ஆக இருந்தாலும் கூட, அப்போதும் நாம் ஒரு குரங்கினை ஒரு மானிடனாக மாற்றுவதற்கு ஏறுமாறாக மறுவரிசைப்படுத்தப்பட வேண்டிய 300,000,000 நியூக்ளியோடைட்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.சாத்தியக் கூறினுடைய விதிகள் இதனை முற்றிலும் சாத்தியமற்றது என விலக்கி விடுகின்றன.மானிட உயிர்மம் 30,000,000,000 நியூக்ளியோடைட்களைக் கொண்டுள்ளது; அதன் 1% தான் 300,000,000ஆகும்.

இங்கே மிகப் பொருத்தமான ஒரு மேற்கோள் பேராசிரியர் எட்வின் கான்க்ளின் உடையதாகும் அவர் கூறினார்:

**தற்செயல் நிகழ்வில் இருந்து உயிர் துவங்கியது என்பதன் சாத்தியக்கூறானது ஓர் அச்சுத் தொழிற்சாலையில் நிகழ்ந்த ஒரு வெடிப்பினில் இருந்து சுருக்கப்படாத ஒரு சொல்லகராதி வெளி வருவதன் சாத்தியக்கூறுடன் ஒப்பிடக்கூடியதாகும்.**

****************************

### பின் இணைப்பு 32

# தீர்மானிக்கின்ற வயதான 40

பொறுப்பேற்படுதலுக்கு உரிய வயது என்ன? கடவுளைப் பற்றிக் கேள்விப்படாமலேயே, 12 வயதில் ஒரு குழந்தை இறந்து விட்டால், இந்தக் குழந்தை சுவனத்திற்குச் செல்லுமா, அல்லது நரகத்திற்கா? அக்குழந்தை 15 அல்லது 21, அல்லது 25 வயதில் இருந்தால் அப்போது என்ன நிலை? எத்தனை வயதில் மானிட இனத்தவர் அவனுடைய அல்லது அவளுடைய நம்பிக்கைக்குப் பொறுப்பாகப் பிடிக்கப்படுவார்? நீண்டதொரு காலமாக இந்தக் கேள்வி அனைத்து மதங்களையும் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களைப் புதிரில் ஆழ்த்தி வந்துள்ளது.

பொறுப்பிற்கு உரிய வயதாக இக்குர்ஆன் 40–ஐ விதிக்கின்றது; இந்த வயதிற்கு முன்னர் மரணிக்கின்ற எவரொருவரும் சுவனத்திற்குச் செல்கின்றார் (46:15). அந்நபர் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு மேலும் அந்த ஆத்மாவை ஊட்டப்படுத்தி முன்னேற்றிக் கொள்வதன்மூலம் நம்பிக்கையில் இருந்து பயனடைந்து கொண்டால் (பார்க்க பின் இணைப்பு 15), அவன் அல்லது அவள் மேலான சுவனத்திற்குச் செல்கின்றார். இல்லையேல், அந்நபர் தாழ்வான சுவனத்திற்குச் செல்கின்றார்.

இந்த தகவல் துணுக்கிற்கு உங்களுடைய முதல் எதிர்வினை ஆட்சேபனையேயாகும் : “அந்நபர் உண்மையில் கெட்டவனாக, பாவியாக, மேலும் ஒரு நாத்திகனாகவும் இருந்தால் என்ன நிலை,40 வயதுக்கு முன்னர் இவர் மரணித்து விட்டால் அவர் சுவனத்திற்குச் செல்வாரோ?’’ இது ஏனெனில் நீங்கள் பெருந்தன்மையற்றவர்களாக இருப்பதே, அதே சமயம் கடவுளோ மிக்க கருணையாளராக இருக்கின்றார். நம்முடைய சுபாவமோ “அவர்கள் அனைவரையும் நரகத்தில் போடுங்கள்” என்பதேயாகும்.

இந்த தெய்வீகக் கருணையை கடுமையாக ஆட்சேபிக்கின்ற மக்களால் பொறுப்பிற்குரிய குறிப்பான வயதைக் கொண்டு வர முடிவதில்லை.‘‘உண்மையில் அந்நபர் தீயவராக இருந்தால் அப்போது என்ன நிலை?’’ போன்ற கேள்விகளை அவர்கள் கேட்கின்றனர். அதற்கு விடையாவது,“இந்த நபர் தீயவராக இருந்தார் என்பது கடவுளுக்குத்

தெரியுமல்லவா?'' ''ஆம்''. ''இந்த நபர் சுவனத்திற்குச் செல்லத் தகுதியானவர் அல்ல என்பது கடவுளுக்குத் தெரியுமல்லவா?" "ஆம்". "எனவே, இந்த நபர் 40 வயதுக்கு முன்னர் மரணிக்க மாட்டார்." அந்த அளவு எளிதானது தான். இந்த பூமியில் நமது வாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருகின்ற ஒரே ஒருவர் கடவுளாகத்தான் இருக்கின்றார். சுவனத்திற்குச் செல்கின்ற தகுதியுடையவர் யார் என்றும் நரகத்திற்குச் செல்கின்ற தகுதியுடையவர் யார் என்றும் அவர் மிகச்சரியாக அறிந்திருக்கின்றார்.

சமீபமாக 1989–ல் (Theodore Robert Bundy) தியோடர் ராபர்ட் பன்டி எனும் பெயர் கொண்ட ஒரு மனிதன் பல பெண்களைக் கொன்றதற்காக மரணதண்டனை அளிக்கப்பட்டான். சரித்திரத்தில் மிகக் கொடூரமான குற்றவாளிகளில் ஒருவனாக அவன் இருந்தான் என்பதை தேசம் முழுமையும் ஒப்புக்கொண்டது. எந்த அளவுக்கெனில் மரண தண்டனை எதிர்ப்பாளர்கள் கூட அவனுடைய மரண தண்டனையை ஆட்சேபிக்காத அரிய சம்பவங்களில் ஒன்றாக அது இருந்தது. அதற்கு மாறாக, ஏராளமான மக்கள் உண்மையில் அவனுடைய மரண தண்டனையைக் கொண்டாடினர். எண்ணற்ற பத்திரிகையாளர்கள், தலையங்கங்கள், மற்றும் அரசியல்வாதிகள் டெட் பண்டிக்கு மரணதண்டனை அளிப்பதற்கு நீதி பரிபாலனம் பதினொரு வருடங்கள் எடுத்துக் கொண்டது எனும் நிதர்சனத்திற்காகப் புலம்பினர். அவனுடைய குற்றம் நிருபிக்கப்பட்டு அதிகபட்சம் ஆறு வருடங்களுக்குள் பண்டிக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர். இக்குர்ஆனைப் பொறுத்தவரை, அது பண்டிக்கு எவரொருவரும் செய்திருக்கக் கூடிய மிகப்பெரிய சலுகையாக இருந்திருக்கும். மரணதண்டனை நிறைவேற்றப்பட்டபோது அவன் 42 வயதுடையவனாக இருந்தான். ஐந்து வருடங்கள் முன்னதாக, 37 வயதில் அவனுக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டிருந்தால், அவன் நேரடியாகச் சுவனத்திற்குச் சென்றிருப்பான், ஆனால் அவன் அதற்குத் தகுதியானவனாக இருக்கவில்லை.

இப்போது வெளிப்பட்டுள்ளபடி, 40 வயதுக்கு முன்னர் மரணிக்கின்ற எவரொருவரும் சுவனத்திற்குச் செல்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கடவுள் நமக்குத் தந்துள்ள அத்தாட்சிகளில் ஒன்றாக பண்டி இருந்தான். பண்டியின் பெயர், Theodore Robert Bundy, 19 எழுத்துக்களைக் கொண்டுள்ளது, அத்துடன் அவனுடைய மரண தண்டனைக்குச் சரியாக ஒரு நாள் முன்னர் 19 பெண்களைக் கொன்றதாக அவன் ஒப்புக் கொண்டான். கடவுளிடமிருந்து மற்ற பல அத்தாட்சிகளும் இருந்தன.

முக்கியமான இந்தத் தகவல் துணுக்கினைச் சேர்ப்பித்தல் கடவுளின் உடன்படிக்கைத் தூதர் என்ற முறையில் எனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களில் ஒன்றாக உள்ளது. இது ***என்னுடைய*** தனிப்பட்ட அபிப்பிராயம் அல்ல.

மார்ட்டின் லூதர் கிங் மற்றும் மால்கம் X இருவரும் அவர்களுடைய 40–வது பிறந்த நாளுக்குச் சரியாக சில மாதங்களுக்கு முன்னர்தான் கொல்லப்பட்டனர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

****************************

### பின் இணைப்பு 33

# கடவுள் ஏன் இப்பொழுது ஒரு தூதரை அனுப்பினார்?

3:81, மற்றும் பின் இணைப்பு 2–ல் கூறப்பட்டுள்ளபடி, நபிமார்கள் அனைவராலும் சேர்ப்பிக்கப்பட்ட தூதுச் செய்திகளை ஒருங்கிணைத்து அவற்றைத் தூய்மைப்படுத்தி அத்துடன் அவற்றை சரணடைதல் எனும் ஒரே மார்க்கமாக ஒன்றிணைப்பதற்காகக் கடவுள் ஒரு தூதரை அனுப்பியுள்ளார். கீழ்க்கண்ட காரணங்களினால், முக்கியமான இந்த முன்னறிவிப்பினை நிறைவேற்றுவதற்குரிய காலம் நிச்சயமாக கனிந்துவிட்டது.

1. யூதமதம், கிறிஸ்துவம், மற்றும் இஸ்லாம் ஆகியவை அடையாளங்காண முடியாதவாறு சீர்கெடுக்கப்பட்டு விட்டன.

2. கடவுளின் தூதுச்செய்திகள் அனைத்தும் சேர்ப்பிக்கப்பட்டு விட்டன; குர்ஆன்தான் இறுதி ஏற்பாடாக உள்ளது.

3. இந்த உலகத்தில் வாழ்வதற்கென விதிக்கப்பட்டுள்ள மானிட இனத்தவர்களில் 93% க்கும் அதிகமானோர் இனிமேல்தான் வர இருக்கின்றனர்.அறிமுகவுரையில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி,பக்கம் xiv, ஆதம் முதல் இந்தப் பூமியில் வசித்த மக்கள், எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த மக்கள் தொகையில் பதினைந்தில் ஒரு பங்கினராகவே உள்ளனர்.

## யூதமதம்

சீர்கெட்டுவிட்ட இன்றைய யூதமதத்தின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளை பிரசித்தி பெற்ற யூதமதகுருவான ஹெரால்ட் எஸ். குஷ்னரின் புத்தகங்களில் காணலாம். Avon books,1981–ல் வெளியிட்ட **நல்ல மனிதர்களுக்கு கெட்ட விஷயங்கள் நடக்கும் பொழுது**, WHEN BAD THINGS HAPPEN TO GOOD PEOPLE, எனும் நன்கு விற்பனையான அவருடைய புத்தகத்தில், யூதமதகுரு குஷ்னர் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்:

....., நம்மால் இயன்ற அளவு இந்த உலகத்தைக் கருத்துடன் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு நாம் உபதேசிக்கப்படுவோம்,ஒரு வேளை நமக்கு எப்பொழுதும் இருக்கக்கூடிய ஒன்றே ஒன்றாக இது இருக்கும் பட்சத்தில், இங்கேயே அர்த்தத்தையும் நீதியையும் காண்பதற்காக. (பக்கம் 29)

இந்த உலகத்தில் நல்ல மனிதர்களுக்குக் கெட்ட விஷயங்கள் நிகழவே செய்கின்றன, ஆனால் அதனை நாடியவர் கடவுள் அல்ல. மக்கள் அவர்களுக்குத் தகுதியானவற்றைப் பெற வேண்டுமெனக் கடவுள் விரும்பக் கூடும்,ஆனால் எல்லா நேரங்களிலும் அதனை அமைத்துத் தர அவரால் இயலாது. (பக்கம் 42)

நன்னெறியாளர்களைத் தீங்கில் இருந்து பாதுகாப்பதற்காகக் கடவுள் இயற்கை விதிகளின் பணிகளில் குறுக்கிட கீழிறங்கி வருவதில்லை.நல்ல மனிதர்களுக்குக் கெட்ட விஷயங்கள் நிகழக் காரணமாகின்ற நம்முடைய உலகின் இரண்டாவது வட்டாரம் அதுவாகும், மேலும் கடவுள் அதனைச் செய்யவில்லை, அத்துடன் அவரால் அதனைத் தடுத்து நிறுத்தவும் இயலாது. (பக்கம் 58)

கடவுளால் எல்லாவற்றையும் செய்ய இயலாது,ஆனால் முக்கியமான சில விஷயங்களை அவரால் செய்ய இயலும். (பக்கம் 113)

நோய்களில் நாம் பாதிக்கப்படாமல் ஆக்குமாறு நாம் அவரைக் கேட்க முடியாது, ஏனெனில் அவரால் அதனைச் செய்ய இயலாது. (பக்கம் 125)

அவருடைய எல்லைகளை நான் அடையாளம் காண்கின்றேன். இயற்கையின் சட்டங்களினாலும், மானிட இயற்கையின் பரிணாமம் மற்றும் மானிட ஒழுக்கச் சுதந்தரத்தினாலும் அவரால் செய்யப்படக் கூடியவற்றில் அவர் எல்லைக்குட்பட்டவராக உள்ளார். (பக்கம் 134)

## கிறிஸ்துவம்

ஜீஸஸ் இன்று உயிருடன் திரும்பி வந்தால், கிறிஸ்துவர்களே அவரைச் சிலுவையிலறைந்து விடுவார்கள். இன்றையக் கிறிஸ்துவத்துடன் ஜீஸஸுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை, அத்துடன் அதன் மதக்கோட்பாடு,துர்பிரசித்தி பெற்ற நைசீன் மாநாடுகளில் (கி.பி.325)அதீதமாகச் சீர்கெடுக்கப்பட்டு விட்டது என்பதில் பிரபலமான கிறிஸ்துவ அறிஞர்கள் உறுதியான தீர்மானங்களை அடைந்துள்ளனர். 1977–ல் ஃபிலடெல்ஃபியாவின், வெஸ்ட்மினிஸ்டர் பதிப்பகம் வெளியிட்ட THE MYTH OF GOD INCARNATE (கடவுளின் அவதாரம் எனும் கட்டுக்கதை) எனும் புத்தகத்தைப் பார்க்கவும்.

## இஸ்லாம்

முஹம்மத் இந்த உலகத்திற்கு திரும்பி வந்தால் ''முஸ்லிம்கள்'' அவரைக் கல்லால் அடித்துக் கொன்று விடுவார்கள்.இன்று அவர்கள் பின்பற்றுகின்ற மார்க்கத்திற்கும் ஆப்ரஹாம் மற்றும் முஹம்மத் போதித்த இஸ்லாம்,அதாவது சரணடைதலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ''முஸ்லிம்கள்'' செய்கின்ற ஒவ்வொன்றும் தவறானதாகும்:முதல் தூண் *(ஷஹாதஹ்)*, *ஸலாத்* தொழுகைக்கான அழைப்பு (*அதான்*), அங்கசுத்தி(*உளூ*), அன்றாட *ஸலாத்* தொழுகைகள், **ஜகாத்** தர்மம், ஹஜ், மற்றும் இஸ்லாமின் மற்ற அனைத்து அனுஷ்டானங்களும் (பார்க்க பின் இணைப்புகள் 2, 13 &15).

# “கடவுளால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படாத ஒரு மார்க்கம்”

## (42:21)

இஸ்லாம் (சரணடைதல்)எந்த அளவுக்கு சீர் கெடுக்கப்பட்டுள்ளது எனக் கீழ்க்கண்ட அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது:

| புகுத்தப்பட்ட புதுமைகள் | மீறப்படுகின்ற குர்ஆனுடைய கோட்பாடுகள் |
|---|---|
| ஹதீஸ் மற்றும் சுன்னா | 6:19,38,114;7:1–3;12:111; 17:46;31:6;45:6;69:38–47; இன்னும் ஏராளமானவை |
| மதத்தை விட்டு வெளியேறிய ஒருவர் என்று அவர்கள் கருதுகின்ற எவரையும் கொலை செய்தல் | 2:256; 4:90;10:99;18:29; 88:21–22 |
| கொடூரமான குற்றவியல் நீதி முறை: | |
| திருடனின் கரத்தை வெட்டியெடுத்தல் | 5:38,12:31. |
| திருமணத்திற்குப் பின் கள்ளத்தொடர்பு கொள்பவர்களை கல்லால் அடித்துக் கொல்லுதல் | 4:25,24:2 |
| ஸலாத்தைக் கடைபிடிக்காத எவரொருவரையும் கொல்லுதல் | 2:256,18:29. |
| நான்காவது முறையாக மது அருந்துகின்றவரைக் கொல்லுதல் | 2:256,18:29. |
| வழிபடுதலில் இருந்து மாதவிலக்கான பெண்களை தடுத்தல் | 2:222. |
| வெள்ளிக்கிழமை தொழுகையில் இருந்து பெண்களைத் தடுத்தல் | 62:9 |
| முஹம்மதுடைய விருப்பத்திற்கு எதிராக அவரை இணைவழிபாடு செய்தல்: | |
| “மிகவும் கண்ணியத்திற்குரிய தூதர்” என அவரை அழைத்தல் | 2:285 |
| அவர் தவறிழைக்காதவராக இருந்தார் என்று கோருதல் | 4:79;9:117;17:73–74;33:37; 40:66;66:1;80:1–10;93:7 |
| அவருடைய சமாதியை ஒரு “புனிதப்பள்ளி” ஆக நிறுவிக் கொள்ளுதல். | 2:149–150 |
| பரிந்துரைக்கும் அதிகாரத்தை அவர் பெற்றிருக்கின்றார் எனக் கோருதல் | 2:48,123,254;6:70,94; 7:53;10:3;39:44;43:86;74:48; |
| ஒளியின் வேகத்தில், ஒரு குதிரையின் மீது வானங்களை நோக்கி அவர் ஏறிச்சென்றது, மற்றும் 50 ஸலாத் தொழுகைகளைப் பற்றிக் கடவுளிடம் பேசிக் குறைத்தது குறித்த நியாயப்படுத்த இயலாத ஒரு கட்டுக்கதையைக் கண்டுபிடித்தல். ஒளியின் வேகத்தில் எனில், அவர் இன்னமும் பால் வீதி நட்சத்திர மண்டலத்திற்குள்ளேயே பயணித்துக் கொண்டிருப்பார். | 17:1;53:1–18 |
| ஸலாத் தொழுகைகள் மற்றும் அதான் ஆகியவற்றில் அவருடைய பெயரைச் சேர்த்துக் கொள்ளுதல். இஸ்லாமின் முதல் தூணில் அவருடைய பெயரைச் சேர்த்துக் கொள்ளுதல். | 20:14;72:18. 3:18;37:35;39:45 |
| கொடூரமானதொரு மனிதராக சித்தரிப்பதன் மூலம் முஹம்மதை அவமரியாதை செய்தல்: மனிதர்களின் கண்களை அவர் தோண்டி எடுத்தார் என அவர்கள் கோருகின்றனர். | 3:159;68:4 |
| 30 ஆண்களின் ஆண்மைத்திறனை அவர் பெற்றிருந்தார் எனக் கோருதல். | 18:110;25:20 |
| ஜீஸஸ் இவ்வுலகத்திற்குத் திரும்பி வருவார் என்று போதிப்பதன் மூலம் முஹம்மத் நபிமார்களில் இறுதியாக இருந்தார் எனும் உண்மையைச் செல்லாமல் ஆக்குதல். இது ஜீஸஸை நபிமார்களில் இறுதியானவராக ஆக்குகின்றது. | 33:40 |
| முஹம்மத் கல்வியறிவற்றவராக, அறிவுத்திறனற்றவராக இருந்தார் எனக் கோருதல். | பார்க்க பின் இணைப்பு 28 |
| ஏராளமான தடைகளைக் கொண்ட நூதனமான உணவு சார்ந்த ஒழுங்குகள் | 6:145–150; 16:115–116. |
| புனித மாதங்களை மாற்றியமைத்தல் | 9:37 |
| திரித்துக் கூறுவதன் மூலம் ஜகாத் தர்மத்தை அலட்சியம் செய்தல் | 6:141, பின் இணைப்பு 15 |
| பெண்களை அடக்குமுறை செய்வதுடன் தலை மறைப்புக்களையும் பொருத்தமற்ற ஆடைகளையும் அணியுமாறு அவர்களை நிர்ப்பந்தித்தல்; அத்துடன் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்றவற்றில் அவர்களுடைய உரிமைகள் அனைத்தையும் பறித்தல். | 2:228;3:195;4:19,32;9:71; |
| ‘‘தொழுகின்ற ஒரு நபருக்கு முன்னால் ஒரு குரங்கு, நாய் அல்லது ஒரு பெண் கடந்து சென்றால் அவருடைய தொழுகை செல்லாததாக ஆகிவிடுகின்றது.’’ (ஹதீஸ்) என்று ஸ்தாபிப்பதன் மூலம் பெண்களை அவமரியாதை செய்தல். | |
| அங்கசுத்தி முதல் தொழுகை, தூக்கம், ஒருவரது நகங்களை வெட்டுவது வரை பெரும் எண்ணிக்கையிலான சட்டங்களைக் கண்டுபிடித்தல். | 2:67–71;5:101;42:21 |
| தங்கத்தையும் பட்டையும் ஆண்களுக்கு தடைசெய்தல் | 5:48–49;7:31–32 |
| இசையினையும் கலைகளையும் தடைசெய்தல் | 7:32;34:13;42:21. |
| இந்த உலகம் ஒரு இராட்சசத் திமிங்கிலத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது!!, என்று கூறுவதன் மூலம் இஸ்லாமைப் பரிகசித்தல் (79:30 ; இப்னு கஸிர், கி.பி.1200 & பென்பாஸ் கி.பி.1975) | |

இது ஓர் அன்றாட அடிப்படையில் “முஸ்லிம்களால் ” இழைக்கப்படுகின்ற சட்டமீறல்களின் ஒரு மிகச்சிறிய எடுத்துக்காட்டு மட்டுமேயாகும். இதன் காரணமாகத்தான் கடவுள் தன்னுடைய உடன்படிக்கைத் தூதரை இப்போது அனுப்பியுள்ளார்.

****************************

## பின் இணைப்பு 34

# கற்பு நெறி

*உண்மையான நம்பிக்கையாளர்களின் புதல்வர்கள் மற்றும் புதல்விகள், அவர்களுடைய வாழ்நாள் முழுவதுமான அவர்களுடைய மகிழ்ச்சியானது கடவுளின் சட்டங்களைப் பின்பற்றுவதையும் அவர்களுடைய கற்பைப் பாதுகாத்துக் கொள்வதையும் பொறுத்ததாகும் என்று போதிக்கப்பட வேண்டும்.அவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் துணைகளுக்காக மட்டுமே என்று தங்களை வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் வேறு எவரொருவரையும் பாலியல் ரீதியாகத் தங்களைத் தொடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்பதே இதன் பொருளாகும் [23:5–6,24:30,33:35,70:29–30].*

இன்றைய சமூகம் சக்திவாய்ந்த தூண்டுதல்கள் நிறைந்ததாக உள்ளது.எண்பதுகளில் அமெரிக்காவின் சமூகத்தில், தங்களுடைய மகள்களின் ஆண் நண்பர்கள் மற்றும் தங்களுடைய மகன்களின் பெண் தோழிகளையும் பற்றி பெற்றோர்களே கூடப் பேசத் துவங்கினர். தங்களுடைய பிள்ளைகள் பதின் பருவத்தை அடைகின்ற பொழுது, பல பெற்றோர்கள் அவர்களுக்கு கருத்தடைச் சாதனங்களையும் கூடக் கொடுக்கின்றனர். பதின் பருவத்தினரில் ஓர் எச்சரிக்கையூட்டுகின்ற சதவிகிதத்தினர், அவர்கள் உடற்கூறு ரீதியாக முதிர்ச்சி அடையாதவர்களாக இருந்த போதிலும், எவ்வித ஒழுக்க வரையறைகளும் இல்லாது பாலியல் ரீதியாக துடிப்புடன் உள்ளனர். இலட்சக்கணக்கான சட்டவிரோத கருத்தரிப்புக்களும், அவற்றுடன் தொடர்பு கொண்ட சோக நிகழ்வுகளும், கூடுதலாக இலட்சக்கணக்கில் பரிதாபமான கருக்கலைப்புக்களும் ஒவ்வொரு மாதமும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நிகழ்ன்றன.

இந்த ஒழுக்கச் சீர்கேட்டின் விளைவுகளில் உள்ளவை: தேவையற்ற மற்றும் ஆதரவற்ற குழந்தைகள்,கடமை தவறுகின்ற மேலும் பொறுப்பற்ற தந்தையர்கள், மக்களின் உயிர்களுக்கோ அல்லது உடமைகளுக்கோ எந்த மதிப்பையும் கொண்டிராத குற்றவாளிகள், இலட்சக்கணக்கான சமூக விரோதிகள், குணப்படுத்த இயலாத பிறப்புறுப்பின் தோல் அழற்சிகள், குணப்படுத்த இயலாத பிறப்புறுப்பின் உண்ணிகள், நாசகரமான மேகப்புண்கள், வெட்டை நோய், டிஸ்ப்லாசியா, உயிர்க்கொல்லி எய்ட்ஸ், மற்றும் முன்னர் ஒருபோதும் அறியப்படாத புதிய நோய்கள்.

அதிகமான மக்கள் அறியாதது என்னவென்றால் இந்த ஒழுக்கச் சீர்கேடு அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் அவர்களுடைய பெருந்துன்பத்திற்கு விலையாகின்றது என்பதே. ஏனெனில் இவ்வுலகினை ஆளுகின்ற ஒரே சட்டம் கடவுளின் சட்டமேயாகும், எனவே கடவுளுடைய சட்டங்களின் வெளிப்படையான இந்த மீறல்கள் அவர்களுடைய ஏராளமானதொரு துன்பத்திற்கும் பிரச்சினைகளுக்கும் விலையாகின்றது [20:124].

தங்களுடைய குழந்தைகளைப் பற்றி அக்கறை கொண்டவர்களான மெய்யான நம்பிக்கையாளர்கள் மீண்டும் மீண்டும் விடாப்பிடியாக தங்களுடைய கற்பைக் காத்துக் கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுரை கூறுவதுடன் அவர்களுக்கு நினைவூட்டவும் செய்வார்கள் [20:132].தங்களுடைய திருமண இரவு வரை கற்புடன் நிலைத்திருத்தல்,பின்னர் தங்களுடைய சொந்த மகிழ்ச்சிக்காக – ஒரு போதும் விபசாரம் செய்யாது – தன்னுடைய வாழ்க்கைத் துணைக்கு விசுவாசமாக இருத்தல் என்பதே இதன் அர்த்தமாகும். திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் நம்முடைய கற்பைக் காத்துக் கொள்ளுமாறான கடவுளின் அறிவுரையானது, நமது சொந்த நலனுக்காகவேயாகும்.நமது ஆரோக்கியம், பொருள் வளம் மற்றும் மகிழ்ச்சி அல்லது துன்பத்தைக் கட்டுபடுத்துகின்ற ஒரே ஒருவர் கடவுள் தான் [53:43,48].

*****************************

## பின் இணைப்பு 35

# போதைப் பொருள்கள் & மதுவகைகள்

சட்டவிரோதமான போதைப்பொருட்கள் மற்றும் மதுபானங்களைப் பொறுத்தவரை எந்தவிதமான சமரசமும் இல்லை; அவை "அருவருக்கத்தவை மற்றும் சாத்தானின் காரியம் [5:90] என்று வர்ணிக்கப்படுகின்றன. 2:219 மற்றும் 5:90–ல் "போதையூட்டுபவை, சூதாட்டம், சிலைப்பீடங்கள், மற்றும் அதிர்ஷ்ட விளையாட்டுக்கள்" கண்டிப்புடன் தடுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் காண்கிறோம்."மூடுதல்" எனும் அர்த்தம் கொண்ட "க்ஹமர" எனும் வேர்ச்சொல்லில் இருந்து பெறப்படுகின்ற "க்ஹம்ர்" எனும் வார்த்தையே போதையூட்டுபவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது. எனவே, புத்தியைத் தடுக்கின்ற அல்லது மூடுகின்ற எந்த ஒன்றும் தடைசெய்யப்பட்டுள்ளது. புத்தியை தடுமாறச் செய்கின்ற எந்த ஒன்றையும், கஞ்சா, ஹெராயின், கோக்கெய்ன், மதுவகைகள், ஹஷிஷ் போன்றவை மற்றும் புத்தியைப் பாதிக்கின்ற எந்த ஒன்றையும் இது உட்படுத்துகின்றது.

## பின் இணைப்பு 36

# மகத்தானதொரு தேசத்திற்கு என்ன விலை

**வேதத்தையுடைய மக்கள் (யூதர்கள்,கிறிஸ்துவர்கள்,முஸ்லிம்கள்) நம்பிக்கை கொண்டு அத்துடன் நன்னெறியானதொரு வாழ்வைத் தொடர்ந்தால்,நாம் அவர்களுடைய பாவங்களைப் பிழைபொறுப்பதுடன் பேரானந்தமயமான சுவர்க்கத்திற்குள் அவர்களை நுழைய அனுமதிப்போம்.தோரா, சுவிசேஷம், மற்றும் இதிலே அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளவற்றை அவர்கள் கடைப்பிடித்திருந்தால், அவர்களுக்கு மேலிருந்தும், அத்துடன் அவர்களுடைய பாதங்களுக்கு கீழிருந்தும் வாழ்வாதாரங்களை அவர்கள் மகிழ்ந்து அனுபவித்திருப்பார்கள். அவர்களில் சிலர் நன்னெறியாளர்களாக உள்ளனர், ஆனால் அவர்களில் அதிகமானோர் தீமை புரிபவர்களாகவே உள்ளனர். [5:65–66]**

**பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் மட்டும் நம்பிக்கை கொண்டு நன்னெறியானதொரு வாழ்வினைத் தொடர்ந்திருந்தால், வானங்களில் இருந்தும் பூமியில் இருந்தும் அவர்களை ஆசீர்வாதங்களால் நாம் பொழிந்திருப்போம். [7:96]**

**கடவுள் ஒருவர்தான் உங்களுடைய மகிழ்ச்சியையோ, அல்லது துன்பத்தையோ கட்டுப்படுத்துகின்றவர். ............கடவுள் ஒருவர்தான் உங்களைச் செல்வந்தராகவோ அல்லது ஏழையாகவோ ஆக்குகின்றவர். [53:43,48]**

கடவுளின் சட்டங்களை ஆதரிக்கின்ற ஒரு தேசம் உலகத்து நாடுகளுக்கிடையில் முக்கியத்துவத்திற்கும், வெற்றி, பொருளாதார வளம், மற்றும் மகிழ்ச்சிக்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது[10:62–64,16:97,24:55,41:30–31]. மற்றொரு புறம், கடவுளின் சட்டங்களை மீறுகின்ற ஒரு தேசம் துன்பகரமானதொரு வாழ்வுக்கு உள்ளாகின்றது[20:124] கடவுளின் சட்டங்களை ஆதரிக்கின்ற ஒரு தேசம் மகத்தானதொரு தேசமாக இருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. இது நடைமுறை சாத்தியமற்ற கற்பனையான வெறும் கனவு அல்ல; கடவுள் முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதனால் [10:61], அவருடைய உத்தரவாதங்களும் வாக்குறுதிகளும் செய்து முடிக்கப்படுகின்றன. கடவுளுடைய சட்டங்களை ஆதரிக்கின்ற ஒரு தேசத்தின் சிறப்பியல்புகளாவன:

1. மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம்– மதச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பிரயாணிப்பதற்குச் சுதந்திரம், மற்றும் பொருளாதாரச் சுதந்தரம்[2:256,10:99,88:21–22].

2. அனைத்து மக்களுக்கும், அவர்களுடைய இனம், நிறம், மதம், சமூக அந்தஸ்து, பொருளாதார நிலை, அல்லது அரசியல் சார்பினைப் பொருட்படுத்தாது, உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் [5:8,49:13].

3. அனைத்து மக்களுக்கும் பொருளாதார வளம். கடவுளின் பொருளாதார ஒழுங்குமுறையானது செல்வத்தின் இடையறாத சுழற்சி, அதீத வட்டி இன்மை, மற்றும் பலன்தருகின்ற முதலீடுகளின் அடிப்படையில் ஆனதாகும். சூதாட்டம், குலுக்கல் சீட்டு, மற்றும் உயர் வட்டிக் கடன்கள் போன்ற பலன்தராப் பொருளாதாரம் அனுமதிக்கப்படுவதில்லை [2:275–7,59:7].

4. அனைவருக்கும் சமூகநீதி. கடமையான தர்மத்தின் *(ஜகாத்)* காரணத்தால், எவர் ஒருவரும் பசியுடனோ அல்லது வசிப்பிடமின்றியோ போய்விட மாட்டார்கள்[2:215, 70:24–25,107:1–7].

5. ஒருமித்த சம்மதத்தின் அடிப்படையிலானதோர் அரசியல் அமைப்பு.பரஸ்பரக் கலந்தாலோசனை மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மூலமாக, குறிப்பிட்ட ஏதேனும் பிரச்சினையின் ஒரு பக்கம் விவாதத்தில் பங்கு பெறுகின்றவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்துகின்றது.அதன் இறுதி விளைவு ஒர் ஒருமித்த உடன்பாடு, 49% சிறுபான்மையினரின் தொண்டையை நெருக்குகின்ற 51% பெரும்பான்மையினரின் கருத்து அல்ல[42:38].

6. ஒழுக்க நடத்தையின் மிக உயர்ந்த நியமங்களைப் பராமரிக்கின்ற அத்துடன் ஆதரிக்கின்ற ஒரு சமூகம். அங்கே பலமானதோர் குடும்ப அமைப்பு இருக்கும், மதுப்பழக்கம் இருக்காது, சட்ட விரோதமான போதை மருந்துகள் இருக்காது, முறை தவறிய கருத்தரிப்புகள் இருக்காது, கருக்கலைப்புக்கள் இருக்காது, அத்துடன் விவாகரத்தும் கிட்டதட்ட இருக்காது.

7. மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் உச்சபட்ச மரியாதை,எனவே மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் எதிரான எந்தக் குற்றமும் அங்கு இருக்காது.

8. அதன் மக்கள் மத்தியிலும், அத்துடன் அந்த தேசம் மற்றும் உலகத்தின் இதர சமூகங்களுக்கிடையிலும் நேசம், உபச்சாரம், அமைதி, மற்றும் பரஸ்பர மரியாதை நிலவுதல்(3:110,60:8–9).

9. இயற்கை வளங்களைப் பாதுகாப்பதுடன் வீண் நிறைந்த பழக்கங்களை தடை செய்தலின் மூலமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது(30:41).

****************************

**பின் இணைப்பு 37**

# குற்றவியல் நீதிமுறை

ஒரு திருடன் உங்களிடமிருந்து ஓர் ஆயிரம் ரூபாயைத் திருடிவிடுகின்றான், உடனே அவர்கள் அவனைச் சிறையிலிட்டு விட்டால் உங்களுக்கு என்ன கிடைக்கும்? அத்திருடன் ஒரு மனைவியையும் பிள்ளைகளையும் கொண்டிருந்தால், அவர்களுடைய குற்றம் என்ன? அவர்கள் ஏன் தந்தையை இழந்தவர்களாக இருக்க வேண்டும்?

இந்தப் பிரச்சனையையும், அவ்வண்ணமே இன்றைய உலகில் நிலவுகின்ற குற்றவியல் நீதிமுறையுடன் தொடர்பு கொண்ட பிரச்சனைகளையும் இக்குர்ஆன் தீர்த்து வைக்கின்றது.

## சமநீதியே சட்டம் ஆகும் (2:178–179)

இக்குர்ஆனுடைய குற்றவியல் நீதிமுறையின் படி, உங்களிடம் இருந்து ஓர் ஆயிரம் ரூபாயைத் திருடியதாக குற்றம் நிருபிக்கப்பட்டவர் நீங்கள் இழந்த அந்த ஆயிரம் ரூபாய்க்கும், அத்துடன் அத்திருட்டு உங்களுக்கு உண்டாக்கி இருக்கக் கூடிய வேறு எந்த நஷ்டத்திற்கும் அசௌகரியத்திற்கும், நீங்கள் முழுமையாகச் செலுத்தப்படுகின்ற வரை உங்களுக்காகப் பணி செய்தல் வேண்டும். அதே நேரத்தில், அத்திருடனின் குற்றமற்ற மனைவியும் பிள்ளைகளும் அவர்களுடைய குடும்பத்தலைவனை இழந்தவர்களாக இருப்பதில்லை, அத்துடன் செலவு மிகுந்த சிறைச்சாலை அமைப்பும் நீக்கப்பட்டு விடுகின்றது. சிறையிலடைத்தல், சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் பயனற்றதென நிரூபிக்கப்பட்டுள்ள ஒரு கொடூரமான, மேலும் மனிதத்தன்மையற்ற தண்டனையாக உள்ளது.

பொதுவான நம்பிக்கைக்கு மாற்றமாக, திருடனின் கை வெட்டி எடுக்கப்படக் கூடாது.அவருடைய கருணைக்காகவும் இக்குர்ஆனில் உள்ள அவருடைய கணித அற்புதத்திற்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துவோமாக, திருடனின் கை அடையாளமிடப்பட வேண்டும் என்பதை இப்போது நாம் அறிந்திருக்கின்றோம்.திருடனின் கை அடையாளமிடப்படுவது 5:38–ல் கூறப்படுகின்றது. இந்த சூரா மற்றும் வசனத்தின் எண்கள் கூட்டப்பட வருவது 5+38=43. இக்குர்ஆனில் "கை வெட்டப்படுகின்ற" மற்றொரு இடம் 12:31–ல் காணப்படுகின்றது. இங்குதான் தங்கள் கைகளை "வெட்டிக் கொள்ளும்" அளவுக்கு,ஜோஸஃபை வியந்த பெண்களை நாம் காண்கின்றோம். கண்கூடாக, அவர்கள் தங்களுடைய கைகளைத் துண்டாக்கிக் கொள்ளவில்லை; எவர் ஒருவரும் அதனைச் செய்ய இயலாது. அந்த சூரா மற்றும் வசனத்தின் எண்கள் கூட்டப்பட வருவது 12+31=43,5:38–ல் உள்ளது போன்ற அதே கூட்டுத்தொகை. இக்குர்ஆனின் சட்டம் திருடனின் கையில் அடையாளமிடுவதைத்தான் ஆதரிக்கின்றது, அதனைத் துண்டாக்குவதை அல்ல என்பதற்கான கணிதரீதியான ஆதாரத்தை இது தருகின்றது. கூடுதலான கணிதரீதியான ஆதாரமும் வழங்கப்படுகின்றது: 12:31–க்கு 19 வசனங்களுக்குப் பின்னர், "கையை வெட்டிக் கொள்ளுதலை " நாம் மீண்டும் காண்கின்றோம். இஸ்லாமில் (சரணடைதல்) தண்டனையானது சமநீதி மற்றும் சமூக நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் ஆனது (2:178,5:38,24:2).

*"ஹதீஸ் & சுன்னா"* என்றழைக்கப்படுகின்ற இறைநிந்தனையானது திருமணமானபின் விபசாரம் புரிகின்றவர்களுக்குரிய தண்டனையாக கல்லால் அடித்துக் கொல்வதை நிறுவியுள்ளது. இது கடவுளின் சட்டம் அல்ல.24:2–ல் கூறப்பட்டுள்ளபடி, விபசாரத்திற்குரிய தண்டனையாவது பகிரங்கமாகச் சாட்டையால் அடிப்பதாகும்; அடையாளபூர்வமான ஒரு நூறு சாட்டையடிகள். மேலே குறிப்பிட்டுள்ளபடி, அடிப்படைத் தண்டனையாவது சமூக நிர்ப்பந்தம் மற்றும் குற்றவாளியை அவமானப்படுத்துவதுமேயாகும். பகிரங்கமாகச் சாட்டையாலடித்தல் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுகின்றது.

கொலைக்கான நடவடிக்கையில், இக்குர்ஆன் நிச்சயமாக மரண தண்டனையை ஊக்குவிக்கவில்லை (2:179). "சுதந்திரமானவருக்கு சுதந்திரமானவர், அடிமைக்கு அடிமை, பெண்ணுக்குப் பெண்" (2:178). மானிட அற்பத்தனத்தினாலும் அநீதத்தினாலும் ஏராளமான மக்கள் இந்தக் குர்ஆனியச் சட்டம் கூறுவது என்ன என்பதைக் கற்பனை கூடச் செய்ய இயலாமல் இருக்கின்றனர். கண்டிப்பான சமநீதி கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று

இத்தெளிவான உத்தரவினை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். ஒரு பெண் ஓர் ஆணைக் கொன்றாலோ, அல்லது ஓர் ஆண் ஒரு பெண்ணைக் கொன்றாலோ, அல்லது ஓர் அடிமை சுதந்திரமான ஒரு நபரைக் கொன்றாலோ, அல்லது சுதந்திரமான ஒரு நபர் ஓர் அடிமையைக் கொன்றாலோ, மரண தண்டனை பிரயோகிக்கப்பட இயலாது. கொலையாளி பலியானவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு செய்வதையே இக்குர்ஆன் தேர்ந்தெடுக்கின்றது. கொலையாளியைக் கொன்று விடுதல் பலியானவரைத் திரும்பக் கொண்டு வருவதில்லை, அன்றி கொலையாளிக்கு மரணதண்டனை அளிப்பதன் மூலம் பலியானவரின் குடும்பத்தார் பலனடைவதுமில்லை. நஷ்டஈடானது, எப்படியிருப்பினும், மற்றவர்களுக்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கப் போதுமான அளவுக்கு அமைய வேண்டும். இஸ்லாமில் [சரணடைதல்], பலியானவர் மற்றும்/அல்லது பலியானவரின் குடும்பத்தாரே அனைத்துக் குற்றங்களுக்கும் நீதிபதிகளாக உள்ளனர்: அவர்கள் குர்ஆனை அறிந்திருக்கின்ற ஒரு நபருடைய மேற்பார்வையின் கீழ் தண்டனை என்னவாக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார்கள்.

****************************

**பின் இணைப்பு 38**

# 19: படைப்பாளரின் கையொப்பம்

கடவுளின் படைப்புக்களில் வேதங்கள் மட்டுமே 19 எனும் எண்ணைப் பொது வகு எண்ணாகக் கொண்டு கணிதரீதியில் தொகுக்கப்பட்டவையாக இல்லை. கலிலியோ தன்னுடைய பிரசித்தி பெற்ற கூற்றைக் கூறியது உண்மையிலே மிகவும் ஆழ்ந்ததாகும்: "கணிதமெனும் மொழியில் தான் கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தார்." அபரிமிதமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் குறிப்பிட்ட படைப்புகள் மீது 19 எனும் எண் கடவுளின் கையொப்பமாகத் திகழ்கின்றது என்பதை இப்போது காட்டி உள்ளன. மைக்கேலேஞ்சலோ மற்றும் பிகாஸோவின் கையொப்பங்கள் அவர்களுடைய கலைப் படைப்புகளை அடையாளம் காட்டுகின்ற தோராயமான அதே விதமாக இப்பிரபஞ்சம் முழுவதிலும் இந்த தெய்வீக முத்திரை காணப்படுகின்றது. உதாரணத்திற்கு:

1.ஒவ்வொரு 19 வருடங்களுக்கு ஒரு முறை சூரியன், சந்திரன், மற்றும் பூமியானவை ஒத்த அதே நிலைகளில் வரிசைப்படுத்தப்படுகின்றன. [பார்க்க *என்சைக்ளோபீடியா ஜூடாய்கா* "நாட்காட்டியின் " கீழ்].

2. ஆழ்ந்ததோர் விண்ணக நிகழ்வான, ஹாலி வால் நட்சத்திரம் ஒவ்வொரு 76 ஆண்டுகளில், 19 x 4,நமது சூரிய மண்டலத்திற்கு வருகை புரிகின்றது.

3. உங்கள் மற்றும் என் மீதான கடவுளின் முத்திரையானது இந்த மானிட உடல் 209, 19 x 11, எலும்புகளைக் கொண்டுள்ளது எனும் உண்மையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

4. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள அதிகமான மருத்துவக் கல்வி நிலையங்களில் T.W.Sadler எழுதிய *LANGMANS MEDICAL EMBRYOLOGY* ஒரு பாடப்புத்தமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதன் ஐந்தாவது பதிப்பின் 88–வது பக்கத்தில், கீழ்க்கண்ட வாசகத்தை நாம் படிக்கின்றோம்: "பொதுவாக முழு வளர்ச்சியடைந்த ஒரு கருவின் கர்ப்ப காலமானது கடைசி மாதவிலக்கின் துவக்கத்தில் இருந்து 280 நாட்கள், அல்லது 40 வாரங்கள் ஆக இருப்பதாகக் கருதப்படுகின்றது, அல்லது கருத்தரிப்புக்குப் பின்னர், மிகச்சரியாக 266 நாட்கள் அல்லது 38 வாரங்கள்." 266 மற்றும் 38 ஆகிய எண்கள் இரண்டும் 19–ன் பெருக்குத் தொகையாக உள்ளன.

****************************

## கடவுள் துதிப்பிற்குரியவர்

# பொருள் குறிப்பு அகராதி

## அ

**அஃப்ரீத்** (Afrit) 27:39
**அகந்தை** (Ego)
ஒரு தெய்வமாக 2:87; 5:30; 25:43; 45:23; 47:14–16
கொல்லப்பட வேண்டும். 2:54; 12:53; 38:26
**அங்க சுத்தி** (Ablution) 4:43; 5:6
**அங்காடிகள்** (Markets) 25:7,20
**அங்கி அணிந்தவர்** (Cloaked) 73:1
**அங்கீகாரம்** (Approval)
கடவுளின் அங்கீகாரத்தைத் தேடுதல் 5:2,16; 48:29
கடவுளின் 3:174; 9:21,72,109; 53:26; 57:20,27
**அச்சம்** (Fear)
ஆனந்தத்தின் போதும் அச்சத்தின் போதும் இறைஞ்சுங்கள் 21:90
எதுவும் நம்பிக்கையாளர்களுக்கு இல்லை 2:38,62,112,262,274, 277; 3:170,5:54,69; 6:48,80–81; 7:35,49; 9:91; 10:62; 20:68,77,112;24:55; 27:10; 28:7,31;29:33; 41:30; 43:68; 46:13; 48:27; 72:13
கடவுளை மட்டும் அஞ்சுங்கள் 2:150; 3:28,30,175; 4:77; 5:3, 28,44; 6:15,80; 8:48; 9:13,18; 10:15; 13:21; 33:37,39; 39:13,16; 59:13,16; 76:10
சாத்தான் புகுத்துகின்றான் 3:175; 20:67
சோதனை 2:155; 3: 173; 13:21; 17:31
தீர்ப்பு நாளின் மீது 31:33; 74:53
நம்பமறுப்பவர்களின் 2:114; 5:52; 6:81; 33:19; 59:2
பின்னர் பாதுகாப்பு 106:4
போலித் தெய்வங்களைக் கொண்டு 39:36
மற்றும் எதிர்பார்ப்பின் மூலாதாரம், மின்னல் 13:12; 30:24
**அச்சுறுத்தல்** (Threat) 7:70,77; 10:48; 11:32; 21:38, 60; 27:71; 33:19; 46:22
**அசட்டை செய்தல்** (Ignoring) 7:176; 28:55; 32:14; 44:14, 46:26; 54:6; 75:21; 76:27; 80:10
**அசுத்தம்** (Unclean) 5:6; 6:145
**அடக்குமுறை** (Persecution) 2:49,177; 3:28,172,195; 7:126,129,141,167; 8:39; 14:6,12; 16:41,110; 20:47; 22:39,60; 28:4,58; 29:10; 44:30; 54:9; 60:1,5; 85:10; 114:4
**அடி** (Blow) அடி ஒன்றே ஒன்று போதுமானது 36:29,49,53; 38:15
**அடிச்சுவடுகள்** (Steps) 2:168, 208; 6:142; 9:120; 24:21
**அடிமைகள்** (Slaves)
ஃபேரோவின் 23:47
ஏழையும் பணக்காரரும் 16:75
திருமணம் செய்தல் 4:25
விடுதலை செய்தல் 2:177–178; 4:25, 92; 5:89; 9:60; 24:33; 58:3–4; 90:13
**அடுக்குகள்** (Layers) 67:3; 71:15
**அடுத்தடுத்து வருபவர்கள்** (Successors)
7:69,74; 19:5
**அடைக்கலம்** (Retreat) 2:187
**அடையாளம் காணுதல்** (Recognize)
குர்ஆனை 2:146; 6:20
சமூகங்கள் / இனங்கள் 49:13
பேச்சு / தோற்றத்தின் மூலமாக 7:46, 48; 47:30; 55:41
**அடையாளங்கள்** (Marks) 2:260; 5:38; 7:46,48; 47:30; 48:29; 68:16
**அண்டை வீட்டார்** (Neighbours) 4:36; 56:16
**அணிதிரண்டு புறப்படுதல்** (Mobilize) 3:173; 4:71,89; 8:15,58,60; 9:38–39,41–42,46–47,81,83,122; 17:64; 24:53; 33:18; 47:21; 60:1
**அணு** (Atom) 4:40; 10:61; 34:3,22; 99:7–8
**அத்தாட்சிகள்** (Signs)
இயற்கையின் 3:190; 6:95–99; 10:5, 101; 14:32–34; 17:12; 21:30–33; 25:61–62; 31:10; 35:11–13; 36:33;–44; 40:13; 50:6–11; 51:20–23; 55:5–7; 57:4–6; 78:6–16; 79:27–33
உலக முடிவின் 54:1
கடவுள் காட்டுவார் 21:37
தூதர்களின் 2:87; 3:141; 7:73,133; 10:92; 19:10,21; 20:47; 21;91; 23:51; 29:39; 40:23,34; 43:48
நம்பச் செய்கின்ற 2:73,118,164; 3:49; 5:114; 7:103; 16:79; 25:37; 27:93; 40:13; 42:33; 48:20; 53:18
நம்பமறுக்கப்பட்டன 3:184; 6:4,37,57; 7:101,132–133,136; 8:54; 10:13,92; 30: 9,47; 35:25; 54:2,42; 78:28
**அத்தி** (Fig) 95:1
**அதர்மம் புரிவோர்** (Wrongdoers) 2:165,246; 6:52; 7:19,165; 9:23; 30:57; 39:47; 43:65
**அதிகாரம்** (Authority)
கடவுளின் 2:30; 7:54,71; 10:3; 13:2, 38; 14:11; 20:5; 21:22; 23:116; 32:4; 40:15,78; 53:6; 57:4
கொடுக்கப்படவில்லை 30:35; 42:21; 53:23,26
மானிடர்களுக்கு கொடுக்கப்பட்ட 4:54,91,153; 11:96; 17:33; 18:84; 28:35; 40:23; 51:38; 55:33
சாத்தானின் 2:30; 16:100; 36:60
**அதிகாரிகள்** (Officials) 2:188
**அதிசயங்கள்** (Marvels) 6:75; 10:101; 18:9; 21:32; 34:9; 40:81; 53:18,55; சூரா 55
